ஸ்ரீ பாஞ்யம்

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபகவத் ராமாநுஜர் அருளிச்செய்த

ஸ்ரீபாஷ்யம்

(தமிழாக்கத்துடன்)

(மூன்றாம் பாகம் - மூன்று & நான்காம் அத்யாயங்கள்)

ஸ்ரீ உ.வே. திருமலை சதுர்வேத ஶதக்ரது நாவல்பாக்கம்

வ.வாஸுதேவதாதாசாரியர்

வைணவன் குரல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-78.
சார்வரி - ஐப்பசி - ஹஸ்தம்
2020

நவரத்னமாலிகா-1

ஸ்ரீபாஷ்யம்

மூன்றாம் பாகம்

(எளிய தமிழ் விளக்கத்துடன்)

முதற் பதிப்பு : 2020

© 2020 The Publisher

All Rights reserved. No part of this publication may be reproduced, stored in retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photo-copying, recording or otherwise without prior permission from the Publisher.

விலை : ரூ.1000/-
(தபால் / குரியர் செலவு தனி)

ஆசிரியர்
மூலம் : **பகவத் ராமாநுஜர்**

தமிழாக்கம்
ஸ்ரீ உப.வே.நாவல்பாக்கம்
Dr.V.வாஸுதேவாசார்யர் ஸ்வாமி
vasudevan.navalpakkam@gmail.com
09895016724

கிடைக்குமிடம்
1. வைணவன் குரல்
L42L, பாரதிதாசன் காலனி,
கே.கே. நகர்,
சென்னை - 600 078.
Cell : 94446 12088 / 94451 40404.
vainavankural@yahoo.com

2. மாறன் பதிப்பகம்,
மாலோலபவனம்
56, 6வது குறுக்குத் தெரு,
நஞ்சப்பா கார்டன்,
பாபுஸா பால்யா, பெங்களூர் - 560043.
Phone : 088846 10700 / 093431 29490
maranpublications.blr@gmail.com

DTP Typeset by
Dr.N.Jagannathan, Tirupathi

Printed at
RNR Printers & Publishers
13, Thandavarayan Street, Triplicane,
Chennai - 600 005. Ph. : 044 - 2844 7071

ஸ்ரீ:



ஸ்ரீபகவத்ராமாநுஜர் கூரத்தாழ்வானுடன் - காஞ்சீபுரம்
(ஸ்ரீபகவத் ராமாநுஜர் நியமநப்படி ஸ்ரீநடாதூர் ஆழ்வானால் ப்ரதிஷ்டை
செய்யப்பட்ட திருமேனி)

உத்க்ருஹ்ணதீம் உபநிஷத்ஸு நிகூடமர்த்தம் சித்தே நிவேஶயிதும் அல்பதியாம் ஸ்வயம் ந:।
பஶ்யேம லக்ஷ்மணமுநே: ப்ரதிபந்ந ஹஸ்தாம் உந்நித்ரபத்ம ஶுபகாம் உபதேஶமுத்ராம்॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீபாஷ்யம் – மூன்றாம் பாகம்

இம்மலர் வெளியீட்டிற்காக நிதியுதவி அளித்தவர்கள்

1 **L&T Construction**
(A brand of Larsen & Toubro Limited)
Mount Poonamallee High Road,
Manapakkam, Chennai - 600 089.

2. **ஸ்ரீமான் K.V. ரெங்கஸ்வாமி**
எழும்பூர், சென்னை - 600 008.

3. **ஸ்ரீமான் வேணு ஸ்ரீநிவாஸன்**
சேர்மன் & மேனேஜிங் டைரக்டர்,
டிவிஎஸ் மோட்டார் கம்பெனி லிமிடெட், சென்னை - 600 006.

4. **ஸ்ரீமான் மோகன் பராசரன் ஸ்வாமி**
சீனியர் அட்வகேட், புதுதில்லி.

5. **ஸ்ரீமான் P. சுந்தரபரிபூரணன் ஸ்வாமி**
கோடம்பாக்கம், சென்னை - 600 024.

6. **ஸ்ரீமான் R.பார்த்தசாரதி**
கஸ்தூரிபாய் நகர் இரண்டாவது மெயின் ரோடு,
அடையாறு, சென்னை - 600 020.

7. **M/s. Rashtriya Chemicals & Fertilizers Ltd.,**
(Government of India Undertaking)
Priyadarshini, Eastern Express Highway,
Sion, Mumbai - 400 022.

இவர்கள் அனைவருக்கும் எம்பெருமானாரின் திருவருள் பரிபூரணமாக கிடைக்க திவ்ய தம்பதிகளிடம் ப்ரார்த்திக்கிறோம்

டி.வி.ரங்கராஜன்
ஆசிரியர்- வைணவன் குரல்

श्रीमदुभयवेदान्ताचार्य-तिरुमलै चतुर्वेदशतक्रतु नावल्पाक्कं
श्रीयज्ञवराहतातार्यमहादेशिकानाम्
अनुग्रहश्रीमुखम्

(Prof.V.Kannan, Ph.D., FNA, FASc., FNASc.
SRM University Amaravati, AP
Former Pro-Vice-Chancellor of University of Hyderabad)

श्रीमते रामानुजाय नमः

श्रीभाष्यपारायणं अनेकफलदायि

१ रसास्वादाय।

२ पापनाशाय।

३ आज्ञापालनाय।

४ बुद्धिवृद्ध्यर्थम्।

५ सत्यप्रकाशनाय।

६ भक्त्यभिवृद्धये।

च तत्पारायणं अर्थानुसन्धानेन सह कुर्वन्ति मनीषिणः। तेषां कृते इदं नूत्नं पुस्तकं बहूपकारि भवति, द्रमिडानुवादसहितत्वात्, मुद्रणादिसौष्ठवाच्च।

एतेषु षट्सु प्रयोजनेषु एकैकं प्रति पूर्वसूक्तिप्रमाणपुरस्सरं मनाक् प्रतिपादनम् अधुना चिकीर्षितम्। प्रायस्सर्वाणि वचनानि यतिराजसप्ततेः उद्धृतानि।

१। रसास्वादाय श्रीभाष्यप्रवक्तारः बहवो विद्वांस्सः। ते निगमविमर्शकेळिरसिकाः इति श्लाघ्यन्ते। तेषां श्रोत्रकुहरे श्रीमद्यतिवरभुवः फणितयः सुधासारं निषिञ्चन्तीति वेदान्तदेशिकवाक्। देशिकप्रभृतीनाम् एतेषां वयः यतिप्रवरभारतीरसभरेण नीतं भवति ।

२। शमितदुरितगन्धाः सम्यमीन्द्रप्रबन्धाः इति देशिकोक्तिः । पापं नश्यति पारायणमात्रेणास्य ग्रन्थस्य। अशीतिकृच्छ्रफलं ददाति सकृत् पारायणमस्येति सम्प्रदायविदां पद्धतिः।

३। यतिराजस्य चरमाज्ञापञ्चके प्रथमा श्रीभाष्यपठनप्रवर्तनरूपा । तदाज्ञापालनमस्माभिरवश्यं कर्तव्यम् । 'प्रवर्तयध्वं तल्लोके श्रुत्वा श्रीभाष्यमादरात्' इति प्रथमाज्ञा (प्रपन्नामृतकाव्ये)। 'तत्र शक्तिर्न चेत् तदा' इत्यन्यत्सर्वं श्रीभाष्यपठनाशक्तानामेव कथितम्।

श्रीमदुभयवेदान्ताचार्य-तिरुमलै चतुर्वेदशतक्रतु नावल्पाक्कं श्रीयज्ञवराहताताचार्यमहादेशिकानाम्

अनुग्रहश्रीमुखम्

(Prof.V.Kannan, Ph.D., FNA, FASc., FNASc.
SRM University Amaravati, AP
Former Pro-Vice-Chancellor of University of Hyderabad)

श्रीमते रामानुजाय नमः

श्रीभाष्यपारायणं अनेकफलदायि

१ रसास्वादाय।
२ पापनाशाय।
३ आज्ञापालनाय।
४ बुद्धिवृद्ध्यर्थम्।
५ सत्यप्रकाशनाय।
६ भक्त्यभिवृद्धये।

च तत्पारायणं अर्थानुसन्धानेन सह कुर्वन्ति मनीषिणः। तेषां कृते इदं नूत्नं पुस्तकं बहूपकारि भवति, द्रमिडानुवादसहितत्वात्, मुद्रणादिसौष्ठवाच्च।

एतेषु षट्सु प्रयोजनेषु एकैकं प्रति पूर्वसूक्तिप्रमाणपुरस्सरं मनाक् प्रतिपादनम् अधुना चिकीर्षितम्। प्रायस्सर्वाणि वचनानि यतिराजसप्ततेः उद्धृतानि।

१। रसास्वादाय श्रीभाष्यप्रवक्तारः बहवो विद्वान्सः। ते निगमविमर्शकेळिरसिकाः इति श्लाघ्यन्ते। तेषां श्रोत्रकुहरे श्रीमद्यतिवरभुवः फणितयः सुधासारं निषिञ्चन्तीति वेदान्तदेशिकवाक्। देशिकप्रभृतीनाम् एतेषां वयः यतिप्रवरभारतीरसभरेण नीतं भवति ।

२। शमितदुरितगन्धाः सम्यमीन्द्रप्रबन्धाः इति देशिकोक्तिः । पापं नश्यति पारायणमात्रेणास्य ग्रन्थस्य। अशीतिकृच्छ्रफलं ददाति सकृत् पारायणमस्येति सम्प्रदायविदां पद्धतिः।

३। यतिराजस्य चरमाज्ञापञ्चके प्रथमा श्रीभाष्यपठनप्रवर्तनरूपा । तदाज्ञापालनमस्माभिरवश्यं कर्तव्यम् । ‘प्रवर्तयध्वं तल्लोके श्रुत्वा श्रीभाष्यमादरात्’ इति प्रथमाज्ञा (प्रपन्नामृतकाव्ये)। ‘तत्र शक्तिर्न चेत् तदा’ इत्यन्यत्सर्वं श्रीभाष्यपठनाशक्तानामेव कथितम्।

४ । श्रीभाष्यमस्माकं बुद्धिवर्धकम्। ‘‘लक्ष्यं बुद्धेः’’ इति प्रस्तूय ‘‘लक्ष्यालक्ष्यैः सितजलधिवत् भाति तात्पर्यरत्नैः’’ इति लक्ष्यपदस्य अर्थद्वयचमत्कारं कुर्वाणेन कवितार्किकसिह्मेन प्रख्यापितमिदम्।

५। यथावस्थिततत्वज्ञानाय श्रीभाष्यं पठनीयम्। ‘प्रतिकलमिह प्रत्यक्तत्वावलोकनदीपिकाः’ इमे श्रीभाष्यादिग्रन्थाः । ‘सत्यैकालम्बि भाष्यम्’ इति हि श्रीभाष्यश्लाघा क्रियते अधिकरणसारावळ्याम्।

श्रुतिषु स्मृतिषु प्रमाणतत्वम्
कृपयालोक्य विशुद्धया हि बुद्ध्या।
अकृथाः स्वत एव भाष्यरत्नम्
जय रामानुज हस्तिधाम्नि नित्यम्॥

इति श्लोकः अनन्ताल्वान्-पिळ्ळै-विरचितः अत्र स्मार्यः ।

६। हतावद्ये हृद्ये हरिचरणपङ्केरुहयुगे निबध्नन्त्यैकान्त्यं किमपि यतिभूभृत्-फणितयः

इति यतिराजसप्ततिगतं पद्यं देवतान्तरप्रणतिं परिहृत्य भगवतः चरणारविन्दयोः अनन्यभक्तिं वर्धयन्ति श्रीभाष्यादिग्रन्थाः इति बोधयति ।

एवं प्रयोजनषट्कमुद्दिश्य श्रीभाष्य-पिपठिषूणां सर्वेषां विदुषां सम्पुटत्रयात्मकमिदं पुस्तकं सम्यगुपयोज्यं भवति। एतस्य ग्रन्थस्य अनुवादकर्ता, मुद्रणकर्ता, प्रकाशनकर्ता, अभिनन्दनकर्ता, इत्येतेभ्यः सर्वेभ्यः सर्वं मङ्गळं ददात्येव सर्वेश्वरः। इति शम्॥

वासुदेवो गुरुप्रेक्षावारितप्रतिबन्धकः ।
वाञ्छिता रचयत्वित्थम् वागीशानुग्रहात् कृतीः॥

शार्वरी-श्रावण-श्रवणम्
हैदराबाद्

इति नावल्पाकं **यज्ञवराहः**
Email: vksm@uohyd.ernet.in
kannan.v@srmap.edu.in
Mobile:9949193737

श्रीः

डा. (आचार्य) चक्रवर्तिराघवन्
एम्.ए., एम्.फिल्., पीहेच्.डी. ; एम्.ए.(हिन्दी);
एम्.ए.(पोलीस् अड्मिनिस्ट्रेषन्); एम्.एल्.; एम्.सी.& जे
आचार्यः, विभागाध्यक्षश्च विशिष्टाद्वैतवेदान्तविभागः

राष्ट्रियसंस्कृतविश्वविद्यालयः
तिरुपतिः, आन्ध्रप्रदेश
चरवाणी : ८३०९७३१२५४

श्रीमते रामानुजाय नमः

दिनाङ्कः – श्रीशार्वरी–वृषभ–
कृष्ण दशमी

विदितमेवेदं विदुषां यत् सत्स्वपि नैकेषु भाष्येषु ब्रह्मसूत्रोपरि रचितेषु, श्रीभगवद्रामानुजप्रणीतं 'श्रीभाष्य'नाम्ना वाग्देव्या सम्मानितमिति। इदमेव भगवद्रामानुजभाष्यं समग्रवेदानुगुणमिति सूचना ततोऽवगन्तव्या, यतः 'ऋचस्सामानि यजूंषि; सा हि श्रीः' इति वैदिकवाणी व्याख्याति।

अत्र च न स्वकपोलकल्पितान् अर्थान् सूत्रार्थतया आबध्नन्ति; अपि तु 'भगवद्बोधायनकृतां विस्तीर्णां ब्रह्मसूत्रवृत्तिं पूर्वाचार्याः संचिक्षिपुः; तन्मतानुसारेण सूत्राक्षराणि व्याख्यास्यन्ते' इति हि प्रतिजानन्ति श्रीभाष्यकाराः। परमपुरुषस्य श्रीनारायणस्य कारणत्वम्, अबाध्यत्वम्, उपायत्वम्, उपेयत्वम् इति चतुरोर्थान् चतुर्षु अध्यायेषु निरूपयति सूत्रकृद्बादरायणः।

अत्र च अधिकरणगणैः तद्गुणान् उद्गृणाति इति श्रीदेशिकनिरूपितरीत्या परब्रह्मभूतस्य भगवतः परमात्मनः श्रीनारायणस्य धर्मभूताः कल्याणगुणा एव आवेदिताः सन्ति सूत्रस्तोमेषु। तथा च सूत्राणि – 'अन्तः तद्धर्मोपदेशात्', 'अन्तर्यामी .... तद्धर्मव्यपदेशात्', 'धर्मोपपत्तेः' च इत्यादीनि। हेयदोषाः ब्रह्मणो निषिद्धाः इति यत्, तदपि हि ब्रह्मगुणत्वेन सूत्रितं, 'अदृश्यत्वादिगुणकः धर्मोक्तेः' इति। भगवद्गुणरसिकाः 'पाराशर्यवचस्सुधां ... पिबन्तु अन्वहम्' इति श्रीभाष्यकाराणाम् आज्ञाम् अनुसरन्तः कालं क्षिपन्ति। परमकारुणिकानां श्रीरामानुजाचार्याणां पद्धतिः सर्वेषां हितकरी एव। मङ्गलम् आशासते हि –

रामानुजार्यदिव्याज्ञा प्रतिवासरम् उज्वला।
दिगन्तव्यापिनी भूयात् सा हि लोकहितैषिणी।

इति तत् प्रादेशिकभाषायामपि अधिगन्तुं उत्सुकानाम् जिज्ञासां सफलयितुम् अयमारम्भः, द्रविडीकरणम् इति

स्थाने इदं यत् पण्डितप्रकाण्डाः वासुदेवाचार्याः तत्र निरताः इति। महतां सकाशात् लब्धविद्याः तिरुवनन्तपुरे श्रीशङ्कराचार्यसंस्कृतसर्वकलाशालायां न्यायविभागे प्राचार्या एते नैकग्रन्थनिर्मातारः साङ्गवेदवेदान्तन्यायादिनिष्णाताः 'विपश्चिन्मणिः', 'न्यायवेदान्तनिधिः', 'वेदान्तचिन्तामणिः' इत्यादिविरुदभूषिताः; अत्रैव तिरुपति–विद्यापीठे विद्यावारिधिबिरुदभाजः च।

जगदुपकाराय कल्पितस्य अस्य प्रकाशनस्य विशिष्टाद्वैतवेदान्तविभागस्य अध्यक्षत्वेन आमुखम् इत्थं रचयन् धन्यतां भावयामि। उत्तरोतरम् एतेषां वाग्विलसितम् अनुभोक्तुं सन्नद्धाः सन्ति सहस्रशः इत्यतः भगवान् श्रीशेषाद्रिनिलयः तदुचितायुरारोग्यादिभिः पोषयत्विति प्रार्थये।

चक्रवर्तिराघवन्

DEPARTMENT OF VAISHNAVISM
UNIVERSITY OF MADRAS

Dr.K.Dayanidhi
Assistant Prof & Head i/c
Department of Vaishnavism
University of Madras
Chennai.5

Centenary Building
Chepauk
Phone 9884821549

அணிந்துரை

**''பேதையர் வேதப் பொருளிதென்றுன்னி, பிரமம்நன்றென்று
ஓதி மற்றெல்லாவுயிரும் அஃதென்று, உயிர்கள் மெய்விட்டு
ஆதிப்பரமனோடு ஒன்றாமென்று சொல்லும் அவ்வல்லல் எல்லாம்
வாதில் வென்றான் எம்மிராமாநுசன் மெய்ம்மதிக்கடலே''**

என்று அமுதனார் அருளிச்செய்கிறார். ''ப்ரஹ்ம ஸத்யம் ஜகன் மித்யா'' எனவும், ஜீவாத்மாக்கள் சரீர சம்பந்தம் கழிந்ததும் ப்ரம்ஹத்துடன் ஒன்றாய் விடும் எனவும் வாதிட்ட அவிவேகிகள் வாதத்தை வென்றவர் எங்கள் மெய்ம்மதிக் கடலான ஸ்ரீபாஷ்யகாரர்'', என்று கொண்டாடுகின்றார். காரேய் கருணை இராமானுஜர் தம் கருணையால் ப்ரஹ்மஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைத பரமான விளக்கமருளிச் செய்யவில்லையெனில், ஸ்ரீவ்யாஸ பகவானின் ஸூத்ரங்களின் உண்மையான பொருள் நமக்கு புலப்படாதே போயிருக்கக்கூடும். ''விரக்தரான வ்யாஸருக்கு பிறரை தூஷிப்பதிலே நோக்கில்லை. நம் விசிஷ்டாத்வைத மதத்தினர் பிற மதங்களை சமமாக நினைத்து இதில் நம்பிக்கையிழக்கலாகாகும் என்று, இவர்களைத் திருத்துவதிலேயே நோக்கு'' என்பார் ஸ்ரீமத் உத்தமூர் ஸ்வாமி.

ஸ்ரீவேதவ்யாஸர் அருளிச்செய்த ப்ரஹ்ம-மீமாம்ஸா-சாஸ்த்ரம், 'சாரீரகம்' எனப்படும். நான்கு அத்யாயங்களும், 156 அதிகரணங்களும் கொண்ட அந்த சாரீரகத்தில் பேடிகா விபாகம் பொருள் சார்ந்த விபாகமாகும். முதல் இரண்டு அத்யாயங்கள் ''பூர்வத்விகம்'' எனவும், பின்னிரண்டு அத்யாயங்கள் ''உத்தரத்விகம்'' எனவும் பிரிக்கப்படும். பூர்வத்விகத்தை, 'விஷயித்விகம்' என்றும்,'ஸித்தத்விகம்' என்றும் சொல்வர்; இந்த இரண்டு அத்யாயங்களுக்கும் நாவல்பாக்கம் ஸ்ரீஉவே வாஸுதேவாசார்யர் (Dr.V. Vasudevan, Professor,Department of Sanskrit Nyaya, Sree Sankaracharya University Of Sanskrit Thiruvananthapuram)

ஸ்வாமியின் சீரிய முயற்சியால் எளிய தமிழ் நடையில் விவரணம் பூர்வாசார்யர்களின் கருத்தை ஒட்டி ஏற்கெனவே இரண்டு பாகமாக வெளிவந்து நல்ல பாராட்டையும் பயன்பாட்டையும் பெற்றுள்ளது.

பின் பாகமான உத்தரத்விகத்தை,'விஷயத்விகம்' என்றும்,'ஸாத்யத்விகம்' என்றும் பெரியோர் அருளிச்செய்வர்.

அதில், மூன்றாம் அத்யாயம், 'வைராக்ய பாதம்', 'உபயலிங்க பாதம்', 'குணோபஸம்ஹார பாதம்' 'அங்க பாதம்' என்ற நான்கு பாதங்களைக் கொண்டது. நான்காம் அத்யாயத்தில் 'ஆவ்ருத்தி பாதம்', 'உத்க்ராந்தி பாதம்','கதி பாதம்' 'முக்திபாதம்' என நான்கு பாதங்கள்.

எல்லா பாதங்களும் சேவிக்க உத்க்ருஷ்டமே ஆனாலும்,'உபயலிங்க பாதம்' ஸ்ரீராமானுஜ தர்சனத்தின் உயிர் நாடி!. ''தோஷஹீனம், குணபூயிஷ்டம் ப்ரஹ்ம'' என்பார், மஹாபண்டிதரான விவரணகாரர். ஆழ்வாரும் எடுத்த எடுப்பிலேயே ''உயர்வற உயர்நலம் உடையவன்'' என்றாரிறே; மேலும் அவன் உபயவிபூதி நாயகன். அவனுடைய கல்யாண குணங்களில் ஈடுபட்டவனுக்கு இவ்வுலகத்திடம் த்வேஷ ப்ரஸக்தியே இராது! 'வைகுண்டவாஸऽபி நமேऽபிலாஷ:' என்று நினைக்கத் தோன்றும். ''இச்சுவைதவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்'' எனவும், ''ஏரார் முயல் விட்டுக் காக்கை பின்போவதே'' என்றதன் தாத்பர்யம் இது தான் என்பர் பெரியோர். எம்பெருமானின் குணங்களில் ஈடுபட்டு 'ஆச்ரித வாதஸல்யைக ஜலதே' என்றும், 'ப்ரணதார்த்தி ஹர' என்றும் உடையவர் அருளிச்செய்ததும், இவையெல்லாம் அவனிடம் நிறைந்திருக்கையாலன்றோ நாம் கரையேறுவது!' என்பதைக் நமக்கு காட்டித்தரவாம்.

ஸ்ரீபாஷ்யகாரர் நமக்கு இட்ட கட்டளைகள் ஐந்து - 1)ஸ்ரீபாஷ்யத்தை வாசித்தும் வாசிப்பித்தும் போருகை. 2)அருளிச்செயலை ஓதியும் ஓதுவித்தும் போருகை. 3)உகந்தருளின நிலங்களிலே அமுதுபடி சாத்துப்படி முதலானவற்றையுண்டாக்கி கைங்கர்யம் நடத்திக்கொண்டு போருகை. 4)த்வயத்தை அர்தாநுஸந்தாநம் பண்ணிப் போருகை. 5)என்னுடையவன் என்று அபிமாநிப்பான் யாவனொரு பரமபாகவதன் அவனுடைய அபிமானத்திலே ஒதுங்கிப் போருகை. இந்த ஐந்தையும் எம்பெருமானார் அருளிச்செய்தவாறே அப்படியே ஸ்ரீதேசிகன் பதிவு செய்து அருளினார்; இது தவிர 6) திருநாராயணபுரத்திலே ஒரு குடில் கட்டிக்கொண்டு இருக்கை என்றும் சிலர் சொல்வர்.

இந்த ஐந்திலும் ஈடுபடும் மஹான்கள் பலர்; இதில் ப்ரதம ஆஜ்ஞையான ஸ்ரீபாஷ்யத்தை வாசித்தும் வாசிப்பித்தும் பொழுது போக்குகை என்பதை

முக்கியமாக ஆதரிப்பர்; ஸ்ரீவாசுதேவாசார்யர் அப்படியே சிரஸா வஹித்து ப்ரவர்த்தித்து வருகின்றார்.

இந்த மூன்றாம் பாகமான பதிப்பில் மூன்று நான்கு அத்யாயங்களில் சொல்லப்பட்ட விவரங்கள் வெகு தெளிவாக காட்டப்பட்டு இருக்கின்றன. ஆஸ்திக அன்பர்கள் படித்துப் பயன்பெற திருமகள் கேள்வனை ப்ரார்த்தித்து அமைகின்றேன்.

ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்
ராமானுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்

தாஸன்

Dr. K. Dayanidhi
M.A.,M.Phil.,Ph.D.
Assistant Professor Head i/c
Department of Vaishnavism
University of Madras, Chennai 5

கோழியாலம் **தயாநிதி**

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

சிஷ்யர்களின் பணிவுரை

அடியோங்கள் போல் நவீன உலகத்தில் லௌகீகமாக வாழ்ந்துவிட்டு ஸ்ரீபாஷ்யம் மூலமாக வைதீக சம்பந்தம் பெற விழையும் பலருக்கும் ஒரு பாலமாக இருக்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து படைக்கப்பட்ட வெளியீடாக இந்த தமிழ்ஸ்ரீபாஷ்ய-ஸ்ரீகோசத்தை நினைக்கிறோம்; இதற்கு முன் வெளியிடப்பட்ட இரண்டு வெளியீடுகளும் அப்படியே! தற்போது ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்து கொண்டு, மேல்சொன்ன இரண்டு வெளியீடுகளையும் உபயோகிக்கிறோம் என்கிற ஒரே காரணத்தால் மட்டும் அடியோங்களுக்கு இந்த பணியுரையை எழுதும் பாக்யம் கிட்டியது. மற்றபடி அடியோங்களுக்கு வேறு எந்தவித அர்ஹதையும் கிடையாது.

கம்ப்யூட்டர், பயோடெக்னாலஜி என்றும் அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகள் மற்றும் இந்தியாவின் பல நகரங்களிலும் வசிக்கும் எம்மைப்போல் அநேகருக்கு இப்போது ஒரு புது உணர்வு; காரண-காரியங்களில் உள்ள இந்த ஸம்சாரத்தில் உள்ள நெளிவு சுளிவுகள்/சுக துக்கங்கள் நம்மை தாக்க ஆரம்பிக்கும்போது பலருக்கு பகவான் ஒருவிதமான ---- என்னவென்றே தெரியாத உணர்வை தருகிறான். இந்த உணர்வு வயதானவர்களுக்கு மட்டும் இல்லை - பல இளைஞர்களும் இந்த கோஷ்டியில் இருக்கிறார்கள் -- அதைத்தான் நாம் எல்லோரும் அவனது லீலாவிபூதியில் சேர்ந்த பகவத் ஸங்கல்பம் என்று புரிந்து கொள்கிறோம். ஆனால் நவீன கல்விகள் படித்த நமக்கு தெரிந்த Logic -- தர்க்கம் --- இந்த ஜீவ - பரமாத்ம தத்வார்த்தத்தை அவ்வளவு சுலபமாக அறிந்து கொள்ள முடிவதில்லை என்று மாத்திரம் நன்றாக தெரியும்; மேற்சொன்ன உணர்வு, அமெரிக்கன் போன்ற பெரிய கலாசாலைகளில் படித்த படிப்பு எவ்வளவு அற்பம் - இந்த ப்ரஹ்ம சூத்திரங்கள்/ மற்றும் வேதார்த்தங்கள் எதுவரை நம்மை கொண்டுசேர்க்கும் என்பதும் தெளிய ஆரம்பிக்கும்...

அடியோங்களின் ஸ்ரீபாஷ்ய ஆசார்யரான ஸ்ரீ.உ.வே. வில்லூர் நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம் சாஸ்த்ர ஸாஹிதீ வல்லப Dr.கருணாகராசார்யர் ஸ்வாமிக்கும் அடியோங்களுக்கும் உள்ள ஆசார்ய--சிஷ்ய சம்பந்தம் பலவிதத்தில் விசேஷமான ஒன்று; ஸ்வாமிக்கே உரித்தான பலவிதமான தற்கால ஒப்புமைகளை மேற்கோள் காட்டி புரியும் படி சாதிப்பது என்பது ஒரு super speciality. சிஷ்ய ஸ்வாதந்த்ர்யம் என்பது அடியோங்களது காலக்ஷேப கோஷ்டிக்கே உரித்தான மற்றொன்று; ஸ்வாமியின் பொறுமையின் எல்லை எது என்பது அடியோங்களுக்கே தெரிந்த ஒன்று. (இந்த சந்தர்பத்தில் இந்த புஸ்தக ஆசிரியரும்

மற்றும் அடியோங்களின் ஸ்வாமி தேசிகனின் தத்வமுக்தாகலாபம், மற்றும் ரஹஸ்ய க்ரந்த காலக்ஷேப ஆசார்யரான நாவல்பாக்கம் ஸ்ரீ.உ.வே.வாசுதேவாசார்யருக்கும் நன்றாக தெரிந்த விஷயமே என்று கூறியாகவேண்டும்).

ஸ்ரீபாஷ்யத்தை அணு அணுவாக அனுபவிக்கும் நமக்கு -- ஸ்ரீபாஷ்யகாரரின், பதப்ரயோகமாகட்டும், வ்யாகரணலக்ஷணமாகட்டும், சூத்திரத்தின் விஷய வைலக்ஷண்யமாகட்டும், அடியோங்கள் அந்தஸாமாநாதிகரண்யம் முதல் நம் ஸித்தாந்த பொருத்தம் மற்றும் அத்வைத பக்ஷம் முதலிய பக்ஷ வித்யாசங்கள் ஒன்று விடாமல் அனுபவிக்கும் நமக்கு, அந்த காலக்ஷேபம் நடக்கும் பாங்கே தனி - சிஷ்யனுக்கு அர்த்தம் எல்லாம் போய்ச்சேர வேண்டும் என்பதில் ஸ்வாமிக்கு உண்டான ஆர்வம் அடியோங்களை ஆட்கொண்டது என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஸ்வாமி, எங்களுக்கு புரிய வைப்பதற்காக, அடிக்கடி இந்த தமிழ் மொழிபெயர்ப்பில் உபயோகப்படுத்தியுள்ள பதப்ரயோக விஷயங்களை கேட்பதுண்டு.

ஸம்ஸ்க்ருதம் படிக்கக்கூட முடியாதவர்கள் அநேகம்; ஆனால் இந்த ஸம்ஸார உலகில் உள்ள கார்ய காரண -- ஜீவ பரமாத்வ தத்வத்தில் ஈடுபாடு உடையவர்கள் பெருகிக்கொண்டேதான் இருக்கிறார்கள் ---10000 வருஷம் முதல் பாஷ்யகாரர் காலம் வரை அதற்குப்பின் ஸ்வாமி தேசிகன் காலம் வரை சல்லடை போட்டு சலித்து எடுக்கப்பட்ட நமது ஸம்ப்ரதாய கருத்துக்கள் தற்போதும் பரவிக்கொண்டுதான் இருக்கிறது. அதுவும் இன்றைய COVID 19 நிலையில் தத்வார்த்தங்களை நினைக்காதவர்களே இருக்க முடியாது.அடியோங்களது ஸ்ரீபாஷ்யம், தாத்பர்ய சந்திரிகா, தத்வமுக்தா கலாபம், ரஹஸ்ய சிகாமணி முதலிய காலக்ஷேபங்களில் 30 முதல் 70 சிஷ்யர்கள் (அடியோங்களது காலக்ஷேபங்களில் இருப்பது போல் பல காலக்ஷேபங்கள்) ஸ்ரீவைஷ்ணவ ஸ்வரூபத்துடன் கலந்து கொண்டு அனுபவிப்பதே இதற்கு சாக்ஷி - தற்கால நவீன கம்ப்யூட்டர் மூலமாக இந்த நம் சம்பிரதாய கருத்துக்கள் உலகம் முழுவதும் போய்ச்சேர உதவுவதும் பகவத் சங்கல்பமே.

இதற்கு ஒரு மஹத்தானஉபயமாக நாவல்பாக்கம் சதுர்வேத சதக்ரது தாதாசார்ய ஸ்ரீ உ வே Dr வாசுதேவாச்சார் ஸ்வாமியின் இந்த மூன்றாவது மற்றும் நான்காவது அத்தியாயங்களின் மொழிபெயர்ப்பு வெளியீடு, அடியோங்களின் சிஷ்ய/ நேயர் விருப்பமே. ஒரே விஷயத்துக்கு மூன்று நாட்கள் காலக்ஷேபம் செய்துவிட்டு அடுத்த வாரம் திருப்பி பார்த்தால் புரிந்தும் புரியாத மாதிரி இருக்கும்--ஒரு தவிக்கும் நிலையில்-ஸ்ரீபாஷ்ய சமுத்திரத்தில் நீந்தமுடியாத ஜீவனுக்கு ஒரே உறுதுணையாக காத்து கொண்டிருக்கும் படகாக,-ஏன் ஒரு கப்பலாகவே, இந்த மூன்று மொழிபெயர்ப்புகளும் இருப்பதில் அடியோங்களுக்கு எந்தவித சந்தேக-

மும் இல்லை; கடந்த வருடங்களாக உபயோகித்து கொண்டிருக்கும் எங்களுக்கு இரண்டாம் அத்யாயம் நான்காம் பாதம் காலக்ஷேபம் முடியும் தருவாயில் இந்த மூன்றாவது பாகமான வெளியீடு ஒரு வரப்பிரசாதமே. ஸ்வாமியின் நளினமான தமிழ் மொழிபெயர்ப்பாகட்டும் அல்லது ஸ்வாமியின் மதுரமான உபன்யாசமாகட்டும் - அதில் ஈர்க்கப்படாதவர்களே இருக்கமுடியாது.

ஒவ்வொரு பாஷைக்கும் ஒவ்வொரு தனி லக்ஷணம் உண்டு என்பது நம் எல்லாருக்கும் தெரிந்த ஒன்று---அதுவும் ஸம்ஸ்ருதம், தமிழ் ---இரண்டும் மிகவும் ப்ராசீன பாஷை என்பது மட்டுமில்லாமல் --அவைகளின் பதபிரயோகங்கள், மற்றும் transliteration & page synchronisation எல்லாம் மிகவும் ஒரு கடினமான ஒரு கார்யம்.. இவையெல்லாவற்றையும் ஒருங்கே கூட்டி ஒன்றும் புரியாத ஒரு குழந்தைக்கு புரியும்படி நமக்கெல்லாம் அளித்துள்ள நம் ஸ்வாமிக்கு எப்படி கைம்மாறு செய்தாலும் -எவ்வளவு நன்றி கூறினாலும் மிகையாகாது. மேலும் ஸ்வாமியின் ஒரு பூரணமான அணுகுமுறை --நம் சம்பிரதாய கருத்துக்களுக்கு ஒரு அறிமுகம், அந்த கருத்துக்களுக்கே சம்பந்தமான முக்யமான வேத வாக்யங்கள் மற்றும் பின் இணைப்புகள், முக்யமான விரிவுகள் .e.g.,. ஸாமாநாதிகரண்யம் முதல் அருஞ்சொற்களின் அர்த்தங்கள் ----ஸ்வாமியின் கடும் உழைப்பை என்னவென்று சொல்வது? இந்த ஸ்ரீபாஷ்ய புஸ்தகத்தின் பரிபூர்ணத்வத்தை, --வாசித்து புரிந்து கொள்பவர்ஒரு புண்யசாலி என்பது நிச்சயமானதொன்று.

அடியோங்களது காலக்ஷேப ஆசார்யனாக இருந்தாலும். இந்த பல காலமாக உள்ள பரிசயத்தினால் ஏற்பட்ட ஸ்வாதந்த்ர்யம் --அடியோங்களுக்கே ஏற்பட்ட ஓர் ஸம்பத் விலக்ஷணம் . அதற்காக நாம் எல்லோரும் ஸ்வாமிக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

எதிர்காலத்தில் யாராவது தமிழும் புரியாத ஒரு சமயம் வந்து அல்லது இங்கிலீஷிலேயேதான் புரியும் என்றும் ஆகலாம்; அப்போது, 'ஓம் அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா'' என்பதில் ஆர்வம் காட்டி வந்தால், அப்போது இங்கிலீஷில் மொழி பெயர்க்க வேண்டி வந்தால் --அப்போது வேறு எங்கும் யாரும் தேடி ச்ரமப்பட வேண்டாம் - இதோ இருக்கிறது தமிழ்; இங்கிலீஷில் மொழிபெயர்த்து கொள்ள......

இந்த தமிழ் மொழி பெயர்ப்பின் மூலம் ஸ்ரீபாஷ்யத்தை வாசித்தும், கேட்டும், புரிந்துகொண்டும், வணங்கி வழிபட்டும் - போக்கினோம் போது என்று கூறி அமைகிறோம்.

பெங்களூரு.
சார்வரி சித்திரை ஹஸ்தம் -
(அருளாளன் அவதாரத் திருநாள்.)

ஸ்ரீபாஷ்ய காலக்ஷேப கோஷ்டியின் சார்பாக,
தாஸன் -
ராமபத்ரன் ரங்கராஜன்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பதிப்பாளரின் பணிவுரை

சிந்தாசேஷ துரர்த்த தந்துர வச: கந்தாசத க்ரந்திலா:
ஸித்தாந்தா: ந ஸமிந்ததே யதிவரக்ரந்தாநுஸந்தாயிநி।
முக்தாஶுக்தி விஶுத்த ஸித்த தடி நீ சூடால சூதாபத :
கிம் குல்யாம் கலயேத கண்டபரஶு: மண்டூக மஞ்ஜூஷிகாம்।।

(ஸ்வாமி தேசிகன் ஸ்ரீயதிராஜ ஸப்ததியில்)

இதன் பொருளாவது: ஸ்ரீபாஷ்யம் ஸேவித்து அந்த ரஸாநுபவம் பெற்றவர்கள் மற்றைய ஸித்தாந்தங்களின் நூல்களைத் தொடவும் சிந்திப்பரோ? மாட்டார்கள். எப்படிப் போலே என்றால், முத்துக்களும், சிப்பிகளும் நிறைந்த வெள்ளம் பெருகி வரும் தூய கங்கையாற்றைத் தன் தலையில் ஏற்றுக் களிக்கும் சிவனார் வராஹம் கலக்கிய வாய்க்கால் ஓடையை - வெறும் தவளைப்பெட்டி என்னத் தக்கதை தன் தலையில் ஏந்தக் கருதுவரா? மாட்டார்.

இத்தனை சிறப்புக்கள் பெற்ற பகவத் ராமாநுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தின் மூன்றாம் பாகம் திவ்ய தம்பதிகளின் அருளினால் தற்போது வெளியிடப்ராப்தமாகி தங்கள் கைகளில் தவழ்கிறது. வடமொழி பயிற்சி இல்லாத அடியேனைப் போன்ற மந்தமதி கொண்ட தற்கால இளைஞர்களின் நிலமையைக் கருத்தில் கொண்டு வைணவன் குரல் மிக உயர்ந்த, ரஹஸ்ய க்ரந்தங்களில் தலையானதான ஸ்ரீபாஷ்யத்தை தகுந்த அதிகாரியைக் கொண்டு பழகு தமிழில் வெளிக்கொணர விரும்பியது. நமது விருப்பத்தை நிறைவேற்றிக் கொடுத்தவர் நமது ஆசிரியர் குழு உறுப்பினர் ஸ்ரீ உப. வே. மஹாவித்வான் திருமலை சதுர்வேத பாதக்ரது, Dr. நாவல்பாக்கம் V. வாஸுதேவ தாதாசார்யர் ஸ்வாமி. அன்னாருக்கு அவரின் சேவை, தொண்டிற்கு தலையல்லால் கைமாறிலோம் எனக் கூறி அஞ்சலி செலுத்துவதை தவிர வேறு ஒன்றும் அறியோம். சற்றே காலதாமதம் ஆனாலும் ஸ்ரீபாஷ்யம் மீதமுள்ள பகுதிகளான மூன்றாம், நான்காம் அத்யாயம் தற்போது முழுவதுமாக பிரகாசப்படுத்தப்பட்டு விட்டது. முன் இரண்டு பாகங்களுக்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் அளித்த பேராதரவு இந்த பாகத்திற்கும் தொடரும் என திடமாக நம்புகிறோம்.

ஸ்ரீபாஷ்யம் அனைத்து ஸூத்ரங்களுக்கு ஸ்வாமி தேசிகன் ச்லோக ரூபமாக ஒரு க்ரந்தம் படைத்துள்ளார். அதுதான் ‘ அதிகரண ஸாராவளி’’ என்பது. இதில் ஒவ்வொரு ஸூத்ரத்திற்கும் உண்டான பூர்வபக்ஷம், ஸித்தாந்தம் எல்லாம் பேசப்படுகிறது. இந்த பாகத்தின் பின் இணைப்பில் ‘‘**ஸ்ரீபாஷ்யஸாரம்**’’ என்ற தலைப்பில் அதிகரண ஸாராவளியின் சில ச்லோகங்களை தொகுத்து தமிழில் விளக்கம்

கொடுக்கப்பட்டுள்ளது. வாசகர்கள் இதனை மனனம் செய்யலாம். பின்னொரு சமயம் **'நவரத்னமாலிகா'** தொடரில் ஸ்ரீபாஷ்யகாரரின் ஏனைய நூல்கள் பதிக்கப்பட்டபின் அதிகரண ஸாராவளிக்கு விளக்க உரை வைணவன் குரல் வெளியீடாக வெளிவர இருக்கிறது. இதற்கு ஸ்ரீபாஷ்யகாரரும், ஸ்வாமி தேசிகனும் அருள்புரிய வேணும்.

இந்நூலுக்கு (மூன்றாம் பாகத்திற்கு) அணிந்துரை அளித்துள்ள மூன்று திருநாமங்களுக்கு ஸ்ரீ உப.வே நாவல்பாக்கம் மஹாவித்வான் ஸ்ரீஉவே யஜ்ஞும் ஸ்வாமி, மற்றும் பல்கலைகளில் நம் வைணவத் துறையின் தலைவர்களான ஸ்ரீ உப.வே ஸ்ரீசக்ரவர்த்தி ராகவன் ஸ்வாமி, ஸ்ரீ உப.வே. ஸ்ரீகோழியாலம் தயாநிதி ஸ்வாமிகளுக்கும் நமது க்ருதஜ்ஞுதையைத் தெரிவித்துக் கொள்கிறோம். குறித்த நேரத்தில் நல்ல முறையில் அச்சிட்டுக் கொடுத்த M/s.RNR Printers & Publishers&க்கு விசேஷமான பாராட்டுதல்களோடு அவர்களது சம்ப்ரதாயப் பணி மேலும் தொடர வாழ்த்துக்கள். இந்நூலை தமிழ் கூறும் ஸ்ரீவைஷ்ணவ சமூகம் ஏற்றுக் கொள்ளும் என திடமாக நம்புகிறோம்.

காதா தாதாகதா நாம் கலதி கமநிகா காபிலீ க்வாபிலீநா
க்ஷீணா காணாதவாணீ த்ருஹிண ஹரகிர: ஸௌரபம் நாரபந்தே।
க்ஷாமா கௌமாரிலோக்தி: ஜகதி குருமதம் கௌரவாத் தூரவாந்தம்
காசங்கா சங்கராதே: ஜகதி யதிபதௌ பத்ரவேதிம் த்ரிவேதீம்॥

சென்னை
சார்வரி, புரட்டாசி 01,
17.09.2020

வேணும், விஜ்ஞாபனம்
சேட்லூர், தஞ்சாவூர்
வரதாசாரி ரங்கராஜன்
ஆசிரியர், வைணவன் குரல்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

அடியேன் செய்யும் விண்ணப்பம்

கருணைக் கடல்கள் மூன்று - எம்பெருமான், ஸ்ரீபகவத்ராமானுஜர், ஸ்ரீவேதாந்ததேசிகன்; இவர்களால்தான் ஸ்ரீபாஷ்யம் நமக்கு கிடைத்துள்ளது.

ஸ்ரீபாஷ்யம் வர வேண்டும் என்று ஸங்கல்பம் செய்தவன் எம்பெருமான்; ஸ்ரீபாஷ்யம் அருளி இதை தினமும் பருக வேண்டும் என்று பரிந்துரைத்தவர் எம்பெருமானார் ஸ்ரீபகவத்ராமாநுஜர்; அதன்படியே ஸ்ரீபாஷ்ய-வாழ்வை வாழ்ந்துகந்து பல விதமாக ஸ்ரீபாஷ்யத்தை காத்து நமக்கு அளித்த பரம-ஆசார்யன் ஸ்ரீதேசிகன்.

இந்த மூவரின் கருணைக்கு பலனாகவே மூன்று பாகங்களில் தமிழில் ஸ்ரீபாஷ்யம் வந்துள்ளது. அந்த கருணை இல்லாவிட்டால் இது வெளி வந்திருக்காது; இதனை பலகாலும் உணர்ந்து எழுதுகிறேன்; அடியேனுக்கு இதில் அன்வயம் என்பது வெறும் கருவியாக மட்டுமே! காகிதம் போல, பேனா போலதான் அடியேனும்.

ஸ்ரீபாஷ்யகாரரின் ஆயிரமாவது ஆண்டினை ஒட்டி, தமிழில் பல ஸ்ரீபாஷ்ய வெளியீடுகள் வெளிவந்தன; ஆனால், வைணவன் குரலின் இந்த வெளியீடு ஸ்ரீபாஷ்யகாரரும் ஸ்ரீதேசிகனும் உகந்தபடியான காலக்ஷேப-ஸம்ப்ரதாயத்துக்கு ஏற்றது. ஸ்ரீபாஷ்யம் என்பது தானாக தமிழில் படித்துக் கொண்டே போக வேண்டிய புத்தகம் அல்ல; இது சாந்தி-பாடத்துடன் ஆசார்யனிடம் காலக்ஷேபம் செய்து உபதேசம் பெற வேண்டிய க்ரந்தம்; அப்படி காலக்ஷேபம் செய்ய வசதியாக இடது பக்கத்தில் ஸ்ரீபாஷ்ய-மூலமும், வலது பக்கத்தில் மொழி பெயர்ப்பும் அமைகிறது. இதனால், ''மன்னுபுகழ் பூதூரான் மனம் உகப்போன் வாழியே'' என்று வாழ்த்தப்படும் ஸ்ரீதேசிகன் மனமும் உகக்கும்; அவர்கள் அப்படி அமைத்தருளும்போது அந்த அருளைப் பற்றி இருப்பது தவிர வேறென்ன நமக்கு வேண்டும்?

அன்று முதல் இன்று வரை ஸ்ரீபாஷ்யத்தில் ஊறித் திளைக்கும் மஹான்கள் பலர்; அடியேன் அவர்களது திருவடித் தூளாக இருக்க விரும்புகிறேன்.

இந்த பாகத்தில் ஸ்ரீபாஷ்யத்தின் பின் பகுதியான மூன்றாவது, நான்காவது அத்யாயங்கள் உள்ளன; இந்த இரு அத்யாயங்களில் உபாயம் பற்றியும் பலன் பற்றியும் விரிவாக அறிய முடியும்; உபாயம் என்பது உபாஸனம் என்று சொல்லப்படும் பக்தியோகம்; பலன் என்பது ஸ்ரீபரமபதத்தில் பெறப்போகும் பகவத்-அனுபவம்.

இந்த இரண்டு அத்யாயங்களில் ஒவ்வொன்றிலும் நான்கு பாதங்கள்; ஆக எட்டு பாதங்கள்; அவற்றில் உள்ள விஷயங்கள் -

3.1. ஸம்ஸாரத்தில் வைராக்யம் பெறும் முறை.

3.2. பரமாத்மாவிடத்தில் விருப்பம் அடைதல்

3.3. உபாயமான ப்ரஹ்மவித்யையின் ஸ்வரூபம்

3.4. ப்ரஹ்மவித்யையின் அங்கங்கள்

4.1. உபாயத்தின் பலனாக புண்யபாபங்கள் தொலைதல்.

4.2. பரமபதம் செல்வதற்காக உடலை விட்டு ஜீவன் வெளியேறுதல்.

4.3. அர்ச்சிராதி வழியாக பரமபதம் செல்லுதல்.

4.4. பரமாத்மாவை அடைந்து, நிலையானப்ரஹ்ம-ஆனந்தம்பெறுதல்.

நமக்கெல்லாம் உபாயம் என்பது சரணாகதிதான்; சரணாகதி பற்றிய குறிப்புகளும் ஸ்ரீபாஷ்யத்தில் பல இடங்களில் உள்ளன; ஸ்ரீச்ருதப்ரகாசிகா உரையில் அதனை தெளிவாகவே சாதிக்கிறார்; ஸ்ரீதேசிகனும் அதனை அப்படியே பின்பற்றி அருளுகிறார்.

சரணாகதி பற்றிய குறிப்பு உள்ள இடங்களில் சில -

1. ஶப்தாதிபேதாதிகரணம் (3-3-24) - ப்ரஹ்மவித்யைகள் பல உண்டு; அவற்றில் சரணாகதியும் ஒன்று எனும் குறிப்பு ஸூத்ரத்திலேயே உள்ளது.
2. விகல்பாதிகரணம் (3-3-25) - பல ப்ரஹ்மவித்யைகளில் ஏதாவது ஒன்று அனுஷ்டானம் செய்தாலும் போதும்; மோக்ஷ-பலன் கிடைக்கும்; அந்த ஒன்று சரணாகதியும் ஆகலாம்.
3. புருஷவித்யாதிகரணம் (3-3-9) - தைத்திரீய உபநிஷத்தில் கடைசியில் சரணாகதி எனும் ந்யாஸவித்யையைச் சொல்லி, அது செய்தால், வேறெதையும் செய்ய வேண்டியதில்லை என்பதை விளக்குகிறது.
4. ததிகமாதிகரணம் (4-1-7) - ப்ரஹ்மவித்யை சித்திக்கும்போதே முன்-பாபங்களை பரமாத்மா மொத்தமும் அழித்து விடுவான் என்று வேதம் சொல்கிறது; இது சரணாகதிக்கு நன்கு பொருந்தும் என்று உரையில் சாதிக்கிறார்; ஏனென்றால், சரணாகதி செய்தவுடனேயே முன்வினைகள் கழிந்து விடும்; பக்தி-யோகத்துக்கோ, ''பின்னர் உபாஸன-முடிவில், இவனது பாபங்களை கழிப்பேன்'' என்று பரமாத்மா ஸங்கல்பம் செய்கிறான்'' என்பதுதான்.

முதலியன.

அற்புதம் என்றால் ஸ்ரீபாஷ்யம்! அற்புதத்துக்கு ஏற்ற அற்புதம் என்றால், ஸ்ரீபாஷ்யத்தின் உரைகள்; அடியேனுக்கு முக்கியமாக உதவியவை -

1. ஸ்ரீஸுதர்சனபட்டர் அருளிய ச்ருதப்ரகாசிகா
2. ஸ்ரீஉபநிஷத்பாஷ்யகாரர் அருளிய பாவப்ரகாசிகா
3. ஸ்ரீ உத்தமூர் ஸ்வாமி அருளிய தர்ப்பணம்.

முதலியவை.

உரைகளை உரைகல்லாகக் கொண்டுதான் அடியேன் எழுதியுள்ளேன்; ஆனாலும், அடியேனது அஜ்ஞானத்தாலும் அனவதானத்தாலும் தவறுகள் இருக்கும்; பெரியோர்கள் திருத்திப் பணி கொள்ள வேணும்.

வழக்கம் போல முன்னுரை, பின் இணைப்பு முதலிய விசேஷங்கள் இதிலும் உண்டு. குறிப்பாக ஸ்ரீதேசிகன் அருளிய ஸ்ரீபாஷ்யஸாரம் இணைப்பு இதற்கு பெருமை சேர்க்கிறது.

ஸ்ரீதேசிகன் திருவாய்மொழியின் சாரத்தை தாத்பர்யரத்னாவலீ மற்றும் த்ரமிடோபநிஷத் ஸாரம் எனும் இரு நூல்களில் அருளினார்; அதுபோல, ஸ்ரீபாஷ்யஸாரத்தை அதிகரணஸாராவலீ நூலில் ஆங்காங்கே அருளியுள்ளார்; அதன் தொகுப்பு ஒன்று இங்கே பின் இணைப்பில் தரப்பட்டு உள்ளது; அது அனைவருக்கும் இன் இணைப்பாக இருக்கும். அடியேனது திருத்தகப்பனார் ஸ்தானத்தில் திருத்தமைனார் அனுக்ரஹ-ஸ்ரீமுகம் அருளியுள்ளார்; அவருக்கே உரிய பாணியில் அற்புதமாக அது அழகு சேர்க்கிறது; அடியேன் ப்ரணாமங்களை ஸமர்ப்பிக்கிறேன்.

தக்ஷிணதேஶத்தில் நம் தர்சனத்துக்காக அரசாங்க-பல்கலைகளில் தனியாக இயங்கும் துறைகள் -

1. திருப்பதி ராஷ்ட்ரிய-ஸம்ஸ்க்ருத-பல்கலையில் விசிஷ்டாத்வைத துறை.
2. சென்னை பல்கலையில் வைணவத்துறை

ஆகியவை; அந்த துறைகளின் தலைமைப்பொறுப்பில் இருக்கும் ஸ்ரீசக்ரவர்த்தி ராகவன், மற்றும் கோழியாலம் ஸ்ரீதயாநிதி ஆகிய இருவரும் ஸம்ப்ரதாய சேவையில் சிறப்பாகவும் பொறுப்பாகவும் செயல்படும் இளைஞர்கள்; அவர்கள் இந்நூலுக்கு முன் மொழி அளித்தமைக்கு தன்யன் ஆகிறேன்.

தற்காலத்தில், ஸ்ரீபாஷ்ய-காலக்ஷேபத்தை ரசிக்கும் பாக்யசாலிகள் பலவிதமாக உள்ளனர். முறைப்படி சாஸ்த்ர-ஜ்ஞானம் பெற்றவர்கள் ஒரு பக்கம்; ஸம்ஸ்க்ருத பயிற்சி பெற்றவர்கள் சிலர்; ஸம்ஸ்க்ருத சாஸ்த்ர பரிசயம் செய்துகொண்டு இல்லாவிட்டாலும், ஸம்ப்ரதாய ச்ரத்தையுடன் அதிக ஆசையுடன் காலக்ஷேபங்கள் செய்பவர் பலர்; எல்லாருக்கும் ப்ரஹ்ம-ஜிஜ்ஞாஸா இருக்கிறது; எல்லாருக்கும்

ஸ்ரீபாஷ்யம் உரித்தாகிறது; இந்த தமிழாக்கம் இவர்கள் எல்லாருக்கும் உதவும் என எண்ணுகிறேன்; பயன்பெற்ற ஸ்ரீபாஷ்யகாலக்ஷேப கோஷ்டியினர் ஒரு பணிவுரை அணிவித்துள்ளனர். போற்றி வணங்குகிறேன்.

பக்கங்களில் பாங்காக அமைத்திடும் பெரும்பணி நாவல்பாக்கம் ஸ்ரீஜகன்னாதன் செய்தது; பாராட்டியே ஆக வேண்டும்.

வைணவன்குரல் பதிப்பக ஸ்வாமிகள் அடியேனை இந்த கைங்கர்யத்தில் ஈடுபடுத்தியதற்கு தலையல்லால் கைம்மாறு இலேனே. ஸ்ரீவைஷ்ணவநூல்களை அச்சிடும் ஆர்.என்.ஆர். பிரிண்டர்ஸ் இன் மஹத்தான கைங்கர்யத்துக்கும் தலை வணங்குகிறேன்.

மேலும் கைங்கர்யங்கள் தொடர பெருமானையும் ஆசார்யர்களையும் பெரியோர்களையும் பிரார்த்திக்கிறேன்.

திருவனந்தபுரம்.
சார்வரீ ஆடி உத்தராடம்
(02-08-2020)

நாவல்பாக்கம்
வாஸுதேவதாஸன்

Ph - 9895016724
mail - vasudevan.navalpakkam@gmail.com

பெயர்ச்சுருக்கம்

1.	अग्नि.पु.	अग्निपुराणं	அக்நிபுராணம்
2.	अग्नि.	अग्निरहस्यं	அக்நிரஹஸ்யம்
3.	अमृ	अमृतबिन्दु–उपनिषत्	அம்ருதபிந்து-உபநிஷத்
4.	अ.र	अग्निरहस्यम्	அக்நி-ரஹஸ்யம்
5.	अष्टा.	अष्टाध्यायी	அஷ்டாத்யாயீ
6.	आ.ध.सू	आपस्तम्बधर्मसूत्रम्	ஆபஸ்தம்பதர்மஸூத்ரம்
7.	आ.श्रौ.सू	आपस्तम्बश्रौतसूत्रम्	ஆபஸ்தம்பஶ்ரௌதஸூத்ரம்
8.	ई.	ईशावास्य–उपनिषत्	ஈசாவாஸ்யஉபநிஷத்
9.	ऋ.सं.	ऋक्संहिता	ருக்வேத-ஸம்ஹிதா
10.	ऐ.आ.	ऐतरेय आरण्यकं	ஐதரேய ஆரண்யகம்
11.	ऐ	ऐतरेय–उपनिषत्	ஐதரேய-உபநிஷத்
12.	ऐ.ब्रा	ऐतरेय–ब्राह्मणम्	ஐதரேய-ப்ராஹ்மணம்
13.	क.	कठोपनिषत्	கடோபநிஷத்
14.	के.	केनोपनिषत्	கேநோபநிஷத்
15.	कै.वृ.	कैयटवृत्ति	கையடவ்ருத்தி
16.	कू.पु.	कूर्मपूराणं	கூர்மபுராணம்
17.	कौ.	कौषीतकी–उपनिषत्	கௌஷீதகீ உபநிஷத்
18.	गर्भ.	गर्भोपनिषत्	கர்ப-உபநிஷத்
19.	गी.	भगवद्गीता	பகவத்கீதா
20.	गौ.ध.	गौतमधर्मसूत्रं	கௌதமதர்மஸூத்ரம்
21.	छा.	छान्दोग्य–उपनिषत्	சாந்தோக்ய-உபநிஷத்
22.	जाबा.	जाबालोपनिषत्	ஜாபாலோபநிஷத்
23.	जै.उ.ब्रा	जैमिनीय–उपनिषत् ब्राह्मणं	ஜைமிநீய-உபநிஷத் ப்ராஹ்மணம்
24.	ता.म.ब्रा.	ताण्ड्यमहाब्राह्मणम्	தாண்ட்யமஹாப்ராஹ்மணம்
25.	तै.आ.	तैत्तिरीय–आरण्यकं	தைத்திரீய ஆரண்யகம்

26.	तै.ब्रा.	तैत्तिरीय-ब्राह्मणं	தைத்திரீய ப்ராஹ்மணம்
27.	तै.सं	तैत्तिरीय-संहिता	தைத்திரீய ஸம்ஹிதா
28.	तै.1.आ.	तैत्तिरीय-उपनिषत्आनन्दवल्ली	தைத்திரீய உபநிஷத் ஆனந்தவல்லி
29.	तै.1.भृ.	तैत्तिरीय-उपनिषत् भृगुवल्ली	தைத்திரீய உபநிஷத் ப்ருகுவல்லி
30.	तै.1.शि.	तैत्तिरीय-उपनिषत् शिक्षावल्ली	தைத்திரீய உபநிஷத் சிக்ஷாவல்லி
31.	तै.2.	तैत्तिरीयोपनिषत् - 2	தைத்திரீயஉபநிஷத் 2
32.	दक्ष.	दक्षस्मृति	தக்ஷஸ்ம்ருதி
33.	द्र.भा.	द्रमिडभाष्यम्	த்ரமிடபாஷ்யம்
34.	ना.सि.पु.	नारसिंहपुराणम्	நாரஸிம்ஹபுராணம்
35.	नृ.उ.ता	नृसिंहोत्तरतापनीयोपनिषत्	ந்ருஸிம்ஹோத்தரதாபநீயோபநிஷத்
36.	प.सं.	परमसंहिता	பரமஸம்ஹிதா
37.	पु.सू.	पुरुषसूक्तम्	புருஷஸூக்தம்.
38.	पू.मी.	पूर्वमीमांसा	பூர்வமீமாம்ஸா
39.	पू.मी.सू	पूर्वमीमांसासूत्रम्	பூர்வமீமாம்ஸாஸூத்ரம்
40.	पौ.सं.	पौष्करसंहिता	பௌஷ்கரஸம்ஹிதா
41.	प्र.	प्रश्नोपनिषत्	ப்ரஶ்நோபநிஷத்
42.	प्र.भा	प्रशस्तपादभाष्यम्	ப்ரஶஸ்தபாதபாஷ்யம்
43.	बृ.	बृहदारण्यक उपनिषत्	ப்ருஹதாரண்யக உபநிஷத்
44.	बृ.मा.	बृहदारण्यकमाध्यन्दिनशाखा	ப்ருஹதாரண்யகமாத்யந்திநஶாகா
45.	बो.वृ.	बोधायनवृत्ति	போதாயந வ்ருத்தி
46.	ब्र.न.वा.	ब्रह्मनन्दिवार्तिकं	ப்ரஹ்மநந்தி வார்த்திகம்
47.	ब्र.वै.	ब्रह्मवैवर्त	ப்ரஹ்மவைவர்த
48.	ब्र.सू.	ब्रह्मसूत्रं	ப்ரஹ்மஸூத்ரம்
49.	म.	मन्त्रिक उपनिषत्	மந்த்ரிகஉபநிஷத்
50.	महो.	महोपनिषत्	மஹோபநிஷத்
51.	मनु.	मनुस्मृतिः	மனுஸ்ம்ருதி
52.	म.आ.	महाभारतं आनुशासनिकपर्व	மஹாபாரதம் ஆனுசாஸநிகபர்வம்

53. म.भी.	महाभारतं भीष्मपर्व	மஹாபாரதம் மோக்ஷபர்வம்
54. म.शा.	महाभारतं शान्तिपर्व	மஹாபாரதம் ஶாந்திபர்வம்
55. म.शा.मो.	महाभारतं शान्तिपर्व मोक्षधर्म	மஹாபாரதம் ஶாந்திபர்வம் மோக்ஷதர்மம்
56. मा.	माण्डूक्य उपनिषत्	மாண்டுக்யஉபநிஷத்
57. मु.	मुण्डक उपनिषत्	முண்டகஉபநிஷத்
58. मुद्ग.	मुद्गलोपनिषत्	முத்கலோபநிஷத்
59. या.नि.	यास्कनिरुक्तम्	யாஸ்கநிருக்தம்
60. या.स्मृ	यास्कस्मृति	யாஸ்கஸ்ம்ருதி
61. रा.सु	रामायणं सुन्दरकाण्डम्	ராமாயணம் ஸுந்தரகாண்டம்
62. रा.यु	रामायणं युद्धकाण्डम्	ராமாயணம் யுத்தகாண்டம்
63. वरा.पु	वराहपुराणम्	வராஹபுராணம்
64. व.स्मृ.	वसिष्टस्मृति	வஸிஷ்டஸ்ம்ருதி
65. वि.ध.	विष्णुधर्मं	விஷ்ணுதர்மம்
66. वि.पु	विष्णुपुराणं	விஷ்ணுபுராணம்
67. वैशे.	वैशेषिकसूत्रम्	வைஶேஷிகஸூத்ரம்
68. श.ब्रा.	शतपथब्राह्मणम्	ஶதபதப்ராஹ்மணம்
69. श.भा.	शबरभाष्यं	ஶபரபாஷ்யம்.
70. शैव.	शैवग्रन्थः(?)	ஶைவக்ரந்த: (?)
71. श्वे.	श्वेताश्वतरोपनिषत्	ஶ்வேதாஶ்வதரஉபநிஷத்
72. सां.का.	साङ्ख्यकारिका	ஸாங்க்யகாரிகை
73. सा.सं.	सात्त्वतसंहिता	ஸாத்வதஸம்ஹிதை
74. सु.	सुबालोपनिषत्	ஸுபால-உபநிஷத்

---

75. பூ பூர்வபக்ஷஸூத்ரம்

ध्यानश्लोकाः

(गुरुपरंपरानुसन्धानम् अनु वक्तव्याः)

1. श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि।।

2. यतीन्द्रकृतभाष्यार्था यद्व्याख्यानेन दर्शिताः।
वरं सुदर्शनार्यं तं वन्दे कूरकुलाधिपम्।।

3. येनोपनिषदां भाष्यं रामानुजमतानुगम्।
रम्यं कृतं प्रपद्ये तं रङ्गरामानुजं मुनिम्।।

4. तस्मै रामानुजार्याय नमः परमयोगिने।
यः श्रुति-स्मृति-सूत्राणामन्तर्ज्वरम् अशीशमत्।।

5. सम्यङ्न्यायकलापेन महता भारतेन च।
उपबृम्हितवेदाय नमो व्यासाय विष्णवे।।

6. प्रपद्ये प्रणवाकारं भाष्यं रङ्गमिवापरम्।
परस्य ब्रह्मणो यत्र शेषित्वं स्फुटमीक्ष्यते।।

7. अविस्तृताः सुगम्भीरा रामानुजमुनेर्गिरः।
दर्शयन्तु प्रसादेन स्वं भावमखिलं दृढम्।।

8. श्रुत्यन्तेषु श्रुतं भाष्ये मतं ध्यातं हृदम्बुजे।
लक्ष्मीधरं प्रपद्येहं दृष्टं श्रीरङ्गधामनि।।

9. भाष्यं चेत् व्यवृणोत् स्वयं यतिपतिर्व्याख्यानवाचां तथा
गाम्भीर्यादनवस्थितिर्मितमतिर्दूरे जनस्तद्गिराम्।
प्रष्टव्यः कथमीश्वरः स हि न नः प्रत्यक्षरूपो दृशाम्
तद्भाष्यं स च भाष्यकृत् स च हरिः सम्यक्प्रसीदन्तु नः।।

தனியன் - ஶ்லோகங்கள்

(குருபரம்பரா-அனுஸந்தானம் செய்தபின் சொல்ல வேண்டியவை)

1. ஸ்ரீமான் வேங்கட-நாதார்ய: கவிதார்க்கிக-கேஸரீ।
வேதாந்தாசார்ய-வர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥

2. யதீந்த்ரக்ருத-பாஷ்யார்த்தா யத்-வ்யாக்யாநேன தர்சிதா:।
வரம் ஸுதர்சநார்யம் தம் வந்தே கூர-குலாதிபம்॥

3. யேநோபநிஷதாம் பாஷ்யம் ராமானுஜ-மதானுகம்।
ரம்யம் க்ருதம் ப்ரபத்யே தம் ரங்க-ராமானுஜம் முநிம்॥

4. தஸ்மை ராமானுஜார்யாய நம: பரம-யோகினே।
ய: ஶ்ருதி-ஸ்ம்ருதி-ஸூத்ராணாம் அந்தர்-ஜ்வரம் அசீசமத்॥

5. ஸம்யங்-ந்யாய-கலாபேந மஹதா பாரதேந ச।
உபப்ரும்ஹித-வேதாய நமோ வ்யாஸாய விஷ்ணவே॥

6. ப்ரபத்யே ப்ரணவாகாரம் பாஷ்யம் ரங்கமிவாபரம்।
பரஸ்ய ப்ரஹ்மணோ யத்ர ஶேஷித்வம் ஸ்புடம் ஈக்ஷ்யதே॥

7. அவிஸ்த்ருதா: ஸுகம்பீரா ராமானுஜ-முநேர் கிர:।
தர்சயந்து ப்ரஸாதேந ஸ்வம் பாவம் அகிலம் த்ருடம்॥

8. ஶ்ருத்யந்தேஷு ஶ்ருதம் பாஷ்யே மதம் த்யாதம் ஹ்ருதம்புஜே।
லக்ஷ்மீதரம் ப்ரபத்யே-ஹம் த்ருஷ்டம் ஸ்ரீரங்கதாமநி॥

9. பாஷ்யம் சேத் வ்யவ்ருணோத் ஸ்வயம் யதிபதி வ்யாக்யாந-வாசாம் ததா
காம்பீர்யாத் அநவஸ்திதிர் மித-மதிர் தூரே ஜநஸ் தத்-கிராம்।
ப்ரஷ்டவ்ய: கதம் ஈஶ்வர: ஸ ஹி ந ந: ப்ரத்யக்ஷ-ரூபோ த்ருசாம்
தத் பாஷ்யம் ஸ ச பாஷ்யக்ருத் ஸ ச ஹரி: ஸம்யக் ப்ரஸீதந்து ந:॥

விஷயஸூசிகா

(3-1) மூன்றாம் அத்யாயம் முதல் பாதம்

எண்	அதிகரணம் பெயர்	பக்கம்
69.	ததந்தரப்ரதிபத்த்யதிகரணம்	5
70.	க்ருதாத்யயாதிகரணம்	27
71.	அநிஷ்டாதிகார்யதிகரணம்	39
72.	தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம்	53
73.	நாதிசிராதிகரணம்	57
74.	அந்யாதிஷ்டிதாதிகரணம்	61

(3-2) மூன்றாம் அத்யாயம் இரண்டாம் பாதம்

எண்	அதிகரணம் பெயர்	பக்கம்
75.	ஸந்த்யாதிகரணம்	75
76.	ததபாவாதிகரணம்	89
77.	கர்மாநுஸ்ம்ருதி-ஶப்த-வித்யதிகரணம்	95
78.	முக்தாதிகரணம்	101
79.	உபயலிங்காதிகரணம்	105
80.	அஹிகுண்டலாதிகரணம்	141
81.	பராதிகரணம்	151
82.	பலாதிகரணம்	167

(3-3) மூன்றாம் அத்யாயம் மூன்றாம் பாதம்

எண்	அதிகரணம் பெயர்	பக்கம்
83.	ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணம்	179
84.	அந்யதாத்வாதிகரணம்	191
85.	ஸர்வாபேத-அதிகரணம்	207
86.	ஆநந்தாத்யதிகரணம்	215
87.	கார்யாக்யாந-அதிகரணம்	229
88.	ஸமாநாதிகரணம்	235
89.	ஸம்பந்தாதிகரணம்	239

90. ஸம்ப்ருத்யதிகரணம் 247
91. புருஷவித்யாதிகரணம் 253
92. வேதாத்யதிகரணம் 259
93. ஹாந்யதிகரணம் 267
94. ஸாம்பராயாதிகரணம் 277
95. அநியமாதிகரணம் 289
96. அக்ஷரத்யதிகரணம் 295
97. அந்தரத்வாதிகரணம் 305
98. காமாத்யதிகரணம் 325
99. தந்நிர்தாரணாநியமாதிகரணம் 339
100. ப்ரதானாதிகரணம் 345
101. லிங்கபூயஸ்த்வாதிகரணம் 351
102. பூர்வவிகல்பாதிகரணம் 359
103. ஶரீரே பாவாதிகரணம் 375
104. அங்காவபத்தாதிகரணம் 383
105. பூமஜ்யாயஸ்த்வாதிகரணம் 391
106. ஶப்தாதிபேதாதிகரணம் 401
107. விகல்பாதிகரணம் 407
108. யதாஶ்ரயபாவாதிகரணம் 413

(3-4) மூன்றாம் அத்யாயம் நான்காம் பாதம்

எண் அதிகரணம் பெயர் பக்கம்
109. புருஷார்த்தாதிகரணம் 427
110. ஸ்துதிமாத்ராதிகரணம் 467
111. பாரிப்லவாதிகரணம் 473
112. அக்நீந்தநாத்யதிகரணம் 479
113. ஸர்வாபேக்ஷாதிகரணம் 483
114. ஶமதமாத்யதிகரணம் 489
115. ஸர்வாந்நாநுமத்யதிகரணம் 495

116. விஹிதத்வாதிகரணம் 505
117. விதுராதிகரணம் 511
118. தத்பூதாதிகரணம் 519
119. ஸ்வாம்யதிகரணம் 529
120. ஸஹகார்யந்தரவித்யதிகரணம் 535
121. அநாவிஷ்காராதிகரணம் 547
122. ஐஹிகாதிகரணம் 553
123. முக்திபலாநியமாதிகரணம் 557

(4-1) நான்காம் அத்யாயம் முதல் பாதம்

எண் அதிகரணம் பெயர் பக்கம்
124. ஆவ்ருத்த்யதிகரணம் 565
125. ஆத்மத்வோபாஸநாதிகரணம் 575
126. ப்ரதீகாதிகரணம் 585
127. ஆதித்யாதிமத்யதிகரணம் 591
128. ஆஸீநாதிகரணம் 595
129. ஆப்ரயாணாதிகரணம் 603
130. ததிகமாதிகரணம் 607
131. இதராதிகரணம் 617
132. அநாரப்தகார்யாதிகரணம் 623
133. அக்நிஹோத்ராத்யதிகரணம் 627
134. இதரக்ஷபணாதிகரணம் 635

(4-2) நான்காம் அத்யாயம் இரண்டாம் பாதம்

எண் அதிகரணம் பெயர் பக்கம்
135. வாகதிகரணம் 643
136. மனோऽதிகரணம் 649
137. அத்யக்ஷாதிகரணம் 653
138. பூதாதிகரணம் 659
139. ஆஸ்ருத்த்யுபக்ரமாதிகரணம் 665

140. பரஸம்பத்த்யதிகரணம் 683
141. அவிபாகாதிகரணம் 688
142. ததோகோऽதிகரணம் 691
143. ரஶ்ம்யநுஸாராதிகரணம் 697
144. நிஶாதிகரணம் 703
145. தக்ஷிணாயனாதிகரணம் 709

(4-3) நான்காம் அத்யாயம் மூன்றாம் பாதம்

எண் அதிகரணம் பெயர் பக்கம்
146. அர்சிராத்யதிகரணம் 719
147. வாய்வதிகரணம் 727
148. வருணாதிகரணம் 735
149. ஆதிவாஹிகாதிகரணம் 741
150. கார்யாதிகரணம் 749

(4-4) நான்காம் அத்யாயம் நான்காம் பாதம்

எண் அதிகரணம் பெயர் பக்கம்
151. ஸம்பத்யாவிர்பாவாதிகரணம் 771
152. அவிபாகேந த்ருஷ்டத்வாதிகரணம் 785
153. ப்ராஹ்மாதிகரணம் 793
154. ஸங்கல்பாதிகரணம் 803
155. அபாவாதிகரணம் 809
156. ஜகத்-வ்யாபார-வர்ஜாதிகரணம் 823

* * *

நூலமைப்பு - பாடக்குறிப்புகள்

i) நூலின் இடது பக்கம் ஶ்ரீபாஷ்யம் மூலம்

ii) வலதுபக்கம் ஶ்ரீபாஷ்யம் தமிழாக்கம்

iii) ப்ரமாணவசனங்களை தனியாக ✱ குறியிட்டு காண்பித்தல்

iv) ப்ரமாணவசங்களுக்கு ஒவ்வொரு பக்கத்திலும் தனிவரிசை எண்

v) தமிழாக்கத்தில் ப்ரமாணவசனத்தின் ஆரம்பத்தில் அதே வரிசை எண்

(க முதலிய ஒவ்வொரு வர்கத்திலும் ஐந்து எழுத்துகள். முதல் எழுத்துக்கும் ஐந்தாவது எழுத்துக்கும் தனி அடையாள குறிப்பு தேவையில்லை; இரண்டாவதைக் குறிக்க கீழ்க்கோடு; மூன்றாவதைக் குறிக்க தடித்த எழுத்து; நான்காவதைக் குறிக்க தடித்த எழுத்துடன் கீழ்க்கோடு

क க	ख க̲	ग **க**	घ **க̲**	ङ ங
च ச	छ ச̲	ज ஜ	झ **ஜ̲**	ञ ஞ
ट ட	ठ ட̲	ड **ட**	ढ **ட̲**	ण ண
त த	थ த̲	द **த**	ध **த̲**	न ந
प ப	फ ப̲	ब **ப**	भ **ப̲**	म ம

உ-ம்	अखिल	அகி̲ல
	अग्नि	அக்னி
	लाघवम्	லா**க̲**வம்

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீபகவத் ராமானுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

தமிழாக்கம்

(3)

மூன்றாவது அத்யாயம்

ஸாதந அத்யாயம்

பாதங்கள் - 4(9-12)

அதிகரணங்கள் -55 (69-123)

ஸூத்ரங்கள் - 182 (288-469)

இந்த வேதாந்த ஶாஸ்த்ரத்தில் நான்கு அத்யாயங்கள்; முதல் இரு அத்யாயங்கள் ஸித்த-த்விகம் எனப்படும். ஏற்கனவே சித்தமாக இருக்கும் ப்ரஹ்மம் பற்றி சொல்வது அது; அடுத்த இரு அத்யாயங்கள் ஸாத்ய-த்விகம் எனப்படும்; இனி நாம் ஸாதிக்க வேண்டிய மோக்ஷ- உபாயமும், மோக்ஷ-பலனும் பற்றியது இது; மோக்ஷம் அளிக்கும் உபாயமும் ப்ரஹ்மம்தான், மோக்ஷ-பலனாக அடையப்படுவதும் ப்ரஹ்மம்தான்; ஆகையால் ப்ரஹ்மம்தான் மொத்தமாக ஶாஸ்த்ர-விஷயம் என்று சொல்லலாம்.

இதில் மூன்றாவது அத்யாயம் - ஸாதன அத்யாயம் ஆகும்; ஸாதனம் என்றால் உபாயம் என்று அர்த்தம்; இதில் மோக்ஷபலனுக்கு உபாயமான உபாஸனம் பற்றி சொல்கிறது. (உபாஸனம் - த்யானம்)

இதில் நான்கு பாதங்களின் விஷயங்கள் -

1. வைராக்ய பாதம் - வைராக்யம் பிறப்பதற்காக ஜீவனிடம் உள்ள தோஷங்கள் விளக்கப் படுகின்றன.
2. உபயலிங்கபாதம் - ப்ரஹ்மத்திடம் விருப்பம் பிறப்பதற்காக ப்ரஹ்மத்துக்கு தோஷமில்லை என்றும் கல்யாணகுணங்களே உள்ளன என்றும் விளக்குகிறது.
3. குணோபஸம்ஹாரபாதம் - ப்ரஹ்மம் பற்றி த்யானம் செய்யும்போது எந்தெந்த வித்யைகளில் எந்தெந்த குணங்களை சேர்த்து த்யானம் செய்ய வேண்டும் என்பதை புரிந்து கொள்ள வித்யைகளில் வேறுபாட்டையும் ஒற்றுமையையும் ஆராய்வது.
4. அங்கபாதம் - உபாஸனத்தின் அங்கங்களை ஆராய்வது.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீபகவத் ராமானுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

தமிழாக்கம்

(3-1)

மூன்றாவது அத்யாயம் - ஸாதந அத்யாயம்

முதல்பாதம் - வைராக்ய பாதம்

அதிகரணங்கள் -6 (69-74)

ஸூத்ரங்கள் -27 (288-314)

மூன்றாவது அத்யாயத்தில் உபாயமாகிற உபாஸனம் பற்றிய விசாரம் உள்ளது; உபாஸனத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் முக்கியமான தேவை இரண்டு - 1. வைராக்யம்- அடையப் படும் ப்ரஹ்மம் தவிர பிற விஷயங்களில் ஆசையின்மை, 2. விருப்பம்- அடையப்பட வேண்டிய ப்ரஹ்மத்தில் ஆசை.

இந்த.இரு விஷயங்களும் வருவதற்காக முதல் இரு பாதங்கள் உள்ளன.

அதில் பிற விஷயங்களில் வைராக்யத்தை உண்டாக்கும் பாதம் இது; எனவே, வைராக்யபாதம் என்று பெயர்.ஜீவனுக்கு ஸம்ஸார-நிலையில் விழிப்பு நிலையில் உள்ள தோஷங்களை இதில் சொல்கிறார்.

ஜீவனுக்கு இப்பிறவியில் உள்ள தோஷங்கள் அவரவருக்கு தெரிந்ததுதான்! பிறவி முடிந்தபின், இந்த ஶரீரத்தை விட்டு, மறுபிறவியில் அடுத்த ஶரீரம் எடுக்கும் முன் இடையில் என்ன பாடு படுகிறான் என்பதை பஞ்சாக்னி வித்யை விளக்குகிறது; அந்த விஷயங்கள் இந்த பாதத்தில் உள்ளன.

இங்கிருந்து மேலுலகம் போகும்போது ஸூக்ஷ்மமான பூதப் பொருள்கள் கூட போகின்றன; அதேபோல, புண்யபாப கர்மங்களும் கூட இருக்கின்றன;மேலும், போகும் முறையும் மறுபிறவிக்காக வரும் முறையும் ஆராயப் பட்டுள்ளது.

69. ததந்தரப்ரதிபத்த்யதிகரணம் (3-1-1)

முன் குறிப்பு

முதலில் ஸ்ரீபாஷ்யத்தில் கடந்த இரு அத்யாய-விஷயங்களை சுருக்கமாக ஸாதிக்கிறார். அதனை அந்த எண்ணுடன் தமிழில் காணலாம்.

இந்த அதிகரணத்தின் விஷயவாக்யம் பஞ்சாக்னி-வித்யை ஆகும்; அது பற்றி விரிவாக பின் இணைப்பில் காணலாம்; அதை முழுவதும் படித்தால், இந்த பாதத்தில் உள்ள ஆறு அதிகரணங்களும் புரிந்துகொள்ள வசதியாக இருக்கும்.

ஜீவன் ஒரு ஶரீரத்தை விட்டுப் போய் அடுத்த பிறவியில் மறு ஶரீரம் எடுக்கிறான்; இதற்கு இடைப்பட்ட காலத்தில் அவன் படும் பாடு என்ன என்பதை பஞ்சாக்னிவித்யை விளக்குகிறது ;அதன் மூலம் நமக்கு வைராக்யத்தை விதைக்கிறது.

இங்கிருந்து ஶரீரத்தை விட்டுப் போகும்போதும், அவன் ஸூக்ஷ்மமான பஞ்சபூதப் பொருள்களுடன்தான் போகிறான் என்பது இந்த அதிகரணத்தில் சொல்லும் விஷயம்; அந்த பூதப் பொருள்கள்தாம் பின்னர் ஒரு ஶரீரமாக மாறி ஸ்வர்க்கத்தில் சுகபலனை அனுபவிக்க உதவுகின்றன; அவையே ஜலம் என்று சொல்லப்படும் நிலையில் ஆகின்றன; அதற்கு ச்ரத்தை என்று பெயர்; அதிலிருந்து அடுத்தடுத்த நிலைகளில் மாறி, இறுதியில் அடுத்த பிறவியில் ஶரீரம் ஆகின்றன.

ஜலம் அதிகமாக பருகினால், மனதில் ச்ரத்தை (ஆர்வத்துடன் கவனம்) அதிகமாகும்; அதனால், ஜலத்தையே ‘ஶ்ரத்தை’ என்று வேதம் சொல்கிறது.

இங்கு ஜலம் என்று சொன்னது,பஞ்ச-பூதங்களையும் குறிப்பது ஆகும்; ஏனென்றால், பஞ்சபூதங்களில் தனிப்பட்ட ஜலம் மட்டும் எதற்கும் பயன்படாது; ஐந்தையும் சேர்த்து பஞ்சீகரணம் செய்தபின்பே பயன்படும். பஞ்சீகரணம் என்பது - ஐந்தையும் சேர்த்து ஒவ்வொன்றிலும் ஐந்தின் அம்சங்களும் கலந்திருக்குமாறு செய்தல் ஆகும்.

சாந்தோக்ய-உபநிஷத்தில் த்ரிவ்ருத்கரணம் (மூன்றை கலந்ததாக ஆக்குதல்) சொல்லியுள்ளது; இது பஞ்சீகரணத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு ஆகும்; காண்க ஸூத்ரம் - 2-4-19 முதலியது.

இங்கு, முதல் ஸூத்ரத்தில், ‘ததந்தரம்’ என்றால், வேறு அது என்று அர்த்தம்; முன் அதிகரணத்தில் சொன்ன ‘மூர்த்தி’ என்பதை, இங்கு ‘அது’ என்று குறிப்பிடுகிறார்; எனவே, வேறு ஶரீரம் என்ற அர்த்தம் கிடைக்கும்.

६९.तदन्तरप्रतिपत्त्यधिकरणम् (३-१-१)

२८८. तदन्तरप्रतिपत्तौ रंहति सम्परिष्वक्तः प्रश्ननिरूपणाभ्याम् (३-१-१)

अतिक्रान्ताध्यायद्वयेन निखिलजगदेककारणं निरस्तनिखिलदोषगन्धम् अपरिमितोदारगुणसागरं सकलेतरविलक्षणं परं ब्रह्म मुमुक्षुभिरुपास्यतया वेदान्ताः प्रतिपादयन्तीत्ययमर्थः, स्मृतिन्यायविरोधपरिहारपरपक्षप्रतिक्षेपवेदान्तवाक्यपरस्परविरोधपरिहाररूपकार्यस्वरूपसंशोधनैः तद्दुर्धर्षणत्वहेतुभिः सह स्थापितः; अतोऽध्यायद्वयेन ब्रह्मणः स्वरूपं प्रतिपादितम्। उत्तरेणेदानीं तत्प्राप्त्युपायैः सह प्राप्तिप्रकारश्चिन्तयितुमिष्यते।

तत्र तृतीयाध्याये उपायभूतोपासनविषया चिन्ता वर्तते। उपासनारम्भाभ्यर्हितोपायश्च प्राप्यवस्तुव्यतिरिक्तवैतृष्ण्यम्, प्राप्यतृष्णा चेति, तत्सिद्ध्यर्थं जीवस्य लोकान्तरेषु सञ्चरतो जाग्रतः स्वपतः सुषुप्तस्य मूर्च्छतश्च दोषाः, परस्य च ब्रह्मणस्तद्रहितता, कल्याणगुणाकरत्वं च प्रथमद्वितीययोः पादयोः प्रतिपाद्यन्ते।

69.ததந்தரப்ரதிபத்த்யதிகரணம் (3-3-1)

288.ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரஶ்நநிரூபணாப்யாம் (3-3-1)

அதிக்ராந்தாத்யாயத்வயேந நிகிலஜகதேககாரணம் நிரஸ்தநிகிலதோஷகந்தம் அபரிமிதோதாரகுணஸாகரம் ஸகலேதரவிலக்ஷணம் பரம் ப்ரஹ்ம முமுக்ஷுபிருபாஸ்யதயா வேதாந்தா: ப்ரதிபாதயந்தி இத்யயமர்த:, ஸ்ம்ருதி-ந்யாயவிரோதபரிஹார-பரபக்ஷப்ரதிக்ஷேப-வேதாந்தவாக்யபரஸ்பரவிரோதபரிஹாரரூபகார்யஸ்வரூபஸம்ஶோதநை: தத்துர்தர்ஷணத்வஹேதுபி: ஸஹ ஸ்தாபித:; அத: அத்யாயத்வயேந ப்ரஹ்மண: ஸ்வரூபம் ப்ரதிபாதிதம். உத்தரேணேதாநீம் தத்ப்ராப்த்யுபாயை: ஸஹ ப்ராப்திப்ரகார: சிந்தயிதுமிஷ்யதே.

தத்ர த்ருதீயாத்யாயே உபாயபூதோபாஸநவிஷயா சிந்தா வர்ததே. உபாஸநரம்பாப்யார்ஹிதோபாயஶ்ச ப்ராப்யவஸ்துவ்யதிரிக்தவைத்ருஷ்ண்யம், ப்ராப்யத்ருஷ்ணா சேதி, தத்ஸித்த்யர்தம் ஜீவஸ்ய லோகாந்தரேஷு ஸஞ்சரதோ ஜாக்ரத: ஸ்வபத: ஸுஷுப்தஸ்ய மூர்ச்சதஶ்ச தோஷா:, பரஸ்ய ச ப்ரஹ்மண: தத்ரஹிததா, கல்யாணகுணாகரத்வம் ச ப்ரதமத்விதீயயோ: பாதயோ: ப்ரதிபாத்யந்தே.

69.ததந்தரப்ரதிபத்த்யதிகரணம் (3-1-1)

288. ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த: ப்ரஶ்ந-நிரூபணாப்யாம்(3-1-1)

வேறு ஶரீரத்தை அடைவதில் ஸூக்ஷ்ம-பூதங்களுடன் நன்கு சேர்ந்தவனாய் போகிறான் என்பது கேள்வி-விளக்க பதில்களால் [தெரிகிறது].

ஸங்கதி (விஷய தொடர்பு)

கடந்தஇரு அத்யாயங்களால் -

1. எல்லா உலகுக்கும் ஒரே காரணமானவனும், எல்லா தோஷமும் துளியும் அற்றவனும், அளவற்ற உயர்ந்த குணக்குழுக்களை உடையவனும் பெருங்கடலும், மீதி எல்லாவற்றையும் விட வேறுபட்டவனும் ஆன பரப்ரஹ்மத்தை மோக்ஷம் விரும்புபவர்களால் உபாஸனம் செய்யப்படத் தகுந்ததாக வேதாந்தங்கள் சொல்கின்றன எனும் (முதல் அத்யாயத்தில் சொன்ன) இப்பொருளானது,
2. அதை மறுக்க முடியாததற்குக் காரணங்களாகிற -
   i. ஸ்ம்ருதி மற்றும் ந்யாயத்துடனான முரண்பாட்டுக்கு பரிஹாரம்,
   ii. பிற மத மறுப்பு,
   iii.&iv.வேதாந்த வாக்யங்களில் ஒன்றுக்கொன்று முரண்படுவதற்குப் பரிஹாரம் என்னும் உருவில், படைக்கப்படும் பொருள்களின் ஸ்வரூபத்தைப் பற்றிய நல்ல விசாரங்கள்

ஆகியவற்றுடன் கூட (இரண்டாவது அத்யாயத்தில் நான்கு பாதங்களில்) நிலை நாட்டப் பட்டது.

எனவே, இரு அத்யாயத்தால் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் சொல்லப்பட்டது; அடுத்த இரு அத்யாயத்தால் இப்போது (மூன்றாவது அத்யாயத்தில்) அந்த ப்ரஹ்மத்தை அடைவதற்கான உபாயங்களுடன் கூட, (நான்காவதில்) அதை அடையும் முறையானது விசாரம் செய்வதற்கு ஏற்கப் படுகிறது.

அதில் மூன்றாவது அத்யாயத்தில் உபாயமாகிற உபாஸனம் பற்றிய விசாரம் உள்ளது; உபாஸனத்தை ஆரம்பிப்பதற்கு நெருக்கமான தேவையானது -

i) அடையப் படும் பொருள் தவிர மீதி விஷயங்களில் ஆசையின்மையும்,
ii) அடையப்பட வேண்டிய விஷயத்தில் ஆசையும் ஆகும்;

அது ஸித்திப்பதற்காக

i) ஜீவனுக்கு பிற உலகங்களில் சஞ்சரிப்பவனாய் விழித்த நிலையில் இருப்பவனுக்கும், ஸ்வப்னநிலையில் இருப்பவனுக்கும் உறங்குபவனுக்கும், மூர்ச்சை நிலையில் இருப்பவனுக்கும் தோஷங்கள் உண்டு என்பதும்,
ii) பரப்ரஹ்மம் ஆனது அந்த தோஷங்கள் அற்றதாகவும் கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாக ஆவதும் -

ஒன்றாவதும் இரண்டாவதும் ஆன பாதங்களில் சொல்லப்படுகின்றன.

तत्र देहात् देहान्तरं गच्छन् अयं जीवो देहान्तरारम्भहेतुभिर्भूतसूक्ष्मैः सम्परिष्वक्त एव गच्छति, उत नेति चिन्तायाम् -

यत्र यत्र जीवो याति, तत्र तत्र भूतसूक्ष्माणां सुलभत्वात् असम्परिष्वक्तो यातीति प्राप्तम्। पश्चादपि पूर्वपक्षबीजानि उपन्यस्य निरसिष्यति।

तत्र सिद्धान्तमाह - **तदन्तरप्रतिपत्तौ रंहति संपरिष्वक्तः** इति। **''संज्ञामूर्तिक्लृप्तिः''** (ब्र.सू.२-४-१७) इति मूर्तिशब्देन देहः प्रस्तुतः; स तच्छब्देन परामृश्यते। **तदन्तरप्रतिपत्तौ** - देहान्तरगमने, भूतसूक्ष्मैः **सम्परिष्वक्तो** जीवो **रंहति** - गच्छतीत्यर्थः। कुतः? **प्रश्ननिरूपणाभ्याम्** - प्रश्नप्रतिवचनाभ्याम्।

पञ्चाग्निविद्यायामेवं प्रश्नप्रतिवचने आम्नायेते - श्वेतकेतुं किलाऽऽरुणेयं पाञ्चालः प्रवाहणः कर्मिणां गन्तव्यदेशम्, पुनरावृत्तिप्रकारम्, देवयानपितृयाणपथव्यावर्तने, अमुष्य लोकस्याप्राप्तारं च वेत्थेति पृष्ट्वा इदमपि पप्रच्छ, **''वेत्थ यथा पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो भवन्ति''**(छा.5-3-3)[1] इति।

தத்ர தேஹாத் தேஹாந்தரம் கச்சந் அயம் ஜீவ: தேஹாந்தராரம்பஹேதுபி: பூதஸூக்ஷ்மை: ஸம்பரிஷ்வக்த ஏவ கச்சதி, உத நேதி சிந்தாயாம் -

யத்ர யத்ர ஜீவோ யாதி, தத்ரதத்ர பூதஸூக்ஷ்மாணாம் ஸுலபத்வாத் அஸம்பரிஷ்வக்தோ யாதீதி ப்ராப்தம். பஶ்சாதபி பூர்வபக்ஷபீஜாநி உபந்யஸ்ய நிரஸிஷ்யதி.

தத்ர ஸித்தாந்தமாஹ - *ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த:* இதி. *''ஸஜ்ஞாமூர்திக்லுப்தி:''* இதி மூர்திஶப்தேந தேஹ: ப்ரஸ்துத:; ஸ தச்சப்தேந பராம்ருஶ்யதே. *ததந்தரப்ரதிபத்தௌ* - தேஹாந்தரகமநே பூதஸூக்ஷ்மை: ஸம்பரிஷ்வக்தோ ஜீவோ *ரம்ஹதி* - கச்சதீத்யர்த:. குத:? *ப்ரஶ்நநிருபணாப்யாம்* - ப்ரஶ்நப்ரதிவசநாப்யாம்.

பஞ்சாக்நிவித்யாயாமேவம் ப்ரஶ்நப்ரதிவசநே ஆம்நாயேதே - ஶ்வேதகேதும் கில ஆருணேயம் பாஞ்சால: ப்ரவாஹண: கர்மிணாம் கந்தவ்யதேஶம், புநராவ்ருத்திப்ரகாரம், தேவயாநபித்ருயாணபதவ்யாவர்தநே, அமுஷ்ய லோகஸ்ய அப்ராப்தாரம் ச வேத்தேதி ப்ருஷ்ட்வா இதமபி பப்ரச்ச, *''வேத்த யதா பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி''*(சா.5-3-3)[1] இதி.

ஸந்தேஹம்

அதில் ஒரு ஶரீரத்தை விட்டு வேறொரு ஶரீரத்துக்குச் செல்லும் இந்த ஜீவன், வேறு ஶரீரம் உண்டாகக் காரணமான ஸூக்ஷ்ம-நிலையிலுள்ள(ப்ருதிவீ முதலிய பஞ்ச) பூதங்களுடன்அணைக்கப் பட்டவனாகவே செல்கிறானா? அல்லது அப்படி இல்லையா?- என்று விசாரம்.

பூர்வபக்ஷம்

எங்கெங்கு ஜீவன் செல்கிறானோ, அங்கங்கு ஸூக்ஷ்மமான பூதங்கள் எளிதில் கிடைக்குமாதலால், அவற்றால் அணைக்கப் படாதவனாகவே செல்கிறான் என பூர்வபக்ஷம் ஆகிறது. ✍*(வேறுஶரீரம் உண்டாவதற்குக் காரணமான பஞ்ச-பூதங்கள் எல்லா இடத்திலும் கிடைக்கும்; ஆகையால், இங்கிருந்து எடுத்துக் கொண்டு போக வேண்டிய தேவை இல்லை; எனவே, ஸூக்ஷ்ம-பூதங்களை எடுத்துக்கொண்டு போவதில்லை).*✍

பின்னரும் பூர்வபக்ஷ காரணங்களைச் சொல்லி மறுக்கப் போகிறார்.

ஸித்தாந்தம்

அதில் ஸித்தாந்தம் சொல்கிறார் - **ததந்தரப்ரதிபத்தௌ ரம்ஹதி ஸம்பரிஷ்வக்த:** என்று.

(ததந்தரம் - வேறொரு அது என்று அர்த்தம்; போன அதிகரணத்தில்) ‘ஸம்ஜ்ஞாமூர்த்திக்லுப்தி:’ என்று, ‘மூர்த்தி’ என்ற சொல்லால் ஶரீரம் சொல்லப்பட்டு வருகிறது; அதுதான் இங்கு, ‘அது’ என்ற சொல்லால் குறிப்பிடப் படுகிறது.

ஜீவனானவன்,

ததந்தரப்ரதிபத்தௌ - வேறு ஶரீரத்தை அடைவதில், (அடைவதற்கு)

ஸம்பரிஷ்வக்த: - ஸூக்ஷ்மபூதங்களுடன் நன்கு அணைக்கப் பட்டவனாய்

ரம்ஹதி - போகிறான் - என்று பொருள்.

அது ஏன்?

ப்ரஶ்நநிரூபணாப்யாம் - கேள்வி-பதில்விளக்கங்களால்.

பஞ்சாக்நிவித்யையில் இப்படி கேள்வி-பதில்கள் ஓதப்படுகின்றன - ஆருணியின் மகனான ஶ்வேதகேது என்பவனை பாஞ்சாலரானப்ரவாஹணர் என்பவர், புண்ய-பாப-கர்மம் உள்ளவர் போக வேண்டிய இடத்தையும், திரும்பி வரும் முறையையும், தேவயான-பித்ருயான-வழி வேறுபாட்டையும், அந்த (மேல்) உலகத்தை அடையாதவரையும் தெரியுமா என்று கேட்டுவிட்டு, இதையும் கேட்டார் - [1]**“எப்படியாக ஐந்தாவது ஆஹுதியில் ஜலமானது ‘புருஷன்’(ஆள்) என்று பெயருடையதாக ஆகிறது என்பது தெரியுமா?”** என்று.

तत इमं पश्चिमं प्रश्नं प्रतिब्रुवंश्च द्युलोकमग्नित्वेन रूपयित्वा,

I. ‘‘**तस्मिन्नेतस्मिन्नग्नौ देवाः श्रद्धां जुह्वति ; तस्या आहुतेः सोमो राजा सम्भवति**’’ (छा.5-4-2)[1] इत्यादिना देवाख्याः जीवस्य प्राणाः अग्नित्वेन रूपिते द्युलोके श्रद्धाख्यं वस्तु प्रक्षिपन्ति ; सा च श्रद्धा सोमराजाख्यामृतमयदेहरूपेण परिणमते ;

II. तं चामृतमयं देहं त एव प्राणाः पर्जन्येऽग्नित्वेन रूपिते प्रक्षिपन्ति ; स च देहस्तत्र प्रक्षिप्तो वर्षं भवति ;

III. तच्च वर्षं त एव प्राणाः पृथिव्यामग्नित्वरूपितायां प्रक्षिपन्ति ; तच्च तत्र प्रक्षिप्तमन्नं भवति ;

VI. तच्चान्नं त एव पुरुषेऽग्नित्वरूपिते प्रक्षिपन्ति ; तच्च तत्र रेतो भवति ;

V. तच्च त एव योषायाम् अग्नित्वरूपितायां प्रक्षिपन्ति ; तच्च तत्र प्रक्षिप्तं गर्भो भवति ;

इत्युक्त्वा, आह - ‘‘**इति तु पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो भवन्ति**’’ (छा.5-9-1)[2] इति। एवं पञ्चम्यामाहुतौ हुतायाम् आपः पुरुषशब्दाभिलप्या भवन्तीत्यर्थः।

தத: இமம் பஶ்சிமம் ப்ரஶ்நம் ப்ரதிப்ருவம்ஶ்ச த்யுலோகமக்நித்வேந ரூபயித்வா,

I. *“தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ* **தேவா:** *ஶ்ரத்தாம் ஜுஹ்வதி, தஸ்யா ஆஹுதே: ஸோமோ ராஜா ஸம்பவதி”*(சா.5-4-2)[1] இத்யாதிநா தேவாக்யா: ஜீவஸ்ய ப்ராணா: அக்நித்வேந ரூபிதே த்யுலோகே ஶ்ரத்தாக்யம் வஸ்து ப்ரக்ஷிபந்தி; ஸா ச ஶ்ரத்தா ஸோமராஜாக்யாம்ருதமயதேஹரூபேண பரிணமதே;

II. தம் சாம்ருதமயம் தேஹம் த ஏவ ப்ராணா: பர்ஜந்யேऽக்நித்வேந ரூபிதே ப்ரக்ஷிபந்தி; ஸ ச தேஹ: தத்ர ப்ரக்ஷிப்த: வர்ஷம் பவதி;

III. தச்ச வர்ஷம் த ஏவ ப்ராணா: ப்ருதிவ்யாமக்நித்வரூபிதாயாம் ப்ரக்ஷிபந்தி; தச்ச தத்ர ப்ரக்ஷிப்தமந்நம் பவதி;

VI. தச்சாந்நம் த ஏவ புருஷேऽக்நித்வரூபிதே ப்ரக்ஷிபந்தி; தச்ச தத்ர ரேதோ பவதி;

V. தச்ச த ஏவ யோஷாயாம் அக்நித்வரூபிதாயாம் ப்ரக்ஷிபந்தி; தச்ச தத்ர ப்ரக்ஷிப்தம் கர்போ பவதி;

இத்யுக்த்வா, ஆஹ - *“இதி து பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸோ பவந்தி”* (சா.5-9-1)[2] இதி। ஏவம் பஞ்சம்யாமாஹுதௌ ஹுதாயாம் ஆப: புருஷஶப்தாபிலப்யா பவந்தீத்யர்த:।

பின்பு இந்த கடைசி கேள்விக்கு பதில் சொல்பவராக -

I. ஸ்வர்க்க-உலகை அக்நியாக உருவகப் படுத்தி, [1]**''இந்த அக்நியில் தேவர்கள் ஶ்ரத்தையை ஹோமம் செய்கின்றனர்; அந்த ஆஹுதியிருந்து ஸோமராஜன் உண்டாகிறான்''** முதலியதால், தேவர்கள் எனப்படும் ஜீவனது ப்ராணன்கள் (இந்த்ரியங்கள்) ஸ்வர்க்க உலகில் ஶ்ரத்தை எனப்படும் பொருளை (ஜலத்தை) இடுகின்றனர்; அந்த ஶ்ரத்தையானது, ஸோமராஜன் எனப்படும் அம்ருதமயமான ஶரீர-உருவமாக மாறுகிறது.

II. அந்த அம்ருதமயமான ஶரீரத்தை அந்த ப்ராணன்கள் அக்நியாக உருவகப் படுத்தப்பட்ட பர்ஜன்யனிடத்தில் (மேகத்தில்) இடுகின்றனர்; அங்கு இடப்பட்ட அந்த ஶரீரமானது மழை ஆகிறது.

III. அந்த மழையை அதே ப்ராணன்கள்அக்நியாக உருவகப் படுத்தப்பட்ட பூமியில் இடுகின்றனர்; அங்கு இடப்பட்ட அது அன்னம் (உணவு) ஆகிறது.

IV. அந்த அன்னத்தை அவையே, அக்நியாக உருவகப் படுத்தப்பட்ட ஆணிடம் இடுகின்றனர்; அது அங்கு ரேதஸ் (விந்து)ஆகிறது.

V. அதை அவர்களே அக்நியாக உருவகப் படுத்தப்பட்ட பெண்ணிடம் இடுகின்றனர்; அங்கு இடப்பட்ட அது கர்ப்பம் ஆகிறது.

என்று சொல்லி, [2]**''இப்படியாக ஐந்தாவது ஆஹுதியில் ஜலமானது, 'புருஷன்' என்ற பெயருடையதாக ஆகிறது''** என்று சொல்கிறார்; இப்படி ஐந்தாவது ஆஹுதி ஹோமம் செய்யப்பட்டபோது, ஜலமானது 'புருஷன் என்ற சொல்லால் சொல்ல ஏற்றதாக ஆகிறது என்று பொருள்;

✍(ஜீவன் மரணத்துக்கு பின் ஶரீரத்திலிருந்து வெளியேறிப் போகும்போது, ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்களுடன் போகிறான்; அந்த பஞ்சபூதங்கள் தேவலோகத்தில் ஒரு திவ்யஶரீரமாக ஆகின்றன; அதன் மூலம் ஸ்வர்க்க உலக போகத்தை அனுபவிப்பான்; பின்னர் பின்னர் அடுத்த பிறவி எடுக்க இறங்கி வருவான்; அப்போது அந்த ஸூக்ஷ்மபூதங்களுடன் மேகத்தில் சேர்ந்திருப்பான்; பின்னர் மழையில் சேர்ந்து மண்ணில் விழுவான்; பின்னர் பயிரில் சேர்ந்து உணவு ஆவான்; பின்னர் ஒரு ஜீவனால் உண்ணப்பட்டு அவனது உடலில் ரேதஸ் ஆவான்; பின்னர் பெண்ணின் உடலில் செலுத்தப்பட்டு கர்ப்பம் ஆவான்; குழந்தையாக பிறப்பான் என்று கருத்து)✍

एवमुक्ते, पूर्वास्वपि आहुतिष्वनुवर्तमानानामेवापां सूक्ष्मरूपाणामिदानीं पुरुषाकारत्वं भवतीत्युक्तं भवति। अत एवं प्रश्नप्रतिवचनाभ्यां देहहेतुभूतैर्भूतसूक्ष्मैः सह तत्रतत्र यातीति गम्यते॥ १ ॥

* * *

ननु “**आपः पुरुषवचसः**”(छा.5-9-1)[1] इत्युक्ते अपां पुरुषाकारपरिणामप्रतीतेः गच्छता जीवेन तासामेव परिष्वङ्गः प्रतीयते। अतः कथं सर्वेषां भूतसूक्ष्माणां परिष्वङ्ग इति तत्राह -

२८९.त्र्यात्मकत्वात्तु भूयस्त्वात् (३-१-२)

तुशब्दः चोद्यं व्यावर्तयति। देहारम्भ(रम्भि)काणामपां केवलानां न देहारम्भसम्भवः। देहाद्यारम्भाय हि, “**तासां त्रिवृतंत्रिवृतमेकैकामकरोत्**”(छा.6-3-3)[2] इति त्रिवृत्करणम्। केवलानामपां श्रवणं तु तासां भूयस्त्वात्। देहे च लोहितादिभूयस्त्वेनाऽऽरम्भकेष्वपां भूयस्त्वं गम्यते॥२॥

* * *

ஏவமுக்தே, பூர்வாஸ்வபி ஆஹுதிஷு அநுவர்தமாநாநாமேவ அபாம் ஸூக்ஷ்மரூபாணாமிதாநீம் புருஷாகாரத்வம் பவதி இத்யுக்தம் பவதி। அத ஏவம் ப்ரஶ்நப்ரதிவசநாப்யாம் தேஹஹேதுபூதை: பூதஸூக்ஷ்மை: ஸஹ தத்ரதத்ர யாதீதி கம்யதே।। 1 ।।

நநு *“ஆப: புருஷவசஸ:”*(சா.5-9-1)[1] இத்யுக்தே அபாம் புருஷாகாரபரிணாமப்ரதீதே: கச்சதா ஜீவேந தாஸாமேவ பரிஷ்வங்க: ப்ரதீயதே। அத: கதம் ஸர்வேஷாம் பூதஸூக்ஷ்மாணாம் பரிஷ்வங்க இதி, தத்ராஹ -

289.த்ர்யாத்மகத்வாத்து பூயஸ்த்வாத் (3-1-2)

து ஶப்த: சோத்யம் வ்யாவர்தயதி। தேஹாரம்ப(ரம்பி)காணாமபாம் கேவலாநாம் ந தேஹாரம்பஸம்பவ:। தேஹாத்யாரம்பாய ஹி, *“தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதமேகைகாமகரோத்”*(சா.6-3-3)[2] இதி த்ரிவ்ருத்கரணம்। கேவலாநாம் அபாம் ஶ்ரவணம் து தாஸாம் பூயஸ்த்வாத்। தேஹே ச லோஹிதாதிபூயஸ்த்வேந ஆரம்பகேஷு அபாம் பூயஸ்த்வம் கம்யதே।।2।।

* * *

இப்படிச் சொன்னால், முன் ஆஹுதிகளிலும் தொடர்ந்து சொல்லப்பட்டு வரும் ஜலமே, இப்போது புருஷ-உருவாக ஆகிறது என்று சொன்னதாக ஆகிறது. எனவே, ஶரீரத்துக்குக் காரணமான ஸூக்ஷ்மமான பூதங்களுடன் கூடவே ஜீவன் ஆங்காங்கு செல்கிறான் என்பது இப்படியான கேள்வி-பதில்களால் தெரிகிறது.

◆ ◆ ◆ ◆

கேள்வி - [1]**''ஜலமானது புருஷன் என்ற பெயருடையதாக (ஆகிறது)''** என்று சொல்லும்போது, ஜலம் புருஷ-உருவாக மாறுவது தெரிகிறது; அதனால், போகும் ஜீவனுடன் அந்த ஜலம் மட்டுமே சேர்ந்திருப்பது தெரிகிறது; எனவே, ஸூக்ஷ்மமான பூதங்கள் எல்லாம் சேர்ந்திருப்பது எப்படி ஆகும்?

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

289. த்ர்யாத்மாகத்வாத் து பூயஸ்த்வாத்(3-1-2)

மூவுருவாதலால் [எல்லா பூதங்களுடனும் இருக்கிறான்]; அதிகமாகஇருப்பதால் [ஜலத்தை சொன்னது]

'து' என்ற சொல் கேள்வியை மறுக்கிறது.

த்ர்யாத்மாகத்வாத் (மூன்றாக இருப்பதால்) - ஶரீரத்தை உண்டாக்கும் பொருள்களில், தனிப்பட்டதான ஜலத்துக்கு மட்டும் ஶரீரம் உண்டானது என்பது கிடையாது; ஶரீரத்தை உண்டாக்குவதற்காகத் தானே, [2]**''அவை ஒவ்வொன்றையும் மூன்று சேர்ந்ததாக மூன்று சேர்ந்ததாக ஆக்கினான்''** என்று த்ரிவ்ருத்-கரணம் ஆகிறது!

பூயஸ்த்வாத்(அதிகமாக இருப்பதால்) - வெறும் ஜலத்தை மட்டும் சொன்னது, அது அதிகமாக இருப்பதால் ஆகும்; ஶரீரத்தில் ரத்தம் முதலியது அதிகமாக இருப்பதால், அதை உண்டாக்கும் பொருள்களில் ஜலம் அதிகமாக இருப்பது தெரிய வருகிறது.

✍(ப்ருதிவீ, ஜலம்,தேஜஸ் ஆகிய மூன்றும் தனித்தனியாக இருந்தால் ஒரு பொருளையும் உண்டாக்க முடியாது; அதனால், பரமாத்மா ஆனவன், இந்த மூன்றையும் சேர்த்து கலப்படம் செய்கிறான்; அப்போது இவை மூன்றிலும் ஒவ்வொன்றிலும் மூன்று பூதங்கள் கலந்துள்ளன; எனவே, ஜலம் என்று சொன்னாலும் மூன்றும் கலந்து மூன்றாக ஆக்கப்பட்ட ஜலம் என்றுதான் அர்த்தம்; இங்கு மூன்று என்று சொன்னது கூட எடுத்துக்காட்டுதான்; உண்மையில், பஞ்சபூதங்கள் ஐந்தையும் சேர்த்து பஞ்சீகரணம் செய்கிறான் என்பதை ஸ்ம்ருதி நூல்கள் சொல்கின்றன

ஒவ்வொன்றிலும் பஞ்சபூதங்கள் ஐந்தும் கலந்திருந்தாலும், அவற்றில் எந்த பாகம் மிக அதிகமாக உள்ளதோ, அதன் பெயரை இட்டு நாம் சொல்கிறோம்; எடுத்துக்காட்டாக நாம் காணும் ஜலத்தில், பஞ்சபூதங்களும் கலந்துள்ளன; ஆனால் ஜலபாகம் மிக அதிகமாக உள்ளது; அதனால் ஜலம் என்று சொல்கிறோம். அந்த முறையில் இங்கு ஶரீரத்துக்குக் காரணமாக பஞ்சபூதங்களும் இருந்தாலும் அவற்றில் ஜலமே அதிக அளவில் இருப்பதால் ஜலமே காரணம் என்கிறது.)✍

◆ ◆ ◆ ◆

२९०.प्राणगतेश्च (३-१-३)

इतश्च भूतसूक्ष्मपरिष्वक्तस्य गमनमिति गम्यते। उत्क्रामति जीवे प्राणानां तदनुगतिः श्रूयते, ‘‘**तमुत्क्रान्तं प्राणोऽनूत्क्रामति ; प्राणमनूत्क्रामन्तं सर्वे प्राणा अनूत्क्रामन्ति**’’ (बृ.6-4-2)[1] इति। स्मर्यते च,

‘‘**मनष्षष्ठानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति।**

शरीरं यदवाप्नोति यच्चाप्युत्क्रामतीश्वरः।
गृहीत्वैतानि संयाति वायुर्गन्धानिवाऽऽशयात्॥’’(गी.15-7,8)[2]

इति। न च निराश्रयाणां गतिरुपपद्यत इति तदाश्रयभूतानां भूतसूक्ष्माणामपि गतिरभ्युपगन्तव्या॥३॥

* * *

२९१.अग्न्यादिगतिश्रुतेरिति चेन्न ; भाक्तत्वात् (३-१-४)

‘‘**यत्रास्य पुरुषस्य मृतस्याग्निं वागप्येति, वातं प्राणः, चक्षुरादित्यम्**’’(बृ.5-2-13)[3] इत्यादिना प्राणानां जीवमरणकाले अग्न्यादिष्वप्ययश्रवणान्न तेषां जीवेन सह गमनमिति गतिश्रुतिरन्यथा नेयेति चेत्,

---

290.ப்ராணகதேஶ்ச (3-1-3)

இதஶ்ச பூதஸூக்ஷ்மபரிஷ்வக்தஸ்ய கமநமிதி கம்யதே। உத்க்ராமதி ஜீவே ப்ராணாநாம் ததநுகதி: ஶ்ரூயதே, *“தமுத்க்ராந்தம் ப்ராணோऽநூத்க்ராமதி, ப்ராணமநூத்க்ராமந்தம் ஸர்வே ப்ராணா அநூத்க்ராமந்தி”*(ப்ரு.6-4-2)[1] இதி। ஸ்மர்யதே ச,

“மநஷ்ஷஷ்டாநீந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தாநி கர்ஷதி।

ஶரீரம் யதவாப்நோதி யச்சாப்யுத்க்ராமதீஶ்வர:।
க்ருஹீத்வைதாநி ஸம்யாதி வாயுர்கந்தாநிவாऽऽஶயாத்॥”(கீ.15-7,8)[2] இதி।
ந ச நிராஶ்ரயாணாம் கதிருபபத்யத இதி ததாஶ்ரயபூதாநாம் பூதஸூக்ஷ்மாணமபி கதிரப்யுபகந்தவ்யா॥ 3 ॥

* * *

291.அக்ந்யாதிகதிஶ்ருதேரிதி சேந்ந பாக்தத்வாத் (3-1-4)

“யத்ராஸ்ய புருஷஸ்ய ம்ருதஸ்யாக்நிம் வாகப்யேதி, வாதம் ப்ராண:, சக்ஷுராதித்யம்”(ப்ரு.5-2-13)[3] இத்யாதிநா ப்ராணாநாம் ஜீவமரணகாலே அக்ந்யாதிஷு அப்யயஶ்ரவணாந்ந தேஷாம் ஜீவேந ஸஹ கமநமிதி கதிஶ்ருதிரந்யதா நேயேதி சேத்,

290. ப்ராணகதே: ச (3-1-3)

ப்ராணன்கள் செல்கிறபடியாலும்

ஸூக்ஷ்மமான பூதங்களுடன் கூடியவனாகவே செல்கிறான் என்பது இதனாலும் தெரிகிறது; ஶரீரத்தை விட்டு ஜீவன் வெளியேறும்போது, ப்ராணன்கள் (ப்ராணவாயுவும் இந்த்ரியங்களும்) அவனைப் பின் தொடர்ந்து செல்வது வேதத்தில் சொல்லப் படுகிறது - [1]**''வெளியேறும் அவனை ப்ராணவாயு பின்தொடர்ந்து வெளியேறுகிறது; பின் தொடர்ந்து வெளியேறும் ப்ராணனை எல்லா இந்த்ரியங்களும் பின் தொடர்ந்து வெளியேறுகின்றன''** என்று.

ஸ்ம்ருதியிலும், [2]**''மனஸ்ஸினை ஆறாவதாகக் கொண்டவையாய் ஶரீரத்தில் உள்ள இந்த்ரியங்களை ஜீவன் (கர்மத்துக்கு ஏற்ப)இங்கும் அங்கும் இழுக்கிறான்; எந்த ஶரீரத்தை அடைகிறானோ அதன் பொருட்டும்,எந்த ஶரீரத்திலிருந்து வெளியேறுகிறானோஅதிலிருந்தும், அதனை ஆளும் ஜீவன், இந்த இந்த்ரியங்களை எடுத்துக்கொண்டு போகிறான்; காற்றானது, வாசனைகளை அவற்றின் இருப்பிடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போவதுபோல''**

✍ *(காற்றானது, வாசனையை எடுத்துச் செல்லும்போது, ஆதாரமான ஸூக்ஷ்மமான பொருள்களையும் எடுத்துச் செல்வது போல, ஜீவன் இந்த்ரியங்களை எடுத்துச் செல்லும்போது, ஆதாரமான ஸூக்ஷ்ம-பூதப்-பொருள்களையும் எடுத்துச் செல்கிறான் என்று கருத்து).* ✍

இந்த்ரியங்களின் இருப்பிடம் (பூதஸூக்ஷ்மம்) இல்லாமல், இந்த்ரியங்கள் செல்ல முடியாது என்பதால், இந்த்ரியங்கள் இருக்குமிடமான ஸூக்ஷ்மமான பூதங்களும் செல்வதாக ஏற்கப்பட வேண்டும்.

◆ ◆ ◆ ◆

291. அக்ந்யாதிகதிஶ்ருதே: இதி சேத் ந பாக்தத்வாத் (3-1-4)

அக்நி முதலியதில் சேர்வதாகச் சொல்வதால், [இந்த்ரியங்கள் ஜீவனுடன் செல்வதில்லை] என்றால், அதல்ல; வேறு பொருளில் ஆவதால்

கேள்வி -

அக்ந்யாதிகதிஶ்ருதே: (அக்நி முதலியதில் சேர்வதாகச் சொல்வதால்) - [3]**''இறக்கும் இந்த புருஷனுக்கு வாக் ஆனது அக்நியில் லயமடைகிறது; வாயுவில் ப்ராணன்... ஆதித்யனில் கண்''** முதலியதால், ப்ராணன்கள் ஜீவனுடைய மரணகாலத்தில் அக்நி முதலானவற்றில் லயம் அடைவதாக (ஒன்றிச் சேர்வதாக) வேதம் சொல்கிறது; எனவே, அவை ஜீவனுடன் கூட செல்வதில்லை; எனவே, அப்படி செல்வதாகச் சொன்னது வேறுவிதமாக பொருத்தப்பட வேண்டியது -

இதி சேத் - என்றால்,,

न; **भाक्तत्वात्** अग्न्यादिष्वप्ययश्रवणस्य। कथं भाक्तत्वम्? **''ओषधीर्लोमानि, वनस्पतीन् केशाः''**(बृ.5-2-13)[1] इति अनपियद्भिर्लोमादिभिः सह श्रवणात्। अतश्चक्षुराद्यप्ययश्रुतिरधिष्ठातृदेवतापक्रमणपरा॥ ४ ॥

***

२९२.प्रथमेऽश्रवणादिति चेन्न; ता एव ह्युपपत्तेः (३-१-५)

यदुक्तम् - अद्भिः सूक्ष्माभिर्भूतान्तरसंसृष्टाभिः परिष्वक्तो जीवो गच्छतीति प्रश्नप्रतिवचनाभ्यामवगम्यत इति -

तन्नोपपद्यते, द्युलोकाग्निविषये प्रथमे होमे अपां होम्यत्वाश्रवणात्। **''तस्मिन्नेतस्मिन्नग्नौ देवाः श्रद्धां जुह्वति''**(छा.5-5-2)[2] इति श्रद्धैव हि होम्यत्वेन श्रुता। श्रद्धा नाम जीवस्य मनोवृत्तिविशेषत्वेन प्रसिद्धा। अतो नाऽऽपस्तत्र होम्या इति चेत्,

न; यतः **ताः** - आप एव श्रद्धाशब्देन तत्राभिधीयन्ते। कुतः? प्रश्नप्रतिवचनोपपत्तेः।

ந; **பாக்தத்வாத்** அக்ந்யாதிஷ்வப்யயஶ்ரவணஸ்ய। கதம் பாக்தத்வம் *''ஓஷதீர்லோமாநி, வநஸ்பதீந் கேஶா:''*(ப்ரு.5-2-13)[1] இதி அநபியத்பி: லோமாதிபி: ஸஹ ஶ்ரவணாத்। அதஶ்சக்ஷுராத்யப்யயஶ்ருதிரதிஷ்டாத்ருதேவதாபக்ரமணபரா।। 4 ।।

***

292.ப்ரதமேऽஶ்ரவணாதிதி சேந்ந; தா ஏவ ஹ்யுபபத்தே: (3-1-5)

யதுக்தம் - அத்பி: ஸூக்ஷ்மாபிர்பூதாந்தரஸம்ஸ்ருஷ்டாபி: பரிஷ்வக்தோ ஜீவோ கச்சதீதி ப்ரஶ்ந-ப்ரதிவசநாப்யாம் அவகம்யத இதி -

தந்நோபபத்யதே; த்யுலோகாக்நிவிஷயே ப்ரதமே ஹோமே அபாம் ஹோம்யத்வாஶ்ரவணாத்। *''தஸ்மிந்நேதஸ்மிந்நக்நௌ தேவா: ஶ்ரத்தாம் ஜுஹ்வதி''*(சா.5-5-2)[2] இதி ஶ்ரத்தைவ ஹி ஹோம்யத்வேந ஶ்ருதா। ஶ்ரத்தா நாம ஜீவஸ்ய மநோவ்ருத்திவிஶேஷத்வேந ப்ரஸித்தா। அதோ நாऽऽபஸ்தத்ர ஹோம்யா இதி சேத்,

ந; யத: *தா:* - ஆப ஏவ ஶ்ரத்தாஶப்தேந தத்ராபிதீயந்தே। குத:? ப்ரஶ்ந-ப்ரதிவசநோபபத்தே:। *''வேத்த, யதா பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷ-*

பதில் - ந - அதல்ல;

பாக்தத்வாத் - ஏனெனில், அக்நி முதலியதில் லயமடைவதாகச் சொன்னது, (நேர்ப் பொருளில் ஆகாமல்), வேறுபொருளில் ஆகும்;

வேறு பொருளில் ஆகும் என்பது எப்படித் தெரிகிறது? [1] **"ஓஷதிகளில் ரோமங்கள் மரங்களிடம் கேஶங்கள் (ஒன்றிச் சேர்கின்றன)"** என்று ஒன்று சேராதவையான ரோமம் முதலியவற்றுடன் சேர்த்துச் சொன்னபடியால்.

✍ *(ரோமங்களும் கேஶங்களும் இங்கேயே இறுதியில் தீயில் பொசுங்குகின்றன; அவை வேறிடத்தில் ஒன்று சேர்வதாகச் சொன்னது நேர்ப் பொருளில் ஆகாது; அவற்றுடன் கூட சேர்த்து வாக், ப்ராணன், கண் என்றிவற்றைச் சொல்வதால், இவை ஒன்று சேர்வதாகச் சொன்னதும் நேர்ப் பொருளில் அல்ல என்று தெரிகிறது)* ✍

எனவே, கண் முதலியவை (ஆதித்யன் முதலியதில்)ஒன்று சேர்வதாக வேதம் சொன்னது, அவற்றை அதிஷ்டானம் செய்யும் தேவன் வெளியேறுகிறான் எனும் கருத்தில் ஆகும். ✍ *(கண் இந்த்ரியத்தை அதிஷ்டானம் செய்யும் தேவன் ஆதித்யன்; அவன் கண்ணை அதிஷ்டானம் செய்வதை நிறுத்திக் கொண்டு, எப்போதும் போல ஆதித்யமண்டலத்தை அதிஷ்டானம் செய்வதாக மட்டும் ஆகிறான் என்று கருத்து).* ✍

◆◆◆◆

292. ப்ரதமே அஶ்ரவணாத் இதி சேத் ந தா: ஏவ ஹி உபபத்தே:(3-1-5)

முதல் ஹோமத்தில் [ஜலத்தைச்] சொல்லாதபடியால், [அது கிடையாது] என்றால் அதல்ல; அதுதான்[சொல்லப் படுகிறது]கேள்வி-பதில் சரியாவதால்.

கேள்வி - மற்ற பூதங்களுடன் கூடியதான ஸூக்ஷ்மமான ஜலத்துடன் சேர்ந்தவனாக ஜீவன்போகிறான் என்பது கேள்வி-பதில்களால் தெரிகிறது என்று சொன்னது எதுவோ, அது சரியில்லை;

ப்ரதமே அஶ்ரவணாத் (முதலாவதில் சொல்லாததால்) - ஏனெனில், த்யுலோகம் ஆகிற அக்நியைக் குறித்த[2] முதல் ஹோமத்தில், ஜலம் ஹோமம் செய்யப் படுவதாகச் சொல்லவில்லை; **"அந்த அக்நியில் தேவர்கள் ஶ்ரத்தையை ஹோமம் செய்தனர்"** என்று ஶ்ரத்தைதானே ஹோமம் செய்யப் படுவதாக வேதத்தில் சொல்லப் படுகிறது! ஶ்ரத்தை என்பது ஜீவனுடைய மனஸ்ஸின் ஒரு செயலாக அறியப் படுவது! எனவே, ஜலம் அங்கு ஹோமம் செய்யப் படுவதில்லை.

இதி சேத் - என்றால்,

பதில் - ந - அப்படியல்ல;

தா: ஏவஹி - (ஏனெனில், அவையே) - ஏனெனில், அந்த ஜலம்தான் ஶ்ரத்தை என்ற சொல்லால் அங்கு சொல்லப்படுகிறது.

ஏன்?

உபபத்தே: - அப்போதுதான் கேள்வி-பதில்கள் சரியாக பொருந்திச் சேருமாதலால்.

‘‘**वेत्थ! यथा पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो भवन्ति**’’(छा.5-3-3)[1] इति प्रश्नस्य प्रतिवचनोपक्रमे हि श्रद्धा द्युलोकाग्नौ होम्यत्वेन श्रुता; तत्र यदि श्रद्धाशब्देनाऽऽपो नोच्येरन्, ततः अन्यथा प्रश्नोऽन्यथा प्रतिवचनमित्यसङ्गतं स्यात्।

‘‘**इति तु पञ्चम्यामाहुतावापः पुरुषवचसः**’’ (छा.5-9-1)[2] इति प्रतिवचननिगमनं च श्रद्धाया अप्त्वमेव सूचयति। ‘**वेत्थ यथा**’ इति हि प्रश्नगतः प्रकारः, ‘**इति तु पञ्चम्याम्**’ इतीतिशब्देन परिहारे निगम्यते। श्रद्धासोमराजवर्षान्नरेतोगर्भरूपेणापां परिणाम-(क्रम)मुक्त्वा हि एवमापः पुरुषवचस इति निगम्यते। श्रद्धाशब्दस्य चाप्सु वैदिकप्रयोगो दृश्यते - ‘‘**अपः प्रणयति। श्रद्धा वा आपः**’’(तै.ब्रा.3-2-4-33)[3] इति।

‘‘**श्रद्धां जुह्वति; तस्या आहुतेः सोमो राजा सम्भवति**’’(छा.5-4-2)[4] इति सोमाकारेण परिणामश्चापामेवोपपद्यते। अतो भूतान्तरसंसृष्टाभिरद्भिः सम्परिष्वक्तो जीवो रंहतीत्युपपन्नम्॥५॥

२९३.अश्रुतत्वादिति चेन्नेष्टादिकारिणां प्रतीतेः (३-१-६)

यत् पुनः उक्तम् - अद्भिः सम्परिष्वक्तो जीवो यातीत्ययमर्थ एतस्माद्वाक्यादवगम्यत

வசஸோ பவந்தி’’(சா.5-3-3)[3] இதி ப்ரஶ்நஸ்ய ப்ரதிவசநோபக்ரமே ஹி ஶ்ரத்தா த்யுலோகாக்நௌ ஹோம்யத்வேந ஶ்ருதா, தத்ர யதி ஶ்ரத்தாஶப்தேநாऽऽபோ நோச்யேரந், தத: அந்யதா ப்ரஶ்ந: அந்யதா ப்ரதிவசநமித்யஸங்கதம் ஸ்யாத்।

‘‘*இதி து பஞ்சம்யாமாஹுதாவாப: புருஷவசஸ:*’’(சா.5-9-1)[1] இதி ப்ரதிவசந-நிகமநம் ச ஶ்ரத்தாயா அப்த்வமேவ ஸூசயதி। ‘*வேத்த யதா*’ இதி ஹி ப்ரஶ்நகத: ப்ரகார: ‘*இதி பஞ்சம்யாம்*’ இதீதிஶப்தேந பரிஹாரே நிகம்யதே। ஶ்ரத்தாஸோமராஜவர்ஷாந்ந-ரேதோகர்பரூபேணாபாம் பரிணாம(க்ரம)-முக்த்வா ஹி ஏவமாப: புருஷவசஸ இதி நிகம்யதே। ஶ்ரத்தாஶப்தஸ்ய சாப்ஸு வைதிகப்ரயோகோ த்ருஶ்யதே - ‘‘*அப: ப்ரணயதி। ஶ்ரத்தா வா ஆப:*’’ (தை.ப்ரா.3-2-4-33)[2] இதி।

‘‘*ஶ்ரத்தாம் ஜுஹ்வதி, தஸ்யா ஆஹுதே: ஸோமோ ராஜா ஸம்பவதி*’’(சா.5-4-2)[3] இதி ஸோமாகாரேண பரிணாமஶ்சாபாமேவோபபத்யதே। அதோ பூதாந்தரஸம்ஸ்ருஷ்டாபிரத்பி: ஸம்பரிஷ்வக்தோ ஜீவோ ரம்ஹதீத்யுப-பந்நம்।।5।।

393.அஶ்ருதத்வாதிதி சேந்நேஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே: (3-1-6)

யத் புந: உக்தம் - அத்பி: ஸம்பரிஷ்வக்தோ ஜீவோ யாதீத்யயமர்த: ஏதஸ்மாத்வாக்யாதவகம்யத இதி - தந்நோபபத்யதே; அஸ்மிந் வாக்யே

[1]**''எப்படியாக ஐந்தாவது ஆஹூதியில் ஜலமானது 'புருஷன்' என்று பெயருடையதாக ஆகிறது என்பது தெரியுமா?''** என்ற கேள்விக்கான பதிலின் ஆரம்பத்தில்தானே ஶ்ரத்தையானது த்யு-லோகம் ஆகிற அக்நியில் ஹோமம் செய்யப் படுவதாக வேதத்தில் சொல்லப்பட்டது; அங்கு 'ஶ்ரத்தை' என்ற சொல்லால், ஜலம் சொல்லப்படவில்லையானால், வேறுவிதமான கேள்வி - வேறுவிதமான பதில் என்று பொருந்தாமல் போய் விடும்.

[2]**''இப்படியாக ஐந்தாவது ஆஹூதியில் ஜலமானது 'புருஷன்' என்ற சொல்ல ஏற்றதாகிறது''** என்று பதிலின் முடிவுரையும், ஶ்ரத்தை என்பது ஜலம்தான் என்பதை குறிப்பால் உணர்த்துகிறது; **''எப்படி தெரியுமா?''** என்று கேள்வியில் உள்ள முறையானது, பதிலில் **''இப்படி ஐந்தாவதில்''** என்று 'இப்படி' என்ற சொல்லால் முடிக்கப் படுகிறது; ஶ்ரத்தை, ஸோமராஜன், பர்ஜன்யம்(மேகம்), மழை, அன்னம், ரேதஸ், கர்ப்பம் ஆகிய உருவில் (ஜலத்தின்) மாற்றத்தைச் சொல்லித்தானே ''இப்படி ஜலமானது புருஷன் என்று சொல்ல ஏற்றதாக ஆகிறது'' என்று முடிக்கப் படுகிறது; ஶ்ரத்தை என்ற சொல்லை, ஜலம் என்ற பொருளில் சொல்லுவதானது, வேதத்தில் உள்ள வழக்காகக் காணப் படுகிறது - [3]**''ஜலத்தை ப்ரணயனம் செய்கிறான்; ஶ்ரத்தைதான் ஜலம்''** என்று.

மேலும் [4]**''ஶ்ரத்தையை ஹோமம் செய்கின்றனர்; அந்த ஆஹூதியிலிருந்து ஸோமராஜன் உண்டாகிறான்''** என்று ஸோமமாகிற உருவில் மாறுதலும் ஜலத்துக்கே வரும்.

எனவே, பிற பூதங்களுடன் கூடியதான ஜலத்துடன் சேர்ந்தவனாய் ஜீவன் போகிறான் என்பதே சரியாகும்.

◆ ◆ ◆

293.அஶ்ருதத்வாத் இதி சேத் ந இஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே:(3-1-6)

[ஜீவனைச்] சொல்லாததால் என்றால் அதல்ல; யாகம் முதலியன செய்பவன் தெரிவதால்.

கேள்வி - ஜலத்துடன் சேர்ந்தவனாய் ஜீவன் போகிறான் என்னும் இப்பொருள் இந்த வாக்யத்திலிருந்து தெரிகிறது என்று சொன்னது எதுவோ, அது சரியில்லை;

इति - तन्नोपपद्यते; अस्मिन् वाक्ये जीवस्याश्रवणात्। अत्र हि श्रद्धादय एवाम्ब्ववस्थाविशेषाः होम्यत्वेन श्रुताः; न तु जीवस्तत्परिष्वक्त इति चेत्,

तन्न; **इष्टादिकारिणां प्रतीतेः** -अस्मिन्नेव वाक्ये ह्युत्तरत्र, 'ब्रह्मज्ञानविधुरेष्टापूर्तदत्तकारिणो द्युलोकं प्राप्य सोमराजानो भवन्ति, पुण्यकर्मावसाने च पुनरागत्य गर्भं प्राप्नुवन्ती'त्युच्यते,

- **''अथ य इमे ग्रामे इष्टापूर्ते दत्तमित्युपासते, ते धूममभिसम्भवन्ति''**(छा.5-10-3)[1] इत्यारभ्य,
- **''पितृलोकादाकाशमाकाशाच्चन्द्रमसम्, एष सोमो राजा तत् देवानामन्नम्, तं देवा भक्षयन्ति।'' ''तस्मिन् यावत्सम्पातमुषित्वाऽथैतमेवाध्वानं पुनर्निवर्तन्ते''**(छा.5-10-4,5)[2]
- **''यो यो ह्यन्नमत्ति, यो रेतः सिञ्चति, तद्भूय एव भवति''**(छा.5-10-6)[3] इति।

अत्रापि, द्युलोकाग्नौ **''श्रद्धां जुह्वति तस्या आहुतेः सोमो राजा सम्भवति''**(छा.5-4-2)[4] इति, तदेकार्थत्वात् श्रद्धावस्थदेहविशिष्टः सोमरूपदेहविशिष्टो भवतीत्युक्तमिति

ஜீவஸ்யாஶ்ரவணாத்। அத்ர ஹி ஶ்ரத்தாதய ஏவாம்ப்வவஸ்தாவிஶேஷா: ஹோம்யத்வேந ஶ்ருதா:, ந து ஜீவஸ்தத்பரிஷ்வக்த இதி சேத்,

தந்ந; இஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே: - அஸ்மிந்நேவ வாக்யே ஹி உத்தரத்ர, 'ப்ரஹ்மஜ்ஞாநவிதுரேஷ்டாபூர்த-தத்தகாரிணோ த்யுலோகம் ப்ராப்ய ஸோமராஜாநோ பவந்தி; புண்யகர்மாவஸாநே ச புநராகத்ய கர்பம் ப்ராப்நுவந்தீத்யுச்யதே,

- *''அத ய இமே க்ராமே இஷ்டாபூர்தே தத்தமித்யுபாஸதே, தே தூமமபிஸம்பவந்தி''*(சா.5-10-3)[1] இத்யாரப்ய,
- *''பித்ருலோகாதாகாஶமாகாஶாச்சந்த்ரமஸம், ஏஷ ஸோமோ ராஜா தத்தேவாநாமந்நம்; தம் தேவா பக்ஷயந்தி।'' ''தஸ்மிந் யாவத்ஸம்பாதமுஷித்வாऽதைதமேவாத்வாநம் புநர்நிவர்தந்தே''*(சா.5-10-4,5)[2]
- *''யோ யோ ஹ்யந்நமத்தி, யோ ரேத: ஸிஞ்சதி, தத்பூய ஏவ பவதி''* (சா.5-10-6)[3] இதி।

அத்ராபி, த்யுலோகாக்நௌ *''ஶ்ரத்தாம் ஜுஹ்வதி தஸ்யா ஆஹுதே: ஸோமோ ராஜா ஸம்பவதி''*(சாய5-4-2)[4] இதி, ததேகார்தத்வாத் ஶ்ரத்தாவஸ்த-தேஹவிஶிஷ்ட: ஸோமரூபதேஹவிஶிஷ்டோ பவதீத்யுக்தமிதி கம்யதே।

அஶ்ருதத்வாத் - ஏனெனில், இந்த வாக்யத்தில் ஜீவனை வேதம் சொல்லவில்லை; இங்கு ஜலத்தின் விஶேஷ-நிலைகளான ஶ்ரத்தை முதலியவையே ஹோமம் செய்யப் படுபவையாக வேதத்தில் சொல்லப் பட்டன; அவற்றுடன் சேர்ந்தவனாக ஜீவன் இருப்பது சொல்லப்படவில்லை -

இதி சேத் - என்றால்,

பதில் -

ந - அதல்ல;

இஷ்டாதிகாரிணாம் ப்ரதீதே: (யாகம் முதலியதை செய்பவர் தெரிவதால்)- இந்த மஹா-வாக்யத்திலேயே பின்னால், 'ப்ரஹ்மஜ்ஞானம் இல்லாமல் இஷ்டமும்(யாகமும்), பூர்த்தமும் (குளம் முதலிய பொதுத்தொண்டும்) தானமும் செய்பவர், ஸ்வர்க்கலோகத்தை அடைந்து ஸோமராஜர்கள் (அம்ருதமயமான ஶரீரம் உடையவராக) ஆகின்றனர்; புண்யகர்மத்தின் முடிவில் மீண்டும் வந்து கர்ப்பத்தை அடைகின்றனர்' என்று சொல்லப் படுகிறது -

★ [1]**''யார் ஊரில் இருந்து கொண்டே யாகம், பூர்த்தம், தானம் என்றிப்படி (இது போன்றவற்றை) ஶ்ரத்தையுடன் செய்கின்றனரோ, அவர்கள் தூமதேவனை அடைகின்றனர்''** என்று ஆரம்பித்து,

★ [2]**''பித்ருலோகத்திலிருந்து ஆகாசத்தையும், ஆகாசத்திலிருந்து சந்திரனையும் அடைகின்றனர்; இவர்கள் திவ்யதேஹத்துடன் கூடியவர்கள் ஆகின்றனர்; அவன் தேவர்களுக்கு உணவு ஆகிறான்; அவனை தேவர்கள் உண்கின்றனர்; கர்ம-மீதம் உள்ளவரை அங்கே வசித்துவிட்டு, பின் இந்த வழியே திரும்பி வருகின்றனர்''**,

★ [3]**''யார் உணவு உண்கிறானோ, யார் ரேதஸ் இட்டு நனைக்கிறானோ, பின்னர் அவனுடன் சேர்ந்தவனாகிறான்''** என்று.

இங்கும் ஸ்வர்க்கலோகம் ஆகிற அக்நியில் [4]**''ஶ்ரத்தையை ஹோமம் செய்கின்றனர்; அந்த ஆஹுதியிலிருந்து ஸோமராஜன் உண்டாகிறான்''** என்பதாக, ஶ்ரத்தை எனும் நிலையிலான ஶரீரத்துடன் கூடியவனாக இருந்தவன், ஸோமம் ஆகிற (ஸ்வர்க்க லோகத்துக்கு ஏற்ற அம்ருதமயமான) ஶரீரத்துடன் கூடியனாக ஆகிறான் என்பதுதான் சொல்லப்பட்டது என தெரிகிறது; ஏனெனில், முன் சொன்ன அதனுடன் ஒரே பொருளில் ஆகவேண்டும் என்பதால்,

गम्यते। देहस्य जीवविशेषणतैकस्वरूपस्य वाचकः शब्दो विशेष्ये जीव एव पर्यवस्यति। अतः सम्परिष्वक्तो जीवो यातीत्युपपद्यते॥ ६ ॥

* * *

ननु च **‘‘तं देवा भक्षयन्ति’’**(छा.5-10-3)[1], इति देवैर्भक्ष्यमाणत्ववचनात्, **‘‘सोमो राजा’’**(छा.5-10-4)[2] इति न जीव उच्यते, जीवस्यानदनीयत्वात्; तत्राह -

२९४.भाक्तं वाऽनात्मवित्त्वात्; तथा हि दर्शयति (३-१-७)

वाशब्दश्चोद्यं व्यावर्तयति। इष्टादिकारिणोऽनात्मवित्त्वात् स देवानां भोगोपकरणत्वेन इहामुत्र च वर्तते। इहेष्टादिना तदाराधनं कुर्वन्नुपकरोति; आराधनप्रीतैर्देवैर्दत्तममुं लोकं प्राप्य तत्र तत्समानभोगस्तदुपकरणं भवति। **‘‘यथा पशुः, एवं स देवानाम्’’**(बृ.3-4-10)[3] इति अनात्मविदः देवानामुपकरणत्वं दर्शयति श्रुतिः। स्मृतिरपि आत्मविदां ब्रह्मप्राप्तिम्, अनात्मविदां च देवभोग्यत्वं दर्शयति, **‘‘देवान् देवयजो यान्ति मद्भक्ता यान्ति मामपि’’** (गी.7-23)[3] इति।

தேஹஸ்ய ஜீவவிஶேஷணதைகஸ்வரூபஸ்ய வாசக: ஶப்தோ விஶேஷ்யே ஜீவ ஏவ பர்யவஸ்யதி। அத: ஸம்பரிஷ்வக்தோ ஜீவோ யாதீத்யுபபத்யதே।।6।।

* * *

நநு ச "*தம் தேவா ப̱க்ஷயந்தி*"(சா.5-10-3)[1], இதி தேவைர்ப̱க்ஷ்யமாணத்வவசநாத், "*ஸோமோ ராஜா*"(சா.5-10-4)[2] இதி ந ஜீவ உச்யதே, ஜீவஸ்யாநதநீயத்வாத்; தத்ராஹ -

294.ப̱ாக்தம் வாऽநாத்மவித்த்வாத், தத̱ா ஹி தர்ஶயதி (3-1-7)

வாஶப்த: சோத்யம் வ்யாவர்தயதி। இஷ்டாதிகாரிணோऽநாத்மவித்த்வாத் ஸ தேவாநாம் ப̱ோகோபகரணத்வேந இஹாமுத்ர ச வர்ததே। இஹேஷ்டாதிநா ததாராதநம் குர்வந்நுபகரோதி; ஆராதநப்ரீதை: தேவை: தத்தமமும் லோகம் ப்ராப்ய தத்ர தத்ஸமாநப̱ோகஸ்ததுபகரணம் ப̱வதி। "*யத̱ா பஶு:, ஏவம் ஸ தேவாநாம்*"(ப்ரு.3-4-10)[3] இதி அநாத்மவித: தேவாநாமுபகரணத்வம் தர்ஶயதி ஶ்ருதி:। ஸ்ம்ருதிரபி ஆத்மவிதாம் ப்ரஹ்மப்ராப்திம், அநாத்மவிதாம் ச தேவப̱ோக்யத்வம் தர்ஶயதி, "*தேவாந் தேவயஜோ யாந்தி மத்ப̱க்தா யாந்தி மாமபி*"(கீ.7-23)[4] இதி।

ஶரீரமானது, ஜீவனுக்கு விஶேஷணமாகவே ஆகும் ஸ்வரூபமானது; ஆகையால், அந்த ஶரீரத்தச் சொல்லும் சொல்லானது விஶேஷ்யமான ஜீவனிடம் நிறைவடைகிறது; எனவே, கூட சேர்ந்தவனான ஜீவன் போகிறான் என்பது பொருந்துகிறது.

◆ ◆ ◆ ◆

கேள்வி - [2]**ஸோமராஜன்** என்று ஜீவன் சொல்லப் படுவதில்லை; ஏனெனில், [1]**''அவனை தேவர்கள் உண்ணுகின்றனர்''** என்று தேவர்களால் உண்ணப் படுவதாகச் சொல்கிறது; ஏனெனில்,ஜீவன் உண்ணப்படும் பொருள் அல்ல.

பதில் - இதற்கு பதில் சொல்கிறார் -

294. பாக்தம் வா அநாத்மவித்த்வாத் ததா ஹி தர்ஶயதி (3-1-7)

உணவாகச் சொன்னது வேறு பொருளில்; ஆத்ம-உபாஸனம் செய்யாதபடியால்; அப்படியே வேதம் காண்பிக்கிறது.

'வா' என்ற சொல்லானது, கேள்வியை மறுக்கிறது.

அநாத்மவித்த்வாத் - (ப்ரஹ்மஜ்ஞாநம் இல்லாமல்) யாகம் முதலியன செய்பவன், ஆத்ம-உபாஸனம் செய்யாதபடியால்,

அவன் தேவர்களுக்கு போக-உபகரணமாக இங்கும் ஸ்வர்க்க-உலகத்திலும் ஆகிறான்; இங்கு யாகம் முதலியதன் மூலம் அவர்களை ஆராதனம் செய்து கொண்டு உதவுகிறான்; ஆராதனத்தால் ப்ரீதியடைந்த தேவர்களால் கொடுக்கப்பட்ட ஸ்வர்க்கலோகத்தை அடைந்து அங்கு அவர்களுடன் ஸமானமான போகத்தைப் பெற்று அவர்களது உபகரணம் ஆகிறான்;

ஆத்ம-உபாஸனம் செய்யாதவன், தேவர்களின் உபகரணம் ஆவதை [3]**''எப்படி விலங்கு ஆகிறதோ, அப்படி அவன் தேவர்களுக்கு ஆகிறான்''** என்று வேதம் காண்பிக்கிறது; ஸ்ம்ருதியும் கூட ஆத்ம-உபாஸனம் செய்பவர் ப்ரஹ்மத்தை அடைவதையும், ஆத்ம-உபாஸனம் செய்யாதவர் தேவர்களுக்கு போகப் பொருளாக ஆவதையும் காண்பிக்கிறது - [3]**''தேவர்களை பூஜிப்பவர் தேவர்களை அடைகின்றனர்; எனது பக்தர்கள் என்னை அடைகின்றனர்''** என்று (ஸ்ரீகீதையில் கண்ணன்)

अतो जीवस्य देवानां भोगोपकरणत्वाभिप्रायमन्नत्वेन भक्ष्यत्ववचनम्; अतस्तत् भाक्तम्। तेन तृप्तिरेव च देवानां भक्षणमिति श्रूयते, **"न वै देवा अश्नन्ति, न पिबन्ति, एतदेवामृतं दृष्ट्वा तृप्यन्ति"**(छा.3-6-1)[1] इति।

तस्माद् भूतसूक्ष्मैः सम्परिष्वक्तो जीवो रंहतीति सिद्धम्॥ ७ ॥

इति तदन्तरप्रतिपत्त्यधिकरणम्॥ १ ॥

அதோ ஜீவஸ்ய தேவாநாம் போகோபகரணத்வாபிப்ராயம் அந்நத்வேந பக்ஷ்யத்வவசநம்; அதஸ்தத் பாக்தம்। தேந த்ருப்திரேவ ச தேவாநாம் பக்ஷணமிதி ஶ்ரூயதே, *"ந வை தேவா அஶ்நந்தி; ந பிபந்தி; ஏததேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி"*(சா.3-6-1)[1] இதி।

தஸ்மாத் பூதஸூக்ஷ்மை: ஸம்பரிஷ்வக்தோ ஜீவோ ரம்ஹதீதி ஸித்தம்।। 7 ।।

இதி ததந்தரப்ரதிபத்த்யதிகரணம்।। 1 ।।

* * *

எனவே, ஜீவன் ஆனவன், தேவர்களின் போக-உபகரணம் ஆவதைக் கருத்தில் கொண்டு, அவனை தேவர்களின் அன்னமாக (உணவுப் பொருளாக) சொன்னது; எனவே, அது,

பாக்தம் - (நேர்ப்பொருளில் ஆகாமல்) வேறு பொருளில் ஆகும்;

ததா ஹி தர்ஶயதி (அப்படியே வேதம் சொல்கிறது) - தேவர்கள் உண்பது என்பது, அதனால்(அவனால்) வரும் திருப்திதான் என்று வேதத்தில் சொல்லப் படுகிறது - [1]**''தேவர்கள் உண்பதில்லை; பருகுவதில்லை; இந்த அம்ருதத்தைப் பார்த்தே திருப்தி அடைகின்றனர்''** என்று.

ப்ரயோஜநம் (அதிகரணபலன்)

ஆகவே, ஸூக்ஷ்மமான பூதங்களுடன் கூடியவனாய் ஜீவன் செல்கிறான் என்று ஆயிற்று.

* * *

ததந்தரப்ரதிபத்த்யதிகரணம் முற்றிற்று.

* * *

70.க்ருதாத்யயாதிகரணம் (3-1-2)

முன் குறிப்பு

ஜீவன், ஒரு பிறப்பு முடிந்து ஸ்வர்க்கத்துக்கு போகும்போது ஸூக்ஷ்ம-பூதப் பொருள்களுடன் போகிறான் என்று சொல்லியாயிற்று; இந்த அதிகரணம் முதல், மறுபிறவிக்காக இறங்கிவருவது பற்றிய விசாரம்.

அவன் மறுபிறவிக்காக இறங்கும்போது, அவனுக்கு புண்யபாப-கர்மமும் கூட வருகிறதா? இல்லையா என்று விசாரம்.

பூர்வபக்ஷம் - ஸ்வர்க்க-உலகத்திலேயே கர்ம-பலன்களைஅனுபவித்து கழித்து விடுகிறான்; எனவே,மீதி புண்யபாபம் இருக்காது.

ஸித்தாந்தம் - ஸ்வர்க்கத்தில்,ஓரளவுதான் புண்யபாபம் கழியும்; மொத்தமாக முடியாது; எனவே, புண்யபாப-கர்மத்துடன் பிறக்கிறான்; அவன் அங்கே அனுபவித்ததுபோக மீதி இருக்கும் புண்யபாபகர்மத்துக்கு‘அனுசயம்’ என்று பெயர்.

அதனால்தான் பிறப்பு எல்லாருக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை;புண்யபாபத்துக்கு ஏற்ப,குலம், நிறம், அறிவு ஆற்றல் முதலிய எல்லாவற்றிலும் வித்யாசம் இருக்கிறது! ரமணீயசரணர்கள் (நல்லசரணம் உடையவர்கள்) நற்பிறவியில் பிறப்பர்; கபூயசரணர்கள் (மோசமானசரணம் உடையவர்கள்) மோசமான பிறவி எடுப்பர் என்று வேதம் சொல்கிறது.

இங்கு‘சரணம்’ என்றால், என்ன அர்த்தம்?

கார்ஷ்ணாஜினி முனிவரின் கருத்து -பொதுவாக சரணம் என்றால் ஆசாரம் என்று நேர்ப்பொருள்; ஆனால், இங்கு ஆசாரத்துடன் செய்யப்படும் கர்ம-அனுஷ்டானம் என்று அர்த்தம்; கர்ம-பலன்தானே மறுபிறவியில் ஆகிறது!

பாதரி முனிவரின் கருத்து - சரணம் என்றால் கர்ம-அனுஷ்டானம் என்று அர்த்தம்; அது நேர்ப் பொருளும் ஆகும்; இதே கருத்தை ஸ்ரீவ்யாஸரும் ஏற்கிறார்.

வெறும் ஆசாரத்துக்கு பலன் கிடையாது; ஆசாரத்துடன் செய்யும் கர்ம-அனுஷ்டானத்துக்குத் தான் பலன் உண்டு; (உ.ம்) ஸந்த்யாவந்தனம் என்பது ஆசாரத்தில் சேரும்; அது கர்ம-அனுஷ்டானம் அல்ல;தனிப்பட்டஸந்த்யாவந்தனம் என்பதற்கு தனியாக பலன் எதுவும் கிடையாது; ஆனால், ஸந்த்யாவந்தனம் செய்யாவிட்டால், ஆசாரமே இல்லை என்றாகும்; வேறு எந்த அனுஷ்டானமும் செய்யும் தகுதி வராது. திருவாராதனம், பஞ்சமஹாயஜ்ஞம் முதலிய அனுஷ்டானம் செய்வதற்கு ஆசாரமாக ஸந்த்யாவந்தனம் தேவை;

ஸந்த்யாவந்தனம் பற்றி வேதத்தில் எங்கு சொல்லியுள்ளது என்பது தற்காலம் நமக்குக் கிடைக்கவில்லை; ஆனால், பெரியோர்கள் விடாமல் அனுஷ்டானம் செய்வதால், எங்கோ வேதத்தில் சொல்லியிருக்கிறது என்று ஊகிக்கலாம்.

७०.कृतात्ययाधिकरणम् (३-१-२)

२९५.कृतात्ययेऽनुशयवान् दृष्टस्मृतिभ्यां यथेतमनेवं च (३-१-८)

केवलेष्टापूर्तदत्तकारिणां धूमादिना पितृयाणेन पथा गमनं कर्मफलावसाने पुनरावर्तनं चाम्नातम्, **''यावत्संपातमुषित्वाऽथैतमेवाध्वानं पुनर्निवर्तन्ते''**(छा.5-10-5)[1] इति। तत्र प्रत्यवरोहन् जीवः किमनुशयवान् प्रत्यवरोहति, उत नेति संशय्यते।

किं युक्तम्? कर्मणः कृत्स्नस्योपभुक्तत्वात् नानुशयवानिति प्राप्तम्। अनुशयो ह्युपभुक्तशिष्टं कर्म। तच्च कृत्स्नफलोपभोगे सति नावशिष्यते। **''यावत्सम्पातमुषित्वा''** (छा.5-10-5)[2] इति वचनात् कृत्स्नोपभोगश्च ज्ञायते। सम्पतन्त्यनेन स्वर्गं लोकमिति सम्पातः कर्मोच्यते। श्रुत्यन्तरं च, **''प्राप्यान्तं कर्मणस्तस्य यत्किञ्चेह करोत्ययम्। तस्माल्लोकात् पुनरेत्यस्मै लोकाय कर्मणे''**(बृ.6-4-6)[3] इति॥

एवं प्राप्तेऽभिधीयते - **अनुशयवान्** प्रत्यवरोहति इति। कुतः? **दृष्टस्मृतिभ्याम्** - श्रुतिस्मृतिभ्यामित्यर्थः।

70.க்ருதாத்யயாதிகரணம் (3-1-2)

295.க்ருதாத்யயோநுஶயவாந் த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் யதேதமநேவம் ச (3-1-8)

கேவலேஷ்டாபூர்ததத்தகாரிணாம் தூமாதிநா பித்ருயாணேந பதா கமநம் கர்மபலாவஸாநே புநராவர்தநம் ச ஆம்நாதம், *''யாவத்ஸம்பாதமுஷித்வாऽதைதமேவாத்வாநம் புநர்நிவர்தந்தே''*(சா.5-10-5)[1] இதி। தத்ர ப்ரத்யவரோஹந் ஜீவ: கிமநுஶயவாந் ப்ரத்யவரோஹதி, உத நேதி ஸம்ஶய்யதே।

கிம் யுக்தம்? கர்மண: க்ருத்ஸ்நஸ்ய உபபுக்தத்வாத் நாநுஶயவாநிதி ப்ராப்தம்। அநுஶயோ ஹி உபபுக்தஶிஷ்டம் கர்ம। தச்ச க்ருத்ஸ்நபலோபபோகே ஸதி நாவஶிஷ்யதே। *''யாவத்ஸம்பாதமுஷித்வா''*(சா.5-10-5)[2] இதி வசநாத் க்ருத்ஸ்நோபபோகஶ்ச ஜ்ஞாயதே। ஸம்பதந்தி அநேந ஸ்வர்கம் லோகமிதி ஸம்பாத: கர்மோச்யதே। ஶ்ருத்யந்தரம் ச, *''ப்ராப்யாந்தம் கர்மணஸ்தஸ்ய யத்கிஞ்சேஹ கரோத்யயம்। தஸ்மால்லோகாத் புநரேத்யஸ்மை லோகாய கர்மணே''*(ப்ரு.6-4-6)[3] இதி॥

ஏவம் ப்ராப்தேऽபிதீயதே - அநுஶயவாந் ப்ரத்யவரோஹதி இதி। குத:? *த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம்* - ஶ்ருதிஸ்ம்ருதிப்யாமித்யர்த:।

70.க்ருதாத்யயாதிகரணம் (3-1-2)

295. க்ருதாத்யயே அநுஶயவான் த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் யதேதம் அநேவம் ச(3-1-8)

செய்த கர்மம் அழிந்தபின், கர்மமிகுதியுடன் கூடியவனாய் [திரும்புகிறான் என்பது] வேத-ஸ்ம்ருதிகளால் [தெரிகிறது]; சென்ற வழியாகவும், வேறு வழியாகவும் [வருகிறான்].

ஸங்கதி, விஷயவாக்யம் & ஸந்தேஹம்

பரமபுருஷ-ஆராதனமாக அல்லாமல் வெறும் யாகம், பூர்த்தம், தானம் செய்பவர் தூமம் முதலிய பித்ருயான வழியால் செல்வதும், கர்ம-பலனின் முடிவில் திரும்பி வருவதும், [1]**''கர்மம் வரை வசித்துவிட்டு, பின் இதே வழியில் திரும்பி வருகின்றனர்''** என்று சொல்லப்பட்டது.

அதில் திரும்பி வரும் ஜீவன் அநுஶயம் உடையவனாக (மிகுதியுள்ள புண்ய-பாபத்துடன் கூட) திரும்பி வருகிறானா? அல்லது அப்படியில்லையா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? மொத்த கர்மத்தையும் அனுபவித்து விட்டபடியால், அநுஶயம் உடையவனாக திரும்புவதில்லை என்று ஆகும். அநுஶயம் என்பது, அனுபவித்தது போக மீதி இருக்கும் கர்மம்; மொத்த பலனையும் அனுபவித்தபின், அது மீதி இருக்காது; [2]**''ஸம்பாதம் ஆகும்வரை வசித்துவிட்டு''** என்று சொல்வதால், மொத்த கர்மமும் அனுபவித்ததகவும் தெரிகிறது. ''ஸம்பதந்தி அனேன ஸ்வர்க்கம்'' என்று இலக்கணக் குறிப்பு; ''இதனால் ஸ்வர்க்கத்தை அடைகின்றனர்'' என்ற பொருளில் 'ஸம்பாத;' என்ற சொல் வந்துள்ளது; ஸம்பாத: என்று புண்யபாப-கர்மம் சொல்லப் படுகிறது. வேறொரு வேதவாக்யமும் உண்டு - [3]**''இங்கு இவன் எதைச் செய்கிறானோ, அந்த கர்மாவின் முடிவை (பலனை)அடைந்துவிட்டு, அந்த உலகத்திலிருந்து இவ்வுலகுக்கு கர்மம் செய்வதற்காக திரும்பி வருகிறான்''** என்று.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிடும்போது, ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது -

க்ருதாத்யயே - செய்த கர்மம் (பலனை அனுபவித்ததால்) ஒழிந்தபின்,

அநுஶயவான் - மீதி இருக்கும் கர்மத்துடன் கூடியவனாய் திரும்பி இறங்குகிறான்;

ஏன்?

த்ருஷ்டஸ்ம்ருதிப்யாம் - வேதம், ஸ்ம்ருதி என்றிவற்றால் என்று பொருள்.

- श्रुतिस्तावत् - ''**तत् य इह रमणीयचरणा अभ्याशो ह, यत् ते रमणीयां योनिमापद्येरन् ब्राह्मणयोनिं क्षत्रिययोनिं वैश्ययोनिं वा। अथ य इह कपूयचरणा अभ्याशो ह, यत् ते कपूयां योनिमापद्येरन् श्वयोनिं वा सूकरयोनिं वा चण्डालयोनिं वा**'',(छा.5-10-7)[1]

इति प्रत्यवरुढान् प्रति श्रूयते। अमुष्माल्लोकात् प्रत्यवरूढेषु रमणीयकर्माणो रमणीयां ब्राह्मणादियोनिं प्रतिपद्यन्ते ; कपूयचरणाः - कुत्सितकर्माणः कुत्सितां श्वसूकरचण्डलादियोनिं प्रतिपद्यन्त इति प्रत्यवरुढानां पुण्यपापकर्मयोगं दर्शयति।

- स्मृतिरपि, ''**वर्णा आश्रमाश्च स्वकर्मनिष्ठाः प्रेत्य कर्मफलमनुभूय ततः शेषेण विशिष्टदेशजातिकुलरूपायुश्श्रुतवृत्तवित्तसुखमेधसो जन्म प्रतिपद्यन्ते, विष्वञ्चो विपरीता नश्यन्ति**'' (गौ.ध.2-11-12,13)[2] इति।

- तथा ''**ततः परिवृत्तौ कर्मफलशेषेण जातिं रूपं वर्णं बलं मेधां प्रज्ञां द्रव्याणि धर्मानुष्ठानमिति प्रतिपद्यते। तत् चक्रवदुभयोर्लोकयोः सुख एव वर्तते**''(आ.ध.2-1-2-3)[3] इति।

'**यावत्सम्पातम्**' इति फलदानप्रवृत्तकर्मविशेषविषयम्। '**यत्किञ्चेह करोत्ययम्**'

- ஶ்ருதிஸ்தாவத் - "*தத்ய இஹ ரமணீயசரணா அப்யாஶோ ஹ, யத் தே ரமணீயாம் யோநிமாபத்யேரந் ப்ராஹ்மணயோநிம் க்ஷத்ரியயோநிம் வைஶ்யயோநிம் வா। அத ய இஹ கபூயசரணா அப்யாஶோ ஹ, யத் தே கபூயாம் யோநிமாபத்யேரந் ஶ்வயோநிம் வா ஸூகரயோநிம் வா சண்டாலயோநிம் வா*"(சா.5-10-7)[1],

இதி ப்ரத்யவரூடாந் ப்ரதி ஶ்ரூயதே। அமுஷ்மால்லோகாத் ப்ரத்யவரூடேஷு ரமணீயகர்மாண: ரமணீயாம் ப்ராஹ்மணாதியோநிம் ப்ரதிபத்யந்தே, கபூயசரணா: - குத்ஸிதகர்மாண: குத்ஸிதாம் ஶ்வ-ஸூகர-சண்டலாதியோநிம் ப்ரதிபத்யந்த இதி ப்ரத்யவரூடாநாம் புண்யபாபகர்மயோகம் தர்ஶயதி।

- ஸ்ம்ருதிரபி, "*வர்ணா ஆஶ்ரமாஶ்ச ஸ்வகர்மநிஷ்டா: ப்ரேத்ய கர்மபலமநுபூய தத: ஶேஷேண விஶிஷ்டதேஶஜாதிகுலரூபாயுஶ்ஶ்ருதவ்ருத்தவித்தஸுகமேதஸோ ஜந்ம ப்ரதிபத்யந்தே, விஷ்வஞ்சோ விபரீதா நஶ்யந்தி*" (கௌ.த.2-11-12,13)[2] இதி।

- ததா "*தத: பரிவ்ருத்தௌ கர்மபலஶேஷேண ஜாதிம் ரூபம் வர்ணம் பலம் மேதாம் ப்ரஜ்ஞாம் த்ரவ்யாணி தர்மாநுஷ்டாநமிதி ப்ரதிபத்யதே। தத் சக்ரவதுபயோர்லோகயோ: ஸுக ஏவ வர்ததே*"(ஆ.த.2-1-2-3)[3] இதி।

"*யாவத்ஸபாதம்*" இதி பலதாநப்ரவ்ருத்தகர்மவிஶேஷவிஷயம்। யத்கிஞ்சேஹ கரோத்யயம் இதீதமபி தத்விஷயமேவ। அபுக்தபலாநாமக்ருத-

வேதமானது,

✸ [1]**''அவர்களில் யாவர் திரும்பி வருகின்றனரோ, அவர்கள் ரமணீயசரணர் ஆனால், (நல்லபுண்ய செயல் உடையவரானால்), அவர்கள் ப்ராஹ்மணப் பிறப்பையோ, க்ஷத்ரியப் பிறப்பையோ, வைஶ்யப் பிறப்பையோ, நல்ல பிறப்பைப்பெறுவர்; அடுத்து, அவர்களில் யாவர் திரும்பி வருகின்றனரோ, அவர்கள் கபூயசரணர் ஆனால், (மோசமான பாப செயல் உடையவரானால்), அவர்கள்நாய் பிறப்பையோ, பன்றிப்பிறப்பையோ, சண்டாளப் பிறப்பையோ, மோசமான பிறப்பைப்பெறுவர்''**

என்று திரும்பி வருபவர் பற்றி ஓதப்படுகிறது; மேலுலகிலிருந்து திரும்பி வருபவரில், நல்ல கர்மம் உடையவர் நல்லதான ப்ராஹ்மணன் முதலிய பிறப்பை அடைவர்; மோசமான கர்மம் உடையவர் மோசமான நாய்-பன்றி-சண்டாளன் முதலிய பிறப்பைப் பெறுவர் என்று திரும்பி வருபவருக்கு புண்யபாப-கர்ம தொடர்பு இருப்பதை வேதம் காண்பிக்கிறது.

ஸ்ம்ருதியும்,-

✸ [2]**''வர்ணமும் ஆஶ்ரமங்களும் ... தன் செயலைச் செய்பவர் மரணமடைந்து கர்ம-பலனை அனுபவித்து, அதன் மிகுதியால், உயர்ந்ததான இடம், ஜாதி, குலம், உருவம், ஆயுள், படிப்பு, செல்வம், நடத்தை, சுகம், துக்கம், புத்தி உடையவராய் ஒரு பிறப்பை அடைகின்றனர்; இதற்கு எதிரானவர்கள் வேறு பலவிதமான பிறப்பில்ஆகி அழிகின்றனர்''** என்று.

✸ அப்படியே, [3]**''அங்கிருந்து திரும்பி வருகையில், கர்ம-பல மிகுதியில்,ஜாதி, உருவம், வர்ணம், பலன், மேதை, ஜ்ஞானம், த்ரவ்யம், தர்ம-அனுஷ்டானங்கள் என்றிவற்றை இப்படி அடைகிறான்; எனவே, சக்கரம் போல இரு உலகங்களிலும் சுகமாகவே இருக்கிறான்''**- என்று.

''யாவத்ஸம்பாதம் உஷித்வா'' (கர்மம் மிகுதி உள்ளவரை வசித்துவிட்டு) என்று வேதம் சொன்னது ஆனது, பலன் கொடுக்க ஆரம்பித்த விஶேஷ-கர்மம் பற்றியது; ''இங்கு இவன் எதைச் செய்கிறானோ'' என்கிற இந்த வேதவாக்யமும்

इतीदमपि तद्विषयमेव। अभुक्तफलानामकृतप्रायश्चित्तानां च कर्मणां कर्मान्तरफलानुभवान्नाशोऽप्यनुपपन्नः। अतोऽमुं लोकं गताः सानुशया एव,

यथेतमनेवं च पुनर्निवर्तन्ते; आरोहणप्रकारेण प्रकारान्तरेण च पुनर्निवर्तन्ते इत्यर्थः। आरोहणं हि धूमरात्र्यपरपक्षदक्षिणायनषण्मासपितृलोकाकाशचन्द्रक्रमेण। अवरोहणं तु चन्द्रमसः स्थानादाकाशवायुधूमाभ्रमेघक्रमेण। तत्राकाशावरोहणात् **यथेतम्**, वाय्वादिप्राप्तेः पितृलोकाद्यप्राप्तेश्चानेवम्॥८॥

* * *

२९६.चरणादिति चेन्न; तदुपलक्षणार्थेति कार्ष्णाजिनिः (३-१-९)

‘**रमणीयचरणाः**’, ‘**कपूयचरणाः**’ इति न चरणशब्देन पुण्यपापरूपं कर्माभिधीयते, चरणशब्दस्य लोकवेदयोराचारे प्रसिद्धेः। लौकिकाः खलु चरणमाचारः शीलं वृत्तमिति पर्यायान् अभिमन्यन्ते। वेदे च, ‘‘**यान्यनवद्यानि कर्माणि तानि सेवितव्यानि..यान्यस्माकं सुचरितानि तानि त्वयोपास्यानि**’’(तै.1.शी.11)[1] इति चरणकर्मणी भेदेन व्यपदिश्येते; अतः चरणात् - शीलात् योनिविशेषप्राप्तिः, नानुशयादिति चेत्, तन्न।

ப்ராயஶ்சித்தாநாம் ச கர்மணாம் கர்மாந்தரபலாநுபவாந்நாஶோऽப்யநுபபந்ந:। அத: அமும் லோகம் கதா: ஸாநுஶயா ஏவ,

யதேதமநேவம் ச புநர்நிவர்தந்தே - ஆரோஹணப்ரகாரேண ப்ரகாராந்தரேண ச புநர்நிவர்தந்தே இத்யர்த:। ஆரோஹணம் ஹி தூமராத்ர்யபரபக்ஷ-தக்ஷிணாயந-ஷண்மாஸ-பித்ருலோகாகாஶ-சந்த்ரக்ரமேண। அவரோஹணம் து சந்த்ரமஸ: ஸ்தாநாத் ஆகாஶவாயுதூமாப்ரமேகக்ரமேண। தத்ராகாஶாவரோஹணாத் யதேதம், வாய்வாதிப்ராப்தே: பித்ருலோகாத்யப்ராப்தேஶ்சாநேவம்।।8।।

* * *

296.சரணாதிதி சேந்ந ததுபலக்ஷணார்தேதி கார்ஷ்ணாஜிநி: (3-1-9)

ரமணீயசரணா:, கபூயசரணா: இதி ந சரணஶப்தேந புண்யபாபரூபம் கர்மாபிதீயதே, சரணஶப்தஸ்ய லோகவேதயோராசாரே ப்ரஸித்தே:। லௌகிகா: கலு சரணமாசார: ஶீலம் வ்ருத்தமிதி பர்யாயாந் அபிமந்யந்தே। வேதே ச, *“யாந்யநவத்யாநி கர்மாணி தாநி ஸேவிதவ்யாநி...யாந்யஸ்மாகம் ஸுசரிதாநி தாநி த்வயோபாஸ்யாநி”*(தை.1.ஶீ.11)[1] இதி சரணகர்மணீ பேதேந வ்யபதிஶ்யேதே, அத: சரணாத் - ஶீலாத் யோநிவிஶேஷப்ராப்தி:, நாநுஶயாதிதி சேத், தந்ந। சரணஶ்ருதி: கர்மோபலக்ஷணார்தேதி(ஹி) கார்ஷ்-

அதைப் பற்றியதே; பலன் அனுபவிக்கப்படாதவையும் ப்ராயச்சித்தம் செய்யப் படாதவையுமான கர்மங்கள், வேறு கர்மங்களின் பலனை அனுபவிப்பதால் அழியும் என்பதும் பொருந்தாதது

✍(இவன் பல பிறவிகளாக சேர்த்து வைத்திருக்கும் கர்ம அளவற்றது; அதற்கு ஸஞ்சித-கர்ம என்று பெயர்.; அதில் ஒரு பகுதி ஸ்வர்க்கலோகத்தில் பலன் தர ஆரம்பிக்கும்; அது ஸ்வர்க்கலோக பல-அனுபவத்துக்கான ப்ராரப்த கர்மம் ஆகும்; அது முழுதுமாக தீரும் வரை அங்கு இருப்பான்; தீர்ந்த பின்னரே அடுத்த பிறப்புக்காக இறங்குகிறான்; அப்போது மீதி இருக்கும் ஸஞ்சித கர்மத்துடன் இறங்குகிறான்; அதில் அந்த பிறப்புக்கான ப்ராரப்த-கர்மத்துக்கு ஏற்ப பிறப்பு அமைகிறது.)✍

எனவே, ஸ்வர்க்கலோகம் அடைந்தவர், கர்ம-மீதியுடன் கூடியவராகவே,

யதேதம் அநேவம் ச - ஏறிப்போனவழியிலும், வேறுவழியிலும் திரும்பி வருகின்றனர் என்று பொருள்;

மேலேறியதானது - தூமம், ராத்ரி, அபர(க்ருஷ்ண)பக்ஷம், தக்ஷிணாயன-ஆறுமாசம். பித்ருலோகம், ஆகாஶம், சந்த்ரன் என்ற முறையிலாகும்; அதில் ஆகாசத்தில் இறங்கி வருவதால், போன வழிப்படி ஆகும்; வாயு முதலியதை அடைவதாலும், பித்ருலோகம் முதலியதை அடையாததாலும் வேறு முறையிலும் ஆகும்.

◆ ◆ ◆ ◆

296. சரணாத் இதி சேத் ந தது பலக்ஷணார்த்தா இதி கார்ஷ்ணாஜினி:(3-1-9)

நடத்தையால் [நல்ல பிறவி ஆகும்] என்றால், அதல்ல; கர்மத்தையும் சேர்த்து குறிப்பது அந்த சொல் என்று கார்ஷ்ணாஜினி [கருதுகிறார்].

கேள்வி - 'ரமணீயசரணா:, கபூயசரணா:' என்று, சரணம் எனும் சொல்லால், புண்யபாபம் ஆகிற கர்மம் சொல்லப்படவில்லை; ஏனெனில், உலகிலும் வேதத்திலும் சரணம் எனும் சொல், ஆசாரம் எனும் பொருளில் ப்ரஸித்தமாய் உள்ளது; உலகத்தினர், சரணம், ஆசாரம், சீலம், வ்ருத்தம் என்று ஒரே பொருளுடைய சொற்களாக எண்ணுகின்றனர்; வேதத்திலும், **''எவை தோஷமற்ற கர்மங்களோ, அவை செய்யப்படத் தக்கவை; .... எவை எமக்கு நல்ல சரிதங்களோ அவை உன்னால் செய்யத் தக்கவை''** என்று சரணமும் கர்மமும் வேறாக சொல்லப் படுகின்றன; எனவே,

சரணாத் - சரணத்தால் - சீலத்தால்(நடத்தையால்) உயர்ந்த பிறப்பை அடைவதாகும்; கர்ம-மிகுதியால் அல்ல;

இதி சேத் - என்றால்,

பதில் -

ந - அதல்ல;

चरणश्रुतिः कर्मोपलक्षणार्थेति(हि) कार्ष्णाजिनिराचार्यो मन्यते, केवलादाचारात् सुखदुःखप्राप्त्यसम्भवात्। सुखदुःखे हि पुण्यपापरूपकर्मफले॥ ९ ॥

***

२९७.आनर्थक्यमिति चेन्न; तदपेक्षत्वात् (३-१-१०)

एवं तर्ह्यफलत्वादाचारस्य स्मृतिविहितस्यानर्थक्यमेवेति चेत्, तन्न; तदपेक्षत्वात् पुण्यस्य कर्मणः। आचारवत एव पुण्यकर्मस्वधिकारः,

- **"सन्ध्याहीनोऽशुचिर्नित्यमनर्हः सर्वकर्मसु"** (द.स्मृ.2-27)[1]
- **"आचारहीनं न पुनन्ति वेदाः"** (व.स्मृ.6-3)[2] इत्यादिवचनेभ्यः।

अतश्चरणश्रुतिः कर्मोपलक्षणार्थेति कार्ष्णाजिनेरभिप्रायः॥१०॥

***

२९८.सुकृतदुष्कृते एवेति तु बादरिः (३-१-११)

ணாஜிநிராசார்யோ மந்யதே, கேவலாதாசாராத் ஸுகதுःகப்ராப்த்யஸம்பவாத்। ஸுகதுःகே ஹி புண்யபாபருபகர்மபலே।। 9।।

***

297.ஆநர்தக்யமிதி சேந்ந ததபேக்ஷத்வாத் (3-1-10)

ஏவம் தர்ஹி அபலத்வாதாசாரஸ்ய ஸ்ம்ருதிவிஹிதஸ்ய ஆநர்தக்யமேவேதி சேத், தந்ந; *ததபேக்ஷத்வாத்* புண்யஸ்ய கர்மண:। ஆசாரவத ஏவ புண்யகர்மஸ்வதிகார:,

- *"ஸந்த்யாஹீநோऽஶுசிர்நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு"*(த.ஸ்ம்ரு2-27)[1]
- *"ஆசாரஹீநம் ந புநந்தி வேதா:"*(வ.ஸ்ம்ரு.6-3)[2] இத்யாதிவசநேப்ய:।

அதஶ்சரணஶ்ருதி: கர்மோபலக்ஷணார்தேதி கார்ஷ்ணாஜிநேரபிப்ராய:।। 10 ।।

***

298.ஸுக்ருத-துஷ்க்ருதே ஏவேதி து பாதரி: (3-1-11)

ததுபலக்ஷணார்த்தா - சரணம் என்ற சொல்லானது கர்மத்தையும் உபலக்ஷணமாகக் குறிப்பதன் பொருட்டு ஆகும்

இதி கார்ஷ்ணாஜினி: - என்று கார்ஷ்ணாஜினி ஆசார்யர் கருதுகிறார்; ஏனெனில், வெறும் ஆசாரத்தால், சுக-துக்கம் அடைதல் வராது; ஏனெனில், சுக-துக்கங்கள் புண்யபாப-கர்மங்களின் பலன்தானே! (சரணம் என்றால் ஆசாரம்; இங்கு ஆசாரத்துடன் கூடிய புண்யபாப-கர்மங்களை அந்த சொல் குறிக்கும் என்பது அவர் கருத்து).

◆ ◆ ◆ ◆

297. ஆநர்த்தக்யம் இதி சேத் ந ததபேக்ஷத்வாத் (3-1-10)

[ஆசாரத்தை சொன்னது] பலனற்றதாகி விடும் என்றால், அதல்ல;
அதன் தேவை இருப்பதால்

கேள்வி - அப்படியானால், பலன் கிடையாது என்பதால் ஸ்ம்ருதியில் சொன்ன ஆசாரத்துக்கு

ஆநர்த்தக்யம் இதி சேத் - பயனில்லாமை ஆகி விடும் என்றால்.

பதில்

ந ததபேக்ஷத்வாத் - அதல்ல; அந்த ஆசாரத்தை தேவையாகக் கொண்டு புண்யகர்ம அநுஷ்டாநம் இருப்பதால்

- [1]**‘‘ஸந்த்யா செய்யாதவன் அசுத்தமானவன் என்றும் எல்லா செயல்களிலும் தகுதியற்றவன்’’**
- [2]**‘‘ஆசாரம் அற்றவனை வேதங்கள் ஶுத்தமாக்காது’’**

முதலிய வசனங்களால், ஆசாரம் உடையவனுக்குத் தான் புண்ய கர்மங்களில் தகுதி உண்டு.

எனவே, சரணம் என்ற சொல்லானது, கர்மத்தை உபலக்ஷணமாகக் குறிப்பதன் பொருட்டு ஆகும் என கார்ஷ்ணாஜினியின் கருத்து.

◆ ◆ ◆ ◆

298. ஸுக்ருததுஷ்க்ருதே ஏவ இதி து பாதரி:(3-1-11)

[சரணம் என்பது] புண்யபாப-செயல்தான்என்று பாதரி [கருதுகிறார்]

पुण्यं कर्माचरति, पापं कर्माचरति इति कर्मणि चरतेः प्रयोगात्, पृथङ्निर्देशस्य च प्रत्यक्षश्रुतिसिद्धाऽऽचारानुमितश्रुतिसिद्धविषयत्वेन गोबलीवर्दन्यायेनोपपत्तेः,

मुख्ये सम्भवति न लक्षणा न्याय्येति सुकृतदुष्कृते एव चरणशब्दाभिधेये इति बादरिराचार्यो मन्यते। अत्र बादरिमतमेव स्वमतम्; आचारानुमितश्रुतिविहितसन्ध्यावन्दनादेः कर्मान्तराधिकारसं(रा)पादनं फलमिति तु स्वीकृतम्।

अतः सानुशया एव प्रत्यवरोहन्ति॥

इति कृतात्ययाधिकरणम्॥

புண்யம் கர்மாசரதி, பாபம் கர்மாசரதி இதி கர்மணி சரதே: ப்ரயோகாத், ப்ருதங்நிர்தேஶஸ்ய ச ப்ரத்யக்ஷஶ்ருதிஸித்தாऽऽசாராऽநுமிதஶ்ருதிஸித்தவிஷயத்வேந கோபலீவர்தந்யாயேநோபபத்தே:,

முக்யே ஸம்பவதி ந லக்ஷணா ந்யாய்யேதி ஸுக்ருததுஷ்க்ருதே ஏவ சரணஶப்தாபிதேயே இதி பாதரிராசார்யோ மந்யதே। அத்ர பாதரிமதமேவ ஸ்வமதம்; ஆசாராநுமிதஶ்ருதிவிஹிதஸந்த்யாவந்தநாதே: கர்மாந்தராதிகாரஸம்(ரா)பாதநம் பலமிதி து ஸ்வீக்ருதம்।

அத: ஸாநுஶயா ஏவ ப்ரத்யவரோஹந்தி।।

இதி க்ருதாத்யயாதிகரணம்।।

* * *

புண்யகர்மாவை ஆசரணம் செய்கிறான், பாபகர்மாவை ஆசரணம் செய்கிறான்’ என்று ஆசாரம் எனும் சொல், கர்மாவைக் குறிப்பதாக வழக்கில் சொல்வதுண்டு; வேதத்தில் ‘கர்மம்’ என்றும் ‘சரணம்’ என்றும் தனியாகக் குறிப்பிட்டதானது, வேதத்தில் நேராகத் தெரிய வரும் கர்மம் பற்றியும், அனுஷ்டானத்தை வைத்து வேதத்தில் இருப்பதாக ஊகிக்கப் படும் கர்மம் பற்றியுமாக ஆகும்; மாடு-எருது எனும் முறையில் இது சரியாகும்.

முக்யமான நேர்ப்பொருள் வரும்போது, வேறு பொருளைக் குறிப்பதாக லக்ஷணா சொல்வது முறையல்ல; எனவே‘சரணம்’ என்ற சொல்லுக்கு புண்யபாபங்கள்தாம் பொருள் என்று பாதரி ஆசார்யர் கருதுகிறார்.

இங்கு பாதரியின் கருத்துதான், (வ்யாஸ-பகவானின்) சொந்தக் கருத்து ஆகும்; அனுஷ்டானம்இருப்பதால், வேதத்தில் விதிக்கப்பட்டு இருப்பதாக ஊகிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனம் முதலியதற்கு, பிற கர்மங்களுக்கான தகுதியை உண்டாக்குதலே பலன் என்பதோ ஏற்கப் படுகிறது.

✍*(விரிவாக பின் இணைப்பில் ஆசாரம்-கர்மம் எனும் கட்டுரையில் காண்க).*✍

ப்ரயோஜனம்(அதிகரண-பயன்)

எனவே, கர்ம-மிகுதியுடன் கூடியவராகவே திரும்பி இறங்குகின்றனர்.

* * *

க்ருதாத்யயாதிகரணம் முற்றிற்று

* * *

71. அநிஷ்டாதிகார்யதிகரணம் (3-1-3)

முன் குறிப்பு

இஷ்டம் என்றால் யாகம்; இஷ்டாதி என்றால் - யாகம், பூர்த்தம் (குளம் தோண்டுதல் முதலிய போது நற்பணி), தானம் ஆகியவை.

இவற்றை செய்பவர்கள் இஷ்டாதிகாரிகள்;

இவற்றை செய்யாமல் பாபம் மட்டும் செய்பவர்கள் அநிஷ்டாதிகாரிகள் எனப்படுவர்.

அவர்கள் ஸ்வர்க்க லோகத்துக்கு போவதில்லை; அவர்கள் சந்த்ரனையும் அடைவதில்லை.

எல்லாரும் சந்த்ரனிடம் போகிறார்கள் என்று வேதம் சொல்கிறது; புண்யசாலிகள் எல்லாரும் போகிறார்கள் என்று கருத்து. இவர்கள் போவதில்லை.

இவர்கள் போகும் இடம் நரகம் ஆகும்.

எனவே, மறுபிறவியிலும், பிறர் பிறப்பது போல, பஞ்சமாஹுதி மூலம் (ஆண்-பெண் மூலம்) பிறப்பதும் இல்லை; புழு பூச்சிகள் போல பிறந்து விடுவர்.

வேதத்தில் மூன்று வகுப்புகளாக மனிதர்களைப்பிரித்து, அவர்களுக்கு மார்க்கங்களைச் சொல்கிறது -

1. ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர் - இவர்களுக்கு தேவயானமார்க்கம்; அர்ச்சிராதி மார்க்கம் என்பர்; இதன் வழியாக பரமபதம் செல்வர்; மறுபிறவி இல்லாமல் அங்கேயே ப்ரஹ்ம-அனுபவம் பெற்று இருப்பர்.
2. யாகம், பூர்த்தம், தானம்முதலிய புண்யகர்மம் செய்பவர்- இவர்களுக்கு பித்ருயான மார்க்கம்; தூமாதிமார்க்கம் என்பர்; இந்த வழியில் சென்று சந்த்ரனை அடைவர்; ஸ்வர்க்கத்தில் சுகம் அனுபவித்து, பின்னர் மீண்டும் பிறப்பர்.
3. ஜ்ஞானம், கர்மம் இரண்டும் செய்யாதவர், பாபம் மட்டும் செய்பவர் - இவர்களுக்கு முன் சொன்ன இரு வழிகளும் கிடையாது; ஸ்வர்க்கத்துக்கும் போக மாட்டார்கள்; நரகம் செல்வர்; பின் இங்கேயே புழு பூச்சிகளாக பிறப்பு-இறப்பு என்று அலைந்து கொண்டிருப்பர்.

இதில் நரகலோகம் பற்றி பூர்வபக்ஷ-ஸூத்ரங்களில் சொன்ன கருத்துகளில் மாற்று கருத்து இல்லை. ஆனால், எல்லாரும் ஸ்வர்க்கம் போவார்கள் என்பது கிடையாது; புண்யமே செய்யாதவர் ஸ்வர்க்கம் போக வாய்ப்பில்லை; பாபமே செய்யாதவர் நரகம் போக வாய்ப்பில்லை; புழு பூச்சிகள் இங்கேயே பிறப்பு-இறப்பு என்று அலையும்; பகவத் பக்தர்கள் நரகம் போவதில்லை; ப்ரஹ்ம-ஜ்ஞானிகள் ஸ்வர்க்கமும் போகாமல், பரமபதம் செல்வர்.

७१.अनिष्टादिकार्यधिकरणम् (३-१-३)

२९९.अनिष्टादिकारिणामपि च श्रुतम् (३-१-१२)

केवलेष्टापूर्तदत्तकारिणः चन्द्रमसं गत्वा सानुशया एव निवर्तन्त इत्युक्तम्, इदानीमनिष्टादिकारिणोऽपि चन्द्रमसं गच्छन्ति, नेति चिन्त्यते। ये विहितं न कुर्वन्ति, निषिद्धं च कुर्वन्ति, ते उभयेऽपि पापकर्माणोऽनिष्टादिकारिणः।

किं युक्तम्? तेऽपि चन्द्रमसं गच्छन्तीति। कुतः? तेषामपि हि तद्गमनं श्रुतम् **''ये वै के चास्माल्लोकात् प्रयन्ति, चन्द्रमसमेव ते सर्वे गच्छन्ति''**(कौ.1-9)[1] इत्यविशेषेण सर्वेषामेव गतिश्रवणात्॥१२॥

* * *

एवं तर्हि सुकृतदुष्कृतकारिणोरुभयोरप्यविशिष्टैव गतिः स्यात्; नेत्याह -

३००.संयमने त्वनुभूयेतरेषामारोहावरोहौ तद्गतिदर्शनात् (३-१-१३)

तुशब्दः शङ्कां व्यावर्तयति। **इतरेषाम्** - अनिष्टादिकारिणां **चन्द्रारोहावरोहौ संयमने**

---

71. அநிஷ்டாதிகார்யதிகரணம் (3-1-3)

299.அநிஷ்டாதிகாரிணாமபி ச ஶ்ருதம் (3-1-12)

கேவலேஷ்டாபூர்தத்தகாரிண: சந்த்ரமஸம் கத்வா ஸாநுஶயா ஏவ நிவர்தந்த இத்யுக்தம், இதாநீமநிஷ்டாதிகாரிணோऽபி சந்த்ரமஸம் கச்சந்தி, நேதி சிந்த்யதே। யே விஹிதம் ந குர்வந்தி, நிஷித்தம் ச குர்வந்தி – தே உபயேऽபி பாபகர்மாணோऽநிஷ்டாதிகாரிண:।

கிம் யுக்தம்? தேऽபி சந்த்ரமஸம் கச்சந்தீதி। குத:? தேஷாமபி ஹி தத்கமநம் ஶ்ருதம் *“யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி, சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி”*(கௌ.1-9)[1] இதி அவிஶேஷேண ஸர்வேஷாமேவ கதிஶ்ரவணாத்।। 12 ।।

* * *

ஏவம் தர்ஹி ஸுக்ருதது‌ஷ்க்ருதகாரிணோருபயோரப்யவிஶிஷ்டைவ கதி: ஸ்யாத், நேத்யாஹ–

300.ஸம்யமநே த்வநுபூயேதரேஷாமாரோஹாவரோஹௌ தத்கதிதர்ஶநாத்(3-1-13)

துஶப்த: ஶங்காம் வ்யாவர்தயதி। ***இதரேஷாம்*** - அநிஷ்டாதிகாரிணாம்

71.அநிஷ்டாதிகார்யதிகரணம் (3-1-3)

299. அநிஷ்டாதிகாரிணாம் அபி ச ஶ்ருதம் (ஸூ)(3-1-12)

அநிஷ்டாதிகாரிகளுக்கும் [சந்த்ரனை அடைதல்] ஓதப்பட்டது

ஸங்கதி (விஷய தொடர்பு)&ஸந்தேஹம்

(பரமபுருஷனுடைய ஆராதனமாக அல்லாமல்) வெறும் இஷ்டம், பூர்த்தம், தானம் செய்பவர் சந்த்ரனை அடைந்து எஞ்சிய கர்மத்துடன் கூடியவராய் திரும்புகின்றனர் என்று சொல்லியாயிற்று; இப்போது அநிஷ்டாதிகாரிகளும் கூட சந்த்ரனைச் சென்று அடைகின்றனரா? இல்லையா? என்று விசாரிக்கப் படுகிறது.

யார் விதிக்கப்பட்ட கர்மத்தை செய்வதில்லையோ, மேலும் யார் விலக்கப்பட்டதைச் செய்கின்றனரோ, அவர்கள் இருவருமான பாபச் செயலைச் செய்பவர்கள் அநிஷ்டாதிகாரிகள் ஆவர்.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? அவர்களும் சந்த்ரனைச் சென்றடைகின்றனர் என்பது;

ஏன்?

அவர்களுக்கும் அந்த சந்த்ரனிடம் போவது வேதத்தில் சொல்லப் பட்டது; ஏனெனில், [1]**''யார் இந்த உலகிலிருந்து மரணம் அடைந்து செல்கின்றனரோ, அவர்கள் எல்லாரும் சந்த்ரனையே சென்றடைகின்றனர்''** என்று வேறுபாடு இல்லாமல், எல்லாரும் போவதை வேதம் சொல்கிறது.

◆ ◆ ◆ ◆

கேள்வி - அப்படியானால் (எல்லாரும் சந்த்ரனுக்குப் போவதானால்), புண்யம் செய்தவர், பாபம் செய்தவர் எனும் இருவருக்கும் வேறுபாடு இல்லாமல் எல்லாருக்கும் ஒரே கதி ஆகிவிடும்.

பதில் - அப்படிக் கிடையாது என்கிறார் -

300. ஸம்யமனே து அநுபூய இதரேஷாம் ஆரோஹாவரோஹௌ தத்கதிதர்ஶநாத் (ஸூ) (3-1-13)

மற்றவருக்கு[அநிஷ்டாதி-காரிகளுக்கு சந்த்ரனிடம்] ஏறுவதும் இறங்குவதும்,யமனது கட்டளையில், அநுபவித்த பின்னரே ஆகும்; அவனிடம் செல்வதை வேதம் சொல்வதால்

'து' என்ற சொல்லானது கேள்வியைக் களைகிறது.

यमशासने तत्प्रयुक्तयातनाः अनुभूयैव; नान्यथा। कुतः? तद्गतिदर्शनात्। दृश्यते हि पापकर्मणां यमवश्यतया तद्गमनम्,

- **''अयं लोको नास्ति (न) पर इति मानी पुनःपुनर्वशमापद्यते मे''**(क.2-6)[1]
- **''वैवस्वतं सङ्गमनं जनानां यमं राजानम्''**(तै.आर.द्रा.4-1-1)[2] इत्यादिषु॥१३॥

३०१.स्मरन्ति च (३-१-१४)

स्मरन्ति च सर्वेषां यमवश्यतां पराशरादयः,**''सर्वे चैते वशं यान्ति यमस्य भगवन् किल''**(वि.पु.3-7-5)[3] इत्यादिषु॥ १४ ॥

३०२.अपि सप्त (३-१-१५)

पापकर्मणां गन्तव्यत्वेन रौरवादीन् सप्त नरकानपि स्मरन्ति ॥ १५ ॥

* * *

ननु सप्तसु लोकेषु गच्छतां कथं यमसदनप्राप्तिः? अत आह -

சந்த்ராரோஹவாரோஹௌ ஸம்யமநே யமஶாஸநே தத்ப்ரயுக்தயாதநா: அநுபூயைவ நாந்யதா। குத:? *தத்கதிதர்ஶநாத்।* த்ருஶ்யதே ஹி பாபகர்மணாம் யமவஶ்யதயா தத்கமநம்,

- *''அயம் லோகோ நாஸ்தி (ந) பர இதி மாநீ புந:புநர்வஶமாபத்யதே மே''*(க.2-6)[1]
- *''வைவஸ்வதம் ஸங்கமநம் ஜநாநாம் யமம் ராஜாநம்''*(தை.ஆர.த்ரா.4-1-1)[2] இத்யாதிஷு।।13।।

301.ஸ்மரந்தி ச (3-1-14)

ஸ்மரந்தி ச ஸர்வேஷாம் யமவஶ்யதாம் பராஶராதய:, *''ஸர்வே சைதே வஶம் யாந்தி யமஸ்ய பகவந் கில''*(வி.பு.3-7-5)[3] இத்யாதிஷு।। 14 ।।

302.அபி ஸப்த(3-1-15)

பாபகர்மணாம் கந்தவ்யத்வேந ரௌரவாதீந் ஸப்த நரகாநபி ஸ்மரந்தி।।15।।

* * *

நநு ஸப்தஸு லோகேஷு கச்சதாம் கதம் யமஸதநப்ராப்தி: அத ஆஹ-

இதரேஷாம் - மற்றவரான அநிஷ்டாதிகாரிகளுக்கு

ஆரோஹாவரோஹௌ - (சந்த்ரனிடம்) ஏறுவதும் இறங்குவதும்,

ஸம்யமனே - யமனது கட்டளையில், அதனால் வரும் துக்கங்களை

அநுபூய - அனுபவித்த பின்னரே ஆகும்; வேறு முறையில் அல்ல.

ஏன்?

தத்கதிதர்ஶநாத் - அவனிடம் செல்வதை வேதம் சொல்வதால்.

பாபம் செய்தவர்கள், யமனுக்கு வசப்பட்டவராய் அங்கே செல்லுதல் ஆனது,

- [1]**''இவ்வுகம் உண்டு மேலுலகம் இல்லை என்று கர்வம் பிடித்தவன் மீண்டும் மீண்டும் என் வசத்தை அடைகிறான்''** (யமனுடைய வசனம்),
- [2]**''ஸூர்யபுத்ரனும் மக்கள் சென்று சேரும் இடமானவனும் ஆன யமராஜனை''**

முதலியவற்றில் காணப்படுகிறது.

◆ ◆ ◆ ◆

301. ஸ்மரந்தி ச (பூ)(3-1-14)

ஸ்ம்ருதியில் சொல்கின்றனர் என்பதும்.

எல்லாரும் யமனுக்கு வசப் பட்டவர் என்பதை பராசரர் முதலியவர்கள் ஸ்ம்ருதியில் சொல்லி வைத்தனர், [3]**''பகவானே, எல்லாரும் யமனுடைய வசத்தை அடைகின்றனர்தாமே!''** என்று.

◆ ◆ ◆ ◆

302. அபி ஸப்த (பூ)- (3-1-15)

ஏழு நரகங்களை சொல்கின்றனர் என்பதும்.

பாபம் செய்தவர்கள் போக வேண்டிய இடமாக ரௌரவம் முதலிய ஏழு நரகங்களையும் ஸ்ம்ருதியில் சொல்கின்றனர்.

(முக்யமானது நரக லோகங்கள் ஏழு உள்ளன; அவற்றின் உட்பிரிகளாக அநேக பெயர்களில் பலவிதங்களான நரகங்கள் உள்ளன)

◆ ◆ ◆ ◆

கேள்வி - ஏழு உலகங்களில் செல்பவர் எப்படி யமனது இடத்தை அடைந்ததாகும்?

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

३०३.तत्रापि तद्व्यापारादविरोधः (३-१-१६)

तेष्वपि सप्तसु यमाज्ञयैव गमनादविरोधः॥ १६ ॥

अतोऽनिष्टादिकारिणामपि यमलोकं प्राप्य स्वकर्मानुरूपं यातनाश्चानुभूय पश्चाच्चन्द्रारोहावरोहौ स्तः

* * *

इति प्राप्ते उच्यते -

३०४.विद्याकर्मणोरिति तु प्रकृतत्वात् (३-१-१७)

तुशब्दः पक्षव्यावृत्त्यर्थः। अनिष्टादिकारिणामपि चन्द्रप्राप्तिरस्तीत्येतन्नोपपद्यते। कुतः? **विद्याकर्मणोरिति।** विद्याकर्मणोः फलभोगार्थत्वात् देवयानपितृयाणयोः।

एतदुक्तं भवति - अनिष्टादिकारिणां यथा विद्याविधुरत्वात् देवयानेन पथा गमनं न सम्भवति; तद्वदेवेष्टापूर्तदत्तविधुरत्वात् पितृयाणेन चन्द्रगमनमपि न सम्भवति इति।

देवयानपितृयाणयोः विद्याविषयत्वं पुण्यकर्मविषयत्वं च कथमवगम्यत इति चेत्, **प्रकृतत्वात्** तयोः। प्रकृता हि देवयाने विद्या; पितृयाणे च कर्म,

303.தத்ராபி தத்வ்யாபாராதவிரோத:(3-1-16)

தேஷ்வபி ஸப்தஸு யமாஜ்ஞயைவ கமநாதவிரோத:।। 16 ।।

அத: அநிஷ்டாதிகாரிணாமபி யமலோகம் ப்ராப்ய ஸ்வகர்மாநுரூப யாதநாஶ்ச அநுபூய பஶ்சாச்சந்த்ராரோஹாவரோஹௌ ஸ்த:

* * *

இதி ப்ராப்தே உச்யதே-

304.வித்யாகர்மணோரிதி து ப்ரக்ருதத்வாத் (3-1-17)

துஶப்த: பக்ஷவ்யாவ்ருத்த்யர்த:। அநிஷ்டாதிகாரிணாமபி சந்த்ரப்ராப்திரஸ்தீத்யேதந்நோபபத்யதே। குத:? *வித்யாகர்மணோரிதி।* வித்யாகர்மணோ: பலபோகார்தத்வாத் தேவயாநபித்ருயாணயோ:।

ஏததுக்தம் பவதி - அநிஷ்டாதிகாரிணாம் யதா வித்யாவிதுரத்வாத் தேவயாநேந பதா கமநம் ந ஸம்பவதி, தத்வதேவ இஷ்டாபூர்த-தத்த-விதுரத்வாத் பித்ருயாணேந சந்த்ரகமநமபி ந ஸம்பவதி - இதி।

தேவயாநபித்ருயாணயோ: வித்யாவிஷயத்வம் புண்யகர்மவிஷயத்வம் ச கதமவகம்யத இதி சேத் - ப்ரக்ருதத்வாத் தயோ:। ப்ரக்ருதா ஹி தேவயாநே வித்யா, பித்ருயாணே ச கர்ம,

303.(பூ) தத்ராபி தத்வ்யாபாராத் அவிரோத: (3-1-16)

அங்கும் அவனது செயலே ஆவதால், முரண்பாடு இல்லை.

அந்த ஏழிலும் கூட யமனது கட்டளையாலேயே போவதால், முரண்பாடு இல்லை.

எனவே, அநிஷ்டாதிகாரிகளுக்கும் கூட யமலோகத்தை அடைந்து தமது கர்மாவுக்கு ஏற்ப துக்கங்களை அனுபவித்து, பின்னர் சந்த்ரனிடம் ஏறிப் போவதும் இறங்கி வருவதும் உண்டு.

◆ ◆ ◆ ◆

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது -

304. வித்யாகர்மணோ: இதி து ப்ரக்ருதத்வாத் (3-1-17)

சொல்லப்பட்டு வருவதால், வித்யை, கர்மம் ஆகியவை பற்றி [தேவயான-பித்ருயான வழிகள்]ஆவதால்.

'து' என்ற சொல்லானது பூர்வபக்ஷத்தைக் களைகிறது.

அநிஷ்டாதிகாரிகளுக்கும் கூட சந்த்ரனை அடைதல் என்பது உண்டு என்னும் இது சரியாகாது.

ஏன்?

வித்யாகர்மணோ: இதி (வித்யை, கர்மம் ஆகியவற்றினுடையது என்பதால்) - ப்ரஹ்மவித்யை, கர்மம் ஆகியவற்றின் பலனை அனுபவிப்பதன் பொருட்டு தேவயான-பித்ருயான-வழிகள் ஆவதால்.

இது சொன்னதாக ஆகிறது - அநிஷ்டாதிகாரிகளுக்கு ப்ரஹ்மவித்யை இல்லாததால்தேவயானவழியில் செல்வது கிடையாது என்பது எப்படியோ, அதேபோலவே, அவர்களுக்கு இஷ்டமும் பூர்த்தமும் தானமும் இல்லாதபடியால், பித்ருயான வழியால் சந்த்ரனை அடைதலும் வராது.

கேள்வி - தேவயான பித்ருயான வழிகள், வித்யையின் பலனாகவும், புண்யகர்மத்தின் பலனாகவும் ஆவது எப்படித் தெரிய வருகிறது என்றால்,

பதில் -

ப்ரக்ருதத்வாத் - அவை ஆரம்பித்து சொல்லப்பட்டு வருகிறபடியால்; தேவயானத்தில் வித்யையும், பித்ருயானத்தில் கர்மமும் சொல்ல ஆரம்பிக்கப்பட்டு சொல்லப்பட்டு வருகிறதுதானே!

- **‘‘तद्य इत्थं विदुः ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते’’**(छा.5-10-1)[1] इत्युक्त्वा, **‘‘तेऽर्चिषमभिसम्भवन्त्यर्चिषोऽहः’’**(छा.5-10-1)[2] इत्यादिना देवयानवचनात्,
- **‘‘अथ य इमे ग्रामे इष्टापूर्ते दत्तमित्युपासते’’**(छा.5-10-3)[3] इत्युक्त्वा, **‘‘ते धूममभिसम्भवन्ति’’**(छा.5-10-3)[4] इत्यादिना पितृयाणवचनाच्च।

‘‘ये वै के चास्माल्लोकात् प्रयन्ति, चन्द्रमसमेव ते सर्वे गच्छन्ति’’(कौ.1-9)[5] इत्येतदपि वचनम्, ‘ये इष्टादिकारिणः, ते सर्वे’ इति परिणेयम्॥ १७ ॥

* * *

ननु पापकर्मणां चन्द्रगमनाभावे पञ्चमाहुत्यसम्भवात् शरीरारम्भ एव नोपपद्यते। **‘‘पञ्चम्यामाहुतावापः पुरुषवचसो भवन्ति’’**(छा.5-9-1)[6] इति हि शरीरारम्भः श्रूयते। सा चाऽऽहुतिश्चन्द्रप्राप्तिपूर्विकैवेति दर्शितम्। अतः शरीरारम्भायैव तेषामपि चन्द्रारोहावरोहौ अवश्याभ्युपेत्यावित्यत आह -

३०५.न तृतीये तथोपलब्धेः (३-१-१८)

तृतीय(स्य) स्थानस्य शरीरारम्भाय न पञ्चमाहुत्यपेक्षा। कुतः? **तथोपलब्धेः।** तृतीयस्थानशब्देन केवलपापकर्माण उच्यन्ते, तेषां देहारम्भे पञ्चमाहुत्यनपेक्षत्वमुपलभ्यते।

- *‘‘தத்ய இத்தம் விதுः யே சேமே, அரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே’’*(சா.5-10-1)[1] இத்யுக்த்வா, *‘‘தேऽர்சிஷமபிஸம்பவந்த்யர்சிஷோऽஹः’’*(சா.5-10-1)[2] இத்யாதிநா தேவயாநவசநாத்,
- *‘‘அத ய இமே க்ராமே இஷ்டாபூர்தே* **தத்தமித்யுபாஸதே**’’ (சா.5-10-3)[3] இத்யுக்த்வா, *‘‘தே* **தூ***மமபிஸம்பவந்தி’’*(சா.5-10-13)[4] இத்யாதிநா பித்ருயாணவசநாச்ச।

‘‘யே வை கே சாஸ்மால்லோகாத் ப்ரயந்தி, சந்த்ரமஸமேவ தே ஸர்வே கச்சந்தி’’(கௌ.1-9)[5] இத்யேததபி வசநம், யே இஷ்டாதிகாரிண:, தே ஸர்வே இதி பரிணேயம்॥ 17 ॥

* * *

நநு பாபகர்மணாம் சந்த்ரகமநாபாவே பஞ்சமாஹுத்யஸம்பவாத் ஶரீராம்ப ஏவ நோபபத்யதே। *‘‘பஞ்சம்யாமாஹுதாவாபः புருஷவசஸோ பவந்தி’’* (சா.5-9-1)[6] இதி ஹி ஶரீராரம்பः ஶ்ரூயதே। ஸா சாऽऽஹுதி: சந்த்ரப்ராப்திபூர்விகைவேதி தர்ஶிதம்। அத: ஶரீராரம்பாயைவ தேஷாமபி சந்த்ராரோஹாவரோஹௌ அவஶ்யாப்யுபேத்யௌ இத்யத ஆஹ-

305.ந த்ருதீயே ததோபலப்தே: (3-1-18)

த்ருதீய(ஸ்ய) ஸ்தாநஸ்ய ஶரீராரம்பாய ந பஞ்சமாஹுத்யபேக்ஷா। குத:? *ததோபலப்தே:।* த்ருதீயஸ்தாநஶப்தேந கேவலபாபகர்மாண உச்யந்தே,

- [1]**''யார் இந்த ஜீவனை இப்படி உபாஸனம் செய்கின்றனரோ, மேலும் யார் காட்டில் ஶ்ரத்தையை முன்னிட்டு ப்ரஹ்மத்தை உபாஸனம் செய்கின்றனரோ''** என்று சொல்லி, [2]**''அவர்கள் அர்சிஷ்ஷை அடைகின்றனர்; அர்சிஷ்ஷிலிருந்து பகல்தேவனை''** முதலியதால் தேவயானத்தை சொல்கிறது.
- [3]**''யார் கிராமத்தில் இஷ்டம் பூர்த்தம் தானம் என்று நன்கு செய்கின்றனரோ''** என்று சொல்லி, [4]**''அவர்கள் தூமத்தை அடைகின்றனர்''** முதலியதால் பித்ருயானத்தைச் சொல்கிறது.

[5]**''யார் இந்த உலகில் மரணமாகி போகின்றனரோ, அவர்கள் எல்லாரும் சந்த்ரனிடமே போகின்றனர்''** என்னும் இந்த வசனமும், ''இஷ்டம்(யாகம்) முதலியதைச் செய்பவராக யார் உண்டோ, அவர்கள் எல்லாரும் என்று பொருத்திக் கொள்ளப் பட வேண்டும்.

◆ ◆ ◆ ◆

கேள்வி - பாபம் செய்தவர்கள் சந்த்ரனை அடைவதில்லை என்று சொன்னால், அவர்களுக்கு ஐந்தாவது ஆஹூதி கிடையாதானபடியால், (அடுத்த பிறப்பில்) ஶரீரம் உண்டாவதே வர முடியாது; [6]**''ஐந்தாவது ஆஹூதியில் ஜலமானது 'புருஷன்' என்ற பெயருக்கு ஏற்றதாக ஆகிறது''** என்றுதானே ஶரீரம் உண்டாவது வேதத்தில் சொல்லப் பட்டது! அந்த ஐந்தாவது ஆஹூதியானது சந்த்ரனை முன்னிட்டே ஆகும் என்றும் காண்பிக்கப் பட்டது; எனவே, ஶரீரம் உண்டாவதற்காகவே, அவர்களுக்கும் சந்திரனிடம் ஏறிப் போதலும், இறங்கி வருவதும் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும் - என்று.

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

305. ந த்ருதீயே ததா உபலப்தே:(3-1-18)

மூன்றாவது இடத்தில் [ஆஹூதி தேவை] இல்லை; அப்படி காண்பதால்.

த்ருதீயே - மூன்றாவது இடத்தில், (மூன்றாவது வகுப்பில்)

ந - ஐந்தாவது ஆஹூதி தேவையில்லை.

ஏன்?

ததா உபலப்தே: - அப்படிக் காண்பதால்.

மூன்றாவது இடம் என்ற சொல்லால், வெறும் பாபச் செயலைச் செய்தவர் சொல்லப் படுகின்றனர்; அவர்களுக்கு ஶரீரம் உண்டாவதில் ஐந்தாவது ஆஹூதி தேவை-

‘‘**वेत्थ यथा केनासौ लोको न सम्पूर्यते**’’(छा.5-3-3)[1] इत्यस्य प्रश्नस्य प्रतिवचने, ‘‘**अथैतयोः पथोर्न कतरेण चन, तानीमानि क्षुद्राण्यसकृदावर्तीनि भूतानि भवन्ति जायस्वम्रियस्वेति। एतत् तृतीयं स्थानम्। तेनासौ लोको न सम्पूर्यते**’’(छा.5-10-8)[2] इति तृतीयस्थानस्य द्युलोकारोहावरोहाभावेन द्युलोकासम्पूर्तिवचनादस्य तृतीयस्थानस्य शरीरारम्भाय न पञ्चमाहुत्यपेक्षा। ‘‘**पञ्चम्यामाहुतौ**’’(छा.6-3-1)[3] इति च अपां पञ्चमाग्निसम्बन्धस्य पुरुषवचस्त्वहेतुत्वमात्रं प्रतिपादयति ; नान्यन्निवारयति, अवधारणाश्रवणात्॥१८॥

* * *

३०६.स्मर्यतेऽपि च लोके (३-१-१९)

पुण्यकर्मणामपि केषाञ्चित् पञ्चमाहुत्यनपेक्षया देहारम्भो लोके स्मर्यते द्रौपदीधृष्टद्युम्नप्रभृतीनाम्॥ १९ ॥

* * *

३०७.दर्शनाच्च (३-१-२०)

தேஷாம் தேஹாரம்பே பஞ்சமாஹுத்யநபேக்ஷத்வமுபலப்யதே। *‘‘வேத்த யதா கேநாஸௌ லோகோ ந ஸம்பூர்யதே’’*(சா.5-3-3)[1] இத்யஸ்ய ப்ரஶ்நஸ்ய ப்ரதிவசநே, *‘‘அதைதயோஃ பதோர்ந கதரேண சந, தாநீமாநி க்ஷுத்ராண்யஸக்ருதாவர்தீநி பூதாநி பவந்தி ஜாயஸ்வ ம்ரியஸ்வேதி। ஏதத்த்ருதீயம் ஸ்தாநம்। தேநாஸௌ லோகோ ந ஸம்பூர்யதே’’*(சா.5-10-8)[2] இதி த்ருதீயஸ்தாநஸ்ய த்யுலோகாரோஹாவரோஹாபாவேந த்யுலோகாஸம்பூர்திவசநாதஸ்ய த்ருதீயஸ்தாநஸ்ய ஶரீராரம்பாய ந பஞ்சமாஹுத்யபேக்ஷா। *‘‘பஞ்சம்யாமாஹுதௌ’’*(சா.6-3-1)[3] இதி ச அபாம் பஞ்சமாக்நிஸம்பந்தஸ்ய புருஷவசஸ்த்வஹேதுத்வமாத்ரம் ப்ரதிபாதயதி, நாந்யந்நிவாரயதி, அவதாரணாஶ்ரவணாத்।। 18 ।।

* * *

306.ஸ்மர்யதேऽபி ச லோகே (3-1-19)

புண்யகர்மணாமபி கேஷாஞ்சித் பஞ்சமாஹுத்யநபேக்ஷயா தேஹாரம்பஃ லோகே ஸ்மர்யதே த்ரௌபதீ-த்ருஷ்டத்யும்நப்ரப்ருதீநாம்।। 19 ।।

* * *

307.தர்ஶநாச்ச (3-1-20)

யில்லை என்பது வேதத்தில் காணப்படுகிறது; [1]**“யாரால் ஸ்வர்க்க-உலகம் அடையப் படுவதில்லை, தெரியுமா?”** என்ற கேள்விக்கு பதிலில், [2]**“இந்த இரு வழிகளில் எந்த ஒன்றாலும் போகாதவர், (ப்ரஹ்மவித்யையோ, கர்ம-அனுஷ்டானமோ இல்லாதவர்) பல தடவை திரும்பிப் பிறக்கக் கூடிய இந்த அல்ப ஜந்துக்களாக மீண்டும் மீண்டும் பிறக்கின்றன - இறக்கின்றனவாக ஆகின்றன; இவர்கள்தாம் மூன்றாவது இடம்(பிரிவு)ஆவர்; இவரால் ஸ்வர்க்க உலகம் அடையப் படுவதில்லை”** என்று மூன்றாவது வகுப்பு ஆகிறவர் ஸ்வர்க்க லோகத்தை ஏறி இறங்குவதில்லை என்பதால், ஸ்வர்க்க லோகத்தை அடைவதில்லை என்று சொல்கிறது; அதனால்,இந்த மூன்றாவது இடத்துக்கு ஶரீரம் உண்டாவதற்காக ஐந்தாவது ஆஹூதி தேவையில்லை.

[3]**“ஐந்தாவது ஆஹூதியில் (ஜலமானது, புருஷன் என்ற பெயர் சொல்ல ஏற்றதாக ஆகும்)”** என்று சொன்னது, ஜலத்துக்கு வரும் ஐந்தாவதான அக்னி-தொடர்பானது, புருஷன் என்ற பெயருக்குக் காரணம் ஆகும் என்பதை மட்டும் சொல்கிறது; மற்றொன்றை மறுப்பதில்லை; ஏனெனில், ‘‘ஐந்தாவது ஆஹூதியில் மட்டுமே’ என்று அவதாரணம் சொல்லவில்லை; அதனால், மற்ற காரணமும் ஆகும்.

✍(முதல் வகுப்பு - ப்ரஹ்மஜ்ஞானம் பெற்றவர்; இரண்டாவது வகுப்பு - யாகம் முதலிய கர்மம் செய்பவர்; மூன்றாவது வகுப்பு - முன் சொன்ன இரண்டும் செய்யாதவர்; பாபமே செய்பவர்; அவர்கள் புழு பூச்சிகளாகப் பிறப்பர்; அப்படி பிறப்பதற்கு முன் சொன்ன ஐந்தாவது ஆஹூதி தேவையில்லை)✍

◆ ◆ ◆ ◆

306. ஸ்மர்யதே அபி ச லோகே (3-1-19)

உலகில் எண்ணப்படுகிறது என்பதும் கூட

புண்யம் செய்தவரான த்ரௌபதீ, த்ருஷ்டத்யும்னன் முதலிய சிலருக்கும் கூட ஐந்தாவது ஆஹூதியின் தேவை இல்லாமலேயே ஶரீரம் உண்டாவது உலகில் எண்ணப் படுகிறது.

◆ ◆ ◆ ◆

307. தர்ஶநாத் ச (3-1-20)

வேதத்தில் காண்பதாலும்.

श्रुतावपि दृश्यते केषाञ्चित् पञ्चमाहुत्यनपेक्षया देहारम्भः, **‘‘तेषां खल्वेषां भूतानां त्रीण्येव बीजानि भवन्ति आण्डजं जीवजमुद्भिज्जम्’’**(छा.6-3-1)[1] इति। एषु उद्भिज्ज-स्वेदजयोः भूतयोः पञ्चमाहुतिमन्तरेणोत्पत्तिर्दृश्यते॥ २० ॥

◆

ननु स्वेदजानामत्र न सङ्कीर्तनमस्ति, ‘त्रीण्येव बीजानि’ इति वचनात्, तत्राह -

३०८.तृतीयशब्दावरोधः संशोकजस्य (३-१-२१)

संशोकजस्य - स्वेदजस्यापि, **‘‘आण्डजं जीवजमुद्भिज्जम्’’**(छा.6-3-1)[2] इत्यत्र तृतीयेनोद्भिज्जशब्देनावरोधः - सङ्ग्रहो विद्यत इत्यर्थः।

अतः केवलपापकर्मणां चन्द्रप्राप्तिर्न सम्भवति॥२१॥

इति अनिष्टादिकार्यधिकरणम् ॥ ३ ॥

ஶ்ருதாவபி **த்ருஶ்யதே** கேஷாஞ்சித் பஞ்சமாஹுத்யநபேக்ஷயா தேஹாரம்ப:, *‘‘தேஷாம் கல்வேஷாம்* **பூ***தாநாம் த்ரீண்யேவ* **பீ***ஜாநி* **ப***வந்தி, ஆண்டஜம் ஜீவஸமுத்***பி***ஜ்ஜம்’’*(சா.6-3-1)[1] இதி। ஏஷு **உத்பி**ஜ்ஜஸ்வேதஜயோ: **பூ**தயோ: பஞ்சமாஹுதிமந்தரேணோத்பத்திர்**த்**ருஶ்யதே।। 20 ।।

◆

நநு ஸ்வேதஜாநாமத்ர ந ஸங்கீர்தநமஸ்தி, த்ரீண்யேவ **பீ**ஜாநி இதி வசநாத், தத்ராஹ-

308.த்ருதீயஶப்தாவரோத: ஸம்ஶோகஜஸ்ய (3-1-21)

ஸம்ஶோகஜஸ்ய - ஸ்வேதஜஸ்யாபி, *‘‘ஆண்டஜம் ஜீவஜமுத்பிஞ்ஜம்’’* (சா.6-3-1)[2] இத்யத்ர த்ருதீயேந **உத்பி**ஞ்ஜ**ஶப்தே**ந *அவரோத:* - ஸங்க்ரஹ: வித்யத இத்யர்த:।

அத: கேவலபாபகர்மணாம் சந்த்ரப்ராப்தி: ந ஸம்பவதி।।21।।

இதி அநிஷ்டாதிகார்யதிகரணம் ।। 3 ।।

◆

சிலருக்கு ஐந்தாவது ஆஹுதியின் தேவையில்லாமல், ஶரீரம் உண்டாவது வேதத்திலும்காணப் படுகிறது - [1]**''முட்டையிலிருந்து பிறந்தது, ஜீவனிலிருந்து (கருப்பையிலிருந்து) பிறந்தது, தாவரத்திலிருந்து பிறந்தது என்றாவதால், இந்த உயிர்களுக்கு மூன்றே காரணங்கள் ஆகும்''** என்று; இப்படி தாவரத்திலிருந்து பிறந்ததும், வியர்வையிலிருந்து உண்டானவையும் ஆன உயிர்கள் ஐந்தாவது ஆஹுதி இல்லாமலேயே உண்டாவது காணப்படுகிறது.

◆ ◆ ◆ ◆

கேள்வி - வியர்வையிலிருந்து உண்டானவற்றை இங்கே சொல்லவில்லை; ஏனெனில், மூன்று காரணங்கள் மட்டுமே' என்று சொல்கிறது.

பதில் - இதற்கு பதில் சொல்கிறார் -

308. த்ருதீயஶப்தாவரோத: ஸம்ஶோகஜஸ்ய (3-1-21)

வியர்வையிலிருந்து உண்டாவது, மூன்றாவது சொல்லால் எடுக்கப்படும்.

ஸம்சோகஜஸ்ய - வியர்வையிலிருந்துஉண்டானதற்கு

த்ருதீயஶப்தாவரோத: - [2]**''ஆண்டஜம், ஜீவஜம், உத்பிஜ்ஜம்''** என்னுமிடத்து, மூன்றாவதான 'உத்பிஜ்ஜம்' என்ற சொல்லால் எடுக்கப் படுதல் உண்டு என்று பொருள்.

ப்ரயோஜனம்(அதிகரண-பயன்)

ஆகையால், பாபம் மட்டும் செய்தவர்களுக்கு, சந்த்ரனை அடைதல் வராது.

* * *

அநிஷ்டாதிகார்யதிகரணம் முற்றிற்று.

72.தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம் (3-1-4)

முன் குறிப்பு

ஜீவன் மறுபிறவி எடுப்பதற்காக சந்த்ரனிடமிருந்து திரும்பி இறங்குகிறான்; அப்போது, ஆகாசம் ஆகிறான்; வாயு ஆகிறான்; புகை ஆகிறான்; மேகம் ஆகிறான்; மழை ஆகிறான்'' என்றெல்லாம் சொல்கிறது.

ஆகாசம் முதலியதாக ஆகிறான் என்றால் என்ன அர்த்தம்?- என்று விசாரம்.

ஆகாசம் மேகம் முதலியதை ஶரீரமாகக் கொண்டவன் ஆகிறானா? அல்லது ஆகாசம் முதலியதற்கு சமானமாக ஆகாசம் என்று சொல்லும்படியாக அவ்வளவு நெருக்கமாக ஆகாசத்துடன் சேர்ந்திருக்கிறான் என்பது மட்டுமா?

பூர்வபக்ஷம் - ஆகாசத்துடன் சேர்ந்திருக்கிறான் என்று வேதம் சொல்லவில்லை; ஆகாசமாக ஆகிறான் என்று சொல்கிறது; அதாவது, ஆகாசம் முதலியதை சரீரமாகக் கொண்டவன் ஆகிறான்.

ஸித்தாந்தம் - ஜீவன், ஒரு சரீரத்தை எடுத்துக் கொள்வது புண்யபாப பலன்களாக சுகதுக்கங்களை அனுபவிப்பதற்காக! இங்கோ, ஆகாசமாக ஆகி எந்த சுகதுக்கமும் அனுபவிப்பதில்லை; எனவே, ஆகாசத்தை சரீரமாக எடுத்துக் கொள்வதில்லை.

எனவே, ஆகாசம் ஆகிறான் என்றால், ஆகாசத்துக்கு சமமாக ஆகிறான் என்று அர்த்தம்; இங்கு ஒற்றுமை என்பது அந்த சொல்லால் சொல்லும்படி ஆதல் என்பதுதான்;

ஆகாசம், மேகம் முதலியதுடன் கூடவே இருப்பதால், பிரித்து தனியாகச் சொல்ல முடியாதபடி, அதாகவே இவனையும் சொல்லும்படி அத்தனை நெருக்கமாக இருக்கிறான் என்று கருத்து.

ஸூத்ரத்தில் ஸ்வாபாவ்யம் என்றால், ஸ்வபாவம் என்று அர்த்தம்; தத்ஸ்வாபாவ்யம் - அதன் தன்மை போன்ற தன்மை உடையவனாக ஆதல் என்று அர்த்தம்; அதைத்தான் ஒற்றுமை அடைதல் என்று விளக்குகிறார்.

७२. तत्स्वाभाव्यापत्त्यधिकरणम् (३-१-४)

३०९.तत्स्वाभाव्यापत्तिरुपपत्तेः (३-१-२२)

इष्टादिकारिणो भूतसूक्ष्मपरिष्वक्ताः सानुशयाश्चन्द्रमसोऽवरोहन्तीत्युक्तम्। अवरोहप्रकारश्च, **"अथैतमेवाध्वानं पुनर्निवर्तन्ते यथेतमाकाशम् आकाशाद्वायुं वायुर्भूत्वा धूमो भवति धूमो भूत्वाऽभ्रं भवति, अभ्रं भूत्वा मेघो भवति, मेघो भूत्वा प्रवर्षति"** (छा.5-10-5,6)[1] इति वचनात् **"यथेतमनेवञ्च"**(ब्र.सू.3-1-8) इत्युक्तम्।

तत्राऽस्याऽऽकाशादिप्रतिपत्तौ देवमनुष्यादिभाववत् आकाशादिभावः, उत तत्सादृश्याऽपत्तिमात्रम् (तत्सादृश्यमात्रम्) (तत्स्वाभाव्यापत्तिमात्रम्) इति विशये -

श्रद्धावस्थस्य सोमभाववदविशेषादाकाशादिभावः इति प्राप्ते -

तत्स्वाभाव्यापत्तिरेवेत्युच्यते। **तत्स्वाभाव्यापत्तिः** - तत्सादृश्यापत्तिरित्यर्थः। कुत एतत्? **उपपत्तेः।** सोमभावमनुष्यभावादौ हि सुखदुःखोपभोगाय तद्भावः। अत्र त्वाकाशादौ सुखदुःखोपभोगाभावात् तद्भावानुपपत्तेस्तदापत्तिवचनं तत्संसर्गकृततत्सादृश्यापत्त्यभिप्रायम्॥२२॥

इति तत्स्वाभाव्यापत्त्यधिकरणम् ॥ ४ ॥

---

72. தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம் (3-1-4)

309.தத்ஸ்வாபாவ்யாபத்திருபபத்தே: (3-1-22)

இஷ்டாதிகாரிணோ பூதஸூக்ஷ்மபரிஷ்வக்தா: ஸாநுஶயா: சந்த்ரமஸோऽவரோஹந்தீத்யுக்தம்। அவரோஹப்ரகாரஶ்ச, *"அதைதமேவாத்வாநம் புநர்நிவர்தந்தே யதேதமாகாஶம் ஆகாஶாத்வாயும் வாயுர்பூத்வா தூமோ பவதி தூமோ பூத்வாऽப்ரம் பவதி, அப்ரம் பூத்வா மேகோ பவதி, மேகோ பூத்வா ப்ரவர்ஷதி"* (சா.5-10-5,6)[1] இதி வசநாத் *"யதேதமநேவஞ்ச"*(ப்ர.ஸூ.3-1-8) இத்யுக்தம்।

தத்ர அஸ்ய ஆகாஶாதிப்ரதிபத்தௌ தேவமநுஷ்யாதிபாவவத் ஆகாஶாதிபாவ:, உத தத்ஸாத்ருஶ்யாபத்திமாத்ரம் (தத்ஸாத்ருஶ்யமாத்ரம்) (தத்ஸ்வபாவ்யாபத்திமாத்ரம்) இதி விஶயே -

ஶ்ரத்தாவஸ்தஸ்ய ஸோமபாவவத் அவிஶேஷாத் ஆகாஶாதிபாவ: - இதி ப்ராப்தே -

*தத்ஸ்வாபாவ்யாபத்தி*ரேவேத்யுச்யதே। *தத்ஸ்வாபாவ்யாபத்தி:* - தத்ஸாத்ருஶ்யாபத்திரித்யர்த:। குத ஏதத்? *உபபத்தே:।* ஸோமபாவமநுஷ்யபாவாதௌ ஹி ஸுகது:கோபபோகாய தத்பாவ:।

அத்ர த்வாகாஶாதௌ ஸுகது:கோபபோகாபாவாத் தத்பாவாநுபபத்தே: ததாபத்திவசநம் தத்ஸம்ஸர்கக்ருத-தத்ஸாத்ருஶ்யாபத்த்யபிப்ராயம்।। 22 ।।

இதி தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம் ।। 4 ।।

72. தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம் (3-1-4)

309. தத்ஸ்வாபாவ்யாபத்தி: உபபத்தே:(3-1-23)

அதன்[ஆகாஶம்முதலியதன்] தன்மையைப்[ஒற்றுமையைப்] பெறுதல் மட்டுமே; அதுவே சரியாவதால்.

ஸங்கதி (விஷயதொடர்பு)&விஷயவாக்யம்

யாகம் முதலியதைச் செய்பவர், ஸூக்ஷ்மமான பூதங்களுடன் சேர்ந்தவராய் எஞ்சிய கர்மத்துடன் கூடியவராய் சந்த்ரனிடமிருந்து இறங்கி வருகின்றனர் என்று சொல்லப் பட்டது; இறங்கும் முறையும், [1]**''இதே வழியிலேயே திரும்பி வருகின்றனர்; போன வழிப்படி ஆகாஶத்தையும், ஆகாஶத்திலிருந்து வாயுவையும் அடைகின்றனர்; வாயுவாக ஆகி புகை ஆகிறான்; புகையாக ஆகி அப்ரம் (நீருண்ட மேகம்) ஆகிறான்; அப்ரம் ஆகி மேகம் (மழை பொழியும் மேகம்) ஆகிறான்; மேகமாக ஆகி மழையாகப் பெய்கிறான்''** என்று சொல்லியுள்ளது; அதைவைத்து, **''யதேதம் அநேவம் ச''** (போன முறையிலும், அப்படி இல்லாமலும் வேறு வழியிலும் ஆகும்) என்று (ஸூத்ரத்தில்)சொல்லப் பட்டது.

ஸந்தேஹம்

அதில் இவன் ஆகாஶம் முதலியதை அடைவதில்,தேவன்,மனுஷ்யன் முதலியதாக ஆவது போல, ஆகாஶம் முதலியதாக ஆதல் உண்டா? அல்லது அந்த ஆகாஶம் முதலியதற்கு ஸமானமான ஆகிறான் என்பது மட்டுமா? என்று ஸந்தேஹம் வரும்போது,

பூர்வபக்ஷம்

ஶ்ரத்தை(ஜலமாக)நிலையில் இருந்தவன் ஸோமன் ஆவதுபோல, இங்கும் வித்யாசம் இல்லாததால், ஆகாஶம் முதலியதாக ஆகிறான் - என்று பூர்வபக்ஷம் நேரிடும்போது,

ஸித்தாந்தம்

தத்ஸ்வாபாவ்யாபத்தி: (அதன் தன்மையை ஏற்றல்தான்) என்று ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது;

அதன் தன்மையைஏற்றல் - அதன் ஒற்றுமையை ஏற்றல் என்று அர்த்தம்.

ஏன்?

உபபத்தே: (அதுவே சரியாவதால்) - ஸோமன் ஆதல், மனுஷ்யன் ஆதல் முதலியதில் ஸுகதுக்க-போகத்தின் பொருட்டு அதாக (அதனை ஶரீரமாகக் கொண்டவனாக) ஆகிறான்; இங்கோ ஆகாஶம் முதலியதில் ஸுக-துக்க-போகம் கிடையாது; அதனால், அந்த ஆகாஶம் முதலியதாக ஆதல் வராது.

'அதாக ஆதலை ஆடைகிறான்' என்று சொன்னதானது, அதனுடன் சேர்ந்திருப்பதால் வரக்கூடியதான அதன் ஒற்றுமையைப் பெறுகிறான் என்னும் கருத்தில் ஆகும்.

* * *

தத்ஸ்வாபாவ்யாபத்த்யதிகரணம் முற்றிற்று

73.நாதிசிராதிகரணம் (3-1-5)

முன் குறிப்பு

ஒரு சிறிய அதிகரணம்.

ஒரு ஜீவன் மறுபிறவிக்காக ஶரீரம் எடுக்கும்போது, முதலில் மேகமாக ஆகிறது; பின் மழையாக ஆகிறது; பின் நெல்லாக ஆகிறது - என்றெல்லாம் வேதம் சொல்கிறது.

அந்தந்த இடத்தில் எத்தனை கால-அளவு இருக்கும்? என்று விசாரம்.

கால நியமம் கிடையாது என பூர்வபக்ஷம்

''நெல்லாக இருக்கும்போது, அந்த நிலையிலிருந்து வெளிவருவது மிக கஷ்டமாக உள்ளது'' என்பதை வேதம் சொல்கிறது; அதனால், பல நாட்கள் நெல்லாக இருக்கிறான் என்று தெரிகிறது; நெல்லில் மட்டும் அதிகநாட்கள் இருப்பதைச் சொல்வதால், மற்ற நிலைகளில், (மேகம், மழை முதலிய நிலைகளில்) ,அதிக தாமதம் இல்லாமல் விரைவில் வெளியேறுவான் என்று தெரிகிறது.

மேகமானது சிறிது நேரத்தில் மழை ஆகிவிடலாம்;மழையும் அதிக தாமதம் இல்லாமல் நெல்லாக ஆகி விடலாம்; ஆனால்,நெல்லானது அரிசியாக்கப் படும்; அதற்குப் பிறகு வேறொரு ஜீவன் அந்த அரிசியை உண்ண வேண்டும்; அதற்குப் பல மாதங்கள்ஆகலாம்; அதன் பின்னரே, நெல்-உணவாக அவனது வயிறில் கலக்கிறான். எனவே, அது கால-தாமதம் ஆனாலும், மற்றவை தாமதம் ஆகாமல் உடனே அடுத்த நிலைக்கு மாறும் என்று கருத்து.

७३. नातिचिराधिकरणम् (३-१-५)

३१०.नातिचिरेण विशेषात् (३-१-२३)

आकाशप्राप्तिप्रभृति यावद्व्रीह्यादिप्राप्ति किं तत्रतत्र नातिचिरं तिष्ठति, उतानियम इति विशये,

नियमहेत्वभावादनियमः - इति प्राप्ते

उच्यते - **नातिचिरेण** इति। कुतः? **विशेषात्** - उतरत्र व्रीह्यादिप्राप्तौ, **''अतो वै खलु दुर्निष्प्रपतरम्''**(छा.5-10-6)[1] इति विशिष्य कृच्छ्रनिष्क्रमणत्वाभिधानात् पूर्वत्र ह्याकाशादिप्राप्तावचिरनिष्क्रमणं गम्यते।

दुर्निष्प्रपतरमिति छान्दसः तशब्दलोपः; दुर्निष्प्रपततरम् - दुःखनिष्कमणतरमित्यर्थः॥२३॥

इति नातिचिराधिकरणम् ॥ ५ ॥

---

73. நாதிசிராதிகரணம் (3-1-5)

310.நாதிசிரேண விஶேஷாத் (3-1-23)

ஆகாஶப்ராப்திப்ரப்ருதி யாவத்வ்ரீஹ்யாதிப்ராப்தி கிம் தத்ர தத்ர நாதிசிரம் திஷ்டதி, உதாநியம இதி விஶயே,

நியமஹேத்வபாவாதநியம: - இதி ப்ராப்தே

உச்யதே - *நாதிசிரேண* - இதி। குத:? *விஶேஷாத்* - உத்தரத்ர வ்ரீஹ்யாதிப்ராப்தௌ, *''அதோ வை கலு துர்நிஷ்ப்ரபதரம்''*(சா.5-10-6)[1] இதி விஶிஷ்ய க்ருச்ச்ரநிஷ்க்ரமணத்வாபிதாநாத் பூர்வத்ர ஹி ஆகாஶாதிப்ராப்தௌ அசிரநிஷ்க்ரமணம் கம்யதே।

துர்நிஷ்ப்ரபதரமிதி சாந்தஸ: தஶப்தலோப: துர்நிஷ்ப்ரபததரம்-து:கநிஷ்க்ரமணதரமித்யர்த:।। 23 ।।

இதி நாதிசிராதிகரணம் ।। 5 ।।

* * *

73. நாதிசிராதிகரணம் (3-1-5)

310. நாதிசிரேண விஶேஷாத் (3-1-23)

அதிகதாமதம் இல்லாமல் [வெளிவருகிறான்; பின்னர்] விஶேஷம் ஆவதால்.

ஸங்கதி, விஷயம் & ஸந்தேஹம்

ஆகாஶத்தை அடைவது முதல், நெல் முதலியதை அடைவது வரை, அங்கங்கே கொஞ்சகாலம் நிற்கிறானா? அல்லது அந்த நியமம் இல்லையா? என்று ஸந்தேஹம் வரும்போது,

பூர்வபக்ஷம்

அந்த நியமத்துக்கான காரணம் இல்லாதபடியால், நியமம் கிடையாது

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட, ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **நாதிசிரேண** என்று.

ந அதிசிரேண - அதிக தாமதம் இல்லாமல்.

ஏன்?

விஶேஷாத் - (பின்னர் அதிககாலம் ஆகிற விஶேஷம் ஆவதால்)

பின்னர், நெல் முதலியதை அடையும்போது, [1]**"இதிலிருந்து வெளியேறுவதில் அதிக கஷ்டம் உடையதாகும்"** என்று கஷ்டப்பட்டு வெளிவர வேண்டியதைத் தனியாகக் குறிப்பிடுகிறது; எனவே, முன்னர், ஆகாஶம் முதலியதை அடைவதில், விரைவாகவே வெளிவருதல் தெரிகிறது.

'துர்நிஷ்ப்ரபதரம்' என்னுமிடத்தில் ஒரு 'த'காரம் மறைந்துவிட்டது; இது வேத-வழக்கில் ஆகும்; (உலகவழக்கில் துர்-நிஷ்ப்ரபத-தரம்) 'துர்நிஷ்ப்ரபததரம்' - அதிக கஷ்டப்பட்டு வெளிவருவது என்று அர்த்தம்.

* * *

நாதிசிராதிகரணம் முற்றிற்று

* * *

74. அந்யாதிஷ்டிதாதிகரணம் (3-1-6)

முன் குறிப்பு

மறு பிறவி எடுப்பதற்காக இறங்கி வரும் ஜீவன், இடையில் மேகமாக, மழையாக ஆகிறான் என்று சொல்லி, பின், நெல்லாகபிறக்கிறான் என்று வேதம் சொல்கிறது; அது பற்றிய விசாரங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

நெல்லாகபிறக்கிறான் என்றால் என்ன அர்த்தம் என்று விசாரம்.

ஜீவனுக்கு பிறப்பு என்பது ஒரு ஶரீரத்தை உடையவனாக ஆவது; அதுபோல, நெல்லை ஶரீரமாகக் கொண்டு அதற்குள் இருக்கிறான் என்று பூர்வபக்ஷ கருத்து.

அப்படியல்ல; நெல்லில் ஏற்கனவே ஒரு ஜீவன் இருப்பான்; இவன் போய் அதில் சேர்ந்து கொள்வான் என்பதுதான் என்று ஸித்தாந்தம்.

ஒரு ஶரீரத்தைஉடையவனாக ஆக வேண்டும் என்றால், புண்யபாப-கர்மத்தின் பலனாகவே அப்படி ஆக முடியும்; ஆனால், மறுபிறவி எடுக்கப் போகும்போது, இடையில், மேகமாக, மழையாக நெல்லாக ஆவது எல்லாம் புண்யபாப கர்மத்தின் பலன் அல்ல; அது ஒரு வழிமுறை என்பது மட்டுமே. எனவே, நெல்லை ஶரீரமாக கொள்வதில்லை; அங்கு சுக-துக்க அனுபவமும் பெறுவதில்லை.

ஒருபெண்ணின் கருப்பைக்கு போனபின்புதான், ஶரீரம்உடையவன் எனும் நிலை வருகிறது; அங்குதான் இவனது புண்யபாப-கர்மத்துக்கு ஏற்ப வித்யாசங்கள் வருகின்றன; அங்குதான் சுகதுக்கம் வருகிறது; அதற்கு முன் இந்த நிலை கிடையாது.

ஸாங்க்ய மதத்தில் ஒரு கருத்து சொல்கின்றனர் - நெல்லாக இருப்பது கூட ஒரு பாபத்தின் பலன்தான்! மறு பிறவி எடுப்பதற்கு முன் ஸ்வர்க்க உலகத்தில் யாகம் முதலிய புண்யங்களின் பலனை அனுபவித்தான்; ஆனால், அதே யாகத்தில் மிருக-பலிஎனப்படும் பசு-ஹிம்ஸா இருப்பதால், பாபம் கலந்து விடுகிறது; அதன் பலனாக கொஞ்ச நாள் நெல் முதலிய தாவரமாக இருப்பான் என்று.

இது தவறு; யாகத்தில் பசு-ஹிம்ஸாஆனது பாபம் அல்ல; அது பற்றி மீமாம்ஸா மதத்தில் விளக்கமும், நம் வேதாந்த மதத்தில் விளக்கமும் உள்ளது.

இதனை விரிவாக பின் இணைப்பில் கட்டுரையில் காணலாம்.

७४.अन्याधिष्ठिताधिकरणम् (३-१-६)

३११.अन्याधिष्ठिते पूर्ववदभिलापात् (३-१-२४)

अवरोहन्तो जीवाः व्रीह्यादिभावेन जायन्त इति श्रूयते, **''मेघो भूत्वा प्रवर्षति। त इह व्रीहियवा ओषधिवनस्पतयस्तिलमाषा इति जायन्ते''**(छा.5-10-6)[1] इति।

ते किमन्यैर्भोक्तृभिर्व्रीह्यादिशरीरैरधिष्ठितान् व्रीह्यादीन् आश्लिष्यन्ति, उत ते भोक्तारो व्रीह्यादिशरीरा जायन्त इति विशये -

जायन्ते इति वचनात्, देवो जायते, मनुष्यो जायत इतिवद् व्रीह्यादिशरीरा एव,

इति प्राप्ते उच्यते - **अन्याधिष्ठिते** इति। जीवान्तरेणाधिष्ठिते व्रीह्यादिशरीरे तेषां संश्लेषमात्रमेव। कुतः? **पूर्ववदभिलापात्** - आकाशादिमेघपर्यन्तवत् केवलतद्भावाभिलापात्। यत्र हि भोक्तृत्वमभिप्रेतम्, तत्र तत्साधनभूतं कर्माभिलप्यते, **''रमणीयचरणाः...कपूयचरणाः''**(छा.5-10-6)[2] इति। इह चाऽऽकाशादिवन्नाभिलप्यते कर्म;

74. அந்யாதிஷ்டிதாதிகரணம் (3-1-6)

311. அந்யாதிஷ்டிதே பூர்வவதபிலாபாத் (3-1-24)

அவரோஹந்தோ ஜீவா: வ்ரீஹ்யாதிபாவேந ஜாயந்த இதி ஶ்ருயதே, *"மேகோ பூத்வா ப்ரவர்ஷதி। த இஹ வ்ரீஹியவா ஓஷதிவநஸ்பதயஸ்திலமாஷா இதி ஜாயந்தே"*(சா.5-10-6)[1] இதி।

தே கிம் அந்யைர்போக்த்ருபி: வ்ரீஹ்யாதிஶரீரை: அதிஷ்டிதாந் வ்ரீஹ்யாதீந் ஆஶ்லிஷ்யந்தி, உத தே போக்தாரோ வ்ரீஹ்யாதிஶரீரா ஜாயந்த இதி விஶயே -

'ஜாயந்தே' இதி வசநாத், தேவோ ஜாயதே, மநுஷ்யோ ஜாயத இதிவத் வ்ரீஹ்யாதிஶரீரா ஏவ,

இதி ப்ராப்தே - உச்யதே - *அந்யாதிஷ்டிதே* இதி। ஜீவாந்தரேண அதிஷ்டிதே வ்ரீஹ்யாதிஶரீரே தேஷாம் ஸம்ஶ்லேஷமாத்ரமேவ। குத:? *பூர்வவதபிலாபாத்* - ஆகாஶாதிமேகபர்யந்தவத் கேவலதத்பாவாபிலாபாத்। யத்ர ஹி போக்ருத்வமபிப்ரேதம், தத்ர தத்ஸாதநபூதம் கர்மாபிலப்யதே, *"ரமணியசரணா:...கபூயசரணா:"*(சா.5-10-6)[1] இதி। இஹ சாऽऽகாஶாதிவத்

74.அந்யாதிஷ்டிதாதிகரணம் (3-1-6)

311. அந்யாதிஷ்டிதே பூர்வவத் அபிலாபாத் (3-1-24)

வேறொருவரால் அதிஷ்டானம் செய்யப்பட்டதில்[ஒட்டுதல் மட்டுமே]; முன் வாக்யத்தில் போல சொல்வதால்.

விஷயவாக்யம்

இறங்கி வருகின்ற ஜீவர்கள் நெல் முதலியதாக பிறக்கின்றனர் என்று ஓதப் படுகிறது - [1]**''மேகமாக ஆகி மழையாகப் பொழிகிறான்; அவை இங்கு நெல், யவங்கள், ஒஷதிகள்மரங்கள், எள், உளுந்துகள் என பிறக்கின்றன''** என்று.

ஸந்தேஹம்

நெல் முதலியதை ஶரீரமாகக் கொண்டவராய் (சுகதுக்கம்) அனுபவிப்பவரான வேறு ஜீவர்களால் அதிஷ்டானம் செய்யப்பட்ட நெல் முதலியவற்றை இந்த ஜீவர்கள் ஒட்டிச் சேர்ந்து இருக்கின்றனரா? அல்லது(இவர்களே) சுகதுக்கம் அனுபவிப்பவராய் நெல் முதலியதை ஶரீரமாகக் கொண்டவராகப் பிறக்கின்றனரா? என்று ஸந்தேஹம் வரும்போது,

பூர்வபக்ஷம்

'பிறக்கின்றனர்' என்று சொல்லியிருப்பதால், ''தேவனாகப் பிறக்கிறான்', 'மனுஷ்யனாகப் பிறக்கிறான்' என்பதுபோல, நெல் முதலியதை ஶரீரமாகக் கொண்டவர்களாகவே ஆகின்றனர்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட,ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது - **'அந்யாதிஷ்டிதே'** என்று.

அந்யாதிஷ்டிதே - வேறு ஜீவனால் அதிஷ்டானம் செய்யப்பட்ட நெல் முதலிய ஶரீரத்தில், இவன் ஒட்டிச் சேர்வது மட்டுமே.

ஏன்?

பூர்வவத் அபிலாபாத் (முன் வாக்யத்தில் போல சொல்வதால்) - ஆகாஶம் முதல் மேகம் வரையில் போல, அதாக ஆவதை மட்டும் சொல்வதால்.

எங்கு ஸுகதுக்க போகம் கருதப் படுகிறதோ, அங்கு அதற்குக் காரணமான புண்யபாப-கர்மம் சொல்லப்படுகிறது - [2]**''ரமணீயசரணா:, கபூயசரணா:''** என்று; இங்கோ, (நெல் முதலியதில்) ஆகாஶம் முதலியதில் போல, கர்மம் சொல்லப்பட-

फलप्रदाने प्रवृत्तस्य स्वर्गोपभोग्यफलस्येष्टादेः कर्मणः स्वर्गोपभोगादेव समाप्तत्वात्, अनारब्धस्य **''रमणीयचरणाः....कपूयचरणाः''**(छा.5-10-6)[1] इति वक्ष्यमाणत्वात् मध्ये कर्मान्तराभावाच्च। अत आकाशादिभाववचनवद् व्रीह्यादिभावेन जन्मवचनमौपचारिकम्॥२४॥

* * *

३१२.अशुद्धमिति चेत्, न; शब्दात् (३-१-२५)

नैतदस्ति - यदन्याधिष्ठिते व्रीह्यादिशरीरे संश्लेषमात्रम्, भोक्तृत्वहेत्वभावान्न व्रीह्यादिभावेन जन्म इति; भोक्तृत्वहेतुसद्भावात्। स्वर्गोपभोग्यफलमिष्टादिकर्मैव अशुद्धम् - पापमिश्रम्, अग्नीषोमीयादिर्हिंसायुक्तत्वात्। हिंसा च **''न हिंस्यात् सर्वा भूतानि''**(?)[2] इति निषिद्धत्वात् पापमेव।

न चात्र पदाहवनीयादिवदुत्सर्गापवादभावः सम्भवति; भिन्नविषयत्वात्। अग्नीषोमीयहिंसाविधिर्हिंसायाः क्रतूपकारकत्वं बोधयति; 'न हिंस्यात्' इति तु हिंसायाः प्रत्यवायफलत्वम्॥

अथोच्येत - अग्नीषोमीयादिषु विधितः प्रवृत्तेर्न तद्विषयं निषेधविधिरास्कन्दति;

நாபிலப்யதே கர்ம, பலப்ரதாநே ப்ரவ்ருத்தஸ்ய ஸ்வர்கோபபோக்யபலஸ்ய இஷ்டாதே: கர்மண: ஸ்வர்கோபபோகாதேவ ஸமாப்தத்வாத், அநாரப்தஸ்ய *''ரமணீயசரணா:....கபூயசரணா:''*(சா.5-10-6)[1] இதி வக்ஷ்யமாணத்வாத் மத்யே கர்மாந்தராபாவாச்ச। அத: ஆகாஶாதிபாவவசநவத் வ்ரீஹ்யாதிபாவேந ஜந்மவசநம் ஔபசாரிகம்।। 24 ।।

* * *

312.அஶுத்தமிதி சேத்-ந ஶப்தாத் (3-1-25)

நைததஸ்தி - யதந்யாதிஷ்டிதே வ்ரீஹ்யாதிஶரீரே ஸம்ஶ்லேஷமாத்ரம், போக்த்ருத்வஹேத்வபாவாந்ந வ்ரீஹ்யாதிபாவேந ஜந்ம இதி, போக்த்ருத்வஹேதுஸத்பாவாத்। ஸ்வர்கோபபோக்யபலமிஷ்டாதிகர்மைவ *அஶுத்தம்* - பாபமிஶ்ரம், அக்நீஷோமீயாதிஹிம்ஸாயுக்தத்வாத்। ஹிம்ஸா ச *''ந ஹிஸ்யாத் ஸர்வா பூதாநி''*(?)[2] இதி நிஷித்தத்வாத் பாபமேவ।

ந சாத்ர பதாஹவநீயாதிவத் உத்ஸர்காபவாதபாவ: ஸம்பவதி, பிந்நவிஷயத்வாத்। அக்நீஷோமீயஹிம்ஸாவிதி: ஹிம்ஸாயா: க்ரதூபகாரகத்வம் போதயதி: ந ஹிஸ்யாத் இதி து ஹிம்ஸாயா: ப்ரத்யவாயபலத்வம்।।

அதோச்யேத - அக்நீஷோமீயாதிஷு விதித: ப்ரவ்ருத்தேர்ந தத்விஷயம் நிஷேதவிதி: ஆஸ்கந்ததி; ராகப்ராப்தவிஷயத்வாத் தஸ்யேதி।

வில்லை; ஸ்வர்க்கத்தில் அனுபவிக்க வேண்டிய பலனை உடையதாய், பலன் கொடுக்கத் தொடங்கிய கர்மம் ஆனது, ஸ்வர்க்கத்தை அனுபவிப்பதாலேயே முடிந்து விடும்; பலன் கொடுக்க ஆரம்பிக்காத கர்மம் பற்றி, [1]**''ரமணீயசரணா:, கபூயசரணா:''** என்று பின்னர் சொல்லப்படப் போகிறது; நடுவில் வேறு கர்மம் எதுவும் கிடையாது; ஆகையால், ஆகாஶம் முதலியதாக ஆவதைச் சொன்னது போல், நெல்முதலாக பிறப்பதைச் சொன்னதும் உபசார வழக்கு ஆகும். (நேர்ப் பொருள் அல்ல; வேறு பொருள் ஆகும்).

◆ ◆ ◆ ◆

312. அஶுத்தம் இதி சேத் ந ஶப்தாத் (3-1-25)

[யாகமானது] பாபம் கலந்தது என்றால், அதல்ல; [ஹிம்ஸை அல்ல எனும்] வேத வாக்யத்தால்.

பூர்வபக்ஷம்

(ஸித்தாந்தத்தில்) 'வேறொருவரால் அதிஷ்டானம் செய்யப்பட்ட நெல் முதலியதான ஶரீரத்தில் ஒட்டிச் சேர்வது மட்டுமே; ஸுகதுக்க-போகம் அனுபவிப்பவனாக ஆவதற்குக்காரணமானது (கர்மம் ஆனது) இல்லாதபடியால், நெல் முதலியதாகப் பிறப்பதில்லை' - என்று சொன்னது எதுவோ, அது கிடையாது; ஏனெனில், ஸுகதுக்க போகத்தை அனுபவிப்பவராக ஆவதற்கான காரணம் இருக்கிறது.

ஸ்வர்க்கத்தில் அனுபவிக்க வேண்டிய பலனுக்குக் காரணமான யாகம் முதலிய கர்மமே,

> **அஶுத்தம்** - பாபத்துடன் கலந்தது ஆகும்; ஏனெனில், அக்நீஷோமீய-பசு முதலியதின் ஹிம்ஸையுடன் கூடியது; [2]**''எல்லா உயிரினங்களையும் ஹிம்ஸை செய்யக் கூடாது''** என்று விலக்கப் பட்டிருப்பதால், ஹிம்ஸை என்பது பாபம் தான்.

பதம்-ஆஹவநீயம் முதலியதில் போல, இங்கு உத்ஸர்கம்-அபவாதம் முறையாதல் வர முடியாது; ஏனெனில், விஷயம் வெவ்வேறு ஆவதால்; அக்நீஷோமீய ஹிம்ஸையைப் பற்றிய விதியானது, யாகத்துக்கு ஹிம்ஸை உதவும் என்பதை அறிவிக்கிறது; ''ஹிம்ஸை செய்யக் கூடாது'' என்பதோ, ஹிம்ஸையானது பாபபலனை உடையது என்பதை அறிவுறுத்துகிறது.

உள்கேள்வி - அக்நீஷோமீயம் முதலியவற்றை வேதத்தில் விதிப்பதால்தான் செய்கிறான்; எனவே,(ஹிம்ஸை செய்யக்கூடாது என்று) விலக்குதல்ஆனது, அந்த வேதவிதியின் விஷயத்தைப் பற்றியதாக ஆகாது; அது(மனிதனின்) விருப்பத்தால்

रागप्राप्तविषयत्वात् तस्येति। नैवम्। इहापि रागप्राप्तेरविशिष्टत्वात्। **''स्वर्गकामो यजेत''** (तै.सं.2-5-5)[1] इत्यादौ हि कामिनः कर्तव्यतया यागाद्युपदेशात् यागादेः स्वर्गादिसाधनत्वमवगम्य फलरागत एव यागादौ प्रवर्तते।

अग्नीषोमीयादिष्वपि तेषां फलसाधनभूतस्य यागादेरुपकारकत्वं शास्त्रादवगम्य रागादेव प्रवर्तते। लौकिक्यामपि हिंसायां केनचित् प्रमाणेन हिंसायाः स्वसमीहितसाधनत्वमवगम्य रागात् प्रवर्तत इति न कश्चन विशेषः।

तथा नित्येष्वपि कर्मसु **''सर्ववर्णानां स्वधर्मानुष्ठाने परम् अपरिमितं सुखम्''** (आ.ध.सू.2-1-2-2)[2] इत्यादिवचनात् फलसाधनत्वमवगम्य रागादेव प्रवृत्तिरिति तेषामप्यशुद्धियुक्तत्वम्॥

अत इष्टादीनां पापमिश्रत्वेनाशुद्धियुक्तानां स्वर्गेऽनुभाव्यं फलं स्वर्गेऽनुभूय हिंसांशस्य फलं व्रीह्यादिस्थावरभावेनानुभूयते। स्थावरभावं च पापफलं स्मरन्ति, **''शरीरजैः कर्मदोषैर्याति स्थावरतां नरः''** (मनु.12-9)[3] इति। अतो व्रीह्यादिभावेन भोगायानुशयिनो जायन्त इति चेत् -

நைவம்। இஹாபி ராகப்ராப்தே: அவிஶிஷ்டத்வாத்। *''ஸ்வர்ககாமோ யஜேத''* (தை.ஸம்.2-5-5)[1] இத்யாதௌ ஹி காமிந: கர்தவ்யதயா யாகாத்யுபதேஶாத் யாகாதே: ஸ்வர்காதிஸாதநத்வமவகம்ய பலராகத ஏவ யாகாதௌ ப்ரவர்ததே।

அக்நீஷோமீயாதிஷ்வபி தேஷாம் பலஸாதநபூதஸ்ய யாகாதேருபகாரகத்வம் ஶாஸ்த்ராதவகம்ய ராகாதேவ ப்ரவர்ததே। லௌகிக்யாமபி ஹிம்ஸாயாம் கேநசித் ப்ரமாணேந ஹிம்ஸாயா: ஸ்வஸமீஹிதஸாதநத்வமவகம்ய ராகாத் ப்ரவர்தத இதி ந கஶ்சந விஶேஷ:।

ததா நித்யேஷ்வபி கர்மஸு *''ஸர்வவர்ணாநாம் ஸ்வதர்மாநுஷ்டாநே பரம் அபரிமிதம் ஸுகம்''*(ஆ.த.ஸூ.2-1-2-2)[1] இத்யாதிவசநாத் பலஸாதநத்வமவகம்ய ராகாதேவ ப்ரவ்ருத்திரிதி தேஷாமபி அஶுத்தியுக்தத்வம்।

அத: இஷ்டாதீநாம் பாபமிஶ்ரத்வேந அஶுத்தியுக்தாநாம் ஸ்வர்கேऽநுபாவ்யம் பலம் ஸ்வர்கேऽநுபூய ஹிம்ஸாம்ஶஸ்ய பலம் வ்ரீஹ்யாதிஸ்தாவரபாவேநாநுபூயதே। ஸ்தாவரபாவம் ச பாபபலம் ஸ்மரந்தி, *''ஶரீரஜை: கர்மதோஷைர்யாதி ஸ்தாவரதாம் நர:''*(மநு.12-9)[1] இதி। அதோ வ்ரீஹ்யாதிபாவேந போகாயாநுஶயிநோ ஜாயந்த இதி சேத் -

வந்திருக்கும் விஷயம் பற்றியது. (ஆசைப்பட்டு ஒருவன் ஹிம்ஸை செய்தால், அது தவறு; வேதவிதிப்படி ஹிம்ஸை செய்தால், தவறில்லை).

உள்பதில் - அப்படியில்லை; ஏனெனில், இங்கும் விருப்பத்தால் வருதல் என்பது வித்யாசம் இல்லாமல் இருக்கிறது; [1]**''ஸ்வர்க்கம் விரும்புபவர் யாகம் செய்க''** என்பது முதலியதில், பலனில் விருப்பம் உள்ளவனுக்குச் செய்ய வேண்டியதாக யாகம் முதலியது உபதேஶம் செய்யப் பட்டுள்ளது; அதனால், யாகம் முதலியது, ஸ்வர்க்கம் முதலியதன் காரணம் என்பதை அறிந்து, பலனில் ஆசையால்தான் யாகம் முதலியதை செய்ய ஆரம்பிக்கிறான்.

அக்னீஷோமீய-ஹிம்ஸை முதலியவற்றிலும், அவை ஒரு பலனுக்குக் காரணமான யாகம் முதலியதற்கு உதவுவதை, ஶாஸ்த்ரத்தின் மூலம் தெரிந்துகொண்டு, ஆசையால்தான் செயல் செய்கிறான்; உலகத்திலுள்ள ஹிம்ஸையிலும் கூட ஹிம்ஸை செய்வதானது, தான் விரும்பிய பலனுக்குக் காரணமாவதை ஏதோ ஒரு ப்ரமாணத்தின் மூலம் தெரிந்துகொண்டு, விருப்பத்தால்தான் செயல் செய்கிறான்; எனவே, ஒரு வித்யாசமும் இல்லை.

அதுபோல, நித்யகர்மங்களிலும் [2]**''எல்லா வர்ணத்தவரும் தம் தர்மத்தை அனுஷ்டானம் செய்வதால் அளவற்ற சுகம் ஆகும்''** முதலிய வசனம் மூலம், அது பலனுக்குக் காரனமாவதைத் தெரிந்துகொண்டு, (பலனில்) ஆசையால்தான் செய்கிறான் என்பதால், அவையும் அஶுத்தியுடன் கூடியவையே.

எனவே, யாகம் முதலியவை பாபம் கலந்தபடியால், அஶுத்தியுடன் கூடியவை; ஆகையால், ஸ்வர்க்கத்தில் அனுபவிக்க வேண்டிய (யாகத்தின்) பலனை ஸ்வர்க்கத்தில் அனுபவித்து விட்டு, (யாகத்தில் நேரிட்ட) ஹிம்ஸை என்னும் அம்ஶத்தின் பலனை நெல் முதலிய தாவரமாகி அனுபவிக்கிறான்; தாவரம் ஆதல் என்பது பாபத்தின் பயனாகும் என்பதை ஸ்ம்ருதியில் சொல்கின்றனர் - [3]**''ஶரீரத்தில் உண்டாகும் கர்ம-தோஷங்களால் மனிதன் தாவரமாதலைப் பெறுகிறான்''** என்று.

எனவே, ஸுகதுக்க போகத்துக்காககர்மம் உடையவராய் நெல் முதலானதாகவே பிறக்கின்றனர் -

இதி சேத் - என்றால்,

ஸித்தாந்தம்

ந - அது அல்ல;

ஏன்?

तन्न; कुतः? **शब्दात्** - अग्नीषोमीयादेः संज्ञपनस्य स्वर्गलोकप्राप्तिहेतुतया हिंसात्वाभावशब्दात्। पशोर्हि संज्ञपननिमित्तां स्वर्गलोकप्राप्तिं वदन्तं शब्दमामनन्ति, **''हिरण्य शरीर ऊर्ध्वः स्वर्गं लोकमेति''**(?)[1] इत्यादिकम्। अतिशयिताभ्युदयसाधनभूतो व्यापारोऽल्पदुःखदोऽपि न हिंसा; प्रत्युत रक्षणमेव। तथा च मन्त्रवर्णः, **''न वा उवेतन्म्रियसे न रिष्यसि देवान् इदेषि पथिभिः सुगेभिः। यत्र यन्ति सुकृतो नापि दुष्कृतस्तत्र त्वा देवः सविता दधातु''**(तै.सं.4-6-9)[2] इति। चिकित्सकं च तादात्मिकाल्पदुःखकारिणमपि रक्षकमेव वदन्ति, पूजयन्ति त तज्ज्ञाः॥ २५ ॥

* * *

इतश्चौपचारिकं व्रीह्यादिजन्मवचनम् -

३१३.रेतस्सिग्योगोऽथ (३-१-२६)

व्रीह्यादिभाववचनानन्तरम्, **''यो यो ह्यन्नमत्ति यो यो रेतः सिञ्चति, तद्भूय एव भवति''**(छा.5-10-6)[3] इति रेतस्सिग्भावोऽनुशयिनां श्रूयमाणो यथा तद्योगमात्रं प्रतिपादयति, तद्वत् व्रीह्यादिभावोऽपीत्यर्थः॥ २६ ॥

* * *

தந்ந। குத:? *ஶப்தாத்* - அக்நீஷோமீயாதே: ஸம்ஜ்ஞபநஸ்ய ஸ்வர்கலோகப்ராப்திஹேதுதயா ஹிம்ஸாத்வாபாவஶப்தாத் பஶோர்ஹி ஸம்ஜ்ஞபநநிமித்தாம் ஸ்வர்கலோகப்ராப்திம் வதந்தம் ஶப்தமாமநந்தி, *''ஹிரண்யஶரீர ஊர்த்வ: ஸ்வர்கம் லோகமேதி''*(?)[1] இத்யாதிகம்। அதிஶயிதாப்யுதயஸாதநபூதோ வ்யாபார: அல்பது:கதோऽபி ந ஹிம்ஸா; ப்ரத்யுத ரக்ஷணமேவ। ததா ச மந்த்ரவர்ண:, *''ந வா உ வேதந்ம்ரியஸே ந ரிஷ்யஸி தேவாந் இதேஷி பதிபி: ஸுகேபி:। யத்ர யந்தி ஸுக்ருதோ நாபி துஷ்க்ருத: தத்ர த்வா தேவ: ஸவிதா ததாது''*(தை.ஸம்.4-6-9)[2] இதி। சிகித்ஸகம் ச தாதாத்மிகால்பது:ககாரிணமபி ரக்ஷகமேவ வதந்தி, பூஜயந்தி த தஜ்ஜ்ஞா:।। 25 ।।

* * *

இதஶ்ச ஔபசாரிகம் வ்ரீஹ்யாதிஜந்மவசநம் -

313.ரேதஸ்ஸிக்யோகோऽத (3-1-26)

வ்ரீஹ்யாதிபாவவசநாநந்தரம், *''யோ யோ ஹ்யந்நமத்தி யோ ரேத: ஸிஞ்சதி, தத்பூய ஏவ பவதி''*(சா.5-10-6)[3] இதி ரேதஸ்ஸிக்பாவோऽநுஶயிநாம் ஶ்ரூயமாணோ யதா தத்யோகமாத்ரம் ப்ரதிபாதயதி, தத்வத் வ்ரீஹ்யாதிபாவோऽபீத்யர்த:।। 26 ।।

* * *

ஶப்தாத் (வாக்யத்தால்)- அக்நிஷோமீய ஹிம்ஸையானது, ஸ்வர்க்க லோகத்தை அடைவதற்குக் காரணமானபடியால், ஹிம்ஸை ஆகாது எனும் வாக்யத்தால்;

யாகப் பசுவைக்(மிருகத்தைக்) கொல்வதன் மூலமாக, அதற்கு ஸ்வர்க்கலோகம் அடைவதைச் சொல்லும் வாக்யத்தை ஓதுகின்றனர் - [1]**''தங்கஶரீரம் உடையதாய், உயர்ந்தவராய் ஸ்வர்க்க லோகத்தை அடைகிறது''** முதலியதாக.

அதிகமான நன்மைக்குக் காரணமான செயலானது, கொஞ்சம் துக்கத்தைக் கொடுப்பதாய் இருந்தாலும், அது ஹிம்ஸை அல்ல; மாறாக ரக்ஷணம்தான்; அப்படியே மந்த்ரவர்ணமும்(வர்ணிக்கும் மந்த்ரமும்)சொல்கிறது - [2]**''இப்போது நீ இறப்பதில்லை; துன்புறுத்தப் படுவதில்லை; நல்ல எளிதான வழியின் மூலம் தேவர்களை அடைகிறாய்! எங்கு, புண்யசாலிகள் மட்டும் போவரோ, பாபசாலிகளோ போகவே முடியாதோ, அங்கு ஸவிதா-தேவன் உன்னை வைக்கட்டும்''** என்று; சிகிச்சை அளிப்பவன், அப்போதைக்கு அல்பமான துக்கம் அளிப்பவனாக இருந்தாலும்,அவனைக்காப்பாற்றுபவனாகவே சொல்கின்றனர்; அது அறிந்தவர், அவனை மரியாதையுடனும் நடத்துகின்றனர்.

◆ ◆ ◆ ◆

நெல் முதலியதாகப் பிறப்பதாகச் சொன்னது உபசாரவழக்கு ஆகும் என்பது இதனாலும் ஆகும் -

313. ரேதஸ்ஸிக்யோக: அத (3-1-26)

பின் ரேதஸ் சேர்த்து நனைப்பவனுடன் சேர்தல் மட்டுமே.

நெல் முதலியதாக ஆவதைச் சொன்னபின்பு, [3]**''யார்யார் அன்னம் உண்கிறாரோ, யார் ரேதஸ்(விந்து)சேர்த்து நனைக்கிறாரோ, பின்னர் மீண்டும் அவராக ஆகிறான்''** என்று புண்யபாபகர்மத்துடன் (பிறக்க) இருப்பவரை ரேதஸ் சேர்த்து நனைப்பவனாகச் சொல்கிறது; அது, அவருடன் சேர்ந்திருப்பதை மட்டும் சொல்வதாக எப்படி ஆகுமோ, அதுபோல, நெல் முதலியதாக ஆவதைச் சொல்வதும் ஆகும் என்று பொருள்.

✍*(பிறக்கப் போகும் ஒருவனை 'ரேதஸ் சேர்த்து நனைப்பவன் ஆகிறான்' என்று வேதம் சொல்கிறது; ரேதஸ் சேர்த்து நனைப்பவனுடன் சேர்ந்தவன் என்று அர்த்தம்; ஏனெனில், இவன் ரேதஸ் சேர்த்து நனைப்பவன் அல்லவே! வேறொரு ஆண்தானே ரேதஸ் சேர்த்து நனைப்பவனாக உள்ளான்! அதேபோல, நெல் முதலியதாக வேறு ஜீவன் உள்ளான்; பிறக்கப் போகும் இவன் நெல்முதலியதாக ஆகிறான் என்றால், அந்த ஜீவனுடன் சேர்ந்திருப்பான் என்று பொருள்).*✍

◆ ◆ ◆ ◆

३१४.योनेः शरीरम् (३-१-२७)

योनिप्राप्तेः पश्चादेवानुशयिनां शरीरप्राप्तिः। तत्रैव सुखदुःखोपभोगसद्भावात्। ततः प्राक् आकाशादिप्राप्तिप्रभृति तद्योगमात्रमेवेत्यर्थः॥ २७ ॥

इति अन्याधिष्ठिताधिकरणम् ॥ ६ ॥

इति श्रीभगवद्रामानुजविरचिते शारीरकमीमांसाभाष्ये तृतीयस्याध्यायस्य
प्रथमः पादः॥ १ ॥

314.யோநே: ஶரீரம்(3-1-27)

யோநிப்ராப்தே: பஶ்சாதேவாநுஶயிநாம் ஶரீரப்ராப்தி:। தத்ரைவ ஸுகது:கோபபோகஸத்பாவாத்। தத: ப்ராக் ஆகாஶாதிப்ராப்திப்ரப்ருதி தத்யோகமாத்ரமேவேத்யர்த:।। 27 ।।

இதி அந்யாதிஷ்டிதாதிகரணம் ।। 6 ।।

இதி ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஶாரீரகமீமாம்ஸாபாஷ்யே
த்ருதீயஸ்யாத்யாயஸ்ய ப்ரதம: பாத:।। 1 ।।

* * *

314. யோநே: ஶரீரம் (3-1-27)

யோனியை அடைவதற்குப் பின்னரே ஶரீரம் ஆகும்.

யோனியை (கருப்பையை) அடைவதற்குப் பின்னர்தான், கர்மம் உடையவருக்கு ஶரீரம் பெறுதல் ஆகும்; ஏனெனில், அங்குதான், (பிறக்கப் போகும் ஜீவனுக்கு) ஸுகதுக்க-போகம் இருக்கிறது; அதற்கு முன், ஆகாஶம் முதலியதை அடைவது முதல், அதனுடன் சேர்ந்திருத்தல் மட்டுமே. என்று பொருள்.

* * *

அந்யாதிஷ்டிதாதிகரணம் முற்றிற்று.

இப்படி ஸ்ரீபகவத்ராமானுஜர் அருளிய ஶாரீரகமீமாம்ஸா பாஷ்யத்தில் மூன்றாம் அத்யாயத்தின் முதல் பாதம்

* * *

ஸ்ரீமதேராமானுஜாயநம:

ஸ்ரீபகவத்ராமானுஜர்அருளிய

ஸ்ரீபாஷ்யம்

தமிழாக்கம்

(3-2)

மூன்றாவது அத்யாயம் - ஸாதந-அத்யாயம்

இரண்டாவதுபாதம் - உபயலிங்கபாதம்

அதிகரணங்கள்-8 (75-82)

ஸூத்ரங்கள் - 40 (315-354)

குறிப்பு - உபய-லிங்க-பாதம் என்று இதற்குப் பெயர்; உபயலிங்கம் என்றால் இரட்டை அடையாளம் உடைய ப்ரஹ்மம்; அதை விளக்கும் பாதம் இது; ப்ரஹ்மத்துக்கு உள்ள இரட்டை அடையாளங்கள்- i)இழிகுணம் இல்லாமை ii) கல்யாணகுணங்கள் உள்ளமை.

இந்த உபயலிங்கம் பற்றி இந்த பாதத்தில் ஐந்தாவது அதிகரணத்தில் தான் வருகிறது; முதல் நான்கு அதிகரணங்கள், முன் பாதத்தின் தொடர்ச்சி போல உள்ளன. போனபாதத்தில் விழிப்பு நிலையில் ஜீவனது தோஷங்களைச் சொன்னார்; அடுத்து ஸ்வப்நம் (கனவு), உறக்கம், மயக்கம் ஆகிய நிலைகளில் ஜீவனது தோஷங்களைச் சொல்லவேண்டும்; அவற்றை இங்கு முதல் நான்கு அதிகரணங்களில் சொல்கிறார்.

அவை போன பாதமான வைராக்ய-பாதத்திலேயே சொல்ல வேண்டிய விஷயங்கள்; இங்கு ஏன் சேர்க்கிறார்? அதில் ஒருகுறிப்பு உள்ளது. இங்கு அவற்றைச் சொல்வதன் மூலம் ப்ரஹ்மத்தின் கல்யாண-குணங்கள் சிலவற்றையும் சொல்வதாக ஆகிறது என்பதை குறிப்பில் கொள்ளவேண்டும் என உணர்த்துகிறார். (உ.ம்) கனவில் ஜீவன் காணும் பொருள்களை பரமாத்மாதான் படைக்கிறான்; உறக்கத்தில் ஜீவனை தன்னிடமே பரமாத்மா வைத்துக்கொள்கிறான் முதலியது.

75. ஸந்த்யாதிகரணம் (3-2-1)

முன்குறிப்பு

ஸந்த்யம் என்றால் ஸ்வப்நம்; அதாவது கனவு. ஸந்தி என்றால் சேர்க்கை; ஸந்தியில் இருப்பது ஸந்த்யம்; அதாவது மனிதன் இவ்வுலகில் விழித்து இருக்கும் போது இவ்வுலகைக் காண்கிறான்; மரணமான பின் மேலுலகம் சென்று அதைக்காண்கிறான்; ஆனால், கனவு காணும்போது இரண்டையுமே அவனால் காணமுடிகிறது; எப்படி தெருவின் நடுச்சந்தியில் நிற்பவன் இருபக்கமும் காண்பானோ, அப்படி கனவுகாண்பவன் இரு உலகையும் காண்பதால், இவன் இடையில் நடுச்சந்தியில் நிற்பவன் போல ஆகிறான்; அதனால், கனவு என்பதை ஸந்த்யம் என்கிறது.

மனிதன் போகம் அனுபவிப்பதற்கான முதல் இடம் இவ்வுலகம் ஆகும்; இரண்டாவது இடம் மேலுலகம் ஆகும்; ஸந்த்யம் என்பது மூன்றாவது இடம் என்றும் வேதம் சொல்கிறது.

கனவில் தோன்றும் பொருள்கள் பொய்யானவை என்று தோன்றும்; ஆனால் அவை பொய்யல்ல; உண்மையானவைதாம்; அது வேதத்திலும் தெளிவாக சொன்ன விஷயம்தான்; எனவே அதைப் பற்றிய விசாரம் இங்கே இல்லை.

கனவில் தோன்றும் பொருள்களை யார் படைக்கிறார்? ஜீவனா, பரமனா என்று விசாரம் இந்த அதிகரணத்தில் நடக்கிறது. ஜீவன்தான் படைக்கிறான் என்று பூர்வபக்ஷம்; பரமாத்மாதான் படைக்கிறான் என தீர்ப்பு.

கனவில் தோன்றும் பொருள்கள் ஆச்சர்யமானவை; அவை கனவுகாண்பவனுக்கு மட்டுமே தெரிகின்றன; பக்கத்தில் இருக்கும் வேறு யாருக்கும் தெரிவதில்லை; கனவு காண்பவனுக்கும் கூட அந்தசமயத்தில் மட்டுமே தெரிகின்றன; பின்னர் அவை அழிந்து விடுகின்றன; ஆக அவனுக்கு மட்டும் தெரியும்படி அந்தசமயத்தில் மட்டுமே இருக்கும்படி கனவுப்பொருள்கள் படைக்கப்படுகின்றன; இப்படிப்பட்ட ஆச்சர்யமான படைப்பை பரமாத்மாதான் செய்யமுடியும்; அவன் தனது ஸங்கல்பத்தால் மட்டுமே படைப்பு நடத்த வல்லவன்; ஆதலால் இப்படி படைக்கிறான் என்பது பொருந்தும்.

ஜீவனையும் ஸத்ய-ஸங்கல்பன் என வேதம் சொல்கிறது; அவனாலும் நினைத்தபடி ஸங்கல்பத்தால் மட்டும் படைக்க முடியும்; ஆனால், ஸம்ஸார-நிலையில்அது முடியாது; ஏனெனில், அப்போது, புண்யபாப-கர்மத்தால், அவனது அந்ததன்மை மழுங்கி நிற்கிறது; வெளிப்படுவதில்லை.

எனவே, கனவு காணும் ஜீவன் கனவுப்பொருள்களைப்படைப்பதில்லை; பரமாத்மாதான் படைக்கிறான்.

७५.सन्ध्याधिकरणम् (३-२-१)

३१५.सन्ध्ये सृष्टिराह हि (३-२-१)

एवं कर्मानुरूपगमनागमनजन्मादियोगेन जाग्रतो जीवस्य दुःखित्वं ख्यापितम्; इदानीमस्य स्वप्नावस्था परीक्ष्यते।

स्वप्नमधिकृत्य श्रूयते,

- **''न तत्र रथा न रथयोगा न पन्थानो भवन्ति; अथ रथान् रथयोगान् पथः सृजते।**
- **न तत्राऽनन्दा मुदः प्रमुदो भवन्ति; अथाऽऽनन्दान् मुदः प्रमुदः सृजते।**
- **न तत्र वेशान्ताः पुष्करिण्यः स्रवन्त्यो भवन्ति; अथ वेशान्ताः पुष्करिण्यः स्रवन्त्यः सृजते।**
- **स हि कर्ता''** (बृ.6-3-10)[1] इति।

तत्र संशयः - किमियं रथादिसृष्टिर्जीवेनैव क्रियते; आहोस्विदीश्वरेण इति।

किं युक्तम्? सन्ध्ये सृष्टिर्जीवेनेति। कुतः? सन्ध्यं स्वप्नस्थानमुच्यते, **''सन्ध्यं तृतीयं स्वप्नस्थानम्''** (बृ.6-3-9)[2] इति वचनात्। सा तु जीवेनैव क्रियते।

75. ஸந்த்யாதிகரணம் (3-2-1)

315. ஸந்த்யே ஸ்ருஷ்டிராஹ ஹி (3-2-1)

ஏவம் கர்மாநுரூபகமநாகமநஜந்மாதியோகேந ஜாக்ரதோ ஜீவஸ்ய துःகித்வம் க்யாபிதம். இதாநீம் அஸ்ய ஸ்வப்நாவஸ்தா பரீக்ஷ்யதே. ஸ்வப்நமதிக்ருத்ய ஶ்ரூயதே,

- *''ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தாநோ பவந்தி; அத ரதாந் ரதயோகாந் பதः ஸ்ருஜதே.*
- *ந தத்ராऽநந்தா முதः ப்ரமுதோ பவந்தி; அதாऽऽநந்தாந் முதः ப்ரமுதः ஸ்ருஜதே.*
- *ந தத்ர வேஶாந்தாः புஷ்கரிண்யः ஸ்ரவந்த்யோ பவந்தி; அத வேஶாந்தாः புஷ்கரிண்யः ஸ்ரவந்த்யः ஸ்ருஜதே.*
- *ஸ ஹி கர்தா''*(ப்ரு.6-3-10)[1] இதி.

தத்ர ஸம்ஶய: - கிமியம் ரதாதிஸ்ருஷ்டி: ஜீவேநைவ க்ரியதே, ஆஹோஸ்வித் ஈஶ்வரேண இதி.

கிம் யுக்தம் ஸந்த்யே ஸ்ருஷ்டி: ஜீவேந இதி. குத: ? ஸந்த்யம் ஸ்வப்நஸ்தாநமுச்யதே, *''ஸந்த்யம் த்ருதீயம் ஸ்வப்நஸ்தாநம்''*(ப்ரு.6-3-9)[2] இதி வசநாத். ஸா து ஜீவேநைவ க்ரியதே.

75. ஸந்த்யாதிகரணம் (3-2-1)

315.(பூ)ஸந்த்யே ஸ்ருஷ்டி: ஆஹஹி (3-2-1)

ஸ்வப்நத்தில் படைப்பானது [ஜீவனால் செய்யப்படுகிறது]; ஏனெனில்[வேதம்] சொல்கிறது.

ஸங்கதி (விஷயதொடர்பு)

விழித்திருக்கும் நிலையிலுள்ள ஜீவனுக்கு, கர்மத்துக்கேற்ப போதல், வருதல், பிறத்தல் முதலியது சேருகிறபடியால், துக்கமுண்டு என்பது இப்படியாக (போனபாதத்தில்) சொல்லப்பட்டது; இப்போது, இவனுடைய ஸ்வப்ந-நிலை ஆராயப்படுகிறது.

ஸ்வப்நம் பற்றி சொல்ல ஆரம்பித்து வேதத்தில் சொல்லப்படுகிறது-

★ [1]**“அங்கு தேர்களும், தேரில் பூட்டும் குதிரைகளும், வழிகளும் இல்லை; ஆனபின்பு, தேர்களையும் தேரில் பூட்டும் குதிரைகளையும் வழிகளையும் படைக்கிறான்;”**

★ [1]**“அங்கு ஆனந்தங்களும் முத்களும் ப்ரமுத்களும் இல்லை; ஆனபின்பு, ஆனந்தங்களையும் முத்களையும் ப்ரமுத்களையும் படைக்கிறான்”.**

✍(பொருளைப் பார்ப்பதால் மட்டும் வரும் மகிழ்ச்சி ஆனந்தம் எனப்படும்; அதைத் தன்னுடையதாக நினைத்து மகிழ்தல் முத் ஆகும்; அது தன்னுடையதாகவே ஆகி தான் அனுபவிக்கும் சந்தோஷம் ப்ரமுத் ஆகும்).✍

★ [1]**“அங்கு குட்டைகளும் குளங்களும் நதிகளும் இல்லை; ஆனபின்பு குட்டைகளையும் குளங்களையும் நதிகளையும் படைக்கிறான்;”**

★ [1]**“அவன் தானே கர்த்தா (படைப்பவன்)”** என்று.

ஸம்சயம் (ஸந்தேஹம்)

அதில் ஸந்தேஹம்- தேர் முதலியதைப் படைத்தலாகிற இது ஜீவனாலேயே செய்யப்படுகிறதா? அல்லது ஈஶ்வரனாலா? என்று.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்?

ஸந்த்யே ஸ்ருஷ்டி: - ஸந்த்யத்தில் படைப்பானது ஜீவனால் செய்யப்படுகிறது என்பது; [2]**“ஸந்த்யம் த்ருதீயம் ஸ்வப்ந-ஸ்தானம்”** என்ற வேதவசநத்தால், ‘ஸந்த்யம்’ என்று ஸ்வப்நமாகிற இடம் சொல்லப்படுகிறது. அந்த ஸ்ருஷ்டியானது ஜீவனாலேயே செய்யப்படுகிறது;

"सृजते; स हि कर्ता"(बृ.6-3-10)[1] इत्याह हि। स्वप्नदृक् जीव एव तत्र प्रतीयते॥१॥

* * *

३१६.निर्मातारं चैके पुत्रादयश्च (३-२-२)

किञ्च - एनं जीवं स्वप्ने कामानां निर्मातारमेके शाखिनोऽधीयते, **"य एषु सुप्तेषु जागर्ति कामंकामं पुरुषो निर्मिमाणः"** (क.5-8)[2] इति। पुत्रादयश्च तत्र काम्यमानतया कामशब्देन निर्दिश्यन्ते; नेच्छामात्रम्। पूर्वत्र हि, **"सर्वान् कामान् छन्दतः प्रार्थयस्व"**(क.1-26)[3], **"शतायुषः पुत्रपौत्रान् वृणीष्व"**(क.1-24)[4] इति पुत्रादय एव कामाः प्रकृताः।

अतो रथादीन् जीवः स्वप्ने सृजति। जीवस्य च सत्यसङ्कल्पत्वं प्रजापतिवाक्ये श्रुतम्। अत उपकरणाद्यभावेऽपि सृष्टिरुपपद्यते॥२॥

* * *

इति प्राप्तेऽभिधीयते-

३१७.मायामात्रं तु कात्स्न्येंनानभिव्यक्तस्वरूपत्वात् (३-२-३)

ஸ்ருஜதே ஸ ஹி கர்தா(ப்ரு.6-3-10)[1] இத்யாஹ ஹி। ஸ்வப்நத்ருக் ஜீவ ஏவ தத்ர ப்ரதீயதே॥1॥

* * *

316. நிர்மாதாரம் சைகே புத்ராதயஶ்ச (3-2-2)

கிஞ்ச - ஏநம் ஜீவம் ஸ்வப்நே காமாநாம் நிர்மாதாரம் ஏகே ஶாகிந: அதீயதே, *"ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:"* (க.5-8)[2] இதி। புத்ராதயஶ்ச தத்ர காம்யமாநதயா காமஶப்தேந நிர்திஶ்யந்தே, ந இச்சாமாத்ரம்। பூர்வத்ர ஹி, *"ஸர்வாந் காமாந் சந்தத: ப்ரார்தயஸ்வ"*(க.1-26)[3], *"ஶதாயுஷ: புத்ரபௌத்ராந் வ்ருணீஷ்வ"* (க.1-24)[4] இதி புத்ராதய ஏவ காமா: ப்ரக்ருதா:। அத: ரதாதீந் ஜீவ: ஸ்வப்நே ஸ்ருஜதி। ஜீவஸ்ய ச ஸத்யஸங்கல்பத்வம் ப்ரஜாபதிவாக்யே ஶ்ருதம்। அத: உபகரணாத்யபாவேऽபி ஸ்ருஷ்டிருபபத்யதே॥2॥

* * *

இதி ப்ராப்தே அபிதீயதே -

317. மாயாமாத்ரம் து கார்த்ஸ்ந்யேநாநபிவ்யக்தஸ்வரூபத்வாத் (3-2-3)

ஏன்?

ஆஹ ஹி (ஏனெனில் வேதம் சொல்கிறது) - ஏனெனில், [1]**''படைக்கிறான்; அவன் தானே கர்த்தா(படைப்பவன்)''** என்று வேதம் சொல்கிறது! ஸ்வப்னம் காணும் ஜீவன்தான் அங்கு தெரியவருகிறான்.

('ஸ்வபிதி- ஸ்வப்நம் காண்கிறான் என்று முதலில் சொல்ல ஆரம்பித்தது; தேர் முதலியதைப் படைக்கிறான் என்கிறது; அதை ஸ்வப்நத்தில் காண்கிறான் என்று பொருள்; ஸ ஹி கர்தா - அவன் தானே கர்தா என்று பின்னர் சொல்கிறது. அவன்தான்- காண்பவன்தான், கர்த்தா - அதை ஸ்ருஷ்டி செய்பவன் என்று அர்த்தம்; இப்படி பூர்வபக்ஷத்தில் பொருள்)

◆ ◆ ◆ ◆

316.(பூ) நிர்மாதாரம் ச ஏகே புத்ராதய: ச (3-2-2)

ஒரு ஶாகையினரும்[காமங்களைப்] படைப்பவனாக [ஜீவனைச் சொல்கின்றனர்]; புத்ரர் முதலியவரும் [காமம் எனப்படுவர்].

மேலும், [2]**''இவர்கள் உறங்கும் போது காமம் காமம் நிர்மாணம் செய்பவனாய் எந்த புருஷன் விழித்திருக்கிறானோ''** என்று ஸ்வப்நத்தில் காமங்களை நிர்மாணம் செய்பவனாக இந்த ஜீவனை ஒரு ஶாகையினர் ஓதுகின்றனர்.

அங்கு 'காமம்' என்ற சொல்லால், விருப்பம் மட்டும் குறிப்பிடப்படவில்லை; ''காம்யந்தே இதி காம: - விரும்பப்படுவது காமம் ஆகும்'' என்ற முறையில், புத்ரர் முதலியவரும் காமம் என குறிப்பிடப்படுகின்றனர்; முன்னர், [3]**''விருப்பப்படி எல்லா காமங்களையும் வேண்டிக்கொள்''**; [4]**''நூறு ஆயுள் உடைய புத்ர-பௌத்ரர்களை கேட்டுப் பெற்றுக்கொள்''** என்று புத்ரர் முதலியவர்தாம் காமங்களாக சொல்லப்பட்டு வருகின்றனர். (காமம் காமம் - விரும்பப்படும் எல்லாவற்றையும் - என்று பூர்வபக்ஷத்தில் அர்த்தம்.)

எனவே, ஸ்வப்நத்தில் தேர் முதலியவற்றை ஜீவன் படைக்கிறான். ஜீவன் ஸத்யஸங்கல்பன் (தடை இல்லாமல் நினைத்ததை நடத்திக்கொள்ளக் கூடியவன்) என்பது, ப்ரஜாபதி-வாக்யத்தில் வேதத்தில்சொல்லப்பட்டது; எனவே, (ஸ்வப்நத்தில்) உபகரணம் இல்லாவிட்டாலும், அவன் ஸ்ருஷ்டி செய்வது சரியாகும்.

◆ ◆ ◆ ◆

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிடும் போது, ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது-

317. மாயாமாத்ரம் து கார்த்ஸ்ந்யேந அநபிவ்யக்த-ஸ்வரூபத்வாத் (3-2-3)

அதல்ல; ஸ்வப்ந-பொருளானது ஆச்சர்யம் மட்டுமே; [ஜீவன்] மொத்தமாக வெளிப்படாத ஸ்வரூபம் உடையவன் ஆவதால், [படைப்பவன் அல்ல].

तु शब्दः पक्षं व्यावर्तयति।

स्वप्ने रथपुष्करिण्याद्यर्थजातं **मायामात्रं** परमपुरुषसृष्टमित्यर्थः। मायाशब्दो ह्याश्चर्यवाची, **''जनकस्य कुले जाता देवमायेव निर्मिता''**(रा.बा.1-27)[1] इत्यादिषु तथा दर्शनात्। अत्रापि -

- **''न तत्र रथा न रथयोगा न पन्थानः''**(बृ.6-3-10)[2] सकलेतरपुरुषानुभाव्यतया न भवन्तीत्यर्थः(वन्ति?),
- **''अथ रथान् रथयोगान् पथः सृजते''**(बृ.6-3-10)[3] स्वप्नदृगनुभाव्यतया तत्कालमात्रावसानान् सृजते इत्याश्चर्यरूपत्वमेवाह।

एवंविधाश्चर्यरूपा सृष्टिः सत्यसङ्कल्पस्य परमपुरुषस्यैवोपपद्यते; न जीवस्य। तस्य सत्यसङ्कल्पत्वादियुक्तस्यापि संसारदशायां कात्स्न्र्येनानभिव्यक्तस्वरूपत्वान्न जीवस्य तथाविधाश्चर्यसृष्टिरुपपद्यते।

''कामं कामं पुरुषो निर्मिमाणः''(क.5-8)[4] इति च परमपुरुषमेव निर्मातारमाह

- **''य एषु सुप्तेषु जागर्ति''**(क.5-8)[5],
- **''तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते। तस्मिन् लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन''**(क.5-8)[6] इत्युपक्रमोपसंहारयोः परमपुरुषासाधारणस्वभावप्रतीतेः।

து ஶப்த: பக்ஷம் வ்யாவர்தயதி।

ஸ்வப்நே ரதபுஷ்கரிண்யாத்யர்தஜாதம் *மாயாமாத்ரம்* பரமபுருஷஸ்ருஷ்டமித்யர்த:। மாயாஶப்தோ ஹி ஆஶ்சர்யவாசீ, *''ஜநகஸ்ய குலே ஜாதா தேவமாயேவ நிர்மிதா''*(ரா.பா1-27)[1] இத்யாதிஷு ததா தர்ஶநாத்। அத்ராபி -

- *''ந தத்ர ரதா ந ரதயோகா ந பந்தாந:''*(ப்ரு.6-3-10)[2]- ஸகலேதரபுருஷாநுபாவ்யதயா ந பவந்தீத்யர்த: (வந்தி),
- *''அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே''*(ப்ரு.6-3-10)[3] ஸ்வப்நத்ருகநுபாவ்யதயா தத்காலமாத்ராவஸாநாந் ஸ்ருஜதே இதி ஆஶ்சர்யரூபத்வமேவாஹ।

ஏவம்விதாஶ்சர்யரூபா ஸ்ருஷ்டி: ஸத்யஸங்கல்பஸ்ய பரமபுருஷஸ்யைவோபபத்யதே, ந ஜீவஸ்ய। தஸ்ய ஸத்யஸங்கல்பத்வாதியுக்தஸ்யாபி ஸம்ஸாரதஶாயாம் கார்த்ஸ்ந்யேந அநபிவ்யக்தஸ்வரூபத்வாத் ந ஜீவஸ்ய ததாவிதாஶ்சர்யஸ்ருஷ்டிருபபத்யதே।

''காமம் காமம் புருஷோ நிர்மிமாண:'' (க.5-8)[4] இதி ச பரமபுருஷமேவ நிர்மாதாரமாஹ।

- *''ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்தி''*(க.5-8)[5],
- *''ததேவ ஶுக்ரம் தத்ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே। தஸ்மிந் லோகா: ஶ்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கஶ்சந''*(க.5-8)[6] இத்யுபக்ரமோபஸம்ஹாரயோ: பரமபுருஷாஸாதாரணஸ்வபாவப்ரதீதே:।

'து' என்ற சொல், முன் சொன்ன பக்ஷத்தைக் களைகிறது;

ஸ்வப்நத்தில் தேர் குளம் முதலிய பொருள்வகை எல்லாம் மாயா மட்டுமேயாக பரமாத்மாவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது என்று பொருள். 'மாயா' என்ற சொல் ஆச்சர்யம் என்ற பொருளைச் சொல்வதாகும்; ஏனெனில், [1]**''(சீதா பிராட்டியானவர்) ஜநகருடைய குலத்தில் உதித்தவர்; தேவர்களின் மாயையே உருவாக்கப்பட்டது போன்றவர்''** முதலியவற்றில் அப்படியே காண்பதால்.

இங்கும்,

- [2]**''அங்கு தேர்களும், தேரில் பூட்டும் குதிரைகளும், வழிகளும் இல்லை''** - மீதி எல்லா மனிதரும் அனுபவிக்கும் படியாக இல்லை என்று பொருள்.
- [3]**''ஆனபின்பும், தேர்களையும் தேரில் பூட்டும் குதிரைகளையும் வழிகளையும் படைக்கிறான்''** - ஸ்வப்நம் காண்பவன் மட்டும் அனுபவிக்கும் படியாக, அந்த காலத்தில் மட்டும் முடிவடையும் பொருள்களை படைக்கிறான் என்று ஆச்சர்யமாவதைத்தான் சொல்கிறது;

இப்படிப்பட்ட ஆச்சர்யமான ஸ்ருஷ்டியானது, ஸத்யஸங்கல்பனான பரமபுருஷனுக்கு மட்டுமே வரும்; ஜீவனுக்கு வராது. அந்த ஜீவன், ஸ்வரூபத்தில் ஸத்யஸங்கல்பனாதல் முதலியதுடன் கூடியிருந்தாலும், ஸம்ஸார-நிலையில் மொத்தமாக அந்த தன்மை வெளிப்படாதவனாக இருக்கிறான்; ஆதலால், ஜீவனுக்கு அப்படிப்பட்ட ஆச்சர்யமான ஸ்ருஷ்டி வராது. (விஶ்வாமித்ரர் முதலிய சிலருக்கு விழிப்பு நிலையில் ஓரளவு ஸத்யஸங்கல்ப தன்மை வெளிப்பட்டாலும், ஸ்வப்ந நிலையில் எல்லாருக்கும் முழுதுமாகவே மறைக்கப்பட்டு இருக்கும்)

[4]**''காமம் காமம் நிர்மாணம் செய்யும் புருஷன்''** என்றும் பரமபுருஷனே நிர்மாணம் (படைப்பு) செய்பவனாக சொல்கிறது; ஏனெனில்,

- [5]**''இவர்கள் உறங்கும் போது யார் விழித்திருக்கிறானோ''**,
- [6]**''அதுவே சுக்ரம்; அது ப்ரஹ்மம், அதுவே அம்ருதமாக சொல்லப்படுகிறது; அவனிடம் எல்லா உலகத்தினரும் அண்டியுள்ளனர்; யாரும் அவனை மீறுவதில்லை''**

என்று ஆரம்பத்திலும் முடிவிலும் பரம-புருஷனுடைய தனிப்பட்ட தன்மைகள் தெரிகின்றன.

(காமம் காமம் நிர்மாணம் செய்பவன் - நினைத்து நினைத்து, ஸங்கல்பத்தால் படைப்பவன் என்று பொருள்).

- **"अथ वेशान्तान् पुष्करिण्यः स्रवन्त्यः सृजते। स हि कर्ता"** (बृ.6-3-10)[1] इति च, तया श्रुत्या ऐकार्थ्यात् परमपुरुषमेव कर्तारमाह॥३॥

◆

स्वाभाविकं चेत् जीवस्यापहतपाप्मत्वादिकम्, कुतस्तन्नाभिव्यज्यत इत्यत आह -

३१८. पराभिध्यानात्तु तिरोहितम्; ततो ह्यस्य बन्धविपर्ययौ (३-२-४)

तु शब्दः शङ्काव्यावृत्त्यर्थः, **पराभिध्यानात्** - परमपुरुषसङ्कल्पात् अस्य जीवस्य स्वाभाविकं रूपं तिरोहितम्। अनादिकर्मपरम्परया कृतापराधस्य ह्यस्य स्वाभाविकं कल्याणरूपं परमपुरुषस्तिरोधापयति; **ततः** तत्सङ्कल्पादेव हि **अस्य** जीवस्य बन्धमोक्षौ श्रुतौ,

- **"यदा ह्येवैष एतस्मिन्नदृश्येऽनात्म्येऽनिरुक्तेऽनिलयनेऽभयं प्रतिष्ठां विन्दते, अथ सोऽभयं गतो भवति। यदा ह्येवैष एतस्मिन् उदरमन्तरं कुरुते, अथ तस्य भयं भवति"** (तै.1.आन.7)[2]

"அத வேஶாந்தாந் புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்ய: ஸ்ருஜதே। ஸ ஹி கர்தா" (ப்ரு.6-3-10)[1] இதி ச, தயா ஶ்ருத்யா ஐகார்த்யாத் பரமபுருஷமேவ கர்தாரமாஹ।।3।।

◆

ஸ்வாபாவிகம் சேத் ஜீவஸ்ய அபஹதபாப்மத்வாதிகம், குத: தத் ந அபிவ்யஜ்யத இத்யத ஆஹ -

318.பராபித்யாநாத்து திரோஹிதம், ததோ ஹ்யஸ்ய பந்தவிபர்யயௌ(3-2-4)

***து* ஶப்த:** ஶங்காவ்யாவ்ருத்த்யர்த:। *பராபித்யாநாத்* - பரமபுருஷஸங்கல்பாத் *அஸ்ய* ஜீவஸ்ய ஸ்வாபாவிகம் ரூப திரோஹிதம்। அநாதிகர்மபரம்பரயா க்ருதாபராதஸ்ய ஹி அஸ்ய ஸ்வாபாவிகம் கல்யாணரூபம் பரமபுருஷ: திரோதாபயதி, *தத:* தத்ஸங்கல்பாதேவ ஹி அஸ்ய ஜீவஸ்ய பந்தமோக்ஷௌ ஶ்ருதௌ,

- ***"யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருஶ்யேऽநாத்ம்யேऽநிருக்தேऽநிலயநேऽபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே, அத ஸோऽபயம் கதோ பவதி। யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந் உதரமந்தரம் குருதே, அத தஸ்ய பயம் பவதி"*** (தை.1.ஆந.7)[2],

★ **[1]"ஆனபின்பு குட்டைகளையும் குளங்களையும் நதிகளையும் படைக்கிறான்; அவன் தானே கர்த்தா (படைப்பவன்)"**

என்பதும், அந்த வேத-வாக்யத்துடன் ஒரே பொருளில் ஆவதால், பரம-புருஷனையே படைப்பவனாகச் சொல்கிறது.

◆ ◆ ◆ ◆

கேள்வி - அபஹதபாப்மத்வம் (புண்யபாபகர்மங்களுக்கு கட்டுப்படாமை) முதலியது ஜீவனுக்கு இயல்பானது என்றால், அது ஏன் வெளிப்படவில்லை?

பதில் - என்பதற்கு பதில் சொல்கிறார்-

318.பராபித்யாநாத் து திரோஹிதம் தத: ஹி அஸ்ய பந்த-விபர்யயௌ (3-2-4)

பரமனுடைய ஸங்கல்பத்தால் மறைக்கப்படுகிறது; அதனால் தானே இவனுக்கு ஸம்ஸார-பந்தமும் அதில்லாமையும்

'து' என்றசொல், கேள்வியைக் களைவதற்காகஆகும்.

இந்த ஜீவனுடைய இயல்பான ஸ்வரூபமானது, (கர்மத்துக்கு வசப்படாமை ஸத்யஸங்கல்பத்தன்மை முதலியதுடன் கூடிய ஸ்வரூபமானது)

பராபித்யாநாத் - பரம-புருஷனுடைய ஸங்கல்பத்தால்;

திரோஹிதம் - மறைக்கப்படுகிறது.

அநாதியாக கர்ம-பரம்பரையால் அபராதம் செய்திருக்கும் இவனது இயல்பானதான மங்களமான ஸ்வரூபத்தை பரம-புருஷன் மறைத்துவிடுகிறான்.

தத: ஹி - அந்த ஸங்கல்பத்தால் தானே

அஸ்ய - இந்த ஜீவனுக்கு

பந்தவிபர்யயௌ - பந்தமும் மோக்ஷமும் வேதத்தில் சொல்லப்பட்டன-

★ **[2]"எப்போது இவன் அபயத்துக்காக (ஸம்ஸாரம் தொலைவதற்காக), காண முடியாததும், ஶரீரமற்றதும், ஶரீரத்தொடர்புள்ள பெயர்கொண்டு சொல்ல முடியாததும், ஆதாரமான இருப்பிடம் அற்றதும் ஆன இந்த ப்ரஹ்மத்திடம் நிலையான த்யாந-நிலைபெறுகிறானோ, அப்போது அபயம் அடைந்தவன் ஆகிறான்; எப்போது இந்த பரமாத்மாவிடம் த்யாநத்தில் சற்றே இடைவிட்டுப் போதலைச் செய்கிறானோ, அவனுக்கு பயமாகிற ஸம்ஸாரம் வரும்",**

- **''एष ह्येवानन्दयाति''**(तै.1.आन.7)[1],
- **''भीषाऽस्माद्वातः पवते''** (तै.1.आन.8)[2] इत्यादिषु ॥४॥

३१९. देहयोगाद्वा सोऽपि (३-२-५)

सोऽपि तिरो(धान)भावो देहयोगद्वारेण वा भवति, सूक्ष्माचिच्छक्तियोगद्वारेण वा। सृष्टिकाले देहावस्थेनाचिद्वस्तुना संयोगाद्भवति ; प्रलयकाले नामरूपविभागानर्हाति-सूक्ष्माचिद्वस्तुयोगात्। अतोऽनभिव्यक्तस्वरूपत्वात् स्वप्ने जीवो न रथादीन् सङ्कल्पमात्रेण स्रष्टुं शक्नोति।

''तस्मिन् लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन''(क.5-8)[3] इति सर्वेषु-सुप्तेषु जागरणं सर्वलोकाश्रयत्वमित्यादयो हि परमपुरुषस्यैव सम्भवन्ति। अतो जीवानामल्पाल्पकर्मानुगुणफलानुभवार्थं तावन्मात्रकालावसानान् तदेकानुभाव्यान् अर्थान् उत्पादयति॥५॥

३२०. सूचकश्च हि श्रुतेराचक्षते च तद्विदः (३-२-६)

- *''ஏஷ ஹ்யேவாநந்தயாதி''*(தை.1.ஆந.7)[1],
- *''பீஷாऽஸ்மாத்வாத: பவதே''*(தை.1.ஆந.8)[2] இத்யாதிஷு।। 4।।

319.தேஹயோகாத்வா ஸோऽபி(3-2-5)

ஸோऽபி திரோ(தாந)பாவ: தேஹயோகத்வாரேண வா பவதி, ஸூக்ஷ்மாசிச்சக்தியோகத்வாரேண வா, ஸ்ருஷ்டிகாலே தேஹாவஸ்தேந அசித்வஸ்துநா ஸம்யோகாத்பவதி, ப்ரலயகாலே நாமரூபவிபாகாநர்ஹாதிஸூக்ஷ்மாசித்வஸ்துயோகாத்। அத: அநபிவ்யக்தஸ்வரூபத்வாத் ஸ்வப்நே ஜீவ: ந ரதாதீந் ஸங்கல்பமாத்ரேண ஸ்ரஷ்டும் ஶக்நோதி।

''தஸ்மிந் லோகா: ஶ்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கஶ்சந''(க.5-8)[3] இதி ஸர்வேஷு ஸுப்தேஷு ஜாகரணம் ஸர்வலோகாஶ்ரயத்வம் இத்யாதயோ ஹி பரமபுருஷஸ்யைவ ஸம்பவந்தி। அத: ஜீவாநாம் அல்பால்பகர்மாநுகுணபலாநுபவார்தம் தாவந்மாத்ரகாலாவஸாநாந் ததேகாநுபாவ்யாந் அர்தாந் உத்பாதயதி।। 5।।

320. ஸூசகஶ்ச ஹி ஶ்ருதேராசக்ஷதே ச தத்வித: (3-2-6)

- [1]**''இவன்தான் மோக்ஷ-ஆனந்தமளிக்கிறான்''**,
- [2]**''இவனிடமிருந்து பயத்தால், காற்று வீசுகிறது''**

முதலியவற்றில் (வேதத்தில்சொல்லப்பட்டன). .

◆ ◆ ◆ ◆

319. தேஹயோகாத் வா ஸ: அபி (3-2-5)

அந்த ஸ்வரூபம் மறைதலும் ஶரீரம் சேர்வதன் மூலமாக ஆகலாம்

அந்த (ஸத்யஸங்கல்ப-தன்மையுடன் கூடிய ஜீவ-ஸ்வரூபம் வெளிப்படாமல்) மறைந்திருத்தலும் ஶரீரம் சேர்வதன் மூலமாக வரும்; அல்லது, ஸூக்ஷ்மமான அசேதனமாகிற விசேஷணம் சேர்வதன் மூலமாகவோ வரும்.

ஸ்ருஷ்டி-காலத்தில் ஶரீர-நிலையில் உள்ள அசேதன-பொருளோடு சேர்வதால் ஜீவ-ஸ்வரூபம் வெளிப்படாமல் மறைவது வரும்.

ப்ரளய-காலத்தில் நாம-ரூபப்பிரிவுக்கு ஏற்றதாகாத மிகவும் ஸூக்ஷ்மமான அசேதனப் ப்ரக்ருதி-பொருளுடன் சேர்ந்து இருப்பதால் ஸ்வரூபம் மறைவது வரும். (ஸ்ருஷ்டிகாலத்தில் ஜீவனுக்கு ஶரீரம் இருப்பதால், அவனது ஸ்வரூபம் மறைக்கப் படுகிறது; பிரளயத்தில் ஜீவனுக்கு ஶரீரம் கிடையாது; ஆனாலும் அசேதந பொருளுடன் சேர்ந்திருப்பான்; அதனால் அவனது ஸ்வரூபம் மறைக்கப் படும்)

எனவே, ஸ்வரூபம் வெளிப்படாதவனாதலால், ஸ்வப்நத்தில் ஜீவன், ஸங்கல்பத்தால் மட்டும் தேர்முதலியதைப் படைக்க வல்லவன் அல்ல.

[3]**''அவனிடம் எல்லா உலகத்தினரும் அண்டியுள்ளனர்; யாரும் அவனை மீறுவதில்லை''** என்று, எல்லாரும் உறங்கும் போது விழித்திருத்தல், எல்லா உலகத்தினருக்கும் ஆதாரமான இருப்பிடமாய் இருத்தல் முதலியவை பரம-புருஷனுக்கு மட்டுமே வரும்.

எனவே, ஜீவர்களுக்கு, மிகமிக அல்பமான கர்மத்துக்கேற்ப பலன் அனுபவிப்பதன் பொருட்டு, அவ்வளவு மட்டுமேயான காலத்தில் முடிந்துவிடுபவையும், அவன் மட்டும் அனுபவிக்கக்கூடியவையும் ஆன பொருள்களை பரம-புருஷன் உண்டாக்குகிறான்.

◆ ◆ ◆ ◆

320.ஸூசக: ச ஹி ஶ்ருதே: ஆசக்ஷதே ச தத்வித:(3-2-6)

[ஸ்வப்நமானது ஶுப-அஶுபங்களைக்] குறிப்பதாகவும் வேதத்திலிருந்து தெரிகிறது; அது அறிந்தவர்களும் சொல்கின்றனர்.

इतश्च स्वाप्ना अर्था न जीवसङ्कल्पपूर्वकाः ; यतः स्वप्नोऽभ्युदयानभ्युदययोः सूचकः श्रुतेरवगम्यते,

- **''यदा कर्मसु काम्येषु स्त्रियं स्वप्नेषु पश्यति ;**
  समृद्धिं तत्र जानीयात् तस्मिन् स्वप्ननिदर्शने''(छा.5-2-9)[1] इति,
- **''अथ स्वप्नाः - पुरुषं कृष्णं कृष्णदन्तं पश्यति ; स एनं हन्ति''** (ऐ.आर.3-2-4)[2] इत्यादेश्च।

स्वप्नाध्यायविदश्च स्वप्नं शुभाशुभयोः सूचकमाचक्षते। सूचकत्वं च स्वसङ्कल्पायत्तस्य नोपपद्यते। तथा च अशुभस्यानिष्टत्वात् शुभस्य सूचकमेव सृष्ट्वा पश्येत्।

अतः स्वप्ने सृष्टिरीश्वरेणैव कृता ॥६॥

इति सन्ध्याधिकरणम्॥

இதஶ்ச ஸ்வாப்நா அர்தா: ந ஜீவஸங்கல்பபூர்வகா:, யத: ஸ்வப்ந: அப்யுதயாநப்யுதயயோ: ஸூசக: ஶ்ருதேரவகம்யதே,

- *''யதா கர்மஸு காம்யேஷு ஸ்த்ரியம் ஸ்வப்நேஷு பஶ்யதி। ஸம்ருத்திம் தத்ர ஜாநீயாத் தஸ்மிந் ஸ்வப்நநிதர்ஶநே।।''*(சா.5-2-9)[1] இதி,
- *''அத ஸ்வப்நா: - புருஷம் க்ருஷ்ணம் க்ருஷ்ணதந்தம் பஶ்யதி, ஸ ஏநம் ஹந்தி''* (ஐ.5-2-9)[1] இத்யாதேஶ்ச।

ஸ்வப்நாத்யாயவிதஶ்ச ஸ்வப்நம் ஶுபாஶுபயோ: ஸூசகமாசக்ஷதே। ஸூசகத்வம் ச ஸ்வஸங்கல்பாயத்தஸ்ய நோபபத்யதே। ததா ச அஶுபஸ்ய அநிஷ்டத்வாத் ஶுபஸ்ய ஸூசகமேவ ஸ்ருஷ்ட்வா பஶ்யேத்। அத: ஸ்வப்நே ஸ்ருஷ்டி: ஈஶ்வரேணைவ க்ருதா।। 6।।

இதி ஸந்த்யாதிகரணம்।।

* * *

இதனாலும், ஸ்வப்நத்தில் தோன்றும் பொருள்கள் ஜீவனது ஸங்கல்பத்தால் வந்தவையல்ல; ஏனெனில், ஸ்வப்நமானது, செழிப்பையும் செழிப்பின்மையையும் குறிப்பதாக வேதத்திலிருந்து தெரிகிறது -

- [1]**''பலன்களில் ஆசைப்பட்டு, காம்ய-செயல்கள் செய்யும் ஸமயத்தில், எப்போது ஸ்வப்நங்களில் பெண்ணை பார்க்கி- றானோ, ஸ்வப்நம் காணும் அவனிடம் அவ்விஷயத்தில் செழிப்புவரும் என அறிந்துகொள்''** என்பதாலும்;

- [2]**''இனி ஸ்வப்நங்கள் சொல்லப்படுகின்றன - கறுப்பானவனும் கறுத்த பல் உடையவனும் ஆன புருஷனைப் பார்க்கிறானானால், அவன் இவனை அழிக்கிறான்''**

முதலியதாலும் (ஆன வேதத்திலிருந்து தெரிகிறது).

(வேதத்திலும், ஸ்ம்ருதியிலும் உள்ள) ஸ்வப்ந-அத்யாயம் அறிந்தவர்களும், ஸ்வப்நமானது ஶுப-அஶுப-பலன்களைஉணர்த்துவதாகச்சொல்கின்றனர்.

தனது ஸங்கல்பத்தால் வந்ததானது (தான்படைக்கும் பொருளானது), ஶுப-அஶுப-பலனை உணர்த்துவதாக ஆகாது; அப்படி ஆவதானால், அஶுப-பலனானது தனக்கு வேண்டாதானபடியால், ஶுப-பலனை உணர்த்துவதை மட்டுமே இவன் படைத்துப் பார்ப்பான்!

எனவே, ஸ்வப்நத்தில் ஸ்ருஷ்டியானது ஈஶ்வரனால் செய்யப்படுவது ஆகும்.

* * *

ஸந்த்யாதிகரணம் முற்றிற்று.

* * *

76.ததபாவாதிகரணம்(3-2-2)

முன்குறிப்பு

உறங்கும்போது ஜீவாத்மா எந்த இடத்தில் இருக்கிறான் என்பது விசாரம்; வேதவாக்யங்கள் பலவிதமாக சொல்வதால் ஸந்தேஹம்; மூன்று வேதவாக்யங்களில் மூன்று விதமாக சொல்கிறது -

i) நாடிகளில் உறங்குகிறான்.

ii) புரீதத் எனப்படும் மாம்ஸத்தில் உறங்குகிறான்.

iii) பரப்ரஹ்மத்தில் உறங்குகிறான்.

இப்படி ஜீவன் உறங்கும் இடமாக மூன்று இடங்களை வேதம் சொல்கிறது.

பூர்வபக்ஷம் - ஜீவன் ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு இடத்தில் இருந்து உறங்குகிறான். மூன்றில் ஏதாவது ஒன்றில் உறங்குவான்.

ஸித்தாந்தம் - எப்போதுமே, ஜீவன் உறங்கும்போது மூன்றுமே சேர்த்து இடமாகும்.

கேள்வி - ஒருவனே ஒரே சமயத்தில் எப்படி மூன்று இடங்களில் இருக்க முடியும்?

பதில் - ஒன்றன் மேல் ஒன்றாக மூன்றிலும் இருக்கிறான்.

மாடியில் கட்டிலில் மெத்தையில் உறங்குகிறான் என்று சொன்னால் மூன்றிலும் உறங்குவது சரியாகலாம்; மாடியின் மேல் கட்டில் உள்ளது; கட்டிலின் மேல் மெத்தை உள்ளது; அந்த மெத்தையில் உறங்குகிறான் என்று அர்த்தம் ஆகலாம்; அதுபோல, இங்கும் நாடிகளில் புரீதத்தில், ப்ரஹ்மத்தில் இருந்து உறங்குகிறான்; அதாவது நாடிகளுக்கு மேல் புரீதத் உள்ளது; அதற்கு மேல் ப்ரஹ்மம் உள்ளது; அதில் இருந்து உறங்குகிறான் என்று கருத்து.

ஸூத்ரத்தில், நாடிகளிலும் பரமாத்மாவிலும் உறங்குகிறான் என்று குறிப்பிடப் பட்டுள்ளது; 'ச' (அதிலும்) என்ற பதம் இருப்பதால், புரீதத்திலும் என்ற பொருள் கிடைக்கும்.

இந்த மூன்றில் ப்ரஹ்மம்தான் மெத்தை போன்று நேரடியான உறங்குமிடம்; அதை இரண்டாவது ஸூத்ரம் சொல்கிறது.

७६.तदभावाधिकरणम् (३-२-२)

३२१.तदभावो नाडीषु तच्छ्रुतेरात्मनि च (३-२-७)

इदानीं सुषुप्तिस्थानं परीक्ष्यते। इदमाम्नायते,

- “तद्यत्रैतत् सुप्तः समस्तः सम्प्रसन्नः स्वप्नं न विजानाति, आसु तदा नाडीषु सृप्तो भवति” (छा.8-6-3)[1] इति;
- तथा, “अथ यदा सुषुप्तो भवति, यदा न कस्यचन वेद, हिता नाम नाड्यो द्वासप्ततिसहस्राणि हृदयात् पुरीततमभिप्रतिष्ठन्ते, ताभिः प्रत्यवसृप्य पुरीतति शेते”(बृ.4-1-19)[2] इति;
- तथा - “यत्रैतत्पुरुषः स्वपिति नाम, सता सोम्य तदा सम्पन्नो भवति”(छा.6-8-1)[3] इति।

एवं नाड्यः पुरीतद्ब्रह्म च सुषुप्तिस्थानत्वेन श्रूयन्ते; किमेषां विकल्पः समुच्चयो वेति विशये -

निरपेक्षत्वप्रतीतेः युगपदनेकस्थानवृत्त्यसम्भवाच्च विकल्पः इति प्राप्ते -

---

76 ததபாவாதிகரணம் (3-2-2)

321.ததபாவோ நாடீஷு தச்ச்ருதேராத்மநி ச (3-2-7)

இதாநீம் ஸுஷுப்திஸ்தாநம் பரீக்ஷ்யதே। இதமாம்நாயதே,

- *“தத்யத்ரைதத் ஸுப்த: ஸமஸ்த: ஸம்ப்ரஸந்ந: ஸ்வப்நம் ந விஜாநாதி, ஆஸு ததா நாடீஷு ஸ்ருப்தோ பவதி”*(சா.8-6-3)[1] இதி,
- ததா, *“அத யதா ஸுஷுப்தோ பவதி, யதா ந கஸ்யசந வேத, ஹிதா நாம நாட்யோ த்வாஸப்ததிஸஹஸ்ராணி ஹ்ருதயாத் புரீததமபிப்ரதிஷ்டந்தே, தாபி: ப்ரத்யவஸ்ருப்ய புரீததி ஶேதே”*(ப்ரு.4-1-19)[2] இதி,
- ததா - *“யத்ரைதத் புருஷ: ஸ்வபிதி நாம, ஸதா ஸோம்ய ததா ஸம்பந்நோ பவதி”*(சா.6-8-1)[3] இதி।

ஏவம் நாட்ய: புரீதத் ப்ரஹ்ம ச ஸுஷுப்திஸ்தாநத்வேந ஶ்ரூயந்தே; கிம் ஏஷாம் விகல்ப: ஸமுச்சயோ வேதி விஶயே -

நிரபேக்ஷத்வப்ரதீதே: யுகபத் அநேகஸ்தாநவ்ருத்த்யஸம்பவாச்ச விகல்ப: இதி ப்ராப்தே -

76.ததபாவாதிகரணம்(3-2-2)

321.ததபாவ: நாடீஷு தச்ச்ருதே: ஆத்மநி ச (3-2-7)

ஸ்வப்நம் இல்லாமையானது[உறக்கமானது], நாடிகளிலும், [புரீதத்திலும்] பரமாத்மாவிலும் ஆகும்; அதை வேதம் சொல்வதால்.

ஸங்கதி (விஷய-தொடர்பு)

இப்போது உறங்கும் இடம் ஆராயப்படுகிறது.

விஷயவாக்யம்

இது ஓதப்படுகிறது-

- [1]**''எப்போது இந்த ஜீவன் நன்கு ஒய்வுக்குத் தள்ளப்பட்டவனாய் குழப்பம் அற்றவனாய் ஸ்வப்ந-ஜ்ஞானம் பெறுவதில்லையோ, அப்போது, இந்த நாடிகளில் போய் சேர்ந்தவன் ஆகிறான்''** - என்று.
- [2]அப்படியே, **''ஹிதா: என்று பெயருடைய 72,000 நாடிகள் ஹ்ருதயத்திலிருந்து புரீதத்தினை சுற்றி போகின்றன; (ஜீவன்) எப்போது உறங்குபவன் ஆகிறானோ, எப்போது எதுவும் தெரிவதில்லையோ, அப்போது, அந்த நாடிகள் மூலம் சென்று புரீதத்தில் ஶயனிக்கிறான்''**. (புரீதத் என்பது ஒரு மாம்ஸ-பிண்டம்)
- அப்படியே, [3]**''எப்போது இந்த மனிதன் உறங்குகிறானோ, அப்போது ஸத்-ப்ரஹ்மத்துடன் சேர்ந்தவன் ஆகிறான்''** என்று.

இப்படியாக, நாடிகளும், புரீதத்தும், ப்ரஹ்மமும் (ஜீவனுக்கு) உறங்கும் இடமாக வேதத்தில் சொல்லப்படுகின்றன.

ஸந்தேஹம்

இவற்றுக்கு விகல்பமா அல்லது ஸமுச்சயமா? என்று ஸந்தேஹம்

✍*(விகல்பம் - மூன்றில் ஏதாவது ஒன்று ஆவது; ஸமுச்சயம்- மூன்றும் சேர்ந்து ஆவது. நாடிகளோ அல்லது புரீதத்தோ அல்லது ப்ரஹ்மமோ எதுவேண்டுமானாலும் தனித்தனியாக உறங்கும் இடம் ஆகலாம் என்பது விகல்பம்; மூன்றும் சேர்ந்து உறங்கும் இடமாகும் என்பது ஸமுச்சயம்)*✍

இப்படி ஸந்தேஹம் வரும் போது,

பூர்வபக்ஷம்

ஒன்றுக்கொன்று மற்றொன்றின் தேவையில்லாததாக தெரிவதாலும், ஒரே ஸமயத்தில் பல இடத்தில் இருப்பது முடியாததாலும் விகல்பம்தான் (மூன்றில் எதுவேண்டுமானாலும் உறங்கும் இடம் ஆகலாம்) என்று பூர்வபக்ஷம் நேரிட,

उच्यते - **तदभावः** इति। **तदभावः** - स्वप्नाभावः सुषुप्तिः, नाडीषु पुरीतति आत्मनि च भवति। एषां स्थानानां समुच्चय इत्यर्थः।

कुतः? **तच्छ्रुतेः** - त्रयाणां स्थानत्वश्रुतेः। न च कार्यभेदेन समुच्चये सम्भवति पाक्षिकबाधगर्भविकल्पो न्याय्यः। सम्भवति च प्रासादखट्वापर्यङ्कवत् नाड्यादीनां कार्यभेदः। तत्र नाडीपुरीततौ प्रासादखट्वास्थानीयौ, ब्रह्म तु पर्यङ्कस्थानीयम्। अतो ब्रह्मैव साक्षात्सुषुप्तिस्थानम्॥७॥

* * *

३२१.अतः प्रबोधोऽस्मात् (३-२-८)

यतो ब्रह्मैव साक्षात्सुषुप्तिस्थानम् **अतः**, **अस्मात्** - ब्रह्मणः एषां जीवानां **प्रबोधः** श्रूयमाण उपपद्यते, **"सत आगम्य न विदुः सत आगच्छामहे"** (छा.6-10-2)[1] इत्यादिषु॥८॥

* * *

इति तदभावाधिकरणम् ॥२॥

உச்யதே - *ததபாவ:* -இதி। ததபாவ: - ஸ்வப்நாபாவ: ஸுஷுப்தி:, நாடீஷு புரீததி ஆத்மநி ச பவதி। ஏஷாம் ஸ்தாநாநாம் ஸமுச்சய இத்யர்த:।

குத:? *தச்ச்ருதே:* - த்ரயாணாம் ஸ்தாநத்வஶ்ருதே:। ந ச கார்யபேதேந ஸமுச்சயே ஸம்பவதி பாக்ஷிகபாதகர்பவிகல்போ ந்யாய்ய:। ஸம்பவதி ச ப்ராஸாதகட்வாபர்யங்கவத் நாட்யாதீநாம் கார்யபேத:। தத்ர நாடீபுரீததௌ ப்ராஸாத-கட்வாஸ்தாநீயௌ, **ப்ரஹ்ம** து பர்யங்கஸ்தாநீயம்। அத: **ப்ரஹ்மைவ** ஸாக்ஷாத் ஸுஷுப்திஸ்தாநம்।। 7।।

* * *

322. அத: ப்ரபோதோऽஸ்மாத் (3-2-8)

யத: **ப்ரஹ்மைவ** ஸாக்ஷாத்ஸுஷுப்திஸ்தாநம் அத:, அஸ்மாத் - **ப்ரஹ்மண:** ஏஷாம் ஜீவாநாம் ப்ரபோத: ஶ்ரூயமாண உபபத்யதே, *"ஸத ஆகம்ய ந விது: ஸத ஆகச்சாமஹே"*(சா.6-10-2)[1] இத்யாதிஷு।। 8।।

இதி ததபாவாதிகரணம்।। 2।।

ஸித்தாந்தம்

ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **ததபாவ:** என்று.

ததபாவ: - அந்த ஸ்வப்நம் இல்லாமை; அதாவது உறக்கமானது,

நாடீஷு ஆத்மநி ச - நாடிகளிலும், புரீதத்திலும், பரமாத்மாவிலும் ஆகும். இந்த இடங்கள் சேர்ந்து ஆகும் என்று பொருள்.

ஏன்?

தச்ச்ருதே: - (அதை வேதம் சொல்வதால்) மூன்றையும் இடமாக வேதம் சொல்வதால்.

(ஒவ்வொன்றுக்கும்) வெவ்வேறு பயன் இருப்பதால், சேர்ந்து ஆதல் வரலாம்; அப்படி ஆகும் போது, விகல்பம் முறையாகாது. ஏனெனில், அது ஒரு பகுதியில் மறுப்பைக் கொண்டது.

மாடி-கட்டில்-மெத்தை ஆகியவற்றுக்குப்போல, நாடி முதலியவற்றுக்கு பயன் வெவ்வேறு ஆகும். அதில், நாடியும் புரீதத்தும் மாடி-கட்டில் இடத்தில் ஆகும்; ப்ரஹ்மமோ, மெத்தை இடத்திலாகும். எனவே, ப்ரஹ்மம்தான் நேரடியாக (ஜீவன்) உறங்கும் இடமாகும்.

✍(மூன்று பொருளுக்கும் ஒரே பயன்தான் என்றால் ஏதாவது ஒன்றைச் சொன்னால் போதும் என்றாகும்; ஆனால் அப்படியில்லை; மூன்றுக்கும் வெவ்வேறு பயன் உள்ளது; மேலும், விகல்பமாக - ஏதாவது ஒன்று உறங்கும் இடம் என்று ஆகும்போது, மற்றொரு வேத-பாகம் மறுக்கப்- பட்டதாகும்; எனவே, அதைச் சொல்வதைவிட, மூன்றும் சேர்ந்து இடமாகும் என்று சொல்வதே சரியாகும். எடுத்துக்காட்டாக, 'மாடியில் கட்டிலில் மெத்தையில் உறங்குகிறான்' என்றால் மூன்றுமே உறங்கும் இடமாகலாம்; மாடியில் ஒரு கட்டில்; அதில்ஒரு மெத்தை; அதில் உறங்- குகிறான்என்றுஅர்த்தம்; அதுபோல, நாடியில் புரீதத், அதில் ப்ரஹ்மம், அதில் உறங்குகிறான் என்று அர்த்தம்).✍

◆ ◆ ◆ ◆

322. அத: ப்ரபோத: அஸ்மாத் (3-2-8)

அதனால் தான், இந்த பரமாத்மாவிடமிருந்து விழிப்பு ஆகும்.

அத: - எதனால், ப்ரஹ்மம்தான் நேரடியாக (ஜீவனது) உறங்கும் இடமோ, அதனால்,

அஸ்மாத் - இந்த ப்ரஹ்மத்திலிருந்து

ப்ரபோத: - (விழிப்பு ஆகிறது).

[1]**''ஸத்திலிருந்து வெளிவந்து, ஸத்திலிருந்து வெளிவருகிறோம் என அறிவதில்லை''** முதலியவற்றில், இந்த ஜீவர்கள் ப்ரஹ்மத்திலிருந்து விழிப்பதாக வேதத்தில் உள்ளது சரியாகும்.

* * *

ததபாவாதிகரணம் முற்றிற்று

77. கர்மாநுஸ்ம்ருதி-ஶப்த-வித்யதிகரணம் (3-2-3)

முன்குறிப்பு

உறங்கும் ஸமயத்தில், ஜீவன், பரமாத்மாவிடம் இருக்கிறான் என்று சொல்லியாயிற்று; அப்படியானால் பரமாத்மாவை அடைந்து மோக்ஷம் பெற்றவன் போல ஆகிவிடுகிறான்; மோக்ஷம் பெற்றவன் திரும்பி ஸம்ஸாரத்தில் வருவதில்லை; அதுபோல, உறக்கத்தில் பரமாத்மாவை அடைபவனும் ஸம்ஸாரத்தில் திரும்பி வரமுடியாது; எனவே, உறக்கத்தின் பின் எழுபவன் வேறொரு ஜீவன் என்று பூர்வபக்ஷம்.

அப்படியல்ல; உறங்கிய ஜீவனேதான் பின்னர் விழித்து எழுகிறான் என்பதை பல காரணங்கள் மூலம் நிலைநாட்டுகிறது இந்த அதிகரணம்.

இதில் சொன்ன நான்கு காரணங்கள் -

1. கர்ம - அவனவன் செய்த புண்யபாபகர்ம பலனை அவனவன் எழுந்து அனுபவிக்க வேண்டும்; வேறொருவன் எழுந்து அனுபவிக்க முடியாது.
2. அநுஸ்ம்ருதி - தூங்கி எழுந்தபின் 'நானே தான் தூங்கி எழுந்தேன் எனும் எண்ணம்.
3. ஶப்தம் - வேதவாக்யம், 'எப்படி உறங்கினானோ அப்படியே எழுந்து கொள்கிறான்' என்கிறது.
4. விதி - மோக்ஷத்துக்கான உபாயத்தை ஶாஸ்த்ரங்கள் விதிக்கின்றன; உறங்கினாலே மோக்ஷம் வந்து விடும் என்றால், இந்த விதிகள் எல்லாம் விணாகி விடும்.

ஆகவே, தூங்கிய ஜீவன்தான் பின்னரும் எழுகிறான்.

உறங்கும் போது, ஜீவன், தாற்காலிகமான ஒரு ஓய்வுக்காகத்தான் பரமாத்மாவிடம் இருக்கிறான்; அப்போதும் புண்யபாப-கர்மம், ஶரீர-தொடர்பு முதலியவற்றை விடுவதில்லை; இவற்றை எல்லாம் விட்டு விட்டு பரமாத்மாவை சென்றடைந்தால் அது மோக்ஷம் ஆகும்; அந்த மோக்ஷம் அடைந்தபின் திரும்பி வரமாட்டான்; இப்படி இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டினை அறியவேண்டும்.

७७.कर्मानुस्मृतिशब्दविध्यधिकरणम् (३-२-३)

३२३.स एव तु कर्मानुस्मृतिशब्दविधिभ्यः (३-२-९)

किं सुषुप्त एव प्रबोधसमये उत्तिष्ठति, उतान्य इति संशये -

अस्य सकलोपाधिविनिर्मुक्तस्य ब्रह्मणि सम्पन्नस्य मुक्तादविलक्षणत्वेन प्राचीनशरीरेन्द्रियादिसम्बन्धाभावादन्यः इति प्राप्ते -

उच्यते - **स एव तु** इति। तुशब्दः पक्षं व्यावर्तयति। स एवोत्तिष्ठति। कुतः? **कर्मानुस्मृतिशब्दविधिभ्यः।**

कर्म तावत् - सुषुप्तेन पूर्वकृतं पुण्यपापरूपं तत्त्वज्ञानात् प्राक् तेनैव भोक्तव्यम्।

अनुस्मृतिरपि - य एवाहं सुप्तः, स एव प्रबुद्धोऽस्मीति।

शब्दोऽपि सुषुप्तप्रबुद्धं(द्धः) स एवेति दर्शयति - **''त इह व्याघ्रो वा सिंहो वा वृको वा वराहो वा कीटो वा पतङ्गो वा दंशो वा मशको वा यद्यद् भवन्ति तदाभवन्ति''**(छा.6-10-2)[1] इति।

---

77. கர்மாநுஸ்ம்ருதிஶப்தவித்யதிகரணம் (3-2-3)

323.ஸ ஏவ து கர்மாநுஸ்ம்ருதிஶப்தவிதிப்ய: (3-2-9)

கிம் ஸுஷுப்த ஏவ ப்ரபோதஸமயே உத்திஷ்டதி, உத அந்ய இதி ஸம்ஶயே -

அஸ்ய ஸகலோபாதிவிநிர்முக்தஸ்ய ப்ரஹ்மணி ஸம்பந்நஸ்ய முக்தாதவிலக்ஷணத்வேந ப்ராசீநஶரீரேந்த்ரியாதிஸம்பந்தாபாவாத் அந்ய: இதி ப்ராப்தே -

உச்யதே - ஸ ஏவ து இதி। *து ஶப்த:* பக்ஷம் வ்யாவர்தயதி। *ஸ ஏவ* உத்திஷ்டதி। குத:? *கர்மாநுஸ்ம்ருதிஶப்தவிதிப்ய:।*

கர்ம தாவத் - ஸுஷுப்தேந பூர்வக்ருதம் புண்யபாபரூபம் தத்த்வஜ்ஞாநாத் ப்ராக் தேநைவ போக்தவ்யம்।

அநுஸ்ம்ருதிரபி - ய ஏவாஹம் ஸுப்த:, ஸ ஏவ ப்ரபுத்தோऽஸ்மீதி।

ஶப்தோऽபி ஸுஷுப்தப்ரபுத்தம்(த்த:) ஸ ஏவேதி தர்ஶயதி - *"த இஹ வ்யாக்ரோ வா ஸிம்ஹோ வா வ்ருகோ வா வராஹோ வா கீடோ வா பதங்கோ வா தம்ஶோ வா மஶகோ வா யத்யத் பவந்தி ததாபவந்தி"*(சா.6-10-2)[1] இதி।

77. கர்மாநுஸ்ம்ருதி-ஶப்த-வித்யதிகரணம் (3-2-3)

323. ஸ: ஏவ து கர்மாநுஸ்ம்ருதி-ஶப்த-விதிப்ய: (3-2-9)

புண்யபாப-கர்மம், அநுஸ்ம்ருதி, வேதவாக்யம், வேதவிதி ஆகியவற்றால் அவனேதான் எழுகிறான்

ஸந்தேஹம்

உறங்கியவன்தான் விழிக்கும் ஸமயத்தில் எழுகிறானா அல்லது வேறொருவனா என்று ஸந்தேஹம் வரும் போது,

பூர்வபக்ஷம்

எல்லா உபாதியிலிருந்தும் விடுபட்டவனாய், ப்ரஹ்மத்தில் சேர்ந்த இவன், மோக்ஷம் பெற்றவனைவிட வேறு விதத்தவன் அல்ல; அதனால், பழைய ஶரீரம், இந்த்ரியம் முதலியதன் ஸம்பந்தம் இல்லாததால், வேறோருவன் எழுகிறான் என்று பூர்வபக்ஷம் நேரிடும் போது, (உறக்கத்தின் போது ப்ரஹ்மத்தை அடைவதாலும், ஸுகதுக்கம் எதுவும் இல்லாததாலும், புண்ய-பாப கர்ம தொடர்பு இல்லை என தெரிகிறது; ஆகையால் அவன் மோக்ஷம் பெற்றவன் போல ஆகிறான்; எனவே இவன் திரும்பி வரமாட்டான்; எனவே பின்னர் எழுபவன் வேறொருவனாக இருக்க வேண்டும் என்று பூர்வபக்ஷம்)

ஸித்தாந்தம்

ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **ஸ ஏவ து**- என்று.

‘து’ என்ற சொல்லானது பூர்வ-பக்ஷத்தைக் களைகிறது.

ஸ: ஏவ - அவன்தான் எழுந்து கொள்கிறான்.

ஏன்?

கர்மாநுஸ்ம்ருதிஶப்தவிதிப்ய: - கர்மம், அநுஸ்ம்ருதி, ஶப்தம், விதி ஆகியவற்றால்.

கர்மம்- உறங்கியவனால் உறங்கும் முன்செய்த புண்ய-பாபமாகிற கர்மமானது, தத்த்வ-ஜ்ஞானம் வருவதற்கு முன் அவனாலேயே அனுபவிக்கப்படவேண்டியது.

அநுஸ்ம்ருதி - ‘‘எந்த நான் உறங்கினேனோ, அதே நான் விழித்தவனாக ஆகிறேன்’’ என்னும் ப்ரத்யபிஜ்ஞானம்.

ஶப்தம் - உறங்கி விழிப்பவன் அவனே என்று வேத-வாக்யமும் காண்பிக்கிறது- [1]**‘‘புலியோ, சிங்கமோ, ஓநாயோ, பன்றியோ, புழுவோ, பறவையோ, ஈயோ, கொசுவோ (உறங்குமுன் ஜீவர்கள்) எதெதாக இருந்தனரோ, அதாக (அப்படியே) இருக்கின்றனர்’’** என்று.

विधयश्च मोक्षार्थाः सुषुप्तस्य मुक्तत्वेऽनर्थकास्स्युः।

न चासौ सर्वोपाधिविनिर्मुक्त आविर्भूतस्वरूपः, ‘‘**तद्यत्रैतत्सुषुप्तः**’’ (छा.8-11-2)[1] इति सुषुप्तं प्रकृत्य, ‘‘**नाह खल्वयमेवं सम्प्रत्यात्मानं जानाति, अयमहमस्मीति ; नो एवेमानि भूतानि ; विनाशमेवापीतो भवति ; नाहमत्र भोग्यं पश्यामि**’’(छा.8-11-1)[2] इति वचनात्। मुक्तस्य च,

- ‘‘**परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते**’’(छा.8-13-4)[3],
- ‘‘**स तत्र पर्येति जक्षत् क्रीडन् रममाणः**’’(छा.8-12-3)[4],
- ‘‘**स स्वराड्भवति तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति**’’(छा.8-25-2)[5],
- ‘‘**सर्वं हि पश्यः पश्यति सर्वमाप्नोति सर्वशः**’’(छा.8-26-2)[6] इति सर्वज्ञत्वादि श्रूयते।

अतः सुषुप्तः संसरन्नेव आयस्तसर्वकरणो ज्ञानभोगाद्यशक्तो विश्रमस्थानं परमात्मानमुपसम्पद्याऽऽश्वस्तः पुनर्भोगायोत्तिष्ठति॥९॥

इति कर्मानुस्मृतिशब्दविध्यधिकरणम् ॥३॥

விதயஶ்ச மோக்ஷார்தா:, ஸுஷுப்தஸ்ய முக்தத்வே அநர்தகா: ஸ்யு:।

ந ச அஸௌ ஸர்வோபாதிவிநிர்முக்த ஆவிர்பூதஸ்வரூப:, “*தத்யத்ரைதத்ஸுஷுப்த:*”(சா.8-11-2)[1] இதி ஸுஷுப்தம் ப்ரக்ருத்ய, “*நாஹ கல்வயமேவம் ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாதி, அயமஹமஸ்மீதி, நோ ஏவேமாநி பூதாநி, விநாஶமேவாபீதோ பவதி நாஹமத்ர போக்யம் பஶ்யாமி*”(சா.8-11-1)[2] இதி வசநாத்। முக்தஸ்ய ச,

- “*பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ருபேணாபிநிஷ்பத்யதே*”(சா.8-13-4)[3]
- “*ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண:*”(சா.8-12-3)[4],
- “*ஸ ஸ்வாராட் பவதி। தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி*”(சா.7-25-2)[5],
- “*ஸர்வம் ஹி பஶ்ய: பஶ்யதி ஸர்வமாப்நோதி ஸர்வஶ:*” (சா.7-26-2)[6]இதி ஸர்வஜ்ஞத்வாதி ஶ்ரூயதே।

அத: ஸுஷுப்த: ஸம்ஸரந்நேவ ஆயஸ்தஸர்வகரண: ஜ்ஞாநபோகாத்யஶக்தோ விஶ்ரமஸ்தாநம் பரமாத்மாநம் உபஸம்பத்ய ஆஶ்வஸ்த: புநர்போகாய உத்திஷ்டதி।। 9।।

இதி கர்மாநுஸ்ம்ருதிஶப்தவித்யதிகரணம்।। 3।।

விதய: - உறங்குபவன் மோக்ஷம் பெற்றவன் என்றால், மோக்ஷத்துக்கான-விதிகள் (மோக்ஷத்துக்காக உபாயம் செய்ய வேண்டும் என்று கட்டளை-யிடும் வேதவாக்யங்கள்) பயனற்றவை ஆகிவிடும்.

இந்த உறங்குபவனான ஜீவன், எல்லா உபாதியிலிருந்தும் விடுபட்டவனாய் ஸ்வரூப-ஆவிர்பாவம் (ஸ்வரூப-வெளிப்பாடு) பெற்றவன் அல்ல; ஏனெனில், [1]**''எப்போது உறங்கினானோ''** என்று உறங்குபவனைச் சொல்ல ஆரம்பித்து, [2]**''இவன், இப்படி தன்னை 'நான் இப்படி இருக்கிறேன்' என உள்ளபடி அறிவதில்லை; இந்த பொருள்களையும் அறிவதில்லை; அழிவடைந்தவன் போல் ஆகிறான்; நான் இதில் போகத்தைப்பார்க்கவில்லை''** என்றுசொல்வதால்.

மோக்ஷம் பெற்றவனோ, எல்லாம் அறிபவனாக ஆகிறான் முதலியது வேதத்தில் சொல்லப்படுகிறது-

- [3]**''பர-ப்ரஹ்மத்தை அடைந்து, தன் ஸ்வரூபத்தால் வெளிப்படுகிறான்'';**
- [4]**''அவன் அங்கு உண்பவனாய் விளையாடுபவனாய் ஆனந்தப்படுபவனாய் சுற்றிலும் ப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான்''.**
- [5]**''அவன் ஸ்வராட் ஆகிறான்-சுதந்திரனாக கர்மவசப்படாதவனாக ஆகிறான்; அவனுக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி போகலாம் ஆகிறது'',**
- [6]**''ப்ரஹ்மத்தைக் காண்பவன் எல்லாம் பார்க்கிறான்; எல்லா இடத்திலும் எல்லாம் அடைகிறான்''**

என்று.

எனவே, உறங்குபவன், ஸம்ஸாரத்தில் இருப்பவனே; அவன், எல்லா இந்த்ரியங்களும் சோர்வடைய, ஜ்ஞாநம், போகம் முதலியது முடியாதவனாய், ஒய்வுக்கான இடமான பரமாத்மாவை அடைந்து, ஆச்வாசம் பெற்று, மீண்டும் போகத்துக்காக எழுகிறான்.

* * *

கர்மாநுஸ்ம்ருதிஶப்தவித்யதிகரணம் முற்றிற்று.

* * *

78. முக்தாதிகரணம் (3-2-4)

முன்குறிப்பு

விழிப்பு, ஸ்வப்நம், உறக்கம் ஆகிய நிலைகள் பற்றி பார்த்தாயிற்று; மூர்ச்சை (மயக்கம்) எனும் நிலை பற்றி இந்த அதிகரணம் சொல்கிறது.

விழிப்பு, கனவு, உறக்கம் ஆகிய நிலைகளைப் பற்றி சொல்லிய வேதமானது, மூர்ச்சையைப் பற்றி குறிப்பாக எதுவும் சொல்லவில்லை; எனவே மூர்ச்சை என்பது தனியொரு நிலையல்ல; இந்த உறக்கம் முதலிய நிலைகளில் ஏதாவது ஒன்றாகலாம் என பூர்வபக்ஷம்;

இந்த நிலைகளில் எதையும் மூர்ச்சையாக சொல்லமுடியாது; ஏனெனில்,

- விழிப்பு நிலையில் ஜ்ஞாநமும் ஸுகதுக்கமும் உண்டு; மூர்சையில் எதுவும் தெரிவதில்லை;
- கனவு நிலையிலும் மனஸ் மூலமாக சுகதுக்கமும் ஜ்ஞாநமும் உண்டு; மூர்சையில் அது கிடையாது.
- உறக்கம் என்பது இயல்பான காரணத்தால் வருவது; மூர்ச்சை என்பது அப்படி வராது; பலத்த அடி முதலிய தனிப்பட்ட காரணத்தால் வரும்.
- மரணம் என்பதும் வயதானால் தானாக வரும்; மரணத்துக்கு பின் அந்த பிறவியில் தெளிவு என்பதும் கிடையாது; முகத்திலேயே சவக்களை வந்துவிடும்; மூர்ச்சை என்பது அப்படியல்ல.

எனவே, மூர்ச்சை என்பது வேறொரு நிலை; அது மரணத்துக்கான பாதி நிலையாகும்; மரணம் என்பது மொத்த ப்ராணனும் போனநிலை; மூர்ச்சை என்பது பாதி ப்ராணன் போன நிலை எனலாம்.

ஒரு சிறு குறிப்பு - முக்^{3}த^{4}ன் என்று உச்சரிப்பில் மயக்கமடைந்தவன் என்று அர்த்தம்; ஸாசரணமாக முக்^{1}த^{1}ன் என்றால் முக்தி பெற்றவன் என்று அர்த்தம்; அந்த சொல் வேறு

८७. मुग्धाधिकरणम् (३-२-४)

३२४.मुग्धेऽर्धसम्पत्तिः परिशेषात् (३-२-१०)

मुग्धमधिकृत्य चिन्त्यते। किमियं मूर्च्छा सुषुप्त्यादिष्वन्यतमावस्था, उतावस्थान्तरमिति विशये -

सुषुप्त्यादीनामन्यतमावस्थायामेव मूर्च्छाप्रसिद्ध्युपपत्तेः अवस्थान्तरकल्पने प्रमाणाभावादन्यतमावस्थेति प्राप्ते -

उच्यते - **मुग्धेऽर्धसम्पत्तिः** इति। मुग्धे पुरुषे या तस्यावस्था, सा मरणायार्धसम्पत्तिः। कुतः? **परिशेषात्।** न तावत् स्वप्नजागरौ, ज्ञानाभावात्; निमित्तवैरूप्यादाकारवैरूप्याच्च न सुषुप्तिमरणे। निमित्तं हि मूर्च्छाया अभिघातादिः। पारिशेष्यात् मरणायार्धसंपत्तिर्मूर्छा। मरणं हि सर्वप्राणदेहसम्बन्धोपरतिः; सूक्ष्मप्राणदेहसम्बन्धावस्थितिर्मूर्छा॥१०॥

इति मुग्धाधिकरणम् ॥४॥

---

87. முக்தாதிகரணம் (3-2-4)

324.முக்தேऽர்தஸம்பத்தி: பரிஶேஷாத் (3-2-10)

முக்தமதிக்ருத்ய சிந்த்யதே। கிம் இயம் மூர்ச்சா ஸுஷுப்த்யாதிஷ்வந்யதமாவஸ்தா, உத அவஸ்தாந்தரமிதி விஶயே -

ஸுஷுப்த்யாதீநாம் அந்யதமாவஸ்தாயாமேவ மூர்ச்சாப்ரஸித்த்யுபபத்தே: அவஸ்தாந்தரகல்பநே ப்ரமாணாபாவாத் அந்யதமாவஸ்தா இதி ப்ராப்தே -

உச்யதே - *முக்தேऽர்தஸம்பத்தி:* - இதி। முக்தே புருஷே யா தஸ்யாவஸ்தா, ஸா மரணாய அர்தஸம்பத்தி:। குத:? *பரிஶேஷாத்*। ந தாவத் ஸ்வப்நஜாகரௌ, ஜ்ஞாநாபாவாத்। நிமித்தவைரூப்யாத் ஆகாரவைரூப்யாச்ச ந ஸுஷுப்தி-மரணே। நிமித்தம் ஹி மூர்ச்சாயா அபிகாதாதி:। பாரிஶேஷ்யாத் மரணாயார்த்தஸம்பத்தி: மூர்சா। மரணம் ஹி ஸர்வப்ராணதேஹஸம்பந்தோபரதி:, ஸூக்ஷ்மப்ராணதேஹஸம்பந்தாவஸ்திதி: மூர்சா।। 10।।

இதி முக்தாதிகரணம்।। 4।।

78. முக்தாதிகரணம் (3-2-4)

324. முக்தே அர்த-ஸம்பத்தி: பரிஶேஷாத்(3-2-10)

மூர்ச்சையுடையவனாக ஆகும் போது, மரணத்துக்காக பாதி அடைதல் ஆகும்; [மற்ற நிலைகள் ஆகாமல், அதுவே] மீதமாவதால்.

ஸங்கதி(விஷய-தொடர்பு)

மூர்ச்சை அடைந்தவனைப் பற்றி ஆராயப்படுகிறது.

ஸந்தேஹம்

மூர்ச்சை என்பது உறக்கம் முதலிய வற்றில் ஏதாவது ஒரு நிலையா? அல்லது, வேறொரு நிலையா? என்று ஸந்தேகம் வரும் போது,

பூர்வபக்ஷம்

உறக்கம் முதலியவற்றில் ஏதாவது ஒருநிலையைக் குறித்தே மூர்ச்சையாக அறிவது சரியாகலாம் என்பதால், வேறொரு நிலையாக ஊகித்துச் சொல்வதில் ப்ரமாணம் இல்லை; அதனால், உறக்கம் முதலிய வற்றில் ஏதாவது ஒருநிலைதான் மூர்ச்சை ஆகும் என்று பூர்வபக்ஷம் நேரிட,

ஸித்தாந்தம்

ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **முக்தே அர்தஸம்பத்தி:** என்று;

முக்தே - மனிதன் மூர்ச்சையாகும் போது, அவனது நிலை எதுவோ, அது

அர்தஸம்பத்தி: - மரணத்துக்கான பாதி (நிலையைச்) சேர்தல் ஆகும்.

ஏன்?

பரிஶேஷாத் - (வேறுவிதமாக ஆகாமல் இதுவே மீதமுள்ளது ஆவதால்).

மூர்ச்சை என்பது கனவுநிலையும், விழிப்புநிலையும் ஆகாது; ஜ்ஞாநம் இல்லாத படியால்.

அது உறக்கமும் மரணமும் ஆகாது; காரணம் வேறுவிதமான படியாலும், ஆகாரம் (அமைப்பு) வேறுவிதமானபடியாலும்; மூர்ச்சைக்குக்காரணம் அடிபெறுதல் முதலியதுதானே! ✍ *(உறக்கம் மரணம் முதலியது போல, மூர்ச்சை இயல்பானது அல்ல; அது பலத்த அடி வாங்குதல் முதலிய காரணத்தால் வருவது)* ✍

எனவே இவை போக, மீதி ஆவதால், மரணத்துக்காக பாதி (மரண-நிலையில் பாதி நிலையைப்) பெறுதல் தான் மூர்ச்சை ஆகும். மரணம் என்பது எல்லா ப்ராணங்களும் ஶரீரஸம்பந்தமும் ஓய்ந்துவிடுதல் ஆகும்; மூர்ச்சை என்பது ஸூக்ஷ்மமான ப்ராணனும் ஶரீர-ஸம்பந்தமும் (மட்டும்) இருத்தல் ஆகும்.

* * *

முக்தாதிகரணம் முற்றிற்று.

79. உபயலிங்காதிகரணம்(3-2-5)

முன்குறிப்பு

ஜீவனுக்கு விழிப்பு, ஸ்வப்னம், தூக்கம், மயக்கம் ஆகியவை ஸம்ஸார-நிலைகள்; இந்த நிலைகளில் உள்ள தோஷங்களை இதுவரை சொல்லியாயிற்று. இதன் மூலம் ஜீவன் தோஷங்கள் நிரம்பியவன் என்பதை உணர்ந்து வைராக்யம் வர வேண்டும்.

பரமாத்மாவுக்கோ இந்த தோஷம் எதுவும் கிடையாது. மாறாக கல்யாணகுணங்களே நிரம்பியவன் என்பதை இனி விளக்குகிறார். இதனைப் புரிந்து கொண்டால் அவன் விஷயத்தில் ஆசை பிறக்கும்.

பூர்வபக்ஷம் - நம் ஶரீரத்தில் உள்ளே ஜீவனுடன் கூட பரமாத்மாவும் இருக்கிறான்; அப்படியானால், உறக்கம் முதலிய நிலைகளில் ஜீவனுக்கு சொன்ன தோஷங்கள் எல்லாம் அதே நிலைகளில் அந்த ஜீவனுடன் கூடவே இருக்கும் பரமாத்மாவுக்கும் வரநேரிடும்.

ஸித்தாந்தம் - வராது; அவன் ஒரு தோஷமும் அற்றவன் என்பதை வேதம் சொல்கிறது; தோஷங்களுக்கு எதிர்த்தட்டானவன்; மேலும், கல்யாணகுணங்களே நிரம்பியவன் என்பதும் அவனது அடையாளம். இதனை மிகவிளக்கமாக இந்த அதிகரணம் சொல்கிறது.

ப்ரஹ்மத்தை உபயலிங்கம் என்கிறது; உபயலிங்கம் என்றால் இரட்டை அடையாளம் உடையது என்று அர்த்தம்; ப்ரஹ்மத்துக்கு இரு அடையாளங்கள் - இழிகுணங்கள் இல்லாமையும், கல்யாண-குணங்கள் உள்ளமையும்.

பூர்வபக்ஷம் - ப்ரஹ்மத்துக்கு குணங்கள் கிடையாது; வேதமே குணங்களைச் சொல்லி விட்டு அவற்றை மறுக்கிறது. அப்படி சில வேத வாக்யங்கள் உள்ளன.

ஸித்தாந்தம் - இந்தவாதம் அடியோடு தவறு. ப்ரஹ்மத்தையும் அதன் குணங்களையும் பற்றி நமக்கு முன்னர் தெரியாது; வேறுவிதத்தில் தெரிந்து கொள்ளவும் முடியாது; வேதம்தான் அவற்றைப் பற்றி நமக்கு உபதேசம் செய்து அறிவிக்கிறது; அதே வேதமே அவற்றை மறுப்பதாக ஆகாது. அந்த வேத வாக்யங்களுக்கு உண்மையான கருத்து வேறு.

ப்ரஹ்மத்துக்கு தோஷம் ஒட்டாது என்பதை விளக்குவதற்காக இரு உதாஹரணங்களை ஶாஸ்த்ரம் சொல்கிறது; அவற்றில் ஒரு விசாரம் உள்ளது.

இப்படி பல விசாரங்களை உள்ளடக்கிய பெரிய அதிகரணம் இது.

७९.उभयलिङ्गाधिकरणम् (३-२-५)

३२५.न स्थानतोऽपि परस्योभयलिङ्गं सर्वत्र हि (३-२-११)

दोषदर्शनाद्वैराग्योदयाय जीवस्यावस्थाविशेषा निरूपिताः। इदानीं ब्रह्मप्राप्तितृष्णाजननाय प्राप्यस्य ब्रह्मणो निर्दोषत्वकल्याणगुणात्मकत्वप्रतिपादनायारभते।

तत्र जागरस्वप्नसुषुप्तिमुग्ध्युत्क्रान्तिषु स्थानेषु तत्तत्स्थानप्रयुक्ता जीवस्य ये दोषाः, ते तदन्तर्यामिणः परस्य ब्रह्मणोऽपि तत्रतत्रावस्थितस्य सन्ति, नेति विचार्यते।

किं युक्तम्? सन्तीति। कुतः? तत्तदवस्थशरीरेऽवस्थानात्॥

ननु **''सम्भोगप्राप्तिरिति चेन्न वैशेष्यात्''**(ब्र.सू.1-2-8)[1], **''स्थित्यदनाभ्यां च''**(ब्र.सू.1-3-5)[2] इत्यादिषु परस्याकर्मवश्यत्वेन दोषाभाव उक्तः। तत् कथमकर्मवश्यस्य परस्य ब्रह्मणः तत्तत्स्थानसम्बन्धात् दोष उच्यते।

इत्थमुच्यते - कर्माण्यपि देहसम्बन्धमापादयन्त्यपुरुषार्थजननानि भवन्तीति, **''देहयोगाद्वा''**(ब्र.सू.3-2-5)[3] इत्यत्रोक्तम्। तच्च देहसम्बन्धस्यापुरुषार्थत्वेन भवति; इतरथा कर्माण्येव दुःखं जनयिष्यन्ति; किं देहसम्बन्धेन? अतोऽकर्मवश्यत्वे सत्यपि

---

79. உபயலிங்காதிகரணம் (3-2-5)

325. ந ஸ்தாநதோऽபி பரஸ்யோபயலிங்கம் ஸர்வத்ர ஹி (3-2-11)

தோஷதர்ஶநாத் வைராக்யோதயாய ஜீவஸ்ய அவஸ்தாவிஶேஷா: நிரூபிதா:। இதாநீம் ப்ரஹ்மப்ராப்தித்ருஷ்ணாஜநநாய ப்ராப்யஸ்ய ப்ரஹ்மண: நிர்தோஷத்வகல்யாணகுணாத்மகத்வப்ரதிபாதநாய ஆரபதே।

தத்ர ஜாகரஸ்வப்நஸுஷுப்திமுக்த்யுத்க்ராந்திஷு ஸ்தாநேஷு தத்தத்ஸ்தாநப்ரயுக்தா: ஜீவஸ்ய யே தோஷா:, தே ததந்தர்யாமிண: பரஸ்ய ப்ரஹ்மணோऽபி தத்ர தத்ராவஸ்திதஸ்ய ஸந்தி, நேதி விசார்யதே।

கிம் யுக்தம் ஸந்தீதி। குத:? தத்ததவஸ்தஶரீரே அவஸ்தாநாத்।।

நநு *''ஸம்போகப்ராப்திரிதி சேந்ந வைஶேஷ்யாத்''*(ப்ர.ஸூ.1-2-8)[1], *''ஸ்தித்யதநாப்யாம் ச''*(ப்ர.ஸூ.1-3-5)[2] இத்யாதிஷு பரஸ்ய அகர்மவஶ்யத்வேந தோஷாபாவ உக்த:। தத் கதம் அகர்மவஶ்யஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண: தத்தத்ஸ்தாநஸம்பந்தாத் தோஷ உச்யதே।

இத்தமுச்யதே - கர்மாண்யபி தேஹஸம்பந்தமாபாதயந்தி அபுருஷார்தஜநநாநி பவந்தீதி, *''தேஹயோகாத்வா''*(ப்ர.ஸூ.3-2-5)[3] இத்யத்ரோக்தம்। தச்ச தேஹஸம்பந்தஸ்ய அபுருஷார்தத்வேந பவதி, இதரதா கர்மாண்யேவ து:கம் ஜநயிஷ்யந்தி, கிம் தேஹஸம்பந்தேந; அத: அகர்மவஶ்யத்வே

79. உபயலிங்காதிகரணம்(3-2-5)

325.ந ஸ்தாநத: அபி பரஸ்ய; உபயலிங்கம் ஸர்வத்ரஹி (3-2-11)

[இருக்கும்] இடத்தாலும் பரப்ரஹ்மத்துக்கு தோஷமில்லை; ஏனெனில், எல்லா ஶ்ருதி-ஸ்ம்ருதிகளிலும் ப்ரஹ்மம் இரட்டை-அடையாளம் கொண்டதாக உள்ளது.

ஸங்கதி (விஷய-தொடர்பு)

தோஷத்தைக் காண்பதன் மூலம் வைராக்யம் உதிக்க வேண்டும் என்பதற்காக, ஜீவனது நிலைகள் சில நிரூபிக்கப்பட்டன; இப்போது, ப்ரஹ்மத்தை அடைவதில் ஆசை பிறப்பதற்காக, அடைய வேண்டிய ப்ரஹ்மத்துக்கு தோஷமில்லை என்பதையும், கல்யாணகுணங்கள் கொண்ட ஸ்வரூபமாக ஆவதையும் சொல்வதற்கு ஆரம்பிக்கிறார்.

ஸந்தேஹம்

அதில், விழிப்பு, ஸ்வப்நம், உறக்கம், மூர்ச்சை, மரணம் ஆகிய நிலைகளில், அந்தந்த இடத்தில் இருப்பதால் ஜீவனுக்கு எந்த தோஷங்கள் உண்டோ, அவை, அவனுக்கு அந்தர்யாமியாய் அங்கங்கு இருக்கும் பர-ப்ரஹ்மத்துக்கும் உண்டா இல்லையா என்று விசாரிக்கப்படுகிறது.

பூர்வபக்ஷம்

எதுசரியாகும்? ப்ரஹ்மத்துக்கும் தோஷம் உண்டு என்பது; ஏன்? அந்தந்த நிலையிலான ஶரீரத்தில் இருப்பதால்.

உள்-கேள்வி - (இதற்கு முன்பே ப்ரஹ்மஸூத்ரங்களில்) [1]**''ஸம்போகப்ராப்திரிதி சேந்ந வைஶேஷ்யாத்''** (1-2-9), [2]**''ஸ்தித்யதநாப்யாம்ச''** (1-3-6) முதலியவற்றில், பர-ப்ரஹ்மம் புண்ய-பாப-கர்மத்துக்கு வசப்பட்டதில்லையானபடியால் தோஷமில்லை என்று சொல்லப்பட்டது. கர்ம-வசப்படாத பர-ப்ரஹ்மத்துக்கு, அந்தந்த இடத்தின் தொடர்பால் தோஷமானது எப்படி சொல்லப்படும்?

உள்-பதில் - இப்படி சொல்லப்படும்; புண்யபாப-கர்மங்களும்கூட, (நேரிடையாக துக்கத்தை அளிக்காமல்) ஶரீர-தொடர்பை ஏற்படுத்துபவையாகவே, மனிதனுக்கு வேண்டாததை (துக்கத்தை) உண்டாக்குபவை ஆகின்றன; இது, [3]**''தேஹயோகாத்வாஸோபி''** (3-2-5) என்னுமிடத்து சொல்லப்பட்டது. ஶரீர-தொடர்பானது, மனிதன் வேண்டாதது என்பதால்தான் அது(அப்படி) ஆகிறது! அப்படி இல்லையெனில், கர்மங்களே துக்கத்தை உண்டாக்கலாமே! ஶரீர-தொடர்பு எதற்கு?

नानाविधाशुचिदेहसम्बन्धोऽपुरुषार्थ एव। अतः तन्नियमनार्थं स्वेच्छया तत्प्रवेशोऽप्यपुरुषार्थसम्बन्धोऽवर्जनीयः। पूयशोणितादिमज्जनं हि स्वेच्छाकारितमप्यपुरुषार्थ एव। अतो यद्यपि जगदेककारणं सर्वज्ञत्वादिकल्याणगुणाकरं च ब्रह्म, तथापि **''यः पृथिव्यां तिष्ठन्''**(छा.5-7-3)[1], **''यश्चक्षुषि तिष्ठन्''**(छा.5-7-18)[2], **''यो रेतसि तिष्ठन्''**(छा.5-7-23)[3], **''य आत्मनि तिष्ठन्''**(छा.5-7-22)[4] इत्यादिवचनात् तत्रतत्रावस्थितस्य तत्तत्सम्बन्धरूपापुरुषार्थाः सन्ति इति॥

एवं प्राप्ते प्रचक्ष्महे - **न स्थानतोऽपि परस्य** इति। न पृथिव्यात्मादिस्थानतोऽपि **परस्य** ब्रह्मणः अपुरुषार्थगन्धः **सम्भवति**। कुतः? **उभयलिङ्गं सर्वत्र हि** - यतः **सर्वत्र** श्रुतिस्मृतिषु परं ब्रह्म **उभयलिङ्गम्** उभयलक्षणमभिधीयते, निरस्तनिखिलदोषत्वकल्याणगुणाकरत्वलक्षणोपेतमित्यर्थः।

- **''अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः''**(छा.8-1-5)[5],
- **''समस्तकल्याणगुणात्मकोऽसौ स्वशक्तिलेशोद्धृतभूतसर्गः''**(वि.पु.6-5-84)[6]
- **''तेजोबलैश्वर्यमहावबोधसुवीर्यशक्त्यादिगुणैकराशिः**
  परः पराणां सकला न यत्र क्लेशादयः सन्ति परावरेशे॥'' (वि.पु.6-5-85)[7]

ஸத்யபி நாநாவிதாஶுசிதேஹஸம்பந்த: அபுருஷார்த ஏவ। அத: தந்நியமநார்தம் ஸ்வேச்சயா தத்ப்ரவேஶோऽபி அபுருஷார்தஸம்பந்த: அவர்ஜநீய:। பூயஶோணிதாதிமஜ்ஜநம் ஹி ஸ்வேச்சாகாரிதமபி அபுருஷார்த ஏவ। அத: யத்யபி ஜகதேககாரணம் ஸர்வஜ்ஞத்வாதிகல்யாணகுணாகரம் ச ப்ரஹ்ம; ததாபி *''ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்''*(சா.5-7-3)[1], *யஶ்சக்ஷுஷி திஷ்டந்*(சா.5-7-18)[2], *யோ ரேதஸி திஷ்டந்*(சா.5-7-23)[3], *ய ஆத்மநி திஷ்டந்''*(சா.5-7-22)[4] இத்யாதிவசநாத் தத்ர தத்ராவஸ்திதஸ்ய தத்தத்ஸம்பந்தரூபா: அபுருஷார்தா: ஸந்தி - இதி।।

ஏவம் ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - *ந ஸ்தாநதோऽபி பரஸ்ய* - இதி। ந ப்ருதிவ்யாத்மாதிஸ்தாநதோऽபி பரஸ்ய ப்ரஹ்மண: அபுருஷார்தகந்த: ஸம்பவதி। குத:? *உபயலிங்கம் ஸர்வத்ர ஹி* - யத: ஸர்வத்ர ஶ்ருதி-ஸ்ம்ருதிஷு பரம் ப்ரஹ்ம உபயலிங்கம் உபயலக்ஷணமபிதீயதே, நிரஸ்தநிகிலதோஷத்வகல்யாணகுணாகரத்வலக்ஷணோபேதமித்யர்த:।

- *''அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:''*(சா.8-1-5)[5],
- *''ஸமஸ்தகல்யாணகுணாத்மகோऽஸௌ ஸ்வஶக்திலேஶோத்த்ருதபூதஸர்க:।* (வி.பு.6-5-84)[6]
- *''தேஜோபலைஶ்வர்யமஹாவபோதஸுவீர்யஶக்த்யாதிகுணைகராஶி:।''*
  பர: பராணாம் ஸகலா ந யத்ர க்லேஶாதய: ஸந்தி பராவரேஶே।।''(வி.பு.6-5-85)[7],

எனவே, கர்மத்துக்கு வசப்படவில்லையானாலும், பலவிதமான அஶுத்தமான ஶரீர-தொடர்பானது வேண்டாதது தான்! எனவே, ப்ரஹ்மம் ஆனது, அந்த ஶரீரத்தை ஆளுவதற்காக, தன் விருப்பப்படி அதில் புகுந்தாலும், வேண்டத்தகாததன் தொடர்பு தவிர்க்க முடியாததாகும்; சீழ், ரத்தம் முதலியதில் முழுகியிருத்தல் ஆனது, தன் விருப்பத்தால் செய்து கொள்ளப்பட்டதானாலும், அது வேண்டத்தகாததுதான்; எனவே, ப்ரஹ்மம், உலகத்தின் ஒரேகாரணமாக ஸர்வஜ்ஞனாதல் முதலிய கல்யாண-குணம் உடையதானாலும், [1]**''யார் ப்ருதிவியில் இருப்பவன்''**, [2]**''யார் கண்ணில் இருப்பவன்''**, [3]**''யார் ரேதஸ்ஸில் இருப்பவன்''**, [4]**''யார் ஆத்மாவில் இருப்பவன்''** முதலியது சொல்வதால், அந்தந்த இடத்தில் இருப்பவனுக்கு அந்தந்த பொருளுடன் தொடர்பாகிற அபுருஷார்த்தங்கள் (வேண்டத்தகாதவை) உண்டு.

என்றிப்படி பூர்வபக்ஷம் நேரிட,

ஸித்தாந்தம்

ஸித்தாந்தம் சொல்கிறோம் - **''ந ஸ்தாநதோபி பரஸ்ய''** என்று.

ஸ்தாநத: அபி - பூமி, ஆத்மா முதலிய இடத்தாலும்

பரஸ்ய - பரப்ரஹ்மத்துக்கு

ந - அபுருஷார்த்தம் (வேண்டத்தகாத துக்கமானது) துளியும்வராது;

ஏன்?

ஹி - ஏனெனில்

ஸர்வத்ர - எல்லா வேதங்களிலும் ஸ்ம்ருதிகளிலும்

உபயலிங்கம்- இரண்டு அடையாளம் உடையதாக பர-ப்ரஹ்மம் சொல்லப்படுகிறது; எல்லா தோஷங்களும் இல்லாமை, கல்யாண-குணங்களுடைமை ஆகிய (இரு) அடையாளத்தோடு கூடியது என்று பொருள்.

- [5]**''பாபம் அற்றவன், ரஜஸ் அற்றவன், மரண மற்றவன், சோகமற்றவன், பசியற்றவன், தாகம்அற்றவன், ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன்''**
- [6]**''இவன் எல்லா கல்யாணகுணங்களாகிற தன்மை உடையவன்; தனது ஶக்தியின் சிறு அம்சத்தால் உலகப்படைப்பை (உலகக்குழுவை) தரிப்பவன்.''**
- [7]**''தேஜஸ், பலம், ஐஸ்வர்யம், மஹா-ஜ்ஞாநம், நல்லவீர்யம், ஶக்தி முதலிய குணங்களின் ஒரே இருப்பிடம்; உயர்ந்தவர்களையும் தாழ்ந்தவர்களாகக் கொண்டு ஆளும் எந்த ஈஶ்வரனிடம் க்லேஶம் முதலிய எல்லாம் கிடையாதோ, அவன் உயர்ந்தவர்களில் உயர்ந்தவன்''**,

★ **''समस्तहेयरहितं विष्णवाख्यं परमं पदम्''**(वि.पु.1-22-53)[1]
इत्यादिश्रुतिस्मृतिभ्यः उभयलक्षणं हि ब्रह्म अवगतम्॥११॥

३२६.भेदादिति चेन्न प्रत्येकमतद्वचनात् (३-२-१२)

यथा जीवस्य प्रजापतिवाक्यावगतापहतपाप्मत्वाद्युभयलिङ्गस्यापि देवादिदेहयोगरूपावस्थाभेदादपुरुषार्थयोगः, तथा अन्तर्यामिणः परस्यापि स्वतोऽपहतपाप्मत्वाद्युभयलिङ्गस्य तत्तद्देवादिशरीरयोगरूपावस्थाभेदादपुरुषार्थयोगोऽवर्जनीय इति चेत्,

तन्न; **प्रत्येकमतद्वचनात्।** **''यः पृथिव्यां तिष्ठन्''**(बृ.5-7-7)[2], **''य आत्मनि तिष्ठन्''**(बृ.मा.5-7-26)[3] इत्यादिषु प्रतिपर्यायम् **''स त आत्मान्तर्याम्यमृतः''**(बृ.5-7-7 तः 28)[4] इत्यन्तर्यामिणोऽमृत्ववचनेन तत्रतत्र स्वेच्छया नियमनं कुर्वतः तत्तत्सम्बन्धप्रयुक्तापुरुषार्थप्रतिषेधात्। जीवस्य तु तत्स्वरूपं तिरोहितमिति, **''पराभिध्यानात्तु तिरोहितम्''**(ब्र.सू.3-2-4)[5] इत्यत्रोक्तम्॥

★ *''ஸமஸ்தஹேயரஹிதம் விஷ்ண்வாக்யம் பரமம் பதம்''*(வி.பு.1-22-53)[1]
இத்யாதிஶ்ருதிஸ்ம்ருதிப்ய: உபயலக்ஷணம் ஹி ப்ரஹ்ம அவகதம்॥11॥

326. பேதாதிதி சேந்ந ப்ரத்யேகமதத்வசநாத் (3-2-12)

யதா ஜீவஸ்ய ப்ரஜாபதிவாக்யாவகதாபஹதபாப்மத்வாத்யுபயலிங்கஸ்யாபி தேவாதிதேஹயோகரூபாவஸ்தாபேதாத் அபுருஷார்தயோக:, ததா அந்தர்யாமிண: பரஸ்யாபி ஸ்வதோऽபஹதபாப்மத்வாத்யுபயலிங்கஸ்ய தத்தத்தேவாதிஶரீரயோகரூபாவஸ்தாபேதாத் அபுருஷார்தயோக: அவர்ஜநீய இதி சேத்,

தந்ந, *ப்ரத்யேகமதத்வசநாத்* - *''ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்''*(ப்ரு.5-7-7)[2], *''ய ஆத்மநி திஷ்டந்''*(ப்ரு.5-6-26)[3] இத்யாதிஷு ப்ரதிபர்யாயம் - *''ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:''*(ப்ரு.5-7.மு.28)[4] இதி அந்தர்யாமிண: அம்ருத்வவசநேந தத்ரதத்ர ஸ்வேச்சயா நியமநம் குர்வத: தத்தத்ஸம்பந்தப்ரயுக்தாபுருஷார்தப்ரதிஷேதாத். ஜீவஸ்ய து தத்ஸ்வரூபம் திரோஹிதமிதி, *''பராபித்யாநாத்து திரோஹிதம்''*(ப்ர.ஸூ.3-2-4)[5] இத்யத்ரோக்தம்॥

✱ [1]**''இழிமை எல்லாம் இல்லாதது விஷ்ணு என்னும் உயர்ந்த ஸ்வரூபம்''.**

முதலிய வேத-ஸ்ம்ருதி-வசனங்களால், இரு லக்ஷணம் (அடையாளம்) உடையதாகத்தானே ப்ரஹ்மம் தெரிகிறது.

◆ ◆ ◆ ◆

326.பேதாத் இதி சேத் ந ப்ரத்யேகம் அதத்வசநாத் (3-2-12)

வேறுநிலை ஆவதால் [அபுருஷார்த்தம்ஆகலாம்] என்றால், அதல்ல; ஒவ்வொன்றிலும் அது இல்லாமையைச் சொல்வதால்.

கேள்வி - ஜீவனானவன், அபஹதபாப்மத்வம் (கர்ம-வசப்படாமை) முதலிய இரு அடையாளம் உடையவனாக ப்ரஜாபதி-வாக்யத்தில் அறியப்படுகிறான் (ஸூத்ரம் 1-3-18 காண்க); ஆனாலும், அவனுக்கு (அந்த இயல்பான நிலை தவிர) தேவர்கள் முதலிய ஶரீரம் சேர்வதாகிற வேறொரு நிலை ஆவதால், அபுருஷார்த்தம் (வேண்டத்தகாத துக்கம்) சேருகிறது; அது எப்படியோ, அப்படி இயல்பாகவே அபஹதபாப்மத்வம் (கர்ம-வசப்படாமை) முதலிய இரு அடையாளம் கொண்ட அந்தர்யாமியான பரப்ரஹ்மத்துக்கும், அந்தந்த தேவர்கள் முதலிய ஶரீரம் சேர்வதாகிற வேறொரு நிலை ஆவதால், அபுருஷார்த்தம் சேருவது தவிர்க்க முடியாதது - என்றால்;

பதில் -

ந - அதல்ல,

ப்ரத்யேகம் அதத்வசநாத் - ஒவ்வொன்றிலும் அது இல்லாமையைச் சொல்வதால்.

ஏனெனில், [2]**''யார் ப்ருதிவியில் இருப்பவன்..''**, [3]**''யார் ஆத்மாவில் இருப்பவன்...''** முதலியவற்றில், ஒவ்வொரு பிரிவிலும், [4]**''அவன் உனது ஆத்மாவான அந்தர்யாமியாய் அம்ருதன் ஆக இருப்பவன்''** என்று 'அந்தர்யாமியாய் அம்ருதன்' என்று சொல்கிறது; அதன் மூலம், அங்கங்கு தனது ஸங்கல்பத்தால் நியமனம் செய்யும் அவனுக்கு அந்தந்த சேர்க்கையால் வரக்கூடிய அபுருஷார்த்தத்தை விலக்குகிறது.

✍(அம்ருதன் என்பதற்கு மரணமற்றவன் என்று பொருளானால், அதை ஒரு தடவை சொன்னால் போதும்; ஆனால் ப்ருதிவியில், ஜலத்தில் முதலிய ஒவ்வொன்றிலும் அந்தர்யாமியாய் பரமாத்மா இருப்பதைச் சொல்லும் போது, 'அம்ருதன்' என்று ஒவ்வொன்றிலும் சொல்கிறது; அதனால், 'அம்ருதன்' என்பதற்கு, அந்தந்த பொருளில் இருப்பதால் வரக்கூடிய தோஷம் அற்றவன் என்று கருத்து)✍

ஜீவனுக்கோ (அபஹதபாப்மத்வம் முதலியதுடன் ஆகிற) அந்த ஸ்வரூபம் மறைக்கப்பட்டது என [5]**''பராபித்யாநாத் து திரோஹிதம்''** (3-12-4) என்னுமிடத்து சொல்லப்பட்டது.

ननु स्वेच्छया कुर्वतोऽपि तत्तद्वस्तुस्वभावायत्तापुरुषार्थसम्बन्धोऽवर्जनीय इत्युक्तम्। नैतद्युक्तम्। न ह्यचिद्वस्त्वपि स्वभावतोऽपुरुषार्थस्वरूपम्, कर्मवश्यानां तु कर्मस्वभावानुगुण्येन परमपुरुषसङ्कल्पादेकमेव वस्तु कालभेदेन पुरुषभेदेन च सुखाय दुःखाय च भवति। वस्तुस्वरूपप्रयुक्ते तु ताद्रूप्ये, सर्वं सर्वदा सर्वस्य सुखायैव दुःखायैव वा स्यात्। न चैवं दृश्यते। तथाचोक्तम्

''नरकस्वर्गसंज्ञे वै पापपुण्ये द्विजोत्तम।
वस्त्वेकमेव दुःखाय सुखायेर्ष्यागमाय च॥
कोपाय च यतः, तस्माद्वस्तु वस्त्वात्मकं कुतः।
तदेव प्रीतये भूत्वा पुनर्दुःखाय जायते॥
तदेव कोपाय यतः प्रसादाय च जायते।
तस्मात् दुःखात्मकं नास्ति न च किञ्चित् सुखात्मकम्॥'' (वि.पु.2-6-46,47,48)[1] इति।

अतो जीवस्य कर्मवश्यत्वात् तत्तत्कर्मानुगुण्येन तत्तद्वस्तुसम्बन्ध एवापुरुषार्थस्स्यात्; परस्य तु ब्रह्मणः स्वाधीनस्य स एव सम्बन्धः तत्तद्विचित्रनियमनरूपलीलारसायैव स्यात्॥१२॥

३२७.अपि चैवमेके (३-२-१३)

अपिच एके शाखिनः एकस्मिन्नेव देहसंयोगे जीवस्यापुरुषार्थम्, परस्य तु तदभावं

நநு ஸ்வேச்சயா குர்வதோऽபி தத்தத்வஸ்துஸ்வபாவாயத்தாபுருஷார்த-ஸம்பந்தோऽவர்ஜநீய: இத்யுக்தம்। நைதத்யுக்தம்। ந ஹி அசித்வஸ்த்வபி ஸ்வபாவத: அபுருஷார்தஸ்வரூபம், கர்மவஶ்யாநாம் து கர்மஸ்வபாவாநுகுண்யேந பரமபுருஷஸங்கல்பாத் ஏகமேவ வஸ்து காலபேதேந புருஷபேதேந ச ஸுகாய து:காய ச பவதி। வஸ்துஸ்வரூபப்ரயுக்தே து தாத்ரூப்யே, ஸர்வம் ஸர்வதா ஸர்வஸ்ய ஸுகாயைவ து:காயைவ வா ஸ்யாத்। ந சைவம் த்ருஶ்யதே। ததாசோக்தம்

''நரகஸ்வர்கஸம்ஜ்ஞே வை பாபபுண்யே த்விஜோத்தம।
வஸ்த்வேகமேவ து:காய ஸுகாயேர்ஷ்யாகமாய ச।।
கோபாய ச யதஸ்தஸ்மாத் வஸ்து வஸ்த்வாத்மகம் குத:।
ததேவ ப்ரீதயே பூத்வா புநர்து:காய ஜாயதே।।
ததேவ கோபாய யத: ப்ரஸாதாய ச ஜாயதே।
தஸ்மாத் து:காத்மகம் நாஸ்தி ந ச கிஞ்சித் ஸுகாத்மகம்।। (வி.பு.2-6-46,47,48)[1] இதி।

அதோ ஜீவஸ்ய கர்மவஶ்யத்வாத் தத்தத்கர்மாநுகுண்யேந தத்தத்வஸ்துஸம்பந்த ஏவ அபுருஷார்த: ஸ்யாத்। பரஸ்ய து ப்ரஹ்மண: ஸ்வாதீநஸ்ய ஸ ஏவ ஸம்பந்த: தத்தத்விசித்ரநியமநரூபலீலாரஸாயைவ ஸ்யாத்।।12।।

327.அபி சைவமேகே (3-2-13)

அபிச ஏகே ஶாகிந: ஏகஸ்மிந்நேவ தேஹஸம்யோகே ஜீவஸ்ய -

கேள்வி - (பரமாத்மாவுக்கு அந்தந்த பொருளுடன் ஶரீரத் தொடர்பானது புண்யபாபகர்மத்தால் வந்ததல்ல; அவனே தனது விருப்பதால் செய்து கொண்டது; ஆனாலும்)தன் விருப்பத்தால் செய்து கொண்டாலும், அந்தந்த பொருளின் தன்மையால் வரக்கூடிய அபுருஷார்த்த-ஸம்பந்தம் (வேண்டத்தகாத துக்கத் தொடர்பு) தவிர்க்க முடியாது என்று சொல்லப்பட்டது.

பதில் - அது சரியில்லை; ஏனெனில், அசேதன-பொருள்கூட, இயல்பாகவே (தானாகவே), வேண்டத்தகாத துக்கம் அளிப்பதாக ஆகாது; கர்மவசப்பட்டவர்களுக்கு, கர்மத்தின் தன்மைக்கேற்ப, பரமபுருஷனுடைய ஸங்கல்பத்தால், ஒரே பொருளே, வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு மனிதனுக்கு சுகத்துக்கும் துக்கத்துக்கும் ஆகிறது. பொருளின் ஸ்வரூபத்தாலேயே அது அப்படியாகும் என்றால், எல்லாம் எப்போதும் எல்லாருக்கும் சுகத்துக்காக மட்டும் ஆகவேண்டும்; அல்லது துக்கத்துக்காக மட்டுமோ ஆகவேண்டும்; ஆனால் அப்படிக் காணப்படுவதில்லை.

அப்படியே சொல்லப்பட்டது - [1]**''ப்ராஹ்மணர்களில் சிறந்தவரே, நரகம்-ஸ்வர்க்கம் என்ற பெயரில் (அவற்றுக்குக் காரணமான) பாப-புண்யங்கள் உள்ளன; ஒரே பொருளே துக்கத்துக் காகவும், சுகத்துக்காகவும், பொறாமை வருவதற்கும், கோபத்துக்காகவும் ஆகிறது; அதனால் பொருள் (ஒரே மாதிரியான) பொருளாவது எப்படி? எதனால், அதுவே ப்ரீதிக்காகவும் ஆகி மீண்டும் துக்கத்துக்காகவும் ஆகிறதோ; அதுவே கோபத்துக்காகவும் த்ருப்திக்காகவும் ஆகிறதோ, அதனால், (இயல்பில்) துக்கமாகவே எதுவும் இல்லை; சுகமாகவும் எதுவும் இல்லை''** என்று.

எனவே, ஜீவன் கர்மத்துக்கு கட்டுப்பட்டவன் ஆனபடியால், அந்தந்த கர்மத்துக்கேற்பபடி அந்தந்த பொருளின் தொடர்பே வேண்டத்தகாத துக்கம் அளிப்பதாக ஆகும்; கர்ம-வசப்படாத ஸ்வாதீநனான பர-ப்ரஹ்மத்துக்கோ, அதே தொடர்பே, அததை பலவிதமாக ஆளுதலாகிற லீலா-ரஸத்துக்கே ஆகும்.

◆ ◆ ◆

327. அபி ச ஏவம் ஏகே (3-2-13)

மேலும் சில ஶாகையினர் [ஓதுகின்றனர்]

மேலும், சில ஶாகையினர், ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் ஶரீரத்தொடர்பு ஸமமாக இருக்கும் போதே, ஜீவனுக்கு அபுருஷார்த்தம் (வேண்டத்தகாத துக்கம்) இருப்பதையும், பரமாத்மாவுக்கு அது இல்லாமையையும், நியமநம் செய்தல் ஆகிற

नियमनरूपैश्वर्यायत्तदीप्तियोगं च स्वशब्देनाधीयते, **“द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते। तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्यो अभिचाकशीति”** (मु.3-1-1)[1] इति॥१३॥

⁂

अथ स्यात् - **“अनेन जीवेनाऽऽत्मनाऽनुप्रविश्य नामरूपे व्याकरवाणि”** (छा.6-3-2)[2] इति ब्रह्मात्मकजीवानुप्रवेशपूर्वकं नामरूपव्याकरणमिति ब्रह्मणोऽपि तदात्मभूतस्य देवमनुष्यादिरूपत्वं तन्नामभाक्त्वं चास्ति। ततश्च ‘ब्राह्मणो यजेत’ इत्यादिविधिनिषेधशास्त्रगोचरत्वेन कर्मवश्यत्वमवर्जनीयमिति तत्राह -

३२८.अरूपवदेव हि तत् प्रधानत्वात् (३-२-१४)

देवादिशरीरानुप्रवेशे तेनतेन रूपेण युक्तमप्य**रूपवदेव तत्** - ब्रह्म रूपरहिततुल्यमेव। जीववत् शरीरित्वनिबन्धनं कर्मवश्यत्वमस्य न विद्यत इत्यर्थः। कुतः? निर्वाहकत्वेन **प्रधानत्वात्। “आकाशो ह वै नाम नामरूपयोर्निर्वहिता ते यदन्तरा तद्ब्रह्म”** (छा.8-14-1)[3] इति सर्वानुप्रवेशेऽपि नामरूपकार्यास्पर्शेन नामरूपयोर्निर्वोढृत्वमेव ब्रह्मणः प्रतिपादयति॥

அபுருஷார்தம், பரஸ்ய து ததபாவம் நியமநரூபைஶ்வர்யாயத்ததீப்தியோகம் ச ஸ்வஶப்தேநாதீயதே, *“த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி”* (மு.3-1-1)[1] இதி।।13।।

⁂

அத ஸ்யாத் - *“அநேந ஜீவேநாऽऽத்மநாऽநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி”*(சா.6-3-2)[2] இதி ப்ரஹ்மாத்மகஜீவாநுப்ரவேஶபூர்வகம் நாமரூபவ்யாகரணமிதி ப்ரஹ்மணோऽபி ததாத்மபூதஸ்ய தேவமநுஷ்யாதிரூபத்வம் தந்நாமபாக்த்வம் சாஸ்தி। ததஶ்ச ‘ப்ராஹ்மணோ யஜேத’ இத்யாதிவிதிநிஷேதஶாஸ்த்ரகோசரத்வேந கர்மவஶ்யத்வமவர்ஜநீயம் இதி, தத்ராஹ -

328. அரூபவதேவ ஹி தத் ப்ரதாநத்வாத் (3-2-14)

தேவாதிஶரீராநுப்ரவேஶே தேநதேந ரூபேண யுக்தமபி *அரூபவதேவ தத்* - ப்ரஹ்ம ரூபரஹிததுல்யமேவ। ஜீவவத் ஶரீரித்வநிபந்தநம் கர்மவஶ்யத்வம் அஸ்ய ந வித்யத இத்யர்த:। குத:? நிர்வாஹகத்வேந ப்ரதாநத்வாத்। *“ஆகாஶோ வை நாம நாமரூபயோர்நிர்வஹிதா தே யதந்தரா தத்ப்ரஹ்ம”* (சா.8-14-1)[3] இதி ஸர்வாநுப்ரவேஶேऽபி -நாமரூபகார்யாऽஸ்பர்ஶேந நாமரூபயோர்நிர்வோட்ருத்வமேவ ப்ரஹ்மண: ப்ரதிபாதயதி।।

ஆளுமையால் வரும் ப்ரகாசம் சேர்ந்திருப்பதையும் தனது சொல்லாலேயே ஓதுகின்றனர் - [1]**''நல்ல இறகுடைய பறவை போன்ற, ஸமான-குணமுடைய இரண்டு நண்பர்கள், ஒரே மரத்தில் (ஶரீரத்தில்) சேர்ந்துள்ளனர்; அவர்களில் ஒருவர் இனிமையான கர்ம-பலனை உண்ணுகிறார்; மற்றோருவர் உண்ணாமல் ப்ரகாசிக்கிறார்''** என்று.

◆ ◆ ◆ ◆

கேள்வி - எல்லா பொருளுக்கும் நாம-ரூபத்தை வகுத்தல் ஆனது (பெயரும் உருவும் கூடியதாக ஆக்குதல் ஆனது), ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்ட ஜீவன் உள் புகுவதை முன்னிட்டே நடக்கிறது; [2]**''இந்த ஜீவனுக்கு உள்ளிருக்கும் ஆத்மாவால் உள்புகுந்து நாம-ரூபம் (பெயரும்உருவமும்) வகுப்பேன்''** என்று (ப்ரஹ்மத்தின் ஸங்கல்பம் ஆகிறது); அதனால், (ஜீவனுக்கு மனிதன், மிருகம் முதலிய உருவமும் பெயரும் உள்ளது போல), அந்த ஜீவனுக்குள் ஆத்மாவாக இருக்கும் ப்ரஹ்மத்துக்கும் கூட தேவர், மனிதர் முதலிய உருவமுடைமையும், அந்த பெயருடைமையும் உண்டு; ஆகையால், ''ப்ராஹ்மணன் யாகம் செய்க'' முதலிய விதி-நிஷேத-ஶாஸ்திரங்களுக்கு ப்ரஹ்மமும் விஷயமாகும் என்பதால், கர்மத்துக்குக் கட்டுப்படுதல் தவிர்க்க முடியாதது - என்று நேரிடும்.

அதற்கு பதில் சொல்கிறார்-

328.அருபவத் ஏவ ஹி தத் ப்ரதானத்வாத் (3-2-14)

அந்த ப்ரஹ்மம் ஶரீரமற்றது போல; [செய்பவனாக] ப்ரதாநமாக ஆவதால்.

தேவர் முதலிய ஶரீரத்தில் உள்புகுவதால், அந்தந்த உருவத்துடன் கூடியதாக ஆனாலும்,

தத் - அந்த ப்ரஹ்மமானது,

அரூபவத் ஏவ - உருவமற்றதற்கு ஸமம் தான்; ஜீவன் போல ஶரீரத்துடன் இருப்பதால் வரக்கூடிய கர்ம-வசப்படுதலானது இவனுக்கு கிடையாது என்று பொருள்.

ஏன்?

ப்ரதாநத்வாத் - நிர்வாகம் செய்பவனாக முக்கியமாக ஆவதால்;

[3]**''ஆகாசம்தான் (ப்ரஹ்மம்தான்) நாம-ரூபங்களை செய்பவன்; அந்த நாம-ரூபம் இரண்டுக்கும் இடையில் (அவற்றால் தீண்டடப்படாமல்) எது இருக்கிறதோ, அது ப்ரஹ்மம்''** என்று எல்லாவற்றுக்கும் உள்புகுந்தாலும், நாம-ரூபங்களால் வரும் பலன் தீண்டாத படியாக, ப்ரஹ்மமானது நாமரூபங்களை செய்பவனாக ஆவதை மட்டுமே வேதம் சொல்கிறது.

ननु तच्छरीरकत्वेन तदन्तर्यामित्वे कथमरूपवदिति रूपसम्बन्धरहिततुल्यत्वमुच्यते? इत्थम् - यथा जीवस्य तत्तज्जन्यसुखदुःखभाक्त्वेन तत्तद्रूपसम्बन्धः, तथा तदभावात् परस्यारूपवत्त्वम्। विधिनिषेधशास्त्राण्यपि कर्मवश्यमेवाधिकुर्वन्ति। तस्मादरूपतुल्यमेव परं ब्रह्म।

ततश्चान्तर्यामिरूपेणावस्थितमपि ब्रह्म निरस्तनिखिलदोषत्वकल्याणगुणाकरत्वरूपोभयलिङ्गमेव॥१४॥

* * *

ननु च, ‘‘**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म**’’(तै.1.आन.2)[1] इत्यादिभिर्निर्विशेषप्रकाशैकस्वरूपं ब्रह्मावगम्यते। अन्यत्तु सर्वज्ञत्वसत्यसङ्कल्पत्वजगत्कारणत्वसर्वान्तरात्मत्वसत्यकामत्वादिकं ‘‘**नेतिनेति**’’(बृ.4-3-6)[2] इत्यादिभिः प्रतिषिध्यमानत्वेन मिथ्याभूतमित्यवगन्तव्यम्। तत् कथं कल्याणगुणाकरत्वनिरस्तनिखिलदोषत्वरूपोभयलिङ्गत्वं ब्रह्मण इति; अत आह -

३२९.प्रकाशवच्चावैयर्थ्यात् (३-२-१५)

यथा, ‘‘**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म**’’(तै.1.आन.2)[3] इत्यादिवाक्यावैयर्थ्यात् प्रकाशस्वरूपत्वं ब्रह्मणोऽभ्युपगम्यते - तथा सत्यसङ्कल्पत्वसर्वज्ञत्वजगत्कारणत्वसर्वात्मकत्वनिरस्तनिखिलाविद्यादिदोषत्वाद्यभिधायिवाक्यावैयर्थ्यादुभयलिङ्गमेव ब्रह्म॥१५॥

நநு தச்சரீரகத்வேந ததந்தர்யாமித்வே கதம் அரூபவத் இதி ரூபஸம்பந்தரஹிததுல்யத்வமுச்யதே? இத்தம் - யதா ஜீவஸ்ய தத்தஜ்ஜந்யஸுகதுःகபாக்த்வேந தத்தத்ரூபஸம்பந்தः, ததா ததபாவாத் பரஸ்ய அரூபவத்த்வம்। விதிநிஷேதஶாஸ்த்ராண்யபி கர்மவஶ்யமேவ அதிகுர்வந்தி। தஸ்மாத் அரூபதுல்யமேவ பரம் ப்ரஹ்ம।

ததஶ்ச அந்தர்யாமிரூபேணாவஸ்திதமபி ப்ரஹ்ம நிரஸ்தநிகிலதோஷத்வ-கல்யாணகுணாகரத்வரூபோபயலிங்கமேவ।।14।।

* * *

நநு ச, *“ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம”*(தை.1.ஆந.2)[1] இத்யாதிபிः நிர்விஶேஷப்ரகாஶைகஸ்வரூபம் ப்ரஹ்ம அவகம்யதே। அந்யத்து ஸர்வஜ்ஞத்வஸத்யஸங்கல்பத்வஜகத்காரணத்வஸர்வாந்தராத்மத்வஸத்யகாமத்வாதிகம் *“நேதிநேதி”*(ப்ரு.4-3-6)[1] இத்யாதிபிः ப்ரதிஷித்யமாநத்வேந மித்யாபூதமித்யவகந்தவ்யம், தத் கதம் கல்யாணகுணாகரத்வநிரஸ்தநிகிலதோஷத்வரூபோபயலிங்கத்வம் ப்ரஹ்மண இதி - அத ஆஹ-

329. ப்ரகாஶவச்சாவையர்த்யாத் (3-2-15)

யதா, *“ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம”*(தை.1.ஆந.2)[1] இத்யாதிவாக்யாவையர்த்யாத் ப்ரகாஶஸ்வரூபத்வம் ப்ரஹ்மணः அப்யுபகம்யதே - ததா ஸத்யஸங்கல்பத்வ-ஸர்வஜ்ஞத்வ-ஜகத்காரணத்வ-ஸர்வாத்மகத்வ-நிரஸ்தநிகிலாவித்யாதிதோஷத்வாத்யபிதாயிவாக்யாவையர்த்யாத் உபயலிங்கமேவ ப்ரஹ்ம।।15।।

கேள்வி - அதை ஶரீரமாகக் கொண்டு அதற்குள் அந்தர்யாமியாக (ப்ரஹ்மம்) இருக்கும் போது, 'அரூபவத்' என்று ஶரீரமற்றதற்கு ஸமமாக ஆவது எப்படி சொல்லப்படும்?

பதில் - இப்படி சொல்லப்படும் - ஜீவனுக்கு அந்தந்த உருவத்துடன் (ஶரீரத்துடன்) தொடர்பு என்பது, அந்தந்த ஶரீரத்தால் வரும் ஸுக-துக்க முடைமை என்பதாக உள்ளது; அது எப்படியோ, அப்படியாக பரமாத்மாவுக்கு ஸுக-துக்கம் பெறுதல் இல்லாமையால், உருவமில்லாமை ஆகிறது. (உருவமற்றதற்கு ஸமம் ஆகிறது). விதி-நிஷேத-ஶாஸ்த்ரங்களும் கூட கர்ம-வசப்பட்டவனையே குறித்து ஆகின்றன. எனவே உருவமற்றதற்கு ஸமம்தான் ப்ரஹ்மம்.

ஆகையால், அந்தர்யாமியாக இருப்பினும் ப்ரஹ்மமானது, எல்லா தோஷங்களும் இல்லாமை, கல்யாண-குணங்களுடைமை ஆகிய (இரு) அடையாளத்தோடு கூடியதுதான்.

◆ ◆ ◆ ◆

கேள்வி - [1]**''ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்ரஹ்ம''** முதலியவற்றால், ஒரு விஶேஷமும் அற்ற ப்ரகாசம் (ஜ்ஞானம்) மட்டுமே ஸ்வரூபமானதாக ப்ரஹ்மம் தெரிகிறது. மற்றதான ஸர்வஜ்ஞ-தன்மை, ஸத்யஸங்கல்பனாதல், உலகின் காரணமாதல், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாய் இருத்தல், ஸத்யகாமனாய் இருத்தல் முதலியது, [2]**''நேதிநேதி'' (இப்படியல்ல; இப்படியல்ல)** முதலியவற்றால் மறுக்கப்படுகிறது; அதனால் (அதெல்லாம்) பொய்யானது என தெரிந்து கொள்ளப்படவேண்டும். எனவே, கல்யாண-குணங்களுடைமை, எல்லா தோஷங்களும் இல்லாமை ஆகிய (இரு) அடையாளத்தோடு கூடியதாக ப்ரஹ்மம் எப்படி ஆகும்?

பதில் - இதற்கு பதில் சொல்கிறார் -

329.ப்ரகாஶவத் ச அவையர்த்யாத்(3-2-15)

பொருளற்றவை ஆகாமைக்காக ஜ்ஞானம் போல் [குணங்களும் உண்டு]

[3]**''ஸத்யம் ஜ்ஞானம் அநந்தம் ப்ரஹ்ம''** முதலிய வாக்யம் பொருளற்றது ஆகிவிடக்கூடாது என்பதற்காக, (அதில் சொன்னபடி) ப்ரஹ்மம் ப்ரகாச(ஜ்ஞாந)-ஸ்வரூபம் என்பது ஏற்கப்படுகிறது; அது எப்படியோ அப்படியே ஸத்யஸங்கல்பனாதல், ஸர்வஜ்ஞ-தன்மை, உலகின் காரணமாதல், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாய் இருத்தல், அவித்யை-முதலிய-எல்லா-தோஷமும்-அற்றமை முதலியதைச் சொல்லும் வாக்யங்கள் பொருளற்றவையாகி விடக்கூடாது என்பதால், (அவையும் உண்டு என ஏற்பதால்) இரண்டு அடையாளத்துடன் கூடியதே ப்ரஹ்மம்.

◆ ◆ ◆ ◆

३३०. आह च तन्मात्रम् (३-२-१६)

किञ्च, “**सत्यं ज्ञानमनन्तम्**”(तै.1.आन.2)[1] इत्यादिवाक्यं ब्रह्मणः प्रकाशस्वरूपतामात्रं प्रतिपादयति; नान्यत् सत्यसङ्कल्पत्वादिकं वाक्यान्तरावगतं निषेधति। “**नेतिनेति**” इति च निषेधस्य विषयोऽनन्तरमेव वक्ष्यते॥१६॥

३३१.दर्शयति चाथो अपि स्मर्यते (३-२-१७)

दर्शयति च वेदान्तगणः कल्याणगुणाकरत्वं निरस्तनिखिलदोषत्वं च -[2]

- **“तमीश्वराणां परमं महेश्वरं तं दैवतानां परमं च दैवतम्**”(श्वे.6-7)
- **“स कारणं करणाधिपाधिपो न चास्य कश्चिज्जनिता न चाधिपः” “न तस्य कार्यं करणं च विद्यते न तत्समश्चाभ्यधिकश्च दृश्यते। पराऽस्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च**”(श्वे.6-8,9)[3]
- **“यः सर्वज्ञः सर्ववित् यस्य ज्ञानमयं तपः**”(मु.1-1-9)[4],
- **“भीषाऽस्माद्वातः पवते भीषोदेति सूर्यः**”(तै.1.आन.9)[5],
- **“स एको ब्रह्मण आनन्दः**”(तै.1.आन.9)[6],

330.ஆஹ ச தந்மாத்ரம் (3-2-16)

கிஞ்ச, *“ஸத்யம் ஜ்ஞாநமநந்தம்”*(தை.1.ஆந.2)[1] இத்யாதிவாக்யம் ப்ரஹ்மண: ப்ரகாஶஸ்வரூபதாமாத்ரம் ப்ரதிபாதயதி, நாந்யத் ஸத்யஸங்கல்பத்வாதிகம் வாக்யாந்தராவகதம் நிஷேததி। “நேதிநேதி” இதி ச நிஷேதஸ்ய விஷய: அநந்தரமேவ வக்ஷ்யதே।।16।।

330. தர்ஶயதி சாऽதோ அபி ஸ்மர்யதே (3-2-17)

தர்ஶயதி ச வேதாந்தகண: கல்யாணகுணாகரத்வம் நிரஸ்தநிகிலதோஷத்வம் ச -

- *“தமீஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம் தம் தைவதாநாம் பரமம் ச தைவதம்।”* (ஶ்வே.6-7)[2]
- *“ஸ காரணம் கரணாதிபாதிபோ ந சாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா ந சாதிப:।” “ந தஸ்ய கார்யம் கரணம் ச வித்யதே ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே। பராऽஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ருயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச”*(ஶ்வே.6-8,9)[3],
- *“ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித் யஸ்ய ஜ்ஞாநமயம் தப:”*(மு.1-1-9)[4],
- *“பீஷாऽஸ்மாத் வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:”*(தை.1.ஆந.9)[5],
- *“ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:”*(தை.1.ஆந.9)[6],

330.ஆஹ ச தந்மாத்ரம்(3-2-16)

அதைமட்டுமேசொல்கிறதுஎன்பதும்கூட

மேலும், [1]**''ஸத்யம் ஜ்ஞாநம் அனந்தம் ப்ரஹ்ம''** முதலிய வாக்யமானது, ப்ரஹ்மம் ஜ்ஞாந-ஸ்வரூபமானவன் என்பதை மட்டும் சொல்கிறது; வேறுவாக்யத்தால் தெரியவரும் ஸத்ய-ஸங்கல்பத்வம் முதலிய வேறெதையும் மறுக்கவில்லை.

''நேதிநேதி'' என்னும் மறுப்பின் விஷயம் அடுத்ததாகவே சொல்லப்படப் போகிறது.

◆

331.தர்ஶயதி ச அதோ அபி ஸ்மர்யதே(3-2-17)

[வேதாந்தம்] முழுவதும் காண்பிக்கிறது; ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறதும் கூட

ப்ரஹ்மமானது, கல்யாண-குணங்கள் உடையது என்பதையும், எல்லா தோஷங்களும் அற்றது என்பதையும் (இரட்டை-அடையாளத்தை) வேதாந்த-வாக்ய-குழுவானது காண்பிக்கிறது. -

- [2]**''ஈஶ்வரர்களுக்கெல்லாம் உயர்ந்த ஈஶ்வரனான அவனை, தெய்வங்களுக்கெல்லாம் உயர்ந்ததெய்வமும் ஆன அவனை''.**
- [3]**''இந்த்ரியங்களின் தலைவனான ஜீவனுக்கும் தலைவனான அவன் காரணம்; இவனுக்கு தந்தையோ, அதிபதியோ கிடையாது; இவனுக்கு, கார்யமான உடலும் கரணமான இந்த்ரியமும் கிடையாது; இவனுக்கு ஸமமானவனும் உயர்ந்தவனும் காணப்படுவதில்லை; இவனது இயல்பான உயர்ந்த ஶக்தியானது பலவிதமாக வேதத்தில் சொல்லப்படுகிறது; இயல்பான ஜ்ஞாநம், பலம், செயல் ஆகியதும் வேதத்தில் சொல்லப்படுகிறது'',**
- [4]**''யார் ஸர்வஜ்ஞன் - எல்லாம் அறிந்தவன், எல்லாம் அடைந்தவன், யாருக்கு தபஸ்ஆனது ஜ்ஞாநமாக ஆகுமோ''**
- [5]**''இவனிடமிருந்து பயத்தால் காற்று வீசுகிறது; இவனிடமிருந்து பயத்தால் ஸூர்யன் உதிக்கிறான்''**
- [6]**''அது (ப்ரஜாபதியின் ஆனந்தத்தின் நூறு மடங்கு), ப்ரஹ்மத்தின் ஒரு ஆனந்தமாகும்''.**

- **"यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह। आनन्दं ब्रह्मणो विद्वान् न बिभेति कुतश्चनेति"** (तै.1.आन.10)[1],
- **"निष्कलं निष्क्रियं शान्तं निरवद्यं निरञ्जनम्"** (श्वे.6-19)[2] इत्यादिः।

स्मर्यते च -

- **"यो मामजमनादिं च वेत्ति लोकमहेश्वरम्"** (गी.10-3)[3],
- **"विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत्"** (गी.10-42)[4],
- **"मयाऽध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम्।**
  हेतुनाऽनेन कौन्तेय जगद्धि परिवर्तते॥" (गी.9-10)[5],
- **"उत्तमः पुरुषस्त्वन्यः परमात्मेत्युदाहृतः।**
  यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः॥" (गी.14-17)[6],
- **"सर्वज्ञः सर्वकृत् सर्वशक्तिज्ञानबलर्द्धिमान्॥**
  अन्यूनश्चाप्यवृद्धिश्च स्वाधीनो नादिमान् वशी।"
  क्लमतन्द्रीभयक्रोधकामादिभिरसंयुतः॥
  निरवद्यः परः प्राप्तेर्निरधिष्ठोऽक्षरः क्रमः।" (वि.पु.5-1-47,48,49)[7] इत्यादिः।

- *"யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ। ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சநேதி"*(தை.1.ஆந.10)[1],
- *"நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் நிரவத்யம் நிரஞ்ஜநம்"*(ஶ்வே.6-19)[2] இத்யாதி:।

ஸ்மர்யதே ச -

- *"யோ மாமஜமநாதிம் ச வேத்தி லோகமஹேஶ்வரம்"*(கீ.10-3)[3],
- *"விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்திதோ ஜகத்"*(கீ.10-42)[4],
- *"மயாऽத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்।*
  ஹேதுநாऽநேந கௌந்தேய ஜகத்தி பரிவர்ததே॥ (கீ.9-10)[5],
- *"உத்தம: புருஷஸ்த்வந்ய: பரமாத்மேத்யுதாஹ்ருத:।*
  யோ லோகத்ரயமாவிஶ்ய பிபர்த்யவ்யய ஈஶ்வர:॥(கீ.14-17)[6],
- *"ஸர்வஜ்ஞ: ஸர்வக்ருத் ஸர்வஶக்திஜ்ஞாநபலர்த்திமாந்॥*

  அந்யூநஶ்சாப்யவ்ருத்திஶ்ச ஸ்வாதீநோऽநாதிமாந் வஶீ।
  க்லமதந்த்ரீபயக்ரோதகாமாதிபிரஸம்யுத:॥

  நிரவத்ய: பர: ப்ராப்தேர்நிரதிஷ்டோऽக்ஷர: க்ரம:।"(வி.பு.5-147,48,49)[7] இத்யாதி:।

- [1]‘‘**வாக்குகள் மனஸ்ஸுடன் கூட சேர்ந்து, அடைய முடியாமல் எதனிடமிருந்து திரும்பி விடுகின்றனவோ, ப்ரஹ்மத்தின் (அந்த) ஆனந்தத்தை அறிபவன் எதிலிருந்தும் பயப்படமாட்டான்**’’

(அளவற்ற ஆனந்தம் உடைய வன் என்று கருத்து)

- [2]‘‘**அவயவம் அற்றது, செயலற்றது, (பசி, தாகம், சோகம் முதலிய) அலைகளின்றி அமைதியாய் இருப்பது; தோஷமற்றது, கர்ம-ஸம்பந்தம் அற்றது**’’.

முதலியது.

ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறதும் கூட -

- [3]‘‘**பிறப்பற்றவனும் அனாதியானவனும் ஆன என்னை உலகின் மஹேச்வரனாக (ஆள்பவனாக) யார் அறிகிறாரோ**’’
- [4]‘‘**எல்லாவற்றையும் நியமநம் செய்து ஆளும் எனது பெருமையின் ஒரு சிறு அம்ஶத்தால், இந்த முழு உலகத்தையும் தாங்கி இருக்கிறேன்**’’.
- [5]‘‘**ப்ரக்ருதியானது, தலைவனான (அதிஷ்டானம் செய்யும்) என்னால் சர-அசரம் கலந்த உலகை படைக்கிறது; அர்ஜுனா, இந்த காரணத்தால் உலகம் உண்டாகிறது என்பதால் (எனது ஆளும் தன்மையைப் புரிந்துகொள்)**’’.
- [6]‘‘**அறியப்படும் அசேதனம், பத்த-சேதனர், முக்தர் ஆகிய மூன்றையும் உள்புகுந்து யார் தாங்குபவனோ, அழிவற்றவனோ, ஈச்வரன் (ஆள்பவன்) ஆகிறானோ, அந்த புருஷ-உத்தமன் ஜீவர்களை விட வேறொருவன்; பரமாத்மா என்று வேதங்களில் சொல்லப்படுபவன்**’’.
- [7]‘‘**எல்லாம் அறிபவன், எல்லாம் படைப்பவன், எல்லா ஶக்தி-ஜ்ஞாநம்-பலம்-செழிப்பு உடையவன்; குறைவற்றவன், வளர்ச்சி அற்றவன், தனக்கு அதீனமானவன் (பிறருக்கு அதீனமாகாதவன்), காரணமற்றவன், வசத்தில் வைத்திருப்பவன், கஷ்டம்-சோம்பல்-பயம்-கோபம்-காமம் முதலியவை சேராதவன், தோஷமற்றவன், அடையப்படமுடியாதவன், (அடையப்பட வேண்டியதின் எல்லையானவன்), ஆதாரமான இருப்பிடம் அற்றவன், அழிவற்றவன், தடையில்லாத உத்ஸாஹம் உடையவன்**’’.

முதலியது.

अतः सर्वत्रावस्थितस्यापि ब्रह्मणः उभयलिङ्गत्वात् तत्तत्स्थानप्रयुक्ता दोषा न परं ब्रह्म स्पृशन्ति॥१७॥

३३२.अत एव चोपमा सूर्यकादिवत् (३-२-१८)

यतो नानाविधेषु स्थानेषु स्थितस्यापि परस्य ब्रह्मणो न तत्प्रयुक्तदोषभाक्त्वम्, अत एव जलदर्पणादिप्रतिबिम्बितसूर्यादिवत् परमात्मा तत्रतत्रावस्थितोऽपि निर्दोष इति शास्त्रेषूपमा क्रियते -

- **''आकाशमेकं हि यथा घटादिषु पृथग्भवेत्।**
  तथात्मैको ह्यनेकस्थो (स्तु) जलाधारेष्विवांशुमान्॥''(या.स्मृ.प्रा.3-144)[1],
- **''एक एव हि भूतात्मा भूतेभूते व्यवस्थितः।**
  एकधा बहुधा चैव दृश्यते जलचन्द्रवत्॥''(अमृ.12)[2] इत्यादिषु॥१८॥

अत्र चोदयति -

३३३.अम्बुवदग्रहणात्तु न तथात्वम् (३-२-१९)

तुशब्दश्चोद्यं द्योतयति। **अम्बुवदिति** सप्तम्यन्तात् वतिः। अम्बुदर्पणादिषु यथा

அத: ஸர்வத்ராவஸ்திதஸ்யாபி ப்ரஹ்மண: உபயலிங்கத்வாத் தத்தத் ஸ்தாநப்ரயுக்தா தோஷா: ந பரம் ப்ரஹ்ம ஸ்ப்ருஶந்தி।। 17।।

332. அத ஏவ சோபமா ஸூர்யகாதிவத் (3-2-18)

யதோ நாநாவிதேஷு ஸ்தாநேஷு ஸ்திதஸ்யாபி பரஸ்ய ப்ரஹ்மண: ந தத்ப்ரயுக்ததோஷபாக்த்வம், அத ஏவ ஜலதர்பணாதிப்ரதிபிம்பிதஸூர்யாதிவத் பரமாத்மா தத்ரதத்ராவஸ்திதோऽபி நிர்தோஷ இதி ஶாஸ்த்ரேஷு உபமா க்ரியதே -

- *''ஆகாஶமேகம் ஹி யதா கடாதிஷு ப்ருதக்பவேத்।*
  ததாத்மைகோ ஹ்யநேகஸ்தோ (ஸ்து) ஜலாதாரேஷ்விவாம்ஶுமாந்।।'',
  (யா.ஸ்ம்ரு.ப்ரா.3-144)[1]
- *''ஏக ஏவ ஹி பூதாத்மா பூதேபூதே வ்யவஸ்தித:।*
  ஏகதா பஹுதா சைவ த்ருஶ்யதே ஜலசந்த்ரவத்।।''(ஆம்ரு-12)[2]
  இத்யாதிஷு।।18।।

அத்ர சோதயதி-

333. அம்புவதக்ரஹணாத்து ந ததாத்வம் (3-2-19)

துஶப்த: சோத்யம் த்யோதயதி। அம்புவதிதி ஸப்தம்யந்தாத் வதி:।

ஆகையால், ப்ரஹ்மம் எல்லா இடத்திலும் இருப்பதானாலும், இந்த இரட்டை-அடையாளம் உடையதாக இருப்பதால், அந்த இடத்தால் (இருப்பதால்) வரக்கூடிய தோஷங்கள் பர-ப்ரஹ்மத்தை தீண்டுவதில்லை.

◆ ◆ ◆ ◆

332.அத: ஏவ ச உபமா ஸூர்யகாதிவத்(3-2-18)

அதனால்தான் ஸூர்யன் முதலியது போல என்று உவமானம் [ஆகிறது].

பரப்ரஹ்மமானது, பலவிதமான இடங்களில் இருப்பதானாலும், அதனால் வரக்கூடிய தோஷமுடைமை அதற்கு கிடையாது என்பதனால் தான், 'ஜலம், கண்ணாடி முதலியவற்றில் ப்ரதிபலிக்கும் ஸூர்யன் முதலியது போல் பரமாத்மா அங்கங்கு இருந்தாலும் தோஷமற்றவன்' என்று ஶாஸ்த்ரங்களில் உவமானம் செய்யப்படுகிறது-

- [1]**''தனித்தனியாக பானை முதலியவற்றில் இருக்கும் ஆகாசம் எப்படி ஒரே தன்மையுடையது ஆகுமோ, நீர்நிலைகளில் ஸூர்யன் எப்படி ஆவானோ, அப்படி பல இடத்தில் இருப்பவனான ஆத்மா (அந்த பலவித தன்மைகள் கலக்காமல்) ஒரே தன்மையினன் ஆவான்'',**
குத:? *விதிஶேஷவத் அர்தாபேதாத்* - யதா ஏகஸ்மிந் வேதாந்தே ஶ்ருத: வைஶ்வாநர-தஹராதிவிதிஶேஷோ குண: தத்வித்யாஸம்பந்தாத் ததுபகாரரூபப்ரயோஜநஸித்த்யர்தமநுஷ்டீயதே, ததா வேதாந்தாந்தரோதிதோऽபி தத்வித்யாஸம்பந்தித்வேந ததுபகாராவிஶேஷாத் உபஸம்ஹர்தவ்ய இத்யர்த:। *ச* ஶப்தோऽவதாரணே।। 5 ।।

இதி ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணம் ।। 1 ।।

- தைத்திரீயு$_4$-உபநிஷத்திலோ சாந்தோக்யத்தில் இருக்கும் குறிப்பை மூலமாக வைத்து, **“அங்கே இதயத்தில் சிறிய ஆகாசம் (பரமாத்மா) சோகமற்றதாக உள்ளது; அதற்குள் எது உள்ளதோ, அது உபாஸநம் செய்யப்பட வேண்டியது”** என்று, எட்டு குணங்களுடன் கூடிய பரமாத்மாவைப் பற்றிய உபாஸநம் சொல்லப்படுகிறது.

இப்படி சொன்னதானது, இரண்டு உபநிஷத்திலும், ஒரே வித்யை என்பதால்தான், குணங்களை உபஸம்ஹாரம் செய்வதால்தான் (சேர்த்து எடுத்துக் கொள்வதால்) சரியாகிறது.

◆ ◆ ◆ ◆

(பலவேறு இடங்களில் சொல்லப்படும்) வித்யை ஒன்றே என்பது (பூர்வமீமாம்ஸா ஶாஸ்த்ரத்தில்) ஶாகாந்தர-அதிகரணத்தின் மூலம் தெரியவந்தது; அதனை இப்படியாக (இங்கே வேதாந்தஶாஸ்த்ரத்தில்) நிலைநாட்டிய பின், பயனைச் சொல்கிறார் -

359. உபஸம்ஹார: அர்த்தாபேதாத் விதிஶேஷவத் ஸமாநே ச (3-3-5)

உபாஸநம் ஒன்றாக ஆகும்போது, ஒரே பயன் ஆவதால், விதிக்கு சேஷமானது போல உபஸம்ஹாரம் செய்யப்பட வேண்டியதுதான்.

ஸமாநே - இப்படி எல்லா வேதாந்தங்களிலும் உபாஸநம் என்பது ஒன்றாக ஆகும்போது,

உபஸம்ஹார: - வேறு உபநிஷத்தில் ஓதப்பட்ட குணங்களுக்கு வேறு உபநிஷத்தில் உபஸம்ஹாரம் (சேர்த்துக் கொள்ளுதல்) செய்யப்பட வேண்டும்.

ஏன்?

விதிஶேஷவத் அர்த்தாபேதாத் - விதியின் ஶேஷம் போல பயன் ஒன்றாவதால்

ஒரு உபநிஷத்தில் வைஶ்வானர-தஹர-வித்யை முதலியவற்றின் விதிக்கு ஶேஷமாக ஓதப்படும் அங்கமானது, அந்த வித்யையுடன் ஸம்பந்தப் படுவதால், அந்த வித்யைக்கு உதவும் எனும் பயன் கிடைப்பதற்காக அனுஷ்டானம் செய்யப்படுகிறது; அது எப்படியோ, அப்படி, வேறு உபநிஷத்தில் சொல்லப்பட்டதும் கூட அந்த வித்யையுடன் ஸம்பந்தப் படுவதால், அதற்கு பயன்படும் என்பதில் மாறுபாடு கிடையாது என்பதால், உபஸம்ஹாரம் (சேர்த்துக் கொள்ளுதல்) செய்யப்பட வேண்டியது என்று அர்த்தம்.

‘ச’ - என்ற சொல், ‘அது மட்டுமே’ எனும் பொருளில் ஆகும். (சேர்த்துக்கொள்ள வேண்டியதுதான் என்று அர்த்தம்)

* * *

ஸர்வவேதாந்தப்ரத்யய-அதிகரணம் முற்றிற்று.

84.அந்யதாத்வாதிகரணம்(3-3-2)

முன் குறிப்பு

இனி ஒவ்வொரு வித்யையாக எடுத்து ஆராயப் போகிறார்; இதில் உத்கீதவித்யை பற்றிய விசாரம் இப்போது..

ஸாமவேதத்தில் ஓதப்படும் ஸாமத்துக்கு ஐந்து பாகங்கள் உண்டு; அவற்றில் ஒன்று உத்கீதம் என்பது; யாகத்தில் ஒரு அங்கமாக உத்கீதம் பாடப்படும்; யாகத்தில் உத்கீதம் பாடுபவருக்கு உத்காதா என்று பெயர்; அப்போது, அந்த உத்கீதத்தைப் பற்றிய சில உபாஸனங்களை வேதம் சொல்கிறது; யாகத்தின் இடையே இந்த உபாஸனங்கள் செய்தால், அதற்கு தனி பலனும் உண்டு என்கிறது.

சாந்தோக்யத்தில் சொன்ன உத்கீத-உபாஸனங்கள் பல உள்ளன; அவற்றில் முதலில் சொன்ன உபாஸனம் பற்றி இந்த அதிகரணத்தில் விசாரம்; இதே உபாஸனம் ப்ருஹதாரண்யகத்திலும் உள்ளது; இரண்டு வித்யையும் ஒன்றா வெவ்வேறா என விசாரம்.

இரண்டு வித்யையும் ஒன்றுதான் என பூர்வபக்ஷம்; ஏனெனில், உத்கீதத்தை ப்ராணன் ஆக எண்ணி உபாஸநம் செய்வதையே இரண்டும் சொல்கிறது; அதன் மூலம் எதிரிகளை வெல்லலாம் எனும் பலனும் ஒன்றாக உள்ளது.

இரண்டு இடத்தில் சொன்ன வித்யைகளும் வெவ்வேறு என்பது ஸித்தாந்தம்; ஏனெனில் -

சாந்தோக்யத்தில் உத்கீதத்தின் ஒரு பாகமான ப்ரணவத்தைப் பற்றிய உபாஸனம் சொல்லியுள்ளது; வாஜஸனேயத்திலோ, முழு உத்கீதத்தையும் பற்றிய உபாஸனம் சொல்கிறது.

மேலும் வாஜஸனேயத்தில், உத்கீதத்தை கானம் செய்யும் உத்காதா என்பவரை ப்ராணனாக எண்ணி உபாஸனம் செய்ய வேண்டும்; சாந்தோக்யத்தில் அப்படியில்லை; உத்கீத-கானம் செய்பவரை குறிப்பிடவே இல்லை; உத்கானம் செய்யப்படுவதான உத்கீதத்தின் ஒரு பகுதியையே உபாஸநம் செய்ய சொல்கிறது.

எனவே, உபாஸனத்தின் ரூபம் (விஷயம்) வேறாவதால், வித்யை வேறாகும்.

உத்கீத உபாஸனங்கள் பல உள்ளன; சுருக்கமாக பின் இணைப்பில் காணலாம். இந்த விஷயம் பற்றி விசாரம் பல அதிகரணங்களில் வரப் போகிறது.

८४. अन्यथात्वाधिकरणम् (३-३-२)

३६०.अन्यथात्वं शब्दादिति चेन्नाविशेषात् (३-३-६)

एवं चोदनाद्यविशेषात् विद्यैकत्वम्, एकत्वे च गुणोपसंहारः कर्तव्य इत्युक्तम्; अतः परं काश्चन विद्या अधिकृत्य प्रत्यभिज्ञाहेतुभूतचोदनाद्यविशेषोऽस्ति, नेति निरूप्य निर्णीयते।

अस्त्युद्गीथविद्या वाजिनां छन्दोगानां च। वाजिनां तावत् -

- **“द्वया ह प्राजापत्याः देवाश्चासुराश्च”**(बृ.3-3-1)[1] इत्यारभ्य,
- **“ते ह देवा ऊचुः हन्तासुरान् यज्ञे उद्गीगीथेनात्ययाम”**(बृ.3-3-1)[2] इत्युद्गीथेनासुरविध्वंसनं प्रतिज्ञाय, उद्गीथे वागादिमनःपर्यन्तदृष्टौ असुरैरभिभवमुक्त्वा,
- **“अथ हेममासन्यं प्राणमूचुः”**(बृ.3-3-7)[3] इत्यादिना उद्गीथे प्राणदृष्ट्या असुरपराभवमुक्त्वा,
- **“भवत्यात्मना, पराऽस्य द्विषन् पाप्मा भ्रातृव्यो भवति, य एवं वेद”**(बृ.3-3-7)[4] इति शत्रुपराजयफलायोद्गीथे प्राणदृष्टिर्विहिता।

84. அந்யதாத்வாதிகரணம் (3-3-2)

360.அந்யதாத்வம் ஶப்தாதிதி சேந்நாவிஶேஷாத்(3-3-6)

ஏவம் சோதநாத்யவிஶேஷாத் வித்யைகத்வம், ஏகத்வே ச குணோபஸம்ஹார: கர்தவ்ய: இத்யுக்தம்। அத: பரம் காஶ்சந வித்யா அதிக்ருத்ய ப்ரத்யபிஜ்ஞாஹேதுபூதசோதநாத்யவிஶேஷ: அஸ்தி, நேதி நிரூப்ய நிர்ணீயதே।

அஸ்தி உத்கீதவித்யா வாஜிநாம் சந்தோகாநாம் ச। வாஜிநாம் தாவத் -

- *“த்வயா ஹ ப்ராஜாபத்யா: தேவாஶ்சாஸுராஶ்ச”*(ப்ரு.3-3-1)[1] இத்யாரப்ய,
- *“தே ஹ தேவா ஊசு: ஹந்தாஸுராந் யஜ்ஞே உத்கீதேநாத்யயாம”*(ப்ரு.3-3-1)[2] இதி உத்கீதேநாஸுரவித்வம்ஸநம் ப்ரதிஜ்ஞாய, உத்கீதே வாகாதிமந:பர்யந்தத்ருஷ்டௌ அஸுரைரபிபவமுக்த்வா,
- *“அத ஹ இமமாஸந்யம் ப்ராணமூசு:”*(ப்ரு.3-3-7)[3] இத்யாதிநா உத்கீதே ப்ராணத்ருஷ்ட்யா அஸுரபராபவமுக்த்வா,
- *“பவத்யாத்மநா, பரா஽ஸ்ய த்விஷந் பாப்மா ப்ராத்ருவ்யோ பவதி, ய ஏவம் வேத”*(ப்ரு.3-3-7)[4] இதி ஶத்ருபராஜயபலாய உத்கீதே ப்ராணத்ருஷ்டிர்விஹிதா।

84.அந்யதாத்வாதிகரணம்(3-3-2)

360.(ஸூ)அந்யதாத்வம் ஶப்தாத் இதி சேத் ந அவிஶேஷாத் (3-3-6)

[ரூபம்] வேறாவது ஶப்தத்தால் [தெரிகிறது] என்றால்,அல்ல;
[உபக்ரமத்தில்]வித்யாசம் இல்லாதபடியால்.

ஸங்கதி (விஷயதொடர்பு)

இப்படியாக கட்டளை முதலியது வித்யாசம் இல்லாமல் இருந்தால், ஒரே வித்யை ஆகும் என்பது சொல்லப்பட்டது; ஒரே வித்யையாக ஆனால், குணங்களின் உபஸம்ஹாரம் (வேறிடத்தில் சொன்னதை வேறிடத்தில் சேர்த்துக் கொள்ளுதல்) செய்யப்பட வேண்டும் என்பதும் சொல்லப்பட்டது.

இதற்கு மேல், சில வித்யைகளைக் குறித்து, ஒன்றாக அறிவதற்குக் காரணமான - 'கட்டளை முதலியவற்றில் வித்யாசம் இன்மை' என்பது- இருக்கிறதா இல்லையா என்று நிரூபணம் செய்து நிச்சயம் செய்யப்படும்.

விஷயவாக்யம்

உத்கீதவித்யை ஆனது, வாஜஸனேய-உபநிஷத்திலும் சாந்தோக்ய-உபநிஷத்திலும் உள்ளது.

வாஜஸனேயத்தில்,

- [1]**''ப்ரஜாபதியின் புதல்வர்கள் இரு விதமானவர்கள் - தேவர்களும் அசுரர்களும்''** என்று ஆரம்பித்து,
- [2]**''ஆகா, அசுரர்களை யாகத்தில் உத்கீதம் கொண்டு வெல்வோம் என்று அந்த தேவர்கள் சொன்னார்கள்''** என்று உத்கீதம் மூலம் அசுரர்களைக் கொல்வதை ப்ரதிஜ்ஞை செய்து,
- உத்கீதத்தில் வாக் முதல் மனஸ் வரையாக உபாஸனம் செய்தால், அசுரர்களால்(தேவர்கள்)தோல்வி பெற்றதைச் சொல்லி,
- [3]**''பிறகு இந்த முக்யப்ராணனை சொன்னார்கள்''** என்று உத்கீதத்தில் ப்ராணனாக உபாஸனம் செய்ததால், அசுரர்கள் அழிந்ததைச் சொல்லி,
- [4]**''யார் இப்படி உபாஸனம் செய்கிறானோ, அவன் ஸ்வரூபத்தால் நிலை பெறுவான்; இவனை த்வேஷிக்கும் எதிரி அழிவான்''** என்று, சத்ருவின் தோல்வி எனும் பலனுக்காக உத்கீதத்தை ப்ராணன் ஆக உபாஸனம் செய்வது விதிக்கப் பட்டது.

एवं छन्दोगानामपि,

★ **''देवासुरा ह वै यत्र संयेतिरे''** (छा.1-2-1)[1] इत्यारभ्य,

★ **''तद्ध देवा उद्गीथमाजहुः अनेनैनान् अभिहनिष्यामः''** (छा.1-2-7)[2] इति उद्गीथेनासुरपराभवं प्रतिज्ञाय, तद्धदेवोद्गीथे वागादिदृष्टौ दोषमभिधाय,

★ **''अथ ह य एवायं मुख्यः प्राणस्तमुद्गीथमुपासाञ्चक्रिरे''** (छा.1-2-7)[3] इत्यादिना उद्गीथे प्राणदृष्ट्या असुरपराभवमुक्त्वा,

★ **''यथाऽश्मानमाखणमृत्वा विध्वंसते, एवं हैव स विध्वंसते, य एवंविदि पापं कामयते''** (छा.1-2-8)[4] इति शत्रुपराभवाय उद्गीथे प्राणदृष्टिर्विहिता।

वेदनविषयविधिप्रत्ययाश्रवणेऽपि फलसाधनत्वश्रवणात् वेदनविषयो विधिः कल्प्यते। उद्गीथविद्यायाः क्रत्वर्थत्वेन क्रतुसाद्गुण्यफलत्वेऽप्यार्थवादिकमपि फलं तदविरुद्धं ग्राह्यमेवेति देवताधिकरणे प्रतिपादितम्।

तत्र संशय्यते - किमत्र विद्यैक्यम्, उत नेति।

ஏவம் சந்தோகாநாமபி,

★ *''தேவாஸுரா ஹ வை யத்ர ஸம்யோதிரே''* (சா.1-2-1)[1] இத்யாரப்ய,

★ *''தத்த தேவா உத்கீதமாஜஹ்ருః அநேநைநாந் அபிஹநிஷ்யாமః''*(சா.1-2-7)[2] இதி உத்கீதேநாஸுரபராபவம் ப்ரதிஜ்ஞாய, தத்வதேவ உத்கீதே வாகாதித்ருஷ்டௌ தோஷமபிதாய,

★ *''அத ஹ ய ஏவாயம் முக்யః ப்ராணஸ்தமுத்கீதமுபாஸாஞ்சக்ரிரே''* (சா.1-2-7)[3] இத்யாதிநா உத்கீதே ப்ராணத்ருஷ்ட்யா அஸுரபராபவமுக்த்வா,

★ *''யதாऽஸ்மாநமாகணம்ருத்வா வித்வம்ஸதே, ஏவ ஹைவ ஸ வித்வம்ஸதே, ய ஏவம்விதி பாபம் காமயதே''*(சா.1-2-8)[4] இதி ஶத்ருபராபவாய உத்கீதே ப்ராணத்ருஷ்டிர்விஹிதா।

வேதநவிஷயவிதிப்ரத்யயாஶ்ரவணேऽபி பலஸாதநத்வஶ்ரவணாத் வேதநவிஷயோ விதிః கல்ப்யதே। உத்கீதவித்யாயாః க்ரத்வர்தத்வேந க்ரதுஸாத்குண்யபலத்வேऽபி ஆர்தவாதிகமபி பலம் ததவிருத்தம் க்ராஹ்யமேவேதி தேவதாதிகரணே ப்ரதிபாதிதம்।

தத்ர ஸம்ஶய்யதே - கிமத்ர வித்யைக்யம், உத நேதி।

இப்படியே சாந்தோக்யத்திலும்,

- [1]**''தேவர்களும் அசுரர்களும் எப்போது யுத்தம் செய்தார்களோ''** - என்று ஆரம்பித்து,
- [2]**''அப்போது தேவர்கள் இதன் மூலம் இந்த அசுரர்களை கொல்வோம் என்று உத்கீதத்தை கொண்டுவந்தனர்''** - என்று உத்கீதம் மூலம் அசுரர்களின் அழிவை ப்ரதிஞ்ஞை செய்து,
- அதுபோலவே உத்கீதத்தில் வாக் முதலியதாக உபாஸநம் செய்தால் தோஷத்தை சொல்லி,
- [3]**''இந்த முக்யப்ராணன் எதுவோ, அதுவாக உத்கீதத்தை உபாஸநம் செய்தனர்''** என்பது முதலியதால், உத்கீதத்தை ப்ராணன் ஆக உபாஸநம் செய்வதால், அசுரர்களின் தோல்வியைச் சொல்லி,
- [4]**''இப்படியாக உத்கீத-உபாஸநம் செய்பவனிடம் யார் பாபத்தை செய்ய விரும்புகிறானோ, அவன், மண் கட்டியானது கல்லை அடைந்து எப்படி அழியுமோ, அப்படியே அழிவான்''** என்று சத்ரு-அழிவதன் பொருட்டு, உத்கீதத்தில் ப்ராணன் ஆக உபாஸநம் செய்வது விதிக்கப் பட்டது.

உபாஸநம் பற்றியதான விதி (கட்டளைச்சொல்) வேதத்தில் இல்லை; ஆனாலும், பலனுக்கு உபாயமாக (உபாஸநத்தை) சொல்வதால், உபாஸநம் பற்றிய விதி - கட்டளை ஊகிக்கப் படுகிறது. இந்த உபாஸனம் யாகத்தின் பொருட்டே ஆகும் என்பதால், யாகம் நன்கு நடைபெறுதலே (இதற்கு)பலனாகும் என்று வைத்துக் கொண்டாலும், அர்த்தவாதத்தில் சொன்ன பலனும் கூட அதற்கு முரண்பட்டு இல்லாதது எடுத்துக் கொள்ள ஏற்றது என தேவதாதிகரணத்தில் (1-3-7)சொல்லப் பட்டது.

✍*(கேள்வி - இந்த உபாஸனத்துக்கு பலன் விதிவாக்யத்தில் சொல்லவில்லை; அர்த்தவாதவாக்யத்தில்தான் பலன் சொல்லியுள்ளது; அர்த்தவாதவாக்யத்தில் சொன்ன பலனை கருத்தில் கொள்ளக் கூடாது; உண்மையில் இந்த உபாஸனம் யாகத்தின் அங்கமாகும்; இதை செய்தால்தான் யாகம் நன்கு செய்ததாக ஆகும்; எனவே, யாகத்தை நடத்தி வைத்தல் என்பது தவிர வேறு-தனிப்பட்ட பலன் எதுவும் கிடையாது.*

பதில் - அர்த்தவாதவாக்யத்தில் சொன்ன பலனையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்று முன்பே தேவதாதிகரணத்தில் சொல்லியாயிற்று; எனவே, பலன் சொல்லியிருப்பதால், விதியை (கட்டளையை) ஊகிக்கலாம். உண்மையில் இந்த உபாஸனம் யாகத்தின் அங்கம் அல்ல என்று அநியமாதிகரணம் முதலியதில் சொல்லப் போகிறார்.)✍

ஸந்தேஹம்

இந்த விஷயத்தில் ஸந்தேஹிக்கப் படுகிறது - இங்கு வித்யை ஒன்றுதானா அல்லது இல்லையா? - என்று.

किं युक्तम्? विद्यैक्यमिति। कुतः? उभयत्रोद्गीथस्यैवाध्यस्तप्राणभावस्योपास्यत्वश्रवणात् चोदनाद्यविशेषात्। फलसंयोगस्तावत् शत्रुपरिभवरूपो न विशिष्यते। रूपमप्यध्यस्तप्राणभावोद्गीथाख्योपास्यैक्यादविशिष्टम्। चोदना च विदिधात्वर्थगताऽविशिष्टा। आख्या चोद्गीथविद्येत्यविशिष्टा।

अत्र राद्धान्तिच्छायया परिचोद्य परिहरति - **अन्यथात्वं शब्दादिति चेन्नाविशेषात्** इति।

यदुक्तं विद्यैक्यमिति - तन्नोपपद्यते, रूपभेदात्; रूपान्यथात्वं हि शब्दादेव प्रतीयते। वाजसनेयके हि, **‘‘अथ हेममासन्यं प्राणमूचुः, त्वं न उद्गायेति। तथेति तेभ्य एष प्राण उदगायत्’’** (बृ.3-3-7)[1] इति उद्गानस्य कर्तरि प्राणदृष्ट्याऽसुरपराभवमुक्त्वा, **‘‘य एवं वेद’’**(बृ.3-3-7)[2] इति कर्तर्येव प्राणदृष्टिरेवंशब्दादवगम्यते।

छान्दोग्ये, **‘‘अथ ह य एवायं मुख्यः प्राणस्तमुद्गीथमुपासाञ्चक्रिरे’’**(छा.1-2-7)[3] इति उद्गानस्य कर्मण्युद्गीथे प्राणदृष्ट्या असुरपराभवमुक्त्वा, **‘‘य एवं विदि पापं कामयते’’**(छा.1-2-8)[4] इत्येवंशब्दात् कर्मण्येवोद्गीथे प्राणदृष्टिर्विहिता।

கிம் யுக்தம்? வித்யைக்யமிதி। குத:? உபயத்ர உத்கீதஸ்யைவ அத்யஸ்தப்ராணபாவஸ்ய உபாஸ்யத்வஶ்ரவணாத் சோதநாத்யவிஶேஷாத்। பலஸம்யோகஸ்தாவத் ஶத்ருபரிபவரூபோ ந விஶிஷ்யதே। ரூபமபி அத்யஸ்தப்ராணபாவோத்கீதாக்யோபாஸ்யைக்யாத் அவிஶிஷ்டம்। சோதநா ச விதிதாத்வர்தகதாऽவிஶிஷ்டா। ஆக்யா ச உத்கீதவித்யேத்யவிஶிஷ்டா।

அத்ர ராத்தாந்திச்சாயயா பரிசோத்ய பரிஹரதி - *அந்யதாத்வம் ஶப்தாதிதி சேந்நாவிஶேஷாத்* இதி,

யதுக்தம் வித்யைக்யமிதி - தந்நோபபத்யதே, ரூபபேதாத், ரூபாந்யதாத்வம் ஹி ஶப்தாதேவ ப்ரதீயதே। வாஜஸநேயகே ஹி, *“அத ஹேமாஸந்யம் ப்ராணமூசு:, த்வம் ந உத்காயேதி। ததேதி தேப்ய ஏஷ ப்ராண உதகாயத்”* (ப்ரு.3-3-1)[1] இதி உத்காநஸ்ய கர்தரி ப்ராணத்ருஷ்ட்யா ஆஸுரபராபவமுக்த்வா, *“ய ஏவம் வேத”* (ப்ரு.3-3-1)[2] இதி கர்தர்யேவ ப்ராணத்ருஷ்டி: ஏவம்ஶப்தாதவகம்யதே।

சாந்தோக்யே, *“அத ஹ ய ஏவாயம் முக்ய: ப்ராணஸ்தமுத்கீதமுபாஸாஞ்சக்ரிரே”*(சா.1-2-7)[3] இதி உத்காநஸ்ய கர்மணி உத்கீதே ப்ராணத்ருஷ்ட்யா அஸுரபராபவமுக்த்வா, *“ய ஏவம் விதி பாபம் காமயதே”*(சா.1-2-8)[4] இத்யேவம்ஶப்தாத் கர்மண்யேவோத்கீதே ப்ராணத்ருஷ்டிர்விஹிதா।

பூர்வபக்ஷம்

எது தகும்?

வித்யை ஒன்று என்பது.

ஏன்? இரண்டு இடத்திலும் உத்கீதம்தான் ப்ராணன்-தன்மை சுமத்தப்பட்டதாக உபாஸநம் செய்யப்படும் விஷயம் ஆக சொல்லப்படுவதால், விதி முதலியவை வித்யாசம் இல்லாமல் இருப்பதால்.

- பலன்-தொடர்பானது, சத்ருவின் தோல்வி என்பதாக ஒன்றாக வித்யாசம் இன்றி இருக்கிறது.
- ரூபமும் ஒன்றுதான்; சுமத்தப்பட்ட ப்ராணன்-தன்மை உடைய உத்கீதம் எனும் உபாஸநம் செய்யப்படும் பொருள் ஒன்றாக இருப்பதால்.
- விதியும் (கட்டளையும்) 'வித்' (உபாஸநம் செய்தல்) எனும் வினைச்சொல்லில் இருப்பது ஒன்றுதான்.
- பெயரும் உத்கீதவித்யை என்று வித்யாசம் இன்றி உள்ளது.

இந்த பூர்வபக்ஷத்தில், ஸித்தாந்தி போல கேள்வி கேட்டுக்கொண்டு, பரிஹாரம் செய்கிறார் - **''அந்யதாத்வம் ஶப்தாத் இதி சேத் ந அவிஶேஷாத்''** என்று.

வித்யை ஒன்றே என்று சொல்லப்பட்டது எதுவோ, அது சரியாகாது; ஏனெனில், ரூபம் வெவ்வேறாக உள்ளது.

அந்யதாத்வம் - ரூப-வேற்றுமை என்பது,

ஶப்தாத் - ஶப்தத்தின் (வாக்யத்தின்) மூலமாகவே தெரிகிறது.

வாஜஸனேயகத்தில், உத்கானம் செய்பவரை முக்யப்ராணன் ஆக எண்ணி உபாஸநம் செய்வதன் மூலம் அசுரர்கள் அழிவதைச் சொல்கிறது; [1]**''பிறகு இந்த முக்யப்ராணனை 'நீ எங்களுக்கு உத்கானம் செய்பவராக ஆக வேண்டும்' என்றனர்; அப்படியே என்று அவர்களுக்கு இந்த முக்யப்ராணன் உத்கானம் செய்பவராக ஆனார்''** என்பதாக சொல்கிறது. பின்னர், [2]**''யார் இப்படி உபாஸநம் செய்கிறானோ''** என்று 'இப்படி' என்ற சொல்லால், உத்கானம் செய்பவரிடம் (செய்பவரை) ப்ராணன் ஆக எண்ணி உபாஸநம் செய்தல்தான் விதிக்கப் படுகிறது.

சாந்தோக்யத்தில் உத்கானம் செய்யப்படும் விஷயமான உத்கீதத்தில் ப்ராணன் ஆக உபாஸநம் செய்வதன் மூலம் அசுரர்கள் அழிவதைச் சொல்கிறது; [3]**''பிறகு இந்த முக்யப்ராணன் என்பது எதுவோ, அதுவாக உத்கீதத்தை உபாஸநம் செய்தனர்''** என்கிறது; பின்னர், [4]**''இப்படி உபாஸநம் செய்பவனிடம் யார் பாபத்தை செய்ய விரும்புகிறானோ''** என்று இப்படி என்ற சொல்லால் உத்கானத்தின் விஷயமான உத்கீதத்தில்தான் ப்ராணன் ஆக உபாஸநம் விதிக்கப் படுகிறது.

अत एकत्र कर्तरि प्राणदृष्टिशब्दात्, अन्यत्र कर्मणि प्राणदृष्टिशब्दाच्च रूपान्यथात्वं स्पष्टम्। रूपान्यथात्वे च विधेयभेदे सति केवलचोदनाद्यविशेषोऽकिञ्चित्कर इति विद्याभेद इति चेत्,

तन्न; **अविशेषात्** - अविशेषेण ह्युभयत्र उद्गीथसाधनकपरपरिभव उपक्रमे प्रतीयते, वाजसनेयके, **''ते ह देवा ऊचुर्हन्तासुरान् यज्ञे उद्गीथेनात्ययाम''**(बृ.3-3-1)[1] इत्युपक्रमे श्रूयते, छान्दोग्येऽपि, **''तद्ध देवा उद्गीथमाजह्रुरनेनैनानभिहनिष्यामः''**(छा.1-2-1)[2]इति।

अत उपक्रमाविरोधाय, **''तेभ्य एष प्राण उदगायत्''**(बृ.3-3-7)[3] इत्यध्यस्तप्राणभाव उद्गीथ उद्गानकर्मभूत एव पाकादिष्वोदनादिवत् सौकर्यातिशयविवक्षया कर्तृत्वेनोच्यते; अन्यथोपक्रमगत उद्गीथशब्दः कर्तरि लाक्षणिकः स्यात्। अतो विद्यैक्यम् -

* * *

इति प्राप्ते प्रचक्ष्महे

३६१.न वा प्रकरणभेदात् परोवरीयस्त्वादिवत् (३-३-७)

அத: ஏகத்ர கர்தரி ப்ராணத்ருஷ்டிஶப்தாத், அந்யத்ர கர்மணி ப்ராணத்ருஷ்டிஶப்தாச்ச ரூபாந்யதாத்வம் ஸ்பஷ்டம்। ரூபாந்யதாத்வே ச விதேயபேதே ஸதி கேவலசோதநாத்யவிஶேஷ: அகிஞ்சித்கர இதி வித்யாபேத இதி சேத் -

தந்ந, *அவிஶேஷாத்* - அவிஶேஷேண ஹி உபயத்ர உத்கீதஸாதநகபரபரிபவ: உபக்ரமே ப்ரதீயதே, வாஜஸநேயகே, *"தே ஹ தேவா ஊசுர்ஹந்தாஸுராந் யஜ்ஞே உத்கீதேநாத்யயாம"*(ப்ரு.3-3-1)[1] இத்யுபக்ரமே ஶ்ரூயதே, சாந்தோக்யேऽபி, *"தத்த தேவா உத்கீதமாஜஹ்ருரநேநைநாநபிஹநிஷ்யாம:"*(சா.1-2-1)[2] இதி।

அத: உபக்ரமாவிரோதாய, *"தேப்ய ஏஷ ப்ராண உதகாயத்"*(ப்ரு.3-3-7)[3] இதி அத்யஸ்தப்ராணபாவ: உத்கீத உத்காநகர்மபூத ஏவ பாகாதிஷு ஓதநாதிவத் ஸௌகர்யாதிஶயவிவக்ஷயா கர்த்ருத்வேநோச்யதே, அந்யதா உபக்ரமகத: உத்கீதஶப்த: கர்தரி லாக்ஷணிக: ஸ்யாத்। அத: வித்யைக்யம் -

* * *

இதி ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே

361.ந வா ப்ரகரணபேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்(3-3-7)

ஆகையால், ஒரு இடத்தில் உத்கானத்தை செய்பவரான கர்தாவை ப்ராணன் ஆக உபாஸநம் செய்தலைச் சொல்லும் வாக்யம் உள்ளது; வேறிடத்தில் உத்கானம் செய்யப்படும் விஷயமான உத்கீதத்தை ப்ராணன் ஆக உபாஸநம் செய்தலைச் சொல்லும் வாக்யம் உள்ளது; ஆகையால், ரூபத்தில் (உபாஸன-உருவில், விஷயத்தில்) வேற்றுமை தெளிவாக தெரிகிறது. ரூபம் வேறுபடுவதால், விதிக்கப்படும் விஷயமான உபாஸனமும் வேறானதாகிறது; அப்போது கட்டளை முதலியது ஒன்றாக இருப்பது மட்டும் பயன்படாது. (கட்டளை, பலன், பெயர் ஆகியவை ஒன்றாக இருந்தாலும், அது மட்டும் போதாது; ரூபம் வேறுபடுகிறதே!) ஆகவே, வித்யை வேறாகும்.

இதி சேத் - என்றால்,

ந - அது அன்று

அவிஶேஷாத் - வித்யாசம் இல்லாததால்.

இரண்டு இடத்திலும் வித்தியாசமின்றி, உத்கீதத்தை உபாயமாகக் கொண்டு எதிரியை தோற்கச் செய்தல்தான் உபக்ரமத்தில் (ஆரம்பத்தில்) தெரிகிறது.

வாஜஸநேயகத்தில், [1]**"ஆகா, அசுரர்களை யாகத்தில் உத்கீதம் கொண்டு வெல்வோம் என்று அந்த தேவர்கள் சொன்னார்கள்"** என்று ஆரம்பத்தில் ஓதப்படுகிறது. சாந்தோக்யத்திலும், [2]**"அப்போது தேவர்கள் இந்த உத்கீதம் மூலம் இந்த அசுரர்களைக் கொல்வோம்' என்று உத்கீதத்தை கொண்டு வந்தனர்"** என்று ஓதப்படுகிறது.

ஆகவே, உத்கானம் செய்யப்படும் விஷயமான உத்கீதமேதான் உத்கானம் செய்பவராக சொல்லப்படுகிறது - [3]**"அவர்களுக்கு இந்த ப்ராணன் உத்கானம் செய்தது"** என்று; சமைத்தல் முதலியவற்றில் சோறு முதலியது போல, எளிதாக செய்ய முடிதலைச் சொல்வதற்காக இப்படி சொன்னது.

✍*(கஷ்டப்படாமல் எளிதாக தளிகை செய்யமுடிந்தால், 'நான் தளிகை செய்யவில்லை; சாதம் தானே தளிகை செய்தது' என்று சொல்வோம்; அதுபோல இங்கும்; ப்ராணனாக உபாஸநம் செய்ததை எளிதாக செய்தனர் என்ற கருத்தில் ப்ராணனே இவர்களுக்கு உபாஸநம் செய்தது என்று சொன்னதாகும். இது பூர்வபக்ஷ-கருத்து)*✍

உபக்ரமத்துக்கு (ஆரம்பத்தில் சொன்னதற்கு) முரண்பாடு இல்லாமல் ஆவதற்காக இப்படி சொல்ல வேண்டும்; இல்லாவிட்டால், ஆரம்பத்தில் சொன்ன 'உத்கீத' என்னும் சொல்லானது, 'உத்கானம் செய்பவர்' எனும் பொருளில் லக்ஷணா உடையது என்பதாக நேரிடும். (நேர் அர்த்தத்தை சொல்லாமல், வேறு அர்த்தம் சொல்ல நேரிடும்; அதுசரியல்ல).

ஆகவே, வித்யை ஒன்றுதான்.

◆ ◆ ◆ ◆

இப்படி பூர்வபக்ஷம் நேரிடும்போது, ஸித்தாந்தம் சொல்கிறோம்.

361.ந வா ப்ரகரணபேதாத் பரோவரீயஸ்த்வாதிவத்(3-3-7)

அதல்ல; ஆரம்பம் வேறாவதால்; பரோவரீயஸ்த்வம் முதலியதை இட்டு [வேறாக] ஆவது போல.

नवेति पक्षं व्यावर्तयति। नचै(वै?) तदस्ति, यत् विद्यैक्यमिति। कुतः? **प्रकरणभेदात्।** **“ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत”**(छा.1-1-1)[1] इति प्रकृतमुद्गीथावयवभूतं प्रणवं प्रस्तुत्य, **“एतस्यैवाक्षरस्योपव्याख्यानं भवति”**(छा.1-1-10)[2], **“देवासुरा हवै यत्र संयेतिरे”** (छा.1-2-1)[3] इत्यारभ्य, **“अथ ह य एवायं मुख्यः प्राणस्तमुद्गीथमुपासाञ्चक्रिरे”**(छा.1-2-8)[4] इति उद्गीथावयवभूतप्रणवविषयमुपासनं छन्दोगा अधीयते।

वाजिनस्तु तादृशप्राचीनप्रकरणाभावात्, **“हन्तासुरान् यज्ञ उद्गीथेनात्ययाम”** (बृ.3-3-1)[5] इति कृत्स्नमुद्गीथं प्रस्तुत्य, **“अथ हेममासन्यं प्राणमूचुः त्वं न उद्गाय”**(बृ.3-3-7)[6] इत्यादि कृत्स्नोद्गीथविषयमधीयते। अतः प्रकरणभेदेन विधेयभेदः, विधेयभेदे च रूपभेद इति न विद्यैक्यम्।

किञ्च, **“अथ ह य एवायं मुख्यः प्राणस्तमुद्गीथमुपासाञ्चक्रिरे”**(छा.1-2-7)[7] इति पूर्वप्रकृतः उद्गीथावयवभूतः प्रणव एवाध्यस्तप्राणभावश्छन्दोगानामुपास्यः; वाजिनां तु कृत्स्नस्योद्गीथस्य कर्तोद्गाता प्राणदृष्ट्योपास्य इति, **“अथ हेममासन्यं प्राणमूचुस्त्वं न उद्गायेति। तथेति तेभ्य एष प्राण उदगायत्”**(बृ.3-3-7)[8] इति उद्गातरि प्राणाध्यासं निर्दिश्य, **“य एवं वेद”**(बृ.3-3-7)[9] इत्युद्गातैवाध्यस्तप्राणभाव उपास्यो विधीयते। अतश्च रूपभेदः।

நவேதி பக்ஷம் வ்யாவர்தயதி। நசை(வை)ததஸ்தி, யத் வித்யைக்யமிதி, குத:? *ப்ரகரண*பேதாத்*।* *“ஓமித்யேததக்ஷரமுத்கீதமுபாஸீத”*(சா.1-1-1)[1] இதி ப்ரக்ருதமுத்கீதாவயவபூதம் ப்ரணவம் ப்ரஸ்துத்ய, *“ஏதஸ்யைவாக்ஷரஸ்யோபவ்யாக்யாநம்* பவதி*”*(சா.1-1-10)[2] “தேவா*ஸுரா ஹவை யத்ர ஸம்யேதிரே”*(சா.1-2-1)[3] இத்யாரப்ய, *“அத ஹ ய ஏவாயம் முக்ய: ப்ராணஸ்தமுத்கீதமுபாஸாஞ்சக்ரிரே”*(சா.1-2-8)[4] இதி உத்கீதாவயவபூதப்ரணவவிஷயமுபாஸநம் சந்தோகா அதீயதே।

வாஜிநஸ்து தாத்ருஶப்ராசீநப்ரகரணாபாவாத், *“ஹந்தாஸுராந் யஜ்ஞ* உத்கீதே*நாத்யயாம”*(ப்ரு.3-3-1)[5] இதி க்ருத்ஸ்நமுத்கீதம் ப்ரஸ்துத்ய, *“அத ஹேமமாஸந்யம் ப்ராணமூசு: த்வம் ந* உத்காய*”* (ப்ரு.3-3-7)[6] இத்யாதி க்ருத்ஸ்நோத்கீதவிஷயமதீயதே। அத: ப்ரகரணபேதேந விதேயபேத:, விதேயபேதே ச ரூபபேத இதி ந வித்யைக்யம்।

கிஞ்ச, *“அத ஹ ய ஏவாயம் முக்ய: ப்ராணஸ்தமுத்கீதமுபாஸாஞ்சக்ரிரே”* (சா.1-2-7)[7] இதி பூர்வப்ரக்ருத: உத்கீதாவயவபூத: ப்ரணவ ஏவ அத்யஸ்தப்ராணபாவ: சந்தோகாநாமுபாஸ்ய:। வாஜிநாம் து க்ருத்ஸ்நஸ்யோத்கீதஸ்ய கர்தா உத்காதா ப்ராணத்ருஷ்ட்யா உபாஸ்ய இதி, *“அத ஹேமமாஸந்யம் ப்ராணமூசுஸ்த்வம் ந* உத்கா*யேதி।* ததேதி தேப்ய *ஏஷ ப்ராண* உதகாய*த்”* (ப்ரு.3-3-7)[8] இதி உத்காதரி ப்ராணாத்யாஸம் நிர்திஶ்ய, *“ய ஏவம்* வேத*”*(ப்ரு.3-3-7)[9] இதி உத்காதைவ அத்யஸ்தப்ராணபாவ உபாஸ்யோ விதீயதே। அதஶ்ச ரூபபேத:।

ந வா (அல்ல) - என்று பூர்வபக்ஷத்தை மறுக்கிறார்; ஒரே வித்யை என்றது எதுவோ, அது இல்லை.

ஏன்?

ப்ரகரணபேதாத் (ஆரம்பித்து சொல்லுதல் வேறாவதால்) -

[1]**''உத்கீதத்தின் ஒரு பாகமான ஓம் என்னும் இந்த அக்ஷரத்தை உபாஸநம் செய்யவும்''** என்று உத்கீதத்தின் பாகமான ப்ரணவத்தை சொல்ல ஆரம்பிக்கிறது; பின்னர், [2]**''இந்த அக்ஷரத்தைப் பற்றியே விரிவான வ்யாக்யானம் ஆகிறது''**, [3]**''தேவர்களும் அசுரர்களும் எப்போது யுத்தம் செய்தனரோ''** என்று ஆரம்பித்து, [4]**''பின்னர் முக்யப்ராணன் என்று எதுவோ, அதுவாக உத்கீதத்தை (உத்கீதத்தின் பாகமான ப்ரணவத்தை) உபாஸனம் செய்தனர்''** என்று உத்கீதத்தின் பாகமான ப்ரணவம் பற்றிய உபாஸனத்தை சந்தோகர்கள் ஓதுகின்றனர்.

வாஜஸனேயிகளுக்கு இப்படியான முன்-தொடக்கம் இல்லை; [5]**''யாகத்தில் உத்கீதத்தைக் கொண்டு அசுரர்களை வெல்வோம்''** என்று முழு உத்கீதத்தையும் சொல்ல ஆரம்பிக்கிறது; பின்னர், முழு உத்கீதத்தைப் பற்றியதாக [6]**''பிறகு, இந்த முக்யப்ராணனை 'நீ எங்களுக்கு உத்கானம் செய்பவராக ஆக வேண்டும்' என்று சொன்னார்கள்''** என்பது முதலாக, ஓதுகின்றனர்.

ஆகவே, ஆரம்பம் (ஆரம்பத்தில் சொன்ன விஷயம்) வேறாவதால், விதிக்கப்படும் விஷயம் வேறாகிறது; விதிக்கப்படும் விஷயம் வேறாகும் போது ரூபம் வேறாக ஆகிறது; ஆகவே, ஒரு வித்யையாக ஆகாது.

மேலும், சந்தோகர்களுக்கு, முன் சொல்ல ஆரம்பிக்கப்பட்ட உத்கீதத்தின் ஒரு பகுதியான ப்ரணவம்தான் ப்ராணன்-தன்மையை ஏறிடப்பட்டதாய் உபாஸனம் செய்யப்படும் விஷயம் ஆகும்; [7]**''பின்னர் முக்யப்ராணன் என்று எதுவோ, அதுவாக உத்கீதத்தை (உத்கீதத்தின் பாகமான ப்ரணவத்தை) உபாஸனம் செய்தனர்''** என்கிறது. வாஜஸனேயிகளுக்கோ, முழு உத்கீதத்தையும் கானம் செய்பவரான உத்காதா என்பவர், ப்ராணன் ஆக எண்ணி உபாஸனம் செய்யப்படும் விஷயம் ஆகிறார். [8]**''பிறகு இந்த முக்யப்ராணனை 'நீ எங்களுக்கு உத்கானம் செய்பவராக ஆக வேண்டும்' என்றனர்; அப்படியே என்று அவர்களுக்கு இந்த முக்யப்ராணன் உத்கானம் செய்பவராக ஆனார்''** என்று உத்கானம் செய்பவரை ப்ராணன் ஆக கருதுவதைக் குறிப்பிட்டு, [9]**''யார் இப்படி உபாஸனம் செய்கிறாரோ''** என்று, உத்கானம் செய்பவரே ப்ராணன்-தன்மையை சுமத்தப் பட்டவராக உபாஸனத்தின் விஷயமாக விதிக்கப் படுகிறார். ஆகையாலும் ரூபம் வேறாகிறது.

न चोद्गातर्युपास्ये विहिते, **''उद्गीथेनात्ययाम''**(बृ.3-3-1) इत्याख्यायिकोपक्रमविरोधः शङ्कनीयः; उद्गातुरुपासने उद्गीथस्योद्गानकर्मभूतस्यावश्यापेक्षितत्वात् तस्यापि परपरिभवाख्यफलं प्रति हेतुत्वात्। अतो रूपभेदाद्विद्याभेद इति चोदनाद्यविशेषेऽपि न विद्यैक्यम्।

परोवरीयस्त्वादिवत् - यथैकस्यामपि (मेव) शाखायामुद्गीथावयवभूते प्रणवे परमात्मदृष्टिविधानसाम्येऽपि हिरण्मयपुरुषदृष्टिविधानात् परोवरीयस्त्वादिगुणविशिष्टदृष्टिविधानमर्थान्तरभूतम्॥७॥

३६२.संज्ञातश्चेत् तदुक्तम्, अस्ति तु तदपि (३-३-८)

उद्गीथविद्येति संज्ञैक्यात् तत् - विद्यैक्यमुक्तं चेत्, तत् संज्ञैक्यं विधेयभेदेऽप्यस्त्येव; यथा अग्निहोत्रसंज्ञा नित्याग्निहोत्रे, कुण्डपायिनामयनाग्निहोत्रे च; यथा चोद्गीथविद्येति छान्दोग्ये प्रथमप्रपाठकोदितासु बह्वीषु विद्यासु॥ ८ ॥

* * *

ந ச உத்காதர்யுபாஸ்யே விஹிதே, *"உத்கீதேநாத்யயாம"*(ப்ரு.3-3-1) இத்யாக்யாயிகோபக்ரமவிரோத: ஶங்கநீய:, உத்காதுருபாஸநே உத்கீதஸ்ய உத்காநகர்மபூதஸ்ய அவஶ்யாபேக்ஷிதத்வாத் தஸ்யாபி பரபரிபவாக்யம் பலம் ப்ரதி ஹேதுத்வாத். அத: ரூபபேதாத்வித்யாபேத இதி சோதநாத்யவிஶேஷேऽபி ந வித்யைக்யம்.

பரோவரீயஸ்த்வாதிவத் - யதா ஏகஸ்யாமபி(மேவ)ஶாகாயாம் உத்கீதாவயவபூதே ப்ரணவே பரமாத்மத்ருஷ்டிவிதாநஸாம்யேऽபி ஹிரண்மயபுருஷத்ருஷ்டிவிதாநாத் பரோவரீயஸ்த்வாதிகுணவிஶிஷ்டத்ருஷ்டிவிதாநம் அர்தாந்தரபூதம்॥7॥

362.ஸம்ஜ்ஞாதஶ்சேத் தது்க்தம், அஸ்தி து ததபி(3-3-8)

உத்கீதவித்யேதி ஸஞ்ஜ்ஞைக்யாத் தத் - வித்யைக்யமுக்தம் சேத், தத் ஸஞ்ஜ்ஞைக்யம் விதேயபேதேऽப்யஸ்த்யேவ, யதா அக்நிஹோத்ரஸஜ்ஞா நித்யாக்நிஹோத்ரே, குண்டபாயிநாமயநாக்நிஹோத்ரே ச, யதா ச உத்கீதவித்யேதி சாந்தோக்யே ப்ரதமப்ரபாடகோதிதாஸு பஹ்வீஷு வித்யாஸு॥8॥

* * *

கேள்வி - உத்கானம் செய்பவர்தான் உபாஸன-விஷயமாக விதிக்கப் படுகிறார் என்றால், கதை ஆரம்பத்தில் (உத்காணம் செய்பவர் மூலம் கொல்வோம் என்று சொல்லாமல் [1]**''உத்கீதம் மூலம் கொல்வோம்''** என்று என்பதுடன் முரண்பாடு வரும்.

பதில் - இப்படி கேட்கக் கூடாது; ஏனெனில், உத்கானம் செய்பவரைப் பற்றி உபாஸனம் ஆகும் போது, உத்கானத்தின் விஷயமான உத்கீதமும் கட்டாயம் தேவையாகிறபடியால், அதுவும் எதிரியை தோற்கடித்தல் எனும் பலனைக் குறித்து காரணம் ஆகும். ✍ *(சக்ராயுத-ப்ரயோகம் செய்த பகவான் அசுரர்களைக் கொன்றார் என்பதும் சக்ராயுதம் அசுரர்களைக் கொன்றது என்பதும் முரண்பட்டது அல்ல; அதுபோல)* ✍

ஆகையால், ரூபம் வேறாவதால், வித்யை வேறாகும் என்பதால், கட்டளை முதலியது ஒன்றானாலும் வித்யை ஒன்றாகாது.

> **பரோவரீயஸ்த்வாதிவத் -** ஒரே ஶாகையிலேயே உத்கீதத்தின் ஒரு பகுதியான ப்ரணவத்தில் பரமாத்மாவாக எண்ணி உபாஸனம் செய்வதை விதிப்பது ஸமமாக இருந்தாலும், ஹிரண்மய புருஷனாக எண்ணுதலை விதிப்பதை விட, பரோவரீயஸ்த்வம் முதலிய குணங்களுடன் கூடியவனாக எண்ணுதலை விதிப்பது வேறுதான் என்பது எப்படியோ, (அப்படி இதுவும் வேறாகும்).

◆ ◆ ◆ ◆

362.ஸம்ஜ்ஞாத: சேத் தத் உக்தம், அஸ்தி து தத் அபி (3-3-8)

[ஒரே]பெயரைக் கொண்டு வித்யை ஒன்றே என்பது சொல்லப்படுமானால்,
[வித்யைவேறாக] ஆனாலும் பெயர் ஒன்றாவது இருக்கிறது.

கேள்வி -

ஸம்ஜ்ஞாத: (பெயரைக் கொண்டு) - உத்கீதவித்யை என்று பெயர் ஒன்றாக இருப்பதைக் கொண்டு,

தத் (அது) - (இரு உபநிஷத்திலும் சொன்ன) வித்யை ஒன்றே என்பது

உக்தம் சேத் - சொல்லப்படுமானால்,

பதில்

து (ஆனாலும்) - விதிக்கப்படும் விஷயம் வேறானாலும்,

தத் (அது) அஸ்தி து - பெயர் ஒன்றாதல் என்னும் அது இருக்கிறதுதான்!

- அக்னிஹோத்ரம் என்னும் பெயர், நித்யமான அக்னிஹோத்ரத்திலும், குண்டபாயினாம் அயன-அக்நிஹோத்ரத்திலும் (ஒன்றாக) உள்ளது; அது எப்படியோ,

  ✍ *(குண்டபாயினாம் அயனம் என்று ஒரு ஸத்ரயாகம்; அதில் ஒரு மாஸம் மட்டும் ஒரு அக்னிஹோத்ரஹோமம் செய்ய சொல்லியுள்ளது; அது வேறு; தினமும் செய்ய வேண்டிய அக்னிஹோத்ரம் வேறு; பெயர் ஒன்றாயிருந்தாலும் இரண்டும் வேறு ஆகும்).* ✍

- உத்கீதவித்யை என்னும் பெயர், சாந்தோக்யத்தில் முதல் ப்ரபாடகத்தில் சொல்லப்பட்ட பல வித்யைகளில் (ஒன்றாக) உள்ளது; அது எப்படியோ, (அப்படியே, வித்யை வேறாக ஆனாலும்,பெயர் ஒன்றாக ஆகலாம்).

◆ ◆ ◆ ◆

३६३.व्याप्तेश्च समञ्जसम् (३-३-९)

छान्दोग्ये प्रथमप्रपाठके उत्तरास्वपि विद्यासूद्गीथावयवस्य प्रणवस्य प्रथमप्रस्तुतस्योपास्यत्वेन व्याप्तेश्च तन्मध्यगतस्य, **''तद्ध देवा उद्गीथमाजहुः''**(छा.1-2-1)[1] इत्युद्गीथशब्दस्य प्रणवविषयत्वमेव समञ्जसम्।

अवयवे च समुदायशब्दः 'पटो दग्धः' इत्यादिषु दृश्यते। अतश्चोद्गीथावयवभूतः प्रणव एवोद्गीथशब्दनिर्दिष्ट इति स एव प्राणदृष्ट्योपास्यः छान्दोग्ये प्रतिपत्तव्यः। वाजसनेयके तु कृत्स्नोद्गीथविषय उद्गीथशब्द इति कृत्स्नोद्गीथस्य कर्ता उद्गाता प्राणदृष्ट्योपास्य इति विद्यानानात्वं सिद्धम्॥ ९ ॥

इति अन्यथात्वाधिकरणम् ॥ २ ॥

363.வ்யாப்தேஶ்ச ஸமஞ்ஜஸம்(3-3-9)

_சாந்தோக்யே ப்ரதமப்ரபாடகே உத்தராஸ்வபி வித்யாஸூ உத்கீதாவயவஸ்ய ப்ரணவஸ்ய ப்ரதமப்ரஸ்துதஸ்ய உபாஸ்யத்வேந *வ்யாப்தேஶ்ச* தந்மத்யகதஸ்ய, *''தத்த தேவா உத்கீதமாஜஹ்ரு:''*(சா.1-2-1)[1] இத்யுத்கீதஶப்தஸ்ய ப்ரணவவிஷயத்வமேவ *ஸமஞ்ஜஸம்*।

அவயவே ச ஸமுதாயஶப்த: 'படோ தக்த:' இத்யாதிஷு த்ருஶ்யதே। அதஶ்ச உத்கீதாவயவபூத: ப்ரணவ ஏவ உத்கீதஶப்தநிர்திஷ்ட இதி ஸ ஏவ ப்ராணத்ருஷ்ட்யோபாஸ்ய: _சாந்தோக்யே ப்ரதிபத்தவ்ய:। வாஜஸநேயகே து க்ருத்ஸ்நோத்கீதவிஷய: உத்கீதஶப்த இதி க்ருத்ஸ்நோத்கீதஸ்ய கர்தா உத்காதா ப்ராணத்ருஷ்ட்யா உபாஸ்ய இதி வித்யாநாநாத்வம் ஸித்தம்।।9।।

இதி அந்யதாத்வாதிகரணம் ।। 2 ।।

363.வ்யாப்தே: ச ஸமஞ்ஜஸம்(3-3-9)

[ப்ரணவமே உபாஸன-விஷயமாக] பரவி இருப்பதாலும், [உத்கீதம் எனும் சொல் ப்ரணவம் பற்றியது என்பதே] சரியாகும்

சாந்தோக்யத்தில் முதல் ப்ரபாடகத்தில், உத்கீதத்தின் ஒரு பாகமான ப்ரணவமானது (உபாஸன-விஷயமாக) முதலில் சொல்ல ஆரம்பிக்கப்பட்டது; அந்த ப்ரணவம்தான், (இந்த ப்ராண-த்ருஷ்டி வித்யைக்கு) பின்னர் உள்ள வித்யைகளிலும் உபாஸனத்துக்கு விஷயமாக பரவியுள்ளது; அதனாலும், அவற்றின் நடுவில் (இந்த வித்யையில்) இருக்கிற [1]**''அப்போது தேவர்கள் உத்கீதத்தை கொண்டு வந்தனர்''** என்கிற 'உத்கீதம்' என்ற சொல்லும் ப்ரணவத்தைப் பற்றியது என்பதே சரியாகும்.

ஸமுதாயத்தைக் குறிக்கும் சொல்லானது,(அதன்) ஒரு பகுதியைப் பற்றியும் ஆகும் என்பது, 'துணி எரிக்கப்பட்டது' முதலியவற்றில் காணப்படுகிறது. (துணியின் ஒரு சிறு பகுதி எரிந்து போனாலும், துணி எரிந்துவிட்டது என்கிறோம்); ஆகையாலும் உத்கீதத்தின் ஒரு பகுதியான ப்ரணவம்தான் 'உத்கீதம்' எனும் சொல்லால் குறிப்பிடப் படுகிறது; ஆகையால், அந்த ப்ரணவம்தான் ப்ராணன் என்னும் எண்ணத்துடன் உபாஸன-விஷயமாக சாந்தோக்யத்தில் அறியப்பட வேண்டும். வாஜஸனேயகத்திலோ, 'உத்கீதம்' எனும் சொல்லானது, முழு உத்கீதத்தையும் பற்றியது; ஆகையால் முழு உத்கீதத்தையும் கானம் செய்பவரான உத்காதா என்பவரே, ப்ராணன் என்னும் எண்ணத்துடன் உபாஸன-விஷயமாக ஆகிறார்; ஆகையால், வித்யை வேறானது என்று ஆயிற்று.

* * *

அந்யதாத்வ-அதிகரணம் முற்றிற்று.

85.ஸர்வாபேத-அதிகரணம்(3-3-3)

முன் குறிப்பு

ஒரு ஸமயம் ப்ராணன், மற்றும் இந்த்ரியங்களுக்குள் யார் சிறந்தவர் என விவாதம் வர, நான்முகனிடம் சென்று கேட்டன. அவர் சொன்னார், ‘‘யார் வெளியேறினால், இந்த ஶரீரம் மிக மோசமாக ஆகிறதோ அவரே சிறந்தவர்’’ என்று. உடனே அதனை பரீக்ஷை செய்து பார்த்தன.

முதலில் வாக்-இந்த்ரியம் வெளியேறியது; ஆனாலும், பேச முடியாமல் போனது தவிர உடலில் வேறெந்த இந்த்ரியத்துக்கும் எந்த குறைவும் இல்லை..

அதே போல, கண், காது, மனஸ் முதலியவை ஒவ்வொன்றாக வெளியேறிப் பார்த்தன; ஆனாலும், பெரிய குறை எதுவும் இல்லை.

கடைசியில் ப்ராண-வாயு வெளியேறக் கிளம்பியது; அப்போதே எல்லா இந்த்ரியங்களும் செயலிழந்தன. நீ போக வேண்டாம் என ப்ராணனை கேட்டுக் கொண்டன; ப்ராணன்தான் ஜ்யேஷ்டன், ஶ்ரேஷ்டன் என புரிந்து கொண்டன.

ஜ்யேஷ்டன் (மூத்தது) - பிறக்கும் உடலில் ப்ராணன்தான் முதலில் சேரும்; பின்னரே இந்த்ரியங்கள் சேரும்; ப்ராணனே மூத்தது.

ஶ்ரேஷ்டன்(சிறந்தது) - ப்ராணன் இல்லாவிட்டால் இந்த்ரியங்கள் செயல்பட முடியாது; அதனால் ப்ராணன்தான் சிறந்தது.

ஒவ்வொரு இந்த்ரியத்துக்கும் ஒவ்வொரு பெருமை உண்டு.

வாக்-இந்த்ரியம் மூலம் பேச்சுத்திறமையினால் வஸுவை (செல்வத்தை) ஸம்பாதிக்கிறோம்; எனவே, வாக் ஆனது வஸிஷ்டம்-செல்வமுடையவரில் சிறந்தது.

கண்மூலம் மேடு-பள்ளமான தரையைப் பார்த்து நிலையாக இருக்கிறோம். அதனால், கண் ஆனது ப்ரதிஷ்டா - நிலையானது ஆகும்.

காது மூலமாகக் கேட்டுதான் ஶாஸ்த்ர-அறிவாகிற செல்வத்தைப் பெறுகிறோம்; அதனால் காது தான் ஸம்பத் - செல்வம் ஆகும். (செவிச் செல்வம்)

மனஸ் இருந்தாலே இந்த்ரியங்கள் செயல்படும்; மனஸ் இல்லாவிட்டால் இந்த்ரியம் வேலை செய்யாது; எனவே மனஸ்தான் ஆயதனம்- ஆதாரம் ஆகும்.

ஆனால், இவை எல்லாமே ப்ராணன் இருந்தால்தான் இருக்கும்; செயல்படும்; அதனால், இவற்றுக்கு இருக்கும் பெருமையெல்லாம் ப்ராணனுக்கே சேரும். இதனை அந்தந்த இந்த்ரியமே ப்ராணனிடம் சொல்கிறது. இதனால் ப்ராணனே ஶ்ரேஷ்டன் என்பதை விளக்குகிறது; அப்படிப்பட்ட ப்ராணனை உபாஸனம் செய்ய வேண்டும்; இதை சொல்லும் ப்ராண-வித்யை ஆனது, மூன்று உபநிஷத்களில் உள்ளது. அவை ஒரே வித்யையா வெவ்வேறா என்று விசாரம்; ஒரே வித்யையே என ஸித்தாந்தம்.

८५.सर्वाभेदाधिकरणम् (३-३-३)

३६४.सर्वाभेदादन्यत्रेमे (३-३-१०)

छान्दोग्यवाजसनेयकयोः प्राणविद्या आम्नायते, **''यो ह वै ज्येष्ठं च श्रेष्ठं च वेद, ज्येष्ठश्च ह वै श्रेष्ठश्च भवति। प्राणो वाव ज्येष्ठश्च श्रेष्ठश्च''**(छा.5-1-1)[1] इत्यादि।

तत्र ज्यैष्ठ्यश्रैष्ठ्यगुणकं प्राणमुपास्यं प्रतिपाद्य, वाक्चक्षुश्श्रोत्रमनस्सु वसिष्ठत्वप्रतिष्ठात्वसम्पत्त्वायतनत्वाख्यान् गुणान् प्रतिपाद्य, वागादीनां देहस्य च प्राणायत्तस्थितित्वेन तदायत्ततत्तत्कार्यत्वेन च प्राणस्य श्रैष्ठ्यं प्रतिपाद्य, वागादिसम्बन्धितया श्रुतान् वसिष्ठत्वादीन् गुणांश्च प्राणसम्बन्धितया प्रतिपादयति। एवं छान्दोग्यवाजसनेयकयोर्ज्यैष्ठ्यश्रैष्ठ्यगुणको वसिष्ठत्वादिगुणकश्च प्राण उपास्यः प्रतिपाद्यते।

कौषीतकिनां तु प्राणविद्यायां तथैव ज्यैष्ठ्यश्रैष्ठ्यगुणकः प्राण उपास्यः प्रतिपादितः; न पुनर्वसिष्ठत्वादयो वागादिसम्बन्धिनो गुणाः प्राणसम्बन्धितया प्रतिपादिताः।

तत्र संशयः - किमत्र विद्या भिद्यते, उत नेति।

---

85. ஸர்வாபேதாதிகரணம் (3-3-3)

364.ஸர்வாபேதாதந்யத்ரேமே(3-3-10)

சாந்தோக்ய-வாஜஸநேயகயோ: ப்ராணவித்யா ஆம்நாயதே, *''யோ ஹ வை ஜ்யேஷ்டம் ச ஶ்ரேஷ்டம் ச வேத, ஜ்யேஷ்டஶ்ச ஹ வை ஶ்ரேஷ்டஶ்ச பவதி। ப்ராணோ வாவ ஜ்யேஷ்டஶ்ச ஶ்ரேஷ்டஶ்ச''*(சா.5-1-1)[1] இத்யாதி।

தத்ர ஜ்யைஷ்ட்யஶ்ரைஷ்ட்யகுணகம் ப்ராணமுபாஸ்யம் ப்ரதிபாத்ய, வாக்சக்ஷுஶ்ஶ்ரோத்ரமநஸ்ஸு வஸிஷ்டத்வப்ரதிஷ்டாத்வ-ஸம்பத்த்வ-ஆயதநத்வாக்யாந் குணாந் ப்ரதிபாத்ய, வாகாதீநாம் தேஹஸ்ய ச ப்ராணாயத்தஸ்திதித்வேந ததாயத்ததத்தத்கார்யத்வேந ச ப்ராணஸ்ய ஶ்ரைஷ்ட்யம் ப்ரதிபாத்ய, வாகாதிஸம்பந்திதயா ஶ்ருதாந் வஸிஷ்டத்வாதீந் குணாம்ஶ்ச ப்ராணஸம்பந்திதயா ப்ரதிபாதயதி। ஏவம் சாந்தோக்ய-வாஜஸநேயகயோ: ஜ்யைஷ்ட்யஶ்ரைஷ்ட்யகுணக: வஸிஷ்டத்வாதி-குணகஶ்ச ப்ராண உபாஸ்ய: ப்ரதிபாத்யதே।

கௌஷீதகிநாம் து ப்ராணவித்யாயாம் ததைவ ஜ்யைஷ்ட்யஶ்ரைஷ்ட்யகுணக: ப்ராண உபாஸ்ய: ப்ரதிபாதித:, ந புந: வஸிஷ்டத்வாதயோ வாகாதிஸம்பந்திநோ குணா: ப்ராணஸம்பந்திதயா ப்ரதிபாதிதா:।

தத்ர ஸம்ஶய: - கிமத்ர வித்யா பித்யதே, உத நேதி।

85.ஸர்வாபேத-அதிகரணம்(3-3-3)

364.ஸர்வாபேதாத் அந்யத்ர இமே (3-3-10)

[விளக்கும் முறையில்] எல்லாவற்றுக்கும் வித்தியாசமில்லை என்பதால் வேறிடத்திலும் [கௌஷீதகீ-உபநிஷத்திலும்] இவை[குணங்கள் ஆகும்].

விஷயவாக்யம் -

சாந்தோக்யம் வாஜஸனேயகம் எனும் இரு உபநிஷத்களிலும் ப்ராணவித்யை ஓதப்படுகிறது - **"யார் ஜ்யேஷ்டனையும் ஶ்ரேஷ்டனையும் உபாஸனம் செய்கிறானோ, அவன் ஜ்யேஷ்டனாகவும் ஶ்ரேஷ்டனாகவும் ஆகிறான்; ப்ராணன்தான் ஜ்யேஷ்டனும் ஶ்ரேஷ்டனும்"** என்பது முதலாக.

அதில்,

- ஜ்யேஷ்ட-தன்மை, ஶ்ரேஷ்ட-தன்மை ஆகிய குணங்களை உடைய ப்ராணன் உபாஸனம் செய்யப்பட வேண்டியதாக அறிவித்து,
- வாக், கண், காது, மனஸ் ஆகியவற்றில், வஸிஷ்டத்வம், ப்ரதிஷ்டாத்வம், ஸம்பத்த்வம், ஆயதனத்வம் எனப்படும் குணங்களை அறிவித்து,
- வாக் முதலியவையும் ஶரீரமும் ப்ராணனைச் சார்ந்தே இருப்பதாலும், ப்ராணனைச் சார்ந்தே அதஅதன் செயலை உடையதாக ஆவதாலும், ப்ராணனுக்கே ஶ்ரேஷ்டதன்மை என்பதை அறிவித்து,
- வாக் முதலியவற்றின் ஸம்பந்தப்பட்டவையாக ஓதப்பட்ட வஸிஷ்டத்வம் முதலிய குணங்களை ப்ராணனுக்கு ஸம்பந்தப் பட்டவையாக (ப்ராணனுடைய குணங்களாக) அறிவிக்கிறது.

இப்படியாக சாந்தோக்ய, வாஜஸனேய உபநிஷத்களில் ஜ்யேஷ்ட-தன்மை, ஶ்ரேஷ்ட-தன்மை ஆகிய குணங்களை உடையதாகவும், வஸிஷ்டத்வம் முதலிய குணங்களை உடையதாகவும் ப்ராணன் உபாஸனம் செய்யப்பட வேண்டியது என்று அறிவிக்கப் படுகிறது.

கௌஷீதகிகளுக்கோ (கௌஷீதகீ உபநிஷத்தில்) ப்ராணவித்யையில் அப்படியே ஜ்யேஷ்ட-தன்மை, ஶ்ரேஷ்ட-தன்மை ஆகிய குணங்களுடன் கூடிய ப்ராணன் உபாஸனம் செய்யப்பட வேண்டிய விஷயமாக அறிவிக்கப் படுகிறது; ஆனால், வாக் முதலியவற்றின் ஸம்பந்தப்பட்ட வஸிஷ்டத்வம் முதலிய குணங்கள் ப்ராணனுக்கு ஸம்பந்தப்பட்டவையாக அறிவிக்கப்படவில்லை.

ஸந்தேஹம்

இதில் ஸந்தேஹம் - இங்கு வித்யை வேறுபடுமா? அல்லது இல்லையா? என்று.

किं युक्तम्? भिद्यते इति। कुतः? रूपभेदात्। यद्यप्युभयत्र प्राण एव ज्यैष्ठ्यश्रैष्ठ्यगुणक उपास्यः, तथाप्येकत्र वसिष्ठत्वादिभिरपि गुणैर्युक्तः प्राण उपास्यः प्रतीयते; इतरत्र तु तद्विधुर इत्युपास्यरूपभेदात् विद्याभेदः -

इति प्राप्ते ब्रूमः - **सर्वाभेदादन्यत्रेमे**। नात्र विद्याभेदः। कौषीतकिनां प्राणविद्यायामपि **इमे** - वसिष्ठत्वादयो गुणा उपास्यास्सन्ति। कुतः? **सर्वाभेदात्** - प्रतिज्ञातप्राणज्यैष्ठ्य-श्रैष्ठ्योपपादनप्रकारस्य सर्वस्य तत्राप्यभेदात्।

तथाहि - छन्दोगवाजसनेयिनां प्राणविद्यायाम्,

- **''अहंश्रेयसि व्यूदिरे''**(छा.5-1-6)[1],
- **''अहंश्रेयसे विवदमानाः''**(बृ.8-1-7)[2] इति चोपक्रम्य,

वागाद्येकैकापक्रमणे अन्येषां सप्राणानामिन्द्रियाणां शरीरस्य च स्थितिं तत्तत्कार्यं चाभिधाय सर्वेषां प्राणाधीनस्थितित्वतदधीनकार्यत्वाभ्यां प्राणस्य ज्यैष्ठ्य(श्रैष्ठ्य)मुपपादितम्।

கிம் யுக்தம்? பித்யதே இதி। குத: ரூபபேதாத்। யத்யபி உபயத்ர ப்ராண ஏவ ஜ்யைஷ்ட்யஶ்ரைஷ்ட்யகுணக உபாஸ்ய: - ததாபி ஏகத்ர வஸிஷ்டத்வாதிபிரபி குணைர்யுக்த: ப்ராண உபாஸ்ய: ப்ரதீயதே, இதரத்ர து தத்விதுர இதி உபாஸ்யரூபபேதாத் வித்யாபேத:-

இதி ப்ராப்தே ப்ரூம: - *ஸர்வாபேதாதந்யத்ரேமே।* நாத்ர வித்யாபேத:। *அந்யத்ர* - கௌஷீதகிநாம் ப்ராணவித்யாயாமபி *இமே* - வஸிஷ்டத்வாதய: குணா: உபாஸ்யா: ஸந்தி। குத:? *ஸர்வாபேதாத்* - ப்ரதிஜ்ஞாதப்ராண-ஜ்யைஷ்ட்ய-ஶ்ரைஷ்ட்யோபபாதநப்ரகாரஸ்ய ஸர்வஸ்ய தத்ராப்யபேதாத்।

ததாஹி - சந்தோகவாஜஸநேயிநாம் ப்ராணவித்யாயாம்,

- *"அஹம் ஶ்ரேயஸி வ்யூதிரே"*(சா.5-1-6)[1],
- *"அஹம் ஶ்ரேயஸே விவதமாநா:"*(ப்ரு.8-1-7)[2] இதி ச உபக்ரம்ய

வாகாத்யேகைகாபக்ரமணே அந்யேஷாம் ஸப்ராணாநாம் இந்த்ரியாணாம் ஶரீரஸ்ய ச ஸ்திதிம் தத்தத்கார்யம் ச அவிகலம் ப்ரதிபாத்ய, ப்ராணோத்-க்ரமணே ஸர்வேஷாம் விஶரணம் அகார்யகரத்வம் சாபிதாய ஸர்வேஷாம் ப்ராணாதீநஸ்திதித்வ-தததீநகார்யத்வாப்யாம் ப்ராணஸ்ய ஜ்யைஷ்ட்ய (ஶ்ரைஷ்ட்ய)முபபாதிதம்।

பூர்வபக்ஷம்

எது சரியாகும்?

வேறுபடும் என்பது.

ஏன்?

ரூபம் (உபாஸனம் செய்யப்பட வேண்டிய குணம்) வேறாவதால்.

இரண்டு இடத்திலும், ப்ராணன்தான் ஜ்யேஷ்ட-தன்மை, ஶ்ரேஷ்ட-தன்மை ஆகிய குணங்களுடன் கூடியதாக உபாஸன-விஷயம் ஆகிறது; அப்படியானாலும், ஒரு இடத்தில் (சாந்தோக்ய, ப்ருஹதாரண்யகத்தில் உள்ள ப்ராணவித்யையில்) வஸிஷ்டத்வம் முதலிய குணங்களுடனும் கூடியவதாக ப்ராணன் உபாஸனம் செய்யப்பட வேண்டிய விஷயமாக உள்ளது; மற்றொரு இடத்திலோ, கௌஷீதகீ உபநிஷத்தில் உள்ள ப்ராணவித்யையில் அந்த குணங்கள் இல்லாமல் ப்ராணன் உபாஸனம் செய்யப்பட வேண்டியது ஆகிறது. ஆகையால், உபாஸனம் செய்யப்படும் ரூபம் (குணம்) வேறாவதால், வித்யை வேறாகும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிடும்போது, ஸித்தாந்தம் சொல்கிறோம் - **ஸர்வாபேதாத் அந்யத்ர இமே**

இங்கு வித்யை வேறுபடும் என்பது கிடையாது.

அந்யத்ர - வேறிடத்தில், கௌஷீதகிகளின் ப்ராணவித்யையிலும்,

இமே (இவை) - இந்த வஸிஷ்டத்வம் முதலிய குணங்கள் உபாஸனம் செய்யப்பட வேண்டியவையாக உள்ளன.

ஏன்?

ஸர்வாபேதாத் (எல்லாம் வித்தியாசமின்றி ஆவதால்) - ப்ராணனுக்கு முதலில் ப்ரதிஜ்ஞையில் சொல்லப்பட்ட ஜ்யேஷ்ட-தன்மை, ஶ்ரேஷ்ட-தன்மை ஆகியவற்றை விளக்கும் முறை அனைத்துக்கும் அங்கும் வித்யாசம் இல்லை என்பதால்.

அப்படித்தானே, சந்தோக, வாஜஸனேயிகளுக்கு ப்ராண வித்யையில்

- [1]**''நானே உயர்ந்தவன் என்பதில் விவாதம் செய்தனர்'',**
- [2]**''நானே உயர்ந்தவன் என்பதற்காக விவாதம் செய்பவர்களாய்''** என்று ஆரம்பித்து,

- வாக் முதலிய ஒவ்வொன்றும் வெளியே போனபோது, ப்ராணனுடன் கூடிய மற்ற இந்த்ரியங்களும் ஶரீரமும் (நிலையாக) இருப்பதையும், அததன் செயல்பாடும் குறைவில்லாமல் ஆவதையும் சொல்லி,
- ப்ராணன் வெளியேறக் கிளம்பும்போது, எல்லாம் சிதறுவதையும் செயல்பட முடியாமல் இருப்பதையும்சொல்லி,

எல்லாவற்றுக்குமே ப்ராணனுக்கு அதீனமான நிலையும், ப்ராணனுக்கு அதீனமான செயல்பாடும் ஆவதால் ப்ராணனே ஜ்யேஷ்டன்(ஶ்ரேஷ்டன்) என்று விளக்கப் பட்டது.

एवमुपपादितं वागादिकार्यस्य प्राणाधीनत्वम्, **‘‘अथ हैनं वागुवाच यदहं वसिष्ठा(ष्ठो)ऽस्मि त्वं तत् वसिष्ठोऽसि’’**(छा.1-5-13)[1], इत्यादिना वागादिभिरनूद्यते।

कौषीतकिनां प्राणविद्यायामपि प्राणज्यैष्ठ्यश्रैष्ठ्यप्रतिपादनाय वागादिषु वसिष्ठत्वादयः प्रतिपादिताः। **‘‘अथ हेमा देवताः प्रजापतिं पितरमेत्याब्रुवन्, को वै नः श्रेष्ठः?’’**(कौ.?)[2] इत्यादिना वागादिगताः गुणाः वागादयश्च देहश्च प्राणाधीना इति प्राणस्य ज्यैष्ठ्यमुपपादितम्।

वागादिभिः स्वस्वगुणानां वसिष्ठत्वादिनां प्राणाधीनत्वानुवादमात्रं तु न कृतम्। नैतावता रूपभेदः; वागादीनां वसिष्ठत्वादिगुणान्वितानां प्राणाधीनकार्यत्वोपपादनेनैव प्राणस्य वागादिवसिष्ठत्वादिगुणहेतुत्वस्य सिद्धत्वात्। तदेव हि प्राणस्य वसिष्ठत्वादिगुणयोगित्वम्, यत् वागादिवसिष्ठत्वादिहेतुत्वम्। अतोऽत्रापि वसिष्ठत्वादिगुणयोगात् प्राणो(?)ज्येष्ठः प्रतिपन्न इति नास्ति विद्याभेदः॥ १० ॥

इति सर्वभेदाधिकरणम् ॥ ३ ॥

ஏவமுபபாதிதம் வாகாதிகார்யஸ்ய ப்ராணாதீநத்வம், *“அத ஹைநம் வாகுவாச யதஹம் வஸிஷ்டோ஽ஸ்மி த்வம் தத் வஸிஷ்டோ஽ஸி”*(சா.1-5-13)[1], இத்யாதிநா வாகாதிபி: அநூத்யதே।

கௌஷீதகிநாம் ப்ராணவித்யாயாமபி ப்ராணஜ்யைஷ்ட்யஶ்ரைஷ்ட்யப்ரதிபாதநாய வாகாதிஷு வஸிஷ்டத்வாதய: ப்ரதிபாதிதா:। *“அத ஹேமா தேவதா: ப்ரஜாபதிம் பிதரமேத்யாப்ருவந், கோ வை ந: ஶ்ரேஷ்ட:”* (கௌ.?)[2] இத்யாதிநா வாகாதிகதா: குணா: வாகாதயஶ்ச தேஹஶ்ச ப்ராணாதீநா இதி ப்ராணஸ்ய ஜ்யைஷ்ட்யமுபபாதிதம்।

வாகாதிபி: ஸ்வஸ்வகுணாநாம் வஸிஷ்டத்வாதிநாம் ப்ராணாதீநத்வாநுவாதமாத்ரம் து ந க்ருதம்। நைதாவதா ரூபபேத:, வாகாதீநாம் வஸிஷ்டத்வாதிகுணாந்விதாநாம் ப்ராணாதீநகார்யத்வோபபாதநேநைவ ப்ராணஸ்ய வாகாதிவஸிஷ்டத்வாதிகுணஹேதுத்வஸ்ய ஸித்தத்வாத்। ததேவ ஹி ப்ராணஸ்ய வஸிஷ்டத்வாதிகுணயோகித்வம், யத் வாகாதிவஸிஷ்டத்வாதிஹேதுத்வம்। அத: அத்ராபி வஸிஷ்டத்வாதிகுணயோகாத் ப்ராணோ ஜ்யேஷ்ட: ப்ரதிபந்ந இதி நாஸ்தி வித்யாபேத:।। 10 ।।

இதி ஸர்வாபேதாதிகரணம் ।। 3 ।।

இப்படி வாக் முதலியவற்றின் செயல்பாடு ப்ராணனுக்கு ஆதீனமானது என்று விளக்கப்பட்டதானது, வாக் முதலியவற்றால் திரும்ப சொல்லப்படுகிறது - [1]**‘‘பிறகு இந்த ப்ராணனிடம் வாக் சொல்லியது, ‘நான் எதனால் வஸிஷ்டனாக இருக்கிறேனோ, அதனால் நீ வஸிஷ்டனாக இருக்கிறாய்’’** என்பது முதலியதால்.

கௌஷீதகிகளுடைய ப்ராணவித்யையிலும், ப்ராணனுக்கு ஜ்யேஷ்ட-தன்மையையும் ஶ்ரேஷ்ட-தன்மையையும் இருப்பதைத் தெரிவிப்பதற்காக வாக் முதலியவற்றில் வஸிஷ்டத்வம் முதலியவை சொல்லப்பட்டன; [2]**‘‘பிறகு இந்த இந்த தேவர்கள் தம் பிதாவான நான்முகனை அடைந்து, எங்களில் யார் ஶ்ரேஷ்டர்?’ என்று கேட்டனர்’’** என்பது முதல், வாக் முதலியவற்றில் உள்ள குணங்களும் வாக் முதலியவையும் ஶரீரமும் ப்ராணனுக்கு அதீனமானவை என்று ப்ராணனுக்கு ஜ்யேஷ்டதன்மை விளக்கப் பட்டது.

வாக் முதலியவை தம்தம் குணமான வஸிஷ்டத்வம் முதலியவற்றை ப்ராணனுக்கு அதீனமாக (ப்ராணனிடம்) திரும்பிச் சொல்வது மட்டும் செய்யப்படவில்லை. அதை வைத்துக் கொண்டு, ரூபம் வேறாக ஆகாது. வஸிஷ்டத்வம் முதலிய குணங்களுடன் கூடிய வாக் முதலியவை, ப்ராணனனுக்கு அதீனமாகவே செயல்படுபவை என்பதை விளக்கியபடியாலேயே வாக் முதலியவற்றின் வஸிஷ்டத்வம் முதலிய குணங்களுக்கு ப்ராணன்தான் காரணம் என்பது ஏற்பட்டு விட்டது. ப்ராணன் ஆனது வஸிஷ்டத்வம் முதலிய குணங்களுடன் கூடியதாக இருத்தல் என்பது, வாக் முதலியவற்றின் வஸிஷ்டத்வம் முதலியவற்றுக்கு காரணமாக இருத்தல் என்பதுதானே! அதனால், இங்கும் வஸிஷ்டத்வம் முதலிய குணங்கள் (ப்ராணனிடம்) சேர்ந்திருப்பதால், ப்ராணன் ஜ்யேஷ்டன் என்பது தெரிகிறது.

எனவே, வித்யை வேறாகும் என்பது கிடையாது.

* * *

ஸர்வாபேதாதிகரணம் முற்றிற்று.

86.ஆநந்தாத்யதிகரணம்(3-3-4)

முன் குறிப்பு

வேதத்தில் ப்ரஹ்மத்துக்கு சொன்ன குணங்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

1. ஸ்வரூபநிரூபக குணங்கள் - ப்ரஹ்மம் என்பது எப்படியானது என்பதை நமக்கு புரிய வைக்கும் குணங்கள்; ப்ரஹ்மம்தான் உலகைப் படைப்பவர், காப்பவர் என்று சொன்னாலும், அந்த ப்ரஹ்மம் எந்த ஸ்வரூபத்தில் இருக்கும் என்பது புரியாது; அதைப் புரிய வைக்க வேதம், ''ஸத்யம், ஜ்ஞானம் அனந்தம் ப்ரஹ்ம'' முதலிய வாக்யங்களைச் சொல்கிறது; ஜ்ஞானஸ்வரூபமாக, மாறாததாக, எல்லா கால-தேச-பொருள்களில் இருப்பதாக, தோஷம் அற்றதாக, ஆனந்த-ஸ்வரூபமாக இருக்கும் என்கிறது;இப்படி சொன்ன குணங்கள் ஐந்து - ஸத்யத்வம், ஜ்ஞானத்வம், அனந்தத்வம், ஆனந்தத்வம், அமலத்வம் என்பவை; இவற்றைக் கொண்டுதான் ப்ரஹ்ம-ஸ்வரூபத்தை நாம் புரிந்து கொள்கிறோம்; அதனால் ஸ்வரூபநிரூபககுணங்கள் என்று பெயர்; ஸ்வரூபத்தை புரிய வைக்கும் குணங்கள் என்று அர்த்தம்;இவற்றை விட்டுப் பார்த்தால், ப்ரஹ்ம-ஸ்வரூபம் புரியாது;எனவே, இந்த குணங்களை எல்லா வித்யையிலும் எண்ணிக் கொள்ள வேண்டும்.
2. நிரூபிதஸ்வரூப குணங்கள் - ப்ரஹ்ம-ஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டு புரிந்தபின் நமக்கு தெரிய வரும் குணங்கள்; அவை காருண்யம் முதலிய எண்ணற்ற குணங்கள்; இவற்றை எந்தெந்த வித்யையில் சொல்லியுள்ளதோ, அந்த வித்யையில் மட்டும் எண்ணிக் கொள்ள வேண்டும்.

முதலில் சொன்ன ஸ்வரூப நிரூபக குணங்களை இந்த அதிகரணம் எடுத்துச் சொல்கிறது.

இது தவிர, ப்ரியசிரஸ்த்வம் முதலிய சிலதை வேதம் சொல்கிறது; அதாவது, ப்ரஹ்மம் எனும் ஆனந்தத்தை ஒரு மனிதனாக கற்பனை செய்ய வேண்டும்;அவனுக்கு, ப்ரியம் எனும் ஆனந்தம் தலை ஆகும்; மோதம் எனும் ஆனந்தம் வலது பக்கம் ஆகும் என்றெல்லாம் சொல்கிறது; இதெல்லாம் உண்மையில் ப்ரஹ்மத்தின் குணங்களே அல்ல; ப்ரஹ்மத்தை நமக்குப் புரிய வைப்பதற்காக ஒரு கற்பனை உருவத்தை சொல்கிறது என்பது மட்டுமே; இவற்றைஎந்த வித்யையிலும், உபாஸனம் செய்ய வேண்டாம்.

கை, கால் முதலிய பாகங்கள் ஶரீரத்துக்கு உண்டு; ஆத்மாவுக்கு கிடையாது; ப்ரஹ்மத்தை ஆத்மா என்று வேதம் சொல்கிறது; அதனால், முன் சொன்ன ஶரீர-உருவகம் கற்பனையே; இதன் விரிவான விளக்கம் இங்கே உள்ளது; அதனைப் புரிந்து கொள்ள, முதலில், ஆநந்தமயாதிகரணம் (1-1-6) மற்றும் முதல் பாகத்தில் பின் இணைப்பில் உள்ள ஆநந்தமயவித்யை பற்றிய கட்டுரையும் காணலாம்.

८६. आनन्दाद्यधिकरणम् (३-३-४)

प्राणाविद्याङ्गविषयमन्यदपि निरूपणमनन्तरमेव करिष्यते। यथा प्राणस्य वसिष्ठत्वाद्यनुसन्धानेन विना ज्यैष्ठ्यश्रैष्ठ्यानुसन्धानानुपपत्तेरनुक्तानामपि वसिष्ठत्वादीनां कौषीतकिप्राणविद्यायां प्राप्तिः; तथा ब्रह्मस्वरूपानुसन्धानं यैर्गुणैर्विना नोपपद्यते, ते ब्रह्मविद्यासु सर्वास्वप्यनुसन्धेया इत्ययमर्थः प्रतिपाद्यते -

३६५.आनन्दादयः प्रधानस्य (३-३-११)

अत्र ब्रह्मस्वरूपगुणानां सर्वासु परविद्यासूपसंहारोऽस्ति, नेति विचार्यते।

अप्रकरणाधीतानामुपसंहारे प्रमाणाभावात् प्रकरणश्रुतानामेवोपसंहार इति,

एवं प्राप्ते - ब्रूमः; **आनन्दादयः प्रधानस्य।** अभेदादिति वर्तते; प्रधानस्य गुणिनो ब्रह्मणः सर्वेषूपासनेष्वभेदात्, गुण्यपृथग्भावाद्गुणानाम्, सर्वत्रानन्दादयस्तद्गुणा उपसंहर्तव्याः ॥११॥

* * *

86.ஆநந்தாத்யதிகரணம்(3-3-4)

ப்ராணாவித்யாங்கவிஷயம் அந்யதபி நிரூபணம் அநந்தரமேவ கரிஷ்யதே। யதா ப்ராணஸ்ய வஸிஷ்டத்வாத்யநுஸந்தாநேந விநா ஜ்யைஷ்ட்யஶ்ரைஷ்ட்யாநுஸந்தாநாநுபபத்தே: அநுக்தாநாமபி வஸிஷ்டத்வாதீநாம் கௌஷீதகிப்ராணவித்யாயாம் ப்ராப்தி:, ததா ப்ரஹ்மஸ்வரூபாநுஸந்தாநம் யைர்குணைர்விநா நோபபத்யதே, தே ப்ரஹ்மவித்யாஸு ஸர்வாஸ்வபி அநுஸந்தேயா இத்யயமர்த: ப்ரதிபாத்யதே-

365.ஆநந்தாதய:ப்ரதாநஸ்ய(3-3-11)

அத்ர ப்ரஹ்மஸ்வரூபகுணாநாம் ஸர்வாஸு பரவித்யாஸு உபஸம்ஹாரோऽஸ்தி, நேதி விசார்யதே।

அப்ரகரணாதீதாநாம் உபஸம்ஸஹாரே ப்ரமாணாபாவாத் ப்ரகரணஶ்ருதாநாமேவ உபஸம்ஹார: இதி

ஏவம் ப்ராப்தே ப்ரூம: - *ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய।* அபேதாதிதி வர்ததே; *ப்ரதாநஸ்ய* குணிநோ ப்ரஹ்மண: ஸர்வேஷூபாஸநேஷு அபேதாத், குண்யப்ருதக்பாவாத் குணாநாம், ஸர்வத்ர ஆநந்தாதய: தத்குணா உபஸம்ஹர்தவ்யா:।। 11 ।।

* * *

86.ஆநந்தாத்யதிகரணம்(3-3-4)

ஸங்கதி (விஷய தொடர்பு)

ப்ராணவித்யையின் அங்கத்தைப் பற்றிய வேறொரு விசாரமும் அடுத்தபடியே (அடுத்த அதிகரணத்தில்) செய்யப்படப் போகிறது.

ப்ராணனுக்கு வஸிஷ்டத்வம் முதலியவற்றை எண்ணாமல் ஜ்யேஷ்ட-தன்மை, ஶ்ரேஷ்ட-தன்மை ஆகியவற்றை எண்ணுதல் வராது; அதனால், கௌஷீதகீ உபநிஷத்தில் ப்ராணவித்யையில், வஸிஷ்டத்வம் முதலியவை சொல்லப்படவில்லையானாலும் (அவை உபாஸனத்தில்) சேரும்; இது எப்படியோ, அப்படியே எந்த குணங்களை விட்டு ப்ரஹ்ம-ஸ்வரூபத்தை எண்ணுவது முடியாதோ, அந்த குணங்கள் எல்லா ப்ரஹ்மவித்யைகளிலும் எண்ணப் பட வேண்டியவை என்கிற இப்பொருள் சொல்லப் படுகிறது -

365.ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய (3-3-11)

குணமுடைய விஶேஷ்யம் ஒன்றானபடியால், ஆநந்தத்வம் முதலியவை [எண்ணப்பட வேண்டியவை ஆகும்]

ஸந்தேஹம்

இங்கு பரப்ரஹ்மம் பற்றிய எல்லா வித்யைகளிலும் ப்ரஹ்ம-ஸ்வரூப-குணங்களுக்கு உபஸம்ஹாரம் உண்டா? (அவற்றையும் சேர்த்து எண்ணி உபாஸனம் செய்யவேண்டுமா?)இல்லையா? என்று விசாரிக்கப் படுகிறது.

பூர்வபக்ஷம்

ஒரு வித்யையை ஆரம்பித்து உபதேஶம் செய்யும் இடத்தில், அங்கு சொல்லப்படாதவற்றை உபஸம்ஹாரம் செய்வதில் (சேர்த்து எண்ணுதலில்) ப்ரமாணம் கிடையாது; ஆகையால், அந்த இடத்தில் சொல்லப்பட்டவைக்கு மட்டுமே உபஸம்ஹாரம் ஆகும். (ப்ரஹ்ம ஸ்வரூப குணங்களை எல்லா வித்யைகளிலும் சேர்த்து எண்ணுதல் கூடாது).

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் - **''ஆநந்தாதய: ப்ரதாநஸ்ய''**

'அபேதாத்' என்பது (போன ஸூத்ரத்திலிருந்து) தொடர்ந்து உள்ளது.

ப்ரதாநஸ்ய (விஶேஷ்யத்துக்கு) - குணங்களை உடைய ப்ரஹ்மம் ஆனது

அபேதாத் (ஒன்றானபடியால்) - எல்லா வித்யைகளிலும் ஒன்றானபடியால், குணமுடைய பொருளை விட்டு குணங்கள் தனியாக இருக்காதானபடியால்,

ஆநந்தாதய: - ஆனந்தத்வம் முதலிய குணங்கள்

எல்லா வித்யைகளிலும் சேர்த்து எண்ணப் பட வேண்டியவை ஆகும்.

◆ ◆ ◆ ◆

एवं तर्हि गुण्यपृथग्भावादेवानन्दादिवत् प्रियशिरस्त्वादयोऽपि, **"तस्य प्रियमेव शिरः"**(तै.1.आन.5)[1] इत्यादौ ब्रह्मगुणत्वेन श्रुताः सर्वत्र प्रसज्येरन्; नेत्याह -

३६६.प्रियशिरस्त्वाद्यप्राप्तिरुपचयापचयौ हि भेदे (३-३-१२)

ब्रह्मस्वरूपगुणानां प्राप्तावुच्यमानायां प्रियशिरस्त्वादीनामप्राप्तिः तेषामब्रह्मगुणत्वात्; ब्रह्मणः पुरुषविधत्वरूपणमात्रान्तर्गतत्वात् प्रियशिरस्त्वादीनाम्। अन्यथा शिरःपक्षपुच्छाद्यवयवभेदे सति ब्रह्मणोऽप्युपचयापचयौ प्रसज्येयाताम्। तथा च सति **"सत्यं ज्ञानमनन्तं ब्रह्म"**(तै.1.आन.2)[2] इत्यादि विरुध्यते॥ १२ ॥

* * *

नन्वेवमेव ब्रह्मसम्बन्धिनामेवैश्वर्यगाम्भीर्यौदार्यकारुण्यादीनां गुणानामनन्तानां गुण्यपृथक्स्थितत्वमात्रेण, तत्राश्रुतानामप्युपसंहारे सर्वे सर्वत्र प्रसज्येरन्, आनन्त्यादुपसंहाराशक्तिश्च।

तत्राह -

ஏவம் தர்ஹி குண்யப்ருதக்பாவாதேவ ஆநந்தாதிவத் ப்ரியஶிரஸ்த்வாதயோऽபி, *"தஸ்ய ப்ரியமேவ ஶிர:"*(தை.1.ஆந.5)[1] இத்யாதௌ ப்ரஹ்மகுணத்வேந ஶ்ருதா: ஸர்வத்ர ப்ரஸஜ்யேரந்; நேத்யாஹ -

366.ப்ரியஶிரஸ்த்வாத்யப்ராப்திருபசயாபசயௌ ஹி பேதே(3-3-12)

ப்ரஹ்மஸ்வரூபகுணாநாம் ப்ராப்தௌ உச்யமாநாயாம் ப்ரியஶிரஸ்த்வாதீநாமப்ராப்தி: தேஷாம் அப்ரஹ்மகுணத்வாத், ப்ரஹ்மண: புருஷவிதத்வரூபணமாத்ராந்தர்கதத்வாத் ப்ரியஶிரஸ்த்வாதீநாம்। அந்யதா ஶிர:பக்ஷபுச்சாத்யவயவபேதே ஸதி ப்ரஹ்மணோऽபி உபசயாபசயௌ ப்ரஸஜ்யேயாதாம்। ததா ச ஸதி *"ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம"*(தை.1.ஆந.2)[2] இத்யாதி விருத்யதே॥12॥

* * *

நநு ஏவமேவ ப்ரஹ்மஸம்பந்திநாமேவ ஐஶ்வர்ய-காம்பீர்யௌதார்ய-காருண்யாதீநாம் குணாநாம் அநந்தாநாம் குண்யப்ருதகஸ்திதத்வமாத்ரேண, தத்ர அஶ்ருதாநாமப்யுபஸம்ஹாரே ஸர்வே ஸர்வத்ர ப்ரஸஜ்யேரந், ஆநந்த்யாத் உபஸம்ஹாராஶக்திஶ்ச।

தத்ராஹ -

கேள்வி - இப்படியானால், [1]**"அந்த ப்ரஹ்மத்துக்கு ப்ரியம் தான் சிரஸ்"** முதலியதில் ப்ரஹ்மத்தின் குணமாக ஓதப்பட்டவையான ப்ரியசிரஸ்த்வம் முதலியவையும், ஆனந்தத்வம் முதலியன போல,எல்லா வித்யைகளிலும் எண்ணப்பட நேரிடும்; ஏனெனில்,குணமுடைய பொருளை விட்டு குணங்கள் தனியாக இருக்காதானபடியாலேயே.

✍*(ஆனந்தமயமான ப்ரஹ்மத்துக்கு ப்ரியம் என்பது தலையாகும்; மோதம் என்பது வலது பக்கம் ஆகும் ..... என்று தலை, வால் முதலியதை வேதம் சொல்கிறது; ப்ரியம், மோதம் என்பதெல்லாம் ஆனந்தத்தின் சில விதங்கள்; அந்த ப்ரியத்தை தலையாக கொண்டிருத்தல் முதலியதும் ப்ரஹ்மத்தின் குணம் ஆகிறது; ஆதலால், அதையும் உபாஸநம் செய்ய வேண்டி வரும் என்று கேள்வி)*✍

பதில் - அல்ல என்கிறார் -

366.ப்ரியஶிரஸ்த்வாத்யப்ராப்தி: உபசயாபசயௌ ஹி பேதே (3-3-12)

ப்ரியசிரஸ்த்வம் முதலியவை உபாஸனத்தில் சேராது; ஏனெனில், [ப்ரஹ்மத்துக்கு] அவயவப் பிரிவு இருக்குமானால், பெரிய-சிறிய அளவுகள் இருக்க நேரிடும்.

ப்ரியசிரஸ்த்வாத்யப்ராப்தி: - ப்ரஹ்ம-ஸ்வரூப-குணங்கள் (உபாஸனத்தில்) சேரும் என்று சொல்லப்படும்போது, ப்ரியசிரஸ்த்வம் முதலியவை (உபாஸனத்தில்) சேராது; ஏனெனில், அவை ப்ரஹ்மத்தின் குணங்களே அல்ல. (பரமாத்ம-ஸ்வரூபமான ப்ரஹ்மத்துக்கு தலை முதலிய பாகம் கிடையாது)

பேதே (அவயவப்பிரிவு இருக்குமானால்) - அப்படி இல்லாமல், ப்ரஹ்மத்துக்கு தலை, பக்கம், வால் முதலிய அவயவப் பிரிவு இருக்குமானால்,

உபசய-அபசயௌ - சிறிதாகவும் பெரிதாகவும் இருத்தல் வர நேரிடும்; (ஒரு அவயவம் பெரிதாகவும், மற்றொன்று சிறிதாகவும் இருக்க நேரிடும்) அப்படியானால், [2]**"ப்ரஹ்மம் மாறாதது, ஜ்ஞாநஸ்வரூபமானது, அளவற்றது"** முதலியது முரண்படும்.

◆ ◆ ◆

கேள்வி - (குணமுடைய பொருளை விட்டு குணங்கள் இருக்காது எனும் காரணத்தால் ஆனந்தத்வம் முதலிய குணங்கள் எல்லா வித்யையிலும் வரும் என்றால்,) அப்படியே எல்லா குணங்களும் எல்லா வித்யையிலும் வர நேரிடும்; ப்ரஹ்மத்துடன் ஸம்பந்தப்பட்ட ஐஶ்வர்யம், காம்பீர்யம், ஔதார்யம், காருண்யம் முதலிய எண்ணற்ற குணங்கள், அந்த(ந்த) வித்யையில் சொல்லப்படாமல் இருந்தாலும், குணமுடைய பொருளை (ப்ரஹ்மத்தை)விட்டுப் பிரிந்து இருக்காது எனும் காரணத்தால் மட்டும், இப்படியே சேர்த்து எண்ணிக் கொள்ளப்பட வேண்டும் என்றாகும்; அவை எண்ணற்றவை ஆதலால், முழுதுமாக எண்ண முடியாது என்பதும் ஆகும்.

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

३६७.इतरे त्वर्थसामान्यात् (३-३-१३)

तुशब्दश्चोद्यं व्यावर्तयति। **इतरे तु** - आनन्दादयः **अर्थसामान्यात्** सर्वत्रानुवर्तन्ते। ये त्वर्थसमानाः - अर्थस्वरूपनिरूपणधर्मत्वेनार्थप्रतीत्यनुबन्धिनः, तेऽर्थस्वरूपवत् सर्वत्रानुवर्तन्ते। ते च गुणाः सत्यज्ञानानन्दामलत्वानन्तत्वानि। “**यतो वा इमानि**” (तै.1.भृ.1)[1] इत्यादिना जगत्कारणतयोपलक्षितं ब्रह्म, “**सत्यं ज्ञानमनन्तं ब्रह्म**” (तै.1.आन.2)[2] “**आनन्दो ब्रह्म**”(तै.1.भृ.6)[3] इति आनन्दादिभिर्हि स्वरूपतो निरूप्यते। अत उपास्यब्रह्मस्वरूपवगमाय सर्वासु विद्यास्वानन्दादयोऽनुवर्तन्ते।

ये तु निरूपितस्वरूपस्य ब्रह्मणः कारुण्यादयो गुणाः प्रतिपन्नाः, तेषां गुण्यपृथक्स्थितत्वेऽपि प्रतीत्यनुबन्धित्वाभावात्, ये यत्र श्रुताः, ते तत्रोपसंहार्याः इति निरवद्यम्॥१३॥

* * *

यदि - उपचयापचयप्रसङ्गात् प्रियशिरस्त्वादयो ब्रह्मणः पुरुषविधत्वरूपणमात्रार्थाः, न तु ब्रह्मगुणाः; तर्ह्यतथारूपस्य ब्रह्मणः तथात्वेन रूपणं किमर्थं क्रियते? अतथाभूतस्य

367.இதரே த்வர்துஸாமாந்யாத் (3-3-13)

துஶப்தஶ்சோத்யம் வ்யாவர்தயதி। *இதரே து* - ஆநந்தாதய: அர்துஸாமாந்யாத் ஸர்வத்ராநுவர்தந்தே। யே து அர்துஸமாநா: - அர்துஸ்வரூபநிரூபணதுர்மத்வேந அர்துப்ரதீத்யநுபந்திந:, தே அர்துஸ்வரூபவத் ஸர்வத்ராநுவர்தந்தே।

தே ச குணா: ஸத்யஜ்ஞாநாநந்தாமலத்வாநந்தத்வாநி। *“யதோ வா இமாநி”*(தை.1.ப்ரு.1)[1] இத்யாதிநா ஜகத்காரணதயோபலக்ஷிதம் ப்ரஹ்ம, *“ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம”*(தை.1.ஆந.2)[2] *“ஆநந்தோ ப்ரஹ்ம”*(தை.1.ப்ரு.6)[3] இதி ஆநந்தாதிபிர்ஹி ஸ்வரூபதோ நிரூப்யதே। அத: உபாஸ்யப்ரஹ்மஸ்வரூபாவகமாய ஸர்வாஸு வித்யாஸு அநந்தாதயோऽநுவர்தந்தே।

யே து நிரூபதஸ்வரூபஸ்ய ப்ரஹ்மண: காருண்யாதயோ குணா: ப்ரதிபந்நா:, தேஷாம் குண்யப்ருதக்ஸ்திதத்வேऽபி ப்ரதீத்யநுபந்தித்வாபாவாத், யே யத்ர ஶ்ருதா:, தே தத்ரோபஸம்ஹார்யா: - இதி நிரவத்யம்॥13॥

* * *

யதி - உபசயாபசயப்ரஸங்காத் ப்ரியஶிரஸ்த்வாதய: ப்ரஹ்மண: புருஷவிதத்வரூபணமாத்ரார்தா:, ந து ப்ரஹ்மகுணா: - தர்ஹி அததாரூபஸ்ய ப்ரஹ்மண: ததாத்வேந ரூபணம் கிமர்தம் க்ரியதே? அததாபூதஸ்ய ஹி

367.இதரே து அர்த்தஸாமாந்யாத்(3-3-13)

மற்றவையோ, குணங்களை உடைய பொருளுக்கு ஸமமாக ஆவதால் [எல்லாவிடத்திலும் சேரும்].

'து' என்ற சொல், கேள்வியைக் களைகிறது.

இதரே (மற்றவை) து - ஆனந்தத்வம் முதலியவையோ

அர்த்தஸாமாந்யாத் - (குணங்களை உடைய பொருளுக்கு ஸமானமாக ஆவதால்) எல்லா இடத்திலும் தொடர்ந்து வரும்.

(சில குணங்கள்) குணங்களை உடைய பொருளுக்கு ஸமமாக ஆனவையாக (ஆகும்;) அதாவது, அந்த பொருளின் ஸ்வரூபத்தை நிரூபணம் செய்யும் தன்மைகள் ஆவதால், பொருளைப் பற்றிய ஜ்ஞாநத்தில் சேர்ந்தே தெரிபவையாக (ஆகும்; அப்படி) எவை ஆகின்றனவோ, அவை பொருளின் ஸ்வரூபம் போல் எல்லா வித்யைகளிலும் தொடர்ந்து இருக்கும்.

அந்த குணங்கள் (ஸ்வரூப-நிரூபக-குணங்கள்)-

1. ஸத்யத்வம் (உருமாற்றம் இல்லாமல் ஒரே நிலையில் ஆதல்)
2. ஜ்ஞாநத்வம் (ஸ்வயம்ப்ரகாஶம் ஆகவும் ஜ்ஞாநம் உடையவனாகவும் இருத்தல்)
3. ஆனந்தத்வம் (அனுகூலமாகவே ஆதல்)
4. அமலத்வம் (தோஷங்களுக்கு எதிர்த்தட்டாக இருத்தல்)
5. அனந்தத்வம் (எந்த விதத்திலும் அளவுபடாமை)ஆகியவை.

[1]**''எதிலிருந்து இந்த பொருள்கள் (உண்டாகின்றனவோ)...''** என்பது முதலியவற்றால் உலகின் காரணமாக ப்ரஹ்மம் புற-அடையாளம் இடப்பட்டது; அதுவே, [2]**''ஸத்யம் ஜ்ஞாநம் அனந்தம் ப்ரஹ்ம'',** [3]**''ஆனந்தோ ப்ரஹ்ம''** என்று ஆனந்தத்வம் முதலியவற்றால் ஸ்வரூபத்தை இட்டு (அதற்கு மட்டுமேயான தன்மைகளைக் கொண்டு) நிரூபிக்கப் படுகிறது. எனவே, உபாஸனம் செய்யப்படும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை அறிவதற்காக, எல்லா வித்யைகளிலும் ஆனந்தத்வம் முதலியவை தொடர்கின்றன.

ஆகையால், ரூபமும் பலன்-தொடர்பும் வேறாக இருப்பதால், வித்யை வேறாகும்; ஆகவே, ஒரு இடத்தில் ஓதப்பட்ட குணங்களை மற்ற இடத்தில் சேர்த்து எண்ணுதல் கிடையாது.

* * *

புருஷவித்யாதிகரணம் முற்றிற்று.

92.வேதாத்யதிகரணம்(3-3-10)

முன் குறிப்பு

உபநிஷத்களின் ஆரம்பத்தில் சில ஆரம்ப-மந்த்ரங்கள் உள்ளன; உதாஹரணமாக தைத்திரீயத்தில் ''ஶம் நோ மித்ர:'' என்று ஆரம்பிக்கும் மந்த்ரம் சொல்கிறோம்; அதர்வண வேதத்திலோ, ''(எதிரியின்) தேஜஸ் நிறைந்த அங்கத்தை பிளப்பாய்! ஹ்ருதயத்தை பிளப்பாய்!'' முதலிய மந்த்ரங்கள் உள்ளன; சில உபநிஷத்களில் ஆரம்பத்தில் ப்ரவர்க்யம் முதலிய கர்மங்களைச் சொல்கிறது.

இவையெல்லாம் வித்யைக்கு (உபாஸநத்துக்கு) அங்கமா இல்லையா என்பது விசாரம்.

பூர்வபக்ஷம் - இவை வித்யைக்கு அங்கம் ஆகும்; ஏனெனில்,இங்கே வித்யையைச் சொல்ல ஆரம்பிக்கும் இடத்தில் இவற்றைச் சொல்லியுள்ளது; இவை வித்யைக்கு அங்கமல்ல என்றால், வித்யையை உபதேசம் செய்யும் உபநிஷத்தில் இவற்றைச்சொன்னது வீணாகி விடும்.

ஸித்தாந்தம் - வித்யைக்கு அங்கம் அல்ல; அது அந்தந்த ஆரம்ப-மந்த்ரங்களில் சொன்ன விஷய-ஸாமர்த்யத்தால் தெரிய வரும்.

(உ.ம்) - ''(எதிரியின்) தேஜஸ் நிறைந்த அங்கத்தை பிளப்பாய்! ஹ்ருதயத்தை பிளப்பாய்!'' என்னும் மந்த்ரமானது, சத்ரு-வதம் எனும் பலனுக்கான யாகத்தில் உபயோகப்படும் என்பது தெளிவாகவே தெரிகிறது.

அதுபோல, ''ஶம் நோ மித்ர:'' என்னும் மந்த்ரத்தில்,''ருதம் வதிஷ்யாமி(உண்மைச் சொல்லை சொல்லப்போகிறேன்); ஸத்யம் வதிஷ்யாமி(உண்மைப் பொருளை சொல்லப்போகிறேன்)'' என்று உள்ளது; அதனால், இது அத்யயனத்துக்கு (வேதம் சொல்வதற்கு) அங்கம் என்று தெரிகிறது; உபாஸனத்துக்கு அங்கமானால், 'சொல்லப் போகிறேன்' என்று வராது.

ப்ரவர்க்யம் எனும் கர்மம் ஆனது உபநிஷத் ஆரம்பத்தில் சொல்லி இருந்தாலும், அது யாக-கர்மத்தில் செய்யப்பட வேண்டியது என்பதை வேதமே அந்த யாக-இடத்தில் தெளிவாக சொல்லியுள்ளது; எனவே, சந்தேகமே வராது.

கேள்வி - இவை ப்ரஹ்மவித்யைக்கு அங்கமல்ல என்றால், இங்கே ப்ரஹ்மவித்யையை சொல்லப் போகும் இடத்தில் சொன்னது எதற்கு? கர்ம-பாகத்தில் சொல்லி இருக்கலாமே?

பதில் - இவை காட்டில் சொல்ல வேண்டிய மந்த்ரங்கள்; இரவில் சொல்லக்கூடாத மந்த்ரங்கள்; அதனால், ஆரண்யக-பாகத்தில் சொல்லப்பட்டு உள்ளன. வேதத்தில் ஆரண்யகபாகத்தை இரவில் சொல்லக் கூடாது; அதில் சில பாகங்களை காட்டில்தான் சொல்ல வேண்டும் என்னும் நியமம் இப்போதும் நடைமுறையில் உண்டு. உபநிஷத்களை அகங்களில் சொன்னாலும், இரவில் சொல்வதில்லை.

In Public domain. Digitization: Mumukshu Research Academy

९२. वेधाद्यधिकरणम् (३-३-१०)

३७९.वेधाद्यर्थभेदात् (३-३-२५)

- आथर्वणिका उपनिषदारम्भे, “**शुक्रं प्रविध्य हृदयं प्रविध्य**”(अथ.म.?)[1] इत्यादीन् मन्त्रान् अधीयते।
- सामगाश्च रहस्यब्राह्मणारम्भे, “**देव सवितः प्रसुव यज्ञं प्रसुव**” (सा.र.ब्र.?)[2] इत्याद्यामनन्ति।
- काठकास्तैत्तिरीयकाश्च, “**शन्नो मित्रश्शं वरुण**”(तै.1.शी.1)[3] इत्यादिकम्।
- शाठ्यायनिनश्च, “**श्वेताश्वो हरिनीलोऽसि**”(?)[4] इत्यादिकम्।
- ऐतरेयिणस्तु महाव्रतब्राह्मणमधीयते, “**इन्द्रो हवै वृत्रं हत्वा महानभवत्**” (ऐ.म.ब्रा.?)[5] इत्यादि।
- कौषीतकिनोऽपि महाव्रतब्राह्मणमेव, “**प्रजापतिर्वै संवत्सरः। तस्यैष आत्मा यन्महाव्रतम्**”(कौ.म.ब्रा.?)[6] इति।
- वाजसनेयिनस्तु प्रवर्ग्यब्राह्मणम्, “**देवा ह वै सत्रं निषेदुः**”(?)[7] इत्यादि।

तत्र संशयः - किमुपनिषदारम्भेष्वधीताः “**शुक्रं प्रविध्य**”, “**शं नो मित्रः**” इत्यादयो मन्त्राः, प्रवर्ग्यादीनि च कर्माणि विद्याङ्गम्, उत नेति।

---

92. வேதாத்யதிகரணம் (3-3-10)

379.வேதாத்யர்தபேதாத் (3-3-25)

- ஆதர்வணிகா உபநிஷதாரம்பே, “*ஶுக்ரம் ப்ரவித்ய ஹ்ருதயம் ப்ரவித்ய*”[1] (அத.ம.?) இத்யாதீந் மந்த்ராந் அதீயதே।
- ஸாமகாஶ்ச ரஹஸ்யப்ராஹ்மணாரம்பே, “**தேவ** *ஸவித: ப்ரஸுவ யஜ்ஞம் ப்ரஸுவ*”(ஸா.ர.ப்ர?)[2] இத்யாத்யாம்நந்தி।
- காடகா: தைத்திரீயகாஶ்ச, “*ஶம் நோ மித்ர: ஶம் வருண:*”(தை.1.ஶீ.1)[3] இத்யாதிகம்।
- ஶாட்யாயநிநஶ்ச, “*ஶ்வேதாஶ்வோ ஹரிநீலோऽஸி*”(?)[4] இத்யாதிகம்।
- ஐதரேயிணஸ்து மஹாவ்ரதப்ராஹ்மணமதீயதே, “**இந்த்ரோ** *ஹவை வ்ருத்ரம் ஹத்வா மஹாநபவத்*”(ஐ.ம.ப்ரா.?)[5] இத்யாதி,
- கௌஷீதகிநோऽபி மஹாவ்ரதப்ராஹ்மணமேவ, “*ப்ரஜாபதிர்வை ஸம்வத்ஸர:। தஸ்யைஷ ஆத்மா யந்மஹாவ்ரதம்*”(கௌ.ம.ப்ரா.?)[6] இதி।
- வாஜஸநேயிநஸ்து ப்ரவர்க்யப்ராஹ்மணம், “**தேவா** *ஹவை ஸத்ரம் நிஷேது:*”(?)[7] இத்யாதி।

தத்ர ஸம்ஶய: - கிம் உபநிஷதாரம்பேஷ்வதீதா: “*ஶுக்ரம் ப்ரவித்ய*”, “*ஶம் நோ மித்ர:*” இத்யாதயோ மந்த்ரா:, ப்ரவர்க்யாதீநி ச கர்மாணி வித்யாங்கம், உத நேதி।

92.வேதாத்யதிகரணம்(3-3-10)

371.வேதாத்யர்த்தபேதாத்(3-3-25)

பிளத்தல் முதலிய அர்த்தம் வேறாவதால்

விஷயவாக்யம்

- அதர்வவேதத்தினர் உபநிஷத்தின் ஆரம்பத்தில், [1]**‘‘(எதிரியின்) தேஜஸ் நிறைந்த அங்கத்தை பிளப்பாய்! ஹ்ருதயத்தை பிளப்பாய்!’’** முதலிய மந்த்ரங்களை ஓதுகின்றனர்.
- ஸாமகானம் செய்பவர், ரஹஸ்ய-ப்ராஹ்மணத்தின் ஆரம்பத்தில், [2]**‘‘ஸவிதா எனும் தேவனே, யாகத்தை செய்ய வைப்பாய்!’’** முதலியதை ஓதுகின்றனர்.
- காடகர்களும் தைத்திரீயர்களும் [3]**‘‘எமக்கு மித்ரன் (ஸூர்யன்) சுகமளிப்பவராக ஆகட்டும்; வருணன் சுகமளிப்பவராக ஆகட்டும்’’** என்பது முதலியதை ஓதுகின்றனர்.
- சாட்யாயனிகள் [4]**‘‘(இந்த்ரனே), வெண்குதிரை உடையவனாய் இந்திரநீலக்கல் போல நீலமாக இருக்கிறாய்’’** என்பது முதலியதை ஓதுகின்றனர்.
- ஐதரேயிகளோ, [5]**‘‘இந்த்ரன் வ்ருத்ரனைக் கொன்று மஹான் ஆனான்’’** என்பது முதலாக மஹாவ்ரத-ப்ராஹ்மணத்தை ஓதுகின்றனர். (மஹாவ்ரதம் என்பது ஸத்ரத்துக்கு அங்கமான ஒரு அனுஷ்டாநம்; அதை பற்றி விளக்கும் வேதபாகம் மஹாவ்ரத-ப்ராஹ்மணம் ஆகும்.)
- கௌஷீதகிகளும் மஹாவ்ரதப்ராஹ்மணத்தையே, [6]**‘‘ப்ரஜாபதிதான் வருஷம் ஆவார்; அவருக்கு மஹாவ்ரதம் என்று எதுவோ, அதுதான் ஆத்மா’’** என்று ஓதுகின்றனர்.
- வாஜஸனேயிகளோ ப்ரவர்க்ய-ப்ராஹ்மணத்தை [7]**‘‘தேவர்கள் ஸத்ரத்தை செய்தனர்’’** முதலியதாக ஓதுகின்றனர். (ப்ரவர்க்யம் என்பது ஜ்யோதிஷ்டோம யாகத்துக்கு அங்கமான ஒரு அனுஷ்டாநம்; அது பற்றிய விளக்கமான ப்ராஹ்மணத்தை ஓதுகின்றனர்)

ஸந்தேஹம்

அதில் ஸந்தேஹம் - உபநிஷத்களின் ஆரம்பங்களில் ஓதப்பட்ட **‘‘சுக்ரம் ப்ரவித்ய (தேஜஸ் ஆன அங்கத்தை பிளப்பாய்)’’, ‘‘ஶம் நோ மித்ர: (மித்ரன் எமக்கு மங்களம் ஆகட்டும்)’’** முதலிய மந்த்ரங்களும் ப்ரவர்க்யம் முதலிய கர்மங்களும் உபாஸனத்துக்கு அங்கமா? அல்லது இல்லையா? என்று.

किं युक्तम्? विद्याङ्गमिति। कुतः? सन्निधिसमाम्नानात् विद्याङ्गत्वप्रतीतेः। यद्यपि, **''शुक्रं प्रविध्य''**(अथ.म.१)[1] इत्यादीनां मन्त्राणां प्रवर्ग्यादेश्च कर्मणः श्रुतिलिङ्गवाक्यैर्बलवद्भिर्यथायथं कर्मसु विनियोगोऽवगम्यते, तथाऽपि **''शं नो मित्रः''**(तै.1.शि.1)[2], **''सह नाववतु''**(तै.1.आन.1)[3] इत्यादेर्मन्त्रस्यान्यत्र विनियोगाभागात् विद्याधिकाराच्च विद्याङ्गत्वमवर्जनीयमिति सर्वासु विद्यासु इमे मन्त्राः उपसंहर्तव्याः -

एवं प्राप्ते प्रचक्ष्महे - **वेधाद्यर्थभेदात्।**

- **''शुक्रं प्रविध्य हृदयं प्रविध्य''**(अथ.म.१)[4],
- **''ऋतं वदिष्यामि सत्यं वदिष्यामि''**(तै.1.शि.1)[5],
- **''ऋतमवादिषम् सत्यमवादिषम्''**(तै.1.शि.24)[6]
- **''तेजस्विनावधीतमस्तु मा विद्विषावहै''**(तै.1.आ.1)[7]

इत्यादिभिर्लिङ्गैरभिचाराध्ययनादिष्वेषां विनियोगावगमान्न विद्याङ्गत्वम्।

एतदुक्तं भवति - यथा **''हृदयं प्रविध्य''**(अथ.म.१)[8] इत्यादिमन्त्रसामर्थ्यात् **''शुक्रं प्रविध्य''**(अथ.म.१)[9] इत्यादीनामभिचारादिशेषत्वमवगम्यते, एवमेव **''ऋतं**

கிம் யுக்தம்? வித்யாங்கமிதி। குத:? ஸந்நிதிஸமாம்நாநாத் வித்யாங்கத்வப்ரதீதே:। யத்யபி, *''ஶுக்ரம் ப்ரவித்ய''*(அத.ம?)[1] இத்யாதீநாம் மந்த்ராணாம் ப்ரவர்க்யாதேஶ்ச கர்மண: ஶ்ருதிலிங்கவாக்யைர்பலவத்பி: யதாயதம் கர்மஸு விநியோகோऽவகம்யதே, ததாऽபி *''ஶம் நோ மித்ர:''*(தை.1.ஶி.1)[2], *''ஸஹ நாவவது''*(தை.1.ஆந.1)[3] இத்யாதேர்மந்த்ரஸ்ய அந்யத்ர விநியோகாபாவாத் வித்யாதிகாராச்ச வித்யாங்கத்வம் அவர்ஜநீயமிதி ஸர்வாஸு வித்யாஸு இமே மந்த்ரா: உபஸம்ஹர்தவ்யா: -

ஏவம் ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - **வேதாத்யர்தபேதாத்।**

- *''ஶுக்ரம் ப்ரவித்ய ஹ்ருதயம் ப்ரவித்ய''*(அத.ம.?)[4],
- *''ருதம் வதிஷ்யாமி ஸத்யம் வதிஷ்யாமி''*(தை.1.ஶி.1)[5],
- *''ருதமவாதிஷம் ஸத்யமவாதிஷம்''*(தை.1.ஶி.24)[6]
- *''தேஜஸ்வி நாவதீதமஸ்து மா வித்விஷாவஹை''* (தை.1.ஆ1)[7]

இத்யாதிபிர்லிங்கை: அபிசாராத்யயநாதிஷு ஏஷாம் விநியோகாவகமாத் ந வித்யாங்கத்வம்।

ஏதது்க்தம் பவதி - யதா *''ஹ்ருதயம் ப்ரவித்ய''*(அத.ம.?)[8] இத்யாதிமந்த்ரஸாமர்த்யாத் *''ஶுக்ரம் ப்ரவித்ய''*(அத.ம.?)[9] இத்யாதீநாம் அபிசாராதிஶேஷத்வ-

பூர்வபக்ஷம்

எது சரியாகும்?

உபாஸனத்துக்கு அங்கம் என்பது.

ஏன்?

(உபாஸனத்துக்கு) அருகில் ஓதப்பட்டிருப்பதால் உபாஸனத்துக்கு அங்கம் என்பதாகத் தெரிகிறது.

[1]**''சுக்ரம் ப்ரவித்ய (தேஜஸ் ஆன அங்கத்தை பிளப்பாய்)''** முதலிய மந்த்ரங்களுக்கும் ப்ரவர்க்யம் முதலிய கர்மங்களுக்கும், பலம் வாய்ந்த ஶ்ருதி, லிங்கம், வாக்யம் ஆகியவற்றைக் கொண்டு கர்மங்களில் உபயோகப் படுத்துதல் தெரிகிறது; ஆனாலும், [2]**''ஶம்நோ மித்ர: (மித்ரதேவன் நமக்கு சுகமளிப்பவனாக ஆகட்டும்),** [3]**''ஸஹ நாவவது (நம் இருவரையும் சேர்த்து காப்பாற்றட்டும்)''** முதலிய மந்த்ரத்துக்கு வேறிடத்தில் உபயோகப் படுத்துதல் சொல்லப்படவில்லை; மேலும் ப்ரஹ்மவித்யையை சொல்ல ஆரம்பிக்கும் இடத்தில் உள்ளது; ஆகையால், உபாஸனத்துக்கு அங்கம் என்பது தவிர்க்க முடியாதது; ஆகையால், எல்லா உபாஸனங்களிலும் இந்த, மந்த்ரங்கள் சேர்த்து எண்ணத் தக்கவையே.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் - **''வேதாத்யர்த்தபேதாத்''**

- [4]**''தேஜஸ் நிறைந்த அங்கத்தை பிளப்பாய்! ஹ்ருதயத்தை பிளப்பாய்!''**
- [5]**''உண்மைச் சொல்லை சொல்லப் போகிறேன்; உண்மைப் பொருளை சொல்லப் போகிறேன்''**
- [6]**''உண்மைச் சொல்லை சொன்னேன்; உண்மைப் பொருளை சொன்னேன்'',**
- [7]**''(ஆசார்யனும் ஶிஷ்யனும் ஆகிய) நமக்கு ஓதிய வேதம் வீர்யமுடையதாக இருக்கட்டும்; நாம் இருவரும் ஒருவருக்கொருவர் த்வேஷப்படாமல் இருப்போம்''**

முதலிய அடையாளங்களால் அபிசாரம், அத்யயனம் முதலியவற்றில் இவற்றுக்கு உபயோகப் படுதல் தெரிகிறது; ஆகையால்,உபாஸனத்துக்கு அங்கம் அல்ல.

இது சொன்னதாக ஆகிறது - [8]**''ஹ்ருதயத்தை பிளப்பாய்''** முதலிய மந்த்ரத்தின் பொருள்-திறனையிட்டு, [9]**''தேஜஸ்ஸினை பிளப்பாய்''** முதலியவையும் (சத்ருவைக் கொல்வதற்கான) அபிசாரம் முதலியதுக்கு அங்கமானது என்று தெரிகிறது;

वदिष्यामि''(तै.1.शि.1)[1], ''**तेजस्विनावधीतमस्तु**''(तै.1.शि.1)[2] इत्यादिमन्त्रसामर्थ्यादेव स्वाध्यायशेषत्वं ''**शं नो मित्रः**''(तै.1.शि.1)[3] इत्यादिमन्त्राणामवगम्यते। अतो न तेषां विद्याङ्गत्वम् इति।

''**शुक्रं प्रविध्य**''(अथ.म.?)[4] इत्यादीनां प्रवर्ग्यादिब्राह्मणानां चेह पाठो दिवाकीर्त्यत्वारण्येनुवाक्यत्वकृतः॥ २५ ॥

इति वेधाद्यधिकरणम्॥ १० ॥

மவகம்யதே, ஏவமேவ *"ருதம் வதிஷ்யாமி"*(தை.1.ஶி.1)[1], *"தேஜஸ்வி நாவதீதமஸ்து"*(தை.1.ஶி.1)[2] இத்யாதிமந்த்ரஸாமர்த்யாதேவ ஸ்வாத்யாயஶேஷத்வம் *"ஶம் நோ மித்ர:"*(தை.1.ஶி.1)[3] இத்யாதி மந்த்ராணாமவகம்யதே। அதோ ந தேஷாம் வித்யாங்கத்வம் இதி। *"ஶுக்ரம் ப்ரவித்ய"* (அத.ம. ?)[4] இத்யாதீநாம் ப்ரவர்க்யாதிப்ராஹ்மணாநாம் சேஹ பாட: திவாகீர்த்யத்வாரண்யேநுவாக்யத்வக்ருத:।।25।।

இதி வேதாத்யதிகரணம்।। 10 ।।

அது எப்படியோ, அப்படியே, [1]**''உண்மையை சொல்லப் போகிறேன்''**; [2]**''நமக்கு ஓதிய வேதம் வீர்ய முடையதாக இருக்கட்டும்''** முதலிய மந்த்ரங்களின்' பொருள்திறனையிட்டு, [3]**''மித்ரன் நமக்கு சுகமளிப்பவனாக ஆகட்டும்''** முதலிய மந்த்ரங்களும் ஓதப்படும் வேதத்துக்கு அங்கமானவை என்று தெரிகிறது.

அதனால், அவை உபாஸனத்துக்கு அங்கம் அல்ல.

(மந்த்ரங்களின் பொருளை கவனித்தால், அவை எங்கு உபயோகப்படும் என்பது தெரிந்து விடும் 'பிளப்பாய்' முதலிய மந்த்ரங்கள் எதிரிகளைப் பிளக்க உதவும் கர்மங்களில் ஆகும்; 'சொல்ல போகிறேன்' முதலிய மந்த்ரங்கள் வேத-அத்யயனத்தில் ஆகும்; எனவே, இத்தகு மந்திரங்கள் உபாஸனத்துக்கு அங்கமாக ஆகாது)

[4]**''தேஜஸ்ஸினை பிளப்பாய்''** முதலியவற்றையும், ப்ரவர்க்யம் முதலியவற்றின் ப்ராஹ்மணங்களையும் இங்கு உபநிஷத்தில் சொன்னது, பகலில் ஓதப்பட வேண்டியதாகவும், காட்டில் ஓதப்பட ஏற்றதாகவும் ஆவதால் விளைந்தது ஆகும்.

* * *

வேதாத்யதிகரணம் முற்றிற்று.

93.ஹாந்யதிகரணம்(3-3-11)

முன் குறிப்பு

உபாஸனம் செய்பவருக்கு ப்ரஹ்மத்தை அடையும் முன் இரு பலன்கள் வரும் - 1. ஹாநி - புண்யபாபகர்மங்களை விடுதல்; 2. உபாயனம் - அந்த புண்யபாப கர்மங்கள் வேறொருவரை சென்றடைதல். (புண்யங்கள் இவனது நண்பர்களிடம் போகும்; பாபங்கள் இவனது எதிரிகளிடம் போகும்) இந்த பலன்களை உபாஸனத்தில் சிந்திக்க வேண்டும்.

விசாரம் - எல்லா வித்யையிலும் இரண்டையும் சிந்தனை செய்ய வேண்டுமா? அல்லது இரண்டையோ ஏதாவது ஒன்றையோ விருப்பப்படி சிந்தனை செய்யலாமா?

பூர்வபக்ஷம் - இரு வித்யைகளில் ஹாநி மட்டுமே சொல்கிறது; ஒரு வித்யையில், உபாயனம் மட்டுமே சொல்கிறது; ஒரு வித்யையில் இரண்டும் சொல்லியுள்ளது. இப்படி பலவாறாக சொல்லியிருப்பதால், இவற்றை எப்படி வேண்டுமானாலும் சிந்தனை செய்யலாம்; ஹாநி மட்டுமோ, அல்லது உபாயனம் மட்டுமோ அல்லது இரண்டையுமோ சிந்தனை செய்யலாம்; எல்லா வித்யையிலும் இரண்டையும் சிந்தனை செய்ய வேண்டும் என்றால், அப்போது வேதத்தில், ஒன்றை மட்டும் சொன்னது எதற்கு? இரண்டையும் சொல்லக் கூடிய வேத-பாகம் மட்டுமே போதுமே! ஆகையால், எப்படி வேண்டுமானாலும் சிந்தனை செய்யலாம்.

பதில் - ஒரு வேதத்தில் ஒன்றை மட்டும் சொல்லியிருந்தாலும், அங்கே இரண்டையும் சொன்னதாகத்தான் கருத்து! ஏனெனில், உபாயனம் என்பது, ஹாநிக்கு சேஷம் (அங்கம்) ஆகும்; புண்யபாபத்தை விட்டாலும், அது மற்றவரிடம் போயிற்று என்பது ஆனாலே, நன்கு விட்டுவிட்டதாக ஆகும்; ஹாநியும் உபாயனமும் ஒன்றுக்கொன்று தொடர்பு அற்றதாக இருந்தால், அப்போது ஒன்றைச் சொன்னால், மற்றதைச் சொன்னதாக ஆகாது; ஆனால், இரண்டும் அங்கம்-அங்கி எனும் தொடர்பில் இருப்பதால், ஒன்றைச் சொன்னால் மற்றதையும் சொன்னதாக ஆகும். ஆகவே, எல்லாரும் இரண்டையும் சிந்திக்க வேண்டும்.

(உ.ம்)- 1. திருமண் இடவும் என்று சொன்னால், திருமண்-ஸ்ரீசூர்ணம் இரண்டையும் இடவும் என்று சொன்னதாக கணக்கு; ஏனெனில், ஸ்ரீசூர்ணம் இடுதல் என்பது திருமண் இடுதலுக்கு சேஷம் ஆகும்; எனவே, ஒன்றைச் சொன்னால், இரண்டையும் சொன்னதாக ஆகும்; அதுபோல இங்கும்.

கேள்வி-ஹாநி-வாக்யமும் உபாயன-வாக்யமும்வெவ்வேறு ஶாகைகளில் இருப்பதால், ஒரு வாக்யமாக ஆகாது;அங்கம்-அங்கி தொடர்பு எப்படி வரும்?

பதில் - அப்படி வெவ்வேறு ஶாகைகளில் இருந்தாலும் ஒரு வாக்யம் ஆகலாம். அங்கம்-அங்கி தொடர்பு வரலாம்; இதற்கு நான்கு உதாஹரணங்கள் இங்கே ஸூத்ரத்தில் சொல்கிறார்.

९३. हान्यधिकरणम् (३-३-११)

३८०.हानौ तूपायनशब्दशेषत्वात् कुशाच्छन्दस्स्तुत्युपगानवत् तदुक्तम् (३-३-२६)

- छन्दोगा आमनन्ति - **"अश्व इव रोमाणि विधूय पापं चन्द्र इव राहोर्मुखात् प्रमुच्य। धूत्वा शरीरमकृतं कृतात्मा ब्रह्मलोकमभिसम्भवामि"** (छा.8-13-1)[1] इति।
- आथर्वणिकाश्च, **"तदा विद्वान् पुण्यपापे विधूय निरञ्जनः परमं साम्यमुपैति"** (मु.3-1-3)[2] इति।
- शाठ्यायनिनस्तु **"तस्य पुत्रा दायमुपयन्ति सुहृदः साधुकृत्यां द्विषन्तः पापकृत्याम्"** (शा.श्रु.)[3] इत्यादि।
- कौषीतकिनस्तु, **"तत् सुकृतदुष्कृते धूनुते तस्य प्रिया ज्ञातयः सुकृतमुपयन्ति अप्रिया दुष्कृतम्"** (कौ.1-4)[4] इति।

एवं क्वचित् पुण्यपापयोर्हानिः, क्वचित् प्रियाप्रियेषु तत्प्राप्तिः, क्वचिदुभयं च श्रुतम्। तदुभयमेकैकविद्यायां श्रुतमपि सर्वविद्याङ्गमास्थेयम्, सर्वब्रह्मविद्यानिष्ठस्यापि ब्रह्म प्राप्नुवतः

---

93. ஹாந்யதிகரணம் (3-3-11)

380.ஹாநௌ தூபாயநஶப்தஶேஷத்வாத் குஶாச்சந்த:ஸ்துத்யுபகாநவத் ததுக்தம் (3-3-26)

- சந்தோகா ஆமநந்தி - *"அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய। தூத்வா ஶரீரமக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபிஸம்பவாமி"* (சா.8-13-1)[1] இதி।
- ஆதர்வணிகாஶ்ச, *"ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி"* (மு.3-1-3)[2] இதி।
- ஶாட்யாயநிநஸ்து *"தஸ்ய புத்ரா தாயமுபயந்தி ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம் த்விஷந்த: பாபக்ருத்யாம்"* (ஶா.ஶ்ரு.)[3] இத்யாதி।
- கௌஷீதகிநஸ்து, *"தத் ஸுக்ருததுஷ்க்ருதே தூநுதே தஸ்ய ப்ரியா ஜ்ஞாதய: ஸுக்ருதமுபயந்தி அப்ரியா துஷ்க்ருதம்"* (கௌ.1-4)[4] இதி।

ஏவம் க்வசித் புண்யபாபயோர்ஹாநி:, க்வசித் ப்ரியாப்ரியேஷு தத்ப்ராப்தி:, க்வசிதுபயம் ச ஶ்ருதம்। ததுபயமேகைகவித்யாயாம் ஶ்ருதமபி ஸர்வவித்யாங்கமாஸ்தேயம், ஸர்வப்ரஹ்மவித்யாநிஷ்டஸ்யாபி ப்ரஹ்ம

93.ஹாந்யதிகரணம்(3-3-11)

380.ஹாநௌ து உபாயனஶப்த-ஶேஷத்வாத் குசா-சந்தஸ்-ஸ்துத்யுபகானவத் தத் உக்தம்(3-3-26)

உபாயனவாக்யம்[ஹானிவாக்யத்துக்கு] சேஷமாவதால், ஹானியில்[உபாயனமும் ஆகும்]; குசா, சந்தஸ், ஸ்துதி, உபகானம் ஆகியவற்றில் போல [வாக்ய-சேஷம் ஆகலாம்]; அது [பூர்வமீமாம்ஸாவில்] சொல்லப்பட்டது.

விஷயவாக்யம்

- சந்தோகர்கள் ஓதுகின்றனர் - [1]**“குதிரை ரோமங்களை விடுவது போல புண்யபாப-கர்மத்தை விட்டு, சந்த்ரன் ராஹூவின் வாயிலிருந்து விடுபட்டு இருப்பதுபோல, ஶரீரத்தை விட்டுவிட்டு,செய்யவேண்டியதை செய்து முடித்தவனாய்,நித்யமான ப்ரஹ்மமாகிறலோகத்தை அடைகிறேன்”** என்று.
- அதர்வணவேதத்தினரும் - [2]**“அப்போது உபாஸனம் செய்பவன் புண்யபாபங்களை விட்டு, கர்ம-தொடர்பு அற்றவனாய் (ப்ரஹ்மத்துடன்)மிகவும் சமமான தன்மையை அடைகிறான்”** என்று ஓதுகின்றனர்.
- சாட்யாயனிகளோ, [3]**“அந்த ஜ்ஞானியின் புத்ரர்கள் உரிமையான பங்கினை அடைவர்; நண்பர்கள் புண்யத்தை அடைவர்; த்வேஷிகள் பாபத்தை அடைவர்”** முதலியதை ஓதுகின்றனர்.
- கௌஷீதகியினரோ, [4]**“அப்போது புண்யபாபங்களை விடுகிறான்; அவனுக்கு ப்ரியமான உறவினர் புண்யத்தை அடைகின்றனர்; த்வேஷிகள் பாபத்தை அடைகின்றனர்”** என்று ஓதுகின்றனர்.

இப்படியாக வேதத்தில்-

1. சில இடங்களில் (சாந்தோக்யத்திலும் அதர்வண வேதத்திலும்) புண்யபாபங்களை விடுதல் சொல்லப்பட்டது;
2. ஒரு இடத்தில் (சாட்யாயனத்தில்) அந்த புண்ய-பாபம் அன்பர்களிடமும் த்வேஷிகளிடமும் சென்றடைவது சொல்லப்பட்டது;
3. ஒரு இடத்தில் (கௌஷீதகியில்) இரண்டும் (புண்யபாபங்களை விடுதலும், அவை மற்றவரைச் சென்றடைதலும் ஆகிய இரண்டும்) சொல்லப் பட்டது.

இந்த இரண்டும் ஒவ்வொரு வித்யையில் ஓதப்பட்டது ஆனாலும், எல்லா வித்யைக்கும் தேவையானதாக ஏற்க வேண்டும்; ஏனெனில், எல்லா ப்ரஹ்ம-வித்யையை அனுஷ்டானம் செய்பவருக்கும் ப்ரஹ்மத்தை அடைபவராய் புண்ய-

पुण्यपापप्रहाणस्यावश्यम्भावित्वात्, प्रहीणविषयत्वाच्चोपायनस्य। तच्चिन्तनं च विधीयमानं सर्वविद्याङ्गं भवितुमर्हति॥

तत्रेदं विचार्यते - हानिचिन्तनमुपायनचिन्तनमुभयचिन्तनं च विकल्प्ये(ल्पे)रन्, उपसंह्रियेरन् वा।

किं युक्तम्? विकल्प्ये(ल्पे)रन्निति। कुतः? पृथगाम्नानसामर्थ्यात्। समुच्चये हि सर्वत्रोभयानुसन्धानं स्यात्, तच्च कौषीतकिवाक्येनैव सिद्धमित्यन्यत्राम्नानमनर्थकमेव स्यात्। अतोऽनेकत्राम्नानस्य विकल्प एव प्रयोजनम्।

न चाध्येतृभेदेन परिहर्तुं शक्यमनेकत्राम्नानम्। अविशेषपुनश्श्रवणं ह्यध्येतृभेदपरिहार्यम्। अत्र तु हानिरेव द्वयोः शाखयोः; उपायनमेव चैकस्याम्।

न च विद्याभेदेन व्यवस्थापयितुं शक्यम्, सर्वशेषभूतमिदमनुसन्धानमित्युक्तत्वात्।

ப்ராப்நுவத: புண்யபாபப்ரஹாணஸ்ய அவஶ்யம்பாவித்வாத், ப்ரஹீணவிஷயத்வாச்ச உபாயநஸ்ய। தச்சிந்தநம் ச விதீயமாநம் ஸர்வவித்யாங்கம் பவிதுமர்ஹதி।।

தத்ரேதம் விசார்யதே - ஹாநிசிந்தநம் உபாயநசிந்தநம் உபயசிந்தநம் ச விகல்ப்யே(ல்பே)ரந், உபஸம்ஹியேரந் வா।

கிம் யுக்தம்? விகல்ப்யே(ல்பே)ரந்நிதி। குத:? ப்ருதகாம்நாநஸாமர்த்யாத்। ஸமுச்சயே ஹி ஸர்வத்ர உபயாநுஸந்தாநம் ஸ்யாத், தச்ச கௌஷீதகிவாக்யேநைவ ஸித்தமிதி அந்யத்ராம்நாநம் அநர்தகமேவ ஸ்யாத்। அத: அநேகத்ராம்நாநஸ்ய விகல்ப ஏவ ப்ரயோஜநம்।

ந ச அத்யேத்ருபேதேந பரிஹர்தும் ஶக்யம் அநேகத்ராம்நாநம்। அவிஶேஷபுநஶ்ஶ்ரவணம் ஹி அத்யேத்ருபேதபரிஹார்யம்। அத்ர து ஹாநிரேவ த்வயோ: ஶாகயோ:, உபாயநமேவ சைகஸ்யாம்।

ந ச வித்யாபேதேந வ்யவஸ்தாபயிதும் ஶக்யம், ஸர்வஶேஷபூதம் இதமநுஸந்தாநமித்யுக்தத்வாத்।

பாபங்களை விடுதல் என்பது கட்டாயம் வரும்; (பிறரிடம்) அடைதல் என்பதும், விடுதலோடு ஸம்பந்தப் பட்டதால், கட்டாயம் வரும். அந்த இரண்டையும் சிந்தித்தல் என்பது விதிக்கப்படுகிறது; அந்த சிந்தனம் ஆனது, எல்லா வித்யைக்கும் அங்கமாக ஆகத் தகும்.

ஸந்தேஹம்

அதில் இது விசாரிக்கப் படுகிறது -

1. ஹாநியை (புண்யபாபங்களை விடுவதை) சிந்தித்தலும்,
2. உபாயனத்தை (வேறொருவரிடம் அவை சென்றடைதலை) சிந்தித்தலும்,
3. (ஹாநி, உபாயனம் எனும்) இரண்டையும் சிந்தித்தலும் -

விகல்பமாக வருமா? அல்லது உபஸம்ஹாரமாக சேர்ந்து வருமா?

✍*(விகல்பம்- இந்த மூன்றில் ஏதாவது ஒன்றன் படி, ஹாநி மட்டுமோஅல்லது உபாயனம் மட்டுமோ, அல்லது இரண்டையுமோ இஷ்டப்படி சிந்தித்தல் சரியா?*

உபஸம்ஹாரம் - அல்லது ஹானியும் உபாயனமும் என இரண்டையும் சேர்த்து எல்லா வித்யையிலும் சிந்திக்க வேண்டுமா?)✍

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? விகல்பமாக ஆகும் என்பது; ஏன்? தனியாக வேதத்தில் சொன்னபடியால்.

(மூன்று சிந்தனமும்) சேர்த்து வருமானால், எல்லா இடத்திலும் (ஹாநி, உபாயனம் எனும்) இரண்டையும் எண்ணுதல் வரும்; அது கௌஷீதகீ-வாக்யத்தாலேயே ஏற்படுவதால், பிற இடங்களில் இதை சொன்னது பயனற்றதாகவே ஆக நேரிடும்; ஆகையால் பல இடங்களில் வேதத்தில் சொன்னதற்கு பயன் விகல்பம்தான் (ஏதாவது ஒன்றை எடுத்துக் கொள்ளுதல்) ஆகும்.

ஶங்கை - அத்யயனம் செய்பவர் வெவ்வேறாவதால், (அந்தந்த ஶாகையினர் தெரிந்து கொள்வதற்காக) பல இடங்களில் சொன்னது (வீணாகாமல்) பரிஹரிக்க முடியும்.

பதில் - அதுவும் கிடையாது; ஏனெனில், (ஒரு ஶாகையில் சொன்னதை) ஒரு வித்யாசமும் இல்லாமல் அப்படியே மீண்டும் (வேறொரு ஶாகையில்) சொல்லுதல் என்பதுதான், அத்யயனம் செய்பவர் வெவ்வேறாவதால் பரிஹரிக்க முடியும்; இங்கோ ஹாநி (புண்யபாபங்களை விடுதல்) மட்டுமே இரு ஶாகைகளில் சொல்லியுள்ளது; உபாயனம் (வேறொருவரிடம் சென்றடைதல்) மட்டுமே ஒரு ஶாகையில் உள்ளது.

ஶங்கை - வித்யை வெவ்வேறாவதால் (அந்தந்த வித்யைியில் அந்தந்த சிந்தனம் என்று) வரையறுக்க முடியும்.

பதில் - அதுவும் கிடையாது; ஏனெனில், இந்த சிந்தனம் ஆனது எல்லா வித்யைக்கும் அங்கமாகும் என்று சொல்லியாயிற்று.

अत्रेदमुच्यते - **हानौ तूपायनशब्दशेषत्वात्** इति। **तुशब्दः** पक्षं व्यावर्तयति। हानाविति प्रदर्शनार्थम्। केवलायां हानौ केवले चोपायने श्रूयमाणे तयोरितरेतरसमुच्चयोऽवश्यम्भावी। कुतः? **उपायनशब्दशेषत्वात्** - उपायनशब्दस्य हानिवाक्यशेषत्वात्। उपायनवाक्यस्य हि हानिवाक्यशेषत्वमेवोचितम्, विदुषा त्यक्तयोः पुण्यपापयोः प्रवेशस्थानवाचित्वादुपायनवाक्यस्य॥

प्रदेशान्तराम्नातस्य वाक्यस्य प्रदेशान्तराम्नातवाक्यशेषत्वे दृष्टान्ता उपन्यस्यन्ते - **कुशाच्छन्दस्स्तुत्युपगानवदि**ति।

कालापिनः, ''**कुशा वानस्पत्याः**''(?)[1] इत्यामनन्ति। शाट्यायनिनां तु ''**औदुम्बर्यः कुशाः**''(?)[2] इति वाक्यं सामान्येन वानस्पत्यत्वेनावगताः कुशाः औदुम्बर्य इति विशिंषत् तद्वाक्यशेषतामापद्यते।

तथा, ''**देवासुराणां छन्दोभिः**''(?)[3] इत्यादिना अविशेषेण देवासुराणां छन्दसां प्रसङ्गे, (पैङ्गि) ''**देवच्छन्दांसि पूर्वम्**''(?)[4] इति वचनं क्रमविशेषं प्रतिपादयत् तद्वाक्यशेषतां गच्छति।

அத்ரேதமுச்யதே - *ஹாநௌ தூபாயநஶப்தஶேஷத்வாத்* - இதி। **துஶப்த:** பக்ஷம் வ்யாவர்தயதி। ஹாநாவிதி ப்ரதர்ஶநார்தம்। கேவலாயாம் *ஹாநௌ* கேவலே சோபாயநே ஶ்ரூயமாணே தயோரிதரேதரஸமுச்சய: அவஶ்யம்பாவீ। குத:? *உபாயநஶப்தஶேஷத்வாத்* - உபாயநஶப்தஸ்ய ஹாநிவாக்யஶேஷத்வாத்। உபாயநவாக்யஸ்ய ஹி ஹாநிவாக்யஶேஷத்வமேவ உசிதம், விதுஷா த்யக்தயோ: புண்யபாபயோ: ப்ரவேஶஸ்தாநவாசித்வாத் உபாயநவாக்யஸ்ய।।

ப்ரதேஶாந்தராம்நாதஸ்ய வாக்யஸ்ய ப்ரதேஶாந்தராம்நாதவாக்யஶேஷத்வே த்ருஷ்டாந்தா உபந்யஸ்யந்தே - *குஶாச்சந்தஸ்ஸ்துத்யுபகாநவத்* இதி।

காலாபிந:, *"குஶா வாநஸ்பத்யா:"*(?)[1] இத்யாமநந்தி। ஶாட்யாயநிநாம் து *"ஔதும்பர்ய: குஶா:"*(?)[2] இதி வாக்யம் ஸாமாந்யேந வாநஸ்பத்யத்வேநாவகதா: குஶா: ஔதும்பர்ய இதி விஶிம்ஷத் தத்வாக்யஶேஷதாமாபத்யதே।

ததா, *"தேவாஸுராணாம் சந்தோபி:"*(?)[3] இத்யாதிநா அவிஶேஷேண தேவாஸுராணாம் சந்தஸாம் ப்ரஸங்கே, (பௌங்கி) *"தேவச்சந்தாம்ஸி பூர்வம்"* (?)[4] இதி வசநம் க்ரமவிஶேஷம் ப்ரதிபாதயத் தத்வாக்யஶேஷதாம் கச்சதி।

ஸித்தாந்தம்

இந்த பூர்வபக்ஷத்தில், இந்த ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது - **''ஹாநௌ து உபாயந ஶப்த ஶேஷத்வாத்''** என்று.

'து' என்ற சொல் பூர்வபக்ஷத்தைக் களைகிறது.

'ஹாநௌ' என்பது (உபாயனத்தையும்) எடுத்துக் காட்டுவதற்காக ஆகும்.

ஹாநௌ - ஹாநி மட்டுமோ, உபாயனம் மட்டுமோ வேதத்தில் சொல்லப்படும் போது

அவற்றை ஒன்றுக்கொன்று சேர்த்துக் கொள்ளுதல் கட்டாயம் ஆக வேண்டும்.

ஏன்?

உபாயன ஶப்தஶேஷத்வாத் - உபாயன வாக்யமானது, ஹாநிவாக்யத்துக்கு சேஷமாக ஆவதால்.

உபாயன வாக்யமானது, ஹாநிவாக்யத்துக்கு சேஷமாக ஆகும் என்பதே தகுந்ததாகும்; ஏனெனில், உபாஸநம் செய்தவனால் விடப்பட்ட புண்யபாபங்கள் சேருமிடத்தை உபாயனவாக்யம் சொல்கிறது.

✍*(ஜ்ஞானிக்கு புண்யபாபங்களை விடுதல்தான் முக்யமான பலன் ஆகும்; அது எங்கே சென்றடைகிறது என்பது தேவையில்லை; ஆனாலும், அது விடுபட்டதை உறுதியாக்க உபாயனம் - வேறொருவரிடம் சென்றடைதல் உபயோகப்படும்; எனவே, ஹாநி-வாக்யத்துக்கு உபாயன-வாக்யம் சேஷம் ஆகும்; அதாவது ஹாநிவாக்யத்தில் மீதமுள்ள பகுதிதான் உபாயன-வாக்யம்; இரண்டும் தனித்தனி வாக்யமல்ல; ஒரே வாக்யம்தான் என்று கருத்து).*✍

வேறு இடத்தில் ஓதப்பட்ட வாக்யங்கள் மற்றோரிடத்தில் ஓதப்பட்ட வாக்யத்துக்கு சேஷமாக ஆகலாம் (அப்படி இரண்டையும் சேர்த்து ஒரு வாக்யமாக கருதலாகும்) என்பதற்கு உதாஹரணங்கள் சொல்லப் படுகின்றன -

குஶா-சந்தஸ்-ஸ்துத்யுபகாநவத் (குஶா, சந்தஸ், ஸ்துதி, உபகாநம் என்றிவற்றில் போலே) - என்று.

- குசா (யாகத்தில் ரிக்-மந்த்ரங்களைப் பாடும்போது எண்ணுவதற்காக உபயோகப்படும் குச்சி) -

காலாபிகள் (ஒரு ஶாகையினர்) [1]**''குசா என்பவை மரத்தினால் ஆனவை''** என்று ஓதுகின்றனர்; சாட்யாயனிகளுடைய வாக்யம் [2]**''குசா என்பவை அத்திமரத்தால் ஆனவை''** என்றுள்ளது; இந்த வாக்யமானது, பொதுவாக மரத்தாலானவை என்பதாக அறியப்பட்ட குசா என்பவற்றை அத்திமரத்தாலானவை என்று விஶேஷமாக குறிப்பதால் அந்த வாக்யத்துக்கு ஶேஷமாக ஆகும் தன்மையை அடைகிறது.

- சந்தஸ் (வேதமந்த்ரம்)-

அப்படியே, [3]**''தேவர்களைப் பற்றியவையும், அசுரர்களைப் பற்றியவையுமான சந்தஸ்களைக் கொண்டு''** முதலியதால், (முன்-பின் வரிசையாகிற) விசேஷம் எதுவும் இல்லாமல் தேவ-அசுர-சந்தஸ்கள் வர நேரிடுகிறது; அப்போது, [4]**''முன்னம் தேவ-சந்தஸ்கள்''** எனும் வாக்யமானது, விசேஷமான வரிசையை அறிவிப்பதாய், அந்த வாக்யத்துக்கு சேஷமாக ஆகும் தன்மையை அடைகிறது.

तथा, **“हिरण्येन षोडशिनः स्तोत्रमुपाकरोति”**(?)[1] इत्यविशेषेण प्राप्ते, **“समयाविषिते सूर्ये षोडशिनः स्तोत्रमुपाकरोति”**(तै.सं.6-5-11)[2] इति विशेषविषयं वाक्यं तद्वाक्यशेषतां भजते।

तथा, **“ऋत्विज उपगायन्ति”**(?)[3] इत्यविशेषप्राप्तस्य, **“नाध्वर्युरुपगायेत्”** (तै.सं.6-3-1)[4] इति वाक्यमनध्वर्युविषयतामवगमयत् तद्वाक्यशेषत्वमृच्छति॥

एवं सामान्येनावगतमर्थं विशेषे व्यवस्थापयितुं क्षमस्य वाक्यस्य तच्छेषत्वमनभ्युपगच्छद्भिस्तयोरर्थयोर्विकल्पः समाश्रयितव्यः। स च सम्भवन्त्यां गतौ न युज्यते। तदुक्तं पूर्वस्मिन् काण्डे, **“अपितु वाक्यशेषः स्यात् अन्याय्यत्वाद्विकल्पस्य, विधीनामेकदेशः स्यात्”**(पू.मी.सू.10-8-4)[5] इति।

तदेवं केवलहानोपायनवाक्ययोरेकवाक्यत्वात्, केवलस्य हानस्य केवलस्य चोपायनस्याभावात् विकल्पो नोपपद्यते। कौषीतकिनामुभयाम्नानमविशेषपुनश्श्रवणत्वेन प्रतिपत्तृभेदादविरुद्धम्॥ २६ ॥

इति हान्यधिकरणम् ॥ ११ ॥

ததா, *“ஹிரண்யேந ஷோடஶிந: ஸ்தோத்ரமுபாகரோதி”*(?)[1] இத்யவிஶேஷேண ப்ராப்தே, *“ஸமயாவிஷிதே ஸூர்யே ஷோடஶிந: ஸ்தோத்ரமுபாகரோதி”* (தை.ஸம்.6-5-11)[2] இதி விஶேஷவிஷயம் வாக்யம் தத்வாக்யஶேஷதாம் பஜதே।

ததா, *“ருத்விஜ உபகாயந்தி”*(?)[3] இதி அவிஶேஷப்ராப்தஸ்ய, *“நாத்வர்யுருபகாயேத்”*(தை.ஸம்.6-3-1)[4] இதி வாக்யம் அநத்வர்யுவிஷயதாம் அவகமயத் தத்வாக்யஶேஷத்வம்ருச்சதி।।

ஏவம் ஸாமாந்யேநாவகதமர்தம் விஶேஷே வ்யவஸ்தாபயிதும் க்ஷமஸ்ய வாக்யஸ்ய தச்சேஷத்வமநப்யுபகச்சத்பி: தயோரர்தயோ: விகல்ப: ஸமாஶ்ரயிதவ்ய:। ஸ ச ஸம்பவந்த்யாம் கதௌ ந யுஜ்யதே। ததுக்தம் பூர்வஸ்மிந் காண்டே, *“அபிது வாக்யஶேஷ: ஸ்யாத் அந்யாய்யத்வாத் விகல்பஸ்ய, விதீநாமேகதேஶ: ஸ்யாத்”* (பூ.மீ.ஸூ.10-8-4)[5] இதி।

ததேவம் கேவலஹாநோபாயநவாக்யயோ: ஏகவாக்யத்வாத், கேவலஸ்ய ஹாநஸ்ய கேவலஸ்ய சோபாயநஸ்ய அபாவாத் விகல்போ நோபபத்யதே। கௌஷீதகிநாம் உபயாம்நாநம் அவிஶேஷபுந:ஶ்ரவணத்வேந ப்ரதிபத்த்ருபேதாத் அவிருத்தம்।। 26 ।।

இதி ஹாந்யதிகரணம் ।। 11 ।।

- ஸ்துதி (ஸ்தோத்ரம்- மந்த்ரங்களைப் பாடி யாகத்தில் புகழ்தல்)

  அப்படியே, [1]**''ஸ்வர்ணத்தையிட்டு, ஷோடசி எனும் க்ரஹத்தின் ஸ்தோத்ரத்தைத்தொடக்கி வைக்கிறான்''** என்று (கால)விசேஷம் இல்லாமல் வர நேருகிறது; அப்போது, [2]**''ஸூர்யன் பாதி மறையும் போது ஷோடசியின் ஸ்தோத்ரத்தைத் தொடக்கி வைக்கிறான்''** எனும் வாக்யமானது (கால)விசேஷத்தைப் பற்றியதாக ஆவதாய், அந்த வாக்யத்துக்கு சேஷமான தன்மையை அடைகிறது.

- உபகானம் (பின்பாட்டு - யாகத்தில் உத்காதா ஸ்துதி செய்யும் போது ரித்விக்கள் 'போ' என்று பின்பாட்டு இசைத்தல்)-

  அப்படியே, [3]**''ருத்விக்கள் உபகானம் செய்வர்''** என்று விசேஷம் இல்லாமல் (எல்லா ரித்விக்களுக்கும்)வரநேரிடும்; ஆனால், அது, அத்வர்யு தவிர பிற ருத்விக்களைப் பற்றியது என்பதாக, [4]**''அத்வர்யு உபகானம் செய்ய வேண்டாம்''** எனும் வாக்யம் அறிவிக்கிறது; அப்படியாக, அந்த பொதுவான வாக்யத்துக்கு சேஷமாக ஆதலை இந்த விசேஷவாக்யம் அடைகிறது.

இப்படி பொதுவாக அறிந்த விஷயத்தை விசேஷத்தில் வரையறுக்க தகுந்த வாக்யமானது, அந்த பொதுவான வாக்யத்துக்கு சேஷமாகும்;(இரண்டும் சேர்த்து ஒரே வாக்யமாக ஒரே பொருளைச் சொல்லும்). இதனை ஒப்புக் கொள்ளாதவர்களால் அந்த இரு பொருள்களுக்கும் விகல்பம் (ஏதாவது ஒன்றை விருப்பப்படி ஏற்றுக் கொள்ளுதல்) சார்ந்திருக்கப்பட வேண்டும்; வேறு வழி இருக்கும்போது விகல்பத்தை ஏற்பது என்பது தகாது; அது முன் காண்டத்தில் (பூர்வமீமாம்ஸா ஶாஸ்த்ரத்தில்) சொல்லப்பட்டது - [5]**''விகல்பம் ஆனது முறையற்றது என்பதால், வாக்யத்துக்கு சேஷமாக ஆவதால், விதிகளுடையஒரு பாகமாக ஆகும்''** என்று.

எனவே, இப்படியாக, ஹானம் மட்டுமோ, உபாயனம் மட்டுமோ பற்றிய வாக்யங்கள் ஒரே வாக்யமாக ஆவதால், ஹானம் மட்டுமோ, உபாயனம் மட்டுமோ கிடையாது; அதனால், (ஏதாவது ஒன்று ஆகலாம் எனும்) விகல்பம் பொருந்தாது. கௌஷீதகிகள் இரண்டையும் சொன்னதானது, வித்தியாசமின்றி திரும்பச் சொல்வதாக ஆவதால், அறிபவர் வேறாவதால் ஆகும்; (அந்த ஶாகையை அத்யயனம் செய்பவர் அறிவதற்காக சொன்னதாகும்); ஆகையால், முரண்பாடு இல்லை.

* * *

ஹாந்யதிகரணம் முற்றிற்று.

94.ஸாம்பராயாதிகரணம்(3-3-12)

முன் குறிப்பு

உபாஸநம் செய்தவனுக்கு புண்யபாப கர்மங்கள் எப்போது அழியும் என்று விசாரம்.

பூர்வபக்ஷம் - ஶரீரத்தைப் பிரியும்போது, பெரும்பகுதி அழியும்; பின்னர் அர்ச்சிராதி-வழியில் போகும்போது, விரஜாநதிக் கரையில் மீதி பகுதி அழியும்; வேதத்தில் இருவிதமாகவும் சொல்லியிருப்பதால் அப்படி ஏற்க வேண்டும்.

ஸித்தாந்தம் - ஶரீரத்தை விட்டுப் பிரியும்போதே மொத்த கர்மமும் அழிந்துவிடும்; ஏனெனில், கர்மம் மீதி இருக்குமானால், அதன் பலனாக சுகதுக்கம் வர நேரிடும்; இவனுக்கோ, அனுபவிக்க வேண்டிய ப்ராக்ருதமான சுகதுக்கம் எதுவும் கிடையாது; எனவே, மொத்தமும் அப்போதே அழிந்து விடும்.

ஒருவேத-வாக்யத்தில், ''விரஜா நதியைக் கடக்கிறான்; புண்யபாபங்களை விடுகிறான்'' என்று உள்ளது; அதில்,''புண்யபாபங்களை விடுகிறான்'' என்பதை முன்னமேயே கூட்டி சேர்த்து பொருள் சொல்லிக் கொள்ள வேண்டும்; ஏனெனில், பிற வேத வாக்யங்களில் அப்படி சொல்வதாலும்; அதுவே பொருந்தி இருப்பதாலும்.

கேள்வி -எல்லா கர்மமும் ஶரீர-முடிவில்தொலைந்து விட்டால், ஸூக்ஷ்மஶரீரம் கூட இருக்க முடியாது; பின்னர் ஜீவன் எப்படி அர்ச்சிராதி-பாதையில் செல்ல முடியும்? (ஜீவன் செல்ல வேண்டுமானால், ஜ்ஞாநம், இச்சை, ப்ரயத்னம் ஆகியவை வேண்டும்; அவையெல்லாம் ஶரீரம் இருந்தால்தான் உண்டாகும்).

பதில் -கர்மம் அழியும் போது, ஶரீரம் அழியும்; அப்போதே ஶரீரத்தின் ஒரு பகுதியான ஸூக்ஷ்மஶரீரமும் அழிய வேண்டும்; ஆனால், வித்யையானது, அதனை அழியாமல் நிறுத்திவிடும். பின்னர் தேவயானவழியில் ஜீவன் செல்வதற்கு உபயோகமாக இதனைப் பாதுகாக்கும்; வித்யையானது ஶரீரத்தை உண்டாக்காது; ஆனால், தனக்குத் தேவையான ஸூக்ஷ்ம ஶரீரத்தை நிலை நிறுத்தி வைக்கும்.

எனவே, மொத்த கர்மமும் ஶரீர முடிவிலேயே அழிந்து விடும்.

இங்கு ஸ்ரீதேசிகன் ஸாதிக்கும் ஸூக்ஷ்மமான வேறொரு விஷயம் - சுகதுக்கங்களுக்கு காரணமான கர்மங்கள் மொத்தமும் ஶரீரமுடிவில் தொலையும்; ஆனாலும், ஜீவனுக்கு இயல்பான அபஹதபாப்மத்வம் முதலியதான ஸ்வரூபமும், ஸர்வஜ்ஞனாதல் முதலியதும் ஶரீரமுடிவில் வெளிப்படுவ- தில்லை; அதெல்லாம், பரமாத்மாவை அடைந்த பின்னரே வெளிப்படும்; அதுவரை அதற்கு தடையான கர்ம-வாஸனை இருக்கும்; கர்ம-வாஸனை என்பது, பகவானின் நிக்ரஹ- ஸங்கல்பம்தான்.

९४. साम्परायाधिकरणम् (३-३-१२)

३८१. साम्पराये तर्तव्याभावात् तथा ह्यन्ये (३-३-२७)

सुकृतदुष्कृतयोर्हानमुपायनं च सर्वासु विद्यासु चिन्तनीयमित्युक्तम्। तद्धानं किं देहवियोगकाले देहादुत्क्रान्तस्याध्वनि च, उत देहवियोगकाल एवेति विशये,

उभयत्रेति युक्तम्, उभयधा(था) श्रुतत्वात्।

- एवं हि कौषीतकिनः समानन्ति, "**स एतं देवयानं पन्थानमापद्याग्निलोकमागच्छति**"(कौ.1-21)[1] इत्युपक्रम्य, "**स आगच्छति विरजां नदीम्। तां मनसाऽत्येति। तत् सुकृतदुष्कृते धूनुते**"(कौ.1-37)[2] इति। अत्र वाक्ये अध्वनि सुकृतदुष्कृतहानिः प्रतीयते।
- ताण्डिनस्तु, "**अश्व इव रोमाणि विधूय पापं चन्द्र इव राहोर्मुखात् प्रमुच्य। धूत्वा शरीरमकृतं कृतात्मा ब्रह्मलोकमभिसम्भवामि**" (छा.8-1-13)[3] इति। अत्र तु देहवियोगकाले इति प्रतीयते।
- शाठ्यायनकेऽपि, "**तस्य पुत्रा दायमुपयन्ति, सुहृदः साधुकृत्याम्, द्विषन्तः पापकृत्याम्**"(शा.श्रु.)[4] इति पुत्रेषु दायसङ्क्रान्तिसमकालं सुकृतदुष्कृतसंक्रमणं श्रूयमाणं देहवियोगकाले इति गम्यते।

---

94. ஸாம்பராயாதிகரணம் (3-3-12)

381. ஸாம்பராயே தர்தவ்யாபாவாத் ததா ஹ்யந்யே (3-3-27)

ஸுக்ருததுஷ்க்ருதயோ: ஹாநமுபாயநம் ச ஸர்வாஸு வித்யாஸு சிந்தநீயமித்யுக்தம்। தத்தாநம் கிம் தேஹவியோககாலே தேஹாதுத்க்ராந்தஸ்ய அத்வநி ச, உத தேஹவியோககால ஏவேதி விஶயே,

உபயத்ரேதி யுக்தம், உபயதா(தா) ஶ்ருதத்வாத்।

- ஏவம் ஹி கௌஷீதகிந: ஸமாநந்தி, *"ஸ ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்யாக்நிலோகமாகச்சதி"*(கௌ.1-21)[1] இத்யுபக்ரம்ய, *"ஸ ஆகச்சதி விரஜாம் நதீம்। தா மநஸாऽத்யேதி। தத் ஸுக்ருததுஷ்க்ருதே தூநுதே"*(கௌ.1-37)[2] இதி। அத்ர வாக்யே அத்வநி ஸுக்ருததுஷ்க்ருதஹாநி: ப்ரதீயதே।
- தாண்டிநஸ்து, *"அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய। தூத்வா ஶரீரமக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபிஸம்பவாமி"* (சா.8-1-13)[3] இதி। அத்ர து தேஹவியோககாலே இதி ப்ரதீயதே।
- ஶாட்யாயநகேऽபி, *"தஸ்ய புத்ரா தாயமுபயந்தி, ஸுஹ்ருத: ஸாதுக்ருத்யாம், த்விஷந்த: பாபக்ருத்யாம்"*(ஶா.ஶ்ரு)[4] இதி புத்ரேஷு தாயஸக்ராந்திஸமகாலம் ஸுக்ருததுஷ்க்ருதஸங்க்ரமணம் ஶ்ரூயமாணம் தேஹவியோககாலே இதி கம்யதே।

94.ஸாம்பராயாதிகரணம்(3-3-12)

381.ஸாம்பராயே தர்தவ்யாபாவாத் ததா ஹி அந்யே (3-3-27)

ஶரீரவியோக காலத்திலேயே [புண்யபாபங்கள் அழியும்]; அடைய வேண்டிய [சுகதுக்கபலன்] இல்லாதபடியால்; அப்படியே பிறர் [ஓதுவர்]

ஸங்கதி (விஷயதொடர்பு) & ஸந்தேஹம்

புண்யபாபங்களை விடுதலும், அவை வேறிடத்தில் சென்றடைதலும் எல்லா வித்யைகளிலும் எண்ணப் பட வேண்டும் என்று சொல்லியாயிற்று. புண்யபாபங்களை விடுதல் என்னுமது, ஶரீரத்தைப் பிரியும் காலத்திலும், ஶரீரத்திலிருந்து வெளியேறியவனுக்கு வழியிலும் (இருகாலங்களில்) ஆகும் என்பதா? அல்லது ஶரீரத்தைப் பிரியும் காலத்தில் மட்டுமா? என்று ஸந்தேஹம் வரும்போது,

பூர்வபக்ஷம்

இரு காலங்களிலும் ஆகும் என்பது தகும்; ஏனெனில், இரு விதமாகவும் வேதத்தில் சொல்லப்பட்டு உள்ளது.

- இப்படித்தானே கௌஷீதகிகள் ஓதுகின்றனர் - [1]**''அவன் இந்த தேவயானமார்க்கத்தை அடைந்து அக்னிலோகம் செல்கிறான்''** என்று ஆரம்பித்து, [2]**''அவன் விரஜாநதிக்கு வருகிறான்; அதை மனஸ்ஸாலேயே கடக்கிறான்; அப்போது புண்யபாபங்களை விடுகிறான்''** என்று; இந்த வாக்யத்தில், வழியில் புண்யபாபங்களை விடுதல் தெரிகிறது.
- தாண்டிகள் (ஸாமவேதத்தில் ஒரு ஶாகையினர்), [3]**''குதிரை ரோமங்களை விடுவது போல புண்யபாப-கர்மத்தை விட்டு, சந்த்ரன் ராஹுவின் வாயிலிருந்து விடுபடுவது போல விடுபட்டு, ஶரீரத்தை விட்டுவிட்டு, செய்யவேண்டியதை செய்து முடித்தவனாய்,நித்யமான ப்ரஹ்மமாகிறலோகத்தை அடைகிறேன்''** என்று ஓதுகின்றனர்; இங்குஶரீரத்தைப் பிரியும் காலத்தில் (புண்யபாபங்கள் அழியும்)என்பது தெரிகிறது.
- சாட்யாயனகத்திலும், [4]**''அந்த ஜ்ஞானியின் புத்ரர்கள் உரிமையான பங்கினை அடைவர்; நண்பர்கள் புண்யத்தை அடைவர்; த்வேஷிகள் பாபத்தை அடைவர்''** என்பதாக, புத்ரர்களிடம் சொத்து-பங்கு மாறிப்போகும் அதே காலத்தில் புண்யபாபங்கள் மாறிச்செல்வது ஓதப்படுகிறது; அது ஶரீரத்தைப் பிரியும் காலத்தில் என்பதாகத் தெரிகிறது.

अतः सुकृतदुष्कृतयोरेकदेशो देहवियोगकाले हीयते; शेषस्त्वध्वनि -

इति प्राप्ते उच्यते - साम्पराये इति। **साम्पराये** - देहादपक्रमणकाले एव विदुषः सुकृतदुष्कृते निरवशेषं हीयेते। कुतः? **तर्तव्याभावात्** - विदुषो देहवियोगात्पश्चात् सुकृतदुष्कृताभ्यां तरितव्यभोगाभावात्। विद्याफलभूतब्रह्मप्राप्तिव्यतिरेकेण हि सुकृतदुष्कृताभ्यां भोक्तव्ये सुखदुःखे न विद्येते। तथा ह्यन्ये देहवियोगादूर्ध्वं ब्रह्मप्राप्तिव्यतिरिक्तसुखदुःखोपभोगाभावमधीयते,

- **"अशरीरं वा व सन्तं न प्रियाप्रिये स्पृशतः"** (छा.8-12-1)[1],
- **"एष सम्प्रसादोऽस्माच्छरीरात् समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते"** (छा.8-12-2)[2],
- **"तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्येऽथ सम्पत्स्ये"** (छा.6-14-2)[3] इति॥२७॥

⁂

३८२.छन्दत उभयाविरोधात् (३-३-२८)

एवमर्थस्वाभाव्यात् सुकृतदुष्कृतहानिकालेऽवधृते सति, **उभयाविरोधेन** श्रुतेरर्थ-

---

அத: ஸுக்ருததுஷ்க்ருதயோரேகதேஶ: தேஹவியோககாலே ஹீயதே, ஶேஷஸ்து அத்வநி -

இதி ப்ராப்தே உச்யதே - *ஸாம்பராயே* இதி। *ஸாம்பராயே* - தேஹாதபக்ரமணகாலே ஏவ விதுஷ: ஸுக்ருததுஷ்க்ருதே நிரவஶேஷம் ஹீயேதே। குத:? *தர்தவ்யாபாவாத்* - விதுஷ: தேஹவியோகாத்பஶ்சாத் ஸுக்ருததுஷ்க்ருதாப்யாம் தரிதவ்யபோகாபாவாத்। வித்யாபலபூதப்ரஹ்மப்ராப்திவ்யதிரேகேண ஹி ஸுக்ருததுஷ்க்ருதாப்யாம் போக்தவ்யே ஸுகது:கே ந வித்யேதே। ததா ஹ்யந்யே தேஹவியோகாதூர்த்வம் ப்ரஹ்மப்ராப்திவ்யதிரிக்தஸுகது:கோபபோகாபாவமதீயதே,

- *"அஶரீரம் வா வ ஸந்தம் ந ப்ரியாப்ரியே ஸ்ப்ருஶத:"* (சா.8-12-1)[1]
- *"ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே"* (சா.8-12-2)[2],
- *"தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யேऽத ஸம்பத்ஸ்யே"* (சா.6-14-2)[3] இதி॥ 27 ॥

⁂

382.சந்தத உபயாவிரோதாத்(3-3-28)

ஏவம் அர்தஸ்வாபாவ்யாத் ஸுக்ருததுஷ்க்ருதஹாநிகாலே அவத்ருதே

ஆகையால், புண்யபாபங்களில் ஒரு பாகம் ஶரீரத்தை விட்டுப் பிரியும்போது அழியும்; மீதி பாகம் வழியில் அழியும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது - **'ஸாம்பராயே'** என்று.

ஸாம்பராயே - ஶரீரத்தை விட்டு வெளியேறும் காலத்திலேயே ஜ்ஞாநியினுடைய புண்யபாபங்கள் மீதியின்றி அழிகின்றன;

ஏன்?

தர்தவ்யாபாவாத் (அடைய வேண்டியது இல்லாத படியால்) - ஜ்ஞாநிக்கு ஶரீரத்தைப் பிரிந்தபின் புண்யபாபங்களைக் கொண்டு அடைய வேண்டிய போகம் இல்லாதபடியால்.

வித்யையின் பலனான ப்ரஹ்மத்தை அடைதல் என்பது தவிர, புண்யபாபங்களால் அனுபவிக்க வேண்டிய சுக-துக்கங்கள் எதுவும் இல்லைதானே!

ததா ஹி அந்யே (அப்படியே பிறர்) - அப்படியே பிறர், ஶரீரத்தைப் பிரிந்தபின் ப்ரஹ்மத்தை அடைதல் தவிர (வேறு) சுகதுக்க-அனுபவம் இல்லை என்பதை ஓதுகின்றனர் -

- [1]**''ஶரீரமில்லாமல் இருப்பவனை சுகதுக்கங்கள் தீண்டுவதில்லை''**
- [2]**''இந்த ஜீவன் இந்த ஶரீரத்திலிருந்து வெளியேறி, (உடனேயே) பர-ப்ரஹ்மத்தை அடைந்து, தன்ஸ்வரூபத்துடன் ஆகிறான்''**
- [3]**''அவனுக்கு எவ்வளவு காலம் (கர்மத்தால் விளைந்த ஶரீரத்திலிருந்து) விடுபடவில்லையோ, அவ்வளவே தாமதம்; பின்னர் உடனே (ப்ரஹ்மத்தை) அடைகிறான்''** - என்று.

◆ ◆ ◆ ◆

382.சந்தத: உபயாவிரோதாத்(3-3-28)

இரண்டுக்கும் முரண்பாடு இல்லாமல், இஷ்டப்படி [பதங்களுக்கு அன்வயம்] ஆகும்

இப்படியாக பொருளின் தன்மையை இட்டு, புண்யபாபங்கள் அழியும் காலம் தீர்மானிக்கப்பட்டது; இப்படியாகும் போது,

உபயாவிரோதாத் (இரண்டுக்கும் முரண்பாடு இல்லாமல் ஆவதற்காக) - வேதத்துக்கும் பொருள்-தன்மைக்கும் முரண்பாடு இல்லாமல்,

स्वभावस्य चाविरोधेन **छन्दतः** यथेष्टं पदानामन्वयो वर्णनीयः। कौषतकिवाक्ये, **''तत् सुकृतदुष्कृते धूनुते''**(कौ.1-37)[1] इति चरमश्रुतो वाक्यावयवः, **''एतं देवयानं पन्थानमापद्य''**(कौ.1-21)[2] इति प्रथमश्रुतावयवात् प्रागनुगमयितव्य इत्यर्थः॥ २८ ॥

◆

अत्र पूर्वपक्षी प्रत्यवतिष्ठते-

३८३.गतेरर्थवत्त्वमुभयथाऽन्यथा हि विरोधः (३-३-२९)

सुकृतदुष्कृतयोरेकदेशस्य देहवियोगकाले हानिः, शेषस्य च पश्चादिति **उभयधा** कर्मक्षये सत्येव **गतेरर्थवत्त्वम्**; देवयानगतिश्रुतेरर्थवत्त्वमित्यर्थः। **अन्यथा हि विरोधः** - देहवियोगकाल एव सर्वकर्मक्षये सूक्ष्मशरीरस्यापि विनाशः स्यात्; तथा सति केवलस्याऽऽत्मनो गमनं नोपपद्यते। अत उत्क्रान्तिसमये विदुषो निश्शेषकर्मक्षयो नोपपन्नः॥२९॥

◆

अत्रोत्तरम् -

३८४.उपपन्नस्तल्लक्षणार्थोपलब्धेर्लोकवत् (३-३-३०)

ஸதி, உபயாவிரோதேந ஶ்ருதே: அர்தஸ்வபாவஸ்ய சாவிரோதேந *சந்தத:* - யதேஷ்டம் பதாநாமந்வயோ வர்ணநீய:। கௌஷதகிவாக்யே, *''தத் ஸுக்ருததுஷ்க்ருதே தூநுதே''*(கௌ.1-37)[1] இதி சரமஶ்ருதோ வாக்யாவயவ:, *''ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்ய''*(கௌ.1-21)[2] இதி ப்ரதமஶ்ருதாவயவாத் ப்ராக் அநுகமயிதவ்ய: இத்யர்த:।। 28 ।।

◆

அத்ர பூர்வபக்ஷீ ப்ரத்யவதிஷ்டதே -

383. கதேரர்தவத்த்வமுபயதாऽந்யதா ஹி விரோத: (3-3-29)

ஸுக்ருததுஷ்க்ருதயோரேகதேஶஸ்ய தேஹவியோககாலே ஹாநி:, ஶேஷஸ்ய ச பஶ்சாதிதி **உபயதா** கர்மக்ஷயே ஸத்யேவ *கதேரர்தவத்த்வம்;* தேவயாநகதிஶ்ருதே: அர்தவத்த்வம் இத்யர்த:। *அந்யதா ஹி விரோத:* - தேஹவியோககால ஏவ ஸர்வகர்மக்ஷயே ஸூக்ஷ்மஶரீரஸ்யாபி விநாஶ: ஸ்யாத், ததா ஸதி கேவலஸ்ய ஆத்மந: கமநம் நோபபத்யதே। அத: உத்க்ராந்திஸமயே விதுஷோ நிஶ்ஶேஷகர்மக்ஷய: நோபபந்ந:।। 29 ।।

◆

அத்ரோத்தரம்-

384.உபபந்நஸ்தல்லக்ஷணார்தோபலப்தேர்லோகவத்(3-3-30)

உபபந்ந ஏவ உத்க்ராந்திகாலே ஸர்வகர்மக்ஷய:। கதம்? *தல்லக்ஷணார்-*

சந்தத: (விருப்பப்படி) - விருப்பப்படி பதங்களுக்கு அன்வயம் (முன்-பின் பதங்களுடன் சேர்த்தல்) வர்ணிக்கப்பட வேண்டும். கௌஷீதகீ-வாக்யத்தில் கடைசியில் சொல்லப்பட்ட வாக்ய-பகுதியான [1]**''அப்போது புண்யபாபங்களை விடுகிறான்''** என்பது, [2]**''இந்த தேவயான-வழியை அடைந்து''** என்று முதலில் சொன்ன வாக்ய-பகுதிக்கு முன் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று பொருள்.

✍(அத்யயனம் செய்யும் வாக்ய-வரிசையை மாற்றக் கூடாது; அர்த்தம் சொல்லும்போது அந்த வாக்ய-பகுதியை முன்னம் சேர்த்து எண்ணிக்கொண்டு அர்த்தம் சொல்ல வேண்டும் என்று கருத்து).✍

◆ ◆ ◆ ◆

இந்த விஷயத்தில் பூர்வபக்ஷம் செய்பவன் கேட்கிறான் -

383.(பூ)கதே: அர்த்தவத்த்வம் உபயதா அந்யதா ஹி விரோத:(3-3-29)

இரு விதமாக ஆனாலே, ஜீவன் செல்வதாகச் சொல்வது அர்த்தம் உள்ளதாகும்; இல்லையெனில், முரண்பாடு ஆகும்.

உபயதா (இருவிதமாக ஆனாலே) - புண்யபாபங்களில் ஒரு பகுதி, ஶரீரத்தைப் பிரியும்போது அழியும், மீதி பிறகு அழியும் என்று இருவிதமாக கர்மங்கள் அழிவதாக ஆனால்தான்,

கதே: - தேவயான வழியில் செல்வதைச் சொல்வதானது

அர்த்தவத்த்வம் - அர்த்தமுள்ளது ஆகும்;

அந்யதாஹி (வேறுவிதமானால்) - ஶரீரத்தைப் பிரியும் காலத்திலேயே எல்லா கர்மங்களும் அழிவதானால், ஸூக்ஷ்மஶரீரத்துக்கும் கூட அழிவு ஆகிவிடும்; அப்படியானால்,

விரோத: (பொருந்தாமை ஆகும்) - (ஶரீரம் இல்லாமல்) ஆத்மா மட்டும் செல்கிறது என்பது பொருந்திவராது.

✍(ஆத்மா செல்ல வேண்டுமானால், ஜ்ஞாநம், இச்சை, ப்ரயத்னம் தேவை; அதெல்லாம் ஶரீரம் இல்லாவிட்டால் வராது; எனவே, ஶரீரம் தேவை; அந்த ஶரீரம் நிலை நிற்பதற்காக கர்மம் தேவை; எனவே, கர்மத்தின் ஒரு சிறுபகுதி அழியாமல் உள்ளது; அது பின்னர் அழியும்)✍

ஆகையால், ஶரீரத்தை விட்டு வெளியேறும் சமயத்தில் கர்மங்கள் மீதமின்றி அழியும் என்பது சரியாகாது.

◆ ◆ ◆ ◆

இதற்கு பதில் -

384.உபபந்ந: தல்லக்ஷணார்த்தோபலப்தே: லோகவத்(3-3-30)

[கர்மங்கள்அழியப் பெற்றவனுக்கும்] ஶரீரஸம்பந்தம் ஆகிற விஷயம் தெரிவதால், [ஸூக்ஷ்மஶரீரம் இருக்கலாமாதலால், ஸ்தூலஶரீரம் அழியும்போதே] கர்மம் அழிவது சரியாகும்; உலகில் ஆவதுபோல ஆகும்.

उपपन्न एवोत्क्रान्तिकाले सर्वकर्मक्षयः। कथम्? **तल्लक्षणार्थोपलब्धेः** - क्षीणकर्मणोऽप्याविर्भूतस्वरूपस्य देहसम्बन्धलक्षणार्थोपलब्धेः।

- **"परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते...स तत्र पर्येति जक्षत् क्रीडन् रममाणः"** (छा.8-12-2,3)[1],
- **"स स्वराड्भवति। तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति"** (छा.7-25-2)[2],
- **"स एकधा भवति त्रिधा भवति"** (छा.7-26-2)[3]

इत्यादिषु देहसम्बन्धाख्योऽर्थो ह्युपलभ्यते। अतः क्षीणकर्मणोऽपि सूक्ष्मशरीरयुक्तस्य देवयानेन गमनमुपपद्यते॥

कथं सूक्ष्मशरीरमप्यारम्भककर्मविनाशेऽवतिष्ठत इति चेत्, विद्यामाहात्म्यादिति ब्रूमः। विद्या हि स्वयं सूक्ष्मशरीरस्यानारम्भिकापि प्राकृतसुखदुःखोपभोगसाधनस्थूलशरीरस्य सर्वकर्मणां च निरवशेषक्षयेऽपि स्वफलभूतब्रह्मप्राप्तिप्रदानाय देवयानेन पथैनं गमयितुं सूक्ष्मशरीरं स्थापयति।

लोकवत् - यथा लोके सस्यादिसमृद्ध्यर्थमारब्धे तटाकादिके, तद्धेतुषु तदिच्छादिषु विनष्टेष्वपि तदेव तटाकादिकमशिथिलं कुर्वन्तस्तत्र पानीयपानादि कुर्वन्ति, तद्वत्॥३०॥

* * *

தோபலப்தே: - க்ஷீணகர்மணோऽபி ஆவிர்பூதஸ்வரூபஸ்ய தேஹஸம்பந்தலக்ஷணார்தோபலப்தே:।

- *"பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே" "ஸ தத்ர பர்யேதி ஜக்ஷித் க்ரீடந் ரமமாண:"* (சா.8-12-2,3)[1],
- *"ஸ ஸ்வராட்பவதி। தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி"* (சா.7-25-2)[2],
- *"ஸ ஏகதா பவதி த்ரிதா பவதி"* (சா.7-26-2)[1]

இத்யாதிஷு தேஹஸம்பந்தாக்ய: அர்தோ ஹி உபலப்யதே। அத: க்ஷீணகர்மணோऽபி ஸூக்ஷ்மஶரீரயுக்தஸ்ய தேவயாநேந கமநமுபபத்யதே॥

கதம் ஸூக்ஷ்மஶரீரமபி ஆரம்பககர்மவிநாஶே அவதிஷ்டதே இதி சேத், வித்யாமாஹாத்ம்யாத் இதி ப்ரூம:। வித்யா ஹி ஸ்வயம் ஸூக்ஷ்மஶரீரஸ்ய அநாரம்பிகாऽபி ப்ராக்ருதஸுகது:கோபபோகஸாதநஸ்தூலஶரீரஸ்ய ஸர்வகர்மணாம் ச நிரவஶேஷக்ஷயேऽபி ஸ்வபலபூதப்ரஹ்மப்ராப்திப்ரதாநாய தேவயாநேந பதா ஏநம் கமயிதும் ஸூக்ஷ்மஶரீரம் ஸ்தாபயதி।

லோகவத் - யதா லோகே ஸஸ்யாதிஸம்ருத்த்யர்தமாரப்தே தடாகாதிகே, தத்தேதுஷு ததிச்சாதிஷு விநஷ்டேஷ்வபி ததேவ தடாகாதிகம் அஶிதிலம் குர்வந்த: தத்ர பாநீயபாநாதி குர்வந்தி, தத்வத்॥30॥

* * *

உபபந்ந: (சரியாகும்) - ஶரீரத்தை விட்டு வெளியேறும் ஸமயத்தில் எல்லா கர்மங்களும் அழியும் என்பது சரியாகும்தான்.

எப்படி?

தல்லக்ஷணார்த்தோபலப்தே: - கர்மங்கள் அழியப் பெற்றவனாய், ஸ்வரூப-ஆவிர்பாவம் பெற்றவனுக்கும், ஶரீர-ஸம்பந்தம் ஆகிறவிஷயம் தெரிவதால்.

- [1]**''பர-ப்ரஹ்மத்தை அடைந்து தன் ஸ்வரூபத்துடன் ஆகிறான்; அவன் அங்கு உண்பவனாக விளையாடுபவனாக களிப்பவனாக சுற்றுகிறான்''**
- [2]**''அவன் கர்மத்துக்கு வசப்படாதவன்ஆகிறான்; அவனுக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப் படியான ஸஞ்சாரம் ஆகும்''**
- [3]**''அவன் ஒருவனாக ஆகிறான்; மூன்றாக ஆகிறான்''**

முதலியவற்றில், ஶரீர-ஸம்பந்தம் எனும் விஷயம் தெரிகிறதுதான்.

ஆகையால், கர்மம் அழியப் பெற்றவனுக்கும் கூட, ஸூக்ஷ்ம-ஶரீரத்துடன் கூடியவனுக்கு தேவயான வழியால் செல்வது சரியாகும்.

கேள்வி - ஸூக்ஷ்மஶரீரமும் தான், (அது) உண்டாவதற்குக் காரணமான கர்மம் அழிந்தபின் எப்படி இருக்க முடியும்? - என்றால்,

பதில் - வித்யையின் மஹிமையால் என்று சொல்கிறோம்.

வித்யை ஆனது தானாக ஸூக்ஷ்மஶரீரத்தை உண்டாக்காது; ப்ராக்ருதமான (ப்ரக்ருதியின் மூலம் வரும்) சுக-துக்க-போகத்துக்கு காரணமான ஸ்தூல ஶரீரமும் எல்லா கர்மங்களும் கூட மீதமில்லாமல் அழிந்துவிடும்; ஆனாலும், வித்யையானது, தன் பலனான ப்ரஹ்ம-ப்ராப்தியைக் கொடுப்பதன் பொருட்டு, தேவயான வழியால் இவனைச் செல்ல வைப்பதற்காக ஸூக்ஷ்மஶரீரத்தை நிலை நிறுத்தி வைக்கிறது.

லோகவத் (உலகத்தில் போல) - உலகில் பயிர் முதலியவற்றின் செழிப்பின் பொருட்டு உண்டாக்கிய குளம் முதலியதில், அதற்குக் காரணமான அந்த விருப்பம் முதலியவை அழிந்தாலும், அதே குளம் முதலியதை அழியாமல் செய்பவர்களாய் அதில் குடிநீர் பருகுதல் முதலியதை செய்கின்றனர்; அதுபோல இங்கும் ஆகும்.

(கர்மத்தினால் ஸ்தூலஶரீரம் பிறக்கும் போதே ஸூக்ஷ்மஶரீரமும் உண்டாக்கப்பட்டு இருக்கும்; அது வித்யையால் உண்டானது அல்ல; கர்மத்தால் வந்ததுதான்; காரணமான கர்மம் அழியும்போது, ஸ்தூலஶரீரம் அழியும்; அப்போதே ஸூக்ஷ்மஶரீரமும் அழிய வேண்டும்; ஆனால், வித்யையானது, அதனை அழியாமல் நிறுத்திவிடும். பின்னர் தேவயான வழியில் ஜீவன் செல்வதற்கு உபயோகமாக இதனைப் பாதுகாக்கும்).

◆ ◆ ◆ ◆

अथ स्यात् - ज्ञानिनां साक्षात्कृतपरतत्त्वानां देहपातसमये कर्मणो निरवशेषक्षयात् देहपातादूर्ध्वं सूक्ष्मशरीरमात्रं गत्यर्थमनुवर्तते, सुखदुःखानुभवो न विद्यते इति यदुक्तम्, तन्नोपपद्यते; वसिष्ठावा(पा)न्तरतपःप्रभृतीनां साक्षात्कृतपरतत्त्वानां देहपातादूर्ध्वं देहान्तरसङ्गमः, पुत्रजन्मविपत्त्यादिनिमित्तसुखदुःखानुभवश्च दृश्यते इति। अत उत्तरं पठति -

३८५.यावदधिकारमवस्थितिराधिकारिकाणाम् (३-३-३१)

नास्माभिः सर्वेषां ज्ञानिनां देहपातसमये सुकृतदुष्कृतयोर्विनाश उक्तः, अपितु येषां ज्ञानिनां देहपातानन्तरमर्चिरादिका गतिः प्राप्ता, तेषां देहपातसमये सुकृतदुष्कृतहानिरुक्ता।

वसिष्ठादीनां त्वाधिकारिणां न देहपातानन्तरमर्चिरादिगतिप्राप्तिः; प्रारब्धस्याधिकारस्यासमाप्तत्वात्। तेषां कर्मविशेषेणाधिकारविशेषं प्राप्तानां यावदाधिकारसमाप्ति तदारम्भकं कर्म न क्षीयते। प्रारब्धस्य हि कर्मणो भोगादेव क्षयः। अत आधिकारिकाणां तदारम्भकं कर्म यावदधिकारमवतिष्ठते। अतस्तेषां न देहपातादनन्तरमर्चिरादिगतिप्राप्तिः॥३१॥

इति साम्परायाधिकरणम् ॥ १२ ॥

அத ஸ்யாத் - ஜ்ஞாநிநாம் ஸாக்ஷாத்க்ருதபரதத்த்வாநாம் தேஹபாதஸமயே கர்மணோ நிரவஶேஷக்ஷயாத் தேஹபாதாதூர்த்வம் ஸூக்ஷ்மஶரீரமாத்ரம் கத்யர்தமநுவர்ததே, ஸுகது:காநுபவோ ந வித்யதே இதி யதுக்தம், தந்நோபபத்யதே; வஸிஷ்டாவா(பா)ந்தரதப:ப்ரப்ருதீநாம் ஸாக்ஷாத்க்ருதபரதத்த்வாநாம் தேஹபாதாதூர்த்வம் தேஹாந்தரஸங்கம:, புத்ரஜந்மவிபத்த்யாதிநிமித்தஸுகது:காநுபவஶ்ச த்ருஶ்யதே இதி, அத உத்தரம் படதி -

385.யாவததிகாரமவஸ்திதிராதிகாரிகாணாம் (3-3-31)

நாஸ்மாபி: ஸர்வேஷாம் ஜ்ஞாநிநாம் தேஹபாதஸமயே ஸுக்ருததுஷ்க்ருதயோர்விநாஶ உக்த:, அபிது யேஷாம் ஜ்ஞாநிநாம் தேஹபாதாநந்தரம் அர்சிராதிகா கதி: ப்ராப்தா, தேஷாம் தேஹபாதஸமயே ஸுக்ருததுஷ்க்ருதஹாநிருக்தா।

வஸிஷ்டாதீநாம் து ஆதிகாரிணாம் ந தேஹபாதாநந்தரம் அர்சிராதிகதிப்ராப்தி:, ப்ராரப்தஸ்யாதிகாரஸ்ய அஸமாப்தத்வாத்। தேஷாம் கர்மவிஶேஷண அதிகாரவிஶேஷம் ப்ராப்தாநாம் யாவததிகாரஸமாப்தி ததாரம்பகம் கர்ம ந க்ஷீயதே। ப்ராரப்தஸ்ய ஹி கர்மண: போகாதேவ க்ஷய:। அத ஆதிகாரிகாணாம் ததாரம்பகம் கர்ம யாவததிகாரம் அவதிஷ்டதே। அத: தேஷாம் ந தேஹபாதாதநந்தரம் அர்சிராதிகதிப்ராப்தி:।।31।।

இதி ஸாம்பராயாதிகரணம் ।। 12 ।।

கேள்வி - பரம்பொருளை நேராக அறிந்த ஜ்ஞானிகளுக்கு ஶரீரம் அழியும்போது, கர்மம் மீதியில்லாமல் அழிகிறது; ஆதனால், ஶரீரம் அழிந்தபின், ஸூக்ஷ்ம-ஶரீரம் மட்டும் (தேவயானவழியில்) செல்வதற்காக தொடரும்; ஆனால், சுக-துக்க-அனுபவம் கிடையாது என்று (ஸித்தாந்தத்தில்) சொல்லப்பட்டது; அது சரியாகாது; ஏனெனில், பரம்பொருளை நேராக அறிந்தவர்களான வஸிஷ்டர், அவாந்தர-தபஸ் முதலியவர்களுக்கு ஶரீரம் அழிந்தபின்னர் மற்றொரு ஶரீரத்துடன் சேர்வது காணப்படுகிறது; மகனுடைய பிறப்பு-இறப்பு முதலிய காரணத்தால் சுக-துக்க-அனுபவமும் காணப்படுகிறது - என்று.

✍(*அவாந்தர-தபஸ் என்பவர், வேத-ஆசார்யரான மஹர்ஷி; அவருக்கு பெருமாள் விசேஷ-அனுக்ரஹம் செய்து, அடுத்த ஜன்மத்தில் வ்யாஸராகப் பிறக்க வைத்து, தானும் ஆவேச-அவதாரம் செய்தார்; வஸிஷ்டர் ப்ரஹ்மாவின் மானஸ-புத்ரர்; நிமியின் சாபத்தால், ஶரீரத்தை விட்டு, மீண்டும் ப்ரஹ்மாவின் அனுக்ரஹத்தால், மித்ராவருணர்களுக்குப் பிறந்தார்; இவர்கள் எல்லாம் ப்ரஹ்ம-ஜ்ஞானிகள்; ஆனாலும், ஶரீர-முடிவில் மொத்த புண்யபாப கர்மமும் தொலையவில்லை; அடுத்த பிறவி எடுக்கின்றனர்; அது எப்படி?*)✍

அதற்கு பதில் சொல்கிறார் -

385.யாவததிகாரம் அவஸ்திதி: ஆதிகாரிகாணாம்(3-3-31)

அதிகாரத்தில் நியமிக்கப் பட்டவர்களுக்கு அதிகாரம் இருக்கும் வரை [கர்மங்களை விடாமல்] இருத்தல் ஆகும்.

எல்லா ஜ்ஞாநிகளுக்கும் ஶரீரம் அழியும்போது புண்யபாபங்கள் அழியும் என்பது எங்களால் சொல்லப்படவில்லை; மாறாக, எந்த ஜ்ஞாநிகளுக்கு ஶரீரம் அழிந்தபின்னர் அர்ச்சிராதி-கதி கிடைக்கிறதோ, அவர்களுக்கு ஶரீரம் அழியும் சமயத்தில் புண்யபாபங்களின் அழிவு சொல்லப்பட்டது.

வஸிஷ்டர் முதலியவர்களோ ஆதிகாரிகர்கள் - அதிகாரத்தில் (பதவியில்) நியமிக்கப் பட்டவர்கள்; (அவர்களுக்கு)ஶரீரம் போனவுடன் அர்ச்சிராதி-கதி என்பது கிடையாது; ஏனெனில், (அவர்களுக்கு) ஆரம்பிக்கப்பட அதிகாரம் (பதவி) முடியவில்லை; கர்ம-விசேஷத்தினால் விசேஷமான பதவியைப் பெற்ற அவர்களுக்கு அந்த பதவி முடியும்வரை அதற்குக் காரணமான கர்மம் அழியாது; ஏனெனில், ப்ராரப்த-கர்மத்தின் (பலன் தர ஆரம்பித்த கர்மத்தின்) அழிவானது, போகத்தால் (பலனை அனுபவித்தால்) மட்டுமே ஆகும்; ஆகையால், அதிகாரத்தில் நியமிக்கப்பட்டவர்களுக்கு அதற்குக் காரணமான கர்மம் ஆனது, அதிகாரம் இருப்பது வரை இருக்கும்; ஆகவே, அவர்களுக்கு ஶரீரம் அழிந்தவுடன் அர்ச்சிராதி கதியை அடைதல் என்பது கிடையாது.

***

ஸாம்பராயாதிகரணம் முற்றிற்று.

95.அநியமாதிகரணம்(3-3-13)

முன் குறிப்பு

உபாஸனம் செய்தவர் ப்ரஹ்மலோகத்தை அடைவதற்கு செல்ல வேண்டிய வழி ஒன்று உண்டு; அதற்கு தேவயானம் / அர்ச்சிராதிகதி என்று பெயர்; இது, உபகோஸல-வித்யை, பஞ்சாக்னிவித்யை, பர்யங்கவித்யை முதலிய சில வித்யைகளில் மட்டுமே சொல்லப்படுகிறது; அதில் விசாரம் - அந்த வித்யைகளை உபாஸனம் செய்பவருக்கு மட்டும் அர்ச்சிராதி-கதியா? அல்லது பொதுவாக ப்ரஹ்ம-வித்யை எதுவானாலும், ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்கள் எல்லாருக்கும் உண்டா?

பூர்வபக்ஷம் - எந்த வித்யையில் அர்ச்சிராதி-கதி சொல்லியுள்ளதோ, அந்த வித்யையை அனுஷ்டானம் செய்பவருக்கு மட்டுமே அந்த கதி உண்டு; மற்றவருக்கு அது சொல்லாதபடியால், வர முடியாது.

ஸித்தாந்தம் - பஞ்சாக்னிவித்யையில், ‘‘யாவர் பஞ்சாக்னிவித்யையின் படி உபாஸனம் செய்கிறாரோ, யாவர் ஸத்யத்தை / தபஸ்ஸினை உபாஸனம் செய்கிறாரோ அவர்களுக்கும் அர்ச்சிராதிகதி என்று சொல்கிறது. இங்கு ஸத்யம், தபஸ் என்றால் ப்ரஹ்மம் என்று அர்த்தம்; எனவே, பஞ்சாக்னிவித்யை தவிர பொதுவாக ப்ரஹ்மத்தை உபாஸனம் செய்பவர் எல்லாருக்கும் அர்ச்சிராதிகதி உண்டு என சொன்னதாக ஆகிறது.

பூர்வபக்ஷம் - இங்கு ஸத்யம்/தபஸ் என்று சொன்னதன் மூலம் எல்லா ப்ரஹ்ம-வித்யையையும் குறித்ததாக ஆகாது; அப்படியானால், எல்லா ப்ரஹ்மவித்யைக்கும் அர்ச்சிராதி-கதி உண்டு என கிடைத்து விடும்! அப்படியானால், அதே உபநிஷத்தில், உபகோஸல-வித்யையில் அர்ச்சிராதிகதியை மீண்டும் சொன்னது எதற்கு? எனவே, அந்தந்த வித்யையினருக்கு மட்டுமே அர்ச்சிராதிகதி என்று சொல்ல வேண்டும்.

ஸித்தாந்தம் - உபகோஸல-வித்யையில், இந்த கதி மூலமாக செல்பவருக்கு மறுபிறப்பு ஆகிற ஸம்ஸாரம் கிடையாது என்று சொல்கிறது; அதைச் சொல்வதற்காக வந்த வாக்யமே தவிர கதியைச் சொல்ல வந்த வாக்யம் அல்ல. எனவே, ஸத்யம்/தபஸ் என்று குறிப்பிட்டதன் மூலம் ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர் எல்லாருக்கும் அர்ச்சிராதி-கதி உண்டு என்று பஞ்சாக்னிவிதையில் சொல்கிறது.

கதி-பாதத்தில் (4-3 வது பாதம்) அர்ச்சிராதி-கதி பற்றிய விசாரங்கள் உள்ளன.

இந்த அர்ச்சிராதி-கதியை எல்லா வித்யைகளிலும் சிந்தனம் செய்ய வேண்டும் என்றும் வ்யாக்யானங்களில் சாதித்துள்ளனர்.

९५.अनियमाधिकरणम् (३-३-१३)

३८३.अनियमः सर्वेषामविरोधः शब्दानुमानाभ्याम् (३-३-३२)

उपकोसलादिषु येषूपासनेष्वर्चिरादिगतिः श्रूयते, किं तन्निष्ठानामेव तया ब्रह्मप्राप्तिः, उत सर्वेषां ब्रह्मोपासननिष्ठानामिति संशये,

इतरेष्वनाम्नानात्, **''ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते''**(छा.5-10-1)[1], **''श्रद्धां सत्यमुपासते''**(बृ.8-2-15)[2] इति इतरसकलब्रह्मविद्योपस्थापकत्वे प्रमाणाभावाच्च तन्निष्ठानामेव,

इति प्राप्तेऽभिधीयते - **अनियमः** इति। **सर्वेषां** - सर्वोपासननिष्ठानां तयैव गन्तव्यत्वात् तन्निष्ठानामेवेति नियमो नास्ति। सर्वेषां तयैव गमने हि सति, **शब्दानुमानाभ्यां** - श्रुतिस्मृतिभ्यामविरोधः। अन्यथा विरोध एवेत्यर्थः।

श्रुतिस्तावत् छान्दोग्यवाजसनेयकयोः पञ्चाग्निविद्यायामर्चिरादिमार्गेण सर्वब्रह्मोपासननिष्ठानां गमनमाह।

★ **''य एवमेतद्विदुः, ये चामी अरण्ये श्रद्धां सत्यमुपासते तेऽर्चिषमभिसम्भवन्ति''** (बृ.8-12-15)[1] इति वाजसनेयके;

95.அநியமாதிகரணம் (3-3-13)

386.அநியம: ஸர்வேஷாமவிரோத: ஶப்தாநுமாநாப்யாம் (3-3-32)

உபகோஸலாதிஷு யேஷு உபாஸநேஷு அர்சிராதிகதி: ஶ்ரூயதே, கிம் தந்நிஷ்டாநாமேவ தயா ப்ரஹ்மப்ராப்தி:, உத ஸர்வேஷாம் ப்ரஹ்மோபாஸநநிஷ்டாநாம் இதி ஸம்ஶயே,

இதரேஷு அநாம்நாநாத், *''யே சேமேऽரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே''*(சா.5-10-1)[1], *''ஶ்ரத்தாம் ஸத்யமுபாஸதே''* (8-2-15)[2] இதி இதரஸகலப்ரஹ்மவித்யோபஸ்தாபகத்வே ப்ரமாணாபாவாச்ச தந்நிஷ்டாநாமேவ

இதி ப்ராப்தேऽபிதீயதே - *அநியம:* - இதி। *ஸர்வேஷாம்* - ஸர்வோபாஸநநிஷ்டாநாம் தயைவ கந்தவ்யத்வாத் தந்நிஷ்டாநாமேவேதி நியமோ நாஸ்தி। ஸர்வேஷாம் தயைவ கமநே ஹி ஸதி, *ஶப்தாநுமாநாப்யாம்* - ஶ்ருதிஸ்ம்ருதிப்யாம் அவிரோத:। அந்யதா விரோத ஏவேத்யர்த:।

ஶ்ருதிஸ்தாவத் சாந்தோக்ய-வாஜஸநேயகயோ: பஞ்சாக்நிவித்யாயாம் அர்சிராதிமார்கேண ஸர்வப்ரஹ்மோபாஸநநிஷ்டாநாம் கமநமாஹ।

★ *''ய ஏவமேதத்விது:, யே சாமீ அரண்யே ஶ்ரத்தாம் ஸத்யமுபாஸதே தேऽர்சிஷமபிஸம்பவந்தி''* (ப்ரு.8-12-15)[1] இதி வாஜஸநேயகே,

95.அநியமாதிகரணம்(3-3-13)

386.அநியம: ஸர்வேஷாம் அவிரோத: ஶப்தாநுமாநாப்யாம்(3-3-32)

[ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்] அனைவருக்கும் [அர்ச்சிராதிகதி] ஆகும்; நியமம் கிடையாது; [அப்படியானாலே], வேத-ஸ்ம்ருதிகளுடன் முரண்பாடு இல்லாமல் ஆகும்.

ஸந்தேஹம்

உபகோஸல-வித்யை முதலிய எந்த வித்யைகளில் அர்ச்சிராதி-கதி ஓதப்படுகிறதோ, அந்த உபாஸனத்தை அனுஷ்டானம் செய்பவருக்கு மட்டுமே அந்த வழியால் ப்ரஹ்மத்தை அடைதல் ஆகுமா? அல்லது ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்கள் எல்லாருக்கும் ஆகுமா? என்று ஸந்தேஹம் ஆகும்போது,

பூர்வபக்ஷம்

அந்த வித்யையை அனுஷ்டானம் செய்பவர்களுக்கு மட்டுமே ஆகும்; ஏனெனில், பிற வித்யைகளில் இந்த அர்ச்சிராதிகதியை ஓதவில்லை; மேலும்,-

- [1]**''காட்டில் இருந்து கொண்டு ஶ்ரத்தையை முன்னிட்டு தபஸ்ஸினை (ப்ரஹ்மத்தை) யார் இப்படி உபாஸனம் செய்கின்றனரோ (அவர்களும் அர்ச்சிராதி கதியில் செல்வர்)'',**
- [2]**''ஶ்ரத்தையை முன்னிட்டு ஸத்யத்தை (ப்ரஹ்மத்தை) உபாஸனம் செய்கின்றனரோ (அவர்களும் அர்ச்சிராதிகதியில் செல்வர்)''**

என்று சொன்னது, வேறு எல்லா ப்ரஹ்ம-வித்யைகளையும் நினைவுறுத்தும் என்பதற்கு ப்ரமாணம் கிடையாது.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிடும்போது ஸித்தாந்தம் சொல்லபடுகிறது - **அநியம:** என்று.

ஸர்வேஷாம் (எல்லாருக்கும் ஆவதால்) - ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர் எல்லாரும் அந்த (அர்ச்சிராதி) வழியாலே போக வேண்டியிருப்பதால்,

அநியம: (நியமம் இல்லை) - (அர்ச்சிராதிகதி ஓதப்படும் உபகோஸலவித்யை முதலிய) அந்த உபாஸனம் செய்பவர்களுக்கு மட்டுமே என்னும் நியமம் கிடையாது.

ஏனெனில், எல்லாரும் அந்த வழியால் செல்வர் என்பது இருந்தால்தான்

ஶப்தாநுமாநாப்யாம் அவிரோத: - வேதங்களோடும் ஸ்ம்ருதிகளோடும் முரண்பாடு இல்லாமல் ஆகும்; இல்லாவிட்டால், முரண்பாடுதான் ஆகும் என்று அர்த்தம்.

வேதமாவது - சாந்தோக்ய-வாஜஸனேய-உபநிஷத்-வாக்யங்களில் பஞ்சாக்னிவித்யையில் ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவர் எல்லாருக்கும் அர்ச்சிராதி-மார்க்கத்தால் செல்வதைச் சொல்கிறது -

- [1]**''யாவர் இப்படி இதனை உபாஸநம் செய்கிறார்களோ, யாவர் காட்டில்**

சிலரோ, [1]**''வ்யதிஹார: விசிம்ஷந்தி ஹி இதரவத்''**, [2]**''ஸா ஏவ ஹி ஸத்யாதய:''** எனும் இரு ஸூத்ரங்களை இரு அதிகரணங்களாக வர்ணிக்கின்றனர்.

அதில் முன் ஸூத்ரத்தால் சொல்லப்படுவதானது - [3]**''பகவானே, தேவனே, நான் நீயாக இருக்கிறேன்; பகவானே தேவனே, நீ நானாக இருக்கிறாய்''**, [4]**''ஆகவே, நான் என்பது யாரோ, அது நீதான்; நீ யாரோ, அது நான்தான்''** என்ற வாக்யங்களில் ஜீவனுக்கும் பரமாத்மாவுக்கும் பரிமாற்றத்தை எண்ணுதல் அறிவிக்கப்படுகிறது என்பதுவே என்கின்றனர்.

அது ஆதரிக்கத் தக்கதல்ல; ஏனெனில், [5]**''இதெல்லாமே ப்ரஹ்மம்தான்''**, [6]**''இது எல்லாம் அந்த ஆத்மாவால் பரவப்பட்டது''**, [7]**''நீ அந்த ப்ரஹ்மமாக ஆகிறாய்''** முதலியதால் எல்லாவற்றுக்கும் ஆத்மாவான தன்மை அறியப்பட்டதுதான்; அதைப் பற்றியதே இந்த வாக்யங்கள் என்பதால், இங்கு புதியதாக சொல்லப்பட வேண்டியது எதுவும் இல்லை; அந்த இடத்து விஷயமோ, [8]**''ஆத்மேதி து உபகச்சந்தி க்ராஹயந்தி''** என்று சொல்லப்படப் போகிறது; எல்லாவற்றுக்கும் உள்ளிருக்கும் ஆத்மாவாக எண்ணுதல் என்பது தவிர வேறாக, பரப்ரஹ்மத்தை ஜீவனாக எண்ணுதல் என்பதோ, ஜீவனை பரப்ரஹ்மமாக எண்ணுதல் என்பதோ உண்மையாக கிடையாது.

பின் ஸூத்ரத்தால் சொல்லப் படுவதானது - [9]**''இந்த உயர்ந்த பூஜிக்கத்தக்க ஹ்ருதயத்தை முதலில் உண்டான பஞ்சபூத-ஆத்மகமான ஸத்ய-ப்ரஹ்மமாக யார் உபாஸனம் செய்வானோ''** முதலிய வாக்யத்தால் ஸத்ய-உபாஸனம் சொல்லப்பட்டது; அதுவும், [10]**''ஸத்யம் என்பது எதுவோ, அவன்தான், யாரொருவன் இந்த (ஸூர்ய) மண்டலத்தில் உள்ள புருஷனோ, யாரொருவன் வலது கண்ணில் இருக்கும் புருஷனோ அந்த ஆதித்யன்''** முதலிய வாக்யத்தால் சொல்லப்படும் உபாஸனமும் ஒன்றே என்பதாகும் - என்றனர். *(இங்கு இரு வாக்யங்கள் தனித்தனியாக உள்ளன; முதல் வாக்யத்தில் ஸத்ய-ப்ரஹ்மம் பற்றிய உபாஸநம் சொல்கிறது; பின்னர், இரண்டாவது வாக்யத்தில், அந்த ஸத்யம் என்பதையே மேலும் சில குணங்களுடன் உபாஸநம் செய்ய சொல்கிறது; எனவே, இரண்டும் ஒரே வித்யை ஆகும்)*

அதுவும் சரியில்லை; ஏனெனில், இரண்டாவது வாக்யத்தில் கண், ஆதித்யன் ஆகிற ஸ்தானம்(இடம்) வேறாவதால் வித்யை வேறாகும் என முன்பே, [11]**''ந வா விஶேஷாத்''** என்கிற ஸூத்ரத்தால் சொல்லியாயிற்று. (இரண்டாவது வாக்யத்தில் மட்டுமே இரு தனித்தனி வித்யைகள் உள்ளன; எனவே, முதல் வாக்யத்துடன் சேர்ந்து ஒரே வித்யை ஆக சொல்லமுடியாது.)

न च द्वयोरनयोः, व्याहृत्यादिशरीरकत्वेन रूपवतोः **''हन्ति पाप्मानं जहाति च य एवं वेद''** (बृ.7-5-2)[1] इति पृथक्संयोगचोदनवतोर्द्वयोरुपासनयोः, **''स यो हैतन्महद्यक्षं प्रथमजं वेद सत्यं ब्रह्मेति, जयतीमान् लोकान्''** (बृ.7-4-1)[2] इति संयोगरूपादिमत्तया निरपेक्षेण पूर्वेणैकेनोपासनेनाभेदः सम्भवति।

न च, **''हन्ति पाप्मानं जहाति''** (बृ.7-5-2)[3] इति गुणफलाधिकारत्वम्, प्रमाणाभावात्। पूर्वेणैकविद्यात्वं प्रमाणमिति चेत्, न; इतरेतराश्रयत्वात्; एकविद्यात्वे निश्चिते पूर्वफलस्यैव प्रधानफलत्वेन उत्तरयोः फलयोर्गुणफलत्वम्, तयोर्गुणफलत्वे निश्चिते सति संयोगभेदाभावात् पूर्वेण विद्यैक्यमितीतरेतराश्रयत्वमिति।

एवमादिभिर्यथोक्तप्रकारमेव सूत्रद्वयम्॥ ३७ ॥

इति अन्तरत्वाधिकरणम् ॥ १५ ॥

ந ச த்வயோரநயோ:, வ்யாஹ்ருத்யாதிஶரீரகத்வேந ரூபவதோ: *''ஹந்தி பாப்மாநம் ஜஹாதி ச ய ஏவம் வேத''*(ப்ரு.7-5-2)[1] இதி ப்ருதக்ஸம்யோகசோதநவதோ: த்வயோருபாஸநயோ:, *''ஸ யோ ஹைதந்மஹத்யக்ஷம் ப்ரதமஜம் வேத ஸத்யம் ப்ரஹ்மேதி, ஜயதீமாந் லோகாந்''*(ப்ரு.7-4-1)[2] இதி ஸம்யோகரூபாதிமத்தயா நிரபேக்ஷேண பூர்வேணைகேநோபாஸநேந அபேத: ஸம்பவதி।

ந ச, *''ஹந்தி பாப்மாநம் ஜஹாதி''*(ப்ரு.7-5-2)[3] இதி குணபலாதிகாரத்வம், ப்ரமாணாபாவாத்। பூர்வேணைகவித்யாத்வம் ப்ரமாணமிதி சேத், ந; இதரேதராஶ்ரயத்வாத்; ஏகவித்யாத்வே நிஶ்சிதே பூர்வபலஸ்யைவ ப்ரதாநபலத்வேந உத்தரயோ: பலயோ: குணபலத்வம், தயோ: குணபலத்வே நிஶ்சிதே ஸதி ஸம்யோகபேதாபாவாத் பூர்வேண வித்யைக்யமிதி இதரேதராஶ்ரயத்வமிதி।

ஏவமாதிபி: யதோக்தப்ரகாரமேவ ஸூத்ரத்வயம்।। 37 ।।

இதி அந்தரத்வாதிகரணம் ।। 15 ।।

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

மேலும், இந்த இரு வாக்யங்களில்-

(பின் வாக்யத்தில் சொன்ன) இரு உபாஸனங்கள் வ்யாஹ்ருதி முதலியதை ஶரீரமாகக் கொண்டதாக ரூபம் (உபாஸன-விஷயம்) கொண்டவை; [1]**''யார் இப்படி உபாஸனம் செய்கிறானோ, அவன் பாபத்தை கொல்கிறான்; ஶரீரத்தை விடுகிறான்''** என்பதாக வெவ்வேறு பலன்-தொடர்பும் விதியும் கொண்டவை.

[2]**''இந்த உயர்ந்த பூஜிக்கத்தக்க ஹ்ருதயத்தை முதலில் உண்டான பஞ்சபூத-ஆத்மகமான ஸத்ய-ப்ரஹ்மமாக யார் உபாஸனம்செய்வானோ, அவன் இந்த உலகங்களை வெல்வான்''** என்று முன் சொன்ன ஒரு உபாஸனமானது, பலன்-தொடர்பும், (உபாஸன-விஷயமாகிற) ரூபமும் உடையபடியால், வேறு தேவையற்றதாக உள்ளது.

இந்த ஒரு உபாஸனத்துடன் அந்த (பின் வாக்யத்தில் சொன்ன) இரு உபாஸனங்களுக்கு வேற்றுமை யில்லை என்பது வராது.

ஶங்கை - [3]**''பாபத்தை கொல்கிறான்; ஶரீரத்தை விடுகிறான்''** என்பது அங்கத்தின் பலனை சொல்கிறது.

ஸமாதானம்- அது கிடையாது; ஏனெனில், (அப்படி சொல்வதற்கு) காரணம் இல்லை.

ஶங்கை - முன் உபாஸனத்துடன் ஒரே வித்யையாக ஆவதுதான் காரணம் என்றால்,

ஸமாதானம் - அது ஆகாது; ஏனெனில், அன்யோன்ய-ஆஶ்ரயம் (ஒன்றையொன்று சார்ந்திருத்தல் எனும் தோஷம்) ஆகிவிடும்.

ஒரே வித்யை என்பது நிச்சயமாகத் தெரிந்தால்தான், முன்னதன் பலன் ப்ரதான-உபாஸனத்தின் பலன் ஆவதால், அடுத்த இரண்டு பலன்களும் அங்கங்களின் பலனாக ஆகலாம்.

அவை இரண்டும் அங்கங்களின் பலன் என்பது நிச்சயமாகத் தெரிந்தால்தான், பலன்-தொடர்பில் வித்யாசம் இல்லாதபடியால், முன்னதுடன் ஒரே வித்யையாக ஆக முடியும்.

இப்படி ஒன்றுக்கொன்று சார்ந்து இருத்தல் முதலியவற்றால், (இந்த விளக்கம் தவறாவதால்) இரு ஸூத்ரமும் (ஸ்ரீபாஷ்யத்தில்) சொன்ன முறையிலேயே ஆகும்.

* * *

அந்தரத்வாதிகரணம் முற்றிற்று

98.காமாத்யதிகரணம்(3-3-16)

முன் குறிப்பு

சாந்தோக்யத்திலும், வாஜஸனேயத்திலும் (ப்ருஹதாரண்யகத்திலும்) சொன்ன தஹர-வித்யை ஒன்றா வெவ்வேறா என்று விசாரம்.

பூர்வபக்ஷம் - சாந்தோக்யத்தில் - ஆகாசத்தையும் அதன் எட்டு குணங்களையும் உபாஸநம் செய்ய வேண்டும்; வாஜஸனேயகத்தில் - ஆகாசத்தில் கிடப்பவனையும், வசித்வம் முதலிய குணங்களையும் உபாஸனம் செய்ய வேண்டும்; எனவே, உபாஸன-விஷயம் ஆகிற ரூபம் வேறாவதால், வித்யை வேறுதான்.

ஸித்தாந்தம் - சாந்தோக்யத்தில், ஹ்ருதய-ஆகாசத்தில் இருக்கும் ஆகாசம் (பிரகாசிப்பவன்)என பரமாத்மாவைசொல்கிறது; வாஜஸனேயகத்தில், ஹ்ருதய-ஆகாசத்தில் கிடக்கும் ஆத்மா என பரமாத்மாவை சொல்கிறது; ஆக, இரண்டும் ஒன்றையே சொல்கிறது. (காண்க - தஹராதிகரணம் - 1-3-5)

சாந்தோக்யத்தில், அபஹதபாப்மத்வம் (கர்மம் இல்லாமை), ஸத்யகாமத்வம் (அழியாத போகப்பொருள்களை உடைமை) முதலிய எட்டு குணங்களை சொல்கிறது; அதில் ஸத்யஸங்கல்பத்வம் என்று ஒரு குணம்; அதனையே விரிவாக வாஜஸனேயகத்தில், எல்லாரையும் வசத்தில் வைப்பவன், ஆள்பவன் என்று சொல்கிறது. (ஸமானாதிகரணம் காண்க- 3-3-6.). இப்படி எட்டு குணங்களில் ஒன்றை விளக்குவதால், மற்றகுணங்களும் நினைவுக்குவரும்; எனவே, அவற்றையும் இங்கு சொன்னதாக சேர்த்துக் கொள்ள வேண்டும்; எனவே, குணங்களும் ஒன்றே.

ஆகையால் இரண்டு இடத்திலும் தஹரவித்யை ஒன்றுதான். மேலும், தைத்திரீயத்திலும் இந்த தஹர-வித்யை உள்ளது.

பூர்வபக்ஷம்- இதில் சொன்ன இந்த குணங்கள் எல்லாமே பொய்யானவை; இவை ஒன்றும் உண்மையில் ப்ரஹ்மத்துக்கு கிடையாது என வேதமே சொல்கிறது.

ஸித்தாந்தம் - வேதம் மிகுந்த ஆதரவுடன் இந்த குணங்களைச் சொல்கிறது; திருப்பித் திருப்பி சொல்கிறது; குணங்களை அறியாவிட்டால் தோஷம் என்கிறது;

மேலும் வேறுவிதத்தில் நமக்குத் தெரிந்து கொள்ளமுடியாத ப்ரஹ்ம-குணங்களை வேதமே நமக்கு தெரியப்படுத்துகிறது; அப்படியிருக்க அதை வேதமே மறுக்காது; பைத்தியம் பிடித்தவர்கள், தான் சொன்னவார்த்தையை தாமே மறுப்பார்கள்; வேதம் என்பது பைத்தியகாரன் வார்த்தை அல்ல; தெரியாத ஒரு விஷயத்தை நமக்குத் தெரியப்படுத்தி பின்னர் மறுக்கும் செய்கையை வேதம் செய்யாது.

९८. कामाद्यधिकरणम् (३-३-३८)

३९२.कामादीतरत्र तत्र चायतनादिभ्यः (३-३-३८)

- छान्दोग्ये श्रूयते, **''अथ यदिदमस्मिन् ब्रह्मपुरे दहरं पुण्डरीकं वेश्म, दहरोऽस्मिन्नन्तराकाशः तस्मिन् यदन्तस्तदन्वेष्टव्यम्''**(छा.7-1-1)[1] इत्यादि,

- वाजसनेयके च, **''स वा एष महानज आत्मा योऽयं विज्ञानमयः प्राणेषु य एषोऽन्तर्हृदय आकाशः, तस्मिञ्छेते सर्वस्य वशी सर्वस्येशानः''**(बृ.6-4-22)[2] इत्यादि।

तत्र संशयः किमनयोर्विद्याभेदः, उत नेति।

किं युक्तम्? भेद इति। कुतः? रूपभेदात्। अपहतपाप्मत्वादिगुणाष्टकविशिष्ट आकाशः छान्दोग्ये उपास्यः प्रतीयते; वाजनेयके त्वाकाशे शयानो वशित्वादिगुणविशिष्ट उपास्यः प्रतीयते; अतो रूपभेदात् विद्याभेदः,

इति प्राप्ते प्रचक्ष्महे - न भेद इति। कुतः? रूपाभेदात् - **इतरत्र तत्र च** कामाद्येव हि रूपम्। वाजसनेयके छान्दोग्ये च सत्यकामादिविशिष्टमेव ब्रह्मोपास्यमित्यर्थः।

---

98. காமாத்யதிகரணம் (3-3-38)

392.காமாதீதரத்ர தத்ர சாயதநாதிப்ய: (3-3-38)

- சாந்தோக்யே ஸ்ரூயதே, *''அத யதிதமஸ்மிந் ப்ரஹ்மபுரே தஹரம் புண்டரீகம் வேஸ்ம, தஹரோऽஸ்மிந்நந்தராகாஸ: தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம்''*(சா.7-1-1)[1] இத்யாதி,

- வாஜஸநேயகே ச, *''ஸ வா ஏஷ மஹாநஜ ஆத்மா யோऽயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ய ஏஷோऽந்தர்ஹ்ருதய ஆகாஸ:, தஸ்மிஞ்ச்சேதே ஸர்வஸ்ய வஸீ ஸர்வஸ்யேஸாந:''*(ப்ரு.6-4-22)[2] இத்யாதி।

தத்ர ஸம்ஸய: கிமநயோர்வித்யாபேத:, உத நேதி।

கிம் யுக்தம்? **பேத:** இதி। குத:? ரூபபேதாத்। அபஹதபாப்மத்வாதிகுணாஷ்டகவிஸிஷ்ட ஆகாஸ: சாந்தோக்யே உபாஸ்ய: ப்ரதீயதே, வாஜநேயகே து ஆகாஸே ஸயாந: வஸித்வாதிகுணவிஸிஷ்ட: உபாஸ்ய: ப்ரதீயதே, அத: ரூபபேதாத் வித்யாபேத:,

இதி ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - ந **பேத** இதி। குத:? ரூபாபேதாத் - *இதரத்ர தத்ர ச* காமாத்யேவ ஹி ரூபம் - வாஜஸநேயகே சாந்தோக்யே ச ஸத்யகாமாதிவிஸிஷ்டமேவ ப்ரஹ்மோபாஸ்யம் இத்யர்த:।

98.காமாத்யதிகரணம்(3-3-16)

392.காமாதி இதரத்ர தத்ர ச ஆயதநாதிப்ய:(3-3-38)

இருப்பிடம் முதலியவற்றால், காமம் முதலியதே மற்ற இடத்திலும், அங்கும் [சொல்லப்படும் குணம்]ஆகிறது.

விஷயவாக்யம்

சாந்தோக்யத்தில் ஓதப்படுகிறது - [1]**''ப்ரஹ்மத்தின் நகரமாகிற இந்த ஶரீரத்தில் சிறிய தாமரை போன்ற (ஹ்ருதயமாகிற) வீடு எதுவோ, அதன் உள்ளில் எந்த சிறிய ஆகாசம் (ப்ரஹ்மம்) உள்ளதோ, அதன் உள்ளில் எது (எட்டு குணங்கள்) உள்ளதோ, அது (இரண்டும்)அறியப்பட வேண்டும்; உபாஸனம் செய்யப்பட வேண்டும்''** முதலியது.

வாஜஸனேயத்திலும், [2]**''யார் இந்த்ரியங்களில் இருக்கும் ஜ்ஞாநமயனோ, அவன் மஹான், பிறப்பற்றவன் ஆன ஆத்மா; ஹ்ருதயத்தின் உள்ளில் எந்த ஆகாசம் இருக்கிறதோ, அதில் கிடக்கிறான்; எல்லாவற்றையும் வஶத்தில் வைத்திருப்பவன்; எல்லாவற்றையும் ஆள்பவன்''** முதலியது.

ஸந்தேஹம்

அதில் ஸந்தேஹம் - இந்த இரு வாக்யங்களில் வித்யை வேறாகுமா? அல்லது இல்லையா?- என்று.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? வேறாகும் என்பது; ஏன்? ரூபம் வேறாவதால்; அபஹதபாப்மத்வம் முதலிய எட்டு குணங்களுடன் கூடிய ஆகாசமானது சாந்தோக்யத்தில் உபாஸன-விஷயமாகத் தெரிகிறது; (காண்க - தஹராதிகரணம் 1-3-5) வாஜஸனேயத்திலோ, ஆகாசத்தில் கிடப்பவன் வஶித்வம் முதலிய குணங்களுடன் கூடியவனாய் உபாஸன-விஷயமாகத் தெரிகிறான்; ஆகையால், ரூபம்(உபாஸன-விஷயம்) வேறாவதால், வித்யை வேறாகும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம்.

வேறாகாது; ஏன்? ரூபம் (உபாஸன-விஷயம்) வேறாகாததால்.

இதரத்ர தத்ர ச - (வேறிடத்திலும், அங்கும் - வாஜஸனேயத்திலும், சாந்தோக்யத்திலும்)

காமாதி - காமம் முதலியதுதான் ரூபம் (உபாஸன-விஷயம்) ஆகும்; வாஜஸனேயகத்திலும், சாந்தோக்யத்திலும் ஸத்யகாமத்வம் முதலியதுடன் கூடிய ப்ரஹ்மம்தான் உபாஸன-விஷயம் ஆகிறது என்று பொருள். *(ஸத்யகாமத்வம் - அழியாத போகப்பொருள்களை- நித்யவிபூதியை உடைமை)*

कुत एतदवगम्यते? **आयतनादिभ्यः।** हृदयायतनत्वसेतुत्वविधरणत्वादिभिस्तावदुभयत्र सैव विद्येति प्रत्यभिज्ञायते। वशित्वादयश्च वाजसनेयके श्रुताः छान्दोग्यश्रुतस्य गुणाष्टकान्यतमभूतस्य सत्यसङ्कल्पत्वस्य विशेषा एवेति सत्यसङ्कल्पत्वसहचारिणां सत्यकामत्वादीनामपहतपाप्मत्वपर्यन्तानां सद्भावमवगमयन्ति। अतो रूपं न भिद्यते।

संयोगोऽपि,

- **''परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते''**(छा.8-3-4)[1],
- **''अभयं वै ब्रह्म भवति''**(बृ.6-4-25)[2] इति ब्रह्मप्राप्तिरूपो न भिद्यते।

आकाशशब्दः छान्दोग्ये परमात्मविषय इति, **''दहर उत्तरेभ्यः''**(ब्र.सू.1-3-13)[3] इत्यत्र निर्णीतम्। वाजसनेयके त्वाकाशे शयानस्य वशित्वादिश्रवणात् तस्य शयानस्य परमात्मत्वे सति, तदाधाराभिधायिन आकाशशब्दस्य, **''तस्यान्ते सुषिरं सूक्ष्मम्''**(तै.2.11-8)[4] इति हृदयान्तर्गतस्य सुषिरशब्दवाच्यस्या(व)काशस्याभिधायकत्वमवगम्यते। अतो विद्यैक्यम्॥३८॥

குத ஏததவகம்யதே? *ஆயதநாதிப்ய:*। ஹ்ருதயாயதநத்வஸேதுத்வவிதரணத்வாதிபிஸ்தாவத் உபயத்ர ஸைவ வித்யேதி ப்ரத்யபிஜ்ஞாயதே। வஶித்வாதயஶ்ச வாஜஸநேயகே ஶ்ருதா: சாந்தோக்யஶ்ருதஸ்ய குணாஷ்டகாந்யதமபூதஸ்ய ஸத்யஸங்கல்பத்வஸ்ய விஶேஷா ஏவேதி ஸத்யஸங்கல்பத்வஸஹசாரிணாம் ஸத்யகாமத்வாதீநாம் அபஹதபாப்மத்வபர்யந்தாநாம் ஸத்பாவம் அவகமயந்தி। அத: ரூபம் ந பித்யதே।

ஸம்யோகோऽபி,

- *''பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே''*(சா.8-3-4)[1],
- *''அபயம் வை ப்ரஹ்ம பவதி''*(ப்ரு.6-4-25)[2]

இதி ப்ரஹ்மப்ராப்திரூபோ ந பித்யதே।

ஆகாஶஶப்த: சாந்தோக்யே பரமாத்மவிஷய இதி, *''தஹர உத்தரேப்ய:''* (ப்ர.ஸூ.1-3-13)[3] இத்யத்ர நிர்ணீதம்। வாஜஸநேயகே து ஆகாஶே ஶயாநஸ்ய வஶித்வாதிஶ்ரவணாத் தஸ்ய ஶயாநஸ்ய பரமாத்மத்வே ஸதி, ததாதாராபிதாயிந: ஆகாஶஶப்தஸ்ய, *''தஸ்யாந்தே ஸுஷிரம் ஸூக்ஷ்மம்''* (தை.2.11-8)[4] இதி ஹ்ருதயாந்தர்கதஸ்ய ஸுஷிரஶப்தவாச்யஸ்ய ஆகாஶஸ்யாபிதாயகத்வமவகம்யதே। அத: வித்யைக்யம்।।38।।

* * *

இது எப்படி தெரிகிறது?

ஆயதநாதிப்ய: - (இருப்பிடம் முதலியவற்றால்) ஹ்ருதயத்தை இடமாகக் கொண்டிருத்தல், சேதுவாதல், தரித்தல் முதலியவற்றால், இரண்டு இடத்திலும் அதே வித்யைதான் என்று ஒன்றாக அறியப்படுகிறது;

வாஜஸனேயகத்தில் சொல்லப்பட்ட வசித்வம் முதலியவை, சாந்தோக்யத்தில் சொல்லப்பட்ட எட்டு குணங்களில் ஒன்றான ஸத்ய-ஸங்கல்பத்வம் என்பதின் விசேஷங்களே (ஸமானாதிகரணம் காண்க- 3-3-6.); ஆகையால், அவை, ஸத்ய-ஸங்கல்பத்வம் என்பதுடன், கூடவே வருபவையான ஸத்யகாமத்வம் முதல் அபஹதபாப்மத்வம் வரை இருப்பதைத் தெரிவிக்கின்றன; ஆகையால் ரூபம் வேறல்ல.

✍*(சாந்தோக்யத்தில் சொன்ன எட்டு குணங்களில் ஸத்யஸங்கல்பம் என்று எட்டாவது குணம்; அதனை வாஜஸனேயகம் "ஸர்வஸ்ய வசீ, ஸர்வஸ்ய ஈசாந:" என்று விளக்குகிறது; இதனை ஸமான-அதிகரணத்தில் முன்பே பார்த்தோம். எனவே, எட்டாவது குணம் உண்டு என்றால், மற்ற ஏழு குணங்களும் கூடவேஉண்டு என தெரிகிறது; ஏழாவது முதல் ஒன்றாவது வரை - ஸத்யகாமத்வம் முதல் அபஹதபாப்மத்வம் வரை இரண்டு இடத்திலும் உள்ளதாக கொள்ள வேண்டும்).*✍

★ [1]**"பர-ப்ரஹ்மத்தை அடைந்து தன் ஸ்வரூபத்துடன் ஆகிறான்",**

★ [2]**"அபயம் ஆகிற ப்ரஹ்மம் ஆகிறான்"**

என்று ப்ரஹ்மத்தை அடைதல் என்பதான பலனும் வேறாகவில்லை.

சாந்தோக்யத்தில், 'ஆகாசம்' எனும் சொல்லானது, பரமாத்மாவைப் பற்றியது என்று **"தஹர உத்தரேப்ய:"** (தஹராதிகரணம் 1-3-5) என்னுமிடத்தில் நிர்ணயிக்கப் பட்டது;

வாஜஸனேயகத்திலோ, ஆகாசத்தில் கிடப்பவனுக்கு வசித்வம் முதலியது சொல்லப்படுகிறது; அதனால், கிடக்கின்ற அவன் பரமாத்மா என ஆகும்; அப்போது, அவனுடைய கிடக்குமிடத்தைச் சொல்லும் 'ஆகாசம்' எனும் சொல்லானது, (ஹ்ருதய-குகை ஆகிற) ஆகாயத்தைச் சொல்வதாக தெரிகிறது. (தைத்திரீயத்தில் சொன்னபடி) **"அந்த ஹ்ருதயத்தின் உள்ளில் ஸூக்ஷ்மமான ஆகாசம்"** என்று ஹ்ருதயத்தில் உட்பட்டதும் 'ஸுஷிரம்' என்ற சொல்லுக்கு பொருளும் ஆன ஆகாசம் ஆகும். (முன் குறிப்பு காண்க)

ஆகையால், (இரண்டு இடத்திலும், ஹ்ருதய-ஆகாசத்தில் இருக்கும் பரமாத்மாதான் சொல்லப்படுகிறான் என்பதால்) வித்யை ஒன்றுதான்.

◆ ◆ ◆

अथ स्यात् - यदुक्तम् - वाजसनेयके वशित्वादिभिः सह सत्यकामत्वादिसद्भावोऽवगम्यते इति, तन्नोपपद्यते ; वशित्वादीनामेव तत्र परमार्थतोऽसद्भावात् ; तदभावश्च, **''मनसैवानुद्रष्टव्यं नेह नानाऽस्ति किञ्चन। मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति॥''**(बृ.6-4-19)[1] **''एकधैवानुद्रष्टव्यमेतदप्रमेयं ध्रुवम्''**(बृ.6-4-20)[2] इति प्रकृतेन वाक्येन, **''स एष नेति नेत्यात्मा''**(बृ.6-4-21)[3] इत्युत्तरेण चोपास्यस्य ब्रह्मणो निर्विशेषत्वप्रतीतेरवगम्यते। अतो वशित्वादयोऽपि स्थूलत्वाणुत्ववत् निषेध्या इति प्रतीयन्ते। अत एव छान्दोग्येऽपि सत्यकामत्वादयो न ब्रह्मणः पारमार्थिका गुणा उच्यन्ते, अतोऽपारमार्थिकत्वादेवंजातीयकानां गुणानां मोक्षार्थेषूपासनेषु लोप इति; तत्राह -

३९३.आदरादलोपः (३-३-३९)

ब्रह्मगुणत्वेन प्रमाणान्तराप्राप्तानां गुणानामेषां सत्यकामत्वादीनाम्,

- **''तस्मिन् यदन्तस्तदन्वेष्टव्यम्''**(छा.8-1-1)[4], **''एष आत्माऽपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः''**(छा.8-1-5)[5],
- **''सर्वस्य वशी सर्वस्येशानः एष सर्वेश्वर एष भूताधिपतिरेष भूतपाल एष सेतुर्विधरण एषां लोकानामसम्भेदाय''**(बृ.6-4-22)[6]

அத ஸ்யாத் - யதுக்தம், வாஜஸநேயகே வஶித்வாதிபி: ஸஹ ஸத்யகாமத்வாதிஸத்பாவ: அவகம்யதே இதி, தந்நோபபத்யதே; வஶித்வாதீநாமேவ தத்ர பரமார்தத: அஸத்பாவாத், ததபாவஶ்ச, *''மநஸைவாநுத்ரஷ்டவ்யம் நேஹ நாநாऽஸ்தி கிஞ்சந। ம்ருத்யோ: ஸ ம்ருத்யுமாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி''*(ப்ரு.6-4-19)[1] *''ஏகதைவாநுத்ரஷ்டவ்யமேததப்ரமேயம் த்ருவம்''*(ப்ரு.6-4-20)[2] இதி ப்ரக்ருதேந வாக்யேந, *''ஸ ஏஷ நேதி நேத்யாத்மா''*(ப்ரு.6-4-20)[3] இத்யுத்தரேண ச உபாஸ்யஸ்ய ப்ரஹ்மணோ நிர்விஶேஷத்வப்ரதீதே: அவகம்யதே। அத: வஶித்வாதயோऽபி ஸ்தூலத்வாணுத்வவத் நிஷேத்யா இதி ப்ரதீயந்தே। அத ஏவ சாந்தோக்யேऽபி ஸத்யகாமத்வாதயோ ந ப்ரஹ்மண: பாரமார்திகா குணா உச்யந்தே, அத: அபாரமார்திகத்வாத் ஏவம்ஜாதீயகாநாம் குணாநாம் மோக்ஷார்தேஷு உபாஸநேஷு லோப: இதி; தத்ராஹ -

393.ஆதராதலோப: (3-3-39)

ப்ரஹ்மகுணத்வேந ப்ரமாணாந்தராப்ராப்தாநாம் குணாநாமேஷாம் ஸத்யகாமத்வாதீநாம்,

- *''தஸ்மிந் யதந்தஸ்ததந்வேஷ்டவ்யம்''*,(சா.8-1-1)[4] *''ஏஷ ஆத்மாऽபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:''*(சா.8-1-5)[5],
- *''ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந:'' ''ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ பூதாதிபதிரேஷ பூதபால ஏஷ ஸேதுர்விதரண ஏஷாம் லோகாநாமஸம்பேதாய''*(ப்ரு.6-4-22)[6]

கேள்வி - வாஜஸனேயகத்தில் வஶித்வம் முதலியவற்றுடன் கூட ஸத்யகாமத்வம் முதலியவையும் இருப்பது தெரிகிறது என்று சொன்னது எதுவோ, அது சரியாகாது; ஏனெனில், வஶித்வம் முதலியவையே கூட உண்மையில் அங்கு இருப்பதில்லை; அது இல்லை என்பது,

- [1]**''பின்னர் மனஸ்ஸாலேயே காண வேண்டும்; இங்கும் பலவாக எதுவும் இல்லை; யார் பல இருப்பது போல காண்கிறானோ, அவன் ஸம்ஸாரத்திலிருந்து ஸம்ஸாரத்தையே அடைகிறான்''.**

- [2]**''அளவற்ற நிலையான இந்த ப்ரஹ்மம் ஒன்றாகவே காணப்பட வேண்டும்''**

என்று இந்த இடத்தில் சொல்ல ஆரம்பிக்கப்பட்ட வாக்யத்தாலும்,

- [3]**''இந்த ஆத்மா இப்படி அல்ல இப்படி அல்ல''**

என்ற பின் வாக்யத்தாலும், உபாஸன-விஷயமான ப்ரஹ்மம் ஆனது ஒரு விசேஷதன்மையும் அற்றது என தெரிவதால், புரிந்து கொள்ளப் படுகிறது; ஆகையால், வசித்வம் முதலியவையும் கூட ஸ்தூலத்வம், அணுத்வம் ஆகியவை போல மறுக்கப்பட வேண்டியவை என்றே தெரிகின்றன; எனவேதான், சாந்தோக்யத்திலும் ஸத்யகாமத்வம் முதலியவை ப்ரஹ்மத்தின் உண்மையான குணங்களாக சொல்லப்படவில்லை; ஆகையால், இப்படிப்பட்ட வகையைச் சேர்ந்த குணங்களுக்கு மோக்ஷ-பலனுக்கான உபாஸனங்களில் லோபம் (மறுக்கப்பட்டு இல்லாமை) ஆகும் - என்று. (இவற்றை உபாஸனம் செய்யக் கூடாது)

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

396.ஆதராத் அலோப: (3-3-39)

[குணங்களுக்கு] ஆதரவு ஆவதால் மறுக்கப்பட்டு இல்லாமை கிடையாது.

இந்த ஸத்யகாமத்வம் முதலிய குணங்கள், ப்ரஹ்மத்தின் குணங்களாக வேறு ப்ரமாணத்தின் மூலம் தெரியாதவை.

- [4]**''அந்த ப்ரஹ்மத்தின் உள்ளில் எது (எட்டு-குணம்) இருக்கிறதோ, அது அறியப்பட வேண்டும்''** [5]**''இந்த பரமாத்மா அபஹதபாப்மா (கர்மம் அற்றவன்), மூப்பற்றவன், மரணமற்றவன், சோகமற்றவன், பசியற்றவன், தாகமற்றவன், ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன்''**

- [6]**''எல்லாவற்றையும் வசத்தில் கொண்டவன்; எல்லாவற்றையும் ஆள்பவன் இவன் ஸர்வேச்வரன், உயிரினங்களின் ஶேஷீ (ஸ்வாமி), உயிரிகளை ரக்ஷிப்பவன், இந்த உலகப் பொருள்கள் கலந்து போகாமல் இருப்பதற்காக இவற்றை தரிக்கும் சேது (அணை) இவன்''**

इत्यादिभिरनयोः श्रुत्योरन्यासु च मोक्षार्थोपासनोपास्यब्रह्मगुणत्वेन सादरमुपदेशात् एषामलोपः; अपि तूपसंहार एव कार्यः।

- छान्दोग्ये तावत्, ‘‘**तत् य इहाऽत्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान् कामान्, तेषां सर्वेषु लोकेषु कामचारो भवति**’’(छा.8-1-6)[1] इति सत्यकामत्वादिगुणविशिष्टस्य ब्रह्मणो वेदनमभिधाय,
- ‘‘**अथ य इहाऽऽत्मानमननुविद्य व्रजन्त्येतांश्च सत्यान् कामान् तेषां सर्वेषु लोकेष्वकामचारो भवति**’’(छा.8-1-6)[2] इत्यवेदननिन्दा क्रियमाणा गुणविशिष्टवेदनस्यादरं दर्शयति।
- तथा वाजसनेयके, ‘‘**सर्वस्य वशी सर्वस्येशानः, एष सर्वेश्वर एष भूताधिपतिरेष भूतपालः**’’(बृ.6-4-22)[3] इति भूयोभूय ऐश्वर्योपदेशात् गुणेष्वादरः प्रतीयते। एवमन्यत्रापि।

न च मातापितृसहस्रेभ्योऽपि वत्सलतरं शास्त्रं प्रतारकवत् अपारमार्थिकान् निरसनीयान् गुणान् प्रमाणान्तराप्रतिपन्नान् आदरेणोपदिश्य, संसारचक्रपरिवर्तनेन पूर्वमेव बम्भ्रम्यमाणान् मुमुक्षून् भूयोऽपि भ्रमयितुमलम्।

‘‘**नेह नानाऽस्ति किञ्चन**’’(बृ.6-4-19)[4], ‘‘**एकधैवानुद्रष्टव्यम्**’’(बृ.6-4-20)[5]

இத்யாதிபி: அநயோ: ஶ்ருத்யோ: அந்யாஸு ச மோக்ஷார்தோபாஸநோபாஸ்யப்ரஹ்மகுணத்வேந ஸாதரமுபதேஶாத் ஏஷாமலோப:, அபிது உபஸம்ஹார ஏவ கார்ய:।

- சாந்தோக்யே தாவத், *“தத்ய இஹாऽத்மாநமநுவித்ய வ்ரஜந்த்யேதாம்ஶ்ச ஸத்யாந் காமாந், தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோ* **ப***வதி”* (சா.8-1-6)[1] இதி ஸத்யகாமத்வாதிகுணவிஶிஷ்டஸ்ய ப்ரஹ்மணோ வேதநமபிதாய,
- *“அத ய இஹாऽऽத்மாநமநநுவித்ய வ்ரஜந்த்யேதாம்ஶ்ச ஸத்யாந் காமாந் தேஷாம் ஸர்வேஷு லோகேஷ்வகாமசாரோ* **ப***வதி”*(சா.8-1-6)[2] இத்யவேதநநிந்தா க்ரியமாணா குணவிஶிஷ்டவேதநஸ்ய ஆதரம் தர்ஶயதி।
- ததா வாஜஸநேயகே, *“ஸர்வஸ்ய வஶீ ஸர்வஸ்யேஶாந:....ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ* **பூ***தாதிபதிரேஷ* **பூ***தபால:”*(ப்ரு.6-4-22)[3] இதி பூயோபூய ஐஶ்வர்யோபதேஶாத் குணேஷ்வாதர: ப்ரதீயதே। ஏவமந்யத்ராபி।

ந ச மாதாபித்ருஸஹஸ்ரேப்யோऽபி வத்ஸலதரம் ஶாஸ்த்ரம் ப்ரதாரகவத் அபாரமார்திகாந் நிரஸநீயாந் குணாந் ப்ரமாணாந்தராப்ரதிபந்நாந் ஆதரேணோபதிஶ்ய, ஸம்ஸாரசக்ரபரிவர்தநேந பூர்வமேவ பம்ப்ரம்யமாணாந் முமுக்ஷூந் பூயோऽபி ப்ரமயிதுமலம்।

“நேஹ நாநாऽஸ்தி கிஞ்சந” (ப்ரு.6-4-19)[4] *“ஏகதைவாநுத்ரஷ்டவ்யம்”*[5]

முதலியவற்றால், இந்த இரு வேதவாக்யங்களிலும், பிற வாக்யங்களிலும் மோக்ஷபலனுக்கான உபாஸனத்தில், உபாஸனம் செய்யப்பட வேண்டிய ப்ரஹ்மகுணங்களாக இவற்றை ஆதரவுடன் உபதேசம் செய்வதால், இவற்றுக்கு லோபம் (இல்லாமை) கிடையாது; மாறாக சேர்த்துக் கொள்ளுதல்தான் செய்யப்பட வேண்டும்.

சாந்தோக்யத்திலோ,

✱ [1]''**யார் இந்த பரமாத்மாவையும் இந்த நித்யங்களான குணங்களையும் உபாஸனம் செய்து (மேலுலகம்) செல்கினறனரோ, அவருக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி ஸஞ்சாரம் ஆகும்**''

என்று ஸத்யகாமத்வம் முதலிய குணங்களுடன் கூடிய ப்ரஹ்மத்தை உபாஸனம் செய்வதை சொல்லி,

✱ [2]''**யார் இந்த பரமாத்மாவையும் இந்த நித்யங்களான குணங்களையும் உபாஸனம் செய்யாமல் (மேலுலகம்) செல்கினறனரோ, அவருக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி ஸஞ்சாரம் ஆகாது**''

என்று (குணங்களை) உபாஸனம் செய்யாது இருத்தல் நிந்தனம் செய்யப்படுகிறது;

அது, குணங்களுடன் கூடியதாக உபாஸனம் செய்வதில் ஆதரவை காண்பிக்கிறது; அப்படியே வாஜஸனேயகத்தில் -

✱ [3]''**எல்லாவற்றையும் வசத்தில் கொண்டவன்; எல்லாவற்றையும் ஆள்பவன் .. இவன் ஸர்வேச்வரன், உயிரினங்களின் சேஷீ(ஸ்வாமி), உயிரிகளை ரக்ஷிப்பவன்**''

என்று மீண்டும் மீண்டும் ஐச்வர்யத்தை (ஆளுமையை) உபதேசம் செய்வதால், குணங்களில் ஆதரவு தெரிகிறது. இப்படியே பிற இடங்களிலும் தெரிகிறது.

ஆயிரம் தாய்-தந்தையரை விட அதிக அன்புடைய ஶாஸ்த்ரமானது, ஏமாற்றுபவன் போல, வேறு ப்ரமாணங்களால் தெரியாதவையும் பொய்யானவையும், களையத்தக்கவையுமான குணங்களை ஆதாவுடன் உபதேசம் செய்து, ஸம்ஸாரசக்ர-சுழற்சியால் முன்பே சுற்றிக் கொண்டிருக்கும் முமுக்ஷுக்களை (மோக்ஷத்தை அடைய விரும்புபவர்களை) மறுபடியும் கூடுதலாக சுற்ற வைக்க முடியாது.

[4]''**இங்கு பலவாக எதுவும் இல்லை**'',

[5]''**ஒன்றாகவே காண வேண்டும்**''

इति तु सर्वस्य ब्रह्मकार्यत्वेन तदात्मकत्वादेकधाऽनुदर्शनं विधाय अब्रह्मात्मकत्वेन पूर्वसिद्धनानात्वदर्शनं निषेधतीत्ययमर्थः प्रागेव प्रपञ्चितः।

''स एष नेति नेत्यात्मा'' (बृ.6-4-22)[1] इत्यत्र च, इतिशब्देन प्रमाणान्तरप्रतिपन्नं प्रपञ्चाकारं परामृश्य, न तथाविधं ब्रह्मेति सर्वात्मभूतस्य ब्रह्मणः प्रपञ्चविलक्षणत्वं प्रतिपाद्यते। तदेव चानन्तरमुपपादयति, **''अग्राह्यः; न हि गृह्यते। अशीर्यः; न हि शीर्यते। असङ्गः; न हि सज्यते। अव्यथितः; न व्यथते, न रिष्यति''**(बृ.6-4-22)[2] इति; प्रमाणान्तरग्राह्यविसजातीयत्वात् प्रमाणान्तरेण न गृह्यते; विशरणीयविसजातीयत्वान्न विशीर्यते; एवमुत्तरत्रानुसन्धेयम्।

छान्दोग्येऽपि, **''नास्य जरयैतज्जीर्यति, न वधेनास्य हन्यते; एतत् सत्यं ब्रह्मपुरम्। अस्मिन् कामाः समाहिता''**(छा.8-1-5)[3] इति सर्वविसजातीयत्वं ब्रह्मणः प्रतिपाद्य तस्मिन् सत्यकामत्वादयो विधीयन्ते॥ ३९ ॥

* * *

नन्वेवमपि,

- **''तद्य इहाऽऽत्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान् कामान्, तेषां सर्वेषु लोकेषु कामचारो भवति''**(छा.8-1-6)
- **''स यदि पितृलोककामो भवति''**(छा.8-2-1)[5]

(ப்ரு.6-4-20)இதி து ஸர்வஸ்ய ப்ரஹ்மகார்யத்வேந ததாத்மகத்வாத் ஏகதாऽநுதர்ஶநம் விதாய அப்ரஹ்மாத்மகத்வேந பூர்வஸித்தநாநாத்வதர்ஶநம் நிஷேதுதீத்யயமர்த: ப்ராகேவ ப்ரபஞ்சித:।

''ஸ ஏஷ நேதி நேத்யாத்மா''(ப்ரு.6-4-22)[1] இத்யத்ர ச, இதிஶப்தேந ப்ரமாணாந்தரப்ரதிபந்நம் ப்ரபஞ்சாகாரம் பராம்ருஶ்ய, ந ததாவிதம் ப்ரஹ்மேதி ஸர்வாத்மபூதஸ்ய ப்ரஹ்மண: ப்ரபஞ்சவிலக்ஷணத்வம் ப்ரதிபாத்யதே। ததேவ ச அநந்தரமுபபாதயதி, *''அக்ராஹ்ய:, ந ஹி க்ருஹ்யதே। அஶீர்ய:, ந ஹி ஶீர்யதே। அஸங்க:, ந ஹி ஸஜ்யதே। அவ்யதித:, ந வ்யததே, ந ரிஷ்யதி''* (ப்ரு. 6-4-22)[2] இதி। ப்ரமாணாந்தரக்ராஹ்யவிஸஜாதீயத்வாத் ப்ரமாமாந்தரேண ந க்ருஹ்யதே, விஶரணீயவிஸஜாதீயத்வாத் ந விஶீர்யதே, ஏவமுத்தரத்ராநுஸந்தேயம்।

சாந்தோக்யேऽபி, *''நாஸ்ய ஜரயைதஜ்ஜீர்யதி, ந வதேநாஸ்ய ஹந்யதே, ஏதத் ஸத்யம் ப்ரஹ்மபுரம்। அஸ்மிந் காமா: ஸமாஹிதா:''*(சா.8-1-5)[3] இதி ஸர்வவிஸஜாதீயத்வம் ப்ரஹ்மண: ப்ரதிபாத்ய தஸ்மிந் ஸத்யகாமத்வாதயோ விதீயந்தே।। 39 ।।

* * *

நந்வேவமபி,

- *''தத் ய இஹாऽऽத்மாநமநுவித்ய வ்ரஜந்த்யேதாம்ஶ்ச ஸத்யாந் காமாந், தேஷாம் ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி।''* (சா.8-1-6)[4]
- *''ஸ யதி பித்ருலோககாமோ பவதி''* (சா.8-2-1)[5]

என்பதோ, எல்லா பொருளுமே ப்ரஹ்மத்திலிருந்து உண்டாகும் கார்ய-பொருளாக ஆவதால், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டதாவதால், ஒரே முறையில் காணப்பட வேண்டியதை விதித்து, ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொள்ளாமல் பலவிதமாக முன்பு தெரிந்த முறையில் காண்பதைத்தடுக்கிறது. இப்படியான இந்த அர்த்தம் முன்பே விரித்துரைக்கப் பட்டது.

[1]**''இந்த ஆத்மா இப்படி அல்ல; இப்படி அல்ல''** என்னுமிடத்திலும், 'இப்படி' எனும் சொல்லால், பிற ப்ரமாணங்களால் தெரியும் ப்ரபஞ்ச-உருவைக் குறிப்பிட்டு, ப்ரஹ்மம் அப்படிப்பட்டது அல்ல என்கிறது; இப்படி எல்லாவற்றுக்கும் ஆத்மாவான ப்ரஹ்மம் ஆனது, ப்ரபஞ்சத்தை விட வேறு வகையானது என சொல்லப் படுகிறது.

அதையே பின்னர் - [2]**''(பிறப்ரமாணத்தால்) அறியப்படாததால் அறியத்தக்கபொருளை விட வேறானவன்; அழியாததாதலால் அழியத்தக்க பொருளை விட வேறானவன்; ஒட்டாதபடியால் ஒட்டும் பொருளை விட வேறானவன்; துன்பமடையாததால் துன்புறும் பொருளை விட வேறானவன்; துன்புறுத்தப் படுவதில்லை''** என்று விளக்குகிறது. பிற ப்ரமாணங்களால் அறியத்தக்க பொருள்களை விட வேறு வகையினன் என்பதால், பிறப்ரமாணத்தால் அறியப்படுவதில்லை; அழியக் கூடிய பொருளை விட வேறாவதால் அழிவதில்லை; இப்படி பின்னரும் அர்த்தம் எண்ணிக் கொள்ள வேண்டும்.

சாந்தோக்யத்திலும், [3]**''இந்த ஶரீரத்தின் மூப்பால், இவன் மூப்படைவதில்லை; ஶரீரத்தைக் கொல்வதால், இவன் கொல்லப் படுவதில்லை; இது ஸத்யமான (மாறாத) ப்ரஹ்மம் எனும் புரம் (நகரம்); இதில் காமங்கள்(போகப் பொருள்கள் முதலியவை) சேர்ந்துள்ளன''** என்று எல்லாவற்றை விட வேறு வகையினனாக ப்ரஹ்மத்தை அறிவித்து, அதில் ஸத்யகாமத்வம் முதலியவை விதிக்கப் படுகின்றன.

◆ ◆ ◆ ◆

கேள்வி - இப்படியானாலும்,

- [4]**''யார் இந்த பரமாத்மாவையும் நித்யங்களான இந்த குணங்களையும் உபாஸனம் செய்து (மேலுலகம்) செல்கின்றனரோ, அவருக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி ஸஞ்சாரம் ஆகும்''**,
- [5]**''அவன் பித்ருவர்க்கத்தை விரும்பினால்''**

इत्यादिना सत्यकामादिगुणविशिष्टवेदनस्य सांसारिकफलसम्बन्धश्रवणात् मुमुक्षोर्ब्रह्मप्रेप्सोर्न सगुणं ब्रह्मोपास्यम्; परविद्याफलं च, **"परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते"**(छा.8-3-4)[1] इतीदमेव। अतः सत्यकामत्वादयो ब्रह्मप्रेप्सोर्नोपसंहार्या इति; अत उत्तरं पठति -

३९४.उपस्थितेऽतस्तद्वचनात् (३-३-४०)

उपस्थितिः - उपस्थानम्। ब्रह्मोपसम्पन्ने सर्वबन्धविनिर्मुक्ते स्वेन रूपेणाभिनिष्पन्ने प्रत्यगात्मनि, **अत** एव उपसम्पत्तेरेव हेतोः सर्वेषु लोकेषु कामचार उच्यते -

★ **"परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते"**(छा.8-3-4)[2] **"स उत्तमः पुरुषः। स तत्र पर्येति जक्षत् क्रीडन् रममाणः स्त्रीभिर्वा यानैर्वा ज्ञातिभिर्वा, नोपजनं स्मरन्निदं शरीरम्"**(छा.8-12-3)[3],

★ **"स स्वराड्भवति। तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति"** (छा.7-25-2)[4] इति।

तदेतत् चतुर्थे निपुणतरमुपपादयिष्यते।

अतः सर्वेषु लोकेषु कामचारस्य मुक्तोपभोग्यफलत्वात् मुमुक्षोः सत्यकामत्वादयो गुणा उपसंहार्याः॥४०॥

इति कामाद्यधिकरणम्॥१६॥

இத்யாதிநா ஸத்யகாமாதிகுணவிஶிஷ்டவேதநஸ்ய ஸாம்ஸாரிகபலஸம்பந்தஶ்ரவணாத் முமுக்ஷோ: ப்ரஹ்மப்ரேப்ஸோ: ந ஸகுணம் ப்ரஹ்ம உபாஸ்யம்। பரவித்யாபலம் ச, *"பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே"*(சா.8-3-4)[1] இதீதமேவ। அத: ஸத்யகாமத்வாதய: ப்ரஹ்மப்ரேப்ஸோ: நோபஸம்ஹார்யா இதி, அத உத்தரம் படதி -

394. உபஸ்திதேऽதஸ்தத்வசநாத் (3-3-40)

உபஸ்திதி: - உபஸ்தாநம்। ப்ரஹ்மோபஸம்பந்நே ஸர்வபந்தவிநிர்முக்தே ஸ்வேந ரூபேணாபிநிஷ்பந்நே ப்ரத்யகாத்மநி, அத ஏவ உபஸம்பத்தேரேவ ஹேதோ: ஸர்வேஷு லோகேஷு காமசார உச்யதே -

★ *"பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே।"*(சா.8-3-4)[2] *"ஸ உத்தம: புருஷ:। ஸ தத்ர பர்யேதி ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யாநைர்வா ஜ்ஞாதிபிர்வா, நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்"*(சா.8-12-3)[3],

★ *"ஸ ஸ்வராட் பவதி। தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி"* (சா.7-25-2)[4] இதி।

ததேதத் சதுர்தே நிபுணதரமுபபாதயிஷ்யதே। அத: ஸர்வேஷு லோகேஷு காமசாரஸ்ய முக்தோபபோக்யபலத்வாத் முமுக்ஷோ: ஸத்யகாமத்வாதயோ குணா உபஸம்ஹார்யா:।। 40 ।।

இதி காமாத்யதிகரணம் ।। 16 ।।

முதலியதால், ஸத்யகாமத்வம் முதலிய குணங்களுடன் கூடியவனாக உபாஸனம் செய்வதற்கு, ஸம்ஸாரத்தில் இருக்கும் பலன்-தொடர்பு வேதத்தில் சொல்லியுள்ளது; ஆகையால், மோக்ஷத்தை விரும்புபவனாய் ப்ரஹ்மத்தை அடைய விரும்புபவனுக்கு குணங்களுடன் கூடிய ப்ரஹ்மம் உபாஸனம் செய்யத் தக்கதல்ல; உயர்ந்த ப்ரஹ்ம-வித்யையின் பலனோ, [1]**''பர-ப்ரஹ்மத்தை அடைந்து தன் ஸ்வரூபத்துடன் ஆகிறான்''** என்னும் இதுதான்; ஆகையால், ப்ரஹ்மத்தை அடைய விரும்புபவனுக்கு ஸத்யகாமத்வம் முதலியவை உபாஸனத்தில் சேர்த்துக் கொள்ளத் தக்கவை அல்ல என்று.

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

394.உபஸ்திதே அத: தத்வசநாத்(3-3-40)

ப்ரஹ்மத்தை அடைந்தவனிடம் அதனாலேயே அதனை [லோகசஞ்சாரம் முதலியதை] சொல்வதால்.

உபஸ்திதி: - உபஸ்தானம் - ப்ரஹ்மத்தை அடைதல்.

உபஸ்திதே (அடைந்தவனிடம்) - ப்ரஹ்மத்தை அடைந்தவனிடத்தில்; எல்லா பந்தங்களிலிருந்தும் விடுபட்டவனாய் தன் ஸ்வரூபத்துடன் ஆனவனான ஜீவனிடத்தில்,

அத: (அதனாலேயே) - அந்த அடைதல் எனும் காரணத்தாலேயே

தத்வசநாத் (அதனைச் சொல்வதால்)- எல்லா உலகங்களிலும் விருப்பப்படி சஞ்சாரம் சொல்லப்படுகிறது -

- [2]**''பர-ப்ரஹ்மத்தை அடைந்து தன் ஸ்வரூபத்துடன் ஆகிறான்''** [3]**''அடையப்படும் அவன் புருஷோத்தமன்; மோக்ஷம் பெற்றவன் உண்பவனாய், விளையாடுபவனாய் பெண்களுடனும், வாகனங்களுடனும், உறவினர்களுடனும் களிப்பவனாய் உறவினர்களுடன் கூடியிருந்த (ஜன-உறவினால் விளைந்த) இந்த ஶரீரத்தை நினைக்காமல் அந்த உத்தமபுருஷனை சுற்றிலுமாக அனுபவிக்கிறான்''.**
- [3]**''அவன் (கர்மத்துக்கு வசப்படாமல்) ஸ்வதந்த்ரனாக ஆகிறான்; அவனுக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி சஞ்சாரம் ஆகும்''** - என்று.

இது நான்காம் அத்யாயத்தில் (4-4-8 - 4-4-19 ஸூத்ரங்களில்) மிக நன்றாக விளக்கப்படப் போகிறது.

ஆகவே, எல்லா உலகங்களிலும் விருப்பப்படி சஞ்சரித்தல் என்பது மோக்ஷம் பெற்றவன் அனுபவிக்கும் பலன் ஆகும்; ஆகையால், மோக்ஷத்தை விரும்புபவனுக்கும் ஸத்யகாமத்வம் முதலிய குணங்கள் உபாஸனத்தில் சேர்த்துக் கொள்ளத் தக்கவையே.

* * *

காமாத்யதிகரணம் முற்றிற்று

99.தந்நிர்தாரணாநியமாதிகரணம்(3-3-17)

முன் குறிப்பு

யாகத்தில் உத்கீதம் என்று ஒரு அங்கம் உள்ளது; அந்த உத்கீதத்தைப் பற்றிய உபாஸனங்கள் சிலவற்றை உபநிஷத் சொல்கிறது;

இது பற்றி விவரமாக பின்-இணைப்பில் கட்டுரையில் காணலாம்.

இந்த உத்கீத-உபாஸனங்களை யாகத்தில் கட்டாயம் செய்ய வேண்டுமா? அல்லது அந்த நியமம் கிடையாதா என்று விசாரம்.

பூர்வபக்ஷம் - கட்டாயம் செய்ய வேண்டும்.

ஸித்தாந்தம் - உத்கீத-உபாஸனத்தை செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை; உத்கீத-உபாஸனத்துக்கு ஒரு பலனை வேதம் சொல்கிறது. யாக-பலனில் தடையின்மை என்பதுதான் அந்த பலன்; அதாவது யாகம் மூலம் ஒரு பலன் பிற்காலத்தில் கிடைக்கும்; அந்த பலன் சிலசமயம் வேறொரு வலுவான கர்மவசத்தால் தடைபடலாம்; அந்த தடையை போக்குவதுதான் உத்கீத-உபாஸனத்தின் பலன்; இந்த பலன் வேண்டும் என விரும்புபவர் இந்த உபாஸனம் செய்யலாம்; இதை தேவையில்லை என நினைப்பவர் உபாஸனம் செய்ய வேண்டிய தேவையில்லை.

பூர்வபக்ஷம் - இந்த பலனை வேதம் சொன்னாலும், பலன் சொல்வதில் வேதத்துக்கு நோக்கம் இல்லை; கட்டாயம் செய்ய வேண்டும் என்று தான் வேதத்தின் கருத்து; (உ.ம்) யாகத்தில், ஜுஹூ எனும் யாக-பாத்ரத்தை பலாசமரத்தால் செய்ய வேண்டும் என்று சொல்லும் வேதம் அதற்கு ஒரு பலனை சொல்கிறது; ஆனாலும், பலனை வேண்டுபவர்களும் வேண்டாதவர்களும் எல்லாருமே பலாச மரத்தால்தான் ஜுஹூ செய்ய வேண்டும் என்னும் விதி கட்டாய-நியமம் ஆகும். அதை மீமாம்ஸா ஶாஸ்த்ரம் சொல்கிறது; அதுபோல இந்த உத்கீத உபாஸனமும் கட்டாயம் செய்ய வேண்டியதுதான்.

ஸித்தாந்தம் - யாகத்தில்,உத்கீத-உபாஸனம்செய்ய வேண்டிய கட்டாய்-நியமம் இல்லை என்பதை வேதம் தெளிவாக சொல்கிறது -''யார் உபாஸனம் செய்கிறாரோ, யார் உபாஸநம் செய்யவில்லையோ, இருவருமே உத்கீதம் மூலம் யாகம் செய்கின்றனர்'' என்று சொல்கிறது.

எனவே, அந்த தனிப்பலன் வேண்டுபவர் செய்யலாம்; இல்லையெனில் செய்ய வேண்டாம்; யாகத்தில் கோதோஹநம் போல இங்கே ஆகும்.

விரிவாக பின் இணைப்பில் கட்டுரைத் தொகுப்பில் காணலாம்.

९९.तन्निर्धारणानियमाधिकरणम् (३-३-१७)

३९५.तन्निर्धाणानियमः तद्दृष्टेः; पृथग्घ्यप्रतिबन्धः फलम् (३-३-४१)

''**ओमित्येतदक्षरमुद्गीथमुपासीत**''(छा.1-1-1)[1] इत्यादीनि कर्माङ्गाश्रयाण्युपासनानि, कर्माङ्गभूतोद्गीथादिमुखेन जुह्वादिमुखेन पर्णतादिवत्, कर्माङ्गत्वेन निरूढानुष्ठानानीति, उद्गीथोपासनसम्बन्धिनः, ''**यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा, तदेव वीर्यवत्तरं भवति**''(छा.1-1-10)[2] इति वर्तमाननिर्देशस्य पर्णतादिसम्बन्ध्यपापश्लोकश्रवणवत् पृथक्फलत्वकल्पनायोगात् क्रतुषु नियमेनोपसंहार्याणीति -

एवं प्राप्ते प्रचक्ष्महे - **तन्निर्धारणानियमः** इति।

निर्धारणं निश्चयेन मनसोऽवस्थापनम्, ध्यानमित्यर्थः। **तन्निर्धारणानियमः** कर्मसूद्गीथाद्युपासनानामनियमः।

कुतः? **तद्दृष्टेः**। उपलभ्यते ह्युपासनानुष्ठानानियमः, ''**तेनोभौ कुरुतः, यश्चैतदेवं वेद, यश्च न वेद**'' (छा.1-1-10)[3] इति अविदुषोऽप्यनुष्ठानवचनात्। न चाङ्गत्वे सति

99.தந்நிர்தாரணாநியமாதிகரணம் (3-3-17)

395.தந்நிர்தாரணாநியம: தத்த்ருஷ்டே: ப்ருதக்க்யப்ரதிபந்த: பலம்(3-3-41)

"*ஓமித்யேததக்ஷரமுத்கீதமுபாஸீத*"(சா.1-1-1)[1] இத்யாதீநி கர்மாங்காஶ்ரயாண்யுபாஸநாநி, கர்மாங்கபூதோத்கீதாதிமுகேந ஜுஹ்வாதிமுகேந பர்ணதாதிவத், கர்மாங்கத்வேந நிரூடாநுஷ்டாநாநீதி,

உத்கீதோபாஸநஸம்பந்திந:, "*யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்தயோபநிஷதா, ததேவ வீர்யவத்தரம் பவதி*" (சா.1-1-10)[2] இதி வர்தமாநநிர்தேஶஸ்ய பர்ணதாதிஸம்பந்த்யபாபஶ்லோகஶ்ரவணவத் ப்ருதக்பலத்வகல்பநாயோகாத் க்ரதுஷு நியமேநோபஸம்ஹார்யாணி -

இதி ஏவம் ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - *தந்நிர்தாரணாநியம:* - இதி।

நிர்தாரணம் - நிஶ்சயேந மநஸோऽவஸ்தாபநம், த்யாநமித்யர்த:। தந்நிர்தாரணாநியம: - கர்மஸு உத்கீதாத்யுபாஸநாநாம் அநியம:।

குத:? தத்த்ருஷ்டே:। உபலப்யதே ஹி உபாஸநாநுஷ்டாநாநியம:, "*தேநோபௌ குருத:, யஶ்சைததேவம் வேத, யஶ்ச ந வேத*"(சா.1-1-10)[3] இதி அவிதுஷோऽபி அநுஷ்டாநவசநாத்। ந ச அங்கத்வே ஸதி உபாஸநஸ்ய

99.தந்நிர்தாரணாநியமாதிகரணம்(3-3-17)

395.தந்நிர்தாரணாநியம: தத்த்ருஷ்டே: ப்ருதக் ஹி அப்ரதிபந்த: பலம்(3-3-41)

[கர்மங்களில்] உத்கீதம் முதலியது பற்றிய உபாஸனங்களுக்கு கட்டாய நியமம் இல்லை; அதை வேதம் சொல்வதால்; ஏனெனில்,தடையின்மை எனும் தனிப்பலன் [உள்ளது].

விஷயவாக்யம் & பூர்வபக்ஷம்

[1]**"ஓம் எனும் இந்த அக்ஷரமாகிற உத்கீதத்தை (உத்கீதத்தின் ஒரு பகுதியை) உபாஸனம் செய்க"** முதலியவை, உத்கீதம் பற்றிய உபாஸனங்கள்; உத்கீதம் ஆனது, (யாகம் எனும்) கர்மத்தின் அங்கமாகும்; இந்த உபாஸனங்கள் கர்மத்துக்கு அங்கமான உத்கீதம் முதலியதன் வாயிலாக கர்மத்துக்கு அங்கமானவை; (கர்மத்தின் அங்கமான) ஜுஹூ முதலியதன் வாயிலாக பர்ணத்வம் முதலியது கர்மத்தின் அங்கமாவது போல இவை ஆகும்; எனவே, அந்த உபாஸனங்கள் நிச்சயமாக செய்யப்பட வேண்டியவை.

உத்கீதம் முதலியதன் உபாஸனம் பற்றியதாக, [2]**"எந்த யாகத்தை உபாஸனத்துடன் ஶ்ரத்தையுடன் ப்ரஹ்மஜ்ஞாநத்துடன் செய்கிறானோ, அதுவே அதிக வீர்யம் உடையதாக ஆகிறது"** என்று நிகழ்காலக் குறிப்புடன் உணர்த்தப்படும் பலனை தனி பலனாக ஊகிப்பது சரியாகாது; பர்ணத்வம் என்பதுடன் ஸம்பந்தப்பட்ட 'அபாப-ஶ்லோக-ஶ்ரவணம்' (பழிச்சொல்லை கேட்காமை எனும் பலன்) என்பது போல.

✍*(விளக்கமாக பின் இணைப்பில் கட்டுரை காண்க)*✍

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் - **"தந்நிர்தாரணாநியம:"** என்று.

நிர்தாரணம் - உறுதியான எண்ணத்துடன் மனஸ்ஸினை நிலைப்படுத்துதல்; த்யானம் என்று அர்த்தம்.

தந்நிர்தாரணாநியம: - கர்மங்களில் உத்கீதம் முதலிய உபாஸனங்களுக்கு கட்டாய நியமம் இல்லை.

ஏன்?

தத்த்ருஷ்டே: (அதை வேதம் சொல்வதால்) - ஏனெனில், உபாஸனம் செய்வதில் நியமம் இல்லை என்பது வேதத்தில் காணப்படுகிறது - **"யார் இப்படி இதை உபாஸனம் செய்கிறாரோ, யார் உபாஸனம் செய்யவில்லையோ, அவர் இருவரும் அந்த உத்கீதம் மூலம் யாகம் செய்கின்றனர்"** என்று உபாஸனம் செய்யாதவனும் யாக-அனுஷ்டானம் செய்வதைச் சொல்வதால்;

उपसनस्यानुष्ठानानियम उपपद्यते। एवमुपासनस्यानङ्गत्वे निश्चिते सति उपासनविधेः फलाकांक्षायां रात्रिसत्रन्यायेन वीर्यवत्तरत्वं कर्मफलात् पृथग्भूतमेव फलमित्यवगम्यते॥

किमिदं वीर्यवत्तरत्वम्? कमफलस्यैवाप्रतिबन्धः। प्रतिबध्यते हि कर्मफलं प्रबलकर्मान्तरफलेन तावन्तं कालम्; तदभावोऽप्रतिबन्धः। स ह्यप्रतिबन्धः कर्मफलात् स्वर्गादिलक्षणात् पृथग्भूतमेव फलम्। तदिदमुच्यते **पृथग्घ्यप्रतिबन्धः** फलमिति। अतः कर्मङ्गाश्रयाणामपि पृथक्फलत्वाद् गोदोहनादिवत् कर्मसूद्गीथाद्युपासनानामनियमेनोपसंहारः ॥ ४१ ॥

इति तन्निर्धारणानियमाधिकरणम् ॥ १७ ॥

அநுஷ்டாநாநியம உபபத்யதே। ஏவம் உபாஸநஸ்ய அநங்கத்வே நிஶ்சிதே ஸதி உபாஸநவிதே: பலாகாக்ஷாயாம் ராத்ரிஸத்ரந்யாயேந வீர்யவத்தரத்வம் கர்மபலாத் ப்ருதக்பூதமேவ பலமித்யவகம்யதே।।

கிமிதம் வீர்யவத்தரத்வம்? கர்மபலஸ்யைவ அப்ரதிபந்த:। ப்ரதிபத்யதே ஹி கர்மபலம் ப்ரபலகர்மாந்தரபலேந தாவந்தம் காலம், தத‌பாவ: - அப்ரதிபந்த:। ஸ ஹி அப்ரதிபந்த: கர்மபலாத் ஸ்வர்காதிலக்ஷணாத் ப்ருதக்பூதமேவ பலம்। ததிதமுச்யதே - ப்ருதக்க்யப்ரதிபந்த: பலமிதி। அத: கர்மங்காஶ்ரயாணாமபி ப்ருதக்பலத்வாத் கோதோஹநாதிவத் கர்மஸூ உத்கீதாத்யுபாஸநாநாம் அநியமேநோபஸம்ஹார: ।। 41 ।।

இதி தந்நிர்தாரணாநியமாதிகரணம் ।। 17 ।।

உத்கீதஉபாஸனம் (யாகத்துக்கு) அங்கமாக ஆகுமானால், அனுஷ்டானம் கட்டாயமில்லை என்பது பொருந்தாது; இப்படி உபாஸனம் (யாகத்துக்கு) அங்கமில்லை என்பது நிச்சயமானபின், உபாஸனத்தை விதித்ததன் பலன் என்ன என்னும் கேள்வி வரும்போது, ராத்ரிஸத்ர-ந்யாயத்தால் அதிக வீர்யமுடையதாக ஆதல் என்பதுதான் பலன் என்று தெரிகிறது. இது (யாகம் ஆகிற) கர்மத்தின் பலனை விட வேறானதாகும்.

அதிக வீர்யம் உடைமை என்னும் இது என்ன? கர்மத்தின் பலனுக்கே தடையின்மை ஆகும்; கர்மத்தின் பலன் ஆனது, மற்றொரு கர்மத்தின் பலனால் அவ்வளவு காலம் வரை தடைபடலாம்; அது இல்லை என்பதுதான் தடையின்மை; அந்த தடையின்மை என்பது, (யாகம் ஆகிற) கர்மத்தின் பலனாகிற ஸ்வர்க்கம் முதலியதை விட வேறான பலன் ஆகும்; அது சொல்லப்படுகிறது -

ப்ருதக் ஹி அப்ரதிபந்த: பலம் - (தனியாக தடையின்மை என்பது பலன்) என்று.

ஆகையால், கர்மத்தின் அங்கத்தைப் பற்றிய உத்கீதம் முதலியதன் உபாஸனங்கள் (கர்மத்தின் பலனை விட) வேறான பலனை உடையதாக ஆவதால், கோதோஹனம் முதலியது போல, கட்டாய-நியமம் இல்லாமல் (பலன் தேவையானால்)சேர்த்துக் கொள்ளல் ஆகும்.

✎ *(''கால்நடைச் செல்வத்தை வேண்டி விரும்புபவனுக்கு, யாகத்தில் கோதோஹனம் எனும் பாத்ரத்தைக் கொண்டு ப்ரணயனம் செய்ய வேண்டும்'' என்று வேதம் சொல்கிறது; அந்த விருப்பம் இல்லாதவன் அப்படி செய்ய வேண்டிய தேவையில்லை; ஏனெனில், இது யாகத்தின் பலன் அல்ல; தனி பலன்; அதுபோல, இங்கும் உத்கீதத்துடன் செய்யும் யாகத்தின் பலன் வேறு; அதில் உத்கீத-உபாஸனத்தின் பலன் வேறு; இந்த உபாஸன-பலன் வேண்டாதவர் இந்த உபாஸனம் செய்யாமலேயே வெறும் உத்கீதத்துடன் கூட யாகம் செய்யலாம்.)* ✎

* * *

தந்நிர்தாரணாநியமாதிகரணம் முற்றிற்று.

100.ப்ரதானாதிகரணம்(3-3-18)

முன் குறிப்பு

சாந்தோக்யத்தில் தஹரவித்யையில், தஹர-ஆகாசத்தையும் அதன் குணங்களையும் சிந்திக்க வேணும் என சொல்லியுள்ளது; அதில் எப்படி உபாஸனம் செய்ய வேண்டும் என்பது பற்றி ஒரு விசாரம்.

பூர்வபக்ஷம் - முதலில், தஹர-ஆகாசமாக ப்ரஹ்ம-ஸ்வரூபத்தை மட்டும் எண்ண வேண்டும்; பின்னர் அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களை சிந்திக்க வேண்டும்; குணங்களை எண்ணும்போது அந்த குணங்களை உடைய தஹர-ஆகாச ஸ்வரூபத்தை சேர்த்து எண்ண வேண்டாம்; தஹர-ஸ்வரூபத்தை முதலிலேயே எண்ணியாயிற்றே! அதுவே இதற்கும் சேர்த்து எண்ணியதாக ஆகும்; இவை வேறு ஒருவருடைய குணங்களோ என்று யாருக்கும் சந்தேகம் வராது.

ஸித்தாந்தம் - வேதத்தில் குணங்களை சொல்லும்போது, குணங்களுடன் கூடிய ஸ்வரூபத்தையே சொல்கிறது; “அபஹதபாப்மா (அபஹதபாப்மத்வம் எனும் குணமுடையவன்), விஜர: (மூப்பில்லாமை எனும் குணம் உடையவன்) என்கிறது. அபஹதபாப்மா - (அபஹதபாப்மத்வம் எனும் குணமுடையவன்) என்று சிந்திக்கும்போது, அந்த குணம், அதனை உடைமை, அதனை உடையவன் என மூன்று விஷயங்கள் உள்ளன; ஒவ்வொரு குணத்தை எண்ணும் போதும், இந்த மூன்றையும் சிந்திக்க வேண்டும்; எனவே, ஒவ்வொரு குணத்துடனும் அதனை உடையவனான தஹர-ஆகாச-ஸ்வரூபமும் சிந்திக்க வேண்டும்.

ஸ்வரூபத்தை முதலில் தனியாக சிந்தித்தாகி விட்டது; ஆனாலும், வெறும் ஸ்வரூபத்தை விட அந்தந்த குணத்துடன் கூடிய ஸ்வரூபம் என்பது வேறுவிஷயமாகும். அதனால், மறுபடியும் சிந்திப்பது தகும்.

உதாஹரணமாக, தேவதாகாண்டத்தில் சொன்ன விஷயம் ஒன்று - ஒரு யாகம்; மூன்று தேவர்கள் - 1. ராஜனான இந்த்ரன்; 2. அதிராஜனான இந்த்ரன், 3. ஸ்வராட் ஆன இந்த்ரன் என்கிறது; இங்கு இந்த்ரன் ஒருவனே ஆனாலும், அந்தந்த குணங்களுடன் கூடிய உருவில் வெவ்வேறு ஆகிறான்; ஆகவே, மூவராக எண்ணி, மூன்று புரோடாசங்களை தனித்தனியாக அர்ப்பணம் செய்ய வேண்டும்.

அதுபோல இங்கும்.

ஸ்வரூபசிந்தனம் என்றால் ஸத்யம், ஜ்ஞானம் முதலிய ஸ்வரூபநிரூபக குணங்களை இட்டு ப்ரஹ்ம ஸ்வரூபத்தை எண்ணுதல் என்று அர்த்தம்; இங்கே, எல்லா குணங்களுடன் கூட ஸ்வரூப சிந்தனம் செய்ய வேண்டும் என்னும்போது, அதுமட்டும் போதாது; இந்த வித்யையில் விஷயமான தஹர-ஆகாசமாகிற ஸ்வரூப-சிந்தனம் ஒவ்வொரு குணத்துடனும் செய்ய வேண்டும்; அதையே இந்த அதிகரணம் வலியுறுத்துகிறது என்பர்.

१०० प्रदानाधिकरणम् (३-३-१८)

३९६.प्रदानवदेव तदुक्तम् (३-३-४२)

दहरविद्यायाम्, **''तद्य इहात्मानमनुविद्य व्रजन्त्येतांश्च सत्यान् कामान्''** (छा.8-1-6)[1] इति दहराकाशस्य परमात्मन उपासनमुक्त्वा, **''एतांश्च सत्यान् कामान्''** (छा.8-1-6)[2] इति गुणानामपि पृथगुपासनं विहितम्।

तत्र संशयः - गुणचिन्तनेऽपि तत्तद्गुणविशिष्टतया दहरस्याऽऽत्मनश्चिन्तनमावर्तनीयम्, उत नेति।

दहराकाशस्यैवापहतपाप्मत्वादीनां गुणित्वात्, तस्य च सकृदेवानुसन्धातुं शक्यत्वाद्, गुणार्थं तच्चिन्तनं नाऽऽवर्तनीयम्,

इति प्राप्ते उच्यते - **प्रदानवदेवेति।** प्रदानवदावर्तनीयमेवेत्यर्थः।

यद्यपि दहराकाश एक एवापहतपाप्मत्वादिगुणानां गुणी, स च प्रथमं चिन्तितः -

---

100. ப்ரதாநாதிகரணம் (3-3-18)

396.ப்ரதாநவதேவ தது௧்தம் (3-3-42)

தஹரவித்யாயாம், *''தத்ய இஹாத்மாநமநுவித்ய வ்ரஜந்த்யேதாம்ஶ்ச ஸத்யாந் காமாந்''*(சா.8-1-6)[1] இதி தஹராகாஶஸ்ய பரமாத்மந: உபாஸநமுக்த்வா, *''ஏதாம்ஶ்ச ஸத்யாந் காமாந்''*(சா.8-1-6)[2] இதி குணாநாமபி ப்ருதகுபாஸநம் விஹிதம்।

தத்ர ஸம்ஶய: - குணசிந்தநேऽபி தத்தத்குணவிஶிஷ்டதயா தஹரஸ்யாऽऽத்மநஶ்சிந்தநம் ஆவர்தநீயம், உத நேதி।

தஹராகாஶஸ்யைவ அபஹதபாப்மத்வாதீநாம் குணித்வாத், தஸ்ய ச ஸக்ருதேவாநுஸந்தாதும் ஶக்யத்வாத், குணார்தம் தச்சிந்தநம் நாऽऽவர்தநீயம் -

இதி ப்ராப்தே உச்யதே - *ப்ரதாநவதேவேதி।* ப்ரதாநவத் ஆவர்தநீயமேவேத்யர்த:।

யத்யபி தஹராகாஶ ஏக ஏவ அபஹதபாப்மத்வாதி குணாநாம் குணீ,

100.ப்ரதானாதிகரணம்(3-3-18)

396.ப்ரதானவத் ஏவ தத் உக்தம்(3-3-42)

ப்ரதானம் போல [கொடுப்பது போல,சிந்தனம்] மறுமுறைகளும் செய்யவேண்டும்; அது[தேவதாகாண்டத்தில்]சொல்லப்பட்டது.

விஷயவாக்யம்

தஹரவித்யையில், [1]**''யார் இந்த பரமாத்மாவையும் நித்யங்களான இந்த குணங்களையும் உபாஸனம் செய்து (மேலுலகம்) செல்கின்றனரோ''** என்னுமிடத்தில், தஹர-ஆகாசம் ஆகிற பரமாத்மாவைப் பற்றிய உபாஸனத்தைச் சொல்லி, பின்னர், [2]**''நித்யங்களான இந்த குணங்களையும்''** என்று குணங்களையும் தனியாக உபாஸனம் செய்தல் விதிக்கப்படுகிறது.

ஸந்தேஹம்

அதில் ஸந்தேஹம் - குணங்களைச் சிந்திக்கும் போதும், அந்தந்த குணத்தோடு கூடியதாக தஹர-ஆத்மாவைச் சிந்தித்தல் மறுமுறையும் (மீண்டும் மீண்டும்) செய்யப்பட வேண்டுமா? அல்லது வேண்டாமா?

பூர்வபக்ஷம்

அபஹதபாப்மத்வம் முதலியவற்றுக்கு இருப்பிடமாக, அந்தந்த குணங்களை உடையதாக தஹர-ஆகாசம் மட்டுமே ஆகிறது; அதனை (எல்லாவற்றுக்குமாக மொத்தமாகச் சேர்த்து) ஒரு முறையே சிந்தனம் செய்ய முடியும்; ஆகையால், குணசிந்தனத்துக்காக அதன் சிந்தனம் மறுமுறை செய்யப்பட வேண்டாம்.

✍*(தந்த்ரம் எனும் முறையில் ஒரே முறை தஹர-ஆகாசத்தை சிந்தனம் செய்தால் போதும்; அதுவே ஸ்வரூப-சிந்தனத்துக்கும் குணசிந்தனத்தின் பொருட்டும் ஆகலாம்.)*✍

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **''ப்ரதானவத் ஏவ''** என்று.

ப்ரதானவத் ஏவ - ப்ரதானம் (கொடுப்பது) போல மறுமுறையும் செய்யப்பட வேண்டும்தான் என்று அர்த்தம்.

அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களுக்கு, அக்குணங்களை உடையதான ஆதார-இடம் என்பது உடைய ஆதாரமான இடம் தஹர-ஆகாசம் ஒன்றுதான்; அது முதலிலேயே (ஸ்வரூபசிந்தனம் செய்யும்போதே) சிந்திக்கப்பட்டு விட்டது;

तथाऽपि स्वरूपमात्रात् गुणविशिष्टाकारस्य भिन्नत्वात्, **''अपहतपाप्मा विजरः''**(छा.8-1-5)[1] इत्यादिना गुणविशिष्टतया चोपास्यत्वेन विहितत्वात् पूर्वं स्वरूपेणानुसंहितस्यापहतपाप्मत्वादिविशिष्टतयाऽनुसन्धानार्थमावृत्तिः कर्तव्या। यथा,

- **''इन्द्राय राज्ञे पुरोडाशमेकादशकपालं निर्वपेत्''**(तै.सं.2-3-6-2)[2]
- **''इन्द्रायाधिराजाय''**(तै.सं.2-3-6-2)[3]
- **''इन्द्राय स्वराज्ञे''**(तै.सं.2-3-6-2)[4]

इतीन्द्रस्यैव राजत्वादिगुणविशिष्टत्वेऽपि तत्तद्गुणसम्बन्ध्याकारस्य भिन्नत्वात् प्रदानावृत्तिः क्रियते। तदुक्तं साङ्कर्षणे (सांकर्षे) (संकर्षणकाण्डे) **''नाना वा, देवतापृथक्त्वात्''** (सं.काण्ड.?)[5] इति॥४२॥

इति प्रदानाधिकरणम् ॥ १८ ॥

ஸ ச ப்ரதமம் சிந்தித: - ததாபி ஸ்வரூபமாத்ராத் குணவிஶிஷ்டாகாரஸ்ய பிந்நத்வாத், *"அபஹதபாப்மா விஜர:"*(சா.8-1-5)[1] இத்யாதிநா குணவிஶிஷ்டதயா ச உபாஸ்யத்வேந விஹிதத்வாத் பூர்வம் ஸ்வரூபேணாநுஸம்ஹிதஸ்ய அபஹதபாப்மத்வாதிவிஶிஷ்டதயா அநுஸந்தாநார்தம் ஆவ்ருத்தி: கர்தவ்யா। யதா,

- *"இந்த்ராய ராஜ்ஞே புரோடாஶமேகாதஶகபாலம் நிர்வபேத்"*(தை.ஸம்.2-3-6-2)[2],
- *"இந்த்ராயாதிராஜாய"*(தை.ஸம்.2-3-6-2)[3],
- *"இந்த்ராய ஸ்வராஜ்ஞே"* (தை.ஸம்.2-3-6-2)[4]

இதி இந்த்ரஸ்யைவ ராஜத்வாதிகுணவிஶிஷ்டத்வேऽபி தத்தத்குணஸம்பந்த்யாகாரஸ்ய பிந்நத்வாத் ப்ரதாநாவ்ருத்தி: க்ரியதே। ததுக்தம் ஸாங்கர்ஷணே (ஸாங்கர்ஷே) (ஸங்கர்ஷணகாண்டே) *''நாநா வா, தேவதாப்ருதக்த்வாத்''* (ஸம்.கா.?)[5] இதி।। 42 ।।

இதி ப்ரதாநாதிகரணம் ।। 18 ।।

ஆனாலும், ஸ்வரூபம் மட்டும் ஆகிற ஆகாரத்தை விட குணத்துடன் கூடிய ஆகாரம் வேறு ஆகும்; மேலும், [1]**''அபஹதபாப்மா (அபஹத- பாப்மத்வம் எனும் குணமுடையவன்), விஜர: (மூப்பில்லாமை எனும் குணம் உடையவன்)''** என்றிது முதலியதால், குணத்தோடு கூடியவனாக உபாஸனம் செய்யப்பட வேண்டும் என விதிக்கப் படுகிறது.ஆகையால், முன்னர் ஸ்வரூபத்தையிட்டு சிந்தனம் செய்யப்படவனுக்கு (தஹர-ஆகாசத்துக்கு) அபஹதபாப்மத்வம் முதலிய குணங்களுடன் கூடியவனாக சிந்திப்பதன் பொருட்டு மறுமுறைசிந்தனம் செய்யப்பட வேண்டும்.

எப்படியாக, -

- [2]**''ராஜாவான இந்த்ரனின் பொருட்டு ஏகாதசகபால-புரோடாசம் ஸமர்ப்பித்து யாகம் செய்ய வேண்டும்'',**
- [3]**''அதிராஜனான இந்த்ரனின் பொருட்டு'',**
- [4]**''ஸ்வராட் ஆன இந்த்ரனின் பொருட்டு''**

என்று ஒரே இந்த்ரனே ராஜத்வம் முதலிய குணங்களுடன் கூடியவன் ஆனாலும், அந்தந்த குண-தொடர்புடைய ஆகாரம் என்பது வேறாவதால், ப்ரதானம் (அர்ப்பணம் செய்தல், தேவர்களுக்குக் கொடுத்தல்) மறுமுறையாக மீண்டும் மீண்டும் செய்யப் படுகிறது;

தத் உக்தம் - அது ஸங்கர்ஷணருடைய தேவதாகாண்டத்தில் சொல்லப்பட்டது - [5]**''தேவதை வேறாவதால், (ப்ரதானம்) வேறாகும்''** என்று. (அது போலபோல இங்கும் ஆகும்

* * *

ப்ரதானாதிகரணம் முற்றிற்று.

101.லிங்கபூயஸ்த்வாதிகரணம்(3-3-19)

முன் குறிப்பு

இந்த அதிகரணம் மிக முக்கியமானது; ப்ரஹ்ம-வித்யைகளில் உபாஸனம் செய்யப்படும் ப்ரஹ்மம் என்பது ஸ்ரீநாராயணன்தான் என்பதை இங்கே நிச்சயம் செய்கிறார்.

தைத்திரீய உபநிஷத்தில் ''தஹ்ரம் விபாப்மம் பரவேச்மபூதம்'' என்று ஆரம்பித்து, தஹர வித்யை உள்ளது; அதில் ஹ்ருதய-ஆகாசத்தில் இருக்கும் பரமாத்மாவை எட்டு குணங்களுடன் கூடியவனாக உபாஸனம் செய்ய வேண்டும் என்று சொல்கிறது; அதைத் தொடர்ந்து, அடுத்த அனுவாகம் ''ஸஹஸ்ரசீர்ஷம் தேவம்'' என்பது; அதில் உபாஸனம் செய்யப்படுபவன் நாராயணன் என்று சொல்கிறது. அதிலும் கூட ''பத்மகோசப்ரதீகாசம் ஹ்ருதயம்'' என்று ஆரம்பித்து, தஹரவித்யையை குறிக்கிறது.

பூர்வபக்ஷம் – இது தஹரவித்யையைச் சொல்லிக்கொண்டு வரும் இடம்; ஆகையால், தஹரவித்யையில் உபாஸனம் செய்யப் படுபவன் நாராயணன் என்பது இந்த ப்ரகரணத்தால் தெரிகிறது; ஆனால், எல்லா வித்யைகளிலுமே உபாஸனம் செய்யப் படுபவன் நாராயணன் என்பது இதன் மூலம் தெரிய வராது.

ஸித்தாந்தம் – எல்லா வித்யைகளிலும் உபாஸனம் செய்யப் படுபவன் நாராயணன் என்று இங்கே சொல்கிறது; அதை அறிவிக்கும் அடையாளங்களான வாக்யங்கள் பல உள்ளன; ''நாராயண பரம் ப்ரஹ்ம'' என்று ஆரம்பித்து, ''நாராயணனே பரப்ரஹ்மம், நாராயணனேபரதத்த்வம் (பரம்பொருள்); நாராயணனே பரஜ்யோதி; நாராயணனே பரமாத்மா'' என்கிறது; மேலும் ''அவனே ப்ரஹ்மா; அவனே சிவன்; அவனே இந்த்ரன்; அவனே ஸ்வராட் ஆன முக்தாத்மா'' என்றும் சொல்கிறது; உபநிஷத்களில் ஆங்காங்கே ஜகத்-காரணத்தையும், மோக்ஷ-காரணத்தையும் சொல்லும்போது பரப்ரஹ்மம், பரமாத்மா, பரதத்த்வம், பரஜ்யோதி முதலிய சொற்களால் குறிக்கின்றன; சில இடங்களில், ப்ரஹ்மா, சிவன் என்றும் சொல்லியிருக்கலாம்; அந்த சொற்கள் எல்லாம் நாராயணனையே குறிக்கும் என்பதை தெளிவாக இங்கே சொல்கிறது.

ப்ரகரணம் எனும் ப்ரமாணத்தை வைத்து பூர்வபக்ஷம் வந்தது; வாக்யம் எனும் ப்ரமாணத்தை இட்டு ஸித்தாந்தம்; வாக்யம் என்பது, ப்ரகரணத்தை விட வலிமையானது என்பதை மீமாம்ஸா சொல்கிறது. (காண்க - பின் இணைப்பு).

ஸூத்ரத்தில் 'லிங்கம்' என்பது ஆறு ப்ரமாணங்களில் இரண்டாவதான லிங்கம் அல்ல; இங்கே லிங்கம் என்பதற்கு அறிவிக்கும் அடையாளம் என்று அர்த்தம்; வாக்யம் எனும் ப்ரமாணத்தை குறிக்கிறது.

१०१. लिङ्गभूयस्त्वाधिकरणम् (३-३-१९)

३९७.लिङ्गभूयस्त्वात् तद्धि बलीयः तदपि (३-३-४३)

तैत्तिरीया दहरविद्यानन्तरमधीयते, **‘‘सहस्रशीर्षं देवं विश्वाक्षं विश्वशम्भुवम्। विश्वं नारायणं देवमक्षरं परमं प्रभुम्’’**(तै.2.11-1)[1] इत्यारभ्य, **‘‘सोऽक्षरः परमः स्वराट्’’**(तै.2.11-11)[2] इत्यन्तम्।

तत्र संशयः - किं पूर्वप्रकृतविद्ययैकविद्यात्वेन तदुपास्यविशेषनिर्धारणमनेन क्रियते, उत सर्ववेदान्तोदितपरविद्योपास्यविशेषनिर्धारणमिति।

किं युक्तम्? दहरविद्योपास्यविशेषनिर्धारणमिति। कुतः? प्रकरणात्। पूर्वस्मिन्ननुवाके दहरविद्या हि प्रकृता, **‘‘दह्रं विपाप्मं परवेश्मभूतं यत् पुण्डरीकं पुरमध्यसंस्थम्। तत्रापि दह्रं गगनं विशोकः, तस्मिन् यदन्तस्तदुपासितव्यम्’’**(तै.2.10-23)[3] इति। अस्मिंश्चानुवाके, **‘‘पद्मकोशप्रतीकाशं हृदयं चाप्यधोमुखम्’’**(तै.2.11-7)[4] इत्यादिना हृदयपुण्डरीकाभिधानमस्य नारायणानुवाकस्य दहरविद्योपास्यनिर्धारणार्थत्वमुपोद्बलयतीति -

---

101. லிங்கபூயஸ்த்வாதிகரணம் (3-3-19)

397.லிங்கபூயஸ்த்வாத் தத்தி பலீய: ததபி (3-3-43)

தைத்திரீயா தஹரவித்யாநந்தரமதீயதே, *‘‘ஸஹஸ்ரஶீர்ஷம் தேவம் விஶ்வாக்ஷம் விஶ்வஶம்புவம்। விஶ்வம் நாராயணம் தேவமக்ஷரம் பரமம் ப்ரபும்’’* (தை.2.11-1)[1] இத்யாரப்ய, *‘‘ஸோऽக்ஷர: பரம: ஸ்வராட்’’*(தை.2.11-11)[2] இத்யந்தம்।

தத்ர ஸம்ஶய: - கிம் பூர்வப்ரக்ருதவித்யயா ஏகவித்யாத்வேந ததுபாஸ்யவிஶேஷநிர்தாரணம் அநேந க்ரியதே, உத ஸர்வவேதாந்தோதிதபரவித்யோபாஸ்யவிஶேஷநிர்தாரணமிதி।

கிம் யுக்தம்? தஹரவித்யோபாஸ்யவிஶேஷநிர்தாரணமிதி। குத:? ப்ரகரணாத்। பூர்வஸ்மிந் அநுவாகே தஹரவித்யா ஹி ப்ரக்ருதா, *‘‘தஹ்ரம் விபாப்மம் பரவேஶ்மபூதம் யத் புண்டரீகம் புரமத்யஸம்ஸ்தம்। தத்ராபி தஹ்ரம் ககநம் விஶோக:, தஸ்மிந் யதந்தஸ்ததுபாஸிதவ்யம்’’*(தை.2.10-23)[3] இதி। அஸ்மிம்ஶ்சாநுவாகே, *‘‘பத்மகோஶப்ரதீகாஶம் ஹ்ருதயம் சாப்யதோமுகம்’’* (தை.2.11-7)[4] இத்யாதிநா ஹ்ருதயபுண்டரீகாபிதாநம் அஸ்ய நாராயணாநுவாகஸ்ய தஹரவித்யோபாஸ்யநிர்தாரணார்தத்வமுபோத்பலயதீதி -

101.லிங்கபூயஸ்த்வாதிகரணம்(3-3-19)

397.லிங்கபூயஸ்த்வாத் தத் ஹி பலீய: தத் அபி (3-3-43)

அடையாளம் பல ஆவதால்;ஏனெனில்[வாக்ய-ப்ரமாணம் என்னும்]அது அதிக வலிமையுடையது; அதுவும்[சொல்லப்பட்டது]

விஷயவாக்யம்

தைத்திரீயத்தில் தஹரவித்யைக்குப் பின் (நாராயணானுவாகத்தில்) ஓதுகின்றனர் - [1]**''ஆயிரம் தலையுடைய தேவன், எல்லாவற்றையும் நேராகப்பார்ப்பவன்; எல்லாவற்றுக்கும் மங்களம் அளிப்பவன்; எல்லாமே ஆகும் நாராயணன்; தேவன், அக்ஷரன், பரமன், ப்ரபு''** என்று ஆரம்பித்து, [2]**''உயர்ந்தவனான அவனே கர்மவசப்படாத முக்த-ஜீவனும் ஆவான்''** என்பது வரை.

ஸந்தேஹம்

இதில் ஸந்தேஹம் - (இந்த வாக்யமானது) முன்சொல்ல ஆரம்பிக்கப் பட்ட தஹர-வித்யையுடன் ஒரே வாக்யமாவதால், அந்த வித்யையில் உபாஸனம் செய்யப்படும் விஷய-விசேஷத்தைப் பற்றிய நிர்ணயம் இந்த வாக்யத்தால் செய்யப் படுகிறதா? அல்லது வேதாந்தங்களில் சொல்லப்பட்ட எல்லா பர-வித்யைகளிலும் உபாஸனம் செய்யப்படும் விஷய-விசேஷத்தைப் பற்றிய நிர்ணயம் செய்யப் படுகிறதா? *(நாரயணனே உபாஸனவிஷயம் எனும் விசேஷம் இங்கே சொல்லப்படுகிறது; இந்த விசேஷம் தஹரவித்யைக்கு மட்டுமா? அல்லது எல்லா ப்ரஹ்மவித்யைக்குமா? என்று ஸந்தேஹம்)*

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? தஹர-வித்யையில் உபாஸனம் செய்யப்படும் விஷய-விசேஷத்தைப் பற்றிய நிர்ணயம் செய்யப் படுகிறது என்பது; ஏன்? ப்ரகரணத்தால் (சொல்லப்பட்டு வரும் இடத்தால்).

முன் அனுவாகத்தில், தஹர-வித்யைதான் சொல்ல ஆரம்பிக்கப் பட்டது - [3]**''ஶரீரத்தின் நடுவில் பரமாத்மாவின் வீடாக இருக்கும் சிறிய பாபமற்ற ஹ்ருதய-தாமரை எது உள்ளதோ, அதில் சோகமற்ற சிறிய-ஆகாசம் (ப்ரஹ்மம்) உள்ளது; அதில் உள்ளே எது (எட்டு குணங்கள்) உள்ளதோ அந்த இரண்டும் உபாஸனம் செய்யப்பட வேண்டும்''** - என்று. (காண்க தஹராதிகரணம் 1-3-5); இந்த அனுவாகத்திலும், [4]**''தாமரைமொட்டு போன்ற ஹ்ருதயம் கீழ்முகமாக (உள்ளது)''** முதலியதால் ஹ்ருதய-தாமரையைச் சொல்கிறது; அப்படி சொல்வதானது, (முன் சொன்ன தஹரவித்யை இங்கும் தொடர்வதை உணர்த்துவதன் மூலம்) தஹர-வித்யையில் உபாஸனம் செய்யப்படும் விஷய-விசேஷத்தைப் பற்றிய நிர்ணயத்தின் பொருட்டு இந்த நாராயணானுவாகம் ஆகும் என்பதை வலியுறுத்துகிறது - என்று.

एवं प्राप्ते प्रचक्ष्महे - **लिङ्गभूयस्त्वात्** इति। अस्य निखिलपरविद्योपास्यविशेषनिर्धारणार्थत्वे भूयांसि लिङ्गानि दृश्यन्ते। तथा हि परविद्यासु अक्षर-शिव-शम्भु-परब्रह्म-परज्योतिः-परतत्त्व-परमात्मादिशब्दनिर्दिष्टमुपास्यं वस्त्विह तैरेव शब्दैरनूद्य तस्य नारायणत्वं विधीयते; भूयसीषु विद्यासु श्रुतान् अनूद्य नारायणत्वविधानभूयस्त्वं नारायण एव सर्वविद्यासूपास्यमस्थूलत्वादिविशेषितानन्दादिगुणकं परं ब्रह्मेति विशेषनिर्णये **भूयः** - बहुतरम् लिङ्गं भवति।

अत्र लिङ्गशब्दः चिह्नपर्यायः। चिह्नभूतं वाक्यं बहुतरमस्तीत्यर्थः। तद्धि प्रकरणाद्बलीयः। तदप्युक्तं प्रथमकाण्डे, ''**श्रुतिलिङ्गवाक्यप्रकरणस्थानसमाख्यानां समवाये पा(प)रदौर्बल्यमर्थविप्रकर्षात्**''(पू.मी.सू.3-3-14)[1] इति।

यत्तूक्तम्, ''**पद्मकोशप्रतीकाशम्**''(तै.2.11-7)[2] इत्यादिवचनं दहरशेषत्वमस्योपोद्बलयतीति, तन्न; बलीयसा प्रमाणेन सर्वविद्योपास्यनिर्धारणार्थत्वेऽवधृते सति, दहरविद्यायामपि तस्यैव नारायणस्योपास्यत्वेन तद्वचनोपपत्तेः।

न च सहस्रशीर्षमित्यादिद्वितीयानिर्देशेन पूर्वानुवाकोदितोपासिना सम्बन्धः शङ्कनीयः;

ஏவம் ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - *லிங்கபூயஸ்த்வாத்* - இதி। அஸ்ய நிகிலபரவித்யோபாஸ்யவிஶேஷநிர்தாரணார்தத்வே பூயாம்ஸி லிங்காநி த்ருஶ்யந்தே। ததா ஹி பரவித்யாஸு அக்ஷர-ஶிவ-ஶம்பு-பரப்ரஹ்மபரஜ்யோதி:-பரதத்த்வ-பரமாத்மாதிஶப்தநிர்திஷ்டமுபாஸ்யம் வஸ்து இஹ தைரேவ ஶப்தை: அநூத்ய தஸ்ய நாராயணத்வம் விதீயதே। பூயஸீஷு வித்யாஸு ஶ்ருதாந் அநூத்ய நாராயணத்வவிதாநபூயஸ்த்வம் நாராயண ஏவ ஸர்வவித்யாஸூபாஸ்யம் அஸ்தூலத்வாதிவிஶேஷிதாநந்தாதிகுணகம் பரம் ப்ரஹ்மேதி விஶேஷநிர்ணயே பூய: - பஹுதரம் லிங்கம் பவதி।

அத்ர லிங்கஶப்த: சிஹ்நபர்யாய:। சிஹ்நபூதம் வாக்யம் பஹுதரமஸ்தீத்யர்த:। தத்தி ப்ரகரணாத்பலீய:। ததப்யுக்தம் ப்ரதமகாண்டே, *''ஶ்ருதிலிங்கவாக்யப்ரகரணஸ்தாநஸமாக்யாநாம் ஸமவாயே பா(ப)ரதௌர்பல்யமர்தவிப்ரகர்ஷாத்''*(பூ.மீ.ஸூ.3-3-14)[1] இதி।

யத்தூக்தம், *''பத்மகோஶப்ரதீகாஶம்''*(தை.2.11-7)[1] இத்யாதிவசநம் தஹரஶேஷத்வம் அஸ்ய உபோத்பலயதீதி - தந்ந, பலீயஸா ப்ரமாணேந ஸர்வவித்யோபாஸ்யநிர்தாரணார்தத்வே அவத்ருதே ஸதி, தஹரவித்யாயாமபி தஸ்யைவ நாராயணஸ்யோபாஸ்யத்வேந தத்வசநோபபத்தே:।

ந ச 'ஸஹஸ்ரஶீர்ஷம்' இத்யாதித்விதீயாநிர்தேஶேந பூர்வாநுவா-

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் -

''லிங்கபூயஸ்த்வாத்'' (அறிவிக்கும் அடையாளம் அதிகமாக இருப்பதால்) என்று.

உத்கீதமோ யாகத்துக்கு அங்கமாகும் என்பதால், யாகத்தில் செய்யப்படுகிறது; அந்த உத்கீதம் பற்றிய உபாஸனத்தில், யாகம் செய்யும் அதிகாரிக்கே, யாகம் அதிக வீர்யமுடையதாக ஆக வேண்டும் எனும் விருப்பமாகிற காரணத்தால் இது வேறொரு தகுதியாகும்; (இந்த அதிக-பலனில் விருப்பமாகிற தகுதி இருந்தால் உபாஸனம் செய்யலாம்; இல்லாவிட்டால் செய்ய வேண்டாம்). ஆகையால், யாகங்களில் இதை எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை.

அதிக வீர்யமுடையதாக ஆதல் என்பது - வலிமை வாய்ந்த மற்றொரு கர்மத்தின் பலனால் யாக-பலனுக்கு நேரிடும் தடை இல்லாமை ஆகும் என்று (முன்பே) சொல்லப்பட்டது; யாகமானது, காலம் தாழாமல் பலனை உடையதாதல் என்று அர்த்தம்.

[4]**''எந்த கர்மத்தை உபாஸனத்துடன் செய்கிறானோ, அதுவே அதிக வீர்யமுடையதாக ஆகிறது''** என்று வித்யையானது, (ஒரு) பலனுக்குக் காரணமாக ஆவது (சொல்லப்படுவது) போல, பர்ணத்வம் ஆனது, பழிச் சொல்லைக் கேட்காமை எனும் பலனைக் குறித்து நேரான காரணமாக ஆவது, வேதத்தில் சொல்லப்பட-

न श्रुत इति क्रत्वङ्गभूतजुह्वाद्यङ्गतया विनियोगाविरोधात् तदङ्गभूतानां फलान्तरसाधनभावकल्पनानुपपत्तेस्तत्र फलश्रुतिरर्थवादमात्रं स्यात्॥ ६३ ॥

* * *

४१८.दर्शनाच्च (३-३-६४)

दर्शयति च श्रुतिरुपासनोपादानानियमम्, **''एवंविद्ध वै ब्रह्मा यज्ञं यजमानं सर्वांश्चर्त्विजोऽभिरक्षति''**(छा.4-17-10)[1] इति ब्रह्मणो वेदनेन सर्वेषां रक्षणं ब्रुवती। उद्गातृप्रभृतीनां वेदनस्यानियमे सति एतदुपपद्यते। अनेन लिङ्गेन पूर्वोक्तानां समाहारादिलिङ्गानां प्रायिकत्वमवगम्यते। अतोऽनियम एवेति स्थितम्॥ ६४ ॥

इति यथाश्रयभावाधिकरणम्॥ २६ ॥

इति श्रीभगवद्रामानुजविरचिते शारीरकमीमांसाभाष्ये तृतीयस्याध्यायस्य तृतीयः पादः॥ ३-३ ॥

திபலம் ப்ரதி ஸாக்ஷாத்ஸாதநபாவோ ந ஶ்ருத இதி க்ரத்வங்கபூதஜுஹ்வாத்யங்கதயா விநியோகாவிரோதாத் ததங்கபூதாநாம் பலாந்தரஸாதநபாவகல்பநாநுபபத்தே: தத்ர பலஶ்ருதி: அர்தவாதமாத்ரம் ஸ்யாத்।।63।।

* * *

418.தர்ஶநாச்ச (3-3-64)

தர்ஶயதி ச ஶ்ருதி: உபாஸநோபாதாநாநியமம், **''ஏவம்வித்த வை** ***ப்ரஹ்மா யஜ்ஞம் யஜமாநம் ஸர்வாம்ஶ்சர்த்விஜோऽபிரக்ஷதி''***(சா.4-17-10)[1] இதி ப்ரஹ்மணோ வேதநேந ஸர்வேஷாம் ரக்ஷணம் ப்ருவதீ। உத்காத்ருப்ரப்ருதீநாம் வேதநஸ்ய அநியமே ஸதி ஏததுபபத்யதே। அநேந லிங்கேந பூர்வோக்தாநாம் ஸமாஹாராதிலிங்காநாம் ப்ராயிகத்வமவகம்யதே। அத: அநியம ஏவேதி ஸ்திதம்।। 64 ।।

இதி யதாஶ்ரயபாவாதிகரணம்।। 26 ।।

இதி ஶ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஶாரீரகமீமாம்ஸாபாஷ்யே
த்ருதீயஸ்யாத்யாயஸ்ய த்ருதீய: பாத:।। 3-3 ।।

வில்லை; அதனால், யாகத்துக்கு அங்கமான ஜுஹூ முதலியது அங்கமாக பர்ணத்வம் ஆவதில் (அறிவிப்பதில்) முரண்பாடு இல்லை; ஆகையால், அதற்கு அங்கமாக ஆனவை, வேறு பலனைக் குறித்து காரணமாக ஆகும் என்பதை கல்பனை செய்ய முடியாது; ஆகையால், அங்கே பலனைச் சொன்னது அர்த்தவாதம் மட்டுமாக ஆகும்.

* * *

418.தர்ஶநாத் ச(3-3-64)

[செய்ய வேண்டிய கட்டாயம் இல்லாததைக்] காண்பதாலும்.

[1]**''இப்படி அறியும் ப்ரஹ்மா, யாகத்தையும், யஜமானனையும், எல்லா ரித்விக்குகளையும் காப்பாற்றுகிறான்''** என்று ப்ரஹ்மாவின் ஜ்ஞாநத்தால் எல்லாருக்கும் ரக்ஷணம் ஆவதை வேதம் சொல்கிறது; இந்த வேதமானது, உபாஸனம் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லாததை காண்பிக்கிறது என்பதும் கூட; உத்காதா முதலியவர் உபாஸனம் செய்வது கட்டாயம் இல்லை என்றால்தான் இது சரியாகும்!

இந்த லிங்கத்தால், முன் (பூர்வபக்ஷத்தில்) சொன்ன, ஸமாஹாரம் முதலிய லிங்கங்கள் பெரும்பாலும் ஆகும் என்பதே தெரிகிறது. (உபாஸனத்துடன் செய்யப்படும் யாகங்களில் அவை பொருந்தும்; உபாஸநம் இல்லாமல் செய்யும் யாகங்களில் அவை சேராது).

ஆகையால் (உத்கீத-உபாஸனம் முதலியது செய்ய வேண்டிய) கட்டாயம் இல்லை என்பது நிலைநின்றது.

* * *

யதாஶ்ரயபாவாதிகரணம் முற்றிற்று.

இப்படியாக ஸ்ரீபகவத்ராமானுஜர் அருளிச் செய்த ஶாரீரக-மீமாம்ஸா-பாஷ்யத்தில்
மூன்றாவது அத்யாயத்தின் மூன்றாம் பாதம்

ஸ்ரீமதேராமானுஜாயநம:

ஸ்ரீபகவத்ராமானுஜர்அருளிய

ஸ்ரீபாஷ்யம்

தமிழாக்கம்

(3-4)

மூன்றாவது அத்யாயம் - ஸாதன அத்யாயம்.

நான்காவது பாதம் - அங்க பாதம்

அதிகரணங்கள் 15 (109-123)

ஸூத்ரங்கள் 51 (419 - 469)

மூன்றாவது அத்யாயத்தில் உபாயமான ப்ரஹ்ம-உபாஸனம் பற்றிய விஷயங்கள் உள்ளன; அதில் இந்த நான்காவது பாதத்துக்கு அங்கபாதம் என்று பெயர்; இதில், ப்ரஹ்ம-வித்யைக்கு தேவையான அங்கங்களை எடுத்து சொல்கிறது; வர்ணாஶ்ரமதர்மங்கள், புலனடக்கம், மன-அமைதி, எப்போதும் பரமாத்மாவை சிந்திக்கும் பாங்கு முதலியவை ப்ரஹ்மவித்யையின் அங்கங்கள்.

இதனுடன் கூட யார் யாருக்கு ப்ரஹ்மவித்யை செய்யும் தகுதி உண்டு, யாருக்குக் கிடையாது எனும் விசாரமும் உள்ளது.

109.புருஷார்த்தாதிகரணம்(3-4-1)

முன் குறிப்பு

வித்யையின் அங்கங்கள் பற்றிய இந்த பாதத்தில், ஆரம்பத்தில் ஒரு பூர்வபக்ஷம் - வித்யையே அங்கம்தான்; அது மோக்ஷத்துக்கு உபாயம் அல்ல என்று; அதை மறுத்து வித்யை உபாயம் ஆகும் என நிலைநாட்டுகிறார்.

பூர்வபக்ஷம் - ஜைமினி முனிவரின் மதம் - யாகம் முதலிய கர்மம்தான் உபாயம் ஆகும்; வித்யை அதன் அங்கம் ஆகும்; யாகம் செய்பவன், தனது ஆத்ம-ஸ்வரூபத்தை அறியவேண்டும்; அந்த ஆத்மஸ்வரூபத்தையே உபநிஷத் சொல்கிறது; ப்ரஹ்மம் என்று தனியாக ஒன்று கிடையாது; ஜீவன்தான் ப்ரஹ்மம்; அது பற்றிய ஜ்ஞானம் ஆனது, யாகம் செய்பவனுக்கு ஸம்ஸ்காரம் ஆகிறது; இந்த ஸம்ஸ்காரம் பெற்று, யாகம் செய்ய வேண்டும்; யாகத்துக்கு பலன் ஸ்வர்க்கம் முதலியவை; உபநிஷத்களில் சொன்ன பலன்களை கருத்தில் கொள்ளக்கூடாது; மரணம் வரை கர்ம-அனுஷ்டானம் செய்ய வேண்டும் என்று வேதம் சொல்கிறது; ஸந்யாஸம் வாங்கிக் கொள்ளக் கூடாது; அதற்கு ப்ரமாணம் கிடையாது; கடைசி வரை கர்ம-அனுஷ்டாநம்தான் செய்யவேண்டும்.

ஸித்தாந்தம் - ஸ்ரீவ்யாஸமுனிவரின் மதம் - உபநிஷத்களில் ஜீவனைத் தவிர ப்ரஹ்மம் வேறானவர் என்றும் ப்ரஹ்ம-உபாஸனமே மோக்ஷத்துக்கு உபாயம் என்பதும் தெளிவாக உள்ளது. ஜீவனே ப்ரஹ்மம் என்னும் வாதங்களுக்கு முன்பே பல ஸூத்ரங்களில், பல விசாரங்களில் பதில் சொல்லியாயிற்று.

வித்யையை விட கர்மம்தான் முக்கியம் என்பதற்கு காரணங்களை பூர்வபக்ஷத்தில் ஐந்து ஸூத்ரங்களில் சொல்கின்றனர்; அதே வரிசையில் ஸித்தாந்தத்தில் ஐந்து ஸூத்ரங்களில் பதில் உள்ளது; கடைசியில் ஸந்யாஸ-ஆச்ரமம் பற்றிய விசாரம் செய்து, அதனை ஸ்தாபிக்கிறார்.

இங்கு மிகமிக முக்கியமான ஸித்தாந்தக் கருத்தை சொல்வதால், முதல் ஸூத்ரம் ஸித்தாந்தம்; அடுத்தது பூர்வபக்ஷம் என்று வித்யாசமான அணுகுமுறை உள்ளது.

ஜைமினி-முனிவர் முதலில் இந்த மதத்தை வெளியிட்டார்; பின்னர், ஸ்ரீவ்யாஸரின் சிஷ்யராக மாறி, ப்ரஹ்ம-ஜ்ஞானம் பெற்றார்; அதற்கு சாக்ஷி - ‘‘பரம் ஜைமினி: முதலிய ஸூத்ரங்கள் என்று பெரியோர்கள் சொல்வர்;

ஒரு காலகட்டத்தில், வேத-அனுஷ்டானத்துக்கு எதிரான பௌத்தமதம் பரவும்போது, வைதிக-கர்மங்களை நிலை நாட்டுவதற்காக ஜைமினி-முனிவர் சற்றே அதிகப்படியாக கர்மங்களின் பெருமையை கூட்டிச் சொன்னார்; அது காலத்தின் கட்டாயமே தவிர உண்மை நிலையல்ல என்றும் சொல்வர்.

१०९. पुरुषार्थाधिकरणम् (३-४-१)

४१९.पुरुषार्थोऽतः शब्दादिति बादरायणः (३-४-१)

गुणोपसंहारानुपसंहारफला विद्यैकत्वनानात्वचिन्ता कृता। इदानीं विद्यातः पुरुषार्थः, उत विद्याङ्गकात् कर्मण इति चिन्त्यते।

किं युक्तम्? **अतः** - विद्यातः पुरुषार्थ इति भगवान् बादरायणो मन्यते; कुतः? **शब्दात्**। दृश्यते ह्यौपनिषदः शब्दो विद्यातः पुरुषार्थं ब्रुवन्,

- **"ब्रह्मविदाप्नोति परम्"**(तै.1.आन.2)[1],
- **"वैदाहमेतं पुरुषं महान्तमादित्यवर्णं तमसः परस्तात्। तमेवं विद्वानमृत इह भवति नान्यः पन्था विद्यतेऽयनाय"**(तै.आर.3-13)[2]
- **"यथा नद्यः स्यन्दमानाः समुद्रं अस्तं गच्छन्ति नामरूपे विहाय। तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात् परं पुरुषमुपैति दिव्यम्"**(मु.3-2-8)[3] इत्यादिः॥ १ ॥

109. புருஷார்தாதிகரணம் (3-4-1)

419.புருஷார்தோऽத: ஶப்தாதிதி பாதராயண: (3-4-1)

குணோபஸம்ஹாராநுபஸம்ஹாரபலா வித்யைகத்வநாநாத்வசிந்தா க்ருதா, இதாநீம் வித்யாத: புருஷார்த:, உத வித்யாங்ககாத் கர்மண இதி சிந்த்யதே।

கிம் யுக்தம்? அத: - வித்யாத: புருஷார்த: இதி பகவாந் பாதராயணோ மந்யதே, குத:? ஶப்தாத்। த்ருஶ்யதே ஹி ஔபநிஷத: ஶப்த: வித்யாத: புருஷார்தம் ப்ருவந்,

- *"ப்ரஹ்மவிதாப்நோதி பரம்"*(தை.1.ஆந.2)[1],
- *"வேதாஹமேதம் புருஷம் மஹாந்தமாதித்யவர்ணம் தமஸ: பரஸ்தாத்। தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா வித்யதேऽயநாய"* (தை.ஆர.3-13)[2]
- *"யதா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே அஸ்தம் கச்சந்தி நாமரூபே விஹாய। ததா வித்வாந் நாமரூபாத்விமுக்த: பராத் பரம் புருஷமுபைதி திவ்யம்"* (மு.3-2-8)[3] இத்யாதி:।।1।।

* * *

109.புருஷார்த்தாதிகரணம்(3-4-1)

419.புருஷார்த்த: அத: ஶப்தாத் இதி பாதராயண:(3-4-1)

வேதம் சொல்வதால், புருஷார்த்த-பலன் முன் சொன்ன வித்யையால் ஆகும் என பாதராயணர் கருதுகிறார்.

ஸங்கதி (விஷயதொடர்பு) & ஸந்தேஹம்

வித்யை ஒன்றா வெவ்வேறா என்னும் விசாரமானது (இதுவரை) செய்யப் பட்டது; இது குணங்களைச் சேர்த்தலையும் சேர்க்காமையையும் பலனாகக் கொண்டதாகும். (மூன்றாம் பாதம் முன்குறிப்பு காண்க)

இப்போது அந்த புருஷார்த்தம் (மனிதன் வேண்டும் பலன்) ஆனது, வித்யையால் விளைவதா அல்லது வித்யையை அங்கமாகக் கொண்ட (யாகம் முதலிய) கர்மத்தாலா என்று விசாரிக்கப் படுகிறது.

ஸித்தாந்தம்

எது சரியாகும்?

வித்யையால் பலன் விளையும் என்பது.

அத: (இதனால்) - இந்த வித்யையால்

புருஷார்த்த: - புருஷன் வேண்டும் பலன் (உண்டாகும்)

இதி பாதராயண: - என்று வ்யாஸபகவான் கருதுகிறார்;

ஏன்?

ஶப்தாத் - வேதவாக்யத்தால்;

வித்யையிலிருந்து புருஷார்த்தம் ஆவதைச் சொல்வதான உபநிஷத்-வாக்யம் காணப்படுகிறது -

- [1] **"ப்ரஹ்மத்தை அறிபவன் உயர்ந்த ப்ரஹ்மத்தை அடைவான்"**
- [2] **"ப்ரக்ருதிக்கு அப்பால், ஆதித்ய-வர்ணனாக ஒளிரும் மஹாபுருஷனை நான் உபாஸனம் செய்கிறேன்; அவனை இப்படி அறிபவன் (உபாஸனம் செய்பவன்) இங்கு மோக்ஷம் அடைந்தவன் ஆகிறான்; அதை அடைவதற்கு வேறு வழியில்லை".** (எனவே கர்மம் உபாயமாகாது)
- [3] **"பெருகும் நதிகள் தனிப் பெயரையும் உருவையும் விட்டு கடலில் எப்படி ஒன்று சேர்கின்றனவோ, அப்படியே உபாஸனம் செய்பவன் பெயர்-உருவிலிருந்து விடுப்பட்டவனாய் உயர்ந்தவனை விட உயர்ந்த திவ்யபுருஷனை அடைகிறான்"**

முதலியது.

◆

अत्र पूर्वपक्षी प्रत्यवतिष्ठते-

४२०.शेषत्वात् पुरुषार्थवादो यथाऽन्येष्विति जैमिनिः (३-४-२)

नैतदेवम् - यत् विद्यातः पुरुषार्थावाप्तिः शब्दादवगम्यते इति। न ह्येषः, ''**ब्रह्मविदाप्नोति परम्**''(तै.1.आन.2)[1] इत्यादिशब्दो वेदनात् पुरुषार्थावाप्तिमवगमयति, कर्मसु कर्तृभूतस्याऽऽत्मनो याथात्म्यवेदनप्रतिपादनपरत्वात्। अतः कर्तुः संस्कारद्वारेण विद्यायाः क्रतुशेषत्वात् तत्र फलश्रुतिरर्थवादमात्रम्; यथाऽन्येषु द्रव्यादिषु - इति जैमिनिराचार्यो मन्यते। तदुक्तम्, ''**द्रव्यसंस्कारकर्मसु परार्थत्वात् फलश्रुतिरर्थवादः स्यात्**'' (पू.मी.सू.4-3-1)[2] इति।

ननु च कर्मसु कर्तुर्जीवादन्यो मुमुक्षुभिः प्राप्यतया वेदान्तेषु वेद्य उपदिश्यत इति प्रागेवोपपादितम्,

- ''**नेतरोऽनुपपत्तेः**''(ब्र.सू.1-1-17),
- ''**भेदव्यपदेशाच्च**''(ब्र.सू.1-1-18),

அத்ர பூர்வபக்ஷீ ப்ரத்யவதிஷ்டதே -

420.ஶேஷத்வாத் புருஷார்தவாதோ யதாऽந்யேஷ்விதி ஜைமிநி:(3-4-2)

நைததேவம் - யத் வித்யாத: புருஷார்தாவாப்தி: ஶப்தாதவகம்யதே இதி। ந ஹ்யேஷ:, *''ப்ரஹ்மவிதாப்நோதி பரம்''*(தை.1.ஆந.2)[1] இத்யாதிஶப்த: வேதநாத் புருஷார்தாவாப்திம் அவகமயதி, கர்மஸு கர்த்ருபூதஸ்யாऽऽத்மந: யாதாத்ம்யவேதநப்ரதிபாதநபரத்வாத்। அத: கர்து: ஸம்ஸ்காரத்வாரேண வித்யாயா: க்ரதுஶேஷத்வாத் தத்ர பலஶ்ருதி: அர்தவாதமாத்ரம்; யதா அந்யேஷு த்ரவ்யாதிஷு - இதி ஜைமிநிராசார்யோ மந்யதே। ததுக்தம், *''த்ரவ்ய-ஸம்ஸ்கார-கர்மஸு பரார்தத்வாத் பலஶ்ருதிரர்தவாத: ஸ்யாத்''* (பூ.மீ. ஸூ4-3-1)[2] இதி।

நநு ச - கர்மஸு கர்துர்ஜீவாதந்ய: முமுக்ஷுபி: ப்ராப்யதயா வேதாந்தேஷு வேத்ய உபதிஶ்யதே இதி ப்ராகேவோபபாதிதம்,

- *''நேதரோऽநுபபத்தே:''*(ப்ர.ஸூ.1-1-17),
- *''பேதவ்யபதேஶாச்ச''*(ப்ர.ஸூ.1-1-18),

பூர்வபக்ஷம்

இதில் பூர்வபக்ஷம் சொல்பவன் கேட்கிறான் -

420.(பூ)ஶேஷத்வாத் புருஷார்த்தவாத: யதா அந்யேஷு இதி ஜைமிநி:(3-4-2)

[வித்யையானது, யாகத்தின்] அங்கமானபடியால், பலனைச் சொன்னது பிறவற்றில் போல புருஷனின் அர்த்தவாதம் ஆகும் என ஜைமினி கருதுகிறார்

புருஷார்த்தத்தை (பலனை) அடைதலானது, வித்யையால் விளைவதாக வேதவாக்யத்திலிருந்து தெரிகிறது - என்றது எதுவோ, அது அப்படியல்ல; ஏனெனில், [1] **''ப்ரஹ்மத்தை அறிபவன் உயர்ந்த ப்ரஹ்மத்தை அடைவான்''** முதலிய இந்த வாக்யமானது, ஜ்ஞாநத்தினால் புருஷார்த்தத்தை அடைவதை அறிவிக்காது; ஏனெனில், அது (யாகம் முதலிய) கர்மங்களில் கர்த்தாவாகிற ஆத்மாவின் உண்மையை அறிதலைப் பற்றி சொல்வதில் நோக்குடையது ஆகும்.

✍*(யாகம் செய்யும் ஜீவன், கர்த்தாவான தனது ஆத்ம-ஸ்வரூபத்தை அறிய வேண்டும்; அந்த ஜீவாத்ம-ஸ்வரூபம்தான் ப்ரஹ்மம் எனப்படும்; அதனை அறிபவன் ஆக வேண்டும் என்று இந்த வாக்யம் சொல்கிறது).*✍

ஆகையால், வித்யையானது, கர்த்தாவுக்கு ஸம்ஸ்காரம் ஆவதன் மூலமாக, யாகத்துக்கு அங்கமாகிறது; எனவே,

ஶேஷத்வாத் - (வித்யை கர்மத்துக்கு அங்கமாவதால்)

புருஷார்த்தவாத: - அங்கு பலனைச் சொன்னது,

யதா அந்யேஷு (பிறவற்றில் போல) மீதியான த்ரவ்யம் முதலியவற்றில் எப்படியோ, அப்படியே, அர்த்தவாதம் மட்டுமே ✍*(''ப்ரஹ்மத்தை அறிபவன் உயர்ந்த ப்ரஹ்மத்தை அடைவான்'' என்று சொன்னது, புருஷனைத் தூண்டுவதற்கான புகழுரை மட்டுமே; உண்மைக்கருத்து அல்ல)*✍

இதி ஜைமிநி: - என்று ஜைமினி ஆசார்யர் கருதுகிறார்; அது (அவரால் பூர்வமீமாம்ஸாவில்) சொல்லப்பட்டது - [2] **''வேறொன்றின் பொருட்டு அங்கமாக ஆவதால், த்ரவ்யம், ஸம்ஸ்காரம், க்ரியை ஆகியவற்றில் பலனைச் சொன்னது அர்த்தவாதம் ஆகும்''** என்று. (இதன் விளக்கம் பர்ணதா பற்றிய கட்டுரையில் பின் இணைப்பில் காணலாம்)

உள்-கேள்வி (ஸித்தாந்தகருத்து) - கர்மங்களில் கர்த்தாவாக இருப்பவன் ஜீவன்; அவனை விட வேறான ஒருவனே மோக்ஷம் விரும்புபவர்களால் அடையப்பட வேண்டியவன்; இப்படியாக அவனே வேதாந்தங்களில் அறியப் படுபவனாகி உபதேஶிக்கப் படுகிறான்; இது முன்பே,

- **நேதரோऽநுபபத்தே:**
- **பேதவ்யபதேஶாச்ச**

- **''अनुपपत्तेस्तु न शरीरः''**(ब्र.सू.1-2-3),
- **''इतरपरामर्शात् स इति चेन्नासम्भवात्''**(ब्र.सू.1-3-17)

इत्येवमादिभिः सूत्रैः। तदेव ब्रह्म तत्त्वमस्यादिसामानाधिकरण्येन जीवादनतिरिक्तमित्येतदपि, **''अधिकं तु भेदनिर्देशात्''**(ब्र.सू.2-1-22) इत्येवमादिभिर्निरस्तम्। सामानाधिकरण्यनिर्देशश्च, **''ऐतदात्म्यमिदं सर्वम्''** (छा.6-8-7)[1], **''सर्वं खल्विदं ब्रह्म''** (छा.3-14-1)[2] इति चेतनाचेतनसाधारणः, **''यः पृथिव्यां तिष्ठन्''**(बृ.5-7-3)[3], **''य आत्मनि तिष्ठन्''**इ(बृ.मा.5-7-22)[4] इत्यादिनाऽवगततत्तदात्मतयाऽवस्थितिनिबन्धन इति, **''अवस्थितेरिति काशकृत्स्नः''**(ब्र.सू.1-4-22) इत्यादिभिरुपपादितम्। तत् कथं कर्मसु कर्तुरात्मनो याथात्म्योपदेशपरा वेदान्तशब्दा इति विद्यायाः कर्माङ्गत्वं प्रतिपाद्यते?

उच्यते - वेदान्तवाक्येष्वेव विद्यायाः कर्मप्राधान्यं सूचयद्भिर्लिङ्गैः, तदुपबृंहितसामानाधिकरण्यनिर्देशेन च वेदान्तशब्दाः देहातिरिक्तजीवस्वरूपयाथात्म्योपदेशपरा इति बलादभ्युपगमनीयमिति पूर्वपक्षिणोऽभिप्रायः॥

ननु च कर्तृसंस्कारमुखेन विद्यायाः क्रत्वनुप्रवेशो न शक्यते वक्तुम्, कर्तुर्लौकिकवैदिकसाधारणत्वेनाव्यभिचरितक्रतुसम्बन्धित्वाभावात्॥

- *''அநுபபத்தேஸ்து ந ஶாரீர:''*(ப்ர.ஸூ.1-2-3),
- *''இதரபராமர்ஶாத் ஸ இதி சேந்நாஸம்பவாத்''*(ப்ர.ஸூ.1-2-17)

இத்யேவமாதிபி: ஸூத்ரை:। ததேவ ப்ரஹ்ம தத்த்வமஸ்யாதிஸாமாநாதிகரண்யேந ஜீவாதநதிரிக்தம் இத்யேததபி, *''அதிகம் து பேதநிர்தேஶாத்''* (ப்ர.ஸூ.2-1-22), இத்யேவமாதிபி: நிரஸ்தம்। ஸாமாநாதிகரண்யநிர்தேஶஶ்ச, *''ஐததாத்ம்யமிதம் ஸர்வம்''*(சா.6-8-7)[1], *''ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம''*(சா.3-14-1)[2] இதி சேதநாசேதநஸாதாரண:, *''ய: ப்ருதிவ்யாம் திஷ்டந்''*(ப்ரு.5-7-3)[3], *''ய ஆத்மநி திஷ்டந்''*(ப்ரு.மா.5-7-22)[4] இத்யாதிநாऽவகதத்தததாத்மதயாऽவஸ்திதிநிபந்தந: இதி, *''அவஸ்திதேரிதி காஶக்ருத்ஸ்ந:''*(ப்ர.ஸூ.1-4-22) இத்யாதிபிருபபாதிதம்। தத் கதம் கர்மஸு கர்துராத்மநோ யாதாத்ம்யோபதேஶபரா வேதாந்தஶப்தா இதி வித்யாயா: கர்மாங்கத்வம் ப்ரதிபாத்யதே।

உச்யதே - வேதாந்தவாக்யேஷ்வேவ வித்யாயா: கர்மப்ராதாந்யம் ஸூசயத்பிர்லிங்கை:, ததுபப்ரும்ஹிதஸாமாநாதிகரண்யநிர்தேஶேந ச வேதாந்தஶப்தா: தேஹாதிரிக்தஜீவஸ்வரூபயாதாத்ம்யோபதேஶபரா இதி பலாதப்யுபகமநீயமிதி பூர்வபக்ஷிணோऽபிப்ராய:।।

நநு ச கர்த்ருஸம்ஸ்காரமுகேந வித்யாயா: க்ரத்வநுப்ரவேஶோ ந ஶக்யதே வக்தும், கர்து: லௌகிகவைதிகஸாதாரணத்வேந அவ்யபசரிதக்ரதுஸம்பந்தித்வாபாவாத்।।

- **அநுபபத்தேஸ்து ந ஶாரீர:**
- **இதரபராமர்ஶாத் ஸ இதி சேத் ந அஸம்பவாத்**

என்றிவை முதலிய ஸூத்ரங்களால் விளக்கப் பட்டது;, **''தத் த்வமஸி''** முதலியதில் ஸமானாதிகரணமாக ஆவதால், அந்த ப்ரஹ்மமே ஜீவனை விட வேறானது அல்ல என்பதும், **''அதிகம் து பேதநிர்தேஶாத்''** முதலியவற்றால் (ஸூத்ரங்களால்) மறுக்கப் பட்டது; (ப்ரஹ்மத்துடன் ஆன) ஸமாநாதிகரண-குறிப்பும் கூட [1]**''இதெல்லாம் இந்த ஆத்மாவே''**, [2]**''இந்த எல்லாமே ப்ரஹ்மம்தான்''** என்று சேதனங்களுக்கும் அசேதனங்களுக்கும் பொதுவாக உள்ளது; அது, [3]**''யார் ப்ருதிவீயில் இருப்பவனாய்''**, [4]**''யார் ஜீவாத்மாவில் இருப்பவனாய்''** முதலிய வாக்யத்தால், அததற்குள்ளே ஆத்மாவாக ப்ரஹ்மம் இருப்பதாக அறியப்படுவதை அடிப்படையாகக் கொண்டு ஆகிறது; இது, **''அவஸ்திதே: இதி காஶக்ருத்ஸ்ந:''** முதலியவற்றால் விளக்கப் பட்டது; ஆகையால் கர்மங்களில் கர்த்தாவான ஜீவாத்மாவின் உண்மையை உபதேஶிப்பதில் வேதாந்தவாக்யங்கள் நோக்குள்ளவை என்பதையிட்டு, வித்யையானது கர்மத்துக்கு அங்கமாகும் என எப்படி சொல்லப்படும்?

உள்பதில் (பூர்வபக்ஷ கருத்து) - வேதாந்தவாக்யங்களிலேயே வித்யையை விட கர்மம் ப்ரதானமாவதை (வித்யையானது கர்மத்தின் அங்கமாகும் என்பதை) குறிப்பால் உணர்த்தும் லிங்கங்கள் (காரணங்கள்) உள்ளன; அவற்றாலும், அவற்றைத் துணையாகக் கொண்டு விளக்கப்படும் ஸமானாதிகரண-குறிப்பாலும், வேதாந்தவாக்யங்கள் உடலை விட வேறான ஜீவாத்ம-ஸ்வரூபத்தின் உண்மையை உபதேஶிப்பதில் நோக்குள்ளவை என வலுவில் ஒப்புக்கொள்ள வேண்டும் - என்று பூர்வபக்ஷம் சொல்பவரின் கருத்து ஆகும்.

உள்கேள்வி - வித்யையானது, கர்த்தாவுக்கு ஸம்ஸ்காரம் ஆவதன் மூலமாக யாகத்தில் (அங்கமாக) உட்படுகிறது என்று சொல்ல முடியாது; ஏனெனில், கர்த்தா என்பவன் உலக-செயல்களுக்கும் வைதிக-செயல்களுக்கும், பொதுவானவன் ஆனபடியால், யாகத்தை விட்டு பிரியாமல் யாகத்துடன் தொடர்புள்ளவன் என்பது கிடையாது.

✍(யாகத்தை விட்டுப் பிரியாமல் யாகத்தில் தொடர்புடையதே யாகத்தின் அங்கமாகும்; இங்கோ கர்த்தா என்பவன், யாகம் தவிர, உலகச் செயல்களுக்கும் கர்த்தா ஆகிறான்; அதனால், யாகத்தின் அங்கமாக ஆக மாட்டான்; அதனால், அவனைப் பற்றிய ஜ்ஞாநம் என்பதும் யாகத்தின் அங்கம் ஆகாது.).✍

नैवम्; लौकिकस्य कर्मणः कर्तुः देहादव्यतिरिक्तत्वेऽप्युपपत्तेः देहातिरिक्तनित्यात्मस्वरूपस्य क्रतावेवोपयोगात् तत्स्वरूपप्रतिपादनमुखेन क्रत्वनुप्रवेशो न विरुध्यते। अतो विद्यायाः क्रतुशेषत्वात् नातः पुरुषार्थः॥ २ ॥

◆

कानि पुनस्तानि लिङ्गानि; यदुपबृंहितसामानाधिकरण्यनिर्देशेन वेदान्तशब्दा जीवस्वरूपपरा इति निर्णीयन्ते। तत्राह -

४२१.आचारदर्शनात् (३-४-३)

ब्रह्मविदां प्राधान्येन कर्मस्वेवाचारो दृस्यते - अश्वपतिः केकयः किल आत्मवित्तमः तद्विज्ञानायोपगतांस्तानृषीन् प्रत्याह - **''यक्ष्यमाणो ह वै भगवन्तोऽहमस्मि''**(छा.5-11-5)[1] इति। तथा जनकादयो ब्रह्मविदग्रेसराः कर्मनिष्ठाः स्मृतिषु दृश्यन्ते, **''कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः''**(गी.3-20)[2] **''इयाज सोऽपि सुबहून् यज्ञान् ज्ञानव्यपाश्रयः''**(वि.पु.6-6-12)[3] इति।

अतो ब्रह्मविदां कर्मप्रधानत्वदर्शनात् विद्यायाः कर्तृस्वरूपवेदनरूपत्वेन कर्माङ्गत्वमेवेति न विद्यातः पुरुषार्थः॥ ३ ॥

◆

நைவம், லௌகிகஸ்ய கர்மண: கர்து: தேஹாதவ்யதிரிக்தத்வேऽபி உபபத்தே: தேஹாதிரிக்தநித்யாத்மஸ்வரூபஸ்ய க்ரதாவேவ உபயோகாத் தத்ஸ்வரூபப்ரதிபாதநமுகேந க்ரத்வநுப்ரவேஶோ ந விருத்யதே। அத: வித்யாயா: க்ரதுஶேஷத்வாத் நாத: புருஷார்த:।। 2 ।।

◆

காநி புந: தாநி லிங்காநி, யதுபப்ரும்ஹிதஸாமாநாதிகரண்யநிர்தேஶேந வேதாந்தஶப்தா ஜீவஸ்வரூபபரா: இதி நிர்ணீயந்தே। தத்ராஹ -

421.ஆசாரதர்ஶநாத் (3-4-3)

ப்ரஹ்மவிதாம் ப்ராதாந்யேந கர்மஸ்வேவ ஆசாரோ த்ருஶ்யதே - அஶ்வபதி: கேகய: கில ஆத்மவித்தம: தத்விஜ்ஞாநாயோபகதாந் தாந்ருஷீந் ப்ரத்யாஹ - ''*யக்ஷ்யமாணோ ஹ வை பகவந்தோऽஹமஸ்மி*''(சா.5-11-5)[1] இதி। ததா ஜநகாதயோ ப்ரஹ்மவிதக்ரேஸரா: கர்மநிஷ்டா: ஸ்ம்ருதிஷு த்ருஶ்யந்தே, ''*கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:*''(கீ.3-20)[2] ''*இயாஜ ஸோऽபி ஸுபஹூந் யஜ்ஞாந் ஜ்ஞாநவ்யபாஶ்ரய:*''(வி.பு.6-6-12)[3] இதி।

அத: ப்ரஹ்மவிதாம் கர்மப்ரதாநத்வதர்ஶநாத் வித்யாயா: கர்த்ருஸ்வரூபவேதநரூபத்வேந கர்மாங்கத்வமேவேதி ந வித்யாத: புருஷார்த:।।3।।

◆

உள் பதில் - அப்படியல்ல; உலகச் செயலைச் செய்யும் கர்த்தா ஆனவன், ஶரீரத்தை விட வேறானவன் அல்ல என்றாலும், செயல் நடந்துவிடும்; ஆகவே, ஶரீரத்தை விட வேறான நித்யமான ஆத்மஸ்வரூபமானது யாகத்தில் மட்டுமே உபயோகமாகும்; அந்த ஸ்வரூபத்தைச் சொல்வதன் மூலமாக, வித்யையானது, யாகத்தில் உட்படுவது முரண்படாது.

(ஜீவன், கர்த்தா எனும் முறையில் வெளியில் சம்பந்தப் பட்டாலும், ஶரீரத்தை விட வேறான கர்த்தா எனும் முறையில் யாகத்தில் மட்டுமே ஆகிறான்; ஆகையால் அப்படியான ஜீவன், யாகத்துக்கு அங்கம் ஆகிறான்; அவன் வாயிலாக, அவனைப் பற்றிய ஜ்ஞானமும் அங்கம் ஆகிறது; (உ.ம்) கரண்டி போல இருக்கும் ஜுஹூ என்பது பொதுவாக கரண்டி என்னும் முறையில் வெளியில் உபயோகப் பட்டாலும், ஜுஹூ என்னும் விஶேஷ-முறையில் யாகத்தில்தான் பயன்படும்; அதனால், யாகத்துக்கு அங்கம் ஆகும்; அதுபோல,)

ஆகையால், வித்யையானது யாகத்தின் அங்கமானபடியால், அந்த வித்யையினால் புருஷார்த்த-பலன் வராது.

◆ ◆ ◆ ◆

உள் கேள்வி - எந்த லிங்கங்களின் துணையுடன் விளக்கப்படும் ஸமானாதிகரண-குறிப்பைக் கொண்டு, வேதாந்தவாக்யங்கள் ஜீவனது ஸ்வரூபத்தை சொல்லும் நோக்குள்ளவையாக தீர்மானிக்கப் பட்டவையோ, அந்த லிங்கங்கள் (வித்யையை விட கர்ம-அனுஷ்டாநம்தான் முக்கியம் என்பதை அறிய காரணமான சில விஷயங்கள் உள்ளன என்று பூர்வபக்ஷத்தில் குறிப்பிட்டார்; அந்த காரணங்கள்) எவை?

உள்பதில் - அதற்கு (பூர்வபக்ஷத்தில்) பதில் சொல்கிறார் -

421.(பூ)ஆசாரதர்ஶநாத்(3-4-3)

அனுஷ்டானம் காணப்படுவதால்

ப்ரஹ்மஜ்ஞாநிகளின் அனுஷ்டானம் முக்யமாக கர்மங்களில்தான் காணப்படுகிறது; ஆத்மஜ்ஞாநிகளில் உத்தமரான கேகய அரசர் அஶ்வபதி, அந்த ஆத்மஜ்ஞாநத்தைப் பெறும் பொருட்டு வந்த அந்த ரிஷிகளிடம் பதிலுரைத்தார் - [1]**''பூஜிக்கத் தக்கவர்களே, நான் யாகம் செய்யப் போகிறவனாக இருக்கிறேன்''** என்று; (காண்க - வைஶ்வாநர அதிகரணம் - (1-2-6)

அப்படியே, ப்ரஹ்மஜ்ஞாநிகளில் முன் நிற்பவரான ஜனகர் முதலியவர்கள் கர்மம் செய்பவர்களாகவே ஸ்ம்ருதி-நூல்களில் காணப்படுகின்றனர் - [2]**''ஜனகர் முதலியவர், கர்மத்தால்தானே சித்தியைப் பெற்றவரானார்கள்''**, [3]**''ஜ்ஞாநம் பெற்றிருந்த அந்த கேசித்வஜரும் பல யாகங்கள் செய்தார்''** என்று.

ஆகையால் ப்ரஹ்மஜ்ஞாநிகளுக்கும் கர்மமே முக்கியமாகக் காண்பதால், வித்யையானது, கர்த்தாவின் ஸ்வரூபத்தை அறிவது என்னும் உருவில், கர்மத்துக்கு அங்கமாவதுதான்; அதனால், வித்யையினால் புருஷார்த்தபலன் வருவதில்லை.

◆ ◆ ◆ ◆

लिङ्गमिदम्; प्राप्तिरुच्यतामित्यत्राह -

४२२.तच्छ्रुतेः (३-४-४)

श्रुतिरेव हि विद्यायाः कर्माङ्गत्वमाह, **''यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा तदेव वीर्यवत्तरं भवति''**(छा.1-1-10)[1] इति।

नेयं श्रुतिः प्रकरणादुद्गीथमात्रविषयेति व्यवस्थापयितुं शक्या; यतः प्रकरणात् श्रुतिर्बलीयसी। **''यदेव विद्यया करोति''**(छा.1-1-10)[2] इति विद्यामात्रविषया हीयं श्रुतिः॥ ४ ॥

४२३.समन्वारम्भणात् (३-४-५)

''तं विद्याकर्मणी समन्वारभेते''(बृ.6-4-2)[3] इति विद्याकर्मणोः साहित्यं च दृश्यते। साहित्यं चोक्तेन न्यायेन विद्यायाः कर्माङ्गत्वे सत्येव भवति॥५॥

४२४.तद्वतो विधानात् (३-४-६)

லிங்கமிதம்; ப்ராப்திருச்யதாம் இத்யத்ராஹ -

422. தச்ச்ருதே:(3-4-4)

ஶ்ருதிரேவ ஹி வித்யாயா: கர்மாங்கத்வமாஹ, *''யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்தரம் பவதி''*(சா.1-1-10)[1] இதி।

நேயம் ஶ்ருதி: ப்ரகரணாத் உத்கீதமாத்ரவிஷயா இதி வ்யவஸ்தாபயிதும் ஶக்யா; யத: ப்ரகரணாத் ஶ்ருதிர்பலீயஸீ। *''யதேவ வித்யயா கரோதி''* (சா.1-1-10)[2] இதி வித்யாமாத்ரவிஷயா ஹி இயம் ஶ்ருதி:।। 4 ।।

423. ஸமந்வாரம்பணாத் (3-4-5)

''தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே''(ப்ரு.6-4-2)[3] இதி வித்யாகர்மணோ: ஸாஹித்யம் ச த்ருஶ்யதே। ஸாஹித்யம் ச உக்தேந ந்யாயேந வித்யாயா: கர்மாங்கத்வே ஸத்யேவ பவதி।।5।।

424.தத்வதோ விதாநாத் (3-4-6)

கேள்வி - இது லிங்கம் ஆகும்; (ஶ்ருதி)ப்ரமாணத்தால் இது ஏற்படுவது சொல்லப் படட்டும்; (ப்ரஹ்ம உபாஸநம் செய்பவர்கள் யாகம் செய்தார்கள் என்கிற காரண-அடையாளம் இருக்கட்டும்; வேதவாக்யத்தில் நேரிடையாக இதைச் சொல்லும் குறிப்பு உள்ளதா?)

பதில் - என்பதற்கு பதில் சொல்கிறார் -

422.தச்ச்ருதே:(3-4-4) (பூ)

அது பற்றிய ஶ்ருதி இருப்பதால்,

[1]**''எந்த யாகத்தை வித்யையால், ஶ்ரத்தையால், உபநிஷத்-ஜ்ஞாநத்தால் செய்கிறானோ, அதுவே அதிக வீர்யம் உடையதாக ஆகிறது''** என்று வேதமேதான் கர்மத்துக்கு அங்கமாக வித்யை ஆவதைச் சொல்கிறது; (வித்யையால் கர்மத்தை செய்கிறான் என்று சொல்வதால், வித்யை அங்கமாவது தெரிகிறது; இதில் மூன்றாவது விபக்தி என்பது ஶ்ருதி ஆகும்).

ப்ரகரணத்தைக் (சொல்லப்பட்டு வரும் இடத்தைக்) கொண்டு, இந்த (வித்யை எனும் சொல்லானது, உத்கீதவித்யையை மட்டும் பற்றியது என வரையறை சொல்ல முடியாது; ஏனெனில், ப்ரகரணத்தை விட ஶ்ருதி வலிமை மிக்கது; [2]**''வித்யையினால் எதனைச் செய்கிறானோ''** என்று எல்லா வித்யையையும் பற்றிதானே இந்த ஶ்ருதி உள்ளது!

✍*(உ.ம் - ''நன்கு வேதாந்தம் படிக்க வேண்டும்; படித்தால்தானே வாழ்வுக்கு நல்லது'' என்று சொல்கிறோம்; இது வேதாந்த-படிப்பைப் பற்றி சொல்லும் இடம்; ஆனாலும், ''படித்தால்தானே வாழ்வில் நல்லது என்பது எல்லா படிப்பையும் குறிக்கலாம்; அதுபோல, ''யாகத்தில் உத்கீத-உபாஸனம் ஆகிற வித்யை செய்ய வேண்டும்'' என்று சொல்லிவிட்டு, பின்னர், ''வித்யையால் எந்த யாகத்தைச் செய்கிறானோ, அதுவே வீர்யம் உடையது'' என்ற வாக்யம் சொல்லியுள்ளது; இது, உத்கீத-வித்யையைச் சொல்லும் இடத்தில் இருந்தாலும் கூட பொதுவாக எல்லா வித்யைகளையும் குறிக்கும்; அதனால், ப்ரஹ்மவித்யையும் உத்கீதவித்யை போல கர்மத்துக்கு அங்கம்தான்).*✍

◆ ◆ ◆ ◆

423.ஸமந்வாரம்பணாத்(3-4-5) (பூ)

[வித்யையும் கர்மமும்] சேர்ந்திருப்பதால்

[3]**''(ஶரீரத்தை விட்டு வெளியேறும்) ஜீவனை வித்யை-கர்மம் என இரண்டும் சேர்ந்து கூட போகின்றன''** என்பதாக வித்யையும் கர்மமும் சேர்ந்திருப்பது காணப் படுகிறது. சேர்ந்திருத்தல் என்பது, முன் சொன்ன முறையில் வித்யையானது கர்மத்துக்கு அங்கமாக ஆனால்தான் வரும். ✍*(குருவும் சிஷ்யனும் சேர்ந்தே போவது-போல, அரசனும் சேவகனும் சேர்ந்தே போவது போல, கர்மமும் வித்யையும் சேர்ந்தே போவதால், கர்மம் முக்கியமானது; வித்யை அதன் அங்கமானது என தெரிகிறது).*✍

◆ ◆ ◆ ◆

424.தத்வத: விதாநாத்(3-4-6) (பூ)

அந்த வித்யையை உடையவனுக்கு [கர்மங்களை] விதிப்பதால்.

विद्यावतः कर्मविधानात् विद्या कर्माङ्गमित्यवगम्यते, ''**आचार्यकुलात् वेदमधीत्य यथाविधानं गुरोः कर्मातिशेषेणाभिसमावृत्य कुटुम्बे शुचौ देशे**''(छा.8-15-1)[1] इत्यादौ। ''**वेदमधीत्य**''(छा.8-15-1)[2] इत्यध्ययनवतः कर्माणि विदधत् अर्थावबोधपर्यन्ताध्ययनवत एव विदधाति। अर्थावबोधपर्यन्तं ह्यध्ययनमिति स्थापितम्। अतो ब्रह्मविद्यापि कर्मसु विनियुक्तेति न पृथक्फलायावकल्पते॥ ६ ॥

⁂

इतश्च न विद्यातः पुरुषार्थः -

४२५.नियमात् (३-४-७)

''**कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेत् शतं समाः**''(ई.2)[3] इत्यात्मविदः पुरुषायुषस्य सर्वस्य कर्मसु नियमेन विनियोगात् कर्मण एव फलमित्यवगम्यते। विद्या तु कर्माङ्गमिति॥७॥

⁂

एवं प्राप्ते प्रचक्ष्महे -

४२६.अधिकोपदेशात् तु बादरायणस्यैवं तद्दर्शनात् (३-४-८)

வித்யாவத: கர்மவிதாநாத் வித்யா கர்மாங்கமித்யவகம்யதே, "*ஆசார்யகுலாத் வேதமதீத்ய யதாவிதாநம் குரோ: கர்மாதிஶேஷேணாபிஸமாவ்ருத்ய குடும்பே ஶுசௌ தேஶே*"(சா.8-15-1)[1] இத்யாதௌ। "*வேதமதீத்ய*"[2] இதி அத்யயநவத: கர்மாணி விதகத் அர்தாவபோதபர்யந்தாத்யயநவத ஏவ விததாதி। அர்தாவபோதபர்யந்தம் ஹி அத்யயநமிதி ஸ்தாபிதம்। அத: ப்ரஹ்மவித்யாபி கர்மஸு விநியுக்தேதி ந ப்ருதக்பலாயாவகல்பதே।। 6 ।।

⁂

இதஶ்ச ந வித்யாத: புருஷார்த: -

425.நியமாத் (3-4-7)

"*குர்வந்நேவேஹ கர்மாணி ஜிஜீவிஷேத் ஶதம் ஸமா:*"(ஈ.2)[3] இதி ஆத்மவித: புருஷாயுஷஸ்ய ஸர்வஸ்ய கர்மஸு நியமேந விநியோகாத் கர்மண ஏவ பலமித்யவகம்யதே। வித்யா து கர்மாங்கமிதி।। 7 ।।

⁂

ஏவம் ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே -

426.அதிகோபதேஶாத் து பாதராயணஸ்யைவம் தத்தர்ஶநாத்(3-4-8)

[1]**''ஆசார்ய-குலத்திலிருந்து வேதத்தை அத்யயனம் செய்து, ஆசார்ய-ஆஜ்ஞைப்படி ஆசார்யனின் செயலை (பணிவிடை முதலியதை) மீதமில்லாமல் செய்து, க்ருஹஸ்த ஆஶ்ரமத்தில் ஶுத்தமான இடத்தில்''** முதலிய வாக்யத்தில், வித்யையை உடையவனுக்கு கர்மங்களை விதித்திருப்பதால், வித்யையானது கர்மத்துக்கு அங்கமாகும் என தெரிகிறது.

(இங்கு) [2]**''வேதத்தை அத்யயனம் செய்து''** என்று அத்யயனம் செய்தவனுக்கு கர்மங்களை விதிப்பதாய் அர்த்த-ஜ்ஞாநம் வரையிலான அத்யயனம் உடையவனுக்குத்தான் கர்மங்களை விதிக்கிறது; ஏனெனில், அத்யயனம் என்பது, வேதத்தின் அர்த்தத்தை அறிவதுவரை ஆகும் என்று (பூர்வமீமாம்ஸாவில்) நிலைநாட்டப் பட்டது; ஆகையால், (அர்த்தஜ்ஞாநம் ஆகிற) ப்ரஹ்ம-ஜ்ஞாநமும் கர்மங்களில் உபயோகப் படுத்தச் சொல்லியுள்ளது; ஆகையால், அது தனியொரு பலனின் பொருட்டு ஆகாது.

◆ ◆ ◆ ◆

வித்யையினால் பலன் வருவதில்லை என்பது இதனாலும் ஆகும் -

425.நியமாத்(3-4-7) (பூ)

[கட்டாயம் செய்து கொண்டே இருக்க வேண்டியதாக] நியமம் இருப்பதால்

[3]**''கர்மங்களைச் செய்து கொண்டிருப்பவனாகவே நூறாண்டுகள் வாழ விரும்பவும்''** என்று ஆத்ம-ஜ்ஞாநியின் மனித-ஆயுள் மொத்தமும் கர்மங்களில் மாறாமல் உபயோகப் படுத்தச் சொல்லியுள்ளது; ஆகையால், கர்மத்தால்தான் பலன் என்று தெரிகிறது; வித்யையோ, கர்மத்தின் அங்கமாகும் என்பதாகத் தெரிகிறது. ✍*(எது கட்டாயம் கடைசி வரை செய்ய வேண்டுமோ, அதுதான் முக்யம்; எப்போதாவது செய்வது அங்கமாகலாம்; ஆகையால், கர்மம் ப்ரதானம்; வித்யை அங்கம்)*✍

◆ ◆ ◆ ◆

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் -

423.அதிகோபதேஶாத் து பாதராயணஸ்ய ஏவம் தத்தர்ஶநாத்(3-4-8)

[ஜீவனை விட] வேறானதை [ப்ரஹ்மத்தை] உபதேஶிப்பதால் இப்படியே [வித்யையினால் பலன் வருவதாகவே] வ்யாஸருடைய [கருத்தாகும்]. அதை வேதத்தில் காண்பதால்

तुशब्दात् पक्षो व्यावृत्तः। विद्यात एव पुरुषार्थः, कुतः? **अधिकोपदेशात्।** कर्मसु कर्तुर्जीवात् हेयप्रत्यनीकानवधिकातिशयासंख्येयकल्याणगुणाकरत्वेनाधिकस्यार्थान्तरभूतस्य परस्य ब्रह्मणो वेद्यतयोपदेशात् भगवतो बादरायणस्य विद्यातः पुरुषार्थः (फलम्) इत्येवमेव मतम्।

लिङ्गानि तिष्ठन्तु; वेद्यतयोपदेशस्तु तावत् कर्तुः प्रत्यगात्मनोऽधिकस्यैव। कथम्?

तद्दर्शनात् - प्रत्यगात्मन्यशुद्धे शुद्धेऽप्यसम्भावनीयानन्तगुणाकरस्य वेद्यस्य निरस्तनिखिलहेयगन्धस्य स्वसङ्कल्पकृतजगदुदयविभवलयलीलस्य सर्वज्ञस्य सर्वशक्तेर्वाङ्मनसापरिच्छेद्यानन्दस्य जीवाधिपस्य कृत्स्नप्रशासितुः परस्य ब्रह्मणो वेदनोपदेशवाक्येषु दर्शनात्,

- **"अपहतपाप्मा विजरो विमृत्युर्विशोको विजिघत्सोऽपिपासः सत्यकामः सत्यसङ्कल्पः"** (छा.8-1-5)[1],
- **"तदैक्षत बहु स्यां प्रजायेयेति तत्तेजोऽसृजत"** (छा.6-2-3)[2]
- **"यः सर्वज्ञः सर्ववित्"**(मु.1-1-9)[3],

துஶப்தாத் பக்ஷோ வ்யாவ்ருத்த:। வித்யாத ஏவ புருஷார்த:, குத:? *அதிகோபதேஶாத்।* கர்மஸு கர்துர்ஜீவாத் ஹேயத்யநீகாநவதிகாதிஶயாஸங்க்யேயகல்யாணகுணாகரத்வேந அதிகஸ்ய அர்தாந்தரபூதஸ்ய பரஸ்ய ப்ரஹ்மண: வேத்யதயா உபதேஶாத் பகவதோ பாதராயணஸ்ய வித்யாத: புருஷார்த: (பலம்) இத்யேவமேவ மதம்।

லிங்காநி திஷ்டந்து, வேத்யதயா உபதேஶஸ்து தாவத் கர்து: ப்ரத்யகாத்மநோऽதிகஸ்யைவ। கதம்?

தத்தர்ஶநாத் - ப்ரத்யகாத்மநி அஶுத்தே ஶுத்தேऽபி அஸம்பாவநீயாநந்தகுணாகரஸ்ய வேத்யஸ்ய நிரஸ்தநிகிலஹேயகந்தஸ்ய ஸ்வஸங்கல்பக்ருதஜகதுதயவிபவலயலீலஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய ஸர்வஶக்தே: வாங்மநஸாபரிச்சேத்யாநந்தஸ்ய ஜீவாதிபஸ்ய க்ருத்ஸ்நப்ரஶாஸிது: பரஸ்ய ப்ரஹ்மண: வேதநோபதேஶவாக்யேஷு தர்ஶநாத்,

- *"அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர்விஶோகோ விஜிகத்ஸோऽபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:"*(சா.8-1-5)[1],
- *"ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி தத்தேஜோऽஸ்ருஜத"* (சா.6-2-3)[2]
- *"ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்"*(மு.1-1-9)[3],

‘து’ என்ற சொல்லால் பூர்வபக்ஷம் களையப் பட்டது.

வித்யையினால்தான் புருஷார்த்தம் (பலன்) ஆகும்;

ஏன்?

அதிகோபதேஶாத் (வேறானதை உபதேஶிப்பதால்) - கர்மங்களில் கர்த்தாவாக இருக்கும் ஜீவனை விட ப்ரஹ்மம் அதிகமாகிறது - வேறானதாக ஆகிறது; ஏனெனில், விடத்தக்க இழிகுணங்களுக்கு எதிர்த்தட்டாய், உயர்வற உயர்ந்த எண்ணற்ற கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாய் ஆவதால்; அப்படி வேறான ப்ரஹ்மத்தையே அறிய வேண்டியதாக உபதேஶிப்பதால்,

ஏவம் (இப்படியே) - இப்படி வித்யையினால் பலன் வரும் என்பதாகவே

பாதராயணஸ்ய - வ்யாஸருடைய (கருத்தாகும்).

லிங்கங்கள் இருக்கட்டும்; அறியப்பட வேண்டியதாக உபதேஶமோ, கர்த்தாவான ஜீவனை விட வேறான ஒன்றைப் பற்றியதாகவே உள்ளது; எப்படி?

தத்தர்ஶநாத் (அதை வேதத்தில் காண்பதால்) -

- அஶுத்தமாகவும் ஶுத்தமாகவும் ஆகும் ஜீவனிடத்தில் வர முடியாததான எண்ணற்ற கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாய்,
- உபாஸனம் செய்யப்பட வேண்டியவனாய்,
- விடத்தக்க எல்லா இழிகுணமும் துளியும் அற்றவனாய்
- தன் ஸங்கல்பத்தாலேயே உலகின் ஆக்கமும் நிலையும் அழிவும் லீலையாகச் செய்பவனாய்,
- ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தியாய்,
- வாக்கினாலும் மனத்தாலும் அளவிட முடியாத ஆனந்தம் உடையவனாய்
- ஜீவனை விட வேறானவனாய்,
- எல்லாவற்றையும் அடக்கி ஆள்பவனாய்

இருக்கும் பரப்ரஹ்மத்தையே, ஜ்ஞாந-உபதேஶம் செய்யும் வாக்யங்களில் காண்பதால்;

- [1]**‘‘கர்மம் அற்றவன், மூப்பு அற்றவன், மரணம் அற்றவன், சோகம் அற்றவன், பசி அற்றவன்,, தாகம் அற்றவன், ஸத்யகாமன், ஸத்யஸங்கல்பன்’’**
- [2]**‘‘அந்த ப்ரஹ்மம் ஆனது பலவாக ஆவேன்’ ‘பிறப்பேன்’ என்று பார்த்தது; அது தேஜஸ்ஸினைப் படைத்தது.’’**
- [3]**‘‘யார் எல்லாம் அறிபவனோ, எல்லாம் அடைபவனோ’’**

- **''पराऽस्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च''** (श्वे.6-8)[1],
- **''स एको ब्रह्मण आनन्दः''** (तै.1.आन.9)[2],
- **''यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा सह। आनन्दं ब्रह्मणो विद्वान् न बिभेति कुतश्चनेति''** (तै.1.आन.5)[3],
- **''एष सर्वेश्वर एष भूताधिपतिरेष भूतपाल एष सेतुर्विधरणः''**(बृ.6-4-22)[4],
- **''स कारणं करणाधिपाधिपो न चास्य कश्चिज्जनिता न चाधिपः''**(श्वे.6-9)[5],
- **''एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि सूर्याचन्द्रमसौ विधृतौ तिष्ठतः (एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि द्यावापृथिव्यौ विधृते तिष्ठतः)''**(बृ.5-8-9)[6],
- **''भीषाऽस्माद्वातः पवते। भीषोदेति सूर्यः। भीषाऽस्मादग्निश्चेन्द्रश्च। मृत्युर्धावति पञ्चमः''** (तै.1.आन.9)[7] इत्यादिषु।

तस्मात् वेदनोपदेशशब्देषु कर्तुः प्रत्यगात्मनः खद्योतकल्पस्याविद्यादिहेयसम्बन्धयोग्यस्य गन्धोऽपि नास्तीति परमपुरुषविषयाया विद्यायास्तत्प्राप्तिरूपममृतत्वं तत्रतत्र श्रूयमाणं फलमिति विद्यातः पुरुषार्थ इति सुष्टूक्तम्॥८॥

* * *

लिङ्गान्यपि निरस्यन्ते-

- *''பராऽஸ்ய ஶக்திர்விவிதைவ ஶ்ருயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச''* (ஶ்வே.6-8)[1],
- *''ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:''*(தை.1.ஆந.9)[2],
- *''யதோ வாசோ நிவர்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ। ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந் ந பிபேதி குதஶ்சநேதி''*(தை.1.ஆந.5)[3],
- *''ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ பூதாதிபதிரேஷ பூதபால ஏஷ ஸேதுர்விதரண:''* (ப்ரு.6-4-22)[4],
- *''ஸ காரணம் கரணாதிபாதிபோ ந சாஸ்ய கஶ்சிஜ்ஜநிதா ந சாதிப:''*(ஶ்.6-9)[5],
- *''ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:'' (ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி த்யாவாப்ருதிவ்யௌ வித்ருதே திஷ்டத:)*(ப்ரு.5-8-9)[6],
- *''பீஷாऽஸ்மாத்வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:। பீஷாऽஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம:''*(தை.1.ஆந.9)[7] இத்யாதிஷு।

தஸ்மாத் வேதநோபதேஶஶப்தேஷு கர்து: ப்ரத்யகாத்மந: கத்யோதகல்பஸ்ய அவித்யாதிஹேயஸம்பந்தயோக்யஸ்ய கந்தோऽபி நாஸ்தீதி பரமபுருஷவிஷயாயா: வித்யாயா: ததப்ராப்திரூபம் அம்ருதத்வம் தத்ர தத்ர ஶ்ரூயமாணம் பலமிதி வித்யாத: புருஷார்த இதி ஸூஷ்டூக்தம்।।8।।

* * *

லிங்காந்யபி நிரஸ்யந்தே -

- [1]**''இவனது இயற்கையான உயர்ந்த பலவிதமான ஶக்தியும், ஜ்ஞாநம், வலிமை ஆகியவற்றுடன் கூட(உலகங்களைப் படைத்தல், காத்தல், அழித்தல், மோக்ஷம் அளித்தல் முதலிய) செயலும் ஓதப்படுகிறது''.**
- [2]**''அது ப்ரஹ்மத்தின் ஒரு ஆனந்தம் ஆகும்''** *(மனுஷ்யனின் முழு ஆநந்தத்திலிருந்து ஆரம்பித்து நூறு நூறு மடங்காகக் கணக்கு பண்ணி வேதம் சொல்கிறது; இந்த்ரனது ஆனந்தத்தை விட நூறு மடங்கு ப்ருஹஸ்பதியின் அனந்தம் ஆகும்; ப்ருஹஸ்பதியின் ஆனந்தத்தை விட நூறு மடங்கு ப்ரஹ்- மத்தின் ஒரு ஆனந்தம் ஆகும் என்று சொல்கிறது; பிறகு, ப்ரஹ்மத்தின் ஆனந்தம் உண்மையில் அளவற்றது என்றும் சொல்கிறது; வேதத்தாலும் கணக்கிட முடியாத அளவு ஆனந்தம் ப்ரஹ்மத்துக்கு உள்ளது என்கிறது)*
- [3]**''வாக்குகள் மனதுடன் கூட எதை (இறுதிவரை) அடைய முடியாமல் திரும்புமோ, ப்ரஹ்மத்தின் அந்த (அளவற்ற) ஆனந்தத்தை அறிபவன், எதிலிருந்தும் பயப்பட மாட்டான் (ஸம்ஸார-பயம் இருக்காது.)''**
- [4]**''இந்த ப்ரஹ்மம் ஆனவன், எல்லாவற்றையும் ஆள்பவன்; இவன் பொருள்களின் உரிமையாளன்; இவன் பொருள்களைக் காப்பவன்; இவன் தரிக்கும் அணை ஆனவன்''.**
- [5]**''காரணமான இவன் இந்த்ரியங்களை ஆளும் ஜீவனை ஆள்பவன்; இவனுக்கு தந்தையும் யாரும் கிடையாது; தலைவனும் கிடையாது''.**
- [6]**''கார்கியே இந்த அக்ஷர-ப்ரஹ்மத்தின் ஸங்கல்ப-கட்டளையில்தான் ஸூர்ய-சந்த்ரர்கள் தரிக்கப்பட்டு நிற்கின்றனர்; (கார்கியே, இந்த அக்ஷர-ப்ரஹ்மத்தின் கட்டளையில்தான், விண்ணும் மண்ணும் தரிக்கப்பட்டு நிற்கின்றன'').**
- [7]**''இவனிடமிருந்து பயத்தால் காற்று வீசுகிறது; பயத்தால் ஸூர்யன் உதிக்கிறான்; இவனிடமிருந்து பயத்தால் அக்னியும் இந்த்ரனும், ஐந்தாவதாக யமனும் விரைகின்றனர். (செய்கின்றனர்)''**

முதலியவற்றில் (காண்கிறது).

ஆகையால், மின்மினிப் பூச்சி போன்றவனாய், அவித்யை முதலிய விடத்தக்க இழிகுணத் தொடர்புக்கு ஏற்றவனாய் இருக்கும் கர்த்தாவான ஜீவாத்மாவுக்கு, ஜ்ஞாநத்தை உபதேஶம் செய்யும் வாக்யங்களில் துளியும் தொடர்பில்லை; ஆகையால், பரமபுருஷனைப் பற்றிய வித்யைக்கு பலனாக, அவனை அடைதல் ஆகிற அம்ருதத் தன்மை ஆங்காங்கே ஓதப்பட்டுள்ளது என்பதால், வித்யையால்தான் பலன் வரும் என்பது நன்கு நிலை நிற்கும்படியாக சொல்லப்பட்டது.

◆

பூர்வபக்ஷத்தில் சொன்ன லிங்கங்களும் (காரணங்களும்) மறுக்கப் படுகின்றன -

४२७.तुल्यं तु दर्शनम् (३-४-९)

यदुक्तम् - ब्रह्मविदां कर्मानुष्ठानदर्शनात् विद्या कर्माङ्गम् इति, तन्न। विद्याया अनङ्गत्वेऽपि **तुल्यं दर्शनम्**; ब्रह्मविदां कर्मानुष्ठानदर्शनमनैकान्तिकमित्यर्थः, अननुष्ठानस्यापि दर्शनात्। दृश्यते हि ब्रह्मविदां कर्मत्यागः, ''**एतद्ध स्म वै तद्विद्वांस आहुः ऋषयः कावषेयाः, किमर्था वयमध्येष्यामहे किमर्था वयं यक्ष्यामहे**''(ऐ.आर.3-2-6)[1] इत्यादौ। अतो ब्रह्मविदां कर्मत्यागदर्शनान्न विद्या कर्माङ्गम्॥

कथमिदमुपपद्यते ब्रह्मविदं कर्मानुष्ठानमननुष्ठानञ्च॥ फलाभिसन्धिरहितस्य यज्ञादिकर्मणो ब्रह्मविद्याङ्गत्वात् तथाविधस्य कर्मणोऽनुष्ठानदर्शनमुपपद्यते वक्ष्यति; च, ''**सर्वापेक्षा च यज्ञादिश्रुतेरश्ववत्**'' (ब्र.सू.3-4-26) इति। फलार्थस्य तस्यैव यज्ञादेः कर्मणो मोक्षैकफलब्रह्मविद्याविरोधित्वात् तस्याननुष्ठानदर्शनमुपपन्नतरम्। विद्यायाः कर्माङ्गत्वे कर्मत्यागः कथमपि नोपपद्यते॥९॥

* * *

यदुक्तम् - श्रुत्यैव विद्यायाः कर्माङ्गत्वमवगम्यते इति, तत्राह -

---

427.துல்யம் து தர்ஶநம் (3-4-9)

யதுக்தம் - **ப்ரஹ்மவிதாம்** கர்மாநுஷ்டாநதர்ஶநாத் வித்யா கர்மாங்கம் இதி, தந்ந। வித்யாயா: அநங்கத்வேऽபி துல்யம் தர்ஶநம், **ப்ரஹ்மவிதாம்** கர்மாநுஷ்டாநதர்ஶநம் அநைகாந்திகமித்யர்த:, அநநுஷ்டாநஸ்யாபி தர்ஶநாத்। த்ருஶ்யதே ஹி **ப்ரஹ்மவிதாம்** கர்மத்யாக:, *“ஏதத்த ஸ்ம வை தத்வித்வாம்ஸ ஆஹு: ரிஷய: காவஷேயா:, கிமர்தா வயமத்யேஷ்யாமஹே? கிமர்தா வயம் யக்ஷ்யாமஹே”*(ஐ.ஆர.3-2-6)[1] இத்யாதௌ। அத: **ப்ரஹ்மவிதாம்** கர்மத்யாகதர்ஶநாத் ந வித்யா கர்மாங்கம்।।

கதமிதமுபபத்யதே - **ப்ரஹ்மவிதாம்** கர்மாநுஷ்டாநம் அநநுஷ்டாநஞ்ச। பலாபிஸந்திரஹிதஸ்ய யஜ்ஞாதிகர்மண: **ப்ரஹ்மவித்யாங்கத்வாத்** ததாவிதஸ்ய கர்மண: அநுஷ்டாநதர்ஶநமுபபத்யதே; வக்ஷ்யதி ச, *“ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதிஶ்ருதேரஶ்வவத்”*(ப்ர.ஸூ.3-4-26) இதி। பலார்தஸ்ய தஸ்யைவ யஜ்ஞாதே: கர்மண: மோக்ஷைகபலப்ரஹ்மவித்யாவிரோதித்வாத் தஸ்யாநநுஷ்டாநதர்ஶநம் உபபந்நதரம்। வித்யாயா: கர்மாங்கத்வே கர்மத்யாக: கதமபி நோபபத்யதே।। 9 ।।

* * *

யதுக்தம் - ஶ்ருத்யைவ வித்யாயா: கர்மாங்கத்வமவகம்யதே இதி; தத்ராஹ -

427.துல்யம் து தர்ஶநம்(3-4-9)

காண்பதோ, சமமாக உள்ளது.

(பூர்வபக்ஷத்தில்) 'ப்ரஹ்மஜ்ஞாநிகளும் கர்ம-அனுஷ்டானம் செய்வதைக் காண்பதால், வித்யையானது கர்மத்துக்கு அங்கமாகும்' - என்று சொன்னது எதுவோ, அது அல்ல; வித்யையானது கர்மத்துக்கு அங்கமாக ஆகாவிட்டாலும், (அது-போன்ற ஒன்றைக்) காண்பது ஸமமாக உள்ளது; ப்ரஹ்மஜ்ஞாநிகள் கர்ம-அனுஷ்டானம் செய்வதைக் காண்பது என்பது, இல்லாமலும் ஆகிறது என்று அர்த்தம்; ஏனெனில் அவர்கள் கர்ம-அனுஷ்டானம் செய்யாததையும் காண்பது உள்ளது;

[1]**''ப்ரஹ்மஜ்ஞாநம் உடைய காவஷேயர் முனிவர்கள், சொன்னார்கள், - ''என்ன பலன் பெறப்போகி- றவராக (என்ன பலனுக்காக) நாம் ஓதுவோம்? என்ன பலன் பெறப்போகிறவராக நாம் யாகம் செய்வோம்?''** முதலியவற்றில் ப்ரஹ்மஜ்ஞாநிகள் கர்மத்தைச் செய்யாமல் விடுவதையும் காண்கிறதுதானே! ஆகையால், ப்ரஹ்மஜ்ஞாநிகள் கர்மத்தை விடுவதையும் காண்பதால், வித்யையானது கர்மத்துக்கு அங்கம் ஆகாது.

கேள்வி - ப்ரஹ்மஜ்ஞாநிகள் கர்ம-அனுஷ்டானம் செய்கின்றனர் என்பதும், செய்யவில்லை என்பதும் (இரண்டுமாக) இது எப்படி சரியாகும்?

பதில் - பலனில் எண்ணம் இல்லாமல் வரும் யாகம் முதலிய கர்மம் ஆனது, ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாவதால், அப்படிப்பட்ட கர்மத்தை அனுஷ்டானம் செய்வதைக் காண்பது சரியாகும்; **''ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதிஶ்ருதே: அஶ்வவத்''** (யஜ்ஞம் முதலிய வேதவாக்யங்களில் சொல்வதால், எல்லா கர்மங்களையும் அபேக்ஷித்தே ப்ரஹ்மவித்யை ஆகும்; குதிரை போல) என்று ஸூத்ரத்தில் தாமே சொல்லவும் போகிறார்.

பலனின் பொருட்டு ஆகும் அதே யாகம் முதலிய கர்மமோ, மோக்ஷம் மட்டும் பலனாகக் கொண்ட ப்ரஹ்மவித்யைக்கு விரோதி ஆகும்; எனவே, அதைச் செய்யாமல் இருப்பதைக் காண்பதும் மிகவும் சரியாகும்.

(பூர்வபக்ஷ முறையில்) வித்யையானது, கர்மத்துக்கு அங்கம் என்றால், கர்மத்தை விடுதல் என்பது, எந்த விதத்தாலும் சரியாகாது. ✍*(ஏனெனில் அங்கத்தை விட்டாலும், முக்யமான அங்கியை விட முடியாது).*✍

◆ ◆ ◆ ◆

கேள்வி - வித்யையானது கர்மத்துக்கு அங்கம் என்பது ஶ்ருதியினாலேயே தெரிகிறது, என்று (பூர்வபக்ஷத்தில்) சொன்னது எதுவோ,

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

४२८.असार्वत्रिकी (३-४-१०)

न सर्वविद्याविषयेयं श्रुतिः; अपि तूद्गीथविद्याविषयैव, **''यदेव विद्यया करोति''** (छा.1-1-10)[1] इति यच्छब्दस्यानिर्धारितविशेषस्य, **''उद्गीथमुपासीत''**(छा.1-1-1)[2] इति प्रस्तुतोद्गीथ-विशेषनिष्ठत्वात्। न हि, यत् करोति तत् विद्ययेति सम्बध्यते। यदेव विद्यया करोति, तदेव वीर्यवत्तरमिति विद्यया क्रियमाणं यच्छब्देन निर्दिश्य, तस्य हि वीर्यवत्तरत्वमुच्यते॥१०॥

* * *

यच्चेदमुक्तम् - **''तं विद्याकर्मणी समन्वारभेते''**(बृ.6-4-3)[3] इति विद्याकर्मणोः साहित्यदर्शनात् विद्या कर्माङ्गम् इति तत्राह -

४२९.विभागः शतवत् (३-४-११)

''तं विद्याकर्मणी समन्वारभेते''(बृ.6-4-3)[4] इत्यत्र उक्तेन न्यायेन विद्याकर्मणोभिन्नफलत्वात् विद्या स्वस्मै फलाय समन्वारभते, कर्म च स्वस्मै फलायेति **विभागो**

428.அஸார்வத்ரிகீ (3-4-10)

ந ஸர்வவித்யாவிஷயா இயம் ஶ்ருதி:, அபி து உத்கீதவித்யாவிஷயைவ, *''யதேவ வித்யயா கரோதி''*(சா.1-1-10)[1] இதி யச்சப்தஸ்ய அநிர்தாரிதவிஶேஷஸ்ய, *''உத்கீதமுபாஸீத''*(சா.1-1-1)[2] இதி ப்ரஸ்துதோத்கீதவிஶேஷநிஷ்டத்வாத்। ந ஹி, யத் கரோதி தத் வித்யயேதி ஸம்பத்யதே। யதேவ வித்யயா கரோதி, ததேவ வீர்யவத்தரம் இதி வித்யயா க்ரியமாணம் யச்சப்தேந நிர்திஶ்ய, தஸ்ய ஹி வீர்யவத்தரத்வமுச்யதே।। 10 ।।

* * *

யச்சேதமுக்தம் - *''தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே''*(ப்ரு.6-4-3)[3] இதி வித்யாகர்மணோ: ஸாஹித்யதர்ஶநாத் வித்யா கர்மாங்கம் இதி; தத்ராஹ -

429.விபாக: ஶதவத்(3-4-11)

''தம் வித்யாகர்மணீ ஸமந்வாரபேதே''(ப்ரு.6-4-3)[4] இத்யத்ர உக்தேந ந்யாயேந வித்யாகர்மணோ: பிந்நபலத்வாத் வித்யா ஸ்வஸ்மை பலாய ஸமந்வாரபதே; கர்ம ச ஸ்வஸ்மை பலாயேதி விபாகோ த்ரஷ்டவ்ய:।

428.அஸார்வத்ரிகீ(3-4-10)

எல்லா வித்யையையும் பற்றியது அல்ல

இந்த ஶ்ருதி ஆனது, எல்லா வித்யையையும் பற்றியது அல்ல; மாறாக உத்கீதவித்யையை மட்டுமே பற்றியது! [1]**''எதனை(எந்த யாகத்தை) வித்யையால் செய்கிறானோ''** என்பதில், 'எது' என்கிற சொல்லானது, தீர்மானம் செய்யப்படாத ஒரு விஶேஷத்தை பற்றியதாக இருக்கிறது; அது, [2]**''உத்கீதத்தை உபாஸநம் செய்யவும்''** என்று முன்பு ஆரம்பித்து சொல்லப்பட்டு வரும் உத்கீத-வித்யையுடன் கூடியதைப் பற்றியது ஆகும்.

''எதனைச் செய்கிறானோ, அதனை வித்யையால் செய்யவும்' என்று சேர்க்கப் படவில்லை; ''எதனை வித்யையால் செய்கிறானோ, அதுவே அதிக வீர்யம் உடையதாக ஆகும்'' என்று வித்யையால் செய்யப்படுவதை (வித்யையுடன் கூடிய யாகத்தை) 'எதனை' என்று சொல்லால் குறிப்பிட்டு, அது அதிக வீர்யம் உடையதாகும் என்று சொல்லப்படுகிறது.

✍(*''எதனை (எந்த யாகத்தை) வித்யையால் செய்கிறானோ'' என்று வேத-வாக்யம்; இது எந்த யாகத்தைக் குறிப்பிடுகிறது என்பது ப்ரகரணத்தால் புரியும்; இந்த வாக்யம், உத்கீத-வித்யை பற்றி சொல்லும் இடத்தில் உள்ளது; எனவே, 'எதனை' என்பது உத்கீத-வித்யையுடன் கூடிய யாகத்தையே குறிக்கும்; எனவே, எல்லா வித்யையும் யாகத்துக்கு அங்கம் ஆகாது.*

உண்மையில் இங்கு சொன்ன உத்கீத-வித்யை கூட யாகத்துக்கு அங்கம் அல்ல என்று முன்பே சொல்லியாயிற்று..

இங்கு, ஶ்ருதி என்னும் ப்ரமாணத்தை பூர்வபக்ஷம் சொல்லிற்று; ஆனால், இங்கு ஶ்ருதி வராது; ''வித்யையால் யாகத்தை செய்யவும்'' என்று சொன்னால், ஶ்ருதி ப்ரமாணமாக வரும்; இங்கு அப்படி சொல்லவில்லை; ''எதனை வித்யையால் செய்கிறானோ'' என்று உள்ளது; இது அனுவாதவாக்யம் ஆகும்; 'யாகத்தில் உத்கீத-வித்யையை செய்க'' என்று ஆரம்பத்தில் சொன்னதை திரும்பிச் சொல்லி, அதற்கு பலனை சொல்கிறது; எனவே, இங்கு 'ஶ்ருதி' என்னும் ப்ரமாணம் வராது.)✍

◆ ◆ ◆ ◆

கேள்வி - (பூர்வபக்ஷத்தில்) [3]**''அவனிடம் வித்யையும் கர்மமும் சேர்ந்துள்ளன''** என்பதாக வித்யையும் கர்மமும் சேர்ந்திருத்தலைக் காண்பதால், வித்யை கர்மத்துக்கு அங்கமாகும் என்று சொல்லப்பட்டது எதுவோ,

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

429.விபாக: ஶதவத்(3-4-11)

பிரிவானது நூறு போல ஆகும்.

விபாக: (பிரிவு) - [4]**''அவனிடம் வித்யையும் கர்மமும் சேர்ந்துள்ளன''** என்னுமிடத்து, வித்யையானது, தனதுடையதான பலனுக்காக சேர்கிறது, கர்மமும் தனதுடையதான பலனுக்காக சேர்கிறது என்று பிரிவு அறியப்பட வேண்டும்;

द्रष्टव्यः। **शतवत्** - यथा क्षेत्ररत्नविक्रयिणं शतद्वयमन्वेतीत्युक्ते, क्षेत्रार्थं शतम्, रत्नार्थं शतमिति विभागः प्रतीयते; तथेहापि॥११॥

* * *

४३०.अध्ययनमात्रवतः (३-४-१२)

यदुक्तम् - विद्यावतः कर्मविधानात् विद्या कर्माङ्गम् इति - नैतद्युक्तम्, ‘‘**वेदमधीत्य**’’ (छा.8-15-1)[1] इत्यध्ययनमात्रवतो विधानात्।

न चाध्ययनविधिरेवार्थबोधे प्रवर्तयति; आधानवत् अध्ययनस्याक्षरराशिग्रहणमात्रे पर्यवसानात्। गृहीतस्य च स्वाध्यायस्य फलवत्कर्मावबोधित्वदर्शनात् तन्निर्णयफले तदर्थविचारे पुरुषः स्वयमेव प्रवर्तते। ततः कर्मार्थी कर्मज्ञाने प्रवर्तते, मोक्षार्थी च ब्रह्मज्ञान इति न विद्या कर्माङ्गम्।

यद्यप्यध्ययनविधिरेवार्थावबोधे प्रवर्तयति, तथापि न विद्या कर्माङ्गम्; अर्थज्ञाना-

---

ஶதவத் - யதா க்ஷேத்ர-ரத்நவிக்ரயிணம் ஶதத்வயமந்வேதி இத்யுக்தே, க்ஷேத்ரார்தம் ஶதம், ரத்நார்தம் ஶதமிதி விபாக: ப்ரதீயதே - ததா இஹாபி॥11॥

* * *

430.அத்யயநமாத்ரவத:(3-4-12)

யதுக்தம் - வித்யாவத: கர்மவிதாநாத் வித்யா கர்மாங்கம் இதி; நைதத்யுக்தம், *“வேதமதீத்ய”*(சா.8-15-1)[1] இதி அத்யயநமாத்ரவதோ விதாநாத்।

ந ச அத்யயநவிதிரேவ அர்தபோதே ப்ரவர்தயதி; ஆதாநவத் அத்யயநஸ்ய அக்ஷரராஶிக்ரஹணமாத்ரே பர்யவஸாநாத்। க்ருஹீதஸ்ய ச ஸ்வாத்யாயஸ்ய பலவத்கர்மாவபோதித்வதர்ஶநாத் தந்நிர்ணயபலே ததர்தவிசாரே புருஷ: ஸ்வயமேவ ப்ரவர்ததே। தத: கர்மார்தீ கர்மஜ்ஞாநே ப்ரவர்ததே, மோக்ஷார்தீ ச ப்ரஹ்மஜ்ஞாநே இதி, ந வித்யா கர்மாங்கம்।

யத்யபி அத்யயநவிதிரேவ அர்தாவபோதே ப்ரவர்தயதி, ததாபி ந வித்யா கர்மாங்கம்; அர்தஜ்ஞாநாதர்தாந்தரத்வாத் வித்யாயா:। யதா

ஏனெனில், முன் சொன்ன முறைப்படி வித்யையும், கர்மமும் வெவ்வேறு பலன்களை உடையவை.

ஶதவத் (நூறு போல) - 'வயலும் ரத்னமும் விற்பவனிடம் இரண்டு நூறு சேர்கிறது' என்று சொன்னால், வயலுக்காக நூறு, ரத்னத்துக்காக நூறு என்று பிரிவு எப்படி தெரிகிறதோ, அப்படியே இங்கும்.

◆

430.அத்யயனமாத்ரவத:(3-4-12)

அத்யயனம் மட்டும் உடையவனுக்கு [கர்மம் விதிக்கப் படுகிறது].

(பூர்வபக்ஷத்தில்) வித்யையை உடையவனுக்கு கர்மம் செய்யும்படி விதித்திருப்பதால், வித்யையானது கர்மத்தின் அங்கமாகும் என்று சொன்னது எதுவோ, அது சரியல்ல; ஏனெனில், **''வேதத்தை அத்யயனம் செய்து (... தர்மகர்மங்கள் செய்துகொண்டு)''** என்று அத்யயனம் மட்டும் உடையவனுக்குத்தான் கர்மத்தை விதித்துள்ளது.

பூர்வபக்ஷம் - 'அத்யயனம் பற்றிய விதியே, அர்த்தம் அறிவதில் தூண்டும். *(வேத-அத்யயனம் செய்க' என்னும் கட்டளைக்கு அத்யயனம் செய்து அர்த்தம் அறிக என்று கருத்து; அர்த்தத்தை அறிதல்தான் வித்யை; எனவே, வித்யை உடையவனுக்குத் தான் கர்மத்தை விதிக்கிறது)*

ஸித்தாந்தம் - அது கிடையாது; ஏனெனில், ஆதானம் போல, அத்யயனமும் அக்ஷர-ஸமூஹத்தை அறிவதில் மட்டுமே நிறைவுறும்.

(யாகம் என்பது, வைதிகமான அக்னியில்தான் செய்ய வேண்டும்; அதற்காக முதலில் ஆதானம் எனும் கர்மம் மூலம், வைதிக-அக்னியை சம்பாதித்துக் கொள்ள வேண்டும்; ''அக்னிகளை ஆதானம் செய்க'' என்று அந்த விதி உள்ளது; யாகம் செய்வது பற்றி இந்த வாக்யம் கூறவில்லை; ஆதானம் செய்ய வேண்டும் என்பதுடன் இந்த வாக்யத்தின் கருத்து நிறைவுபெறும்.

அதுபோல, ''வேதம் அத்யயனம் செய்யப் படவேண்டும்'' என்கிற விதிக்கு அத்யயனம் மூலம் வேத-வாக்யங்களை (எழுத்துகளை) தெரிந்து கொள்ள வேண்டும் என்று மட்டும்தான் கருத்து; பின் அதற்கு அர்த்தத்தை தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த வாக்யம் சொல்லாது).

மனிதனானவன், அத்யயனம் மூலம் அறியப்பட்ட தன் வேதஶாகையானது, பலன்களை உடைய செயல்களை அறிவிப்பதைக் காண்கிறான்; அதனால், அந்த வேதத்தின் அர்த்தத்தை விசாரம் செய்வதில் தானாகவே முயல்கிறான்; அந்த விசாரம் ஆனது, அந்த அர்த்தத்தை நிர்ணயித்து அறியும் பலனையுடையதாகும்; ஆகையால், கர்மத்தை வேண்டுபவன் கர்மவிசாரம் செய்கிறான்; மோக்ஷம் வேண்டுபவன் ப்ரஹ்மவிசாரம் செய்கிறான்.

ஆகையால், வித்யையானது கர்மத்துக்கு அங்கம் அல்ல.

அத்யயன-விதியே அர்த்தத்தை அறிவதில் ஈடுபடுத்தும் என்று வைத்துக் கொண்டாலும் கூட வித்யையானது, கர்மத்தின் அங்கம் ஆகாது; ஏனெனில்,

दर्थान्तरत्वात् विद्यायाः। यथा ज्योतिष्टोमादिकर्मस्वरूपविज्ञानात् फलसाधनभूतं कर्मानुष्ठानमर्थान्तरम्; तथाऽर्थज्ञानरूपाद्ब्रह्मस्वरूपविज्ञानादर्थान्तरमेव ध्यानोपासनादिशब्दवाच्या पुरुषार्थसाधनभूता विद्येति न तस्याः कर्मसम्बन्धगन्धो विद्यते॥ १२ ॥

⁂

४३१.नाविशेषात् (३-४-१३)

यच्चोक्तम् - ‘‘**कुर्वन्नेवेह कर्माणि**’’(ई.2)[1] इति आत्मविदं ज्ञानात् व्यावर्त्य यावज्जीवं कर्मानुष्ठाने नियमयतीति - तन्नोपपद्यते; **अविशेषात्।** न ह्ययं नियमः फलसाधनभूतस्वतन्त्रकर्मविषय इति विशेषहेतुरस्ति; विद्याङ्गभूतकर्मविषयतयाऽप्युपपत्तेः। ‘‘**कर्मणैव हि संसिद्धिमास्थिता जनकादयः**’’(गी.1-20)[2] इति च, विदुषस्त्वाप्रयाणादुपासनस्यानुवर्तमानत्वात्॥ १३॥

⁂

एवमर्थस्वाभाव्येन चोद्यं परिहृत्य, ‘‘**कुर्वन्नेवेह कर्माणि**’’(ई.2)[3] इत्यस्य वाक्यस्यार्थमाह-

४३२.स्तुतयेऽनुमतिर्वा (३-४-१४)

वाशब्दोऽवधारणार्थः। ‘‘**ईशावास्यमिदं सर्वम्**’’(ई.2)[4] इति विद्याप्रकरणात्

ஜ்யோதிஷ்டோமாதிகர்மஸ்வரூபவிஜ்ஞாநாத் பலஸாதநபூதம் கர்மாநுஷ்டாநம் அர்தாந்தரம், ததா அர்தஜ்ஞாநரூபாத் ப்ரஹ்மஸ்வரூபவிஜ்ஞாநாத் அர்தாந்தரமேவ த்யாநோபாஸநாதிஶப்தவாச்யா புருஷார்தஸாதநபூதா வித்யேதி ந தஸ்யா: கர்மஸம்பந்தகந்தோ வித்யதே।। 12 ।।

⁂

431.நாऽவிஶேஷாத்(3-4-13)

யச்சோக்தம் - ‘‘*குர்வந்நேவேஹ கர்மாணி*’’(ஈ.2)[1] இதி ஆத்மவிதம் ஜ்ஞாநாத் வ்யாவர்த்ய யாவஜ்ஜீவம் கர்மாநுஷ்டாநே நியமயதீதி - தந்நோபபத்யதே; *அவிஶேஷாத்।* ந ஹி அயம் நியம: பலஸாதநபூதஸ்வதந்த்ரகர்மவிஷய: இதி விஶேஷஹேதுரஸ்தி; வித்யாங்கபூதகர்மவிஷயதயாऽபி உபபத்தே:। ‘‘*கர்மணைவ ஹி ஸம்ஸித்திமாஸ்திதா ஜநகாதய:*’’(கீ.1-20)[2] இதி ச, விதுஷஸ்து ஆப்ரயாணாத் உபாஸநஸ்யாநுவர்தமாநத்வாத்।। 13 ।।

⁂

ஏவம் அர்தஸ்வாபாவ்யேந சோத்யம் பரிஹ்ருத்ய, ‘‘*குர்வந்நேவேஹ கர்மாணி*’’(ஈ.2)[3] இத்யஸ்ய வாக்யஸ்யார்தமாஹ -

432.ஸ்துதயேऽநுமதிர்வா (3-4-14)

வா ஶப்த: அவதாரணார்த:। ‘‘*ஈஶாவாஸ்யமிதம் ஸர்வம்*’’(ஈ.2)[4] இதி

வித்யை என்பது, அர்த்த-ஜ்ஞாநத்தை விட வேறாகும்; (உ.ம்) ஸோமயாகம் முதலிய கர்ம-ஸ்வரூபத்தை அறிதலை விட பலனுக்கு உபாயமான் அந்த கர்மத்தை அனுஷ்டானம் செய்தல் என்பது வேறானது; அது எப்படியோ, அப்படியே அர்த்த-ஜ்ஞாநம் ஆகிற ப்ரஹ்ம-ஸ்வரூப-ஜ்ஞாநத்தை விட பலனுக்கு உபாயமான வித்யை என்பது வேறானது; அது த்யானம், உபாஸனம் முதலிய சொல்லால் சொல்லப் படுவது; அதற்கு கர்மத்தின் (அங்கமாகும்) தொடர்பு துளியும் கிடையாது.

◆ ◆ ◆

431.ந அவிஶேஷாத்(3-4-13)

விஶேஷம் இல்லாதபடியால், அப்படியல்ல.

(பூர்வபக்ஷத்தில்) [1]**''இங்கு கர்மங்களைச் செய்துகொண்டே''** என்று ஆத்ம-ஜ்ஞாநியை ஜ்ஞாநத்திலிருந்து மாற்றி, வாழ்வு முடியும் வரை கர்ம-அனுஷ்டானத்தில் கட்டாயப் படுத்துகிறது என்று சொன்னது எதுவோ, அது சரியில்லை; ஏனெனில், விஶேஷம் எதுவும் இல்லை; இந்த நியமம் ஆனது, பலனுக்கு உபாயமான தனித்த கர்மத்தைப் பற்றியது என்பதில் விஶேஷ-காரணம் எதுவும் இல்லை; ஏனெனில், வித்யைக்கு அங்கமான கர்மத்தைப் பற்றியதாகவும் சரியாகலாம்.

[2]**''ஜனகர் முதலியவர் கர்மத்தாலேயே ஸித்தி அடைந்தனர்''** என்பதும், உபாஸனம் செய்பவனுக்கு இறுதிமரணம் வரை உபாஸனம் தொடர்ந்திருக்கும் என்பதால் (அந்த உபாஸனத்துக்கு அங்கமாக கர்மமும் இருக்கும் என்பதால்) சரியாகும்.

◆ ◆ ◆

இப்படி, (உபாஸனம் ஆகிற) பொருளின் தன்மையைக் கொண்டு, கேள்விகளுக்கு பதில் அளித்து, பரிஹாரம் செய்தபின், [3]**''இங்கு கர்மங்களைச் செய்து கொண்டே (நூறாண்டு வாழ்க)''** என்பதற்கு சரியான பொருளைச் சொல்கிறார் -

432.ஸ்துதயே அநுமதி: வா(3-4-14)

[வித்யையைப்] புகழ்வதன் பொருட்டு அனுமதியே ஆகும்.

'வா' என்ற சொல்லானது, 'அதுதான்' எனும் பொருளில் ஆகும்.

[4]**''இது எல்லாம் ஈஶ்வரனால் பரவப் பட்டது''** என்று வித்யையை ஆரம்பித்துச் சொல்லும் இடம் இது; அதனால்,

विद्यास्तुतये सर्वदा कर्मानुष्ठानानुमतिरियम्। विद्यामाहात्म्यात् सर्वदा कर्म कुर्वन्नपि न लिप्यते कर्मभिरिति हि विद्या स्तुता भवति। वाक्यशेषश्चैवमेव दर्शयति, “**एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे**”(ई.2)[1] इति। अतो न कर्माङ्गं विद्या॥१४॥

* * *

४३३.कामकारेण चैके (३-४-१५)

अपि चैवमेके शाखिनः **कामकारेण** ब्रह्मविद्यानिष्ठस्य गार्हस्थ्यत्यागमधीयते, “**किं प्रजया करिष्यामो येषां नोऽयमात्माऽयं लोकः**”(बृ.6-4-22)[2] इति। विदुषो विरक्तस्य कामकारेण गार्हस्थ्यकर्मत्यागं ब्रुवदिदं वचनं ब्रह्मविद्यायाः कर्मानङ्गत्वं दर्शयति। यज्ञादिकर्माङ्गत्वे हि विद्यायाः, विद्यानिष्ठस्य कामकारेण गार्हस्थ्यत्यागो न सम्भवति। अतो न विद्या कर्माङ्गम्॥ १५ ॥

* * *

४३४.उपमर्दं च (३-४-१६)

पुण्यापुण्यरूपस्य समस्तसांसारिकदुःखमूलस्य कर्मणो ब्रह्मविद्ययोपमर्दं च प्रतिवेदा-

வித்யாப்ரகரணாத் வித்யாஸ்துதயே ஸர்வதா கர்மாநுஷ்டாநாநுமதிரியம்। வித்யாமாஹாத்ம்யாத் ஸர்வதா கர்ம குர்வந்நபி ந லிப்யதே கர்மபி: இதி ஹி வித்யா ஸ்துதா பவதி। வாக்யஶேஷஶ்சைவமேவ தர்ஶயதி, “*ஏவம் த்வயி நாந்யதேதோऽஸ்தி ந கர்ம லிப்யதே நரே*”(ஈ.2)[1] இதி। அத: ந கர்மாங்கம் வித்யா।। 14 ।।

* * *

433.காமகாரேண சைகே(3-4-15)

அபி ச ஏவம் ஏகே ஶாகிந: *காமகாரேண* ப்ரஹ்மவித்யாநிஷ்டஸ்ய கார்ஹஸ்த்யத்யாகமதீயதே, “*கிம் ப்ரஜயா கரிஷ்யாமோ யேஷாம் நோऽயமாத்மாऽயம் லோக:*”(ப்ரு.6-4-22)[2] இதி। விதுஷோ விரக்தஸ்ய காமகாரேண கார்ஹஸ்த்யகர்மத்யாகம் ப்ருவத் இதம் வசநம் ப்ரஹ்மவித்யாயா: கர்மாநங்கத்வம் தர்ஶயதி। யஜ்ஞாதிகர்மாங்கத்வே ஹி வித்யாயா:, வித்யாநிஷ்டஸ்ய காமகாரேண கார்ஹஸ்த்யத்யாகோ ந ஸம்பவதி। அத: ந வித்யா கர்மாங்கம்।।15।।

* * *

434.உபமர்தம் ச(3-4-16)

புண்யாபுண்யரூபஸ்ய ஸமஸ்தஸாம்ஸாரிகது:கமூலஸ்ய கர்மண:

ஸ்துதயே - வித்யையைப் புகழ்வதற்காக,

அநுமதி: - எப்போதும் கர்ம-அனுஷ்டானம் செய்யலாம் எனும் அனுமதியாகும் இது;

எப்போதும் கர்மம் செய்பவன் ஆனாலும், வித்யையின் பெருமையால், கர்மங்களால் ஒட்டப் படுவதில்லை என்றுதானே வித்யை புகழப் பட்டதாக ஆகிறது; வாக்யத்தின் மிகுதியும் இப்படியே காண்பிக்கிறது - [1]**''பற்றில்லாத உன்னிடம் கர்மம் ஒட்டுவதில்லை என்கிற இதை விட வேறுவிதம் கிடையாது''** என்று.

ஆகையால், வித்யையானது, கர்மத்துக்கு அங்கம் அல்ல.

◆ ◆ ◆ ◆

433.காமகாரேண ச ஏகே(3-4-15)

விருப்பப்படி [க்ருஹஸ்த-கர்மங்களை விடுவதை] சிலர் [ஓதுகின்றனர்].

ஏகே ச - மேலும் சில ஶாகையினர்,

காமகாரேண (விருப்பப்படி) - ப்ரஹ்மவித்யையைச் செய்பவன், விருப்பப்படி இப்படி க்ருஹஸ்த-தர்மங்களை விடுவதை ஓதுகின்றனர் - [2]**''எந்த நமக்கு பரமாத்மா இவ்வுலகப்பொருள் போல நேராக தெரிகிறானோ, அந்த நாம் புத்ரனால் என்ன செய்யப்போகிறோம்?''** - என்று..

ப்ரஹ்மஜ்ஞானியாய் பற்றற்றவனாய் இருப்பவன், (ஸந்யாஸம் ஏற்பவனாய்) விருப்பப்படி க்ருஹதர்மமான கர்மத்தை விடுவதை இந்த வாக்யம் சொல்கிறது; இது ப்ரஹ்மவித்யை ஆனது, கர்மத்துக்கு அங்கமல்ல என்பதைக் காண்பிக்கிறது; வித்யையானது, யஜ்ஞம் முதலிய கர்மத்துக்கு அங்கமாக ஆகுமானால், வித்யையை செய்பவன் விருப்பப்படி நடப்பதன் மூலம் க்ருஹஸ்த-கர்மத்தை விடுவது வராது.

ஆகையால், வித்யையானது கர்மத்துக்கு அங்கம் அல்ல. (அங்கியை விட முடியாது; ஆனால், கர்மத்தை விடுவதால், அது அங்கி அல்ல என்று தெரிகிறது)

◆ ◆ ◆ ◆

434.உபமர்தம் ச(3-4-16)

[ப்ரஹ்மவித்யையால் கர்மம்] அழிவதையும் [ஓதுகின்றனர்].

ஸம்ஸாரத்தில் வரும் எல்லா துக்கத்துக்கும் காரணமான புண்ய-பாபம் ஆகிற கர்மமானது, ப்ரஹ்மவித்யையால் அழிவதையும் ஒவ்வொரு வேதாந்தத்திலும் ஓது-

न्तमधीयते, ''**भिद्यते हृदयग्रन्थिश्छिद्यन्ते सर्वसंशयाः। क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परवरे**''(मु.2-2-8)[1] इत्यादिकम्। तत् विद्यायाः कर्माङ्गत्वे न सङ्गच्छते॥१६॥

* * *

४३५.ऊर्ध्वरेतस्सु च शब्दे हि (३-४-१७)

ऊर्ध्वरेतस्सु आश्रमेषु ब्रह्मविद्यादर्शनात् तेष्वग्निहोत्रदर्शपूर्णमासादिकर्माभावाच्च न विद्या कर्माङ्गम्।

ननूर्ध्वरेतसा आश्रमा न सन्त्येव, ''**यावज्जीवमग्निहोत्रं जुहोति**'' (आ.श्रौ.सू.3-14-8)[2] इत्यादिनाऽग्निहोत्रदर्शपूर्णमासादीनां यावज्जीवाधिकारश्रुतेः; श्रुतिविरुद्धानां स्मृतीनां चाप्रामाण्यात्। अत आह - **शब्दे हि** इति। वैदिक एव हि शब्दे ते दृश्यन्ते,

- ''**त्रयो धर्मस्कन्धाः**''(छा.2-23-1)[3],
- ''**ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते**''(छा.5-10-1)[4],
- ''**एतमेव प्रव्राजिनो लोकमिच्छन्तः प्रव्रजन्ति**''(बृ.6-4-22)[5] इत्यादौ।

यावज्जीवश्रुतिस्त्वविरक्तविषया॥१७॥

* * *

ப்ரஹ்மவித்யயா உபமர்தம் ச ப்ரதிவேதாந்தமதீயதே, "*பித்யதே ஹ்ருதயக்ரந்திஶ்சித்யந்தே ஸர்வஸம்ஶயா:। க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பரவரே*" (மு.2-2-8)[1] இத்யாதிகம்। தத் வித்யாயா: கர்மாங்கத்வே ந ஸங்கச்சதே।।16।।

* * *

435.ஊர்த்வரேதஸ்ஸு ச ஶப்தே ஹி(3-4-17)

தேஷாம் அபி அவஶ்யாநுஷ்டேயத்வாத் - ஶமம் முதலியவை மனஸ்-சமாதான உருவாக இருப்பதால், உபாஸனம் உண்டாவதற்கு தேவையான அங்கமாக தெரிந்த நேரிடையான முறையில் ஆகிறது; ஆகையால், வித்யை உண்டாவதற்காக அவையும் கட்டாயம் அனுஷ்டானம் செய்யப்பட தகுந்தவை என்பதாலும், அவையும் அனுஷ்டானம் செய்யப்பட வேண்டியவையே.

न च करणव्यापारतद्विपर्ययरूपत्वेन कर्मणां शमदमादीनां च परस्परविरोधः, भिन्नविषयत्वात्; विहितेषु करणव्यापारः, अविहितेषु प्रयोजनशून्येषु च तदुपशम इति।

न च करणव्यापाररूपकर्मसु वर्तमानस्य वासनावशात् शमादीनामुपादेयत्वासम्भवः, विहितानां कर्मणां परमपुरुषाराधनतया तत्प्रसादद्वारेण निखिलविपरीतवासनोच्छेदहेतुत्वात्। अतो गृहस्थस्य शमदमादयोऽप्यनुष्ठेयाः॥ २७ ॥

इति शमदमाद्यधिकरणम् ॥ ६ ॥

ந ச கரணவ்யாபார-தத்விபர்யயரூபத்வேந கர்மணாம் ஶமதமாதீநாம் ச பரஸ்பரவிரோத:, பிந்நவிஷயத்வாத், விஹிதேஷு கரணவ்யாபார:, அவிஹிதேஷு ப்ரயோஜநஶூந்யேஷு ச ததுபஶம: இதி।

ந ச கரணவ்யாபாரரூபகர்மஸு வர்தமாநஸ்ய வாஸநாவஶாத் ஶமாதீநாமுபாதேயத்வாஸம்பவ:, விஹிதாநாம் கர்மணாம் பரமபுருஷாராதநதயா தத்ப்ரஸாதத்வாரேண நிகிலவிபரீதவாஸநோச்சேதஹேதுத்வாத்। அத: க்ருஹஸ்தஸ்ய ஶமதமாதயோऽபி அநுஷ்டேயா:।। 27 ।।

இதி ஶமதமாத்யதிகரணம் ।। 6 ।।

✍*(யஜ்ஞம் முதலியதால் புண்யம் (பகவத்ப்ரீதி) உண்டாகும், அதனால் பாபம் தொலையும்; அதனால் உபாஸனம் தொடர்ந்து நடக்கும்; இப்படி யஜ்ஞம் ஆனது, அத்ருஷ்ட-முறையில் வித்யைக்கு அங்கமாகிறது; புலனடக்கம், மனஸ் சமாதானம் முதலியது உபாஸனத்துக்கு நேரிடையாகவே தேவையாகும்; புண்யம் வழியாக பயன்படும் என்று சொல்ல வேண்டாம்).*✍

ஶங்கை - கர்மங்களும் ஶமம்-தமம் முதலியவையும், இந்த்ரியங்களின் செயல் உருவாகவும், அதற்கு எதிரான உருவாகவும் ஆவதால் ஒன்றுக்கொன்று முரண்பாடு வரும்

பதில் - முரண்பாடு வராது; ஏனெனில், அவை வெவ்வேறு விஷயத்தைப் பற்றியவை; (கட்டாயம் செய்யும்படி) விதிக்கப்பட்ட விஷயங்களில் இந்த்ரியங்களின் செயல்பாடு ஆகும்; (கட்டாயம் செய்யும்படி) விதிக்கப்படாதவையும் பயனற்றவையுமான செயல்களில் இந்த்ரியங்களின் அடக்கம் (செயலில்லாமை) ஆகும் என்று.

ஶங்கை - இந்த்ரியங்களின் செயல்பாடு ஆகிற கர்மங்களைச் செய்பவன், கர்ம-வாஸனாவுக்கு வசப்படுவதால், அவனுக்கு ஶமம் முதலியது உண்டாவது நடக்காது.

பதில் - அது கிடையாது; ஏனெனில், விதிக்கப்பட்ட கர்மங்கள் பரமபுருஷனுக்கு ஆராதனம் ஆனபடியால், அவனது ப்ரீதியின் வழியாக எல்லா விபரீதவாஸனைகளும் ஒழிவதற்கு காரணமாகும்.

ஆகையால், க்ருஹஸ்தனுக்கு ஶமம், தமம் முதலியவையும் அனுஷ்டிக்கப் பட வேண்டியவையே.

* * *

ஶமதமாத்யதிகரணம் முற்றிற்று

115.ஸர்வாந்நாநுமத்யதிகரணம்(3-4-7)

முன் குறிப்பு

இந்த்ரியங்களின் அடக்கம் தேவை என்னும்போது, முக்கியமாக நாக்கை அடக்க வேண்டும்; கண்ட உணவை சாப்பிடக்கூடாது என்று சொல்கிறார்.

பூர்வபக்ஷம் - ப்ராண-வித்யை அனுஷ்டானம் செய்பவன், எல்லா உணவையும் உண்ணலாம்; தோஷமில்லை என வேதம் சொல்கிறது; அல்ப-பலனைத் தரும் ப்ராண-வித்யைக்கே இத்தனை பெருமை இருக்கும்போது, மோக்ஷ-பலனைத் தரும் ப்ரஹ்ம-வித்யை பற்றி சொல்ல வேண்டுமா? ஆகையால், ப்ரஹ்ம-வித்யை அனுஷ்டானம் செய்பவனுக்கு உணவில் நியமம் தேவையில்லை.

ஸித்தாந்தம் - பொதுவாக உணவில் கட்டுப்பாடு தேவை; உயிருக்கே ஆபத்து நேரும் சமயத்தில், உயிரைக் காப்பதற்காக மட்டுமே நியமத்தை சற்றே மீறலாம்; இதை வேதத்தில் உஷஸ்தி என்பவரின் ஆசாரம் மூலம் அறியலாம்;

உஷஸ்தி என்ற ஒரு முனிவர் ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்; ஒருசமயம், பசியால் உயிர் போகும் நிலை வந்தபோது, ப்ரஹ்ம-வித்யை நடக்க வேண்டுமே என்பதற்காக, உயிர் பிழைக்க நினைத்தார்; அதற்காக, அங்கிருந்த ஒரு யானைப் பாகனிடம் அவன் உண்டுகொண்டிருந்த கொள் தான்யத்தை வாங்கி சாப்பிட்டார்; அப்போது, அவன் தீர்த்தமும் கொடுத்தபோது வாங்க மறுத்து விட்டார்; உயிர் போகும் நிலையில் இருந்ததால் கொள் சாப்பிட்டார்; பின், உயிர் பிழைத்தவுடன், சாஸ்த்ரப்படி அவன் கொடுத்ததை பருகக் கூடாது என்பதால் அதை ஏற்க மறுத்தார்.

இந்த கதை விரிவாகவே ஸ்ரீபாஷ்யத்தில் உள்ளது.

இப்படி ப்ரஹ்ம-வித்யை செய்பவருக்கே இத்தனை நியமம் இருக்கும்போது, ப்ராண-வித்யை செய்பவருக்குக் கேட்க வேண்டுமா? எனவே, அவர் எல்லாம் உண்ணலாம் என்று சொன்னது, ஆபத்து காலத்தில் எல்லாம் உண்ணலாம் என்ற கருத்தில் ஆகும்.

இன்னும் சில காரணங்களை ஸூத்ரங்களில் சொல்கிறார்

In Public domain. Digitization: [illegible] Research Academy

११५. सर्वान्नानुमत्यधिकरणम् (३-४-७)

४४६. सर्वान्नानुमतिश्च प्राणात्यये तद्दर्शनात् (३-४-२८)

वाजिनां छन्दोगानां च प्राणविद्यायाम्,

- ★ **"न ह वा अस्यानन्नं जग्धं भवति, नानन्नं परि(प्रति)गृहीतं भवति"** (बृ.8-1-14)[1],
- ★ **"न ह वा एवंविदि किञ्चन अनन्नं भवति"** (छा.5-2-1)[2] इति प्राणविदः सर्वान्नानुमतिः सङ्कीर्त्यते।

किमियं प्राणविद्यानिष्ठस्य सर्वान्नानुमतिः सर्वदा, उत प्राणात्ययापत्ताविति विशये,

विशेषानुपादानात् सर्वदा इति प्राप्ते,

उच्यते **प्राणात्यये** इति। चशब्दोऽवधारणे; प्राणात्ययापत्तावेवेत्यर्थः। कुतः? **तद्दर्शनात्**। दृश्यते ह्यन्यत्र ब्रह्मविदामपि प्राणात्ययापत्तावेव सर्वान्नाभ्यनुज्ञा; किंपुनः प्राणविदः।

---

115. ஸர்வாந்நாநுமத்யதிகரணம் (3-4-7)

446. ஸர்வாந்நாநுமதிஶ்ச ப்ராணாத்யயே தத்தர்ஶநாத் (3-4-28)

வாஜிநாம் சந்தோகாநாம் ச ப்ராணவித்யாயாம்,

- ★ *"ந ஹ வா அஸ்யாநந்நம் ஜக்தம் பவதி, நாநந்நம் பரி(ப்ரதி)க்ருஹீதம் பவதி"*(ப்ரு.8-1-14)[1],
- ★ *"ந ஹ வா ஏவம்விதி கிஞ்சந அநந்நம் பவதி"*(சா.5-2-1)[2] இதி ப்ராணவித: ஸர்வாந்நாநுமதி: ஸங்கீர்த்யதே।

கிமியம் ப்ராணவித்யாநிஷ்டஸ்ய ஸர்வாந்நாநுமதி: ஸர்வதா, உத ப்ராணாத்யயாபத்தௌ இதி விஶயே,

விஶேஷாநுபாதாநாத் ஸர்வதா இதி ப்ராப்தே -

உச்யதே *ப்ராணாத்யயே* - இதி। *சஶப்த:* அவதாரணே, ப்ராணாத்யயாபத்தாவேவேத்யர்த:। குத:? *தத்தர்ஶநாத்।* த்ருஶ்யதே ஹி அந்யத்ர ப்ரஹ்மவிதாமபி ப்ராணாதயயாபத்தாவேவ ஸர்வாந்நாப்யநுஜ்ஞா, கிம் புந: ப்ராணவித:।

115.ஸர்வாந்நாநுமத்யதிகரணம்(3-4-7)

446.ஸர்வாந்நாநுமதி: ச ப்ராணாத்யயே தத்தர்ஶநாத்(3-4-28)

எல்லா உணவையும் அனுமதித்தது, ப்ராணன் தொலைய நேரிடும்போது மட்டுமே, அதனை வேதத்தில் காண்பதால்.

விஷயவாக்யம்

வாஜிகளுடையவும் சந்தோகர்களுடையவும் ஆன ப்ராணவித்யையில் -

- [1] **''இவனுக்கு உண்ணக் கூடாதது (எதுவும்) உண்டதாக ஆகாது; (இவன் அதை உண்டாலும், அது உண்ணக் கூடாதது அல்ல) உண்ணக் கூடாதது, தானமாக ஏற்றுக் கொண்டதாக ஆகாது''**
- [2] **''இப்படி உபாஸனம் செய்பவனிடத்தில் எதுவுமே உண்ணக் கூடாதது ஆகாது''**

என்று ப்ராண-உபாஸனம் செய்பவனுக்கு எல்லா உணவுக்கும் அனுமதி சொல்லப்பட்டுள்ளது.

ஸந்தேஹம்

ப்ராண-உபாஸனம் செய்பவனுக்கு எல்லா உணவையும் அனுமதித்தல் ஆனது எப்போதும் ஆகலாமா? அல்லது ப்ராணன் போக நேரிடும்போது மட்டுமா? என்று ஸந்தேஹம் வரும்போது,

பூர்வபக்ஷம்

விஶேஷத்தை எடுத்து சொல்லாதபடியால், எப்போதும் ஆகலாம்

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **'ப்ராணாத்யயே'** என்று.

'ச' எனும் சொல், அவதாரணம் எனும் பொருளில் ஆகும்.

ப்ராணாத்யயே ச - ப்ராணன் போக நேரிடும்போது மட்டுமே என்று பொருள்.

ஏன்?

தத்தர்ஶநாத் (அதைக் காண்பதால் - வேதத்தில் சொல்லக் காண்பதால்) - ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்களுக்கும் கூட, ப்ராணன் முடிய நேரிடும்போது மட்டுமே எல்லா உணவையும் அனுமதித்திருப்பது வேறிடத்தில் காணப்படுகிறது. ப்ராண-உபாஸனம் செய்பவனுக்கு என்ன? (அவனுக்கும் அப்படியே).

उषस्तिः किल चाक्रायणो ब्रह्मविदग्रेसरो मटचीहतेषु कुरुषु दुर्भिक्षदूषितेषु इभ्यग्रामे वसन् अनशनेन प्राणसंशयमापन्नो ब्रह्मविद्यानिष्पत्तये प्राणानामनवसादमाकाङ्क्षमाणः

इभ्यं कुल्माषान् खादन्तं भिक्षमाणः, तेन च, **''उच्छिष्टेभ्योऽन्ये न विद्यन्ते''**(छा.1-10-2)[1] इति प्रत्युक्तः, पुनरपि, **''एतेषां मे देहि''**(छा.1-10-3)[2] इत्युक्त्वा तेन चेभ्येनोच्छिष्टेभ्य आदाय दत्तान् कुल्माषान् प्रतिगृह्य,

अनुपानप्रतिग्रहमिभ्येनार्थितः, **''उच्छिष्टं वै मे पीतं स्यात्''**(छा.1-10-4)[3] इति वदन् चाक्रायणः, (वदन्, चाक्रायण!?) किमेते कुल्माषा अनुच्छिष्टा इति इभ्येन पर्यनुयुक्तः, **''न वा अजीविष्यमिमान् अखादन्...कामो मे उदपानम्''**(छा.1-10-4)[4] इति कुल्माषाखादने स्वस्य प्राणसंशयापत्तेः तावन्मात्रखादनेन धृतप्राणस्य स्वस्योच्छिष्टोदकपानं कामकारितं निषिद्धं स्यादित्युक्त्वा,

स्वखादितशेषं जायायै दत्वा, तया च रक्षितान्, अपरेद्युर्याजनेनार्जिजीषया जिगमिषुः पुनरपि प्राणसंशयमापन्नः, तानेवेभ्योच्छिष्टान् स्वोच्छिष्टभूतान् पर्युषितांश्चखाद।

உஷஸ்தி: கில சாக்ராயணோ ப்ரஹ்மவிதக்ரேஸரோ மடசீஹதேஷு குருஷு துர்பிக்ஷதூஷிதேஷு இப்யக்ராமே வஸந் அநஶநேந ப்ராணஸம்ஶயமாபந்ந: ப்ரஹ்மவித்யாநிஷ்பத்தயே ப்ராணாநாமநவஸாதமாகாங்க்ஷமாண:,

இப்யம் குல்மாஷாந் காதந்தம் பிக்ஷமாண:, தேந ச, *"உச்சிஷ்டேப்யோऽந்யே ந வித்யந்தே"*(சா.1-10-2)[1] இதி ப்ரத்யுக்த:, புநரபி, *"ஏதேஷாம் மே தேஹி"*(சா.1-10-3)[2] இத்யுக்த்வா தேந ச இப்யேந உச்சிஷ்டேப்ய ஆதாய தத்தாந் குல்மாஷாந் ப்ரதிக்ருஹ்ய,

அநுபாநப்ரதிக்ரஹம் இப்யேநார்தித:, *"உச்சிஷ்டம் வை மே பீதம் ஸ்யாத்"*(சா.1-10-4)[3] இதி வதந் சாக்ராயண:, (வதந், சாக்ராயண!) கிமேதே குல்மாஷா அநுச்சிஷ்டா இதி இப்யேந பர்யநுயுக்த:, *"ந வா அஜீவிஷ்யமிமாந் அகாதந்...காமோ மே உதபாநம்"*(சா.1-10-4)[4] இதி குல்மாஷாகாதநே ஸ்வஸ்ய ப்ராணஸம்ஶயாபத்தே: தாவந்மாத்ரகாதநேந த்ருதப்ராணஸ்ய ஸ்வஸ்ய உச்சிஷ்டோதகபாநம் காமகாரிதம் நிஷித்தம் ஸ்யாத் இத்யுக்த்வா,

ஸ்வகாதிதஶேஷம் ஜாயாயை தத்வா, தயா ச ரக்ஷிதாந், அபரேத்யு: யாஜநேந அர்ஜிஜீஷயா ஜிகமிஷு: புநரபி ப்ராணஸம்ஶயமாபந்ந:, தாநேவ இப்யோச்சிஷ்டாந் ஸ்வோச்சிஷ்டபூதாந் பர்யுஷிதாந் சகாத।

சக்ரர் என்பவரின் புதல்வரான உஷஸ்தி என்பவர், ப்ரஹ்ம-ஜ்ஞாநிகளில் முன்-நிற்பவராக (சிறந்தவராக) இருந்தவர்,

குருதேசம் கல்மழையால் தாக்கப்பட்டதாய் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டபோது, யானைப் பாகன்களின் கிராமத்தில் வசிப்பவராய்

பட்டினியால், உயிர் பிழைக்குமோ என்ற ஸந்தேஹத்தை அடைந்தவராய்

ப்ரஹ்ம-உபாஸனம் நடப்பதற்காக ப்ராணன்கள் முடியக்கூடாது என விரும்பினவராய்,

கொள்ளு-தான்யங்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த யானைப்பாகனை பிச்சை கேட்பவராய்,

[1]**''நான் உண்டுகொண்டிருப்பதில் மீதி போக வேறு (தனியாக எதுவும்) இல்லை''** என்று அவனால் பதில் உரைக்கப் பட்டவராய்,

மீண்டும், [2]**''அவற்றைத்தான் எனக்குக் கொடு''** என்று கேட்டு,

அந்த பாகனால், உண்ட மீதியிலிருந்து எடுத்துக் கொடுக்கப்பட்ட கொள்ளுகளை ஏற்றுக்கொண்டு,

அவனால், குடிநீர் ஏற்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டவராய்,

[3]**''(பருகிய) மிகுதி என்னால் பருகப்படுவது ஆகிவிடும்''** என்று சொல்பவராய் (மறுப்பவராய்),

'இந்த கொள்ளுகள் உண்டமிகுதி (எச்சில்) இல்லையா என்ன?' என்று பாகனால் கேள்வி கேட்டப்பட்டவராய்,

[4]**''இவற்றை உண்ணாவிட்டால் உயிர்பிழைக்க மாட்டேன்; குடிநீர் என்பது விருப்பத்தினால் ஆவது ஆகும்''** என்று - கொள்ளுகள் உண்ணாவிட்டால், தனக்கு உயிர் பிழைக்குமா எனும் ஸந்தேகம் நேரிட்டதால், அந்தளவு மட்டும் உண்டதன் மூலம், உயிர் தரித்த தனக்கு மீதி எச்சில் நீரைப் பருகுதல் என்பது விருப்பத்தினடியாக செய்யப்படுவதாய் நிஷேதிக்கப்பட்டதாக (உண்ணக் கூடாததாக ஶாஸ்த்ரத்தில் கட்டளையிடப்பட்ட விஷயமாக) ஆகிவிடுகிறது என்று சொல்லி,

தான் உண்ட மீதியை மனைவிக்கு கொடுத்து,

மறுநாள் யாகம் செய்துவைத்து ஸம்பாதிக்கும் ஆசையால் போக விரும்பியவராய், மறுபடியும் உயிர் பிழைக்குமா எனும் ஸந்தேஹம் அடைந்தவராய், மனைவியால் பாதுகாக்கப் பட்டவையும், பாகன் உண்ட மிகுதியும், தான் உண்ட மீதியும், நாள் கடந்து பழையவையும் ஆனவற்றை உண்டார்.

अतो ब्रह्मविदामपि प्राणसंशय एव सर्वान्नानुमतिदर्शनादत्राविशेषेण कीर्तितमपि प्राणविदः सर्वान्नीनत्वं प्राणात्ययापत्तावेवेति निश्चीयते॥ २८ ॥

* * *

४४७.अबाधाच्च (३-४-२९)

"आहारशुद्धौ सत्त्वशुद्धिः सत्त्वशुद्धौ ध्रुवा स्मृतिः"(छा.7-26-2)[1] इति ब्रह्मविद्योत्पत्तावाहारशुद्धिविधानाबाधादपि ब्रह्मविदां सर्वान्नीनत्वमापद्विषयमवगम्यते। एवं ब्रह्मविदामतिशयितशक्तीनामपि सर्वान्नीनत्वस्यापद्विषयत्वात् प्राणविदोऽल्पशक्तेः सर्वान्नानुमतिरापद्विषयैव॥२९॥

* * *

४४८.अपि स्मर्यते (३-४-३०)

अपि च आपद्विषयमेव सर्वान्नीनत्वं ब्रह्मविदामन्येषां च स्मर्यते,

"प्राणसंशयमापन्नो योऽन्नमत्ति यतस्ततः।
लिप्यते न स पापेन पद्मपत्रमिवाम्भसा॥"(?)[2] इति॥ ३० ॥

* * *

அத: ப்ரஹ்மவிதாமபி ப்ராணஸம்ஶய ஏவ ஸர்வாந்நாநுமதிதர்ஶநாத் அத்ர அவிஶேஷேண கீர்திதமபி ப்ராணவித: ஸர்வாந்நீநத்வம் ப்ராணாத்யயாபத்தாவேவேதி நிஶ்சீயதே।। 28 ।।

* * *

447.அபாதாச்ச (3-4-29)

"ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி: ஸத்த்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:" (சா.7-26-2)[1] இதி ப்ரஹ்மவித்யோத்பத்தௌ ஆஹாரஶுத்திவிதாநாபாதாதபி ப்ரஹ்மவிதாம் ஸர்வாந்நீநத்வம் ஆபத்விஷயமவகம்யதே। ஏவம் ப்ரஹ்மவிதாம் அதிஶயிதஶக்தீநாமபி ஸர்வாந்நீநத்வஸ்ய ஆபத்விஷயத்வாத் ப்ராணவிதோऽல்பஶக்தே: ஸர்வாந்நாநுமதி: ஆபத்விஷயைவ।।29।।

* * *

448.அபி ஸ்மர்யதே(3-4-30)

அபி ச ஆபத்விஷயமேவ ஸர்வாந்நீநத்வம் ப்ரஹ்மவிதாம் அந்யேஷாம் ச ஸ்மர்யதே,

"ப்ராணஸம்ஶயமாபந்நோ யோऽந்நமத்தி யததஸ்தத:।
லிப்யதே ந ஸ பாபேந பத்மபத்ரமிவாம்பஸா।।" (?)[2] இதி।। 30 ।।

* * *

ஆகையால், ப்ராண-உபாஸனம் செய்பவன் எல்லா உணவையும் உண்பவன் (ஆகலாம்) என்பது, விஶேஷ-குறிப்பு இல்லாமல் சொல்லப்பட்டிருந்தாலும், ப்ராண-ஸந்தேஹம் (உயிர் பிழைக்குமா எனும் ஸந்தேஹம்) நேரிடும்போது மட்டுமே என்பதாக நிச்சயிக்கப் படுகிறது. ஏனெனில், ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்களுக்குக் கூட ப்ராண-ஸந்தேஹம் (உயிர் பிழைக்குமா எனும் ஸந்தேஹம்) நேரிடும்போது மட்டுமே எல்லா உணவையும் அனுமதித்தல் காணப்படுகிறது என்பதால்.

◆ ◆ ◆ ◆

447.அபாதாத் ச(3-4-29)

[ஆஹார-ஶுத்தி விதித்திருப்பதை] மறுக்காததாலும்.

[1]**''உணவு ஶுத்தமாக ஆனால், மனஸ் ஶுத்தமாகும்; மனஸ் ஶுத்தமானால், எப்போதும் நினைத்தல் (உபாஸனம்) ஆகும்''** என்று, ப்ரஹ்ம-உபாஸனம் உண்டாவதற்கு உணவு ஶுத்தமாக ஆவதை விதிக்கிறது; அதற்கு மறுப்பு இல்லாதபடியாலும், ப்ரஹ்ம-ஜ்ஞானிகள் எல்லா உணவையும் உண்ணலாம் என்பது, ஆபத்து-நிலை பற்றியது என்பதாகத் தெரிகிறது.

இப்படி சிறப்புமிக்க ஶக்தியுடைய ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்களுக்கே எல்லா உணவையும் உண்பது, ஆபத்து-நிலையைப் பற்றியது என்பதால், குறைந்த ஶக்தி உடைய ப்ராண-உபாஸனம் செய்பவர்களுக்கு எல்லாம் உண்ண அனுமதித்தலானது, ஆபத்து நிலையைப் பற்றியதுதான்.

✍(ப்ராண-உபாஸநத்தை விட ப்ரஹ்ம-உபாஸநம் மிகவும் சிறப்பு வாய்ந்தது; அது எல்லா பாபதங்களையும் போக்கி மோக்ஷம் தர வல்லது; அத்தகு ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவர்கள் கூட எல்லா உணவையும் எப்போதும் உண்ணலாம் என்பது கிடையாது; ஆபத்து காலத்தில்தான் உயிர் வாழ்வதற்காக அஶுத்த உணவை உண்ணலாம்; அவர்களுக்கே அப்படியானால், ப்ராண-உபாஸநம் செய்பவர்களுக்கு இந்த நியமம் கட்டாயம் உண்டு என்பது சொல்லாமல் தெரிந்து கொள்ளலாம்)✍

◆ ◆ ◆ ◆

448.அபி ஸ்மர்யதே(3-4-30)

ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறதும் கூட

ப்ரஹ்ம-ஜ்ஞானிகளுக்கும் மற்றவர்களுக்கும் கூட எல்லா உணவையும் உண்ணுதல் ஆனது, ஆபத்து-நிலையைப் பற்றியதாகவே ஸ்ம்ருதியில் சொல்லப் படுகிறது - [2]**''ப்ராண-ஸந்தேஹத்தை அடைந்த எவன், எந்த விதமாக உணவு உண்டாலும், தாமரையிலை தண்ணீருடன் ஒட்டாதது போல, அதனால் வரும் பாபத்துடன் ஒட்டுவதில்லை''** என்று.

◆ ◆ ◆ ◆

In Public Domain. Digitization Mahalakshmi Research Academy

४४९.शब्दश्चातोऽकामकारे (३-४-३१)

यतो ब्रह्मविदामन्येषां च सर्वान्नीनत्वमापद्विषयमेव; अत एव सर्वेषाम**कामकारे शब्दः** - कामकारस्य प्रतिषेधकः शब्दो वर्तते। अस्ति हि कठानां संहितायां कामकारस्य प्रतिषेधकः शब्दः, ''**तस्माद्ब्राह्मणः सुरां न पिबति पाप्मना नोत्सृजा इति**''(का.सं.)[1] इति। पाप्मना संस्पृष्टो न भवानीति मत्वा ब्राह्मणः सुरां न पिबतीत्यर्थः॥ ३१ ॥

इति सर्वान्नानुमत्यधिकरणम्॥

449.ஶப்தஶ்சாதோऽகாமகாரே(3-4-31)

யதோ ப்ரஹ்மவிதாமந்யேஷாம் ச ஸர்வாந்நீநத்வம் ஆபத்விஷயமேவ; அத ஏவ ஸர்வேஷாம் *அகாமகாரே ஶப்த:* - காமகாரஸ்ய ப்ரதிஷேதக: ஶப்தோ வர்ததே। அஸ்தி ஹி கடாநாம் ஸம்ஹிதாயாம் காமகாரஸ்ய ப்ரதிஷேதக: ஶப்த:, ''*தஸ்மாத்ப்ராஹ்மண: ஸுராம் ந பிபதி பாப்மநா நோத்ஸ்ருஜா இதி*''(கா.ஸம்)[1] இதி। பாப்மநா ஸம்ஸ்ப்ருஷ்டோ ந பவாநீதி மத்வா ப்ராஹ்மண: ஸுராம் ந பிபதீத்யர்த:।। 31 ।।

இதி ஸர்வாந்நாநுமத்யதிகரணம்।।7।।

449.ஶப்த: ச அத: அகாமகாரே(3-4-31)

அதனால்தான், இஷ்டப்படி செய்வதை மறுக்கும் வேத-வாக்யம் உள்ளது

அத: ச (அதனால் தான்) - எதனால், ப்ரஹ்ம-ஜ்ஞாநிகளுக்கும் மற்றவர்களுக்கும் கூட எல்லா உணவையும் உண்ணுதல் ஆனது, ஆபத்து-நிலையைப் பற்றியதாகவே ஆகுமோ, அதனால்தான் எல்லாருக்கும்

அகாமகாரே (இஷ்டப்படி செய்வது கூடாது என்பதில்) - இஷ்டப்படி செய்வதைத் தடுக்கும்

ஶப்த: - வாக்யம் உள்ளது; கட-சாகையினரின் ஸம்ஹிதையில், இஷ்டப்படி செய்வதைத் தடுக்கும் வாக்யம், [1]**"ஆகையால் ப்ராஹ்மணன் பாபத்துடன் சேரக் கூடாது என்பதால், கள் குடிக்க மாட்டான்"** என்கிறது. நான் பாபம் ஒட்டுபவனாக ஆக மாட்டேன் என்று எண்ணி ப்ராஹ்மணன் கள் குடிப்பது கிடையாது என்று அர்த்தம்.

* * *

ஸர்வாந்நாநுமத்யதிகரணம் முற்றிற்று.

116.விஹிதத்வாதிகரணம்(3-4-8)

முன் குறிப்பு

வேதம் விதித்த கர்மங்களை நித்யம், அநித்யம் என இரு விதமாக சொல்லலாம்.

நித்யம் என்றால் கட்டாயம் செய்ய வேண்டும் என்று அர்த்தம்; அநித்யம் என்றால், பலனில் ஆசையிருந்தால் செய்யலாம்; இல்லாவிட்டால் செய்ய வேண்டாம் என்று அர்த்தம். இப்படி இரண்டுமாகவும் ஒரு கர்மம் ஆக முடியாது; அப்படியானால் முரண்பாடு வரும்.

பூர்வபக்ஷம் - அக்னிஹோத்ரம் என்பது நித்யகர்மம்; கட்டாயம் செய்ய வேண்டும்; ஆனால், மோக்ஷபலனுக்காக ப்ரஹ்ம-உபாஸனம் செய்யும் ஜ்ஞாநி ஆனவர், அந்த உபாஸனத்துக்கு அங்கமாக அக்னிஹோத்ரம் செய்வர்; அப்போது அநித்யம் ஆகிறது; மோக்ஷபலன் வேண்டுமானால் செய்யலாம் என்று ஆகிறது; இப்படி ஒரே கர்மமே இருவிதமாக ஆக முடியாது; எனவே, இந்த அக்நிஹோத்ரம் ஆனது, உபாஸநத்துக்கு அங்கம் என்று சொன்னால், நித்யமான கர்மாவாக ஆக முடியாது; அதனால், உபாஸநம் செய்யாத ஸாதாரணமானவர்கள் இதனைச் செய்யவேண்டாம் என்றாகும்.

இதற்காக, நித்யமான அக்னிஹோத்ரம் வேறு; ப்ரஹ்மவித்யைக்கு அங்கமான அக்னிஹோத்ரம் வேறு என்று சொன்னால் ப்ரஹ்மவித்யைக்கான அக்னிஹோத்ரம் செய்பவர், அது தவிர நித்யமான அக்னிஹோத்ரத்தை தனியாக செய்ய வேண்டும்.

ஸித்தாந்தம் - இரண்டும் ஒன்றுதான்; இரு வேறு வேதவாக்யங்கள் இருவிதமாக சொல்வதால், முரண்பாடு இல்லை; ஒரே வேதவாக்யம் இருந்தால், அது இரு விஷயத்தை விதிக்க முடியாது; ஒன்றை மட்டும் விதித்தால், மற்றொன்று வேறு ப்ரமாணத்தால் ஏற்படுமானால், இரண்டுக்கும் முரண்பாடு வரும்; ஆனால், இங்கே அப்படி இல்லை; இரு வேதவாக்யங்கள் இரு விஷயங்களை சொல்கின்றன. எனவே, முரண்பாடு இல்லை.

ப்ரஹ்மவித்யை செய்யாத சாதாரணமானவன், தினமும் நித்ய-அக்நிஹோத்ரம் செய்ய வேண்டும் என ஶாஸ்த்ரம் சொல்வதால், அதைச் செய்ய வேண்டும்; ப்ரஹ்மவித்யை செய்பவன் தினமும் அக்னிஹோத்ரம் செய்வான்; அது, நித்யம் ஆகும்; அதுவே, ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாகவும் ஆவதால், அநித்யமும் ஆகலாம்.

ஆனால் இரண்டு அக்னிஹோத்ரத்தையும் தனித்தனியாக இரண்டுமுறை செய்ய வேண்டும் என்பது கிடையாது; இரண்டுக்குமாக சேர்த்து ஒரே முறை செய்தால் போதும்.

எடுத்துக்காட்டாக, வேறொரு விஷயம் பார்க்கலாம். உயிர் வாழும் வரை அக்னிஹோத்ரம் செய்ய வேண்டும்'' என்று ஒரு வாக்யம் உள்ளது; ஸ்வர்க்கம் விரும்புபவன் அக்னிஹோத்ரம் செய்க'' என்று ஒரு வாக்யம்; முதல் வாக்யத்தின்படி அக்னிஹோத்ரம் செய்வதற்கு உயிர் வாழ்தல் என்பது தகுதி; இரண்டாவது வாக்யத்தின்படி ஸ்வர்க்கத்தில் விருப்பம் என்பது தகுதியாகும்; ஒரே அக்னிஹோத்ரமே இரண்டின் பொருட்டும் ஆகலாம்; வேதம் அப்படி தனித்தனியாக சொல்வதால் அப்படி ஆவதில் முரண்பாடு இல்லை.

அதுபோல, இங்கும் ஆஶ்ரம-கர்மங்கள் வித்யையின் பொருட்டும் ஆகலாம்; வாழ்தல் எனும் தகுதியை இட்டு நித்ய-கர்மம் ஆகவும் ஆகலாம்; அதில் முரண்பாடு இல்லை; ஏனெனில், அப்படி வேதமே இரு வாக்யங்களில் தனித்தனியாக விதிக்கிறபடியால்.

११६. विहितत्वाधिकरणम् (३-४-८)

४५०.विहितत्वाच्चाश्रमकर्मापि (३-४-३२)

यज्ञादिकर्माङ्गिका ब्रह्मविद्येत्युक्तम्। तानि च यज्ञादीनि कर्माणि अमुमुक्षुणा केवलाश्रमिणाऽप्यनुष्ठेयानि, उत नेति चिन्तायाम्,

विद्याङ्गानां सतां केवलाश्रम(मि)शेषत्वे नित्यानित्यसंयोगविरोधः प्रसज्यत इति यज्ञादीनां केवलाश्रम(मि)धर्मत्वं न सम्भवति,

इति प्राप्ते उच्यते - **आश्रमकर्मापि** इति। आश्रमस्य कर्मापि भवति। केवलाश्रमिणाऽपि अनुष्ठेयानीत्यर्थः। कुतः? “**यावज्जीवमग्निहोत्रं जुहोति**”(आ.श्रौ.सू.3-14-8)[1] इत्यादिना विहितत्वात्, जीवननिमित्ततया नित्यवद्विहितत्वादित्यर्थः॥ ३२ ॥

* * *

तथा विद्याङ्गतया च, “**तमेतं वेदानुवचनेन**”(बृ.6-4-22)[2] इत्यादिना विहितत्वात् विद्याशेषतयाऽप्यनुष्ठेयानीत्याह -

४५१.सहकारित्वेन च (३-४-३३)

---

116. விஹிதத்வாதிகரணம் (3-4-8)

450.விஹிதத்வாச்சாஶ்ரமகர்மாபி(3-4-32)

யஜ்ஞாதிகர்மாங்கிகா ப்ரஹ்மவித்யா இத்யுக்தம். தாநி ச யஜ்ஞாதீநி கர்மாணி அமுமுக்ஷுணா கேவலாஶ்ரமிணாऽபி அநுஷ்டேயாநி, உத நேதி சிந்தாயாம்,

வித்யாங்காநாம் ஸதாம் கேவலாஶ்ரம(மி)ஶேஷத்வே நித்யாநித்யஸம்யோகவிரோத: ப்ரஸஜ்யத இதி யஜ்ஞாதீநாம் கேவலாஶ்ரம(மி)தர்மத்வம் ந ஸம்பவதி -

இதி ப்ராப்தே உச்யதே - *ஆஶ்ரமகர்மாபி* - இதி. ஆஶ்ரமஸ்ய கர்மாபி பவதி. கேவலாஶ்ரமிணாऽபி அநுஷ்டேயாநீத்யர்த:. குத:? “*யாவஞ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹோதி*”(ஆ.ஶ்ரௌ.ஸூ.3-14-8) இத்யாதிநா விஹிதத்வாத்; ஜீவநநிமித்ததயா நித்யவத்விஹிதத்வாதித்யர்த:।। 32 ।।

* * *

ததா வித்யாங்கதயா ச, “*தமேதம் வேதாநுவசநேந*”(ப்ரு.6-4-24)[2] இத்யாதிநா விஹிதத்வாத் வித்யாஶேஷதயாऽப்யநுஷ்டேயாநீத்யாஹ -

451.ஸஹகாரித்வேந ச (3-4-33)

116.விஹிதத்வாதிகரணம்(3-4-8)

450.விஹிதத்வாத் ச ஆஶ்ரமகர்ம அபி(3-4-31)

விதிக்கப்பட்டபடியால், ஆஶ்ரமத்தின் [மோக்ஷபலனை விரும்பாமல், வெறும் ஆஶ்ரமத்தில் இருப்பவனுக்கும் செய்யவேண்டிய] கர்மமும் ஆகும்

ஸந்தேஹம்

யஜ்ஞம் முதலிய கர்மங்களை அங்கமாகக் கொண்டது ப்ரஹ்ம-வித்யை என்று சொல்லப் பட்டது; அந்த யஜ்ஞம் முதலிய கர்மங்கள், மோக்ஷத்தை அடையும் விருப்பம் அற்றவனாய், வெறும் ஆஶ்ரமத்தில் இருப்பவனாலும் அனுஷ்டானம் செய்யப்பட வேண்டியவையா? அல்லது இல்லையா? என்று விசாரம்.

பூர்வபக்ஷம்

யஜ்ஞம் முதலியவை, (மோக்ஷ-விருப்பம் இல்லாமல்) வெறும் ஆஶ்ரமத்துக்கு மட்டுமான தர்மம் என்பதாக ஆகாது; ஏனெனில், வித்யைக்கு (உபாஸனத்துக்கு) அங்கமாக ஆகும் இவை, வெறும் (மோக்ஷ-விருப்பம் சேராத) ஆஶ்ரமத்துக்கும் அங்கமானால், நித்ய-அநித்ய-தொடர்பு எனும் முரண்பாடு வர நேரிடும்; ஆகையால், (இந்த) யஜ்ஞம் முதலியவை வெறும் ஆஶ்ரம-தர்மமாக ஆக முடியாது.

ஸித்தாந்தம்

இப்படி, பூர்வபக்ஷம் நேரிட, ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது -

ஆஶ்ரமகர்ம அபி - ஆஶ்ரமத்தின் கர்மமும் ஆகும்; வெறும் (மோக்ஷபலனில் விருப்பம் இல்லாமல்) ஆஶ்ரமத்தில் இருப்பவர்களுக்கும் அனுஷ்டானம் செய்யப்பட வேண்டியவையே என்று அர்த்தம்.

ஏன்?

விஹிதத்வாத் (விதிக்கப்பட்டபடியால்) - [1]**''வாழும்வரை அக்னிஹோத்ர ஹோமம் செய்ய வேண்டும்''** முதலியதால் விதிக்கப்பட்டபடியால் - ஜீவனத்தை நிமித்தமாகக் கொண்டு நித்யகர்மமாக விதிக்கப்பட்டபடியால் என்று அர்த்தம்.

◆ ◆ ◆ ◆

அப்படியே வித்யைக்கு அங்கமாகவும் அவை அனுஷ்டானம் செய்யப்பட வேண்டியவை; ஏனெனில், [2]**''அவனை வேதமோதுதல் கொண்டு (யஜ்ஞம் கொண்டு) உபாஸனம் செய்ய விரும்புவர்''** என்பது முதலியதால், விதிக்கப்பட்டுள்ளது - என்று சொல்கிறார் -

451.ஸஹகாரித்வேந ச(3-4-33)

[வித்யைக்கு] துணை புரியும் காரணமாகவும் [அனுஷ்டானம் செய்யப்பட வேண்டியவை]

Public Domain Digitization by Lakshmi Research Academy

विद्योत्पत्तिद्वारेण विद्यासहकारितयाऽप्यनुष्ठेयानि। अग्निहोत्रादीनामिव जीवनाधिकारस्वर्गाधिकारवत् विनियोगपृथक्त्वेनोभयार्थत्वं न विरुध्यत इत्यर्थः॥ ३३ ॥

◆

तद्वदेव कर्मान्तरत्वमपि नास्तीत्याह -

४५२.सर्वथाऽपि त एवोभयलिङ्गात् (३-४-३४)

सर्वथा - विद्यार्थत्वे आश्रमार्थत्वेऽपि, **त एव** यज्ञादय इति प्रतिपत्तव्यम्; न कर्मस्वरूपभेद इत्यर्थः। कुतः? **उभयलिङ्गात्** - उभयत्र श्रुतौ यज्ञादिशब्दैः प्रत्यभिज्ञाप्य विनियोगात्, कर्मस्वरूपभेदे प्रमाणाभावाच्च॥ ३४ ॥

◆

४५३.अनभिभवं च दर्शयति (३-४-३५)

"**धर्मेण पापमपनुदति**" (तै.2.63-78)[1] इत्यादिभिश्च तानेव यज्ञादिधर्मान् निर्दिश्य तैर्विद्याया **अनभिभवं** पापकर्मभिरुत्पत्तिप्रतिबन्धाभावं **दर्शयति**। अहरहरनुष्ठीयमानैर्हि यज्ञादिभिर्विशुद्धेऽन्तःकरणे प्रत्यहं प्रकृष्यमाणा विद्या उत्पद्यते। अतस्त एवोभयत्र यज्ञादयः॥३५॥

इति विहितत्वाधिकरणम् ॥ ८ ॥

வித்யோத்பத்தித்வாரேண வித்யாஸஹகாரிதயாபி அநுஷ்டேயாநி। அக்நிஹோத்ராதீநாமிவ ஜீவநாதிகாரஸ்வர்காதிகாரவத் விநியோகப்ருதக்த்வேந உபயார்தத்வம் ந விருத்யத இத்யர்த:।। 33 ।।

◆

தத்வதேவ கர்மாந்தரத்வமபி நாஸ்தீத்யாஹ -

452.ஸர்வதாऽபி த ஏவோபயலிங்காத்(3-4-34)

ஸர்வதா - வித்யார்தத்வே ஆஶ்ரமார்தத்வேऽபி, த ஏவ யஜ்ஞாதய: இதி ப்ரதிபத்தவ்யம்। ந காமஸ்வரூபபேத: இத்யர்த:। குத:? *உபயலிங்காத்* - உபயத்ர ஶ்ருதௌ யஜ்ஞாதிஶப்தை: ப்ரத்யபிஜ்ஞாப்ய விநியோகாத், கர்மஸ்வரூபபேதே ப்ரமாணாபாவாச்ச।। 34 ।।

◆

453.அநபிபவம் ச தர்ஶயதி (3-4-35)

"*தர்மேண பாபமபநுததி*" (தை.2.63-78)[1] இத்யாதிபிஶ்ச தாநேவ யஜ்ஞாதிதர்மாந் நிர்திஶ்ய தைர்வித்யாயா *அநபிபவம்* பாபகர்மபி: உத்பத்திப்ரதிபந்தாபாவம் தர்ஶயதி। அஹரஹரநுஷ்டீயமாநைர்ஹி யஜ்ஞாதிபி: விஶுத்தேऽந்த:கரணே ப்ரத்யஹம் ப்ரக்ருஷ்யமாணா வித்யா உத்பத்யதே। அத: த ஏவோபயத்ர யஜ்ஞாதய:।। 35 ।।

இதி விஹிதத்வாதிகரணம் ।। 8 ।।

வித்யையை உண்டாக்குவதன் மூலம் வித்யைக்கு உதவும் துணைக் காரணமாகவும் (ஆச்ரம-கர்மங்கள்) அனுஷ்டானம் செய்யப்பட வேண்டியவை; வாழ்தல் எனும் தகுதி உடையதாகவும், ஸ்வர்க்கம் (ஸ்வர்க்கத்தில் விருப்பம்) எனும் தகுதி உடையதாகவும் விநியோகம் செய்து விதிக்கும் வேதவாக்யம் தனித் தனியாக இருப்பதால், அக்னிஹோத்ரம் முதலியவற்றுக்கு ஆவது போல, இரண்டின் பொருட்டும் ஆதல் முரண்படாது என்று பொருள்.

◆ ◆ ◆ ◆

அதுபோலவே, வேறு கர்மம் என்பதும் கிடையாது என்கிறார் -

452.ஸர்வதா அபி தே ஏவ உபயலிங்காத்(3-4-34)

எல்லா விதத்தாலும், அதே கர்மங்களே; இரண்டிடத்தும் உள்ள அடையாளத்தால்

ஸர்வதா - வித்யையின் பொருட்டும் ஆச்ரமத்தின் பொருட்டும் ஆனாலும்,

தே ஏவ - அந்த யஜ்ஞம் முதலியவையே என்று அறிய வேண்டும்; கர்மஸ்வரூபம் வேறானது அல்ல என்று அர்த்தம்.

ஏன்?

உபயலிங்காத் - இரண்டிலும் வேதத்தில் 'யஜ்ஞம்' முதலிய சொற்களை இட்டு ஒன்றாக நினைவுறுத்தி (அததற்கு) அங்கமாக விதிப்பதால்.

மேலும் கர்ம-ஸ்வரூபத்தில் வேறுபாடு ஆவதில் ப்ரமாணம் இல்லாதபடியாலும்.

◆ ◆ ◆ ◆

453.அநபிபவம் ச தர்ஶயதி(3-4-34)

முடக்கம் இல்லாமையையும் வேதம் காண்பிக்கிறது

[1]**''தர்மத்தால் பாபத்தை களைகிறான்''** முதலியவற்றால், அந்த யஜ்ஞம் முதலிய தர்மங்களையே குறிப்பிட்டு, அவற்றால், வித்யைக்கு (உபாஸனத்துக்கு) முடக்கமின்மை ஆகும் என்பதைக் காண்பிக்கிறது. வித்யை உண்டாவதற்கு பாபகர்மங்களால் நேரிடும் தடையானது, (யஜ்ஞம் முதலிய தர்மத்தால்) இல்லாதாகும் என காண்பிக்கிறது. தினந்தினமும் அனுஷ்டானம் செய்யப்படும் யஜ்ஞம் முதலியவற்றால் மனஸ் ஶுத்தமாகும்போது, ஒவ்வொரு நாளும் அதிகமாக வளரும் வித்யை உண்டாகும்.

ஆகையால், அதே யஜ்ஞம் முதலியவையே இரண்டு இடத்திலும் ஆகும்.

* * *

விஹிதத்வாதிகரணம் முற்றிற்று.

117.விதுராதிகரணம்(3-4-9)

முன் குறிப்பு

விதுரர் என்றால், மனைவியை இழந்தவர் என்று அர்த்தம். எல்லா ஆஶ்ரமத்தவர்களும் அவரவரது ஆஶ்ரம-கர்மங்களைச் செய்துகொண்டு ப்ரஹ்ம-வித்யை அனுஷ்டானம் செய்யலாம் என சொல்லியாயிற்று; ஆனால், விதுரர்களுக்கு ஒரு ஆஶ்ரமமும் கிடையாது; அதேபோல, ப்ரஹ்மசாரியாக இருந்து ஸமாவர்தன வ்ரதமும் செய்தவன், பின்னர் விவாஹத்துக்கான பெண் கிடைக்காமல் போனால், அவனுக்கும் ஆஶ்ரமம் கிடையாது. இப்படி ஆஶ்ரமம் அற்றவர்கள் ப்ரஹ்ம-வித்யையைச் செய்ய முடியுமா என விசாரம்.

பூர்வபக்ஷம் - ஆஶ்ரமதர்மங்கள் ஆகிற அங்கங்கள் இல்லாதபடியால், அவர்கள் ப்ரஹ்மவித்யையை செய்ய முடியாது, ; தகுதி கிடையாது.

ஸித்தாந்தம் - பீஷ்மர், ரைக்வர், ஸம்வர்த்தர் முதலியவர்கள் ஒரு ஆஶ்ரமத்தையும் சேராதவர்கள்; அவர்கள் ப்ரஹ்ம-வித்யையை அனுஷ்டானம் செய்தனர்; எனவே, அவர்களுக்கும் தகுதி உண்டு.

அவர்கள் ஜபம், உபவாஸம், தானம் முதலியதை அங்கமாக செய்துகொண்டு வித்யையை அனுஷ்டானம் செய்வர்.

பீஷ்மர், விவாஹம் ஆன க்ருஹஸ்தர்; ஆனாலும், புத்ரனை பெற்றுக் கொள்ள மாட்டேன் என்று சபதம் செய்திருந்தார்; பெண்-தொடர்பே இல்லாமல் இருந்ததால், ப்ரஹ்மசாரி என்று சொல்வர்; அவர் யஜ்ஞம் செய்பவர்தான்; ஆனாலும், க்ருஹஸ்த-ஆஶ்ரம-தர்மத்தை முழுமையாக அனுஷ்டானம் செய்யாத அவருக்கும் ப்ரஹ்ம-வித்யை அனுஷ்டானம் இருந்தது என்பது இங்கே கருத்து.

ஸம்வர்த்தர் வீட்டை விட்டு காட்டில் வசிக்க வேண்டிய துர்க்கதி நேரிட்டது; மனைவியைப் பிரிந்து இருந்தாலும் ப்ரஹ்ம-வித்யை அனுஷ்டானம் செய்தார்.

ரைக்வர் சரிதம் உபநிஷத்தில் ஸம்வர்க்க வித்யையில் உள்ளது; அவர், ப்ரஹ்மசர்ய-ஆஶ்ரமத்தை விட்டு, ஸமாவர்தனம் செய்துகொண்டவர்; அதனால், ஆஶ்ரமம் அற்றவர்; அப்போதே ப்ரஹ்ம-உபாஸனம் செய்து கொண்டிருந்தார்; பின்னர் கல்யாணம் ஆயிற்று - அபஶூத்ராதிகரணம் காண்க 1-3-9.

ஆனால், மனிதன் முடிந்தவரை ஒரு ஆஶ்ரமத்தைப் பற்றி இருக்க வேண்டும்; அதுதான் உயர்ந்தது; அதுதான் ஶாஸ்த்ர முறையில் ஆகும்; அதற்கு முடியாமல், ஆபத்து காலமாக இருந்தால் ஆஶ்ரமம் இல்லாமலும் இருக்க நேரிடலாம்; அப்போது அது தவறு இல்லை. இதனைப் பற்றி விரிவாக கடைசி ஸூத்ரத்தில் காணலாம்.

११७.विधुराधिकरणम् (३-४-९)

४५४.अन्तरा चापि तु तद्दृष्टेः (३-४-३६)

चतुर्णामाश्रमिणां ब्रह्मविद्यायामधिकारोऽस्ति (इति?), विद्यासहकारिण आश्रमधर्मा इति चोक्तम्। ये पुनराश्रमान् अन्तरा वर्तन्ते विधुरादयः, तेषां ब्रह्मविद्यायामधिकारोऽस्ति, न वेति विशये,

आश्रमधर्मेतिकर्तव्यताकत्वात् विद्यायाः, अनाश्रमिणाश्च आश्रमधर्माभावात् नास्त्यधिकारः,

इति प्राप्ते उच्यते - **अन्तरा चापि तु** इति। तुशब्दः पक्षव्यावृत्त्यर्थः। चशब्दोऽवधारणे। **अन्तरा** वर्तमानानाम् - अनाश्रमिणामपि विद्यायामधिकारोऽस्त्येव। कुतः? **तद्दृष्टेः।** दृश्यते हि रैक्वभीष्मसंवर्तादीनामनाश्रमिणामपि ब्रह्मविद्यानिष्ठत्वम्।

न चाश्रमधर्मैरेव विद्यानुग्रह इति शक्यं वक्तुम्, **''यज्ञेन दानेन तपसाऽनाशकेन''** (बृ.6-4-22)[1] इति दानादीनाम् आश्रमेषु अनैकान्तिकानामप्यनुग्राहकत्वदर्शनात्।

---

117. விதுராதிகரணம் (3-4-9)

454.அந்தரா சாபி து தத்த்ருஷ்டே: (3-4-36)

சதுர்ணாமாஶ்ரமிணாம் ப்ரஹ்மவித்யாயாமதிகாரோऽஸ்தி (இதி), வித்யாஸஹகாரிண: ஆஶ்ரமதர்மா இதி சோக்தம்। யே புந: ஆஶ்ரமாந் அந்தரா வர்தந்தே விதுராதய:, தேஷாம் ப்ரஹ்மவித்யாயாமதிகாரோऽஸ்தி, ந வேதி விஶயே -

ஆஶ்ரமதர்மேதிகர்தவ்யதாகத்வாத் வித்யாயா:, அநாஶ்ரமிணாஞ்ச ஆஶ்ரமதர்மாபாவாத் நாஸ்த்யதிகார:,

இதி ப்ராப்தே உச்யதே - *அந்தரா சாபி து* இதி। துஶப்த: பக்ஷவ்யாவ்ருத்த்யர்த:। சஶப்த: அவதாரணே। அந்தரா வர்தமாநாநாம் - அநாஶ்ரமிணாமபி வித்யாயாமதிகார: அஸ்த்யேவ। குத:? *தத்த்ருஷ்டே:।* த்ருஶ்யதே ஹி ரைக்வபீஷ்மஸம்வர்தாதீநாம் அநாஶ்ரமிணாமபி ப்ரஹ்மவித்யாநிஷ்டத்வம்।

ந ச ஆஶ்ரமதர்மைரேவ வித்யாநுக்ரஹ: இதி ஶக்யம் வக்தும், *''யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந''*(ப்ரு.6-4-22)[1] இதி தாநாதீநாம் ஆஶ்ரமேஷு அநைகாந்திகாநாமபி அநுக்ராஹகத்வதர்ஶநாத்।

117.விதுராதிகரணம்(3-4-9)

454.அந்தரா ச அபி து தத்த்ருஷ்டே:(3-4-36)

[ஆஶ்ரமங்களுக்கு] இடையில் [ஆஶ்ரமம் இன்றி] இருப்பவர்களுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டுதான்; அதைக் காண்பதால்.

ஸங்கதி - விஷயதொடர்பு & ஸந்தேஹம்

நான்கு ஆஶ்ரமத்தவர்க்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டு என்றும் ஆஶ்ரமதர்மங்கள் வித்யைக்கு (உபாஸனத்துக்கு) உதவுபவை என்றும் சொல்லியாயிற்று; மனைவியை இழந்தவர் முதலியவராக, ஆஶ்ரமங்களுக்கு இடையில் (ஆஶ்ரமம் அற்றவராக) யார் உள்ளனரோ, அவர்களுக்கு ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டா இல்லையா என்று ஸந்தேஹம் வரும்போது,

பூர்வபக்ஷம்

அதிகாரம் இல்லை; ஏனெனில், வித்யைக்கு ஆஶ்ரமதர்மங்கள் அங்கமாக ஆகின்றன; ஆஶ்ரமம் அற்றவர்களுக்கோ ஆஶ்ரமதர்மங்கள் கிடையாது.

✍(அங்கங்களான யாகங்கள் செய்து அவற்றின் மூலம் உபாஸனத்தை வளர்த்திக் கொள்ளவேண்டும் என்று முன்பே சொல்லியாயிற்று. மனைவி இல்லாதவர்களுக்கு யாகங்கள் செய்ய முடியாதனபடியால், உபாஸநம் வரை வாய்ப்பில்லை; அங்கத்தை விட்டு உபாஸநம் செய்வதும் சரியில்லை; அதனால் அவர்களுக்கு உபாஸநம் செய்யும் தகுதி வராது.)✍

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **அந்தரா ச அபி து** என்று.

'து' என்ற சொல் பூர்வபக்ஷத்தைக் களைவதன் பொருட்டு ஆகும்.

'ச' என்ற சொல் அவதாரணம் (அதுதான்) எனும் பொருளில் ஆகும்.

அந்தரா அபி - இடையில் இருப்பவர்களுக்கும் - ஆஶ்ரமம் அற்றவர்களுக்கும், ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டுதான்.

ஏன்?

தத்த்ருஷ்டே: - ஆஶ்ரமம் அற்ற ரைக்வர், பீஷ்மர், ஸம்வர்தர் முதலியவர் ப்ரஹ்மவித்யை அனுஷ்டானம் செய்தவர்களாக காண்பதால்.

✍(ரைக்வர் சரிதம் உபநிஷத்தில் உள்ளது; பீஷ்மர் மற்றும் ஸம்வர்த்தர் சரிதம் மஹாபாரதத்தில் உள்ளது; முன் குறிப்பில் காணலாம்.)✍

ஆஶ்ரமதர்மங்களை இட்டுத்தான் வித்யைக்கு உதவுதல் ஆகும் என்பது கிடையாது; ஏனெனில், [1]**''யஜ்ஞத்தால், தானத்தால், உபவாஸ-தபஸ்ஸால்''** என்று ஆஶ்ரமங்களில் நியமமாக அல்லாத தானம் முதலியவையும் வித்யைக்கு உதவுபவையாக ஆவது காணப்படுகிறது.

यथोध्वरेतस्सु विद्यानिष्ठत्वदर्शनादग्निहोत्रादिव्यतिरिक्तैरेव विद्यानुग्रहः क्रियते, तथाऽनाश्रमिष्वपि विद्यादर्शनादाश्रमानियतैः जपोपवासदानदेवताराधनादिभिर्विद्यानुग्रहः शक्यते कर्तुम्॥३६॥

* * *

४५५.अपि स्मर्यते (३-४-३७)

अपिच अनाश्रमिणामपि जपादिभिरेव विद्यानुग्रहः स्मर्यते, **''जप्येनापि च संसिद्ध्येत् ब्राह्मणो नात्र संशयः। कुर्यादन्यन्न वा कुर्यात् मैत्रो ब्राह्मण उच्यते''** (मनु.2-87)[1] इति। संसिद्ध्येत् - जपाद्यनुगृहीतया विद्यया सिद्धो भवतीत्यर्थः॥ ३७ ॥

* * *

४५६.विशेषानुग्रहश्च (३-४-३८)

न केवलं न्यायस्मृतिभ्यामयमर्थः साधनीयः; श्रूयते चानाश्रमनियतैर्धर्मविशेषैर्विद्यानुग्रहः, **''तपसा ब्रह्मचर्येण श्रद्धया विद्ययाऽऽत्मानमन्विष्य''** (प्र.1-10)[2] इति॥३८॥

* * *

யதா உத்வரேதஸ்ஸு வித்யாநிஷ்டத்வதர்ஶநாத் அக்நிஹோத்ராதிவ்யதிரிக்தைரேவ வித்யாநுக்ரஹ: க்ரியதே, ததா அநாஶ்ரமிஷ்வபி வித்யாதர்ஶநாத் ஆஶ்ரமாநியதை: ஜபோபவாஸதாநதேவதாராதநாதிபி: வித்யாநுக்ரஹ: ஶக்யதே கர்தும்।। 36 ।।

* * *

455.அபி ஸ்மர்யதே (3-4-37)

அபிச அநாஶ்ரமிணாமபி ஜபாதிபிரேவ வித்யாநுக்ரஹ: ஸ்மர்யதே,
''ஜப்யேநாபி ச ஸம்ஸித்த்யேத் ப்ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய:।
குர்யாதந்யந்ந வா குர்யாத் மைத்ரோ ப்ராஹ்மண உச்யதே।। (மநு.2-87)[1]
இதி। ஸம்ஸித்த்யேத்-ஜபாத்யநுக்ருஹீதயா வித்யயா ஸித்தோ பவதீத்யர்த:।।37।।

* * *

457.விஶேஷாநுக்ரஹஶ்ச (3-4-38)

ந கேவலம் ந்யாயஸ்ம்ருதிப்யாம் அயமர்த: ஸாதநீய:, ஶ்ரூயதே ச அநாஶ்ரமநியதை: தர்மவிஶேஷைர்வித்யாநுக்ரஹ:, *''தபஸா ப்ரஹ்மசர்யேண ஶ்ரத்தயா வித்யயாऽऽத்மாநமந்விஷ்ய(ஷ்யேத்)''*(ப்ர.1-10)[2] இதி।।38।।

* * *

ஸந்யாஸிகளிடம், ப்ரஹ்ம-வித்யை அனுஷ்டானம் காண்பதால், அக்னிஹோத்ரம் முதலியதை விட வேறானவற்றின் மூலம் வித்யைக்கு உதவி செய்யப்படுகிறது; (இந்த விஷயம் முன்பே சொல்லப்பட்டது) அது எப்படியோ, அப்படியே, ஆஶ்ரமம் அற்றவர்களுக்கும் ப்ரஹ்மவித்யையை காண்பதால், ஆஶ்ரமத்துக்கு நியமமாக ஆகாத ஜபம், உபவாஸம், தானம், தேவ-ஆராதனம் முதலியவற்றைக் கொண்டும் வித்யைக்கு உதவி செய்வதற்கு முடியும்.

◆ ◆ ◆ ◆

455.அபி ஸ்மர்யதே (3-4-37)

ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறதும் கூட

மேலும், ஆஶ்ரமம் அற்றவர்களுக்கு ஜபம் முதலியவற்றைக் கொண்டே வித்யை ஸ்ம்ருதியில் சொல்லப்படுகிறது - [1]**''ப்ரஹ்மவித்யை அனுஷ்டானம் செய்பவன் ஜபமந்த்ரத்தாலும் கூட பல-ஸித்தி பெறுவான்; இதில் ஸந்தேஹம் இல்லை; மற்றதை (யாகத்தை) செய்யலாம் அல்லது செய்யாமல் இருக்கலாம்; (உயிர்களின்) நட்புடையவன் ப்ராஹ்மணன் ஆக சொல்லப் படுகிறான்''** என்று. ஸித்தி பெறுவான் - ஜபம் முதலியதால் உதவப்பெற்ற வித்யையால் ஸித்தி உடையவன் ஆவான் என்று பொருள்.

✍(யாகம் செய்பவன் சில ப்ராணி-வதம் செய்ய வேண்டியுள்ளது; ஜபம் செய்பவன் அப்படியில்லாமல் எல்லா ப்ராணிகளுக்கும் நண்பன் ஆக இருக்கிறான் என்று சொல்கிறது; உண்மையில் யாகம் செய்யும்போதும் ப்ராணி-வதம் என்பது தோஷமாக ஆகாது என்று 3-1-25) ஸூத்ரத்தில் சொல்லியாயிற்று; ஆனாலும், இது ஜபத்தை புகழ்- வதற்காக சொன்னது)✍

◆ ◆ ◆ ◆

456.விஶேஷாநுக்ரஹ: ச(3-4-38)

விஶேஷதர்மங்களால் [வித்யைக்கு] உதவியும் ஆகும்.

இந்த விஷயமானது, ந்யாயத்தாலும் ஸ்ம்ருதியாலும் மட்டும் சாதிக்கப்பட வேண்டும் என்பது இல்லை; ஆஶ்ரமத்துக்கு நியமமாக ஆகாத விஶேஷ-தர்மங்களால் வித்யைக்கு உதவியானது [2]**''தபஸ்ஸாலும், ப்ரஹ்மசர்யத்தாலும், ஶ்ரத்தையாலும் ஜீவ-வித்யையாலும் பரமாத்மாவை உபாஸனம் செய்து''** என்று வேதத்திலும் ஓதப்படுகிறது.

◆ ◆ ◆ ◆

४५७.अतस्त्वितरज्ज्यायो लिङ्गाच्च (३-४-३९)

तुशब्दोऽवधारणे। **अतः** - अनाश्रमित्वात्, **इतरत्** - आश्रमित्वमेव ज्यायः। अनाश्रमित्वमापद्विषयम्; शक्तस्य त्वाश्रमित्वमेवोपादेयमित्यर्थः; भूयोधर्मकाल्पधर्मकयोरतुल्यकार्यत्वात्।

लिङ्गाच्च - स्मृतेरेवेत्यर्थः। स्मर्यते च शक्तं प्रति आश्रमस्योपादेयत्वम्, **''अनाश्रमी न तिष्ठेत्तु दिनमेकमपि द्विजः''** (दक्ष.1-10)[1] इत्यादिना। निवृत्तब्रह्मचर्यस्य मृतभार्यस्य च अवैराग्ये सति दारालाभः आपत्॥ ३९ ॥

इति विधुराधिकरणम् ॥ ९ ॥

458.அதஸ்த்விதரஜ்ஜ்யாயோ லிங்காச்ச (3-4-39)

துஶப்த: அவதாரணே। *அத:* - அநாஶ்ரமித்வாத், *இதரத்* - ஆஶ்ரமித்வமேவ ஜ்யாய:। அநாஶ்ரமித்வம் ஆபத்விஷயம், ஶக்தஸ்ய து ஆஶ்ரமித்வமேவ உபாதேயம் இத்யர்த:, பூயோதர்மகால்பதர்மகயோ: அதுல்யகார்யத்வாத்।

லிங்காச்ச - ஸ்ம்ருதேரேவேத்யர்த:। ஸ்மர்யதே ச ஶக்தம் ப்ரதி ஆஶ்ரமஸ்யோபாதேயத்வம், *''அநாஶ்ரமீ ந திஷ்டேத்து திநமேகமபி த்விஜ:''*(தக்ஷ. 1-10)[1] இத்யாதிநா। நிவ்ருத்தப்ரஹ்மசர்யஸ்ய ம்ருதபார்யஸ்ய ச அவைராக்யே ஸதி தாராலாப: ஆபத்।। 36 ।।

இதி விதுராதிகரணம் ।। 9 ।।

457.அத: து இதரத் ஜ்யாய: லிங்காத் ச(3-4-39)

இதை விட மற்றதே சிறந்தது; ஸ்ம்ருதியாலும் ஆகும்.

'து' என்ற சொல் அவதாரணத்தில் (அது மட்டும் என்ற பொருளில்) ஆகும்.

அத: (இதைக் காட்டிலும்) - ஆஶ்ரமம் இன்றி இருப்பதைக் காட்டிலும்

இதரத் து (மற்றதுதான்) - ஆஶ்ரமத்தை உடையவனாய் இருப்பதுதான்

ஜ்யாய: - (சிறந்தது).

ஆஶ்ரமம் இன்றி இருப்பது ஆபத்தினைப் பற்றி ஆகும்; ஶக்தி உள்ளவருக்கு ஆஶ்ரமத்துடன் இருப்பதே விதிக்கப் படுவதாகும் என்று பொருள்; ஏனெனில், அதிக-தர்மங்களைக் கொண்டதும் குறைந்த தர்மங்களைக் கொண்டதும் சமான-மான பலனை உடையதாக ஆகாது.

லிங்காத் ச (ஸ்ம்ருதியாலேயே) - ஶக்தி உள்ளவனைக் குறித்து ஆஶ்ரமம் பற்றப்பட வேண்டியதாக ஸ்ம்ருதியிலும் சொல்லப்படுகிறது - [1]**''த்விஜன் (மூவர்ணதத்தவன்) ஆஶ்ரமம் அற்றவனாக ஒரு நாள் கூட இருக்கக் கூடாது''** முதலியதால்.

ஆபத்து என்பது, ப்ரஹ்மசர்யத்திலிருந்து (முடித்துவிட்டு) வெளிவந்தவனுக்கும் மனைவியை இழந்தவனுக்கும் வைராக்யம் இல்லாதபோது மனைவி கிடைக்காமல் இருத்தல் ஆகும்.

✍(ப்ரஹ்மசாரியாக இருப்பவன், பிறகு, ஸமாவர்த்தன-வ்ரதம் மூலம் அந்த ஆஶ்ரமத்தை விடுவான்; உடனே, விவாஹம் மூலம் க்ருஹஸ்த-ஆஶ்ரமம் பற்ற வேண்டும்; அல்லது வைராக்யத்தால் ஸந்யாஸ-ஆஶ்ரமம் பற்றலாம்; வைராக்யமும் இல்லாமல் விவாஹத்துக்கு பெண்ணும் கிடைக்காமல் போனால், அது அவனுக்கு தர்மஶாஸ்த்ரப்படி ஆபத்து காலம்.

மனைவியை இழந்தவனும் வைராக்யத்துடன் ஸந்யாஸ-ஆஶ்ரமம் பற்றலாம்; அல்லது மற்றோரு விவாஹம் செய்துகொள்ளலாம்; வைராக்யமும் இல்லாமல் பெண்ணும் கிடைக்காமல் போனால், அதுதான் ஆபத்துகாலம்.

இந்த ஆபத்து-காலத்தில் ஆஶ்ரமம் இல்லாமல் இருப்பது தவறில்லை. மீதி சமயங்களில் ஏதாவது ஒரு ஆஶ்ரமத்தை பற்றி இருக்க வேண்டும்).✍

* * *

விதுராதிகரணம் முற்றிற்று.

118.தத்பூதாதிகரணம்(3-4-10)

முன் குறிப்பு

ப்ரஹ்மசாரி, க்ருஹஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்யாஸி என நான்கு ஆஶ்ரமத்தவர்கள்; முன் ஆஶ்ரமத்திலிருந்து அடுத்தடுத்த ஆஶ்ரமம் போக வேண்டும்; மேலிலிருந்து கீழே இறங்கக்கூடாது; ஸந்யாஸி மீண்டும் க்ருஹஸ்தன் ஆகக் கூடாது; வானப்ரஸ்தன் காட்டை விட்டு வரக்கூடாது; இப்படி தவறி நடந்தால் பதிதர் என ஶாஸ்த்ரம் இகழ்கிறது; தர்மத்தின் பாதையிலிருந்து நழுவி தாழ்மையில் அதோகதியில் விழுந்தவர்கள் என்று அர்த்தம்; அவர்களை மிக மோசமாக தர்மஶாஸ்த்ரம் சொல்கிறது.

ப்ரஹ்மசாரிகள் இருவிதம் - 1. உபகுர்வாணர் - தற்போது ப்ரஹ்மசாரியானாலும் பின்னர் விவாஹம் செய்து கொள்ளும் எண்ணம் உடையவர். 2. நைஷ்டிகர் - இறுதி வரை விவாஹமே செய்து கொள்ளாமல், ப்ரஹ்மசாரியாகவே இருக்க வ்ரதம் பூண்டவர்; இந்த நைஷ்டிகர் கூட தன் வ்ரதத்தை விட்டு, பின்னர் விவாஹம் செய்து கொண்டால் பதிதர்தான்.

இந்த பதிதர்களுக்கு ப்ரஹ்ம-வித்யை செய்ய தகுதி கிடையாது.

கேள்வி - இவர்கள் செய்த தவறை ஶாஸ்த்ரத்தில் மிகவும் மோசமான மஹாபாதகமாக (மஹாபாபமாக) கணக்கிடவில்லை; எனவே, உபபாதகம் என்று கணக்கிடலாம்; ப்ராயச்சித்தம் செய்து, இவர்கள் ஶுத்த- மாகலாம் எனலாமா?.

பதில் - இவர்களது பாபமானது மஹாபாதகமோ அல்லது உபபாதகமோ, எப்படி ஆனாலும், இவர்களுக்கு ப்ராயச்சித்தம் கிடையாது என ஶாஸ்த்ரம் தெளிவாக சொல்கிறது.

கேள்வி - ப்ரஹ்மசர்ய-ஆஶ்ரமத்திலிருந்து தவறிவனுக்கு ப்ராயச்சித்தம் சொல்லியுள்ளது.

பதில் - அது உபகுர்வாணன் ஆன ப்ரஹ்மசாரிக்கு சொன்னது; நைஷ்டிக-ப்ரஹ்மசாரி தவறினால், ப்ராயச்சித்தம் கிடையாது.

மேலும் மஹான்களும் பதிதர்களை சேர்த்துக்கொள்வதில்லை; விலக்குகின்றனர்; ஆகவே, அவர்களுக்கு ப்ரஹ்ம-வித்யை கிடையாதுதான்.

In Public domain, Digitization: Mumukshuji Research Academy

११८. तद्भूताधिकरणम् (३-४-१०)

४५८. तद्भूतस्य तु नातद्भावो जैमिनेरपि नियमात् तद्रूपाभावेभ्यः (३-४-४०)

नैष्ठिकवैखानसपरिव्राजकाश्रमेभ्यः प्रच्युतानामपि ब्रह्मविद्यायामधिकारोऽस्ति, नेति चिन्तायाम्,

विधुरादिवत् अनाश्रमैकान्तैर्दानादिभिर्विद्यानुग्रहसम्भवादस्त्यधिकारः,

इति प्राप्ते उच्यते - **तद्भूतस्य तु नातद्भावः** इति। **तुशब्दः** पक्षव्यावृत्यर्थः। **तद्भूतस्य** - नैष्ठिकाद्याश्रमनिष्ठस्य, **न अतद्भावः** - अतथाभावः अनाश्रमित्वेनावस्थानं न सम्भवति।

कुतः? **तद्रूपाभावेभ्यो नियमात्** - तद्रूपाणि तेषां नैष्ठिकादीनां रूपाणि वेषाः, धर्मा इत्यर्थः, तेषामभावाः - तद्रूपाभावाः; तेभ्यः शास्त्रैर्नियमात्।

---

118. தத்பூதாதிகரணம் (3-4-10)

458. தத்பூதஸ்ய து நாதத்பாவோ ஜைமிநேரபி நியமாத் தத்ரூபாபாவேப்ய: (3-4-40)

நைஷ்டிக-வைகாநஸ-பரிவ்ராஜகாஶ்ரமேப்ய: ப்ரச்யுதாநாமபி ப்ரஹ்ம-வித்யாயாமதிகார: அஸ்தி, நேதி சிந்தாயாம் -

விதுராதிவத் அநாஶ்ரமைகாந்தை: தாநாதிபி: வித்யாநுக்ரஹஸம்பவாத் அஸ்த்யதிகார:,

இதி ப்ராப்தே உச்யதே - *தத்பூதஸ்ய து நாதத்பாவ:* - இதி। துஶப்த: பக்ஷவ்யாவ்ருத்யர்த:। தத்பூதஸ்ய - நைஷ்டிகாத்யாஶ்ரமநிஷ்டஸ்ய, ந அதத்பாவ: - அததாபாவ:, அநாஶ்ரமித்வேநாவஸ்தாநம் ந ஸம்பவதி।

குத:? *தத்ரூபாபாவேப்யோ நியமாத்।* தத்ரூபாணி = தேஷாம் நைஷ்டிகாதீநாம் ரூபாணி - வேஷா:, தர்மா இத்யர்த:, தேஷாமபாவா: - தத்ரூபாபாவா:, தேப்ய: ஶாஸ்த்ரைர்நியமாத்।

118.தத்பூதாதிகரணம்(3-4-10)

458.தத்பூதஸ்ய து ந அதத்பாவ: ஜைமினே: அபி நியமாத் தத்ரூபாபாவேப்ய:(3-4-40)

அந்த நைஷ்டிகம் முதலியதை அடைந்தவருக்கு அது இல்லாமை சரியல்ல; அந்த ஆஶ்ரமி-தர்மங்கள் அன்றி இருப்பதிலிருந்து ஶாஸ்த்ரங்களால் விலக்கப் படுவதால்; ஜைமினிக்கும் [இக்கருத்து] ஆகும்.

ஸந்தேஹம்

நைஷ்டிகம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் ஆகிய ஆஶ்ரமங்களிலிருந்து தவறினவர்களுக்கும ப்ரஹ்மவித்யையில் தகுதி உண்டா இல்லையா என்று விசாரம் ஆகும்போது,

பூர்வபக்ஷம்

தகுதி உண்டு; ஏனெனில், மனைவியை இழந்தவர் முதலியவர் போல ஆஶ்ரமங்களுக்கு நியமமாக ஆகாத தானம் முதலியவற்றைக் கொண்டு வித்யை வரலாம்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட, ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது - **தத்பூதஸ்ய து ந அதத்பாவ:** என்று.

'து' என்ற சொல் பூர்வபக்ஷத்தை களைவதற்காக ஆகும்.

தத்பூதஸ்ய - நைஷ்டிகம் முதலிய ஆஶ்ரமத்தில் இருப்பவர்களுக்கு

அதத்பாவ: - அப்படி ஆகாமை; ஆஶ்ரமம் இல்லாதவராக இருத்தல்;

ந - ஆகாது;

ஏன்?

தத்ரூபாபாவேப்ய: (அந்த ஆஶ்ரமிகளின் தர்மங்கள் இல்லாமல் இருப்பதிலிருந்து) -

(தேஷாம் ரூபாணி தத்ரூபாணி; தேஷாம் அபாவா: தத்ரூபாபாவா:, தேப்ய: என்று ஸமாஸ-குறிப்பு)

- தேஷாம் - அவர்களின் - நைஷ்டிகர் முதலியவர்களின்,
- ரூபாணி - ரூபங்கள் - வேஷங்கள்; தர்மங்கள் என்று அர்த்தம்;
- தேஷாம் அபாவா: - அவற்றின் இல்லாமைதான் தத்ரூபாபாவங்கள்;
- தேப்ய: - அவற்றிலிருந்து

நியமாத் - ஶாஸ்த்ரங்களால் விலக்கப் படுவதால்.

In Public Domain, Digitization by Mahalakshmi Research Academy

नैष्ठिकाद्याश्रमप्रविष्टान् स्वाश्रमधर्मनिवृत्तिभ्यो नियच्छन्ति हि शास्त्राणि,

★ **''ब्रह्मचार्याचार्यकुलवासी तृतीयोऽत्यन्तमात्मानमाचार्यकुलेऽवसादयन्''**(छा.2-23-1)[1] इति,

★ **''अरण्यमियात्; ततो न पुनरेयात्''**(?)[2] इति,

★ **''सन्न्यस्याग्निं न पुनरावर्तयेत्''**(?)[3] इति च।

अतो विधुरादिवत् नैष्ठिकादीनामनाश्रमित्वेनावस्थानासम्भवात् न तान् अधिकरोति ब्रह्मविद्या। **जैमिनेरपि** इति अविगानं दर्शयन् उक्तं स्वाभिमतं द्रढयति॥ ४० ॥

* * *

अथ स्यात् - नैष्ठिकादीनां ब्रह्मचर्यात्प्रच्युतानां प्रायश्चित्ताधिकारः सम्भवति। अस्ति च प्रायश्चित्तमधिकारलक्षणे निरूपितम्, **''अवकीर्णिपशुश्च तद्वत्''**(पू.मी.सू.6-8-4)[4] इति। अतः प्रच्युतब्रह्मचर्यस्य प्रायश्चित्तसम्भवात् कृतप्रायश्चित्तो ब्रह्मविद्यायामधिकरिष्यति इति। तत्राह -

४५९.न चाऽऽधिकारिकमपि पतनानुमानात् तदयोगात् (३-४-४१)

अधिकारलक्षणोक्तमपि प्रायश्चित्तं नैष्ठिकादीनां तद्भ्रष्टानां न सम्भवति, कुतः?

நைஷ்டிகாத்யாஶ்ரமப்ரவிஷ்டாந் ஸ்வாஶ்ரமதர்மநிவ்ருத்திப்யோ நியச்சந்தி ஹி ஶாஸ்த்ராணி,

★ *''ப்ரஹ்மசார்யாசார்யகுலவாஸீ த்ருதீயோऽத்யந்தமாத்மாநமாசார்யகுலேऽவஸாதயந்''* (சா.2-23-1)[1] இதி,

★ *''அரண்யமியாத், ததோ ந புநரேயாத்''*(?)[2] இதி,

★ *''ஸந்யஸ்யாக்நிம் ந புநராவர்தயேத்''*(?)[3] இதி ச।

அத: விதுராதிவத் நைஷ்டிகாதீநாம் அநாஶ்ரமித்வேநாவஸ்தாநாஸம்பவாத் ந தாந் அதிகரோதி ப்ரஹ்மவித்யா। ஜைமிநேரபி இதி அவிகாநம் தர்ஶயந் உக்தம் ஸ்வாபிமதம் த்ரடயதி।। 40 ।।

* * *

அத ஸ்யாத் - நைஷ்டிகாதீநாம் ப்ரஹ்மசர்யாத் ப்ரச்யுதாநாம் ப்ராயஶ்சித்தாதிகார: ஸம்பவதி। அஸ்தி ச ப்ராயஶ்சித்தம் அதிகாரலக்ஷணே நிரூபிதம், *''அவகீர்ணிபஶுஶ்ச தத்வத்''*(பூ.மீ.ஸூ.6-8-4)[4] இதி। அத: ப்ரச்யுதப்ரஹ்மசர்யஸ்ய ப்ராயஶ்சித்தஸம்பவாத் க்ருதப்ராயஶ்சித்த: ப்ரஹ்மவித்யாயாமதிகரிஷ்யதி-இதி। தத்ராஹ -

459.ந சாऽऽதிகாரிகமபி பதநாநுமாநாத் ததயோகாத் (3-4-41)

அதிகாரலக்ஷணோக்தமபி ப்ராயஶ்சித்தம் நைஷ்டிகாதீநாம் தத்ப்ரஷ்-

ஏனெனில், நைஷ்டிகம் முதலிய ஆஶ்ரமங்களில் நுழைந்தவர்களை தமது ஆஶ்ரமதர்மங்களை செய்யாமல் விடுவதிலிருந்து ஶாஸ்த்ரங்கள் தடுக்கின்றன -

- [1]**''மூன்றாவதான (நைஷ்டிக)ப்ரஹ்மசாரீ ஆசார்யகுலத்தில் தீர வசிப்பவனாய் ஶரீரத்தை ஆசார்யகுலத்தில் முடிப்பவன் ஆகிறான்** - என்று.
- (வானப்ரஸ்த-ஆஶ்ரமத்துக்கு) [2]**''காட்டுக்கு செல்; அங்கிருந்து திரும்பி வராதே''** - என்று,
- [3]**''ஸந்யாஸம் ஏற்று மீண்டும் அக்னியை திருப்பி ஏற்காதே''** - என்றும்.

ஆகையால், மனைவியை இழந்தவர் முதலியவர் (ஆபத்தில் ஆஶ்ரமம் அற்றவராய் இருப்பது) போல, நைஷ்டிகர் முதலியவர்க்கு ஆஶ்ரமம் அற்றவராய் இருப்பது சரியாகாது; ஆகையால், அவர்களை ப்ரஹ்ம-வித்யை தகுந்தவராக ஏற்காது.

ஜைமினே: அபி (ஜைமினி முனிவருக்கும்) - என்று (அவரது) சம்மதத்தை காண்பித்துக் கொண்டு சொல்லப்பட்ட தன் கருத்தை உறுதிப் படுத்துகிறார்.

* * *

கேள்வி - ப்ரஹ்மசர்யத்திலிருந்து தவறின நைஷ்டிகர் முதலியவருக்கு ப்ராயச்சித்தம் மூலம் தகுதி வரும்; (பூர்வமீமாம்ஸாவில் ஆறாவதான) அதிகார-அத்யாயத்தில் [4]**''ப்ரஹ்மசர்யத்திலிருந்து தவறின நைஷ்டிகருக்கு (கழுதைப்)பசு-யாகமாகிற ப்ராயச்சித்தம் அந்த உபநயனம் போல (லௌகிக-அக்னியில்) ஆகும்''** என்று நிரூபிக்கப்பட்ட ப்ராயச்சித்தம் உள்ளதும் கூட; அதனால், ப்ரஹ்மசர்யத்திலிருந்து தவறினவருக்கு ப்ராயச்சித்தம் ஆகுமாதலால், ப்ராயச்சித்தம் செய்தவன் ப்ரஹ்ம-வித்யையில் தகுதி பெறுவான் என்று ஆகட்டும்.

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

459.ந ச ஆதிகாரிகம் அபி பதநாநுமாநாத் ததயோகாத்(3-4-41)

பதனத்தை ஸ்ம்ருதி சொல்வதால், அந்த ப்ராயச்சித்தம் வராது என்பதால் அதிகார அத்யாயத்தில் சொன்ன ப்ராயச்சித்தமும் கூட கிடையாதுதான்.

ஆதிகாரிகம் அபி - அதிகார அத்யாயத்தில் சொன்ன ப்ராயச்சித்தமும் கூட

ந ச (கிடையாதுதான்) - நைஷ்டிகர் முதலியவராய் அதிலிருந்து தவறினவருக்கு வராது.

ஏன்?

पतनानुमानात् तदयोगात् - नैष्ठिकादीनां प्रच्युतानां पतनस्मृतेः तस्य प्रायश्चित्तस्यासम्भवात् -

> **“आरूढो नैष्ठिकं धर्मं यस्तु प्रच्यवते द्विजः।**
> **प्रायश्चित्तं न पश्यामि येन शुध्येत् स आत्महा”**(अग्नि.16-5-23)[1] इति।

अतोऽधिकारिलक्षणोक्तं प्रायश्चित्तमितरब्रह्मचारिविषयम्॥ ४१ ॥

* * *

४६०.उपपूर्वमपीत्येके भावमशनवत् तदुक्तम् (३-४-४२)

नैष्ठिकादीनां ब्रह्मचर्यप्रच्यवन**मुपपूर्वम्** - उपपातकम् महापातकेष्वपरिगणितत्वादिति, तत्र प्रायश्चित्तस्य **भावं** - विद्यमानतामप्ये**के** आचार्या मन्यन्ते, **अशनवत्**- यथा मध्वशनादिनिषेधः तत्प्रायश्चित्तश्च उपकुर्वाणस्य नैष्ठिकादीनां च समानम्।

तदुक्तं स्मृतिकारैः, **“उत्तरेषां चैतदविरोधि”**(गौ.ध.सू.1-3-4)[2] इति। गुरुकुलवासिनो यदुक्तम्, तत् स्वाश्रमाविरोधि उत्तरेषामप्याश्रमिणां भवतीत्यर्थः। तद्वदिहापि ब्रह्मचर्यप्रच्यवने प्रायश्चित्तसम्भ(सद्भा)वात् ब्रह्मविद्यायोग्यताऽप्यस्ति॥ ४२ ॥

* * *

டாநாம் ந ஸம்பவதி, குத:? *பதநாநுமாநாத் ததயோகாத்* - நைஷ்டிகாதீநாம் ப்ரச்யுதாநாம் பதநஸ்ம்ருதே: தஸ்ய ப்ராயஶ்சித்தஸ்யாஸம்பவாத் -

> *“ஆருடோ நைஷ்டிகம் தர்மம் யஸ்து ப்ரச்யவதே த்விஜ:।*
> *ப்ராயஶ்சித்தம் ந பஶ்யாமி யேந ஶுத்யேத் ஸ ஆத்மஹா।।”*(அக்நி.16-5-23)[1]

இதி। அத: அதிகாரிலக்ஷணோக்தம் ப்ராயஶ்சித்தம் இதரப்ரஹ்மசாரிவிஷயம்।। 41 ।।

* * *

460.உபபூர்வமபீத்யேகே பாவமஶநவத் ததுக்தம் (3-4-42)

நைஷ்டிகாதீநாம் ப்ரஹ்மசர்யப்ரச்யவநம் *உபபூர்வம்* - உபபாதகம் மஹாபாதகேஷ்வபரிகணிதத்வாத் இதி, தத்ர ப்ராயஶ்சித்தஸ்ய *பாவம்* - வித்யமாநதாமபி ஏகே ஆசார்யா மந்யந்தே, *அஶநவத்* - யதா மத்வஶநாதிநிஷேத: தத்ப்ராயஶ்சித்தஞ்ச உபகுர்வாணஸ்ய நைஷ்டிகாதீநாம் ச ஸமாநம்।

ததுக்தம் ஸ்ம்ருதிகாரை:, *“உத்தரேஷாம் சைததவிரோதி”*(கௌ.த.ஸூ. 1-3-4)[2] இதி। குருகுலவாஸிநோ யதுக்தம், தத் ஸ்வாஶ்ரமாவிரோதி உத்தரேஷாமப்யாஶ்ரமிணாம் பவதீத்யர்த:। தத்வத் இஹாபி ப்ரஹ்மசர்யப்ரச்யவநே ப்ராயஶ்சித்தஸம்ப(ஸத்பா)வாத் ப்ரஹ்மவித்யாயோக்யதாऽப்யஸ்தி।।42।।

* * *

பதநாநுமாநாத் - தவறினவரான நைஷ்டிகர் முதலியவருக்கு பதனத்தை ஸ்ம்ருதி சொல்வதால்,

ததயோகாத் - அந்த ப்ராயச்சித்தம் வராது என்பதால்.

[1]**''நைஷ்டிக தர்மத்தை ஏற்ற எந்த த்விஜன் (அதிலிருந்து) தவறுகிறானோ, தன்னையே அழித்துக் கொள்ளும் அவன், எதன் மூலம் சுத்தியடைவானோ, அப்படியான ப்ராயச்சித்தத்தை நான் காணவில்லை''** என்று (ஸ்ம்ருதி).

ஆகையால் அதிகார-அத்யாயத்தில் சொன்ன ப்ராயச்சித்தம் ஆனது மற்ற ப்ரஹ்மசாரிகளைப் பற்றியது ஆகும்.

✍(நைஷ்டிகன் என்பவன், விவாஹம் செய்துகொள்ளாமல் ப்ரஹ்மசாரியாகவே இருக்க வ்ரதம் பூண்டவன்; அவன் அந்த நியமத்திலிருந்து தவறினால் பதிதன் ஆகிவிடுவான்; அவனுக்கு ப்ராயச்சித்தம் கிடையாது; அப்படி இல்லாமல், விவாஹம் செய்து கொள்ளலாம் என்று இருக்கும் ப்ரஹ்மசாரீ உபகுர்வாணன்; அவன் ப்ரஹ்மசர்ய தர்மத்தை மீறினால், ப்ராயச்சித்தம் சொல்லப் பட்டது)✍

◆ ◆ ◆ ◆

460.(பூ) உபபூர்வம் அபி இதி ஏகே பாவம் அஶநவத் தத் உக்தம்(3-4-42)

உபபாதகம் என்று மதுபானம் போல ப்ராயச்சித்தம் இருப்பதையும் சிலர் கருதுவர்; அது [ஸ்ம்ருதியில்] சொல்லப்பட்டது.

நைஷ்டிகர் முதலியவர், ப்ரஹ்மசர்யத்திலிருந்து தவறுதல் என்பது,

உபபூர்வம் (உப என்ற சொல்லை முன்னிட்டதான பாதகம்) - உபபாதகம் ஆகும்; ஏனெனில், மஹாபாதகங்களில் கணக்கிடப் படவில்லை;

பாவம் அபி - ஆகையால் அங்கு ப்ராயச்சித்தம் இருப்பதையும்

ஏகே - சில ஆசார்யர்கள் கருதுகின்றனர்.

அஶநவத் - மதுபானம் (கள் குடித்தல்) முதலியதை விலக்குதலும் அதற்கு ப்ராயச்சித்தமும் உபகுர்வாணனுக்கும் நைஷ்டிகர் முதலியவர்க்கும் சமமாக உள்ளது;

தத் உக்தம் - அது ஸ்ம்ருதி-நூல்களைச் செய்தவர்களால் சொல்லப் பட்டது., - [2]**''பின்னவருக்கும் இது முரண்படாதது''** என்று; குருகுலவாஸிக்கு எது சொல்லப்பட்டதோ, அது தன் ஆஶ்ரமத்துக்கு முரண்படாதது பின்னர் உள்ள ஆஶ்ரமவாசிகளுக்கும் ஆகும் என்று அர்த்தம்.

அது எப்படியோ, அப்படியே இங்கும் ஆகும்; ப்ரஹ்மசர்யம் தவறினால், ப்ராயச்சித்தம் வருமாதலால், ப்ரஹ்மவித்யையில் தகுதியும் உண்டு.

✍(கௌதமதர்மஸூத்ரத்தில் ப்ரஹ்மசாரியின் தர்மங்களை சொல்ல ஆரம்பித்து, மதுபானம் முதலியன கூடாது என சொல்கிறார்; பின்னர், நைஷ்டிகர், க்ருஹஸ்தர் முதலியவர்களை

४६१.बहिस्तूभयथाऽपि स्मृतेराचाराच्च (३-४-४३)

तुशब्दो मतान्तरव्यावृत्त्यर्थः। उपपातकत्वे महापातकत्वेऽप्येते **बहिर्भूता** एव ब्रह्मविद्याधिकारिभ्यः, ब्रह्मविद्यायामनधिकृता इत्यर्थः। कुतः? **स्मृतेः** - पूर्वोक्तात् पतनस्मरणात्।

यद्यपि कल्मषनिर्हरणाय कैश्चिद्वचनैः प्रायश्चित्ताधिकारो विद्यते, तथापि कर्माधिकारानुगुणशुद्धिहेतुप्रायश्चित्तं न सम्भवति, **''प्रायश्चित्तं न पश्यामि येन शुध्येत् स आत्महा''** (अग्नि.16-5-23)[1] इति स्मृतेरित्यर्थः।

आचाराच्च - शिष्टा हि नैष्ठिकादीन् भ्रष्टान् कृतप्रायश्चित्तानपि वर्जयन्ति। तेभ्यो ब्रह्मविद्यादिकं नोपदिशन्ति। अतः तेषां नास्ति ब्रह्मविद्यायामधिकारः॥ ४३ ॥

इति तद्भूताधिकरणम् ॥ १० ॥

461.பஹிஸ்தூபயதா௨பி ஸ்ம்ருதேராசாராச்ச (3-4-43)

துஶப்தோ மதாந்தரவ்யாவ்ருத்த்யர்த:। உபபாதகத்வே மஹாபாதகத்வே௨பி ஏதே **பஹிர்பூதா** ஏவ ப்ரஹ்மவித்யாதிகாரிப்ய:, ப்ரஹ்மவித்யாயாமநதிக்ருதா இத்யர்த:। குத:? *ஸ்ம்ருதே:* - பூர்வோக்தாத் பதநஸ்மரணாத்।

யத்யபி கல்மஷநிர்ஹரணாய கைஶ்சித்வசநை: ப்ராயஶ்சித்தாதிகாரோ வித்யதே, ததாபி கர்மாதிகாராநுகுணஶுத்திஹேதுப்ராயஶ்சித்தம் ந ஸம்பவதி, *''ப்ராயஶ்சித்தம் ந பஶ்யாமி யேந ஶுத்யேத் ஸ ஆத்மஹா''*(ஆக்நே. 16-5-23)[1] இதி ஸ்ம்ருதே: இத்யர்த:।

ஆசாராச்ச - ஶிஷ்டா ஹி நைஷ்டிகாதீந் ப்ரஷ்டாந் க்ருதப்ராயஶ்சித்தாநபி வர்ஜயந்தி। தேப்யோ ப்ரஹ்மவித்யாதிகம் நோபதிஶந்தி। அத: தேஷாம் நாஸ்தி ப்ரஹ்மவித்யாயாமதிகார:।। 43 ।।

இதி தத்பூதாதிகரணம் ।। 10 ।।

சொல்கிறார்; அப்போது, ''முன் ப்ரஹ்மசாரிக்கு சொன்ன விஷயங்கள் முரண்படாதது பின்னவர்க்கும் உண்டு'' என்கிறார்; இதனால் முதலில் சொன்ன சாதாரண-ப்ரஹ்மசாரியும், பின் சொன்ன நைஷ்டிக-ப்ரஹ்மசாரியும் மதுபானம் செய்யக் கூடாது என இருவருக்கும் பொதுவான பாபமாக அது தெரிகிறது; அதனால், அதற்கான ப்ராயச்சித்தமும் இருவருக்கும் பொதுவாக ஆகும்; ப்ராயச்சித்தத்தை இந்த இடத்தில் சொல்லவில்லை; வேறிடத்தில் உள்ளது; ஆனாலும், பாபத்தைச் சொல்வதால், ப்ராயச்சித்தமும் பொதுவாக இங்கே நினைவுக்கு வரும் என்று கருத்து;

அதுபோல ப்ரஹ்மசர்யம் தவறினால் வரும் பாபமும் ப்ராயச்சித்தமும் இருவிதமான ப்ரஹ்மசாரிக்கும் உண்டு; அதனால், இருவரும் ப்ராயச்சித்தம் செய்து சுத்தியடைந்து ப்ரஹ்மவித்யையில் தகுதி பெறலாம் என்று பூர்வபக்ஷ-கருத்து)ஜ

◆ ◆ ◆ ◆

461.பஹி: து உபயதா அபி ஸ்ம்ருதே: ஆசாராத் ச(3-4-43)

இரண்டு விதமாகவும் அவர்கள் வெளியேதான் என்பது ஸ்ம்ருதியாலும் ஆசாரத்தாலும் [ஆகும்].

'து' என்ற சொல் (முன் சொன்ன) வேறு மதத்தை மறுப்பதற்காக ஆகும்.

உபயதா அபி (இரண்டு விதமாக ஆனாலும்) - உபபாதகம் ஆனாலும், மஹாபாதகம் ஆனாலும்,

பஹி: - ப்ரஹ்மவித்யைக்கு தகுதி உடையவர்களை விட இவர்கள் வெளியானவர்கள்தாம்; ப்ரஹ்மவித்யையில் தகுதி அற்றவர்கள் என்று கருத்து.

ஏன்?

ஸ்ம்ருதே: - பதனம் அடைதலைப் பற்றி முன் சொன்ன ஸ்ம்ருதி-வசனத்தால்.

பாபம் போக்குவதற்காக, ப்ராயச்சித்த-தகுதியானது, சில வசனங்களின் படி உண்டு; ஆனாலும், கர்ம-அனுஷ்டானத்தில் தகுதிக்கு ஏற்ற ஶுத்திக்கு காரணமான ப்ராயச்சித்தம் வராது; ஏனெனில், [1]**''தன்னையே அழித்துக் கொள்ளும் அவன், எதன் மூலம் ஶுத்தியடைவானோ, அப்படியான ப்ராயச்சித்தத்தை நான் காணவில்லை''** என்று ஸ்ம்ருதி சொல்வதால் என்று அர்த்தம்.

ஆசாராத் ச (அனுஷ்டானத்தாலும்) - ப்ரஷ்டர்களான (வ்ரதத்திலிருந்து தவறிய) நைஷ்டிகர்களை ப்ராயச்சித்தம் செய்தவரையும் ஶிஷ்டர்கள் விட்டு விடுகின்றனர்; அவர்களுக்கு ப்ரஹ்மவித்யை முதலியதை உபதேசம் செய்வதில்லை; ஆகையால் அவர்களுக்கு ப்ரஹ்மவித்யையில் தகுதி இல்லை.

* * *

தத்பூதாதிகரணம் முற்றிற்று

119.ஸ்வாம்யதிகரணம்(3-4-11)

முன் குறிப்பு

யாகத்தில் உத்கீத உபாஸனம் பற்றி மேலும் ஒரு விசாரம் - உத்கீத-உபாஸனம் யார் செய்ய வேண்டும்? யாகம் செய்யும் யஜமானனா? அல்லது யாகம் செய்து தரும் ருத்விக்கா?

ஆத்ரேயர் மதம் - யஜமானன் செய்ய வேண்டும்; யார் ஶாஸ்த்ரத்தை அனுஷ்டானம் செய்கிறாரோ, அவருக்குதான் பலன் வரும் என்பது பொதுவான நியமம்; உத்கீத-உபாஸனத்தின் பலன் யாக-பலனில் தடையில்லாமை என்பது; அது யஜமானனுக்குத் தேவை; ஆகவே, அவர்தான் உபாஸனம் செய்ய வேண்டும்.

ஔடுலோமி மதம் - ரித்விக் செய்ய வேண்டும்; யாகத்தில் ஆரம்பத்தில் யஜமானன் ரித்விக்களை யாகத்தில் வரிப்பான்; ''நீங்கள் யாகம் முழுவதும் எல்லா அங்கங்களுடன் கூட நடத்தித் தர வேண்டும்'' என்று கேட்பான்; அவர்களும் அதை ஏற்பார்கள்; பின்னர் இறுதியில் அவர்களுக்கு உரிய தக்ஷிணை கொடுப்பான்; உலகில் குறிப்பிட்ட காலத்தில், குறிப்பிட்ட வேலையை முடித்து கொடுக்கும்படி சிலரை குத்தகை எடுப்பது போல இது; (லௌகிகமான உதாஹரணம் தந்ததற்கு க்ஷமிக்கவேணும்) எனவே, யாகத்தில் எல்லா செயலும் யஜமானனுக்காக ரித்விக்தான் செய்வார். பலன் யஜமானனுக்கு வரும்.

(உ.ம்) யாகத்தில் ப்ரணயனம் என்று ஒரு அங்கம்; ஜலத்தைக் கொண்டு வருதல் என்று அர்த்தம்; சமஸபாத்ரத்தால் இதனைச் செய்வர்; யாகம் செய்யும் யஜமானனுக்கு பசுச்செல்வம் எனும் பலன் கிடைக்க வேண்டுமானால், கோதோஹனம் எனும் பாத்ரத்தால் ப்ரணயனம் செய்யவேண்டும்; அந்த கோதோஹன-பாத்ரத்தை ரித்விக்தான் எடுப்பார்; பலன் யஜமானனுக்கு; அதுபோல, இங்கும் உத்கீத-உபாஸனமும் ரித்விக் செய்ய வேண்டும்; பலன் யஜமானனுக்கு.

கேள்வி - ரித்விக் ப்ரணயனம் செய்யும்போது, யஜமானன் அந்த பாத்ரத்தை எடுக்க முடியாது; எனவே, ரித்விக் எடுப்பார்; ஆனால், உத்கீதம் பாடும்போது, யஜமானன் அதைப்பற்றி உபாஸனம் செய்ய முடியும்; எனவே, அவரே செய்யலாகும்.

பதில் - யாருக்கு முடியும், யாருக்கு முடியாது என்பது பிரச்னை அல்ல; யார் செய்வது முறையாகும் என்பது முக்கியம்; யஜமானனுக்காக யாகம் செய்து தரும் பொறுப்பு ரித்விக்குக்கு உண்டு; அவர் அங்கங்களுடன் முழு யாகமும் செய்து தருவார்; அப்போது, அங்கத்தைப் பற்றிய உபாஸனமும் அவரே செய்வதுதான் தகும் என்பது ஸித்தாந்தம்.

११९. स्वाम्यधिकरणम् (३-४-११)

४६२.स्वामिनः फलश्रुतेरित्यात्रेयः (३-३-४४)

कर्माङ्गाश्रयाण्युद्गीथाद्युपासनानि किं यजमानकर्तृकाणि, उत ऋत्विक्कर्तृकाणीति चिन्तायाम्,

यजमानकर्तृकाणीत्यात्रेयो मन्यते; कुतः? **फलश्रुतेः** - वेदान्तविहितेषु दहराद्युपासनेषु फलोपासनयोरेकाश्रयत्वदर्शनात् इह च क्रतुफलाप्रतिबन्धरूपस्योद्गीथोपासनफलस्य यजमानाश्रयत्वश्रवणादित्यर्थः।

न च गोदोहनादिवत् अङ्गाश्रयत्वेन यजमानकर्तृकत्वासम्भवः; गोदोहनादिषु ह्यध्वर्युकर्तृकप्रणयनाश्रयगोदोहनोपादानमन्येनाशक्यम्; इह तूद्गातृकर्तृकेऽप्युद्गीथे तस्योद्गीथादेः रसतमत्वानुसन्धानं यजमानेनैव कर्तुं शक्यते॥४४॥

* * *

इति प्राप्तेऽभिधीयते -

४६३.आर्त्विज्यमित्यौडुलोमिस्तस्मै हि परिक्रीयते (३-४-४५)

---

119. ஸ்வாம்யதிகரணம் (3-4-11)

462.ஸ்வாமிந: பலஶ்ருதேரித்யாத்ரேய: (3-3-44)

கர்மாங்காஶ்ரயாணி உத்கீதாத்யுபாஸநாநி கிம் யஜமாநகர்த்ருகாணி, உத ருத்விக்கர்த்ருகாணி இதி சிந்தாயாம்,

யஜமாநகர்த்ருகாணி இதி ஆத்ரேயோ மந்யதே, குத:? *பலஶ்ருதே:* - வேதாந்தவிஹிதேஷு தஹரகாத்யுபாஸநேஷு பலோபாஸநயோ: ஏகாஶ்ரயத்வதர்ஶநாத் இஹ ச க்ரதுபலாப்ரதிபந்தரூபஸ்ய உத்கீதோபாஸநபலஸ்ய யஜமாநாஶ்ரயத்வஶ்ரவணாத் இத்யர்த:।

ந ச கோதோஹநாதிவத் அங்காஶ்ரயத்வேந யஜமாநகர்த்ருகத்வாஸம்பவ:, கோதோஹநாதிஷு ஹி அத்வர்யுகர்த்ருகப்ரணயநாஶ்ரயகோதோஹநோபாதாநம் அந்யேநாஶக்யம், இஹ து உத்காத்ருகர்த்ருகேऽப்யுத்கீதே தஸ்ய உத்கீதாதே: ரஸதமத்வாநுஸந்தாநம் யஜமாநேநைவ கர்தும் ஶக்யதே।।44।।

* * *

இதி ப்ராப்தேऽபிதீயதே-

463.ஆர்த்விஜ்யமித்யௌடுலோமிஸ்தஸ்மை ஹி பரிக்ரீயதே (3-4-45)

119.ஸ்வாம்யதிகரணம்(3-4-11)

462.ஸ்வாமிந: பலஶ்ருதே: இதி ஆத்ரேய:(3-4-44)(பூ)

[உத்கீத-உபாஸனம் முதலியவை] யஜமானன் செய்பவை; யஜமானனுக்கே பலன் சொல்வதால் என்று ஆத்ரேயர் [கருதுகிறார்]

ஸந்தேஹம்

(யாகம் முதலிய) கர்மங்களின் அங்கங்களைப் பற்றிய உத்கீதம் முதலியன பற்றிய உபாஸனங்கள் யஜமானனை செய்பவராக கொண்டவையா? அல்லது ரித்விக்கினை செய்பவராகக் கொண்டவையா? - என்னும் விசாரத்தில்,

பூர்வபக்ஷம்

ஸ்வாமிந: இதி (யஜமானன் செய்பவை) - யஜமானனை செய்பவராகக் கொண்டவை என

ஆத்ரேய: - ஆத்ரேயர் கருதுகிறார்;

ஏன்?

(ஸ்வாமிந:) **பலஶ்ருதே: -** வேதாந்தங்களில் விதிக்கப்பட்ட தஹரம் முதலிய உபாஸனங்களில் பலனும் உபாஸனமும் ஒருவரிடமே பற்றி இருப்பது காணப் படுகிறது; இங்கும், உத்கீத-உபாஸனத்தின் பலனான யாகபலனுக்கு தடையில்லாமை என்பது, யஜமானனிடம் இருப்பதாக வேதம் சொல்கிறது; அதனால் (உபாயமான உத்கீத-உபாஸனமும் யஜமானன் செய்ய வேண்டும்) என்று அர்த்தம்.

உள்-ஶங்கை - கோதோஹனம் முதலியது போல, அங்கத்தைப் பற்றி வருவதால், யஜமானன் செய்வதாக ஆகாது.

உள்-ஸமாதானம் - அது கிடையாது; அத்வர்யு செய்யும் ப்ரணயனத்தை ஆஶ்ரயமாகக் கொண்ட கோதோஹனத்தை எடுத்தல் என்பது வேறொருவரால் செய்ய முடியாது; இங்கோ, உத்காதா செய்யும் உத்கீதத்தில், அந்த உத்கீதம் முதலியதை ரஸதமமாக (மிகச் சிறந்த ரஸமாக) எண்ணுதல் என்பது யஜமானனாலும் செய்ய முடியும்.

(முன் குறிப்பில் விளக்கம் காணலாம்)

◆ ◆ ◆

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது -

463.ஆர்த்விஜ்யம் இதி ஔடுலோமி: தஸ்மை ஹி பரிக்ரியதே(3-4-45)

உத்கீத-உபாஸனம் ரித்விக்கின் செயல் என்று ஔடுலோமி கருதுகிறார்; ஏனெனில், யாகத்தின் பொருட்டு பரிக்ரயணம் செய்யப்படுகிறார்

आर्त्विज्यम् - ऋत्विजः कर्म उद्गीथाद्युपासनमित्यौडुलोमिराचार्यो मन्यते। कुतः? **तस्मै हि** प्रयोजनाय ऋत्विक् परिक्रीयते; फलसाधनभूतस्य साङ्गस्य क्रतोरुपादानायेत्यर्थः। कर्मविधिषु, **"ऋत्विजो वृणीते"**(तै.सं.6-3-2)[1], **"ऋत्विग्भ्यो दक्षिणां ददाति"** (कल्प.?)[2] इति ऋत्विक्कर्तृकत्वशास्त्रेण फलसाधनभूतं साङ्गं कर्म ऋत्विग्भिरनुष्ठेयमित्यवगम्यते; तदन्तर्गतानि कायिकानि मानसानि च कर्माणि ऋत्विक्कर्तृकाण्येव। न च शक्त्यशक्ती तस्य निबन्धनम्।

यद्यप्युद्गीथाद्युपासनं पुरुषार्थः, तथापि क्रत्वधिकृताधिकारत्वात् क्रतोश्च साङ्गस्य ऋत्विक्कर्तृकत्वात्, **"यदेव विद्यया करोति...तदेव वीर्यवत्तरम्"**(छा.1-1-10)[3] इति ऋत्विक्कर्तृकक्रियोपयोगित्वेन विद्यायास्तदेककर्तृकत्वश्रवणात् ऋत्विक्कर्तृकाण्येतानि।

दहरादिषूपासनेषु ऋत्विक्कर्तृकत्वाश्रवणात्, **"शास्त्रफलं प्रयोक्तरि"**(पू.मी.सू.3-7-18)[4] इति न्यायाच्च फलिकर्तृकत्वमेव॥४५॥

इति स्वाम्यधिकरणम्॥ ११ ॥

ஆர்த்விஜ்யம் - ருத்விஜ: கர்ம உத்கீதாத்யுபாஸநம் இதி *ஔடுலோமி*ராசார்யோ மந்யதே। குத:? *தஸ்மை ஹி* ப்ரயோஜநாய ருத்விக் *பரிக்ரீயதே;* பலஸாதநபூதஸ்ய ஸாங்கஸ்ய க்ரதோருபாதாநாயேத்யர்த:। கர்மவிதிஷு, *"ருத்விஜோ வ்ருணீதே"*(தை.ஸம்.6-3-2)[1], *"ருத்விக்ப்யோ தக்ஷிணாம் ததாதி"*(கல்ப.?)[2] இதி ருத்விக்கர்த்ருகத்வஶாஸ்த்ரேண பலஸாதநபூதம் ஸாங்கம் கர்ம ருத்விக்பிரநுஷ்டேயம் இத்யவகம்யதே, ததந்தர்கதாநி காயிகாநி மாநஸாநி ச கர்மாணி ருத்விக்கர்த்ருகாண்யேவ। ந ச ஶக்த்யஶக்தீ தஸ்ய நிபந்தநம்।

யத்யபி உத்கீதாத்யுபாஸநம் புருஷார்த:, ததாபி க்ரத்வதிக்ருதாதிகாரத்வாத் க்ரதோஶ்ச ஸாங்கஸ்ய ருத்விக்கர்த்ருகத்வாத், *"யதேவ வித்யயா கரோதி...ததேவ வீர்யவத்தரம்"*(சா.1-1-10)[3] இதி ருத்விக்கர்த்ருகக்ரியோபயோகித்வேந வித்யாயா: ததேககர்த்ருகத்வஶ்ரவணாத் ருத்விக்கர்த்ருகாண்யேதாநி।

தஹராதிஷூபாஸநேஷு ருத்விக்கர்த்ருகத்வாஶ்ரவணாத், *"ஶாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி"*(பூ.மீ.ஸூ.3-7-18)[4] இதி ந்யாயாச்ச பலிகர்த்ருகத்வமேவ॥45॥

இதி ஸ்வாம்யதிகரணம்॥ 11 ॥

உத்கீத-உபாஸனம் ஆனது,

ஆர்த்விஜ்யம் - ரித்விக்கின் செயல் (ரித்விக் செய்ய வேண்டிய செயல்)

இதி ஔடுலோமி: - என்று ஔடுலோமி ஆசார்யர் கருதுகிறார்.

ஏன்?

ஹி - ஏனெனில்,

தஸ்மை - அந்த பயனின் (யாகத்தின்) பொருட்டு; பலனுக்குக் காரணமான யாகத்தை அங்கத்துடன் கூட செய்வதன் பொருட்டு என்று அர்த்தம்.

பரிக்ரீயதே - ரித்விக் பரிக்ரயணம் செய்யப்படுகிறார்! (பரிக்ரயணம் - குறிப்பிட்ட வேலையை தனக்காக செய்து தரும்படி கேட்டு, தக்ஷிணை கொடுத்து வேலை வாங்கிக் கொள்ளுதல்) கர்ம-விதிகளில், [1]**''ரித்விக்களை வரிக்கிறான்''**, [2]**''ரித்விக்களுக்கு தக்ஷிணை கொடுக்கிறான்''** என்று ரித்விக்தான் செய்பவராக ஆக வேண்டும் எனும் ஶாஸ்த்ரத்தால், பலனுக்கு காரணமான கர்மம் அங்கங்களுடன் கூட ரித்விக்களால் செய்யப்பட வேண்டும் என்று தெரிகிறது. அதில் உட்படும் செயல்கள் உடலால் செய்யப்படுபவையும், மனதால் செய்யப் படுபவையும் (எல்லாம்) ரித்விக்கை செய்பவராகக் கொண்டவையே (ரித்விக் செய்பவையே); இதில் அவரால் முடியும்-முடியாது என்பது காரணம் ஆகாது.

உத்கீதம் முதலியதின் உபாஸனம் புருஷனின் பொருட்டு ஆகும் என்றாலும், இந்த உபாஸனங்கள் ரித்விக்கினை கர்த்தாவாக உடையவையே. (ரித்விக் செய்ய வேண்டியவையே); ஏனெனில், யாகம் செய்யும் அதிகாரியையே அதிகாரியாகக் (செய்பவராக) கொண்டவை இவை; அங்கத்துடன் கூடிய (முழு) யாகமும் ரித்விக் செய்து தருகிறார்; [3]**''எந்த யாகத்தை வித்யையுடன் செய்கிறானோ, அதுவே அதிக வீர்யமுடையது ஆகும்''** என்று வித்யையானது, ரித்விக் செய்யும் யாக-க்ரியைக்கு உபயோகப் படுவதாக ஆவதால் யாகத்துடன் ஒரே கர்த்தாவை உடையதாக சொல்கிறது;

(எந்த யாகத்தை வித்யையுடன் செய்கிறானோ'' என்ற வேத-வாக்யத்தில், 'யாகத்தை' எனும் சொல்லானது, ரித்விக் செய்து தரும் யாகத்தையே குறிக்கும்! ஏனெனில், யாகத்தை ரித்விக்தானே செய்து தருவதாக ஏற்பாடு ஆகி அவர்தானே செய்கிறார்! ''யாகத்தை வித்யையுடன் செய்கிறான்'' என்று சொல்லும்போது யாகம் செய்து தரும் ரித்விக்கே அதனை வித்யையுடன் செய்து தருவார் என்று ஆகும்).

தஹர-உபாஸனம் முதலியவற்றில், ரித்விக் கர்த்தாவாக ஆவதை வேதம் சொல்லவில்லை என்பதாலும், [4]**''ஶாஸ்த்ரத்தின் பலன் அதனைச் செய்பவரிடம்''** என்ற ந்யாயத்தாலும் பலனைப் பெறுபவர் கர்த்தா ஆக ஆவார் என்பதே ஆகும்.

* * *

ஸ்வாம்யதிகரணம் முற்றிற்று

120.ஸஹகார்யந்தரவித்யதிகரணம்(3-4-12)

முன் குறிப்பு

வர்ணாஸ்ரம தர்மங்களும், புலனடக்கமும் ப்ரஹ்மவித்யைக்கு அங்கங்கள் என சொல்லியாயிற்று. இப்போது ப்ரஹ்மவித்யைக்கு வேறு மூன்று அங்கங்கள் சொல்கிறார்.

உபநிஷத்தில் ப்ரஹ்ம-வித்யைக்கு அங்கமாக மூன்று தேவை என சொல்கிறது - 1) பாண்டித்யம் - ப்ரஹ்மம் பற்றிய தெளிவான ஜ்ஞாநம்; இது பக்தியால் விளைவது. 2) பால்யம் - சிறுவன் போல் தன் பெருமையை வெளிக்காட்டாத அடக்கம் 3) மௌனம் - எப்போதும் ப்ரஹ்மத்தையே நினைக்கும் பாங்கு.

பூர்வபக்ஷம் - இங்கு மௌனத்தை விதிப்பதாக சொல்ல முடியாது; ''பிறகு, முனி (மௌனம் உடையவன்)'' என்று சொல்கிறதே தவிர கட்டளைச் சொல் எதுவும் இல்லை. மௌனம் என்பது பாண்டித்யம்தான்; அதையே திருப்பி சொல்கிறது.

ஸித்தாந்தம் - மௌனம் என்றால், வெறும் ஜ்ஞாநம் என்று அர்த்தம் இல்லை; எப்போதும் சிந்தித்து இருத்தல் என்று அர்த்தம்; உலகில் எல்லாரும் வசிஷ்டர் முதலியவர்களை 'முனி' என்று சொல்கிறோம்; ப்ரஹ்மத்தை எப்போதும் இடைவிடாமல் நினைப்பவர் என்ற அர்த்தத்தில் சொல்கிறோம்; அப்படி முனியாக இருத்தல்தான் மௌனம் எனப்படும். எப்போதும் ப்ரஹ்மத்தை சிந்திக்கும் பாங்கு வந்தால், பின்னர் த்யானம் செய்யலாம்.

ஶ்ரவணம் - ஆசார்யனிடம் வேதாந்த- அர்த்தங்களை கேட்டறிதல்.

மனனம் - அந்த அர்த்தத்தை ஆராய்ந்து திடப்படுத்திக் கொள்ளுதல்.

பாண்டித்யம் - பக்தி மூலம் ப்ரஹ்மம் பற்றிய சிறந்த ஜ்ஞாநம் பெறுதல்.

மௌனம் - ப்ரஹ்மத்தை எப்போதும் சிந்திக்கும் பாங்கு.

இந்த நான்கும் வெவ்வேறாகும்; முதல் இரண்டும் விதிக்க வேண்டிய அவஶ்யமில்லை; தானாகவே, மனிதன் அதில் ஈடுபடுவான்; அடுத்த இரண்டும் வித்யையின் அங்கங்களாக விதிக்கப்படுகின்றன. இங்கு விதிச்சொல் இல்லாவிட்டாலும், முன்னர் தெரியாத ஒரு புது விஷயத்தைச் சொல்வதால், விதிக்கப் படுவதாக ஏற்கலாம்.

முதலில் ஸந்யாஸி தர்மங்களைச் சொல்லிவிட்டு, பின்னர் இந்த மௌனத்தை சொல்கிறது; எனவே, இது ஸந்யாசிகளுக்கு உரியதாகாகும்; ஆனால், இது ஒரு எடுத்துக்காட்டுதான்; எல்லா ஆஶ்ரமத்திலும் ப்ரஹ்ம-வித்யை செய்வதற்கு இது தேவைதான்.

१२०. सहकार्यन्तरविध्यधिकरणम् (३-४-१२)

४६४.सहकार्यन्तरविधिः पक्षेण तृतीयं तद्वतो विध्यादिवत् (३-४-४६)

''तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेत्। बाल्यं च पाण्डित्यं च निर्विद्याथ मुनिः''(बृ.5-5-1)[1] इत्यत्र बाल्यपाण्डित्यवत् मौनमपि विधीयते, उतानूद्यत इति विशये,

मौनपाण्डित्यशब्दयोः ज्ञानार्थत्वात्, **''पाण्डित्यं निर्विद्य''**(बृ.5-5-1)[2] इति विहितमेव ज्ञानम्, **''अथ मुनिः''**(बृ.5-5-1)[3] इत्यनूद्यते, विधिशब्दो न ह्यत्र श्रूयत इति,

एवं प्राप्ते ब्रूमः - **सहकार्यन्तरविधिः** इति। **तद्वतः** - विद्यावतः। **विध्यादिवत्।** विधीयते इति यज्ञादिः सर्वाश्रमधर्मः शमदमादिश्च विधिशब्देनोच्यते। आदिशब्देन श्रवणमनने गृह्येते। **सहकार्यन्तरविधि**रित्यत्रापि विधीयत इति विधिः; सहकार्यन्तरं विधिश्चेति सहकार्यन्तरविधिः।

---

120. ஸஹகார்யந்தரவித்யதிகரணம் (3-4-12)

464.ஸஹகார்யந்தரவிதி: பக்ஷேண த்ருதீயம் தத்வதோ வித்யாதிவத் (3-4-46)

''தஸ்மாத்ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்। பால்யம் ச பாண்டித்யம் ச நிர்வித்யாத முநி:''(ப்ரு.5-5-1)[1] இத்யத்ர பால்யபாண்டித்யவத் மௌநமபி விதீயதே, உத அநூத்யத இதி விஶயே,

மௌநபாண்டித்யஶப்தயோ: ஜ்ஞாநார்தத்வாத், *''பாண்டித்யம் நிர்வித்ய''*(ப்ரு.5-5-1)[2] இதி விஹிதமேவ ஜ்ஞாநம், *''அத முநி:''* (ப்ரு.5-5-1)[3] இத்யநூத்யதே, விதிஶப்தோ ந ஹி அத்ர ஶ்ரூயதே இதி -

ஏவம் ப்ராப்தே ப்ரூம: - *ஸஹகார்யந்தரவிதி:*-இதி। *தத்வத:* - வித்யாவத:। *வித்யாதிவத்।* விதீயதே இதி யஜ்ஞாதி: ஸர்வாஶ்ரமதர்ம: ஶமதமாதிஶ்ச விதிஶப்தேந உச்யதே। ஆதிஶப்தேந ஶ்ரவணமநநே க்ருஹ்யேதே। ஸஹகார்யந்தரவிதிரித்யத்ராபி விதீயத இதி விதி:, ஸஹகார்யந்தரம் விதிஶ்சேதி ஸஹகார்யந்தரவிதி:।

120.ஸஹகார்யந்தரவித்யதிகரணம்(3-4-12)

464.ஸஹகார்யந்தரவிதி: பக்ஷேண த்ருதீயம் தத்வத: வித்யாதிவத்(3-4-46)

அந்த வித்யையை உடையவனுக்கு விதிக்கப்படுவது [யாகம் முதலியது] போல, வேறொரு மூன்றாவது துணைக்காரணம் விதிக்கப்படுவது ஆகும்; ஆதரவினால் [சொல்வதால் மனனம்] ஆகும்.

விஷயவாக்யம்

[1]**''ஆகையால், ப்ராஹ்மணன் பாண்டித்யத்தைப் பெற்று பால்யத்துடன் உபாஸனம் செய்ய வேண்டும்; பால்யத்தையும் பாண்டித்யத்தையும் பெற்று பின்னர் மௌனம் உடையவன்''** என்று.

ஸந்தேஹம்

இங்கு பால்யமும் பாண்டித்யமும் போல மௌனமும் விதிக்கப்படுகிறதா? அல்லது அனுவாதம் செய்யப் படுகிறதா? என்ற ஸந்தேஹத்தில்,

பூர்வபக்ஷம்

மௌனம் பாண்டித்யம் ஆகிய இரு சொற்களும் ஜ்ஞாநம் எனும் பொருள் உடையன; அதனால், [2]**''பாண்டித்யத்தைப் பெற்று''** என்று விதிக்கப்பட்ட ஜ்ஞாநம்தான், [3]**''பின்னர் மௌனம் உடையவன்''** என்று அனுவாதம் செய்யப் படுகிறது; ஏனெனில், இங்கு விதிச் சொல் (கட்டளையைக் குறிக்கும் சொல்) எதுவும் சொல்லப்படவில்லை.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் - **ஸஹகார்யந்தரவிதி:** என்று.

தத்வத: - அந்த வித்யையை உடையவனுக்கு

வித்யாதிவத் (விதிக்கப்படும் யாகம் முதலியது போல) - விதீயதே (அஸௌ) இதி விதி: (என்று வ்யாகரண குறிப்பு); விதிக்கப்படுகிறது என்று யஜ்ஞம் முதலிய எல்லா ஆஶ்ரமதர்மமும், சமம்-தமம் முதலியதும் விதி எனும் சொல்லால் சொல்லப்படுகிறது; 'ஆதி' (முதலியது) எனும் சொல்லால், ஶ்ரவணமும் மனனமும் எடுத்துக்கொள்ளப் படுகிறது.

ஸஹகார்யந்தரவிதி: (வேறொரு துணைக்காரணம் விதிக்கப்படுவது) - 'ஸஹகார்யந்தரவிதி:' என்னுமிடத்திலும் 'விதீயதே இதி விதி:, ஸஹகார்யந்தரம் (ச அஸௌ) விதி: ச ஸஹகார்யந்தரவிதி: (என்று இலக்கணக் குறிப்பு ஆகும்). (வேறொரு துணைக்காரணம் விதிக்கப்படுவதாக ஆகும் என்று அர்த்தம்).

एतदुक्तं भवति -

- यथा **"तमेतं वेदानुवचनेन ब्राह्मणा विविदिषन्ति यज्ञेन दानेन"**(बृ.6-4-22)[1] इत्यादिना, **"शान्तो दान्तः"**(बृ.6-4-23)[2] इत्यादिना च सहकारी यज्ञादिः शमदमादिश्च विधीयते,
- यथा च **"श्रोतव्यो मन्तव्यः"**(बृ.4-4-5)[3] इति श्रवणमनने चार्थप्राप्ते विद्यासहकारित्वेन गृह्येते,
- तथा **"तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य"**(बृ.5-5-1)[4] इत्यादिना पाण्डित्यं बाल्यं मौनमिति त्रितयं विद्यायास्सहकार्यन्तरं विधीयते इति।

मौनं च पाण्डित्यादर्थान्तरमित्याह - **पक्षेणेति**। मुनिशब्दस्य पक्षेण प्रकृष्टमननशीले व्यासादौ प्रयोगदर्शनात् मौनं पाण्डित्यबाल्ययोर्द्वयोस्तृतीयम्।

यद्यपि **"अथ मुनिः"**(बृ.5-5-1)[5] इत्यत्र विधिप्रत्ययो न श्रूयते, तथापि मौनस्याप्राप्तत्वात् विधेयत्वमङ्गीकरणीयम्, अथ मुनिस्स्यात् इति। इदं च मौनं श्रवणप्रतिष्ठार्थान्मननादर्थान्तरभूतमुपासनालम्बनस्य पुनःपुनस्संशीलनं तद्भावनारूपम्।

तदेवं वाक्यार्थः - **ब्राह्मणः** - विद्यावान्। **पाण्डित्यं निर्विद्य** - उपास्यं ब्रह्मतत्त्वं

ஏதது**க்**தம் பவதி -

- யதா *"தமேதம் வேதாநுவசநேந **ப்**ராஹ்மணா விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந"* (ப்ரு.6-4-22)[1] இத்யாதிநா, *"ஶாந்தோ தாந்த:"*(ப்ரு.6-4-23)[2] இத்யாதிநா ச ஸஹகாரீ யஜ்ஞாதி: ஶமதமாதிஶ்ச விதீயதே;
- யதா ச *"ஶ்ரோதவ்யோ மந்தவ்ய:"*(ப்ரு.4-4-5)[3] இதி ஶ்ரவணமநநே ச அர்தப்ராப்தே வித்யாஸஹகாரித்வேந க்ருஹ்யேதே -
- ததா *"தஸ்மா**த்ப்**ராஹ்மண: பாண்**டி**த்யம் நிர்வித்ய"*(ப்ரு.5-5-1)[4] இத்யாதிநா பாண்**டி**த்யம் **பா**ல்யம் மௌநமிதி த்ரிதயம் வித்யாயா: ஸஹகார்யந்தரம் விதீயதே - இதி।

மௌநம் ச பாண்**டி**த்யா**த**ர்தாந்தரமித்யாஹ - *பக்ஷேணேதி।* முநிஶ**ப்த**ஸ்ய பக்ஷேண ப்ரக்ருஷ்டமநநஶீலே வ்யாஸா**தௌ** ப்ரயோக**த**ர்ஶநாத் மௌநம் பாண்**டி**த்ய-**பா**ல்யயோர்த்வயோ: த்ருதீயம்।

யத்யபி *"அத முநி:"*(ப்ரு.5-5-1)[5] இத்யத்ர விதிப்ரத்யயோ ந ஶ்ரூயதே, ததாபி மௌநஸ்யாப்ராப்தத்வாத் விதேயத்வமங்கீகரணீயம், அத முநி: ஸ்யாத் இதி। இதம் ச மௌநம் ஶ்ரவணப்ரதிஷ்டார்தாத் மநநாதர்தாந்தர**பூ**தம் உபாஸநாலம்**ப**நஸ்ய புந:புந: ஸம்ஶீலநம் தத்**பா**வநாரூபம்।

ததேவம் வாக்யார்த: - **ப்**ராஹ்மண: - வித்யாவாந்। பாண்**டி**த்யம் நிர்-

இது சொன்னதாக ஆகிறது -

- [1]**''அவனை வேதானுவசனத்தின் மூலமும் யஜ்ஞத்தாலும், தானத்தாலும், ப்ராஹ்மணர்கள் உபாஸனம் செய்ய விரும்புகின்றனர்''** முதலியதாலும், [2]**''சமம் உடையவன், தமம் உடையவன்''** முதலியதாலும் (வித்யைக்கு) துணைக்காரணமான யஜ்ஞம் முதலியதும் சமம்-தமம் (புலனடக்கம்) முதலியதும் விதிக்கப்படுகிறது - என்பது எப்படியோ,
- [3]**''ஶ்ரவணம் செய்யப்பட வேண்டும், மனனம் செய்யப்பட வேண்டும்''** என்று (விதிக்கப் படாமல்) அர்த்தத்தால் ஏற்படும் ஶ்ரவணமும், மனனமும் வித்யைக்கு துணைக் காரணமாக எடுத்துக் கொள்ளப் படுகின்றன என்பது எப்படியோ, (விளக்கம் 1-1-1 - ஜிஜ்ஞாஸாதிகரணம் பக்கம் 33)
- அப்படியே, [4]**''ஆகையால், ப்ராஹ்மணன் பாண்டித்யத்தைப் பெற்று''** முதலியதால் பாண்டித்யம், பால்யம், மௌனம் எனும் மூன்றும் வித்யைக்கு உதவும் வேறு துணைக் காரணமாக விதிக்கப் படுகிறது.

மௌனம் என்பது பாண்டித்யத்தை விட வேறானது என்று சொல்கிறார் - 'பக்ஷேண' என்று.

பக்ஷேண (ஆதரவினால்) - 'முனி' என்னும் சொல்லை சிறந்த மனனம் செய்யும் பழக்கமுடைய வ்யாஸர் முதலியவரிடம் ஆதரவுடன் ப்ரயோகம் செய்வதைக் காண்பதால்,

த்ருதீயம் (மூன்றாவது) - மௌனம் என்பது பாண்டித்யம், பால்யம் ஆகிய இரண்டுக்கும் (அடுத்த) மூன்றாவது ஆகும்.

''பிறகு மௌனம் செய்பவன்'' என்னுமிடத்தில் கட்டளை-உருபு சொல்லப்படவில்லை என்றாலும், மனனம் என்பது முன்னர் (வேறு ப்ரமாணத்தால்) அறியக் கிடைக்காதபடியால், விதிக்கப்படுவதாக ஏற்கப்பட வேண்டும் - ''பிறகு மௌனம் (மனனம்) செய்பவனாக ஆக வேண்டும்'' என்று; இந்த மௌனம் என்பது ஶ்ரவணத்தை நிலைபெறச் செய்வதற்காக ஆகும் மனனத்தை விட வேறானது; உபாஸன-விஷயத்தை மீண்டும் மீண்டும் பழக்கிக் கொள்ளுதல்; அதனைத் தொடர்ந்து எண்ணுதல் என்பதாகும்.

ஆகையால் இப்படி (வேத)வாக்யத்தின் பொருள் -

[5]**''ஆகையால், ப்ராஹ்மணன் -** உபாஸனம் செய்பவன்,

பாண்டித்யத்தைப் பெற்று - உபாஸன-விஷயமான ப்ரஹ்ம-தத்த்வம் பரி-

परिशुद्धं परिपूर्णं च विदित्वा, श्रवणमननाभ्यामप्राप्तं (भ्यां प्राप्तं) वेदनं प्रतिलभ्येत्यर्थः। तच्च भगवद्भक्तिसहकृतसत्त्वविवृद्धिकृतम्; यथोक्तम्,

- **''नाहं वेदैः''** (गी.11-53)[1] इत्यारभ्य, **''भक्त्या त्वनन्यया शक्यः...ज्ञातुम्''** (गी.11-54)[2] इति।
- श्रुतिश्च, **''यस्य देवे परा भक्तिः''**(श्वे.6-23)[3],
- **''नायमात्मा प्रवचनेन लभ्यः''**(क.2-23)[4] इत्यादिका।

बाल्येन तिष्ठासेत्। बाल्यस्वरूपं चानन्तरमेव वक्ष्यते। **बाल्यं पाण्डित्यं च निर्विद्याथ मुनिस्स्यात्**(बृ.5-5-1)[5] - बाल्यपाण्डित्ये यथावदुपादाय परिशुद्धे परिपूर्णे ब्रह्मणि मननशीलो भवेत् निदिध्यासनरूपविद्यावाप्तये। एवमेव त्रितयोपादानेन लब्धविद्यो भवतीत्याह, **''अमौनं च मौनं च निर्विद्याथ ब्राह्मणः''**(बृ.5-5-1)[6] इति। अमौनं मौनेतरसहकारिकलापः; तं च मौनं च यथावदुपाददानो विद्याकाष्ठां तदेकनिष्पाद्यां लभेतेत्यर्थः।

''स ब्राह्मणः केन स्यात्?''(बृ.5-5-1)[7] इति उक्तादुपायात् किमन्योऽप्युपायोऽ-

---

வித்ய - உபாஸ்யம் ப்ரஹ்மதத்த்வம் பரிஶுத்தம் பரிபூர்ணம் ச விதித்வா, ஶ்ரவண-மநநாப்யாமப்ராப்தம் (ப்யாம் ப்ராப்தம்) வேதநம் ப்ரதிலப்யேத்யர்த:। தச்ச பகவத்பக்திஸஹக்ருதஸத்த்வவிவ்ருத்திக்ருதம், யதோக்தம்,

- *''நாஹம் வேதை:''*(கீ.11-53)[1] இத்யாரப்ய, *''பக்த்யா த்வநந்யயா ஶக்ய:...ஜ்ஞாதும்''*(கீ.11-54)[2] இதி।
- ஶ்ருதிஶ்ச, *''யஸ்ய தேவே பரா பக்தி:''*(ஶ்வே.6-23)[3],
- *''நாயமாத்மா ப்ரவசநேந லப்ய:''*(க.2-23)[4] இத்யாதிகா।

பால்யேந திஷ்டாஸேத்। பால்யஸ்வரூபம் ச அநந்தரமேவ வக்ஷ்யதே। ***''பால்யம் பாண்டித்யம் ச நிர்வித்யாத முநி:ஸ்யாத்''***(ப்ரு.5-5-1)[5] பால்ய-பாண்டித்யே யதாவதுபாதாய பரிஶுத்தே பரிபூர்ணே ப்ரஹ்மணி மநநஶீலோ பவேத்; நிதித்யாஸநரூபவித்யாவாப்தயே। ஏவமேவ த்ரிதயோபாதாநேந லப்தவித்யோ பவதீத்யாஹ, *''அமௌநம் ச மௌநம் ச நிர்வித்யாத ப்ராஹ்மண:''* (ப்ரு.5-5-1)[6] இதி। அமௌநம் மௌநேதரஸஹகாரிகலாப:, தம் ச மௌநம் ச யதாவதுபாததாந: வித்யாகாஷ்டாம் ததேகநிஷ்பாத்யாம் லபேதேத்யர்த:।

''ஸ ப்ராஹ்மண: கேந ஸ்யாத்''(ப்ரு.5-5-1)[7] இதி உக்தாதுபாயாத் கிமந்-

ஶுத்தமானது, பரிபூர்ணமானது என்பதாக புரிந்துகொண்டு; ஶ்ரவணம், மனனம் என்றிவற்றால் பெற்ற ஜ்ஞாநத்தை விட வேறான (ஶ்ரவணம், மனனம் என்றிவற்றின் பயனாக பெறப் படுவதான) ஜ்ஞாநத்தை அடைந்து என்று அர்த்தம். அந்த ஜ்ஞாநம், பகவத்-பக்தியால் விளைந்த ஸத்த்வ-குணப்பெருக்கால் விளைவதாகும். எப்படியாக -

- [1]**‘‘நான் வேதங்களால் அறியப்பட முடியாதவன்’’** என்று ஆரம்பித்து, [2]**‘‘பயனை எதிர்பார்க்காத பக்தியால் மட்டுமே அறியப்பட முடிபவன்’’** என்று (பெருமானால்) சொல்லப்பட்டதோ,
- வேதமும், [3]**‘‘யாருக்கு தேவனிடம் உயர்ந்த பக்தி உள்ளதோ’’,** (அவனுக்கே அர்த்தங்கள் புரியும்)
- [4]**‘‘இந்த பரமாத்மா மனனத்தால் அடையப்பட முடியாதவன்’’** *(விளக்கம் 1-1-1 - ஜிஜ்ஞாஸாதிகரணம் பக்கம் 37)*

என்பது முதலியது. .

பால்யத்துடன் உபாஸனம் செய்ய வேண்டும் - பால்யம் என்பதன் ஸ்வரூபம் அடுத்ததாகவே (அடுத்த அதிகரணத்தில்) சொல்லப்படப் போகிறது.

[5]**‘‘பால்யத்தையும் பாண்டித்யத்தையும் பெற்று பின்னர் முனி ஆகக் கடவன்’’** - பால்யத்தையும் பாண்டித்யத்தையும் உள்ளபடி செய்துகொண்டு (எடுத்துக்கொண்டு), த்யானம் எனும் வித்யை பெறுவதற்காக, பரிஶுத்தமான பரிபூர்ணமான ப்ரஹ்மத்தை மனனம் செய்பவனாக ஆக வேண்டும்.

இந்த மூன்றையும் எடுத்துக் கொள்வதால், வித்யை பெற்றவனாக ஆவான் என்று சொல்கிறது - [6]**‘‘அமௌனத்தையும், மௌனத்தையும் பெற்று பின்னர் ப்ராஹ்மணன்:’’** என்று.

அமௌனத்தையும் - அமௌனம் என்பது மௌனத்தை விட வேறான துணைக் காரணக் குழு; அதையும் (பாண்டித்யம் முதலியதையும்)

மௌனத்தையும் பெற்று - மௌனத்தையும் உள்ளபடி எடுத்துக்கொள்பவன் (செய்துகொள்பவன்)

பின் ப்ராஹ்மணன் - அதனால் மட்டும் விளையக்கூடிய ப்ரஹ்ம-வித்யையின் உயர்ந்த நிலையை அடைவான் என்று அர்த்தம்.

[7]**‘‘அவன் எந்த உபாயத்தால் ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவன் ஆவான்?’’** - என்று இந்த உபாயத்தை விட வேறு உபாயம் உண்டா என்று கேட்கப்பட,

स्तीति पृष्टे, ''**येन स्याद् तेनेदृश एव**''(बृ.5-5-1)[1]" इति, 'येन मौनपर्यन्तेन ब्राह्मणस्स्यादित्युक्तम्, तेनैवेदृशस्स्यात्; न केनाप्यन्येनोपायेन' इति परिहृतम्।

अतः सर्वेष्वाश्रमेषु स्थितस्य विदुषो यज्ञादिस्वाश्रमधर्मवत् पाण्डित्यादिकं मौनतृतीयं विद्यायास्सहकार्यन्तरं विधीयते॥४६॥

* * *

अथ स्यात् - यदि सर्वेष्वाश्रमेषु स्थितानां विदुषां तत्तदाश्रमधर्मसहकारिणी मौनतृतीयसचिवा विद्या ब्रह्मप्राप्तिसाधनमुच्यते, कथं तर्हि छान्दोग्ये, ''**अभिसमावृत्य कुटुम्बे शुचौ देशे**''(छा.8-15-1)[2] इत्यारभ्य, ''**स खल्वेवं वर्तयन् यावदायुषं ब्रह्मलोकमभिसम्पद्यते; न च पुनरावर्तते**''(छा.8-15-1)[3] इति यावदायुषं गार्हस्थ्यधर्मेण स्थितिदर्शनमुपपद्यते, अत आह -

४६५.कृत्स्नभावात्तु गृहिणोपसंहारः (३-४-४७)

तुशब्दश्चोद्यं व्यावर्तयति। **कृत्स्नभावात्** - कृत्स्नेषु भावात्, कृत्स्नेष्वाश्रमेषु विद्यायाः सद्भावात् गृहिणोऽप्यस्तीति तेनोपसंहारः। तस्मात् सर्वाश्रमधर्मप्रदर्शनार्थो गृहिणोपसंहार इत्यभिप्रायः॥ ४७ ॥

யோऽப்யுபாயோऽஸ்தீதி ப்ருஷ்டே, *"யேந ஸ்யாத் தேநேத்ருஶ ஏவ"* (ப்ரு. 5-5-1)[1] இதி, யேந மௌநபர்யந்தேந ப்ராஹ்மண: ஸ்யாதித்யுக்தம், தேநைவேத்ருஶ: ஸ்யாத், ந கேநாப்யந்யேநோபாயேந இதி பரிஹ்ருதம்।

அத: ஸர்வேஷ்வாஶ்ரமேஷு ஸ்திதஸ்ய விதுஷோ யஜ்ஞாதிஸ்வாஶ்ரமதர்மவத் பாண்டித்யாதிகம் மௌநத்ருதீயம் வித்யாயா: ஸஹகார்யந்தரம் விதீயதே।। 46 ।।

* * *

அத ஸ்யாத் - யதி ஸர்வேஷ்வாஶ்ரமேஷு ஸ்திதாநாம் விதுஷாம் தத்ததாஶ்ரமதர்மஸஹகாரிணீ மௌநத்ருதீயஸசிவா வித்யா ப்ரஹ்மப்ராப்திஸாதநமுச்யதே, கதம் தர்ஹி சாந்தோக்யே, *"அபிஸமாவ்ருத்ய குடும்பே ஶுசௌ தேஶே"*(சா.8-15-1)[2] இத்யாரப்ய, *"ஸ கல்வேவம் வர்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே, ந ச புநராவர்ததே"*(சா.8-15-1)[3] இதி யாவதாயுஷம் கார்ஹஸ்த்யதர்மேண ஸ்திதிதர்ஶநமுபபத்யதே, அத ஆஹ -

465.க்ருத்ஸ்நபாவாத்து க்ருஹிணோபஸம்ஹார:(3-4-47)

துஶப்த: சோத்யம் வ்யாவர்தயதி। *க்ருத்ஸ்நபாவாத்* - க்ருஸ்நேஷு பாவாத், க்ருத்ஸ்நேஷ்வாஶ்ரமேஷு வித்யாயா: ஸத்பாவாத் க்ருஹிணோऽப்யஸ்தீதி தேநோபஸம்ஹார:। தஸ்மாத் ஸர்வாஶ்ரமதர்மப்ரதர்ஶநார்த: க்ருஹிணா உபஸம்ஹார இத்யபிப்ராய:।। 47 ।।

* * *

[1]**''எதனால் ஆவானோ, அது இப்படிப்பட்டதுதான்''** - எந்த மௌனம் வரையிலான உபாயத்தால் ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவன் ஆவான் என்று சொல்லப்பட்டதோ, அதனாலேயே இப்படிப்பட்டவன் ஆவான்; வேறு எந்த உபாயத்தாலும் இல்லை என்று பரிஹாரம் செய்யப்பட்டது.

ஆகையால், எல்லா ஆஶ்ரமங்களிலும் இருக்கும் ப்ரஹ்ம-ஜ்ஞாநிக்கு (உபாஸனம் செய்பவனுக்கு) யஜ்ஞம் முதலிய தனது ஆஶ்ரம-தர்மம் போல மௌனத்தை மூன்றாவதாகக் கொண்ட பாண்டித்யம் முதலியதும் ப்ரஹ்ம-வித்யைக்கு வேறொரு துணைக் காரணமாக விதிக்கப் படுகிறது.

* * *

கேள்வி - எல்லா ஆஶ்ரமங்களிலும் இருக்கும் ப்ரஹ்ம-ஜ்ஞாநிகளுக்கு அவரவரது ஆஶ்ரம-தர்மங்களைத் துணையாகக் கொண்டதும் மௌனத்தை மூன்றாவதாகக் கொண்டவற்றை (பாண்டித்யம் முதலிய மூன்றை) அங்கமாகக் கொண்டதும் ஆன ப்ரஹ்ம-வித்யை ஆனது, ப்ரஹ்மத்தை அடைதலுக்கு உபாயமாகும் என்று சொல்லப் படுகிறது; அப்படியானால், சாந்தோக்யத்தில், [2]**''ஸமாவர்தனம் செய்து (குரு-பணிவிடை செய்தபின்) குடும்பத்தில் (க்ருஹஸ்த-ஆஶ்ரமத்தில்) ஶுத்தமான இடத்தில்''** என்று ஆரம்பித்து, [3]**''அவன் ஆயுள்-காலம் வரை இப்படியே இருந்துகொண்டு, ப்ரஹ்மலோகத்தை அடைகிறான்; மீண்டும் திரும்பி வருவதில்லை''** என்று ஆயுள்காலம் வரை க்ருஹஸ்த-தர்மத்துடன் இருப்பதைக் காண்பது எப்படி சரியாகும்?

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

465.க்ருத்ஸ்நபாவாத் து க்ருஹிணா உபஸம்ஹார:(3-4-47)

எல்லா ஆஶ்ரமங்களிலும் [வித்யை] இருப்பதால், க்ருஹஸ்தனை இட்டு முடித்தல் ஆகும்.

'து' எனும் சொல் கேள்வியை களைகிறது.

க்ருத்ஸ்நபாவாத் (எல்லாவற்றிலும் ஆவதால்) - எல்லா ஆஶ்ரமங்களிலும் வித்யை இருப்பதால்

க்ருஹிணா உபஸம்ஹார: - க்ருஹஸ்தனுக்கும் உண்டு என்பதால், அவனையிட்டு முடித்தல் ஆயிற்று; ஆகையால், க்ருஹஸ்தனை இட்டு முடித்தலானது, எல்லா ஆஶ்ரமங்களுடைய தர்மங்களையும் எடுத்துக் காட்டுவதற்காக (சொன்னது) ஆகும் என்று கருத்து.

* * *

तथैतस्मिन्नपि वाक्ये, **''ब्राह्मणः पुत्रैषणायाश्च वित्तैषणायाश्च लोकैषणायाश्च व्युत्थायाथ भिक्षाचर्यं चरन्ति''**(बृ.5-5-1)[1] इति पारिव्राज्यैकान्तधर्मं प्रतिपाद्य, **''तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य''**(बृ.5-5-1)[2] इत्यादिना पारिव्राज्यधर्मस्थितिहेतुकमौनतृतीयसहकारिविधानं प्रदर्शनार्थमित्याह -

४६६.मौनवदितरेषामप्युपदेशात् (३-४-४८)

सर्वै(र्वे)षणाविनिर्मुक्तस्य भिक्षाचरणपूर्वकमौनोपदेशः सर्वेषामाश्रमधर्माणां प्रदर्शनार्थः। कुतः? एवंविधमौनोपदेशवत् इतरेषामाश्रमिणामपि, **''त्रयो धर्मस्कन्धाः''** (छा.2-23-1)[3] इत्यारभ्य **''ब्रह्मसंस्थोऽमृतत्वमेति''**(छा.2-23-1)[4] इति ब्रह्मप्राप्त्युपदेशात्। उपपादितश्च पूर्वमेव ब्रह्मसंस्थशब्दः सर्वाश्रमिसाधारण इति।

अतः सुष्टूक्तम् - यज्ञादिसर्वाश्रमधर्मवत् मौनतृतीयः पाण्डित्यादिर्विद्यासहकारित्वेन विधीयते इति॥ ४८ ॥

इति सहकार्यन्तरविध्यधिकरणम्॥ १२ ॥

ததா ஏதஸ்மிந்நபி வாக்யே, *''ப்ராஹ்மண: புத்ரைஷணாயாஸ்ச வித்தைஷணாயாஸ்ச லோகைஷணாயாஸ்ச வ்யுத்தாயாத பிக்ஷாசர்யம் சரந்தி''*(ப்ரு. 5-5-1)[1] இதி பாரிவ்ராஜ்யைகாந்ததர்மம் ப்ரதிபாத்ய, *''தஸ்மாத்ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய''*(ப்ரு.5-5-1)[2] இத்யாதிநா பாரிவ்ராஜ்யதர்மஸ்திதிஹேதுகமௌநத்ருதீயஸஹகாரிவிதாநம் ப்ரதர்ஸநார்தமித்யாஹ -

466.மௌநவதிதரேஷாமப்யுபதேஸாத்(3-4-48)

ஸர்வை(வே)ஷணாவிநிர்முக்தஸ்ய பிக்ஷாசரணபூர்வகமௌநோபதேஸ: ஸர்வேஷாமாஸ்ரமதர்மாணாம் ப்ரதர்ஸநார்த:। குத:? ஏவம்விதமௌநோபதேஸவத் இதரேஷாமாஸ்ரமிணாமபி, *''த்ரயோ தர்மஸ்கந்தா:''*(சா.2-23-1)[3] இத்யாரப்ய *''ப்ரஹ்மஸம்ஸ்தோऽம்ருதத்வமேதி''*(சா.2-23-1)[4] இதி ப்ரஹ்மப்ராப்த்யுபதேஸாத்। உபபாதிதஸ்ச பூர்வமேவ ப்ரஹ்மஸம்ஸ்தஸப்த:, ஸர்வாஸ்ரமிஸாதாரண: இதி।

அத: ஸுஷ்டூக்தம் - யஜ்ஞாதிஸர்வாஸ்ரமதர்மவத் மௌநத்ருதீய: பாண்டித்யாதி: வித்யாஸஹகாரித்வேந விதீயதே இதி।। 49 ।।

இதி ஸஹகார்யந்தரவித்யதிகரணம்।। 12 ।।

அப்படியே இந்த வாக்யத்திலும், [1]**‘‘ப்ராஹ்மணன் புத்ர-ஆசையிலிருந்தும், பணத்தாசையிலிருந்தும், உலக-ஆசையிலிருந்தும் வெளியேறி பிக்ஷை-எடுத்தலைச் செய்கிறான்’’** என்று ஸந்யாஸிகளுக்கு மட்டுமான தர்மத்தை சொல்கிறது; பின்னர், [2]**‘‘ஆகையால் ப்ராஹ்மணன் பாண்டித்யத்தைப் பெற்று’’** என்பது முதலியதால், ஸந்யாஸ-தர்மத்தில் இருப்பதைக் காரணமாகக் கொண்ட மௌனத்தை மூன்றாவதாகக் கொண்ட துணைக் காரணங்களை விதிக்கிறது; இது (பிற ஆஶ்ரமங்களுக்கும்) எடுத்துக் காட்டுக்காக மட்டுமே என்று சொல்கிறார் -

466.மௌநவத் இதரேஷாம் அபி உபதேஶாத்(3-4-48)

மௌனம் போல பிற ஆஶ்ரமிகளையும் உபதேசிப்பதால்

எல்லா ஆசையும் விட்டவனுக்கு பிக்ஷா-எடுத்தலை முன்னிட்டு மௌனத்தை உபதேசம் செய்தது, எல்லா ஆஶ்ரமங்களின் தர்மங்களுக்கும் எடுத்துக் காட்டுவதற்காக ஆகும். ஏன்? இப்படியான மௌன-உபதேசம் போல பிற ஆஶ்ரமத்தை உடையவர்களுக்கும் ப்ரஹ்மத்தை அடைதலை உபதேசம் செய்கிறது - [3]**‘‘மூன்று தர்மஸ்கந்தங்கள்’’** என்று ஆரம்பித்து, [4]**‘‘ப்ரஹ்மத்தில் நிலை பெற்றவனாய் மோக்ஷம் அடைவான்’’** என்று; ‘ப்ரஹ்மத்தில் நிலை பெற்றவன்’ என்ற சொல்லானது, எல்லா ஆஶ்ரமிகளுக்கும் பொதுவானது என்று முன்பே (ஸூத்ரம் 3-4-19) விளக்கப் பட்டது;

ப்ரயோஜனம்

ஆகையால், யஜ்ஞம் முதலிய எல்லா ஆஶ்ரமங்களின் தர்மங்கள் போல மௌனத்தை மூன்றாவதாகக் கொண்ட பாண்டித்யம் முதலியது வித்யைக்கு துணைக்காரணமாக விதிக்கப் படுகிறது என்பது நன்கு சொல்லப் பட்டது.

* * *

ஸஹகார்யந்தரவித்யதிகரணம் முற்றிற்று.

121.அநாவிஷ்காராதிகரணம்(3-4-13)

முன் குறிப்பு

ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவன் பால்யத்துடன் இருக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது; பால்யம் என்றால் ஸம்ஸ்க்ருத-இலக்கணப்படி இரண்டு அர்த்தங்கள்; 1. சிறுவனின் வயது-நிலை; 2. சிறுவனின் செயல்; இதில் சிறுவனின் வயது-நிலை என்பது உபாஸனம் செய்யும் பெரியோர்களுக்கு வர முடியாது; எனவே, சிறுவனின் செயல் என்று அர்த்தம்.

பூர்வபக்ஷம் - சிறுவனின் செயல் என்றால், விருப்பப்படி நடத்தல், இஷ்டப்படி உண்ணுதல், விளையாடுதல் முதலியன ஆகும்; உபாஸனம் செய்பவன் சிறுவன் போல, இதையெல்லாம் செய்தால் தவறில்லை; வித்யையின் மஹிமையால் எந்த பாபம் செய்தாலும், எல்லாம் தொலைந்து விடும்; பாபம் செய்யக்கூடாது எனும் ஶாஸ்த்ரங்கள் மற்றவருக்குத் தான்; வித்யையை செய்பவனுக்கு அல்ல.

ஸித்தாந்தம் - சிறுவனின் செயல் என்று இதனைச் சொல்லவில்லை; தற்பெருமை இல்லாமையைச் சொல்கிறது.

சிறுவர்கள், தம் பெருமையை வெளிக் காட்ட மாட்டார்கள்; நல்ல பண-வசதி, நல்ல குடிப்பிறப்பு முதலிய பெருமைகள் சிறுவர்களுக்குத் தெரியாது; தெரிந்தாலும் வெளியே காட்டிக் கொள்ளாமல் எல்லா சிறுவர்களுடனும் சமமாக பழகுவர்; அதுபோல, உபாஸனம் செய்பவர்களும் தம் பெருமையை வெளியில் காட்டிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்; தற்பெருமை முதலியதைத் தவிர்க்க வேண்டும் என்று அர்த்தம்.

சாதாரண மனிதனுக்கு இருக்கும் ஶாஸ்த்ர கட்டுப்பாடுகள் எல்லாம் ப்ரஹ்மவித்யை அனுஷ்டானம் செய்பவனுக்கும் உண்டு; மேலும், வித்யை அனுஷ்டானம் செய்பவனுக்கும் கூட அதிக நியமம் விசேஷமாக சொல்கிறது - ‘‘பாபம் செய்வதை நிறுத்தாதவன் ஜ்ஞாநத்தால் பரமாத்மாவை அடைய முடியாது’’ முதலியதாக; ஆகையால் அவன் விருப்பப்படி நடப்பது சரியல்ல.

ஆகையால், பால்யம் என்பது தற்பெருமை இல்லாமை ஆகும்.

ஆவிஷ்காரம் என்றால் வெளிப்பாடு; அனாவிஷ்குர்வன் - வெளிப் படுத்தாதவனாய் என்று அர்த்தம்.

१२१. अनाविष्काराधिकरणम् (३-४-१३)

४६७.अनाविष्कुर्वन्नन्वयात् (३-४-४९)

"तस्माद्ब्राह्मणः पाण्डित्यं निर्विद्य बाल्येन तिष्ठासेत्" (बृ.5-5-1)[1] इत्यत्र विदुषा बाल्यमुपादेयतया श्रुतम्। बालस्य भावः, कर्म वा बाल्यम्। बालभावस्य वयोवस्थाविशेषस्यानुपादेयत्वात् कर्मैवेह गृह्यते।

तत्र किं बालस्य कर्म कामचारादिकं सर्वं विदुषोपादेयम्, उत डम्भादिरहितत्वमेवेति विशये,

विशेषाभावात् सर्वमुपादेयम्, नियमशास्त्राणि च विशेषविधिनाऽनेन बाध्यन्त इति,

एवं प्राप्तेऽभिधीयते - **अनाविष्कुर्वन्निति**। बालस्य यत् स्वभावानाविष्काररूपं कर्म, तदुपाददानो वर्तेत विद्वान्। कुतः? **अन्वयात्** - तस्यैवान्वयात्। **"बाल्येन तिष्ठासेत्"** (बृ.5-5-1)[2] इत्यस्मिन् विधौ तस्यैव ह्यन्वयसम्भवः, इतरेषां विद्याविरोधित्वश्रवणात्,

121. அநாவிஷ்காராதிகரணம் (3-4-13)

467.அநாவிஷ்குர்வந்நந்வயாத் (3-4-49)

"தஸ்மாத்ப்ராஹ்மண: பாண்டித்யம் நிர்வித்ய பால்யேந திஷ்டாஸேத்" (ப்ரு.5-5-1)[1] இத்யத்ர விதுஷா பால்யமுபாதேயதயா ஶ்ருதம்। பாலஸ்ய பாவ:, கர்ம வா பால்யம்। பாலபாவஸ்ய வயோவஸ்தாவிஶேஷஸ்ய அநுபாதேயத்வாத் கர்மைவேஹ க்ருஹ்யதே।

தத்ர கிம் பாலஸ்ய கர்ம காமசாராதிகம் ஸர்வம் விதுஷோபாதேயம், உத டம்பாதிரஹிதத்வமேவேதி விஶயே,

விஶேஷாபாவாத் ஸர்வமுபாதேயம், நியமஶாஸ்த்ராணி ச விஶேஷவிதிநாऽநேந பாத்யந்த இதி,

ஏவம் ப்ராப்தேऽபிதீயதே - *அநாவிஷ்குர்வந்நிதி*। பாலஸ்ய யத் ஸ்வபாவாநாவிஷ்காரரூபம் கர்ம, ததுபாததாநோ வர்தேத வித்வாந்। குத:? *அந்வயாத்* - தஸ்யைவ அந்வயாத்। *"பால்யேந திஷ்டாஸேத்"* (ப்ரு.5-5-1)[2] இத்யஸ்மிந் விதௌ தஸ்யைவ ஹி அந்வயஸம்பவ:, இதரேஷாம் வித்யாவிரோதித்வஶ்ரவணாத்,

121.அநாவிஷ்காராதிகரணம்(3-4-13)

467.அநாவிஷ்குர்வந் அந்வயாத்(3-4-49)

[பெருமையை] வெளிக்காட்டாதவனாய் இருக்க வேண்டும்; [அதுவே உபாஸனத்துக்கு] சேர்வதால்.

விஷயவாக்யம்

[1]**''ஆகையால், ப்ராஹ்மணன் பாண்டித்யத்தைப் பெற்று பால்யத்துடன் உபாஸனம் செய்ய வேண்டும்''** என்னுமிடத்தில் உபாஸனம் செய்பவனால் பால்யம் செய்ய வேண்டியதாக சொல்லப் பட்டது; பால்யம் என்றால் சிறுவனின் தன்மை அல்லது சிறுவனின் செயல் (என்று இரு அர்த்தம் உண்டு); சிறுவனின் தன்மை என்பது தனிப்பட்ட வயது-நிலை ஆகும்; அதனை செய்ய முடியாது (உபாஸனம் செய்யும் வயதில் அந்நிலை வராது); ஆகையால் சிறுவனின் செயல்தான் இங்கு எடுத்துக் கொள்ளப் படும்.

ஸந்தேஹம்

அதில் பாலனின் செயலான விருப்பப்படி நடத்தல் முதலிய எல்லாம் உபாஸனம் செய்பவனால் செய்யத் தக்கதா? அல்லது டம்பம் (தற்பெருமை பேசுதல்) முதலியது இல்லாமை என்பது மட்டுமா? என்று ஸந்தேஹம் வரும்போது,

பூர்வபக்ஷம்

விஶேஷக் குறிப்பு இல்லாததால், எல்லாம் செய்யத் தக்கது; நியமத்தை சொல்லும் ஶாஸ்த்ரங்கள் இந்த விஶேஷ-விதியினால் மறுக்கப் படுகின்றன.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப் படுகிறது - **'அநாவிஷ்குர்வந்'** என்று.

அநாவிஷ்குர்வந் (வெளிப்படுத்தாதவனாய்) - ஸ்வபாவத்தை வெளிப்படுத்தாமை என்பதாக பாலனுக்கு எந்த செயல் உண்டோ, அதனை செய்துகொண்டு உபாஸனம் செய்பவன் இருக்க வேண்டும்;

அந்வயாத் - அதுவே சேருமானபடியால்; [2]**''பால்யத்துடன் உபாஸனம் செய்ய வேண்டும்''** என்னும் இந்த விதியில் அதற்குதானே பொருந்திச் சேர்தல் வரும்! ஏனெனில், மற்றவை (விருப்பப்படி நடத்தல் முதலியவை) வித்யைக்கு விரோதியானவையாக வேதத்தில் சொல்லப் படுவன. -

- **‘‘नाविरतो दुश्चरितान्नाशान्तो नासमाहितः। नाशान्तमानसो वापि प्रज्ञानेनैनमाप्नुयात्॥’’**(क.2-24)[1],
- **‘‘आहारशुद्धौ सत्त्वशुद्धिः’’**(छा.7-26-2)[2] इत्यादिषु॥

इति अनाविष्काराधिकरणम् ॥ १३ ॥

- *‘‘நாவிரதோ **துஶ்சரிதாந்நாஶாந்தோ** நாஸமாஹித:। நாஶாந்தமாநஸோ வாபி ப்ரஜ்ஞாநேநைநமாப்நுயாத்’’*(க.2-24)[1],
- *‘‘**ஆஹாரஶுத்தௌ** ஸத்த்வ**ஶுத்தி:**’’*(சா.7-26-2)[2] **இத்யாதிஷு**।।

இதி அநாவிஷ்காராதிகரணம் ।। 13 ।।

- **[1]"பாபத்திலிருந்து ஓயாதவன் ஜ்ஞாநத்தால் இந்த பரமாத்மாவை அடைய மாட்டான்; புலனடக்கம் இல்லாதவனும் மாட்டான்; மனச்சாந்தி இல்லாதவனும் அடைய மாட்டான்",**

- **[2]"உணவு தூய்மையானால் மனம் தூய்மையாகும்"** என்று.

* * *

அநாவிஷ்காராதிகரணம் முற்றிற்று

122.ஐஹிகாதிகரணம்(3-4-14)

முன் குறிப்பு

ப்ரஹ்மவித்யைக்கு தேவையான அங்கங்களை இதுவரை சொன்னார்; இப்போது அங்கியான ப்ரஹ்மவித்யை எப்போது உண்டாகும் எனும் விசாரம் இனி இரு அதிகரணங்களில் உள்ளது.

வித்யை இருவிதம் ஆகும் - ஐஹிகம், முக்திபலம் என்பதாக.

i. ஐஹிகம் - இந்த ப்ரக்ருதி மண்டலத்தில், ஸம்ஸார-பலனைக் கொடுக்கும் வித்யை. (இது பற்றிய விசாரம் இந்த அதிகரணத்தில்)

ii. முக்திபலம் - மோக்ஷபலனைக் கொடுக்கும் வித்யை. (இது பற்றிய விசாரம் அடுத்த அதிகரணத்தில்)

அப்யுதயம் என்றால், சிறப்பு, செழிப்பு என்று அர்த்தம்; மோக்ஷம் தவிர பிற சிறப்பான பலன்களை அப்யுதயம் என்று சொல்வர். ஐஹிகவித்யையை அப்யுதயபலனைத் தரும் வித்ய என்று பாஷ்யத்தில் அருளுகிறார்.

எல்லாமே கர்ம-பலனாக விளைபவைதாம்! வித்யை எனும் உபாஸனம் கூட, அதற்கான புண்யகர்மத்தின் பலனாக உண்டாகிறது; புண்யகர்மம் வந்தவுடன் அதன் பலனாக உடனேயே வித்யை உண்டாகுமா? அல்லது தாமதம் ஆகலாமா? என்று விசாரம்.

உடனேயும் வித்யை உண்டாகலாம்; அல்லது தாமதம் ஆகலாம்; இதில் நியமம் சொல்ல முடியாது; ஒரு கர்மம் பலனைக் கொடுக்கும்போது, அதற்குத் தடையாக வேறொரு கர்மம் வரலாம்; அப்போது இதன் பலன் தாமதமாகும்; அந்த முறையில் வித்யையும் கூட தாமதம் ஆக உண்டாகும் வாய்ப்பு உண்டு.

இது பற்றி உத்கீத-உபாஸனத்தில் உள்ள குறிப்பினை 4-1-18 முதலிய ஸூத்ரங்களில் காணலாம்.

இந்த ஸூத்ரத்துக்கு சற்றே வித்யாசமான வேறொரு வ்யாக்யானம் பாவப்ரகாசிகா முதலிய உரைகளில் காண்கிறது; அது அங்கேயே காணத் தகும்.

१२२.ऐहिकाधिकरणम् (३-४-१४)

४६८.ऐहिकमप्रस्तुतप्रतिबन्धे तद्दर्शनात् (३-४-५०)

द्विविधा विद्या - अभ्युदयफला मुक्तिफला च। तत्राभ्युदयफला स्वसाधनभूतैः पुण्यकर्मभिः पुण्यकर्मानन्तरमेव उत्पद्यते, उतानन्तरम्, कालान्तरे वेत्यनियम इति संशयः।

पूर्वकृतैः पुण्यकर्मभिर्हि विद्वान् जायते। यथोक्तं भगवता **''चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन''**(गी.7-16)[1] इति। साधने निर्वृत्ते विलम्बहेत्वभावादनन्तरमेव,

इति प्राप्ते उच्यते - **ऐहिकमप्रस्तुतप्रतिबन्धे** इति। **ऐहिकम्** - अभ्युदयफलमुपासनम् **अप्रस्तुतप्रतिबन्धे** - अप्रस्तुते प्रबलकर्मान्तरप्रतिबन्धे असति अनन्तरम्, प्रतिबन्धे सति तदुत्तरकालमित्यनियमः।

कुतः? **तद्दर्शनात्**। दृस्यते हि प्रबलकर्मान्तरेण कर्मफलप्रतिबन्धाभ्युपगमः श्रुतौ, **''यदेव विद्यया करोति श्रद्धयोपनिषदा तदेव वीर्यवत्तरम्''**(छा.1-1-10)[2] इत्युद्गीथविद्यायुक्तस्य कर्मणः फलाप्रतिबन्धश्रवणात्॥ ५० ॥

इति ऐहिकाधिकरणम् ॥ १४ ॥

122.ஐஹிகாதிகரணம் (3-4-14)

468.ஐஹிகமப்ரஸ்துதப்ரதிபந்தே தத்தர்ஶநாத் (3-4-50)

த்விவிதா வித்யா; அப்யுதயபலா முக்திபலா ச। தத்ர அப்யுதயபலா ஸ்வஸாதநபூதை: புண்யகர்மபி: புண்யகர்மாநந்தரமேவ உத்பத்யதே, உத அநந்தரம், காலாந்தரே வா இத்யநியம: இதி ஸம்ஶய:।

பூர்வக்ருதை: புண்யகர்மபிர்ஹி வித்வாந் ஜாயதே। யதோக்தம் பகவதா *''சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோऽர்ஜுந''*(கீ.7-16)[1] இதி। ஸாதநே நிர்வ்ருத்தே விலம்பஹேத்வபாவாத் அநந்தரமேவ,

இதி ப்ராப்தே உச்யதே, *ஐஹிகமப்ரஸ்துதப்ரதிபந்தே* - இதி। *ஐஹிகம்* - அப்யுதயபலமுபாஸநம் *அப்ரஸ்துதப்ரதிபந்தே* - அப்ரஸ்துதே ப்ரபலகர்மாந்தரப்ரதிபந்தே அஸதி அநந்தரம், ப்ரதிபந்தே ஸதி ததுத்தரகாலமிதி அநியம:।

குத:? தத்தர்ஶநாத்। த்ருஶ்யதே ஹி ப்ரபலகர்மாந்தரேண கர்மபலப்ரதிபந்தாப்யுபகம: ஶ்ருதௌ, *''யதேவ வித்யயா கரோதி ஶ்ரத்தயோபநிஷதா ததேவ வீர்யவத்தரம்''*(சா.1-1-10)[2] இதி உத்கீதவித்யாயுக்தஸ்ய கர்மண: பலாப்ரதிபந்தஶ்ரவணாத்।। 50 ।।

இதி ஐஹிகாதிகரணம் ।। 14 ।।

122.ஐஹிகாதிகரணம்(3-4-14)

468.ஐஹிகம் அப்ரஸ்துதப்ரதிபந்தே தத்தர்ஶநாத்(3-4-50)

இவ்வுலகப் பலனை உடைய வித்யை ஆனது தடை நேராதபோது உடனேயாகும்; அந்த தடையை வேதம் சொல்வதால்.

விஷயம்&ஸந்தேஹம்

வித்யை இரண்டுவிதம் - அப்யுதயபலனை (மோக்ஷம் தவிர பிற பலனை) உடையது, மோக்ஷ-பலனை உடையது என்று. அதில் அப்யுதய-பலனை உடைய வித்யையானது, தனக்கு காரணமான புண்யகர்மங்களால் புண்யகர்மத்திற்குப் பிறகு உடனேயே உண்டாகுமா? அல்லது உடனேயோ, பிற்காலத்திலோ என்று நியமம் இல்லையா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்

முன் செய்த புண்யகர்மங்களால்தானே உபாஸனம் செய்பவனாக ஆகிறான்; எப்படி பகவானால் சொல்லப்பட்டது - [1]**''அர்ஜுனா, புண்யசாலிகளான மக்கள் நான்கு விதமானவர் என்னை பஜனம் (பக்தி) செய்கின்றனர்''** என்று; (வித்யை உண்டாகக்) காரணம் ஆனவுடன் தாமதத்துக்கு காரணம் இல்லாதபடியால், உடனேயே (வித்யை உண்டாகும்)

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **ஐஹிகம் அப்ரஸ்துதப்ரதிபந்தே** என்று.

ஐஹிகம் - அப்யுதயபலனை உடைய (ஸம்ஸாரபலனை) உபாஸனம்,

அப்ரஸ்துதப்ரதிபந்தே - அதிக வலிமையுடைய வேறொரு கர்மத்தால் தடை நேராதபோது உடனேயே ஆகும்; தடை இருக்கும்போது அதற்குப் பிற்காலத்தில் ஆகலாம் என்பதால் கால-நியமம் கிடையாது.

ஏன்?

தத்தர்ஶநாத் - ஏனெனில், கர்ம-பலனுக்கு அதிக வலிமையுடைய வேறொரு கர்மத்தால் தடையை வேதத்தில் ஏற்பது காணப்படுகிறது - [2]**''எதனை வித்யையுடன், ஶ்ரத்தையுடன், உபநிஷத்-ஜ்ஞாநத்துடன் செய்கிறானோ, அதுவே அதிக வீர்யம் உடையதாக ஆகும்''** என்று உத்கீதவித்யையுடன் கூடிய கர்மத்துக்கு பலனில் தடையின்மையை சொல்வதால்.

* * *

ஐஹிகாதிகரணம் முற்றிற்று.

123.முக்திபலாநியமாதிகரணம்(3-4-15)

முன் குறிப்பு

இது அதிதேச-அதிகரணம். அதாவது, போன அதிகரணத்தில் சொன்ன அதே விஷயத்தை இந்த அதிகரண-விஷயத்திலும் வைத்துக் கொள்ள வேண்டும்; ஸம்ஸார-பலனை அளிக்கும் வித்யையானது, புண்யகர்மத்தால் உடனே உண்டாகும் என சொல்ல முடியாது; சில சமயம், வேறு தடை இருந்தால், தாமதமாக வரலாம் என்று போன அதிகரணத்தில் சொன்னார்; அதே போல மோக்ஷ-பலனை அளிக்கும் வித்யையும் தாமதம் ஆக உண்டாகலாம்; அல்லது தடை இல்லாவிட்டால் உடனேயும் வரலாம்: இதில் கால-நியமம் கிடையாது.

அதிதேச-அதிகரணத்தில் அதிகப் படியான பூர்வபக்ஷம்-ஸித்தாந்தம் இருக்கும்; (காண்க - ப்ராணாதிகரணம் 1-1-9); இங்கும் அது உள்ளது.

பொதுவாக பிற கர்மங்களுக்கு பலன் வரத் தடை ஆகலாம்; ஆனால், மோக்ஷத்தை அளிக்கும் வித்யை உண்டாகக் காரணமான கர்மம் என்பது விசேஷ-புண்யம் ஆகும்; அதற்கு சாதாரண தடையெல்லாம் வர முடியாது; எனவே, அந்த வித்யைக்கு தாமதம் வராது என பூர்வபக்ஷம்.

ஸித்தாந்தம் - சாதாரண தடைகள் வராது; ஆனால், விசேஷமான தடை வரலாம்; பாகவத-அபசாரம் என்பது மிகப் பெரிய பாபம்; அது மோக்ஷபலனை அளிக்கும் வித்யையை உண்டாகாமல் தடுக்கும்; ஆகையால் அந்த வித்யையும் தாமதமாக வரலாம்.

ஸூத்ரத்தில் முக்தி-பல என்பதற்கு, மோக்ஷ-பலனை உடைய வித்யை என்று அர்த்தம்; ஒருவன் வித்யைக்கு அங்கமாக (வித்யை நடப்பதற்காக) யாகம் செய்தான்; அதன் பலனாக வித்யை அவனுக்கு தொடர்ந்து நடக்க வேண்டும்; ஆனாலும், பாகவத-அபசாரம் பட்டிருந்தால், அது அவனுக்கு தடையாகும்; வித்யை நடக்காது; தாமதம் ஆகும்.

ஸ்ரீதேசிகன், பெரிய ரஹஸ்யத்தில் இந்த ஸூத்ரத்தைக் குறிப்பிட்டு, ‘‘விலக்க வேண்டியதில் மிக முக்கியமானது பாகவத-அபசாரம் என்று சாதிக்கிறார். சரணாகதி செய்தவனும் கூட பெரிய அளவில் பாகவத-அபசாரப் பட்டால், மோக்ஷ பலனும் கூட தாமதமாகும்; கவனம் தேவை.

१२३. मुक्तिफलाधिकरणम् (३-४-१५)

४६९. एवं मुक्तिफलानियमस्तदवस्थावधृतेस्तदवस्थावधृतेः (३-४-५१)

मुक्तिफलस्याप्युपासनस्य स्वसाधनभूतैरतिशयितकर्मभिरुत्पत्तौ एवमेव कालानियमः; तस्यापि पूर्ववत् प्रतिबन्धाभावप्रतिबन्धसमाप्तिरूपावस्थावगतेः - अत्रापि तस्य हेतोः समानत्वादित्यर्थः।

सर्वेभ्यः कर्मभ्यो मुक्तिफलविद्यासाधनस्य कर्मणः प्रबलत्वात् प्रतिबन्धासम्भव इत्यधिकाशङ्का॥ तत्रापि ब्रह्मविदपचाराणां पूर्वकृतानां प्रबलानां सम्भवात् प्रतिबन्धः सम्भवति (प्रतिबन्धसम्भव) इति परिहारः। द्विरुक्तिरध्यायपरिसमाप्तिं द्योतयति॥५१॥

इति मुक्तिफलाधिकरणम्॥ १५ ॥

इति श्रीभगवद्रामानुजविरचिते शारीरकमीमांसाभाष्ये तृतीयस्याध्यायस्य
चतुर्थः पादः॥

---

123. முக்திபலாதிகரணம் (3-4-15)

469. ஏவம் முக்திபலாநியமஸ்ததவஸ்தாவத்ருதேஸ்ததவஸ்தாவத்ருதே:(3-4-51)

முக்திபலஸ்யாபி உபாஸநஸ்ய ஸ்வஸாதநபூதை: அதிஶயிதகர்மபி: உத்பத்தௌ ஏவமேவ காலாநியம:, தஸ்யாபி பூர்வவத் ப்ரதிபந்தாபாவப்ரதிபந்தஸமாப்திரூபாவஸ்தாவகதே: - அத்ராபி தஸ்ய ஹேதோ: ஸமாநத்வாதித்யர்த:।

ஸர்வேப்ய: கர்மப்ய: முக்திபலவித்யாஸாதநஸ்ய கர்மண: ப்ரபலத்வாத் ப்ரதிபந்தாஸம்பவ: இதி அதிகாஶங்கா।। தத்ராபி ப்ரஹ்மவிதபசாராணாம் பூர்வக்ருதாநாம் ப்ரபலாநாம் ஸம்பவாத் ப்ரதிபந்த: ஸம்பவதி (ப்ரதிபந்தஸம்பவ) இதி பரிஹார:। த்விருக்தி: அத்யாயபரிஸமாப்திம் த்யோதயதி।।

இதி முக்திபலாதிகரணம்।। 15 ।।

இதி ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஶாரீரகமீமாம்ஸாபாஷ்யே
த்ருதீயஸ்யாத்யாயஸ்ய சதுர்த: பாத:।। 3.4।।

ஸமாப்தஸ்த்ருதீயாத்யாய:।।

469.முக்திபலாநியமாதிகரணம்(3-4-15)

469.ஏவம் முக்திபலாநியம: ததவஸ்தாவத்ருதே: ததவஸ்தாவத்ருதே:(3-4-51)

மோக்ஷ-பலனை உடைய வித்யைக்கும் இப்படி [கால]நியமம் இல்லை; அந்த நிலைகள் தெரிவதால்.

விஷயம் & ஸங்கதி (விஷய-தொடர்பு)

ஏவம் முக்திபலாநியம: - மோக்ஷ-பலனை உடைய உபாஸனத்துக்கும், தனக்கு காரணமான சிறந்த கர்மங்களால் உண்டாவதில், இப்படியே கால-நியமம் கிடையாது;

ததவஸ்தாவத்ருதே: - அதற்கும், முன்னதுபோல தடையின்மை, தடை-முடிவு எனும் நிலைகள் தெரிவதால்; அந்த காரணம் இங்கும் சமானம் ஆவதால் என்று அர்த்தம்.

(அதிக)பூர்வபக்ஷம்

எல்லா கர்மங்களை விட மோக்ஷ-பலனுடைய வித்யைக்குக் காரணமான கர்மம் அதிக வலிமையுடையது என்பதால் தடை வராது என்று அதிகக் கேள்வி.

(அதிக)ஸித்தாந்தம்

அங்கும் அதிக வலிமை உடையனவாக முன் செய்த ப்ரஹ்மவித்-அபசாரம் முதலியவை வரலாம் என்பதால், தடை வரலாம் என்று பரிஹாரம்.

(ஸூத்ரத்தில் கடைசி பதத்தை) இருமுறை சொன்னது அத்யாயம் முடிவதை உணர்த்துகிறது.

* * *

முக்திபலாதிகரணம் முற்றிற்று.

இப்படியாக ஸ்ரீபகவத்ராமானுஜர் அருளிய ஶாரீரகமீமாம்ஸாபாஷ்யத்தில் மூன்றாவது அத்யாயத்தின் நான்காவது பாதம் (முற்றிற்று).

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீபகவத் ராமானுஜர் அருளிய

ஸ்ரீபாஷ்யம்

(தமிழாக்கத்துடன்)

நான்காவது அத்யாயம்

பல-அத்யாயம்

பாதங்கள் 4 (13-16)

அதிகரணங்கள் - 33 (124 - 156)

ஸூத்ரங்கள் - 76 (470 - 545)

குறிப்பு: மூன்றாவது அத்யாயத்தில், ப்ரஹ்ம-வித்யையைப் பற்றி சொல்லி ஆயிற்று..

இனி நான்காவது அத்யாயத்தில் ப்ரஹ்மவித்யையின் பலன் பற்றி விசாரம் செய்யப் போகிறார். அதனால் இதற்கு பல-அத்யாயம் என்று பெயர்.

மோக்ஷம்தான் பலன்; மோக்ஷம் என்றால் கர்ம-பந்தத்திலிருந்து விடுபடுதல் என்று அர்த்தம்.

மோக்ஷம் பெறும் ஜீவன், உடலை விட்டு எப்படி வெளியேறுகிறான்? பரமபதம் செல்லும் வழி என்ன? சென்றபின் என்ன? முதலிய விஷயங்கள் இந்த அத்யாயத்தில் உள்ளன.

இந்த அத்யாயத்திலும் நான்கு பாதங்கள் -

1. ஆவ்ருத்தி பாதம் - புண்யபாபங்கள் விட்டுப் போகும் முறையை விளக்குவது.
2. உத்க்ராந்தி பாதம் - ஜீவன் சரீரத்தில் உள்ளிருந்து வெளியேறுதலை விளக்குவது.
3. கதிபாதம் - பரமபதம் போவதற்கான வழியை (அர்ச்சிராதிகதியை) விளக்குவது
4. மோக்ஷபாதம் - மோக்ஷத்தில் பெறும் பேறு என்ன என்பதை விளக்குவது.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீபகவத் ராமானுஜர் அருளிய

ஸ்ரீபாஷ்யம்

(தமிழாக்கத்துடன்)

(4-1)

நான்காவது அத்யாயம் - பலாத்யாயம்

முதல் பாதம் - ஆவ்ருத்தி பாதம்

அதிகரணங்கள் - 11 (124 - 134)

ஸூத்ரங்கள் - 19 (470 - 488)

குறிப்பு: இந்த பாதத்தில் முதல் அதிகரணம் ஆவ்ருத்தி-அதிகரணம் ஆகும்; அதனால், அதையே அடையாளமாகக் கொண்டு ஆவ்ருத்தி பாதம் என்று பெயர்.

ப்ரஹ்மவித்யை எனப்படும் உபாஸநம் செய்பவனுக்கு முதலில் புண்யபாபங்கள் ஒழியும். அந்த பலனை இந்த பாதம் சொல்கிறது. இந்த பாதத்தில் முதல் ஆறு அதிகரணங்கள் உபாஸநம் என்னும் உபாயத்தையே விளக்குகின்றன. பின்னரே, பலன் பற்றி சொல்கிறது.

கேள்வி:- மூன்றாவது அத்யாயம், உபாயத்தைப் பற்றி சொல்கிறது; நான்காவது அத்யாயம் பலனைப் பற்றி விசாரம் செய்கிறது; அப்படிருக்க இந்த நான்காவது அத்யாயத்தில், முதல் ஆறு அதிகரணங்களில் உபாயம் பற்றி சொன்னது எப்படி பொருந்தும்?

பதில்:- இந்த உபாயத்துக்கு இந்த பலன் என்ற தொடர்பினை உறுதிப் படுத்துவதற்காக பலனைச் சொல்லும் இந்த அத்யாயத்தில்,உபாயத்தையும் முதலில் சற்றே சொன்னார். இங்கே விளக்கப்படும் சொல்லும் த்யானம் எனும் உபாயம்தான், மோக்ஷம் எனும் பலனுக்கான உபாயம் என்று இதன் மூலம் உணர்த்துகிறார்.

அத்வைதமதத்தில் மோக்ஷம் எனும் பலனுக்கு, உபாஸநம்(த்யானம்) என்பது நேர் உபாயமாகாது என்றனர்; அது தவறானது என்பது இதனால் தெரிய வரும்.

மேலும், உபாயம் என்பது இங்கு ப்ரஹ்மம் பற்றிய உபாஸநம் ஆகும்; பலன் என்பது ப்ரஹ்ம-அனுபவம் ஆகும்; இந்த உபாயமாகிற ப்ரஹ்ம-உபாஸனத்திலும் ப்ரஹ்ம-அனுபவழ் ஆகிற பலன் நிறைய கலந்து இருக்கிறது; அதைக் குறிக்க பலனைப் பற்றிய இந்த நான்காவது அத்யாயத்தில் உபாயத்தையும் சேர்த்துச் சொல்லியுள்ளார்.

124. ஆவ்ருத்த்யதிகரணம் (4-1-1)

முன் குறிப்பு

ப்ரஹ்மம் பற்றிய ஜ்ஞாநம்தான் மோக்ஷத்துக்கு உபாயம்; மோக்ஷபலனுக்காக, அந்த ஜ்ஞாநம் ஒருமுறை வந்தால் போதுமா? அல்லது பலமுறை வர வேண்டுமா? என்று விசாரம்.

பூர்வபக்ஷம் - ஒருமுறை ஞானம் வந்தால் போதும். பொதுவாக, ஶாஸ்த்ரம்சொல்லும் எதையுமே ஒருமுறை செய்தால் போதும்; அதுதான் ஶாஸ்த்ரத்தின் கருத்து ஆகும். (உ.ம்) ''ஸ்வர்க்கம் விரும்புபவன் ஜ்யோதிஷ்டோம-யாகம் செய்க'' என்று ஒரு வேத-வாக்யம் விதிக்கிறது; அந்த யாகத்தை ஒருமுறை செய்தாலே போதும்; ஸ்வர்க்க பலன் கிடைத்து விடும்; பலமுறை செய்ய வேண்டியதாக வேதம் விதிக்கவில்லை; அதனால் பலமுறை செய்வது வேதத்தின் கருத்து இல்லை.

உள் கேள்வி - யாகத்தில், ''நெல் குத்த வேண்டும்'' என வேதம் விதிக்கிறது; அங்கு, அரிசி வரும்வரை தொடர்ந்து பலமுறை நெல் குத்துவர்; எனவே பல முறை செய்வதுதான் ஶாஸ்த்ரத்தின் கருத்து ஆகும்.

உள் பதில் - நெல் குத்துதலால் அரிசி உண்டாகும் முறையானது, நமக்கு கண்ணுக்கு நேராகத் தெரிகிறது; அதை அனுசரித்து வேதம் சொல்லாவிட்டாலும், அரிசி வரும்வரை பலமுறை நெல் குத்துகிறோம்; அதனால், பலமுறை குத்துதல்தான் வேதம் சொன்னதன் கருத்து என புரிந்து கொள்கிறோம்.

ஆனால், கண்ணுக்குத் தெரியாத விஷயத்தில் ஶாஸ்த்ரம் சொல்வதை அனுசரித்து ஒரு தடவை மட்டுமே செய்தால் போதுமானது.

முதலில் ப்ரஹ்மத்தை உபதேசம் மூலம் கேட்டு அறிய வேண்டும்; பின்னர், ப்ரஹ்மத்தை நேராகக் காண்பது போன்ற அபரோக்ஷமான ஜ்ஞாநம் உண்டாகும்; அத்தகு ஞானத்தை முதல் ஜ்ஞாநம் எப்படி உண்டாக்குகிறது என்பது நம் கண்ணுக்கு நேராகத் தெரியவில்லை; அதனால், கண்ணுக்குத் தெரியாத விஷயத்தில் பொதுவான ஶாஸ்த்ர-முறையை அனுசரித்து ஒருமுறை செய்தால் போதும்; அதாவது ஒருமுறை ப்ரஹ்மத்தை அறிந்தால் போதும் என பூர்வபக்ஷம்.

ஸித்தாந்தம்:- பலமுறை தொடர்ந்து வரும் ஜ்ஞாநம்தான் மோக்ஷத்துக்கு உபாயம் ஆகும். தொடர்ந்து இடைவிடாமல் பலமுறை ஜ்ஞாநம் வருவதுதான் த்யானம் ஆகும்.

மோக்ஷத்துக்கு உபாயம் வேதனம் (ஜ்ஞாநம்) என்று வேதம் சொல்கிறது; அந்த இடத்திலேயே, அதனை மீண்டும் குறிக்கும்போது, அதற்கு பதில், உபாஸநம் என்ற சொல்லையும் வேதமே சொல்கிறது; எனவே, உபாஸநம் ஆகிற ஜ்ஞாநம்தான் மோக்ஷ-உபாயம் என தெரிகிறது; உபாஸநம் என்பது மீண்டும் மீண்டும் இடைவிடாமல் நினைத்தல் ஆகும்.

ஒரே இடத்திலேயே ஒரே பொருளிலேயே 'வேதனம்' என்ற சொல்லையும், 'உபாஸநம்' என்ற சொல்லையும் வேதம் மாற்றிமாற்றி சொல்கிறது; அதற்கு உதாஹரணம் ஆக பல பல இடங்களை ஶ்ரீபாஷ்யத்தில் எடுத்து காண்பிக்கிறார்.

१२४. आवृत्त्यधिकरणम् (४-१-१)

४७०.आवृत्तिरसकृदुपदेशात् (४-१-१)

तृतीयेऽध्याये साधनैः सह विद्या चिन्तिता। अथेदानीं विद्यास्वरूपविशोधनपूर्वकं विद्याफलं चिन्त्यते।

तत्र,

- **‘‘ब्रह्मविदाप्नोति परम्’’**(तै.1.आन.2)[1],
- **‘‘तमेव विदित्वाऽति मृत्युमेति’’** (श्वे.3-8)[2],
- **‘‘ब्रह्म वेद ब्रह्मैव भवति’’**(मु.3-2-9)[3],
- **‘‘यदा पश्यः पश्यते रुक्मवर्णम्’’** (मु.3-1-3)[4]

इत्यादिवेदान्तवाक्येषु ब्रह्मप्राप्तिसाधनतया विहितं वेदनं किं सकृत्कृतमेव शास्त्रार्थः, उतासकृदावृत्तमिति संशयः।

किं युक्तम्? सकृत्कृतमिति,

124. ஆவ்ருத்த்யதிகரணம் (4-1-1)

470. ஆவ்ருத்திரஸக்ருதுபதேஶாத் (4-1-1)

த்ருதீயேऽத்யாயே ஸாதநை: ஸஹ வித்யா சிந்திதா। அதேதாநீம் வித்யாஸ்வரூபவிஶோதநபூர்வகம் வித்யாபலம் சிந்த்யதே।

தத்ர,

- *“ப்ரஹ்மவிதாப்நோதி பரம்”* (தை.1.ஆந.2)[1],
- *“தமேவம் விதித்வாऽதி ம்ருத்யுமேதி”* (ஶ்வே.3-8)[2],
- *“ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி”* (மு.3-2-9)[3],
- *“யதா பஶ்ய: பஶ்யதே ருக்மவர்ணம்”* (மு.3-1-3)[4]

இத்யாதிவேதாந்தவாக்யேஷு ப்ரஹ்மப்ராப்திஸாதநதயா விஹிதம் வேதநம், கிம் ஸக்ருத்க்ருதமேவ ஶாஸ்த்ரார்த:, உத அஸக்ருதாவ்ருத்தமிதி ஸம்ஶய:।

கிம் யுக்தம்? ஸக்ருத்க்ருதமிதி;

124. ஆவ்ருத்த்யதிகரணம் (4-1-1)

470. ஆவ்ருத்தி: அஸக்ருத் உபதேஶாத் (4-1-1)

[ப்ரஹ்ம-ஜ்ஞாநமானது] மீண்டும் மீண்டுமாக பலமுறை திருப்பி ஆக வேண்டும்; [த்யாநமாக] உபதேஶம் செய்வதால்.

ஸங்கதி (விஷய-தொடர்பு)

மூன்றாவது அத்யாயத்தில் ப்ரஹ்ம-வித்யைக்கான் காரணங்களுடன் கூட ப்ரஹ்ம-வித்யை ஆராயப் பட்டது; பின்னர் இப்போது நான்காவது அத்யாயத்தில், ப்ரஹ்ம-வித்யையின் ஸ்வரூபத்தை முன்னர் ஆராய்ந்து, பின், வித்யையின் பலன் ஆராயப் படுகிறது.

ஸம்சயம் (ஸந்தேகம்)

அதில்,

★ [1]**''ப்ரஹ்மவித் ஆப்நோதி பரம்'', (ப்ரஹ்மத்தை அறிந்தவன் பரப்ரஹ்மத்தை அடைகிறான்)**

★ [2]**''தமேவ விதித்வா அதிம்ருத்யுமேதி'', (அந்த ப்ரஹ்மத்தை அறிந்து ஸம்ஸாரத்தைக் கடக்கிறான்)**

★ [3]**''ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி'', (ப்ரஹ்மத்தை அறிபவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்)**

★ [4]**''யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம்'' (எப்போது பார்ப்பவன் சிவந்த நிறத்தினனான புரமாத்மாவைக் காண்கிறானோ)**

முதலிய வேதாந்த-வாக்யங்களில், ப்ரஹ்மத்தை அடைதலுக்கு உபாயமானது, 'வேதநம்' (ப்ரஹ்மத்தை அறிதல்) ஆகும் என சொல்லப்பட்டது;

அந்த வேதநமானது ஒருமுறை செய்யப் படுவதே ஶாஸ்த்ரத்தின் கருத்தாகுமா? அல்லது பலமுறை திருப்பி செய்யப்படுவது ஶாஸ்த்ரத்தின் கருத்தாகுமா?

✍(ப்ரஹ்மம் பற்றிய ஜ்ஞாநம் ஒருமுறை வந்தால் போதுமா? அல்லது பலமுறை ப்ரஹ்மத்தை சிந்திக்க வேண்டுமா? எது ஶாஸ்த்ர-கருத்து?)✍

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? ஒரு தடவை செய்யப் படுவது என்பது;

(कुतः?) ‘‘**ब्रह्म वेद ब्रह्मैव भवति**’’(मु.3-2-9)[1] इति वेदनमात्रस्यैव विधानात् असकृदावृत्तौ प्रमाणाभावात्।

न चावघातादिवत् वेदनस्य ब्रह्मापरोक्ष्यं प्रति दृष्टोपायत्वात् यावत्कार्यमावृत्तिरिति शक्यं वक्तुम्; वेदनस्य दृष्टोपायत्वाभावात्।

ज्योतिष्टोमादिकर्माणि वेदान्तविहितं च वेदनं परमपुरुषाराधनरूपम्, आराधिताच्च परमपुरुषात् धर्मार्थकाममोक्षाख्यपुरुषार्थावाप्तिरिति हि, ‘‘**फलमत उपपत्तेः**’’(ब्र.सू.3-2-37) इत्यत्र प्रतिपादितम्। अतो ज्योतिष्टोमादिवत् यथाशब्दं सकृत्कृतमेव शास्त्रार्थः -

इति प्राप्ते प्रचक्ष्महे - **आवृत्तिरसकृत्** इति। असकृदावृत्तमेव वेदनं शास्त्रार्थः।

कुतः? **उपदेशात्** - ध्यानोपासनपर्यायेण वेदनशब्देनोपदेशात्। तत्पर्यायत्वं च विद्युपास्तिध्यायतीनामेकस्मिन् विषये वेदनोपदेशपरवाक्येषु प्रयोगादवगम्यते।

तथा हि, ‘‘**मनो ब्रह्मेत्युपासीत**’’(छा.3-18-1)[2] इत्युपासिनोपक्रान्तोऽर्थः, ‘‘**भाति**

(குத:?) *“ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி”* (மு.3-2-9)[1] இதி வேதநமாத்ரஸ்யைவ விதாநாத் அஸக்ருதாவ்ருத்தௌ ப்ரமாணாபாவாத்।

ந ச அவகாதாதிவத் வேதநஸ்ய ப்ரஹ்மாபரோக்ஷ்யம் ப்ரதி த்ருஷ்டோபாயத்வாத் யாவத்கார்யமாவ்ருத்தி: இதி ஶக்யம் வக்தும்; வேதநஸ்ய த்ருஷ்டோபாயத்வாபாவாத்।

ஜ்யோதிஷ்டோமாதிகர்மாணி வேதாந்தவிஹிதம் ச வேதநம் பரமபுருஷாராதநரூபம், ஆராதிதாச்ச பரமபுருஷாத் தர்மார்தகாமமோக்ஷாக்யபுருஷார்தாவாப்திரிதி ஹி, *“பலமத உபபத்தே:”* (ப்ர.ஸூ.3-2-37) இத்யத்ர ப்ரதிபாதிதம்। அத: ஜ்யோதிஷ்டோமாதிவத் யதாஶப்தம் ஸக்ருத்க்ருதமேவ ஶாஸ்த்ரார்த: -

இதி ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - *ஆவ்ருத்திரஸக்ருத்* - இதி। அஸக்ருதாவ்ருத்தமேவ வேதநம் ஶாஸ்த்ரார்த:।

குத:? *உபதேஶாத்* - த்யாநோபாஸநபர்யாயேண வேதநஶப்தேநோபதேஶாத்। தத்பர்யாயத்வம் ச வித்யுபாஸ்தித்யாயதீநாம் ஏகஸ்மிந் விஷயே வேதநோபதேஶபரவாக்யேஷு ப்ரயோகாதவகம்யதே।

ததா ஹி, *“மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத”* (சா.3-18-1)[2] இதி உபாஸிநா

ஏனெனில், [1] **''ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி'', (ப்ரஹ்மத்தை அறிபவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்)** என்று அறிவதை மட்டுமே விதித்துள்ளது; அதை பலமுறை திருப்பித் திருப்பி செய்வதில் ப்ரமாணம் இல்லை.

உள்கேள்வி - (ப்ரஹ்மத்தை நேராகக் காண்பது போல் அபரோக்ஷமாக ஜ்ஞாநம் வர வேண்டும்; அத்தகு ஜ்ஞாநம் வருவதற்காக முதலில் ப்ரஹ்மத்தை அறிய வேண்டும்.) ப்ரஹ்மத்தை அறிதல் ஆனது, ப்ரஹ்மத்தை அபரோக்ஷமாக காண்பதற்கு உபாயமாகும்; அது உபாயமாவது நேராகக் காணப்படுகிறது; அதனால், நெல் குத்துதல் முதலியதில் (அரிசி வரும்வரை) பலமுறை செயல் ஆவது போல், இதிலும் பலன் வரும்வரை செயல் ஆகும்.

மறுப்பு - அப்படி சொல்ல முடியாது; ஏனெனில், ப்ரஹ்மத்தை அபரோக்ஷமாகக் காண்பதில், அறிதல் என்பது உபாயமாவது நாம் நேராகக் காணும் முறையில் அல்ல. (நமக்குக் கண்ணுக்குத் தெரியாதமுறையில் பரமபுருஷனின் அனுக்ரஹஸங்கல்பம் மூலமாகவே அந்த பலன் கிடைக்கிறது).

ஜ்யோதிஷ்டோமம் (ஸோமயாகம்) முதலிய கர்மங்களும், வேதாந்தங்களில் விதிக்கப்பட்ட ஜ்ஞாநமும் பரமபுருஷனுக்கு ஆராதனம் ஆனவை; அவற்றால் ஆராதனம் செய்யப்பட்ட பரமபுருஷனிடமிருந்தே தர்ம-அர்த்த-காம-மோக்ஷங்கள் எனப்படும் புருஷார்த்தங்கள் கிடைக்கும்; இது **''பலமத உபபத்தே:''** என்னுமிடத்து சொல்லப்பட்டதுதானே! அதனால், ஜ்யோதிஷ்டோமம் முதலியது போல, வாக்யத்தில் உள்ளபடி, ஒருமுறை செய்தலே ஶாஸ்த்ர-கருத்து ஆகும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட, ஸித்தாந்தம் சொல்கிறோம் - **''ஆவ்ருத்தி: அஸக்ருத்''** என்று.

வேதநம் ஆனது (ப்ரஹ்மத்தை அறிதல் ஆனது) பலமுறை மீண்டும் மீண்டும் செய்யப்பட்டதாக ஆக வேண்டும் என்பதே ஶாஸ்த்ர-கருத்து;

ஏன்?

உபதேஶாத் - த்யாநம், உபாஸநம் ஆகியவற்றுடன் ஒரே பொருளில் ஆவதாக வேதநம் என்ற சொல்லின் மூலம் உபதேஶம் செய்திருப்பதால்.

ஒரே விஷயத்தைப் பற்றி அறிதலை உபதேஶம் செய்யும் வாக்யங்களில் வேதநம், உபாஸநம், த்யாநம் ஆகிய சொற்களைச் சொல்லியுள்ளது; அதனால், அது ஒரே பொருளில் ஆகும் என்பது தெரிகிறது.

அப்படித்தானே -

- [2] **மநோ ப்ரஹ்ம இத்யுபாஸீத'' (மனஸ்ஸினை ப்ரஹ்மமாக உபாஸநம் செய்யவும்)''** என்று 'உபாஸநம்' என்ற சொல்லால் ஆரம்பிக்கப்பட்டது;

च तपति च कीर्त्या यशसा ब्रह्मवर्चसेन य एवं वेद''(छा.3-18-3)[1] इति विदिनोपसंह्रियते;

तथा, ''**यस्तद्वेद यत् स वेद स मयैतदुक्तः**''(छा.4-1-4)[2] इत्युपक्रमे विदिनोक्तं रैक्वस्य ज्ञानम्, ''**अनु म एतां भगवो देवतां शाधि, यां देवतामुपास्से**''(छा.4-2-2)[3] इत्युपासिनोपसंह्रियते।

तथा ''**ब्रह्मविदाप्नोति परम्**''(तै.1.आन.2)[4] इत्यादिवाक्यसमानार्थेषु वाक्येषु, ''**आत्मा वा अरे द्रष्टव्यः श्रोतव्यो मन्तव्यो निदिध्यासितव्यः**''(बृ.4-4-5)[5], ''**ततस्तु तं पश्यति निष्कलं ध्यायमानः**''(मु.3-1-8)[7] इत्यादिषु ध्यायतिना वेदनमभिधीयते।

ध्यानं च चिन्तनम्। चिन्तनं च स्मृतिसन्ततिरूपम्; न स्मृतिमात्रम्। उपास्तिरपि तदेकार्थः; एकाग्रचित्तवृत्तिनैरन्तर्ये प्रयोगदर्शनात्। तदुभयैकार्थ्यात् असकृदावृत्तसन्ततस्मृतिरिह, ''**ब्रह्म वेद ब्रह्मैव भवति**''(मु.3-2-9)[8], ''**ज्ञात्वा देवं मुच्यते सर्वपाशैः**''(श्वे.1-8)[9] इत्यादिषु वेदनादिशब्दैरभिधीयते इति निश्चीयते॥ १ ॥

* * *

உபக்ராந்தோऽர்த:, ''*பாதி ச தபதி ச கீர்த்யா யஶஸா ப்ரஹ்மவர்சஸேந ய ஏவம் வேத*'' (சா.3-18-3)[1] இதி விதிநா உபஸம்ஹ்ரியதே;

ததா, ''*யஸ்தத்வேத யத் ஸ வேத ஸ மயைததுக்த:*'' (சா.4-1-4)[2] இத்யுபக்ரமே விதிநா உக்தம் ரைக்வஸ்ய ஜ்ஞாநம், ''*அநு ம ஏதாம் பகவோ தேவதாம் ஶாதி; யாம் தேவதாமுபாஸ்ஸே*''(சா.4-2-2)[3] இதி உபாஸிநா உபஸம்ஹ்ரியதே।

ததா ''*ப்ரஹ்மவிதாப்நோதி பரம்*'' (தை.1.ஆந.2)[4] இத்யாதிவாக்யஸமாநார்தேஷு வாக்யேஷு, ''*ஆத்மா வா அரே த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:*''[5] (ப்ரு.4-4-5)[6], ''*ததஸ்து தம் பஶ்யதி நிஷ்கலம் த்யாயமாந:*'' (மு.3-1-8) இத்யாதிஷு த்யாயதிநா வேதநமபிதீயதே।

த்யாநம் ச சிந்தநம்। சிந்தநம் ச ஸ்ம்ருதிஸந்ததிரூபம்; ந ஸ்ம்ருதிமாத்ரம்। உபாஸ்திரபி ததேகார்த:, ஏகாக்ரசித்தவ்ருத்தி-நைரந்தர்யே ப்ரயோகதர்ஶநாத்। ததுபயைகார்த்யாத் அஸக்ருதாவ்ருத்தஸந்ததஸ்ம்ருதிரிஹ, ''*ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி*'' (மு.3-2-9)[7], ''*ஜ்ஞாத்வா தேவம் முச்யதே ஸர்வபாஶை:*'' (ஶ்வே.1-8)[8] இத்யாதிஷு வேதநாதிஶப்தை: அபிதீயதே இதி நிஶ்சீயதே।। 1 ।।

* * *

அதே விஷயமானது, [1]**''பாதி ச தபதி ச கீர்த்யா யசஸா ப்ரஹ்மவர்சஸேந ய ஏவம் வேத'' (யார் இப்படி அறிகிறானோ, அவன் அறிவுப்புகழாலும், திறமைப்புகழாலும் விளங்குகிறான்; ப்ரஹ்ம-வர்சஸ்ஸினால் ப்ரகாசிக்கிறான்)''** என்று, 'வேத(அறிகிறானோ)' என்ற சொல்லைக் கொண்டு முடிக்கப் படுகிறது.

- அப்படியே, [2]**''யஸ் தத் வேத யத் ஸ வேத ஸ மயைததுக்த: (எதை அந்த ரைக்வர் அறிகிறாரோ, அதையே மற்றவரும் அறிவார்; அப்படிப்பட்ட ஜ்ஞானியான ரைக்வர் என்னால் குறிப்பிடப் பட்டார்)''** என்று ஆரம்பத்தில் ரைக்வருடைய ஜ்ஞாநமானது, 'வேத' எனும் சொல்லால் சொல்லப்பட்டது; அதுவே, [3]**''அனு ம ஏதாம் பகவோ தேவதாம் சாதி; யாம் தேவதாம் உபாஸ்ஸே'' (பகவானே, எந்த தேவனை உபாஸநம் செய்கிறீரோ அந்த தேவனை எனக்கு சொல்லித் தரவும்)''** என்று 'உபாஸநம்' என்ற சொல்லால் எடுத்து சொல்லப் படுகிறது.

- [4]**''ப்ரஹ்மவித் ஆப்நோதி பரம் (ப்ரஹ்மத்தை அறிபவன் பர-ப்ரஹ்மத்தை அடைவான்)''** முதலிய வாக்யங்களுக்கு சமானமான பொருளுடைய வாக்யங்கள் [5]**''பரமாத்மாவே கேட்கப்பட வேண்டியவன்; மனனம் செய்யப்பட வேண்டியவன்; த்யானம் செய்யப்பட வேண்டியவன்; காணப்பட வேண்டியவன்''**, [6]**''அவயவம் அற்ற பரமாத்மாவை த்யானம் செய்பவன் அவன் அனுக்ரஹத்தின் மூலமாகவே அவனைக் காண்கிறான்''** முதலியவை; அவற்றில், அப்படியே வேதனம்(அறிதல்) ஆனது த்யானம் என்ற சொல்லால் சொல்லப்படுகிறது.

1. த்யாநம் என்பது சிந்தித்தல் ஆகும்; சிந்தித்தல் என்பது தொடர்ந்து நினைத்தல் ஆகும்; வெறிதே(ஒருமுறை) நினைப்பது எல்லாம் சிந்தித்தல் ஆகிவிடாது.
2. உபாஸநம் என்பதும் அதனுடன் ஒரே பொருளானது; ஏனெனில், இடைவிடாமல் ஒருமுகமாக மனஸ்ஸின் செயல் ஆவது எனனும் அர்த்தத்தைப் பற்றியே உபாஸநம் என்ற சொல்-வழக்கு உள்ளது.
3. இங்கு 'வேதநம்' (அறிதல்) முதலிய சொற்களால் சொல்லப்படுவதும், த்யானம், உபாஸநம் ஆகிய இந்த இரண்டுடன் ஒரே பொருளில் ஆக வேண்டும்; அதனால், [7]**''ப்ரஹ்மத்தை அறிபவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்''**, [8]**''தேவனை அறிந்து எல்லா கயிறுகளிலிருந்தும் விடுபடுகிறான்''** முதலியவற்றில் 'வேதநம் (அறிதல்)' முதலிய சொற்களால் சொல்லப்படுவது, பலமுறை மீண்டும் மீண்டும் ஆகும் தொடர்ந்த நினைவுதான் என தீர்மானிக்கப்படுகிறது.

◆ ◆ ◆ ◆

४७१. लिङ्गाच्च (४-१-२)

लिङ्गं - स्मृतिः। स्मृतेश्चायमर्थोऽवगम्यते। स्मर्यते हि मोक्षसाधनभूतं वेदनं स्मृतिसन्ततिरूपम्,

> **''तद्रूपप्रत्यये चैका सन्ततिश्चान्यनिस्स्पृहा।**
> **तद्ध्यानं प्रथमैः षड्भिरङ्गैर्निष्पाद्यते तथा॥''** (वि.पु.6-7-91)[1] इति। तस्मादसकृदावृत्तमेव वेदनं शास्त्रार्थः॥२॥

⁂

इति आवृत्त्यधिकरणम् ॥ १ ॥

471. லிங்காச்ச (4-1-2)

லிங்கம் - ஸ்ம்ருதி:। ஸ்ம்ருதேஶ்ச அயமர்தோ஽வகம்யதே। ஸ்மர்யதே ஹி மோக்ஷஸாதநபூதம் வேதநம் ஸ்ம்ருதிஸந்ததிரூபம்,

> *''தத்ரூபப்ரத்யயே சைகா ஸந்ததிஶ்சாந்யநிஸ்ஸ்ப்ருஹா।*
> *தத் த்யாநம் ப்ரதமை: ஷட்பிரங்கைர்நிஷ்பாத்யதே ததா॥''* (வி.பு.6-7-91)[1]

இதி। தஸ்மாத் அஸக்ருதாவ்ருத்தமேவ வேதநம் ஶாஸ்த்ரார்த:॥ 2 ॥

⁂

இதி ஆவ்ருத்த்யதிகரணம் ॥ 1 ॥

⁂

471. லிங்காத் ச (4-1-2)

ஸ்ம்ருதியாலும்

லிங்கம் என்றால் ஸ்ம்ருதி-நூல் என்று பொருள்; ஸ்ம்ருதி நூலினாலும் இந்த பொருள் தெரிய வருகிறது; மோக்ஷத்துக்குக் காரணமான வேதநம் (ஜ்ஞாநம்) என்பது தொடர்ந்து நினைத்தல் ஆகும் என்பதாக ஸ்ம்ருதி-நூலில் சொல்லப்படு-கிறதும் கூட - [1]**''ப்ரஹ்மம் பற்றிய ஜ்ஞாநத்தில் வேறு விஷயத்தைப் பற்றாததான ஒரே ஒரே நினைவு-வரிசை ஆகும்; அந்த த்யாநமானது யமம், நியமம் முதலிய முதல் ஆறு அங்கங்களால் உண்டாகிறது''**- என்று.

ப்ரயோஜநம் (பலன்)

எனவே, வேதநம் (ஜ்ஞாநம்) என்பது, பலமுறை மீண்டும் மீண்டும் ஆவ-தாகும் என்பதே ஶாஸ்த்ர-கருத்து.

* * *

ஆவ்ருத்த்யதிகரணம்முற்றிற்று

* * *

125. ஆத்மத்வோபாஸநாதிகரணம் (4-1-2)

முன் குறிப்பு

உபாஸநம் செய்யும் ஒருவன் ப்ரஹ்மத்தை எந்தமுறையில் உபாஸநம் செய்ய வேண்டும்? ''தன்னை விட ப்ரஹ்மம் வேறானது என்பதாக உபாஸநம் செய்ய வேண்டுமா? அல்லது ஶரீர-ஶரீரி-தொடர்பை இட்டு, தானாகவே ப்ரஹ்மத்தை எண்ணி 'நான்' என்று உபாஸநம் செய்ய வேண்டுமா?'' என்பது விசாரம்.

பூர்வபக்ஷம் - ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வெவ்வேறு என்று முன்பே பலமுறை சொல்லியிருப்பதால் வேறானதாக உபாஸநம் செய்ய வேண்டும்.

ஸித்தாந்தம் - தானாகவே பரமாத்மாவை எண்ணி, 'நான்' என்றே உபாஸநம் செய்ய வேண்டும்.

ஜீவனும் பரமாத்மாவும் ஸ்வரூபத்தில் வேறானவர்கள்தாம்! ஆனாலும், பரமாத்மாவுக்கு ஜீவன் ஶரீரம் ஆகிறான்; பரமாத்மா ஜீவனுக்கு ஆத்மாவாக இருக்கிறான்.

ஶரீரமும் ஆத்மாவும் வெவ்வேறாக இருந்தாலும், ஶரீரத்தைக் குறிக்கும் சொல்லையிட்டு அதன் ஆத்மாவைச் சொல்வதுண்டு; (உ.ம்) ''நான் மனிதன்' என்கிறோம்; மனிதன் என்பது ஶரீரத்தைக் குறிக்கும் சொல்; நான் என்பது ஆத்மாவினைக் குறிக்கும் சொல்; இரண்டையும் ஒன்றாக ஆக்கி, 'நான் மனிதன்' என்றே அறிகிறோம்; சொல்கிறோம்.

அதேபோல, ஜீவனும் பரமாத்மாவும் ஸ்வரூபத்தில் வேறானவர்கள் ஆனாலும், ஶரீரமான ஜீவனையும், அவனுக்குள் ஆத்மாவாக இருக்கும் பரமாத்மாவையும் சேர்த்து ஒன்றாக்கி, 'நான் ப்ரஹ்மம்' என்று எண்ணுவது தவறல்ல.

அப்படியே எண்ண வேண்டும்; அதுவே சரியாகும். இப்படி ஜீவன் ஶரீரமாகவும் பரமன் ஆத்மாவாகவும் ஆவதை எண்ணுவதால், இருவருக்கும் ஸ்வரூபம் வெவ்வேறானது என்பதும் திடம் ஆகிறது. ஶரீரமும் ஆத்மாவும் ஸ்வரூபத்தில் வேறாகும் என்பது உலகம் அறிந்த உண்மைதான்! அதே முறையில் ஜீவன் பரமாத்மாவின் ஶரீரம் ஆவதால், இருவரும் ஸ்வரூபத்தில் வேறானவர்கள் என்பதே திடமாக ஆகும்.

அதே சமயம் இருவரையும் சேர்த்துக் கூட்டி ஒன்றாகவே சொல்வதும் முறையானதாக ஆகும்.

१२५. आत्मत्वोपासनाधिकरणम् (४-१-२)

४७२. आत्मेति तूपगच्छन्ति ग्राहयन्ति च (४-१-३)

इदमिदानीं चिन्त्यते - किमुपास्यं ब्रह्म उपासितुरन्यत्वेनोपास्यम्, उतोपासितुरात्मत्वेनेति।

किं युक्तम्? अन्यत्वेनेति। कुतः? उपासितुः प्रत्यगात्मनोऽर्थान्तरत्वात् ब्रह्मणः। अर्थान्तरत्वञ्च -

- **''अधिकं तु भेदनिर्देशात्''** (ब्र.सू.2-1-22),
- **''अधिकोपदेशात्''** (ब्र.सू. 3-4-8),
- **''नेतरोऽनुपपत्तेः''** (ब्र.सू.1-1-17)

इत्यादिषूपपादितम्।

यथावस्थितञ्च ब्रह्म उपास्यम्; अयथोपासने हि ब्रह्मप्राप्तिरप्ययथाभूता स्यात्; **''यथाक्रतुरस्मिन् लोके पुरुषो भवति तथेतः प्रेत्य भवति''** (छा.3-14-1)[1] इति न्यायात्। अतोऽन्यत्वेनोपास्यमिति।

---

125. ஆத்மத்வோபாஸநாதிகரணம் (4-1-2)

472. ஆத்மேதி தூபகச்சந்தி க்ராஹயந்தி ச (4-1-3)

இதமிதாநீம் சிந்த்யதே - கிம் உபாஸ்யம் ப்ரஹ்ம உபாஸிதுரந்யத்வேந உபாஸ்யம், உத உபாஸிது: ஆத்மத்வேநேதி।

கிம் யுக்தம்? அந்யத்வேநேதி। குத:? உபாஸிது: ப்ரத்யகாத்மந: அர்தாந்தரத்வாத் ப்ரஹ்மண:। அர்தாந்தரத்வம் ச -

- *''அதிகம் து பேதநிர்தேஶாத்''* (ப்ர.ஸூ.2-1-22),
- *''அதிகோபதேஶாத்''* (ப்ர.ஸூ.3-4-8),
- *''நேதரோऽநுபபத்தே:''* (ப்ர.ஸூ.1-1-17)

இத்யாதிஷூபபாதிதம்।

யதாவஸ்திதஞ்ச ப்ரஹ்ம உபாஸ்யம்; அயதோபாஸநே ஹி ப்ரஹ்மப்ராப்திரபி அயதாபூதா ஸ்யாத்; *''யதாக்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததேத: ப்ரேத்ய பவதி''* (சா.3-14-1)[1] இதி ந்யாயாத்। அத: அந்யத்வேநோபாஸ்யம் இதி।

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

125. ஆத்மத்வோபாஸநாதிகரணம் (4-1-2)

472. ஆத்மா இதி து உபகச்சந்தி க்ராஹயந்தி ச

ஆத்மா என்பதாகவே உபாஸநம் செய்கின்றனர்; அப்படியே ஶாஸ்த்ரங்கள் விளக்குகின்றன.

ஸம்சயம் (சந்தேகம்)

இது இப்போது ஆராயப் படுகிறது - உபாஸநம் செய்யப்படும் ப்ரஹ்மம் ஆனது, உபாஸநம் செய்பவனை விட வேறானதாக உபாஸநம் செய்யப்பட வேண்டுமா? அல்லது உபாஸநம் செய்பவனின் ஆத்மாவாக (நான் ப்ரஹ்மம் ஆகிறேன் என்பதாக) உபாஸநம் செய்யப்பட வேண்டுமா? - என்று.

✍(ஜீவன் ஆனவன், ப்ரஹ்மத்தை விட வேறானவன்; ஆனால், ப்ரஹ்மத்தின் ஶரீரம் ஆனவன்; இந்த விஷயங்கள் எல்லாம் முன்பே தெளிவாக சொல்லியாற்று; இப்போது செய்யும் விசாரம் - ஜீவன் ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்யும்போது, தானகவே ப்ரஹ்மத்தை எண்ணி 'நான் ப்ரஹ்மம்' என்பதாக உபாஸநம் செய்வது சரியாகுமா? அல்லது சரியாகாதா? என்பது;

இது சரியாகாது; என்னை விட வேறானவன் ப்ரஹ்மம் என்றே உபாஸநம் செய்ய வேண்டும் என பூர்வபக்ஷம்; அப்படி 'நான் ப்ரஹ்மம்' என்று உபாஸநம் செய்வதே சரியாகும் என ஸித்தாந்தம்)✍

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? வேறானதாக என்பது;

ஏன்?

உபாஸநம் செய்யும் ஜீவனை விட ப்ரஹ்மம் வேறானது என்பதால்.

ப்ரஹ்மம் ஆனது ஜீவனை விட வேறானது என்பது,

- **''அதிகம் து பேத-நிர்தேசாத்'' (2-1-22),**
- **''அதிகோபதேசாத் (3-4-8)''**
- **''நேதரோநுபபத்தே: (1-1-17):''**

முதலியவற்றில் விளக்கப்பட்டது.

ப்ரஹ்மம் ஆனது, எப்படி இருக்கிறதோ, அப்படியே உபாஸநம் செய்யப்பட வேண்டும்; வேறுவிதமாக உபாஸநம் செய்தால், ப்ரஹ்மத்தை அடைதலும் வேறுவிதமாக ஆகிவிட நேரிடும்; ஏனெனில், [1]**''இந்த உலகில் எப்படி உபாஸநம் செய்பவனாக மனிதன் ஆகிறானோ, அப்படியே இங்கிருந்து போனபின்பும் ஆகிறான்''** என்னும் தத்க்ரது-ந்யாயம் இருக்கிறது; ஆகவே, வேறானதாகவே உபாஸநம் செய்ய வேண்டும்.

एवं प्राप्तेऽभिधीयते - **आत्मेति तु** इति। तुशब्दोऽवधारणे। उपासितुरात्मेत्येवोपास्यम्। उपासिता प्रत्यगात्मा स्वशरीरस्य स्वयं यथा आत्मा, तथा स्वात्मनोऽपि परं ब्रह्म (आत्मेति) आत्मेत्येवोपासीतेत्यर्थः।

कुतः? एवं ह्युपगच्छन्ति पूर्वे उपासितारः, **''त्वं वा अहमस्मि भगवो देवते अहं वै त्वमसि''** (वारा.2-34)[1] इति।

उपासितुरर्थान्तरभूतं ब्रह्म उपासितारोऽहमिति कथमभ्युपगच्छन्तीत्यत्राह - **ग्राहयन्ति च** इति। इममर्थमविरुद्धमुपासितॄन् ग्राहयन्ति शास्त्राणि - तान् प्रत्युपपादयन्तीत्यर्थः॥

★ **''य आत्मनि तिष्ठन् आत्मनोऽन्तरः, यमात्मा न वेद, यस्याऽऽत्मा शरीरम्, य आत्मानमन्तरो यमयति, स त आत्माऽन्तर्याम्यमृतः''** (बृ.मा.5-7-22)[2]
इति, तथा,

★ **''सन्मूलाः सोम्येमाः सर्वाः प्रजाः सदायतनाः सत्प्रतिष्ठाः''** (छा.6-8-4)[3]

★ **''ऐतदात्म्यमिदं सर्वम्''** (छा.6-8-7)[4],

★ **''सर्व खल्विदं ब्रह्म तज्जलानिति''** (छा.3-14-1)[5] इति च।

ஏவம் ப்ராப்தேऽபிதீயதே - *ஆத்மேதி து* - இதி। *து* ஶப்த: அவதாரணே। உபாஸிதுராத்மேத்யேவ உபாஸ்யம்। உபாஸிதா ப்ரத்யகாத்மா ஸ்வஶரீரஸ்ய ஸ்வயம் யதா ஆத்மா, ததா ஸ்வாத்மநோऽபி பரம் ப்ரஹ்ம (ஆத்மேதி) ஆத்மேத்யேவோபாஸீதேத்யர்த:।

குத:? ஏவம் ஹி *உபகச்சந்தி* பூர்வே உபாஸிதார:, *''த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வமஸி''* (வாரா.2-34)[1] இதி। உபாஸிதுரர்தாந்தரபூதம் ப்ரஹ்ம உபாஸிதார: அஹமிதி கதமப்யுபகச்சந்தி இத்யத்ராஹ - *க்ராஹயந்தி ச* இதி। இமமர்தம் அவிருத்தம் உபாஸித்ரூந் க்ராஹயந்தி ஶாஸ்த்ராணி - தாந் ப்ரத்யுபபாதயந்தி இத்யர்த:॥

★ *''ய ஆத்மநி திஷ்டந் ஆத்மநோऽந்தர:, யமாத்மா ந வேத, யஸ்யாऽऽத்மா ஶரீரம், ய ஆத்மாநமந்தரோ யமயதி, ஸ த ஆத்மாऽந்தர்யாம்யம்ருத:''* (ப்ரு.5-7-22)[2]
இதி, ததா,

★ *''ஸந்மூலா: ஸோம்யேமா: ஸர்வா: ப்ரஜா: ஸதாயதநா: ஸத்ப்ரதிஷ்டா:''* (சா.6-8-4)[3],

★ *''ஐததாத்ம்யமிதம் ஸர்வம்''* (சா.6-8-7)[4],

★ *''ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி''* (சா.3-14-1)[5] இதி ச।

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட, ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **ஆத்மா இதி து'' ''(ஆத்மா என்பதாகவே)''** என்று. து என்ற சொல் 'அதுவாகவே' என்கிற அவதாரண-பொருளில் ஆகும் (வேறு விதமாக உபாஸநம் செய்யக் கூடாது என கருத்து).

உபாஸநம் செய்பவனது ஆத்மா என்பதாகவே (நான் ப்ரஹ்மம் என்பதாக) ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்ய வேண்டும்; உபாஸநம் செய்யும் ஜீவாத்மா ஆனவன், தனது ஶரீரத்துக்கு தான் எப்படி ஆத்மாவோ, அப்படியே (ஜீவனாகிற) தனக்கும் பர-ப்ரஹ்மம் ஆத்மாவாகும் என்பதாகவே (அந்தர்யாமியாகவே) உபாஸநம் செய்ய வேண்டும் என்று பொருள்.

ஏன்?

உபகச்சந்தி (அறிகின்றனர்) - உபாஸநம் செய்பவரான முன்னோர்கள் இப்படித்தானே [1]**''த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வமஸி பகவோ தேவதே'' (பகவானே, தெய்வமே, நான் நீயாக உள்ளேன்; நீ நானாக உள்ளாய்)''** என்று உபாஸநம் செய்கின்றனர்.

கேள்வி - உபாஸநம் செய்யும் ஜீவனை விட ப்ரஹ்மம் வேறு பொருளாகும்; அந்த ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவர், (தானே ஆவதாக) 'நான்' என்பதாக எப்படி ஏற்கின்றனர்?

பதில் - இப்படியாகிற இந்த கேள்விக்கு பதில் சொல்கிறார் -

''க்ராஹயந்தி ச'' (அறிவிக்கின்றன) என்று; இந்த பொருள் முரண்படாததாக உபாஸநம் செய்பவரைக் குறித்து ஶாஸ்த்ரங்கள் அறிவிக்கின்றன; அவர்களைக் குறித்து விளக்குகின்றன என்று பொருள்.

- [2]**''யார் ஜீவாத்மாவில் இருக்கிறானோ, ஆத்மாவுக்கு உள் இருக்கிறானோ, யாரை ஆத்மா அறியானோ, யாருக்கு ஜீவாத்மா ஶரீரம் ஆகிறானோ, யார் ஜீவாத்மாவை உள்ளிருந்து ஆள்கிறானோ, அவன்தான் உனது அந்தர்யாமியான தோஷமற்ற ஆத்மா''** என்றும், அப்படியே,
- [3]**''அழகனே, இந்த மக்கள் எல்லாம் ஸத்-ப்ரஹ்மத்திலிருந்து தோன்றியவர்கள்; ஸத்தில் இருப்பவர்கள்; ஸத்தில் நிலை(லயம்) பெறுபவர்கள்;**
- [4]**''இது எல்லாம் அந்த ஸத்தினை ஆத்மாவாகக் கொண்டது''**
- [5]**''ப்ரஹ்மத்திலிருந்து உண்டாகி அதிலேயே அழிந்து அதிலேயே வாழ்வதால் எல்லாமே அந்த ப்ரஹ்மம்தானே!''** - என்றும்

'सर्वस्य चिदचिद्वस्तुनः तज्जत्वात् तल्लत्वात् तदनत्वात् तन्नियाम्यत्वात् तच्छरीरत्वाच्च सर्वस्यायमात्मा। अतः स ते आत्मा। अतो यथा प्रत्यगात्मनः स्वशरीरं प्रति आत्मत्वात् 'देवोऽहम्' 'मनुष्योऽहम्' इत्यनुसन्धानम्, तथा प्रत्यगात्मनोऽप्यात्मत्वात्परमात्मनः तस्याप्यहमित्येवानुसन्धानं युक्तम्' इति।

एवं शास्त्रैरुपपादितं सर्वबुद्धीनां ब्रह्मैकनिष्ठत्वेन सर्वशब्दानां ब्रह्मैकनिष्ठत्वमभ्युपगच्छन्तः, ''**त्वं वा अहमस्मि भगवो देवते अहं वै त्वमसि भगवो देवते**''(वा.रा.2-34)[1] इति व्यतिकरेणोक्तवन्तः। एवं च,

- ''**अथ योऽन्यां देवतामुपास्ते अन्योऽसावन्योऽहमस्मीति न स वेद**''(बृ.3-4-10)[2],
- ''**अकृत्स्नो ह्येषः... आत्मेत्येवोपासीत**''(बृ.3-4-7)[3],
- ''**सर्वं तं परादात्, योऽन्यत्राऽऽत्मनः सर्वं वेद**''(बृ.6-5-7)[4]

  इत्यात्मत्वाननुसन्धाननिषेधः,
- ''**पृथगात्मानं प्रेरितारञ्च मत्वा**''(श्वे.1-6)[5]

इति पृथक्त्वानुसन्धानविधानं चाविरुद्धम्।

'अह'मिति स्वात्मतयाऽनुसन्धानादन्यत्वानुसन्धाननिषेधो रक्षितः।

ஸர்வஸ்ய சிதசித்வஸ்துந: தஜ்ஜத்வாத் தல்லத்வாத் ததநத்வாத் தந்நியாம்யத்வாத் தச்சரீத்வாச்ச ஸர்வஸ்ய அயமாத்மா। அத: ஸ தே ஆத்மா। அத: யதா ப்ரத்யகாத்மந: ஸ்வஶரீரம் ப்ரதி ஆத்மத்வாத் 'தேவோऽஹம்' 'மநுஷ்யோऽஹம்' இத்யநுஸந்தாநம், ததா ப்ரத்யகாத்மநோऽப்யாத்மத்வாத் பரமாத்மந: தஸ்யாபி அஹமிதயேவாநுஸந்தாநம் யுக்தம் இதி।

ஏவம் ஶாஸ்த்ரைருபபாதிதம் ஸர்வபுத்தீநாம் ப்ரஹ்மைகநிஷ்டத்வேந ஸர்வஶப்தாநாம் ப்ரஹ்மைகநிஷ்டத்வம் அப்யுபகச்சந்த:, *"த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வமஸி பகவோ தேவதே"* (வாரா. 2-34)[1] இதி வ்யதிகரேணோக்தவந்த:। ஏவம் ச,

- *"அத யோऽந்யாம் தேவதாமுபாஸ்தே அந்யோऽஸாவந்யோऽஹமஸ்மீதி ந ஸ வேத"* (ப்ரு.3-4-10)[2],
- *"அக்ருத்ஸ்நோ ஹ்யேஷ:... ஆத்மேத்யேவோபாஸீத"* (ப்ரு.3-4-7)[3],
- *"ஸர்வம் தம் பராதாத் யோऽந்யத்ராऽऽத்மந: ஸர்வம் வேத"* (ப்ரு.6-5-7)[4]

  இதி ஆத்மத்வாநநுஸந்தாநநிஷேத:,
- *"ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்ச மத்வா"* (ஶ்வே.1-6)[5]

இதி ப்ருதக்த்வாநுஸந்தாநவிதாநம் ச அவிருத்தம்।

அஹமிதி ஸ்வாத்மதயாऽநுஸந்தாநாத் அந்யத்வாநுஸந்தாநநிஷேத: ரக்ஷித:।

எல்லா சேதந-அசேதந-பொருளும் அந்த பரமாத்மாவிடமிருந்து உண்டாவது; அவனிடம் லயம் அடைவது; அவனால் உயிர் வாழ்வது; அவனால் ஆளப்படுவது; அவனது ஶரீரம் ஆவது; எனவே,எல்லாவற்றுக்கும் இவன் ஆத்மா; அதனால், உனக்கும் அவன் ஆத்மா; அதனால், ஜீவன் ஆனவன், தன் ஶரீரத்தைக் குறித்து ஆத்மாவாக ஆவதால், 'நான் தேவன்', 'நான் மனிதன்' என்று எப்படி எண்ணுகிறானோ, அப்படி, ஜீவனுக்கும் பரமாத்மா ஆத்மா ஆவதால், அவனைப் பற்றியும் 'நான்' என்றே எண்ணுதல் சரியாகும் என (விளக்குகின்றன).

இப்படியாக எல்லா ஜ்ஞாநங்களும் ப்ரஹ்மத்தை மட்டுமே பற்றியவை; அதனால் எல்லா சொற்களும் ப்ரஹ்மத்தை மட்டும் சொல்பவை; ஶாஸ்த்ரங்களால் இப்படி விளக்கப்படும் பொருளை ஏற்பவர்கள், **''த்வம் வா அஹமஸ்மி பகவோ தேவதே அஹம் வை த்வமஸி பகவோ தேவதே'' (பகவானே, தெய்வமே, நான் நீயாக உள்ளேன்; நீ நானாக உள்ளாய்)''** என்று மாற்றி சொன்னார்கள்.

(தானே ப்ரஹ்மம் என எண்ணாமல்) தன்னை விட வேறானவனாக ப்ரஹ்மத்தை எண்ணுவது கூடாது என்பதை

★ **தன்னை விட வேறான தேவனை, அவன் வேறு நான் வேறு என்று யார் எண்ணுகிறானோ, அவன் சரியாக அறியவில்லை.**

★ **அவன் முழுமை பெறாதவன்; ஆத்மா என்றே உபாஸநம் செய்யவும்.**

★ **ஆத்மாவை விட்டுப் பிரிந்ததாக எல்லாவற்றையும் யார் அறிகிறானோ, அவனை எல்லாம் ஒடுக்கும்''**

என்று சொல்லியுள்ளது.

தன்னை விட வேறானவனாக ப்ரஹ்மத்தை எண்ண வேண்டும் என்பதை,

★ **தன்னையும் ஆளுபவனான பரமாத்மாவையும் வேறாக எண்ணி''**

என்று விதிக்கிறது;

இப்படி (இருவிதமாக) சொன்னதும் இப்படி முரண்பாடு இல்லாமல் ஆகும்.

1. (வேதத்தில்) பரமாத்மாவை வேறாக எண்ணுவது கூடாது என மறுப்பதும் காக்கப்பட்டது. எப்படியெனில், பரமாத்மாவை, 'நான்' என்பதாக, தனது ஆத்மாவாக எண்ணுவது ஆகும்.

स्वशरीरात् स्वात्मनोऽधिकत्वानुसन्धानवत् स्वात्मनो(तो)ऽपि परमात्मनोऽधिकत्वानुसन्धानात् पृथक्त्वानुसन्धानविधानं च रक्षितम्। अधिकस्य ब्रह्मणः प्रत्यगात्मन आत्मत्वात् तस्य च ब्रह्मशरीरत्वात् निषेधवाक्ये, **"अकृत्स्नो ह्येषः"**(बृ.3-4-7) इत्युक्तम्।

अत उपासितुरात्मत्वेन ब्रह्म उपास्यमिति स्थितम्॥ ३ ॥

* * *

इति आत्मत्वोपासनाधिकरणम् ॥ २ ॥

ஸ்வஶரீராத் ஸ்வாத்மநோऽதிகத்வாநுஸந்தாநவத் ஸ்வாத்மநோ(தோ)ऽபி பரமாத்மந: அதிகத்வாநுஸந்தாநாத் ப்ருதக்த்வாநுஸந்தாநவிதாநம் ச ரக்ஷிதம். அதிகஸ்ய ப்ரஹ்மண: ப்ரத்யகாத்மந ஆத்மத்வாத் தஸ்ய ச ப்ரஹ்மஶரீரத்வாத் நிஷேதவாக்யே, *"அக்ருத்ஸ்நோ ஹ்யேஷ:"* (ப்ஃவே.3-4-7) இத்யுக்தம்.

அத: உபாஸிதுராத்மத்வேந ப்ரஹ்ம உபாஸ்யமிதி ஸ்திதம்.।3।।

* * *

இதி ஆத்மத்வோபாஸநாதிகரணம் ।। 2 ।।

* * *

2. ‘வேறானதாக எண்ண வேண்டும்’’ என்று விதித்திருப்பதும் காப்பாற்றப் பட்டது; ஏனெனில், (ஜீவன் ஆனவன்) தனது ஶரீரத்தை விட தானாகும் ஆத்மா வேறானவன் என எண்ணுவதுபோல், தானான ஜீவனை விட பரமாத்மா வேறானவன் என எண்ணுவது ஆகும்.

3. ஜீவனை விட வேறானவனான ப்ரஹ்மம் ஆனது, ஜீவனுக்கும் ஆத்மா ஆகிறது; அந்த ஜீவனும் ப்ரஹ்மத்தின் ஶரீரம் ஆகிறது; அதையிட்டு நிஷேதவாக்யத்தில், **‘‘அக்ருத்ஸ்நோ ஹ்யேஷ:’’ (ஜீவனையும் ப்ரஹ்மத்தையும் வெவ்வேறாக அறிபவன் முழுமையடையாதவன்)** என்று சொல்லப்பட்டது.

ப்ரயோஜநம் (அதிகரணபலன்)

எனவே, உபாஸநம் செய்பவனது ஆத்மாவாகவே ப்ரஹ்மம் உபாஸநம் செய்யப்பட வேண்டும் என்று ஆயிற்று.

* * *

ஆத்மத்வோபாஸநாதிகரணம் முற்றிற்று

* * *

126. ப்ரதீகாதிகரணம் (4-1-3)

முன் குறிப்பு

ப்ரதீகம் என்றால் பொதுவாக அவயவம் என்று அர்த்தம்; இங்கு விசிஷ்ட-ப்ரஹ்மத்தின் அவயவமாக அதாவது ஶரீரமாக இருக்கும் உலகப் பொருள் எல்லாம் ப்ரஹ்மத்தின் ப்ரதீகம் ஆகும்; அந்த உலகப் பொருளை ப்ரஹ்மமாக எண்ணி உபாஸநம் செய்தல் ப்ரதீக-உபாஸநம் எனப்படும். இப்படி உபாஸநம் செய்யச் சொல்லி வேதம் சில இடங்களில் விதிக்கிறது; ‘‘மனஸ்தான் ப்ரஹ்மம் என உபாஸநம் செய்யவும்’’ முதலியது.

இது தவறான உபாஸநம் ஆகும்; உலகப் பொருள் எல்லாம் ப்ரஹ்மத்தை விட வேறானது; அது எதுவும் ப்ரஹ்மம் அல்ல; ஆனால், அதை ப்ரஹ்மமாக உபாஸநம் செய்தல் தவறுதானே!

ஆனாலும் அப்படி உபாஸநம் செய்தால் பலன் உண்டு; ஏனெனில், தாழ்ந்த ஒருவரை உயர்ந்தவராக கருதினால், அவர் அதை உகந்து நல்ல பலன் தருவார்; அதுபோல இது. இது உலக-பலனுக்காக சொல்லப்பட்ட காம்ய-உபாஸநம் ஆகும்; மோக்ஷ-பலனுக்கான உபாஸநம் அல்ல.

போன அதிகரணத்தில், ப்ரஹ்ம-உபாஸனத்தில் ப்ரஹ்மத்தை நமக்கு ஆத்மாவாக உபாஸநம் செய்ய வேண்டும் என்று சொன்னார். இப்போது ப்ரதீக-உபாஸனத்தில் அப்படி ஆத்மாவாக கருதி உபாஸநம் செய்ய வேண்டுமா என்பது இங்கு விசாரம்.

பூர்வபக்ஷம் - இதுவும் கூட ப்ரஹ்மம் பற்றிய உபாஸநம்தான்; ப்ரஹ்மத்தை மனஸ் முதலிய ப்ரதீகமான பொருளாக உபாஸநம் செய்யச் சொல்லியுள்ளது; உபாஸநம் செய்யப்படும் விஷயம் ப்ரஹ்மம் ஆகும்; அந்த ப்ரஹ்மம் நமக்கு ஆத்மா ஆவதால், ஆத்மாவாக உபாஸநம் செய்ய வேண்டும்.

ஸித்தாந்தம் - இது ப்ரஹ்மம் பற்றிய உபாஸநம் அல்ல; இது ப்ரதீகம் பற்றிய உபாஸநம் ஆகும்; இங்கு, ப்ரஹ்மத்தை ப்ரதீக-பொருளாக உபாஸநம் செய்ய சொல்லவில்லை; மாறாக ப்ரதீகத்தை ப்ரஹ்மமாக உபாஸநம் செய்யச் சொல்கிறது; ஆகையால் இங்கு உபாஸநம் செய்யப்படும் விஷயம் ப்ரதீகம்தான்; அது நமக்கு ஆத்மா அல்ல; ஆகையால், ஆத்மாவாக உபாஸநம் செய்ய வேண்டாம்.

१२६. प्रतीकाधिकरणम् (४-१-३)

४७३. न प्रतीके न हि सः (४-१-४)

- **''मनो ब्रह्मेत्युपासीत''**(छा.3-18-1)[1],
- **''स यो नाम ब्रह्मेत्युपास्ते''**(छा.7-1-5)[2]

इत्यादिप्रतीकोपासनेष्वप्यात्मत्वानुसन्धानं कार्यम्, उत नेति चिन्तायाम्,

''मनो ब्रह्मेत्युपासीत'' (छा.3-18-1)[3] इति ब्रह्मोपासनत्वसाम्याद्ब्रह्मणश्चोपासितुरात्मत्वादात्मेत्येवोपासीतेत्येवं प्राप्तेऽभिधीयते -

न प्रतीके इति। प्रतीके नाऽऽत्मत्वानुसन्धानं कार्यम्।

न हि सः - न ह्युपासितुरात्मा प्रतीकः। प्रतीकोपासनेषु प्रतीक एवोपास्यः; न ब्रह्म। ब्रह्म तु तत्र दृष्टिविशेषणमात्रम्। प्रतीकोपासनं हि नाम अब्रह्मणि ब्रह्मदृष्ट्याऽनुसन्धानम्; तत्रोपास्यस्य प्रतीकस्योपासितुरात्मत्वाभावान्न तथाऽनुसन्धेयम्॥ ४ ॥

* * *

नन्वत्रापि ब्रह्मैवोपास्यम्; ब्रह्मण उपास्यत्वसम्भवे मनआदीनामचेतनानामल्पशक्तीनां

---

126. ப்ரதீகாதிகரணம் (4-1-3)

473. ந ப்ரதீகே ந ஹி ஸ: (4-1-4)

- *''மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத''* (சா.3-18-1)[1],
- *''ஸ யோ நாம ப்ரஹ்மேத்யுபாஸ்தே''* (சா.7-1-5)[2]

இத்யாதிப்ரதீகோபாஸநேஷ்வபி ஆத்மத்வாநுஸந்தாநம் கார்யம், உத நேதி சிந்தாயாம்,

''மநோ ப்ரஹ்மேத்யுபாஸீத'' (சா.3-18-1)[3] இதி ப்ரஹ்மோபாஸநத்வஸாம்யாத் ப்ரஹ்மணஶ்ச உபாஸிதுராத்மத்வாத் ஆத்மேத்யேவோபாஸீத இதி ஏவம் ப்ராப்தேऽபிதீயதே -

ந ப்ரதீகே - இதி। ப்ரதீகே ந ஆத்மத்வாநுஸந்தாநம் கார்யம்।

ந ஹி ஸ: - ந ஹி உபாஸிது: ஆத்மா ப்ரதீக:। ப்ரதீகோபாஸநேஷு ப்ரதீக ஏவோபாஸ்ய:; ந ப்ரஹ்ம। ப்ரஹ்ம து தத்ர த்ருஷ்டிவிஶேஷணமாத்ரம்। ப்ரதீகோபாஸநம் ஹி நாம அப்ரஹ்மணி ப்ரஹ்மத்ருஷ்ட்யாऽநுஸந்தாநம்; தத்ரோபாஸ்யஸ்ய ப்ரதீகஸ்ய உபாஸிதுராத்மத்வாபாவாத் ந ததாऽநுஸந்தேயம்।। 4 ।।

* * *

நநு அத்ராபி ப்ரஹ்மைவோபாஸ்யம்; ப்ரஹ்மண உபாஸ்யத்வஸம்-

126. ப்ரதீகாதிகரணம் (4-1-3)

473. ந ப்ரதீகே, ந ஹி ஸ: (4-1-4)

ப்ரதீகத்தில் ஆத்மாவாக எண்ணுதல் கிடையாது; ஏனெனில், அது ஆத்மா அல்ல.

ஸம்சயம் (சந்தேஹம்)

- [1] **மனஸ் ப்ரஹ்மம் என உபாஸநம் செய்யவும்.**
- [2] **யார் நாமம் ப்ரஹ்மம் என உபாஸநம் செய்கிறானோ,**

முதலியவை ப்ரதீக-உபாஸநங்கள் ஆகும்; இவற்றிலும் ஆத்மாவாக எண்ணுதல் செய்யப்பட வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பது விசாரம்.

பூர்வபக்ஷம்

[3]**''மனஸ் ப்ரஹ்மம் என உபாஸநம்செய்யவும்''** என்பதும் ப்ரஹ்ம-உபாஸநம் ஆகும்; ப்ரஹ்மம் பற்றிய உபாஸநம் என்பது சமமாக உள்ளது; அந்த ப்ரஹ்மமானது உபாஸநம் செய்யும் ஜீவனுடைய ஆத்மா ஆகும்; அதனால், ஆத்மா என்பதாகவே இங்கும் உபாஸநம் செய்ய வேண்டும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **'ந ப்ரதீகே'** என்று; ப்ரதீக-உபாஸநத்தில் ஆத்மாவாக எண்ணுதல் செய்யப்பட வேண்டியதில்லை.

ந ஹி ஸ: - ஏனெனில், அந்த ப்ரதீகம் ஆனது உபாஸநம் செய்பவனின் ஆத்மா அல்ல.

ப்ரதீக-உபாஸநங்களில் உபாஸநம் செய்யப்படும் விஷயம் ப்ரதீகம்தான்; ப்ரஹ்மம் அல்ல; ப்ரஹ்மம் ஆனது த்ருஷ்டி-விசேஷணம் மட்டுமே; (மனஸ்ஸினை ப்ரஹ்மம் ஆக எண்ணி த்யாநம் செய்யும்போது மனஸ்ஸினையே த்யாநம் செய்கிறார்; ப்ரஹ்மத்தை அல்ல; மனஸ்-ஐ எப்படி காண்கிறார்? ப்ரஹ்மம் ஆக காண்கிறார் என்பதால், காணும் முறையில் விஶேஷணம் ஆகவே ப்ரஹ்மம் உள்ளது; காணப்படும் விஷயமாக இல்லை) ப்ரதீக-உபாஸநம் என்பது ப்ரஹ்மம் ஆகாததை ப்ரஹ்மமாகக் காண்பதாகிற எண்ணம் ஆகும்; அதில் உபாஸநம் செய்யப்படுவது ப்ரதீகம்தான்; அது உபாஸநம் செய்யும் ஜீவனின் ஆத்மா அல்ல; எனவே, அப்படி ஆத்மாவாக எண்ணக் கூடாது.

◆◆◆◆

கேள்வி - இங்கும் ப்ரஹ்மம்தான் உபாஸநம் செய்யப்படும் விஷயம்; ஏனெனில், ப்ரஹ்மம் உபாஸநம் செய்யப்படும் விஷயமாக ஆகும்போது, (அதை விட்டு) அல்ப-சக்தி கொண்டவையும் அசேதந-பொருள்களும் ஆன மனஸ் முதலியவை

चोपास्यत्वाश्रयणस्यान्याय्यत्वात्। अतो मनआदिदृष्ट्या ब्रह्मैवोपास्यमिति ; अत आह -

४७४.ब्रह्मदृष्टिरुत्कर्षात् (४-१-५)

मनआदिषु ब्रह्मदृष्टिरेव युक्ता। न ब्रह्मणि मनआदिदृष्टिः ; ब्रह्मणो मनआदिभ्य उत्कर्षात्; तेषां च विपर्ययात्। उत्कृष्टे हि राजनि भृत्यदृष्टिः प्रत्यवायकरी ; भृत्ये तु राजदृष्टिरभ्युदयाय॥ ५ ॥

* * *

इति प्रतीकाधिकरणम् ॥ ३ ॥

பவே மநஆதீநாமசேதநாநாம் அல்பஶக்தீநாம் சோபாஸ்யத்வாஶ்ரயணஸ்ய அந்யாய்யத்வாத். அத: மநஆதித்ருஷ்ட்யா ப்ரஹ்மைவோபாஸ்யம் இதி; அத ஆஹ -

474. ப்ரஹ்மத்ருஷ்டிருத்கர்ஷாத் (4-1-5)

மநஆதிஷு ப்ரஹ்மத்ருஷ்டிரேவ யுக்தா. ந ப்ரஹ்மணி மநஆதித்ருஷ்டி:; ப்ரஹ்மணோ மநஆதிப்ய உத்கர்ஷாத்; தேஷாம் ச விபர்யயாத். உத்க்ருஷ்டே ஹி ராஜநி ப்ருத்யத்ருஷ்டி: ப்ரத்யவாயகரீ; ப்ருத்யே து ராஜத்ருஷ்டி: அப்யுதயாய.. 5 ..

* * *

இதி ப்ரதீகாதிகரணம் .. 3 ..

* * *

உபாஸநம் செய்யப்படுபவை என்று ஏற்பது சரியல்ல; ஆகையால், ப்ரஹ்மம்தான் மனஸ் முதலியதாக உபாஸநம் செய்யப்படும் விஷயம் ஆகும்.

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

474. ப்ரஹ்மத்ருஷ்டி: உத்கர்ஷாத் (4-1-5)

[ப்ரஹ்மம்] உயர்ந்ததானபடியால், ப்ரஹ்மமாகக் காணுதல் ஆகும்

மனஸ் முதலியவற்றை ப்ரஹ்மமாகக் காண்பதுதான் சரியாகும்; ப்ரஹ்மத்தை மனஸ் முதலியதாகக் காண்பது சரியல்ல; ஏனெனில், ப்ரஹ்மம் ஆனது, மனஸ் முதலியதை விட உயர்ந்தது; அந்த மனஸ் முதலியவையோ நேர் எதிராகத் தாழ்ந்தவை ஆகும்.

உயர்ந்தவனான அரசனை வேலையாளாக காண்பது பாபம் உண்டாக்கும்; வேலையாளை அரசனாகக் காண்பது நற்பலனுக்கு ஆகும்.

* * *

ப்ரதீகாதிகரணம் முற்றிற்று.

* * *

127. ஆதித்யாதிமத்யதிகரணம் (4-1-4)

முன் குறிப்பு

போன அதிகரணத்தைத் தொடர்ந்து ஒரு உபாஸநத்தில் ஒரு விசாரம் செய்கிறார் இந்த அதிகரணத்தில்.

யாகத்தில் கானமாக ஓதப்படும் ஸாமவேதத்தில் ஐந்து பாகங்கள் உண்டு; அதில் உத்கீதம் என்று ஒரு முக்கியபாகம்; அந்த உத்கீதத்தை உபாஸநம் செய்ய வேண்டும் என்று ஒரு வேதவாக்யம் சொல்கிறது. "உத்கீதத்தை ஸூர்யனை உபாஸநம் செய்யவும்" என்று அந்த வேதவாக்யம் உள்ளது. இங்கு உத்கீதத்தை ஸூர்யனாக உபாஸநம் செய்ய வேண்டுமா? அல்லது ஸூர்யனை உத்கீதமாக உபாஸநம் செய்ய வேண்டுமா என்று விசாரம்.

தாழ்ந்ததான ஒரு பொருளை உயர்ந்த பொருளாக நினைப்பது நல்லது என்று போன அதிகரணத்தில் சொல்லியாயிற்று. இதில், உத்கீதம், ஸூர்யன் ஆகிய இரண்டில் எது உயர்ந்தது? எது தாழ்ந்தது என்பது புரிந்தால் தாழ்ந்ததை உயர்ந்ததாக உபாஸநம் செய்யலாம். எனவே எது தாழ்ந்தது? எது உயர்ந்தது? என இப்போது விசாரம்.

பூர்வபக்ஷம் - யாகத்துக்கு அங்கமான உத்கீதமே உயர்ந்தது; யாகம்தானே பலனுக்கு காரணம் ஆகிறது; அந்த யாகத்துக்கு அங்கமான உத்கீதமே உயர்ந்தது. ஆகவே, தாழ்ந்தவனான ஸூர்யனை உத்கீதமாக எண்ணி உபாஸநம் செய்ய வேண்டும்.

ஸித்தாந்தம் - யாகத்தை விட தேவர்கள் உயர்ந்தவர்கள்; யாகம் நேராக பலன் அளிக்காது; ஸூர்யன் முதலிய தேவர்கள்தாம் யாகம் மூலம் பூஜிக்கப்பட்டு பலன் அளிக்கின்றனர்; ஆகையால் அவரே உயர்ந்தவர்; ஆகையால், தாழ்ந்ததான உத்கீதத்தை ஸூர்யனாக எண்ணி உபாஸநம் செய்ய வேண்டும். அதுவே சரியாகும்.

இதேபோல இன்னும் பல வாக்யங்கள் உள்ளன. அங்கெல்லாம் இதே போல நிர்ணயம் செய்துகொள்ள வேண்டும்.

In Public domain. Digitization Mithulakshmi Research Academy

१२७. आदित्यादिमत्यधिकरणम् (४-१-४)

४७५. आदित्यादिमतयश्चाङ्ग उपपत्तेः (४-१-६)

"य एवासौ तपति तमुद्गीथमुपासीत" (छा.1-3-1)[1] इत्यादिषु कर्माङ्गाश्रयेषु उपासनेषु संशयः - किमुद्गीथादौ कर्माङ्गे आदित्यादिदृष्टिः कर्तव्या, उतादित्यादिषूद्गीथादिदृष्टिः इति।

उत्कृष्टदृष्टिर्निकृष्टे कर्तव्येति न्यायात्, उद्गीथादीनां च फलसाधनभूतकर्माङ्गत्वेनाफलेभ्य आदित्यादिभ्यः उत्कृष्टत्वादादित्यादिषूद्गीथादिदृष्टिः इति प्राप्तेऽभिधीयते -

आदित्यादिमतयश्चाङ्गे इति। **चशब्दोऽवधारणे। क्रत्वङ्गे** उद्गीथादावादित्यादिदृष्टय एव कार्याः। कुतः? **उपपत्तेः**; आदित्यादीनामेवोत्कृष्टत्वोपपत्तेः; आदित्यादिदेवताराधनद्वारेण हि कर्मणामपि फलसाधनत्वम्। अतस्तद्दृष्टिरुद्गीथाद्यङ्गे॥ ६ ॥

◆

इति आदित्यादिमत्याधिकरणम् ॥ ४ ॥

127. ஆதித்யாதிமத்யதிகரணம் (4-1-4)

475. ஆதித்யாதிமதயஶ்சாங்க உபபத்தே: (4-1-6)

"ய ஏவாஸௌ தபதி தமுத்கீதமுபாஸீத" (சா.1-37-1)[1] இத்யாதிஷு கர்மாங்காஶ்ரயேஷு உபாஸநேஷு ஸம்ஶய: - கிம் உத்கீதாதௌ கர்மாங்கே ஆதித்யாதித்ருஷ்டி: கர்தவ்யா, உத ஆதித்யாதிஷு உத்கீதாதித்ருஷ்டி: - இதி।

உத்க்ருஷ்டத்ருஷ்டிர்நிக்ருஷ்டே கர்தவ்யா இதி ந்யாயாத், உத்கீதாதீநாம் ச பலஸாதநபூதகர்மாங்கத்வேந அபலேப்ய ஆதித்யாதிப்ய: உத்க்ருஷ்டத்வாத் ஆதித்யாதிஷு உத்கீதாதித்ருஷ்டி: இதி ப்ராப்தே஽பிதீயதே -

ஆதித்யாதிமதயஶ்சாங்கே இதி। ச ஶப்த: அவதாரணே। க்ரத்வங்கே உத்கீதாதௌ ஆதித்யாதித்ருஷ்டய ஏவ கார்யா:। குத:?, *உபபத்தே:* ஆதித்யாதீநாமேவ உத்க்ருஷ்டத்வோபபத்தே:; ஆதித்யாதிதேவதாராதநத்வாரேண ஹி கர்மணாமபி பலஸாதநத்வம்। அத: தத்த்ருஷ்டி: உத்கீதாத்யங்கே।।6।।

◆

இதி ஆதித்யாதிமத்யதிகரணம் ।। 4 ।।

127. ஆதித்யாதிமத்யதிகரணம் (4-1-4)

474. ஆதித்யாதிமதய: ச அங்கே உபபத்தே: (4-1-6)

[யாகத்தின்] அங்கத்தை ஆதித்யன் முதலியதாக எண்ணுவதே; அவர் உயர்ந்தவர் ஆவது தகுமாதலால்;

விஷய-வாக்யம்

''யாரிவன் தபிக்கிறானோ (சுடுகிறானோ), அவனை (ஆதித்யனை) உத்கீதத்தை உபாஸநம் செய்க'' - முதலியவை யாக-கர்மத்துக்கு அங்கமான உபாஸநங்கள்.

ஸம்சயம் (ஸந்தேஹம்)

இவற்றில் ஸந்தேஹம் - கர்மத்துக்கு அங்கமான உத்கீதம் முதலியதை ஆதித்யன் முதலியதாகக் காண்பது செய்யப்பட வேண்டுமா? அல்லது ஆதித்யன் முதலியவரை உத்கீதம் முதலியதாகக் காண்பதா? என்று .

பூர்வபக்ஷம்

தாழ்ந்தவனை உயர்ந்தவனாகக் காண்பது செய்யப்பட வேண்டும் என்னும் நெறிமுறை உள்ளது; உத்கீதம் முதலியவை பலனுக்குக் காரணமான கர்மத்தின் அங்கங்கள்; ஆதித்யன் முதலியவர் பலன் அற்றவர்; எனவே, ஆதித்யன் முதலியவரை விட உத்கீதம் முதலியது உயர்ந்தது; எனவே, ஆதித்யன் முதலியவரை உத்கீதம் முதலியதாகக் காண்பது தகும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **ஆதித்யாதிமதய: ச அங்கே''** என்று.

'ச' என்ற சொல் 'அதுதான்' எனும் உறுதியைக் குறிக்கிறது.

அங்கே (அங்கத்தில்) - யாகத்துக்கு அங்கமான உத்கீதம் முதலியதை

அதித்யாதிமதய: - ஆதித்யன் முதலியதாகக் காணும் உபாஸநங்கள்தாம் செய்யப்பட வேண்டியவை;

ஏன்?

உபபத்தே: (தகுமாதலால்) - ஆதித்யன் முதலியவரே உயர்ந்தவர் ஆவது தகுமாதலால்; ஆதித்யன் முதலிய தேவர்களது ஆராதனத்தை இடையிட்டுதானே யாகம் முதலிய கர்மங்கள் பலனுக்கு காரணம் ஆகின்றன; எனவே, உத்கீதம் முதலிய அங்கத்தை அந்த ஆதித்யன் முதலியதாகக் காண்பது சரியாகும்.

* * *

ஆதித்யாதிமத்யதிகரணம் முற்றிற்று

128. ஆஸீநாதிகரணம் (4-1-5)

முன் குறிப்பு

உபாஸநம் செய்பவன் உட்கார்ந்து கொண்டு செய்ய வேண்டுமா? அல்லது நியமம் இல்லாமல் நின்றுகொண்டோ, அமர்ந்துகொண்டோ படுத்துக்கொண்டோ எப்படி வேண்டுமானாலும் செய்யலாமா? என்று விசாரம்.

உபாஸநம் செய்வதற்கு மனதை ஒருமுகப் படுத்த வேண்டும்; அதற்கு உட்கார்ந்த நிலைதான் ஏற்றது; உட்கார்ந்த நிலையில்தாம் மனதை ஒருமுகப் படுத்த முடியும்.

நின்றுகொண்டு த்யானம் செய்வதானால், நிற்பதற்கான முயற்சி தேவையாக இருப்பதால், மனதை அதிலும் கவனம் செலுத்த வேண்டி வரும். மனதை ஒருமுகப்படுத்த முடியாது. படுத்துக் கொண்டு த்யானம் செய்வதானால், தூக்கம் வரலாம்; அதனால், இரண்டு நிலையும் ஏற்றதல்ல; அமர்ந்த நிலையே த்யானத்துக்கு ஏற்றது.

உபாஸனம் எந்த இடத்தில் செய்ய வேண்டும்? எந்த காலத்தில் செய்ய வேண்டும்? எந்த நிலையில் செய்ய வேண்டும்?

வேதத்தில் பார்த்தால், தனிப்பட்ட இடத்தையோ காலத்தையோ குறிக்கவில்லை; இந்த இடத்தில் இந்த காலத்தில் செய்ய வேண்டும் என கட்டாயப் படுத்தவில்லை; மாறாக மனதை ஒருமுகப்படுத்துவதுதான் முக்கியமாக சொல்லியுள்ளது; அதற்கு ஏற்றதான இடமும் காலமும் ஆக வேண்டும்.

அதேபோல, எந்த நிலையில் உபாஸநம் செய்ய வேண்டும் என்பதையும் நாம் புரிந்து கொள்ளலாம்; மனதை ஒருமுகப்படுத்துவது முக்கியம். அதற்கு ஏற்ற நிலை என்பது அமர்ந்த நிலைதான்; ஆகவே, அமர்ந்து கொண்டுதான் உபாஸநம் செய்ய வேண்டும் என புரிந்து கொள்ளலாம். இது கடைசி ஸூத்ரத்தின் அர்த்தம்.

In Public Domain. Digitization: Mahalakshmi Research Academy

१२८. आसीनाधिकरणम् (४-१-५)

४७६. आसीनः सम्भवात् (४-१-७)

मोक्षसाधनतया वेदान्तशास्त्रैर्विहितं ज्ञानं ध्यानोपासनादिशब्दवाच्यमसकृदावृत्तं सन्ततस्मृतिरूपमित्युक्तम्। तदनुतिष्ठन् आसीनः शयानः तिष्ठन् गच्छंश्च विशेषाभावादनियमेनानुतिष्ठेत् -

इति प्राप्ते उच्यते - **आसीनः** इति। **आसीन** उपासनमनुतिष्ठेत्। कुतः? **सम्भवात्** - आसीनस्यैव ह्येकाग्रचित्ततासम्भवः; स्थितिगत्योः प्रयत्नसापेक्षत्वात्, शयने च निद्रासम्भवात्। पश्चार्धधारणप्रयत्ननिवृत्तये सापाश्रये आसीनः कुर्यात्॥ ७ ॥

◆

४७७. ध्यानाच्च (४-१-८)

"**निदिध्यासितव्यः**" (बृ.6-5-6)[1] इति ध्यानरूपत्वादुपासनस्य, एकाग्रचित्तताऽवश्यम्भाविनी। ध्यानं हि विजातीयप्रत्ययान्तराव्यवहितमेकचिन्तनमित्युक्तम्॥ ८ ॥

◆

---

128. ஆஸீநாதிகரணம் (4-1-5)

476. ஆஸீந: ஸம்பவாத் (4-1-7)

மோக்ஷஸாதநதயா வேதாந்தஶாஸ்த்ரைர்விஹிதம் ஜ்ஞாநம் த்யாநோபாஸநாதிஶப்தவாச்யம் அஸக்ருதாவ்ருத்தம் ஸந்ததஸ்ம்ருதிரூபம் இத்யுக்தம்। ததநுதிஷ்டந் ஆஸீந: ஶயாந: திஷ்டந் கச்சம்ஶ்ச விஶேஷாபாவாத் அநியமேநாநுதிஷ்டேத் -

இதி ப்ராப்தே உச்யதே - *ஆஸீந:* இதி। ஆஸீந: உபாஸநமநுதிஷ்டேத்। குத:? *ஸம்பவாத்* - ஆஸீநஸ்யைவ ஹி ஏகாக்ரசித்ததாஸம்பவ:; ஸ்திதிகத்யோ: ப்ரயத்நஸாபேக்ஷத்வாத், ஶயநே ச நித்ராஸம்பவாத்। பஶ்சார்ததாரணப்ரயத்நநிவ்ருத்தயே ஸாபாஶ்ரயே ஆஸீந: குர்யாத்।। 7 ।।

◆

477. த்யாநாச்ச (4-1-8)

"நிதித்யாஸிதவ்ய:" (ப்ரு.6-5-6)[1] இதி த்யாநரூபத்வாதுபாஸநஸ்ய, ஏகாக்ரசித்ததா அவஶ்யம்பாவிநீ। த்யாநம் ஹி விஜாதீயப்ரத்யயாந்தராவ்யவஹிதம் ஏகசிந்தநம் இத்யுக்தம்।। 8 ।।

◆

128. ஆஸீநாதிகரணம் (4-1-5)

476. ஆஸீந: ஸம்பவாத் (4-1-7)

மனம் ஒருமுகமாக ஆதல் வருமாதலால், அமர்ந்தவனாக [உபாஸநம் செய்ய வேணும்]

ஸங்கதி, ஸம்சயம் & பூர்வபக்ஷம்

மோக்ஷத்துக்கு உபாயமாக வேதாந்த-ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்படும் ஜ்ஞாநமானது, த்யாநம், உபாஸநம் முதலிய சொற்களால் சொல்லப்படுவது; பலமுறை திருப்பி செய்யப்படுவது; தொடர்ந்து ஆகும் நினைவு உருவிலாவது என்று சொல்லப்பட்டது;

அதை அனுஷ்டானம் செய்பவன் அமர்ந்தவன் ஆகவோ, கிடப்பவன்; நிற்பவன், செல்பவன் ஆகவோ நியமம் இல்லாமல் செய்யலாம்; ஏனெனில், விசேஷ-குறிப்பு எதுவும் இல்லை.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **ஆஸீந:** என்று.

ஆஸீந: - அமர்ந்தவன் ஆகவே உபாஸநம் செய்ய வேண்டும்.

ஏன்?

ஸம்பவாத் - அமர்ந்திருப்பவனுக்கே மனது ஒருமுகமாக ஆகும் என்பதால்; ஏனெனில், நிற்பதுக்கும் செல்வதற்கும் முயற்சி தேவையாகிறது; கிடந்தால், உறக்கம் நேரிடும்; ஆகவே, உடலின் பின்பகுதியை தாங்குவதற்கான முயற்சியை தவிர்ப்பதற்காக சாய்மானத்தில் அமர்ந்தவனாக உபாஸநம் செய்ய வேண்டும்.

◆ ◆ ◆ ◆

477. த்யாநாத் ச (4-1-8)

த்யாநமாக ஆவதாலும்

[1] **"நிதித்யாஸிதவ்ய:"** என்று உபாஸநம் த்யாந-உருவாக ஆகும் என்பதால், மனது ஒருமுகமாக ஆதல் கட்டாயம் ஆக வேண்டும்; ஏனெனில், த்யாநம் என்பது, வேறுபட்ட வேறொரு ஜ்ஞாநம் இடையிடாமல் ஒரே விஷயத்தை சிந்தித்தல் ஆகும் என்று சொல்லியாயிற்று.

◆ ◆ ◆ ◆

In Public domain, Digitization: Mumukshuji Research Academy

४७८.अचलत्वं चापेक्ष्य (४-१-९)

निश्चलत्वं चा(ह्य) पेक्ष्य पृथिव्यन्तरिक्षादिषु ध्यानवाचोयुक्तिर्दृश्यते, **‘‘ध्यायतीव पृथिवी, ध्यायतीवान्तरिक्षम्, ध्यायतीव द्यौः, ध्यायन्तीवापः, ध्यायन्तीव पर्वताः’’** (छा.7-6-1)[1] इति। अतः पृथिवीपर्वतादिवत् एकाग्रचित्ततया निश्चलत्वमुपासकस्यासीनस्यैव सम्भवेत्॥९॥

*

४७९.स्मरन्ति च (४-१-१०)

स्मरन्ति चासीनस्यैव ध्यानम्,

‘‘शुचौ देशे प्रतिष्ठाप्य स्थिरमासनमात्मनः।
नात्युच्छ्रितं नातिनीचं चेलाजिनकुशोत्तरम्॥ (गी.6-11)[2]
तत्रैकाग्रं मनः कृत्वा यतचित्तेन्द्रियक्रियः।
उपविश्याऽऽसने युञ्ज्यात् योगमात्मविशुद्धये॥’’(गी.6-12)[3] इति॥१०॥

---

478. அசலத்வம் சாபேக்ஷ்ய (4-1-9)

நிஶ்சலத்வம் சா(ஹ்ய)பேக்ஷ்ய ப்ருதிவ்யந்தரிக்ஷாதிஷு த்யாநவாசோயுக்திர்த்ருஶ்யதே, *“த்யாயதீவ ப்ருதிவீ, த்யாயதீவாந்தரிக்ஷம், த்யாயதீவ த்யௌ:, த்யாயந்தீவாப:, த்யாயந்தீவ பர்வதா:’’* (சா.7-6-1)[1] இதி। அத: ப்ருதிவீ-பர்வதாதிவத் ஏகாக்ரசித்ததயா நிஶ்சலத்வம் உபாஸகஸ்ய ஆஸீநஸ்யைவ ஸம்பவேத்।।9

*

479. ஸ்மரந்தி ச (4-1-10)

ஸ்மரந்தி ச ஆஸீநஸ்யைவ த்யாநம்,

“ஶுசௌ தேஶே ப்ரதிஷ்டாப்ய ஸ்திரமாஸநமாத்மந:।
நாத்யுச்ச்ரிதம் நாதிநீசம் சேலாஜிநகுஶோத்தரம்।।’’ (கீ.6-11)[2]
“தத்ரைகாக்ரம் மந: க்ருத்வா யதசித்தேந்த்ரியக்ரிய:।
உபவிஶ்யாऽऽஸநே யுஞ்ஜ்யாத் யோகமாத்மவிஶுத்தயே।।’’ (கீ.6-12)[3]
இதி।।10।।

*

478. அசலத்வம் ச அபேக்ஷ்ய (4-1-9)

அசையாதிருப்பதை வைத்து [த்யாநம் செய்வதாக சொல்வதால்]

பூமி, அந்தரிக்ஷம் முதலியவை, அசையாமல் இருப்பதை வைத்து, அவை த்யாநம் செய்வதாக சொல்வது காணப்படுகிறது - [1]**''பூமி த்யாநம் செய்கிறாள் போலும்; அந்தரிக்ஷம் த்யாநம் செய்கிறது போலும்; விண்ணுலகம் த்யாநம் செய்கிறது போலும்; (குளத்தில்) ஜலம் த்யாநம் செய்வது போலும்; மலைகள் த்யாநம் செய்கின்றன போலும்''** என்று.

ஆகவே, பூமி, மலை முதலியது போல அசையாதிருத்தல் ஆனது, மனது ஒரு முகமாவதன் மூலம் ஆவதாய், அது, உபாஸநம் செய்பவன் அமர்ந்திருப்பவனாக ஆனால்தான் வரும்.

◆ ◆ ◆

479. ஸ்மரந்தி ச (4-1-10)

ஸ்ம்ருதியிலும் சொல்கின்றனர்.

அமர்ந்திருப்பவனாகவே த்யாநம் செய்வதை ஸ்ம்ருதிகளிலும் சொல்கின்றனர் - [2]**''சுத்தமான இடத்தில் அதிக உயரமும் அதிக தாழ்வும் ஆகாததும், வஸ்த்ரம், அஜிநம், தர்ப்பம் (துணி,மான்தோல்,தர்ப்பபுல்) ஆகியவற்றை மேன்மேலாகக் கொண்டதும் ஆன நிலையான ஆசனத்தை வைத்து'',**

[3]**''அந்த ஆசனத்தில் அமர்ந்து, மனதை ஒருமுகமாக ஆக்கி, மனம் மற்றும் இந்த்ரியங்களின் செயல்களை அடக்கியவனாய், ஆத்ம-சுத்தியாகிற மோக்ஷம் பெறுவதற்காக யோகம் செய்ய வேண்டும்''** என்று.

(நிலையான ஆஸநத்துக்காக மரத்தால் ஆன மனையில் மர வேண்டும்; அதற்கு மேல் மிருதுவாக வஸ்த்ரம்; அதற்கு சுத்தத்துக்காக மான் தோல்; அதற்கு மேல் சுத்திக்காக தர்ப்பம் என்று வரிசை.

அல்லது, தர்ப்பத்துக்கு மேல் மான்தோல், அதற்கு மேல் வஸ்த்ரம் என்று ஆகலாம்; மேன் மேல் மிருதுவாக ஆஸநம் அமையும்.

எப்படி வேண்டுமானாலும் ஆகலாம் என்று சிலர் சொல்கின்றனர்.

விரிவாக ஸ்ரீமத்கீதாபாஷ்யத்தின் வ்யாக்யாநமான தாத்பர்யசந்திரிகாவில் காணலாம்)

◆ ◆ ◆

४८०.यत्रैकाग्रता तत्राविशेषात् (४-१-११)

एकाग्रतातिरिक्तदेशकालविशेषाश्रवणात् एकाग्रतानुकूलो यो देशः कालश्च, स एवोपासनस्य देशः कालश्च। **''समे शुचौ शर्करावह्निवालुकाविवर्जिते''**(श्वे.2-10)[1] इति वचनमेकाग्रतैकान्तदेशमाह, न तु देशं नियच्छति; **''मनोऽनुकूले''**(श्वे.2-10)[2] इति वाक्यशेषात्॥११॥

* * *

इति आसीनाधिकरणम् ॥ ५ ॥

---

480. யத்ரைகாக்ரதா தத்ராவிஶேஷாத் (4-1-11)

ஏகாக்ரதாதிரிக்ததேஶகாலவிஶேஷாஶ்ரவணாத் ஏகாக்ரதாநுகூலோ யோ தேஶ: காலஶ்ச, ஸ ஏவோபாஸநஸ்ய தேஶ: காலஶ்ச। *''ஸமே ஶுசௌ ஶர்கராவஹ்நிவாலுகாவிவர்ஜிதே''* (ஶ்வே.2-10)[1] இதி வசநம் ஏகாக்ரதைகாந்ததேஶமாஹ; ந து தேஶம் நியச்ச̲தி; *''மநோऽநுகூலே''* (ஶ்வே.2-10)[2] இதி வாக்யஶேஷாத்।। 11 ।।

* * *

இதி ஆஸீநாதிகரணம் ।। 5 ।।

* * *

480. யத்ர ஏகாக்ரதா தத்ர அவிசேஷாத் (4-1-11)

எங்கு ஒருமுகமாதல் வருமோ அங்கு வேறு விசேஷம் சொல்லாதபடியால்

மனம் ஒருமுகமாதல் தவிர வேறு விசேஷமான இடமோ காலமோ சொல்லப்படவில்லை; அதனால், ஒருமுகமாவதற்கு ஏற்றதான இடமும் காலமும் எதுவோ, அதுவேதான் உபாஸநத்துக்கான இடமும் காலமும் ஆகும்.

[1]‘‘**கல், சூடு, மணல் இல்லாமல் சமமான சுத்தமான இடத்தில்**’’ என்ற வாக்யம் ஆனது, ஒருமுகமாதலுக்கு ஏற்ற இடத்தை சொல்கிறது; இடம் இப்படியே ஆக வேண்டும் என கட்டாயப் படுத்தவில்லை; ஏனெனில், [2]‘‘**மனதுக்கு ஏற்ற இடத்தில்**’’ என்று வாக்ய-மிகுதியில் சொல்கிறது.

* * *

ஆஸீநாதிகரணம் முற்றிற்று

* * *

129. ஆப்ரயாணாதிகரணம் (4-1-6)

முன்குறிப்பு

ப்ரஹ்ம-ஜ்ஞானம் என்பது ஒருதடவை வந்தால் போதாது; தொடர்ந்து பலமுறை வருவதாக த்யான-வடிவில் ஆக வேண்டும் என்பதை முதன்முதலில் ஆவ்ருத்த்யதிகரணத்தில் சொல்லியாயிற்று. அந்த உபாஸநம் என்பதை சில நாட்கள் மட்டும் செய்தால் போதுமா? அல்லது இறுதி-மரணம் வரை செய்துகொண்டே இருக்க வேண்டுமா? என விசாரம்.

பூர்வபக்ஷம் - த்யானம் செய்ய வேண்டும் என்றுதான் வேதம் சொல்லியுள்ளது; அதை ஒருதடவை செய்தால் போதும்; வேதம் சொன்ன அந்த ஶாஸ்த்ரத்தைக் கடைப்பிடித்ததாக ஆகிவிடும். கடைசி மரணம் வரை செய்ய வேண்டாம்.

ஸித்தாந்தம் - மரணம் வரை தொடர்ந்து உபாஸநம் செய்ய வேண்டும். அப்படி வேதமே தெளிவாக சொல்லியுள்ளது.

“குடும்பத்தில் வேதம் ஓதிக்கொண்டு யாகம் முதலிய தர்மகார்யங்கள் செய்துகொண்டு ..... இப்படி ஆயுள் முடியும் வரை இருப்பவன், ப்ரஹ்மலோகத்தை அடைகிறான்; திரும்பி வருவதில்லை” என்கிறது வேதவாக்யம். அதாவது ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாக தர்மானுஷ்டானம் செய்துகொண்டு இருப்பவன் அந்த ப்ரஹ்மவித்யையின் பலனாக ப்ரஹ்மலோகம் அடைவான் என்று கருத்து.

ப்ராரப்தகர்மம் முடியும் இறுதி மரணம் வரை உபாஸநம் செய்ய வேண்டும்; ப்ராரப்தகர்மம் ஆனது சிலருக்கு இந்த ஜன்மத்திலேயே தொலையும்; சிலருக்கு அடுத்த பிறவியிலும் தொடரலாம்; அப்படியானால், அதுவரை உபாஸநம் தொடர வேண்டும் என்று கருத்து.

१२९. आप्रयाणाधिकरणम् (४-१-६)

४८१.आप्रयाणात् तत्रापि हि दृष्टम् (४-१-१२)

तदिदमपवर्गसाधनमुक्तलक्षणमुपासनमेकाह एव सम्पाद्यम्, उत आप्रयाणात् प्रत्यहमनुवर्तनीयमिति विशये।

एकस्मिन्नेवाहनि शास्त्रार्थस्य कृतत्वात् तावतैव परिसमापनीयमिति प्राप्ते उच्यते -

आप्रयाणात् इति। आमरणादनुवर्तनीयम्; कुतः? **तत्रापि हि दृष्टम्** - उपासनोद्योगप्रभृति आप्रयाणान्मध्ये यः कालः, तत्र सर्वत्रापि दृष्टमुपासनम् ''**स खल्वेवं वर्तयन् यावदायुषं ब्रह्मलोकमभिसम्पद्यते**''(छा.8-15-1)[1] इति॥ १२ ॥

* * *

इति आप्रयाणाधिकरणम्॥ ६ ॥

129. ஆப்ரயாணாதிகரணம் (4-1-6)

481.ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம் (4-1-12)

ததிதம் அபவர்கஸாதநம் உக்தலக்ஷணமுபாஸநம் ஏகாஹ ஏவ ஸம்பாத்யம், உத ஆப்ரயாணாத் ப்ரத்யஹமநுவர்தநீயம் இதி விஶயே।

ஏகஸ்மிந்நேவாஹநி ஶாஸ்த்ரார்தஸ்ய க்ருதத்வாத் தாவதைவ பரிஸமாபநீயம் இதி ப்ராப்தே உச்யதே -

ஆப்ரயாணாத் - இதி। ஆமரணாதநுவர்தநீயம்; குத:? *தத்ராபி ஹி த்ருஷ்டம்* - உபாஸநோத்யோகப்ரப்ருதி ஆப்ரயாணாத் மத்யே ய: கால:, தத்ர ஸர்வத்ராபி த்ருஷ்டமுபாஸநம் ''*ஸ கல்வேவம் வர்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே*'' (சா.8-15-1)[1] இதி।। 12 ।।

* * *

இதி ஆப்ரயாணாதிகரணம்।। 6 ।।

* * *

129. ஆப்ரயாணாதிகரணம் (4-1-6)

481. ஆப்ரயாணாத் தத்ர அபி ஹி த்ருஷ்டம் (4-1-12)

[உபாஸநம் ஆனது] மரணம் வரை ஆகும்; ஏனெனில், அப்போதும் ஆவதை வேதம் சொல்கிறது.

ஸம்ஶயம் (சந்தேஹம்)

மோக்ஷத்துக்கு உபாயமாக முன் சொன்னபடியாக ஆகும் இந்த உபாஸநம் ஆனது, ஒருநாளில் மட்டும் செய்யப்பட வேண்டுமா? அல்லது மரணம் வரை தினமும் தொடரப்பட வேண்டுமா? என்று சந்தேஹம்.

பூர்வபக்ஷம்

ஒரே நாளிலேயே ஶாஸ்த்ர-பொருள் செய்யப்பட்டதாக ஆகிவிடும்; அதனால், அவ்வளவிலேயே முடிக்கப்பட வேண்டும்

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **'ஆப்ரயாணாத்'** என்று. மரணம் வரை தொடர்ந்து செய்யப்பட வேண்டும்; ப்ராரப்த கர்மம் முடியும் இறுதி ஶரீரமரணம் வரை என்று கருத்து. (காண்க -அதிகரணம் (4-1-11)

ஏன் ? **தத்ர அபி ஹி த்ருஷ்டம்** - உபாஸநம் ஆரம்பித்தது முதல் மரணம் வரை நடுவில் எந்த காலமோ, அப்போதும் உபாஸநம் செய்வது வேதத்தில் காணப்படுகிறது - [1]**"அவன் ஆயுள் வரை இப்படியே இருப்பவனாய் ப்ரஹ்ம-லோகத்தை அடைகிறான்"** என்று.

* * *

ஆப்ரயாணாதிகரணம் முற்றிற்று

130. ததிகமாதிகரணம் (4-1-7)

முன்குறிப்பு

இதுவரை உபாயம் ஆன ப்ரஹ்ம-வித்யையைப் பற்றி சொன்னார். இனி ப்ரஹ்ம-வித்யையயின் பலன் பற்றி விசாரம் செய்யப் போகிறார்.

உபாயத்தைப் பற்றி மூன்றாவது அத்யாயத்தில் சேர்க்க வேண்டும்; ஆனால், இந்த நான்காவது அத்யாயத்தில் பலனைச் சொல்லும்போது அதனையும் சேர்த்திருக்கிறார். அதற்கு என்ன காரணம் என்பதை இந்த பாதத்தின் முன்குறிப்பில் காணலாம்.

ப்ரஹ்மவித்யை என்பது ப்ரஹ்மம் பற்றிய உபாஸநம் ஆகும்; அந்த உபாயம் கைகூடும்போது, அதுவரை செய்த முன் பாபங்கள் அழியும்; இனி பின்னர் செய்யப்போகும் பாபங்கள் ஒட்டாது. இதனை வேதம் சொல்கிறது. அது பற்றிய விசாரம் இங்கு.

பூர்வபக்ஷம் - பாபங்கள் அனுபவம் மூலமாகவே அழியும்; அல்லது ப்ராயச்சித்தம் மூலம் அழியலாம்; வேறு வழியில் அழியாது; அப்படி இருக்க ப்ரஹ்மவித்யையால் பாபங்கள் எப்படி அழியும்?

ஸித்தாந்தம் - ப்ரஹ்மவித்யை என்பது, பாபங்களை அழிக்கும் ப்ராயச்சித்தம் ஆகும்; அதனால், அதன் மூலம் பாபம் அழியலாம்.

கேள்வி:- ப்ரஹ்மவித்யை என்பது மோக்ஷபலனுக்கான உபாயம் ஆகும்; அது எப்படி ப்ராயச்சித்தம் ஆக முடியும்?

பதில்:- அது ப்ராயச்சித்தம்தான்; தனியொரு உபாயம் அல்ல; மோக்ஷ-பலனுக்கு உபாயம் தேவையில்லை; அது தானாகவே வரும்; அந்த பலனை நாம் நம் பாபத்தால் தடுத்து நிற்கிறோம்; அந்த தடையைப் போக்கினால் போதும்; மோக்ஷம் தானாக வரும்; மடையைத் திறந்தபின் நீர் தானாக வெளிவருவதுபோல இது ஆகும்.

ஸூத்ரத்தின் கருத்து:- ப்ரஹ்மவித்யை என்பது ப்ரஹ்மம் பற்றிய உபாஸநம் ஆகும்; அதைச் செய்ய ஆரம்பித்து நல்ல பழக்கம் ஆனவுடன் ப்ரஹ்மத்தை நேராகக் காண்பது போன்ற நிலையில் ஞாந-முதிர்ச்சி வரும்; இந்த நிலையைப் பெற்றால் ப்ரஹ்ம-வித்யையைப் பெற்றதாகும்; அப்போது இவனுக்கு முன் செய்த பாபங்கள் அழியும்; செய்யப் போகும் பாபங்கள் ஒட்டாது.

அதாவது அப்போது, பரமாத்மாவானவன் ஒரு ஸங்கல்பம் செய்கிறான் - 'உபாஸநம் செய்யும் இவன் இறுதி வரை செய்வானானால் இறுதியில், புண்யபாபங்களை நான் அழிப்பேன்; இனி செய்யப் போகும் பாபங்களையும் பலன் ஒட்டாதபடி ஆக்குவேன்'' என்று.

பின்னர் இதே நிலையில் தொடர்ந்து மரணம் வரை உபாஸநம் செய்ய வேண்டும்; இறுதியில் பரமாத்மா இவனது பாபங்களை ஒழிப்பான்; அதனால், தடையின்றி இவன் மோக்ஷம் பெறுவான். குறிப்பாக சரணாகதி என்னும் உபாயம் செய்தவுடன் அப்போதே முன்-பாபங்கள் தொலையும்; தன்னை அறியாமல் நேரிடும் பின்-பாபங்களும் ஒட்டாது - என்கிற விஷயத்தை இந்த அதிகரணம் உணர்த்தும் என்று ஸ்ரீஸ்ருதப்ரகாஸிகையில் அருளுகிறார்.

१३०. तदधिगमाधिकरणम् (४-१-७)

४८२.तदधिगम उत्तरपूर्वाघयोरश्लेषविनाशौ तद्व्यपदेशात् (४-१-१३)

एवं विद्यास्वरूपं विशोध्य विद्याफलं चिन्तयितुमारभते।

ब्रह्मविद्याप्राप्तौ पुरुषस्योत्तरपूर्वाघयोरश्लेषविनाशौ श्रूयेते -

★ **''तद्यथा पुष्करपलाश आपो न श्लिष्यन्ते, एवमेवंविदि पापं कर्म न श्लिष्यते''** (छा.4-14-3)[1],

★ **''तस्यैवाऽऽत्मा(व स्यात्) पदवित् तं विदित्वा। न कर्मणा लिप्यते पापकेन''** (तै.का.3-12-18)(बृ.6-4-23)[2] इत्युत्तराघाश्लेषः,

★ **''तद्यथेषीकातूलमग्नौ प्रोतं प्रदूयेत, एवं हास्य सर्वे पाप्मानः प्रदूयन्ते''** (छा.5-24-3)[3],

★ **''क्षीयन्ते चास्य कर्माणि तस्मिन् दृष्टे परावरे''** (मु.2-2-5)[4] इति पूर्वाघविनाशः।

एतावश्लेषविनाशौ विद्याफलभूतावुपपद्येते, नेति संशयः।

किं युक्तम्? नोपपद्येते इति। कुतः? **''नाभुक्तं क्षीयते कर्म कल्पकोटिशतैरपि''**[5]

---

130. தததிகமாதிகரணம் (4-1-7)

482. தததிகம உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ தத்வ்யபதேஶாத் (4-1-13)

ஏவம் வித்யாஸ்வரூபம் விஶோத்ய வித்யாபலம் சிந்தயிதுமாரபதே; ப்ரஹ்மவித்யாப்ராப்தௌ புருஷஸ்ய உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶௌ ஶ்ரூயேதே,

★ *''தத்யதா புஷ்கரபலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்தே, ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே''* (சா.4-14-3)[1],

★ *''தஸ்யைவாऽऽத்மா (வ ஸ்யாத்) பதவித் தம் விதித்வா ந கர்மணா லிப்யதே பாபகேந''* (தை.கா.3-12-18)(ப்ரு.6-4-23)[2] இதி உத்தராகாஶ்லேஷ:,

★ *''தத்யதேஷீகாதூலமக்நௌ ப்ரோதம் ப்ரதூயேத, ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே''* (சா.5-24-3)[3],

★ *''க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே''* (மு.2-2-8)[4] இதி பூர்வாகவிநாஶ:।

ஏதாவஶ்லேஷவிநாஶௌ வித்யாபலபூதௌ உபபத்யேதே, நேதி ஸம்ஶய:।

கிம் யுக்தம்? நோபபத்யேதே இதி। குத:? *''நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்*[5]-

In Public domain: Digitization by Sanskrit Research Academy

130. ததிகமாதிகரணம் (4-1-7)

482. ததிகமே உத்தரபூர்வாகயோ: அஶ்லேஷவிநாசௌ தத்வ்யபதேஶாத் (4-1-13)

அந்த வித்யையைப் பெறும்போது பின்-முன்-பாபங்களுக்கு ஒட்டாமையும் அழிவும் வரும்; அதைச் சொல்வதால்.

ஸங்கதி (விஷய-தொடர்பு)

இப்படியாக ப்ரஹ்ம-வித்யையின் ஸ்வரூபத்தை ஆராய்ந்தபின் வித்யையின் பலனைப் பற்றி விசாரம் செய்ய ஆரம்பிக்கிறார்.

விஷயவாக்யம்

ப்ரஹ்ம-வித்யையை பெற்றவுடன் மனிதனுக்கு, அதற்குப் பின்செய்யும் பாபங்கள் ஒட்டாது என்பதும், முன் செய்த பாபங்கள் அழியும் என்பதும் வேதத்தில் சொல்லப்பட்டது -

- [1]**தாமரை-இலையில் தண்ணீர் எப்படி ஒட்டாதோ அப்படி இதை உபாஸநம் செய்பவனிடம் பாப-செயல் ஒட்டாது.**
- [2]**அந்த பரமாத்மாவின் ஸ்வரூபத்தை உபாஸநம் செய்பவன் ஆகவே இருக்கும் ஜீவன், அந்த ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்து பாப-செயலினால் ஒட்டுவதில்லை.**

என்று பிந்தைய-பாபம் ஒட்டாது என சொல்லப்பட்டது.

✍*(அதாவது ப்ரஹ்ம உபாஸநம் செய்பவன், அதற்குப் பின் புன்ய-பாபங்கள் செய்தாலும் அவற்றின் பலன் ஒட்டாது என்று அர்த்தம்)*✍

- [3]**தீயினில் இட்ட முஞ்ஜம் எனும் புல்லினுடைய பஞ்சு ஆனது எப்படி பொசுங்குமோ, அப்படியே இவனுடைய,(வைஶ்வாநர வித்யையின் அங்கமாக ப்ராண-அக்நிஹோத்ரம் செய்பவனுடைய) எல்லா பாபங்களும் பொசுங்கும்.**
- [4]**பராவரன் ஆன அவன் காணப்படும்போது இவனது பாபங்கள் அழியும்.’’**

என்று முந்தைய-பாபம் அழியும் என சொல்லப்பட்டது.

ஸம்ஶயம் (ஸந்தேஹம்)

முன் பாபங்களின் ஒட்டாமையும், பின் பாபங்கள் அழிவதும் ஆன இவை இரண்டும் வித்யையின் பலனாக ஆகுமா? ஆகாதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? வித்யையின் பலனாக இவை ஆகாது என்பது; ஏன்? [5]‘‘**நூற்றுக் கணக்கான கோடி கல்பங்கள் ஆனாலும், அனுபவிக்கப்படாத (புண்ய-பாப)கர்மம்**

(ब्र.वै.प्र.ख.26-70) इत्यादिशास्त्रविरोधात्। अश्लेषविनाशव्यपदेशस्तु मोक्षसाधनभूतविद्याविधायिवाक्यशेषगतः कथञ्चिद्विद्यास्तुतिप्रतिपादनेनाप्युपपद्यते।

न च विद्या पूर्वोत्तराघयोः प्रायश्चित्ततया विधीयते; येन प्रायश्चित्तेनाघविनाश उच्यते। विद्या हि, ‘‘**ब्रह्मविदाप्नोति परम्**’’(तै.1.आन.2)[1], ‘‘**ब्रह्म वेद ब्रह्मैव भवति**’’(मु.3-2-9)[2] इति ब्रह्मप्राप्त्युपायतया विधीयते। अतो विद्यार्थवादोऽयमघविनाशाश्लेषव्यपदेश इति।

एवं प्राप्तेऽभिधीयते - **तदधिगमे** इति। विद्याप्राप्तौ पुरुषस्य विद्यामाहात्म्यादुत्तरपूर्वाघयोरश्लेषविनाशावुपपद्येते। कुतः? एवंविधं हि विद्यामाहात्म्यमवगम्यते,

- ‘‘**एवंविदि पापं कर्म न श्लिष्यते**’’(छा.4-14-3)[3],
- ‘‘**एवं हास्य सर्वे पाप्मानः प्रदूयन्ते**’’(छा.5-24-3)[4] इत्यादिव्यपदेशात्।

न च, ‘‘**नाभुक्तं क्षीयते कर्म**’’ (ब्र.वै.प्र.ख.26-70)[5] इत्यनेन शास्त्रेणास्य विरोधः; भिन्नविषयत्वात्।

பகோடிஶதைரபி’’ (ப்ர.வை.ப்ர.க.26-70) இத்யாதிஶாஸ்த்ரவிரோதாத்। அஶ்லேஷ-விநாஶ-வ்யபதேஶஸ்து மோக்ஷஸாதநபூதவித்யாவிதாயிவாக்யஶேஷகத: கதஞ்சித்வித்யாஸ்துதிப்ரதிபாதநேநாபி உபபத்யதே।

ந ச வித்யா பூர்வோத்தராகயோ: ப்ராயஶ்சித்ததயா விதீயதே; யேந ப்ராயஶ்சித்தேந அகவிநாஶ உச்யதே। வித்யா ஹி, ‘‘*ப்ரஹ்மவிதாப்நோதி பரம்*’’ (தை.1. ஆந.2)[1], ‘‘*ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி*’’ (மு.3-2-9)[2] இதி ப்ரஹ்மப்ராப்த்யுபாயதயா விதீயதே। அத: வித்யார்தவாதோऽயம் அகவிநாஶாஶ்லேஷவ்யபதேஶ இதி।

ஏவம் ப்ராப்தேऽபிதீயதே - *தததிகமே* - இதி। வித்யாப்ராப்தௌ புருஷஸ்ய வித்யாமாஹாத்ம்யாத் உத்தரபூர்வாகயோ: அஶ்லேஷவிநாஶௌ உபபத்யேதே। குத:? ஏவம்விதம் ஹி வித்யாமாஹாத்ம்யமவகம்யதே,

- ‘‘*ஏவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே*’’ (சா.4-14-3)[3],
- ‘‘*ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூயந்தே*’’ (சா.5-24-3)[4] இத்யாதி வ்யபதேஶாத்।

ந ச, ‘‘*நாபுக்தம் க்ஷீயதே கர்ம*’’ (ப்ர.வை.ப்ர.க.26-70)[5] இத்யநேந ஶாஸ்த்ரேண அஸ்ய விரோத:; பிந்நவிஷயத்வாத்।

அழியாது'' முதலிய ஶாஸ்த்ரங்கள் உள்ளன; அவற்றுடன் முரண்படுவதால், (வித்யையால் கர்மம் அழியும் என்பதும் ஒட்டாது என்பதும் வராது).

ஒட்டாமையையும் அழிவதையும் வேதம் சொன்னதானது, மோக்ஷத்துக்கான உபாயமாக வித்யையை விதிக்கும் வாக்யத்தின் மிகுதியில் உள்ளது; அதனால், வித்யையைப் புகழ்வதைச் சொல்வதாக எப்படியாவது சரியாகும். (அதிகப்படியாக சொல்லி புகழ்கிறதே தவிர உண்மையல்ல).

(**உள்கேள்வி -** வித்யை என்பது ப்ராயச்சித்தம் ஆகும்; அதனால், ப்ராயச்சித்தத்தால் புண்யபாபங்கள் அழிவது ஆகும்.)

உள்மறுப்பு - எந்த ப்ராயச்சித்தத்தால் பாபம் அழிவதாக சொல்லப்படுகிறதோ, அப்படியாக முன்-பின் பாபங்களுக்கு ப்ராயச்சித்தமாக வித்யை விதிக்கப்படவில்லை ஏனெனில், [1]**''ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவன் பரப்ரஹ்மத்தை அடைவான்'',** [2]**''ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவன் ப்ரஹ்மமாகவே ஆகிறான்''** என்று ப்ரஹ்மத்தை அடைதலுக்கு உபாயமாக வித்யை விதிக்கப்படுகிறது. (ஒன்றைக் குறித்து உபாயமாக ஆவது, மற்றொன்றுக்கு ப்ராயச்சித்தமாக ஆகாது).

அதனால், பாபம் ஒட்டாமையையும் அழிவதையும் வேதம் சொன்னதானது, வித்யையின் அர்த்தவாதம் ஆகும் (அதில் சொன்ன பொருளை அப்படியே எடுத்துக்கொள்ளக் கூடாது).

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **'தததிகமே (அந்த ப்ரஹ்மவித்யையை அடையும்போது)'** என்று.

அந்த ப்ரஹ்ம-வித்யையை அடையும்போது மனிதனுக்கு வித்யையின் பெருமையால், முன்-பின்-பாபங்கள் ஒட்டாமையும் அழிவதும் வருவதாகும்.

ஏன்? (**தத்வ்யபதேசாத் -** அதைச் சொல்வதால்)

- [3]**''இதை உபாஸநம் செய்பவனிடம் பாப-செயல் ஒட்டாது'',**
- [4]**''இவனது எல்லா பாபங்களும் பொசுங்கும்''**

என்று சொல்லியிருப்பதால்; இப்படியாகத்தானே வித்யையின் பெருமை தெரிகிறது.

கேள்வி - [5]**''அனுபவிக்கப்படாத கர்மம் அழியாது''** முதலிய ஶாஸ்த்ரத்துடன் இதற்கு முரண்பாடு வரும்.

பதில் - இரண்டும் வெவ்வேறு விஷயம் பற்றி ஆவதால், முரண்பாடு வராது.

(அந்த ஶாஸ்த்ரமானது, கர்மங்களின் திறன் பற்றியது; இந்த ஶாஸ்த்ரமானது, வித்யையின் திறன் பற்றியது; முன் சொன்ன அந்த கர்மங்களின் திறனை அழிக்கும் திறன் வித்யைக்கு உண்டு என்கிறது)

तद्धि कर्मणां फलजननसामर्थ्यद्रढिमविषयम्; एतत्तु उत्पन्नाया विद्यायाः प्राक्कृतानां पाप्मनां फलजननशक्तिविनाशसामर्थ्यम्, उत्पत्स्यमानानां च फलजननशक्त्युत्पत्तिप्रतिबन्धकरणसामर्थ्यञ्च प्रतिपादयतीति द्वयोर्विषयो भिद्यते। यथा अग्निजलयोरौष्ण्यतन्निवारणसामर्थ्यविषययोर्द्वयोः प्रमाणयोरपि विषयभेदात् प्रामाण्यम्, एवमत्रापीति न कश्चिद्विरोधः।

अघस्याश्लेषकरणं - वैदिककर्मायोग्यतावासनाप्रत्यवायहेतुशक्त्युत्पत्तिप्रतिबन्धकरणम्। अघानि हि कृतानि पुरुषस्य वैदिककर्मायोग्यताम्, सजातीयकर्मान्तरारम्भरुचिम्, प्रत्यवायं च कुर्वन्ति। अघस्य विनाशकरणम् - उत्पन्नायास्तच्छक्तेर्विनाशकरणम्। शक्तिरपि परमपुरुषाप्रीतिरेव।

तदेवं विद्या वेदितुर्वेद्यात्यर्थप्रियत्वेन स्वयमपि निरतिशयप्रिया सती वेद्यभूतपरमपुरुषाराधनस्वरूपा पूर्वकृताघसञ्चयजनितपरमपुरुषाप्रीतिं विनाशयति; सैव विद्या स्वोत्पत्त्युत्तरकालभाव्यघनिमित्तपरमपुरुषाप्रीत्युत्पत्तिं च प्रतिबध्नाति॥

தத்தி கர்மணாம் பலஜநநஸாமர்த்யத்ரடிமவிஷயம்; ஏதத்து உத்பந்நாயா வித்யாயா: ப்ராக்க்ருதாநாம் பாப்மநாம் பலஜநந-ஶக்தி-விநாஶஸாமர்த்யம், உத்பத்ஸ்யமாநாநாம் ச பலஜநந-ஶக்த்யுத்பத்திப்ரதிபந்தகரணஸாமர்த்யஞ்ச ப்ரதிபாதயதீதி த்வயோர்விஷயோ பித்யதே। யதா அக்நிஜலயோ: ஔஷ்ண்ய-தந்நிவாரணஸாமர்த்யவிஷயயோ: த்வயோ: ப்ரமாணயோரபி விஷயபேதாத் ப்ராமாண்யம், ஏவமத்ராபீதி ந கஶ்சித் விரோத:।

அகஸ்யாஶ்லேஷகரணம் - வைதிககர்மாயோக்யதா-வாஸநாப்ரத்யவாயஹேதுஶக்த்யுத்பத்திப்ரதிபந்தகரணம்। அகாநி ஹி க்ருதாநி புருஷஸ்ய வைதிககர்மாயோக்யதாம், ஸஜாதீயகர்மாந்தராரம்பருசிம், ப்ரத்யவாயம் ச குர்வந்தி। அகஸ்ய விநாஶகரணம் - உத்ப்பந்நாயா: தச்சக்தே: விநாஶகரணம்। ஶக்திரபி பரமபுருஷாப்ரீதிரேவ।

ததேவம் வித்யா வேதிது: வேத்யாத்யர்தப்ரியத்வேந ஸ்வயமபி நிரதிஶயப்ரியா ஸதீ வேத்யபூதபரமபுருஷாராதநஸ்வரூபா பூர்வக்ருதாகஸஞ்சயஜநிதபரமபுருஷாப்ரீதிம் விநாஶயதி; ஸைவ வித்யா ஸ்வோத்பத்த்யுத்தரகாலபாவ்யகநிமித்தபரமபுருஷாப்ரீத்யுத்பத்திம் ச ப்ரதிபத்நாதி।

- புண்ய-பாப-கர்மங்களுக்கு, பலனை உண்டாக்கும் திறன் திடமாக கட்டாயம் உண்டு என்பதைப் பற்றி அந்த ஶாஸ்த்ரம் ஆகிறது.
- முன் செய்த பாபங்களுக்கு, பலனை உண்டாக்கும் திறன் உண்டு; அந்த திறனை அழிக்கும் திறன், உண்டாகும் வித்யைக்கு உண்டு என இந்த ஶாஸ்த்ரம் சொல்கிறது; அப்படியே இனி வரப்போகும் கர்மங்களுக்கு பலனை உண்டாக்கும் திறன் உண்டாவதைத் தடுக்கும் திறன் வித்யைக்கு உண்டு என அறிவிக்கிறது.

அதனால், இரண்டுக்கும் விஷயம் வெவ்வேறு ஆகும்.

(உ.ம்) அக்நிக்கு சுடும் திறன் உண்டு; ஜலத்துக்கு சூட்டினை அழிக்கும் திறன் உண்டு என இரு திறன்களைப் பற்றிய இரு ப்ரமாணங்கள் உள்ளன; இரண்டும் சரியான ப்ரமாணம் ஆகும்; ஏனெனில், இரண்டுக்கும் விஷயம் வெவ்வேறு ஆகும். அது எப்படியோ, அப்படியே இங்கும் ஆகும் என்பதால் ஒரு முரண்பாடும் இல்லை.

மனிதன் செய்த பாபச் செயல்கள் -

1. மனிதனுக்கு வைதிககர்மங்களில் தகுதியின்மையை உண்டாக்கும்.
2. அதே வகையிலான மற்றொரு பாபத்தை செய்வதில் ஆசையை உண்டாக்கும்.
3. பாபத்தையும்(துன்பத்தையும்) உண்டாக்கும்.

எனவே, பாபத்தை ஒட்டாமல் பண்ணுதல் என்பது - வைதிககர்மங்களில் தகுதியின்மை, வாசனை, குறை (துன்பம்) ஆகிய இவற்றை உண்டாக்கும் திறன் பாபங்களுக்கு வரப்போவதைத் தடுத்தல் ஆகும்.

பாபத்தை அழித்தல் என்பது - ஏற்கனவே உண்டாகியிருக்கும் அந்த திறனை அழித்தல் ஆகும்; பாபங்களின் திறன் என்பதும் பரமபுருஷனின் ப்ரீதியின்மைதான்.

வித்யை மூலம் உபாஸநம் செய்யப்படும் பகவான் மிகவும் ப்ரியமானவனாக இருக்கிறான்; அதனால், வித்யைதானும், அளவற்ற அன்பு என்பதாகவே உள்ளது; அது உபாஸநம் செய்யப்படும் பரமபுருஷனுக்கு (ப்ரீதியை உண்டாக்கும்) ஆராதநம் ஆகிறது; எனவே, இப்படியான வித்யை ஆனது, ஜீவன் முன்னர் செய்த பாபக் கூட்டத்தால் பரமபுருஷனுக்கு உண்டான ப்ரீதியின்மையை அழிக்கிறது; அதே வித்யையே தான் உண்டானபின் மனிதன் செய்யப்போகும் பாபத்தால் பரமபுருஷனுக்கு வரக்கூடிய ப்ரீதியின்மை உண்டாவதைத் தடுக்கிறது.

तदिदमश्लेषवचनं प्रामादिकविषयं मन्तव्यम्; ‘‘नाविरतो दुश्चरितात्’’ (क.2-24)[1] इत्यादिभिः शास्त्रैराप्रयाणादहरहरुत्पद्यमानायाः उत्तरोत्तरातिशयभागिन्याः विद्यायाः दुश्चरितविरतिनिष्पाद्यत्वावगमात्॥ १३ ॥

* * *

इति तदधिगमाधिकरणम् ॥ ७ ॥

ததிதம் அஶ்லேஷவசநம் ப்ராமாதிகவிஷயம் மந்தவ்யம், *‘‘நாவிரதோ துஶ்சரிதாத்’’*(க.2-24)[1] இத்யாதிபி: ஶாஸ்த்ரை: ஆப்ரயாணாத் அஹரஹருத்பத்யமாநாயா: உத்தரோத்தராதிஶயபாகிந்யா: வித்யாயா: துஶ்சரிதவிரதிநிஷ்பாத்யத்வாவகமாத்।। 13 ।।

* * *

இதி தததிகமாதிகரணம் ।। 7 ।।

* * *

ஒட்டாமையைச் சொன்ன இந்த வாக்யமானது அறியாமல் நேரிடும் புண்ய-பாபம் பற்றியது; ஏனெனில், வித்யை ஆனது, மரணம் வரை தினம்தினம் உண்டாகி மேன்மேலும் சிறப்பு பெறப்போவது; பாப-செயல்களை செய்வதை நிறுத்தினாலே அந்த வித்யை உண்டாகும்; இது **“பாப-செயல்களிலிருந்து ஓயாதவன், உபாஸநம் மூலம் பகவானை அடைய முடியாது”** முதலிய ஶாஸ்த்ரங்களால் தெரிகிறது.

(எனவே, வித்யைக்கு பின்னர், அறியாமல் நேரிடும் புண்ய-பாபங்கள் ஒட்டாது; அறிந்தே புண்ய-பாபம் செய்தால், அது கட்டாயம் ஒட்டும் என்று கருத்து).

* * *

ததிகமாதிகரணம் முற்றிற்று.

* * *

131.இதராதிகரணம் (4-1-8)

முன் குறிப்பு

இது அதிதேஶமுறையில் வந்த அதிகரணம்.

அதிதேஶம் என்றால், முன் கையாண்ட முறையையே பின்னரும் பின்பற்றச் சொல்லுதல் ஆகும்.

போன அதிகரணத்தில் சொன்ன முறையில் இங்கும் பூர்வபக்ஷமும் ஸித்தாந்தமும் வைத்துக் கொள்ள வேண்டும்.

போன அதிகரணத்தில் சொன்ன விஷயம் என்ன? ப்ரஹ்மவித்யைக்கு முன் செய்த பாபங்கள் அழியும்; பின் செய்யப்போகும் பாபங்கள் ஒட்டாது என்பதுதான்.

பாபங்கள் அழிந்தும் ஒட்டாமலும் ஆவது போல, புண்யங்களும் ஆகும்; வித்யைக்கு முன் செய்த புண்யங்கள் அழியும்; பின் செய்யும் புண்யங்கள் ஒட்டாது என்பதை இந்த அதிகரணத்தில் தெரிவிக்கிறார்.

கேள்வி- போன அதிகரணத்தில் சொன்ன அதே முறையில் பூர்வபக்ஷம், ஸித்தாந்தம் இங்கும் வரும். அப்படியானால், தனி அதிகரணம் எதற்கு?

பதில்- அதிகமான ஒரு கேள்விக்கு பதில் சொல்வதற்காக என்று வைத்துக் கொள்ளவும். அதிதேசமுறையில் அதிகரணம் வருவதானால், அதிகப்படியாக ஒரு கேள்வி-பதில் இருக்கும்.

அதிகமான கேள்வி:- பாபத்தை யாரும் விரும்புவதில்லை; அதனால், அது அழியட்டும்; அல்லது ஒட்டாமல் போகட்டும்; ஆனால், புண்யத்தை எல்லாரும் விரும்புவர்; புண்யத்தை செய்யச் சொல்லி ஶாஸ்த்ரமே கட்டளை இடுகிறது; எனவே, அது வித்யைக்கு முரண் பட்டதல்ல; அதனால், புண்யம் அழிவதாகச் சொல்ல வேண்டாம்.

பதில்:- புண்யமும் கூட மோக்ஷத்துக்கு விரோதிதான்! அதனால் அதையும் ஒழிக்க வேண்டும்; வேதமானது, புண்யத்தையும் பாபம் என்றே குறிப்பிடுகிறது.

மோக்ஷம் எனும் பலன்தானே முக்கியமானது! அதற்குத் தடையாக பாபம் ஆவது போல், புண்யமும் ஆகும்; அதனால், அதையும் பாபம் என்கிறது.

வேண்டாததான தீங்கான ஒரு பலனைத் தருவது பாபம்; புண்யமும் கூட நமக்கு வேண்டாததான ஸம்ஸாரபலனைத் தான் தருகிறது; அதனால், அதையும் பாபம் என்று சொல்வதில் தவறில்லை.

வித்யைக்கு தேவையாக செய்த புண்யங்களில் சில அந்தந்த பலனை அளிப்பதன் மூலம், வித்யையை உண்டாக்குவதற்காக உபயோகப்படும்; அவை தவிர மீதி இருக்குமானால் அவை ஶரீரம் விழுந்த பின்னர் அழியும்

१३१. इतराधिकरणम् (४-१-८)

४८३.इतरस्याप्येवमसंश्लेषः पाते तु (४-१-१४)

उत्तरपूर्वाघयोर्विद्यया अश्लेषविनाशावुक्तौ।

इतरस्य - पुण्यस्यापि, **एवम्** - उक्तेन न्यायेनाश्लेषविनाशौ विद्यया स्याताम्, विद्याफलविरोधित्वसामान्यात्; व्यपदेशाच्च। भवति च व्यपदेशः उभे सुकृतदुष्कृते निर्दिश्य,

- ★ ‘‘**सर्वे पाप्मानोऽतो निवर्तन्ते**’’(छा.8-4-1)[1] इति,
- ★ ‘‘**तत् सुकृतदुष्कृते धूनुते**’’(कौ.1-4)[2] इति च।

(வேதத்தில்) [1]**''இந்த ஜீவனாகிற (ஜீவனுக்கு அந்தர்யாமியாகிற) ஆத்மாவால் உட்புகுந்து நாம-ரூபங்களுடன் கூடியதாக ஆக்குவேன்; (அதற்காக) அவற்றில் ஒவ்வொன்றையும் மூன்றுடன் கலந்ததாக ஆக்குவேன்''** என்று, நாம-ரூபங்களுடன் கூடியதாக ஆக்க தகுதி பெறுவதற்காக ஒவ்வொன்றையும் மூன்று-கலந்ததாக ஆக்குவது உபதேஶம் செய்யப்படுகிறது.

(ஸ்ம்ருதியிலும்), [2]**''பல திறன் கொண்ட அவை தனித்தனியாக இருந்தன; அதனால், அவை சேராமல் முழுவதுமாக கலக்காமல் பொருள்களைப் படைக்க முடியவில்லை; மஹத்-தத்த்வம் முதல் பஞ்ச-பூத-விசேஷங்கள் வரையான அவை ஒன்றுக்கொன்று தொடர்பு பெற்று, ஒன்றுக்கொன்று கலந்து அண்டத்தை உண்டாக்குகின்றன''** என்று உள்ளது.

அதனால், [3]**''ப்ராணன் தேஜஸ்ஸில் (சேர்கிறது)''** என்று, **'தேஜஸ்'** எனும் சொல்லால் பிற பூதங்களுடன் சேர்ந்த தேஜஸ் சொல்லப்படுகிறது.

ப்ரயோஜனம் (பலன்) -

ஆகவே, (பஞ்ச)பூதங்களில்தான் ப்ராணன் சேர்வதாகும்.

* * *

பூதாதிகரணம் முற்றிற்று.

139. ஆஸ்ருத்த்யுபக்ரமாதிகரணம் (4-2-5)

முன் குறிப்பு

ஜீவன் மரணமாகும் காலத்தில் ஶரீரத்திலிருந்து வெளியேறும் முறையை சொல்லியாயிற்று. இந்த வெளியேற்றம் ஆனது, எல்லாருக்கும் பொதுவாக உண்டா? அல்லது ப்ரஹ்மத்தை உபாஸனம் (த்யானம்) செய்யாதவனுக்கு மட்டுமா? என்று விசாரம்.

இது எல்லாருக்கும் பொதுவானது; உபாஸநம் செய்பவனுக்கும் உண்டு..

''ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவன் ஸுஷும்நா எனும் நாடியைப் பற்றிக்கொண்டு, நடுமண்டை வழியாக வெளியேறி, மோக்ஷம் பெறுகிறான்'' என்று வேதம் சொல்கிறது. எனவே, ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவனும் ஶரீரத்திலிருந்து வெளியேறுவான் என்பது தெரிகிறது.

இதில் எந்த நாடி வழியாக வெளியேறுகிறான் என்பதில் வித்யாசம் உண்டு; அதற்கு முன் வரை, வித்யாசம் இல்லை. அதாவது, முன் சொன்னபடி பஞ்சபூதங்களில் சேர்வது வரை எல்லா மனிதர்களுக்கும் பொதுவானது.

பூர்வபக்ஷம் - ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்தவனுக்கு இந்த வெளியேற்றம் என்பது கிடையாது. அவன் வெளியேறிப் போக வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், அவன் இங்கேயே அம்ருதன் ஆகிறான் என்றும் இங்கேயே ப்ரஹ்மத்தை அனுபவிப்பான் என்றும் வேதம் சொல்கிறது. எனவே, பலன் இங்கேயே கிடைத்து விடுவதால், அவன் எங்கும் வெளியேறிப் போக வேண்டியதில்லை. எனவே, இதுவரை சொன்ன வெளியேறும் முறையானது ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்யாத சாதாரணமான மனிதனுக்கு மட்டுமே.

ஸித்தாந்தம் - உபாஸநம் செய்பவனுக்கு இங்கேயே மோக்ஷம் கிடைக்காது; ஆனால், மோக்ஷம் போன்ற ஒரு நிலை வாய்க்கும்; அதாவது, இங்கேயே அவனுக்கு புண்யபாபங்கள் கழியும்; மேலும் ப்ரஹ்மம் பற்றிய த்யானம் என்பதே ஒரு ப்ரஹ்ம-அனுபவம் ஆகும். அதனால் மோக்ஷத்தின் பலனான ப்ரஹ்ம-அனுபவமும் ஒருவிதத்தில் சற்றே இங்கே பெறலாம். அதைத்தான் வேதம் சொல்கிறது.

ஆனால், இதெல்லாம் போதாது; முழுமையான மோக்ஷமும் ப்ரஹ்ம-அனுபவமும்தான் பலன் ஆகும். அது ஶரீரத்திலிருந்து வெளியேறி, அர்ச்சிராதி வழியாக சென்று பரமபதத்தை அடைந்தாலே வரும். எனவே, ப்ரஹ்மத்தை உபாஸனம் செய்பவனும் பரமபதம் செல்வதற்காக இறுதியில் ஶரீரத்திலிருந்து வெளியேறுகிறான்.

(அர்த்தக் குறிப்பு -

வித்வான் - ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவன்;

உத்க்ராந்தி - ஶரீரத்தின் உள்ளிலிருந்து ஜீவன் வெளியேறுதல்;

ஆ-ஸ்ருதி-உபக்ரமாத் - கதி ஆரம்பிக்கும் வரை.

கதி - ஶரீரத்திலிருந்து வெளியேறிச் செல்லுதல்.).

१३९.आसृत्युपक्रमाधिकरणम् (४-२-५)

४९५.समाना चाऽऽसृत्युपक्रमादमृतत्वं चानुपोष्य (४-२-७)

इयमुत्क्रान्तिः किं विद्वदविदुषोः समाना, उताविदुष एवेति चिन्तायाम् -

अविदुष एवेति प्राप्तम्। कुतः? विदुषोऽत्रैवामृतत्ववचनादुत्क्रान्त्यभावात्। विदुषो ह्यत्रैवामृतत्वं श्राव्यते, **''यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि स्थिताः। अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते''**(क.6-14)[1] इति।

एवं प्राप्तेऽभिधीयते - **समाना चाऽऽसृत्युपक्रमात्।** विदुषोऽपि आसृत्युपक्रमादुत्क्रान्तिः समाना। **आसृत्युपक्रमात्** आगत्युपक्रमात्, नाडीप्रवेशात्प्रागित्यर्थः।

विदुषोऽपि हि नाडीविशेषेणोत्क्रम्य गतिः श्रूयते, **''शतं चैका च हृदयस्य नाड्यस्तासां मूर्धानमभिनिस्सृतैका। तयोर्ध्वमायन् अमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति''**(कठ.6.16)[2] इति।

139.ஆஸ்ருத்யுபக்ரமாதிகரணம் (4-2-5)

495. ஸமாநா சாऽऽஸ்ருத்யுபக்ரமாதம்ருதத்வம் சாநுபோஷ்ய (4-2-7)

இயம் உத்க்ராந்தி: கிம் வித்வதவிதுஷோ: ஸமாநா, உத அவிதுஷ ஏவேதி சிந்தாயாம் -

அவிதுஷ ஏவேதி ப்ராப்தம்। குத:? விதுஷ: அத்ரைவாம்ருதத்வவசநாத் உத்க்ராந்த்யபாவாத்। விதுஷோ ஹி அத்ரரைவாம்ருதத்வம் ஶ்ராவ்யதே, *''யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேऽஸ்ய ஹ்ருதி ஸ்திதா:। அத மர்த்யோऽம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமஶ்நுதே''* (க.6-14)[1] இதி।

ஏவம் ப்ராப்தேऽபிதீயதே - *ஸமாநா சாऽऽஸ்ருத்யுபக்ரமாத்* - இதி। விதுஷோऽபி ஆஸ்ருத்யுபக்ரமாத் உத்க்ராந்தி: ஸமாநா। ஆ ஸ்ருத்யுபக்ரமாத் - ஆ கத்யுபக்ரமாத்। நாடீப்ரவேஶாத் ப்ராக் இத்யர்த:।

விதுஷோऽபி ஹி நாடீவிஶேஷேணோத்க்ரம்ய கதி: ஶ்ரூயதே, *''ஶதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ்தாஸாம் மூர்தாநமபிநிஸ்ஸ்ருதைகா। தயோர்த்வமாயந் அம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே பவந்தி''* (க.6-16)[2] இதி।

139. ஆஸ்ருத்த்யுபக்ரமாதிகரணம் (4-2-5)

495. ஸமாநா ச ஆஸ்ருத்த்யுபக்ரமாத் அம்ருதத்வம் ச அநுபோஷ்ய (4-2-7)

வித்வானுக்கும் கதி-ஆரம்பம் வரை இந்த உத்க்ராந்தி சமானமானது; ஶரீரத்தை பொசுக்காமலேயே வரும் அம்ருத-தன்மை [சொல்லப்படுகிறது]

ஸம்சயம் (ஸந்தேஹம்)

இந்த உத்க்ராந்தியானது வித்வானுக்கும் வித்வான் ஆகாத மற்றவனுக்கும் சமானம் ஆனதா? அல்லது வித்வான் ஆகாதவனுக்கு மட்டுமா? என்று விசாரம் செய்யும்போது, *(ப்ரஹ்ம-உபாஸநம் செய்யும் வித்வானும் கூட இறுதியில் ஶரீரத்தை விட்டு வெளியேறுவானா? அல்லது உபாஸநம் செய்யாதவர் மட்டும் வெளியேறுவாரா?)*

பூர்வபக்ஷம்

வித்வான் ஆகாதவனுக்கு மட்டுமே என்று பூர்வபக்ஷம் நேரிடுகிறது. ஏன்? ப்ரஹ்ம-உபாஸநம் செய்யும் வித்வான் ஆனவன் இங்கேயே அம்ருதன் ஆவதாக சொல்லியுள்ளது; அதனால், அவனுக்கு உத்க்ராந்தி கிடையாது.

வித்வான் ஆனவன் இங்கேயே அம்ருதன் ஆவது வேதத்தில் சொல்லப்படுகிறது - [1]**''எப்போது இவனுக்கு மனதில் இருக்கும் காமங்கள் எல்லாம் விடுபடுகின்றனவோ, உடன் மனிதன் அம்ருதன் ஆகிறான்; இங்கேயே ப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான்''**

✍*(அம்ருதத்தன்மை என்பது மோக்ஷம்; அது இங்கேயே வந்துவிடும் என்பதால், ஶரீரத்தை விட்டு மேலே வெளியேறிப் போக வேண்டியதில்லை என்று பூர்வபக்ஷம்).*✍

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **'ஸமாநா ச ஆஸ்ருத்த்யுபக்ரமாத்'** என்று.

ஆஸ்ருத்த்யுபக்ரமாத் - கதி ஆரம்பிக்கும்வரை; நாடியில் நுழைவதற்கு முன்னம் வரை என்று பொருள். (அதுவரை வித்வானுக்கும் மற்றவனுக்கும் உத்க்ராந்தி ஸமானம் என்று பொருள்)

வித்வானும் கூட ஒரு விஶேஷமான நாடி வழியாக மேலே கிளம்பி வெளியேறிச் செல்வது வேதத்தில் சொல்லப்படுகிறது -[2]**''ஹ்ருதயத்தில் முக்கியமான நாடிகள் நூற்றியொன்று உள்ளன; அவற்றில் ஒன்று தலையை நோக்கிப் போகிறது; அதன் மூலம் மேல் செல்பவனாய் மோக்ஷதன்மையைப் பெறுகிறான்; மீதி நாடிகள் சுற்றிலும் ஸம்ஸாரவழியில் செல்வதற்காக ஆகின்றன''** என்று.

एवं नाडीविशेषेण गतिश्रवणात् विदुषोऽप्युत्क्रान्तिरवर्जनीया। सा च नाडीप्रवेशात्प्राक् विशेषाश्रवणात् समाना।

तत्प्रवेशदशायां च विशेषः श्रूयते, ''**तेन प्रद्योतेनैष आत्मा निष्क्रामति चक्षुषो वा मूर्ध्नो वा अन्येभ्यो वा शरीरदेशेभ्यः**''(बृ.6-4-2)[1] इति। ''**शतं चैका च हृदयस्य**'' (क.6-16)[2] इत्यनया श्रुत्या ऐकार्थ्यात् मूर्ध्नो निष्क्रमणं विद्वद्विषयम्; इतरत् अविद्वद्विषयम्।

यदुक्तम् - विदुषोऽत्रैवामृतत्वं श्राव्यते इति, तत्रोच्यते **अमृतत्वं चानुपोष्य** इति। चशब्दोऽवधारणे। **अनुपोष्य** - शरीरेन्द्रियादिसम्बन्धमदग्ध्वैव, **यदमृतत्वम्** - उत्तरपूर्वाघयोरश्लेषविनाशरूपं प्राप्यते, तदुच्यते ''**यदा सर्वे प्रमुच्यन्ते**''(क.6-14)[3] इत्यादिकया श्रुत्येत्यर्थः। ''**अत्र ब्रह्म समश्नुते**''(क.6-14)[4] इति च उपासनवेलायां यो ब्रह्मानुभवः; तद्विषयमित्यभिप्रायः॥७॥

४९६.तदापीतेः संसारव्यपदेशात् (४-२-८)

अवश्यं च **तत्** - अमृतत्वम् अदग्धदेहसम्बन्धस्यैवेति विज्ञेयम्। कुतः? **आपीतेः**

ஏவம் நாடீவிஶேஷேண கதிஶ்ரவணாத் விதுஷோऽபி உத்க்ராந்திரவர்ஜநீயா। ஸா ச நாடீப்ரவேஶாத்ப்ராக் விஶேஷாஶ்ரவணாத் ஸமாநா।

தத்ப்ரவேஶதஶாயாம் ச விஶேஷ: ஶ்ரூயதே, “*தேந ப்ரத்யோதேநைஷ ஆத்மா நிஷ்க்ராமதி சக்ஷுஷோ வா மூர்த்நோ வா அந்யேப்யோ வா ஶரீரதேஶேப்ய:*” (ப்ரு.4-4-2)[1] இதி। “*ஶதம் சைகா ச ஹ்ருதயஸ்ய*”(க.6-16)[2] இத்யநயா ஶ்ருத்யா ஐகார்த்யாத் மூர்த்நோ நிஷ்க்ரமணம் வித்வத்விஷயம்; இதரத் அவித்வத்விஷயம்।

யதுக்தம் - விதுஷ: அத்ரைவாம்ருதத்வம் ஶ்ராவ்யதே இதி - தத்ரோச்யதே - *அம்ருதத்வம் சாநுபோஷ்ய* இதி। *ச* ஶப்தோऽவதாரணே। *அநுபோஷ்ய* - ஶரீரேந்த்ரியாதிஸம்பந்தமதக்த்வைவ, யத் அம்ருதத்வம் - உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாஶரூபம் ப்ராப்யதே, ததுச்யதே “*யதா ஸர்வே ப்ரமுச்யந்தே*” (க.6-14)[3] இத்யாதிகயா ஶ்ருத்யா இத்யர்த:। “*அத்ர ப்ரஹ்ம ஸமஶ்நுதே*” (க.6-14)[4] இதி ச உபாஸநவேலாயாம் யோ ப்ரஹ்மாநுபவ:; தத்விஷயம் இத்யபிப்ராய:।।7।।

496. ததாபீதே: ஸம்ஸாரவ்யபதேஶாத் (4-2-8)

அவஶ்யம் ச *தத்* - அம்ருதத்வம் அதக்ததேஹஸம்பந்தஸ்யைவேதி

இப்படி வித்வான் ஆனவன், ஒரு விஶேஷ-நாடி வழியாக போவது வேதத்தில் சொல்லியுள்ளபடியால், வித்வானுக்கும் உத்க்ராந்தி தவிர்க்க முடியாதது; நாடியில் நுழைவதற்கு முன் வித்யாசம் எதுவும் சொல்லாதபடியால், அதுவரையான அந்த உத்க்ராந்தி ஆனது, எல்லாருக்கும் ஸமானமானது;

அந்த நாடியில் நுழையும்போது வித்யாசம் வேதத்தில் சொல்லப்படுகிறது - [1]**''அந்த வெளிச்சத்தால், இந்த ஜீவன் கண்ணிலிருந்தோ, தலையிலிருந்தோ, வேறு உடல்-பாகங்களிலிருந்தோ (ஏதாஒரு வழியாக) வெளியேறுகிறான்''** என்று.

[2]**''ஹ்ருதயத்தின் முக்கிய நாடிகள் நூற்றியொன்று''** எனும் வேத-வாக்யத்துடன் இது ஒரே பொருளில் ஆக வேண்டும்; அதனால், தலை வழியாக வெளியேறுதல் ஆனது, வித்வானைப் பற்றியது; பிற வழியானது வித்வான் ஆகாதவனைப் பற்றியது ஆகும்..

கேள்வி - வித்வான் ஆனவன் இங்கேயே அம்ருதன் ஆகிறான் என்று வேதத்தில் சொல்லப்பட்டது.

பதில் - இப்படி பூர்வபக்ஷத்தில் சொன்னது எதுவோ, அதற்கு பதில் சொல்லப்படுகிறது - **''அம்ருதத்வம் ச அநுபோஷ்ய''** என்று.

'ச' என்ற சொல், அப்படித்தான் என்ற உறுதியைக் குறிக்கிறது.

அநுபோஷ்ய - ஶரீரம் இந்த்ரியம் முதலியவற்றின் தொடர்பை எரித்துப் பொசுக்காமலேயே,

அம்ருதத்வம் - பின்-பாபங்கள் ஒட்டாமையும் முன்-பாபங்கள் அழிவதும் ஆகிற அம்ருதத்தன்மையானது (உபாஸநம் ஆகிற உபாயத்தால்) அடைவிக்கப் படுகிறது; அதுவே, [3]**''எப்போது காமங்கள் விடுபடுமோ (உடன் அம்ருதன் ஆகிறான்)''** முதலிய வேதவசனத்தால் சொல்லப்படுகிறது என்று பொருள்.

[4]**''இங்கேயே ப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான்''** என்பது, உபாஸநம் செய்யும் சமயத்தில் எந்த ப்ரஹ்ம-அனுபவம் உள்ளதோ, அதைப் பற்றியது என்று கருத்து.

◆ ◆ ◆ ◆

496. தத் ஆ அபீதே: ஸம்ஸாரவ்யபதேசாத் (4-2-8)

ப்ரஹ்மத்தை அடைவது வரை ஸம்ஸாரம் இருப்பதாக சொல்வதால், முன் சொன்ன அதுவே அம்ருத-தன்மை ஆகும்.

தத் - அந்த அம்ருத-தன்மையானது, ஶரீர-தொடர்பு பொசுக்கப் படாதவனுக்கே என்பது கட்டாயம் அறியப் பட வேண்டும்..

संसारव्यपदेशात्। अपीतिः - अप्ययः, ब्रह्मप्राप्तिः। सा चार्चिरादिना मार्गेण देशविशेषं गत्वेति वक्ष्यते। आ तदवस्थाप्राप्तेः संसारः देहसम्बन्धलक्षणो हि व्यपदिश्यते,

- “**तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्येऽथ सम्पत्स्ये**” (छा.6-14-2)[1] इति,
- “**अश्व इव रोमाणि विधूय पापं चन्द्र इव राहोर्मुखात् प्रमुच्य। धूत्वा शरीरमकृतं कृतात्मा ब्रह्मलोकमभिसम्भवामि**” (छा.8-13-1)[2] इति च॥ ८ ॥

* * *

४९७.सूक्ष्मं प्रमाणतश्च तथोपलब्धेः (४-२-९)

इतश्च विदुषोऽपि बन्धो नात्र दग्धः; यतः सूक्ष्मं शरीरमनुवर्तते। कुत इदमवगम्यते? **प्रमाणतस्तथोपलब्धेः**। उपलभ्यते हि देवयानेन पथा गच्छतो विदुषः, “**तं प्रतिब्रूयात्**” (कौ.1-51)[3] “**सत्यं ब्रूयात्**” (कौ.1-56)[4] इति चन्द्रमसा संवादवचनेन शरीरसद्भावः। अतः सूक्ष्मशरीरमनुवर्तते। अतश्च बन्धो न दग्धः॥ ९ ॥

* * *

४९८.नोपमर्देनातः (४-२-१०)

விஜ்ஞேயம்; குத:? *ஆபீதே: ஸம்ஸாரவ்யபதேஶாத்। அபீதி:*-அப்யய:, ப்ரஹ்மப்ராப்தி:। ஸா ச அர்சிராதிநா மார்கேண தேஶவிஶேஷம் கத்வேதி வக்ஷ்யதே; ஆ தததவஸ்தாப்ராப்தே: ஸம்ஸார: தேஹஸம்பந்தலக்ஷணோ ஹி வ்யபதிஶ்யதே,

- *“தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே஽த ஸம்பத்ஸ்யே”* (சா. 6-14-2)[1] இதி,
- *“அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய। தூத்வா ஶரீரமக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபிஸம்பவாமி”* (சா.8-13-1)[2] இதி ச।।8 ।।

* * *

497. ஸூக்ஷ்மம் ப்ரமாணதஶ்ச ததோபலப்தே: (4-2-9)

இதஶ்ச விதுஷோऽபி பந்தோ நாத்ர தக்த:; யத: *ஸூக்ஷ்மம்* ஶரீரமநுவர்ததே। குத இதமவகம்யதே? *ப்ரமாணத: ததோபலப்தே:।* உபலப்யதே ஹி தேவயாநேந பதா கச்சதோ விதுஷ:, *“தம் ப்ரதிப்ரூயாத்”*(கௌ.1-51)[3], *“ஸத்யம் ப்ரூயாத்”*(கௌ.1-56)[4] இதி சந்த்ரமஸா ஸம்வாதவசநேந ஶரீரஸத்பாவ:। அத: ஸூக்ஷ்மஶரீரமநுவர்ததே। அதஶ்ச பந்தோ ந தக்த: ।। 9 ।।

* * *

498. நோபமர்தேநாத: (4-2-10)

ஏன்?

ஆ அபீதே: ஸம்ஸாரவ்யபதேசாத் - (அபீதி வரை ஸம்ஸாரம் ஆக சொல்வதால்)

அபீதி: - லயம்; அதாவது, ப்ரஹ்மத்தை அடைதல்; அது அர்சிராதி-மார்க்கத்தால், விசேஷமான ஒரு தேசத்துக்கு (பரமபதத்துக்கு) சென்ற பின்பே ஆகும் என சொல்லப்படப் போகிறது; அந்த நிலையை அடைவதுவரை ஶரீர-தொடர்பு ஆகிற ஸம்ஸாரம் சொல்லப்படுகிறது -

- [1]''**அவனுக்கு எவ்வளவு காலம் விடுபடவில்லையோ, அவ்வளவே காலதாமதம்; பின்னர் அடைவான்**'' என்றும்,
- [2]''**உபாயம் செய்து முடித்த நான், குதிரை உரோமங்களை உதறுவது போல பாபங்களை உதறிவிட்டு, ராஹுவின் வாயிலிருந்து சந்திரன் விடுபடுவது போல் ஶரீரத்தை உதறி விட்டு, நித்யமான ப்ரஹ்மலோகத்தை அடைவேன்**'' என்றும்.

◆ ◆ ◆ ◆

497. ஸூக்ஷ்மம் ப்ரமாணத: ச ததா உபலப்தே: (4-2-9)

ப்ரமாணத்தால் அப்படி தெரிவதால் ஸூக்ஷ்ம-ஶரீரம் இருப்பதாலும் [ஸம்ஸாரபந்தம் விடவில்லை]

இதனாலும், வித்வானுக்கு ஸம்ஸார-பந்தமானது இங்கே எரித்துப் பொசுக்கப்படவில்லை; ஏனெனில், ஸூக்ஷ்மமான ஶரீரம் தொடர்ந்து உள்ளது.

இது எப்படி தெரிய வந்தது? **ப்ரமாணத: ததா உபலப்தே:** (ப்ரமாணங்களால் அப்படி தெரிவதால்).

தேவயானம் ஆகிற வழியில் செல்லும் வித்வான் சந்த்ரனுடன் பேச்சுவார்த்தை செய்வதை வேதம் சொல்கிறது - [3]''**அந்த சந்த்ரனுக்கு பதில் சொல்வான்'' ......** [4]''**ஸத்யம் (எல்லாமான ப்ரஹ்மம்)'' என்று சொல்வான்''** என்று; ஆகையால், அவனுக்கு ஶரீரம் இருப்பது தெரிகிறது.

ஆகையால், ஸூக்ஷ்மமான ஶரீரம் தொடர்கிறது; ஆகையாலும் ஸம்ஸார-பந்தம் பொசுக்கப்படவில்லை.

◆ ◆ ◆ ◆

498. ந உபமர்தேந அத: (4-2-10)

அதனால் [ஸ்தூல-ஶரீரம் இருப்பதால்], ஸம்ஸார-பந்தத்தை அழிப்பதன் மூலம் வரும் அம்ருத-தன்மை [இங்கு சொல்லப்பட] இல்லை.

Public Domain. Digitized by Muthulakshmi Research Academy

अतः, ''यदा सर्वे प्रमुच्यन्ते कामा येऽस्य हृदि स्थिताः। अथ मर्त्योऽमृतो भवत्यत्र ब्रह्म समश्नुते''(क.6-14)[1] इति वचनं न बन्धोपमर्देनामृतत्वं वदति॥१०॥

* * *

४९९.अस्यैव चोपपत्तेरूष्मा (४-२-११)

अस्य - सूक्ष्मशरीरस्य क्वचिद्विद्यमानत्वोपपत्तेर्विदुषः प्रक्रान्तमरणस्य मरणात्प्राक् ऊष्मा स्थूले शरीरे क्वाचित्क उपलभ्यते; न च स्थूलस्यैव शरीरस्यायमूष्मा, अन्यत्रानुपलब्धेः। ततश्चोष्मणः क्वचिदुपलब्धिर्विदुषः सूक्ष्मशरीरस्योत्क्रान्तिनिबन्धनेति गम्यते। तस्मात् विदुषोऽप्यासृत्युपक्रमात् समाना उत्क्रान्तिरिति सुष्ठूक्तम्॥ ११ ॥

* * *

पुनरपि विदुष उत्क्रान्तिर्न सम्भवतीत्याशङ्क्य परिह्रियते -

५००.प्रतिषेधादिति चेन्न शारीरात् स्पष्टो ह्येकेषाम् (४-२-१२)

அத:, ''யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யே஽ஸ்ய ஹ்ருதி ஸ்திதா:। அத மர்த்யோ஽ம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம ஸமஶ்நுதே''(க.6-14)[1] இதி வசநம் ந பந்தோபமர்தேந அம்ருதத்வம் வததி।। 10 ।।

* * *

499. அஸ்யைவ சோபபத்தேரூஷ்மா (4-2-11)

அஸ்ய - ஸூக்ஷ்மஶரீரஸ்ய க்வசித்வித்யமாநத்வோபபத்தே: விதுஷ: ப்ரக்ராந்தமரணஸ்ய மரணாத் ப்ராக் ஊஷ்மா ஸ்தூலே ஶரீரே க்வாசித்க உபலப்யதே; ந ச ஸ்தூலஸ்யைவ ஶரீரஸ்ய அயமூஷ்மா, அந்யத்ராநுபலப்தே:। ததஶ்ச ஊஷ்மண: க்வசிதுபலப்தி: விதுஷ: ஸூக்ஷ்மஶரீரஸ்யோத்க்ராந்திநிபந்தநேதி கம்யதே। தஸ்மாத் விதுஷோ஽பி ஆஸ்ருத்யுபக்ரமாத் ஸமாநா உத்க்ராந்தி: இதி ஸுஷ்டூக்தம்।।11 ।।

* * *

புநரபி விதுஷ உத்க்ராந்திர்ந ஸம்பவதீத்யாஶங்க்ய பரிஹ்ரியதே -

500. ப்ரதிஷேதாதிதி சேந்ந ஶாரீராத் ஸ்பஷ்டோ ஹ்யேகேஷாம் (4-2-12)

ஆகையால், [1]“**இவனது மனதில் உள்ள காமங்கள் எப்போது விடுபடுகின்றனவோ, அதன் பின்னர் மனிதன் அம்ருத-தன்மை கொண்டவன் ஆகிறான்; இங்கேயே ப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான்**” என்கிற வாக்யமானது, ஸம்ஸார-பந்தத்தை ஒழிப்பதன் மூலம் வரும் அம்ருத-தன்மையைச் சொல்லவில்லை.

✍(உபாஸநம் செய்பவன், ஸம்ஸாரத்தில் இருக்கும்போதே, அவனுக்கு புண்ய- பாப-கர்மங்கள் பெருமளவு தொலையும்; உபாஸனத்தில் பர-ப்ரஹ்ம-அனுபவம் வரும்; அப்படி மோக்ஷம் போன்ற அம்ருத-தன்மை இங்கேயே கிடைக்கும் என்பதை சொல்கிறது.

இங்கேயே மோக்ஷம் கிடைக்கிறது என்று அர்த்தம் இல்லை; இங்கேயே மோக்ஷம் போன்ற நிலையில் அனுபவம் வாய்க்கிறது என்று அர்த்தம்).✍

◆ ◆ ◆ ◆

499. அஸ்ய ஏவ ச உபபத்தே: ஊஷ்மா (4-2-11)

இந்த ஸூக்ஷ்மஶரீரம் இருப்பதால்தான் உஷ்ணம் தெரிகிறது

அஸ்ய - இந்த ஸூக்ஷ்மஶரீரத்துக்கு

உபபத்தே: - ஒரு இடத்தில் இருப்பது சரியாவதால்தான்

ஊஷ்மா - மரணம் அடைய ஆரம்பித்த வித்வானுக்கு, மரணத்துக்கு முன் ஸ்தூல-ஶரீரத்தில் ஒரு இடத்தில் உஷ்ணம் (சூடு) இருப்பதாக தெரிகிறது.

இந்த உஷ்ணமானது, ஸ்தூல-ஶரீரத்தின் சூடு என சொல்ல முடியாது; ஏனெனில், ஶரீரத்தில் வேறிடத்தில் இது தெரிவதில்லை; ஆகவே, ஒரு இடத்தில் உஷ்ணம் தெரிவதானது, வித்வானுடைய ஸூக்ஷ்ம-ஶரீரம் மேலே வெளியேறுவதால் உருவானது என தெரிகிறது.

✍(ஸ்தூல-ஶரீரத்தின் உஷ்ணம் ஆனது உடல் முழுவதும் பரவி இருக்கும்; அப்படி இல்லாமல் மரண சமயத்தில் உடலில் ஒரு இடத்தில் மட்டும் உஷ்ணம் தெரிகிறது; எனவே, அந்த இடத்தில் இருக்கும் ஸூக்ஷ்ம-ஶரீரத்தின் உஷ்ணம் ஆகும் என அறியலாம்; ஸ்தூலஶரீரத்தில் இருந்த உஷ்ணம் ஆனது கொஞ்சம்கொஞ்சமாக சுருங்கி அந்த ஸூக்ஷ்மஶரீரத்தில் சேர்கிறது)✍

அதனால், வித்வானுக்கும் கதி ஆரம்பிக்கும் வரை உத்க்ராந்தி சமானமானது என்று சரியாக சொல்லப்பட்டது.

◆ ◆ ◆ ◆

மீண்டும், வித்வானுக்கு உத்க்ராந்தி வராது என கேள்வி கேட்டு, பரிஹாரம் செய்யப்படுகிறது -

500. ப்ரதிஷேதாத் இதி சேத் ந, சாரீராத், ஸ்பஷ்டோ ஹி ஏகேஷாம் (4-2-12)

[வேதம்] மறுப்பதால், வித்வானுக்கு உத்க்ராந்தி கிடையாது என்றால், அதல்ல; ஆத்மாவை விட்டு [வெளியேறுவதையே மறுக்கிறது]; சிலரது வேத-சாகையில் இது தெளிவு.

यदुक्तम् - विदुषोऽप्युत्क्रान्तिः समानेति, तन्नोपपद्यते; विदुष उत्क्रान्तिप्रतिषेधात्।

- तथा हि, ‘‘**स एतास्तेजोमात्राः समभ्याददानो हृदयमेवान्वप(व)क्रामति**’’ (बृ.6-4-1)[1] इत्युपक्रम्य,
- ‘‘**तेन प्रद्योतेनैष आत्मा निष्क्रामति। तमुत्क्रामन्तं प्राणोऽनूत्क्रामति**’’ (बृ.6-4-2)[2] इत्यविदुष उत्क्रान्तिप्रकारमभिधाय,
- ‘‘**अन्यन्नवतरं कल्याणतरं रूपं कुरुते**’’(बृ.6-4-4)[3] इति देहान्तरपरिग्रहं चाभिधाय,
- ‘‘**प्राप्यान्तं कर्मणस्तस्य यत्किञ्चेह करोत्ययम्। तस्माल्लोकात् पुनरेत्यस्मै लोकाय कर्मणे इति तु कामयमानः**’’ (बृ.6-4-6)[4] इति अविद्वद्विषयं परिसमाप्य,
- ‘‘**अथाकामयमानः योऽकामो निष्काम आप्तकाम आत्मकामः, न तस्य प्राणा उत्क्रामन्ति; ब्रह्मैव सन् ब्रह्माप्येति**’’(बृ.6-4-6)[5] इति विदुष उत्क्रान्तिः प्रतिषिध्यते।

तथा पूर्वत्र आर्तभागप्रश्नेऽपि विदुष उत्क्रान्तिप्रतिषेधो दृश्यते,

- ‘‘**अप पुनर्मृत्युं जयति**’’(बृ.5-2-10)[6] इति विद्वांसं प्रस्तुत्य,
- ‘‘**याज्ञवल्क्येति होवाच यत्रायं पुरुषो म्रियते उदस्मात् प्राणाः क्रामन्ति, आहो न**’’(बृ.5-2-11)[7] इति पृष्टः

யதுக்தம் - விதுஷோऽபி உத்க்ராந்தி: ஸமாநேதி, தந்நோபபத்யதே; விதுஷ: உத்க்ராந்திப்ரதிஷேதாத்।

- ததா ஹி, *‘‘ஸ ஏதாஸ்தேஜோமாத்ரா: ஸமப்யாததாநோ ஹ்ருதயமேவாந்வப(வ)க்ராமதி’’* (ப்ரு.4-4-1)[1] இத்யுபக்ரம்ய,
- *‘‘தேந ப்ரத்யோதேநைஷ ஆத்மா நிஷ்க்ராமதி। தமுத்க்ராமந்தம் ப்ராணோऽநூத்க்ராமதி’’* (ப்ரு.4-4-2)[2] இத்யவிதுஷ உத்க்ராந்திப்ரகாரமபிதாய,
- *‘‘அந்யந்நவதரம் கல்யாணதரம் ரூபம் குருதே’’*(ப்ரு.4-4-4)[3] இதி தேஹாந்தரபரிக்ரஹம் சாபிதாய,
- *‘‘ப்ராப்யாந்தம் கர்மணஸ்தஸ்ய யத்கிஞ்சேஹ கரோத்யயம்। தஸ்மால்லோகாத் புநரேத்யஸ்மை லோகாய கர்மணே இதி து காமயமாந:’’* (ப்ரு.4-4-6)[4] இதி அவித்வத்விஷயம் பரிஸமாப்ய,
- *‘‘அதாகாமயமாந: யோऽகாமோ நிஷ்காம ஆப்தகாம ஆத்மகாம:, ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி; ப்ரஹ்மைவ ஸந் ப்ரஹ்மாப்யேதி’’* (ப்ரு.4-4-6)[5] இதி விதுஷ உத்க்ராந்தி: ப்ரதிஷித்யதே। ததா பூர்வத்ர ஆர்தபாகப்ரஶ்நேऽபி விதுஷ உத்க்ராந்திப்ரதிஷேதோ த்ருஶ்யதே,
- *‘‘அப புநர்ம்ருத்யும் ஜயதி’’*(ப்ரு.3-2-10)[6] இதி வித்வாம்ஸம் ப்ரஸ்துத்ய,
- *‘‘யாஜ்ஞவல்க்யேதி ஹோவாச யத்ராயம் புருஷோ ம்ரியதே உதஸ்மாத் ப்ராணா: க்ராமந்தி, ஆஹோ ந’’* (ப்ரு.3-2-11)[7] இதி ப்ருஷ்ட:

In Public domain. Digitization by Muthulakshmi Research Academy

வாதம் - (பிற மனிதர்களைப் போல) வித்வானுக்கும் உத்க்ராந்தி சமமானது என்று சொன்னது எதுவோ அது சரியாகாது; ஏனெனில், வித்வானுக்கு உத்க்ராந்தி கிடையாது என மறுக்கப் பட்டிருக்கிறது. அப்படித்தானே -

✸ [1]**''அந்த ஜீவன் இந்த பூத-ஸூக்ஷ்ம-அம்சங்களை எடுத்துக் கொண்டு ஹ்ருதயத்திலேயே (வழி தெரியாமல்) சுற்றிக் கொண்டிருக்கிறான்''** என்று சொல்ல ஆரம்பித்து,

✸ [2]**''அந்த வெளிச்சத்தால், இந்த ஜீவன் வெளியேறுகிறான். வெளியேறும் அவனை தொடர்ந்து ப்ராணன் வெளியேறுகிறது''** என்று, ப்ரஹ்ம-ஜ்ஞானி ஆகாதவன் ஶரீரத்திலிருந்து வெளியேறும் முறையைச் சொல்லி, (இது பூர்வ-பக்ஷ கருத்து)

✸ [3]**''வேறொரு புதிய மங்களமான ஶரீரத்தை செய்கிறான்''** என்று வேறொரு ஶரீரத்தை எடுத்துக் கொள்வதைச் சொல்லி,

✸ [4]**''இங்கு இவன் என்ன செய்கிறானோ, அந்த கர்மத்தின் முடிவை (பலனை) அடைந்துவிட்டு, அந்த மேல்-உலகிலிருந்து இவ்வுலகுக்கு கர்மம் செய்வதற்காக மீண்டும் வருகிறான்; இவ்வாறு பலனை விரும்புபவன் ஆகிறான்''** என்று ஜ்ஞானியாக ஆகாதவனது விஷயத்தைச் சொல்லி முடித்து விட்டு,

✸ [5]**''இனி பலனை விரும்பாதவன் சொல்லப்படுகிறான்; ஆசை அற்றவன்; பழைய விருப்பங்களை ஒழித்தவன்; அடுத்த விருப்பங்கள் வரப்பெறாதவன்; ஆத்மாவையே விரும்புபவன்; அப்படிப்பட்டவன் யாரோ, அவனுக்கு ப்ராணன்கள் வெளிக் கிளம்புவதில்லை; அவன் ப்ரஹ்மமாகவே இருந்து கொண்டு ப்ரஹ்மத்தைச் சேர்கிறான்''** என்று ப்ரஹ்மஜ்ஞானி ஆனவனுக்கு உத்க்ராந்தி ஆனது (ஶரீரத்திலிருந்து வெளியேறிப் போதல் ஆனது) மறுக்கப்- பட்டு உள்ளது.

அப்படியே, முன்பும் ஆர்தபாகர் என்பவர் யாஜ்ஞவல்க்யரிடம் கேள்வி கேட்டு அறிவதாக வரும் வேத-பாகத்தில், ப்ரஹ்மஜ்ஞானி ஆனவனுக்கு உத்க்ராந்தி மறுக்கப்பட்டு இருப்பது காணப்படுகிறது -

✸ [6]**''ம்ருத்யுவை (ஸம்ஸாரத்தை) வெல்கிறான்''** என்று ப்ரஹ்மஜ்ஞானியைப் பற்றி சொல்ல ஆரம்பித்து,

✸ [7]**''யாஜ்ஞவல்க்யரே, எப்போது இந்த ஜீவன் மரணம் அடைகிறானோ, அவனிடமிருந்து ப்ராணங்கள் வெளிக் கிளம்புகின்றனவா? இல்லையா?''** என்று கேட்க,

In Public Domain, Digitization by Sri Lakshmi Research Academy

★ **''नेति होवाच याज्ञवल्क्यः अत्रैव समवनीयन्ते स उच्छवयत्याध्मायति आध्मातो मृतः शेते''**(बृ.5-2-11)[1] इति। अतो विद्वानिहैवामृतत्वं प्राप्नोतीति चेत् -

तन्न; **शारीरात्** - प्रत्यगात्मनः प्राणानामुत्क्रान्तिर्ह्यत्र प्रतिषिध्यते, न शरीरात्। **''न तस्य प्राणा उत्क्रामन्ति''**(बृ.6-4-6)[2] इत्यत्र तच्छब्देन **''अथाकामयमानः''** (बृ.6-4-6)[3] इति प्रकृतः शारीर एव परामृश्यते; नाश्रुतं शरीरम्॥

''तस्य'' इति षष्ठ्या प्राणानां सम्बन्धित्वेन शारीरो निर्दिष्टः; न तूत्क्रान्त्यपादानत्वेन। उत्क्रान्त्यपादानं तु शरीरमेवेति चेत्, न; अपादानापेक्षायाम् अश्रुताच्छरीरात्, सम्बन्धितया श्रुतस्याऽऽत्मन एव सन्निहितत्वेनापादानतयाऽपि ग्राह्यत्वात्।

किञ्च प्राणानां जीवसम्बन्धितयैव प्रज्ञातानां तत्सम्बन्धकथने प्रयोजनाभावात् सम्बन्धमात्रवाचिन्या षष्ठ्या अपादानमेव विशेष इति निश्चीयते। यथा **''नटस्य श्रृणोति''**(का.वृ.1-4-29)[4] इति।

★ *"நேதி ஹோவாச யாஜ்ஞவல்க்ய: அத்ரைவ ஸமவநீயந்தே ஸ உச்ச̲வயத்யாத்̤மாயதி ஆத்̤மாதோ ம்ருத: ஶேதே''* (ப்ரு.3-2-11)[1] இதி। அத: வித்வாந் இஹைவ அம்ருதத்வம் ப்ராப்நோதீதி சேத் -

தந்ந; *ஶாரீராத்* - ப்ரத்யகாத்மந: ப்ராணாநாமுத்க்ராந்திர்ஹி அத்ர ப்ரதிஷித்̤யதே; ந ஶரீராத்। *"ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி''*(ப்ரு.4-4-6)[2] இத்யத்ர தச்ச̲ப்தேந *"அத̲ாகாமயமாந:''*(ப்ரு.4-4-6)[3] இதி ப்ரக்ருத: ஶாரீர ஏவ பராம்ருஶ்யதே; ந அஶ்ருதம் ஶரீரம்।।

'தஸ்ய' இதி ஷஷ்ட்̲யா ப்ராணாநாம் ஸம்பந்தித்வேந ஶாரீரோ நிர்திஷ்ட:; ந தூத்க்ராந்த்யபாதாநத்வேந। உத்க்ராந்த்யபாதாநம் து ஶரீரமேவேதி சேத் - ந; அபாதாநாபேக்ஷாயாம் அஶ்ருதாத் ஶரீராத், ஸம்பந்திதயா ஶ்ருதஸ்ய ஆத்மந ஏவ ஸந்நிஹிதத்வேந அபாதாநதயாऽபி க்ராஹ்யத்வாத்।

கிஞ்ச ப்ராணாநாம் ஜீவஸம்பந்திதயைவ ப்ரஜ்ஞாதாநாம் தத்ஸம்பந்தகதநே ப்ரயோஜநாப̲ாவாத் ஸம்பந்தமாத்ரவாசிந்யா ஷஷ்ட்̲யா அபாதாநமேவ விஶேஷ இதி நிஶ்சீயதே। யதா *"நடஸ்ய ஶ்ருணோதி''* (காஶி.1-4-29)[4] இதி।

In Public domain. Digitization by Muthulakshmi Research Academy

✦ [1]**''இல்லை என்று யாஜ்ஞுவல்க்யர் சொன்னார்; இவனிடமே ப்ராணங்கள் சேர்க்கப் படுகின்றன; இந்த ஶரீரம் ஊதிப் பெருக்கிறது; வெளிக்காற்று நிரம்பியதாக ஆகிறது; மரணம் அடைந்தவன் அப்படி காற்று நிரம்பியவனாய் கிடக்கிறான்''** என்றார்.

ஆகையால், வித்வான் ஆனவன் இங்கேயே அம்ருத-தன்மையை அடைகிறான் என்றால்,

மறுப்பு - ந - அதல்ல;

ஶாரீராத் - ஶரீரத்தை உடைய ஜீவாத்மாவிடமிருந்து ப்ராணங்கள் வெளிக் கிளம்புவதுதானே இங்கே மறுக்கப்படுகிறது; ஶரீரத்திலிருந்து ப்ராணங்கள் வெளியேறுவது மறுக்கப்படவில்லை; [2]**''அவனுக்கு ப்ராணங்கள் வெளிக்கிளம்புவதில்லை''** என்னும் வாக்யத்தில் 'அவன்' என்ற சொல்லால், ஶாரீரன் ஆன ஜீவன்தான் கருதப்படுகிறான்; ஏனெனில், ஜீவன்தானே, [3]**''இனி பலனை விரும்பாதவன் சொல்லப்படுகிறான்''** என்று முன்னர் சொல்ல ஆரம்பிக்கப் பட்டான்! ஶரீரமானது முன்பு சொல்லப்படவில்லை; எனவே, அது இங்கே கருதப்படவில்லை.

✍*(இங்கே முதல் வேத-வாக்யத்தில், ''இனி பலனை விரும்பாதவன்'' என்று ஜீவனைத்தான் சொல்லியுள்ளது; ஶரீரத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை; அடுத்த வாக் யத்தில், ''அவனுக்கு ப்ராணங்கள் வெளிக்கிளம்புவதில்லை'' என்று சொல்லும் போது, அவன் என்பது ஜீவனையே குறிக்கும்).*✍

வாதம் - ''அவனுடைய ப்ராணங்கள் வெளிக்கிளம்புவதில்லை'' எனும் வாக்யத்தில், 'அவனுடைய' என்று ஆறாம் வேற்றுமை உள்ளது; அவனது தொடர்புடைய (ப்ராணங்கள்) 'என்று அர்த்தம்; எனவே, இங்கு ப்ராணனுடன் தொடர்பு உடையவனாகவே ஜீவன் குறிப்பிடப் படுகிறான்; உத்க்ராந்திக்கு அபாதாநமாக (வெளிக் கிளம்பும் இடமாக) ஜீவன் குறிப்பிடப்படவில்லை; உத்க்ராந்திக்கு அபாதாநமாவது (வெளிக் கிளம்பும் இடமாவது) ஶரீரம்தான் என்றால்,

✍*('ஜீவனிடமிருந்து ப்ராணங்கள் வெளியேறுவதில்லை' என்று இந்த வாக்யம் சொல்லவில்லை; 'ஜீவனுடைய ப்ராணங்கள் வெளியேறுவதில்லை' என்றுதானே சொல்கிறது! அதனால், ஜீவனது ப்ராணங்கள் ஶரீரத்திலிருந்து வெளியேறுவதில்லை' என்று அர்த்தம் கொள்ளலாம்)*✍

மறுப்பு - 'ப்ராணங்கள் வெளியேறுவதில்லை' என வேத-வாக்யம் சொல்லும்போது, 'எங்கிருந்து வெளியேறுவதில்லை?' என்பதை அறியும் தேவை இருக்கிறது; அப்போது இங்கே சொல்லப்படாத ஶரீரமானது நம் அறிவில் தோன்றாது; அதைவிட, இங்கே தொடர்புடையதாக சொல்லப்பட்ட ஜீவன்தான் நம் அறிவில் நெருங்கி உள்ளான்; அதனால், ஜீவனையே அபாதாநமாக எடுத்துக் கொள்ள வேண்டும். (ஜீவனிடமிருந்து வெளியேறுவதில்லை என்று கருத்து).

மேலும், ப்ராணங்கள் ஜீவனுடன் தொடர்பு உடையனவாகவே நன்கு அறியப்பட்டவை; அந்த தொடர்பை இங்கே சொல்வதில் எந்த பயனும் இல்லை (நன்கு தெரிந்த விஷயத்தை சொல்ல வேண்டிய தேவையில்லை); அதனால், பொதுவாக எல்லா தொடர்பையும் குறிக்கும் ஆறாம் வேற்றுமையைக் கொண்டு, இங்கே அபாதாநம் என்பதே விசேஷ-தொடர்பு என தீர்மானிக்கப் படுகிறது. உதாஹரணமாக,

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

न चात्र विवदितव्यम् - **स्पष्टो ह्येकेषाम्** - माध्यन्दिनानामाम्नाये शारीरो जीव एवापादानमिति, **''योऽकामो निष्काम आप्तकामो आत्मकामः, न तस्मात् प्राणा उत्क्रामन्ति''**(बृ.मा.4-4-6)[1] इति॥

शारीरात् प्राणानामुत्क्रान्तिप्रसङ्गाभावात् तन्निषेधो नोपपद्यत इति चेत्, न; **''तस्य तावदेव चिरम्''**(छा.6-14-2)[2] इति विदुषः शरीरवियोगकाले ब्रह्मसम्पत्तिवचनेन प्राणानामपि तस्मिन् काले शारीराद्विदुषो वियोगः प्रसज्यते। ततश्च देवयानेन पथा ब्रह्मसम्पत्तिर्नोपपद्यत इति, **''न तस्य प्राणा उत्क्रामन्ति''**(बृ.4-4-6) [3] देवयानेन पथा ब्रह्मप्राप्तेः प्राक् जीवाद्विदुषोऽपि प्राणा न विश्लिष्यन्तीत्युच्यते।

आर्तभागप्रश्नोऽपि यदा विद्वद्विषयः, तदा अयमेव परिहारः। स त्वविद्वद्विषयः; तत्र प्रश्नप्रतिवचनयोः ब्रह्मविद्याप्रसङ्गादर्शनात्। तत्र हि ग्रहातिग्रहरूपेणेन्द्रियेन्द्रियार्थस्वभावः, अपामग्न्यन्नत्वम्, म्रियमाणस्य जीवस्य प्राणापरित्यागः, मृतस्य नामवाच्यकीर्त्यनुवृत्तिः, तस्य च पुण्यपापानुगुणगतिप्राप्तिरित्येतेऽर्थाः प्रश्नपूर्वकं प्रत्युक्ताः। तत्र च, **''अप पुनर्मृत्युं जयति''**(बृ.5-2-10)[4] इति अपामग्न्यन्नत्वज्ञानादग्निजय एव मृत्युजय उच्यते। अतो नात्र विदुषः प्रसङ्गः।

ந சாத்ர விவதிதவ்யம் - *ஸ்பஷ்டோ ஹ்யேகேஷாம்* - மாத்யந்திநாநாம் ஆம்நாயே ஶாரீரோ ஜீவ ஏவாபாதாநமிதி, *''யோऽகாமோ நிஷ்காம ஆப்தகாமோ ஆத்மகாம:, ந தஸ்மாத் ப்ராணா உத்க்ராமந்தி''*(ப்ரு.மா.4-4-6)[1] இதி।

ஶாரீராத் ப்ராணாநாமுத்க்ராந்திப்ரஸங்காபாவாத் தந்நிஷேதோ நோபபத்யத இதி சேத் - ந; *''தஸ்ய தாவதேவ சிரம்''* (ப்ரு.6-14-2)[2] இதி விதுஷ: ஶரீரவியோககாலே ப்ரஹ்மஸம்பத்திவசநேந ப்ராணாநாமபி தஸ்மிந் காலே ஶாரீராத் விதுஷோ வியோக: ப்ரஸஜ்யதே। ததஶ்ச தேவயாநேந பதா ப்ரஹ்மஸம்பத்தி: நோபபத்யத இதி, *''ந தஸ்ய ப்ராணா உத்க்ராமந்தி''*(ப்ரு.4-4-6)[3] தேவயாநேந பதா ப்ரஹ்மப்ராப்தே: ப்ராக் ஜீவாத்விதுஷோऽபி ப்ராணா ந விஶ்லிஷ்யந்தீத்யுச்யதே।

ஆர்தபாகப்ரஶ்நோऽபி யதா வித்வத்விஷய:, ததா அயமேவ பரிஹார:। ஸ து அவித்வத்விஷய:; தத்ர ப்ரஶ்ந-ப்ரதிவசநயோ: ப்ரஹ்மவித்யாப்ரஸங்காதர்ஶநாத்। தத்ர ஹி க்ரஹாதிக்ரஹரூபேண இந்த்ரியேந்த்ரியார்தஸ்வபாவ:, அபாம் அக்ந்யந்நத்வம், ம்ரியமாணஸ்ய ஜீவஸ்ய ப்ராணாபரித்யாக:, ம்ருதஸ்ய நாமவாச்ய கீர்த்யநுவ்ருத்தி:, தஸ்ய ச புண்யபாபாநுகுணகதிப்ராப்தி: இத்யேதேऽர்தா: ப்ரஶ்நபூர்வகம் ப்ரத்யுக்தா:। தத்ர ச, *''அப புநர்மத்யும் ஜயதி''* (ப்ரு.3-2-10)[4] இதி அபாம் அக்ந்யந்நத்வஜ்ஞாநாத் அக்நிஜய ஏவ ம்ருத்யுஜய உச்யதே। அதோ நாத்ர விதுஷ: ப்ரஸங்க:।

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

‘நடனக் கலைஞனிடமிருந்து கேட்கிறான்’ என்ற பொருளில், [4]**‘‘நடனக் கலைஞனுடைய கேட்கிறான்’’** என்ற வழக்கு (ஸம்ஸ்க்ருதத்தில்) உள்ளது.

இதில் விவாதம் வேண்டாம்;

ஸ்பஷ்ட: ஹி ஏகேஷாம்’’ (சிலரது வேத- ஶாகையில் தெளிவாக உள்ளது) - மாத்யந்தின-ஶாகையினரின் வேதத்தில், ஶாரீரன் ஆன ஜீவன்தான் அபாதானம் (வெளிக் கிளம்பும் இடம்) என்பது தெளிவாக உள்ளது - [1]**‘‘ஆசை அற்றவன்; பழைய விருப்பங்களை ஒழித்தவன்; அடுத்த விருப்பங்கள் வரப் பெறாதவன்; ஆத்மாவையே விரும்புபவன்; யாரோ, அவனிடமிருந்து ப்ராணன்கள் வெளிக் கிளம்புவதில்லை’’** என்று.

கேள்வி - ஶாரீரனான ஜீவனிடமிருந்து ப்ராணங்கள் வெளியேறும் வாய்ப்பு இல்லை; அதனால் அதை மறுப்பது சரியாகாது - என்றால்,

பதில் - அதல்ல; [2]**‘‘மோக்ஷம் பெறும் அவனுக்கு ஶரீரம் விடுமளவு அத்தனை காலம் மட்டுமே தாமதம்’’** என்று வித்வான் ஆனவன், ஶரீரத்தைப் பிரியும் காலத்தில் ப்ரஹ்மத்தை அடைவதாக வேதம் சொல்கிறது; அதை வைத்து ப்ராணன்களும் அந்த சமயத்தில் வித்வானான ஜீவனை விட்டுப் பிரிவதாக நேருகிறது; அப்படியானால், அர்சிராதி-மார்க்கம் வழியாக ப்ரஹ்மத்தை அடைவது முடியாமல் போகும்; அதனால், [3]**‘‘அவனுக்கு ப்ராணங்கள் வெளியேறுவதில்லை’’** - அர்சிராதி-மார்க்கம் வழியாக ப்ரஹ்மத்தை அடைவதற்கு முன் வித்வான் ஆன ஜீவனிடமிருந்தும் ப்ராணங்கள் பிரிவதில்லை என சொல்லப்படுகிறது.

ஆர்த்தபாகருடைய கேள்வியும் வித்வானைப் பற்றியதாக ஆகுமானால், அப்போது இதுவே பரிஹாரம்; ஆனால் அது வித்வான்-ஆகாதவனைப் பற்றியது; ஏனெனில், கேள்வியிலும் பதிலிலும் ப்ரஹ்ம-வித்யை பற்றிய பேச்சே காணப்படவில்லை; அங்கு, க்ரஹ-பாத்ர-உரு போன்ற இந்த்ரியங்களின் தன்மைகள், க்ரஹ-பாத்ரங்களில் இருக்கும் அதிக்ரஹ-பொருள்கள் போன்ற இந்த்ரிய-விஷயங்களின் தன்மைகள், அக்நியானது ஜலத்தின் உணவாக ஆதல் (எண்ணுதல்), இறக்கின்ற ஜீவன் ப்ராணனை விடாமை, இறந்தவனுக்கு நாமம் எனப்படும் புகழ் தொடர்தல், அவன் புண்ய-பாபத்துக்கு ஏற்ற கதியை அடைதல் ஆகிய இந்த விஷயங்கள்தாமே கேள்வியை முன்னிட்டு பதிலுரைக்கப் பட்டன!

அதில், அக்நியானது ஜலத்தின் உணவாக ஆவதை அறிந்து உபாஸநம் செய்வதால், (அதன் பலனாக) அக்னியை வெல்வான்; அப்படி அக்னியை வெல்வதுதான், [4]**‘‘அவன் ம்ருத்யுவை வெல்கிறான்’’** என்று ம்ருத்யுவை வெல்வதாக சொல்லப் படுகிறது. ஆகையால், (ப்ரஹ்ம-உபாஸநம் செய்யும்) வித்வானைப் பற்றிய பேச்சே இல்லை;

अविदुषस्तु प्राणानुत्क्रान्तिवचनम्; स्थूलदेहवत् प्राणा न मुञ्चन्ति, अपि तु भूतसूक्ष्मवत् जीवं परिष्वज्य गच्छन्तीति प्रतिपादयतीति निरवद्यम्॥ १२ ॥

* * *

५०१.स्मर्यते च (४-२-१३)

स्मर्यते च विदुषोऽपि मूर्धन्यनाड्योत्क्रान्तिः, **''ऊर्ध्वमेकः स्थितस्तेषां यो भित्त्वा सूर्यमण्डलम्। ब्रह्मलोकमतिक्रम्य तेन याति परां गतिम्॥''** (याज्ञ.167.) इति॥१३॥

* * *

इति आसृत्युपक्रमाधिकरणम् ॥ ५ ॥

அவிதுஷஸ்து ப்ராணாநுத்க்ராந்திவசநம்; ஸ்தூலதேஹவத் ப்ராணா ந முஞ்சந்தி, அபி து பூதஸூக்ஷ்மவத் ஜீவம் பரிஷ்வஜ்ய கச்சந்தீதி ப்ரதிபாதயதீதி நிரவத்யம்।।12 ।।

* * *

501. ஸ்மர்யதே ச (4-2-13)

ஸ்மர்யதே ச விதுஷோऽபி மூர்தந்யநாட்யா உத்க்ராந்தி:,

"ஊர்த்வமேக: ஸ்திதஸ்தேஷாம் யோ பித்த்வா ஸூர்யமண்டலம்।
ப்ரஹ்மலோகமதிக்ரம்ய தேந யாதி பராம் கதிம்।।"(யாஜ்ஞ.167) இதி।।13 ।।

* * *

இதி ஆஸ்ருத்யுபக்ரமாதிகரணம் ।।5 ।।

* * *

வித்வான் ஆகாதவனுக்கு (இறக்கும்போது) ப்ராணன் விடுவதில்லை என்கிறது; ஸ்தூல-ஶரீரம் எப்படி விட்டுப் பிரிகிறதோ, அப்படி ப்ராணங்கள் ஜீவனை விடுவதில்லை; மாறாக, ஸூக்ஷ்ம-பூதங்கள் போல், ஜீவனை அணைத்துக்கொண்டு போகின்றன என அது அறிவிக்கிறது; ஆகையால், அதுவும் தவறில்லை.

◆ ◆ ◆ ◆

501. ஸ்மர்யதே ச (4-2-13)

ஸ்ம்ருதியிலும் சொல்லப்படுகிறது

வித்வானும் மண்டை-நாடி வழியாக வெளியேறுவது ஸ்ம்ருதியிலும் சொல்லப்படுகிறது - **''அந்த நாடிகளில் எந்த ஒன்று உயர உள்ளதோ, அதன் மூலம், ஸூர்ய-மண்டலத்தைப் பிளந்து நான்முகனது உலகத்தைக் கடந்து உயர்ந்த பரமபத-கதியை அடைகிறான்''** என்று.

* * *

ஆஸ்ருத்யுபக்ரமாதிகரணம் முற்றிற்று

* * *

140.பரஸம்பத்த்யதிகரணம் (4-2-6)

முன் குறிப்பு

பரஸம்பத்தி என்றால், பரமாத்மாவை சேர்தல் என்று அர்த்தம்.

வேதம் சொல்கிறது, ''மரணம் அடையும்போது, வாக் மனஸ்ஸில் சேர்கிறது; மனஸ் ப்ராணனில் சேர்கிறது; ப்ராணன் தேஜஸ்ஸில் சேர்கிறது; தேஜஸ் பரதெய்வத்தில் சேர்கிறது'' என்று.

இதில், தேஜஸ் என்பது பஞ்சபூதங்களையும் குறிக்கும் என்று சொல்லியாயிற்று. அந்த பஞ்சபூதங்களுடன் கூடிய ஜீவன் பரதெய்வத்தில் சேர்வது பற்றி இப்போது விசாரம். (பரதெய்வம் - உயர்ந்த தெய்வமான பரப்ரஹ்மம்; பரமாத்மா)

பூர்வபக்ஷம் - பஞ்சபூதங்கள் பரமாத்மாவுடன் சேர்வதால் ஒரு தனிப் பயனும் இல்லை. அவை சிலருக்கு புண்யபாபகர்மங்களுக்கு ஏற்ப அடுத்த உடலைக் கொடுக்கும்; அல்லது சிலருக்கு ப்ரஹ்மவித்யைக்கு ஏற்ப ஏதாவது உடலைக் கொடுக்கப் போகலாம். இப்படி ஒரு பலனுக்காக போகலாம். இது தவிர பரதெய்வத்தில் போவதில்லை.

வேதத்தில் பரதெய்வத்தில் அவை சேர்வதாக சொல்லியிருப்பதானது, பொதுவாக சொன்னதாகும்; எல்லா பொருளுமே எப்போதுமே பரதெய்வத்தில் சேர்ந்திருப்பதால் அப்படி சொன்னது. இங்கே மரணசமயத்தில் தனிப்பட்டதாக பரதெய்வத்தில் சேர்வதால் பயனில்லை; ஆதலால், அதனைச் சொல்லவில்லை.

ஸித்தாந்தம் - பஞ்சபூதங்களும் பரதெய்வத்தில் சேர்கின்றன; அதனை வேதம் சொல்கிறது. வேதம் சொல்வதை அப்படியே ஏற்க வேண்டும்.

அதற்கு என்ன பயன் என்பதையும் நாம் ஊகித்துக் கொள்ள முடியும்.

உதாஹரணமாக நாம் உறங்கும்போது பரமாத்மாவில் சேர்வதாக வேதம் சொல்கிறது. அதனை அப்படியே எல்லா மதத்தினரும் ஒப்புக் கொள்கிறோம்; உறங்கும்போது பரமாத்மாவைச் சேர்வதால் என்ன பலன் என்பதையும் நாமே ஊகித்துக் கொள்கிறோம். களைப்பாறுதல் தான் பலன் ஆகும். அதுபோல் இங்கும் ஒருவிதமாக களைப்பாறுகிறான் என்று பலனை ஊகித்துக் கொள்ளலாம்.

பரமாத்மாவிடம் ஜீவன் களைப்பாறுதல் என்பது மூன்று விதம் -

1. உறக்கத்தில் - பாரம் சுமப்பவன் அந்த பாரத்துடனேயே தடியை ஊன்றிக்கொண்டு களைப்பாறுவது போல உறக்கத்தில் உடலைச் சுமந்துகொண்டே பரமாத்மாவிடம் களைப்பாறுகிறான்.
2. ப்ரளயத்தில் - பாரத்தை இறக்கி விட்டு களைப்பாறுவது போல உடலை விட்டுவிட்டு பிரளயத்தில் களைப்பாறுகிறான். இது லயம் ஆகும். பரமாத்மாவை விட்டு பிரித்து அறிய முடியாதபடி அவனுடன் ஜீவன் ஒன்றிவிடுகிறான்.
3. மரணத்தில் - ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்களுடன் கூடிய ஜீவன், பரமாத்மாவில் சேர்ந்து களைப்பாறுகிறான். இது லயம் அல்ல; பரமாத்மாவுடன் சேர்கிறான் என்பது மட்டுமே.

१४०.परसम्पत्त्यधिकरणम् (४-२-६)

५०२.तानि परे तथा ह्याह (४-२-१४)

सकरणग्रामः सप्राणः करणाध्यक्षः प्रत्यगात्मा उत्क्रान्तिवेलायां तेजःप्रभृतिभूतसूक्ष्मेषु सम्पद्यत इत्युक्तम्। सैषा सम्पत्तिर्विदुषो न विद्यत इत्याशङ्क्य परिहृतम्।

तानि पुनर्जीवपरिष्वक्तानि भूतसूक्ष्माणि किं यथाकर्म यथाविद्यं च स्वकार्याय गच्छन्ति, उत परमात्मनि सम्पद्यन्त इति विशये -

मध्ये परमात्मसम्पत्तौ सुखदुःखोपभोगरूपकार्यादर्शनात् तदुपभोगानुगुण्येन यथाकर्म यथाविद्यं च गच्छन्ति इति प्राप्ते उच्यते -

तानि परे इति। तानि परस्मिन् आत्मनि सम्पद्यन्ते। कुतः? **तथा ह्याह** श्रुतिः, ''**तेजः परस्यां देवतायाम्**''(छा.6-8-6)[1] इति। यथाऽऽह श्रुतिः, तदनुगुणं कार्यं कल्प्यमित्यर्थः। सुषुप्तिप्रलययोर्यथा परमात्मसम्पत्त्या सुखदुःखोपभोगायासविश्रमः; तद्वदिहापि॥

इति परसम्पत्त्यधिकरणम् ॥ ६ ॥

---

140. பரஸம்பத்த்யதிகரணம் (4-2-6)

502. தாநி பரே ததா ஹ்யாஹ (4-2-14)

ஸகரணக்ராம: ஸப்ராண: கரணாத்யக்ஷ: ப்ரத்யகாத்மா உத்க்ராந்திவேலாயாம் தேஜ:ப்ரப்ருதிபூதஸூக்ஷ்மேஷு ஸம்பத்யத இத்யுக்தம்। ஸைஷா ஸம்பத்தி: விதுஷோ ந வித்யத இத்யாஶங்க்ய பரிஹ்ருதம்।

தாநி புநர்ஜீவபரிஷ்வக்தாநி பூதஸூக்ஷ்மாணி கிம் யதாகர்ம யதாவித்யம் ச ஸ்வகார்யாய கச்சந்தி, உத பரமாத்மநி ஸம்பத்யந்த இதி விஶயே -

மத்யே பரமாத்மஸம்பத்தௌ ஸுகது:கோபபோகரூபகார்யாதர்ஶநாத் ததுபபோகாநுகுண்யேந யதாகர்ம யதாவித்யம் ச கச்சந்தி - இதி ப்ராப்தே உச்யதே -

தாநி பரே இதி। தாநி பரஸ்மிந் ஆத்மநி ஸம்பத்யந்தே। குத:? *ததா ஹ்யாஹ* ஶ்ருதி:, ''*தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்*''(சா.6-8-6)[1] இதி। யதாऽऽஹ ஶ்ருதி:, ததநுகுணம் கார்யம் கல்ப்யமித்யர்த:। ஸுஷுப்தி-ப்ரலயயோ: யதா பரமாத்மஸம்பத்த்யா ஸுக-து:கோபபோகாயாஸவிஶ்ரம:, தத்வதிஹாபி॥

இதி பரஸம்பத்த்யதிகரணம் ॥ 6 ॥

140.பரஸம்பத்த்யதிகரணம் (4-2-6)

502.தாநி பரே ததா ஹி ஆஹ (4-2-14)

அவை பரமாத்மாவில் சேர்கின்றன; ஏனெனில், அப்படித்தானே வேதம் சொல்கிறது

ஸங்கதி & ஸம்சயம்

இந்த்ரியங்களின் தலைவனான ஜீவாத்மாவானவன் இந்த்ரிய-குழுவுடனும், ப்ராணனுடனும் கூடியவனாய் உத்க்ராந்தி-சமயத்தில் தேஜஸ் முதலிய ஸூக்ஷ்ம-பூதங்களில் சேருகிறான் என சொல்லப்பட்டது; இந்த சேர்க்கையானது ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவனுக்குக் கிடையாது என்று கேள்வி எழுப்பி பரிகாரமும் சொல்லப்பட்டது;

ஜீவனால் அணைக்கப்பட்ட இந்த ஸூக்ஷ்ம-பூதங்கள் புண்ய-பாப-கர்மங்களுக்கு ஏற்பவும் ப்ரஹ்ம-வித்யைக்கு ஏற்பவும் தன் செயலுக்காக போகின்றனவா? அல்லது பரமாத்மாவில் சேர்கின்றனவா? - என்று ஸந்தேஹம்

பூர்வபக்ஷம்

ஸூக்ஷ்ம-பூதங்கள், இடையில் பரமாத்மாவைச் சேருவதால் சுக-துக்கம்-அனுபவித்தல் ஆகிற பலன் இருப்பதாகத் தெரியவில்லை; ஆகையால், அந்த சுக-துக்க-அனுபவத்துக்காக, (ஜீவனது) புண்ய-பாப-கர்மங்களுக்கு ஏற்பவும் ப்ரஹ்ம-வித்யைக்கு ஏற்பவும் போகின்றன.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது -

'தாநி பரே - அவை பரப்ரஹ்மத்தில் சேர்கின்றன - என்று.

ஏன்?

ததா ஹி ஆஹ - அப்படித்தானே - [1]**''தேஜஸ் பரதேவதையில் சேர்கிறது''** என்று வேதம் சொல்கிறது.

வேதம் எப்படி சொல்கிறதோ அதற்கு ஏற்ப செயலை ஊகித்துக் கொள்ள வேண்டும் என்று பொருள்;

உதாஹரணமாக, உறக்கத்திலும் ப்ரளயத்திலும் பரமாத்மாவைச் சேர்வதால் சுக-துக்கம் அனுபவித்த களைப்பு ஆறுதல் (பலனாக) ஆகிறது; அது எப்படியோ, அது போல் இங்கேயும்.

(பரமாத்மாவைச் சேர்கிறான் என வேதம் சொல்கிறது; அப்படி சேர்வதால் வரும் பலனை நாம் ஊகித்துக் கொள்ள வேண்டும்; களைப்பு-ஆறுதல்தான் அந்த பலன் ஆகும்).

* * *

பரஸம்பத்த்யதிகரணம் முற்றிற்று.

141. அவிபாகாதிகரணம் (4-2-7)

முன் குறிப்பு

மரணம் அடையும் ஜீவன் பற்றி வேதம் சொல்லும் வாக்யம் இது -

''1. மரணம் அடைபவனுக்கு வாக் மனஸ்ஸில் சேர்கிறது;

2. மனஸ் ப்ராணனில்,

3. ப்ராணன் தேஜஸ்ஸில்

4. தேஜஸ் பரதெய்வத்தில்'' என்று..

முதல் வாக்யத்தில் உள்ள சேர்கிறது எனும் சொல்லை பின்னர் உள்ள எல்லா வாக்யங்களிலும் சேர்த்துக் கொள்ள வேணும். இதில் கடைசியில் உள்ள வாக்யம், ''தேஜஸ் பரதெய்வத்தில் (சேர்கிறது)'' என்பதாகும். ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்களுடன் கூடிய ஜீவன் பரமாத்மாவில் சேர்கிறான் என்று அர்த்தம் முன் அதிகரணங்களில் சொல்லியாயிற்று.

இந்த சேர்தல் என்பது என்ன? சேர்தல் என்பது இரு விதம் ஆகலாம்.

1) கார்யப்பொருள் காரணப்பொருளில் ஒன்றிச் சேர்கிறது. ஒரே பொருளாக ஆகிறது. உதாஹரணமாக பானை உடைந்து போனால், மண்ணாகவே ஆகி விடுகிறது.

2) ஒரே பொருளாக ஒன்றாமல், தனித்தனியாக இரு பொருள்களாக இருந்து கொண்டே, ஒட்டிச் சேரும் எனலாம். (உ.ம்) கையில் எண்ணெய் ஒட்டி சேர்கிறது.

பூர்வபக்ஷம் - பரமாத்மா எல்லா பொருளுக்கும் காரணம் ஆனவன்; ஆகையால், பரமாத்மாவில் சேர்தல் என்றால் காரணப் பொருளுடன் ஒன்றிவிடுதல் என்று அர்த்தம்.

ஸித்தாந்தம் - இங்கே 'சேர்கிறது' என்கிற சொல்லானது முதல் வாக்யத்தில் மட்டுமே உள்ளது; பின் அடுத்துள்ள வாக்யங்களில் 'அந்த சொல் இல்லை; ஆனாலும், முதல் வாக்யத்தில் உள்ள அந்த சொல்லையே பின்னரும் கூட்டிசேர்த்து அர்த்தம் சொல்கிறோம். முதல் வாக்யத்தில் ''வாக் மனஸ்ஸில் சேர்கிறது என்னும்போது, 'சேர்கிறது' என்றால், காரணப் பொருளுடன் ஒன்றுதல் என்ற அர்த்தம் கிடையாது; தொடர்பு உடையதாக ஆகிறது என்றே அர்த்தம். எனவே, பின்னர் உள்ள வாக்யத்திலும் அந்த அர்த்தம்தான் கிடைக்கும்.

முதல் வாக்யத்தில் உள்ள சொல்லை அடுத்தடுத்த வாக்யத்தில் இறக்கி வைத்துக்கொண்டு அர்த்தம் சொல்லும்போது, முதலில் சொன்ன அர்த்தம்தான் கிடைக்கும்; வேறு அர்த்தம் சொல்வதானால், அதற்கு தேவையான ப்ரமாணம் ஏதாவது திடமாக இருந்தால் மட்டுமே சொல்லலாம்; இல்லாவிட்டால், வேறு அர்த்தம் சொல்வது சரியல்ல.

எனவே, சேர்கிறது என்றால், தொடர்பு உடையதாக ஆகிறது என்றே அர்த்தம். பரமாத்மாவை விட்டு பிரித்து சொல்ல முடியாதபடியான தொடர்பு வருகிறது. பொதுவாக எப்போதுமே பரமாத்மா ஆதாரமாக இருப்பதால் தொடர்பு நிலையாக இருக்கிறது என்றாலும், இது ஒரு தனிப்பட்ட விசேஷமான தொடர்பு என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

१४१. अविभागाधिकरणम् (४-२-७)

५०३.अविभागो वचनात् (४-२-१५)

सेयं परमात्मनि सम्पत्तिः किं प्राकृतलयवत् कारणापत्तिरूपा, उत “**वाङ्मनसि**” (छा.6-8-6)[1] इत्यादिवदविभागरूपेति चिन्तायाम् -

परमात्मनः सर्वेषां योनिभूतत्वात् कारणापत्तिरूपेति प्राप्ते उच्यते -

अविभागः इति। अपृथग्भावः - पृथग्व्यवहारानर्हसंसर्ग इत्यर्थः। कुतः? **वचनात्।** “**तेजः परस्यां देवतायाम्**” (छा.6-8-6)[2] इत्यत्रापि, “**वाङ्मनसि सम्पद्यते**” (छा.6-8-6)[3] इत्यतः सम्पद्यत इति वचनस्यानुषङ्गात्; तस्य च संसर्गविशेषवाचित्वात् अनुषक्तस्याभिधानवैरूप्ये प्रमाणाभावात्; उत्क्रान्तिवेलायां कारणापत्तिप्रयोजनाभावात्; पुनस्तत्राव्यक्तादिसृष्ट्यवचनाच्च॥

इति अविभागाधिकरणम्॥ ७ ॥

---

141. அவிபாகாதிகரணம்(4-2-7)

503.அவிபாகோ வசநாத் (4-2-15)

ஸேயம் பரமாத்மநி ஸம்பத்தி: கிம் ப்ராக்ருதலயவத் காரணாபத்திரூபா, உத *“வாங்மநஸி”* (சா.6-8-6)[1] இத்யாதிவத் அவிபாகரூபா இதி சிந்தாயாம் -

பரமாத்மந: ஸர்வேஷாம் யோநிபூதத்வாத் காரணாபத்திரூபேதி ப்ராப்தே உச்யதே -

அவிபாக: - இதி। அப்ருதக்பாவ: - ப்ருதக்வ்யவஹாராநர்ஹஸம்ஸர்க: இத்யர்த:। குத:? வசநாத்। *“தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்”* (சா.6-8-6)[2] இத்யத்ராபி, *“வாங்மநஸி ஸம்பத்யதே”* (சா.6-8-6)[3] இத்யத: ஸம்பத்யத இதி வசநஸ்யாநுஷங்காத்; தஸ்ய ச ஸம்ஸர்கவிஶேஷவாசித்வாத் அநுஷக்தஸ்ய அபிதாநவைரூப்யே ப்ரமாணாபாவாத்; உத்க்ராந்திவேலாயாம் காரணாபத்திப்ரயோஜநாபாவாத்; புநஸ்தத்ர அவ்யக்தாதிஸ்ருஷ்ட்யவசநாச்ச।।15।।

இதி அவிபாகாதிகரணம்।।7 ।।

141. அவிபாகாதிகரணம் (4-2-7)

503. அவிபாக: வசநாத் (4-2-15)

[பரமாத்மாவில் சேருதல் என்பது] பிரிவின்மை ஆகும்; அதைச் சொல்லும் சொல்லினால்.

ஸங்கதி & ஸம்சயம்

(உத்க்ராந்தி சமயத்தில் ஜீவனால் அணைக்கப்பட்ட ஸூக்ஷ்ம-பூதங்கள் பரமாத்மாவில் சேர்கின்றன என்று சொல்லி ஆயிற்று). பரமாத்மாவில் சேர்தல் என்கிற இது, ப்ராக்ருத-ப்ரளயத்தில் ஆவது போல் காரண-பொருளாக ஆதலா? அல்லது [1]**''வாக் மனஸ்ஸில் சேர்கிறது''** முதலியதில் ஆவது போல் அவிபாக-உருவானதா (பிரிவின்மையா?)?

பூர்வபக்ஷம்

பரமாத்மாவானவன் எல்லா பொருளுக்கும் உபாதாந-காரணம் ஆனவன்; அதனால், பரமாத்மாவில் சேர்தல் என்பது காரண-பொருளாக ஆதல் ஆகும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **அவிபாக:** என்று;

அவிபாக: (பிரிவின்மை) - தனியாக ஆகாமை; (பரமாத்மாவை விட்டு) பிரித்து சொல்ல முடியாதபடியான தொடர்பு என்று அர்த்தம்.

ஏன்?

வசநாத் - ஏனெனில், [3]**''வாக் ஆனது மனஸ்ஸில் சேர்கிறது''** என்ற வேத-வாக்யத்திலிருந்து 'சேர்கிறது' என்ற சொல்லானது, [2]**''தேஜஸ் பர-தெய்வத்தில்''** என்ற வாக்யத்திலும் அனுஷங்கமாக தொடர்கிறது; முதல் வாக்யத்தில் உள்ள 'சேர்கிறது' எனும் அந்த சொல்லானது, விசேஷ-தொடர்பையே பொருளாக சொல்லும்; முன்-வாக்யத்திலிருந்து அடுத்த வாக்யத்தில் தொடரும் சொல்லுக்கு வேறுபட்ட பொருள் ஆவதில் ப்ரமாணம் இல்லை. (இதன் விளக்கத்தை முன் குறிப்பில் காணலாம்)

மேலும், உத்க்ராந்தி சமயத்தில், (பூத-ஸூக்ஷ்மங்களுடன் கூடிய ஜீவன்) உபாதான-காரண-பொருளாக ஆவதால் பலன் எதுவும் இல்லை.

✍*(ப்ரளய-காலத்தில் பரமாத்மாவுடன் ஒன்றிச் சேர்வது ஶரீர-சுமையை விட்டு நீண்டகால ஓய்வு எடுப்பதற்காக; ஆனால், இப்போது மோக்ஷம் பெற்று பரமபதம் செல்பவன் ப்ரளயம் போல ஒன்றிச் சேர்ந்து நீண்டகாலம் ஓய்வு எடுக்கவேண்டியதில்லை; அதனால் பூதஸூக்ஷ்மத்துடன் கூடி.வனாக பரமாத்மாவுடன் சேர்ந்திருந்து ஶ்ரமம் இல்லாமல், மேலே போகிறான்.).*✍

மேலும், மீண்டும் அந்த காரண-பொருளிலிருந்து அவ்யக்தம் முதலிய ஸ்ருஷ்டி நடப்பதாகச் சொல்லவில்லை. (எனவே, இங்கு லயம் அடைவதைச் சொல்லவில்லை)

* * *

அவிபாகாதிகரணம் முற்றிற்று.

142. ததோகோऽதிகரணம் (4-2-8)

முன் குறிப்பு

மரணம் அடையும் ஜீவன், ஶரீரத்திலிருந்து வெளியேறுவதற்கு முன் இந்த்ரியங்கள், மனஸ், ப்ராணன், ஜீவன், பஞ்சபூதங்கள் ஆகியவை ஒன்று சேர, எல்லாவற்றுடன் கூடிய ஜீவன், பரமாத்மாவில் சேர்கிறான்.

இவையெல்லாம் உடலுக்குள் நடக்கும் விஷயங்கள். இவை எல்லா மனிதருக்கும் பொதுவானவை. இதுவரை ஶரீரத்திலிருந்து வெளியே புறப்படுவதற்கான ஏற்பாடு ஆகும்.

இனி புறப்பட்டு, உடலிலிருந்து வெளியேறி, மேலே செல்ல வேண்டும். இதில் மனிதர்களுக்கிடையே வித்யாசம் உண்டு.

உடலிலிருந்து வெளியே வருவதற்கு வாகாக, கண், காது, வாய் முதலிய த்வாரங்கள் உள்ளன. ஹ்ருதயத்திலிருந்து இந்த த்வாரங்களை இணைக்கும் நாடிகள் 101 உள்ளன. அவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றிக்கொண்டு, அதன் மூலமாக ஶரீரத்தில் ஏதாவது த்வாரம் வழியாக ஜீவன் வெளியேறுவான்.

ஆனால், வித்வானுக்காக (ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவனுக்காக) சிறப்பு வழி உள்ளது. ஹ்ருதயத்தில் உள்ள நூறு நாடிகள் உடலில் பக்கவாட்டில் ஏதாவது ஒரு த்வாரத்தில் கொண்டுவிடும்; ஆனால், 101 வது நாடியானது, மேலே, நடுமண்டைக்கு செல்கிறது; அதற்கு மூர்தன்ய-நாடி (நடுமண்டை நாடி), ப்ரஹ்மநாடி என்றெல்லாம் பெயர்; அதன் வழியாக இந்த ஜீவன் வெளியேறி, மேலே உயர செல்கிறான்.

அந்த நாடியை இவன் எப்படி அடையாளம் கண்டுபிடித்து வெளியேறுவான்? இவனால் கண்டுபிடிக்க முடியுமா என்பது விசாரம்.

அந்த நாடியை இவன் கண்டுபிடிக்கும்படி ஹ்ருதயத்தில் இருக்கும் பரமாத்மா இவனுக்கு அனுக்ரஹம் செய்கிறான். ஏனெனில், இவன் செய்த உபாஸநம் என்பது, அந்த பரமாத்மாவுக்கு ஆராதனமாக அமைந்தது; மேலும் இவன் உபாஸநம் செய்யும்போது அதற்கு அங்கமாக கதி-சிந்தனம் செய்திருப்பான்; ஶரீரத்திலிருந்து வெளியேறி பரமபதம் செல்லும் அர்ச்சிராதி வழியையும் நினைத்து த்யானம் செய்திருப்பான். (3-3-32 மற்றும் 4-2-20 ஸூத்ரங்கள் காண்க); அதனால் ப்ரீதி அடையும் பகவான் அந்த பலனை அவனுக்கு அமைத்துத் தருகிறான்.

அந்த ஜீவனது இருப்பிடமான ஹ்ருதயத்தின் நுனியில் வெளிச்சம் ஒன்றை உண்டாக்குகிறான்; அதன் மூலம் அந்த நாடியை கண்டிபிடித்துக் கொண்டு ஜீவன் வெளியேறுவான்.

“தத்-ஓக:” - அந்த ஜீவனது இருப்பிடமான ஹ்ருதயம் என்று அர்த்தம்; அது நுனியில் ஒளியுடன் கூடியதாக ஆகும் என்று ஸூத்ரத்தில் ஸாதிக்கிறார்.

१४२. तदोकोऽधिकरणम् (४-२-८)

५०४.तदोकोऽग्रज्वलनं तत्प्रकाशितद्वारो विद्यासामर्थ्यात् तच्छेषगत्यनुस्मृतियोगाच्च हार्दानुगृहीतः शताधिकया (४-२-१६)

एवं गत्युपक्रमावधि विद्वदविदुषोः समानाकारः उत्क्रान्तिप्रकार उक्तः, इदानीं विदुषो विशेष उच्यते।

तत्रेदमाम्नायते - **''शतं चैका च हृदयस्य नाड्यस्तासां मूर्धानमभिनिस्सृतैका। तयोर्ध्वमायन् अमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति''**(क.6-16)[1] इति।

'अनया नाडीनां शताधिकया मूर्धन्यनाड्यैव विदुषो गमनम्, अन्याभिरेव चाविदुषो गमनम्' इत्ययं नियम उपपद्यते, नेति संशयः।

किं युक्तम्? नियमो नोपपद्य इति। कुतः? नाडीनां भूयस्त्वादतिसूक्ष्मत्वाच्च दुर्विवेचतया पुरुषेणोपादातुमशक्यत्वात्। **''तयोर्ध्वमायन्नमृतत्वमेति विष्वङ्ङन्या उत्क्रमणे भवन्ति''** (क.6-16)[2] इति यादृच्छिकीमुत्क्रान्तिमनुवदतीति युक्तमिति॥

---

142. ததோகோதிகரணம் ॥4-2-8॥

503. ததோகோऽக்ரஜ்வலநம் தத்ப்ரகாஶிதத்வாரோ வித்யாஸாமர்த்யாத் தச்சேஷகத்யநுஸ்ம்ருதியோகாச்ச ஹார்தாநுக்ருஹீத: ஶதாதிகயா॥4-2-16॥

ஏவம் கத்யுபக்ரமாவதி வித்வதவிதுஷோ: ஸமாநாகார: உத்க்ராந்திப்ரகார உக்த:, இதாநீம் விதுஷோ விஶேஷ உச்யதே।

தத்ரேதமாம்நாயதே - *''ஶதம் சைகா ச ஹ்ருதயஸ்ய நாட்யஸ்தாஸாம் மூர்தாநமபிநிஸ்ஸ்ருதைகா। தயோர்த்வமாயந் அம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே பவந்தி''* (க.6-16)[1] இதி।

'அநயா நாடீநாம் ஶதாதிகயா மூர்தந்யநாட்யைவ விதுஷோ கமநம், அந்யாபிரேவ ச அவிதுஷோ கமநம்' இத்யயம் நியம உபபத்யதே, நேதி ஸம்ஶய:।

கிம் யுக்தம்? நியமோ நோபபத்யதே இதி। குத:? நாடீநாம் பூயஸ்த்வாத் அதிஸூக்ஷ்மத்வாச்ச துர்விவேசதயா புருஷேணோபாதாதுமஶக்யத்வாத்। *''தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே பவந்தி''* (க.6-16)[2] இதி யாத்ருச்சிகீமுத்க்ராந்திமநுவததீதி யுக்தமிதி॥

142. ததோகோsதிகரணம் (4-2-8)

504. ததோக: அக்ரஜ்வலநம் தத்ப்ரகாசிதத்வார: வித்யாஸாமர்த்யாத் தச்சேஷகத்யனுஸ்ம்ருதி-யோகாத் ச ஹார்தானுக்ருஹீத: ஶதாதிகயா (4-2-16)

வித்வான் ஆனவன், உபாஸநத்தின் திறனாலும் அதற்கு சேஷமான கதி-சிந்தநம் எனும் யோகத்தாலும் ஹ்ருதயத்தில் இருக்கும் ப்ரஹ்மத்தால் அனுக்ரஹிக்கப் படுகிறான்; அவனது இருப்பிடமான ஹ்ருதயமானது நுனியில் வெளிச்சம் உள்ளதாக ஆகிறது; அந்த அனுக்ரஹத்தால், வெளிச்சம் பெற்ற வாயிலை அறிபவனாய், நூற்றியொன்றாவதான நாடி மூலமாகவே [வெளிக் கிளம்புகிறான்].

ஸங்கதி (விஷய-தொடர்பு)

இப்படியாக, கதி ஆரம்பிக்கும் வரை, வித்வானுக்கும் வித்வான் ஆகாதவனுக்கும் சமானமாக ஆகும் உத்க்ராந்தி முறை சொல்லப்பட்டது; இப்போது வித்வானுக்கு (ப்ரஹ்ம-உபாஸநம் செய்தவனுக்கு) உள்ள தனி-முறை சொல்லப்படுகிறது.

விஷயவாக்யம்

அதில் இது ஓதப்படுகிறது - [1]**''ஹ்ருதயத்தில் முக்கியமான நாடிகள் நூற்றியொன்று உள்ளன; அவற்றில் ஒன்று தலையை நோக்கிப் போகிறது; அதன் மூலம், மேல் செல்பவனாய் மோக்ஷ-தன்மையைப் பெறுகிறான்; மீதி நாடிகள் சுற்றிலும் ஸம்ஸார-வழியில் செல்வதற்காக ஆகின்றன''** என்று.

ஸம்ஶயம் (ஸந்தேஹம்)

இந்த நூற்றி ஒன்றாவது நாடியான மண்டை-நாடி மூலமாகத்தான் வித்வான் வெளியே போகிறான் என்பதும், வித்வான் ஆகாதவன் பிற நாடிகளின் மூலமாகப் போகிறான் என்பதும் ஆன இந்த வரையறையானது சரியாகுமா? சரியாகாதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? வரையறை வராது என்பது; ஏன்? நாடிகள் மிக அதிகமாகவும் ஸூக்ஷ்மமாகவும் உள்ளன; அதனால், அவற்றைப் பிரித்து தெரிந்து கொள்வது கடினம்; அதனால், மனிதன் மண்டை-நாடியை சரியாகத் தேர்ந்தெடுப்பது முடியாது. [2]**''அந்த மண்டை-நாடி மூலம், மேல் செல்பவனாய் மோக்ஷ-தன்மையைப் பெறுகிறான்; மீதி நாடிகள் சுற்றிலும் ஸம்ஸார-வழியில் செல்வதற்காக ஆகின்றன''**என்ற வாக்யமானது, தற்செயலாக மண்டை-நாடி மூலமாகவும் வெளியே செல்வதை அனுவாதம் செய்கிறது என்பதே பொருந்தும்.

एवं प्राप्ते प्रचक्ष्महे - **शताधिकयेति।** विद्वान् शताधिकया मूर्धन्ययैव नाड्योत्क्रामति। न चास्याः विदुषो दुर्विवेचत्वम्, विद्वान् हि परमपुरुषाराधनभूतात्यर्थप्रियविद्यासामर्थ्यात् विद्याशेषभूततयाऽऽत्यर्थप्रियगत्यनुस्मरणयोगाच्च प्रसन्नेन हार्देन परमपुरुषेणानुगृहीतो भवति;

ततश्च **तदोकः** तस्य जीवस्य स्थानं हृदयम्, **अग्रज्वलनं** भवति। अग्रे ज्वलनं प्रकाशनं यस्य तदिदमग्रज्वलनम्। परमपुरुषप्रसादात् प्रकाशितद्वारो विद्वान् तां नाडीं विजानातीति तया विदुषो गतिरुपपद्यते॥ १६ ॥

⁂

इति तदोकोऽधिकरणम् ॥ ८ ॥

ஏவம் ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - *ஶதாதிகயேதி*। வித்வாந் ஶதாதிகயா மூர்தந்யயைவ நாட்யா உத்க்ராமதி। ந சாஸ்யா: விதுஷோ துர்விவேசத்வம், வித்வாந் ஹி பரமபுருஷாராதநபூதாத்யர்தப்ரியவித்யாஸாமர்த்யாத் வித்யாஷேஷபூததயா அத்யர்தப்ரியகத்யநுஸ்மரணயோகாச்ச ப்ரஸந்நேந ஹார்தேந பரமபுருஷேண அநுக்ருஹீதோ பவதி;

ததஶ்ச *ததோக:* - தஸ்ய ஜீவஸ்ய ஸ்தாநம் ஹ்ருதயம், *அக்ரஜ்வலநம்* பவதி। அக்ரே ஜ்வலநம் ப்ரகாஶநம் யஸ்ய ததிதம் அக்ரஜ்வலநம்। பரமபுருஷப்ரஸாதாத் ப்ரகாஶிதத்வாரோ வித்வாந் தாம் நாடீம் விஜாநாதீதி தயா விதுஷோ கதிருபபத்யதே।। 16 ।।

⁂

இதி ததோகோதிகரணம் ।।8 ।।

⁂

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் -

சதாதிகயா - (நூற்றுக்கு அதிகமான நூற்றியொன்றாவது நாடி மூலமாக) - வித்வான் ஆனவன், நூற்றியொன்றாவதான மண்டை-நாடி மூலமாகவே வெளிக் கிளம்புகிறான்; இந்த நாடியை வித்வான் தெரிந்து கொள்ள முடியாது என்பது கிடையாது.

(வித்வான் ஆனவன், ப்ரஹ்மவித்யை எனப்படும் உபாஸநம் செய்கிறான்; அந்த ப்ரஹ்ம-வித்யைக்கு அங்கமாக அர்சிராதி-கதியை சிந்தித்தல் எனும் சிந்தனையும் செய்கிறான்) பரமபுருஷனுக்கு ஆராதனமாகவும் மிகமிக ப்ரியமானதும் ஆகும் ப்ரஹ்ம-வித்யையின் திறனாலும், வித்யைக்கு சேஷமாக தனக்கு மிகவும் ப்ரியமான (அர்சிராதி-கதியை) சிந்தித்தல் எனும் யோகத்தாலும் வித்வானுடைய ஹ்ருதயத்துக்குள் இருக்கும் பரமபுருஷன் ப்ரஸன்னன் ஆகிறான்; அந்த பரமபுருஷனால் அனுக்ரஹிக்கப் பட்டவனாக வித்வான் ஆகிறான்.

அந்த அனுக்ரஹத்தால்,

ததோக: - அந்த ஜீவனது இருப்பிடமான ஹ்ருதயம் ஆனது,

அக்ர-ஜ்வலனம்- நுனியில் ஒளியுடன் கூடியதாக ஆகிறது; 'அக்ரே ஜ்வலனம் யஸ்ய தத் அக்ரஜ்வலனம்' என்று ஸமாஸ-குறிப்பு.

தத்ப்ரகாசித-த்வார: - பரமபுருஷனது அனுக்ரஹத்தால் வெளிச்சம் பெற்ற வாயிலை உடைய வித்வான் ஆனவன்,

அந்த மண்டை-நாடியை அறிவான்; அதனால், அதன் மூலம் வித்வான் செல்வது சரியாகிறது.

* * *

ததோகோதிகரணம் முற்றிற்று

143. ரஶ்ம்யநுஸாராதிகரணம் (4-2-9)

முன் குறிப்பு

வேதம் சொல்கிறது - ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவன், இந்த ஶரீரத்திலிருந்து வெளியேறி, ஸூர்யனது ஒளிக் கதிர்களைக் கொண்டு மேலே உயர செல்கிறான்'' என்று.

விசாரம் - ஸூர்யனது ஒளிக்கதிர்களைக் கொண்டே செல்கிறான் என்கிற நியமம் வருமா? அல்லது நியமம் இல்லாமல் அப்படியும் செல்லலாம் என்பதா?

பூர்வபக்ஷம் - நியமம் கிடையாது; இரவில் ஸூர்யனது ஒளிக்கதிர்கள் இருக்காது. எனவே, இரவில் மரணம் அடைபவன் அவற்றைப் பற்றிக் கொண்டு போக முடியாது; பகலில் மரணம் அடைந்தால் மட்டுமே அப்படி போக முடியும்; அதைத்தான் வேதம் சொல்கிறது.

ஸித்தாந்தம் - வேதம் சொன்ன நியமம் உண்டு; ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவன், ஸூர்யனது ஒளிக் கதிர்களைப் பற்றிக்கொண்டு உயர செல்கிறான்.

இரவிலும் கூட அப்படி போக முடியும்; ஏனெனில், இரவிலும் ஸூர்யனது ஒளிக் கதிர்கள் இருக்கும். அதனால்தான் கோடைக் காலத்தில் இரவிலும் கூட வெப்பம் தெரிகிறது.

ஆனால் இரவில் ஸூர்யனது அந்த ஒளிக் கதிர்கள் மிகக் குறைவாக இருக்கும் என்பதால் இருளை அகற்ற போதுமாகவில்லை.

ஒரு இடத்தில் நெருப்பு இருந்து, பின்னர் அதனை அகற்றினால், அதன் பின்னரும் சூடு இருக்கும்; ஏனெனில், நெருப்பின் சிறு ஸூக்ஷ்மமான அம்சங்கள் இருக்கும். அதுபோல இது.

எனவே, இரவிலோ பகலிலோ எப்போது மரணம் ஆனாலும் சரி, ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவர் எல்லாருமே ஸூர்யனது ஒளிக்கதிர்களைப் பற்றிக்கொண்டு மேலே செல்வர் என்பது சரியாகும்.

१४३. रश्म्यनुसाराधिकरणम् (४-२-९)

५०५. रश्म्यनुसारी (४-२-१७)

विदुषो हृदयात् शताधिकया मूर्धन्यनाड्या निर्गतस्याऽऽदित्यरश्मीन् अनुसृत्याऽऽदित्यमण्डलगतिः श्रूयते - **"अथ यत्रैतदस्माच्छरीरादुत्क्रामति, अथैतैरेव रश्मिभिरूर्ध्वमाक्रमते"** (छा.8-6-5)[1] इति।

तत्र रश्म्यनुसारेणैवेत्ययं गतिनियमः सम्भवति, नेति चिन्तायाम् -

निशि मृतस्य विदुषो रश्म्यनुसारासम्भवादनियमः। वचनं तु पक्षप्राप्तविषयमिति प्राप्ते उच्यते -

रश्म्यनुसारी इति। रश्म्यनुसार्येव विद्वानूर्ध्वं गच्छति; कुतः? **"अथैतैरेव रश्मिभिः"** (छा.8-6-5)[2] इत्यवधारणात्; पाक्षिकत्वे ह्येवकारोऽनर्थकस्स्यात्।

यदुक्तम् - निशि मृतस्य रश्म्यसम्भवात् रश्मीननुसृत्य गमनं नोपपद्यते इति, तन्न; निश्यपि सूर्यरश्म्यनुसारः सम्भवति; लक्ष्यते हि निश्यपि निदाघसमये ऊष्मोपलब्ध्या

---

143. ரஶ்ம்யநுஸாராதிகரணம் (4-2-9)

505. ரஶ்ம்யநுஸாரீ (4-2-17)

விதுஷோ ஹ்ருதயாத் ஶதாதிகயா மூர்தந்யநாட்யா நிர்கதஸ்ய ஆதித்யரஶ்மீந் அநுஸ்ருத்ய ஆதித்யமண்டலகதி: ஶ்ரூயதே - *"அத யத்ரைததஸ்மாச்சரீராதுத்க்ராமதி, அதைதைரேவ ரஶ்மிபிரூர்த்வமாக்ரமதே"* (சா.8-6-5)[1] இதி।

தத்ர ரஶ்ம்யநுஸாரேணைவேத்யயம் கதிநியம: ஸம்பவதி, நேதி சிந்தாயாம் -

நிஶி ம்ருதஸ்ய விதுஷோ ரஶ்ம்யநுஸாராஸம்பவாதநியம:। வசநம் து பக்ஷப்ராப்தவிஷயமிதி ப்ராப்தே உச்யதே -

ரஶ்ம்யநுஸாரீ இதி। ரஶ்ம்யநுஸார்யேவ வித்வாந் ஊர்த்வம் கச்சதி; குத:? *"அதைதைரேவ ரஶ்மிபி:"* (சா.8-6-5)[2] இத்யவதாரணாத்; பாக்ஷிகத்வே ஹி ஏவகார: அநர்தக: ஸ்யாத்।

யதுக்தம் - நிஶி ம்ருதஸ்ய ரஶ்ம்யஸம்பவாத் ரஶ்மீநநுஸ்ருத்ய கமநம் நோபபத்யதே இதி, தந்ந; நிஶ்யபி ஸூர்யரஶ்ம்யநுஸார: ஸம்பவதி;

143. ரஶ்ம்யநுஸாராதிகரணம் (4-2-9)

505. ரஶ்ம்யநுஸாரீ (4-2-17)

ஸூர்யனது ஒளிக்கதிர்களைப் பின்பற்றியே
[ஜ்ஞானி ஆனவன் உயர செல்கிறான்]

ஸங்கதி (விஷயதொடர்பு) & விஷயவாக்யம்

ஹ்ருதயத்திலிருந்து நூற்றியொன்றாவதான மண்டை-நாடி மூலமாக வெளியேறும் வித்வான் ஆனவன், ஸூர்யனது ஒளிக்கதிர்களைப் பின்பற்றி ஸூர்யமண்டலத்தை அடைவது வேதத்தில் சொல்லப் படுகிறது - [1]**''எப்போது இந்த ஶரீரத்திலிருந்து வெளியேறுகிறானோ, அப்போது இந்த (ஸூர்யனது) ஒளிக்கதிர்களின் மூலமாகவே உயர செல்கிறான்''** - என்று.

ஸம்ஶயம்

இதில், ஒளிக்கதிர்கள் மூலமாகவே (செல்கிறான்) என்கிற இந்த நியமம் வருமா? அல்லது வராதா? என்று விசாரம் செய்யும்போது,

பூர்வபக்ஷம்

இரவில் மரணமடையும் ஜ்ஞானி ஆனவன் ஸூர்யனது ஒளிக்கதிர்களைப் பின்பற்றுவது நடக்காது; ஆனபடியால், நியமம் வராது; இந்த வேத-வாக்யமானது, அப்படியும் ஆகலாம் என்பதைப் பற்றியது. (பகலில் மரணமடைபவன் ஸூர்யனது ஒளிக்கதிர்களைப் பின்பற்றுவான்; அப்படியும் ஆகலாம் என்பதை சொல்கிறது)

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட, ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது -

'ரஶ்ம்யநுஸாரீ' - ஒளிக்கதிர்களைப் பின்பற்றியே ஜ்ஞானி ஆனவன் உயர செல்கிறான்.

ஏன்? ஏனெனில், [2]**''இந்த ஒளிக்கதிர்களின் மூலமாகவே''** என்று தீர்மானமாக வேதம் சொல்கிறது; சில சமயம் மட்டும் நடக்கும் முறை பற்றி வேதம் சொல்வதானால், 'ஒளிக்கதிர்களின் மூலமாகவே' என்று 'ஏ' என்று சொன்னது வீணாகி விடும்.

கேள்வி - இரவில் மரணமடைபவனுக்கு ஸூர்யனது ஒளிக்கதிர்கள் இருக்காதானபடியால், ஒளிக்கதிர்களைப் பின்பற்றியே செல்வது வராது.

பதில் - அப்படி சொன்னது எதுவோ அது கிடையாது; இரவிலும் ஸூர்யனது ஒளிக்கதிர்களைப் பின்பற்றுவது நடக்கும். (ஏனெனில், இரவிலும் ஸூர்யனது ஒளிக்கதிர்கள் உள்ளன.)

रश्मिसद्भावः; हेमन्तादौ तु हिमाभिभवाद् दुर्दिन इवोष्मानुपलम्भः; श्रूयते च नाडीरश्मीनां सर्वदाऽन्योन्यान्वयः, **“तद्यथा महापथ आततः उभौ ग्रामौ गच्छति इमं चामुं च, एवमेवैते आदित्यस्य रश्मय उभौ लोकौ गच्छन्तीमं चामुं च। अमुष्मादादित्यात् प्रतायन्ते; ताः आसु नाडीषु सृप्ताः। आभ्यो नाडीभ्यः प्रतायन्ते; तेऽमुष्मिन्नादित्ये सृप्ताः”** (छा.8-6-2)[1] इति।

तस्मान्निश्यपि रश्मिसम्भवान्निशि मृतानामपि विदुषां रश्म्यनुसारेणैव ब्रह्मप्राप्तिरस्त्येव॥१७॥

* * *

इति रश्म्यनुसाराधिकरणम् ॥ ९ ॥

லக்ஷ்யதே ஹி நிஸ்யபி நிதாகஸமயே ஊஷ்மோபலப்த்யா ரஸ்மிஸத்பாவ:। ஹேமந்தாதௌ து ஹிமாபிபவாத் துர்திநே இவ ஊஷ்மாநுபலம்ப:। ஸ்ரூயதே ச நாடீரஸ்மீநாம் ஸர்வதா அந்யோந்யாந்வய:, *“தத்யதா மஹாபத ஆதத: உபௌ க்ராமௌ கச்சதி இமம் சாமும் ச, ஏவமேவைதே ஆதித்யஸ்ய ரஸ்மய உபௌ லோகௌ கச்சந்தீமம் சாமும் ச। அமுஷ்மாதாதித்யாத் ப்ரதாயந்தே; தா: ஆஸு நாடீஷு ஸ்ருப்தா:। ஆப்யோ நாடீப்ய: ப்ரதாயந்தே; தேऽமுஷ்மிந்நாதித்யே ஸ்ருப்தா:”* (சா.8-6-2)[1] இதி। தஸ்மாத் நிஸ்யபி ரஸ்மிஸம்பவாத் நிஸி ம்ருதாநாமபி விதுஷாம் ரஸ்ம்யநுஸாரேணைவ ப்ரஹ்மப்ராப்திரஸ்த்யேவ ।।17 ।।

* * *

இதி ரஸ்ம்யநுஸாராதிகரணம் ।।9 ।।

* * *

கோடைகாலத்தில் இரவிலும் சூடு தெரிவதால், ஒளிக்கதிர்கள் இருப்பது ஊகிக்கப் படுகிறதுதானே! பனிக்காலம் முதலியதில் இரவில் பனியால் மூடப்படுவதால் சூடு தெரிவதில்லை; மேகமூட்டமான துர்தின-நாளில் (பகலில் கூட) சூடு தெரியாதது போல ஆகிறது.

மேலும், நாடிகளுக்கும் ஒளிக்கதிர்களுக்கும் எப்போதும் ஒன்றுக்கொன்று தொடர்பு இருப்பது வேதத்தில் சொல்லப்படுகிறது - [1]**''ஒரு பெரிய பாதையானது பரந்து எப்படி இரு கிராமங்களுக்கு போகிறதோ, அப்படியே ஸூர்யனது இந்த ஒளிக்கதிர்கள் இந்த உலகம் மற்றும் மேல்-உலகம் எனும் இரு உலகங்களுக்கும் செல்கின்றன; அந்த ஸூர்யனிடமிருந்து பரவுபவையாய் அவை இந்த நாடிகளில் தொடர்புடையவை ஆகின்றன; இந்த நாடிகளிலிருந்து பரவுபவையாய் அவை அந்த ஸூர்யனிடம் தொடர்புடையவை ஆகின்றன''** என்று.

ப்ரயோஜனம் (அதிகரண-பலன்)

ஆகவே, இரவிலும் ஸூர்ய-ஒளிக்கதிர்கள் இருக்கும் என்பதால், இரவில் மரணமடையும் ஜ்ஞானிகளுக்கும் ஒளிக்கதிர்களைப் பின்பற்றியே ப்ரஹ்மத்தை அடைதல் என்பது நிச்சயமாக உண்டு.

* * *

ரஶ்ம்யநுஸாராதிகரணம் முற்றிற்று.

144. நிஶாதிகரணம் (4-2-10)

முன் குறிப்பு

ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவன், ஸூர்யனது ஒளிக்கதிர்களைப் பற்றிக்கொண்டு உயர செல்கிறான்; இரவில் மரணமானால் கூட ஸூர்யனது கிரணங்கள் ஸூக்ஷ்மமாக இருக்குமாதலால், அவற்றைப் பற்றிக்கொண்டு உயர செல்லலாம் என்று சொல்லியாயிற்று.

இப்போது, இரவில் மரணம் அடைபவனைப் பற்றி வேறொரு விசாரம்.

பூர்வபக்ஷம் - இரவில் ஸூர்யகிரணங்கள் இருந்தாலும், இரவில் மரணம் அடைபவன் மோக்ஷம் போக முடியாது. ஏனெனில், இரவில் மரணம் என்பது இகழ்வானது என ஶாஸ்த்ரம் சொல்கிறது. பகலில் மரணம் அடைதல் உயர்வானது என்றும் சொல்கிறது. அதனால், இரவில் மரணம் அடைபவன் உயர்ந்த நல்ல கதிக்கு செல்ல மாட்டான் என தெரிகிறது. அப்படி இருக்கும்போது இரவில் மரணம் அடைபவன் எப்படி பரமபதம் செல்ல முடியும்?

ஸித்தாந்தம் - ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவனுக்கு அதன் பலனாக புண்யபாபகர்மங்கள் தொலைகின்றன; அப்படி தொலைந்தபின், உடனேயே அவன் மோக்ஷம் பெறுவான் என வேதம் சொல்கிறது; எனவே, வேறு கால விளம்பம் கிடையாது என்றும் சொல்கிறது; எனவே, இரவு பகல் முதலிய காலக் கணக்கு எதுவும் இவனை கட்டுப்படுத்தாது. இவன் பகலிலோ இரவிலோ எப்போது மரணம் அடைந்தாலும், உடனேயே மோக்ஷம் பெறுவான்.

இரவில் மரணம் இழிவானது என்று ஶாஸ்த்ரம் சொல்வதன் கருத்து வேறு; அது ப்ரஹ்ம-உபாஸநம் செய்யாத மற்றவருக்குத்தான்; உபாஸநம் செய்யாதவர், இரவில் மரணம் அடைந்தால் அது சற்றே இழிவானது; அவருக்கு நல்ல உயர்ந்த கதி கிடைக்காது; ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவரை இது கட்டுப் படுத்தாது.

பின்குறிப்பு: - சரணாகதியும் ப்ரஹ்ம-வித்யைகளில் ஒன்றானபடியால், சரணாகதி செய்தவனுக்கும் இதேபோல, இரவில் மரணம் அடைந்தாலும் மோக்ஷகதி உண்டு.

१४४. निशाधिकरणम् (४-२-१०)

५०६.निशि नेतिचेन्न सम्बन्धस्य यावद्देहभावित्वात् दर्शयति च (४-२-१८)

इदमिदानीं चिन्त्यते - विदुषो निशि मृतस्य ब्रह्मप्राप्तिरस्ति, नेति।

यद्यपि निशायां सूर्यरश्मिसम्भवात् रश्म्यनुसारेण गतिर्निशायामपि सम्भवति - तथापि निशामरणस्य शास्त्रेषु गर्हितत्वात् परमपुरुषार्थलक्षणब्रह्मप्राप्तिर्निशामृतस्य न सम्भवति। शास्त्रेषु दिवामरणं प्रशस्तम्, विपरीतं निशामरणम्

"दिवा च शुक्लपक्षश्च उत्तरायणमेव च।
मुमूर्षतां प्रशस्तानि विपरीतं तु गर्हितम्॥" (म.अनु.22-31)[1] इति।

दिवामरणनिशामरणयोः प्रशस्तत्वविपरीतत्वे चोत्तमाधमगतिहेतुत्वेन स्याताम्। अतो निशि मरणमधोगतिहेतुत्वान्न ब्रह्मप्राप्तिहेतुरिति चेत् -

तन्न; विदुषः कर्मसम्बन्धस्य यावद्देहभावित्वात्।

144. நிஶாதிகரணம் (4-2-10)

506. நிஶி நேதிசேந்ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத் தர்ஶயதி ச (4-2-18)

இதமிதாநீம் சிந்த்யதே - விதுஷோ நிஶி ம்ருதஸ்ய ப்ரஹ்மப்ராப்திரஸ்தி, நேதி।

யத்யபி நிஶாயாம் ஸூர்யரஶ்மிஸம்பவாத் ரஶ்ம்யநுஸாரேண கதி: நிஶாயாமபி ஸம்பவதி - ததாபி நிஶாமரணஸ்ய ஶாஸ்த்ரேஷு கர்ஹிதத்வாத் பரமபுருஷார்தலக்ஷணப்ரஹ்மப்ராப்தி: நிஶாம்ருதஸ்ய ந ஸம்பவதி। ஶாஸ்த்ரேஷு திவாமரணம் ப்ரஶஸ்தம், விபரீதம் நிஶாமரணம்;

"திவா ச ஶுக்லபக்ஷஶ்ச உத்தராயணமேவ ச।
முமூர்ஷதாம் ப்ரஶஸ்தாநி விபரீதம் து கர்ஹிதம்॥" (ம.அ.22-31)[1] இதி।

திவாமரண-நிஶாமரணயோ: ப்ரஶஸ்தத்வ-விபரீதத்வே ச உத்தமாதமகதிஹேதுத்வேந ஸ்யாதாம்। அத: நிஶிமரணம் அதோகதிஹேதுத்வாத் ந ப்ரஹ்மப்ராப்திஹேது: இதி சேத் -

தந்ந; விதுஷ: கர்மஸம்பந்தஸ்ய யாவத்தேஹபாவித்வாத்।

144. நிஶாதிகரணம் (4-2-10)

506.நிஶி ந இதி சேத் ந ஸம்பந்தஸ்ய யாவத்-தேஹபாவித்வாத் தர்ஶயதி ச (4-2-18)

இரவில் [மரணம் அடைபவனுக்கு ப்ரஹ்மப்ராப்தி] கிடையாது என்றால் அதல்ல; ஶரீரம் உள்ளவரையே கர்ம-ஸம்பந்தம் ஆவதால்; வேதமும் காண்பிக்கிறது.

ஸம்ஶயம் (ஸந்தேஹம்)

இப்போது இது விசாரம் செய்யப்படுகிறது - இரவில் மரணம் அடையும் வித்வானுக்கு ப்ரஹ்ம-ப்ராப்தி உண்டா? இல்லையா? என்று.

(ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவன் இரவில் மரணம் அடைந்தால் ப்ரஹ்மத்தை அடைவது உண்டா? கிடையாதா?) என்று.

ஸங்கதி & பூர்வபக்ஷம்

(போன அதிகரணத்தில் சொன்னபடி ப்ரஹ்ம-உபாஸநம் செய்யும் வித்வான் ஆனவன், இரவில் மரணம் அடைந்தாலும்) இரவில் ஸூர்யனது ஒளிக்கதிர்கள் இருக்கலாமாதலால், ஒளிக்கதிரைப் பின்பற்றி செல்வது இரவிலும் ஏற்படலாம்;

ஆனாலும், இரவில் மரணம் என்பது ஶாஸ்த்ரங்களில் இகழப்பட்டுள்ளது; ஆகையால் மிக உயர்ந்த புருஷார்த்தமாகிற ப்ரஹ்ம-ப்ராப்தியானது இரவில் மரணமடைபவனுக்கு வராது; ஶாஸ்த்ரங்களில் பகல்-மரணம் புகழப் பட்டுள்ளது; நேரெதிராக இரவு-மரணம் இகழப்பட்டுள்ளது- [1]**“மரணம் பெறுபவருக்கு பகலும், சுக்ல-பக்ஷமும், உத்தராயணமும் சிறந்தவை; மாறாக ஆனவை இகழப்படுபவை”** - என்று.

பகல்-மரணம் புகழப்படுவதானது, அது உயர்ந்த கதிக்கு காரணமாவதால் ஆகும்; இரவு-மரணம் மாறாக இகழப் படுவதும், அது தாழ்ந்த கதிக்குக் காரணமாவதால் ஆகும்; ஆகையால், இரவில் மரணம் என்பது தாழ்ந்த கதிக்குக் காரணம் ஆவதால், ப்ரஹ்மத்தை அடைதலுக்குக் காரணமாக ஆகாது. - என்றால்,

ஸித்தாந்தம்

அதல்ல; ஏனெனில், கர்ம-ஸம்பந்தம் என்பது ஶரீரம் உள்ள வரையே இருப்பதாகும்.

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

एतदुक्तं भवति - अनारब्धकार्याणामधोगतिहेतुभूतानां कर्मणां विद्यासम्बन्धेनैव विनाशात्, उत्तरेषां चाश्लेषात्, प्रारब्धकार्यस्य च चरमदेहावधित्वात्, बन्धहेत्वभावात् विदुषो निशामृतस्यापि ब्रह्मप्राप्तिः सिद्धैव।

दर्शयति च श्रुतिः, **''तस्य तावदेव चिरं यावन्न विमोक्ष्ये, अथ सम्पत्स्ये''**(छा.6-14-2)[1] इति।

''**दिवा च शुक्लपक्षश्च**'' (म.अ.22-31)[2] इत्यादिवचनमविद्वद्विषयम्॥१८॥

⁂

इति निशाधिकरणम् ॥ १० ॥

ஏதது க்தம் பவதி - அநாரப்தகார்யாணாம் அதோகதிஹேதுபூதாநாம் கர்மணாம் வித்யாஸம்பந்தேநைவ விநாஶாத், உத்தரேஷாம் ச அஶ்லேஷாத் ப்ராரப்தகார்யஸ்ய ச சரமதேஹாவதித்வாத் பந்தஹேத்வபாவாத் விதுஷோ நிஶாம்ருதஸ்யாபி ப்ரஹ்மப்ராப்தி: ஸித்தைவ।

தர்ஶயதி ச ஶ்ருதி:, *''தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே; அத ஸம்பத்ஸ்யே''* (சா.6-12-2)[1] இதி।

''திவா ச ஶுக்லபக்ஷஶ்ச''(ம.அ.22-31)[2] இத்யாதிவசநம் அவித்வத்விஷயம்।।18।।

இதி நிஶாதிகரணம் ।।10 ।।

⁂

இது சொன்னதாக ஆகிறது - தாழ்ந்த கதிக்குக் காரணமான கர்மங்களில் -

- பலனளிக்க ஆரம்பிக்காதவை ப்ரஹ்ம-வித்யையின் தொடர்பாலேயே அழிந்து விடுகின்றன;
- ப்ரஹ்ம-வித்யைக்குப் பின்னால் வரும் பாபங்கள் ஒட்டுவதில்லை;
- பலன் தர ஆரம்பித்த கர்மமானது கடைசி-ஶரீரம் உள்ள வரையே இருக்கும்;

ஆதலால், ஸம்ஸார-பந்தத்துக்குக் காரணமான கர்மம் எதுவும் இல்லை-யாதலால், இரவில் மரணமடையும் வித்வானும் ப்ரஹ்மத்தை அடைகிறான் என்பது உண்டுதான்.

தர்ஶயதி ச - இதை வேதம் காண்பிக்கிறது [1]**''ப்ரஹ்ம-உபாஸநம் செய்யும் அவனுக்கு எவ்வளவு காலம் ஶரீரத்திலிருந்து விடுபடவில்லையோ, அவ்வளவே தாமதம்; பின்னர் உடனே ப்ரஹ்மத்தை அடைவான்''** என்று.

[2]**''பகலும் சுக்லபக்ஷமும்''** என்று ஆரம்பித்து சொன்ன ஶாஸ்த்ர-வசனம் ஆனது, வித்வான் ஆகாதவர்களைப் பற்றியது. (ப்ரஹ்ம-ஜ்ஞானி ஆகாத மற்றவ-ருக்கு மரணம் அடைய அந்த காலங்கள் சிறந்தவை; ப்ரஹ்ம-ஜ்ஞானிக்கோ எல்லா காலமும் சிறந்ததே).

* * *

நிஶாதிகரணம் முற்றிற்று.

145. தக்ஷிணாயனாதிகரணம் (4-2-11)

முன் குறிப்பு

உபாஸநம் செய்பவன் இரவில் மரணம் அடைந்தால் ப்ரஹ்மத்தை அடைவானா என்ற விசாரம் ஆயிற்று. இப்போது அதே போல தக்ஷிணாயனத்தில் மரணம் அடைபவன் ப்ரஹ்மத்தை அடைவானா என்பது விசாரம்.

கேள்வி - உத்தராயணத்தில் மரணம் என்பது உயர்வானது; தக்ஷிணாயனத்தில் மரணம் இழிவானது என ஶாஸ்த்ரம் சொல்வதால் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தால் பரமபதம் கிடைக்காது.

பதில் - ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவனுக்கு அதன் மூலம் புண்யபாபகர்மங்கள் அழிந்து விடுவதால், அவன் உடனேயே மோக்ஷ பலனைப் பெறுவான். அவனுக்கு வேறு காலதாமதம் கிடையாது என வேதம் சொல்கிறது. மரணகாலத்தில் உயர்வு தாழ்வெல்லாம் ப்ரஹ்ம-உபாஸநம் செய்யாதவர்களுக்கு சொன்ன கணக்கு ஆகும்.

இது அதிதேஶ அதிகரணம்; அதாவது போன அதிகரணத்தில் சொன்ன முறையிலேயே இந்த விஷயத்தை அறியலாம். ஆனாலும், அதிகப்படியான கேள்வி பதில் இருப்பதால் தனி அதிகரணம் அமைகிறது..

அதிக கேள்வி - ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவரில், தக்ஷிணாயனத்தில் மரணம் அடைபவன் சந்த்ரனிடம் செல்கிறான் என்று ஒரு ஒரு வேதவாக்யம்; சந்த்ரனிடம் செல்பவன் மறுபிறவி எடுக்கிறான் என்று மற்றொரு வேதவாக்யம்; எனவே, அவன் மோக்ஷம் அடைய மாட்டான். மேலும் ப்ரஹ்ம-உபாஸநம் செய்துவந்த பீஷ்மர் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைவதைத் தவிர்த்தார்; உத்தராயணத்துக்காக காத்திருந்து பின்னர் மரணம் அடைந்தார் என்று மஹாபாரதம் தெரிவிக்கிறது; அதனால், உபாஸநம் செய்பவர் கூட தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தால் மோக்ஷம் கிடைக்காது எனத் தெரிகிறது.

பதில் - அப்படியல்ல; ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவரில் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைபவர் சந்த்ரனிடம் செல்கிறார்; பின்னர் அங்கிருந்து பரமபதம் போகிறார் என்றும் தொடர்ந்து வேதமே சொல்கிறது. ப்ரஹ்ம-உபாஸநம் செய்யாதவர்தான் சந்த்ரனிடம் போய்விட்டு, மறுபிறவி எடுப்பார்.

பீஷ்மர், தன் விருப்பப்படி மரணகாலத்தை முடிவு செய்யும் வரம் பெற்றிருந்தார். அதனால், உத்தராயணம் உயர்ந்தது என்பதை மற்றவருக்கு உணர்த்துவதற்காக அப்படி காத்திருந்தார்; அதனால்தான் பரமபதம் பெற்றார் என்பது கிடையாது. அவரைப் பொறுத்தவரை ப்ரஹ்ம-உபாஸநம் செய்தவர் ஆனபடியால், எப்போது மரணம் அடைந்தாலும் பரமபதம் உண்டுதான்.

१४५. दक्षिणायनाधिकरणम् (४-२-११)

५०७. अतश्चायनेऽपि दक्षिणे (४-२-१९)

निशि मृतस्यापि विदुषो ब्रह्मप्राप्तौ यो हेतुरुक्तः, तत एव हेतोर्दक्षिणेऽप्ययने मृतस्य ब्रह्मप्राप्तिः सिद्धा॥

अधिकाशङ्का तु - **''अथ यो दक्षिणे प्रमीयते, पितृणामेव महिमानं गत्वा चन्द्रमस्सायुज्यं गच्छति''**(तै.2.64-79)[1] इति दक्षिणायने मृतस्य चन्द्रप्राप्तिश्रवणात्, चन्द्रं प्राप्तानां च **''तेषां यदा तत्पर्यवैति''**(बृ.8-2-16)[2], **''अथैतमेवाध्वानं पुनर्निवर्तन्ते''** (छा.5-10-5)[3] इति पुनरावृत्तिश्रवणात्, भीष्मादीनां च ब्रह्मविद्यानिष्ठानामुत्तरायणप्रतीक्षादर्शनात् दक्षिणायने मृतस्य ब्रह्मप्राप्तिर्न सम्भवति इति।

परिहारस्तु - अविदुषां पितृयाणेन पथा चन्द्रं प्राप्तानामेव पुनरावृत्तिः; विदुषस्तु चन्द्रं प्राप्तस्यापि, **''तस्माद्ब्रह्मणो महिमानमाप्नोति''**(तै.2.64-79)[4] इति वाक्यशेषात् तस्य दक्षिणायनमृतस्य चन्द्रप्राप्तिः ब्रह्म प्रेप्सतो (प्रपित्सतो) विश्रमहेतुमात्रमिति गम्यते। वाक्यशेषाभावेऽपि पूर्वोक्तादेव बन्धहेत्वभावात् विदुषश्चन्द्रं प्राप्तस्यापि ब्रह्मप्राप्तिः

---

145. தக்ஷிணாயநாதிகரணம் (4-2-11)

507. அதஶ்சாயநேऽபி தக்ஷிணே (4-2-19)

நிஶி ம்ருதஸ்யாபி விதுஷோ ப்ரஹ்மப்ராப்தௌ யோ ஹேதுருக்த:, தத ஏவ ஹேதோ: தக்ஷிணேऽப்யயநே ம்ருதஸ்ய ப்ரஹ்மப்ராப்தி: ஸித்தா।

அதிகாஶங்கா து - *''அத யோ தக்ஷிணே ப்ரமீயதே, பித்ருணாமேவ மஹிமாநம் கத்வா சந்த்ரமஸ்ஸாயுஜ்யம் கச்சதி''*(தை.2-80)[1] இதி தக்ஷிணாயநே ம்ருதஸ்ய சந்த்ரப்ராப்திஶ்ரவணாத் சந்த்ரம் ப்ராப்தாநாம் ச *''தேஷாம் யதா தத்பர்யவைதி''* (ப்ரு.8-2-16)[2], *''அதைதமேவாத்வாநம் புநர்நிவர்தந்தே''* (சா.5-10-5)[3] இதி புநராவ்ருத்திஶ்ரவணாத், பீஷ்மாதீநாம் ச ப்ரஹ்மவித்யாநிஷ்டாநாம் உத்தராயணப்ரதீக்ஷாதர்ஶநாத் தக்ஷிணாயநே ம்ருதஸ்ய ப்ரஹ்மப்ராப்தி: ந ஸம்பவதி - இதி।

பரிஹாரஸ்து - அவிதுஷாம் பித்ருயாணேந பதா சந்த்ரம் ப்ராப்தாநாமேவ புநராவ்ருத்தி:; விதுஷஸ்து சந்த்ரம் ப்ராப்தஸ்யாபி, *''தஸ்மாத்ப்ரஹ்மணோ மஹிமாநமாப்நோதி''* (தை.2-80)[4] இதி வாக்யஶேஷாத் தஸ்ய தக்ஷிணாயநம்ருதஸ்ய சந்த்ரப்ராப்தி: ப்ரஹ்ம ப்ரேப்ஸதோ (ப்ரபித்ஸதோ) விஶ்ரமஹேதுமாத்ரமிதி கம்யதே। வாக்யஶேஷாபாவேऽபி பூர்வோக்தாதேவ பந்தஹேத்வபாவாத் விதுஷ: சந்த்ரம் ப்ராப்தஸ்யாபி ப்ரஹ்மப்ராப்தி: அநிவார்யா।

145. தக்ஷிணாயனாதிகரணம் (4-2-11)

507. அத: ச அயனே அபி தக்ஷிணே (4-2-19)

அதனாலேயே தக்ஷிணாயனத்திலும் ஆகும்.

ஸங்கதியும் அதிகரணமும்

ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவன், இரவில் மரணம் அடைபவனும் கூட ப்ரஹ்மத்தை அடைகிறான் என்பதில் எந்த காரணம் சொல்லப்பட்டதோ, அதே காரணத்தாலேயே தக்ஷிணாயனத்தில் மரணம் அடையபவனும் கூட ப்ரஹ்மத்தை அடைகிறான் என்பது ஏற்படும்.

பூர்வபக்ஷம்

அதிகப்படியான கேள்வி - [1]**''யார் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைகிறானோ, அவன் பித்ருக்களின் பெருமையை அடைந்து, பின்னர் சந்த்ரனுடன் சமானமான போகம் பெறுகிறான்''** என்று தக்ஷிணாயனத்தில் மரணம் அடைபவன் சந்த்ரனை அடைவதாக வேதம் சொல்கிறது; சந்த்ரனை அடைந்தவர்கள் மீண்டும் திரும்புவதாகவும் வேதம் சொல்கிறது - [2]**''சந்த்ரனை அடையும் அவர்களுக்கு அந்த கர்மம் ஆனது எப்போது தீர்கிறதோ, (அப்போதே திரும்புவர்)''** என்றும், [3]**''(கர்மம் தீரும்வரை இருந்து விட்டு) பின்னர் இதே வழியிலேயே மீண்டும் திரும்புவர்''** என்றும் சொல்கிறது. மேலும், ப்ரஹ்ம-உபாஸநம் செய்து கொண்டிருந்தவரான பீஷ்மர் முதலியவர்கள் (மரணம் அடைவதற்காக) உத்தராயண-காலத்தை எதிர்நோக்கி காத்திருந்ததாக காண்கிறது; அதனால், தக்ஷிணாயனத்தில் மரணம் அடைபவன் ப்ரஹ்மத்தை அடைவது வராது - என்று.

ஸித்தாந்தம்

அதிகப்படியான பரிஹாரம் - ப்ரஹ்ம-வித்யையை செய்யாதவர்களாய் பித்ருயானம் வழியாக சந்திரனை அடைந்தவர்கள்தாம் திரும்பி வருகின்றனர்; ப்ரஹ்ம-வித்யையை செய்யும் வித்வானோ, சந்திரனை அடைந்தவன் ஆனாலும், [4]**''அங்கிருந்து ப்ரஹ்மத்தின் பெருமையை அடைகிறான்''** என்று வாக்யத்தின் மிகுதி பாகம் உள்ளது; அதனால், தக்ஷிணாயனத்தில் மரணமடையும் அந்த வித்வான் ஆனவன், சந்த்ரனை அடைதல் ஆனது, ப்ரஹ்மத்தை அடையப் போகும் அவனுக்கு ஒய்வுக்குக் காரணமாக மட்டுமே ஆகும் என்று தெரிகிறது.

வாக்யத்தின் மிகுதி-பாகம் இல்லை என்று வைத்துக் கொண்டாலும், அவனுக்கு ஸம்ஸாரபந்தத்துக்கு காரணமான கர்மம் இல்லை என்று முன்பே சொன்னபடியாலேயே, வித்வான் ஆனவன் சந்த்ரனை அடைந்தாலும், ப்ரஹ்மத்தை அடைதல் தடுக்க முடியாதது ஆகும்.

अनिवार्या। भीष्मादीनां योगप्रभावात् स्वच्छन्दमरणानां धर्मप्रवर्तनाय उत्तरायणप्राशस्त्यप्रदर्शनार्थस्तथाविधाचारः॥ १९ ॥

* * *

ननु च विदुषो मुमूर्षून् प्रति पुनरावृत्तिहेतुत्वेन कालविशेषविधिर्दृश्यते,

''यत्र काले त्वनावृत्तिमावृत्तिं चैव योगिनः।
प्रयाता यान्ति तं कालं वक्ष्यामि भरतर्षभ॥
अग्निर्ज्योतिरहश्शुक्लः षण्मासा उत्तरायणम्।
तत्र प्रयाता गच्छन्ति ब्रह्म ब्रह्मविदो जनाः॥
धूमो रात्रिस्तथा कृष्णः षण्मासा दक्षिणायनम्।
तत्र चान्द्रमसं ज्योतिर्योगी प्राप्य निवर्तते॥
शुक्लकृष्णे गती ह्येते जगतः शाश्वते मते।
एकया यात्यनावृत्तिमन्ययाऽऽवर्तते पुनः॥'' (गी.8-23,24,25,26)[1] इति,

तत्राह -

५०८.योगिनः प्रति स्मर्येते स्मार्ते चैते (४-२-२०)

नात्र मुमूर्षून् प्रति मरणकालविशेषोपादानं स्मर्यते, अपितु **योगिनः** योगनिष्ठान्

பீஷ்மாதீநாம் யோகப்ரபாவாத் ஸ்வச்சந்தமரணாநாம் தர்மப்ரவர்தநாய உத்தராயணப்ராஶஸ்த்யப்ரதர்ஶநார்த: ததாவிதாசார:।।19।।

* * *

நநு ச விதுஷோ முமூர்ஷூந் ப்ரதி புநராவ்ருத்திஹேதுத்வேந காலவிஶேஷவிதிர்த்ருஶ்யதே,

''யத்ர காலே த்வநாவ்ருத்திமாவ்ருத்திம் சைவ யோகிந:।
ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப।।
அக்நிர்ஜ்யோதிரஹஶ்ஶுக்ல: ஷண்மாஸா உத்தராயணம்।
தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா:।।
தூமோ ராத்ரிஸ்ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயநம்।
தத்ர சாந்த்ரமஸம் ஜ்யோதிர்யோகீ ப்ராப்ய நிவர்ததே।।
ஶுக்ல-க்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகத: ஶாஶ்வதே மதே।
ஏகயா யாத்யநாவ்ருத்திமந்யயாऽऽவர்ததே புந:।।'' (கீ.8-23,24,25,26)[1] இதி,

தத்ராஹ-

508. யோகிந: ப்ரதி ஸ்மர்யேதே ஸ்மார்தே சைதே (4-2-20)

நாத்ர முமூர்ஷூந் ப்ரதி மரணகாலவிஶேஷோபாதாநம் ஸ்மர்யதே,

பீஷ்மர் முதலியவர், யோகத்தின் பெருமையால், தன் விருப்பப்படியான மரணம் பெறக் கூடியவராக இருந்தவர்கள்; அவர்கள் (உலகில்) தர்மத்தை நடத்தி வைப்பதற்காக, உத்தராயணம் உயர்ந்தது என காண்பிப்பதன் பொருட்டு அப்படி நடந்து கொண்டது (மரணத்துக்கு உத்தராயணம் வரை காத்திருந்தது) ஆகும்.

◆ ◆ ◆ ◆

கேள்வி - மரணம் அடையப் போகும் ப்ரஹ்ம-ஜ்ஞானிகளைக் குறித்து அவர்கள் மோக்ஷத்திலிருந்து மீண்டும் திரும்பி வருதலுக்கும் மீண்டும் திரும்பி வராமைக்கும் காரணமாக விசேஷ-காலங்களை விதித்திருப்பது காணப்படுகிறது -

- [1]**''அர்ஜுனா, மரணம் அடையும் யோகிகள் எந்த காலத்தில் திரும்பி வராமையையும் திரும்பி வருதலையும் அடைகின்றனரோ, அந்த காலத்தை சொல்லப்போகிறேன்;**
- **அக்நி-ஒளி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயண-ஆறுமாதம், என்று இவற்றை அடையும் ப்ரஹ்ம-ஜ்ஞானிகள் ப்ரஹ்மத்தை அடைகின்றனர்;**
- **புகை, இரவு, தக்ஷிணாயன-ஆறுமாதம், என்று இவற்றை அடையும் யோகீ ஆனவன், சந்த்ரனது ஒளியை அடைந்து திரும்புகிறான்;**
- **சுக்ல-கதி, கிருஷ்ண-கதி என்ற இந்த இரு கதிகள் மக்களுக்கு நிலையானவையாக கருதப் படுகின்றன; ஒரு கதியினால் (ஸம்ஸாரத்துக்கு) திரும்பி வராமையை அடைகிறான்; மற்றொன்றால் செல்பவன் மீண்டும் திரும்பி வருகிறான்''** என்று.

அதற்கு பதில் சொல்கிறார் -

508.யோகிந: ப்ரதி ஸ்மர்யேதே ஸ்மார்தே ச ஏதே (4-2-20)

உபாஸநம் செய்பவரைக் குறித்து அவர்கள் சிந்திக்க வேண்டிய இந்த இரு கதிகள் ஸ்ம்ருதியில் சொல்லப்படுகின்றன.

இங்கு மரணம் அடையப் போகுமவரைக் குறித்து மரணத்துக்கான விசேஷ-காலத்தை எடுப்பது ஸ்ம்ருதியில் சொல்லப்படவில்லை; மாறாக,

யோகிந: ப்ரதி - யோகம் (உபாஸநம்) செய்பவரைக் குறித்து

ஸ்மார்தே - நினைவில் விஷயமானவையான, சிந்திக்கப்பட வேண்டியவையான தேவயானம், பித்ருயானம் எனும் இரு கதிகள்

ஸ்மர்யேதே - ஸ்ம்ருதியில் சொல்லப்படுகின்றன.

प्रति स्मार्ते स्मृतिविषयभूते स्मर्तव्ये देवयानपितृयाणाख्ये गती **स्मर्येते**; योगाङ्गतयाऽनुदिनं स्मर्तुम्। तथा ह्युपसंहारः

''नैते सृती पार्थ जानन् योगी मुह्यति कश्चन।
तस्मात् सर्वेषु कालेषु योगयुक्तो भवार्जुन॥'' (गी.8-27)[1] इति।

'अग्निर्ज्योतिः', 'धूमो रात्रिः' इति च देवयानपितृयाणे प्रतिभिज्ञायेते। उपक्रमे च, **''यत्र काले तु''** इति कालशब्दः कालाभिमानिदेवताऽऽतिवाहिकपरः, अग्न्यादेः कालत्वासम्भवात्। अतः, **''तेऽर्चिषमभिसम्भवन्ति''** (बृ.8-2-25)[2] इति विहितदेवयानानुस्मृतिरत्र विद्यानिष्ठान् प्रति विधीयते, न मुमूर्षून् प्रति मरणकालविशेषः॥२०॥

* * *

इति दक्षिणायनाधिकरणम् ॥ ११ ॥

इति श्रीभगवद्रामानुजविरचिते श्रीशारीरकमीमांसाभाष्ये चतुर्थस्याध्यायस्य
द्वितीयः पादः॥ २ ॥

அபிது யோகிந: யோகநிஷ்டாந் ப்ரதி *ஸ்மார்தே* ஸ்ம்ருதிவிஷயபூதே ஸ்மர்தவ்யே தேவயாநபித்ருயாணாக்யே கதீ ஸ்மர்யேதே - யோகாங்கதயா அநுதிநம் ஸ்மர்தும்। ததா ஹ்யுபஸம்ஹார:

''நைதே ஸ்ருதீ பார்த ஜாநந் யோகீ முஹ்யதி கஶ்சந।
தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுந॥'' (கீ.8-27)[1] இதி।

''அக்நிர்ஜ்யோதி:'', ''தூமோ ராத்ரி:'' இதி ச தேவயாநபித்ருயாணே ப்ரதிபிஜ்ஞாயேதே। உபக்ரமே ச, ''யத்ர காலே து'' இதி காலஶப்த: காலாபிமாநிதேவதாதிவாஹிகபர:, அக்ந்யாதே: காலத்வாஸம்பவாத்। அத:, *''தேऽர்சிஷமபிஸம்பவந்தி''* (சா.8-2-15)[2] இதி விஹிததேவயாநாநுஸ்ம்ருதி: அத்ர வித்யாநிஷ்டாந் ப்ரதி விதீயதே, ந முமூர்ஷூந் ப்ரதி மரணகாலவிஶேஷ:॥20॥

* * *

இதி தக்ஷிணாயநாதிகரணம் ॥11 ॥

இதி ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஸ்ரீஶாரீரகமீமாம்ஸாபாஷ்யே
சதுர்தஸ்யாத்யாயஸ்ய த்விதீய: பாத:॥2 ॥

* * *

யோகத்தின் அங்கமாக தினமும் நினைப்பதற்காக இந்த இரு கதிகள் சொல்லப்படுகின்றன; அப்படித்தானே முடிவுரை உள்ளது - [1]**''அர்ஜூனா, இந்த இரு கதிகளை சிந்தனை செய்யும் யோகியான யாரும் அஜ்ஞானம் பெறுவதில்லை; அதனால், அர்ஜூனா, எல்லா காலங்களிலும் (கதி-சிந்தனை என்னும்) யோகம் செய்பவனாக இரு''** என்று.

'அக்னி-ஒளி', என்பதால் தேவயானமும், 'புகை, இரவு' என்பதால் பித்ருயானமும் நினைவுக்கு வருகின்றன; அவையேதாம் இவை என்று தெரிகின்றன; ஆரம்பத்திலும், 'எந்த காலத்தில்' என்று காலம் என்ற சொல்லானது, காலத்தை அபிமானம் செய்திருக்கும் தேவனான ஆதிவாஹிகனைக் குறிப்பதில் நோக்கம் உடையது; ஏனெனில், அக்னி முதலியது காலமாக ஆகாது; தேவயான-வழியானது, [2]**''அந்த ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவர்கள் அக்னியை அடைகின்றனர்''** என்று (வேதத்தில்) விதிக்கப்பட்டதாகும். ஆகையால், அந்த தேவயான-வழியை சிந்திக்க வேண்டும் என்பது, இங்கே ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவர்களைக் குறித்து, விதிக்கப் படுகிறது; மரணம் அடையப் போகுமவர்களைக் குறித்து மரணத்துக்கான விசேஷ-காலம் இங்கே விதிக்கப்படவில்லை.

* * *

தக்ஷிணாயனாதிகரணம் முற்றிற்று.

ஸ்ரீபகவத்ராமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தில் நான்காவது
அத்யாயத்தின் இரண்டாம்பாதம் முற்றிற்று

* * *

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீபகவத் ராமானுஜர் அருளிய

ஸ்ரீபாஷ்யம்

(தமிழாக்கத்துடன்)

(4-3)

நான்காவது அத்யாயம் - பலாத்யாயம்

மூன்றாம் பாதம் - கதி பாதம்

அதிகரணங்கள் - 5 (146 - 150)

ஸூத்ரங்கள் - 15 (509 - 523)

மோக்ஷம் பெறும் ஜீவன், மரணம் அடைந்து பரமபதம் சென்று மோக்ஷபலனை அனுபவிப்பான். அதில் ஜீவன் உடலிலிருந்து வெளியேறி பரமபதம் செல்வது பற்றி மூன்று விஷயங்கள்-

1. மரணசமயத்தில் ஜீவன் ஶரீரத்தின் உள்ளே உயரக் கிளம்புவது உத்க்ராந்தி எனப்படும்.

2. பின்னர் ப்ரஹ்மநாடி எனும் நாடிக்குள் நுழைந்து, வெளியேறப் புறப்படுகிறான். இதற்கு கத்யுபக்ரமம் (புறப்பாடு) என்று பெயர்.

3. பின்னர், வெளியேறியபின் அர்சிராதி-மார்க்கம் எனப்படும் வழியில் மேலே சென்று ஸ்ரீவைகுண்டம் அடைகிறான். இதற்கு கதி (செல்லுதல்) என்று பெயர்.

இதில் முதல் இரண்டு விஷயங்களை போன பாதத்தில் பார்த்தோம். இந்த பாதத்தில் மூன்றாவது விஷயமான கதி (செல்லுதல்) பற்றி பார்க்கலாம்.

அதனால் இதற்கு கதிபாதம் என்றே பெயர்.

இதில் க்ரம-நிர்ணயம் (வரிசை முறையை முடிவு செய்தல்) என்பது முக்கிய விசாரமாக உள்ளது. இதனை முடிவு செய்யும் வழிமுறையை பூர்வ-மீமாம்ஸாஶாஸ்த்ரம் ஐந்தாவது அத்யாயம் சொல்கிறது. க்ரமம் (வரிசைமுறை) பற்றிய அத்யாயம் அது; அதனைப் புரிந்து கொள்ள உதவியாக, பின்-இணைப்பில் ஒரு கட்டுரை உள்ளது.

146.அர்சிராத்யதிகரணம் (4-3-1)

முன் குறிப்பு

மோக்ஷம் பெற்று மேலே பரமபதம் செல்லும் ஜீவன் எந்த வழியில் செல்கிறான் என்பதை வேதம் சொல்கிறது. முதலில் அர்சிஷ்-லோகம் (அக்னி-லோகம்) செல்கிறான்; அங்கிருந்து மேலும் பல லோகங்கள் வழியாக மேலே செல்கிறான். அதனால், இந்த வழிக்கு அர்ச்சிராதி மார்க்கம் (அர்சிஷ் முதலிய வழி) என்று பெயர்.

இந்த வழியைப் பற்றி வேதம் சொல்லும்போது பலவிதமாக குறிப்புகள் உள்ளன. அதனால் சந்தேகம் வருகிறது. இது எல்லாம் ஒரே வழிதானா? அல்லது வெவ்வேறு வழியா?

வேதம் எல்லா இடத்திலும் சொன்னது ஒரே வழிதான் என்றால் அந்த ஒரே வழியிலேயே ஜீவன் போகிறான் என்பது ஆகும்; வெவ்வேறு வழிகளை வேதம் சொல்கிறது என்றால் அந்த பல வழிகளில் நியமம் இல்லாமல் ஏதாவது ஒரு வழியில் ஜீவன் போகிறான் என்று ஆகும்.

இதில் எது சரியானது என்று இந்த அதிகரணத்தில் விசாரம்.

ஒரே வழியில் ஜீவன் போகிறான் என்பதே சரியாகும் என ஸித்தாந்தம்.

ஏனென்றால், வேதம் ஒரே வழியைத் தான் சொல்கிறது.

வேதம் சொன்ன வழிக் குறிப்புகளில் சிற்சில வித்தியாசங்களே உள்ளன. பெரும்பாலானவை ஒன்றிப் போகின்றன. அதனால், ஒரு வேத-பாகத்தில் சொன்ன வழியைப் படிக்கும்போதே, இதே போன்று மற்றொரு வேத-பாகத்தில் சொன்ன வழி நமக்கு நினைவுக்கு வரும்; அந்த வழியையே இங்கும் சொல்கிறது என்பதும் புரியும்.

உலகில் கூட ஒரு ஊருக்குப் போகும் ஒரே வழியையே பல பேரிடம் கேட்டால் பலவிதமாக சொல்வார்கள். ஒரே வழிதான்; ஆனால், அதைச் சொல்வதில் பல குறிப்புகள் இருக்கும். ஒருவர் சொன்ன குறிப்புகளில் ஒன்றிரண்டை மற்றவர் விட்டுவிடலாம்; அவர் வேறொரு குறிப்பு தரலாம். அதனால் ஒன்றும் முரண்பாடு இல்லை. எல்லாம் ஒரே வழிதான் என்பதை கூட்டிக் கழித்து புரிந்து கொள்கிறோம். அதுபோலவே இங்கும்.

In Public Domain. Digitization by Mahalakshmi Research Academy

१४६. अर्चिराद्यधिकरणम् (४-३-१)

५०९. अर्चिरादिना तत्प्रथितेः (४-३-१)

विदुष उत्क्रान्तस्य नाडीविशेषेण हार्दानुग्रहाद् गत्युपक्रम उक्तः। तस्य गच्छतो मार्ग इदानीं निर्णीयते।

तत्र श्रुतिषु मार्गप्रकाराः बहुधा आम्नायन्ते; छान्दोग्ये तावत्, **''यथा पुष्करपलाश आपो न श्लिष्यन्ते, एवमेवंविदि पापं कर्म न श्लिष्यते''**(छा.4-14-3)[1] इत्युपक्रम्य ब्रह्मविद्यामुपदिश्याऽऽम्नायते, **''अथ यदु चैवास्मिन् शव्यं कुर्वन्ति यदु च न, अर्चिषमेवाभिसम्भवन्ति अर्चिषोऽहः अह्न आपूर्यमाणपक्षम् आपूर्यमाणपक्षात् यान् षडुदङ्ङेति मासांस्तान्, मासेभ्यः संवत्सरं संवत्सरादादित्यमादित्याच्चन्द्रमसं चन्द्रमसो विद्युतम्, तत्पुरुषोऽमानवः। स एनान् ब्रह्म गमयत्येष देवपथो ब्रह्मपथः। एतेन प्रतिपद्यमाना इमं मानवमावर्तं नावर्तन्ते''**(छा.4-15-5,6)[2] इति। तथाऽत्रैवाष्टमे, **''अथैतैरेव रश्मिभिरूर्ध्वमाक्रमते''**(छा.8-6-5)[3] इति।

---

146. அர்சிராத்யதிகரணம் (4-3-1)

509. அர்சிராதிநா தத்ப்ரதிதே: (4-3-1)

விதுஷ உத்க்ராந்தஸ்ய நாடீவிஶேஷேண ஹார்தாநுக்ரஹாத் கத்யுபக்ரம உக்த:। தஸ்ய கச்சதோ மார்க இதாநீம் நிர்ணீயதே।

தத்ர ஶ்ருதிஷு மார்கப்ரகாரா: பஹுதா ஆம்நாயந்தே; சாந்தோக்யே தாவத், *''யதா புஷ்கரபலாஶே ஆபோ ந ஶ்லிஷ்யந்தே, ஏவமேவம்விதி பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே''* (சா.4-14-3)[1] இத்யுபக்ரம்ய ப்ரஹ்மவித்யாமுபதிஶ்ய ஆம்நாயதே, *''அத யது சைவாஸ்மிந் ஶவ்யம் குர்வந்தி, யது ச ந, அர்சிஷமேவாபிஸம்பவந்தி அர்சிஷோऽஹ: அஹ்ந ஆபூர்யமாணபக்ஷம் ஆபூர்யமாணபக்ஷாத் யாந் ஷடுதங்ஙேதி மாஸாம்ஸ்தாந், மாஸேப்ய: ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸராதாதித்யம் ஆதித்யாச்சந்த்ரமஸம் சந்த்ரமஸோ வித்யுதம், தத்புருஷோऽமாநவ:। ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயத்யேஷ தேவபதோ ப்ரஹ்மபத:। ஏதேந ப்ரதிபத்யமாநா இமம் மாநவமாவர்தம் நாவர்தந்தே''*(சா.4-15-5,6)[2] இதி। ததாऽத்ரைவாஷ்டமே, *''அதைதைரேவ ரஶ்மிபிரூர்த்வமாக்ரமதே''*(சா.8-6-5)[3] இதி।

146.அர்சிராத்யதிகரணம் (4-3-1)

509.அர்சிராதினா தத்-ப்ரதிதே:(4-3-1)

அர்சிஷ் முதலியதாலேயே [செல்கிறான்]; அதுவே தெரிவதால்.

ஸங்கதி (விஷய-தொடர்பு)

ஶரீரத்திலிருந்து மரணசமயத்தில் உயரக் கிளம்பும் ப்ரஹ்ம-ஜ்ஞானி ஆனவன் ஹ்ருதயத்தில் இருக்கும் பரமபுருஷனின் அனுக்ரஹத்தால் ஒரு குறிப்பிட்ட நாடியின் மூலமாக (வெளியேறிச்) செல்ல ஆரம்பிப்பது சொல்லப்பட்டது. அப்படி போகும் அவனது வழி இப்போது தீர்மானிக்கப் படுகிறது.

விஷயவாக்யம்

அதில் வேதங்களில் பலவிதமாக வழிகளின் முறைகள் ஓதப் படுகின்றன -

I. சாந்தோக்யத்தில், [1] **"எப்படி தாமரை-இலையில் தண்ணீர் ஒட்டாதோ, அப்படி முன் சொன்ன முறையில் ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவனிடம் பாப-கர்மம் ஒட்டாது"** என்று ஆரம்பித்து, ப்ரஹ்ம-வித்யையை உபதேஶம் செய்து, பின்னர் ஓதப்படுகிறது - [2] **"இவன் விஷயத்தில், இறந்த உடலுக்குத் தக்க ஸம்ஸ்காரத்தை செய்கிறார்களோ அல்லது செய்யவில்லையோ, (எப்படியானாலும் அந்த ப்ரஹ்மஜ்ஞாநிகள்) அர்ச்சிஷ்ஷையே அடைகின்றனர்; அர்சிஷ்ஷிலிருந்து பகலையும், பகலிலிருந்து ஶுக்லபக்ஷத்தையும், ஶுக்லபக்ஷத்திலிருந்து ஸூர்யன் எந்த ஆறு மாதங்கள் மேலே உயர போகிறானோ அந்த உத்தராயண-மாதங்களையும், மாதங்களிலிருந்து ஆண்டையும், ஆண்டிலிருந்து ஸூர்யனையும், ஸூர்யனிலிருந்து சந்த்ரனையும், சந்த்ரனிடமிருந்து மின்னலையும் அடைகின்றனர்; பெருமானின் தாஸன் ஆன அந்த மின்னல்-புருஷன் அமானவன் (மனித இனத்தவன் அல்லன்); அவன் இவர்களை ப்ரஹ்மத்திடம் செல்ல வைக்கிறான்; இது தேவ-மார்க்கம் (தேவர்களால் அழைத்துச் செல்லப்படும் வழி; அல்லது உயர்ந்த தேவாதிதேவனான ஸ்ரீநாராயணனை அடைவிக்கும் வழி); இதுவே ப்ரஹ்ம-மார்க்கம் (ப்ரஹ்மத்தை அடைவிக்கும் வழி); இந்த வழியால் அடைபவர்கள் மனிதனதான இந்த ஸம்ஸாரசுழற்சியில் திரும்பி வருவதில்லை"** என்று;

அதே சாந்தோக்யத்திலேயே எட்டாவது அத்யாயத்தில், [3] **"பின்னர் இந்த ஸூர்யனது ஒளிக்கதிர்களைக் கொண்டே மேலே செல்கிறான்"** என்று ஓதப்படுகிறது. (இங்கு ஸூர்யனை அடைவதான ஒரு குறிப்பு மட்டும் உள்ளது; வேறு அர்ச்சிஷ் முதலியவர்களின் பெயர் சொல்லவில்லை)

कौषीतकिनश्च देवयानमार्गमन्यथाऽधीयते, **“स एतं देवयानं पन्थानमापद्याग्निलोकमागच्छति, स वायुलोकं स वरुणलोकं स आदित्यलोकं स इन्द्रलोकं स प्रजापतिलोकं स ब्रह्मलोकम्”**(कौ.1-3)[1] इति।

तथा बृहदारण्यके, **“य एवमेतद्विदुर्ये चेमे अरण्ये श्रद्धां सत्यमुपासते, तेऽर्चिषमभिसम्भवन्ति अर्चिषोऽहरह्न आपूर्यमाणपक्षमापूर्यमाणपक्षात् यान् षण्मासान् उदङ्ङादित्य एति, मासेभ्यो देवलोकं देवलोकादादित्यम्, आदित्याद्वैद्युतं वैद्युतात्पुरुषो मानसः स एत्य ब्रह्मलोकान् गमयति”**(बृ.8-2-15)[2] इति।

तत्रैव पुनरन्यथा, **“यदा वै पुरुषोऽस्माल्लोकात् प्रैति, स वायुमागच्छति। तस्मै स तत्र विजिहीते, यथा रथचक्रस्य खम्। तेन स ऊर्ध्वमाक्रमते। स आदित्यमागच्छति। तस्मै स तत्र विजिहीते, यथा आडम्बरस्य खम्। तेन स ऊर्ध्वमाक्रमते ; स चन्द्रमसमागच्छति। तस्मै स तत्र विजिहीते, यथा दुन्दुभेः खम्”**(बृ.7-10-1)[3] इत्यादि।

तत्र संशयः - किमर्चिरादिरेक इव मार्ग आभिः श्रुतिभिः प्रतिपाद्यत इति तेनैव ब्रह्म गच्छति विद्वान्; उत तस्मादन्येऽन्यत्र मार्गाः इति तैर्वाऽनेन वेत्यनियमः इति।

கௌஷீதகிநஶ்ச தேவயாநமார்கம் அந்யதாऽதீயதே, *“ஸ ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்யாக்நிலோகமாகச்சதி, ஸ வாயுலோகம் ஸ வருணலோகம் ஸ ஆதித்யலோகம் ஸ இந்த்ரலோகம் ஸ ப்ரஜாபதிலோகம் ஸ ப்ரஹ்மலோகம்”* (கௌ.1-3)[1] இதி।

ததா ப்ருஹதாரண்யகே, *“ய ஏவமேதத்விதுர்யே சேமே அரண்யே ஶ்ரத்தாம் ஸத்யமுபாஸதே, தேऽர்சிஷமபிஸம்பவந்தி அர்சிஷோऽஹரஹ்ந ஆபூர்யமாணபக்ஷமாபூர்யமாணபக்ஷாத் யாந் ஷண்மாஸாந் உதங்ஙாதித்ய ஏதி, மாஸேப்யோ தேவலோகம் தேவலோகாதாதித்யம், ஆதித்யாத்வைத்யுதம் வைத்யுதாத்புருஷோ மாநஸ: ஸ ஏத்ய ப்ரஹ்மலோகாந் கமயதி”* (ப்ரு.8-2-15)[2] இதி।

தத்ரைவ புநரந்யதா, *“யதா வை புருஷோऽஸ்மால்லோகாத் ப்ரைதி, ஸ வாயுமாகச்சதி। தஸ்மை ஸ தத்ர விஜிஹீதே, யதா ரதசக்ரஸ்ய கம்। தேந ஸ ஊர்த்வமாக்ரமதே। ஸ ஆதித்யமாகச்சதி। தஸ்மை ஸ தத்ர விஜிஹீதே, யதா ஆடம்பரஸ்ய கம்। தேந ஸ ஊர்த்வமாக்ரமதே; ஸ சந்த்ரமஸமாகச்சதி। தஸ்மை ஸ தத்ர விஜிஹீதே, யதா துந்துபே: கம்”*(ப்ரு.7-10-1)[3] இத்யாதி।

தத்ர ஸம்ஶய: - கிம் அர்சிராதி: ஏக ஏவ மார்க: ஆபி: ஶ்ருதிபி: ப்ரதிபாத்யத இதி தேநைவ ப்ரஹ்ம கச்சதி வித்வாந்; உத தஸ்மாதந்யேऽந்யத்ர மார்கா: இதி தைர்வா அநேந வேதி அநியம: இதி।

II. கௌஷீதகீ-ஶாகையினர் வேறு முறையில் தேவமார்க்க-வழியை ஓதுகின்றனர் - [1]**"அவன் இந்த தேவயான-வழியை அடைந்து, அக்நிலோகத்தை அடைகிறான்; அவன் வாயுலோகத்தை, அவன் வருணலோகத்தை, அவன் ஆதித்யலோகத்தை, அவன் இந்த்ரலோகத்தை, அவன் ப்ரஜாபதிலோகத்தை; அவன் ப்ரஹ்மலோகத்தை (அடைகிறான்)".**

III. அப்படியே ப்ருஹதாரண்யக-உபநிஷத்தில், [2]**"யார் இப்படி பஞ்சாக்நிவித்யை முறையில் ஜீவனை உபாஸநம் செய்கின்றனரோ, மேலும் யார் காட்டில் ஶ்ரத்தையுடன் ஸத்ய-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்கின்றனரோ, அவர்கள் அர்ச்சிஷ்-ஷையே அடைகின்றனர்; அர்சிஷ்ஷிலிருந்து பகலையும், பகலிலிருந்து சுக்லபக்ஷத்தையும், சுக்லபக்ஷத்திலிருந்து ஸூர்யன் எந்த ஆறு மாதங்கள் வடக்கே போகிறானோ (அந்த உத்தராயண-மாதங்களையும்), மாதங்களிலிருந்து தேவலோகத்தையும், தேவலோகத்திலிருந்து ஸூர்யனையும், ஸூர்யனிலிருந்து மின்னலையும் அடைகின்றனர்; பரமாத்மாவின் தாஸனான அந்த மின்னல்-புருஷன் பர-ப்ரஹ்மத்தால் மனதால் படைக்கப்பட்டவன்; அவனே வந்து மின்னல்-புருஷனுக்குப் (தனக்கு)பிறகு இவர்களை ப்ரஹ்மத்திடம் செல்ல வைக்கிறான்"** - என்று;

IV. அதே ப்ருஹதாரண்யக-உபநிஷத்திலேயே மீண்டும் வேறு விதமாக - [3]**"எப்போது மனிதன் இந்த உலகத்திலிருந்து போகிறானோ, அப்போது அவன் வாயுவை அடைகிறான்; அவனுக்கு அந்த வாயுவானவன் தேர்-சக்கரத்தின் இடைவெளி எவ்வளவோ அவ்வளவு விலகி இடம் அளிக்கிறான்; அதன் மூலம் அவன் மேலே செல்கிறான்; அவன் ஸூர்யனை அடைகிறான்; அவனுக்கு அந்த ஸூர்யனானவன் ஆடம்பரம் எனும் வாத்யத்தின் இடைவெளி எவ்வளவோ அவ்வளவு விலகி இடம் அளிக்கிறான்; அதன் மூலம் அவன் மேலே செல்கிறான்; அவன் சந்த்ரனை அடைகிறான்; அவனுக்கு அந்த சந்த்ரனானவன் துந்துபி எனும் வாத்யத்தின் இடைவெளி எவ்வளவோ, அவ்வளவு விலகி இடம் அளிக்கிறான்"** - முதலியது ஓதப்படுகிறது.

ஸம்சயம் (ஸந்தேஹம்)

அதில் ஸந்தேஹம் - i) இந்த வேதங்களால் அர்சிஷ் முதலியதாக ஒரே ஒரு வழிதான் சொல்லப்படுகிறது; அதனால், அந்த வழி மூலமாகவே ப்ரஹ்ம-ஜ்ஞானியானவன் (ப்ரஹ்ம-உபாஸநம் செய்பவன்) ப்ரஹ்மத்திடம் செல்கிறான் என்பதா? அல்லது, ii) இந்த ஒருங்கிணைக்கப்பட்ட ஒன்றேயான அர்சிராதி-மார்க்கத்தை விட வேறு மார்க்கங்கள் வேறு (பலவிதமான அர்சிராதி) ப்ரஹ்மவித்யைகளில் ஆகும்; அதனால், அவற்றின் மூலமாகவோ, இந்த அர்சிராதி மார்க்கம் மூலமாகவோ செல்கிறான் என்பதில் நியமம் கிடையாது என்பதா? - என்று.

किं युक्तम्? अनियम इति। कुतः? अनेकरूपत्वान्नैरपेक्ष्याच्चेति।

एवं प्राप्तेऽभिधीयते - **अर्चिरादिना** इति। अर्चिरादिरेक एव मार्गः सर्वत्र प्रतिपाद्यते। अतोऽर्चिरादिनैव गच्छति। कुतः? **तत्प्रथितेः** - तस्यैव सर्वत्र प्रथितेः। **प्रथितिः** - प्रसिद्धिः; तस्यैव सर्वत्र प्रत्यभिज्ञानादित्यर्थः। प्रत्यभिज्ञानात् स एव मार्गः सर्वत्र न्यूनाधिकभावेन प्रतिपाद्यत इति विद्यागुणोपसंहारवत् अन्यत्रोक्तानामन्यत्रोपसंहारः क्रियते।

छान्दोग्ये तावत् उपकोसलविद्यायां पञ्चाग्निविद्यायां चैकरूप एवाम्नायते। वाजसनेयके च पञ्चाग्निविद्यायां तथैवार्चिरादिः अल्पान्तरः आम्नायते।

अतस्तत्रापि स एवेति प्रतीयते। अन्यत्रापि सर्वत्राग्न्यादित्यादयः प्रत्यभिज्ञायन्ते॥१॥

इति अर्चिराद्यधिकरणम् ॥१

கிம் யுக்தம்? அநியம: இதி। குத:? அநேகரூபத்வாத் நைரபேக்ஷ்யாச்சேதி।

ஏவம் ப்ராப்தே஽பிதீயதே - *அர்சிராதிநா* - இதி। அர்சிராதி: ஏக ஏவ மார்க: ஸர்வத்ர ப்ரதிபாத்யதே। அத: அர்சிராதிநைவ கச்சதி। குத:? *தத்ப்ரதிதே:* - தஸ்யைவ ஸர்வத்ர ப்ரதிதே:। *ப்ரதிதி:* - ப்ரஸித்தி:; தஸ்யைவ ஸர்வத்ர ப்ரத்யபிஜ்ஞாநாத் இத்யர்த:। ப்ரத்யபிஜ்ஞாநாத் ஸ ஏவ மார்க: ஸர்வத்ர ந்யூநாதிகபாவேந ப்ரதிபாத்யத இதி வித்யாகுணோபஸம்ஹாரவத் அந்யத்ரோக்தாநாம் அந்யத்ரோபஸம்ஹார: க்ரியதே।

சாந்தோக்யே தாவத் உபகோஸலவித்யாயாம் பஞ்சாக்நிவித்யாயாம் சைகரூப ஏவாம்நாயதே। வாஜஸநேயகே ச பஞ்சாக்நிவித்யாயாம் ததைவ அர்சிராதி: அல்பாந்தர: ஆம்நாயதே।

அத: தத்ராபி ஸ ஏவேதி ப்ரதீயதே। அந்யத்ராபி ஸர்வத்ர அக்ந்யாதித்யாதய: ப்ரத்யபிஜ்ஞாயந்தே।। 1 ।।

இதி அர்சிராத்யதிகரணம் ।।1।।

⁂

பூர்வபக்ஷம்

எது தகும்? நியமம் கிடையாது என்பது; ஏன்? மார்க்கங்கள் பலவிதமாக ஆவதாலும், ஒன்றுக்கொன்று மற்றொன்றின் தேவை இல்லாதபடியாலும்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **'அர்ச்சிராதினா (அர்சிஷ் முதலியதாலேயே)'** என்று.

அர்சிஷ் முதலியதான ஒரே ஒரு மார்க்கம்தான் எல்லா இடத்திலும் சொல்லப்படுகிறது; அதனால், அர்சிஷ் முதலியதான வழியாலேயே செல்கிறான்;

ஏன்?

தத்ப்ரதிதே: - அதுவே எல்லா இடத்திலும் தெரிவதால்;

'ப்ரதிதி' என்றால் **'ப்ரஸித்தி'** என்று பொருள்; அதாவது, அதுவே எல்லாவிடத்திலும் நினைவுக்கு வந்து ஒன்றாகவே தெரிவதால் என்று அர்த்தம். ஒன்றாகவே தெரிவதால், அந்த ஒரே மார்க்கம்தான் எல்லாவிடத்திலும், குறைத்தும் கூட்டியும் சொல்லப்படுகிறது; அதனால், ப்ரஹ்ம-வித்யையில் குணங்களை சேர்த்துக் கொள்வது போல், வேறு இடத்தில் சொன்னவற்றை வேறு இடத்தில் சேர்த்துக் கொள்வது செய்யப்படுகிறது.

I. சாந்தோக்யத்தில், உபகோஸலவித்யையிலும் பஞ்சாக்நி-வித்யையிலும் ஒரே மாதிரியாகவே ஓதப்படுகிறது;

III. ப்ருஹதாரண்யகத்தில் பஞ்சாக்நி-வித்யையில் அப்படியே அர்சிஷ் முதலியதே, கொஞ்சம் வித்யாசத்துடன் ஓதப்படுகிறது; அதனால், அங்கும் இதுவேதான் என்பது தெரிகிறது.

II&IV. மீதி எல்லா இடங்களிலும் கூட அக்நி, ஸூர்யன் முதலியவர் ஒருவராகவே நினைவுக்கு வருகின்றனர்.

* * *

அர்சிராத்யதிகரணம் முற்றிற்று

* * *

147.வாய்வதிகரணம்(4-3-2)

முன் குறிப்பு

அர்ச்சிராதி வழியைப் பற்றி பலவிதமாக வேதத்தில் குறிப்புகள் உள்ளன. இவற்றை ஒருங்கிணைத்து ஒரு வழியாக நிர்ணயம் செய்யப் போகிறார்.

வேதத்தில் உள்ள அந்த பலவிதமான குறிப்புகளை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதனை, பின் இணைப்பில் ஒரு அட்டவணையில் காணலாம்.

எதற்குப் பின்னர் எது என்பதை முடிவு செய்ய வேண்டும். முடிவு செய்யும் முறை பற்றியும் பின் இணைப்பில் க்ரமம் என்னும் கட்டுரையில் காணலாம்.

இந்த இரண்டும் புரிந்தால்தான், இந்த அதிகரணங்களின் விசாரம் புரியும்.

முதலில் அர்சிஷ் (அக்நிலோகம்), பிறகு, வரிசையாக, அஹஸ்(பகல்), சுக்லபக்ஷம் (வளர்பிறை பக்ஷம்), உத்தராயணம், ஸம்வத்ஸரம் (ஆண்டு) என்று வரிசை வரும். இதில் விசாரம் இல்லை; ஏனெனில், காலங்களில் குறைந்த கால-அளவுக்குப் பிறகு அதிக கால-அளவு என்கிற முறையில் இது உள்ளது.

அதற்குப் பின்னர் தேவலோகம் போகிறான் என்பதாக ஒரு வேதம் குறிக்கிறது; வாயுவிடம் போகிறான் என்பதாக வேறொரு குறிப்பும் வேதத்தில் உள்ளது.

இதில் விசாரம் - இந்த தேவலோகம் என்பதும் வாயு என்பதும் ஒன்றுதானா? அல்லது வெவ்வேறா?

ஒன்றுதான் என்றால், தேவலோகம் ஆகிற வாயுவை அடைகிறான் என்று ஆகும். வெவ்வேறு என்றால், தேவலோகம், வாயு என இரண்டையும் தனித்தனியே அடைகிறான் என்று ஆகும்; இந்த இரண்டில் தன் விருப்பப்படி ஏதாவது ஒன்றை முதலில் அடைந்து பின்னர் மற்றொன்றை அடைவான் என்பதால் இந்த வரிசையில் நியமம் கிடையாது என்று ஆகும்.

ஸித்தாந்தம் - தேவலோகம், வாயு என்று சொல்லப்பட்ட இரண்டும் ஒன்றுதான்; வாயுதான் தேவர்கள் வசிக்கும் இடம் என வேதம் சொல்கிறது; அதனால், வாயுவையே தேவலோகம் என்று சொல்லலாம்; அவனையே வாயுலோகம் என்றும் வேதம் சொல்கிறது; வாயுவாகிற உலகம் என்று அர்த்தம் வைத்துக் கொள்ள வேணும்.

அதனால் வாயுவிடம் செல்கிறான் என்பது சரியாகும். பின்னர் ஆதித்யன் (ஸூர்யலோகம்) செல்கிறான்.

१४७. वाय्वधिकरणम् (४-३-२)

५१०.वायुमब्दादविशेषविशेषाभ्याम् (४-३-२)

अर्चिरादिनैव गच्छन्ति विद्वांस इत्युक्तम्।

तत्रार्चिरादिके मार्गे छन्दोगाः मासादित्ययोरन्तराले संवत्सरमधीयते, **''मासेभ्यः संवत्सरं संवत्सरादादित्यम्''**(छा.4-15-5)[1] इति। वाजसनेयिनस्तु तयोरेवान्तराले देवलोकम्, **''मासेभ्यो देवलोकं देवलोकादादित्यम्''**(बृ.8-2-15)[2] इति।

उभयत्रापि मार्गस्यैकत्वादुभावभयत्रोपसंहार्यौ। तत्र मासादूर्ध्वमभिहितयोः संवत्सर-देवलोकयोः पञ्चम्याऽभिहितस्य श्रौतक्रमस्य तुल्यत्वेऽपि, **''अर्चिषोऽहरह्न आपूर्यमाण-पक्षमापूर्यमाणपक्षात् यान् षडुदङ्ङेति मासांस्तान्''**(छा.4-15-5)[3] इति अधिककालानां न्यूनकालेभ्य उत्तरोत्तरत्वेन निवेशदर्शनात् संवत्सरस्यैव मासादनन्तरं बुद्धौ विपरिवृत्तेः संवत्सर एव मासादूर्ध्वं निवेशयितव्य इति तत ऊर्ध्वं देवलोक इति निश्चीयते।

अन्यत्र वाजसनेयिनः, **''यदा वै पुरुषोऽस्माल्लोकात् प्रैति स वायुमागच्छति**

---

147. வாய்வதிகரணம் (4-3-2)

510.வாயுமப்தாதவிஶேஷவிஶேஷாப்யாம் (4-3-2)

அர்சிராதிநைவ கச்சந்தி வித்வாம்ஸ இத்யுக்தம்।

தத்ர அர்சிராதிகே மார்கே சந்தோகா: மாஸாதித்யயோ: அந்தராலே ஸம்வத்ஸரமதீயதே, *"மாஸேப்ய: ஸம்வத்ஸரம் ஸம்வத்ஸராதாதித்யம்"* (சா.4-15-5)[1] இதி। வாஜஸநேயிநஸ்து தயோரேவாந்தராலே தேவலோகம், *"மாஸேப்ய: தேவலோகம் தேவலோகாதாதித்யம்"*(ப்ரு.8-2-15)[2] இதி।

உபயத்ராபி மார்கஸ்யைகத்வாத் உபௌ உபயத்ரோபஸம்ஹார்யௌ। தத்ர மாஸாதூர்த்வமபிஹிதயோ: ஸம்வத்ஸரதேவலோகயோ: பஞ்சம்யாऽபிஹிதஸ்ய ஶ்ரௌதக்ரமஸ்ய துல்யத்வேऽபி, *"அர்சிஷோऽஹரஹ்ந ஆபூர்யமாண- பக்ஷமாபூர்யமாணபக்ஷாத் யாந் ஷடுதங்ஙேதி மாஸாம்ஸ்தாந்"* (சா.4-15-5)[3] இதி அதிககாலாநாம் ந்யூநகாலேப்ய: உத்தரோத்தரத்வேந நிவேஶதர்ஶநாத் ஸம்வத்ஸரஸ்யைவ மாஸாதநந்தரம் புத்தௌ விபரிவ்ருத்தே:, ஸம்வத்ஸர ஏவ மாஸாதூர்த்வம் நிவேஶயிதவ்ய இதி, தத ஊர்த்வம் தேவலோக இதி நிஶ்சீயதே।

அந்யத்ர வாஜஸநேயிந:, *"யதா வை புருஷோऽஸ்மால்லோகாத் ப்ரைதி ஸ*

147.வாய்வதிகரணம்(4-3-2)

510.வாயும் அப்தாத் அவிஶேஷ-விஶேஷாப்யாம்(4-3-2)

ஆண்டிலிருந்து வாயுவை அடைகிறான்; பொதுவாகவும் குறிப்பாகவும் [வாயுவை சொல்லியிருப்பதால்]

ஸங்கதி (விஷய-தொடர்பு)&விஷயவாக்யம்

ப்ரஹ்ம-ஜ்ஞானிகள் அர்சிராதி-மார்க்கத்தாலேயே செல்கின்றனர் என்று சொல்லியாயிற்று; அந்த அர்சிராதி-மார்க்கத்தில் -

I. சாந்தோக்யத்தினர், [1]**“மாஸங்களிலிருந்து ஸம்வத்ஸரத்தையும்; ஸம்வத்ஸரத்திலிருந்து ஆதித்யனையும் (அடைகின்றனர்)”** என்று மாஸங்களுக்கும் ஸூர்யனுக்கும் இடையில் ஸம்வத்ஸரத்தை (ஆண்டினை) ஓதுகின்றனர்.

II. ப்ருஹதாரண்யகத்தினரோ அதே இரண்டுக்கும் இடையில் தேவலோகத்தை ஓதுகின்றனர் - [2]**“மாஸங்களிலிருந்து தேவலோகத்தையும், தேவலோகத்திலிருந்து ஆதித்யனையும் (அடைகின்றனர்)”** என்று.

இரண்டு வேதங்களிலும் ஒரே மார்க்கம்தான் என்பதால், இரண்டும் இரண்டு இடத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அதில் மாஸங்களுக்கு மேல் சொல்லப்பட்டவை ஆண்டும், தேவலோகமும்; இரண்டுக்கும் வேத-பாடத்தில் ஐந்தாவது வேற்றுமையால் சொல்லப்பட்ட ஶ்ரௌதக்ரமம் (வேதத்தில் ஒரு சொல்லின் மூலம் காட்டப்பட்ட வரிசை முறை) என்பது ஸமமானது; ஆனாலும், [3]**“அர்சிஷ்ஷிலிருந்து பகலையும், பகலிலிருந்து சுக்லபக்ஷத்தையும், சுக்லபக்ஷத்திலிருந்து ஸூர்யன் எந்த ஆறு மாதங்கள் உயர போகிறானோ அந்த உத்தராயண-மாதங்களையும் (அடைகின்றனர்)”** என்று குறைந்த-காலங்களுக்கு அடுத்தடுத்த படியாக அதிக-காலங்களை வைத்திருப்பதைக் காணலாம்; அதனால், உத்தராயண மாஸங்களுக்குப் பிறகு ஆண்டுதான் மனதில் தோன்றும்; அதனால், ஆண்டுதான் மாஸங்களுக்குப் பிறகு வைக்கப்பட வேண்டும்; அதனால், அதற்குப் பிறகே தேவலோகம் என தீர்மானிக்கப் படுகிறது.

I. வேறொரு இடத்தில் ப்ருஹதாரண்யகத்தினர் [4]**“எப்போது மனிதன் இந்த உலகத்திலிருந்து போகிறானோ, அப்போது அவன் வாயுவை அடைகிறான்; அவனுக்கு அந்த வாயுவானவன் தேர்-சக்கரத்தின் இடைவெளி எவ்வளவோ**

तस्मै स तत्र विजिहीते यथा रथचक्रस्य खम्। तेन स ऊर्ध्वमाक्रमते स आदित्यमागच्छति''(बृ.7-10-1)[4] इत्यादित्यात्पूर्वं वायुमधीयते।

कौषीतकिनस्तु, ''**स एतं देवयानं पन्थानमापद्याग्निलोकमागच्छति स वायुलोकम्**''(कौ.1-3)[1] इत्यग्निलोकशब्दनिर्दिष्टादर्चिषः परं वायुमधीयते। तत्र कौषीतकिनां पाठक्रमेणार्चिषः परत्वेन प्राप्तस्य वायोर्वाजसनेयिनाम्, ''**तेन स ऊर्ध्वमाक्रमते स आदित्यमागच्छति**''(बृ.7-10-1)[2] इत्यूर्ध्वशब्दनिर्दिष्टश्रौतक्रमेण पाठक्रमाद्बलीयसा आदित्यात्पूर्वं प्रवेशो निश्चीयते। अत आदित्यात्पूर्वं संवत्सरादूर्ध्वं देवलोको वायुश्च प्राप्तौ।

तत्रेदं चिन्त्यते - किं देवलोको वायुश्चार्थान्तरभूतौ यथेष्टक्रमेण विद्वान् अभिगच्छेत्, उत अनर्थान्तरत्वेन संवत्सरादूर्ध्वं देवलोकं सन्तं वायुमभिगच्छेत् इति।

किं युक्तम्? भिन्नार्थत्वम्; प्रसिद्धेः। भिन्नार्थत्वे चोर्ध्वशब्देन पञ्चम्या चोभयोः संवत्सरादित्यान्तराले श्रुतिक्रमेण प्राप्तत्वात्, विशेषाभावाच्च यथेष्टम्

इति प्राप्ते - उच्यते, **वायुमब्दात्** इति। वायुं संवत्सरादूर्ध्वमभिगच्छेत्। कुतः?

வாயுமாகச்சதி தஸ்மை ஸ தத்ர விஜிஹீதே யதா ரதசக்ரஸ்ய கம்। தேந ஸ ஊர்த்வமாக்ரமதே ஸ ஆதித்யமாகச்சதி''(ப்ரு.7-10-1)[4] இதி ஆதித்யாத்பூர்வம் வாயுமதீயதே।

கௌஷீதகிநஸ்து, *''ஸ ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்யாக்நிலோகமாகச்சதி ஸ வாயுலோகம்''* (கௌ.1-3)[1] இதி அக்நிலோகஶப்தநிர்திஷ்டாத் அர்சிஷ: பரம் வாயுமதீயதே। தத்ர கௌஷீதகிநாம் பாடக்ரமேண அர்சிஷ: பரத்வேந ப்ராப்தஸ்ய வாயோ: வாஜஸநேயிநாம், *''தேந ஸ ஊர்த்வமாக்ரமதே ஸ ஆதித்யமாகச்சதி''*(ப்ரு.7-10-1)[2] இதி ஊர்த்வஶப்தநிர்திஷ்டஶ்ரௌதக்ரமேண பாடக்ரமாத்பலீயஸா ஆதித்யாத்பூர்வம் ப்ரவேஶோ நிஶ்சீயதே। அத: ஆதித்யாத்பூர்வம் ஸம்வத்ஸராதூர்த்வம் தேவலோகோ வாயுஶ்ச ப்ராப்தௌ।

தத்ரேதம் சிந்த்யதே - கிம் தேவலோக: வாயுஶ்ச அர்தாந்தரபூதௌ யதேஷ்டக்ரமேண வித்வாந் அபிகச்சேத், உத அநர்தாந்தரத்வேந ஸம்வத்ஸராதூர்த்வம் தேவலோகம் ஸந்தம் வாயுமபிகச்சேத் - இதி।

கிம் யுக்தம்? பிந்நார்தத்வம்; ப்ரஸித்தே:। பிந்நார்தத்வே ச ஊர்த்வஶப்தேந பஞ்சம்யா ச உபயோ: ஸம்வத்ஸராதித்யாந்தராலே ஶ்ருதிக்ரமேண ப்ராப்தத்வாத், விஶேஷாபாவாச்ச யதேஷ்டம்

இதி ப்ராப்தே - உச்யதே - *வாயுமப்தாத்* - இதி। வாயும் ஸம்வத்ஸரா-

அவ்வளவு விலகி இடம் அளிக்கிறான்; அதன் மூலம் அவன் மேலே செல்கிறான்; அவன் ஸூர்யனை அடைகிறான்'' என்று ஸூர்யனுக்கு முன்பாக வாயுவை ஓதுகின்றனர்;

II. கௌஷீதகி-ஶாகையினரோ, [1]**''அவன் இந்த தேவயான-வழியை அடைந்து, அக்நிலோகத்தை அடைகிறான்; அவன் வாயுலோகத்தை (அடைகிறான்)''** என்று ஓதுகின்றனர்; அக்நிலோகம் எனும் சொல்லால் அர்சிஷ் குறிப்பிடப்படுகிறது; அந்த அர்சிஷ்ஷுக்குப் பின்னர் வாயுவை ஓதுகின்றனர்.

கௌஷீதகி-ஶாகையினரின் பாட-க்ரமப்படி (வரிசை-முறைப்படி) அர்சிஷ்ஷுக்குப் பின்னர் வாயு ஆக நேரிடுகிறது; ப்ருஹதாரண்யகத்தினர், [2]**''அந்த வாயு கொடுத்த இடைவெளி மூலம் அந்த ப்ரஹ்ம-ஜ்ஞானி மேலே செல்கிறான்; அவன் ஸூர்யனை அடைகிறான்''** என்று 'மேலே' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்ட ஶ்ரௌத-க்ரமத்தால் ஸூர்யனுக்கு முன் வாயு ஆகிறது; ஶ்ரௌத-க்ரமமானது, பாடக்ரமத்தை விட வலுவானது; (வரிசையாக பல பொருள்களை சொல்வதன் மூலம் உணர்த்தப்படும் வரிசை முறையை விட, வேதத்தில் வரிசையைக் குறிக்கும் ஒரு சொல்லைச் சொல்லி, அதன் மூலம் எடுத்துரைக்கப்பட்ட வரிசை முறையானது உயர்ந்தது). அதனால், ஸூர்யனுக்கு முன்னர்தான் வாயுவை வைப்பது என தீர்மானிக்கப் படுகிறது.

ஆகவே, ஸூர்யனுக்கு முன்னர், ஆண்டுக்கு பின்னர் தேவலோகம், வாயு என இரண்டும் வர நேரிடுகிறது.

ஸம்சயம் (ஸந்தேஹம்)

அதில் இது விசாரிக்கப் படுகிறது - ப்ரஹ்ம-ஜ்ஞானி ஆனவன், வெவ்வேறு பொருள்களான தேவலோகம், வாயு என்ற இந்த இரண்டையும் தன் விருப்பப்படியான வரிசை-முறையில் அடைகிறானா? அல்லது இரண்டும் ஒரே பொருள் ஆவதால், ஆண்டுக்குப் பின் தேவலோகம் ஆகிற வாயுவை அடைகிறானா? என்று.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? வெவ்வேறு பொருள் என்பது; ஏனெனில், இரண்டும் வெவ்வேறாகவே ப்ரஸித்தமாக இருப்பதால்.

இரண்டும் வெவ்வேறாகும்போது, 'மேலே' என்ற சொல்லாலும் ஐந்தாவது வேற்றுமையாலும் இரண்டுமே ஶ்ருதி-க்ரமம் மூலம் ஆண்டுக்கும் ஸூர்யனுக்கும் இடையில் ஆக நேரிடுகிறது; ஒரு வித்யாசமும் இல்லை; ஆகையால், விருப்பப்படி செல்வான்.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **''வாயும் அப்தாத்''** என்று.

अविशेषविशेषाभ्यां वायोरेव निर्दिष्टत्वात्। देवलोकशब्दो हि **अविशेषेण** - सामान्येन 'देवानां लोक' इत्यनेन रूपेण वायुमभिधत्ते। **''स वायुमागच्छति तस्मै स तत्र''**(बृ.7-10-1)[1] इति वायुशब्दो विशेषेण वायुमभिधत्ते। अतो देवलोकवायुशब्दाभ्याम् अविशेषविशेषाभ्यां वायुरेवाभिधीयत इति संवत्सरादूर्ध्वं वायुमेवाभिगच्छेत्।

कौषीतकिनां वायुलोकशब्दश्चाग्निलोकशब्दवत् वायुश्चासौ लोकश्चेति व्युत्पत्त्या वायुमेवाभिधत्ते। वायुश्च देवानामावासभूत इति अन्यत्र श्रूयते, **''योऽयं पवते एष(एव) देवानां गृहाः''**(जै.उपनि.ब्रा.3-1)[2] इति॥ २ ॥

इति वाय्वधिकरणम् ॥ २ ॥

தூர்த்வமபிகச்சேத்। குத:? *அவிஶேஷவிஶேஷாப்யாம்* வாயோரேவ நிர்திஷ்டத்வாத்। தேவலோகஶப்தோ ஹி அவிஶேஷேண - ஸாமாந்யேந தேவாநாம் லோக: இத்யநேந ரூபேண வாயுமபிதத்தே। *''ஸ வாயுமாகச்சதி தஸ்மை ஸ தத்ர''*(ப்ரு.7-10-1)[1] இதி வாயுஶப்தோ விஶேஷேண வாயுமபிதத்தே। அத: தேவலோகவாயுஶப்தாப்யாம் அவிஶேஷவிஶேஷாப்யாம் வாயுரேவாபிதீயத இதி ஸம்வத்ஸராதூர்த்வம் வாயுமேவாபிகச்சேத்।

கௌஷீதகிநாம் வாயுலோகஶப்தஶ்ச அக்நிலோகஶப்தவத் வாயுஶ்சாஸௌ லோகஶ்சேதி வ்யுத்பத்த்யா வாயுமேவாபிதத்தே। வாயுஶ்ச தேவாநாமாவாஸபூத இதி அந்யத்ர ஶ்ரூயதே, *''யோऽயம் பவதே ஏஷ(ஏவ) தேவாநாம் க்ருஹா:''* (ஜை.உபநி.ப்ரா.3-1)[2] இதி॥ 2 ॥

இதி வாய்வதிகரணம் ॥ 2 ॥

* * *

அப்தாத் - ஆண்டுக்குப் பின்னர்

வாயும் - வாயுவை அடைவான்;

ஏன்?

அவிஶேஷவிஶேஷாப்யாம் - பொதுவாகவும் குறிப்பாகவும் வாயுவையே உணர்த்துவதால்.

'தேவலோகம்' என்ற சொல்லானது தனிக்குறிப்பு இல்லாமல் பொதுவாக 'தேவர்களது உலகம்' என்னும் பொருள்-உருவையிட்டு வாயுவைச் சொல்கிறது; [1]**''அவன் வாயுவை அடைகிறான்; அவனுக்கு அங்கு அவன் (இடமளிக்கிறான்)''** என்று, 'வாயு' என்ற சொல்லானது, தனிக் குறிப்பாக வாயுவைச் சொல்கிறது; ஆகவே, 'தேவலோகம்' 'வாயு' எனும் இரு சொற்களாலும் பொதுவாகவும், குறிப்பாகவும் வாயுதான் சொல்லப் படுகிறது; அதனால், ஆண்டுக்குப் பின்னர் வாயுவையே அடைவான்.

கௌஷீதகி-ஶாகையினரின் 'வாயுலோகம்' என்ற சொல்லானது, வாயுவாகிற உலகம் என்ற பொருளில் வாயுவையே சொல்கிறது; (வாயுவின் உலகம் என்ற பொருள் அல்ல); 'அக்நிலோகம்' என்ற சொல் போல இது ஆகும்; ''வாயு: ச அஸௌ லோக: ச'' என்று ஸமாஸ-இலக்கணக் குறிப்பு; வாயுவானது தேவர்களின் வசிப்பிடம் ஆகும் என வேறொரு இடத்தில் வேதத்தில் சொல்லப்படுகிறது - [2]**''யாரவன் வீசுகிறானோ, அவன் தேவர்களின் வீடு ஆகிறான்''** என்று.

✍*(ஆக, இங்கு 'தேவலோகம்' என்றால், தேவர்களின் வசிப்பிடமான வாயு என்று பொருள்; வாயுலோகம் என்றால், வாயுவாகிற இருப்பிடம் என்று பொருள்; எல்லாமே வாயுவையே குறிக்கிறது).*✍

* * *

வாய்வதிகரணம் முற்றிற்று

148.வருணாதிகரணம்(4-3-3)

முன் குறிப்பு

இதிலும் அர்சிராதி மார்க்கத்தில் வரிசை முறை பற்றிய விசாரம்.

கௌஷீதகீ ஶாகையில் வாயு, வருணன், ஆதித்யன் என்ற வரிசை சொல்லியுள்ளது.

ப்ருஹதாரண்யகத்தில் வாயுவிலிருந்து ஆதித்யனை அடைகிறான் என்று சொல்லியுள்ளது.

இதில் ப்ருஹதாரண்யகம் சொன்னபடி வாயுவிலிருந்து ஆதித்யன் என்பதே ஏற்கத் தக்கது. ஏனெனில், பாட-க்ரமத்தை விட ச்ருதக்ரமம் முக்கிமானது (பின்-இணைப்பில் க்ரமம் பற்றி காணவும்)

வருணனை எங்கே சேர்ப்பது என்பது பற்றி இங்கு விசாரம்.

பூர்வபக்ஷம் - வாயுவுக்குப் பின் சேர்க்கலாம். ஏனெனில், கௌஷீதகீ சாகையில் வாயு, வருணன், ஆதித்யன் என்று வரிசைக் குறிப்பு உள்ளது; இப்படி சொன்னால், வாயு- விலிருந்து ஆதித்யன் என்று சொன்ன முறை தவறிவிடலாம்; ஆனால், வேறு வழியில்லை.

ஸித்தாந்தம் - கடைசியில் உள்ள மின்னலுக்கு (வித்யுத்-புருஷனுக்கு) பின்னர் வருணன் ஆகலாம்; ஏனெனில், மின்னலுக்கும் வருணனுக்கும் தொடர்பு உள்ளது. வெறும் சொற்களை வைத்துப் பார்க்காமல், அர்த்தத்தை வைத்தும் வரிசையை முடிவு செய்ய வேண்டும்; அந்த முறையில் மின்னலுடன் சேர்த்து வருணனை சொல்வதே சரியாகும்.

மேலும், ஒரு வரிசை நடந்து கொண்டிருக்கும்போது, புதியதாக வருபவர் கடைசியில் இணைய வேண்டும் என்பதே முறையாகும்! நடுவில் அவர் வரிசையைப் பிளந்து உள்ளே இணைவது சரியல்ல.

கேள்வி - வித்யுத் புருஷன்தான் (நேரிடையாக அழைத்துப்போய்) ப்ரஹ்மத்திடம் அடைவிப்பவர் என்று வேதம் சொல்கிறது. எனவே, அவர்தான் கடைசியானவர்; அதனை மாற்றி, அவருக்குப் பின் வருணனிடம் போவதாக சொல்ல முடியுமா?

பதில் - வித்யுத்புருஷன்தான் ஜீவனை அழைத்துக்கொண்டு போய் ப்ரஹ்மத்திடம் கொண்டு சேர்க்கிறார்; கூடவே, வருணன் இணைந்து கொள்கிறார்.

இப்படி வருணனை இங்கே சொன்னபடியால், கூடவே இந்த்ரன் ப்ரஜாபதி ஆகிய இருவரையும் கூட இங்கேயே சேர்த்துக் கொள்ள வேணும்.

In Public domain. Digitization Mahalakshmi Research Academy

१४८. वरुणाधिकरणम् (४-३-३)

५११. तटितोऽधि वरुणः सम्बन्धात् (४-३-३)

कौषीतकिनाम्, **''स एतं देवयानं पन्थानमापद्याग्निलोकमागच्छति ; स वायुलोकं स वरुणलोकं स आदित्यलोकं स इन्द्रलोकं स प्रजापतिलोकं स ब्रह्मलोकम्''**(कौ.1-3)[1] इत्यत्राग्निलोकशब्दस्यार्चिःपर्यायत्वेन प्राथम्यमविगीतम्। वायोश्च संवत्सरादूर्ध्वं निवेश उक्तः। आदित्यस्याप्यत्रप्राप्तपाठक्रमबाधेन, **''देवलोकादादित्यमादित्याद्वैद्युतम्''** (बृ.8-2-15)[2] इति वाजसनेयकोक्तश्रुतिक्रमात् देवलोकशब्दाभिहिताद्वायोरुपरि निवेशः सिद्धः। इदानीं वरुणेन्द्रादिषु चिन्ता।

किमेते वरुणादयो यथापाठं वायोरूर्ध्वं निवेशयितव्याः, आहोस्विद्विद्युतोऽधीति विशये -

अर्चिःप्रभृतिषु सर्वेषु **''अर्चिषोऽहः''**(छा.4-15-5)[3] इत्यादिश्रुतिक्रमोपरोधात्, विद्युतः परस्ताच्च, **''तत्पुरुषोऽमानवः। स एनान् ब्रह्म गमयति''**(छा.4-15-5,6)[4] इति विद्युत्पुरुषस्य ब्राह्मगमयितृत्वश्रवणाच्च सर्वत्रावकाशाभावेनाप्राप्तौ

---

148. வருணாதிகரணம் (4-3-3)

511. தடிதோऽதி வருண: ஸம்பந்தாத் (4-3-3)

கௌஷீதகிநாம், *"ஸ ஏதம் தேவயாநம் பந்தாநமாபத்யாக்நிலோகமாகச்சதி; ஸ வாயுலோகம் ஸ வருணலோகம் ஸ ஆதித்யலோகம் ஸ இந்த்ரலோகம் ஸ ப்ரஜாபதிலோகம் ஸ ப்ரஹ்மலோகம்"*(கௌ.1-3)[1] இத்யத்ர அக்நிலோகஶப்தஸ்ய அர்சி:பர்யாயத்வேந ப்ராதம்யம் அவிகீதம். வாயோஶ்ச ஸம்வத்ஸராதூர்த்வம் நிவேஶ: உக்த:। ஆதித்யஸ்யாப்யத்ர ப்ராப்தபாடக்ரமபாதேந, *"தேவலோகாதாதித்யமாதித்யாத்வைத்யுதம்"*(ப்ரு.8-2-15)[2] இதி வாஜஸநேயகோக்தஶ்ருதிக்ரமாத் தேவலோகஶப்தாபிஹிதாத் வாயோருபரி நிவேஶ: ஸித்த:। இதாநீம் வருணேந்த்ராதிஷு சிந்தா।

கிமேதே வருணாதய: யதாபாடம் வாயோரூர்த்வம் நிவேஶயிதவ்யா:, ஆஹோஸ்வித் வித்யுதோऽதீதி விஶயே -

அர்சி:ப்ரப்ருதிஷு ஸர்வேஷு *"அர்சிஷோऽஹ:"*(சா.4-15-5)[3] இத்யாதி ஶ்ருதிக்ரமோபரோதாத், வித்யுத: பரஸ்தாச்ச, *"தத்புருஷோऽமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி"*(சா.4-15-5,6)[4] இதி வித்யுத்புருஷஸ்ய ப்ரஹ்மகமயித்ருத்வஶ்ரவணாச்ச ஸர்வத்ராவகாஶாபாவேந அப்ராப்தௌ ச உபதே-

148.வருணாதிகரணம்(4-3-3)

511.தடித: அதி வருண: ஸம்பந்தாத்(4-3-3)

மின்னலுக்கு அடுத்து வருணன் ஆவான்; தொடர்பு இருப்பதால்

ஸங்கதி (விஷய-தொடர்பு)

[1]**“அவன் இந்த தேவயான-வழியை அடைந்து, அக்நிலோகத்தை அடைகிறான்; அவன் வாயுலோகத்தை, அவன் வருணலோகத்தை, அவன் ஆதித்யலோகத்தை, அவன் இந்த்ரலோகத்தை, அவன் ப்ரஜாபதிலோகத்தை; அவன் ப்ரஹ்மலோகத்தை (அடைகிறான்)”** என்று கௌஷீதகீ-ஶாகையினரின் வாக்யம்.

- இதில், அக்நிலோகம் என்ற சொல்லானது அர்சிஷ் என்ற சொல்லுடன் ஒரே பொருளில் ஆவது; அதனால், அந்த அர்சிஷ் ஆனது, முதலில் ஆவதில் கருத்து வேற்றுமை இல்லை;
- வாயுவையும் ஆண்டுக்குப் பின் வைக்க வேண்டியதாக சொல்லியாயிற்று;
- ஆதித்யனுக்கு இங்கு சொன்ன பாடக்ரமத்தை (சொன்ன வரிசை முறையை) பாதிக்க வேண்டும்; [2]**“தேவலோகத்திலிருந்து ஆதித்யனையும், ஆதித்யனிலிருந்து மின்னலையும் அடைகின்றனர்”** என்று ப்ருஹதாரண்யகத்தில், சொன்ன ஶ்ருதிக்ரமப்படி தேவலோகம் எனப்படும் வாயுவுக்குப் பின்னர் (ஆதித்யனை) வைக்க வேண்டும்; இப்படி வைப்பது தெரிந்த விஷயமே (பாடக்ரமத்தை விட ஶ்ருதிக்ரமம் வலுவானது என்பதால் இதில் விசாரம் தேவையில்லை);

இப்போது வருணன், இந்த்ரன் முதலியவர்களைப் பற்றி விசாரம்.

ஸம்சயம் (ஸந்தேஹம்)

இந்த வருணன் முதலியவர்கள் பாடவரிசைப்படி வாயுவுக்குப் பின்னர் வைக்கப்பட வேண்டியவரா? அல்லது, மின்னலுக்குப் பின்னரா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்

- அர்சிஷ் முதலிய எல்லாவற்றிலும் இவர்களுக்கு இடமில்லை; ஏனெனில், [3]**“அர்சிஷ்ஷிலிருந்து பகலை ...... அடைகின்றனர்”** முதலியதாக ஶ்ருதிக்ரமம் உள்ளது; (வேதமே சொன்ன வரிசை-முறை உள்ளது); அதற்கு பாதிப்பு வந்துவிடும்;
- மின்னல்-புருஷனுக்கு பின்னரும் இடமில்லை; ஏனெனில், **“அந்த மின்னல்-புருஷன் அமானவன்; அவன் இவனை ப்ரஹ்மத்திடம் சேர்க்கிறான்”** என்று மின்னல்-புருஷனே ப்ரஹ்மத்திடம் அடைவிப்பதாக வேதம் சொல்கிறது.

அதனால், எங்கும் இடமில்லாதபடியால், இவர்கள் இங்கு வரவே முடியாது என்றாகும்; அப்படியானால், இவர்களைப் பற்றிய வேத-உபதேஶம் வீணாகி விடும்;

चोपदेशावैयर्थ्यायावश्यं कस्यचिद्बाध्यत्वे, पाठक्रमानुरोधेन वायोरनन्तरं वरुणो निवेशयितव्यः। वाय्वादित्ययोः क्रमस्य बाधितत्वेनेन्द्रप्रजापति अपि ह्यत्रैव निवेशयितव्यौ

इति प्राप्ते उच्यते - **तटितोऽधि वरुणः** इति। वरुणस्तावत् विद्युत उपरिष्टान्निवेशयितव्यः। कुतः? **सम्बन्धात्** - मेघोदरवर्तित्वात् विद्युतो वरुणेन सम्बन्धो लोकवेदयोः प्रसिद्धः।

एतदुक्तं भवति - वरुणादीनामुपदेशावैयर्थ्याय क्वचिन्निवेशयितव्यत्वे सति पाठक्रमादर्थक्रमस्य बलीयस्त्वात् विद्युतोऽधि वरुणो निवेशयितव्यः; ततश्च अमानवस्य गमयितृत्वं व्यवधानसहमित्यवगम्यते। तस्य च व्यवधानसहत्वादिन्द्रादेश्चोपदिष्टस्यावश्यनिवेशयितव्यस्य वरुणादुपर्युपदिष्टत्वात् आगन्तूनामन्ते निवेशयितव्यत्वाच्च वरुणादुपरीन्द्रादिर्निवेशयितव्य इति॥ ३ ॥

इति वरुणाधिकरणम्॥ ३ ॥

ஶாவையர்த்யாய அவஶ்யம் கஸ்யசித்பாத்யத்வே, பாடக்ரமாநுரோதேந வாயோரநந்தரம் வருணோ நிவேஶயிதவ்ய:। வாய்வாதித்யயோ: க்ரமஸ்ய பாதிதத்வேந இந்த்ரப்ரஜாபதி அபி ஹி அத்ரைவ நிவேஶயிதவ்யௌ

இதி ப்ராப்தே உச்யதே - *தடிதோऽதி வருண:* இதி। வருணஸ்தாவத் வித்யுத உபரிஷ்டாந்நிவேஶயிதவ்ய:। குத:? *ஸம்பந்தாத்* - மேகோதரவர்தித்வாத் வித்யுத: வருணேந ஸம்பந்தோ லோகவேதயோ: ப்ரஸித்த:।

ஏததுக்தம் பவதி - வருணாதீநாமுபதேஶாவையர்த்யாய க்வசிந்நிவேஶயிதவ்யத்வே ஸதி பாடக்ரமாதர்தக்ரமஸ்ய பலீயஸ்த்வாத் வித்யுதோऽதிவருணோ நிவேஶயிதவ்ய:; ததஶ்ச அமாநவஸ்ய கமயித்ருத்வம் வ்யவதாநஸஹம் இத்யவகம்யதே। தஸ்ய ச வ்யவதாநஸஹத்வாத் இந்த்ராதேஶ்ச உபதிஷ்டஸ்ய அவஶ்யநிவேஶயிதவ்யஸ்ய வருணாதுபர்யுபதிஷ்டத்வாத் ஆகந்தூநாம் அந்தே நிவேஶயிதவ்யத்வாச்ச வருணாதுபரி இந்த்ராதிர்நிவேஶயிதவ்ய: இதி।। 3 ।।

இதி வருணாதிகரணம்।। 3 ।।

⁂

அப்படி ஆகக் கூடாது; அதனால், கட்டாயம் எதையாவது பாதித்தே ஆக வேண்டும்; அப்போது, பாடக்ரமத்தை (கௌஷீதகீ வேதம் சொன்ன வரிசை முறையைப்) பின்பற்றி வாயுவுக்குப் பின் வருணன் வைக்கப்பட வேண்டியவன் ஆகிறான்; வாயுவுக்கும் ஆதித்யனுக்கும் ஆன வரிசை-முறை இப்போது பாதிக்கப்பட்டு விட்டது; அதனால், இந்த்ரனும் ப்ரஜாபதியும் கூட இங்கேயே வைக்கப்பட வேண்டியவர்கள் ஆகின்றனர்.

✍(வேறிடத்தில் இவர்களை நுழைத்தால் அங்கும் வரிசை-முறையை பாதிக்க வேண்டி வரும்; பல இடங்களில் வரிசையை பாதிப்பதை விட ஏற்கனவே பாதிக்கப்பட்ட ஒரே இடத்தில் இவர்களையும் சேர்த்து விடுவது நல்லது). ✍

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்லப்படுகிறது - **''தடிதோதி வருண:''** என்று.

வருண: - வருணன் ஆனவன்,

தடித: அதி - மின்னலுக்கு பின்னர் வைக்கப்பட வேண்டியவன்.

ஏன்?

ஸம்பந்தாத் - (தொடர்பு இருப்பதால்) மின்னல் என்பது மேகத்தின் நடுவில் இருப்பது; அதனால், வருணனுடன் தொடர்பு இருப்பது உலகிலும் வேதத்திலும் தெரிந்த விஷயமே.

இது சொன்னதாக ஆகிறது - வேத-உபதேஶம் வீணாகக் கூடாது என்பதற்காக வருணன் முதலியவரை எங்காவது வைத்தே ஆக வேண்டும்; அப்போது, பாட-க்ரமத்தை விட அர்த்த-க்ரமம் வலுவானது என்பதால், மின்னலுக்கு பின்னர் வருணன் வைக்கப்பட வேண்டியவன் ஆகிறான்.

✍(சொன்ன வரிசையை விட பொருள் மூலம் புரிந்து கொள்ளப்படும் வரிசையே வலுவானது; இங்கு மின்னல், வருணன் என்ற இரண்டுக்கும் தொடர்பு இருப்பதால், இரண்டையும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக வரிசையாக அமைக்கலாம் என்று அப்பொருள் மூலம் புரிந்து கொள்கிறோம்).✍

ஆகையால், அமானவன் ஆன மின்னல்-புருஷன் ப்ரஹ்மத்தை அடைவிப்பதானது பிற-இடையீட்டை சகித்துக் கொள்ளும் என தெரிகிறது. இந்த்ரன் முதலியவரைப் பற்றி உபதேஶம் செய்யப்பட்டுள்ளது; அதனால், அவர் எங்காவது கட்டாயம் வைக்கப்பட வேண்டியவர்.

வருணனுக்கு பின்னர் இந்த்ரன் முதலியவர் வைக்கப்பட வேண்டியவர் ஆகிறார். ஏனெனில்,

- ➤ மின்னல்-புருஷன் ப்ரஹ்மத்தை அடைவிப்பதானது பிற-இடையீட்டுடன் (வருணனை இடையிட்டு) ஆவதாலும்,
- ➤ இந்த்ரன் முதலியவரை வருணனுக்கு பின்னர் உபதேஶம் செய்திருப்பதாலும்,
- ➤ வந்து சேர்பவர் கடைசியில் வைக்கப்பட வேண்டியவர் என்பதாலும்.

* * *

வருணாதிகரணம் முற்றிற்று

149.ஆதிவாஹிகாதிகரணம்(4-3-4)

முன் குறிப்பு

ஆதிவாஹிகர் என்றால், அழைத்து வருவதற்காக நியமிக்கப் பட்டவர்கள் என்று அர்த்தம்.

மோக்ஷம் பெறும் ஜீவன், அர்சிராதி மார்க்கத்தில் பரமபதம் போகிறான். அந்த மார்க்கத்தில் அர்சிஷ், அஹஸ் (பகல்) முதலிய குறிப்புகள் உள்ளன. இந்த அர்சிஷ் முதலியவை என்ன? என்பது விசாரம்.

பூர்வபக்ஷம் - அர்சிஷ் முதலியவை வழி அடையாளங்கள்; மரம், குளம், மலை முதலியவற்றை வழி அடையாளமாக சொல்வது போல், இவை வழி அடையாளங்கள் எனலாம்.

அல்லது, இவை போக-நிலங்கள்; அதாவது, அர்சிர்-லோகம், அஹர்லோகம் முதலிய உலகங்களில் சென்று அந்த வழியாக பரமபதம் செல்கிறான்.

ஸித்தாந்தம் - அர்சிஷ் முதலியவர்கள் ஆதிவாஹிகர்கள்; மோக்ஷம் பெற்று பரமபதம் செல்பவர்களை அதற்கான வழியில் அழைத்து செல்வதற்காக, பரப்ரஹ்மம் ஆன பகவான், இவர்களை நியமனம் செய்துள்ளான்.

அர்சிஷ்(அக்னி), அஹஸ்(பகல்) என்று சொல்லும்போது, வெறும் பொருள்கள் அல்ல அவை; அவர்கள் தேவர்கள்; (உ.ம்) அஹஸ் என்றால் பகல் காலத்தை அபிமானம் செய்து இருக்கும் ஒரு தேவன் என்று அர்த்தம்.

இதில் கடைசியில் வித்யுத் புருஷன் உள்ளார்; அவர்தான் ஜீவனை ப்ரஹ்மத்திடம் கொண்டு சேர்க்கிறார். அப்போது அவருடன் கூட வருணன், இந்த்ரன், ப்ரஜாபதி ஆகிய மூவர் இணைந்து கொள்கின்றனர்.

இதில் மேலும் பல விஷயங்களை ஸ்ரீ தேசிகன் அருளிய பரமபதஸோபானம் நூலில் சேவித்து அறியலாம்.

१४९. आतिवाहिकाधिकरणम् (४-३-४)

५१२.आतिवाहिकास्तल्लिङ्गात् (४-३-४)

इदमिदानीं चिन्त्यते, किमर्चिरादयो मार्गचिह्नभूताः, उत भोगभूमयः, अथवा विदुषां ब्रह्म प्रेप्सतामतिवोढारः इति।

किं तावत् युक्तम्? मार्गचिह्नभूता इति। कुतः? उपदेशस्य तथाविधत्वात्। दृश्यते हि लोके ग्रामादीन् प्रति गन्तॄणामेवंविधो दैशिकैरुपदेशः 'इतो निष्क्रम्य, अमुकं वृक्षममुकां नदीममुकं च पर्वतपार्श्वं गत्वाऽमुकं ग्रामं गच्छ' इति।

अथवा भोगभूमय एताः स्युः, कालविशेषतया प्रसिद्धानामहरादीनां मार्गचिह्नत्वानुपपत्तेः। अन्यस्य च मार्गचिह्नभूतस्यैतेषामनभिधायकत्वात्। भोगभूमित्वं च, "**एत एव लोकाः यदहोरात्राण्यर्धमासा मासा ऋतवः संवत्सराः**"(?)[1] इत्यहरादीनां लोकत्ववचनादुपपद्यते। अत एव च कौषीतकिनः, "**अग्निलोकमागच्छति**"(कौ.1-3)[2] इत्यादिना लोकशब्दानुविधानेनार्चिरादीन् पठन्तीति।

---

149. ஆதிவாஹிகாதிகரணம் (4-3-4)

512.ஆதிவாஹிகாஸ்தல்லிங்காத் (4-3-4)

இதமிதாநீம் சிந்த்யதே, கிம் அர்சிராதய: மார்கசிஹ்நபூதா:, உத போகபூமய:, அதவா விதுஷாம் ப்ரஹ்ம ப்ரேப்ஸதாம் அதிவோடார: இதி।

கிம் தாவத் யுக்தம்? மார்கசிஹ்நபூதா: இதி। குத:? உபதேஶஸ்ய ததாவிதத்வாத்। த்ருஶ்யதே ஹி லோகே க்ராமாதீந் ப்ரதி கந்த்ரூணாம் ஏவம்விதோ தைஶிகைருபதேஶ: - 'இதோ நிஷ்க்ரம்ய, அமுகம் வ்ருக்ஷமமுகாம் நதீமமுகம் ச பர்வதபார்ஶ்வம் கத்வாऽமுகம் க்ராமம் கச்ச' இதி।

அதவா போகபூமய ஏதா:ஸ்யு:, காலவிஶேஷதயா ப்ரஸித்தாநாம் அஹராதீநாம் மார்கசிஹ்நத்வாநுபபத்தே:। அந்யஸ்ய ச மார்கசிஹ்நபூதஸ்ய ஏதேஷாமநபிதாயகத்வாத்। போகபூமித்வம் ச, *"ஏத ஏவ லோகா: யதஹோராத்ராண்யர்தமாஸா மாஸா ருதவ: ஸம்வத்ஸரா:"* (?)[1] இதி அஹராதீநாம் லோகத்வவசநாதுபபத்யதே। அத ஏவ ச கௌஷீதகிந:, *"அக்நிலோகமாகச்சதி"* (கௌ.1-3)[2] இத்யாதிநா லோகஶப்தாநுவிதாநேந அர்சிராதீந் படந்தீதி।

149.ஆதிவாஹிகாதிகரணம்(4-3-4)

512.ஆதிவாஹிகா: தல்லிங்காத்(4-3-4)

அழைத்து வருதல் எனும் அந்த அடையாளம் சொல்லியிருப்பதால் ஆதிவாஹிகர்கள் [அழைத்து வர நியமிக்கப் பட்டவர்கள் ஆவர்].

ஸம்சயம் (ஸந்தேஹம்)

இது இப்போது விசாரிக்கப் படுகிறது - அர்சிஷ் முதலியவை வழி-அடையாளம் ஆனவையா? போகத்துக்கான நிலங்களா? அல்லது ப்ரஹ்மத்தை அடைய விரும்பும் ஜ்ஞானிகளுக்கு ஆதிவாஹிகர்களா (ஜ்ஞானிகளை அழைத்து வருவதற்காக நியமிக்கப் பட்டவர்களா)? - என்று.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? வழி-அடையாளங்கள் ஆனவை என்பது; ஏன்? உபதேஶம் அப்படி இருப்பதால்; உலகில் க்ராமம் முதலியவற்றைக் குறித்து செல்பவர்களுக்கு இதே போன்று பெரியோர்களின் உபதேஶம் காணப்படுகிறது - 'இங்கிருந்து வெளியே போய், இந்த மரத்தையும், இந்த நதியையும், இந்த மலை-பக்கத்தையும் சென்று (கடந்து), இந்த கிராமம் செல்' என்று.

✍*(அந்த உபதேஶம் போல இந்த அர்சிராதி-உபதேஶம் இருப்பதால், அங்கே சொல்லப்பட்ட மலை நதி முதலிய அடையாளங்கள் போல, இங்கே சொல்லப்படும் அர்சிஷ் முதலியவையும் வழிக்கான அடையாளங்களே).*✍

அல்லது இவை போக-நிலங்கள் ஆகலாம்; பகல் முதலியவை கால-விஶேஷங்கள்; அதனால், அவை வழி-அடையாளங்களாக ஆக முடியாது; வழி-அடையாளமாக வேறு ஏதாவது இருந்தாலும் அதை இந்த சொற்கள் சொல்லாதவை; [1]**''பகல்-இரவுகள், பக்ஷங்கள், மாஸங்கள், ருதுக்கள், வர்ஷங்கள் என்று இவையே உலகங்கள்''** என்று பகல் முதலியவற்றை உலகங்கள் என்று சொல்வதால், இவை போக-நிலங்கள் என்பது சரியாகிறது; அதனால்தான், கௌஷீதகி-ஶாகையினர் [2]**''அக்னி-லோகத்தை அடைகிறான்''** முதலியதால், 'லோக' எனும் சொல்லைச் சேர்த்து அர்சிஷ் முதலியவற்றை ஓதுகின்றனர்.

In Public Domain. Digitization by Muthulakshmi Research Academy

एवं प्राप्ते ब्रूमः - **आतिवाहिकाः** इति। विदुषामतिवाहे परमपुरुषेण नियुक्ताः आतिवाहिकाः देवताविशेषा एतेऽर्चिरादयः। कुतः? **तल्लिङ्गात्** अतिवहनलिङ्गात्। **अतिवहनं** हि गन्तॄणां गमयितृत्वम्। गमयितृत्वं च **''तत्पुरुषोऽमानवः। स एनान् ब्रह्म गमयति''** (छा.4-15-5,6)[1] इति उपसंहारे श्रूयमाणं पूर्वेषामप्यविशेषश्रुतानां स एव सम्बन्ध इति गमयति। वदन्ति चार्चिरादयः शब्दाः अर्चिराद्यात्मभूतान् अभिमानिदेवताविशेषान्, **''तं पृथिव्यब्रवीत्''**(तै.सं.5-5-2)[2] इतिवत्॥

* * *

यद्येवम्, **''तत्पुरुषोऽमानवः। स एनान् ब्रह्म गमयति''**(छा.4-15-5,6)[3] इति वैद्युतस्यैव पुरुषस्य ब्रह्मगमयितृत्वश्रुतेर्विद्युतः परेषां वरुणादीनां कथमातिवाहिकत्वेनान्वय इत्यत्राह -

५१३.वैद्युतेनैव ततस्तच्छ्रुतेः (४-३-५)

ஏவம் ப்ராப்தே ப்ரூம: - *ஆதிவாஹிகா:* இதி। விதுஷாமதிவாஹே பரமபுருஷேண நியுக்தா: ஆதிவாஹிகா: தேவதாவிஶேஷா ஏதே அர்சிராதய:। குத:? *தல்லிங்காத்* அதிவஹநலிங்காத்। அதிவஹநம் ஹி கந்த்ரூணாம் கமயித்ருத்வம்। கமயித்ருத்வம் ச *''தத்புருஷோऽமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி''*(சா.4-15-5,6)[1] இதி உபஸம்ஹாரே ஶ்ரூயமாணம் பூர்வேஷாமபி அவிஶேஷஶ்ருதாநாம் ஸ ஏவ ஸம்பந்த இதி கமயதி। வதந்தி சார்சிராதய: ஶப்தா: அர்சிராத்யாத்மபூதாந் அபிமாநிதேவதாவிஶேஷாந், *''தம் ப்ருதிவ்யப்ரவீத்''*(தை.ஸம்.5-5-2)[2] இதிவத்.।4।।

யத்யேவம், *''தத்புருஷோऽமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி''*(சா.4-15-5,6)[3] இதி வைத்யுதஸ்யைவ புருஷஸ்ய ப்ரஹ்மகமயித்ருத்வஶ்ருதே: வித்யுத: பரேஷாம் வருணாதீநாம் கதம் ஆதிவாஹிகத்வேநாந்வய இத்யத்ராஹ-

513.வைத்யுதேநைவ ததஸ்தச்ச்ருதே: (4-3-5)

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் - **''ஆதிவாஹிகா:''** என்று.

ப்ரஹ்ம-ஜ்ஞானிகளை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு (அழைத்து) வருவதற்காக பரமபுருஷனால் நியமனம் செய்யப்பட்ட சில விஶேஷ-தேவர்களே இந்த அர்சிஷ் முதலியவர்கள்.

எப்படி ஆகும்?

தல்லிங்காத் - அழைத்து வருகின்றனர் எனும் காரணத்தால் ஆகும்.

அதிவஹநம் செய்தல் என்றால், செல்பவர்களை செல்ல வைப்பவராக ஆதல் என்று அர்த்தம்; செல்ல வைத்தல் என்பது கடைசியில் வேதத்தில் சொல்லப்படுகிறது - [1]**''அந்த மின்னல்-புருஷன் அமானவன் ஆவான்; அவன் இவர்களை ப்ரஹ்மத்திடம் செல்ல வைக்கிறான்''** என்று; மின்னல்-புருஷனுக்கு முன்னர் இருப்பவரும், விஶேஷ-குறிப்பு இன்றி இதேபோல ஓதப்படுகின்றனர்; இறுதியில் மின்னல்-புருஷன் அழைத்துச் செல்வதாகச் சொன்னதானது, முன்னர் இருப்பவர்களுக்கும் அழைத்துச் செல்லுதல் எனும் இதே தொடர்புதான் என தெரிய வைக்கிறது;

மேலும், 'அர்சிஷ்' முதலிய சொற்கள் அர்சிஷ் (அக்நி) முதலியவற்றின் அபிமானிகளாக இருக்கும் விஶேஷ-தேவர்களை சொல்கின்றன; [2]**''அவனை பூமி சொன்னது''** முதலியது போல இது ஆகும்.

✍(பூமி சொன்னது என்றால் பூமித் தேவன் சொன்னான்' என்று அர்த்தம்; அதுபோல இங்கும் அர்சிஷ் முதலிய சொற்கள் அந்தந்த தேவர்களைக் குறிக்கும்)✍

◆ ◆ ◆ ◆

கேள்வி - இப்படியானால், மின்னலுக்குப் பின்னர் ஆகும் வருணன் முதலியவர், ஆதிவாஹிகராக (அழைத்து செல்பவராக) சேர்வது எப்படியாகும்? ஏனெனில், [3]**''அந்த மின்னல்-புருஷன் அமானவன்; அவன் இவர்களை ப்ரஹ்மத்திடம் செல்ல வைக்கிறான்''** என்று மின்னல்-புருஷன் மட்டுமே ப்ரஹ்மத்திடம் அழைத்துப் போவதாக வேதம் சொல்கிறது!

பதில் - இப்படி கேள்வி வருமிடத்து பதில் சொல்கிறார் -

513.வைத்யுதேன ஏவ தத: தச்ச்ருதே:(4-3-5)

அவனுக்குப் பின் மின்னல்-புருஷனைக் கொண்டே [செல்கின்றனர்]; அதை வேதம் சொல்வதால்.

ततः विद्युत उपरि, **वैद्युतेनामानवेनैवातिवाहिकेन** विदुषामाब्रह्मप्राप्तेर्गमनम्। **कुतः? तच्छ्रुतेः। "स एनान् ब्रह्म गमयति"** (छा.4-15-6)[1] इति तस्यैव गमयितृत्वश्रुतेः। वरुणादयस्त्वनुग्राहका इति तेषामप्यातिवाहिकत्वेनान्वयो विद्यत एव॥ ५ ॥

इति आतिवाहिकाधिकरणम् ॥ ४ ॥

ததः வித்யுத உபரி, *வைத்யுதேநாமாநவேநைவ* ஆதிவாஹிகேந விதுஷாம் ஆப்ரஹ்மப்ராப்தேர்கமநம்। குத:? *தச்ச்ருதே: "ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி"* (சா.4-15-6)[1] இதி தஸ்யைவ கமயித்ருத்வஸ்ருதே:। வருணாதயஸ்து அநுக்ராஹகா இதி தேஷாமபி ஆதிவாஹிகத்வேநாந்வயோ வித்யத ஏவ।।5।।

இதி ஆதிவாஹிகாதிகரணம் ।। 4 ।।

* * *

தத: - அந்த மின்னல்-புருஷனுக்குப் பின்

வைத்யுதேன ஏவ - அழைத்துப் போகும் அமானவன் ஆன மின்னல்-புருஷனைக் கொண்டே

ஜ்ஞானிகள் ப்ரஹ்மத்தை அடையும்வரை போகின்றனர்;

ஏன்?

தச்ச்ருதே: - (அதை வேதம் சொல்வதால்) - [1]**''அவன் இவர்களை ப்ரஹ்மத்திடம் செல்ல வைக்கிறான்''** என்று அந்த மின்னல்-புருஷனே அழைத்துச் செல்வதாக வேதம் சொல்வதால்.

வருணன் முதலியவரோ, (மின்னல்-புருஷனுடன் கூட இருந்து) அனுக்ரஹம் செய்பவர் என்பதால், அழைத்துச் செல்பவராக அவர்களுக்கும் இதில் தொடர்பு உண்டுதான்.

* * *

ஆதிவாஹிகாதிகரணம் முற்றிற்று.

* * *

150.கார்யாதிகரணம்(4-3-5)

முன் குறிப்பு

அர்சிஷ் முதலிய தேவர்கள் பரமபதத்துக்கு அழைத்து செல்வர் என்று சொல்லியாயிற்று. யாரை அழைத்துச் செல்வர் என்பதில் ஒரு விசாரம்

பாதரிமுனிவரின் மதம் - நான்முகனை உபாஸநம் செய்பவர்களை அவனுடைய லோகத்துக்கு அழைத்துச் செல்வர். அந்தவழிதான் அர்ச்சிராதி கதி ஆகும். நான்முகனுக்கும் ப்ரஹ்ம என்று ஒரு பெயர் உண்டு. எனவே ப்ரஹ்மத்தை அடைகிறார் என்பது சரி; பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவருக்கு அர்ச்சிராதிகதி தேவையில்லை.

ஜைமினி முனிவர் மதம் - பரப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவரை மட்டுமே அர்ச்சிராதி தேவர்கள் பரமபதம் அழைத்து செல்வர். வேறு யாரையும் அல்ல.

பாதராயணர் மதம் (ஸித்தாந்தம்) - பரப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவருக்கு அர்ச்சிராதிகதி உண்டு; அது மட்டுமல்ல; பரப்ரஹ்மத்தின் ஶரீரமாக, ஜீவாத்மாவை உபாஸநம் செய்பவருக்கும் அர்ச்சிராதி கதி உண்டு. வேறு யாருக்கும் கிடையாது.

ஸூத்ரத்தில் ப்ரதீக-உபாஸநம் செய்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு அர்ச்சிராதி கதி உண்டு என்கிறது; ப்ரதீக உபாஸநம் செய்பவர் என்பது ப்ரஹ்மத்தின் ஶரீரமான சேதந-அசேதநங்களை உபாஸநம் செய்பவர்; அவருக்கு அர்ச்சிராதி கதி கிடையாது; மற்றவருக்கு உண்டு; அதாவது ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவருக்கு உண்டு; அதே ஸமயம் பஞ்சாக்நிவித்யைப்படி ஜீவனை ப்ரஹ்மத்தின் ஶரீரமாக உபாஸநம் செய்வது என்பது ப்ரதீக உபாஸநம் அல்ல; அது ப்ரஹ்ம-உபாஸநம் ஆகும்; அதற்கும் அர்ச்சிராதி வழியாக ப்ரஹ்மத்தை அடையும் பலன் உண்டு.

அர்ச்சிராதி கதி பெற முடியாதவர்கள் மூன்று விதம் -

1. அசேதன பொருளை அப்படியே உபாஸநம் செய்பவர்கள்.
2. அசேதன-பொருளையே ப்ரஹ்மம் ஆக த்ருஷ்டி-உபாஸநம் செய்பவர்கள்.
3. (பரமாத்மாவை விட்டுவிட்டு) வெறும் ஜீவனை உபாஸநம் செய்பவர்கள்.

ஜீவாத்மாவை உபாஸநம் செய்வதில் மூன்று விதம் உள்ளது.

1. ஶரீரத்துடன் கூடிய ஜீவனை உபாஸநம் செய்தால் ஶரீர-அனுபவமே பலன்.
2. ஶரீரம் அற்ற ஜீவ-ஸ்வரூபத்தை (ப்ரஹ்மத்தின் தொடர்பு இல்லாமல்) உபாஸநம் செய்தால், கைவல்யம் எனும் பலன் கிடைக்கும். இது மோக்ஷம் அன்று.
3. ப்ரஹ்மத்தின் ஶரீரமாக ஜீவனை உபாஸநம் செய்தால், அர்ச்சிராதி கதி வழியாக பரமபதம் ஆகிற மோக்ஷம் கிடைக்கும். இதனை வேதமே சொல்கிறது.

அப்படி, ப்ரஹ்மத்தின் ஶரீரமாக ஜீவனை உபாஸநம் செய்வது பஞ்சாக்னி வித்யையில் ஆகும்; அதனால்தான் அங்கே அந்த வித்யையில் அர்ச்சிராதி கதியும் ப்ரஹ்மத்தை அடைதலும் பலன் என வேதம் சொல்கிறது.

இந்த அதிகரணத்தில், முதல் ஐந்து ஸூத்ரங்களில் பாதரி மதம்; அடுத்த மூன்று ஸூத்ரங்களில் ஜைமினி மதம்; கடைசி இரண்டு ஸூத்ரங்களில் பாதராயணர் மதம்; அதுதான் ஸித்தாந்தம்.

१५०. कार्याधिकरणम् (४-३-५)

५१४. कार्यं बादरिरस्य गत्युपपत्तेः (४-३-६)

अर्चिरादिनैव गच्छति विद्वान्; अर्चिरादिरमानवान्तश्च गणः आतिवाहिको विद्वांसं ब्रह्म गमयतीत्युक्तम्।

इदमिदानीं चिन्त्यते। किमयमर्चिरादिको गणः कार्यं हिरण्यगर्भमुपासीनान्नयति, उत परमेव ब्रह्मोपासीनान्, अथ परं ब्रह्म उपासीनान् प्रत्यगात्मानं ब्रह्मात्मकतयोपासीनांश्च इति विशये -

कार्यमुपासीनानेव गमयतीति **बादरि**राचार्यो मन्यते। कुतः? **अस्य** -हिरण्यगर्भमुपासीनस्यैव **गत्युपपत्तेः**। न हि परिपूर्णं सर्वज्ञं सर्वगतं सर्वात्मभूतं परं ब्रह्मोपासीनस्य तत्प्राप्तये देशान्तरगतिरुपपद्यते; प्राप्तत्वादेव। नित्यप्राप्तपरब्रह्मविषयाविद्यानिवृत्तिमात्रमेव हि परविद्याकार्यम्। कार्यं तु हिरण्यगर्भरूपं ब्रह्मोपासीनस्य परिच्छिन्नदेशवर्तिप्राप्यप्राप्त्यर्थं गमनमुपपद्यते। अतोऽर्चिरादिरातिवाहिकगणस्तमेव नयति॥ ६ ॥

◆

---

150. கார்யாதிகரணம் (4-3-5)

514.கார்யம் பாதரிரஸ்ய கத்யுபபத்தே: (4-3-6)

அர்சிராதிநைவ கச்சதி வித்வாந்; அர்சிராதி: அமாநவாந்தஶ்ச கண: ஆதிவாஹிகோ வித்வாம்ஸம் ப்ரஹ்ம கமயதீத்யுக்தம்।

இதமிதாநீம் சிந்த்யதே। கிம் அயமர்சிராதிகோ கண: கார்யம் ஹிரண்யகர்பமுபாஸீநாந் நயதி, உத பரமேவ ப்ரஹ்மோபாஸீநாந், அத பரம் ப்ரஹ்ம உபாஸீநாந் ப்ரத்யகாத்மாநம் ப்ரஹ்மாத்மகதயா உபாஸீநாம்ஶ்ச - இதி விஶயே -

*கார்ய*முபாஸீநாநேவ கமயதி இதி *பாதரி*ராசார்யோ மந்யதே। குத:? *அஸ்ய* - ஹிரண்யகர்பமுபாஸீநஸ்யைவ கத்யுபபத்தே:। ந ஹி பரிபூர்ணம் ஸர்வஜ்ஞம் ஸர்வகதம் ஸர்வாத்மபூதம் பரம் ப்ரஹ்மோபாஸீநஸ்ய தத்ப்ராப்தயே தேஶாந்தரகதி: உபபத்யதே; ப்ராப்தத்வாதேவ। நித்யப்ராப்தபரப்ரஹ்மவிஷயாவித்யாநிவ்ருத்திமாத்ரமேவ ஹி பரவித்யாகார்யம்। கார்யம் து ஹிரண்யகர்பரூபம் ப்ரஹ்மோபாஸீநஸ்ய பரிச்சிந்நதேஶவர்திப்ராப்யப்ராப்த்யர்தம் கமநமுபபத்யதே। அத: அர்சிராதிராதிவாஹிககண: தமேவ நயதி।। 6 ।।

◆

150.கார்யாதிகரணம்(4-3-5)

514.(பூ) கார்யம் பாதரி: அஸ்ய கத்யுபபத்தே: (4-3-6)

படைக்கப்படுபவனை [நான்முகனை] உபாஸநம் செய்பவனை அழைத்துச் செல்வதாக பாதரி கருதுகிறார்; ஏனெனில், அவனுக்கே செல்லுதல் பொருந்தும்.

ஸங்கதி (விஷய-தொடர்பு) & ஸம்ஶயம் (ஸந்தேஹம்)

அர்சிராதி-வழியாலேயே ஜ்ஞானி செல்கிறான்; அர்சிஷ் முதல் அமானவன் வரையிலான குழுவானது அழைத்துச் செல்பவராய் ஜ்ஞானியை ப்ரஹ்மத்திடம் செல்ல வைக்கிறது என்று சொல்லியாயிற்று; இப்போது இது விசாரம் செய்யப் படுகிறது; இந்த அர்சிராதி-குழுவானது -

- ‘‘படைக்கப் படுபவனான ஹிரண்யகர்ப்பனை (நான்முகனை) உபாஸநம் செய்பவர்களை அழைத்துப் போகிறதா?
- அல்லது பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவரை மட்டும் அழைத்துச் செல்கிறதா?
- அல்லது, பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவரையும், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டதாக ஜீவாத்மாவை உபாஸநம் செய்பவரையும் அழைத்துச் செல்கிறதா? - என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்

படைக்கப் படுபவனான ஹிரண்யகர்ப்பனை (நான்முகனை) உபாஸநம் செய்பவர்களை அழைத்துப் போகிறது என்று ஆசார்யர் பாதரி கருதுகிறார். ஏன்? இந்த ஹிரண்யகர்ப்பனை உபாஸநம் செய்பவருக்கே, கதி (செல்லுதல்) என்பது சரியாக வரும்.

பர-ப்ரஹ்மமோ பரிபூர்ணமானது; ஸர்வஜ்ஞன் ஆவது; எல்லா இடத்திலும் இருப்பது, எல்லாருக்கும் ஆத்மாவானது; அதை உபாஸநம் செய்பவர், அதை அடைவதற்காக வேறு உலகத்துக்குச் செல்கின்றனர் என்பது பொருந்தாது; ஏனெனில், அது எப்போதும் அடையப்பட்டதாகவே (இங்கேயே) இருக்கிறது; எப்போதுமே அடையப்பட்டதாக (எங்கும்) இருக்கும் பரப்ரஹ்மம் பற்றிய அஜ்ஞாநத்தை ஒழிப்பது மட்டும்தானே பரவித்யையாகிற உபாஸனத்தின் பலன்! ✍*(ப்ரஹ்மத்தை அடைதல் என்பது உபாஸநத்தின் பலன் அல்ல; அது வேதாந்தஶாஸ்த்ரத்தின் நோக்கம் அல்ல; ஏனெனில், ப்ரஹ்மம் எல்லா இடத்திலும் இருக்கிறபடியால் அதை நாம் வேறொரு இடம் தேடிச் சென்று அடைய வேண்டிய அவச்யமில்லை; மாறாக, ப்ரஹ்மம் பற்றிய அஜ்ஞாநத்தை ஒழிப்பதற்குதான் ஶாஸ்த்ரம்; அதற்காகவே உபாயம் ஆகும்)*✍

படைக்கப் படுபவனான ஹிரண்யகர்பனை (நான்முகனை) உபாஸநம் செய்பவர்களுக்கோ, அடையப்படும் பலன் ஆனது, ஒரு குறிப்பிட்ட அளவுடைய இடத்தில் இருக்கிறது; அதனால், அதை அடைவதற்காக செல்கிறான் என்பது பொருந்தும். ஆகவே, அர்சிஷ் முதலிய ஆதிவாஹிக-குழுவானது அவனையே (ஹிரண்யகர்ப்பனை உபாஸநம் செய்பவனையே) அழைத்துச் செல்லும்.

◆ ◆ ◆

In Public domain, Digitized by Sri Lakshmi Research Academy

५१५.विशेषितत्वाच्च (४-३-७)

''पुरुषो मानस एत्य ब्रह्मलोकान् गमयति''(बृ.8-2-15)[1] इति लोकशब्देन, बहुवचनेन च लोकविशेषवर्तिनं हिरण्यगर्भमुपासीनमेवामानवो गमयतीति विशेष्यते। किञ्च **''प्रजापतेः सभां वेश्म प्रपद्ये''**(छा.8-14-1)[2] इति कार्यस्य हिरण्यगर्भस्य समीपगमनमर्चिरादिना गतः प्रत्यभिसन्धत्ते॥ ७ ॥

* * *

नन्वेवम्, **''तत्पुरुषोऽमानवः। स एनान् ब्रह्म गमयति''**(छा.4-15-5,6)[3] इत्ययं निर्देशो नोपपद्यते। हिरण्यगर्भनयने हि, 'स एनान् ब्रह्माणं गमयति' इति निर्देष्टव्यं स्यात्, अत आह -

५१६.सामीप्यात् तु तद्व्यपदेशः (४-३-८)

''यो ब्रह्माणं विदधाति''(श्वे.6-18)[4] इति हिरण्यगर्भस्य प्रथमजत्वेन ब्रह्मसामीप्यात् तस्य ब्रह्मशब्देन व्यपदेश इति गत्यनुपपत्तिविशेषणादिभिरुक्तैर्हेतुभिर्निश्चीयत इत्यर्थः॥८॥

* * *

---

514. விஶேஷிதத்வாச்ச (4-3-7)

''புருஷோ மாநஸ ஏத்ய ***ப்ரஹ்ம****லோகாந் கமயதி''*(ப்ரு.9-2-12)[1] இதி லோகஶப்தேந, பஹுவசநேந ச லோகவிஶேஷவர்திநம் ஹிரண்யகர்பமுபாஸீநமேவ அமாநவோ கமயதீதி விஶேஷ்யதே। கிஞ்ச *''ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்ம ப்ரபத்யே''*(சா.8-14-1)[2] இதி கார்யஸ்ய ஹிரண்யகர்பஸ்ய ஸமீபகமநம் அர்சிராதிநா கத: ப்ரத்யபிஸந்தத்தே।। 7 ।।

* * *

நந்வேவம், *''தத்புருஷோऽமாநவ: ஸ ஏநாந்* ***ப்ரஹ்ம*** *கமயதி''*(சா.4-15-5,6)[3] இத்யயம் நிர்தேஶோ நோபபத்யதே। ஹிரண்யகர்பநயநே ஹி, 'ஸ ஏநாந் ப்ரஹ்மாணம் கமயதி' இதி நிர்தேஷ்டவ்யம் ஸ்யாத்-அத ஆஹ-

516. ஸாமீப்யாத் து தத்வ்யபதேஶ: (4-3-8)

''யோ ***ப்ரஹ்மாணம்*** *விததாதி''*(ஶ்வே.6-18)[4] இதி ஹிரண்யகர்பஸ்ய ப்ரதமஜத்வேந ப்ரஹ்மஸாமீப்யாத் தஸ்ய ப்ரஹ்மஶப்தேந வ்யபதேஶ இதி கத்யநுபபத்திவிஶேஷணாதிபி: உக்தைர்ஹேதுபிர்நிஶ்சீயதே இத்யர்த:।।8।।

* * *

515.(ஸூ) விஶேஷிதத்வாத் ச (4-3-7)

தனிப்படுத்தி சொல்வதாலும்

[1]**“மானஸ-புருஷனான அவன் வந்து ப்ரஹ்ம-லோகங்களுக்கு அழைத்து செல்கிறான்”** என்று ‘லோகம்’ என்ற சொல்லும், பஹுவசனமும் (பன்மையும்) உள்ளது; அதன் மூலம், தனி-உலகத்தில் இருப்பவனான ஹிரண்யகர்ப்பனை உபாஸநம் செய்பவனை மட்டுமே அமானவ-புருஷன் அழைத்துச் செல்கிறான் என்பது தனிப்படுத்தி குறிப்பிடப் படுகிறது;

✍*(ப்ரஹ்மலோகங்கள் என்கிற சொல்லுக்கு ப்ரஹ்மம் ஆகிற உலகம் என்ற அர்த்தம் வராது; ஏனெனில், ப்ரஹ்மம் ஒன்றேயானபடியால், பன்மை பொருந்தாது; எனவே, ப்ரஹ்மத்தின் உலகங்கள் என்றே அர்த்தம் சொல்லவேண்டும்; அது தனிப்பட்ட உலகங்களை உடைய நான்முகனுக்கே பொருந்தும்; எல்லா இடத்திலும் இருக்கும் பரப்ரஹ்மத்துக்கு பொருந்தாது).*✍

மேலும், அர்சிராதி-வழியாக செல்பவன், படைக்கப்படுபவனான ஹிரண்யகர்ப்பனுக்கு அருகில் செல்வதை எண்ணுகிறான் - [2]**“ப்ரஜாபதியின் ஸபை ஆகிற இல்லத்தை அடைகிறேன்”** என்று. (ப்ரஜாபதி என்று நான்முகனைக் குறிக்கிறது)

◆ ◆ ◆ ◆

கேள்வி - அப்படியானால், [3]**“அந்த புருஷன் அமானவன்; அவன் இவர்களை ப்ரஹ்மத்திடம் அழைத்து செல்கிறான்”** எனும் இந்த குறிப்பு சரியாகாமல் போக நேரிடும்; ஹிரண்யகர்ப்பனிடம் அழைத்து செல்வதானால், ‘அவன் இவர்களை ப்ரஹ்மாவிடம் அழைத்து செல்கிறான்” என்றே குறிப்பிடப் பட்டிருக்க வேண்டும்.

✍*(நான்முகனைக் குறிப்பதானால், ‘ப்ரஹ்மாணம்’ என்று சொல்ல வேண்டும்; பர-ப்ரஹ்மத்தைக் குறிப்பதானால் ‘ப்ரஹ்ம’ என்று ஆகும்; இங்கே ‘ப்ரஹ்ம’ என்ற சொல், எப்படி நான்முகனைக் குறிக்கும்?)*✍

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

516.(ஸூ) ஸாமீப்யாத் து தத்வ்யபதேஶ: (4-3-8)

ப்ரஹ்மத்தின் அருகில் இருப்பதால் அந்த ப்ரஹ்மத்தின் சொல் ஆகிறது.

[4]**“யார் ப்ரஹ்மாவைப் படைத்தானோ”** என்று சொல்வதால், ப்ரஹ்ம-தேவனான ஹிரண்யகர்ப்பன் பர-ப்ரஹ்மத்திலிருந்து முதலில் உண்டானவன்; அதனால், பர-ப்ரஹ்மத்தை அடுத்திருப்பவன்; அதனால் ‘ப்ரஹ்ம’ என்ற சொல்லால் அவனைச் சொல்கிறது. கதி (செல்லுதல்) வர நேராது என்றும், விஶேஷித்து சொல்லுதல் என்றும் இது முதலிய முன் (ஸூத்ரங்களில்) சொன்ன காரணங்களைக் கொண்டு, இப்படி தீர்மானிக்கப் படுகிறது என்று பொருள்.

✍*(இங்கே ‘ப்ரஹ்ம’ என்ற சொல்லானது, ப்ரஹ்மத்திலிருந்து தோன்றிய நான்முகனைக் குறிக்கிறது; இது நேர்ப் பொருள் அல்ல; லக்ஷணையால் கிடைக்கும் பொருள் ஆகும்).*✍

◆ ◆ ◆ ◆

अथ स्यात् - अर्चिरादिना हिरण्यगर्भप्राप्तौ,

- **''एष देवपथो ब्रह्मपथः एतेन प्रतिपद्यमाना इमं मानवमावर्तं नावर्तन्ते''** (छा.4-15-6)[1],
- **''तयोर्ध्वमायन्नमृतत्वमेति''** (क.6-16)[2]

इत्यमृतत्वप्राप्त्यपुनरावृत्तिव्यपदेशो नोपपद्यते; हिरण्यगर्भस्य कार्यभूतस्य द्विपरार्धकालावसाने विनाशशास्त्रात्, **''आ ब्रह्मभ(भु)वनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन''** (गी.8-16)[3] इति वचनात् हिरण्यगर्भं प्राप्तस्य पुनरावृत्तेरवर्जनीयत्वात् इति, अत्राह -

५१७.कार्यात्यये तदध्यक्षेण सहातः परमभिधानात् (४-३-९)

कार्यस्य - ब्रह्मलोकस्यात्यये, **तदध्यक्षेण** - हिरण्यगर्भेणाऽऽधिकारिकेणावसिताधिकारेण विदुषा **सह** स्वयमपि तत्राधिगतविद्यः **अतः** - कार्याद्ब्रह्मलोकात् **परं** ब्रह्म प्राप्नोतीति, अर्चिरादिना गतस्यामृतत्वप्राप्त्यपुनरावृत्त्य**भिधानात्**, **''ते ब्रह्मलोके तु परान्तकाले परामृतात् परिमुच्यन्ति सर्वे''** (तै.2. 10-24)[4] इति वचनाच्चावगम्यते॥ ९ ॥

அத ஸ்யாத்-அர்சிராதிநா ஹிரண்யகர்பப்ராப்தௌ,

- *''ஏஷ தேவபதோ ப்ரஹ்மபத: ஏதேந ப்ரதிபத்யமாநா இமம் மாநவமாவர்தம் நாவர்தந்தே''*(சா.4-15-6)[1],
- *''தயோர்த்வமாயந்நம்ருதத்வமேதி''*(க.6-16)[2]

இதி அம்ருதத்வப்ராப்த்யபுநராவ்ருத்திவ்யபதேஶ: நோபபத்யதே, ஹிரண்யகர்பஸ்ய கார்யபூதஸ்ய த்விபரார்தகாலாவஸாநே விநாஶஶாஸ்த்ராத், *''ஆ ப்ரஹ்மபுவநால்லோகா: புநராவர்திநோऽர்ஜுந''*(கீ.8-16)[3] இதி வசநாத் ஹிரண்யகர்பம் ப்ராப்தஸ்ய புநராவ்ருத்தேரவர்ஜநீயத்வாத் - இதி-அத்ராஹ -

517. கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹாத: பரமபிதாநாத் (4-3-9)

கார்யஸ்ய - ப்ரஹ்மலோகஸ்ய அத்யயே, *ததத்யக்ஷேண* - ஹிரண்யகர்பேண ஆதிகாரிகேண அவஸிதாதிகாரேண விதுஷா *ஸஹ* ஸ்வயமபி தத்ராதிகதவித்ய: *அத:* - கார்யாத் ப்ரஹ்மலோகாத் பரம் ப்ரஹ்ம ப்ராப்நோதீதி, அர்சிராதிநா கதஸ்ய அம்ருதத்வப்ராப்த்யபுநராவ்ருத்த்யபிதாநாத்,[4] *''தே ப்ரஹ்மலோகே து பராந்தகாலே பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே''*(தை.2.10-24) இதி வசநாச்சாவகம்யதே॥ 9 ॥

* * *

கேள்வி -

- [1]**''இது தேவ-மார்க்கம்; ப்ரஹ்ம-மார்க்கம்; இந்த வழியால் அடைபவர்கள் மனிதனதான இந்த ஸம்ஸார-சுழற்சியில் திரும்பி வருவதில்லை'',**
- [2]**''இந்த வழியால் மேலே செல்பவன் அம்ருத-நிலையை அடைகிறான்''**

என்று மரணமற்ற அம்ருத-நிலையை அடைதலையும், திரும்பி வாராமையையும் சொல்கிறது; அர்சிராதி வழியால், ஹிரண்யகர்ப்பனை அடைவதானால், இப்படி சொன்னது பொருந்தாமல் போகும்; ஏனெனில், படைக்கப் படுபவனான ஹிரண்யகர்ப்பன் இரண்டு பரார்த்த-வருஷ-காலம் முடிவில் அழிவதாக ஶாஸ்த்ரம் உள்ளது; [3]**''அர்ஜுனா, ப்ரஹ்மாவின் உலகம் வரை உலகங்கள் மீண்டும் அழிந்து தோன்றுபவை''** என்று வசனம் உள்ளது; அதனால் ஹிரண்யகர்ப்பனை அடைபவர்க்கு திரும்பி ஸம்ஸாரம் வருதல் என்பது தவிர்க்க முடியாதது ஆகும்.

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

517.(ஸூ) கார்யாத்யயே ததத்யக்ஷேண ஸஹ அத: பரம் அபிதாநாத்(4-3-9)

ப்ரஹ்மலோகம் அழியும்போது அதன் தலைவனான நான்முகனுடன் கூட அங்கிருந்து பரப்ரஹ்மத்தை அடைகிறான்; அப்படி சொல்வதால்.

கார்யாத்யயே - படைக்கப்படும் ப்ரஹ்மலோகம் (நான்முகனின் உலகம்) அழியும்போது,

ததத்யக்ஷேண ஸஹ - அதன் தலைவனான ஹிரண்யகர்ப்பனுடன் கூட

அத: - படைக்கப்பட்ட இந்த ப்ரஹ்மலோகத்திலிருந்து

பரம் - பரப்ரஹ்மத்தை அடைகிறான்;

ஒரு அதிகாரத்தில் நியமிக்கப்பட்ட நான்முகன் அப்போது அதிகாரம் முடிந்தவனாக இருப்பான்; ப்ரஹ்ம-உபாஸநம் செய்தவனாக இருப்பான்; இவன்தானும் ப்ரஹ்ம-வித்யை ஆகிற உபாஸநத்தை முடித்தவனாக இருப்பான்; (அதனால், அவனுடன் கூட இந்த ஜ்ஞானியும் அங்கிருந்து பரப்ரஹ்மத்தை அடைகிறான்).

அபிதாநாத் - அர்சிராதி வழியால் செல்பவன் அம்ருத-தன்மையை அடைவதையும் திரும்பி வாராமையையும் சொல்வதாலும், மேலும், [4]**''ப்ரஹ்மலோகத்திலோ, அவர்கள் எல்லாரும், பர-காலத்தின் முடிவில், உயர்ந்த அம்ருதமான பர-ப்ரஹ்மத்தை அடைந்து மோக்ஷம் அடைகின்றனர்''** என்று வேதவசனம் சொல்வதாலும் இப்படி தெரிகிறது.

◆ ◆ ◆

५१८.स्मृतेश्च (४-३-१०)

स्मृतेश्चायमर्थोऽवगम्यते -

''**ब्रह्मणा सह ते सर्वे संप्राप्ते प्रतिसञ्चरे।**
परस्यान्ते कृतात्मानः प्रविशन्ति परं पदम्''(कू.पु.पू.12-269)[1] इति।

अतः कार्यमुपासीनमेवार्चिरादिको गणो नयतीति बादरेर्मतम्॥ १० ॥

* * *

अत्र जैमिनिः पक्षान्तरपरिग्रहेण प्रत्यवतिष्ठते -

५१९.परं जैमिनिर्मुख्यत्वात् (४-३-११)

परं ब्रह्म उपासीनानर्चिरादिर्नयतीति **जैमिनि**राचार्यो मन्यते, कुतः? **मुख्यत्वात्।** ''**तत्पुरुषोऽमानवः। स एनान् ब्रह्म गमयति**''(छा.4-15-5,6)[2] इति ब्रह्मशब्दस्य परस्मिन्नेव ब्रह्मणि मुख्यत्वात्। प्रमाणान्तरेण कार्यत्वनिश्चये सत्येव हि लाक्षणिकत्वं युक्तम्।

न च गमनानुपपत्तिः प्रमाणम्; परस्य ब्रह्मणः सर्वगतत्वेऽपि विदुषो विशिष्टदेशगतस्यैवाविद्यानिवृत्तिशास्त्रात्। यथा हि विद्योत्पत्तिर्वर्णाश्रमधर्मशौचाचारदेशकालाद्यपेक्षा,

---

518. ஸ்ம்ருதேஶ்ச (4-3-10)

ஸ்ம்ருதேஶ்ச அயமர்தோऽவகம்யதே -

"ப்ரஹ்மணா ஸஹ தே ஸர்வே ஸம்ப்ராப்தே ப்ரதிஸஞ்சரே।
பரஸ்யாந்தே க்ருதாத்மாந: ப்ரவிஶந்தி பரம் பதம்॥"(கூ.பு.பூ.2-269)[1] இதி।

அத: கார்யமுபாஸீநமேவார்சிராதிகோ கணோ நயதீதி பாதரேர்மதம்॥10॥

* * *

அத்ர ஜைமிநி: பக்ஷாந்தரபரிக்ரஹேண ப்ரத்யவதிஷ்டதே -

519. பரம் ஜைமிநிர்முக்யத்வாத் (4-3-11)

பரம் ப்ரஹ்ம உபாஸீநாந் அர்சிராதிர்நயதீதி ஜைமிநிராசார்யோ மந்யதே, குத:? *முக்யத்வாத்। "தத்புருஷோऽமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி"* (சா.4-15-5,6)[2] இதி ப்ரஹ்மஶப்தஸ்ய பரஸ்மிந்நேவ ப்ரஹ்மணி முக்யத்வாத்। ப்ரமாணாந்தரேண கார்யத்வநிஶ்சயே ஸத்யேவ ஹி லாக்ஷணிகத்வம் யுக்தம்।

ந ச கமநாநுபபத்தி: ப்ரமாணம்; பரஸ்ய ப்ரஹ்மண: ஸர்வகதத்வேऽபி விதுஷோ விஶிஷ்டதேஶகதஸ்யைவ அவித்யாநிவ்ருத்திஶாஸ்த்ராத்।

518.(ஸூ) ஸ்ம்ருதே: ச (4-3-10)

ஸ்ம்ருதியாலும்

[1]**''பர-காலத்தின் முடிவில் ப்ரளயம் நேரிடும்போது அவர்கள் எல்லாரும் செய்ய வேண்டிய உபாஸநத்தை செய்தவராய் நான்முக-ப்ரஹ்மனுடன் கூட பரம-பதத்தை அடைகின்றனர்''** என்கிற ஸ்ம்ருதி-வசனத்தாலும் இந்த விஷயம் தெரிய வருகிறது.

ஆகையினால் படைக்கப்படுபவனான நான்முகனை உபாஸநம் செய்பவர்களை மட்டுமே அர்ச்சிராதி-குழு அழைத்துச் செல்கிறது என்பது பாதரிமுனிவரின் கருத்து ஆகும்.

◆ ◆ ◆ ◆

இங்கு ஜைமினி ஆனவர் வேறொரு பக்ஷத்தை எடுத்துக் கொண்டு கேட்கிறார் -

519.(ஸூ) பரம் ஜைமினி: முக்யத்வாத் (4-3-11)

['ப்ரஹ்ம' என்ற சொல்லானது, பரப்ரஹ்மம் எனும் பொருளை] முக்கிய நேர்பொருளாக கொண்டுள்ளதால், பரப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவர்களை மட்டுமே [அர்ச்சிராதி குழு அழைத்துச் செல்வதாக] ஜைமிநி கருதுகிறார்.

பரம் - பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவர்களையே அர்சிராதியான ஆதி-வாஹிக-குழு அழைத்து செல்கிறது என

ஜைமினி: - ஆசார்யர் ஜைமினி கருதுகிறார்;

ஏன்?

முக்யத்வாத் - [2]**''அந்த மின்னல்-புருஷன் அமானவன்; அவன் இவர்களை ப்ரஹ்மத்திடம் அழைத்து செல்கிறான்''** என்று 'ப்ரஹ்ம' என்ற சொல்லானது, பர-ப்ரஹ்மத்தையே முக்கிய நேர்ப்பொருளாக கொண்டுள்ளதால்.

வேறு ப்ரமாணத்தின் மூலம் அது படைக்கப்படும் பொருளாக உறுதியாகத் தெரிந்தால்தானே (முக்ய-பொருளை விட்டு) லக்ஷணை-பொருளை உடையதாக சொல்வது சரியாகும்! (இங்கு வேறு ப்ரமாணம் எதுவும் இல்லை).

பர-ப்ரஹ்மத்தை அடைவதானால், கதி (செல்லுதல்) வர நேராது என்பது ப்ரமாணம் ஆகாது; ஏனெனில், பர-ப்ரஹ்மம் ஆனது எல்லாவிடத்திலும் இருப்பதானாலும், தனித்த ஒரு தேசத்தில் இருக்கும் ஜ்ஞானிக்குதான் அவித்யை ஒழிவதாக ஶாஸ்த்ரம் சொல்கிறது.

ப்ரஹ்ம-வித்யை(உபாஸநம்) உண்டாவதானது, வர்ணாஶ்ரமதர்மங்கள், ஶுத்தி, ஆசாரம், தேசம், காலம் முதலியவற்றின் தேவையைக் கொண்டே ஆகிறது;

‘‘**तमेतं वेदानुवचनेन**’’(बृ.6-4-22) इत्यादिशास्त्रादवगम्यते, तथा निश्शेषाविद्यानिवर्तनरूपविद्यानिष्पत्तिरपि विशिष्टदेशगतिसापेक्षेति गतिशास्त्रादवगम्यते। विदुष उत्क्रान्तिप्रतिषेधादि तु पूर्वमेव परिहृतम्।

यत्तु ‘‘**ब्रह्मलोकान्**’’(बृ.8-2-15) इति लोकशब्दबहुवचनाभ्यां विशेषणात् कार्यभूतहिरण्यगर्भप्रतीतिरिति, तदयुक्तम्; निषादस्थपतिन्यायेन ब्रह्मैव लोको ब्रह्मलोक इति कर्मधारयस्यैव युक्तत्वात्। अर्थस्य चैकत्वे निश्चिते बहुवचनस्य ‘‘**अदितिः पाशान्**’’ (पू.मी.सू.9-3-5) इतिवदुपपत्तेः।

परस्य ब्रह्मणः परिपूर्णस्य सर्वगतस्य सत्यसङ्कल्पस्य स्वेच्छापरिकल्पिताः स्वासाधारणा अप्राकृताश्च लोका नात्यन्ताय न सन्ति; श्रुतिस्मृतीतिहासपुराणप्रामाण्यात् ॥११॥

* * *

५२०.दर्शनाच्च (४-३-१२)

दर्शयति च श्रुतिः मूर्धन्यनाड्या निष्क्रम्य देवयानेन गतस्य परब्रह्मप्राप्तिम्, ‘‘**एष संप्रसादोऽस्माच्छरीरात् समुत्थाय परं ज्योतिरुपसंपद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते**’’(छा.8-3-4) इति॥ १२ ॥

யதா ஹி வித்யோத்பத்தி: வர்ணாஶ்ரமதர்மஶௌசாசாரதேஶகாலாத்யபேக்ஷா, *“தமேதம் வேதாநுவசநேந”*(6-4-22)[1] இத்யாதிஶாஸ்த்ராதவகம்யதே, ததா நிஶ்ஶேஷாவித்யாநிவர்தநரூபவித்யாநிஷ்பத்திரபி விஶிஷ்டதேஶகதிஸாபேக்ஷேதி கதிஶாஸ்த்ராதவகம்யதே। விதுஷ உத்க்ராந்திப்ரதிஷேதாதி து பூர்வமேவ பரிஹ்ருதம்।

யத்து *“ப்ரஹ்மலோகாந்”*(ப்ரு.8-2-15)[2] இதி லோகஶப்தபஹுவசநாப்யாம் விஶேஷணாத் கார்யபூதஹிரண்யகர்பப்ரதீதிரிதி - ததயுக்தம், நிஷாதஸ்தபதிந்யாயேந ப்ரஹ்மைவ லோகோ ப்ரஹ்மலோக இதி கர்மதாரயஸ்யைவ யுக்தத்வாத்। அர்தஸ்ய சைகத்வே நிஶ்சிதே பஹுவசநஸ்ய *“அதிதி: பாஶாந்”*(பூ.மீ.9-3-5)[3] இதிவதுபபத்தே:।

பரஸ்ய ப்ரஹ்மண: பரிபூர்ணஸ்ய ஸர்வகதஸ்ய ஸத்யஸங்கல்பஸ்ய ஸ்வேச்சாபரிகல்பிதா: ஸ்வாஸாதாரணா: அப்ராக்ருதாஶ்ச லோகா நாத்யந்தாய ந ஸந்தி; ஶ்ருதி-ஸ்ம்ருதீதிஹாஸபுராண-ப்ராமாண்யாத்।। 11 ।।

* * *

520. தர்ஶநாச்ச (4-3-12)

தர்ஶயதி ச ஶ்ருதி: மூர்தந்யநாட்யா நிஷ்க்ரம்ய தேவயாநேந கதஸ்ய பரப்ரஹ்மப்ராப்திம், *“ஏஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே”*(சா.8-1-4)[4] இதி।। 12 ।।

அது [1]**"அந்த பரமாத்மாவை வேதானுவசநம் கொண்டும் ..."** முதலிய ஶாஸ்த்ரத்தால் தெரிகிறது; அது எப்படியோ, அப்படியே, மீதியில்லாமல் அவித்யையை ஒழிப்பதாகிற ப்ரஹ்ம-வித்யையின் மலர்ச்சியும் (பலன் அளிக்கத்தக்க நிலையும்), தனித்த ஒரு தேசத்துக்கு செல்வதின் தேவையைக் கொண்டே ஆகும் என்பதும் அர்சிராதி-கதியைச் சொல்லும் ஶாஸ்த்ரத்தாலேயே தெரிகிறது.

ஜ்ஞானிக்கு உத்க்ராந்தியை (உயர செல்வதை) வேதம் மறுக்கிறது முதலிய வாதம் முன்பே (4-2-5. ஆஸ்ருத்த்யுபக்ரமாதிகரணத்தில்) பரிஹாரம் செய்யப்பட்டது.

வாதம் - [2]**'ப்ரஹ்ம-லோகான் (ப்ரஹ்ம-உலகங்களை)'** என்று 'லோக' என்ற சொல், பன்மை ஆகிய இரண்டைக் கொண்டும் பிரித்து சொல்வதால், படைக்கப்படும் ஹிரண்யகர்ப்பன்தான் இங்கே தெரிகிறான் என்று சொல்லியாயிற்று.

மறுப்பு - அப்படி சொன்னது எதுவோ அது சரியில்லை; நிஷாத-ஸ்தபதி-ந்யாய-முறையைக் கொண்டு ப்ரஹ்மம் ஆகிற லோகம் ப்ரஹ்மலோகம் என்று கர்மதாரய-ஸமாஸமே சரியாகும்; பொருள் ஒன்றுதான் என தீர்மானம் ஆனபின்பு, பன்மையானது, [3]**"அதிதி: பாஶான்"** என்ற இடத்தில் வருவதுபோல ஆகும்.

பரிபூர்ணனும் எல்லாவிடத்திலும் இருப்பவனும், ஸத்யஸங்கல்பனும் ஆன பர-ப்ரஹ்மத்துக்கு தனது ஸங்கல்பத்தால் உண்டாக்கப் பட்டவையும் தனக்கு மட்டுமே ஆனவையும் ஆன அப்ராக்ருதங்களான உலகங்கள் பல இல்லை என்பது அடியோடு ஆகாது; (உண்டு என்றே ஆகும்); ஏனெனில், வேதம், ஸ்ம்ருதி, இதிஹாஸம், புராணம் ஆகியவை ப்ரமாணங்கள் ஆவதால்.

✍(யாக-பசுவின் கயிற்றை அவிழ்க்கும் மந்த்ரம், "அதிதிதேவன் கயிறுகளை அவிழ்க்கட்டும்" என்று உள்ளது; ஒரே யாகப்பசு இருக்கும்போது கயிறுகளை எனும் பண்மை பொருந்தாது; அப்போது, பண்மையைக் கருத்தில் கொள்ளக் கூடாது என மீமாம்ஸாஶாஸ்த்ரம்; அதே முறையில் இங்கும் 'ப்ரஹ்ம-உலகங்களை' என்று சொல்லும்போது, பண்மையைக் கருத்தில் கொள்ளவேண்டாம் என்பது ஒரு பதில்; அல்லது ப்ரஹ்மத்துக்கே பல உலகங்கள் உண்டு என்பதால், பண்மை பொருந்தும் என்ற பதில் ஆகலாம்)✍

◆ ◆ ◆ ◆

520.(பூ) தர்ஶநாத் ச (4-3-12)

வேதத்தில் காண்பதாலும்

மண்டை-நாடி வழியாக வெளியேறி தேவயான-வழியாக செல்பவன் பர-ப்ரஹ்மத்தை அடைவதை வேதம் காண்பிக்கிறதும் கூட - [4]**"இந்த ஜீவன் இந்த ஶரீரத்திலிருந்து வெளியேறி, பர-ப்ரஹ்மத்தை அடைந்து தன் இயல்பான ஸ்வரூபத்துடன் வெளிப்படுகிறான்"** என்று.

◆ ◆ ◆ ◆

यदुक्तम् - **"प्रजापतेः सभां वेश्म प्रपद्ये"**(छा.8-14-1)[1] इत्यर्चिरादिना गतस्य कार्ये प्रत्यभिसन्धिर्दृश्यत इति, तत्रोत्तरम् -

५२१.न च कार्ये प्रत्यभिसन्धिः (४-३-१३)

न चायं प्रत्यभिसन्धिः कार्ये हिरण्यगर्भे, अपि तु परस्मिन्नेव ब्रह्मणि ; वाक्यशेषे, **"यशोऽहं भवामि ब्राह्मणानाम्"**(छा.8-14-1)[2] इति तस्याभिसन्धातुः सर्वाविद्याविमोकपूर्वकसर्वात्मभावाभिसन्धानात् ; **"अश्व इव रोमाणि विधूय पापं चन्द्र इव राहोर्मुखात् प्रमुच्य। धूत्वा शरीरमकृतं कृतात्मा ब्रह्मलोकमभिसम्भवामि"**(छा.8-13-1)[3] इति अभिसम्भाव्यस्य ब्रह्मलोकस्याकृतत्वश्रवणात् ; सर्वबन्धविनिर्मोकस्य च साक्षाच्छ्रवणात्। अतः, परमेव ब्रह्मोपासीनमर्चिरादिरातिवाहिको गणो नयतीति जैमिनेर्मतम्॥ १३ ॥

* * *

५२२.अप्रतीकालम्बनान्नयतीति बादरायण उभयथा च दोषात् तत्क्रतुश्च (४-३-१४)

யதுக்தம் - *"ப்ரஜாபதே: ஸபாம் வேஶ்ம ப்ரபத்யே"*(சா.8-14-1)[1] இத்யர்சிராதிநா கதஸ்ய கார்யே ப்ரத்யபிஸந்திர்த்ருஶ்யத இதி - தத்ரோத்தரம்-

521. ந ச கார்யே ப்ரத்யபிஸந்தி: (4-3-13)

ந ச அயம் *ப்ரத்யபிஸந்தி: கார்யே* ஹிரண்யகர்பே; அபி து பரஸ்மிந்நேவ ப்ரஹ்மணி; வாக்யஶேஷே, *"யஶோऽஹம் பவாமி ப்ராஹ்மணாநாம்"* (சா.8-14-1)[2] இதி தஸ்யாபிஸந்தாது: ஸர்வாவித்யாவிமோகபூர்வகஸர்வாத்மபாவாபிஸந்தாநாத், *"அஶ்வ இவ ரோமாணி விதூய பாபம் சந்த்ர இவ ராஹோர்முகாத் ப்ரமுச்ய। தூத்வா ஶரீரமக்ருதம் க்ருதாத்மா ப்ரஹ்மலோகமபிஸம்பவாமி"* (சா.8-13-1)[3] இதி அபிஸம்பாவ்யஸ்ய ப்ரஹ்மலோகஸ்யாக்ருதத்வஶ்ரவணாத், ஸர்வபந்தவிநிர்மோகஸ்ய ச ஸாக்ஷாச்ச்ரவணாத்। அத:, பரமேவ ப்ரஹ்மோபாஸீநம் அர்சிராதி: ஆதிவாஹிகோ கணோ நயதீதி ஜைமிநேர்மதம்।। 13 ।।

* * *

இதாநீம் பாதராயணஸ்து பகவாந் ஸ்வமதேந ஸித்தாந்தமாஹ -

522.அப்ரதீகாலம்பநாந்நயதீதி பாதராயண உபயதா ச தோஷாத் தத்க்ரதுஶ்ச (4-3-14)

வாதம் - அர்சிராதி-வழியாக செல்பவனுக்கு, [1]**"ப்ரஜாபதியினுடைய ஸபையாகிற இல்லத்தை அடைகிறேன்"** என்று படைக்கப்படும் நான்முகனை அடைவதாக ஒரு எண்ணம் காணப்படுகிறது. (அதனால் பர-ப்ரஹ்மத்தை அடைவதாக சொல்ல முடியாது)

மறுப்பு - இப்படி (முன்பே) சொன்னது எதுவோ, அதற்கு பதில் -

521.(பூ) ந ச கார்யே ப்ரத்யபிஸந்தி:(4-3-13)

['ப்ரஜாபதியை அடைவதாக வரும்] எண்ணமானது, படைக்கப்படுபவனைப் பற்றியதல்ல

(ப்ரஜாபதியை அடைவதாக வரும்) இந்த எண்ணமானது, படைக்கப்படும் ஹிரண்யகர்ப்பனைப் பற்றியது அல்ல; மாறாக பர-ப்ரஹ்மத்தைப் பற்றியது; ஏனெனில், அப்படி எண்ணும் அவனே, வாக்யத்தின் மிகுதியில், [2]**"நான் ப்ராஹ்மணர்களின் புகழாக இருக்கிறேன்"** என்று, எல்லா அவித்யையும் ஒழிந்ததை முன்னிட்டு எல்லாருக்கும் ஆத்மாவாக தான் ஆவதாக எண்ணுகிறான்.

✍*(நான் ப்ராஹ்மணர்களின் புகழாக இருக்கிறேன் என்பதற்கு எனக்குள் இருக்கும் பரமாத்மாவான நான் ப்ராஹ்மணர்களின் ஆத்மாவாக இருக்கிறேன் என்று பொருள்)*✍

மேலும், [3]**"குதிரை உரோமங்களை விடுவது போல் பாபத்தை விட்டு, சந்த்ரன் ராஹுவின் வாயிலிருந்து விடுபடுவது போல் விடுபட்டு, ஶரீரத்தை விட்டு படைக்கப்படாத எப்போதும் இருப்பதான ப்ரஹ்ம-லோகத்தை அடைகிறேன்"** என்று அடையப்பட வேண்டிய ப்ரஹ்ம-லோகமானது படைக்கப் படாமல் நித்யமானது என வேதம் சொல்கிறது; எல்லா பந்தத்திலிருந்தும் விடுபடுவதையும் நேராகவே சொல்கிறது; அதனாலும், (இது பர-ப்ரஹ்மம் பற்றிய எண்ணமாகும்).

ஆகையால், பர-ப்ரஹ்மத்தை மட்டும் உபாஸநம் செய்பவரையே அர்சிராதி ஆதிவாஹிக-குழு அழைத்து செல்லும் என்பது ஜைமினியின் கருத்து.

ஸித்தாந்தம்

இப்போது பகவான் பாதராயணர் தன் கருத்துப்படி ஸித்தாந்தம் சொல்கிறார் -

522.அப்ரதீகாலம்பநாந் நயதி இதி பாதராயண: உபயதா ச தோஷாத்; தத்க்ரது: ச (4-3-14)

இருவிதமாக ஆனாலும் தோஷம் வருவதால், ப்ரதீகத்தை உபாஸநம் செய்பவர்களை தவிர மற்றவர்களை [ஆதிவாஹிக-குழு] அழைத்துச் செல்கிறது என வ்யாஸர் கருதுகிறார்; அப்படி உபாஸநம் செய்பவன் அப்படியே அடைவான் [என்பதும் உள்ளது].

In Public Domain. Digitization by Sri Mahalakshmi Research Academy

अप्रतीकालम्बनान् प्रतीकालम्बनव्यतिरिक्तान् **नयत्यर्चिरादिरातिवाहिको** गण इति भगवान् **बादरायणो** मन्यते।

एतदुक्तं भवति - कार्यमुपासीनान्नयतीति नायं पक्षः सम्भवति। परमेवोपासीनानित्ययमपि नियमो नास्ति। न च प्रतीकालम्बनानपि नयति। अपितु ये परं ब्रह्मोपासते, ये चाऽऽत्मानं प्रकृतिवियुक्तं ब्रह्मात्मकमुपासते; तान् उभयविधान् नयति; ये तु ब्रह्मकार्यान्तर्भूतं नामादिकं वस्तु देवदत्तादिषु सिंहादिदृष्टिवत् ब्रह्मदृष्ट्या, केवलं वा तत्तद्वस्तूपासते, न तान्नयति। अतः परं ब्रह्मोपासीनान् आत्मानं च प्रकृतिवियुक्तं ब्रह्मात्मकमुपासीनान्नयति इति।

कुतः? **उभयधा च दोषात्।** कार्यमुपासीनान्नयतीति पक्षे, **"अस्माच्छरीरात्समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य"**(छा.8-3-4)[1] इत्यादिकाः श्रुतयः प्रकुप्येयुः। परमेवोपासीनानिति नियमे, **"तद्य इत्थं विदुर्ये चेमेऽरण्ये श्रद्धा तप इत्युपासते, तेऽर्चिषमभिसम्भवन्ति"** (छा.5-10-1)[2] इति पञ्चाग्निविदोऽर्चिरादिर्गणो नयतीति श्रुतिः प्रकुप्येत्। अतः उभयस्मिन्नपि पक्षे दोषः स्यात्। तस्मादुभयविधान्नयतीति।

அப்ரதீகாலம்பநாந் - ப்ரதீகாலம்பநவ்யதிரிக்தாந் *நயதி* அர்சிராதிராதிவாஹிகோ **கண** இதி பகவாந் **பாத***ராயணோ* மந்யதே।

ஏததுக்தம் பவதி - கார்யமுபாஸீநாந் நயதீதி நாயம் பக்ஷ: ஸம்பவதி। பரமேவோபாஸீநாந் இத்யயமபி நியமோ நாஸ்தி। ந ச ப்ரதீகாலம்பநாநபி நயதி। அபிது யே பரம் ப்ரஹ்மோபாஸதே, யே சாऽऽத்மாநம் ப்ரக்ருதிவியுக்தம் ப்ரஹ்மாத்மகமுபாஸதே; தாந் உபயவிதாந் நயதி; யே து ப்ரஹ்மகார்யாந்தர்பூதம் நாமாதிகம் வஸ்து தேவதத்தாதிஷு ஸிம்ஹாதித்ருஷ்டிவத் ப்ரஹ்மத்ருஷ்ட்யா, கேவலம் வா தத்தத்வஸ்தூபாஸதே, ந தாந்நயதி। அத: பரம் ப்ரஹ்மோபாஸீநாந் ஆத்மாநம் ச ப்ரக்ருதிவியுக்தம் ப்ரஹ்மாத்மகமுபாஸீநாந்நயதி - இதி।

குத:? *உபயதா ச* **தோஷாத்।** கார்யமுபாஸீநாந்நயதீதி பக்ஷே, *"அஸ்மாச்சரீராத்ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய"* (சா.8-3-4)[1] இத்யாதிகா: ஶ்ருதய: ப்ரகுப்யேயு:। பரமேவோபாஸீநாநிதி நியமே, *"தத்ய இத்தம் விதுர்யே சேமேऽரண்யே ஶ்ரத்தா தப இத்யுபாஸதே, தேऽர்சிஷமபிஸம்பவந்தி"*(சா.5-10-1)[2] இதி பஞ்சாக்நிவித: அர்சிராதிர்கணோ நயதீதி ஶ்ருதி: ப்ரகுப்யேத்। அத: உபயஸ்மிந்நபி பக்ஷே தோஷ: ஸ்யாத்। தஸ்மாதுபயவிதாந்நயதீதி।

அப்ரதீகாலம்பநான் - ப்ரதீகத்தைப் பற்றி உபாஸநம் செய்பவர்களை தவிர மற்றவர்களை

நயதி - அர்சிராதியான ஆதிவாஹிக-குழு அழைத்துச் செல்கிறது

இதி பாதராயண: - என்று பகவான் வ்யாஸர் கருதுகிறார்.

இது சொன்னதாக ஆகிறது - படைக்கப்படும் நான்முக-ப்ரஹ்மனை உபாஸநம் செய்பவர்களை அழைத்து செல்கிறார் என்கிற கருத்து சரியாகாது; பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவர்களை மட்டும் அழைத்து செல்கிறார் என்னும் இந்த நியமமும் கிடையாது; மேலும் ப்ரதீக-உபாஸநம் செய்பவர்களையும் அழைத்துப் போவதில்லை. (விவரமாக முன் குறிப்பில் காணலாம்)

மாறாக, யார் பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்கின்றனரோ, மேலும் யார் ப்ரக்ருதி-தொடர்பு அற்ற ஜீவாத்மாவை ப்ரஹ்மாத்மகமாக (ஜீவன், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டது என்பதாக) உபாஸநம் செய்கின்றனரோ, இரண்டு விதமான அவர்களையும் அர்சிராதி-குழு அழைத்துச் செல்கிறது.

தேவதத்தன் முதலியவரை ஸிம்ஹம் முதலியதாகக் காண்பது போல், ப்ரஹ்மத்தால் படைக்கப்படும் பொருள்களில் உள்ளடங்கிய நாமம் முதலிய பொருளை ‘ப்ரஹ்மம்’ என்ற எண்ணத்துடன் யார் உபாஸநம் செய்கின்றனரோ, அல்லது வெறும் பொருளாக அந்தந்த பொருளை உபாஸநம் செய்கின்றனரோ அவர்களை அழைத்து செல்வதில்லை.

ஆகையால், பரப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவரையும், ப்ரக்ருதி-தொடர்பு அற்ற ஜீவாத்மாவை ப்ரஹ்மாத்மகமாக (ஜீவன், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டவன் என்பதாக) உபாஸநம் செய்பவரையும் அர்சிராதி-குழு அழைத்துச் செல்கிறது என்று.

ஏன்?

உபயதா ச தோஷாத் - இருவிதமாக ஆனாலும் தோஷம் வருவதால்

படைக்கப்படும் நான்முக-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவரை அழைத்து செல்கிறார் எனும் கருத்தில், [1]**‘‘இந்த ஶரீரத்திலிருந்து வெளியேறி, பர-ப்ரஹ்மத்தை அடைந்து தன் இயல்பான ஸ்வரூபத்துடன் வெளிப்படுகிறான்’’** முதலிய வேத-வாக்யங்கள் கோபித்துக் கொள்ளும். (அவை முரண்படும்).

பர-ப்ரஹ்மத்தை மட்டும் உபாஸநம் செய்பவரை மட்டும் அழைத்துப் போகிறார் என்கிற நியமம் இருக்குமானால், [2]**‘‘யார் இப்படி பஞ்சாக்நிவித்யை முறையில் ஜீவனை உபாஸநம் செய்கின்றனரோ, மேலும் யார் காட்டில் ஶ்ரத்தையை முன்னிட்டு, தபஸ் ஆகிற ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்கின்றனரோ, அவர்கள் அர்ச்சிஷ்-ஷையே அடைகின்றனர்’’** என்று பஞ்சாக்னியை உபாஸநம் செய்பவரையும் அர்சிராதி-குழு அழைத்துச் செல்கிறது எனும் வேத-வசனம் கோபித்துக் கொள்ளும் (முரண்படும்). அதனால், (பூர்வபக்ஷத்தில் சொன்ன) இரண்டு கருத்திலும் தோஷம் வரும்.

तदेतदाह - **तत्क्रतुश्च** इति। **तत्क्रतुः** - तथोपासीनः तथैव प्राप्नोतीत्यर्थः, **''यथाक्रतुरस्मिन् लोके पुरुषो भवति तथेतः प्रेत्य भवति''**(छा.3-14-1)[1], **''तं यथायथोपासते''**(मुद्ग.3)[2] इति न्यायात्।

पञ्चाग्निविदोऽप्यर्चिरादिना गतिश्रवणात्, अर्चिरादिना गतस्य ब्रह्मप्राप्त्यपुनरावृत्तिश्रवणाच्च अत एव तत्क्रतुन्यायात् प्रकृतिविनिर्मुक्तब्रह्मात्मकात्वानुसन्धानं सिद्धम्। नामादिप्राणपर्यन्तप्रतीकालम्बनानां तु उभयविधश्रुतिसिद्धोपासनाभावादचिन्मिश्रोपासने तत्क्रतुन्यायाच्चार्चिरादिना गतिर्ब्रह्मप्राप्तिश्च न विद्यते॥ १४ ॥

* * *

तमिमं विशेषं श्रुतिरेव दर्शयतीत्याह-

५२३.विशेषश्च दर्शयति (४-३-१५)

''यावन्नाम्नो गतं तत्रास्य यथाकामचारो भवति''(छा.7-15-5)[3] इत्यादिका श्रुतिः नामादिप्राणपर्यन्तप्रतीकमुपासीनानां गत्यनपेक्षं परिमितफलविशेषं च दर्शयति।

ததேததாஹ - *தத்க்ரதுஶ்ச*-இதி। *தத்க்ரது:* - ததோபாஸீந: ததைவ ப்ராப்நோதீத்யர்த:; *"யதாக்ரதுரஸ்மிந் லோகே புருஷோ பவதி ததேத: ப்ரேத்ய பவதி"*(சா.3-14-1)[1], *"தம் யதா யதோபாஸதே"* (முத்க.3)[2] இதி ந்யாயாத்।

பஞ்சாக்நிவிதோऽபி அர்சிராதிநா கதிஶ்ரவணாத், அர்சிராதிநா கதஸ்ய ப்ரஹ்மப்ராப்த்யபுநராவ்ருத்திஶ்ரவணாச்ச அத ஏவ தத்க்ரதுந்யாயாத் ப்ரக்ருதிவிநிர்முக்தப்ரஹ்மாத்மகாத்மாநுஸந்தாநம் ஸித்தம்। நாமாதிப்ராணபர்யந்தப்ரதீகாலம்பநாநாம் து உபயவிதஶ்ருதிஸித்தோபாஸநாபாவாத் அசிந்மிஶ்ரோபாஸநே தத்க்ரதுந்யாயாச்ச அர்சிராதிநா கதிர்ப்ரஹ்மப்ராப்திஶ்ச ந வித்யதே।। 14 ।।

* * *

தமிமம் விஶேஷம் ஶ்ருதிரேவ தர்ஶயதீத்யாஹ-

522.விஶேஷஞ்ச தர்ஶயதி (4-3-15)

"யாவந்நாம்நோ கதம் தத்ராஸ்ய யதாகாமசாரோ பவதி"(சா.7-15-5)[3] இத்யாதிகா ஶ்ருதி: நாமாதிப்ராணபர்யந்தப்ரதீகமுபாஸீநாநாம் கத்யநபேக்ஷம் பரிமிதபலவிஶேஷம் ச தர்ஶயதி।

அதனால், முன் சொன்ன இருவிதமானவரையே அழைத்துச் செல்கிறார். அதையே சொல்கிறார் - **''தத்க்ரது: ச''** என்று.

தத்க்ரது: - அப்படி உபாஸநம் செய்பவன் அப்படியே அடைவான் என்று பொருள். [1]**''மனிதன் இவ்வுலகில் எப்படி உபாஸநம் செய்பவனாக ஆகிறானோ, இங்கிருந்து போய் அப்படியே ஆகிறான்''**, [2]**''அவனை எப்படி எப்படி உபாஸநம் செய்கின்றனரோ, (அப்படியே ஆவர்)''** என்கிற முறை உள்ளதால், இது ஆகும்.

பஞ்சாக்னி-உபாஸநம் செய்பவன் ப்ரக்ருதி-தொடர்பு அற்ற ஜீவனை ப்ரஹ்மாத்மகமாக எண்ணுபவன் (ஜீவன், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டவன் என்பதாக எண்ணுபவன்) என ஏற்படுகிறது; ஏனெனில், அவன் அர்சிராதி-வழியாக செல்வது வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது; மேலும், அர்சிராதி-வழியாக செல்பவன் ப்ரஹ்மத்தை அடைவதாகவும் அவன் திரும்பி ஸம்ஸாரத்தில் வருவதில்லை எனவும் வேதத்தில் சொல்கிறது; அதனால், அந்த தத்க்ரது-ந்யாயமுறைப்படி இது ஏற்படுகிறது.

நாமம் முதல் ப்ராணன் வரையான ப்ரதீகங்களைப் பற்றி உபாஸநம் செய்பவர்களுக்கு, வேதத்தில் சொன்னபடியான இருவிதமான உபாஸநம் இல்லை; அதனாலும், மேலும் அசேதனத்துடன் கூடிய ஜீவனை உபாஸநம் செய்தால், தத்க்ரது-ந்யாய-முறை வருவதாகும் என்பதாலும், அவர்களுக்கு அர்சிராதி-வழியாக செல்வதும், ப்ரஹ்மத்தை அடைதலும் கிடையாது.

◆ ◆ ◆ ◆

இந்த வேறுபாட்டை வேதமே காண்பிக்கிறது என்று சொல்கிறார் -

523.விஶேஷம் ச தர்ஶயதி(4-3-15)

தனியொரு பலனை வேதம் சொல்கிறது என்பதும் கூட

[3]**''நாமத்தை உபாஸநம் செய்பவன், அந்த நாமம் (பெயர்) எந்த இடம் வரை செல்கிறதோ, அதுவரை விருப்பப்படி சஞ்சரிப்பவன் ஆவான்''** முதலிய வேதவாக்யமானது, நாமம் முதல் ப்ராணன் வரையிலான ப்ரதீகத்தை உபாஸநம் செய்பவருக்கு அர்சிராதி-கதி தேவையில்லாமல் குறைந்த அளவான ஒரு பலன் வருவதையும் சொல்கிறது.

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

तस्मादचिन्मिश्रं केवलं वा चिद्वस्तु ब्रह्मदृष्ट्या तद्वियोगेन च य उपासते, न तान् नयति; अपितु परं ब्रह्मोपासीनान् आत्मानं च प्रकृतिवियुक्तं ब्रह्मात्मकमुपासीनान् आतिवाहिको गणो नयतीति सिद्धम्॥१५॥

इति कार्याधिकरणम् ॥ ५ ॥

इति श्रीभगवद्रामानुजविरचिते शारीरकमीमांसाभाष्ये चतुर्थस्याध्यायस्य
तृतीयः पादः॥ ३ ॥

தஸ்மாத் அசிந்மிஶ்ரம் கேவலம் வா சித்வஸ்து ப்ரஹ்மத்ருஷ்ட்யா தத்வியோகேந ச ய உபாஸதே, ந தாந் நயதி; அபிது பரம் ப்ரஹ்மோபாஸீநாந் ஆத்மாநம் ச ப்ரக்ருதிவியுக்தம் ப்ரஹ்மாத்மகமுபாஸீநாந் ஆதிவாஹிகோ கணோ நயதீதி ஸித்தம்।।

இதி கார்யாதிகரணம் ।। 5 ।।

இதி ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஶாரீரகமீமாம்ஸாபாஷ்யே
சதுர்தஸ்யாத்யாயஸ்ய த்ருதீய: பாத:।। 3 ।।

* * *

ப்ரயோஜனம் (அதிகரண-பலன்)

ஆகவே, அசேதனத்துடன் கூடியதாகவோ அல்லது தனிப்பட்டதாகவோ ஆகும் சேதனனான ஜீவனை, ப்ரஹ்மம் எனும் எண்ணத்தாலோ, அல்லது அந்த எண்ணம் இல்லாமலோ யார் உபாஸநம் செய்கின்றனரோ, அவர்களை அர்சிராதி ஆதிவாஹிக-குழு அழைத்து செல்வதில்லை; மாறாக, பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவர்களையும், ப்ரக்ருதி-தொடர்பு அற்ற ஜீவனை ப்ரஹ்மாத்மகமாக (ஜீவன், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டவன் என்பதாக) உபாஸநம் செய்பவர்களையும் ஆதிவாஹிக-குழு அழைத்து செல்கிறது என ஏற்படுகிறது.

* * *

கார்யாதிகரணம் முற்றிற்று

இப்படியாக ஸ்ரீபகவத்-ராமானுஜர் அருளிய ஶாரீரக-மீமாம்ஸா-பாஷ்யத்தில்
நான்காவது அத்யாயத்தின் மூன்றாவது பாதம் ஆயிற்று.

* * *

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீபகவத் ராமானுஜர் அருளிய

ஸ்ரீபாஷ்யம்

தமிழாக்கம்

(4-4)

நான்காவது அத்யாயம் - பலாத்யாயம்

நான்காம் பாதம் - முக்தி பாதம்

அதிகரணங்கள் - 6 (151 - 156)

ஸூத்ரங்கள் - 22 (524 - 545)

மோக்ஷம் பெறுபவன் அர்ச்சிராதி மார்க்கத்தில் சென்று பரப்ரஹ்மத்தை அடைகிறான் என்று சொல்லியாயிற்று. இனி அவனது முக்தி-நிலை எப்படிப்பட்டது என்பது பற்றிய விசாரம் இந்த பாதத்தில் உள்ளது. எனவே, இதற்கு முக்திபாதம் என்று பெயர்.

மோக்ஷநிலையில் முக்த-ஐச்வர்யம் பெறுவதாக ஸ்ரீபாஷ்யத்தில் அழகாக அருளுகிறார். ஐச்வர்யம் என்றால் ஈஶ்வர-தன்மை; ஈஶ்வரனுடைய தன்மைகள் -அபஹதபாப்மத்வம் (புண்யபாபகர்மங்களுக்கு கட்டுப்படாமை), ஸர்வஜ்ஞன் ஆதல், அளவற்ற ஆனந்தம், திவ்யதிருமேனி உடைமை, ஸத்யஸங்கல்ப-தன்மை முதலியன. ஈஶ்வரனுக்கு உள்ள இந்த தன்மைகள் மோக்ஷநிலையில் ஜீவனுக்கும் வரும்; இவை எந்த முறையில் எந்த அளவில் ஜீவனுக்கு வருகின்றன என்கிற விசாரம் இங்கே உள்ளது.

ஆனால், ஈஶ்வர-தன்மைகள் மொத்தமாக வந்துவிடாது; ஜகத்-வ்யாபாரம் (உலகச் செயல்) முதலியது வராது; அதாவது உலகைப் படைத்தல், காத்தல், அந்தர்யாமியாக இருத்தல், மோக்ஷம் அளித்தல் முதலியவை பெருமானுக்கு மட்டுமே; முக்தி நிலையிலும் ஜீவனுக்கு வாராது.

151.ஸம்பத்யாவிர்பாவாதிகரணம்(4-4-1)

முன் குறிப்பு

ஸம்பத்ய - (ப்ரஹ்மத்தை) அடைந்து; ஆவிர்பாவ: - (ஸ்வரூபத்தின்) வெளிப்பாடு ஆகும் என்று அர்த்தம்.

மோக்ஷம் பெறுபவன் பர-ப்ரஹ்மத்தை அடைந்தபின் எப்படி இருக்கிறான்? வேதம் சொல்கிறது - 'ஸ்வேந ரூபேண அபிநிஷ்பத்யதே'' என்று. ''தன் உருவுடன் கூடியவனாக ஆகிறான்'' என்று அர்த்தம்; இந்த வாக்யத்தில் விசாரம்.

பூர்வபக்ஷம் - 'ஆகிறான்' என்று சொல்லியிருக்கிறது; அதாவது புதியதாக ஒரு உருவத்தைப் பெறுகிறான்; அப்படி சொன்னால்தான் 'ஆகிறான்' என்று வேதம் சொன்னது பொருந்தும்; (உ.ம்) 'அவன் நல்லவனாக ஆகிறான்' என்று சொன்னால், அதுவரை நல்லவனாக இல்லை; அப்போதுதான் நல்லவனாக ஆகிறான் என்று அர்த்தம்; ஏற்கனவே நல்லவனாக இருப்பவனை சொல்வதானால், 'அவன் நல்லவனாக இருக்கிறான்' என்று சொல்வோம்; 'நல்லவனாக ஆகிறான்' என்று சொல்ல மாட்டோம். இங்கோ, மோக்ஷம் பெற்றவன் 'தன் உருவுடன் கூடியவனாக ஆகிறான்' என்று சொல்கிறது; அதனால், முன்னர் இல்லாத ஒரு புதிய உருவைப் பெற்று அதனுடன் கூடியவனாக ஆகிறான் என்று கருத்து.

ஸித்தாந்தம் - புது உருவத்தைப் பெறுவதில்லை; 'அப்படியானால், 'உருவுடன் கூடியவனாக ஆகிறான்' என்று சொன்னாலே போதுமே! 'தன் உருவுடன் கூடியவனாக ஆகிறான்' என்று சொன்னது எதற்கு? எனவே, ஸ்வேந ரூபேண - ஸ்வரூபத்துடன் என்று அர்த்தம்; ஏற்கனவே இருக்கும் ஸ்வரூபத்துடன் வெளிப்படுகிறான் என்று அர்த்தம்.

புண்ய-பாப-கர்மத்துக்கு வசப்படாமல், மரணம் முதலியது இல்லாமல் இருப்பது ஜீவனது ஸ்வரூபம் ஆகும்; அந்த ஜீவாத்ம-ஸ்வரூபம் எப்போதுமே இருப்பது; ஆனால், அது ஸம்ஸார-நிலையில் மறைக்கப்பட்டு உள்ளது; மோக்ஷம் பெற்றவுடன் அந்த மறைவு நீங்கி அந்த ஸ்வரூபத்துடன் கூடியவனாக ஜீவன் வெளிப்படுகிறான் என்று கருத்து.

'அபிநிஷ்பத்யதே - ஆகிறான்' என்று சொன்னால், வெளிப்படுகிறான் என்ற கருத்தும் ஆகலாம்; (உ.ம்) 'நன்கு ஆராய்ந்ததில் இந்த சொல்லுக்கு இந்த பொருள்தான் ஆகிறது' என்று சொல்கிறோம்; அந்த பொருள் புதியதாக உண்டாயிற்று என்று அர்த்தம் இல்லை; அந்த பொருள்தான் தெரிகிறது என்று அர்த்தம்.

१५१. सम्पद्याविर्भावाधिकरणम् (४-४-१)

५२४.सम्पद्याविर्भावः स्वेनशब्दात् (४-४-१)

परं ब्रह्मोपासीनानाम्, आत्मानं च प्रकृतिवियुक्तं ब्रह्मात्मकमुपासीनानामर्चिरादिना मार्गेणापुनरावृत्तिलक्षणा गतिरुक्ता; इदानीं मुक्तानामैश्वर्यप्रकारं चिन्तयितुमारभते।

इदमाम्नायते - ''**एवमेवैष सम्प्रसादोऽस्माच्छरीरात् समुत्थाय परं ज्योतिरुपसम्पद्य स्वेन रूपेणाभिनिष्पद्यते**'' (छा.8-12-2)[1] इति। किमस्माच्छरीरात् समुत्थाय परज्योतिरुपसम्पन्नस्य देवादिरूपवत् साध्येन रूपेण सम्बन्धोऽनेन वाक्येन प्रतिपाद्यते, उत स्वाभाविकस्य स्वरूपस्याऽऽविर्भाव इति संशये -

साध्येन रूपेण सम्बन्ध इति युक्तम्। अन्यथा ह्यपुरुषार्थावबोधित्वं मोक्षशास्त्रस्य स्यात्; स्वरूपस्य स्वतोऽपुरुषार्थत्वदर्शनात्। न हि सुषुप्तौ देहेन्द्रियव्यापारेषूपरतेषु केवलस्याऽऽत्मस्वरूपस्य पुरुषार्थसम्बन्धो दृश्यते।

151.ஸம்பத்யாவிர்பாவாதிகரணம் (4-4-1)

524.ஸம்பத்யாவிர்பாவ: ஸ்வேநஶப்தாத் (4-4-1)

பரம் ப்ரஹ்மோபாஸீநாநாம், ஆத்மாநம் ச ப்ரக்ருதிவியுக்தம் ப்ரஹ்மாத்மகமுபாஸீநாநாம் அர்சிராதிநா மார்கேண அபுநராவ்ருத்திலக்ஷணா கதிருக்தா; இதாநீம் முக்தாநாமைஶ்வர்யப்ரகாரம் சிந்தயிதுமாரபதே।

இதமாம்நாயதே *"ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதி ருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே"*(சா.8-12-2)[1] இதி। கிம் அஸ்மாச்சரீராத் ஸமுத்தாய பரஜ்யோதிருபஸம்பந்நஸ்ய தேவாதிரூபவத் ஸாத்யேந ரூபேண ஸம்பந்த: அநேந வாக்யேந ப்ரதிபாத்யதே, உத ஸ்வாபாவிகஸ்ய ஸ்வரூபஸ்யாऽऽவிர்பாவ இதி ஸம்ஶயே-

ஸாத்யேந ரூபேண ஸம்பந்த இதி யுக்தம்। அந்யதா ஹி அபுருஷார்தாவபோதித்வம் மோக்ஷஶாஸ்த்ரஸ்ய ஸ்யாத்; ஸ்வரூபஸ்ய ஸ்வதோऽபுருஷார்தத்வதர்ஶநாத்। ந ஹி ஸுஷுப்தௌ தேஹேந்த்ரியவ்யாபாரேஷூபரதேஷு கேவலஸ்யாத்மஸ்வரூபஸ்ய புருஷார்தஸம்பந்தோ த்ருஶ்யதே।

151.ஸம்பத்யாவிர்பாவாதிகரணம்(4-4-1)

524. ஸம்பத்ய ஆவிர்பாவ: ஸ்வேந ஶப்தாத் (4-4-1)

[ப்ரஹ்மத்தை] அடைந்தபின் [ஸ்வரூபத்தின்] வெளிப்பாடு ஆகும்; 'ஸ்வேன' என்று சொல்வதால்.

ஸங்கதி (விஷய-தொடர்பு)

பர-ப்ரஹ்மத்தை உபாஸநம் செய்பவர்களுக்கும், ப்ரக்ருதி-தொடர்பு அற்ற ஜீவாத்மாவை ப்ரஹ்மாத்மகமாக (ஜீவன், ப்ரஹ்மத்தை ஆத்மாவாகக் கொண்டது என்பதாக) உபாஸநம் செய்பவர்களுக்கும் அர்சிராதி-மார்கத்தால், திரும்பி வாராமை ஆகிற கதி (செல்லுதல்) சொல்லப்பட்டது; இப்போது, மோக்ஷம் பெற்றவர்களின் ஈஶ்வர-தன்மை ஆகும் முறையை விசாரம் செய்ய ஆரம்பிக்கிறார்.

விஷயவாக்யம்

இது ஓதப்படுகிறது - [1]**''இந்த ஜீவன், இந்த ஶரீரத்திலிருந்து மேல் கிளம்பி, பர-ப்ரஹ்மத்தை அடைந்து தன் உருவுடன் கூடியவனாக ஆகிறான்''** என்று.

ஸம்சயம் (ஸந்தேஹம்)

இந்த ஶரீரத்திலிருந்து மேல் கிளம்பி பர-ப்ரஹ்மத்தை அடைந்தவனுக்கு, தேவர்கள் முதலிய உருவைப் போல், உண்டு பண்ணப்பட வேண்டிய ஒரு (புதிய) உருவுடன் தொடர்பு இந்த வாக்யத்தால் சொல்லப்படுகிறதா? அல்லது (முன்னரே மறைந்திருக்கும்) இயல்பான ஸ்வரூபம் வெளிப்படுதல் சொல்லப்படுகிறதா? - என்று ஸந்தேஹம்.

✍(இந்த ஶரீரத்தை விட்டு ஸ்வர்க்கத்துக்கு போகும் ஜீவன், அங்கே, புதியதாக ஒரு தேவ-ஶரீரத்தை எடுத்துக் கொள்கிறான்; அதுபோல, மோக்ஷம் அடைபவனும் புதியதாக ஒரு உருவத்தை எடுத்துக் கொள்கிறானா? அல்லது ஏற்கனவே அவனுக்கு இருக்கும் ஆத்ம-ஸ்வரூபமானது ஸம்ஸார-நிலையில் முன்பு மறைந்திருந்து, பின்னர் மோக்ஷ-நிலையில் வெளிப்படுகிறதா? எதை இந்த வேத வாக்யம் சொல்கிறது?)✍

பூர்வபக்ஷம்

உண்டு பண்ணப்பட வேண்டிய ஒரு (புதிய) உருவத்துடன் தொடர்பு இங்கே சொல்லப்படுகிறது என்பதே பொருந்தும்; அப்படி இல்லாமல், ஆத்ம-ஸ்வரூபம் வெளிப்படுவதை சொல்வதானால், மோக்ஷ-ஶாஸ்த்ரமானது மனிதன் விரும்பாத பலனை போதிப்பதாக ஆகிவிடும்; ஏனெனில், ஆத்ம-ஸ்வரூபமானது இயல்பாக மனிதன் விரும்பாததாகவே காணப்படுகிறது; உறக்கத்தில் ஶரீரம் மற்றும் இந்த்ரியங்களுடைய செயல்கள் ஓய்ந்திருக்கும்போது, வெறும் ஆத்ம-ஸ்வரூபத்துக்கு மனிதன் விரும்பும் புருஷார்த்த-தொடர்பு எதுவும் காணப்படவில்லையே!

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

न च दुःखनिवृत्तिमात्रं परं ज्योतिरुपसम्पन्नस्य पुरुषार्थः; येन स्वरूपाविर्भाव एव मोक्षः इत्युच्येत, ;

- **''स एको ब्रह्मण आनन्दः। श्रोत्रियस्य चाकामहतस्य''**(तै.1. आन.8)[1],
- **''रसं ह्येवायं लब्ध्वाऽऽनन्दी भवति''**(तै.1.आन.7)[2]

इत्यादिभ्यो मुक्तस्य सुखानन्त्यश्रवणात्।

न चापरिच्छिन्नानन्दरूपचैतन्यमेवास्य स्वरूपम्, तच्च संसारदशायामविद्यया तिरोहितं परं ज्योतिरुपसम्पन्नस्याविर्भवतीति शक्यं वक्तुम्, ज्ञानस्वरूपस्य तिरोधानासम्भवात्। प्रकाशपर्यायस्य ज्ञानस्य तिरोधानं तद्विनाश एवेति हि पूर्वमेवोक्तम्।

न च प्रकाशमात्रस्याऽनन्दता सम्भवति; सुखस्वरूपता ह्यानन्दस्वरूपता। सुखस्वरूपत्वं चात्मनोऽनुकूलत्वम्; प्रकाशमात्रात्मवादिनः कस्य प्रकाशोऽनुकूलवेदनीयो भवेदिति प्रकाशमात्रात्मवादिनः कथञ्चिदप्यानन्दस्वरूपता दुरुपपादा।

स्वरूपापत्तिमात्रे च साध्ये स्वरूपस्य नित्यनिष्पन्नत्वात् उपसम्पन्नस्य, **''स्वेन रूपेणाभिनिष्पद्यते''**(छा.8-12-2)[3] इति वचनमनर्थकं स्यात्। अतोऽपूर्वेण साध्येन

ந ச துஃகநிவ்ருத்திமாத்ரம் பரம் ஜ்யோதிருபஸம்பந்நஸ்ய புருஷார்த:; யேந ஸ்வரூபாவிர்பாவ ஏவ மோக்ஷ: இத்யுச்யேத;

- *"ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:। ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய"*(தை.1.ஆந.8)[1],
- *"ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாऽऽநந்தீ பவதி"*(தை.1.ஆந.7)[2]

இத்யாதிப்ய: முக்தஸ்ய ஸுகாநந்த்யஶ்ரவணாத்।

ந ச அபரிச்சிந்நாநந்தரூபசைதந்யமேவ அஸ்ய ஸ்வரூபம், தச்ச ஸம்ஸாரதஶாயாம் அவித்யயா திரோஹிதம் பரம் ஜ்யோதிருபஸம்பந்நஸ்ய ஆவிர்பவதீதி ஶக்யம் வக்தும், ஜ்ஞாநஸ்வரூபஸ்ய திரோதாநாஸம்பவாத்। ப்ரகாஶபர்யாயஸ்ய ஜ்ஞாநஸ்ய திரோதாநம் தத்விநாஶ ஏவேதி ஹி பூர்வமேவோக்தம்।

ந ச ப்ரகாஶமாத்ரஸ்யாऽநந்ததா ஸம்பவதி, ஸுகஸ்வரூபதா ஹி ஆநந்தஸ்வரூபதா। ஸுகஸ்வரூபத்வம் ச ஆத்மநோऽநுகூலத்வம்; ப்ரகாஶமாத்ராத்மவாதிந: கஸ்ய ப்ரகாஶோऽநுகூலவேதநீயோ பவேதிதி ப்ரகாஶமாத்ராத்மவாதிந: கதஞ்சிதபி ஆநந்தஸ்வரூபதா துருபபாதா।

ஸ்வரூபாபத்திமாத்ரே ச ஸாத்யே ஸ்வரூப்ஸ்ய நித்யநிஷ்பந்நத்வாத் உபஸம்பந்நஸ்ய, *"ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே"*(சா.8-12-2)[3] இதி வசநம் அநர்தகம் ஸ்யாத்। அதோऽபூர்வேண ஸாத்யேந ரூபேண ஸம்பத்யதே।

பர-ப்ரஹ்மத்தை அடைந்தவனுக்கு புருஷார்த்தம் ஆவது (வேண்டிக் கேட்கும் பலன் ஆவது) துக்கம் தொலைதல் மட்டுமே என்பது இல்லை; அப்படியானால், ஆத்ம-ஸ்வரூபம் வெளிப்படுதலே மோக்ஷம் என சொல்லலாம்! மாறாக -

- [1]**‘‘அது ப்ரஹ்மத்தின் ஒரு ஆனந்தம்; ப்ரஹ்ம-உபாஸநம் செய்து, ஸம்ஸார-போகத்தால் அடிபடாதவனாய், மோக்ஷம் பெற்றவனுக்கும் இந்த ஆனந்தம்’’,**
- [2]**‘‘இவன் ஆனந்த-ஸ்வரூபமான ப்ரஹ்மத்தை அடைந்து ஆனந்தம் உடையவனாக ஆகிறான்’’**

முதலிய வாக்யங்களால் மோக்ஷம் பெற்றவனுக்கு அளவற்ற ஸுகம் இருப்பதை வேதம் சொல்கிறது.

வாதம் - இந்த ஜீவனுக்கு அளவற்ற ஆனந்தம் ஆகிற ஜ்ஞாநம் மட்டுமேதான் ஸ்வரூபம்; அந்த ஸ்வரூபம் ஸம்ஸார-நிலையில் அவித்யையால் மறைக்கப்பட்டு உள்ளது; பர-ப்ரஹ்மத்தை அடைந்தவனுக்கு அந்த ஸ்வரூபம் வெளிப்படுகிறது.

மறுப்பு - இப்படி சொல்ல முடியாது; ஏனெனில், ஜ்ஞாந மட்டும் ஸ்வரூபம் ஆனவனுக்கு ஸ்வரூபம் மறைதல் என்பது வராது; ப்ரகாஶம் எனப்படும் ஜ்ஞாநம் மறைதல் என்பது அதன் அழிவே ஆகும் என்று முன்பே (ஜிஜ்ஞாஸா-அதிகரணத்தில்) சொல்லியாயிற்றுதானே!

மேலும் ஜ்ஞாநம் மட்டுமே ஸ்வரூபம் ஆனவன் ஆனந்த-ஸ்வரூபம் ஆகிறான் என்பதும் வராது; ஆனந்த-ஸ்வரூபம் ஆக இருத்தல் என்றால் ஸுக-ஸ்வரூபமாக இருத்தல் என்று அர்த்தம்; ஸுக-ஸ்வரூபமாக இருத்தல் என்பது, தனக்கு அனுகூலமாக இருத்தல் ஆகும்; ஜ்ஞாநம் மட்டுமேதான் ஆத்ம-ஸ்வரூபம் என்றால், ஜ்ஞாநமானது யாருக்கு அனுகூலமாக அனுபவிக்கப் படுகிறதாக ஆகும்? ஆகையால், ஜ்ஞாநம் மட்டுமே ஆத்ம-ஸ்வரூபம் என்று சொல்பவருக்கு எப்படியும் அது ஆனந்த-ஸ்வரூபமாவது விளக்கப்பட முடியாது.

✍*(யாருக்கு எந்த பொருள் அனுகூலமாக அனுபவிக்கப் படுகிறதோ, அவரைக் குறித்து அந்த பொருள் ஆனந்த-ஸ்வரூபம் எனப்படும்; இங்கு ஜீவாத்மா ஆனந்தஸ்வரூபம் ஆக வேண்டுமானால், அது யாருக்காவது அனுகூலமாக அறியப்படுதல் வேண்டும்; அது யாருக்கு? தனக்கே அது அனுகூலமாக ஆகிறது என அத்வைத-மதத்தில் சொல்ல முடியாது; ஏனெனில், தனக்கு ஜ்ஞாந-ஸ்வரூபம் தவிர வேறு தன்மை எதுவும் கிடையாது; அதனால், அது ஆனந்த-ஸ்வரூபமாக ஆக முடியாது).*✍

மேலும், ஸ்வரூபத்தை அடைதல் மட்டுமே மோக்ஷத்தில் ஆக்கப்பட வேண்டியது என்றால், பர-ப்ரஹ்மத்தை அடைந்தவன் [3]**‘‘தன் ஸ்வரூபத்துடன் கூடியவனாக ஆகிறான்’’** என்று வேதம் சொன்னது வீணாக நேரிடும்; ஏனெனில், ஸ்வரூபமானது எப்போதுமே இருக்கிறது; (அது புதியதாக ஆக வேண்டியதில்லை)

रूपेण सम्पद्यते। एवं च अभिनिष्पद्यते इति वचनं मुख्यार्थमेव भवति। स्वेन रूपेण - इत्यपि आनन्दैकान्तेन स्वासाधारणेनाभिनिष्पद्यत इति सङ्गच्छते इत्येवं प्राप्ते -

प्रचक्ष्महे - **सम्पद्याविर्भावः** इति। अयं प्रत्यगात्माऽर्चिरादिना परं ज्योतिरुपसम्पद्य यं दशाविशेषमापद्यते, स स्वरूपाविर्भावरूपः; नापूर्वाकारोत्पत्तिरूपः।

त्रिधाभावादयः शरीरनिबन्धना इत्यवगम्यते। अशरीरत्ववचनं तु कर्मनिमित्तशरीराभावपरम्, तदेव हि शरीरं प्रियाप्रियहेतुः॥ ११ ॥

◆

भगवांस्तु बादरायणः स्वमतेन सिद्धान्तमाह -

५३५.द्वादशाहवदुभयविधं बादरायणोऽतः (४-४-१२)

“सङ्कल्पादेव” इत्येतत् **अतश्शब्देन** परामृश्यते, अत एव सङ्कल्पात्, उभयविधं सशरीरमशरीरं च मुक्तं भगवान् बादरायणो मन्यते। एवञ्चोभयी श्रुतिरुपपद्यते। **द्वादशाहवत्** - यथा “**द्वदाशाहमृद्धिकामा उपेयुः**”(पू.मी.सू.8-2-5,10-6-16)[1], “**द्वादशाहेन प्रजाकामं याजयेत्**”(पू.मी.सू.8-2-5,10-6-16)[2] इत्युपैतियजतिचोदनाभ्यां सङ्कल्पभेदेन सत्रमहीनं च भवति॥ १२ ॥

◆

நிபந்தநா: இத்யவகம்யதே। அஶரீரத்வவசநம் து கர்மநிமித்தஶரீராபாவபரம், ததேவ ஹி ஶரீரம் ப்ரியாப்ரியஹேது:।। 11 ।।

◆

பகவான் து பாதராயண: ஸ்வமதேந ஸித்தாந்தமாஹ-

535. த்வாதஶாஹவதுபயவிதம் பாதராயணோऽத: (4-4-12)

“ஸங்கல்பாதேவ” இத்யேதத் அதஶ்ஶப்தேந பராம்ருஶ்யதே; அத ஏவ ஸங்கல்பாத், *உபயவிதம்* ஸஶரீரம் அஶரீரம் ச முக்தம் பகவாந் பாதராயணோ மந்யதே। ஏவஞ்ச உபயீ ஶ்ருதிருபபத்யதே। **த்வாதஶாஹவத் -** யதா “***த்வதஶாஹம்ருத்திகாமா உபேயு:***”(பூ.மீ.8-2-5,10-6-16)[1], “***த்வாதஶா-ஹேந ப்ரஜாகாமம் யாஜயேத்***”(பூ.மீ.8-2-5,10-6-16)[2] இதி உபைதி-யஜதி சோதநாப்யாம் ஸங்கல்பபேதேந ஸத்ரமஹீநம் ச பவதி।। 12 ।।

◆

மாக ஆதல் முதலியவை ஶரீரத்தை அடிப்படையாகக் கொண்டு வருபவை என்பது தெரிகிறது; (மூன்று ஶரீரங்கள் எடுத்து இருப்பவன் மூவிதமாக ஆகிறான் என்று கருத்து).

(வேத-வாக்யத்தில்) முக்தனை ஶரீரமற்றவனாகச் சொல்வதோ, புண்ய-பாப-கர்மத்தை காரணமாகக் கொண்டு வரும் ஶரீரம் அந்த முக்தனுக்கு இல்லை என்ற கருத்துடையது ஆகும்; அந்த ஶரீரம்தானே ஸுக-துக்கத்துக்கு காரணம் ஆகும்!

◆

ஸித்தாந்தம்

பகவான் பாதராயண வ்யாஸர் தன் மதப்படி ஸித்தாந்தம் சொல்கிறார் -

535.த்வாதஶாஹவத் உபயவிதம் பாதராயண: அத:(4-4-12)

அதனால் [ஸங்கல்பத்தால்], த்வாதஶாஹம் போல இருவிதமாகவும்
ஆவதை வ்யாஸர் கருதுகிறார்;

'ஸங்கல்பத்தாலேயே' என்று (போன அதிகரணத்தில்) சொன்னது, இங்கு, 'அதனால்' என்ற சொல்லின் மூலம் நினைக்கப் படுகிறது.

அத: (அதனால்) - ஸங்கல்பத்தாலேயே (தன் விருப்பப்படியே)

உபயவிதம் (இருவிதமாக) - ஶரீரத்துடன் கூடியவனாகவும் ஶரீரம் அற்றவனாகவும் இருவிதமாக முக்தன் ஆவதை

பாதராயண: - பகவான் பாதராயண-வ்யாஸர் கருதுகிறார்;

இப்படியாவதால், இருவிதமான வேதமும் சரியாகிறது.

த்வாதஶாஹவத் (த்வாதஶாஹம் எனும் யாகம் போல) -

I. [1]**''த்வாதஶாஹம் ருத்திகாமா உபேயு: (செழிப்பு வேண்டுபவர் த்வாதஶாஹத்தை அடையவும்)''** என்று 'உப+இண் (அடைதல்)' என்ற வினைச்சொல்லையிட்டு கட்டளை இருப்பதால், ஸத்ரம் ஆகும்.

II. [2]**''த்வாதஶாஹேந ப்ரஜாகாமம் யாஜயேத்'' (மக்கட்பேறு வேண்டுபவனை த்வாதஶாஹ-யாகம் செய்விக்கவும்)''** என்று 'யஜ (யாகம் செய்தல்)' என்ற வினைச்சொல்லை இட்டு கட்டளை இருப்பதால், அஹீனம் ஆகும்.

(இருவிதமாகவும் ஆகும் அந்த த்வாதஶாஹமானது,) ஸங்கல்பம் வேறாவதை இட்டு ஸத்ரமாகவோ அஹீநமாகவோ செய்யப்படுவதாக ஆகிறது. அது எப்படியோ அப்படி இதுவும் ஆகும்.

(த்வாதஶாஹம் குறித்து முன்குறிப்பில் காணலாம்; ஶரீரத்துடன் கூடியவனாகவும் ஶரீரம்-அற்றவனாகவும் இருவிதமாகவும் ஆகக் கூடிய ஜீவன், ஸங்கல்பம் வேறாவதை இட்டு அவ்வப்போது ஶரீரம் இல்லாமலோ அல்லது ஶரீரத்துடனோ ஆகலாம்.)

◆

In Public domain, Digitized by Muthulakshmi Research Academy

यदा शरीराद्युपकरणवत्त्वम्; तदा तानि शरीराद्युपकरणानि स्वेनैव सृष्टानीति नास्ति नियम इत्याह -

५३६.तन्वभावे सन्ध्यवदुपपत्तेः (४-४-१३)

स्वेनैव सृष्टतनुप्रभृत्युपकरणाभावे परमपुरुषसृष्टैरुपकरणैर्भोगोपपत्तेः सत्यसङ्कल्पोऽपि स्वयं न सृजति। यथा स्वप्ने,

- **''अथ रथान् रथयोगान् पथः सृजते''**(बृ.6-3-10)[1] इत्यारभ्य, **''अथ वेशान्तान् पुष्करिण्यः स्रवन्त्यः सृजते। स हि कर्ता''**(बृ.6-3-10)[2] इति
- **''य एषु सुप्तेषु जागर्ति कामंकामं पुरुषो निर्मिमाणः। तदेव शुक्रं तद्ब्रह्म तदेवामृतमुच्यते। तस्मिन् लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन''**(क.5-8)[3]

इति ईश्वर-सृष्टैः रथाद्युपकरणैर्जीवो भुङ्क्ते, तथा मुक्तोऽपि लीलाप्रवृत्तेनेश्वरेण सृष्टैः पितृलोकादिभिर्लीलारसं भुङ्क्ते॥ १३ ॥

* * *

५३७.भावे जाग्रद्वत् (४-४-१४)

स्वसङ्कल्पादेव सृष्टतनुप्रभृतिपितृलोकाद्युपकरणभावे जाग्रत्पुरुष(भोग)वत् मुक्तोऽपि

யதா ஶரீராத்யுபகரணவத்த்வம்; ததா தாநி ஶரீராத்யுபகரணாநி ஸ்வேநைவ ஸ்ருஷ்டாநீதி நாஸ்தி நியம இத்யாஹ-

536.தந்வபாவே ஸந்த்யவதுபபத்தே: (4-4-13)

ஸ்வேநைவ ஸ்ருஷ்டதநுப்ரப்ருத்யுபகரணாபாவே பரமபுருஷஸ்ருஷ்-டைருபகரணை: போகோபபத்தே: ஸத்யஸங்கல்போऽபி ஸ்வயம் ந ஸ்ருஜதி। யதா ஸ்வப்நே,

- *“அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே”*(ப்ரு.6-3-10)[1] இத்யாரப்ய, *“அத வேஶாந்தாந் புஷ்கரிண்ய: ஸ்ரவந்த்ய: ஸ்ருஜதே। ஸ ஹி கர்தா”*(ப்ரு.6-3-10)[2] இதி,
- *“ய ஏஷு ஸுப்தேஷு ஜாகர்தி காமம் காமம் புருஷோ நிர்மிமாண:। ததேவ ஶுக்ரம் தத்ப்ரஹ்ம ததேவாம்ருதமுச்யதே। தஸ்மிந் லோகா: ஶ்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கஶ்சந”*(க.5-8)[2]

இதி ஈஶ்வரஸ்ருஷ்டை: ரதாத்யுபகரணைர்ஜீவோ புங்க்தே; ததா முக்-தோऽபி லீலாப்ரவ்ருத்தேநேஶ்வரேண ஸ்ருஷ்டை: பித்ருலோகாதிபி: லீலாரஸம் புங்க்தே।। 13 ।।

* * *

537.பாவே ஜாக்ரத்வத் (4-4-14)

ஸ்வஸங்கல்பாதேவ ஸ்ருஷ்டதநுப்ரப்ருதிபித்ருலோகாத்யுபகரண-பாவே ஜாக்ரத்புருஷ(போக)வத் முக்தோऽபி லீலாரஸம் புங்க்தே।। பரம-

எப்போது ஶரீரம் முதலிய கருவி உள்ளதோ, அப்போது ஶரீரம் முதலிய கருவிகள் தன்னாலேயே படைக்கப்பட்டவையாக ஆக வேண்டும் எனும் நியமம் கிடையாது என்கிறார் -

536.தந்வபாவே ஸந்த்யவத் உபபத்தே:(4-4-13)

தான் படைத்த ஶரீரம் இல்லாதபோது ஸ்வப்னம் போல் ஆவதால்.

தன்னாலேயே படைக்கப்பட்ட ஶரீரம் முதலிய கருவிகள் இல்லாதபோது பரமபுருஷனால் படைக்கப்பட்ட கருவிகளைக் கொண்டு போகம் ஆகும்; அதனால், முக்தன் ஸத்ய-ஸங்கல்பனாக (விருப்பப்படி செய்ய வல்லவன்) ஆனாலும் அப்போது தானாக படைப்பதில்லை.

ஸ்வப்நத்தில்,

- [1]**''வேறாக தேர், குதிரைகள் வழிகளையும் படைக்கிறான்''** என்று சொல்ல ஆரம்பித்து, [2]**''வேறாக குட்டைகளையும் குளங்களையும் நதிகளையும் படைக்கிறான்; அவன்தான் படைப்பாளி''** என்றுள்ளது.
- [3]**''இவர்கள் உறங்கும்போது, நினைத்து நினைத்து படைப்பவனாக எந்த புருஷன் விழித்துக் கொண்டிருக்கிறானோ, அதுவே ப்ரகாஶமானது; அதுவே ப்ரஹ்மம், அதுவே அம்ருதம் எனப்படுகிறது; அவனிடம் எல்லா உலகங்களும் அண்டியிருக்கின்றன; அவனை யாரும் கடக்க முடியாது''** என்றுள்ளது.

ஸ்வப்னத்தில், ஈஶ்வரன் படைத்த தேர் முதலிய கருவிகளைக் கொண்டு ஜீவன் அனுபவிக்கிறான்; அது எப்படியோ அப்படி முக்தனும் லீலை-செயலில் ஈடுபடும் பெருமானால் படைக்கப்படும் பித்ரு-லோகம் முதலியவற்றைக் கொண்டு லீலா-ரஸத்தை அனுபவிக்கிறான்.

◆ ◆ ◆ ◆

537.பாவே ஜாக்ரத்வத்(4-4-14)

இருக்கும்போது விழித்திருக்கும் நிலை போல ஆகும்

தனது ஸங்கல்பத்தாலேயே படைக்கப்பட்ட ஶரீரம் முதலிய கருவி இருக்கும் போது, விழித்த-நிலையில் ஆகும் மனிதன் போல், முக்தனும் லீலா-ரஸத்தை அனுபவிக்கிறான்.

लीलारसं भुङ्क्ते॥ परमपुरुषोऽपि लीलार्थं दशरथवसुदेवादिपितृलोकादिकमात्मनः सृष्ट्वा तैर्मनुष्यधर्मलीलारसं यथा भुङ्क्ते, तथा मुक्तानामपि स्वलीलायै पितृलोकादिकं स्वयमेव सृजति कदाचित्, कदाचिच्च मुक्ताः सत्यसङ्कल्पत्वात् परमपुरुषलीलान्तर्गतस्वपितृलोकादिकं स्वयमेव सृजन्तीति सर्वमुपपन्नम्॥ १४ ॥

* * *

नन्वात्माऽणुपरिमाण इत्युक्तम्; कथमनेकशरीरेष्वेकस्याणोरात्माभिमानसम्भव इत्यत्राह -

५३८.प्रदीपवदावेशस्तथा हि दर्शयति (४-४-१५)

यथा प्रदीपस्यैकस्यैकस्मिन् देशे वर्तमानस्य स्वप्रभया देशान्तरावेशः, तथाऽऽत्मनोऽप्येकदेहस्थितस्यैव स्वप्रभारूपेण चैतन्येन सर्वशरीरावेशो नानुपपन्नः। यथा चैकस्मिन्नपि देहे हृदयाद्येकप्रदेशवर्तिनोऽपि चैतन्यव्याप्त्या सर्वस्मिन् देहे आत्माभिमानः, तद्वत्।

इयान् विशेषः - अमुक्तस्य कर्मणा सङ्कुचितज्ञानस्य देहान्तरेषु आत्माभिमानानुगुणा व्याप्तिर्न सम्भवति ; मुक्तस्य त्वसङ्कुचितज्ञानस्य यथासङ्कल्पमात्माभिमानानुगुणा व्याप्तिः, 'इदम्' इति ग्रहणानुगुणा च नानुपपन्ना।

புருஷோऽபி லீலார்தம் தஶரத-வஸுதேவாதிபித்ருலோகாதிகமாத்மந: ஸ்ருஷ்ட்வா தைர்மநுஷ்யதர்மலீலாரஸம் யதா புங்க்தே - ததா முக்தாநாமபி ஸ்வலீலாயை பித்ருலோகாதிகம் ஸ்வயமேவ ஸ்ருஜதி கதாசித், கதாசிச்ச முக்தா: ஸத்யஸங்கல்பத்வாத் பரமபுருஷலீலாந்தர்கதஸ்வபித்ருலோகாதிகம் ஸ்வயமேவ ஸ்ருஜந்தீதி ஸர்வமுபபந்நம்।। 14 ।।

* * *

நநு ஆத்மாऽணுபரிமாண: இத்யுக்தம்; கதமநேகஶரீரேஷு ஏகஸ்யாணோராத்மாபிமாநஸம்பவ: இத்யத்ராஹ-

538.ப்ரதீபவதாவேஶஸ்ததா ஹி தர்ஶயதி (4-4-15)

யதா ப்ரதீபஸ்யைகஸ்ய ஏகஸ்மிந் தேஶே வர்தமாநஸ்ய ஸ்வப்ரபயா தேஶாந்தராவேஶ:, ததாऽऽத்மநோऽபி ஏகதேஹஸ்திதஸ்யைவ ஸ்வப்ரபாரூபேண சைதந்யேந ஸர்வஶரீராவேஶோ நாநுபபந்ந:। யதா சைகஸ்மிந்நபி தேஹே ஹ்ருதயாத்யேகப்ரதேஶவர்திநோऽபி சைதந்யவ்யாப்த்யா ஸர்வஸ்மிந் தேஹே ஆத்மாபிமாந:, தத்வத்।

இயாந் விஶேஷ: - அமுக்தஸ்ய கர்மணா ஸங்குசிதஜ்ஞாநஸ்ய தேஹாந்தரேஷு ஆத்மாபிமாநாநுகுணா வ்யாப்தி: ந ஸம்பவதி; முக்தஸ்ய த்வஸங்குசிதஜ்ஞாநஸ்ய யதாஸங்கல்பம் ஆத்மாபிமாநாநுகுணா வ்யாப்தி:, 'இதம்', இதி க்ரஹணாநுகுணா ச நாநுபபந்நா।

பரம-புருஷனும் லீலைக்காக, தசரதன் வசுதேவன் முதலிய பித்ரு-குழு முதலியதை தனக்கு படைத்துக்கொண்டு, அவற்றைக் கொண்டு, மனித-தர்மங்கள் பற்றிய லீலா-ரஸத்தை அனுபவிக்கிறான்; அது எப்படியோ, அப்படி முக்தர்களுக்கும் பித்ருலோகம் முதலியதை (அனுபவிக்க ஏற்ற பித்ருக்கள் முதலியவரை) தமது லீலைக்காக பரமபுருஷன் தானே சிலசமயம் படைக்கிறான்; முக்தர்கள் ஸத்ய-ஸங்கல்பர்கள் ஆனபடியால், சில சமயம் பரமபுருஷனுடைய லீலையில் உட்பட்ட தனது பித்ருலோகம் முதலியதை தானே படைத்துக் கொள்கின்றனர்; ஆகவே, எல்லாம் சரியாகும்.

◆ ◆ ◆ ◆

கேள்வி - ஆத்மா அணு-அளவானவன் என்று முன்பு சொல்லப்பட்டது; அணு-அளவான ஒரு ஆத்மாவுக்கு, பல ஶரீரங்களில் தான் ஆத்மாவாக இருக்கும் எண்ணம் (பல ஶரீரங்களை ஆளுதல்) எப்படி வரும்?

பதில் - இந்த கேள்விக்கு பதில் சொல்கிறார் -

538.ப்ரதீபவத் ஆவேஶ: ததா ஹி தர்ஶயதி(4-4-15)

விளக்கு-சுடர் போல் அடைதல் ஆகும்; அப்படியே வேதம் காண்பிக்கிறது.

ஒரு இடத்தில் இருக்கும் ஒரு விளக்கு-சுடரானது எப்படி தன் ஒளி மூலம் பிற இடங்களை அடைவதாக ஆகிறதோ, அப்படி ஒரு இடத்தில் இருக்கும் ஆத்மாவானது, தன் ஒளியாகிற ஜ்ஞாநம் மூலம் எல்லா ஶரீரங்களையும் அடைவதும் பொருந்தாமல் போகாது; ஒரு ஶரீரத்திலேயே ஹ்ருதயம் முதலிய ஒரு இடத்தில் இருக்கும் ஆத்மாவுக்கு, ஶரீரம் முழுவதிலும் தான் ஆத்மாவாக இருக்கும் எண்ணமானது (ஶரீரம் முழுவதையும் ஆள்வதானது), ஜ்ஞாநம் பரவுவதன் மூலம் எப்படி வருகிறதோ, அப்படி இதுவும் ஆகும்.

இதுதான் வித்யாசம் - முக்தி பெறாதவனுக்கு புண்ய-பாப-கர்மத்தால் ஜ்ஞாநம் சுருங்கி இருக்கும்; அவனுக்கு பிற ஶரீரங்களில் தான் ஆத்மாவாக எண்ணம் வருவதற்கு ஏற்றதாக (பிற ஶரீரங்களை ஆளுவதற்கு ஏற்றதாக) ஜ்ஞாநம் பரவி இருப்பது வராது; முக்தி பெற்றவனோ ஜ்ஞாந-சுருக்கம் அற்றவன்; அவனுக்கு தன் ஸங்கல்பத்துக்கு ஏற்றபடி ஆத்மாவாக பல ஶரீரங்களை ஆள்வதற்கு ஏற்றதாகவும், இது என்று அறிவதற்கு ஏற்றதாகவும் ஜ்ஞாநம் பரவியிருக்கும்; அது பொருந்தாதது ஆகாது.

तथा हि दर्शयति, ''वालाग्रशतभागस्य शतधा कल्पितस्य च। भागो जीवः स विज्ञेयः स चानन्त्याय कल्पते''(श्वे.5-9)[1] इति। अमुक्तस्य कर्म नियामकम्, मुक्तस्य तु स्वेच्छेति विशेषः॥ १५ ॥

* * *

ननु परं ब्रह्म प्राप्तस्याऽऽन्तरबाह्यज्ञानलोपं दर्शयति श्रुतिः, ''**प्राज्ञेनाऽऽत्मना सम्परिष्वक्तो न बाह्यं किञ्चन वेद नान्तरम्**''(बृ.6-3-21)[2] इति; तत् कथं मुक्तस्य सार्वज्ञ्यमुच्यते? तत्रोत्तरम् -

५३९.स्वाप्ययसम्पत्त्योरन्यतरापेक्षमाविष्कृतं हि (४-४-१६)

नेदं वचनं मुक्तविषयम्; अपितु स्वाप्ययसम्पत्त्योरन्यतरापेक्षम्। **स्वाप्ययः** - सुषुप्तिः, **सम्पत्तिश्च - मरणम्**, ''**वाङ्मनसि सम्पद्यते**''(छा.6-8-6)[3] इत्यारभ्य, ''**तेजः परस्यां देवतायाम्**''(छा.6-8-6)[4] इति वचनात्। तयोश्चावस्थयोः प्राज्ञप्राप्तिर्निस्सम्बोधत्वं च विद्येते। अतस्तयोरन्यतरापेक्षमिदं वचनम्।

ததா ஹி தர்ஶயதி, ''வாலாக்ரஶதபாகஸ்ய ஶததா கல்பிதஸ்ய ச। பாகோ ஜீவ: ஸ விஜ்ஞேய: ஸ சாநந்த்யாய கல்பதே''(ஶ்வே.5-9)[1] இதி। அமுக்தஸ்ய கர்ம நியாமகம்; முக்தஸ்ய து ஸ்வேச்சேதி விஶேஷ:॥ 15 ॥

* * *

நநு பரம் ப்ரஹ்ம ப்ராப்தஸ்ய ஆந்தரபாஹ்யஜ்ஞாநலோபம் தர்ஶயதி ஶ்ருதி:, ''*ப்ராஜ்ஞேநாऽऽத்மநா ஸம்பரிஷ்வக்தோ ந பாஹ்யம் கிஞ்சந வேத நாந்தரம்*''(ப்ரு.6-3-21)[2] இதி, தத் கதம் முக்தஸ்ய ஸார்வஜ்ஞ்யமுச்யதே தத்ரோத்தரம்-

539.ஸ்வாப்யயஸம்பத்த்யோரந்யதராபேக்ஷமாவிஷ்க்ருதம் ஹி (4-4-16)

நேதம் வசநம் முக்தவிஷயம் அபிது ஸ்வாப்யய-ஸம்பத்த்யோ: அந்யதராபேக்ஷம்। *ஸ்வாப்யய:* - ஸுஷுப்தி:; *ஸம்பத்திஶ்ச* - மரணம், ''*வாங்மநஸி ஸம்பத்யதே*''(சா.6-8-6)[3] இத்யாரப்ய, ''*தேஜ: பரஸ்யாம் தேவதாயாம்*''(6-8-6)[4] இதி வசநாத்। தயோஶ்சாவஸ்தயோ: ப்ராஜ்ஞப்ராப்தி: நிஸ்ஸம்போதத்வம் ச வித்யேதே। அத: தயோரந்யதராபேக்ஷமிதம் வசநம்।

ததா ஹி தர்சயதி (அப்படியே வேதம் காண்பிக்கிறது) - [1]**“நெல்லின் வால்நுனியின் நூறில் ஒரு பங்கை நூறாக பிரித்து கற்பனை செய்யப்பட்ட ஒரு பாகமாக அந்த ஜீவன் அறியப்பட வேண்டியவன்; அவன் அளவற்றவனாக ஆகிறான்”** என்று. (மிக சிறிய அளவினன் ஆன ஜீவன் முக்தி-நிலையில் தனது ஒளியாகிற ஜ்ஞானம் மூலம் எண்ணற்ற பல விஷயங்களில் பரவி ஆள்கிறான் என்று கருத்து).

முக்தன் ஆகாதவனுக்கு புண்ய-பாப-கர்மம் (ஜ்ஞானம் பரவாதபடி) கட்டுப்படுத்துகிறது; முக்தனுக்கோ, அவனது விருப்பம் கட்டுப்படுத்தும் என்பது வித்யாசம்.

◆ ◆ ◆ ◆

கேள்வி - பர-ப்ரஹ்மத்தை அடைந்தவனுக்கு உள்-வெளி-விஷயங்கள் பற்றிய ஜ்ஞானம் இல்லை என்பதை வேதம் காண்பிக்கிறது - [2]**“ஸர்வஜ்ஞனான பரமாத்மாவுடன் கூடியவனாய் வெளிவிஷயம் எதையும் அறிவதில்லை; உள் விஷயத்தையும் அறிவதில்லை”** என்று; எனவே, ப்ரஹ்மத்தை அடைந்த முக்தன், எல்லாம் அறிபவனாக ஆகிறான் என்பது எப்படி சொல்லப்படுகிறது?

பதில் - அதற்கு பதில் -

539.ஸ்வாப்யயஸம்பத்த்யோ: அந்யதராபேக்ஷம் ஆவிஷ்க்ருதம் ஹி(4-4-16)

உறக்கம் மரணம் ஆகிய இரண்டில் ஒன்றைக் குறித்து ஆவது; அப்படியாக வேதத்தில் வெளியிடப்பட்டது.

இந்த வேத-வசநம் முக்தனைக் குறித்தது அல்ல; மாறாக இது -

ஸ்வாப்யயஸம்பத்த்யோ: அந்யதராபேக்ஷம் - ஸ்வாப்யயம், ஸம்பத்தி ஆகிய இரண்டில் ஒன்றைக் குறித்து ஆவது.

ஸ்வாப்யயம் என்பது உறக்கம்; ஸம்பத்தி என்பது மரணம்; ஏனெனில் [3]**“வாக் மனஸ்ஸில் ஸம்பத்தி அடைகிறது”** என்று ஆரம்பித்து, [4]**“தேஜஸ் பரதேவதையில் ஸம்பத்தி அடைகிறது”** என்று (மரணத்தைப் பற்றி) சொல்லியுள்ளது. (வாகதிகரணம் 4-2-1 காண்க)

அந்த இரு நிலைகளிலும் ஜீவன், ஸர்வ- ஜ்ஞனான ப்ரஹ்மத்தை அடைவதும், அவனுக்கு ஜ்ஞாநமற்ற தன்மையும் உள்ளன. ஆகவே, அந்த இரண்டில் ஒன்றைக் குறித்து இந்த வசனம் உள்ளது.

✍*(முதலில் கேள்வி கேட்கும்போது, உறக்கம் பற்றிய வேத-வாக்யம் சொல்லப்பட்டது; இப்போது பதில் சொல்லும்போது, மரணம் பற்றிய வேத-வாக்யம் சொல்லப்படுகிறது; இரு வாக்யத்தாலும் இரு நிலைகளைப் பற்றி தெரிய வரும் என்று கருத்து).*✍

सुषुप्तिमरणयोर्निस्सम्बोधत्वं, मुक्तस्य च सर्वज्ञत्वमाविष्कृतं हि श्रुत्या। **"नाह खल्वयमेवं सम्प्रत्यात्मानं जानाति अयमहमस्मीति, नो एवेमानि भूतानि; विनाशमेवापीतो भवति। नाहमत्र भोग्यं पश्यामि"**(छा.8-11-2)[1] इति सुषुप्तिवेलायां निस्सम्बोधत्वमुक्त्वा तस्मिन्नेव वाक्ये मुक्तमधिकृत्य, **"स वा एष चक्षुषा मनसैतान् कामान् पश्यन् रमते य एते ब्रह्मलोके"**(छा.8-12-5)[2] इति सर्वज्ञत्वमुच्यते।

तथा, **"सर्वं ह पश्यः पश्यति सर्वमाप्नोति सर्वशः"**(छा.7-26-2)[3] इति स्पष्टमेव सर्वज्ञत्वमुच्यते। तथा मरणे च निस्सम्बोधत्वम्, **"एतेभ्यो भूतेभ्यः समुत्थाय तान्येवानुविनश्यति"**(बृ.4-4-12)[4] इत्युक्तम्। **विनश्यति** - न पश्यतीत्यर्थः। अतः **"प्राज्ञेनाऽऽत्मना"**(बृ.6-3-21)[5] इति वचनं स्वाप्ययसम्पत्त्योरन्यतरापेक्षम् ॥१६॥

इति अभावाधिकरणम् ॥ ५॥

ஸுஷுப்தி-மரணயோ: நிஸ்ஸம்போதத்வம், முக்தஸ்ய ச ஸர்வஜ்ஞத்வம் ஆவிஷ்க்ருதம் ஹி ஶ்ருத்யா। *"நாஹ கல்வயமேவ ஸம்ப்ரத்யாத்மாநம் ஜாநாதி அயமஹமஸ்மீதி, நோ ஏவேமாநி பூதாநி; விநாஶமேவாபீதோ பவதி। நாஹமத்ர* **போக்யம்** *பஶ்யாமி"*(சா.8-11-2)[1] இதி ஸுஷுப்திவேலாயாம் நிஸ்ஸம்போதத்வமுக்த்வா தஸ்மிந்நேவ வாக்யே முக்தமதிக்ருத்ய, *"ஸ வா ஏஷ* **திவ்யேந** *சக்ஷுஷா மநஸைதாந் காமாந் பஶ்யந் ரமதே ய ஏதே* **ப்ரஹ்மலோகே"** (சா.8-12-5)[2] இதி ஸர்வஜ்ஞத்வமுச்யதே।

ததா, *"ஸர்வம் ஹ பஶ்ய: பஶ்யதி ஸர்வமாப்நோதி ஸர்வஶ:"*(சா.7-26-2)[3] இதி ஸ்பஷ்டமேவ ஸர்வஜ்ஞத்வமுச்யதே। ததா மரணே ச நிஸ்ஸம்போதத்வம், *"ஏதேப்யோ* **பூதேப்ய:** *ஸமுத்தாய தாந்யேவாநுவிநஶ்யதி"*(ப்ரு.4-4-12)[4] இத்யுக்தம்। *விநஶ்யதி* - ந பஶ்யதீத்யர்த:। அத: *"ப்ராஜ்ஞேநாऽऽத்மநா"* (ப்ரு.6-3-21)[5] இதி வசநம் ஸ்வாப்யய-ஸம்பத்த்யோரந்யதராபேக்ஷம்।।16।।

இதி அபாவாதிகரணம் ।। 5 ।।

* * *

ஆவிஷ்க்ருதம் ஹி (வெளியிடப்பட்டது) - உறக்கம் மரணம் ஆகிய இரண்டிலும் ஜ்ஞாநம் இல்லை என்பதும், முக்தன் ஸர்வஜ்ஞனாக எல்லாம் அறிந்தவன் என்பதும், வேதத்தால் வெளிப்படுத்தப் பட்டது - [1]**''இந்த உறங்குபவன், இப்போது நான் இப்படியாக இருக்கிறேன் என ஆத்மாவை அறியவில்லை; இந்த பொருள்களையும் அறியவில்லை; விநாஶத்தையே அடைந்தவன் போல ஆகிறான்;இந்த உறக்கத்தில் நான் ஒரு போகத்தையும் காணவில்லை''** என்று உறக்க-வேளையில் ஜ்ஞாநம்-இல்லாமையைச் சொல்கிறது; பின், அதே வாக்யத்திலேயே முக்தனைக் குறித்து [2]**''அவன், ப்ரஹ்மமாகிற உலகத்தில் எந்த கல்யாண-குணங்கள் உண்டோ அவற்றை மனஸ் எனப்படும் திவ்யமான ஜ்ஞாநக்-கண்ணால் காண்பவனாய் சந்தோஷப்படுகிறான்''** என்று முக்தனுக்கு எல்லாம் அறிந்தமை சொல்லப் படுகிறது.

அப்படியே, [3]**''ப்ரஹ்மத்தைக் காண்பவன் எல்லாவற்றையும் நேராகப் பார்க்கிறான்; எல்லாவிடத்திலும் விரும்பிய எல்லாவற்றையும் ஸங்கல்பத்தாலேயே அடைகிறான்''** என்று ஸர்வஜ்ஞனாக இருப்பது தெளிவாகவே சொல்லப்படுகிறது.

அப்படியே மரணத்தில் ஜ்ஞாநம் இல்லை என்பது, [4]**''பஞ்சபூதங்களால் உண்டாகி அவற்றையே தொடர்ந்து விநாஶம் அடைகிறான்''** என்று சொல்லப்பட்டது; விநாஶம் அடைகிறான்' - காண்பதில்லை என்று பொருள். (அறிவற்றவன் ஆகிறான் என்று கருத்து).

ஆகவே, [5]**''ஸர்வஜ்ஞன் ஆன பரமாத்மாவால் அணைக்கப்பட்டவனாய் ...''** என்கிற வேத-வாக்யமானது, உறக்கம், மரணம் ஆகிய இரண்டில் ஒன்றைப் பற்றியது.

* * *

அபாவாதிகரணம் முற்றிற்று.

* * *

156.ஜகத்-வ்யாபார-வர்ஜாதிகரணம்(4-4-6)

முன் குறிப்பு

முக்தன் (மோக்ஷம் பெற்ற ஜீவன்), ஈஶ்வரனுக்கு சமமாக ஆகிறான் என்று வேதம் சொல்கிறது; அதனால், ஈஶ்வரனது செயல் அவனுக்கும் உண்டு என தெரிகிறது; ஈஶ்வரனது செயலாக முக்தன் பெறுவது எது? எல்லா உலகங்களையும் ஆளுதல்; அதாவது, எல்லாவற்றையும் படைத்தல், காத்தல் முதலிய செயலா? அல்லது, ஈஶ்வரனது செயலாக முக்தன் பெறுவது பரமபுருஷனை அனுபவித்தல் மட்டுமா என்று விசாரம்.

ஸ்ரீபாஷ்யத்தில் இங்கு ஐஶ்வர்யம் என்றால் ஈஶ்வரனது செயல் என்று அர்த்தம்.

உலகங்களைப் படைத்தல், காத்தல் ஆளுதல் முதலியவை முக்தனுக்கு வராது; ஏனெனில் அவை ப்ரஹ்மத்தின் லக்ஷணங்கள் ஆகும். லக்ஷணம் என்பது, அதற்கு மட்டுமே உண்டான தன்மை ஆகும். இப்படி ப்ரஹ்மத்தின் லக்ஷணமாக வேதம் சொல்வதால், முக்த ஜீவனுக்கு இவை வராது.

வாதம் – முக்தனும் உலகங்களில் சஞ்சாரம் செய்கிறான் என்று வேதம் சொல்கிறது; அதனால், அவனுக்கும் உலக-செயல் உண்டு என்று சொல்ல வேண்டும்.

மறுப்பு – நாம் கர்மத்துக்கு கட்டுப்பட்டு உலகில் திரிபவர்கள்; முக்தன் அப்படியல்ல; அவனுக்கு, கர்மபந்தம் கிடையாதானபடியால், தன் இஷ்டப்படி உலகில் உலா வருவான். பகவானது உலகங்களை பகவானது விபூதியாக அனுபவிப்பான். அவனது அனுபவத்தில் இது ஒரு விதம் என்பதுதான்; மற்றபடி பகவான் போல உலகைக் காத்தல் முதலியது கிடையாது.

மோக்ஷம் பெற்று பகவானை அடைந்த ஜீவன், பிறகு மீண்டும் ஸம்ஸாரத்தில் வருவதில்லை என வேதம் சொல்கிறது. மேலும், இவனுக்கு புண்யபாபகர்மம் கிடையாதானபடியால், ஸம்ஸாரம் வர முடியாது; மேலும், ப்ரஹ்ம-ஆனந்தம் அனுபவிக்கும் இவன் அதை விட்டு வர விரும்ப மாட்டான்; எல்லாவற்றுக்கும் மேல், பரமாத்மாவும் தனக்கு ப்ரியனான முக்தனை விட மாட்டான்; திருப்பி அனுப்பவே மாட்டான்.

இப்படியாக மோக்ஷ-பலனை விளக்கி இந்த ஶாஸ்த்ரம் முடிக்கிறது.

१५६. जगद्व्यापारवर्जाधिकरणम् (४-४-६)

५४०.जगद्व्यापारवर्जं प्रकरणादसन्निहितत्वाच्च (४-४-१७)

किं मुक्तस्यैश्वर्यं जगत्सृष्ट्यादि परमपुरुषासाधारणं सर्वेश्वरत्वमपि, उत तद्रहितं केवलपरमपुरुषानुभवविषयमिति संशयः।

किं युक्तम्? जगदीश्वरत्वमपीति। कुतः? **“निरञ्जनः परमं साम्यमुपैति”** (मु.3-1-3) इति परमपुरुषेण परमसाम्यापत्तिश्रुतेः; सत्यसङ्कल्पत्वश्रुतेश्च। न हि परमसाम्यसत्यसङ्कल्पत्वे सर्वेश्वरासाधारणजगन्नियमनेन विनोपपद्येते। अतः सत्यसङ्कल्पत्वपरमसाम्योपपत्तये समस्तजगन्नियमनरूपमपि मुक्तस्यैश्वर्यमिति।

एवं प्राप्ते प्रचक्ष्महे - **जगद्व्यापारवर्जम्** - इति। **जगद्व्यापारः** - निखिलचेतनाचेतनस्वरूपस्थितप्रवृत्तिभेदनियमनम्। तद्वर्जं निरस्तनिखिलतिरोधानस्य निर्व्याजब्रह्मानुभवरूपं मुक्तस्यैश्वर्यम्।

---

156. ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணம் (4-4-6)

540.ஜகத்வ்யாபாரவர்ஜம் ப்ரகரணாதஸந்நிஹிதத்வாச்ச (4-4-17)

கிம் முக்தஸ்யைஶ்வர்யம் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி பரமபுருஷாஸாதாரணம் ஸர்வேஶ்வரத்வமபி, உத தத்ரஹிதம் கேவலபரமபுருஷாநுபவவிஷயமிதி ஸம்ஶய:।

கிம் யுக்தம் ஜகதீஶ்வரத்வமபீதி। குத:? *“நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி”* (மு.3-1-3)[1] இதி பரமபுருஷேண பரமஸாம்யாபத்திஶ்ருதே:; ஸத்யஸங்கல்பத்வஶ்ருதேஶ்ச। ந ஹி பரமஸாம்ய-ஸத்யஸங்கல்பத்வே ஸர்வேஶ்வராஸாதாரணஜகந்நியமநேந விநோபபத்யேதே। அத: ஸத்யஸங்கல்பத்வபரமஸாம்யோபபத்தயே ஸமஸ்தஜகந்நியமநரூபமபி முக்தஸ்யைஶ்வர்யமிதி।

ஏவம் ப்ராப்தே ப்ரசக்ஷ்மஹே - *ஜகத்வ்யாபாரவர்ஜம்* - இதி। *ஜகத்வ்யாபார:* - நிகிலசேதநாசேதந-ஸ்வரூபஸ்திதிப்ரவ்ருத்திபேதநியமநம்। தத்வர்ஜம் நிரஸ்தநிகிலதிரோதாநஸ்ய நிர்வ்யாஜப்ரஹ்மாநுபவரூபம் முக்தஸ்யைஶ்வர்யம்।

156. ஜகத்-வ்யாபார-வர்ஜாதிகரணம் (4-4-6)

540.ஜகத்-வ்யாபார-வர்ஜம் ப்ரகரணாத் அஸந்நிஹிதத்வாத் ச(4-4-17)

முக்தனது செல்வமானது, உலகச் செயல் தவிர ஆகும்; ப்ரஹ்மத்தை சொல்ல ஆரம்பித்து உலகச் செயலை சொல்வதாலும், ஜீவன் அங்கு சொல்லப்படுபவனாக இல்லாதபடியாலும்.

ஸம்ஶயம் (ஸந்தேஹம்)

முக்தன் பெறும் ஐஶ்வர்யம் என்பது, பரம-புருஷனுக்கு மட்டுமே இருக்கும் ஐஶ்வர்யமான உலக-படைப்பு முதலியதாக எல்லாவற்றையும் ஆளுதலா? அல்லது, அது இல்லாமல் பரம-புருஷனை அனுபவித்தலை மட்டும் பற்றியதா? என்று ஸந்தேஹம்.

பூர்வபக்ஷம்

எது சரியாகும்? உலகங்களை ஆளுதலும் கூட என்பது; ஏன்? **"கர்ம-ஒட்டுதல் அற்றவனாய் (ப்ரஹ்மத்துடன்) மிகவும் ஸமமாக ஆதலை அடைகிறான்"** என்று பரம-புருஷனுடன் மிகவும் ஸமமாக ஆகும் நிலையை அடைதலை வேதம் சொல்வதால்; மேலும், ஸத்ய-ஸங்கல்பனாக ஆவதையும் வேதம் சொல்வதாலும் ஆகும். ஸர்வேஶ்வரனுக்கு மட்டுமேயான உலக-ஆட்சி எனும் தன்மை முக்தனுக்கு இல்லையானால், மிகவும் ஸமமாக ஆதலும்,ஸத்ய-ஸங்கல்பனாக ஆதலும் வராமல் போய்விடும்; ஆகையால், மிகவும் ஸமமாக ஆதலும்,ஸத்ய-ஸங்கல்பனாக ஆதலும் சரியாக வரவேண்டும் என்பதற்காக, எல்லா உலகங்களையும் ஆளுதல் என்பதாகவும் முக்தனின் ஐஶ்வர்யம் ஆக வேண்டும் என்று.

ஸித்தாந்தம்

இப்படி பூர்வபக்ஷம் நேரிட ஸித்தாந்தம் சொல்கிறோம் - **'ஜகத்வ்யாபார-வர்ஜம் (உலகசெயலைத் தவிர்த்ததாக)'** என்று.

ஜகத்வ்யாபார: - எல்லா சேதன-அசேதனங்களுடைய தனிப்பட்ட விஶேஷங்களான ஸ்வரூபம், இருப்பு, செயல்பாடுகளை நியமனம் செய்தல்; (தன் கட்டுப்பாட்டில் வைத்து ஆளுதல்)

ஜகத்வ்யாபாரவர்ஜம் - (இந்த உலக-செயலைத் தவிர்த்து ஆகும்),

(அவித்யை ஆகிற) எல்லா மறைவும் விலகப் பெற்றவனாய், உலக-செயலைத் தவிர்த்து, உள்ளது உள்ளபடியான ப்ரஹ்மத்தை அனுபவித்தல் என்பதே முக்தனது ஐஶ்வர்யம் ஆகும்.

कुतः? **प्रकरणात्।** निखिलजगन्नियमनं हि परं ब्रह्म प्रकृत्याऽऽम्नायते, **''यतो वा इमानि भूतानि जायन्ते येन जातानि जीवन्ति यत् प्रयन्त्यभिसंविशन्ति तद्विजिज्ञासस्व तद्ब्रह्म''**(तै.1.भृ.1) इति। यद्येतन्निखिलजगन्नियमनं मुक्तानामपि साधारणं स्यात्, ततश्चेदं जगदीश्वरत्वरूपं ब्रह्मलक्षणं न सङ्गच्छते। असाधारणस्य हि लक्षणत्वम्। तथा,

- **''सदेव सोम्येदमग्र आसीदेकमेवाद्वितीयं तदैक्षत बहु स्यां प्रजायेयेति, तत्तेजोऽसृजत''**(छा.6-2-1),
- **''ब्रह्म वा इदमेकमेवाग्र आसीत्। तदेकं सन्न व्यभवत्। तच्छ्रेयोरूपमत्यसृजत क्षत्रम्। यान्येतानि देवत्रा क्षत्राणि इन्द्रो वरुणः सोमो रुद्रः पर्जन्यो यमो मृत्युरीशान इति''**(बृ.3-4-11)
- **''आत्मा वा इदमेक एवाग्र आसीत् नान्यत्किञ्चन मिषत्। स ईक्षत लोकान्नु सृजा इति। स इमान् लोकानसृजत''**(ऐ.1-1)
- **''एको ह वै नारायण आसीन्न ब्रह्मा नेशानो नेमे द्यावापृथिवी न नक्षत्राणि नापो नाग्निर्न सोमो न सूर्यः। स एकाकी न रमेत। तस्य ध्यानान्तःस्थस्यैका कन्या दशेन्द्रियाणि''**(महो.१-१) इत्यादिषु,

குத:? *ப்ரகரணாத்।* நிகிலஜகந்நியமநம் ஹி பரம் ப்ரஹ்ம ப்ரக்ருத்ய-ஆம்நாயதே, *"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்ப்ரஹ்ம"*(தை.1.ப்ரு.1)[1] இதி। யத்யேதந்நிகிலஜகந்நியமநம் முக்தாநாமபி ஸாதாரணம் ஸ்யாத், ததஶ்சேதம் ஜகதீஶ்வரத்வரூபம் ப்ரஹ்மலக்ஷணம் ந ஸங்கச்சதே। அஸாதாரணஸ்ய ஹி லக்ஷணத்வம்। ததா,

- *"ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீதேகமேவாத்விதீயம் ததைக்ஷத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி, தத்தேஜோऽஸ்ருஜத"*(சா.6-2-1)[1]
- *"ப்ரஹ்ம வா இதமேகமேவாக்ர ஆஸீத்। ததேகம் ஸந்ந வ்யபவத்। தச்ச்ரேயோருபமத்யஸ்ருஜத க்ஷத்ரம்। யாந்யேதாநி தேவத்ரா க்ஷத்ராணி இந்த்ரோ வருண: ஸோமோ ருத்ர: பர்ஜந்யோ யமோ ம்ருத்யுரீஶாந இதி"*(ப்ரு.3-4-11)[1]
- *"ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் நாந்யத்கிஞ்சந மிஷத்। ஸ ஈக்ஷத லோகாந்நு ஸ்ருஜா இதி। ஸ இமாந் லோகாநஸ்ருஜத"* (ஐ.1-1)[1]
- *"ஏகோ ஹ வை நாராயண ஆஸீந்ந ப்ரஹ்மா நேஶாநோ நேமே த்யாவாப்ருதிவீ ந நக்ஷத்ராணி நாபோ நாக்நிர்ந ஸோமோ ந ஸூர்ய:। ஸ ஏகாகீ ந ரமேத। தஸ்ய த்யாநாந்த:ஸ்தஸ்யைகா கந்யா தஶேந்த்ரியாணி"*(மஹோ.1-1)[1] இத்யாதிஷு,

ஏன்?

ப்ரகரணாத் - வேதத்தில், பர-ப்ரஹ்மத்தைப் பற்றி சொல்ல ஆரம்பித்து சொல்லிக் கொண்டு வரும்போது, எல்லா உலகங்களையும் ஆளுதல் என்பது ஓதப்படுகிறது - **''எதிலிருந்து இந்த பொருள்கள் உண்டாகின்றனவோ, உண்டானவை எதனால் வாழ்கின்றனவோ, எதை அடைபவையாய் லயம் அடைகின்றனவோ, அதுவே ப்ரஹ்மம் என்று அதைத் தெரிந்துகொள்''** என்று.

எல்லா உலகங்களையும் ஆளுதல் என்கிற இது, முக்தர்களுக்கும் பொதுவாக ஆகுமானால், உலக-ஈஶ்வரனாதல் என்கிற இது ப்ரஹ்மத்தின் லக்ஷணமாவது பொருந்தாமல் போகும்; ஏனெனில், பொதுவாக ஆகாத (தனக்கு மட்டும் இருக்கும்) தன்மைதானே லக்ஷணம் ஆக முடியும்!

அப்படியே -

- **அழகனே,இந்த ப்ரபஞ்சம்முதலில் ஸத் ஆகவே இருந்தது; ஒன்றாகவே, இரண்டாவது எதுவும் அற்றதாக இருந்தது; அது பலவாக ஆவேன் என பார்த்தது; அது தேஜஸ்ஸினைப் படைத்தது.**

- **இந்த ப்ரபஞ்சம்முதலில் ப்ரஹ்மமாகவே இருந்தது; அது ஒன்றாக இருந்துகொண்டு வைபவப் பெருமையை அடையவில்லை; அது சிறந்த உருவமான க்ஷத்ரியனை உயர்ந்ததாக படைத்தது; தேவர்களில் க்ஷத்ரியர்களாக யாவர் உண்டோ, இந்த்ரன், வருணன், ஸோமன், ருத்ரன், பர்ஜந்யன், யமன், ம்ருத்யு, ஈசானன் என்று அவர்களைப் படைத்தது.**

- **இந்த ப்ரபஞ்சம் முதலில் ஒரே ஆத்மாவாகவே இருந்தது; வேறு எதுவும் இல்லை; அது உலகங்களைப் படைப்பேன் என பார்த்தது; அது இந்த உலகங்களைப் படைத்தது.**

- **நாராயணன் ஒருவனே இருந்தான்; ப்ரஹ்மா இல்லை; சிவன் இல்லை; இந்த மேல்-உலகமும் பூமியும் இல்லை; நக்ஷத்ரங்கள் இல்லை; ஜலம் இல்லை; அக்னி இல்லை; ஸோமன் இல்லை, ஸூர்யன் இல்லை; அவன் ஒருவனாய் மகிழவில்லை; த்யானத்தில் இருக்கும் அவனுக்கு ஒரு மனஸ்ஸும், பத்து இந்த்ரியங்களும் ...**

முதலியவற்றிலும் (ஸ்ருஷ்டி பற்றிய வாக்யங்களிலும்)

★ **''यः पृथिव्यां तिष्ठन् पृथिव्या अन्तरः''**(बृ.5-7-3) इत्यारभ्य, **''य आत्मनि तिष्ठन्''**(बृ.मा.14-5-30) इत्यादिषु च निखिलजगन्नियमनं परमपुरुषं प्रकृत्यैव श्रूयते।

असन्निहितत्वाच्च। न चैतेषु निखिलजगन्नियमनप्रसङ्गेषु मुक्तस्य सन्निधानमस्ति ; येन जगद्व्यापारस्तस्यापि स्यात्॥१७॥

◆

५४१.प्रत्यक्षोपदेशादिति चेन्नाऽऽधिकारिकमण्डलस्थोक्तेः(४-४-१८)

''स स्वराड्भवति तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति''(छा.7-25-2), **''इमान् लोकान् कामान्नी कामरूप्यनुसञ्चरन्''**(तै.1.भृ.10) इति **प्रत्यक्षेण** - श्रुत्या मुक्तस्य जगद्व्यापार उपदिश्यते। अतो न जगद्व्यापारवर्जमिति चेत्,

तन्न; **आधिकारिकमण्डलस्थोक्तेः। आधिकारिकाः** - अधिकारेषु नियुक्ता हिरण्यगर्भादयः; **मण्डलानि** तेषां लोकाः, तत्स्थाः भोगाः मुक्तस्याकर्मवश्यस्य भवन्तीत्ययमर्थः ; **''तस्य सर्वेषु लोकेषु कामचारो भवति''**(छा.7-25-2) इत्यादिनोच्यते। अकर्मप्रतिहतज्ञानो मुक्तो विकारलोकान् ब्रह्मविभूतिभूतान् अनुभूय यथाकामं तृप्यतीत्यर्थः।

★ *''யः ப்ருதிவ்யாம் திஷ்டந் ப்ருதிவ்யா அந்தரः''*(ப்ரு.5-7-3)[1] இத்யாரப்ய, *''ய ஆத்மநி திஷ்டந்''*(ப்ரு.14-5-30)[1] இத்யாதிஷு ச நிகிலஜகந்நியமநம் பரமபுருஷம் ப்ரக்ருத்யைவ ஶ்ரூயதே।

அஸந்நிஹிதத்வாச்ச। ந சைதேஷு நிகிலஜகந்- நியமநப்ரஸங்கேஷு முக்தஸ்ய ஸந்நிதாநமஸ்தி; யேந ஜகத்வ்யாபார: தஸ்யாபி ஸ்யாத்।।17।।

◆

541.ப்ரத்யக்ஷோபதேஶாதிதி சேந்நாऽऽதிகாரிகமண்டலஸ்தோக்தே: (4-4-18)

''ஸ ஸ்வராட்பவதி தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி''(சா.7-25-2)[1], *''இமாந் லோகாந் காமாந்நீ காமரூப்யநுஸஞ்சரந்''*(தை.1.ப்ரு.10)[1] இதி *ப்ரத்யக்ஷேண* - ஶ்ருத்யா முக்தஸ்ய ஜகத்வ்யாபார உபதிஶ்யதே। அதோ ந ஜகத்வ்யாபாரவர்ஜமிதி சேத் -

தந்ந, *ஆதிகாரிகமண்டலஸ்தோக்தே:।* ஆதிகாரிகா: அதிகாரேஷு நியுக்தா ஹிரண்யகர்பாதய:, *மண்டலாநி* தேஷாம் லோகா:, தத்ஸ்தா: போகா: முக்தஸ்யாகர்மவஶ்யஸ்ய பவந்தீத்யயமர்த:; *''தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி''*(சா.7-25-2)[1] இத்யாதிநோச்யதே। அகர்மப்ரதிஹதஜ்ஞாநோ முக்தோ விகாரலோகாந் ப்ரஹ்மவிபூதிபூதாந் அநுபூய யதாகாமம் த்ருப்யதீத்யர்த:।

- **"யார் பூமியில் இருப்பவன்; பூமிக்கு உள்ளிருப்பவன்"** என்று ஆரம்பித்து, **"யார் ஜீவாத்மாவில் இருப்பவன்"**

முதலியவற்றிலும், (அந்தர்யாமி வாக்யங்களிலும்) எல்லா உலகங்களையும் ஆளுதல் என்பது, பரம-புருஷனைப் பற்றி சொல்ல ஆரம்பித்து அந்த இடத்தில்தான் வேதத்தில் ஓதப்படுகிறது.

அஸந்நிஹிதத்வாச்ச - எல்லா உலகங்களையும் ஆளுதல் பற்றிய இந்த வசன-இடங்களில் (சொல்லப் படுபவனாக) முக்தன் அருகில் இல்லை; அப்படி இருந்தால், ஜகத்வ்யாபாரம் (உலக-செயல்) என்பது அவனுக்கும் ஆகலாம். (அவனைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லாததால், அவனையும் சொன்னதாக எடுத்துக் கொள்ள முடியாது).

◆ ◆ ◆ ◆

541.ப்ரத்யக்ஷோபதேஶாத் ந இதி சேத் ந ஆதிகாரிகமண்டலஸ்தோக்தே:(4-4-18)

வேதம் மூலம் உபதேஶம் செய்வதால் அது ஆகாது என்றால் அதல்ல; ஆதிகாரிகர்களின் உலகங்களில் இருக்கும் போகங்களைச் சொல்வதால்

கேள்வி: - **ப்ரத்யக்ஷோபதேஶாத் ந இதி சேத் -**

ப்ரத்யக்ஷம் என்றால் வேதம்; (அதன் மூலம் உபதேஶம் செய்வதால்),

"அவன் சுதந்திரன் ஆகிறான்; அவனுக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி சஞ்சாரம் ஆகும்" என்றும், **"இந்த உலகங்களில் சஞ்சரிப்பவனாய்"** என்றும் வேதம் மூலம் முக்தனுக்கு உலக-செயல் உண்டு என உபதேஶிக்கப் படுகிறது; ஆகையால், உலக-செயலைத் தவிர்த்ததாக ஆகாது - என்றால்,

பதில் - ந - அதல்ல;

ஆதிகாரிக-மண்டல-ஸ்த-உக்தே: - (ஆதிகாரிகர்களது உலகங்களில் இருப்பவற்றைச் சொல்வதால்)

ஆதிகாரிகா: - அதிகாரங்களில் நியமிக்கப்பட்ட ப்ரஹ்மதேவன் முதலியவர்.

மண்டலாநி - அவர்களது உலகங்கள்

(தத்-)ஸ்தா: - அவற்றில் இருக்கும் போகங்கள்.

அவர்களது உலகங்களில் இருக்கும் போகங்கள், புண்ய-பாப-கர்மத்துக்கு வசப்படாத முக்தனுக்கு வரும் எனும் இந்த அர்த்தமானது, **"அவனுக்கு எல்லா உலகங்களிலும் விருப்பப்படி சஞ்சாரம் ஆகும்"** முதலிய வாக்யத்தால் சொல்லப்படுகிறது. கர்மத்தால் விளையும் ஜ்ஞாந-தடை என்பது முக்தனுக்கு கிடையாது; அவன், உண்டாகக் கூடிய இந்த உலகங்களை ப்ரஹ்மத்தின் விபூதிகளாக அனுபவித்து, விருப்பப்படி திருப்தி அடைகிறான் என்று இந்த வேதவாக்யத்துக்கு அர்த்தம்.

तदेवं विकारान्तर्वर्तिनः आधिकारिकमण्डलस्थान् सर्वान् ब्रह्मविभूतिभूतान् अनुभवतीति अनेन वाक्येनोच्यते; न जगद्व्यापारः॥ १८ ॥

* * *

यदि संसारिवत् मुक्तोऽपि विकारान्तर्वर्तिनो भोगान् भुङ्क्ते, तर्हि बद्धस्येव मुक्तस्याप्यन्तवदेन भोग्यजातम्, अल्पं च स्यात्, तत्राह -

५४२.विकारावर्ति च तथा हि स्थितिमाह (४-४-१९)

विकारे - जन्मादिके न वर्तत इति विकारावर्ति; निर्धूतनिखिलविकारं निखिलहेयप्रत्यनीककल्याणैकतानं निरतिशयानन्दं परं ब्रह्म सविभूतिकं सकलकल्याणगुणमनुभवति मुक्तः। तद्विभूत्यन्तर्गतत्वेन विकारवर्तिनां लोकानामपि मुक्तभोग्यत्वम्।

तथा हि परस्मिन् ब्रह्मणि निर्विकारेऽनवधिकातिशयानन्दे मुक्तस्यानुभवितृत्वेन **स्थितिमाह** श्रुतिः,

- **‘‘यदा ह्येवैष एतस्मिन् अदृश्येऽनात्म्येऽनिरुक्तेऽनिलयनेऽभयं प्रतिष्ठां विन्दते, अथ सोऽभयं गतो भवति’’**(तै.1.आन.8)
- **‘‘रसो वै सः। रसं ह्येवायं लब्ध्वाऽऽनन्दी भवति’’** (तै.1.आन.8) इत्यादिका।

ததேவம்விகாராந்தர்வர்திந: ஆதிகாரிகமண்டலஸ்தாந் ஸர்வாந் ப்ரஹ்மவிபூதிபூதாந் அநுபவதீதி அநேந வாக்யேநோச்யதே; ந ஜகத்வ்யாபார:।।18।।

* * *

யதி ஸம்ஸாரிவத் முக்தோऽபி விகாராந்தர்வர்திநோ போகாந் புங்க்தே, தர்ஹி பத்தஸ்யேவ முக்தஸ்யாபி அந்தவதேவ போக்யஜாதம், அல்பம் ச ஸ்யாத், தத்ராஹ-

542.விகாராவர்தி ச ததா ஹி ஸ்திதிமாஹ (4-4-19)

விகாரே - ஜந்மாதிகே ந வர்தத இதி விகாராவர்தி; நிர்தூதநிகிலவிகாரம் நிகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாநம் நிரதிஶயாநந்தம் பரம் ப்ரஹ்ம ஸவிபூதிகம் ஸகலகல்யாணகுணமநுபவதி முக்த:। தத்விபூத்யந்தர்கதத்வேந விகாரவர்திநாம் லோகாநாமபி முக்தபோக்யத்வம்।

ததா ஹி பரஸ்மிந் ப்ரஹ்மணி நிர்விகாரே அநவதிகாதிஶயாநந்தே முக்தஸ்ய அநுபவித்ருத்வேந ஸ்திதிமாஹ ஶ்ருதி:,

- *“யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந் அத்ருஶ்யேऽநாத்ம்யேऽநிருக்தேऽநிலயநேऽபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே, அத ஸோऽபயம் கதோ பவதி”*(தை.1.ஆந.8)[1]
- *“ரஸோ வை ஸ:। ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாऽऽநந்தீ பவதி”*(தை.1.ஆந.8)[1] இத்யாதிகா।

(தேஷாம்) உக்தே: - (அந்த போகங்களை இந்த வாக்யம் சொல்வதால்)

உண்டாகும் பொருள்களில் உட்படுபவையும் ஆதிகாரிகர்களது உலகங்களில் இருப்பவையுமான எல்லா போகங்களையும் ப்ரஹ்மத்தின் விபூதிகளாக அனுபவிக்கிறான் என்பது,இப்படியாக, இந்த வாக்யத்தின் மூலம் சொல்லப்படுகிறது; உலக-செயல் சொல்லப்படவில்லை.

◆ ◆ ◆ ◆

கேள்வி - ஸம்ஸாரத்தில் இருப்பவனைப்போல், முக்தனும், உண்டாகும் உலகங்களில் உட்படும் போகங்களை அனுபவிக்கிறான் என்றால், ஸம்ஸார-பந்தத்தில் இருப்பவனைப் போல் முக்தனுக்கும் போகமானது அழியக் கூடியதாகவும் அல்பமாகவும் ஆக நேரிடும்.

பதில் - அதற்கு பதில் சொல்கிறார் -

542.விகாராவர்த்தி ச ததா ஹி ஸ்திதிம் ஆஹ(4-4-19)

மாற்றமற்ற ப்ரஹ்மத்தை அனுபவிக்கிறான்; அப்படியே அவனது இருப்பைச் சொல்கிறது.

விகாராவர்த்தி (மாற்றமற்ற ப்ரஹ்மத்தை) - விகாரே ந வர்ததே இதி விகாராவர்த்தி என்று இலக்கணக் குறிப்பு; பிறப்பு முதலிய மாற்றத்தில் இல்லாதது என்று அர்த்தம்.

எல்லா மாற்றங்களும் அற்றதாய் எல்லா விடத்தக்க இழி-குணங்களுக்கும் எதிர்த்தட்டாய் கல்யாண-குணங்களுக்கு மட்டும் இருப்பிடமாய் அளவற்ற ஆனந்தமாகிற பர-ப்ரஹ்மத்தை விபூதிகளுடன் கூடியதாகவும் எல்லா கல்யாண-குணங்களை உடையதாகவும் முக்தன் அனுபவிக்கிறான்; அந்த ப்ரஹ்மத்தின் விபூதிகளில் உட்படுவதால், மாற்றத்துக்கு உட்படும் உலகங்களும் கூட முக்தனுக்கு போக்யமாக ஆகின்றன.

ததா ஹி ஸ்திதிம் ஆஹ (அப்படி இருத்தலைச் சொல்கிறது) - மாற்றமற்றதும் உயர்வற உயர்ந்த ஆனந்த-ஸ்வரூபமும் ஆன பர-ப்ரஹ்மத்தில் அப்படியே அனுபவிப்பவனாக முக்தன் இருப்பதை வேதம் சொல்கிறது -

- **''எப்போது இவன், ஸம்ஸாரம் தொலைவதற்காக, காணப்பட முடியாதவனும், ஶரீரத்தை விட வேறானதும், சொற்களால் சொல்லப்பட முடியாததும் ஆதாரம் அற்றதும் ஆன இந்த பரமாத்மாவில் நிலையான இருப்பைப் பெறுகிறானோ, அப்போது அபயத்தை அடைந்தவன் (ஸம்ஸாரம் நீங்கப் பெற்றவன்) ஆகிறான்''.**

- **''அவன் ஆனந்தம் ஆனவன்; அந்த ஆனந்தத்தை அடைந்து ஜீவனும் ஆனந்தமுடையவன் ஆகிறான்''**. முதலியது.

तद्विभूतिभूतं च जगत् तत्रैव वर्तते, ‘‘**तस्मिन् लोकाः श्रिताः सर्वे तदु नात्येति कश्चन**’’(क.5-8) इति श्रुतेः। अतः सविभूतिकं ब्रह्मानुभवन् विकारान्तर्वर्तिनः आधिकारिकमण्डलस्थानपि भोगान् भुङ्क्त इति, ‘‘**सर्वेषु कामचारः**’’ (छा.7-25-2) इत्यादिनोच्यते, न मुक्तस्य जगद्व्यापारः॥१९॥

* * *

५४३.दर्शयतश्चैवं प्रत्यक्षानुमाने (४-४-२०)

अस्य प्रत्यगात्मनो मुक्तस्य नियाम्यभूतस्य नियन्तृभूतपरपुरुषासाधारणं जगद्व्यापाररूपं नियमनं न सम्भवतीत्युक्तम्; निखिलजगन्नियमनरूपो व्यापारः परमपुरुषासाधारण इति दर्शयतः श्रुतिस्मृती,

- ‘‘**भीषाऽस्माद्वातः पवते भीषोदेति सूर्यः। भीषाऽस्मादग्निश्चेन्द्रश्च मृत्युर्धावति पञ्चमः**’’(तै.1.आन.9) इति
- ‘‘**एतस्य वा अक्षरस्य प्रशासने गार्गि सूर्याचन्द्रमसौ विधृतौ तिष्ठतः**’’(बृ.5-8-8) इत्यादिः;
- तथा ‘‘**एष सर्वेश्वर एष भूताधिपतिरेष भूतपाल एष सेतुर्विधरण एषां लोकानामसम्भेदाय**’’(बृ.6-4-22) इति च श्रुतिः।

தத்விபூதிபூதம் ச ஜகத் தத்ரைவ வர்ததே, “*தஸ்மிந்லோகா: ஶ்ரிதா: ஸர்வே தது நாத்யேதி கஶ்சந*”(க.5-8)[1] இதி ஶ்ருதே:। அத: ஸவிபூதிகம் ப்ரஹ்மாநுபவந் விகாராந்தர்வர்திந: ஆதிகாரிகமண்டலஸ்தாநபி போகாந் புங்க்த இதி, “*ஸர்வேஷு லோகேஷு காமசார:*”(சா.7-25-2)[1] இத்யாதிநோச்யதே, ந முக்தஸ்ய ஜகத்வ்யாபார:।। 19 ।।

* * *

543.தர்ஶயதஶ்சைவம் ப்ரத்யக்ஷாநுமாநே (4-4-20)

அஸ்ய ப்ரத்யகாத்மநோ முக்தஸ்ய நியாம்யபூதஸ்ய நியந்த்ருபூதபரமபுருஷாஸாதாரணம் ஜகத்வ்யாபாரரூபம் நியமநம் ந ஸம்பவதீத்யுக்தம்; நிகிலஜகந்நியமநரூபோ வ்யாபார: பரமபுருஷாஸாதாரண இதி தர்ஶயத: ஶ்ருதிஸ்ம்ருதீ,

- “*பீஷாऽஸ்மாத்வாத: பவதே பீஷோதேதி ஸூர்ய:। பீஷாऽஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச ம்ருத்யுர்தாவதி பஞ்சம:*”(தை.1.ஆந.9)[1] இதி,
- “*ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டத:*”(ப்ரு.5-8-8)[1] இத்யாதி:,
- ததா “*ஏஷ ஸர்வேஶ்வர ஏஷ பூதாதிபதிரேஷ பூதபால ஏஷ ஸேதுர்விதரண ஏஷாம் லோகாநாமஸம்பேதாய*”(ப்ரு.6-4-22)[1] இதி ச ஶ்ருதி:।

அந்தப்ரஹ்மத்தின் விபூதியான (செல்வமான) உலகமும் அதனிடமே உள்ளது; ஏனெனில், **''அந்தப்ரஹ்மத்திடம் எல்லா உலகங்களும் அண்டியுள்ளன; அந்த ப்ரஹ்மத்தை எதுவும் மீறி இருப்பதில்லை''** என வேதம் சொல்கிறது;

ஆகையால், முக்தன்ஆனவன், விபூதிகளுடன் கூடிய ப்ரஹ்மத்தை அனுபவிப்பவனாய், மாற்றத்துக்கு உட்படுபவையாய் ஆதிகாரிகர்களது (ப்ரஹ்மதேவன் முதலியவரின்) உலகங்களில் இருக்கும் போகங்களையும் அனுபவிக்கிறான்; இதுவே, **''எல்லா உலகங்களிலும் விருப்பப்படி செல்பவன் ஆகிறான்''** முதலிய வாக்யத்தால் சொல்லப்படுகிறது; முக்தனுக்கு உலக-செயல் இருப்பதாக சொல்லப்படவில்லை.

✍ *(ஸம்ஸார நிலையில் புண்யபாப கர்மத்துக்கு கட்டுப்பட்டு உலகில் நடமாடி உலகை அனுபவித்துக்கொண்டு இருந்தான்; அதனால், சுகதுக்கங்கள் இருந்தன; ஆனால், மோக்ஷநிலையில் புண்யபாபகர்மம் கிடையாது; அதனால் சுகதுக்கங்கள் கிடையாது; மாறாக ப்ரஹ்மத்தின் செல்வமாக உலகை அனுபவிப்பான்; அப்போது உலகில் நடமாடுவான்; அது அவனது ப்ரஹ்ம-ஆநந்த அனுபவத்தில் ஒரு பகுதியாக அடங்கும்; அது தவிர வேறு உலக-நியமநம் முதலிய செயல் எதுவும் கிடையாது.)* ✍

◆ ◆ ◆ ◆

543. தர்ஶயத: ச ஏவம் ப்ரத்யக்ஷானுமானே (4-4-20)

வேதமும் ஸ்ம்ருதியும் இப்படி காண்பிக்கின்றன.

ஆள்பவனான பரம-புருஷனுக்கு மட்டுமேயான உலக-செயல்ஆகிற ஆட்சியானது, ஆளப்படுபவனான முக்த-ஜீவனுக்கு கிடையாது என சொல்லியாயிற்று; எல்லா உலகங்களையும் ஆளுதல் என்னும் செயல்பரம-புருஷனுக்கு மட்டுமேயானது என்பதை வேதங்களும் ஸ்ம்ருதிகளும் காண்பிக்கின்றன.

- **''இவனிடமிருந்து பயத்தால் காற்று வீசுகிறது; பயத்தால் ஸூர்யன் உதிக்கிறான்; இவனிடமிருந்து பயத்தால் அக்நியும் இந்த்ரனும் செயல் செய்கின்றனர்; ஐந்தாவதாக ம்ருத்யுவும் ஓடுகிறான்''.**
- **''கார்கியே, இந்த அக்ஷர-ப்ரஹ்மத்தின் கட்டளையில்தான் ஸூர்ய-சந்த்ரர்கள் தரிக்கப்பட்டு நிற்கின்றனர்''.**

முதலியது; அப்படியே

- **''இவன் ஸர்வேஶ்வரன், இவன் பூதங்களின் தலைவன்; இவன் பூதங்களைக் காப்பவன்; இந்த உலகப் பொருள்கள் கலக்காமல் இருப்பதற்காக இவன் அணையாக தரிப்பவனாக இருக்கிறான்.''** என்று வேதம் சொல்கிறது.

स्मृतिरपि

★ **''मयाऽध्यक्षेण प्रकृतिः सूयते सचराचरम्।**
हेतुनाऽनेन कौन्तेय जगद्धि परिवर्तते''(गी.9-10) इति,

★ **''विष्टभ्याहमिदं कृत्स्नमेकांशेन स्थितो जगत्''**(गी.10-42) इति च।

तथा मुक्तस्य सत्यसङ्कल्पत्वादिपूर्वकस्याप्यानन्दस्य परमपुरुष एव हेतुरिति श्रुतिस्मृती दर्शयतः,

★ **''एष ह्येवानन्दयाति''**(तै.1.आन.8),

★ **''मां च योऽव्यभिचारेण भक्तियोगेन सेवते।**
स गुणान् समतीत्यैतान् ब्रह्मभूयाय कल्पते॥
ब्रह्मणो हि प्रतिष्ठाऽहममृतस्याव्ययस्य च।
शाश्वतस्य च धर्मस्य सुखस्यैकान्तिकस्य च॥''(गी.14-26,27) इति।

यद्यप्यपहतपाप्मत्वादिः सत्यसङ्कल्पत्वपर्यन्तो गुणगणः प्रत्यगात्मनः स्वाभाविक एवाऽऽविर्भूतः, तथाऽपि तस्य तथाविधत्वमेव परमपुरुषायत्तम्; तस्य नित्यस्थितिश्च तदायत्ता। परमपुरुषस्यैतन्नित्यतायाः नित्येष्टत्वान्नित्यतया वर्तत इति न कश्चिद्विरोधः।

ஸ்ம்ருதிரபி

''மயாऽத்யக்ஷேண ப்ரக்ருதி: ஸூயதே ஸசராசரம்।
ஹேதுநாऽநேந கௌந்தேய ஜகத்தி பரிவர்ததே।।''(கீ.9-10)[1] இதி,

''விஷ்டப்யாஹமிதம் க்ருத்ஸ்நமேகாம்ஶேந ஸ்திதோ ஜகத்''(கீ.10-42)[1] இதி ச।

ததா முக்தஸ்ய ஸத்யஸங்கல்பத்வாதிபூர்வகஸ்யாப்யாநந்தஸ்ய பரமபுருஷ ஏவ ஹேதுரிதி ஶ்ருதிஸ்ம்ருதீ தர்ஶயத:,

★ *''ஏஷ ஹ்யேவாநந்தயாதி''*(தை.1.ஆந.8)[1]

★ *''மாம் ச யோऽவ்யபிசாரேண பக்தியோகேந ஸேவதே।*
ஸ குணாந் ஸமதீத்யைதாந் ப்ரஹ்மபூயாய கல்பதே।।
ப்ரஹ்மணோ ஹி ப்ரதிஷ்டாऽஹமம்ருதஸ்யாவ்யயஸ்ய ச।
ஶாஶ்வதஸ்ய ச தர்மஸ்ய ஸுகஸ்யைகாந்திகஸ்ய ச।।''(கீ.14-27,27)[1] இதி।

யத்யபி - அபஹதபாப்மத்வாதி: ஸத்யஸங்கல்பத்வபர்யந்தோ குணகண: ப்ரத்யகாத்மந: ஸ்வாபாவிக ஏவாऽऽவிர்பூத: - ததாபி தஸ்ய ததாவிதத்மமேவ பரமபுருஷாயத்தம்; தஸ்ய நித்யஸ்திதிஶ்ச ததாயத்தா। பரமபுருஷஸ்ய ஏதந்நித்யதாயா: நித்யேஷ்டத்வாத் நித்யதயா வர்தத இதி ந கஶ்சித்விரோத:।

ஸ்ம்ருதியும் (கண்ணன் கீதையில் சொன்னபடி)-

- **''அர்ஜுனா, ப்ரக்ருதியானது அதனை அதிஷ்டானம் செய்யும் என்னால்தான் அதிஷ்டானம் செய்யப்பட்டதாய் சராசர-உலகைப் பெறுகிறது; இந்த காரணத்தால்தான் உலகம் அழிவதும் கூட.''**

- **''இந்த முழு உலகத்தையும் என் ஒரு அம்ஶத்தினால் தாங்கி இருக்கிறேன்''**

என்றும் உள்ளது.

மேலும், முக்தனுக்கு ஆனந்தமானது அவனது ஸத்ய-ஸங்கல்ப-தன்மை முதலியதை முன்னிட்டு வருவதானாலும் அந்த ஆனந்தத்துக்கு பரம-புருஷனே காரணம் என்று வேதமும் ஸ்ம்ருதியும் சொல்கின்றன -

- **''இந்த ப்ரஹ்மம்தான் ஆனந்தம் ஊட்டுகிறான்''**

- **''என்னை யார் மாறாமல் பக்தியோகத்தால் சேவிக்கிறானோ, அவன் இந்த முக்குணங்களைக் கடந்து, ப்ரஹ்மதன்மைக்கு (ப்ரஹ்மத்துக்கு ஸமமாக ஆவதற்கு) தகுந்த நிலையினன் ஆகிறான்.**

  அம்ருதமானதும் அழிவற்றதும் ஆன இந்த ப்ரஹ்மதன்மைக்கு தகுந்த நிலைக்கும் (ப்ரஹ்மத்துக்கு ஸமமாக ஆகத் தகுந்த ஜீவனின் கைவல்ய நிலைக்கும்), அதிககாலம் நிலையான ஐஶ்வர்யத்துக்கும், ஏகாந்திகளான ஜ்ஞானிகள் பெறும் மோக்ஷ-சுகத்துக்கும் நானே ஆதாரம்''

முதலியது.

அபஹத-பாப்ம-தன்மை முதல் ஸத்ய-ஸங்கல்ப-தன்மை வரையிலான குணக்-குழுவானது, ஜீவாத்மாவுக்கு இயல்பானதுதான்; அதுதான் (முக்தியில்) வெளிப்படுகிறது; ஆனாலும், அது அப்படியாவதே பரம-புருஷனால் விளைவதுதான்; அது நித்யமாக இருப்பதும் அவனால்தான்; பரமபுருஷனுக்கு இது நித்யமாக இஷ்டமானபடியால், இது நித்யமாக இருக்கிறது; ஆகவே, எந்த முரண்பாடும் இல்லை.

✍(நித்யமான பொருள்கள் எல்லாம் நித்யமாக தொடர்ந்த இருப்பது பரம புருஷனின் ஸங்கல்பத்தால்தான்; ஆகையால், அது நித்யம் என்பதிலும் பரம புருஷனால் ஆவது என்பதிலும் முரண்பாடு இல்லை)✍

एवमेव परमपुरुषभोगोपकरणस्य लीलोपकरणस्य च नित्यतया शास्त्रावगतस्य, परमपुरुषस्य नित्येष्टत्वादेव तथाऽवस्थानमस्तीति शास्त्रादवगम्यते। अतो मुक्तस्य सत्यसङ्कल्पत्वं परमपुरुषसाम्यं च जगद्व्यापारवर्जम्॥ २० ॥

* * *

५४४.भोगमात्रसाम्यलिङ्गाच्च (४-४-२१)

ब्रह्मयाथात्म्यानुभवरूपभोगमात्रे मुक्तस्य ब्रह्मसाम्यप्रतिपादनाच्च लिङ्गात् जगद्व्यापारवर्जमित्यवगम्यते, **"सोऽश्नुते सर्वान् कामान् सह ब्रह्मणा विपश्चिता"** (तै.1.आन.2) इति। अतो मुक्तस्य परमपुरुषसाम्यं सत्यसङ्कल्पत्वं च परमपुरुषासाधारणनिखिलजगन्नियमनश्रुत्यानुगुण्येन वर्णनीयमिति जगद्व्यापारवर्जमेव मुक्तैश्वर्यम् ॥२१॥

* * *

यदि परमपुरुषायत्तं मुक्तैश्वर्यम्, तर्हि तस्य स्वतन्त्रत्वेन तत्सङ्कल्पान्मुक्तस्य पुनरावृत्तिसम्भवाशङ्केत्यत्राह -

५४५.अनावृत्तिश्शब्दादनावृत्तिश्शब्दात् (४-४-२२)

यथा निखिलहेयप्रत्यनीककल्याणैकतानो जगज्जन्मादिकारणं समस्तवस्तुविलक्षणः

ஏவமேவ பரமபுருஷபோகோபகரணஸ்ய லீலோபகரணஸ்ய ச நித்யதயா ஶாஸ்த்ராவகதஸ்ய, பரமபுருஷஸ்ய நித்யேஷ்டத்வாதேவ ததா௨வஸ்தாநமஸ்தீதி ஶாஸ்த்ராதவகம்யதே। அதோ முக்தஸ்ய ஸத்யஸங்கல்பத்வம் பரமபுருஷஸாம்யம் ச ஜகத்வ்யாபாரவர்ஜம்।। 20 ।।

* * *

544.போகமாத்ரஸாம்யலிங்காச்ச(4-4-21)

ப்ரஹ்மயாதாத்ம்யாநுபவரூபபோகமாத்ரே முக்தஸ்ய ப்ரஹ்மஸாம்யப்ரதிபாதநாச்ச லிங்காத் ஜகத்வ்யாபாரவர்ஜமித்யவகம்யதே, *"ஸோ௨ஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா"* (தை.1.ஆந.2)[1] இதி। அதோ முக்தஸ்ய பரமபுருஷஸாம்யம் ஸத்யஸங்கல்பத்வம் ச பரமபுருஷாஸாதாரணநிகிலஜகந்நியமநஶ்ருத்யாநுகுண்யேந வர்ணநீயமிதி ஜகத்வ்யாபாரவர்ஜமேவ முக்தைஶ்வர்யம்।। 21 ।।

* * *

யதி பரமபுருஷாயத்தம் முக்தைஶ்வர்யம், தர்ஹி தஸ்ய ஸ்வதந்த்ரத்வேந தத்ஸங்கல்பாத் முக்தஸ்ய புநராவ்ருத்தி-ஸம்பவாஶங்கா இத்யத்ராஹ -

545.அநாவ்ருத்திஶ்ஶப்தாதநாவ்ருத்திஶ்ஶப்தாத் (4-4-22)

யதா நிகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாந: ஜகஜ்ஜந்மாதிகாரணம்

அப்படியே பரம-புருஷனது போக-உபகரணமும் லீலா-உபகரணமும் நித்யமாக இருப்பதாக ஶாஸ்த்ரத்தில் தெரிவதானது, பரம-புருஷனுக்கு நித்யமாக இஷ்டமானபடியால் அப்படி இருப்பதாக உள்ளது என்பதும் ஶாஸ்த்ரத்தால் தெரிகிறது.

ஆகவே, முக்தனுடைய ஸத்ய-ஸங்கல்ப-தன்மையும் பரம-புருஷனுடன் ஸமமாக ஆகும் தன்மையும் உலக-செயலைத் தவிர்த்து அமையும்.

◆ ◆ ◆ ◆

544.போகமாத்ர-ஸாம்ய-லிங்காத் ச (4-4-21)

போகத்தால் மட்டுமே ஸமமாக ஆவதைக் குறிக்கும் அடையாளத்தாலும்

ப்ரஹ்மத்தின் உண்மை-நிலையை அனுபவித்தல் எனும் போகத்தையிட்டு மட்டுமே முக்தன் ப்ரஹ்மத்துக்கு ஸமமாக ஆகிறான் என்பதை வேதம் சொல்கிறது - **''அவன் ஸர்வஜ்ஞனான ப்ரஹ்மத்துடன் எல்லா கல்யாண-குணங்களையும் அனுபவிக்கிறான்''** என்று; இந்த லிங்க(அடையாள)த்தால், உலக-செயலைத்தவிர்த்தது (முக்த-ஐஶ்வர்யம்) என்று தெரிகிறது.

ஆகையால், எல்லா உலகையும் நியமநம் செய்தலை பரமபுருஷனுக்கு மட்டும் தனிப்பட்டதாக சொல்லும் வேதவாக்யங்களுக்கு ஏற்பவே, முக்தன் ஆனவன் பரமபுருஷனுக்கு ஸமமாக ஆதலும், ஸத்யஸங்கல்பன் ஆக இருப்பதும் வர்ணிக்கப் பட வேண்டும்; ஆகையால் (உலகை படைத்து நியமநம் செய்தல் ஆகிற) உலக-செயல்களைத் தவிர்த்தே முக்தனது ஐஶ்வர்யம் ஆகும்.

◆ ◆ ◆ ◆

கேள்வி - முக்தனது ஐஶ்வர்யமானது பரம-புருஷனுக்கு அதீனமானது என்றால், அந்த பரமபுருஷன் சுதந்திரன் ஆனபடியால், அவனது ஸங்கல்பத்தால் முக்தன் திரும்பி வர நேரிடுமோ எனும் ஶங்கை உதிக்கிறது;

பதில் - அதற்கு பதில் சாதிக்கிறார் -

545.அநாவ்ருத்தி: ஶப்தாத் அநாவ்ருத்தி: ஶப்தாத்(4-4-22)

திரும்ப மாட்டான் என்பது வேதவாக்யம் மூலம் [தெரிகிறது].

பரம-புருஷன் ஆனவன் எல்லா விடத்தக்க இழி-குணங்களுக்கும் எதிர்த்தட்டாய் கல்யாண-குணங்களுக்கு ஒரே இருப்பிடமானவன்; உலகங்களின் பிறப்பு முதலியதற்குக் காரணமானவன்; எல்லா பொருள்களையும் விட வேறுபட்டவன்;

सर्वज्ञः सत्यसङ्कल्पः आश्रितवात्सल्यैकजलधिः परमकारुणिको निरस्तसमाभ्यधिकसम्भावनः परब्रह्माभिधानः परमपुरुषोऽस्तीति शब्दादवगम्यते, एवमहरहरनुष्ठीयमानवर्णाश्रमधर्मानुगृहीततदुपासनरूपतत्समाराधनप्रीतः उपासीनान् अनादिकालप्रवृत्तानन्तदुस्तरकर्मसञ्चयरूपाविद्यां विनिवर्त्य स्वयाथात्म्यानुभवरूपानवधिकातिशयानन्दं प्रापय्य पुनर्नावर्तयतीत्यपि शब्दादेवावगम्यते। शब्दश्च, “**स खल्वेवं वर्तयन् यावदायुषं ब्रह्मलोकमभिसम्पद्यते न च पुनरावर्तते (न च पुनरावर्तते)**”(छा.8-15-1) इत्यादिकः। तथा च भगवता स्वयमेवोक्तम्,

“मामुपेत्य पुनर्जन्म दुःखालयमशाश्वतम्।
नाप्नुवन्ति महात्मानः संसिद्धिं परमां गताः॥

आब्रह्मभ(भु)वनाल्लोकाः पुनरावर्तिनोऽर्जुन।
मामुपेत्य तु कौन्तेय पुनर्जन्म न विद्यते॥” (गी.8-15,16) इति।

न च उच्छिन्नकर्मबन्धस्यासङ्कुचितज्ञानस्य परब्रह्मानुभवैकस्वभावस्य तदेकप्रियस्यानवधिकातिशयानन्दं ब्रह्मानुभवतः अन्यापेक्षातदर्थारम्भाद्यसम्भवात् पुनरावृत्तिशङ्का।

ஸமஸ்தவஸ்துவிலக்ஷண: ஸர்வஜ்ஞ: ஸத்யஸங்கல்ப: ஆஶ்ரிதவாத்ஸல்யைகஜலதி: பரமகாருணிகோ நிரஸ்தஸமாப்யதிகஸம்பாவந: பரப்ரஹ்மாபிதாந: பரமபுருஷோऽஸ்தீதி ஶப்தாதவகம்யதே - ஏவமஹரஹரநுஷ்டீயமாநவர்ணாஶ்ரமதர்மாநுக்ருஹீத-ததுபாஸநரூபதத்ஸமாராதநப்ரீத: உபாஸீநாந் அநாதிகாலப்ரவ்ருத்தாநந்ததுஸ்தரகர்மஸஞ்சயரூபாவித்யாம் விநிவர்த்ய ஸ்வயாதாத்ம்யாநுபவரூபாநவதிகாதிஶயாநந்தம் ப்ராபய்ய புநர்நாவர்தயதீத்யபி ஶப்தாதேவாவகம்யதே। *ஶப்தஶ்ச*, “*ஸ கல்வேவம் வர்தயந் யாவதாயுஷம் ப்ரஹ்மலோகமபிஸம்பத்யதே ந ச புநராவர்ததே (ந ச புநராவர்ததே)*”(சா.9-15-1)[1] இத்யாதிக:। ததா ச பகவதா ஸ்வயமேவோக்தம்,

“மாமுபேத்ய புநர்ஜந்ம து:காலயமஶாஶ்வதம்।
நாப்நுபவந்தி மஹாத்மாந: ஸம்ஸித்திம் பரமா கதா:॥

ஆப்ரஹ்ம(பு)பவநால்லோகா: புநராவர்திநோऽர்ஜுந।
மாமுபேத்ய து கௌந்தேய புநர்ஜந்ம ந வித்யதே॥” (கீ.8-15,16)[1] இதி।

ந ச உச்சிந்நகர்மபந்தஸ்யாஸங்குசிதஜ்ஞாநஸ்ய பரப்ரஹ்மாநுபவைகஸ்வபாவஸ்ய ததேகப்ரியஸ்யாநவதிகாதிஶயாநந்தம் ப்ரஹ்மாநுபவத: அந்யாபேக்ஷாததர்தாரம்பாத்யஸம்பவாத் புநராவ்ருத்திஶங்கா।

எல்லாம் அறிபவன்; (ஸத்ய-ஸங்கல்பன்) தடையற்ற ஸங்கல்பம் உடையவன்; தன்னிடம் அண்டினவர்களிடம் வாத்ஸல்யம் மட்டுமே நிறைந்த கடல் ஆனவன்; பரம-காருணிகன் (கருணையுடையவரில் மிக உயர்ந்தவன்); தனக்கு ஸமமானதோ உயர்வானதோ ஆன ஏதாவது இருக்குமோ என்ற வாய்ப்பே அற்றவன்; பர-ப்ரஹ்மம் என்று சொல்லப்படுபவன்; இப்படியான பரம-புருஷன் இருக்கிறான் என்பது வேதமாகிற சப்தம் மூலம் தெரிய வருகிறது.

அப்படியே, அவனைப் பற்றிய உபாஸநம் ஆனது, அன்றன்று அனுஷ்டானம் செய்யப்படும் வர்ணாஶ்ரம-தர்மங்களின் துணை கொண்டது; அது, அவனுக்கான ஆராதநமாவது; அந்த ஆராதநத்தால் அவன் ப்ரீதி அடைபவனாய், உபாஸநம் செய்பவர்களுக்கு, அநாதி-காலமாக நடந்து வரும் எல்லையற்ற கடக்கமுடியாத புண்ய-பாப-கர்ம-குவியல் ஆகிற அவித்யையை போக்குகிறான்; பின், தன் உண்மை-நிலையை அனுபவித்தல் ஆகிற உயர்வற உயர்ந்த ஆனந்தத்தை அடைவிக்கிறான்; பின் மீண்டும் அவனைத் திருப்பி அனுப்புவதில்லை என்பதும் வேதத்தாலேயே தெரிகிறது.

அந்த வேத வாக்யமானது - **''அவன் ஆயுள் முடியும் வரை இப்படி உபாஸநத்துக்கான கர்மம் செய்பவனாக இருப்பவனாய், பின் ப்ரஹ்ம-லோகத்தை அடைகிறான்; மீண்டும் திரும்பி வருவதில்லை''** முதலானது ஆகும்.

அப்படியே பகவானாலும் தாமாகவே சொல்லப்பட்டது -

''உயர்ந்த ஸித்தி பெற்ற மஹான்கள், என்னை அடைந்து, துக்கத்தின் இருப்பிடமும் நிலையற்றதுமான மறுபிறவியை அடைவதில்லை;

அர்ஜுனா, ப்ரஹ்ம-தேவனின் உலகம் வரை எல்லா உலகங்களும் மீண்டும் தோன்றக் கூடியவை; என்னை அடைந்தாலோ, மறுபிறவி கிடையாது'' என்று.

முக்த-ஜீவனானவன் (தானாக ஸம்ஸாரத்துக்கு) திரும்பி வருவானோ எனும் ஐயம் இல்லை; ஏனெனில் கர்ம-பந்தம் அழியப் பெற்றவனாய், சுருக்கமற்ற ஜ்ஞானம் பெற்றவனாய், பர-ப்ரஹ்ம-அனுபவம் மட்டுமே இயல்பாகக் கொண்டவனாய், அதுவே விருப்பமாக உடையவனாய், உயர்வற உயர்ந்த ப்ரஹ்மத்தை அனுபவிக்கும் இவனுக்கு, வேறொரு தேவை, அதற்கான முயற்சி முதலியதுவராது;

न च परमपुरुषः सत्यसङ्कल्पोऽत्यर्थप्रियं ज्ञानिनं लब्ध्वा कदाचिदावर्तयिष्यति, य एवमाह -

''प्रियो हि ज्ञानिनोऽत्यर्थमहं स च मम प्रियः॥

उदाराः सर्व एवैते ज्ञानी त्वात्मैव मे मतम्।
आस्थितः स हि युक्तात्मा मामेवानुत्तमां गतिम्॥

बहूनां जन्मनामन्ते ज्ञानवान् मां प्रपद्यते।
वासुदेवः सर्वमिति स महात्मा सुदुर्लभः॥''(गी.7-17,18,19) इति।

सूत्राभ्यासः शास्त्रपरिसमाप्तिं द्योतयतीति सर्वं समञ्जसम्॥ २२ ॥

इति श्रीभगवद्रामानुजविरचिते शारीरकमीमांसाभाष्ये
चतुर्थस्याध्यायस्य चतुर्थः पादः॥ ४ ॥
श्रीशारीरकमीमांसाशास्त्रं श्रीभाष्यञ्च परिसमाप्तम्॥
श्रीमते रामानुजायनमः॥ श्रीरस्तु॥ शुभमस्तु॥

ந ச பரமபுருஷ: ஸத்யஸங்கல்ப: அத்யர்துப்ரியம் ஜ்ஞாநிநம் லப்த்வா கதாசிதாவர்தயிஷ்யதி, ய ஏவமாஹ -

"ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்தமஹம் ஸ ச மம ப்ரிய:।।

உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்।
ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம்।।

பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே।
வாஸுதேவ: ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:।।"(கீ.7-17,18,19)[1] இதி।

ஸூத்ராப்யாஸ: ஶாஸ்த்ரபரிஸமாப்திம் த்யோதயதி - இதி ஸர்வம் ஸமஞ்ஜஸம்।। 22 ।।

இதி ஸ்ரீபகவத்ராமாநுஜவிரசிதே ஶாரீரகமீமாம்ஸாபாஷ்யே
சதுர்தஸ்யாத்யாயஸ்ய சதுர்த: பாத:।। 4 ।।
ஸ்ரீஶாரீரகமீமாம்ஸாஶாஸ்த்ரம் ஸ்ரீபாஷ்யஞ்ச பரிஸமாப்தம்।।
ஸ்ரீமதே ராமாநுஜாயநம:।। ஸ்ரீரஸ்து।। ஶுபமஸ்து।।

⁂

ஸத்ய-ஸங்கல்பன் ஆன பரம-புருஷனும், சொல்லமுடியாத அளவு மிகவும் ப்ரியமானவனான ஜ்ஞானியைப் பெற்று, எப்போதும் திருப்பி அனுப்ப மாட்டான்; எந்த பரம-புருஷன் (ஜ்ஞாநியைப் பற்றி) இப்படி சொல்கிறானோ -

''ஜ்ஞானிக்கு நான் சொல்லமுடியாத அளவு மிகவும் பிரியமானவன்; அவனும் எனக்கு பிரியமானவன்;

இவர்கள் எல்லாருமே வள்ளல்கள்; ஜ்ஞாநியோ எனக்கு ஆத்மா என்பது என் மதம்; யோகம் செய்யும் அவன் என்னையே உயர்ந்த கதியாக கொண்டவன்;

பல புண்ய-பிறப்புகளின் இறுதியில் ஜ்ஞாநம் பெற்றவன் என்னை அடைகிறான்; 'வாஸுதேவனே எனக்கு எல்லாம்' என்று இருக்கும் அவன் மஹாத்மா; அவன் எனக்கு கிடைக்க அரியவன்'' என்று. (அப்படி சொல்லும் பெருமான் கட்டாயம் திருப்பி அனுப்ப மாட்டான்).

ஸூத்ரத்தை இருமுறை சொன்னது ஶாஸ்த்ரம் முடிந்து விட்டது என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது.

இப்படியாக எல்லாம் (எல்லா வேத-வசநமும்) சரியாகிறது.

* * *

ஜகத்வ்யாபாரவர்ஜாதிகரணம்.

இப்படியாக ஸ்ரீபகவத்-ராமானுஜர் அருளிய ஶாரீரக-மீமாம்ஸா-பாஷ்யத்தில்
நான்காவது அத்யாயத்தின் நான்காவது பாதம் ஆயிற்று.
ஸ்ரீபகவத்ராமாநுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யம் முற்றிற்று
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பின் இணைப்புகள்

பின் இணைப்புகள்

1. பஞ்சாக்னிவித்யை
2. ஆசாரம் - அனுஷ்டானம்
3. யாகத்தில் அஹிம்ஸை
4. உபஸம்ஹாரம் - விகல்பம்
5. ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணம்
6. உத்கீதவித்யை
7. அங்கமாவதை அறிவிக்கும் ப்ரமாணங்கள்
8. ஔபஸதம்
9. பர்ணதா - ஜுஹூ வாக்யங்கள்
10. க்ரமம்
11. அர்ச்சிராதி கதி
12. அருஞ்சொற்பொருள்
13. அதிகரண ஸாரம்

1.பஞ்சாக்னி வித்யை

(3-1 பாதம்முழுவதும்)

மூன்றாவது அத்யாயத்தில் முதல் பாதம் முழுவதும் பஞ்சாக்னி-வித்யையில் சொன்ன விஷயங்கள் பற்றி வருகிறது; சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ள அந்த விஷயங்களை சுருக்கமாக பார்க்கலாம்.

ச்வேதகேது என்பவன், பாஞ்சால அரசனின் சபைக்கு போனான்; அவனை அரசர் ப்ரவாஹணர் என்பவர் ஐந்து கேள்விகள் கேட்டார்.

1. மக்கள் இவ்வுலகிலிருந்து எங்கு போகிறார்கள்? தெரியுமா?
2. எப்படி (இவ்வுலகுக்கு) திரும்பி வருகிறார்கள்? தெரியுமா?
3. தேவயான மார்க்கம், பித்ருயான மார்க்கம் எனும் இரண்டின் வித்யாசம் தெரியுமா?
4. யாரால் அந்த ஸ்வர்க்க உலகம் அடையப் படுவதில்லை? தெரியுமா?
5. ஐந்தாவது ஆஹுதியில் ஜலமானது எப்படி புருஷன் என்று சொல்லத் தக்கதாக ஆகிறது? தெரியுமா?

ஒவ்வொரு கேள்வி கேட்கும்போதும், 'தெரியாது' என்று அவன் பதில் சொன்னான்.

பிறகு தன் தந்தையிடம் போய் சபையில் நடந்ததைச் சொன்னான்; தான் அவமானப் பட்டதைச் சொன்னான்; ஆனால், அவருக்கும் இந்த கேள்விகளுக்கு பதில் தெரியவில்லை; எனவே, அவரே ராஜ-சபைக்கு வந்து இவற்றின் பதில்களை மெதுவாக கேட்டு அறிந்தார்.

அவருக்கு ஒவ்வொரு கேள்வியாக அரசன் தானே பதில்-விளக்கம் அளித்தான்.

மரணத்துக்கு பின் இவ்வுலகிலிருந்து போகும் மக்கள் மூன்று விதம் -

1. ப்ரஹ்ம-உபாஸனம் செய்பவர்,அர்ச்சிராதி வழியில் சென்று ப்ரஹ்மத்தை அடைவர்; அர்ச்சிராதி மார்க்கம்தான் தேவயான மார்க்கம் ஆகும். அவர்கள்மறுபிறவி பெற மாட்டார்.
2. ப்ரஹ்ம-உபாஸனம் செய்யாமல், புண்யங்கள் செய்பவர், தூமாதி மார்க்கத்தில் (பித்ருயானத்தில்)ஸ்வர்க்கம் செல்வர்; அங்கு பலனை அனுபவித்துவிட்டு, மறுபிறவி எடுப்பர்; அப்போது பஞ்சாஹுதி முறையில் அடுத்த சரீரம் கிடைக்கும்.

3. இரண்டும் செய்யாமல், வெறும் பாபம் மட்டும்செய்பவர், ஸ்வர்க்க லோகம் போக மாட்டார்; இங்கேயே அடுத்தடுத்த பிறவிகளில் புழு பூச்சிகளாக பிறப்பர்; இவர்களுக்கு பஞ்சாஹூதி முறை கிடையாது; அல்ப வாழ்வு வாழ்ந்து, அநேக பிறவிகள் எடுத்து அல்லல் உறுவர்.

ஜீவன், மரணத்தில், இந்த சரீரத்தை விட்டு ஸ்வர்க்க லோகத்துக்காக வெளியேறும்போது, கூடவே, ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்கள் போகின்றன; அந்த பஞ்சபூதங்கள்தாம், பின்னர், அடுத்த பிறவியில், ஒரு உடலாக மாறுகின்றன.

அந்த முறைதான் பஞ்சாஹூதி முறையாகும் -

1. ஜீவன் இங்கிருந்து போகும்போது, ஸூக்ஷ்மமான பஞ்ச பூதங்களுடன் போகிறான்; அவை இந்த்ரியங்கள் மற்றும் ப்ராணன்களால் ஸ்வர்க்க-உலகில் இடப்படும்; அங்கு அவை ஸ்வர்க்க-சுக-அனுபவம் பெறுவதற்கு ஏற்ப அம்ருதமயமான சரீரம் ஆக ஆகின்றன.
2. ஸ்வர்க்க-உலகில் போகம் அனுபவித்தபின், அந்த சரீரமானது, த்ரவமாக மாறி, மேகமண்டலத்தில் விழுந்து, பின்னர் மழையாக ஆகிறது.
3. மழையானது, மண்ணில் விழுந்து, நெல் முதலிய உணவுப் பொருளாக ஆகிறது.
4. அந்த உணவை ஆண் சாப்பிட, அது விந்துவாக ஆகிறது.
5. அந்த விந்துவினை பெண்ணிடம் சேர்க்க, அவளுடைய கர்ப்பமாக ஆகிறது

இப்படியாக இந்த பஞ்சபூதங்களுடன் கூடிய ஜீவனை வரிசையாக ஐந்து இடங்களில் இந்த்ரியங்களும் ப்ராணன்களும் இடுகின்றன; இதனை வேதம் சொல்லும் போது, ஒரு உருவாக கற்பனையாக சொல்கிறது; ஐந்து அக்னிகளில் ஐந்து ஹோமங்களாக இதனை இடுகின்றன என்று சொல்கிறது; எனவே, இந்த வித்யைக்கு பஞ்சாக்னி வித்யை என்று பெயர்.

இதையெல்லாம் வேதம் விளக்குவதை இப்போது பார்க்கலாம்.

ஐந்தாவது கேள்விக்கு பதில் விளக்கம் -

ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்கள், புருஷன் என்று சொல்லும்படியாக மறுபிறவி எடுக்கும் முறையில் ஐந்து ஆஹூதிகள் -

1. ஸ்வர்க்க-உலகம் எனும் அக்னியில் தேவர்கள் ச்ரத்தையை ஹோமம் செய்கின்றனர்; அந்த ஆஹூதியிலிருந்து ஸோம-ராஜன் உண்டாகிறான்.

(தேவர்கள்- இந்த்ரியங்கள் அல்லது ப்ராணவாயுக்கள் என்று அர்த்தம்.

ச்ரத்தையை - ஜலத்தை என்று அர்த்தம்; இது பஞ்சபூதங்களையும் குறிக்கும்.

ஸோமராஜன் - ஸ்வர்க்க உலகில் போகம் அனுபவிக்க ஏற்றதான இனிமையான சரீரத்தை உடையவனாக ஆகிறான் என்று அர்த்தம்.)

2. அந்த சரீரத்தை பர்ஜன்யன் (மழை-தேவன்) எனும் அக்னியில் அதே தேவர்கள் இடுகின்றனர்; அங்கு இடப்பட்ட அது மழை ஆகிறது.

3. அந்த மழையை பூமி என்னும் அக்னியில் இடுகின்றனர்; அது உணவாக ஆகிறது

4. அந்த உணவை ஆண் என்னும் அக்னியில் இடுகின்றனர்; அது ரேதஸ்ஸாக ஆகிறது.

5. அந்த ரேதஸ்ஸினை பெண் என்னும் அக்னியில் இடுகின்றனர்; அது கர்ப்பமாக ஆகிறது.

இப்படியாக முதலில் சொன்ன ஜலமானது, ஐந்தாவது ஆஹூதியில் (ஹோமத்தில்) 'புருஷன்' என்று சொல்லும்படியாக ஆகிறது.

(ஜீவன் இறந்தபின், ஸூக்ஷ்மமான பஞ்ச-பூதங்களுடன் ஸ்வர்க்க-உலகம் போகிறான்; பின்னர், அவனே அங்கு நல்ல ஒரு சரீரம் எடுப்பதால், ஸோமராஜன் என்னும்படி ஆகிறான்; பின்னர், வரிசையாக, மழையாக ஆகி, உணவாக ஆகி, ரேதஸ்ஸாக ஆகி, இறுதியில் கர்ப்பமாக ஆகிறான். அந்தந்த பொருட்களுடன் ஜீவன் கூடவே பயணிக்கிறான்; அந்த பொருள்களுடன் மிக நெருக்கமாக ஒட்டி இருக்கிறான்; அதனால், அந்தந்த பொருளாகவே ஜீவன் ஆகிறான் என்று சொல்கிறது).

மூன்றாம் கேள்விக்கும் முதல் கேள்விக்கும் பதில் விளக்கம் -

தேவயான-பித்ருயான வழிகள் - இங்கிருந்து போகும் முறை

தொடர்ந்து உபநிஷத் சொல்கிறது - ''யார் ஜீவாத்மாவை இப்படி பஞ்சாக்னி-வித்யையில் சொல்லப்பட்டபடி ஐந்து உருவினனாக உபாஸனம் செய்கிறாரோ, மற்றும் யார் காட்டில் ச்ரத்தையை முன்னிட்டு தபஸ்ஸினை (ப்ரஹ்மத்தை) உபாஸனம் செய்கின்றனரோ, அவர்கள் அர்சிர்தேவனை அடைவர்; அர்சிர்தேவனிடமிருந்து அஹஸ்ஸினை, அஹஸ்ஸிலிருந்து சுக்லபக்ஷத்தை, சுக்லபக்ஷத்திலிருந்து உத்தராயணத்தை, உத்தராயணத்திலிருந்து ஸம்வத்ஸரத்தை, ஸம்வத்ஸரத்திலிருந்து ஆதித்யனை; ஆதித்யனிடமிருந்து

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

சந்த்ரனை; சந்த்ரனிடமிருந்து வித்யுத்-புருஷனை அடைவர்; அந்த வித்யுத்-புருஷன் அமானவன் (ஸம்ஸாரி அல்ல); அவன் இவர்களை ப்ரஹ்ம-லோகம் அடைவிக்கிறான்; இதுதான் தேவயான-வழி ஆகும். (விளக்கம் *4-3* பாதத்தில்)

யார் (காட்டுக்கு போகாமல்) ஊரில் இருந்துகொண்டே யாகம், பூர்த்தம் (பொதுத்தொண்டு), தானம் ஆகியவற்றை (புண்யசெயல்களை) செய்கிறார்களோ, அவர்கள், தூமத்தை (புகை-தேவனை) அடைகின்றனர்; தூமத்திலிருந்து இரவினை; இரவிலிருந்து க்ருஷ்ணபக்ஷத்தை; க்ருஷ்ணபக்ஷத்திலிருந்து தக்ஷிணாயனத்தை அடைகின்றனர்; இவர்கள் ஸம்வத்ஸரத்தை அடைவதில்லை; தக்ஷிணாயனத்திலிருந்து பித்ருலோகத்தை; பித்ருலோகத்திலிருந்து ஆகாசத்தை; ஆகாசத்திலிருந்து சந்த்ரனை அடைவர்; இவன் ஸோமராஜன் ஆகிறான் (நல்ல போகத்துக்குரிய சரீரம் எடுக்கிறான்); அவன் தேவர்களின் உணவு ஆகிறான்; அவனை தேவர்கள் உண்கின்றனர். (விளக்கம் - 3-1-7 ஸூத்ரத்தில்)

இரண்டாம் கேள்விக்கு பதில் - திரும்பி வரும் முறை

அங்கு ஸம்பாதம் (அனுபவிக்க வேண்டிய கர்மம்) தீரும்வரை வசித்துவிட்டு, பின்னர், எஞ்சிய கர்மங்களுடன் இந்த வழியிலேயே திரும்பி வருகின்றனர்; (ஏறினபோது) சென்ற முறையில் (சந்த்ரனிலிருந்து) ஆகாசத்தை; ஆகாசத்திலிருந்து வாயுவை; வாயுவாக ஆனபின், தூமம் ஆகிறான்; தூமமாக ஆனபின் அப்ரம் (நீருண்ட மேகம்) ஆகிறான்; அப்ரமாக ஆனபின், (மழை பொழியும்) மேகமாக ஆகிறான்; மேகமாக ஆனபின், மழையாகிறான்; இங்கு நெல்-யவங்கள், ஓஷதி-மரங்கள், எள்-உளுந்துகள் என்றிப்படி பிறக்கிறான்; இந்த நிலையிலிருந்து கஷ்டப்பட்டு (அதிக காலம் கழித்து) வெளிவருதல் ஆகும்; பிறகு யார் உணவு உண்கிறானோ, யார் ரேதஸ் சேர்த்து நனைக்கிறானோ, அப்படி ஆகிறான்.

(அதிகரணங்கள் 3-1-2 முதல் 3-1-6 வரை இதன் விளக்கமே.)

அவர்களில் யார் திரும்பி வருபவர்களாக எப்போது நல்ல புண்யகர்மங்களை உடையவரோ, அப்போது அவர் நல்ல கருவை - ப்ராஹ்மணபிறப்பையோ, க்ஷத்ரியபிறப்பையோ, வைச்யபிறப்பையோ அடைவர்.

யார் திரும்பி வருபவர்களாக எப்போது மோசமான கர்மங்கள் உடையவர்களோ, அப்போது அவர்கள் மோசமான கருவை - நாய்ப்பிறப்பையோ, பன்றிப் பிறப்பையோ, சண்டாளப் பிறப்பையோ அடைவர். (ஜீவர்கள் அவ்வப்போது கர்மத்துக்கு ஏற்ற பிறவி எடுப்பர்).

நான்காம் கேள்விக்கு பதில் - ஸ்வர்க்க லோகம் அடையாதவர்கள்

அடுத்து, யார் இந்த தேவயானம், பித்ருயானம் எனும் இரு வழிகளிலும் போகவில்லையோ, அவர்கள் (வித்யையும் புண்யகர்மமும் செய்யாதவர்கள்) அடிக்கடி பிறக்கும் நீச ஜந்துக்களாக மீண்டும் மீண்டும் பிறப்பதும் இறப்பதுமாக ஆகின்றனர்; இது மூன்றாவது வகுப்பு; இதனால், (இதில் உள்ளவரால்) ஸ்வர்க்க-உலகம் அடையப் படுவதில்லை. *(அதிகரணம் 3-1-3)*

முடிவுரை - வைராக்யபாதத்தின் விஷயம்

ஸம்ஸாரிகளின் கதி இப்படியெல்லாம் இருப்பதால், ஸம்ஸாரத்தில் வெறுப்பு கொள்ளுக. (வைராக்யம் பெறுக); அதையே இந்த வைராக்யபாதம் உணர்த்துகிறது.

★★★★★★★★★★★★★★★★★

In Public domain. Digitized by Muthulakshmi Research Academy

2.ஆசாரம் - அனுஷ்டானம்

(3-2-1 - க்ருதாத்யயாதிகரணம்)

ஆசாரம், அனுஷ்டானம் என இரண்டு விஷயங்களை சாஸ்த்ரங்கள் சொல்கின்றன; ஆசாரம் என்பது அனுஷ்டானத்துக்கு தேவையான அடிப்படை தகுதியைக் கொடுப்பது; உதாஹரணமாக ஸ்நானம் முதலியது ஆசாரம் ஆகும்; ஸ்நானம் செய்தபின் செய்ய வேண்டிய திருவாராதனம். பஞ்சமஹாயஜ்ஞம் முதலியவை அனுஷ்டானம் ஆகும்.

ஆசாரத்துக்கு என்று தனியாக பலன் எதுவும் கிடையாது; ஆசாரத்துடன் நாம் செய்யும் அனுஷ்டானத்துக்குதான் பலன் உண்டு; ஆகவே வெறும் ஆசாரத்தை கடைபிடிப்பது பலன் அளிக்காது; ஆசாரம் என்பது அனுஷ்டானத்துக்காகவே ஆகும்.

அதே சமயம் ஆசாரம் இல்லாமல் வெறும் அனுஷ்டானம் மட்டும் செய்யக் கூடாது; அது மோசமான அனுஷ்டானம் ஆகும்; அது பலன் அளிக்காமல் போகலாம். விபரீத பலனும் அளிக்கலாம்.

சாந்தோக்ய-உபநிஷத்தில் ஒரு வாக்யம் - ''நல்ல சரணம் உடையவர்கள் நல்ல பிறவி எடுப்பர்; மோசமான சரணம் உடையவர்கள் தாழ்ந்த பிறவி எடுப்பர்'' என்று சொல்கிறது; இங்கு சரணம் என்றால் கர்ம-அனுஷ்டானம் என்று அர்த்தம்.

இது பற்றிய விசாரம் ஒன்று இந்த அதிகரணத்தில் உள்ளது.

கார்ஷ்ணாஜினி முனிவரின் கருத்து - 'சரணம்' என்றால் ஆசாரம்; 'கர்மம்' என்றால் அனுஷ்டானம்; இப்படி இரண்டுக்கும் வேறுபாடு சொல்ல வேண்டும்; ஏனெனில், தைத்திரீய உபநிஷத்தில்

- முதலில், ''யான்யனவத்யானி கர்மாணி ... (நல்ல கர்மங்கள் செய்ய வேண்டும்)''என்று முதலில் சொல்லிவிட்டு,
- பின்னர்''யான்யஸ்மாகம் ஸுசரிதானி(நல்ல ஆசாரம் செய்ய வேண்டும்)'' என்று தனியாக சொல்கிறது;

ஆகவே, கர்மம் என்பதும் சரிதம் (ஆசாரம்) என்பதும் வெவ்வேறாகும்; கர்மம் என்பது அனுஷ்டானம்; சரணம் என்பது ஆசாரம் ஆகும் என்று தெரிகிறது.

கேள்வி - ''ரமணீயசரணா:'' என்று ஆரம்பிக்கும் ஒரு வாக்யம் சாந்தோக்ய உபநிஷத்தில் உள்ளது; அதில்'நல்ல சரணம் உள்ளவர்கள் நல்ல

பிறவியில் பிறப்பார்; மோசமான சரணம் உடையவர்கள் மோசமான பிறவி எடுப்பார்' என்று சொல்கிறது; இங்கு சரணம் என்றால் 'ஆசாரம்' என்ற அர்த்தம் பொருந்தாது;ஏனெனில், வெறும் ஆசாரம் ஆனது பலன் அளிக்காது; அது நற்பிறவிக்கோ மோசமான பிறவிக்கோ காரணமாக ஆகாது.

கார்ஷ்ணாஜினிபதில் - உண்மைதான்; பொதுவாக சரணம் என்றால் ஆசாரம் என்று அர்த்தம்; ஆனால், இங்கு இந்த உபநிஷத் வாக்யத்தில், 'சரிதம்(சரணம்) என்றால், ஆசாரத்தை முன்வைத்து செய்யும் கர்ம-அனுஷ்டானம் என்று அர்த்தம்; இதுநேர் அர்த்தம் அல்ல; லக்ஷணையால் கிடைக்கும் அர்த்தம் ஆகும்.

பாதரி முனிவரின் கருத்து - 'சரணம்' என்றாலும், 'கர்மம்' என்றாலும், இரண்டுக்கும் பொதுவாக கர்ம-அனுஷ்டானம் என்றுதான் அர்த்தம்; எடுத்துக்காட்டாக உலக வழக்கில் உள்ள சில வாக்யங்கள் -

- புண்யம் ஆசரதி- (புண்யசெயலைச் செய்கிறான்).
- பாபம் ஆசரதி - (பாப செயலைச் செய்கிறான்)
- நித்யகர்ம ஆசரதி - (நித்யகர்ம அனுஷ்டானம் செய்கிறான்)

கேள்வி - அப்படியானால், தைத்திரீய உபநிஷத்தில் 'கர்மாணி' என்றும் 'சரிதானி' என்றும் பிரித்து சொன்னது எதற்கு?

பதில் - பொதுவாக இரண்டுக்கும் கர்ம-அனுஷ்டானம் என்றுதான் அர்த்தம்; இந்ததைத்திரீயவாக்யத்தில் பிரித்து சொல்லி இருப்பதால் பிரித்து அர்த்தம் வைத்துக் கொள்ள வேண்டும்; இங்கே, 'கர்மாணி' என்றால் லௌகிக செயல்கள் என்று அர்த்தம்; (ஸு)சரிதானி' என்றால் வைதிக-செயல் அனுஷ்டானம் என்று அர்த்தம்.

ஆகவே, சாந்தோக்ய உபநிஷத்தில், ''நல்ல சரணம் உடையவர் நற்பிறவி எடுப்பர்'' என்று சொல்லும்போது 'சரணம்' என்றால், 'கர்ம-அனுஷ்டானம் என்றுதான் அர்த்தம்.

கார்ஷ்ணாஜினி பாதரி ஆகிய இருவருக்கும் உள்ள கருத்து ஒற்றுமைகள் -

- ஆசாரம், அனுஷ்டானம் ஆகிய இரண்டும் வெவ்வேறு.
- வெறும் ஆசாரம் பலன் அளிக்காது.
- சாந்தோக்யத்தில், ''நல்ல சரணம் உடையவர் நற்பிறவி எடுப்பர் ...'' என்று சொல்லும் போது; 'சரணம்' என்னும் சொல்லுக்கு கர்ம-அனுஷ்டானம் என்று அர்த்தம்.

கார்ஷ்ணாஜினி பாதரி ஆகிய இருவருக்கும் உள்ள கருத்து வேறுபாடு -

- 'கார்ஷ்ணாஜினி முனிவரின் கருத்து - சரணம்' என்ற சொல்லுக்கு 'ஆசாரம் என்பது நேர்ப்பொருள்; புண்யபாப-கர்ம-அனுஷ்டானம் என்பது லக்ஷணையால் கிடைக்கும் பொருள்.
- பாதரி முனிவரின் கருத்து - சரணம்' என்ற சொல்லுக்கு புண்யபாப-கர்ம-அனுஷ்டானம் என்பதே நேர்ப் பொருள் ஆகும்.

இதில் பாதரி முனிவரின் கருத்தை ஸ்ரீவ்யாசர் ஸித்தாந்தமாக ஏற்கிறார்.

இங்கு வேறொரு முக்கிய குறிப்பு ஸ்ரீபாஷ்யத்தில் உள்ளது - நாம் செய்யும் ஸந்த்யாவந்தநம் என்பது ஆசாரம் ஆகும்; கர்ம-அனுஷ்டானம் அல்ல; ஸந்த்யாவந்தநம் செய்வதற்கு தனியாக பலன் எதுவும் கிடையாது; அதே சமயம் ஸந்த்யாவந்தநம் செய்தால்தான் மற்ற அனுஷ்டானங்கள் செய்யலாம்; குளிக்காமல்அனுஷ்டானம் செய்யக் கூடாது என்பதுபோல, ஸந்த்யாவந்தநம் செய்யாமல் எந்த அனுஷ்டானமும் செய்யக் கூடாது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

3.யாகத்தில் அஹிம்ஸா

(3-1-6 அன்யாதிஷ்டிதாதிகரணம்)

ஸோமயாகத்தில், 'அக்னீஷோமீயம்' என்று ஒரு க்ரது (யாகம்) உள்ளடங்கியது; ''அக்னீஷோமீயம் பசும் ஆலபேத'' என்று வேதம் விதிக்கிறது; ''அக்னி-ஸோமன் ஆகிய இரு தேவர்களுக்காக ஒரு மிருகத்தை அர்ப்பணம் செய்யவும்'' என்று அர்த்தம். வேத-விதியை மாறாமல் செய்ய வேண்டும்; எனவே, ஒரு ஆடு எனும் மிருகத்தை வேதம் சொல்லும் முறைப்படி கொன்று, அதன் வபை எனும் பாகத்தை அக்னியில் ஹோமம் செய்து, இந்த யாகம் செய்வர்.

இதில் ஒரு கேள்வி - ''ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதானி'' என்று ஒரு பொது விதி இருக்கிறது; ''எந்த உயிரினத்தையும் துன்புறுத்தக் கூடாது'' என்று அர்த்தம்; ஆனால், அக்னீஷோமீய-யாகத்தில் ஒரு மிருகத்தை ஹிம்ஸா செய்ய வேண்டும் என்று சொல்கிறது; இரண்டு வேத-விதிகளுக்கும் முரண்பாடு வருகிறது; இதில் எது சரியாகும்?

பதில் - பல விதமான பதில்களை சாஸ்த்ரத்தில் சொல்கின்றனர்; ஒவ்வொன்றாக பார்ப்போம்.

1. உத்ஸர்க-அபவாத-ந்யாயம்.
2. க்ரத்வர்த்தம், புருஷார்த்தம் எனும் வித்யாசம்.
3. யாகத்திலும் ஹிம்ஸா உள்ளதால் பாபம் உண்டு எனும் கருத்து.
4. யாகத்தில் ஹிம்ஸா இல்லை எனும் ஸித்தாந்த-கருத்து.

உத்ஸர்க-அபவாத-ந்யாயம் (மீமாம்ஸா மதம்)

உத்ஸர்கம் என்றால் பொதுவாக சொன்ன விஷயம்; அபவாதம் என்றால், அதில் விலக்கம்; இது இரண்டும் முரண்பட்டு வரும்போது அபவாத-விஷயம் தவிர மீதி விஷயத்தில் உத்ஸர்கம் செல்லும்; இதற்கு உத்ஸர்க-அபவாத-ந்யாயம் என்று பெயர்.

(உ.ம்) ''எப்போதும் ஸ்தோத்ரங்கள் சொல்லலாம் என்பது உத்ஸர்கம்; ''மஹாப்ரதோஷத்தில் சொல்லக் கூடாது'' என்பது அபவாதம்; இரண்டுக்கும் முரண்பாடு வருகிறது; அப்போது, அபவாத-விஷயத்தைத் தவிர மீதி விஷயத்தில் உத்ஸர்கம் செல்லும் என்பது முறை; அதாவது, மஹாப்ரதோஷம் தவிர மீதி சமயத்தில் எப்போதும் ஸ்தோத்ரங்கள் சொல்லலாம் என்று அர்த்தம்.

மீமாம்ஸாவில் பத-ஆஹவநீய ந்யாயம் என்றும் சொல்வர்; அதாவது பொதுவாக எல்லா ஹோமத்தையும் ஆஹவநீய-அக்னியில் செய்ய வேண்டும் என்று விதி உள்ளது; ஆனால், ஸோமக்ரயணத்தில் பதஹோமம் சொல்கிறது; குதிரையின் ஏழாவது அடிவைப்பு நடக்கும் இடத்தில் தரையில் ஒரு ஹோமம் செய்ய வேண்டும் என்கிறது; அப்போது, முரண்பாடு தோன்றுகிறது; அதற்கு பரிஹாரம்தான் இந்த ந்யாயம்; இதன்படி, இந்த பத-ஹோமம் தவிர மீதி எல்லா ஹோமமும் ஆஹவனீய-அக்னியில் செய்ய வேண்டும் என்று கருத்து; அதனால், முரண்பாடு இல்லை.

இங்கும் அதே முறை சொல்ல வரும்; ''எந்த உயிரினத்தையும் துன்புறுத்தக் கூடாது'' என்பது பொதுவான விதி; ''யாகத்தில் மிருகத்தை கொடுக்க வேண்டும்'' என்பது, அதற்கு விலக்கான அபவாத-விதி; எனவே இரண்டையும் சேர்த்து அர்த்தம் சொல்ல வேண்டும்; யாகத்தில் செய்யும் மிருக ஹிம்ஸா தவிர வேறு எந்த துன்புறுத்தலும் செய்யக் கூடாது'' என்று அர்த்தம்.

முரண்பாடுக்கு இதுவே பரிஹாரம் ஆகும் என்று மீமாம்ஸாமதத்தில் சிலர் சொல்கின்றனர்.

ஆனால், இதில் ஒரு ஆராய்ச்சி - உத்ஸர்க்கமும் அபவாதமும் ஒரே விஷயத்தைப் பற்றியதாக இருந்தால்தான் முரண்பாடு வரும்; வெவ்வேறு விஷயத்தைப் பற்றியதாக இருந்தால் முரண்பாடு வராது; (உ.ம்) ''புகை இதயத்துக்கு கெடுதலானது'' என்று ஒரு வாக்யம்; ''கொசுத் தொல்லை போக கொசுவர்த்தி-புகை உதவும்'' என்று ஒரு வாக்யம்; இரண்டுக்கும் முரண்பாடு இல்லை; ஏனெனில், இரண்டும் வெவ்வேறு விஷயம் பற்றியது; ஒன்று புகையின் தீமையைச் சொல்கிறது; மற்றொன்று புகையின் நன்மையைச் சொல்லவில்லை; மாறாக கொசுத்தொல்லை போகும் வழியைச் சொல்கிறது; அந்த வழி நல்லதா கெட்டதா என்பதை அந்த வாக்யம் சொல்லவில்லை; எனவே, முரண்பாடு இல்லை.

அதுபோல இங்கு முரண்பாடு இல்லை -

- ''எந்த உயிரினத்தையும் துன்புறுத்தக் கூடாது'' என்று வேதம் சொல்கிறது; ஹிம்ஸா செய்தால் பாபம் வரும் என்பது இதன் அர்த்தம்; இது ஹிம்ஸாவின் தீமையைப் பற்றி சொல்வது.
- ''அக்னீஷோம தேவர்களுக்கு யாகத்தில் ஹிம்ஸா செய்ய வேண்டும்'' என்று வேறொரு வாக்யம் சொல்கிறது; இது ஹிம்ஸாவைப் பற்றி

சொல்லவில்லை; ''ஹிம்ஸா செய்தால் பாபம் வராது'' என்று இது சொல்லவில்லை; யாகத்தைப் பற்றிச் சொல்கிறது; ஹிம்ஸா செய்தால்தான் அந்த யாகம் நிறைவேறும் என்று சொல்கிறது; அந்த ஹிம்ஸா செய்வது பாபமா இல்லையா என்பதை சொல்லவில்லை.

எனவே, வேறு விஷயமாவதால், இதற்கும் அதற்கும் முரண்பாடு வராது.

முரண்பாடு இருந்தால்தான் உத்ஸர்க்க-அபவாத முறையில் பரிஹாரம் வரும்; இங்கு முரண்பாடு இல்லாததால், இந்த பரிஹாரம் வராது! எனவே, யாகத்தில் மிருக-ஹிம்ஸா இருக்கிறது; எல்லா ஹிம்ஸாவுக்கும் பாபம் உண்டு; எனவே, யாகத்திலும் பாபம் கலந்துள்ளது என்று ஆகும்.

எனவே, இந்த விளக்கம் சரியில்லை.

க்ரத்வர்த்தம் - புருஷார்த்தம் (ப்ரபாகர குரு மதம்)

இது வேறொரு பரிஹாரம் - க்ரத்வர்த்தம் என்றால், யாகத்தின் பொருட்டு செய்வது; புருஷார்த்தம் என்றால் மனிதன் தனக்காக செய்துகொள்வது; இதில் யாகத்தின் பொருட்டு ஹிம்ஸா செய்வது தவறில்லை; ஆனால், மனிதன் தனக்காக பிறரை ஹிம்ஸா செய்வது தவறு.

''எந்த உயிரினத்தையும் துன்புறுத்தக் கூடாது'' என்று வேதம் சொல்கிறது; அதே வேதமே, அக்னிஷோமீய-யாகத்தில் மிருக-ஹிம்ஸா செய்ய வேண்டும் என்பதை விதிக்கிறது; அதனால், அதை மனிதன் தானாக விரும்பி செய்யவில்லை; தனக்காக செய்யவில்லை; யாகத்தின் பொருட்டுதான் செய்கிறான். அதில் தவறில்லை.

ஒருவன், தன் விருப்பப்படி தனக்காக (உணவுக்காகவோ, வேறு எதற்காகவோ) ஹிம்ஸா செய்தால், அது புருஷார்த்தம் ஆகும்; அதை செய்யக் கூடாது; ஏனெனில் யாரையும் ஹிம்ஸா செய்யக்கூடாது என பொதுவாக சொல்லியுள்ளது; ஆனால், வேதமே விதித்தபடி யாகம் நடப்பதற்காக ஒரு ஹிம்ஸா செய்தால், தவறில்லை; ஏனென்றால், வேதமே செய்ய சொல்கிறபடியால்.

'ஹிம்ஸா' என்று சொன்னால், உடனே, மனிதன் தானாக தனக்காக செய்யும் ஹிம்ஸாதான் நினைவுக்கு வரும்; அந்த ஹிம்ஸா செய்யக் கூடாது என்பதுதான், ''எந்த உயிரினத்தையும் ஹிம்ஸா செய்யக் கூடாது'' என்று சொன்னதன் அர்த்தம் ஆகும் என்று பரிஹாரம்.

இந்த பரிகாரமும் சரியில்லை; ஏனெனில், மனிதன் யாகம் செய்வது கூட, தன் பலனுக்காகத்தானே செய்கிறான்! யாகம் செய்தால், தனக்கு ஸ்வர்க்கம் கிட்டும் என்று வேதம் சொல்வதால்தானே யாகம் செய்கிறான்! எனவே அதுவும் தன் பலனுக்காக செய்வதால், புருஷார்த்தம் ஆகும்; அப்படியான யாகத்தில் உள்ள ஹிம்ஸாவும் புருஷார்த்தம்தான்! எனவே, தன் பலனுக்காக வேறொரு ஜீவனை ஹிம்ஸா செய்வது கூடாது! செய்தால் பாபம் வரும்.

ஸாங்க்யமதம்

ஸாங்க்ய மதத்தின்படி யாகத்தில் ஹிம்ஸா கலந்துள்ளது; அது தோஷம்தான்! யாகத்தால் பெரும்புண்யம் உண்டாகும் அதே சமயத்தில் இந்த தோஷத்தால் சிறிது பாபமும் உண்டாகும்; புண்யத்தின் பலனை ஸ்வர்க்கத்தில் நீண்டநாள் அனுபவிப்பான்; பாபத்தின் பலனாக மறுபிறவி எடுக்கும்போது, நெல் முதலிய தாவரங்களாக ஆவான்; பின்னர், அந்த நெல்-அரிசி முதலியதிலிருந்து கர்ப்பமாக பிறப்பான் என்பது பஞ்சாக்னி-வித்யையில் சொல்லப் பட்டது.

இந்த கருத்தை வைதிகர்கள் ஏற்பதில்லை.

ஸித்தாந்தம்

யாகத்தில் ஹிம்ஸா என்பது கிடையாது.

முதலில் ஹிம்ஸா என்றால் என்ன?

- கொலை செய்வதுதான் ஹிம்ஸா என்பது கிடையாது; வலி வரும்படி அடித்து குத்தினால் அதுவும் ஹிம்ஸாதானே!
- பிறருக்கு வலியைக் கொடுப்பது ஹிம்ஸா என்று சொல்லலாமோ? அப்படியானால், ரண-சிகிச்சை செய்யும் மருத்துவர் கூட ஊசி, ஆபரேஷன் மூலம் துன்பம் கொடுக்கிறார் என்பதால், ஹிம்ஸா செய்கிறார் என்று சொல்வோமோ? சொல்ல மாட்டோம்; மருத்துவர் தாற்காலிகமாக சிறிது கஷ்டம் கொடுத்தாலும், அது உண்மையில் பெரும் நலனுக்கே ஆகிறது; உயிரைப் பிழைக்க வைக்கிறார்! எனவே, அது ஹிம்ஸா அல்ல என்கிறோம்; மருத்துவர் மிகவும் நல்லவர் என்கிறோம்.
- எனவே, தாற்காலிகமாக வரும் துக்கத்தை வைத்து ஹிம்ஸா என்று சொல்லக் கூடாது; முடிவில் பெரும் துக்கத்தை அளிக்கக் கூடியதுதான் ஹிம்ஸா ஆகும்.

யாகத்தில் மிருகத்துக்கு செய்யப்படும் துக்கமானது தாற்காலிகம் ஆனதுதான்; பின்னர் அந்த மிருகமே ஸ்வர்க்க-பலனை பெறப் போகிறது என வேதம் சொல்கிறது; எனவே, வேத-சாஸ்த்ரத்தின்படி பெரும் பலனான ஸ்வர்க்க-சுகம் என்பது வரப் போகிறது என்பதால், இது ஹிம்ஸா அல்ல.

யாகத்தில் உபயோகப் படும் மிருகம் ஆனது ஸ்வர்க்கத்தை அடையும் என்பதை வேதமே சொல்கிறது; ‘‘உன்னை நான் ஹிம்ஸா செய்யப் போவதில்லை; தேவர்களிடம் சேர்க்கப் போகிறேன்’’ என்கிறது. உண்மையில், யாகம் முதலிய புண்ய-கர்மங்கள் செய்து மனிதன் பெற வேண்டிய ஸ்வர்க்கத்தை ஒன்றும் செய்யாமலே அந்த மிருகம் பெற முடிகிறது! இல்லாவிட்டால், மிருகங்களுக்கு ஸ்வர்க்கம் போகும் வாய்ப்பே கிடையாது;

மிருகங்களுக்கு புண்யகர்மம் என்று ஒன்று கிடையாது; அப்படியிருக்க ஒரு மிருகமானது, ஸ்வர்க்கம் போகிறது என்பது ஆச்சர்யம்! யாகம் செய்த மனிதன் ஸ்வர்க்க-பலனைப் பெறுவதற்கு முன் அதற்கு அந்த பலன் கிடைக்கிறது! இது, அந்த மிருக-பிறப்பைப் பொறுத்தவரை பெரும் பலன்தான்!

உலகரீதியில் ஒரு ஆராய்ச்சி - அக்னிஷோமீய யாகத்தில் உபயோகப் படும் அந்த மிருகம் ஆடுதான்! ஒரே ஒரு ஆடுதான்! (இரண்டு ஆடுகள் கொடுத்தால் மஹாபாபம் என்கிறது) ஆடு என்பதே மனிதனால் கொல்லப்படும் மிருகம்தான்! ஆடு வளர்ப்பவர்கள் எதற்காக வளர்க்கிறார்கள்? அது என்ன செல்ல பிராணியா? அல்லது பசு போல பால் தருமா? அல்லது நாய் போல சேவகம் செய்யுமா? ஒன்றும் கிடையாது; ஆடு வளர்ப்பவர்களுக்கு ஒரே குறிக்கோள்தான்! அந்த ஆட்டைக் கொன்று தின்ன வேண்டும் என்பதுதான்! இதை மனிதன் செய்யாமல் விட மாட்டான்! எந்த ஆடும் இயற்கையாக இறந்ததாக வரலாறே கிடையாது; இயற்கையாக சாக விட மாட்டான்; அப்படி மனிதனால் உணவுக்காக கொல்லப்படும் பல்லாயிரக் கணக்கான ஆடுகளில், ஒன்றை தேவர்களின் உணவுக்காக படைத்தால், அது ஸ்வர்க்கம் போகும்! இல்லாவிட்டால் இங்கேயே மனிதனால் கொல்லப்பட்டு சாகும்! அதற்கு வேறு கதி இல்லை; யாகத்தில் அதை உபயோகப் படுத்தாவிட்டால், அது முழு வாழ்வு வாழும் என்பது கிடையாது! அதை வாழ விட மாட்டான் மனிதன்!

எப்படியானாலும் ஆடு கொல்லப்பட்டு உணவாக ஆகப் போவதுதான்! இது படைப்பின் நியதி! இதனைத் தவிர்க்க முடியாது; இப்படி இருக்க ஒரு மனிதனுக்கு உணவாகி மாய்ந்து போவதை விட தேவர்களுக்கு

உணவாகி ஸ்வர்க்க-வாழ்வு பெறுவது எவ்வளவோ மேல்! இதைத்தான் வேதம் சொல்கிறது.

எனவே, யாகத்தில் மிருக-ஹிம்ஸா என்பது கிடையாது; மிருக-நன்மை என்பதே உண்டு; அதனால்தான் யாகத்துக்கு அத்வரம் என்று பெயர்; அத்வரம் என்றால், ஹிம்ஸா இல்லாதது என்று அர்த்தம்; அதாவது ஆடானது வேறு விதத்தில் கொல்லப் பட்டால் ஹிம்ஸா ஆகும்! யாகத்தில் கொல்லப் பட்டால் ஹிம்ஸா அல்ல என்று கருத்து; யாகத்தில் எந்த விதத்திலும் எந்த ஹிம்ஸாவும் கூடாது என்பதில் வேதம் மிகக் கவனம் செலுத்துகிறது! யாக மந்த்ரங்களில் பல இடங்களில் இது புரியும்.

ஸ்ரீஉபநிஷத் பாஷ்யகாரர் பாவப்ரகாசிகா வ்யாக்யானத்தில் உத்ஸர்க-அபவாத முறையில் சொன்ன பரிஹாரமும் ஆகலாம் என்பதை ஸ்தாபித்து விரிவாக அருளியுள்ளார்.

* * *

4.உபஸம்ஹாரம் - விகல்பம்

(3-3 குணோபஸம்ஹார பாதம்)

(3-3-1 ஸர்வவேதாந்த ப்ரத்யயாதிகரணம்)

ஸ்ரீபாஷ்யத்தில் 3-3 பாதத்தில் வித்யைகளில் குணங்களுக்கு உபஸம்ஹாரமா அல்லது விகல்பமா என்று ஆராய்கிறது; அதற்காக, ஆங்காங்கே சொல்லப்பட்ட வித்யைகள் ஒன்றா வெவ்வேறா என்னும் விசாரம் உள்ளது.

அதற்கு அடிப்படையான சில விஷயங்கள் பூர்வமீமாம்ஸா சாஸ்த்ரத்தில் உள்ளன. அவற்றைப் பற்றி பார்க்கலாம்.

மீமாம்ஸாவில் கர்மங்கள் வேறாவதை அறிய உதவும் காரணங்கள் -

வேதத்தில் விதிக்கப்பட்ட யாகம் முதலிய கர்மங்கள் பல உள்ளன; அவை வெவ்வேறானவை என்பதை அறிய உதவும் காரணங்கள் ஆறு உண்டு; அவற்றை கர்ம-பேதக-ப்ரமாணங்கள் என்பர்.

1. சப்தாந்தரம் - வேறு வினைச்சொல்

   வேறு வினைச்சொல் (தாது) இருந்தால், அதில் சொல்லப்படும் கர்மம் வேறாகும். (உ.ம்) 'யஜதி' என்றால், யாகம் செய் என்று அர்த்தம்; 'ஜுஹோதி' என்றால், ஹோமம் செய் என்று அர்த்தம்; 'ததாதி' என்றால், தானம் செய் என்று அர்த்தம்; இப்படி வினைச் சொல் வேறாக இருப்பதால், யாகம், ஹோமம், தானம் ஆகியவை வெவ்வேறாகும்.

2. அப்யாஸ: - (மாறாமல் மீண்டும் சொல்லுதல்)

   ஒரே வாக்யத்தை அர்த்தம் மாறாமல் அப்படியே மீண்டும் சொன்னால், அப்போது வேறொரு கர்மம் சொல்லப் படுவதைக் ஆகும்; (உ.ம்) 'ஸமிதோ யஜதி', 'தநூநபாதம் யஜதி' முதலியதாக ஐந்து வாக்யங்கள் உள்ளன; ஐந்து யாகங்களின் பெயர்களை ஸமித், தநூநபாதம் சொல்கிறது; 'யஜதி' - யாகம் செய்ய வேண்டும் என்பதையே துளியும் வித்யாசம் இல்லாமல், ஐந்து முறை திருப்பித் திருப்பி சொல்கிறது; எனவே ஐந்து யாகங்கள் வெவ்வேறாக செய்ய வேண்டும் என்று அர்த்தம்.

3. ஸங்க்யா - எண்ணிக்கை

   ''திஸ்ர: ஆஹுதீ; ஜுஹோதி'' (மூன்று ஹோமங்கள் செய்ய வேண்டும்)'' என்கிறது; எனவே, இவை மூன்றும் வெவ்வேறான ஹோமங்கள் என தெரிகிறது.

4. ஸம்ஜ்ஞா - பெயர் வேறாதல்.

ஜ்யோதி, விச்வஜ்யோதி, ஸர்வஜ்யோதி என்று வெவ்வேறு பெயரால் யாகங்களை சொல்கிறது; அதனால், அங்கு சொல்லப்படும் யாகங்களும் வெவ்வேறாகும்.

5. குண: - யாகத்தின் ரூபமான த்ரவ்யமும் தேவதையும் வேறாதல்.

யாகம் என்றாலே, ஒரு தேவதையைக் குறித்து ஒரு த்ரவ்ய-பொருளை அர்ப்பணம் செய்வதுதான்; அந்த த்ரவ்ய-பொருளோ, தேவதையே வேறானால், யாகமும் வேறாகும். (உ.ம்) ''வைச்வதேவீ ஆமிக்ஷா, வாஜிப்ய: வாஜினம்'' என்கிறது; விச்வேதேவர்களுக்கு ஆமிக்ஷா என்பதையும், வாஜி-தேவர்களுக்கு வாஜி எனும் பொருளையும் யாகம் செய்யச் சொல்கிறது; இங்கு இரு தேவர்களுக்கு இரு த்ரவ்ய-பொருள் சொல்வதால், இரு யாகங்கள் வெவ்வேறாகும்.

6. ப்ரகரணாந்தரம் - ஆரம்பித்து சொல்லப்பட்டு வரும் இடம் வேறாதல்.

அக்னிஹோத்ரம் என்பது தினமும் செய்ய வேண்டிய அனுஷ்டானம் ஆகும்; குண்டபாயினாம் அயனம் என்று ஒரு ஸத்ரயாகத்தில் ஒரு மாசம் மட்டும் செய்ய வேண்டிய அக்னிஹோத்ரம் ஒன்றைச் சொல்கிறது; இது தினமும் செய்ய வேண்டிய அக்னிஹோத்ரத்தை விட வேறாகும்; ஏனெனில், அந்த ஸத்ரயாகத்தை சொல்லிக் கொண்டு வரும்போது அந்த இடத்தில் சொல்கிறது.

இப்படியாக இவற்றின் மூலம் யாகம் முதலிய கர்மங்கள் வெவ்வேறாவதை அறியலாம்.

இந்த ஆறில், நான்கு விஷயங்கள் எல்லாருக்கும் தெரிந்ததுதான்; 1. வினைச்சொல், 3. எண்ணிக்கை, 4. பெயர், 5. தேவதையும் த்ரவ்யமும் - ஆகியவை வேறானால், கர்மம் வேறாகும் என்பது பொதுவாக எல்லாருக்கும் தெரியும்; இதில் விசாரம் அதிகமாக கிடையாது.

மீதி உள்ள இரண்டில்தான் விசாரம் வர நேரிடும்; அது, 2. அப்யாஸ: - மாறாமல் மீண்டும் சொல்லுதல், 6. ப்ரகரணம் - வேறு இடத்தில் சொல்லுதல் ஆகியவை.

மீமாம்ஸாவில் கர்மங்கள் ஒன்றாவதை அறிய உதவும் காரணங்கள்

அப்போது ஒரு கேள்வி வருகிறது - ஒரே யாகத்தையே இரண்டு வேத-

சாகைகளில் சொல்லி இருக்கும்; அங்கே, முன் சொன்ன இரண்டு காரணங்களை வைத்து, யாகங்கள் வெவ்வேறு என்று சொல்லலாமா?

பதில் - சொல்லக் கூடாது; அது ஒரே யாகம்தான். யாகம் முதலியவை ஒன்றுதான் என அறிய உதவும் ப்ரமாணங்கள் சில உள்ளன. அவை நான்கு -

1. ஸம்யோகம் - பலன் ஒன்றாக இருத்தல்.
2. ரூபம் - யாகத்தின் ரூபமான த்ரவ்யமும் தேவதையும் ஒன்றாக இருத்தல்.
3. சோதனா - கட்டளை ஒன்றாக இருத்தல்.
4. ஆக்யா - பெயர் ஒன்றாக இருத்தல்.

இந்த நான்கும் ஒன்றாக இருந்தால் சொல்லப்படும் கர்மம் ஒன்றாகும்; இந்த நான்கில் ஏதாவது ஒன்று வேறானாலும், கர்மம் வேறாகும்; வெவ்வேறு சாகைகளில் ஒரே யாகத்தை சொல்லும்போது இந்த நான்கும் ஒன்றாக இருக்கும்; அதனால், யாகம் ஒன்றே.

கேள்வி - ஒரே யாகத்தை இரு சாகைகளில் வேதம் சொல்வது எதற்காக?

பதில் - இரு சாகையினரும் தெரிந்து கொள்வதற்காக சொல்கிறது; பொதுவாக ஒரு மனிதர் ஒரு சாகையைத்தான் அத்யயனம் செய்வார்; அவரவர் தம்தமது சாகையை அத்யயனம் செய்ய வேண்டும்'' என்றுதான் விதி உள்ளது; ஆகையால், ஒரு சாகையில் சொன்ன விஷயம் மற்ற சாகையினருக்கு தெரிய வாய்ப்பில்லை; அதற்காக அந்தந்த சாகையினரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரே விஷயத்தை பல சாகைகளில் வேதம் சொல்லும்; இதை வைத்து கர்மம் வேறானது என்று சொல்லக் கூடாது.

எப்போது கர்மம் வேறாகும்? - என்றால், ஒரே சாகையிலேயே ஒரே விஷயத்தையே திரும்பிச் சொன்னால், அதை திரும்பிச் செய்ய வேண்டும் என்று அர்த்தம்; அப்போது கர்மம் வேறாகும்.

இப்படியாக கர்மம் வேறாவதற்கான காரணங்கள், மற்றும் கர்மம் ஒன்றாக ஆவதற்கான காரணங்கள் பூர்வமீமாம்ஸாவில் உள்ளன.

வேதாந்தத்தில் வித்யைகள் வேறா / ஒன்றா என ஆராய்தல் -

பூர்வமீமாம்ஸாவில் சொன்ன இந்த காரணங்களே இந்த வேதாந்த சாஸ்த்ரத்திலும் ஆகும்; இவற்றை வைத்துக் கொண்டே உபநிஷத்தில் சொன்ன வித்யைகள் (உபாஸனங்கள்) வேறா அல்லது ஒன்றா என தீர்மானித்து அறியலாம்.

அதில் வித்யைகள் வேறாவதை, சப்தாதிபேதாதிகரணம் (*3-3-24*) சொல்கிறது.

வெவ்வேறு சாகைகளில் சொன்ன வித்யைகள் ஒன்றாவதை, ஸர்வவேதாந்தப்ரத்யாதிகரணம் (*3-3-1*) சொல்கிறது.

இதிலும் முன் சொன்னமாதிரி, ஒரே வித்யையை வெவ்வேறு சாகைகளில் வேதம் சொல்வது வழக்கம்தான்.

இவற்றில், வித்யைகள் வேறாக ஆவதை அறிவதற்கு முக்கியமாக மூன்று உபயோகப் படும்.

1. சப்தாந்தரம் - (வேறு வினைச்சொல்)

   ''உபாஸீத (உபாஸனம் செய்), என்று உபாஸனத்தை சொல்கிறது; 'யுஞ்ஜீத' (ஆத்மாவை ஒப்படைத்து சேர்த்து விடு) என்று சரணாகதியை சொல்கிறது; இரண்டும் வெவ்வேறு என அறியலாம்.

2. ஸம்ஜ்ஞா - (பெயர் வேறாதல்)

   ஸத்வித்யை, தஹரவித்யை முதலிய பெயர்கள் வேறாவதை வைத்தும் அந்தந்த வித்யை வேறாகும் என அறியலாம்;

3. குண: - உபாஸனத்தின் ரூபமான குணங்கள் வேறாதால்

   சாந்தோக்யத்திலும், தைத்திரீயத்திலும் புருஷவித்யை உள்ளது; ஆனால், சொல்லப்பட்ட குணங்கள் வேறாக உள்ளதால், அந்த வித்யைகள் வேறாகும்.

இந்த மூன்றிலும் கூட முக்கிய காரணம் - குணபேதம் எனப்படும் ரூபபேதம்தான்; வித்யையின் ரூபம் என்பது உபாஸநம் செய்யப்பட வேண்டிய விஷயமான ப்ரஹ்ம-குணங்கள் ஆகும்; அது வேறானால், வித்யை வேறாகும்.

உபநிஷத்களில் பலவேறு வித்யைகள் உள்ளன; மோக்ஷ-பலனுக்கான வித்யைகள் எல்லாவற்றிலும் ப்ரஹ்மத்தைத்தான் உபாஸனம் செய்ய வேண்டும்; ஆனாலும், ஒவ்வொரு வித்யையிலும் உபாஸனம் செய்யப்பட வேண்டிய ப்ரஹ்ம-குணங்கள் வெவ்வேறாகும்; அதனால், விஷயம் வேறாவதால், வித்யை வேறாகும்.

இதுதான் 3-3 இல் செய்யும் விசாரம்; சில வித்யைகளை எடுத்துக்

கொண்டு, அவற்றில் உபாஸனம் செய்யப்படும் ப்ரஹ்ம-குணங்கள் ஒன்றா வேறா என்று விசாரம்;

- ➢ உபாஸன-விஷயமான ப்ரஹ்மகுணங்கள் ஒன்றானால், வித்யை ஒன்றாகும்.
- ➢ உபாஸன-விஷயமான ப்ரஹ்ம-குணங்கள் வேறானால், வித்யை வேறாகும்.

உபஸம்ஹாரம் - விகல்பம்

இரு இடங்களில் சொல்லப்படும் வித்யைகள் ஒன்றானால், அப்போது ஒரு இடத்தில் சொல்ல விட்டுப்போன குணங்களை மற்றொரு இடத்திலிருந்து எடுத்து சேர்த்துக் கொண்டு உபாஸனம் செய்யலாம்; இதற்கு குண-உபஸம்ஹாரம் என்று பெயர். குணங்களை சேர்த்துக் கொள்ளுதல் என்று அர்த்தம். (உ.ம்) - காமாத்யதிகரணம் *(3-3-16)*; ஸர்வாபேதாதிகரணம் *(3-3-3)* முதலியவை.

இரு இடங்களில் சொல்லப்படும் வித்யைகள் வேறானால், அப்போது ஒரு இடத்தில் சொன்ன குணங்களை மற்றொரு இடத்திலிருந்து எடுத்து சேர்த்துக் கொள்ளக் கூடாது; அந்தந்த இடத்தில் சொன்ன வித்யையில் அந்தந்த இடத்தில் சொன்ன குணங்களை உபாஸனம் செய்ய வேண்டும்; இதற்கு குண-விகல்பம் என்று பெயர்; வேறான நிலை என்று அர்த்தம்; வேறு வித்யையில் இருப்பதால், இதில் சேர்க்கப்பட முடியாத நிலை என்று கருத்து. (உ.ம்) - அன்யதாத்வாதிகரணம் *(3-3-2)*, புருஷவித்யாதிகரணம் *(3-3-9)* முதலியவை.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

5.ஸர்வவேதாந்தப்ரத்யயாதிகரணம் (3-3-1)

வேதத்தில் வெவ்வேறு சாகைகளில் சொன்ன யாகங்கள் ஒன்றா வெவ்வேறா எனதெரிந்து கொள்ள ஒரு வழியை பூர்வமீமாம்ஸா சாஸ்த்ரம் சொல்கிறது - பலன், யாக-ரூபம், விதி, பெயர் ஆகிய நான்கும் ஒன்றாக இருக்குமானால், வெவ்வேறு சாகைகளில் சொல்லப்படும் யாகம் ஒன்று ஆகும்; இவற்றில் ஏதாவது ஒன்று வேறுபடுமானால், சொல்லப்படும் யாகமும் வேறானது ஆகும்; இவ்வாறுஅந்த சாஸ்த்ரத்தில் சொன்ன அதே முறையை இங்கும் கையாளலாம். வெவ்வேறுசாகைகளில் சொல்லப்படும் உபாஸனங்களில் இந்த நான்கும் ஒன்றாக இருக்குமானால், உபாஸனமும் ஒன்றுதான்.

ஆனால் கர்ம-அனுஷ்டானத்தில் சொன்ன அந்த முறையானது வேதாந்தத்தில் உபாஸனத்தில் வராது என்று பூர்வபக்ஷம்;வரும் என்பது ஸித்தாந்தம்.

சிரோவ்ரதம் - பூர்வபக்ஷம்*(3-3-1-1)*

அக்ஷர-ப்ரஹ்ம-வித்யை என்று ஒரு வித்யை ஆனது அதர்வவேதத்திலும், யஜுர்வேதத்திலும் உள்ளது; அதர்வவேதத்தினருக்கு சிரோவ்ரதம் என்று ஒரு வ்ரதம் உண்டு; தலையில் அக்னி-பாத்ரத்தை வைத்துக்கொள்ளுதல் தான் சிரோவ்ரதம் ஆகும். இதில் அதர்வண வேதம் ஒரு நியமம் சொல்கிறது - ''சிரோவ்ரதம் செய்பவருக்கு மட்டுமே இந்த ப்ரஹ்மவித்யையை உபதேசம் செய்க'' என்று; இதனால், அதர்வண வேதத்தினருக்கு மட்டுமே இந்த ப்ரஹ்மவித்யை என்று ஆகிறது; இதனால் அதர்வ வேதத்தில் சொன்ன ப்ரஹ்மவித்யையும் யஜுர்வேதத்தில் சொன்ன ப்ரஹ்ம வித்யையும் வேறானது என்று தெரிகிறது: ஆகையால், பூர்வமீமாம்ஸாவில் சொன்ன முறையில் ஒரே வித்யை என இங்கு சொல்ல முடியாது என்பது தெரிகிறது.

பூர்வமீமாம்ஸா சொன்ன முறையில், இங்கு இரு சாகைகளிலும் வித்யை ஒன்றேயானால், அதர்வவேதத்தில் சொன்ன வித்யையின் அங்கமான சிரோவ்ரதமும் யஜுர்வேதத்தினருக்கும் வந்துவிடும்; அப்படியானால், இரு சாகையினருக்கும் சிரோவ்ரதமும் உண்டு, வித்யையும் உண்டு என்று ஆகிவிடும்; அப்படியானால், 'சிரோவ்ரதம் உள்ளவருக்கு மட்டுமே இந்த வித்யையை உபதேசிக்க வேண்டும்' என்று நியமம் சொன்னது தேவையற்றதாக ஆகிவிடும்.

எனவே, பூர்வமீமாம்ஸாவில் சொன்னபடியான முறை இங்கு வராது என தெரிகிறது என்று பூர்வபக்ஷம்.இதற்குஸித்தாந்தம் மூன்றாவது ஸூத்ரத்தில் உள்ளது.

அவிசேஷபுன: ச்ரவணம்(3-3-1-2)

அவிசேஷ புன:ச்ரவணம் என்றால் ஒரு விசேஷக் குறிப்பும் இல்லாமல் சொன்னதையே மறுபடியும் சொல்லுதல்; அப்படி சொன்னால், சொல்லப்பட்ட விஷயம் வெவ்வேறு என்று ஆகும். வைச்வானர-வித்யை ஆனது இரு சாகைகளில் அப்படியே மாறாமல் சொல்லப்பட்டு உள்ளது; எனவே இரு சாகைகளிலும் சொன்ன வித்யை வேறானது என பூர்வபக்ஷம்.

வேறல்ல என்பது ஸித்தாந்தம்.

வேதத்தில் ஒரு விஷயத்தை ஒரு சாகையில் மட்டும் சொன்னால், மற்றொரு சாகையினர் அதனை அறிய வாய்ப்பு இல்லை; ஏனெனில், அவரவர் தம் சாகையை ஓத வேண்டும் என்றே வேதம் விதிக்கிறது; அதற்காக, மற்றவரும் அறிய வேண்டும் என்பதற்காக வேறு சாகையில் மீண்டும் சொல்லப்பட்டது. அவ்வளவுதான்; அதனால் வித்யை வேறாக ஆகாது.

ஒரே சாகைக்கு உள்ளேயே,ஒரு விஷயத்தை மீண்டும் வேறொரு இடத்தில் விதித்தால்தான், அவிசேஷ-புன:ச்ரவணம் ஆகும்; எதற்காக அப்படி மீண்டும் விதிக்கிறது என்று கேள்வி வரும்; அதனால், அங்கு விதிக்கப்படும் விஷயம் வேறாகும் என்று சொல்ல வேண்டும்; இங்கே அப்படி இல்லை.

சிரோவ்ரதம் - ஸித்தாந்தம் (3-3-1-3)

சிரோவ்ரதம் என்பது ப்ரஹ்மவித்யைக்கு (உபாஸனத்துக்கு) அங்கம் அல்ல; அது வேத-அத்யயனத்துக்கு அங்கம் ஆகும் என ஸித்தாந்தம்.

அத்யயனம் என்பது வேதத்துக்கு செய்யும் ஸம்ஸ்காரம் ஆகும்; அதாவது அத்யயனம் மூலமாக, வேதமானது, யாகத்திலும் பாராயணத்திலும் உபயோகப் படுத்தப்படும் தகுதி பெறுகிறது; இங்கும், சிரோவ்ரதம் எனும் வ்ரதத்துடன் அத்யயனம் செய்தால், அந்த வேதம் ஸம்ஸ்காரம் பெறுகிறது. எனவே வேதத்துக்கு அந்த ஸம்ஸ்காரம் அல்லது தகுதி கிடைப்பதற்காக அத்யயனமும், அதன் அங்கமான இந்த வ்ரதமும் ஆகிறது.

அக்ஷரவித்யை எனும் ப்ரஹ்மவித்யையை அனுஷ்டானம் செய்வதற்கும் இந்த வ்ரதத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது; எனவே பூர்வமீமாம்ஸா சொன்ன முறையில் இங்கு இரு சாகைக்ளிலும் சொன்ன அக்ஷரவித்யை ஒன்றே ஆகலாம்.

ஸவஹோமங்கள் (3-3-1-3)

யஜுர்வேதத்தினர் மூன்று அக்னிகளில் வைதிக-யாக-அனுஷ்டானம் செய்வர்; அதர்வணவேதத்தினர் ஒரு அக்னியில்தான் செய்வர்;

ஸவஹோமங்கள் என்பவை அதர்வண வேதத்தில் ஒரு அக்னியில் செய்யுமாறு விதிக்கப்பட்டவை; எனவே, அவற்றை மற்றவர் மூன்று அக்னிகளில் செய்யக் கூடாது.

இப்படியாக ஒரு கர்மமானது, ஒரு விசேஷ-சாகையினருக்கு அவருக்கு உரிய விசேஷ முறையில் ஆகிறது; அதுபோல, அதர்வணவேதத்தில் சம்பந்தப்பட்ட சிரோவ்ரதம் என்பது, அதர்வண வேத-அத்யயனத்துக்கு மட்டுமே அங்கம் ஆகும்; மற்ற வேத-அத்யயனத்துக்கு அங்கமாக ஆகாது; அதனால், அந்த சிரோவ்ரதம் செய்தவருக்கே அதர்வண வேதத்தை அத்யயனம் செய்விக்க வேண்டும் எனும் நியமம் சரியாகும்.

தஹர வித்யை (3-3-1-4)

- தைத்திரீயத்தில், ‘‘அந்த தஹர-ஆகாசமான பரமாத்மாவின் உள்ளில் எது இருக்கிறதோ அது உபாஸநம் செய்யப்பட வேண்டியது’’ என்று உள்ளது. உள்ளே என்ன இருக்கிறது என்பதைச் சொல்லவில்லை;
- சாந்தோக்யத்தில் ‘‘தஹர-ஆகாசமான பரமாத்மாவின் உள்ளே எட்டு குணங்கள் உள்ளன; அவை உபாஸநம் செய்யப்பட வேண்டியவை’’ என்று சொல்கிறது;

எனவே, சாந்தோக்யத்தில் சொன்னதை தைத்திரீயத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்; இரண்டும் ஒரே வித்யையால் இருப்பதால்தானே, அங்கு சொன்ன விஷயத்தை இங்கு எடுத்துக் கொள்ள முடிகிறது! இப்படியாக இரண்டு வேதத்திலும் சொன்ன தஹரவித்யை ஒன்றே என்பதை வேதமே உணர்த்துகிறது.

உபஸம்ஹாரம்-விகல்பம்(3-3-1-5)

➢ உபஸம்ஹாரம்-இரு வேத-சாகைகளில்சொன்ன வித்யை ஒரே வித்யையானால், உபஸம்ஹாரம் ஆகும்; உபஸம்ஹாரம் என்றால் சேர்த்துக் கொள்ளுதல் என்று அர்த்தம்; அதாவது, ஒரு சாகையில் சொன்ன குணங்களையும் மற்றொரு சாகையில் சொன்ன வித்யையில் ஏற்றுக் கொள்ளுதல் ஆகும்; அப்போது, இரண்டு சாகைகளில் சொன்ன குணங்களையும் சேர்த்து ஒரே வித்யையில் உபாஸனம் செய்ய வேண்டும்.

கவனத்துடனும் பாதுகாப்புடனும் இருங்கள்.

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

சிட்டி யூனியன் வங்கியின் புதிய அறிமுகம் 'VIDEO KYC'

உங்கள் சேமிப்புக் கணக்கை உடனடியாகப் பெறுங்கள்.

- CUB Easy App-ஐ பதிவிறக்கம் செய்து செயல்முறையைத் தொடங்குங்கள்.
- காணொலி தொடர்பின் மூலம் KYC செயல்முறையைப் பூர்த்தி செய்யுங்கள்.
- உங்கள் வீட்டிலிருந்தபடியே கணக்கைத் தொடங்குங்கள்.
- இப்போதே பரிவர்த்தனைகளைத் தொடங்குங்கள்.

சிட்டி யூனியன் வங்கி விவசாய நகைக்கடன்

தினசரி நகைக்கடன் குறைந்த வட்டியில் வழங்கப்படும் மற்றும் Jewel Loan OD ஆகவும் வழங்கப்படும்

வங்கியின் அனைத்து வேலை நாட்களிலும்... துரித சேவையுடன்...

மேலும் விவரங்களுக்கு வங்கிக் கிளை மேலாளரை தொடர்பு கொள்ளவும்.

For assistance, Call our 24 x 7 Customer Care at 044-7122 5000 To Download CUB eWallet, give a missed call to - 92781 77555

CUB
TRUST AND EXCELLENCE
SINCE 1904

சிட்டி யூனியன் பேங்க்

www.cityunionbank.com

ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

[illegible] CVV / OTP [illegible]

With best Compliments from :

A

Well Wisher

- விகல்பம் -இரு வேத-சாகைகளில் சொன்ன வித்யைகள் வெவ்வேறானால், விகல்பம் ஆகும்; விகல்பம் என்றால், வெவ்வேறான முறை என்று அர்த்தம்; அதாவது, அந்தந்த சாகையில் சொன்னதை அந்தந்த வித்யையில் மட்டுமே எடுத்துக்கொள்ளுதல் ஆகும். அப்போது இரண்டையும் ஒன்று சேர்த்து உபாஸனம் செய்யக் கூடாது.

★★★★★★★★★★★★★★

6.உத்கீதவித்யை

(3-3 - 3-4பாதங்களில் பல அதிகரணங்கள்)

உத்கீதவித்யை பற்றிய விசாரம் மூன்றாவது அத்யாயத்தில் 3, மற்றும் 4வது பாதங்களில் பல அதிகரணங்களில் உள்ளது; அந்த உத்கீதவித்யை பற்றிய அறிமுகம் இது.

யாகத்தில் அங்கமாக ஸாமவேத-மந்த்ரங்களின் கானம் செய்யப்படும்; ஸாமத்தில், காயத்ரம், ரதந்தரம் முதலிய பல விதங்கள் உள்ளன; அதில் ஒவ்வொரு ஸாமத்திலும் ஐந்து பக்திகள் உள்ளன; பக்தி என்றால் பாகம் என்று அர்த்தம்; அவற்றுக்கு - ஹிங்காரம், ப்ரஸ்தாவம், உத்கீதம், ப்ரதிஹாரம், நிதனம் என்று பெயர்; இதையே சுருக்கி மூன்று பக்திகள் என்றும், விரிவாக்கி ஏழு பக்திகள் என்றும் வேதம் சொல்கிறது; எல்லா விதத்திலும் நடுநாயகமாக இருப்பது உத்கீதம் என்பது.

யாகத்தில் உத்கீதம் என்னும் ஸாம-பக்தியை கானம் செய்பவருக்கு உத்காதா என்று பெயர்; உத்கானம் செய்பவர் என்று அர்த்தம்; இந்த உத்கீதம் என்பது யாகத்தின் அங்கம் ஆகும்; கட்டாயம் உத்கீதத்தை கானம் செய்ய வேண்டும்.

இந்த விஷயம் வேதத்தில், யாகத்தைப் பற்றி விதிக்கும் கர்மபாகத்தில் உள்ளது.

உபநிஷத் பாகத்தில் உத்கீதம் பற்றிய உபாஸனங்கள் சொல்லப் பட்டுள்ளன; அவைதாம் உத்கீத-வித்யைகள்; அதாவது, யாகத்தின் அங்கமான உத்கீதத்தை உபாஸனம் செய்ய வேண்டும்; அப்படி உபாஸனம் செய்தால், அதற்கு தனியாக பலன் உண்டு; யாகத்தின் பலன் தவிர தனியாக உத்கீத-உபாஸனத்துக்கு ஒரு பலன் இருக்கும்.

இந்த உத்கீத-உபாஸனங்கள் (உத்கீத வித்யைகள்) பல உள்ளன; எல்லாமே த்ருஷ்டி-விதியாக சொல்லப் பட்டவை; அதாவது, உத்கீதத்தை வேறொன்றாக கற்பனை செய்து அப்படி த்யானம் செய்ய வேண்டும்;

அவற்றுள் முக்கியமான சில மட்டும் பார்ப்போம்; உத்கீதத்தை ஆரம்பிக்கும்போது 'ஓம்' என்று சொல்வர்; அந்த ஓம் என்னும் பாகத்தைப் பற்றிய உபாஸனங்கள் சாந்தோக்யத்தில் உள்ளன.

1. உத்கீதமான (உத்கீதத்தின் ஒரு பாகமான) 'ஓம்' என்னும் அக்ஷரமானது ரஸங்களுக்கு எல்லாம் ரஸமாக உயர்ந்ததானது'' - *(சாந்தோக்யம் 1-1)*.

இப்படி ரஸங்களுக்கு ரஸமாக ப்ரணவத்தை உபாஸனம் செய்ய வேண்டும் என்று கருத்து. (ஸ்துதிமாத்ராதிகரணம் 3-4-2)

2. உத்கீதத்தை (ஓம் என்னும் பாகத்தை) முக்யப்ராணனாக உபாஸனம் செய்தனர்; இப்படி உபாஸனம் செய்பவனிடம் பாபம் செய்ய நினைப்பவன் கல்லில் மண்கட்டி மோதி உடைவது போல அழிவான். (சாந்தோக்யம் 1-2) (அன்யதாத்வாதிகரணம் 3-3-2)

3. முழு உத்கீதத்தை கானம் செய்யும் உத்காதாவை முக்யப்ராணனாக உபாஸநம் செய்தனர்; இப்படி உபாஸனம் செய்பவனிடம் பாபம் செய்ய நினைப்பவன் கல்லில் மண்கட்டி மோதி உடைவது போல அழிவான். (ப்ருஹதாரண்யகம் 3-3-1) (அன்யதாத்வாதிகரணம் 3-3-2)

4. உத்கீதத்தை (ஓம் என்னும் பாகத்தை) ஆதித்யனை (ஆதித்யனாக) உபாஸனம் செய்தால், இருட்டினால் நேரும் பயம் விலகும். (சாந்தோக்யம் 1-3) (ஆதித்யாதிமத்யதிகரணம் 4-1-4)

5. உத்கீதத்தை (ஓம் என்னும் பாகத்தை)ஆதித்யமண்டலத்தில் இருக்கும் ஹிரண்மய புருஷனாக (பரப்ரஹ்மமாக) உபாஸனம் செய்தால், மேல் உலகங்களையும் தேவகாமங்களையும் அடைவான். (சாந்தோக்யம் 1-6-6)(ஸூத்ரம் - 3-3-7).

6. உத்கீதத்தை (ஓம் என்னும் பாகத்தை)பரோவரீயஸ்த்வம் எனும் குணத்துடன் கூடிய ஆகாசமாக (ப்ரஹ்மமாக) உபாஸனம் செய்தால், பரோவரீயஸ்த்வ குணத்துடன் வாழ்க்கை அமையும். (சாந்தோக்யம் - 1-9-2) (ஸூத்ரம் - 3-3-7).

7. ஐந்து விதமான ஸாமத்தை உலகங்களாக உபாஸனம் செய்க; உயர்ந்த உலகங்களில் வாழ்வு கிடைக்கும். (சாந்தோக்யம் 2-2-1) (அங்காவபத்தாதிகரணம் 3-3-22)

உத்கீத உபாஸனம் பற்றிய சில விஷயங்கள் -

- இங்கு உத்கீதம் பற்றி வேதத்தில் சொன்னதெல்லாம் உத்கீதத்தை புகழ்வதற்காக சொன்னவை அல்ல; இவை அப்படி உபாஸனம் செய்வதற்காக சொன்னவை. (ஸ்துதிமாத்ராதிகரணம் 3-4-2)
- இந்த உத்கீத-உபாஸனத்தை யாகத்தில் கர்த்தாவான யஜமானன் செய்வதில்லை; ருத்விக்தான் செய்வார்; பலன் யஜமானனுக்கு (ஸ்வாம்யதிகரணம் 3-4-11)
- யாகத்தில் உத்கீத-உபாஸனம் செய்யலாம்; செய்யாமலும் இருக்கலாம்; கட்டாய-நியமம் கிடையாது; இதை வேதம் சொல்கிறது, ''யார் இந்த

உபாஸனம் செய்கிறாரோ, யார் உபாஸனம் செய்யவில்லையோ, இருவரும் யாகம் செய்கின்றனர்'' - என்று. (தந்நிர்தாரணாநியமாதிகரணம் *3-3-17*; யதாச்ரயபாவாதிகரணம் *3-3-26*)

- உத்கீத-உபாஸனத்தின் பலனை வேதம் சொல்கிறது -''எந்த யாகத்தை உபாஸனத்துடன், ச்ரத்தையுடன், உபநிஷத்தால் வந்த ப்ரஹ்மஜ்ஞானத்துடன் செய்கிறானோ, அந்த யாகமே அதிக வீர்யம் உடையதாக ஆகும்'' என்று.

உத்கீத உபாஸனத்தின் பலன், யாகத்தை அதிக வீர்யம் உடையதாக ஆக்குதல் ஆகும்; அதாவது,யாகத்தின் பலனுக்கு வேறொரு விதத்தால் ஏற்படும் தடையை போக்கும் என்று அர்த்தம். (ஸூத்ரம் 3-3-41 -4-1-18)

- முதலில், ''ஓம் எனும் அக்ஷரமாகிற உத்கீதத்தை உபாஸனம் செய்க'' என்று வேதம் சொல்கிறது; பின்னர், ''எந்த யாகத்தை உபாஸனத்துடன் செய்கிறானோ, அதுவே அதிக வீர்யம் உடையதாக ஆகிறது'' என்று சொல்கிறது; இப்படி, முதலில் சொன்ன உபாஸனத்துக்கு தனிப்பலன் சொல்கிறது; எனவே, இந்த பலனை வேண்டுபவர் உபாஸநம் செய்யலாம்; வேண்டாதவர் உபாஸனம் செய்ய வேண்டிய தேவையில்லை என்பது தெரிகிறது.

- இந்த கட்டுரையில் முதலில் எடுத்துச் சொன்ன ஏழு விதமான உத்கீத-உபாஸனங்களில் ஐந்தாவதும், ஆறாவதும் ஒன்று போல தோன்றும்; இரண்டிலுமே உத்கீதத்தின் பாகமான ப்ரணவத்தை பரமாத்மாவாக எண்ணி உபாஸனம் செய்தலைச் சொல்கிறது;

அதில் ஒரு சிறிய வித்யாசம் -

- ஐந்தாவதில், ஹிரண்மய புருஷனான பரமாத்மாவாக எண்ண வேண்டும்;
- ஆறாவதில், பரோவரீயஸ்த்வம் முதலிய குணங்களுடன் கூடிய பரமாத்மாவாக எண்ண வேண்டும்;

இங்கே, ப்ரணவத்தை பரமாத்மாவாக நினைத்தல் என்பது பொதுவானாலும், உபாஸனம் செய்யப்பட வேண்டிய குணங்கள் வேறாக உள்ளன; ஆகையால், உபாஸனத்தின் விஷயம் வேறாகும்; ஆகவே, இவை வெவ்வேறு வித்யைகள் ஆகும்;(ஸூத்ரம் 3-3-*8*).

ஹிரண்மய புருஷன் - தங்கமயன்;அதாவதுமிக அழகானவன்.

பரோவரீயஸ் - சிறந்தவர்களில் உயர்ந்தவன்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

7.அங்கமாவதை அறிவிக்கும் ப்ரமாணங்கள்

(ச்ருதி, லிங்கம் ...)

(3-3 - 3-4பாதங்களில் பல அதிகரணங்கள்)

ஒரு செயலைச் செய்யும்போது அதற்கு அங்கமாக (உறுப்பாக) சில செயல்களும் பொருள்களும் ஆகலாம். (உ.ம்) உணவு உண்பது என்பது முக்கிய செயல்; அதற்காக உணவைப் பிசைந்து உண்ண ஏற்றதாக ஆக்குதல் முதலியது அங்கம் ஆகும்; அதுபோல, உண்பதற்கு முன்னும் பின்னும் கைகால் அலம்புதல், ஆசமனம் செய்தல் முதலியவையும் அங்கம் ஆகும்.

பெருமாள்-திருவாராதனம் என்பது முக்கியமான செயல்; அதற்கு அங்கமாக திருமஞ்சனம் முதலியது ஆகும்; புஷ்பம் பறித்து வைத்துக் கொள்ளுதல் முதலியதும் அங்கம் ஆகும்.

வைதிக கர்ம அனுஷ்டானங்களில் யாகம் முதலியதில்,எது எதற்கு அங்கமாகும் என்பதை வேதத்தின் மூலம் அறிய வேண்டும்; அப்படி அறிவதற்கு உதவும் ப்ரமாணங்கள் ஆறு உண்டு; இவற்றை அங்கதா-போதக-ப்ரமாணங்கள் என்பர். (அங்கமாவதை அறிவிக்கும் சான்றுகள் என்று அர்த்தம்).

அந்த ஆறு ப்ரமாணங்கள் -

1. ஶ்ருதி (அங்கமாவதை நேரிடையாக சொல்லும் சொற்பகுதி) -

   (உ.ம்) ''நெற்களால் யாகம் செய்க'' என்று சொல்கிறது; இங்கே, 'நெற்களால்' என்கிற சொல்லில் மூன்றாம் விபக்தி (வேற்றுமை-உருபு) உள்ளது; இதற்கு கரணத்வம் என்று அர்த்தம்; இந்த சொற்பகுதி மூலம், நெற்கள் ஆனவை, யாகத்துக்கு கரணம் என்று புரிகிறது; அதாவது, யாகத்துக்கு அங்கமாக, யாகத்துக்கு உபயோகப்படும் முக்கியமான மூலப் பொருள் என்று தெரிகிறது.

2. லிங்கம் (அங்கமாவதை புரிய வைக்கும் அடையாளம்) -

   (உ.ம்) ''பர்ஹிர் தேவஸதனம் தாமி'' என்று ஒரு மந்த்ரம்; தேவர்களின் இடமாக ஆகக் கூடிய தர்ப்பத்தை (தேவர்களுக்காக) அறுக்கிறேன்'' என்று அர்த்தம்; இந்த மந்த்ரம் ஆனது தர்ப்பத்தை அறுத்து எடுத்தல் என்னும் செயலுக்கு அங்கம் ஆகும்; அதை இங்கு நேராக சொல்லவில்லை -''இந்த மந்த்ரத்தால் தர்பம் எடுக்க வேண்டும்'' என்று சொல்-

லவில்லை; ஆனாலும், மந்த்ரத்தில் ''தர்ப்பம் அறுக்கிறேன்'' என்று சொல்வதால், அந்த அடையாளத்தையிட்டு, இந்த மந்த்ரம் தர்ப்பம் அறுக்கும்போது சொல்ல வேண்டிய மந்த்ரம் என்பது தெரிகிறது.

3. வாக்யம் - பதங்களை சேர்த்துச் சொல்லுதல்.

(உ.ம்) - ''ஸ்வர்க்கம் விரும்புபவன் யாகம் செய்க'' என்று சொல்கிறது; இதனால், யாகமானது ஸ்வர்க்க-பலனுக்கு கரணம் ஆன அங்கம் என தெரிகிறது; இங்கு ''யாகத்தால் ஸ்வர்கம் பெறலாம்'' என்று நேராக சொல்லவில்லை; அப்படி சொல்லியிருந்தால், 'யாகத்தால்' எனும் மூன்றாம் விபக்தி மூலம் (ச்ருதி மூலம்) யாகமானது ஸ்வர்க்கத்துக்கு கரணம் என்று புரியும்; ஆனால், அப்படி சொல்லவில்லை; இருந்தாலும், ஒரே வாக்யத்தில் ஸ்வர்க்கம் விரும்புபவன் யாகம் செய்க என்று சொன்னதால், அந்த வாக்யத்தின் மூலம் ஸ்வர்க்கத்துக்கு காரணமாக யாகம் ஆகும் என தெரிகிறது.

4. ப்ரகரணம் - சொல்லப்பட்டு வரும் இடம்.

(உ.ம்) வேதத்தில், தர்சபூர்ணமாஸ-யாகத்தை விரிவாக சொல்லிக் கொண்டு வரும் இடத்தில், ப்ரயாஜம் எனப்படும் ஐந்து யாகங்களை சொல்கிறது; இந்த ஐந்து யாகங்களும் அந்த தர்சபூர்ணமாஸ-யாகத்துக்கு அங்கமானவை; என்னில், அந்த இடத்தில் இவற்றை சொல்வதால்.

5. ஸ்தானம் - ஒரே இடத்தில் சொல்லுதல்.

(உ.ம்) -வேதத்தில் முதல் காண்டத்தில் வரிசையாக சில மந்த்ரங்கள் உள்ளன; அடுத்த காண்டத்தில் வரிசையாக சில யாகங்களை சொல்கிறது; அப்போது முதல் மந்த்ரம் முதல் யாகத்துக்கு அங்கம்; இரண்டாம் மந்த்ரம் இரண்டாவது யாகத்துக்கு அங்கம் என்று வரிசையாக புரிந்து கொள்ளலாம். அந்தந்த இடத்தில் வரிசையாக சொல்லியிருப்பதால்.

6. ஸமாக்யா - பெயர்.

(உ.ம்) யாகத்தில் 'ஆத்வர்யவம்' என்று சிலவற்றுக்கு பெயர்; அத்வர்யு என்பவரோடு சம்பந்தப் பட்டது என்று அர்த்தம்; இந்த பெயரை வைத்தே அத்வர்யு ஆனவர் இவற்றை செய்பவராக இவற்றுக்கு அங்கம் ஆகிறார் என்று தெரிய வரும்.

இந்த ஆறு ப்ரமாணங்கள் மூலம் எது எதற்கு அங்கம் என்பதை புரிந்து கொள்கிறோம்.

உலக முறையில் ஆறுக்கும் உதாஹரணம் சொல்கிறேன். பால் என்பது ஆரோக்யத்துக்கு தேவையானது என்பதை அறிவிக்கும்படி ஆறு விதத்தில் சொல்லலாம்.

1. ச்ருதி - ‘‘பாலால் ஆரோக்யம்’’ என்று சொல்லுதல்.
2. லிங்கம் - ‘‘பாலில் நல்ல சத்துக்கள் உள்ளன’’ என்று சொல்லுதல்.
3. வாக்யம் - ஆரோக்யம் வேண்டுபவர் பால் சாப்பிடவும் என்று சொல்லுதல்.
4. ப்ரகரணம் - ஆரோக்யம் பற்றி சொல்லும் கட்டுரையில் பாலைப் பற்றி சொல்லுதல்.
5. ஸ்தானம் - ‘‘ஆரோக்யம், ஊட்டச்சத்து, கொழுப்புசத்து ஆகியவற்றை சொல்லி, பின்னர், ‘‘பாலும் தயிரும் நெய்யும் சாப்பிடவும்’’ என்று சொல்லுதல்.
6. ஸமாக்யா - பாலுக்கே ‘‘ஆரோக்யா’ என்று பெயர் இடுதல்.

(இது சற்றே உதாஹரணத்துக்காக சொன்னதுதான்; பெரியோர்கள் மன்னிக்கவும்; உண்மையில் வேதத்திலிருந்து உதாஹரணம் கொடுக்க வேண்டும்)

கேள்வி - ஒரு அங்கத்தை அறிவிக்கும்போது, இரண்டு ப்ரமாணங்கள் முரண்பட்டு அறிவிக்குமானால் எதை எடுத்துக் கொள்வது?

பதில் - இந்த ஆறில் முன்முன் ப்ரமாணத்துக்கு வலிமை அதிகம்; அடுத்தடுத்த ப்ரமாணம் வலிவு குறைந்தது ஆகும்; அதாவது, ச்ருதி, லிங்கம் ஆகிய இரண்டில் முதலாவதான ச்ருதி சொல்வதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்; இப்படியே ஒவ்வொன்றிலும் புரிந்து கொள்ளலாம்; இதனை தகுந்த காரணங்களுடன் உதாஹரணங்களுடன் மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் விளக்கி உள்ளனர்;

இங்கேயும், அந்த அடிப்படையில் விஷயங்களை தீர்மானம் செய்கிறார் -

- லிங்கபூயஸ்த்வாதிகரணத்தில், நான்காவதான ப்ரகரணத்தை விட மூன்றாவதான வாக்யம் வலுவானது என்கிறார்;
- பூர்வவிகல்பாதிகரணத்தில், ச்ருதி, லிங்கம், வாக்யம் என்றிவை நான்காவதான ப்ரகரணத்தை விட வலுவானவை என்கிறார்;
- வேதாத்யதிகரணத்தில் ப்ரகரணத்தை விட லிங்கம் வலுவானது என்கிறார்.

இதன் அடிப்படையில், இங்கே ஸ்ரீபாஷ்யத்தில் சாதிக்கும் விஷயங்களில் ஒன்று -

1. யாகத்தில் உத்கீதம் என்பது அங்கம் ஆகும்; இதனை கர்ம-பாகத்தில் சொல்லியுள்ளது; எனவே, அங்கத்தை கட்டாயம் செய்ய வேண்டும்.
2. யாகத்துக்கு உத்கீத-உபாஸனம் என்பது அங்கம் அல்ல; அது அங்கமாவதை அறிவிக்கும் ச்ருதியோ, லிங்கமோ எதுவும் கிடையாது.

★★★★★★★★★★★★★★★★★★★★★

8.ஔபஸத:

(3-3-14- அக்ஷரத்யதிகரணம்)

யஜுர்வேதத்தில் ஜாமதக்ன்ய சதூராத்ரம் என்று ஒரு யாகம் சொல்லியுள்ளது; அதில் புரோடாசத்துடன் கூடிய உபஸத் ஹோமங்கள் 12 செய்ய வேண்டும்; அவற்றுக்கான மந்த்ரங்கள் ஸாமவேதத்தில் உள்ளன. இந்த மந்த்ரங்களை உரக்க சொல்ல வேண்டுமா? அல்லது மெல்லியதாக சொல்ல வேண்டுமா என்று ஒரு ஸந்தேஹம்.

பொதுவாக ஸாமவேத சம்பந்தப் பட்டவற்றை உரக்க சொல்ல வேண்டும்; யஜுர்வேத சம்பந்தப் பட்டவற்றை மெதுவாக சொல்ல வேண்டும் என்று விதி உள்ளது. ஆனால், இங்கோ யாகம் யஜுர்வேதத்தை சேர்ந்தது; மந்த்ரம் ஸாமவேதத்தை சேர்ந்தது; எதை அனுசரித்து சொல்ல வேண்டும்? யாகத்தை அனுசரித்து யஜுர்வேதமுறையில் மெல்லியதாகச் சொல்ல வேண்டுமா? அல்லது மந்த்ரத்தை அனுசரித்து ஸாமவேதமுறையில் உரக்க சொல்ல வேண்டுமா? - என்றுவிசாரம்

பூர்வமீமாம்ஸா சாஸ்த்ரத்தில் இதற்கு ஸித்தாந்தம் சொல்கிறது - யஜுர்வேதத்தை அனுசரித்து, மெதுவாக சொல்ல வேண்டும்; ஏனெனில், யாகம், மந்த்ரம் ஆகிய இரண்டில் யாகம்தான் ப்ரதானம் ஆனது; மந்த்ரம் என்பது யாகத்தின் அங்கம் ஆகும்; ப்ரதானத்தை அனுசரித்து அங்கங்களின் முறைகள் ஆவதுதான் தகும்.எனவே, ப்ரதானத்தை அனுசரித்து யஜுர்வேத முறையை ஏற்க வேண்டும்; மெதுவாக சொல்ல வேண்டும்.

பூர்வமீமாம்ஸா சாஸ்த்ரத்தில் சொன்னஇந்த முறையைப் பின்பற்றி அக்ஷரத்யதிகரணத்தில் ஸித்தாந்தம் உள்ளது.

அதர்வணவேதத்தில் அக்ஷரவித்யையில் ப்ரஹ்மத்துக்கு அஸ்தூலத்வம் (பருத்த பொருள்களை விட வேறுபட்டமை)முதலிய குணங்கள் சொல்லப் பட்டன. அவற்றை எல்லா ப்ரஹ்மவித்யைகளிலும் உபாஸனத்தில் எண்ண வேண்டுமா? அல்லது வேண்டாமா? என்பது விசாரம்.

எல்லா ப்ரஹ்மவித்யைகளிலும் இந்த குணங்களை எண்ண வேண்டும் என்பது ஸித்தாந்தம்.

கேள்வி - ஆனால், அதர்வணவேதத்தில் அக்ஷரவித்யையில் சொன்ன குணங்களை பிற வேதங்களில் பிற வித்யைகளில் எடுத்துக் கொள்வது சரியாகுமா?

பதில் - சரியாகும்; ஏனெனில், எல்லா ப்ரஹ்மவித்யைகளிலும் ப்ரஹ்மம்தான் ப்ரதானம் ஆனது; அதைஅனுசரித்து குணங்கள் எண்ணப்பட வேண்டும்; அந்த குணங்கள் வேறுஇடத்தில் வேறு வித்யைகளில் சொல்லப்பட்டாலும், ப்ரதானத்தை அனுசரித்து அவையும் எண்ணப்பட வேண்டியவையே.

ப்ரதானத்தை அனுசரித்து அங்கங்களின் தர்மங்கள் ஆகும் என்று பூர்வ மீமாம்ஸாவில் சொல்லியுள்ளது; அதேபோல இங்கும் ஆகும்.

கேள்வி- அப்படியானால், எல்லா ப்ரஹ்மவித்யைகளிலும் ப்ரஹ்மம்தான் ப்ரதானம் ஆவதால், அதை அனுசரித்து எல்லா குணங்களும் எல்லா வித்யைகளிலும் எண்ண வேண்டும் என்று ஆகிவிடும்; ஒரு வரையறை இல்லாமல் ஆகிவிடும்.

பதில் - அப்படியல்ல; ப்ரதானமானப்ரஹ்மத்தைசரியாகப் புரிந்து கொள்ள வேண்டுமானால், அந்த ப்ரஹ்மம் சேதன-அசேதனங்களை விட வேறானது என்று புரிந்து கொள்ள வேண்டும்; அப்படி புரிந்து கொள்வதற்கு உதவும் குணங்கள் எவையோ, அவற்றை ப்ரதானத்துடன் எல்லா வித்யைகளிலும் எண்ண வேண்டும்;இல்லாவிட்டால், ப்ரஹ்மத்தையே சரியாக எண்ணுவதாக ஆகாமல் போகும். அஸ்தூலத்வம் முதலிய குணங்கள் ஜீவனை விட ப்ரஹ்மம் வேறானது என்பதைப் புரிந்து கொள்ள உதவுபவை; எனவே, அவற்றையும் எல்லா ப்ரஹ்மவித்யைகளிலும் எண்ண வேண்டும்.

அப்படி ப்ரதானமான ப்ரஹ்மத்தை வேறானதாக எண்ணியபின், அந்தந்த வித்யைகளில் சொன்ன குணங்களை அந்தந்த வித்யைகளில் எண்ணிக் கொள்ள வேண்டும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

9.பர்ணதா - கோதோஹன - வாக்யங்கள்

ஸ்ரீபாஷ்யத்தில் உத்கீதவித்யை பற்றிய வாக்யங்களை நன்கு ஆராய்ந்து பல அதிகரணங்களில் பல விஷயங்களை சாதிக்கிறார். குறிப்பாக பர்ணதா வாக்யம், கோதோஹனவாக்யம் ஆகிய இரண்டுடன் உத்கீதவித்யை பற்றிய வாக்யத்தை எடுத்து ஒப்புமை ஆராய்ந்து நிர்ணயம் செய்கிறார்; அவை பற்றி சுருக்கமான அறிமுகம் இது.

கோதோஹன வாக்யம்

யாகத்தில் ப்ரணயனம் என்று ஒன்று உண்டு; ஜலத்தை கொண்டு வருதல் என்று அர்த்தம்; சமஸ-பாத்ரம் எனப்படும் பாத்ரத்தில் கொண்டு வருவர்; அதில் ஒரு வாக்யம் சொல்கிறது, ''கால்நடைச் செல்வம் என்னும் பலன் வேண்டுபவனுக்கு கோதோஹன-பாத்ரத்தைக் கொண்டு ப்ரணயனம் செய்ய வேண்டும்'' என்று.

எனவே, அந்த பலன் வேண்டுபவர் மட்டும், கோதோஹன-பாத்ரத்தைக் கொண்டு ப்ரணயனம் செய்தால் போதும்; மற்றவர் அப்படி செய்ய வேண்டாம் என்று ஆகிறது; இதனால், கோதோஹன-பாத்ரத்தால் ப்ரணயனம் செய்தல் என்பது யாகத்துக்கு அங்கம் அல்ல; இப்படியே செய்ய வேண்டும் என்கிற நியமம் இல்லை; இது புருஷன் தனிப்பட்ட பலனுக்காக செய்வது ஆகும்.

பர்ணதாவாக்யம்

யாகத்தில் ''ஜுஹூவினால் ஹோமம் செய்ய வேண்டும்'' என்று ஒரு வாக்யம் சொல்கிறது; ஜுஹூ என்பது ஹோமம் செய்ய உதவும் நீளமான கரண்டி போன்ற ஒன்று; அதன் மூலமாகத்தான் ஹோமம் செய்வார்கள்.

இந்த வாக்யத்தைக் கேட்டவுடன் முதலில் அந்த ஜுஹூ எப்படி இருக்கும்? அது எந்த மரத்தால் செய்யப்பட வேண்டும்? என்னும் கேள்வி பிறக்கிறது; அதற்குப் பதிலைவேறொரு இடத்தில் வேறொரு வாக்யம் சொல்கிறது, ''பலாசமரத்தால் செய்யப்படும் ஜுஹூ யாருக்கு ஆகிறதோ, அவன் பழிச்சொல்லை கேட்கவில்லை'' என்று. ஆக, ஜுஹூ என்பது, பலாசமரத்தினால் செய்ததாக இருக்க வேண்டும்; பலாசமரத்துக்கு வேதத்தில் பர்ணம் என்று பெயர்.

இங்கு, ஜுஹூ என்பது யாகத்தின் அங்கம் ஆகும்; ஜுஹூவின் வாயிலாக பர்ணத்வம் (பலாசமரத்தால் ஆதல்) என்பதும் யாகத்தின் அங்கம் ஆகும்.

கேள்வி - இங்கு பலாசமரத்தால் ஜுஹூ செய்தால், பழிச்சொல்லை கேட்காமை என்னும் பலன் வரும் என்று சொல்லியுள்ளது; ஆகையால், அந்த பலன் வேண்டுபவர் மட்டும், பலாச மரத்தால் ஜுஹூவைச் செய்தால் போதும்; அந்த பலன் வேண்டாதவர், அதனைச் செய்ய வேண்டாம் என்று தெரிகிறது. அப்படியானால், பர்ணதா (பலாசமரத்தால் ஆதல்) என்பது யாகத்தின் அங்கம் அல்ல; யாகத்துக்கு இது கட்டாயத் தேவை இல்லை என்று ஆக நேரிடும்.

பதில் -அப்படி ஆகாது;பலாச மரத்தால் ஜுஹூவைச் செய்யாதவர் வேறு எந்த மரத்தால் செய்வது? அதை எந்த வாக்யமும் சொலவில்லை; எனவே, பலாச மரத்தால்தான் ஜுஹூவைச் செய்ய வேண்டும்.

‘‘ஜுஹூவினால் ஹோமம் செய்ய வேண்டும்’’ என்று முதலில் சொன்னதைக் கேட்கும்போதே, ஜுஹூ எந்த மரத்தினால் செய்யப்பட வேண்டும் என்ற கேள்வி பிறக்கிறது; அதற்கு, பதிலாக ‘‘பலாசமரத்தால் செய்யப்படும் ஜுஹூ யாருக்கு ஆகிறதோ, அவன் பழிச்சொல்லை கேட்கவில்லை’’ என்னும் வாக்யம் உள்ளது; இதில் பலாச மரத்தால் செய்யப்படும் ஜுஹூ என்று சொல்லும் போதே இவனது கேள்விக்கு விடை கிடைத்து விடுகிறது; ஜுஹூவானது பலாசமரத்தால் ஆக வேண்டும் என்பது விடை; எனவே, ‘பலாச மரத்தால் ஜுஹூ ஆகிறது’’ என்னும் இந்த வாக்யமானது, ‘‘ஜுஹூவால் ஹோமம் செய்ய வேண்டும்’’ எனும் வாக்யத்துடன் இணையும்; ஜுஹூவால் ஹோமம் செய்ய வேண்டும்; அந்த ஜுஹூ பலாச மரத்தால் ஆக வேண்டும் என்று சொன்னதாக ஆகிறது; பழிச் சொல்லைக் கேட்பதில்லை என்பது வேறொரு வாக்யம் ஆகும் எனலாம்.

இதில், ஜுஹூவானது யாகத்துக்கு கட்டாயமான அங்கம் ஆகும்; அது பலாசமரத்தால் ஆக வேண்டும் என்பதால், பர்ணதா (பலாசமரத்தால் ஆதல்) என்பதும் யாகத்துக்கு அங்கம் என முடிவு செய்யப்படும்; அது நேரிடையாக அங்கம் அல்ல; ஜுஹூவின் வாயிலாக அங்கம் ஆகும்; அதனால், அதனை யாகத்தில் தவிர்க்க முடியாது.

அதற்குப் பிறகு பழிச்சொல்லை கேட்காமை எனும் பலன் சொல்லியிருந்தாலும், அது பலன் ஆகாது; ஏனெனில், யாகத்தில் ஜுஹூ போல பலாசமரத்தால் ஆதல் என்பதும் யாகத்தின் அங்கமாகிறது; எனவே, அதுவும் கட்டாயம் தேவையாகிறது; அங்கங்களுக்கு தனியாக பலன் கிடையாது; யாகத்தை நிறைவுபடுத்துதல் என்பதுதான் அங்கங்களின் செயல் ஆகும்; அதனால், யாகத்தின் பலன் தவிர வேறு பலன் கிடையாது.

மேலும், 'பழிச்சொல்லை கேட்கவில்லை' என்று நிகழ்காலத்தில் சொல்கிறது; வரக் கூடிய பலனாக சொல்வதானால், பழிச் சொல்லை கேட்க மாட்டான்'' என்று வருங்காலத்தில் சொல்ல வேண்டும்; எனவே, இது தனி பலன் அல்ல.

(உ.ம்) ஸந்த்யாவந்தனத்தில், ஸூர்யனுக்கு அர்க்ய-ப்ரதானம் செய்தால், எல்லா மங்களங்களும் உண்டாகும்; பின்னர் ப்ரதக்ஷிணமாக சுற்றிக் கொண்டால், பாபம் தொலையும் என்றெல்லாம் வேதம் சொல்கிறது; இந்த பலன் வேண்டுபவர் மட்டும் இதனைச் செய்தால் போதும் அன்று அர்த்தம் இல்லை; இது ஸந்த்யாவந்தனத்தின் அங்கம் ஆகும்; எல்லாரும் கட்டாயம் செய்ய வேண்டும்; அந்த பலன் என்பது, அந்த அங்கத்தை புகழ்வதற்காக சொன்னது; அப்படி புகழ்வதன் மூலம் நமக்கு அதில் ஈடுபாடு வரச் செய்கிறது. (இது மீமாம்ஸக மதக் கருத்து ஆகும்).

மேலும், ''பலாசத்தால் ஜுஹூ யாருக்கு ஆகிறதோ, அவர் பழிச்சொல் கேட்பதில்லை'' என்று பலன் சொல்கிறது; அப்போது, வெறும் பலாச-ஜுஹூ (கரண்டி) எப்படி இந்த பலனை அளிக்கும் என்கிற கேள்வி வருகிறது; அது ஒரு த்ரவ்யம்தானே! வெறும் த்ரவ்யம் மட்டும் ஒரு பலனை அளிக்காது; ஒரு செயல் மூலமாகவே பலன் அளிக்கும்; ''நெய் உடம்புக்கு நல்லது'' என்கிறோம்;வெறும் நெய் பலன் அளிக்காது; சாப்பிட்டால்தான் பலன் கிடைக்கும்; அதுபோல, வெறும் பலாச-ஜுஹூ பலன் அளிக்காது; அதற்காக ஜுஹூவை வைத்து ஒரு செயல் சொல்லப்பட வேண்டும்; அப்போது ''ஜுஹூவினால் ஹோமம் செய்ய வேண்டும்'' என்னும் விதி தெரிகிறது. அந்தஹோமம் யாகத்துக்கு அங்கமாகும்; ஹோமத்துக்கு ஜுஹூ அங்கமாகும்; ஜுஹூவுக்கு பலாசம் அங்கமாகும்; இப்படியாக எல்லாம் யாகத்தில் அங்கமாக சேர்கின்றன. எனவே, தனிப்பலன் கிடையாது.

உத்கீத-வித்யை வாக்யம்

யாகத்தில் உத்கீதம் என்று ஒரு அங்கம்;

- ''உத்கீதத்தை உபாஸனம் செய்க'' என்பது உத்கீத-உபாஸனத்தை விதிக்கும் வாக்யம்.
- ''எந்த யாகம் உபாஸனத்துடன் ஆகிறதோ, அது அதிக வீர்யமுடையதாக ஆகிறது'' என்பது பலனைச் சொல்லும் வாக்யம்.

இது பற்றி விரிவாக முன்னர் கட்டுரையில் உள்ளது.

விசாரம் - இந்த உத்கீத-உபாஸனமும் பலனும் சொன்னது எந்த வகையைச் சேர்ந்தது? கோதோஹன-வாக்யம் போலவா? அல்லது பர்ணதா வாக்யம் போலவா?

கோதோஹன-வாக்யம் போல ஆனால், இந்த பலன் வேண்டுபவர், மட்டும் உத்கீத-உபாஸனம் செய்தால் போதும் என்றாகும்; மற்றவர் யாரும் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை; இந்த உத்கீத-உபாஸனம் ஆனது, யாகத்துக்கு அங்கம் அல்ல என்று ஆகும்.

பர்ணதா-வாக்யம் போல ஆனால், இந்த உத்கீத-உபாஸனம் ஆனது, யாகத் துக்கு அங்கமாகும்; கட்டாயம் செய்ய வேண்டும் என்று ஆகும்.

பூர்வபக்ஷம் - கோதோஹன-வாக்யத்தில், விதிவாக்யத்திலேயே பலனையும் சொல்கிறது; அதனால், அந்த பலனுக்கு அந்த செயல் என்று ஆகும்; பர்ணதா-வாக்யத்தில் ''பலாசமரத்தால் ஜுஹூ ஆவதைச் சொல்வது வேறு வாக்யம்; பலனைச் சொல்வது வேறு வாக்யம் என்று பார்த்தோம்; இங்கு உத்கீத-உபாஸன-வாக்யத்தைப் பார்த்தால், அதன் அமைப்பு பர்ணதா வாக்யம் போல உள்ளது.

- ''யாருக்கு பலாசமரத்தால் ஆன ஜுஹூ ஆகிறதோ, அவர் பழிச் சொல்லை கேட்பதில்லை''
- ''எந்த யாகத்தை உபாஸனத்துடன் செய்கிறானோ, அது அதிக வீர்யம் உடையதாக ஆகிறது''

இப்படி, பர்ணதா-வாக்யம் போல உத்கீத-உபாஸன-வாக்யம் உள்ளது; எனவே, கட்டாயம் யாகத்துக்கு அங்கமாக உத்கீத-உபாஸனம் செய்யப்பட வேண்டியதுதான்.

ஸித்தாந்தம் - இந்த உத்கீத-உபாஸனத்தை சொன்னது கோதோஹன முறையில் ஆகும்; அதாவது அந்த பலன் வேண்டுபவர் அந்த உபாஸனம் செய்தால் போதும்; எல்லாரும் செய்ய வேண்டிய நியமம் இல்லை; ஏனெனில் இந்த உபாஸனம் யாகத்துக்கு அங்கம் அல்ல.

இப்படி சொல்வதற்கு முக்கிய காரணம் வேதமே அதைத் தெளிவாக வேறொரு வாக்யத்தில் சொல்கிறது - ''யார் உத்கீத-உபாஸனம் செய்கிறாரோ, யார் செய்யவில்லையோ, இருவரும் யாகம் செய்கின்றனர்'' என்று சொல்கிறது. பர்ணதாவாக்யத்தில் அப்படி சொல்லவில்லை என்பது வித்யாசம்.

மேலும், யாகத்தில் ''ஜுஹூவினால் ஹோமம் செய்க'' என்று சொல்லும்போது, ஜுஹூ எந்த மரத்தினால் செய்யப்பட வேண்டும் என்ற கேள்வி பிறக்கும்; அதற்குப் பதிலாக பர்ணதா வாக்யம் ஆகிறது; அதனால், பலாசத்தால் ஜுஹூ ஆக வேண்டும் என்பது யாகத்தின் தேவை ஆகிறது; இங்கோ, யாகத்தில் உத்கீதத்தை பாடும்போது இதுபோன்ற கேள்வி எழாது; உபாஸனம் செய்ய வேண்டுமா என்கிற கேள்வி எழாது; ஒரு கேள்வியும் இல்லாமல் யாகம் நன்கு நடக்கும்; அதனால், வேதம் சொன்ன உபாஸனம் ஆனது யாகத்துக்கு அங்கம் அல்ல.

மேலும், ''யாருக்கு பலாசத்தால் ஜுஹூ ஆகிறதோ, அவன் பழிச்சொல்லை கேட்பதில்லை'' என்னும்போது, பலாச-ஜுஹூ என்னும் த்ரவ்யம் ஆனது இந்த பலனுக்கு காரணமாக சொல்லப்படுகிறது; இதில் ஒரு கேள்வி எழும்; வெறும் த்ரவ்யம் மட்டும் ஒரு பலனை அளிக்காது; அந்த த்ரவ்யத்தைச் சார்ந்து ஏதாவது செயல் இருக்கும்; அந்த செயல்தான் பலன் அளிக்கும்; இங்கு பலாச-ஜுஹூ மட்டும் பலன் அளிக்காது; எனவே, பலாச-ஜுஹூவினால் எந்த செயல் செய்ய வேண்டும் என்கிற கேள்வி பிறக்கும். ''ஜுஹூவினால் ஹோமம் செய்ய வேண்டும் என்னும் பதில் வேறொரு வாக்யத்தில் உள்ளது; அந்த ஜுஹூ-ஹோமம் என்பது யாகத்தில் கட்டாயமான அங்கம் என்பதால், அதன் மூலமாக பலாசம் என்பதும் அங்கமாகும்.

இங்கோ, ''உபாஸனத்தால் செய்யப்படுவது, அதிக வீர்யமுடையதாக ஆகிறது'' என்னும்போது இந்த மாதிரி கேள்வி வராது; ஏனெனில், உபாஸனம் என்பதே செயல்தானே! அந்த செயலைச் செய்தால் அந்த பலன் கிடைக்கும் என புரிந்துவிடும்; எனவே, அந்த பலன் வேண்டுபவர் அதனைச் செய்தால் போதும் என ஆகும். இதில் வேறொரு கேள்வி வரும்; அந்த உபாஸனத்தின் விஷயம் என்ன என்ற கேள்வி மட்டும் இருக்கும்; அப்போது, ''உத்கீதத்தை உபாஸனம் செய்'' என்று சொல்வதால், உபாஸனத்தின் விஷயம் மட்டும் கிடைக்கும்; அதுதவிர உபாஸனம் அங்கம் என்பது கிடைக்காது.

மேலும், ''எந்த யாகத்தை உபாஸனத்துடன் செய்கிறானோ, அது அதிக வீர்யம் உடையதாக ஆகிறது'' என்னும்போது, இங்கு குறிப்பிடப்பட்ட உபாஸனம் ஆனது முன்பே வேறொரு வாக்யத்தில் சொல்லப் பட்டது என்பது தெரிகிறது; முதலில் ''உத்கீதத்தை உபாஸனம் செய்க'' என்று ஒரு வாக்யத்தில் உபாஸனம் விதிக்கப் படுகிறது; அதனை அனுவாதம் செய்து, அந்த உபாஸனம் செய்வதற்கு பலனை இந்த வாக்யம் சொல்கிறது; ஆனால்,

பர்ணதா-வாக்யத்தில் அப்படி இல்லை; ‘‘யாருக்கு பலாசமரத்தால் ஜுஹூ ஆகிறதோ, அவர் பழிச் சொல் கேட்பதில்லை’’ என்னும்போது, இங்கு குறிப்பிடப்பட்ட பலாசமரம் என்பது முன்பு வேறொரு வாக்யத்தில் சொல்லப்படவில்லை; இங்குதான் முதலாக சொல்லப் படுகிறது; எனவே, இது புதியதாக ஒரு விஷயத்தைத் தெரியப் படுத்தும் விதி-வாக்யம் ஆகும்; ஏற்கனவே தெரிந்த விஷயத்தைச் சொல்லும் அனுவாத வாக்யம் அல்ல; இந்த ஒரு வித்யாசமும் உள்ளது; இது எந்த அளவு உபயோகப்படும் என்பதையும் ஆராய்வர்.

இப்படி வித்யாசங்கள் உள்ளதால், உத்கீத-உபாஸனம் சொன்னது பர்ணதா-வாக்யம் போல அல்ல; இது கோதோஹன-வாக்யம் போல ஆகும்; எனவே, உபாஸனம் யாகத்தின் அங்கம் அல்ல; இதனைச் செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை.

★★★★★★★★★★★★★★★★★★★

10.க்ரமம் (வரிசை)

(4-3 அர்ச்சிராதிபாதம் முழுவதும்)

ஸ்ரீபாஷ்யத்தில் நான்காவது அத்யாயம் மூன்றாவது பாதத்தில் அர்ச்சிராதி கதி பற்றி விசாரங்கள் உள்ளன; அதில் அர்ச்சிராதி கதியில் உள்ள வரிசை முறை பற்றிய விசாரம் அதிகம்; அதை புரிந்து கொள்ள வேண்டுமானால், மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் ஐந்தாவது அத்யாயத்தில் சொல்லப்பட்டுள்ள 'க்ரமம்' எனும் விஷயம் தெரிந்திருக்க வேண்டும்; அதற்கு ஒரு சுருக்கமான அறிமுகக் குறிப்பு இந்த கட்டுரை.

'க்ரமம்' என்றால் வரிசை என்று அர்த்தம்; யாக-அனுஷ்டானத்தில், வரிசையாக எந்த செயலுக்குப் பின் எந்த செயல் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்; வரிசை மாற்றி செய்யக் கூடாது. அந்த வரிசையை புரிந்து கொண்டு நிர்ணயம் செய்வதற்காக சில காரணங்கள் உதவும். அவை ஆறு ஆகும்.

1.ச்ரௌதக்ரமம் (சொல் மூலம் அறியப்படும் வரிசை)

வரிசையை அறிவிக்கும் தனிப்பட்ட ஒரு சொல் குறிப்பு இருந்தால் ச்ரௌதக்ரமம் ஆகும்; 'பிறகு', 'செய்துவிட்டு' முதலிய சொல்-குறிப்புகள் மூலம் இந்த வரிசையை நேராகவே புரிந்து கொள்ள முடியும். (உ.ம்) - ''வேதத்தை செய்துவிட்டு வேதியை செய்க'' என்று விதி சொல்கிறது; இதில் முதலில் வேதத்தை செய்ய வேண்டும்; பின்னர் வேதியை செய்ய வேண்டும்; இந்த வரிசை தெளிவாக நமக்கு புரியும்படி, 'செய்துவிட்டு' என்ற சொல்-குறிப்பு உள்ளது. (வேதம் - தர்ப்பமுஷ்டி-கட்டு; வேதி - யாகம் நடக்கும் அக்னிகளை உள்ளடக்கிய இடம்).

2.அர்த்தக்ரமம் (பயனை அனுசரித்து அறியப்படும் வரிசை)

பயனை அனுசரித்து சில இடங்களில் வரிசையை புரிந்து கொள்ள வேண்டும்; (உ.ம்) அக்னிஹோத்ரஹோமம் செய்க; யவாகூ (கஞ்சி) தளிகை செய்து கொள்க'' என்கிறது; இங்கு கஞ்சி தளிகை செய்வதே அக்னிஹோத்ர ஹோமத்துக்காகத் தான்! எனவே, அந்த பலனை அனுசரித்து முதலில் யவாகூ-பாகம் செய்ய வேண்டும்; பின்னர் அக்னிஹோத்ரஹோமம் செய்ய வேண்டும்; இந்த வரிசையை வேதம் சொல்லாவிட்டாலும், அதன் பயனை அனுசரித்து தெரிந்து கொள்ளலாம்.

3.பாடக்ரமம் - சொல்லப்பட்ட வரிசையை அனுசரித்து வரிசையை அறிதல்.

'பிறகு' முதலிய சொற்கள் இல்லாவிட்டாலும், எந்த வரிசையில் சொல்கிறதோ, அந்த வரிசையை புரிந்து கொள்ளுதல்.

(உ.ம்) -'ஸமிதோ யஜதி', 'தநூனபாதம் யஜதி' முதலிய ஐந்து யாகங்களை வரிசையாக சொல்கிறது; அதே வரிசை முறையில், அந்த ஐந்து யாகங்களையும் செய்ய வேண்டும்.

4.ஸ்தானக்ரமம் - இருப்பிடத்தைக் கொண்டு அறியப்படும் வரிசை.

எந்த இடத்தில் எந்த செயலை செய்ய வேண்டியதாக வேதம் சொன்ன முறையில் நினைவு வருகிறதோ, அதை முதலில் செய்து, அதனுடன் கூட சொல்லப்படும் அனுஷ்டானங்களை பின்னர் செய்ய வேண்டும். (உ.ம்) ஜ்யோதிஷ்டோமயாகத்தில் மூன்று பசுயாகங்கள் செய்ய வேண்டும்; மூன்றும் மூன்று வெவ்வேறு காலத்தில் வரும்; அதுபோல ஸாத்யஸ்க்ரம் எனும் யாகத்திலும் அந்த மூன்றையும் செய்ய வேண்டியுள்ளது; ஆனால் ஒரே காலத்தில் செய்ய வேண்டும்; அது ஸுத்யாகாலத்தில் செய்யப்படுவதால், அதற்கேற்ப முதலில் அந்த காலத்துக்குரிய பசுயாகத்தை செய்ய வேண்டும்; பின்னர் மற்ற இரண்டையும் செய்ய வேண்டும்.

5. முக்யக்ரமம் - ப்ரதானங்களின் வரிசையை அனுசரித்து அங்கங்களின் வரிசை.

ப்ரதானமான யாகங்களின் வரிசையை அனுசரித்து அவற்றின் அங்கங்களின் வரிசை ஆகும்; (உ.ம்) தர்சபூர்ணமாசத்தில் அபிகாரணம் (அன்ன சுத்தி போல நெய் சேர்த்தல்) செய்யும்போது முதலில் ஆக்னேய ஹவிஸ்க்கு அபிகாரணம், பிறகு ஐந்த்ர-ஹவிஸ்க்கு செய்ய வேண்டும்; ஏனெனில், முதலில் ஆக்னேய யாகம், பிறகு ஐந்த்ரயாகம் என்று வரிசை உள்ளது; அதனை அனுசரித்து, அதன் அங்கமான அபிகாரணமும் அதே வரிசையில் செய்ய வேண்டும்.

6.ப்ரவ்ருத்தி க்ரமம் -சில அங்கங்களின் செயல் வரிசையை அனுசரித்து பிற செயல்களின் வரிசை ஆதல்

(உ.ம்) ப்ராஜாபத்ய யாகங்கள் 17 உள்ளன; அத்தனையும் சேர்த்து ஒரே சமயத்தில் செய்ய வேண்டும்; ஆனால், அதன் அங்கங்களை சேர்த்து ஒரே சமயத்தில் செய்ய முடியாது; ஆகவே அடுத்தடித்து வரிசை விடாமல் சேர்த்து செய்ய வேண்டும் என்பதுதான்; அப்போது 17 பசுக்களில் எதை முதலில் ஆரம்பித்து அங்கங்கள் செய்ய ஆரம்பித்தோமோ, அதே வரிசையில் கடைசி வரை அங்கங்கள் செய்ய வேண்டும்.

இவற்றில் ஒன்றுக்கொன்று முரண்பாடு வரும்போது முன் முன் சொன்ன க்ரம-காரணம் வலுவானது.

அர்ச்சிராதிகளின் வரிசையை நிர்ணயம் செய்வதில் இந்த பிரமாணங்கள் உபயோகப் படும்; குறிப்பாக, முதல் மூன்று ஆன ச்ரௌத க்ரமம், அர்த்தக்ரமம், பாடக்ரமம் ஆகியவை இங்கு சொல்லப் பட்டுள்ளன.

★★★★★★★★★★★★★★★★★★★★★

11.அர்ச்சிராதி கதி

(4-3 பாதம் முழுவதும்)

மோக்ஷம் பெற்று பரமபதம் செல்பவன், 'தேவயான மார்க்கம் எனும் வழியில் செல்வான் என்று வேதம் சொல்கிறது; தேவனான ப்ரஹ்மம் ஸ்ரீநாராயணனிடம் அடைவிக்கும் பாதை என்று அர்த்தம்.

இந்த பாதையில் முதலில் அர்சிர்தேவனது உலகம் உள்ளது; எனவே, அர்ச்சிராதி மார்க்கம் என்றும் பெயர்; அந்த உலகம் முதல் தொடர்ந்து பல உலகங்கள் வழியாக செல்வான்; அந்தந்த உலகத்தில் இருக்கும் தேவர்கள் இவனை, தமது உலகங்களில் வரவேற்று உபசரித்து தம்தம் உலகங்களின் எல்லை வரை கொண்டு விடுவார்கள். கடைசியில் வித்யுத் புருஷன் (மின்னல் தேவன்) என்பவன், பரமபதம் வரை கொண்டு விடுவான்.

வேதத்தில் அர்ச்சிராதி மார்க்கம் பற்றி பல இடங்களில் சொல்லியுள்ளது.

1. சாந்தோக்ய உபநிஷத்தில் - 4&5 ஆம் அத்யாயம்
2. சாந்தோக்ய உபநிஷத் -8 ஆம் அத்யாயம்.
3. கௌஷீதகீ உபநிஷத் - 1ஆம் அத்யாயம்
4. ப்ருஹதாரண்யக உபநிஷத் - 6 ஆம் அத்யாயம்
5. ப்ருஹதாரண்யக உபநிஷத் - 7 ஆம் அத்யாயம்

இவற்றில் சற்றேவித்யாசங்கள் உள்ளன; இவற்றை ஆராய்ந்து இங்கு 4-3 வது பாதத்தில் நிர்ணயம் செய்கிறார். அந்த அர்ச்சிராதி மார்க்க வரிசை -

1. அர்சி: (அக்னி)
2. அஹ: (பகல்)
3. சுக்லபக்ஷம் (வளர்பிறை)
4. உத்தராயணம்
5. ஸம்வத்ஸர: (ஆண்டு)
6. வாயு
7. ஆதித்யன் (ஸூர்யன்)
8. சந்த்ரன்
9. வித்யுத் (மின்னல்) - கூடவே, வருணன், இந்த்ரன், ப்ரஜாபதி

பகல், சுக்லபக்ஷம் முதலியவை, வெறும்காலங்கள் அல்ல; இவை எல்லாமே அந்தந்த காலம் முதலியதை அதிஷ்டானம் செய்யும் தேவர்கள்;இந்த தேவர்கள் தமது உலகங்கள் வழியாக இவனை அழைத்துச் செல்வர்; அப்படியாக இவர்களை பெருமான் நியமித்து இருக்கிறான்;இந்த வழியில் ஜீவன் அழைத்துச் செல்லப்பட்டு, பரமபதம் சென்று ப்ரஹ்மத்தை அடைவான்; பரப்ரஹ்மம் ஆன ஸ்ரீநாராயணனை அடைவான்.

வேதத்தில் பல விதமாக சொன்ன இந்த வழியைப் பற்றிய ஒரு சிறு அட்டவணை காணலாம்.

வரிசை	சாந்தோக்யம்	கௌஷீதகீ	ப்ருஹ - 1	ப்ருஹ - 2
1.	அர்சி:	அர்சிர்லோகம்	அர்சி:	
2.	அஹ:		அஹ:	
3.	சுக்லபக்ஷ:		சுக்லபக்ஷ:	
4.	உத்தராயணம்	உத்தராயணம்		
5.	ஸம்வத்ஸர:			
6.		வாயுலோகம்	தேவலோகம்	வாயு
7.	ஆதித்யன்	ஆதித்யலோகம்	ஆதித்யன்	ஆதித்யன்
8.	சந்த்ரன்			சந்த்ரன்
9.	வித்யுத்	(வருணலோகம், இந்த்ரலோகம் ப்ரஜாபதிலோகம்)	வைத்யுதன்	
10.	ப்ரஹ்மம்		ப்ரஹ்மலோகம்	ப்ரஹ்மம்

12. அருஞ்சொற்பொருள்

1. **அக்னி** - 1. யாகத்தில், ஹோமம் செய்யப்படும் இடமான அக்னியை வைக்கும் இடம். 2. நெருப்பு 3. அக்னிதேவன்.

2. **அக்னீஷோமீயம்** - ஸோமயாகத்தின் அங்கமான ஒரு யாகம்; அக்னி, ஸோமன் ஆகிய இரு தேவர்களுக்கு உரியது.

3. **அங்கம்** - 1. உறுப்பு; 2. ஒரு பெரிய செயலின் ஒரு பகுதியான சிறு செயல் அல்லது அதற்கு உபயோகப்படும் பொருள் முதலியது. (உ.ம் யாகத்தின் அங்கம் அதில் உபயோகப்படும் நெல் முதலியது.)

4. **அதிகாரம்** - 1. பதவி, 2. ஆரம்பம்.

5. **அதிதேசம்** - ஒரு இடத்தில் சொன்ன முறையை மற்றொரு இடத்திலும் பின்பற்ற வேண்டும் என்று சொல்லுதல்.

6. **அத்வர்யு** - யாகம் செய்து வைக்கும் ரித்விக்களில் முக்கியமானவர்.

7. **அபஹதபாப்மத்வம்** - கர்மத்துக்கு வசப்படாமை; எட்டு குணங்களில் முதலாவது.

8. **அர்சிர்தேவன்** - அக்னிதேவன்; ஆதிவாஹிகர்களில் முதலாமவன்.

9. **அர்ச்சிராதி** - 1. அர்ச்சிர்தேவன் முதலிய ஆதிவாஹிகர்கள். இவர்கள் பரமபதத்துக்கு அழைத்துச் செல்வர்; அதனால், அந்த பாதைக்கு அர்ச்சிராதிமார்க்கம் என்று பெயர்.

10. **அனுவாதம்** - 1. முன்பு தெரிந்த விஷயத்தை மீண்டும் சொல்லுதல். 2. தெரிந்த ஒரு விஷயத்தில் புதிய தகவலைச் சொல்வதற்காக அதை முதலில் எடுத்துரைத்தல்.

11. **ஆசமனம்** - வைதிக-அனுஷ்டானத்துக்கு அங்கமாக செய்யப்படும் ஒரு கர்மம்; (கையில் நீரெடுத்து மந்த்ரங்கள் சொல்லி பருகி, பின்னர் மந்த்ரங்களுடன் சரீரத்தில் தொடுதல்)

12. **ஆச்ரமம்** - தர்ம-அனுஷ்டானத்துக்கு ஆதாரமான மனித நிலைகள்; நான்கு ஆச்ரமங்கள் உள்ளன - ப்ரஹ்மசர்யம், க்ருஹச்தம், வானப்ரஸ்தம், ஸன்யாஸம் என்று நான்கு ஆச்ரமங்கள்.

13. **ஆச்ரயம்** - 1. சார்விடம், இருக்குமிடம் 2. யாகத்தில் அங்கமாக செய்யப்பட வேண்டியவை எதைச் சார்ந்து இருக்குமோ, அது ஆச்ரயம்.

14. **ஆசாரம்** - 1. அனுஷ்டானத்துக்குத் தேவையான சுத்தி, 2. அனுஷ்டானம்

15. **ஆதிகாரிகர்** - அதிகாரத்தில் பெருமானால் நியமிக்கப்பட்ட வஸிஷ்டர் முதலியவர்.

16. **ஆதிவாஹிகர்** - பரமபதம் செல்பவனை வழியில் அழைத்துச் செல்பவர் (அர்சிர்தேவன் முதலியவர்)

17. **உத்கீதம்** - ஸாமத்தின் ஒரு பகுதி; (உத்கீத-உபாஸனம் கட்டுரை பின் இணைப்பில் காண்க).

18. **உபகுர்வாணன்** - முறைப்படி ப்ரஹ்மசாரியாக இருந்து பின்னர் விவாஹம் செய்து கொள்ளப் போகிறவன்.

19. **உபஸம்ஹாரம்** - 1. சேர்த்தல், ஒரு இடத்தில் சொன்னதை மற்றொரு இடத்தில் சேர்த்து எடுத்துக் கொள்ளுதல், 2. முடிவு

20. **உபாயனம்** - ப்ரஹ்மஜ்ஞானியின் புண்யபாபங்கள் இறுதியில் மற்றவரை சென்றடைதல்.

21. **கதி** - 1. செல்லுதல், 2. பாதை, 3. உபாயம்.

22. **கர்மம்** - 1. யாகம் முதலிய அனுஷ்டானம், 2. புண்ய-பாபம்.

23. **கோதோஹனம்** - யாகத்தில் ஒரு பால்-பாத்திரம்.

24. **க்ரது** - யாகம், பசுவை (மிருகத்தை) அர்ப்பணம் செய்யும் யாகம்.

25. **க்ரமம்** - வரிசை

26. **க்ரஹம்** - யாகத்தில் தேவர்களுக்கு ஸோமரஸம் வைக்கும் பாத்ரம்.

27. **க்ருஹஸ்தன்** - நான்கு ஆச்ரமங்களில் இரண்டாவது; வீட்டில் மனைவியுடன் இருந்துகொண்டு தர்மங்கள் செய்பவன்.

28. **சயனம்** - யாகத்தில் அக்னியை வைக்கும் இடத்தை தயார் படுத்துதல். (இது மெய்யெழுத்தில் மூன்றாவதான ச ஆகும்; படுக்கை என்னும் சயனம் என்பது வேறு)

29. **ஜுஹூ** - யாகத்தில் ஹோமம் செய்ய உதவும் நீளமான கரண்டி போன்ற பாத்ரம்.

30. **தமம்** - இந்த்ரியங்களை அடக்குதல்.

31. **தேவயானம்** - ப்ரஹ்மத்தை அடைவதற்கு வைகுண்டம் போகும் வழி; அர்ச்சிராதி மார்க்கம்.

32. **தூமயானம்** - ஸ்வர்க்கத்துக்கு போகும் வழி.

33. **த்ருஷ்டிவிதி** - ப்ரஹ்மம் அல்லாத ஒரு பொருளை ப்ரஹ்மமாக எண்ணி உபாஸனம் செய்ய விதித்தல்.

34. **நக்னம்** - வஸ்த்ரம் தரிக்காமல் இருத்தல்.

35. **நியமம்** - செய்தே ஆக வேண்டிய கட்டாயம்.

36. **நைஷ்டிகப்ரஹ்மசாரி** - விவாஹம் செய்து கொள்வதில்லை என்னும் வ்ரதத்தில் வைராக்யத்துடன் வாழும் ப்ரஹ்மசாரி.

37. **பதிதன்** - தன் ஆச்ரமத்திலிருந்து பெரிய முறையில் தவறியவன். (இவன் பெரிய தோஷம் உள்ளவன், வைதிக-அனுஷ்டானத்துக்குத் தகுதியற்றவன் என ஸ்ம்ருதிகள் கூறும்).

38. **பர்ணம்** - பலாசமரம்.

39. **பாரிப்லவம்** - யாகத்தில் கதை சொல்லுதல் எனும் சஸ்த்ரம்.

40. **பித்ருயானம்** - மரணமடைந்த பின் ஸ்வர்க்கத்துக்கு போகும் வழி.

41. **புருஷார்த்தம்** - மனிதன் வேண்டும் பலன்.

42. **ப்ரகரணம்** - 1. அங்கமாவதை அறிவிக்கும் ப்ரமாணங்களில் நான்காவது (பின் இணைப்பில் காணலாம்); 2. சொல்லப்பட்டு வரும் இடம்.

43. **ப்ரணயனம்** - யாகத்தில் ஒரு அனுஷ்டானம்(ஜலம் கொண்டு வருதல்).

44. **ப்ரணவம்** - ஓம்காரம் (ஓம் எனும் மந்த்ரம்)

45. **ப்ரதீகம்** - அவயவம் (ப்ரஹ்மத்தின் சரீரமான உலகப் பொருள்)

46. **ப்ரதீக உபாஸனம்** - ப்ரஹ்மத்தின் சரீரமான உலகப் பொருளை ப்ரஹ்மமாக உபாஸனம் செய்தல்.

47. **ப்ரஹ்மசர்யம்** - 1. நான்கு ஆச்ரமங்களில் முதலாவது, விவாஹத்துக்கு முன் வேத-அத்யயனம் செய்யும் பருவம், 2. காம-இன்பத்தை அடக்கி இருத்தல்.

48. **மனனம்** - 1. ப்ரஹ்மத்தை சிந்தித்தல், 2. ஆசார்யன் உபதேசம் செய்த விஷயத்தை யுக்திகள் கொண்டு ஆராய்ந்து திடமாக்கிக் கொள்ளுதல், 3. சிந்தித்தல்.

49. **மௌனம்** - 1. முனிவர் போல எப்போதும் பகவானை சிந்திக்கும் பாங்கு, 2. பேசாமல் இருத்தல்.

50. **யஜமானன்** - யாகம் செய்பவன்

51. **யஜ்ஞம்** - யாகம், பஞ்சமஹாயஜ்ஞம் முதலியது.

52. **ரித்விக்** - யாகம் செய்து வைப்பவர்.

53. **லிங்கம்** - அங்கமாவதை அறிவிக்கும் ப்ரமாணங்களில் இரண்டாவது (பின் இணைப்பில் காணலாம்); 2. காரணம், 3. அடையாளம், 4. அனுமானத்தில் ஹேது.

54. **வாக்யம்** - 1. அங்கமாவதை அறிவிக்கும் ப்ரமாணங்களில் மூன்றாவது (பின் இணைப்பில் காணலாம்); 2. சொல்-தொடர்.

55. **வானப்ரஸ்தம்** - நான்கு ஆச்ரமங்களில் மூன்றாவது; காட்டில் வசித்தல்.

56. **விகல்பம்** - 1. ஒரு இடத்தில் சொன்ன குணங்களை மற்றொரு இடத்தில் சேர்க்காமல் இருத்தல் 2. பல வழிகளில் ஏதாவது ஒன்று ஆகலாம் என்னும் நிலை.

57. **விதி** - 1. வேதக் கட்டளை, 2. விதிக்கப் படும் விஷயம்.

58. **விதுரர்** - மனைவியை இழந்தவர். (இது நான்காவது 'த'காரம்; மூன்றாவது தகாரம் சேர்த்து விதுரர் என்பவர், மஹாபாரதத்தில் த்ருதராஷ்டிரனின் தம்பி).

59. **வித்யுத்புருஷன்** - மின்னல் தேவன்; ஆதிவாஹிகர்களில் ஒருவன்.

60. **வித்யை** - 1. உபாஸனம், 2. உபாஸனத்தை அறிவிக்கும் வேதபாகம்.

61. **வித்வான்** - ப்ரஹ்மத்தைஉபாஸனம் செய்பவர்

62. **வ்யாஹ்ருதி** - 'பூ:' என்று ஆரம்பித்து மூன்றுஉலகங்களை குறிக்கும் மந்த்ரம்.

63. **சமம்** - இந்த்ரிய-அடக்கம்.

64. **சரணாகதி** - உபாஸனம் செய்ய முடியாமல், பகவானையே உபாயமாக பற்றுதல்; இதுவும் ப்ரஹ்ம-வித்யைகளில் ஒன்று.

65. **சஸ்த்ரம்** - யாகத்தில் கானமாக இல்லாமல் உரைநடையாக தேவர்கள் முதலியவரின் குணங்களைப் புகழ்தல்.

66. **சாஸ்த்ரம்** - கட்டளையிடும் வேதம்; வேதம் முதலியது.

67. **ச்ருதி** - 1. அங்கமாதலை அறிவிக்கும் ப்ரமாணங்களில் முதலாவது, 2. வேதம்.

68. **ஸத்யஸங்கல்பன்** - ஸங்கல்பம் தடைபெறாதபடி நடத்திக் கொள்பவன்.

69. **ஸந்யாஸம்** - நான்காவது ஆச்ரமம் ஆன துறவு.

70. **ஸமாக்யா** - 1. அங்கமாவதை அறிவிக்கும் ப்ரமாணங்களில் ஆறாவது (பின் இணைப்பில் காணலாம்), 2. பெயர்.

71. **ஸம்வத்ஸரம்** - ஆண்டு; ஆண்டு என்னும் காலத்தை அதிஷ்டானம் செய்யும் தேவன்; ஆதிவாஹிகர்களில் ஒருவன்.

72. **ஸஹகாரி** - துணைக் காரணம்.

73. **ஸ்தானம்** - அங்கமாவதை அறிவிக்கும் ப்ரமாணங்களில் ஐந்தாவது (பின் இணைப்பில் காணலாம்), 2. இடம், 3. பதவி

74. **ஸ்துதி** - புகழ்தல்.

75. **ஸ்தோத்ரம்** - யாகத்தில் கானமாக தேவர்கள் முதலியவர்களின் குணத்தை புகழ்தல்.

76. **ஹவிஸ்** - தேவர்களுக்கு அர்ப்பணம் செய்யப்படும் உணவுப் பொருள்.

77. **ஹானி** - விடுதல் (ப்ரஹ்மஜ்ஞானி புண்யபாப-கர்மங்களை இறுதியில் விடுதல்).

78. **ஹிம்ஸா** - துன்புறுத்துதல்.

79. **ஹிரண்யகர்ப்பன்** - நான்முகன் (ப்ரஹ்மதேவன்)

80. **ஹோதா** - யாகம் செய்து வைக்கும் ரித்விக்களில் ஒருவர்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீபாஷ்ய-தாத்பர்ய-ஸாரம்

(ஸ்ரீதேஶிகன் அருளிய அதிகரணஸாராவளி
நூலிலிருந்து தொகுத்தது)

(ஸ்ரீதேசிகன் ஸ்ரீபாஷ்யஸாரமாக அதிகரணஸாராவலி என்னும் ஸ்ரீகோசம் அருளியுள்ளார்; அதில் ஒவ்வொரு அதிகரண பொருளையும் பல ச்லோகங்களாக சாதிக்கிறார்; மேலும், ஒவ்வொரு பாதத்தின் முடிவிலும் அந்தந்த பாதத்தில் உள்ள அதிகரணங்களின் ஸாரமான பொருளை தொகுத்து சுருக்கமாக சாதிக்கிறார்; அதன் தொகுப்பாக இந்த இணைப்பு அமைகிறது.

இதில் ஸ்ரீபாஷ்ய-விஷயங்கள் மொத்தமும் ரத்ன-சுருக்கமாக தொகுக்கப்பட்டு அமைகிறது; இதை பாராயணம் செய்வதும் நல்லதே; ஸ்ரீதேசிகன் ஸ்ரீபாஷ்யஸாரத்தை தொகுத்தளிக்கும் அழகையும் அருளையும் இதில் நன்கு அனுபவிக்கலாம்; திருவாய்மொழிக்கு த்ரமிடோபநிஷத்-தாத்பர்ய-ஸாரம் எனும் நூலை ஸ்ரீதேசிகன் அருளியது போல, இது ஒரு ஸ்ரீபாஷ்ய-தாத்பர்ய ஸாரம் என நாம் எண்ணலாம்; அனுபவிக்கலாம்.)

ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

ஸ்ரீமான் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி।।

முன்னுரை

स्वस्ति श्रीरङ्गभर्तुः किमपि दधदहं शासनं तत्प्रसत्त्यै
सत्यैकालम्बि भाष्यं यतिपतिकथितं शश्वदध्याप्य युक्तान्।
विश्वस्मिन् नामरूपाण्यनुविहितवता तेन देवेन दत्तां
वेदान्ताचार्यसंज्ञामवहितबहुवित्सार्थमन्वर्थयामि॥१॥

ஸ்ரீதேசிகன் சாதிக்கிறார் -

- ஸ்வஸ்தி ஸ்ரீரங்கநாதனுடைய ஆச்சர்யமான மங்களமான ஒரு திவ்ய-ஆஜ்ஞையை அனுக்ரஹத்தை நான் ஏற்றிருக்கிறேன்;
- ஸத்யத்தைப் பற்றியே ஸத்யமானதாகவே, ஸ்ரீராமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தை, அந்த பெருமானின் திருவுள்ள உகப்புக்காக அடிக்கடி தகுந்தவர்களுக்கு உபதேசம் செய்து வருகிறேன்;
- உலகப் பொருள்களுக்கு பெயரையும் உருவையும் வகுத்தவனான அந்த பெருமானால் 'வேதாந்தாசார்யன்' எனும் பெயரிடப் பெற்றேன்;
- இப்போது, பண்டித-கோஷ்டியினர் கவனிக்க அந்த பெயரை பொருளுடையதாக ஆக்குகிறேன்.

(வேதாந்தத்துக்கு ஆசார்யனாக காலக்ஷேபங்கள் சாதிக்கிறேன்; உலகத்துக்கே வேதாந்த-ஆசார்யனாக பெருமான் அருளியபடி இந்த நூலை செய்கிறேன் என்று ஸ்ரீதேசிகன் சாதிக்கிறார்).

★★★★★★★★★★★★★★★★★

श्रीमद्भ्यां स्यादसावित्यनुपधि वरदाचार्यरामानुजाभ्यां
सम्यग्दृष्टेन सर्वंसहनिशितधिया वेङ्कटेशेन क्लृप्तः।
सेव्योऽसौ शान्तचित्तैः(पित्तैः) श्रवणरसनया शान्तिलार्थिभिर्वा
सिद्धः शरीरकार्थे सहजबहुगुणः स्रग्धरादुग्धराशिः॥२॥

ஸ்ரீமத் நடாதூர் அம்மாளும், ஸ்ரீமத் அப்புள்ளாராலும் தாமாகவே,

In Public Domain. Digitization: Mythili Lakshmi Research Academy

''இவன் சிறந்து திகழ்வான்'' என்று நன்கு கடாக்ஷம் செய்யப் பெற்று அதன் மூலம் எல்லாம் அறியும் கூர்மையான ஜ்ஞானம் பெற்றவர் ஸ்ரீதேசிகன்; அவரால் இயற்றப்படும் இந்த நூலானது, ஸ்ரக்தரா-ச்லோகங்கள் ஆன பாற்கடல் போன்றது ஆகும்.

- பாலானது, சாரீரகார்த்தம் (உடல் சுகத்துக்காக ஆகும்);

  இந்த நூலானது, சாரீரகார்த்தம் (வேதாந்த -அர்த்தத்தை உடையது).

- பாலானது, ஸஹஜ-பஹுகுணம் (இயல்பாகவே இனிமை முதலிய பல குணங்களைக் கொண்டது).

  இந்த நூலானது, ஸஹஜ-பஹுகுணம் (எளிதாகவே, அனுபவிக்க இனிமை முதலிய பல குணங்களைக் கொண்டது; அல்லது எம்பெருமானது இயல்பான பல குணங்களை எடுத்துரைப்பது).

- பாலானது, சாந்த சித்தர்களால் (நோயற்று நிம்மதியாக இருப்பவர்களால்) ஏற்கத் தக்கது.

  இந்த நூலானது, சாந்தசித்தர்களால் (மனதை அடக்கி கவனமாக படிப்பவர்களால்) ஏற்கத் தக்கது.

- பாலானது சாந்தியை (நோயற்ற நிம்மதியை) வேண்டுபவர்களாலும் ஏற்கத் தக்கது.

  இந்த நூலானது, சாந்தியை (ஸம்ஸார-பயமற்ற நிலையை) விரும்புபவர்களாலும் ஏற்கத் தக்கது.

- பாலானது நாவினால் சேவ்யம் (பருக ஏற்றது).

  இந்த நூலானது செவியையே நாவாக ஆக்கிக் கொண்டு சேவ்யம் (அனுபவிக்க ஏற்றது).

★★★★★★★★★★★★★★★★★★

ஸ்ரீபாஷ்யத்தின் முழுப் பொருள்

शास्त्रं त्वे(चै)तत् समन्वित्यविहतिकरणप्राप्तिचिन्ताप्रधानै-
रध्यायैः षोडशाङ्घ्रि द्विकयुगभिदुरं षट्कभेदादिनीत्या।
तत्राद्यं वक्ति सिद्धं विषयमपि परं तत्प्रतिद्वन्द्वियुग्मं
स्वप्राप्तेः साधनं च स्वयमिति हि परं ब्रह्म तत्रापि चिन्त्यम्॥१७॥

இந்த வேதாந்த-சாஸ்த்ரத்தில் மொத்தமாக இரு பாகங்கள்; ஒவ்வொரு பாகத்திலும் இரு அத்யாயங்கள் -

1. அதில் முதல் பாகமான இரு அத்யாயம் ஸித்த-விஷயம்;ஏற்கனவே இருக்கும் விஷயமான பரமாத்மாவைப் பற்றியது.
2. அடுத்த பாகமான இரு அத்யாயம், ஸாத்ய விஷயம்; இனி வர வேண்டியதான உபாயம், பலன் எனும் விஷயங்களைப் பற்றியது.

இரண்டாவது பாகத்திலும் கூட, அடைய வேண்டிய பலன் பரமாத்மாதான்; பலனளிக்கும் உபாயமும் பரமாத்மாதான்; ஆகையால், பரமாத்மாதான் மொத்த சாஸ்த்ர-விசாரத்துக்கும் ஒரே விஷயமாக ஆகிறான்.

பன்னிரண்டு அத்யாயங்கள் கொண்ட பூர்வமீமாம்ஸாவை ஆறு-அத்யாயங்கள் கொண்ட இரு பாகமாக சொல்வதுபோல, இது ஆகும்.

இந்த சாஸ்த்ரத்தில் நான்கு அத்யாயங்கள்; அவற்றின் விஷயங்கள் -

1. ஸமன்வயம் - உலகின் காரணமாக ப்ரஹ்மம் ஆவதில் வேதாந்தவாக்யங்களின் பொருத்தம்.
2. அவிரோதம் - உலக-காரணமாக ப்ரஹ்மம் ஆவதில் எந்தவிதமான முரண்பாடும் இல்லாமை.
3. உபாயம் - ப்ரஹ்மத்தை அடைவதற்கு உபாயமான ப்ரஹ்மவித்யை.
4. ப்ராப்தி - ப்ரஹ்மத்தை அடைதல் எனும் பலன்.

ஒவ்வொரு அத்யாயத்துக்கும் நான்கு பாதங்களாக பதினாறு பாதங்கள் உள்ளன.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

பதினாறு பாதங்களின் கருத்து

स्रष्टा देही स्वनिष्ठो निरवधिमहिमाऽपास्तबाधः श्रिताप्तः
खात्मादेरिन्द्रियादेरुचितजननकृत् संसृतौ तन्त्रवाही।
निर्दोषत्वादिरम्यो बहुभजनपदं स्वार्हकर्मप्रसाद्यः
पापच्छिद् ब्रह्मनाडीगतिकृतिवहन् साम्यदश्चात्र वेद्यः॥१९॥

ஸ்ரீபாஷ்யத்தில் பதினாறு பாதங்களில் சொல்லப்படும் விஷயங்கள் -

பரமாத்மா ஆனவன் -

1. உலகங்களை படைப்பவன்.
2. உலக-பொருள்களுக்கு உள்ளே இருந்து ஆளும் ஆத்மா ஆனவன்.
3. உலகப்பொருளை சாராமல் (கர்ம-வசமின்றி) ஸ்வ-தந்த்ரனாக இருப்பவன்.
4. அளவற்ற பெருமை உடையவன்.
5. மறுக்கப்பட முடியாதவன்.
6. அடியவர்களுக்கு உண்மையானவனாய் மற்றவர்களுக்கு அறிய அரியவன்.
7. ஆகாசம், ஆத்மா முதலியதை உரிய முறையில் படைப்பவன்.
8. இந்த்ரியங்கள் முதலியதை உரிய முறையில் படைப்பவன்.
9. ஸம்ஸாரத்தை (மரணம், ஜனனம், ப்ரளயம் உட்பட) வழி நடத்துபவன்.
10. தோஷமற்றவனாக கல்யாண குணக்கடலாக இனியவன்.
11. பல பக்தி-வித்யைகளில் த்யானம் செய்யப்படும் விஷயம் ஆனவன்.
12. தனக்கே உரிய கர்ம-அனுஷ்டானங்களால் திருவுள்ளம் உகப்பவன்.
13. உபாயம் செய்பவரின் பாபங்களை வேரறுப்பவன்.
14. அவர்களை இறுதியில் ப்ரஹ்மநாடி வழியாக சரீரத்திலிருந்து வெளியேறச் செய்பவன்.
15. அவர்களை அர்ச்சிராதிகள் மூலமாக அழைத்துச் செல்பவன்.
16. அவர்களுக்கு மோக்ஷத்தில் தனக்கு சமமான ஆனந்தத்தை அளிப்பவன்.

★★★★★★★★★★★★★★★★★★

சாஸ்த்ர-ஆரம்பமான முதல் நான்கு அதிகரண-பாகத்தின் ஸாரம்

आत्मन्येवं परस्मिन्नकृत इति मिते(मते) विश्वहेतुत्वलक्ष्ये
शास्त्रैकस्थापनीये निरुपधिपरमप्रेमयोग्ये प्रसक्ते।
ईदृक्त्वं स्यात् यथार्हं प्रकृतिपुरुषयोर्नानुमानाद्ययोग्यौ
दुःखास्पृष्टौ च तावित्यथ परकथनं दोधवीति क्रमेण॥५४॥

முதல் பாதத்தில் முதல் நான்கு அதிகரணங்கள் சாஸ்த்ர-ஆரம்பமாக உள்ளவை. அதில் சொல்லப்பட்ட பரமாத்மா ஆனவன் -

1.1.1 ஏற்கனவே ஸித்தமாக இருப்பவனாய் சாஸ்த்ரத்தில் அறியத் தக்கவன்.

1.1.2 உலகத்தின் ஸ்ருஷ்டி-ஸ்திதி-நாசத்துக்கு காரணம் ஆனவன்.

1.1.3 சாஸ்த்ரத்தால் மட்டும் அறியப்பட முடிபவன்.

1.1.4 விரும்பத் தக்கவனாக அளவற்ற உயர்ந்த ஆனந்தன் ஆனவன்.

இதற்கு பிறகு, ப்ரக்ருதியும் ஜீவனும்தான் இப்படி ஆகிறவர்கள் என்று பிறமதத்தினர் சொல்வதை அடுத்த இரு அதிகரணங்களால் வரிசையாக போக்குகிறார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

1-1.அயோகவ்யவச்சேத-பாதம்

(உலகின் காரணமாக ப்ரஹ்மம் ஆகாது என்பதை மறுத்தல்)

स्वेच्छातः सर्वहेतुः शुभगुणविभवानन्तनिस्सीमहर्षः
शुद्धाकर्मोत्थदिव्या(नित्या)कृतिरनुपधिकाकाशनादिस्वभावः।
सप्राणाप्राणभेदव्यतिभिदुरजगत्प्राणनो दिव्यदीप्तिः
प्राणेन्द्राद्यान्तरात्मा प्रभुरधिकरणैः सप्तभिः प्रत्यपादि॥७८॥

பரமாத்மா ஆனவன்,

1.1.5 தன் ஸங்கல்பத்தாலேயே எல்லாவற்றுக்கும் காரணம் ஆனவன்.

1.1.6 மங்களமான குணங்களாலும் விபவங்களாலும் எல்லையற்ற அளவற்ற ஆனந்தகுணம் உடையவன்.

1.1.7 கர்மத்தால் உண்டாகாத சுத்தமான திவ்யமான திருமேனி உடையவன்.

1.1.8 எல்லா விதத்தாலும் ப்ரகாசம் ஆனவன்.

1.1.9 ப்ராணனுடைய ஜீவிகளாகவும் ப்ராணன் அற்ற பொருள்களாகவும் இருவிதமாக ஆகும் உலகத்தை வாழ்விப்பவன்.

1.1.10 திவ்ய-ஜ்யோதிஸ் ஆனவன்.

1.1.11 ப்ராணனுக்கும் இந்திரனுக்கும் அந்தராத்மா ஆக சொல்லப்பட்டவன்.

★★

1-2.அஸ்பஷ்ட ஜீவ லிங்கக பாதம்

(தெளிவில்லாத ஜீவ-அடையாளங்கள் கொண்ட வாக்யங்களை ஆராய்தல்)

स्वाधीनाशेषसत्तास्थितियतनतया सर्वभावेन तिष्ठन्
ग्रस्ताशेषोऽक्षिनित्यस्थितिरखिलतनुः कल्पिताग्न्यादिगात्रः।
स्वर्लोकाद्यङ्गवैश्वानरमितिविषयो लक्षणस्याऽऽदिमस्य
प्रोक्तः पादे द्वितीये श्रुतिनिकरशिरश्शेखरः श्रीनिवासः॥९८॥

உலகின் காரணமான பரமாத்மா ஆனவன் -

1.2.1. எல்லா பொருள்களின் ஸ்வரூபம், நிலைப்பு, செயல்பாடுகளை தனக்கு அதீனமாக கொண்டதால் எல்லா பொருளுமாக இருப்பவன்.

1.2.2. எல்லாவற்றையும் உண்டு, ஸம்ஹாரம் செய்பவன்

1.2.3. கண்ணில் எப்போதும் இருப்பவன் (அப்படி யோகிகளுக்கு தெரிபவன்).

1.2.4. எல்லாவற்றையும் சரீரமாக கொண்ட அந்தர்யாமி ஆனவன்.

1.2.5. த்யானத்தில் ஸ்வர்க்கலோகம் முதலியதை தலை முதலியதாக எண்ணும்படி (மிகப்பெரிய உருவில்) இருப்பவன்.

1.2.6. ஸ்வர்க்கலோகத்தை அங்கமாகக் கொண்ட வைச்வானரனாக த்யானம் செய்யப் படுபவன்.

இப்படியாக வேதாந்த-பூஷணன் ஆன ஸ்ரீநிவாஸன் சொல்லப்பட்டான்.

★★★★★★★★★★★★★★★★★

1-3.ஸ்பஷ்ட ஜீவ லிங்கக பாதம்

(தெளிவான ஜீவ-அடையாளங்கள் கொண்ட வாக்யங்களை ஆராய்தல்)

विश्वात्माऽनन्तभूमा नियमनधृतिकृन्मुक्तभोग्यस्वभावो
दहस्वाधारसर्वो हृदयपरिमितावस्थया सर्वयन्ता।
देवादीनामुपास्यो वसुमुखविबुधैः स्वात्मभावेन सेव्यः
शूद्राद्योपास्त्यनर्हः प्रभुरिह बुबुधे नामरूपैककर्ता॥१२९॥

உலகின் காரணமான பரமாத்மா ஆனவன் -

1.3.1 உலக பொருளுக்கு எல்லாம் ஆத்மா ஆனவன்.

1.3.2 அளவற்ற பெருமையால் உயர்ந்தவன்.

1.3.3 உலகை ஆள்பவன், உலகை தரிப்பவன்.

1.3.4 மோக்ஷம் அடைந்தவர்களால் அனுபவிக்கப் படும் தன்மையன்.

1.3.5 ஹ்ருதயத்தில் சிறிய-அளவினனாகவே எல்லாவற்றுக்கும் ஆதாரமானவன்.

1.3.6 ஹ்ருதயத்தில் சிறிய-அளவினனான நிலையில் எல்லாவற்றையும் ஆள்பவன்.

1.3.7 தேவர்கள் முதலியவரால் உபாஸனம் (த்யானம்) செய்யத் தக்கவன்.

1.3.8 வஸுக்கள் முதலான தேவர்களால் தம் அந்தராத்மாவாக உபாஸனம் செய்யத் தக்கவன்.

1.3.9 கடைசி வர்ணத்தவரால் உபாஸனம் செய்யத் தகாத பெருமையன்.

1.3.10 பொருள்களுக்கு நாம-ரூபங்களை (பெயர் மற்றும் உருவத்தை) வகுப்பவன்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

1-4. ஸ்பஷ்டதர ஜீவ லிங்கக பாதம்

(மிகத் தெளிவான ஜீவ-அடையாளங்கள் கொண்ட வாக்யங்களை ஆராய்தல்)

साङ्ख्योक्तप्रक्रियोक्तेः तदभिमतसृजेः तत्प्रसङ्ख्यानक्लृप्तेः
तत्प्रोक्ताव्याकृतैक्यात् स्ववृजिनवचनात् तत्फलावद्ययोगात्।
भेदात् कर्तृप्रकृत्योर्द्रुहिणशिवमुखानेकहेतुश्रुतेश्च
क्षिप्तं पादत्रयोक्तं श्रुतिहृदयसमुद्घाटनादन्वरक्षत्॥१५२॥

பரமாத்மாவை சொல்லும் வேதமானது, சில குறிப்பிட்ட இடங்களில்,

1.4.1. ஸாங்க்யமதத்தினர் சொன்ன தத்த்வ முறையை சொல்கிறது என்னும் வாதம் சரியில்லை; இந்த்ரியங்கள், விஷயங்கள் முதலியதை வசீகரணம் செய்வதன் மூலம் அடையப் படுபவன் பரமாத்மா என்கிறது.

1.4.2. ஸாங்க்யர் சொன்னபடி வெறும் ப்ரக்ருதியிலிருந்து ஸ்ருஷ்டி முறையை சொல்கிறது என்னும் வாதம் சரியில்லை; உலகக் காரணமான மூலப்ரக்ருதிக்கு ஆத்மாவாக பரமாத்மா இருக்கிறான் என்பதை ஏற்கிறது.

1.4.3. ஸாங்க்யர் சொன்ன எண்ணிக்கையை குறிக்கிறது என்னும் வாதம் சரியில்லை; இந்த்ரியங்களை ஒளிரச் செய்பவன் பரமாத்மா என்கிறது.

1.4.4. ஸாங்க்யர் சொன்ன அவ்யாக்ருதம் என்பதை சொல்கிறது என்னும் வாதம் சரியில்லை; அதனை சரீரமாகக் கொண்ட பரமாத்மாவே காரணம் என்கிறது.

1.4.5. புண்யபாபம் ஆகிற கர்மம் உடையதாக காரணப்பொருளை சொல்கிறது என்னும் வாதம் சரியில்லை; உலகப் படைப்பு என்பது பரமாத்மாவின் கர்மம் (செயல்) என்கிறது.

1.4.6. கர்ம-பலனான தாற்காலிக சுகதுக்கமயமான உறவுகள் உடையதாக காரணப் பொருளை சொல்கிறது எனும் வாதம் சரியில்லை; இந்த உறவுகளை அமைத்துத் தரும் ஆனந்தமயன் ஆன பரமாத்மாவை சொல்கிறது.

1.4.7. உபாதானகாரணமும் நிமித்தகாரணமும் வேறாகும் என்னும் வாதம் சரியில்லை; பரமாத்மாவே உபாதானமும் நிமித்தமும் என்கிறது.

1.4.8. ப்ரஹ்மா, சிவன் முதலியவரை காரணமாக சொல்லவில்லை; பரமாத்மாவான நாராயணனே காரணம் என்கிறது.

அப்படி தெளிவான வேதத்தால் சொல்லப்படுபவன் பரமாத்மா என்று கருத்து.

இப்படி, வேதாந்தத்தின் உட்பொருளை விளக்குவதன் மூலம், முன் மூன்று பாதங்களில் சொன்ன விஷயத்தை காப்பாற்றி அருளினார்.

★★★★★★★★★★★★★★★★★

2-1. ஸ்ம்ருதி பாதம்

(ப்ரஹ்மம் காரணம் என்பதை ஸ்ம்ருதியைக் கொண்டு மறுக்க முடியாமை)

साङ्ख्यस्स्मृत्या विरोधात् विधिमतविहतेः कार्यवैरूप्यतोऽस्मिन्
एकार्थानेकतन्त्रोदितविहततया देहभोगावियुक्त्या।
कार्योपादानभेदात् स्वहितविहतितः कारकस्तोमहानेः
कृत्स्नांशाद्यूहबाधात् कृतिविफलतयाप्युत्थितं प्रत्यविध्यत्॥१७५॥

முன் சொன்னபடி பரமாத்மாவே காரணம் என்பதானது-

2.1.1. ஸாங்க்ய-ஸ்ம்ருதிக்கு முரண்படுவதால், தவறு என்பது கிடையாது; பல நல்ல ஸ்ம்ருதிகளுக்கு முரண்பட்டதான ஸாங்க்ய-ஸ்ம்ருதிதான் தவறாகும்.

2.1.2. நான்முகன் செய்த யோக-மதத்துக்கு முரண்படுவதால் தவறு என்பது கிடையாது; யோகமதம்தான் தவறாகும்.

2.1.3. கார்யப்பொருளும் காரணப் பொருளும் வேறான வகையில் ஆகாது என்பது கிடையாது; வேறான வகையிலும் காரண-கார்ய-பொருள்கள் ஆகலாம் என்பதால், ப்ரஹ்மம் காரணம் ஆகலாம்.

2.1.4. ஒரே கருத்தை உடைய பல சாஸ்த்ரங்களுக்கு முரண்படுவதால் தவறானது என்பது கிடையாது; அவையே ஒன்றுக்கொன்று முரண்பட்டு தவறாக இருக்கின்றன.

2.1.5. சரீரம் உடைய பரமாத்மாவுக்கு சுகதுக்க போகம் தவிர்க்க முடியாது என்னும் வாதம் சரியில்லை; சரீரம் இருந்தாலும் சுகதுக்கம் இல்லாமல் இருக்கலாம்.

2.1.6. கார்ய-பொருளும் உபாதானகாரணமும் வேறாக வேண்டும் என்னும் வாதம் சரியில்லை; பரமாத்மாவே காரணமும் கார்யமும் ஆவான்.

2.1.7. பரமாத்மாவே ஜீவனாக சொல்லப்படுவதால், தனக்கே துக்கம் தேடிக்கொள்ள நேரிடும் என்னும் வாதம் சரியல்லை; பரமாத்ம-ஸ்வரூபம் வேறானதால், அதில் துக்கம் கிடையாது.

2.1.8. துணைக் காரணங்கள் இல்லாமல் பரமாத்மா காரணமாக முடியாது என்னும் வாதம் சரியில்லை; துணைக் காரணம் இல்லாமலேயே ஒரு பொருள் காரணம் ஆகலாம்.

2.1.9. காரணப் பொருள், முழுவதுமாகவோ ஒரு பாகம் மட்டுமோ மாற வேண்டும் என்னும் வாதம் இங்கு வராது; வேதம் சொல்லும் முறையில், மாற்றம் இல்லாத பரமாத்மா காரணமாவதை விளக்கலாம்.

2.1.10. பரமாத்மாவுக்கு படைப்பின் மூலம் பெற வேண்டிய பயனில்லை என்பதால் அவன் படைப்பவன் ஆகமாட்டான் என்னும் வாதம் சரியில்லை; லீலா-ரஸத்துக்காக படைப்பு ஆகிறது.

★★★★★★★★★★★★★★★★★

2-2. தர்க்க பாதம்

(ப்ரஹ்மம் காரணம் என்பதை தர்க்கம் கொண்டு மறுக்க முடியாமை)

पादेऽस्मिन् कापिलस्थैः कणभुगनुगतैर्वृद्धवैभाषिकाद्यैः
योगाचाराभिधानैः सुगतमतरहश्शून्यवादप्रसक्तैः।

अर्हत्सिद्धान्तभक्तैः पशुपतिसमयस्थायिभिश्चोपरोधं
क्षिप्त्वाऽथो पञ्चरात्रे(त्रं) श्रुतिपथमवदत् पञ्चमाम्नायदर्शी॥२१९॥

பிற மதங்களைக் கொண்டு வேத-அர்த்தத்தை மறுக்க முடியாது; ஏனெனில்,

2.2.1 ஸாங்க்ய மதத்தவர் சொல்வது தவறு.

2.2.2 வைசேஷிக மதத்தினர் சொல்வது தவறு.

2.2.3 வைபாஷிக பௌத்த மதத்தினர் சொல்வது தவறு.

2.2.4 யோகாசார பௌத்த மதத்தினர் சொல்வது தவறு.

2.2.5 பௌத்தமத ரகஸ்யமாக சூன்யவாத-மதத்தினர் சொல்வது தவறு.

2.2.6 ஜைனமத-பக்தர்கள் சொல்வது தவறு.

2.2.7 சைவமதத்தினர் சொல்வது தவறு.

2.2.8 வேத நெறிக்கு ஏற்ப ஸ்ரீபாஞ்சராத்ர மதத்தில் சொல்வது சரியானது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

2-3. வியத் பாதம்

(ஆகாசம் முதலியவை உண்டாகும் முறை)

क्लृप्तिर्व्योमादिकेऽपि, क्रमभुवि च विभोः प्राच्यतत्त्वैर्विशिष्टात्
जीवस्यौपाधिकौ तु प्रजननविलयौ, चिद्घनज्ञातृताऽस्य।
कर्तृत्वं पारतन्त्र्यं, गुणतनुनयतो विश्वरूपांशता चे-
त्याम्नायान्योन्यबाधव्यपनयनवियत्पादसाध्यानि सप्त॥२५२॥

பரமாத்மாவின் படைப்புகளில் சில விஷயங்கள் -

2.3.1. ஆகாசம் முதலியதும் கூட படைக்கப்படும் பொருள்தான்.

2.3.2. முன்முன் தத்த்வங்களுடன் கூடிய பரமாத்மாதான் வரிசையாக அடுத்தடுத்த பொருள்களுக்கு காரணமாகிறான்.

2.3.3. ஜீவனுக்கு பிறப்பு-இறப்பு என்பது சரீரத்தையும் ஜ்ஞானத்தையும் இட்டு ஆகும்; ஜீவஸ்வரூபம் நிலையானது; அதற்கு ஆக்கமோ அழிவோ கிடையாது.

2.3.4. ஜீவன் ஜ்ஞானஸ்வரூபம் (ஸ்வயம்ப்ரகாசம்) ஆனவன்; எப்போதும் ஜ்ஞானத்தை உடையவனும் கூட.

2.3.5. செயல்களைச் செய்பவன் ஜீவன்தான். (சரீரம் செயல்படுத்தப்படும்)

2.3.6. பரமாத்மாவுக்கு அதீனமாகவே ஜீவன் செய்பவன் ஆகிறான்.

2.3.7. த்ரவ்யத்துக்கு குணம் போல், ஆத்மாவுக்கு சரீரம் போல, பரமாத்மாவுக்கு ஜீவன் (பிரிக்க முடியாதபடி) ஒரு பகுதி ஆவான்.

இப்படி வேதத்தில் பரமாத்மாவிலிருந்து ஆகாசம், ஜீவன் முதலியது உண்டாவதாக சொல்வதில், ஒன்றுக்கொன்று முரண்பாடு இல்லை என்பதை விளக்குகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

2-4. ப்ராண பாதம்

(ப்ராணன் முதலியவை உண்டாகும் முறை)

अक्षाणां जन्मसङ्ख्यापरिमितय इह प्राणवायोस्स्वरूपं
तत्सौक्ष्म्यं देवतादेस्तदुभयविषयाधिष्ठितौ पारतन्त्र्यम्।
प्राणस्यानिन्द्रियत्वं बहुविधचिदचिद्व्यष्टिनामादि चाऽऽद्यात्
पञ्चीकर्तुः स्वनाभिप्रभवकवचितादूचिरे प्राणपादे॥२६६॥

பரமாத்மாவின் படைப்பில் சில விஷயங்கள் -

2.4.1. இந்த்ரியங்கள் படைக்கப் படுபவையே.

2.4.2. இந்த்ரியங்களின் எண்ணிக்கை பதினொன்று.

2.4.3. இந்த்ரியங்களின் அளவு அணு அளவாகும்.

2.4.4. ப்ராண-வாயு என்பது வாயுவின் ஒரு குறிப்பிட்ட நிலை என்பதே.

2.4.5. ப்ராண-வாயு ஸூக்ஷ்மமானது.

2.4.6. ப்ராண-வாயுவையும், இந்த்ரியங்களையும் அதிஷ்டானம் செய்யும் தேவர் முதலியவர் பரமாத்மாவுக்கு கட்டுப்பட்டு அதிஷ்டானம் செய்வர்.

2.4.7. ப்ராண-வாயு என்பது இந்த்ரியம் அல்ல.

2.4.8. முதலில் ஸமஷ்டி-ஸ்ருஷ்டியில் பஞ்சீகரணம் செய்யும் பரமாத்மாவே, வ்யஷ்டி-ஸ்ருஷ்டியில், நான்முகனை சரீரமாகக் கொண்டு, சேதன-அசேதன-பொருள்களில் நாம-ரூபங்களை வகுப்பவன்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

3-1. வைராக்ய பாதம்

(வைராக்யம் பிறப்பதற்காக ஜீவனுக்கு தோஷங்களை சொல்லுதல்)

पादे त्वर्थाः षडस्मिन् वपुरिह विजहत् भूतसूक्ष्मैस्सहेयात्;
भुक्तस्वर्गोऽवरोहेदनुशयसहितो मात्रयाभिन्नमार्गः।
चन्द्रावाप्त्यादि न स्यान्निरयपथजुषाम्; अम्बरादौ सदृक्त्वं
तस्माच्छीघ्रोऽवरोहः; परवपुषि चिरं व्रीहिपूर्वे तु योगः॥२८८॥

ஜீவன் ஆனவன் -

1.1.1. உடலை விட்டு வேறு லோகம் போகும்போது, ஸூக்ஷ்மமான பஞ்சபூதங்களுடன் கூட போகிறான்.

1.1.2. ஸ்வர்க்க-சுகத்தை அனுபவித்துவிட்டு, மீதியான புண்யபாப-கர்மங்களுடன் கூட மறுபிறவிக்காக இறங்குகிறான்; சென்ற வழியிலும், சற்றே வேறான வழியிலுமாக இறங்குகிறான்.

1.1.3. பாபமே செய்து, நரகவழியில் செல்பவர்களுக்கு சந்த்ரனை அடைதல், அந்த வழியில் திரும்பி இறங்குதல் முதலியது கிடையாது. (புழு பூச்சிகளாக பிறப்பர்)

1.1.4. வரும்போது ஆகாசம் முதலியது போல ஆகிறான்; அதாவது ஆகாசம் என்று சொல்லும்படி அதனுடன் சேர்ந்து இருக்கிறான்.

1.1.5. ஆகாசத்திலிருந்து தாமதம் இல்லாமல் விரைவில் இறங்குகிறான்.

1.1.6. வேறொரு ஜீவன் வசிக்கும் சரீரமான நெல் முதலியதில், அதிக காலம் சேர்ந்து இருக்கிறான்.

(பிறகு உணவாக மனிதனின் உடலுக்குள் போய், பிறக்கிறான்; இப்படி ஜீவனது ஸம்ஸார பயணத்தை நடத்தி வைப்பவன் பரமாத்மா).

★★★★★★★★★★★★★★★★★★★★★★

3-2. உபயலிங்க பாதம்

(பரமாத்மாவுக்கு இரு அடையாளங்களை சொல்வதன் மூலம் அவனிடம் பற்று உண்டாக்குதல்)

पादे स्वाप्नार्थहेतुस्तदयमिह सुषुप्त्याधृतिः सुप्तगोप्ता
मुग्धोद्बोधादिकर्ता त्वनघशुभगुणोऽचिद्भिरंशी स्वदेहैः।

पारम्यस्यैकसीमा सकलफलद इत्युच्यते भक्तिभूम्ने
सत्ये ह्येवं(त्वेवं) गुणादावथ परभजने रूपभेदादि चिन्त्यम्॥३२०॥

பரமாத்மா ஆனவன் -

1.2.2. கனவில் தெரியும் பொருள்களை உண்மையாக படைப்பவன்.

1.2.3. உறக்கத்தில் ஜீவனுக்கு ஆதாரமான இருப்பிடம் ஆனவன்.

1.2.4. உறங்கும் ஜீவனை அப்படியே பாதுகாப்பவன்.

1.2.5. மூர்ச்சை அடைந்தவனுக்கு விழிப்பு முதலியது அளிப்பவன்.

1.2.6. தோஷமற்ற கல்யாண குணங்கள் உடையவன்.

1.2.7. அசேதனங்களை தன் சரீரமாகஒரு பாகமாகக் கொண்டவன்.

1.2.8. உயர்வின் எல்லை நிலையில் இருப்பவன்.

1.2.9. எல்லா பலன்களையும் அளிப்பவன்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

3-3. குணோபஸம்ஹார பாதம்

(ப்ரஹ்ம-உபாஸனத்தில் குணங்களை சேர்த்துக் கொள்ளுதல் பற்றிய் ஆராய்வு)

विद्यैक्योद्गीथविद्याद्वितयविभजन-प्राणविद्यैकभावाः
सर्वास्वानन्दतादेर्गुणवदनुगतिः प्राणवासस्त्वदृष्टिः।
शाण्डिल्यैक्यं विभज्य स्थितिरहरहमोः सम्भृतेस्स्थानसीमा
पुंविद्या या विभेदोऽध्ययननियततः शन्न इत्यादिकानाम्॥३९०॥

हानाद्यन्योन्ययोगः तदुचितसमयो देवयानादिसाम्यं
सर्वत्रास्थूलतादि व्यतिहरणमथानेकशिष्यश्रुतानाम्।
दह्रोपास्त्येकभावो गुणफलतावधिरुद्गीथमाश्रित्य दृष्टौ
गुण्यावृत्तिर्गुणार्थं(र्था) निखिलपरतरोपास्तिवेद्यावसायः॥३९१॥

विद्यारूपा मनश्चित्प्रभृतय उचितज्ञानरूपक्रतुस्थाः
क्षेत्री शुद्धोऽनुचिन्त्यः क्रतुगुणसकलोद्गीथपूर्वेषु दृष्टिः।
सामस्त्येनैव वैश्वानरभजनमथानेकविद्योपपत्तिः
मोक्षार्थानां विकल्पः पुनरनियतिरुद्गीथदृष्टेरिहोचे॥३९२॥

உபநிஷத்தில் சொன்ன வித்யைகள் பற்றிய விஷயங்கள் -

3.3.1. விஷயம் முதலியது சமமாக இருந்தால், பல சாகைகளில் சொல்லப்படும் வித்யைகள் ஒன்றாகும்.

3.3.2. விஷயம் வேறாவதால், உத்கீதவித்யை, இரு சாகைகளில் வெவ்வேறாகிறது.

3.3.3. ப்ராணவித்யை இரு சாகைகளில் ஒன்றாகும்.

3.3.4. எல்லா ப்ரஹ்ம-வித்யைகளிலும் ஆனந்தத்வம் முதலிய ஸ்வரூப-நிரூபக-குணங்கள் எண்ணப்பட வேண்டியவை.

3.3.5. ப்ராணனின் வஸ்த்ரமாக ஜலத்தை எண்ணுவது ப்ராண-வித்யையில் சொல்லப் படுகிறது.

3.3.6. வேத-சாகைகளில் சொல்லப்படும் சாண்டில்யவித்யை வெவ்வேறல்ல; ஒன்றுதான்.

3.3.7. அஹஸ், அஹம் ஆகிய பெயர்கள் இருவேறு வித்யைகளில் ப்ரஹ்மத்துக்கு ஆகும்.

3.3.8. ஸம்ப்ருதி (வீர்யங்கள் சேர்ந்திருத்தல்) முதலிய குணங்களுக்கு, இடத்தை அனுசரித்து சில வித்யைகளில் மட்டும் எண்ணப்பட வேண்டிய வரையறை உண்டு.

3.3.9. புருஷவித்யை இரு சாகைகளில் வெவ்வேறாகும். (தைத்திரீயத்தில், சரணாகதி செய்தவன் வேறெதையும் செய்ய வேண்டிய தேவையின்மையைக் குறிக்கிறது)

3.3.10. 'சம் நோ மித்ர:' முதலிய மந்த்ரங்கள் வேத-அத்யயனத்துக்கு அங்கமாகும். (ப்ரஹ்ம-வித்யைக்கு அங்கம் அல்ல)

3.3.11. வித்யையில் எண்ணப்படும் ஹானி (புண்யபாபங்களை விடுதல்), உபாயனம் (புண்யபாபங்கள் பிறரை அடைதல்) ஆகியவை ஒன்றுக்கொன்று சேர்த்துக் கொள்ளப்படும்.

3.3.12. முழு புண்யபாபங்களை விடுதல் என்பது மரணகாலத்திலேயே ஆகும்.

3.3.13. அர்ச்சிராதி கதி என்பது ப்ரஹ்மவித்யை அனுஷ்டானம் செய்பவர் எல்லாருக்கும் பொதுவானது.

3.3.14. ஸ்தூலமாக ஆகாமை முதலியதாக சொல்லப்படும் தோஷம் அற்றமை என்கிற குணமானது, எல்லா ப்ரஹ்ம-வித்யைகளிலும் எண்ணப்பட வேண்டியது.

3.3.15. சிஷ்யர்கள் கேட்டு அறிந்த ப்ரஹ்ம-குணங்களை ஒருவருக்கொருவர் சேர்த்துக்கொண்டு ப்ரஹ்மத்தை தெளிவாக அறிதல் உஷஸ்த-கஹோல-ப்ரச்னம் எனும் பாகத்தில் உள்ளது.

3.3.16. தஹரவித்யை பல சாகைகளில் ஒன்றே ஆகும்.

3.3.17. உத்கீதவித்யை ஆனது, யாகத்தில் கட்டாயம் செய்யப்பட வேண்டிய அங்கம் அல்ல; அதற்குத் தனி பலன் சொல்லப்பட்டு உள்ளது.

3.3.18. தஹரவித்யையில் ஒவ்வொரு குணத்தை எண்ணும்போதும், குணமுடைய பரமாத்மாவையும் சேர்த்து எண்ண வேண்டும்.

3.3.19. எல்லா ப்ரஹ்ம-வித்யைகளிலும் த்யானம் செய்யப்படும் ப்ரஹ்மம் என்பது ஸ்ரீநாராயணனே.

3.3.20. மனச்சித் முதலிய கற்பனை-அக்னிகள் ஜ்ஞானமயமான யாகத்தில் சேர்பவை.

3.3.21. ஜீவாத்மாவின் சுத்தமான ஸ்வரூபம் வித்யைகளில் எண்ணப்பட வேண்டும்.

3.3.22. யாகத்துக்கு அங்கமான உத்கீதம் என்பது, பலவாக இருந்தாலும், எல்லாவற்றையும் பற்றியும் உபாஸனம் ஆகலாம்.

3.3.23. வைச்வானர-வித்யையில் முழுவதுமான மிகப்பெரிய வைச்வானர-உருவத்தை த்யானம் செய்ய வேண்டும்.

3.3.24. உபநிஷத்தில் வித்யைகள் பல உள்ளன; மொத்தமாக ஒரே வித்யை என்பது இல்லை. (குறிப்பாக சரணாகதி என்பது தனி வித்யை ஆகும்).

3.3.25. மோக்ஷத்துக்கான ப்ரஹ்ம-வித்யைகளில் ஏதாவது ஒன்றை செய்தால் போதும்; பலன் கிடைக்கும். (சரணாகதி செய்தால் போதும்).

3.3.26. உத்கீத-உபாஸனம் கட்டாயமாக செய்ய வேண்டும் என்கிற நியமம் இல்லை என்பது உறுதிதான்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

3-4. அங்க பாதம்

(ப்ரஹ்ம-உபாஸனத்துக்கு அங்கங்களை சொல்லுதல்)

विद्या कर्माङ्गिका स्यात् रसतममुखधीश्चोदिता प्राप्त्यभावात्
आख्यानानाञ्च विद्याविधिसविधजुषां तद्विधानार्थतैव।
विद्या साङ्गोर्ध्वरेतस्स्वपि गृहवति सा यज्ञदानाद्यपेक्षा
शान्त्याद्यर्हो गृहस्थोऽप्यविपदि विदुषोऽप्यन्नशुद्ध्यैव सिद्धिः॥४२४॥

एकं विद्याश्रमार्थं विधुरमवि(पि)युतं विद्ययाऽऽहुः श्च्युतं न
ऋत्वङ्गे दृष्टिऋत्विक्कृतिरथ मुनिता चोदिता ध्यानसिद्ध्यै।
बाल्यं शक्त्यादिगुप्तिः बलवदभिहितैः कर्मभिर्नान्यविद्या
तद्वन्मुक्त्यर्थविद्या स्वजनकसुकृतेरित्युवाचात्र पादे॥४२५॥

ப்ரஹ்ம-வித்யையின் அங்கங்கள் பற்றிய விஷயங்கள் -

3.4.1 மோக்ஷத்துக்கு உபாயமான ப்ரஹ்மவித்யைக்கு, யாகம் முதலிய கர்மம் அங்கமாகும்.

3.4.2 உத்கீதத்தை உயர்ந்த ரஸமாக சொன்னது, அப்படி உபாஸனம் செய்வதற்கான விதி ஆகும். (வெறும் புகழ்ச்சி அல்ல).

3.4.3 வித்யைகளில் சொல்லப்படும் கதைகள் அந்த வித்யைகளின் உயர்வைச் சொல்லும் பொருட்டே ஆகும்.

3.4.4 ஸந்யாஸிகளுக்கு யாகம் முதலிய அங்கங்கள் இல்லாவிட்டாலும், ஸந்யாஸ-ஆச்ரமதர்மங்களை அங்கமாகச் செய்துகொண்டு, ப்ரஹ்ம-வித்யை செய்யலாம்.

3.4.5 க்ருஹஸ்தனுக்கு ப்ரஹ்ம-வித்யை ஆனது, யஜ்ஞம், தானம் முதலிய அங்கங்களுடன் கூட ஆகும்.

3.4.6 யஜ்ஞம் செய்யும் க்ருஹஸ்தன், மீதி விஷயங்களில் ஈடுபடாமல், புலனடக்கம் எனும் அங்கமும் செய்ய தகுந்தவன்.

3.4.7 ப்ரஹ்மஜ்ஞானிக்கும் கூட, ஆபத்து-காலம் தவிர மீதி சமயத்தில், ஆசார-சுத்தமாகவே உணவு இருக்க வேண்டும்.

3.4.8 அக்னிஹோத்ரம் முதலிய கர்மம் ஒன்றே, ப்ரஹ்மவித்யைக்கு அங்கமாகவும், ஆச்ரமதர்மமாகவும் ஆகலாம்.

3.4.9 மனைவியை இழந்தவரும்கூட தபஸ் முதலியதை அங்கமாகக் கொண்டு ப்ரஹ்மவித்யை செய்யலாம்.

3.4.10 ஆச்ரமநியமம் தவறி,ப்ராயச்சித்தத்தாலும் முழுத்தூய்மை பெற முடியாத பதிதன் ஆனவன் வித்யைக்கு தகுதி பெற மாட்டான்.

3.4.11 யாகத்தில் அங்கம் பற்றிய (உத்கீத)உபாஸனத்தை ருத்விக் செய்ய வேண்டும்.

3.4.12 ப்ரஹ்ம-த்யானம் சித்திப்பதற்காக ப்ரஹ்மத்தையே எப்போதும் எண்ணும் பாங்கு (முனித்தன்மை) தேவை.

3.4.13 ஜ்ஞானிக்கு இருக்க வேண்டிய பால்யம் என்பது, தன் திறமை முதலியதை வெளிக்காட்டாமை ஆகும்.

3.4.14 அல்ப-பலன்களுக்கான வித்யை ஆனது, பிற பலமான கர்ம-பலன்களால் தடைபட்டு தாமதமாக சித்திக்கலாம் (உண்டாகலாம்).

3.4.15 மோக்ஷபலனுக்கான வித்யையும் கூட,பெரும்புண்யத்தின் அடியாக விளைந்ததானாலும், பாகவத-அபசாரம் முதலிய வலுவான கர்ம-பலன்களால் தடைபட்டு தாமதமாக சித்திக்கலாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★

4-1. ஆவ்ருத்தி பாதம்

(வித்யையின் பலனாக புண்யபாபங்கள் கழிதல்)

आवर्त्या(वृत्ता) ब्रह्मविद्या त्वसकृत्, अहमिति स्याच्च, न स्यात् प्रतीके
कर्माङ्गेऽर्कादिदृष्टिः, प्रणिधिरपि भवेत् सासनः प्रत्य(सनस्यान्व?)हश्च।
पापे,पुण्ये च नाशादिकम्, अथ तु तयोर्भोग्यताऽऽरब्धकार्ये,
कार्यत्वं स्वार्हवृत्तेरिति, कथितमिहारब्धशान्तौ च मोक्षः॥४७४॥

ப்ரஹ்ம-வித்யையின் ஆரம்பகாலப் பலன்கள் -

4.1.1. ப்ரஹ்மவித்யை என்பது பலமுறை மீண்டும் மீண்டும் பரமாத்மாவை இடைவிடாமல் சிந்தித்தல் ஆகும்.

4.1.2. உபாஸனத்தில், பரமாத்மாவை தனக்கு ஆத்மாவாக, 'நான்' என்றே எண்ண வேண்டும்.

4.1.3. உலகப் பொருள்கள் பற்றிய ப்ரதீக-உபாஸனத்தில் நான் என்று ஆத்மாவாக எண்ணுதல் கிடையாது.

4.1.4. ஒரு ப்ரதீக-உபாஸனத்தில், உத்கீதத்தை ஆதித்யனாக உபாஸனம் செய்ய வேண்டும். (ஆதித்யனை உத்கீதமாக எண்ணக் கூடாது)

4.1.5. அமர்ந்து கொண்டு உபாஸனம் செய்ய வேண்டும்.

4.1.6. இறுதி மரணம் வரை தினமும் உபாஸனம் செய்ய வேண்டும்.

4.1.7. ப்ரஹ்ம-உபாஸனத்துக்கு முன் செய்த பாபங்கள் அழியும்; பின் செய்யப் போவது ஒட்டாது.

4.1.8. புண்யங்களும் அப்படியே, உபாஸனத்துக்கு முன் செய்தவை அழியும்; பின் செய்யப்போவது ஒட்டாது.

4.1.9. பலன் தர ஆரம்பித்துவிட்ட ப்ராரப்தமான புண்யபாபங்கள் அழியாது; பலனை அனுபவித்தே ஆக வேண்டும்.

4.1.10. அக்னிஹோத்ரம் முதலிய நித்யகர்ம-அனுஷ்டானம் ப்ரஹ்ம-வித்யைக்கு உதவும் என்பதால், கட்டாயம் செய்ய வேண்டும். (மீதி புண்யங்கள்தாம் ஒட்டாது).

4.1.11. உபாஸனம் செய்ய ஆரம்பித்த அந்த பிறவியிலோ, அல்லது பின் பிறவியிலோ, ப்ராபப்த-கர்மம் கழிந்தாலே மோக்ஷ-பலன் கிடைக்கும்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

4-2. உத்க்ராந்தி பாதம்

(மோக்ஷத்துக்காக இறுதியில் உடலிலிருந்து ஜீவன் வெளியேறுதல்)

सम्पद्येतान्यदक्षं मनसि तदपि तत्संयुतं प्राणवायौ,
सोऽध्यक्षे तैस्समेतः, स च तदखिलवान् भूतवर्गे तु सूक्ष्मे।
उत्क्रान्तिः स्यात् समाना, युतिरथ च परे, सा च संश्लेषमात्रं
निर्गच्छेत् ब्रह्मनाड्या, घृणिभिरथ, निशा,देवरात्र्योश्च मोक्षी॥४९९॥

மரணத்தில் சரீரத்தை விட்டு ஜீவன் வெளியேறும் முறை -

4.2.1. எல்லா இந்த்ரியங்களும் மனஸ்ஸில் சேரும்.

4.2.2. அவற்றுடன் சேர்ந்த மனஸ் ப்ராண-வாயுவில் சேரும்.

4.2.3. அவற்றுடன் சேர்ந்த ப்ராணவாயு, ஜீவனிடம் சேரும்.

4.2.4. எல்லாவற்றுடன் கூடிய ஜீவன், ஸூக்ஷ்மமான பஞ்ச-பூதங்களில் சேர்வான்.

4.2.5. ஜீவன் சரீரத்தை விட்டு வெளியேறும் இந்த முறையானது (பரமாத்மாவில் சேருவதுவரை) எல்லாருக்கும் பொதுவானது.

4.2.6. பிறகு இவையெல்லாம், பரமாத்மாவில் சேர்வது ஆகும்.

4.2.7. பரமாத்மாவில் ஒன்றிச் சேர்ந்து லயம் அடைவது இல்லை; பரமாத்மாவுடன் கூட சேர்வது மட்டுமே.

4.2.8. ப்ரஹ்ம-ஜ்ஞானி ஆனவன், ப்ரஹ்மநாடி எனப்படும் நடுநாடி வழியாக வெளி வருவான்.

4.2.9. பின் ஸூர்ய-ஒளிக் கதிர்களைப் பற்றிக் கொண்டு மேல் வருவான்.

4.2.10. இரவில் மரணம் அடைந்தாலும் ஜ்ஞானிக்கு மோக்ஷம் உண்டு.

4.2.11. தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தாலும், ஜ்ஞானிக்கு மோக்ஷம் உண்டு.

★★★★★★★★★★★★★★★★★★

4-3. கதி பாதம்

(பரமபதம் போகும் வழியான அர்ச்சிராதி கதி)

एकत्वं ब्रह्मविद्यापरिषदि सुपथोऽधीयमानस्य तस्मिन्
वायौ स्यात् देवलोकश्रुतिरपि वरुणाद्यन्वयो विद्युतोऽधि।
नेतारोऽमानवान्ताः परपदगमने तद्विदां सोऽयमध्वा
तुर्याध्यायस्य पादे सृतिरधिकरणैरित्थमुक्ता तृतीये॥५१७॥

4.3.1. உபநிஷத்தில் பல இடங்களில் ப்ரஹ்ம-ஜ்ஞானிகளுக்கு சொன்ன அர்ச்சிராதி-கதி என்பது ஒன்றுதான்.

4.3.2. அதில், வாயுதேவனை தேவலோகம் என்ற சொல் குறிக்கிறது.

4.3.3. அதில், மின்னல்-புருஷனுக்குப் பிறகு வருணன் முதலிய மூவர் சேருவர்.

4.3.4. அர்சிஷ் முதல் மின்னல் புருஷன் வரை ஆதிவாஹிகர்கள் (பரமபதம் செல்பவனை அந்த வழியில் அழைத்துச் செல்பவர்).

4.3.5. ப்ரஹ்மத்தை உபாஸனம் செய்பவர்களுக்கு மட்டுமே இந்த அர்ச்சிராதி வழி ஆகும்.

★★★★★★★★★★★★★★★★★★★★

4-4. பல பாதம்

(மோக்ஷ பலன்)

स्वाविर्भावोऽपवर्गे निरुपधिनियतस्वप्रकार्यन्तदृष्टिः
चिद्रूपस्यैव तद्वच्छ्रुतिमकुटमितैः स्वप्रकारैः सहेक्षा।
सङ्कल्पादेव सिद्धिः तनुषु च नियमोन्मुक्तता ब्रह्मसाम्य-
प्राप्तौ तल्लक्षणांशोज्झनमिति चरमाध्यायतुर्याङ्घ्रिसारः(राः)॥५५१॥

மோக்ஷத்தில் ஜீவன் பெறும் பலன்கள் -

4.4.1. மோக்ஷத்தில் ஜீவனது இயல்பான ஆத்ம-ஸ்வரூபம் வெளிப்படும். (புதிய ஆத்ம-ஸ்வரூபம் உண்டாகாது; கர்மத்தினால் மறைந்திருந்த ஸ்வரூபம், இப்போது வெளிப்படும்).

4.4.2. ஜீவன், தனிப்பட்டவனாக தன்னை காணாமல், எப்போதும் பரமாத்மாவுக்கு சரீரமாக அவனுடனே ஒன்றியவனாக காண்பான்.

4.4.3. ஜ்ஞானஸ்வரூபன் ஆன ஜீவன், அபஹதபாப்மத்வம் முதலிய தன் குணங்களுடன் தன்னைக் காண்பான்.

4.4.4. ஜீவன், தன் ஸங்கல்பத்தாலேயே விரும்பியதைப் பெறும் ஸத்யஸங்கல்பன் ஆவான்.

4.4.5. தேவையானால் சரீரம் எடுத்துக் கொள்வான்; கட்டாய நியமம் இல்லை.

4.4.6. ப்ரஹ்மத்தின் தனிப்பட்ட லக்ஷணங்களைப் பெறாமல், ஆனந்த-அனுபவத்தில் மட்டும் ப்ரஹ்மத்துக்கு சமமாக ஆகி, நிலை பெறுவான். (மீண்டும் ஸம்ஸாரம் வர மாட்டான்).

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

முடிவுரை

प्रज्ञाधम्मिल्लमल्लीपरिमलमिलितप्राज्ञसेवासमुद्य-
च्छुद्धालोकोज्ज्वलं मां श्रुतिपरिषदुपस्कारिसौभाग्यवद्भिः।
पद्यैरेतैः स्वहृद्यैः प्रणवमहिमवत्पाञ्चजन्यक्रमेण
स्वाध्मातं रङ्गनाथः स्वयमिति मुखरीकृत्य संमोदते स्म॥५६१॥

ஸ்ரீரங்கநாதன்,தன் பாஞ்சஜன்யத்தை ஊதி மகிழ்வது போல என்னை இப்படியாக ஊதி மகிழ்கிறான்; அந்த நாதம்தான் இந்த நூல் ஆகும்.

பாஞ்சஜன்யம் சுத்த-ஆலோகத்தால் (வெண்மை மாறாத தோற்றத்தால்) திகழ்வது; நானும், ஜ்ஞானம் ஆகிற மங்கையின் முடியிலுள்ள மல்லிகை-

யின் மணம் கமழும் ஜ்ஞானிகளான ஆசார்யர்களை சேவிப்பதால் பெற்ற சுத்த-ஆலோகத்தால் (தூய கடாக்ஷத்தால்) சிறப்பவன்.

பாஞ்சஜன்யமானது, ப்ரணவ-உருவில் இருந்து கொண்டு ப்ரணவத்தை ஒலிக்கும் பெருமையை உடையது; நானும் ப்ரணவ-உருவில் இருக்கிற ஸ்ரீபாஷ்யம் பேசும் பெருமையை பெற்றவன்.

பாஞ்சஜன்யத்தின் ஒலிகள் பத்யங்கள் - ஏற்கத் தக்கவை; கவனிக்கத் தக்கவை; என்னுடைய ஒலிகளும் பத்யங்கள் - ச்லோகங்கள்.

பாஞ்சஜன்யத்தின் ஒலிகள் ச்ருதி(வேதத்)-திரளின் அலங்காரமாகத் திகழ்பவை; என்னுடைய ஒலிகளான ச்லோகங்களும் ச்ருதி(வேதத்) திரளுக்கு அலங்காரமானவை.

பாஞ்சஜன்யத்தின் ஒலிகள் ச்ருதிகளு(செவிகளு)க்கு இனிமையானவை; என்னுடைய ஒலிகளான ச்லோகங்களும் மஹான்களின் ச்ருதிகளு(செவிகளு)க்கு இனிமையூட்டும் பெருமை உடையவை.

அவை ஹ்ருத்யமானவை (பெருமானின் இதயத்தில் இருந்து வந்தவை); என்னுடையவையும் ஹ்ருத்யமானவை (மனதுக்கு இனியவை).

* * *

पाराशर्यः प्रभूतादुपनिषदमृतोदन्वतः सारभूतं
निर्मथ्याऽऽदत्त सूत्रैरवितथनिगमाचार्यनामा मुनीन्द्रः।
यत् तन्निष्कृष्टमित्थं यतिपतिहृदयारूढमारूढतार्क्ष्यः
तद्वक्ता वाजिवक्त्रः सह मम गुरुभिर्वादिहंसाम्बुवाहैः॥५६२॥

ஸ்ரீபராசரரின் திருக்குமாரர் ஆன ஸ்ரீவ்யாஸர், உண்மையாக வேத-ஆசார்யர் ஆன சிறந்த முனிவர்; அவர் உபநிஷத் எனும் பேரமுதக் கடலிலிருந்து ஸாரமானதை கடைந்து எடுத்து ஸூத்ரங்களில் அளித்தார்; அதில், அவரால் ஸித்தாந்தமாக சொல்லப்பட்டதும், ஸ்ரீராமானுஜர் திருவுள்ளத்தில் இருப்பதுமான இந்த அர்த்தத்தை கருடவாகனத்தில் ஏறி இருக்கும் ஸ்ரீஹயக்ரீவபெருமான்தான், என் ஆசார்யரான அப்புள்ளாரையும் சேர்த்துக் கொண்டு இப்படியாக (என் மூலம்) அருளினான் - என்று ஸ்ரீதேசிகன் சாதிக்கிறார்.

* * *

கவிதார்க்கிகஸிம்ஹாய கல்யாணகுணசாலினே।
ஸ்ரீமதே வேங்கடேசாய வேதாந்த குரவே நம:।।

* * *